V211 N79
N80-9835
2141

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

1979 பிப்ரவரி 22, 23, 24 மற்றும் 26 ஆம் நாட்கள்.

(தொகுதி 23—எண்கள் 1 முதல் 4 வரை.)

உள்ளடக்கம்.

	பக்கங்கள்
(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும், அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும்.	I—VI
(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.	VII
(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட).	VIII–XVI
அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்கள் ஆகியவைமீது விவாதம்—தொடர்ச்சி.	429—612
அரசினர் சட்ட முன்வடிவுகள்—	
அடகுக்கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	74
இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1979	73

அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

	பக்கங்கள்
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979	316—360
ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	212—230
ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979	305—316
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1979) 1979—தொடர்ச்சி	194—212
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979	74—118
மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	183—194
மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	304—305
அரசினர் தீர்மானம்—	
விதி 23-ஐத் தளர்த்தல்	65
அறிக்கை அளித்தல்—	
கீழத் தஞ்சை விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம்	283—286
சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலை வேலை நிறுத்தம் குறித்து	240
அறிவிப்புகள்—	
ஆளுநர் இசைவு குறித்து	303—304
ஆளுநர் செய்தி	135
பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு நியமனம்	39

அறிவிப்புகள்—தொடர்ச்சி.

	பக்கங்கள்
வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு நியமனம்	39
ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—	
கல்லூரி ஆசிரியர்களது போராட்டம்	289—294
கும்பகோணம் கல்லூரி ஆசிரியர்களும், ஆசிரியைகளும் கைது செய்யப் பெறுவதாகக் கூறப்பெறுவது குறித்து	286—289
கோவை மருத்துவ மனை, மருத்துவக் கல்லூரி வேலை நிறுத்தம்	230—239
தொழிலாளர்களும், அவர்களது தலைவர்களும் திருச்சியில் கைது செய்யப்பெறுவது குறித்து	45—64
ஒழுங்குப் பிரச்சினைகள்—	
சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலை வேலை நிறுத்தம் குறித்து	176—183
கவன ஈர்ப்புகள்—	
அரிசன மக்களை ஏமாற்றி வடமாநிலம் அழைத்துச் சென்று கொடுமைப்படுத்தி வேலை வாங்கியதாகக் கூறப்பெறுவது குறித்து	65—68
காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்னையில் தஞ்சாவூர் பகுதியில் எழுந்துள்ள பதட்ட நிலைமை குறித்து	425—427
'கோக்' கரி கிடைக்காததால் கோவை, கோவை நகரைச் சுற்றியுள்ள பவுண்டரிகளில் வேலை பாதிக்கப்பெற்றுள்ளது குறித்து	299—303
நிலக்கரி பற்றாக்குறையால் விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற்சாலை மூடப்படும் அபாயமும், தொழிலாளர்கள் அவதியும் குறித்து	172—175
நெல்லிக்குப்பம் இ.ஐ.டி. சர்க்கரைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்து குறித்து	169—172

கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

	பக்கங்கள்
பெருமழை காரணமாக திருவில்லிபுத்தூர் தொகுதியில் விவசாய நிலங்களில் மணல் மூடியதின் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து	298—299
மருத்துவப் பணியில் தற்காலிக உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்து	68—73
மழையினால் புழலேரி ஆயக்கட்டின் கீழுள்ள நெற்பயிர்கள் பாதிக்கப்பெற்றதினால் விவசாயிகள் கடன்களைத் திருப்பித் தர இயலாதது குறித்து	423—425

தகவல் கோரல்—

இந்தியன் ஆக்ஸிஜனில் ஏற்பட்ட விபத்து குறித்து	169
உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறும் கடிதங்களின் உறையும் தமிழில் அச்சடிக்கப் பெறவேண்டும் என்பது குறித்து	406—407
ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புகள் குறித்து	407—408
கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் குறித்து	408—409, 412, 416—419
கோவை மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி வேலை நிறுத்தம் குறித்து	163
சிம்கோ மீட்டர் தொழிற்சாலை வேலை நிறுத்தம் குறித்து	405—406 413—414
டன்லப் தொழிற்சாலையில் கலவரம் குறித்து	406
டெல்லியில் பிரதமருக்கும் மற்றவர்களுக்கும் விவசாயம் சம்பந்தமாக முதலமைச்சர் அளித்த மகஜர் குறித்து	427—428
திண்டுக்கல் அரசினர் மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்களது காலவரையின்றி வேலை நிறுத்தம் குறித்து	410—412 414—416 419—[illegible]

தகவல் கோரல்—தொடர்ச்சி.

	பக்கங்கள்
திருச்சி சிம்கோ மீட்டர் நிறுவனம் கதவடைப்பு குறித்து	40—45
போவைத் தலைவர் அமைச்சராகப் போவதாக பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து	363
மாதவரம் பால் பண்ணையில் வேலை நிறுத்த அறிவிப்பு குறித்து	169
மேட்டூரணை தண்ணீர் குறித்து	294—297
போவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்	118—119, 241—242, 361—611

வினாக்கள்-விடைகள்—

	1—39
உடுக்குறியிட்ட வினாக்கள்	127—162, 243—283 364—405

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

1979 பிப்ரவரி 22, 23, 24 மற்றும் 26 ஆம் நாட்கள்.

(தொகுதி 23—எண்கள் 1 முதல் 4 வரை)

©
தமிழ்நாடு அரசு
1980

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600009

விலை ரூ. 1]

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index) பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது, முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும் (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள் நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் " சட்ட முன்வடிவு " என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப் படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள் உள்ளாட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும், 'குழு(க்கள்)' 'மன்றம்(கள்)' 'உள்ளாட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப் பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின்கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் " தலைவர் " என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில குறுக்கங்களின் விளக்கப் பட்டியல் கீழே கொடுக்கப்பெற்றுள்ளது.

அ.	அறிக்கை
அறிவி.	அறிவிப்பு
அ.வி.	அரைமணி விவாதம்
கு.வி.	குறுகிய கால விவாதம்
பொ.வி.	பொது விவாதம்
ஆ.உ.	ஆளுநர் உரை
உ.பி.	உரிமைப் பிரச்சினை
ஒ.பி.	ஒழுங்குப் பிரச்சினை
க.ஈ.	கவன ஈர்ப்பு
க.ஈ.அ.	கவன ஈர்ப்பு அறிக்கை
ச.அ.நி.	சட்ட முன்வடிவின் அறிமுக நிலை
ச.ஆ.நி.	சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை— இந்நிலையில்

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம்.

(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்.

10. திரு. கா. காளிமுத்து : (உள்ளாட்சித் துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம் கிராமதானம.

11. திரு. எஸ். இராகவானந்தம் : (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகரஅமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அரிசன நலத் துறை அமைச்சர்) அரிசன நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதம் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. திரு. சி. பொன்னையன் : (போக்குவரத்துத்துறை அமைச்சர்) போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

14. திரு. ப. குழந்தைவேலு: (வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர்) வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது). வேளாண்மை பொறியியல்.

15. திரு. கா. இராசா முகமது : (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.

16. திரு. ஆர். சௌந்திரராஜன் : (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்) மக்கள் நல்வாழ்வுத்துறை.

17. செல்வி பி. டி. சரஸ்வதி : (ச[illegible] நலத்துறைஅமைச்சர்) மகளிர், குழந்தைகள் நலம்உள்[illegible] சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர் [illegible] விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள் அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த [illegible]வாகம்.

18. திருமதி [illegible]சுப்புலட்சுமி ஜெகதீசன் : (கைத்தறி நெசவுத் துறை [illegible]மைச்சர்) கைத்தறி, கதர், நெசவாலைகள், நூல்.

அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்

1. திரு. எம். வின்சென்ட்: நிதி அமைச்சரின் பேரவைச் செயலர்.
2. திரு. ஆனூர் ஜெகதீசன்: கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
3. திரு. பி. முசிரிபுத்தன்: வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
4. திரு. ஐசரி வேலன்: செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
5. திரு. எம். ஏ. ஜெயவேலு: சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர்.
6. திரு. ஆ. வெள்ளைச்சாமி: கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர்.
7. திரு. ப. கோ. கிட்டு: போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
8. திரு. இரா. அருணாசலம்: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru PRABHUDAS PATWARI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large scale Industries, Mines and Minerals.

2. Hon. Thiru K. MANOHARAN (*Minister for Finance*)—Finance, Planning, Legislature and Public Works (Buildings).

3. Hon. Thiru S. RAMACHANDRAN (*Minister for Electricity*)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASWAMI (*Minister for Co-operation*)—Co-operation, Registration.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (*Minister for Revenue*)—Revenue, Commercial Taxes and Excise.

6. Hon. Thiru G. R. EDMUND (*Minister for food*)—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control.

7. Hon. Thiru R. M. VEERAPPAN (*Minister for Information and Hindu Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIAR (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Chits and Registration of Companies.

9. Hon. Thiru C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. Hon. Thiru K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Municipal Administration, Community Development, Panchayats, Panchayats Unions, Rural indebtedness and Bhoodan and Gramdan.

11. Hon. Thiru S. RAGAVANANDAM (*Minister for Labour*)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town Planning, Accommodation Control.

12. Hon. Thiru P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

13. Hon. Thiru C. PONNAIYAN (*Minister for Transport*)—Transport, Motor Vehicles Acts, Highways and Ports.

14. Hon. Thiru P. KOLANDAIVELU (*Minister for Agriculture and Irrigation*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. Hon. Thiru K. RAJA MOHAMMED (*Minister for Rural Industries*)—Rural Industries including village, cottage and small industries, Milk and Dairy Development and Waqfs.

16. Hon. Thiru THIRUCHI R. SOUNDARARAJAN (*Minister for Health*)—Health.

17. Hon. Selvi P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar Homes, Orphanages, Indians—Overseas, Refugees and Evacuees; Correctional Administration.

18. Hon. Thirumathi SUBBULAKSHMI JAGADEESAN (*Minister for Handlooms*)—Handlooms, Khadi, Textiles and Yarn.

(3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்.

(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்.

(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

ச.பிரி.ஆ.	சட்ட முன்வடிவு—பிரிவு வாரியாக ஆய்தல்.
ச.பே.	சட்டமன்றப் பேரவை
ச.மே.	சட்டமன்ற மேலவை
த.கோ.	தகவல் கோரல்
த.வி.	தன்னிலை விளக்கம்
தீ.	தீர்மானம்
உ.தீ.	உரிமைத் தீர்மானம்.
ஒ.தீ.	ஒத்திவைப்புத் தீர்மானம்.
த.தீ.	தனித் தீர்மானம்.
து.மா.கோ.	துணை மானியக் கோரிக்கை.
மி.மா.கோ.	மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.
பே. அ.	பேரவையின் அலுவல்

PARLIAMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. THIRU M. VINCENT—Parliamentary Secretary to Minister for Finance.

2. THIRU ANNOOR JAGADEESAN—Parliamentary Secretary to Minister for Co-operation.

3. THIRU P. MUSIRIPUTHAN—Parliamentary Secretary to Minister for Revenue.

4. THIRU ISARI VELAN—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.

5. THIRU M. A. JAYAVELU—Parliamentary Secretary to Minister for Law.

6. THIRU A. VELLAISAMY—Parliamentary Secretary to Minister for Education.

7. THIRU P. G. KITTU—Parliamentary Secretary to Minister for Transport.

8. THIRU R. ARUNACHALAM—Parliamentary Secretary to Minister for Health.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். ஜே. இராமசாமி
2. திரு. பி.எச். பாண்டியன்
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்.
5. திரு. ரா. உமாநாத்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.,

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

குழு அலுவலர்.

திரு.ச. பாஷ்யம், பி. ஏ. (ஆனர்ஸ்)

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.

திரு. பி. எம். பத்மனாபன் நம்பியார், பி. ஏ.,

திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

திரு. பெ.ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (எஸ்டேட் அலுவலர்.

தலைமை நிருபர்.

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்,

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

12–2–1979 அன்று அறிவிக்கப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல். (தொகுதிகள் உள்பட.)

தொடர் எண்ணும் உறுப்பினர்கள்	பெயரும். (1)	தொகுதி. (2)
1	அண்ணாமலை, திரு. எம்.	அரூர் (செ.வ.).
2	அப்துல் ரசாக், திரு. கே. எம்.	ஆலந்தூர்.
3	அப்துல் லத்திப், திரு. கி.	கடலூர்.
4	அப்புனு கவுண்டர், திரு. கா.	பென்னகரம்.
5	அம்பிகாபதி, திரு. மு.	மன்னார்குடி.
6	அமிர்தராஜ், திரு. இரா.	திருச்செந்தூர்.
7	அய்யாச்சாமி, திரு. ரா.	தாராபுரம் (செ.வ.)
8	அர்ச்சுனன், திரு. வீ.	ஆரணி.
9	அரங்கசாமி, திரு. க.	குன்னூர் (செ.வ.)
10	அரங்கநாதன், திரு. அ. க.	வேலூர்.
11	அரங்கநாதன், திரு. மு.	திருவல்லிக்கேணி, சென்னை.
12	அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	கோயம்புத்தூர்-மேற்கு.
13	அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	நாமக்கல் (செ.வ.).
14	அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி.
15	அன்பழகன், திரு. க.	புரசைவாக்கம், சென்னை.
16	அன்பழகன், திரு. தி.	நாட்ராம்பள்ளி.
17	ஆண்டி அம்பலம், திரு. மெ.	நத்தம்.
18	ஆதிசுவாமி, திரு. இரா.	குளச்சல்.
19	ஆறுமுகம், திரு. இல.	திருநாவலூர்.
20	ஆறுமுகம், திரு. எச். ஜி.	பர்கூர்.
21	ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
22	ஆறுமுகம், திரு. ந.	அரியலூர்.
23	ஆறுமுகம், திரு. சேலம் மு.	சேலம்-2.
24	இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25	இராசரத்தினம், திரு. து.	பூந்தமல்லி.
26	இராதா, திரு. எஸ். ஆர்.	கும்பகோணம்.
27	இராமச்சந்திர ரெட்டி, திரு. என்.	ஓசூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின்	பெயரும். (1)	தொகுதி (2)
28	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்.)	அருப்புக்கோட்டை.
29	இராமச்சந்திரன், திரு. சே. கே. எஸ். ஆர்.	சாத்தூர்.
30	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
31	இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.	செஞ்சி.
32	இராமசாமி, திரு. எஸ். வி.	பெரம்பலூர் (செ.வ.).
33	இராமசாமி, திரு. எஸ். ஜே.	சோளிங்கர்.
34	இராமசாமி, திரு. கே. என். கே.	கோபிசெட்டிப்பாளையம்.
35	இராமசாமி, திரு. கொ.	சிவகாசி.
36	இராமசாமி, திரு. த.	இராமநாதபுரம்.
37	இராமசாமி, திரு. து.	வெள்ளக்கோவில்.
38	இராமலிங்கம், திரு. செ.	திருவிடைமருதூர்,
39	இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா.	தல்லி.
40	இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
41	இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
42	ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்.
43	உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி.
44	உச்சி, திரு. கே.	கூடலூர்.
45	உத்திராபதி, திரு. பொ.	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
46	உமாநாத், திரு. ரா.	நாகப்பட்டினம்.
47	உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.	ஆற்காடு.
48	எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்).	திருநெல்வேலி.
49	எத்ராஜ், திரு. கி.	அச்சரபாக்கம் (செ.வ.).
50	ஏகாம்பர ரெட்டி, திரு.	பள்ளிப்பட்டு.
51	ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை.
52	கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ.வ.).

	தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி (2)
114	சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு.	உத்திரமேரூர்.
115	சுப்பிரமணியன், திரு. ஓ. ..	சிவகங்கை.
116	சுப்பிரமணியன், திரு. மா. ..	சின்னசேலம்.
117	சுப்பிரமணியன், திரு. வ. மு.	மானாமதுரை (செ.வ.)
118	சுப்ரவேலு, திரு. கா. ..	சீர்காழி (செ.வ.)
119	சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120	சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்). ..	மொடக்குறிச்சி.
121	சுப்பையா, திரு. ச. ..	சங்கரநயினார் கோவில் (செ.வ.)
122	சுவாமிதாஸ், திரு. அ. ..	பத்மநாபபுரம்.
123	செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
124	செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
125	செல்லப்பா, திரு. அ. ..	வலங்கைமான் (செ.வ.)
126	செல்வராசன் திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127	செல்வராஜ், திரு. சீனி ..	சமயநல்லூர் (செ.வ.)
128	செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129	சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர் (செ.வ.)
130	சோமசுந்தரம், திரு. ஓ. ப. ..	பொள்ளாச்சி.
131	சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
132	சௌந்திரராஜன், திரு. கே.	திருச்சிராப்பள்ளி-2.
133	சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். (அமைச்சர்)	ஸ்ரீரங்கம்.
134	சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி.
135	ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு.
136	தங்கவேல், திரு. ர.ச. ..	வால்பாறை (செ.வ.)
137	தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேலமலையனூர்.
138	தண்டபாணி, திரு. சா.க.சு.	காங்கேயம்.
139	தமிழரசன், திரு. இ. ..	பேரணாம்பட்டு (செ.வ.)

	தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1)	தொகுதி. (2)
140	தனசேகரன், திரு. ந. ..	தூத்துக்குடி.
141	தனபால், திரு. ப. ..	சங்கரி (செ.வ.)
142	தனுஷ்கோடி, திரு. கோ. ..	ராஜபாளையம் (செ.வ.)
143	தாமரைக்கனி, திரு. இரா. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144	திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்).	அறந்தாங்கி.
145	திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146	துரை கோவிந்தராசன். திரு. (அரசாங்கத் தலைமைக் கொரடா).	திருவோணம்.
147	துரைசாமி, திரு. ப.	ராசிபுரம்.
148	துரை முத்துசாமி, திரு. ..	சங்கரபுரம்.
149	துரை முருகன், திரு. ..	இராணிப்பேட்டை.
150	துரைராஜ், திரு. சு. ம. ..	பொன்னேரி (செ வ.)
151	துலுக்காணம், திரு. வ. ..	உளுந்தூர்பேட்டை (செ.வ.)
152	தைலப்பன், திரு. டி. எம். ..	ஒரத்தநாடு.
153	நடராசன், திரு. ஆர். ..	பேரூர்.
154	நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்.
155	நல்லதம்பி, திரு. தீ. சு. ..	பார்க்டவுன், சென்னை.
156	நாச்சிமுத்து, திரு. க. ..	பொங்கலூர்.
157	நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி.	மேட்டூர்.
158	நாராயணன், திரு. ரா. ..	தாரமங்கலம்.
159	பட்டாபிராமன், திரு. செ. ..	திருவள்ளூர்.
160	பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161	பரமசிவம், திரு. மொ. ..	வானூர் (செ.வ.).
162	பரமசிவன், திரு. ஏ. எம். ..	மேலூர்.
163	பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்.
164	பழனிசாமி, திரு. சொ. நா.	அவினாசி.
165	பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166	பழனியப்பன், திரு. அ. ப. ..	ஒட்டன்சத்திரம்.
167	பழனிவேல், திரு. என். ..	பழனி (செ.வ.).
168	பாண்டியன், திரு. பி. எச். ..	சேரன்மாதேவி.

தொடர் எண்	உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
53	கணேசன், திரு. இ. ..	எடப்பாடி.
54	கணேசன், திரு. எஸ். ..	பூம்புகார்.
55	கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு.
56	கந்தசாமி, திரு. கே. ..	ஆண்டிப்பட்டி.
57	கபாலி, திரு, டி. கே. ..	மயிலாப்பூர்-சென்னை.
58	கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை.
59	கருணாநிதி, திரு. மு. ..	அண்ணாநகர், சென்னை
60	கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ. வ.)
61	கருணாமூர்த்தி, திரு. வெ. ..	ஜெயங்கொண்டான்.
62	கருப்பசாமி பாண்டியன் திரு. வீ.	ஆலங்குளம்.
63	கலியமூர்த்தி திரு. துரை. ..	சிதம்பரம்.
64	காத்தமுத்து, திரு. கி. பெ.	தொட்டியம்.
65	காளிமுத்து, மாண்புமிகு திரு கா. (அமைச்சர்)	திருப்பரங்குன்றம்.
66	காளியப்பன், திரு. இரா.	ஏற்காடு (ஆ. வா.)
67	காளியப்பன், திரு. பொ. ..	காரைக்குடி.
68	கிட்டப்பா, திரு. என். ..	மாயூரம்.
69	கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	பல்லடம்.
70	கிருஷ்ணன், திரு. செ. ..	கன்னியாகுமரி.
71	கிருஷ்ணன், திரு. நா. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.)
72	கிருஷ்ணன், திரு. பி. ..	விழுப்புரம்.
73	கிருஷ்ணன், திரு. பி. எம். ..	பாலக்கோடு.
74	கிருஷ்ணன், திரு. ரா ..	வாசுதேவநல்லூர் (செ. வ.
75	குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்.
76	குருசாமி, திரு. ப.	ஆண்டியூர் (செ. வ.)
77	குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
78	கோதண்டராமன், திரு. வி. கே.	குடியாத்தம்.
79	கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80	கோவிந்தராசன், திரு. சி.	நெல்லிக்குப்பம்.
81	கோவிந்தன், புலவர் ..	கா. செய்யாறு.
82	கோவேந்தன், திரு. மு. ரெ.	பேராவூரணி.

தொடர் எண்	உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி. (2)
83	சங்கரய்யா, திரு. என். ..	மதுரை கிழக்கு.
84	சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி.
85	சண்முகம், திரு. கா. ந. ..	லால்குடி.
86	சண்முகம், திரு. கூத்தக்குடி ச.	திருப்பத்தூர்.
87	சண்முகம், திரு. ப. உ. ..	திருவண்ணாமலை.
88	சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89	சந்திரசேகரன், திரு. ஆ. ..	கம்பம்.
90	சந்திரன், திரு. ப. ..	பெரணமல்லூர்.
91	சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ.	தியாகராய நகர், சென்னை.
92	சமரசம், டாக்டர், கே. ..	காவேரிப்பட்டிணம்.
93	சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்).	திருமங்கலம்.
94	சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபனாசம்
95	சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்விளக்கு, சென்னை.
96	சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97	சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.)
98	சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99	சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி
100	சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101	சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம் (ஆ. வா.)
102	சின்னசாமி, திரு. வி. கொ. ..	பவானிசாகர்.
103	சின்னையா, திரு. வீ. ..	குளத்தூர் (செ. வ.)
104	சின்னராசு, திரு. க. இரா. ..	கிருஷ்ணகிரி.
105	சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106	சுந்தரம், திரு. ப.	திருப்பத்தூர்.
107	சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.
108	சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
109	சுந்தரராஜன், திரு, மு. ..	விருதுநகர்.
110	சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111	சுப்பிரமணியம், திரு. ஆ. சி. ..	கடலாடி.
112	சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113	சுப்பிரமணியம், திரு. டி. ..	ஆண்டிமடம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.	(1)	தொகுதி. (2)
169	பாலகிருஷ்ணன், திரு. சோ.	முதுகுளத்தூர்.
170	பாலகுரு, திரு. வெ.	சோழவந்தான்,
171	பாலன், திரு. சு.	பெரம்பூர், சென்னை.
172	பாலாஜி, திரு. க.	காஞ்சிபுரம்.
173	பாலுச்சாமி, திரு. அ.	நிலக்கோட்டை (செ.வ.)
174	புருஷோத்தமன், திரு. து.	சைதாப்பேட்டை, சென்னை.
175	புஸ்பராஜு, திரு. த.	ஆலங்குடி.
176	பெரியசாமி, திரு. டி. பி. எம்.	மதுரை மேற்கு.
177	பெரியசாமி, திரு. மொ.	மங்களூர் (செ. வ.)
178	பெரியசாமி, திரு. ரா.	உப்பிலியாபுரம்.
179	பெருமாள், திரு. என்.	வரகூர் (செ. வ.)
180	பெருமாள், திரு. ரா. கு.	விளாத்திகுளம்.
181	பொன்னுசாமி, டாக்டர் ஏ.	பெருந்துறை.
182	பொன்னுரங்கம், திரு. ப.	இராயபுரம், சென்னை.
183	பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்)	திருச்செங்கோடு.
184	மணிமாறன், திரு. ஆர்.	திருப்பூர்.
185	பணிமாறன், திரு. மா.	நன்னிலம் (செ.வ.).
186	மணிமுடி, திரு. எஸ்.	எழும்பூர், சென்னை. (செ. வ.)
187	மருதாசலம், திரு. க.	தொண்டாமுத்தூர்.
188	மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்)	பாளையங்கோட்டை.
189	மாணிக்கம், திரு. சி...	திருச்சிராப்பள்ளி-1.
190	மார்க்கபந்து, திரு. ரா.	அணைக்கட்டு.
191	மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ்	(நியமன உறுப்பினர்).
192	மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.	பட்டுக்கோட்டை.
193	மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.
194	முசிரிபுத்தன், திரு. பீ. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	முசிரி.
195	முத்துசாமி, திரு. பா. கா. சி.	தர்மபுரி.

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும்.	(1)	தொகுதி. (2)
196	முத்துசாமி, திரு. சு.	ஈரோடு.
197	முத்துசாமி கரையாளர், திரு. சு.	தென்காசி.
198	முத்தையா, திரு. இரா.	சேடப்பட்டி.
199	முத்தையா, திரு. கே. கே.	மருங்காபுரி.
200	முருகேசன், திரு. கூ. ச.	திருவரம்பூர்.
201	முனிரத்தினம், திரு. இரா. ச.	கும்மிடிபூண்டி.
202	முனு ஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்)	தாம்பரம்.
203	முனுசாமி, திரு. பொ.	வந்தவாசி (செ.வ.).
204	மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
205	யூசுப், திரு. யா. சை. மு.	ராதாபுரம்.
206	ரகுமான்கான், திரு. அ.	சேப்பாக்கம்-சென்னை,
207	ரகுராமன், திரு. வி.	புவனகிரி.
208	ரகோத்தமன், திரு. கோ.	முகையூர்.
209	ரசாக், திரு. எம். எம். ஏ.	கடையநல்லூர்.
210	ரமணி, திரு. கு.	கோயம்புத்தூர் கிழக்கு.
211	ராமதாஸ், திரு. பி.	போடிநாயக்கனூர்.
212	ராமநாதன், திரு. சி.	விருத்தாசலம்.
213	ராமலிங்கம், திரு. ஏ.	காட்டுமன்னார்கோவில் (செ. வ.).
214	ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு.	புதுக்கோட்டை.
215	ராஜு, திரு. செ. மெ.	தலைவாசல் (செ. வ.).
216	ராஜு, திரு. வி. கே.	அரக்கோணம் (செ.வ.).
217	லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218	லத்தீப், திரு. எம், ஏ.	வாணியம்பாடி.
219	வடிவேல், திரு. கு.	கரூர்.
220	வரதராஜன், திரு. என்.	திண்டுக்கல்.
221	வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222	வாசன், திரு. சீ. மு.	வேடசந்தூர்.
223	வின்செண்ட், திரு. எம். (அமைச்சரின் பேரவைச் செயலர்).	நாகர்கோவில்.
224	விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.

டர் என்னும், உறுப்பினர்கள் பெயரும்.	தொகுதி
(1)	(2)
வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
வெள்ளைச்சாமி, திரு. ஆ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	ஆத்தூர்.
வேங்கா கவுண்டர், திரு. பி...	வீரபாண்டி.
வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
வேலுச்சாமி, திரு. ஓ. சோ.	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	செங்கல்பட்டு.
ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
ஜெபமணி, திரு. ர. ..	சாத்தான்குளம்.
ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
ஜெயவேலு, திரு. எம். ஏ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	காட்பாடி.
ஜேம்ஸ், திரு. ஜே. ..	திருவட்டாறு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

1979 பிப்ரவரி, 22, 23 24 மற்றும் 25 ஆம் நாட்கள்

(தொகுதி 23—எண்கள் 1 முதல் 4 வரை).

பக்கங்கள்

அ.

அம்பிகாபதி, திரு. மு.—

சி.ஐ.டி. டாரி, நெல்லிக்குப்பம் தீ விபத்து (க.ஈ.) 171

கல்லூரி ஆசிரியர்கள், வேலை நிறுத்தம் (த.கோ.) 412

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலை நிறுத்தம் (ஒ.தீ.) 233—234

சிம்சோ மீட்டர்ஸ் பிரச்சினை, ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்வதுபற்றி (த.கோ.) 40—45

திருமேனி வரி, பராமரிப்பு 22—23

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.நி.) 114

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 193

மாதவரம் பால் பண்ணை, வேலை நிறுத்தம் (த.கோ.) 169

அமிர்தராஜ் திரு. இரா.—

குடிநீர், திருச்செந்தூர் 384—385

சமுதாயக் கிணறுகள், பள்ளிப்பத்து ஊராட்சி 264—265

பனைப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனம், திருச்செந்தூரில் அமைத்தல் 27—28

அ—தொடர்ச்சி.

அர்ச்சனன், திரு. வி.—

பக்கங்கள்

மாட்டுச் சந்தை, ஆரணி, மாற்றல் 264

அரங்கநாதன் திரு. சென்னை மு.—

சென்னை மாநகராட்சி, உலக வங்கிக் கடன் 385—387

வீடுகள், இடவசதிக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளவை 13—16

அரங்கநாயகம், திரு. செ.—

கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தி.) 292—294

கும்பகோணத்தில் ஆசிரியர்கள் கைது 288—289

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.நி.) 89—90

அரிசனங்கள்—

தமிழ்நாட்டு அரிசனங்கள், வடமாநிலத்தில் கொடுமை (க.ஈ.) 65—68

வீடுகளைப் பழுதுபார்த்தல் 387—388

அரிசன நலம்—

அரிசனங்கள், கடலூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள் மூலம் கடன்கள் 148—150

அரிசன விவசாயிகள், தஞ்சை மாவட்டத்தில் உழவு மாடுகள் வழங்குதல் 150—152

அழகர்சாமி, திரு. சோ.—

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தொழிலாளர்களும் தலைவர்களும் கைது, திருச்சி (ஒ.தீ.) 64

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தொழிலாளர்கள், தலைவர்களும் கைது, திருச்சி (த.கோ.) 41

அ—தொடர்ச்சி.

பக்கங்கள்

அழகர்சாமி, திரு. சோ.—

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 200, 207, 208, 209

373—375

முதியோர்கள், உதவிப் பணம்

விவசாயம் சார்ந்தவாக முதலமைச்சர் பிரதமருக்கு அளித்த மகஜர் (த.கோ.) 427—428

ஜி. வி. என். கல்லூரி, கோவில்பட்டி, மூடப்பட்டிருத்தல் 1—3

அறிக்கை அளித்தல்— 240

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை 283—286

விவசாயத் தொழிலாளர்கள், கீழ்த்தஞ்சை, கூலி நிர்ணயம்

அன்பழகன், திரு. க.—

கோவை மருத்துவ மனை, மருத்துவக் கல்லூரி, வேலை நிறுத்தம் (த.கோ.) 164, 165

ஆ.

ஆசிரியர்கள்— 289—294

கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் 408—409, 412, 416—419

கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் (த.கோ.)

286—287

கும்பகோணத்தில் ஆசிரியர்கள் கைது (ஒ.தீ.)

நலப்பள்ளி ஆசிரியர்கள் (தென் ஆற்காடு மாவட்டம்), சம்பளம் வழங்காமை 389—391

262—265

பெரியாறு, சுருளியாறு பகுதி, பிராத்தியப்பாடி

ஆ—தொடர்ச்சி.

அன்பழகன், திரு. க.—தொடர்ச்சி.

பக்கங்கள்

ஆட்சிமொழி—

சட்டங்கள், தமிழாக்கும் பணி 125—136

ஆண்டி அம்பலம், திரு. மே.—

வேளாண்மைப் பணிகளுக்கு மின் இணைப்பு, சாணார்பட்டி 253—255

ஆறுமுகம் திரு. சேலம் மு.—

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு, உதவிபுரிய குழு 379—381

இ.

இராகவானந்தம், திரு. எஸ்.—

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் 536, 537—538

இ.ஐ.டி. பாரி, நெல்லிக்குப்பம் தீ விபத்து (க.ஈ.அ.) 170, 171, 172

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை (த.கோ.) 405—406, 413

இராசமாணிக்கம், திரு. இரெ.—

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 333—337

இராசாராம் ரெட்டி திரு. டி. ஆர்.—

மயிலம் ஒன்றியம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு 255

வயிரம்பேட்டை தெரு விளக்குகள் 376—377

இராதா, திரு. எஸ். ஆர்.—

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.தி.) 90, 91

இ—தொடர்ச்சி.

இராதா, திரு. எஸ். ஆர்.—தொடர்ச்சி.

பக்கங்கள்

வைகை அணைக் கால்வாய்கள், வெள்ளத்தால் பாதிப்பு 393—396

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் 403—404

இராமச்சந்திரன், திரு. ச.—

இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.தி.) 73

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 213—216

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.தி.) 89, 90, 100,

பேரவைத் தலைவர் அமைச்சராகப் போவதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி (த.கோ.) 363

இராமச்சந்திரன் திரு. செஞ்சி ந.—

செங்கற்பட்டு அருகே இரயில்வே மேம்பாலம் 392—395

செஞ்சி மருத்துவ மனை, படுக்கைகள் அதிகரிப்பு 273—274

பல்லவன் போக்குவரத்துக் கழகம், தொழிற் பயிற்சிக் கல்வி பெற்றவர்கள் 20

இராமசாமி திரு. எஸ். ஜே.—

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 357—358

காட்பாடி-சித்தூர் சாலை, இரயில்வே மேம்பாலம் பழுது பார்த்தல் 152

சோளிங்கபுரம் தாயார் சன்னதி கோயில், திருப்பணிக்காக மானியம் 9

பக்கங்கள்

இராமலிங்கம், திரு. செ.—

கும்பகோணத்தில் கல்லூரி ஆசிரியர்கள் கைது (ஒ.தீ.) 287—288

இராஜா முகமது திரு. கே.—

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் 474, 582—583

"கோக்" கரி கிடைக்காமை, கோவை பவுண்டரிகளின் வேலை பாதிப்பு (க.ஈ.அ.) 299—303

விருத்தாசலம் பீங்கான் தொழிற்சாலை, மூடப்படும் நிலை (க.ஈ.அ.) 173—175

உ.

உச்சி திரு. கே.—

அரிசனங்கள், கடலூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள் மூலம் கடன்கள் 148—150

கடலூர் தொகுதி அரசு தேயிலைத் தோட்டங்கள் காண்ட்ராக்ட் முறையில் வேலை 2[illegible]

திரையரங்குகள், ஊராட்சிகள் நடத்துதல் 382—38[illegible]

உத்திராபதி, திரு. பொ.—

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 352—35[illegible]

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.நி.) 109—114, 115

புதிய தொண்டியக்காடு, வாய்க்கால் திட்டம் 266—267

பக்கங்கள்

உமாநாத், திரு. ஈ.—

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் 592—593, 594

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தொழிலாளர்களும் தலைவர்களும் கைது, திருச்சி (ஒ.தீ.) 48, 49, 50, 51, 52, 55, 56, 61, 62

178, 179,

(ஒ.பி.) 180, 182

40, 43

(த.கோ.)

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.நி.) 81

உள்ளாட்சிகள்— 127, 129

அம்பத்தூர் நகரியம், நகராட்சியாக்குதல் 10

சென்னை மாநகராட்சி, அலுவலர்களுக்கு வாகனப்படி வழங்கப்படாமை 385—387

சென்னை மாநகராட்சி, உலக வங்கி கடன் 381—382

தார் சாலைகள், அமைத்தல், மானியம் வழங்குதல் 381

திருத்தணி, நகராட்சியாக்குதல் 382—384

திரையரங்குகள் நடத்துதல்

மணல்மேடு, பேரூராட்சி மன்றம் நிர்வாக அதிகாரி மீது புகார் 11—12

ஏ.

பக்கங்கள்

ஏடுகள்—

பேரவைமுன் வைக்கப் பெற்றவை — 113—119, 241—242, 36, 611—612

ஒ.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

பார்க்க—தலைவர் — 286—287

ஒழுங்குப் பிரச்சினை—

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தீர்வுக்கு ஏற்பாடு — 176—183

க.

கட்டடங்கள்—

சிதம்பரம் பழைய மருத்துவமனை கட்டடம் கல்விக்கூடமாகப் பயன்படுத்துதல் — 274—275

கடன்கள்—

புழலேரி பகுதி நெற்பயிர்கள் பாதிப்பு, கடனைச் செலுத்த முடியாத நிலை (க.ந.) — 423—425

கணேசன், திரு. எஸ்.—

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகள் தேறியவர்களின் எண்ணிக்கை — 7—9

ஓமியோபதி மருந்தகங்கள், சிகிச்சை வசதிகள் — 33—37

சென்னை பொது மருத்துவமனை, விரிவுபடுத்துதல் — 402—404

நிலவள வங்கிகள், சிறு விவசாயிகள் செலுத்தும் பங்குத் தொகை — 133—135

க—தொடர்ச்சி.

பக்கங்கள்

கணேசன், திரு. எஸ்.—தொடர்ச்சி.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு, உதவி புரிய குழு — 379—382

கந்தசாமி, திரு. கா. வே.—

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, டாக்டர்கள் வேலை நிறுத்தம் (ஒ.தீ.) — 237

கந்தசாமி, திரு. கே.—

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 348—353

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தொழிலாளர்களும் தலைவர்களும் கைது, திருப்பி (ஒ.தீ.) — 54

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.தீ.) — 114—115

கருணாநிதி, திரு. மு.—

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் — 429—456, 457—468, 516, 533, 535, 536—537, 538, 539, 540, 575, 576, 581—582, 583, 584, 588, 590, 591, 605

	பக்கங்கள்
கருணாநிதி, திரு. மு.—தொடர்ச்சி.	
கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வேலை நிறுத்தம் (ஒ.தீ.)	239
சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தீர்வுக்கு ஏற்பாடு (ஒ.பி.)	181, 182
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1979	197, 198, 205, 207—208
மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	188, 189
கருணாநிதி திரு. தாழை மு.—	
பி.ஐ.எம். பட்டதாரிகள், துறை மருத்துவ அதிகாரிகள் நியமனம்	157—159
கருவூலங்கள்—	
சிவம்பரம் துணைக் கருவூலம், பணிகள் வங்கி மூலமாக நடத்தப் பெறுதல்	
கல்லூரிகள்—	
கோவில்பட்டி ஜி. வி. என். கல்லூரி மூடப்பட்டிருத்தல்	1—2
சென்னை மருத்துவக் கல்லூரி, காலியாயுள்ள பதவிகள்	251—253
கவன ஈர்ப்பு—	
இ.ஐ.டி. பாரி சர்க்கரை தொழிற்சாலை, நெல்லிக்குப்பம், தீ விபத்து	169—172
'கோக்' கரி கிடைக்காமை, கோவை பவுண்டரிகளில் வேலை பாதிப்பு	293—303
தமிழ்நாட்டு அரிசனங்கள், வட மாநிலத்தில் கொடுமை	65—68
தற்காலிக உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள், தேர்வு முறை	69—73

	பக்கங்கள்
கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.	
திருவில்லிப்புத்தூர் தொகுதி, நிலங்களில் மணல் மூடியது	298—299
புழலேரி பகுதி நெற்பயிர்கள் பாதிப்பு, கடனை செலுத்த முடியாத நிலை	423—428
விருத்தாசலம் பீங்கான் தொழிற்சாலை, மூடப்படும் நிலை	175—176
கால்நடைகள்—	
ஆரணி, மாட்டுச் சந்தை மாற்றம்	264
காளிமுத்து, திரு. கா.—	
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.நி.)	316, 323, 327, 344, 354—358, 360,
ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	212, 227—230
ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.நி.)	305, 308; 316,
கிட்டப்பா, திரு. என்.—	
அனைத்துநாட்டு கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதிப் பிரிவு	159—162
தஞ்சை மாவட்டம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்	267—268
தஞ்சை மாவட்டம் கூட்டுறவு இணைப் பதிவாளர் புகார் மனு	132—133
தஞ்சை மாவட்டம் கூட்டுறவு இணைப் பதிவாளர் புகார் மனு	132—133
தஞ்சை மாவட்டம் நீர் சேதாரம், தடுப்புத் திட்டங்கள்	20—22
திறந்தவெளி திரை அரங்குகள், அனுமதி	257—258
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு	209

க—தொடர்ச்சி

பக்கங்கள்

கோபாலன், திரு. போ.—

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 222—224

கோவிந்தராசன், திரு. சி.—

இ.ஐ.டி. பாரி, நெல்லிக்குப்பம், தீ விபத்து (க.ஈ.) — 170, 171

விருத்தாசலம் பீங்கான் தொழிற்சாலை, மூடப்படும் நிலை (க.ஈ.) — 172, 174, 175

கோவில்கள்—

சோளிங்கபுரம் தாயார் சன்னதி கோயில், திருப்பணிக்காக மானியம் — 9

திருக்களம்பூர் கோவில், வாழை மரங்களைப் பாதுகாத்தல் — 10

ச.

சங்கரய்யா, திரு. என்.—

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தொழிலாளர்களும் தலைவர்களும் கைது, திருச்சி (ஒ.தி.) — 60, 61

(ஒ.பி.) — 176—179

(த.கோ.) — 405—406

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.தி.) — 83

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 183, 184

சட்டமன்றம்—

உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறும் கடிதங்களும் உறைகளும், தமிழுக்கு முன்னுரிமை (த.கோ.) — 406—407

சட்ட முன்வடிவுகள்—

அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.தி.) — 74

இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.தி.) — 73

ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

ச.ஆ.தி.

ச.பிரி.ஆ. — 316—360

நிறைவேற்றம் — 212—230

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979

ச.ஆ.தி.

ச.பிரி.ஆ.

நிறைவேற்றம்

ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 — 305—316

ச.ஆ.தி.

ச.பிரி.ஆ.

நிறைவேற்றம்

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.தி.) — 74—118

ச.பிரி.ஆ. — 194—212

நிறைவேற்றம் — 183—194

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.தி.)

மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1979 — 303—304

ஆளுநரிடமிருந்து செய்தி — 304—305

ச.அ.தி.

சண்முகம், திரு. ஆர்.— — 381

திருத்தணி, நகராட்சியாக்குதல்

சண்முகம், திரு. கூத்தகுடி ச.— — 295—296

ஆட்டு இறைச்சி விலை (த.கோ.)

பக்கங்கள்

கிட்டப்பா, திரு. என்.—தொடர்ச்சி.

பேரவைத் தலைவர் அமைச்சராகப் போவதாக வந்துள்ள பத்திரிகை செய்தி (த.கோ.) — 363

மணல்மேடு பேரூராட்சி மன்றம், நிர்வாக அதிகாரிமீது புகார் — 11—12

மலேரியா நோய் கிராமங்களில் கொய்னா மருந்து வழங்கல் — 399—402

முதியோர்கள், உதவிப் பணம் — 373—375

கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் — 456

புழலேரி பகுதி நெற்பயிர்கள் பாதிப்பு, கடனைச் செலுத்த முடியாத நிலை (க.ஈ.அ.) — 423—425

கிருஷ்ணன், திரு. ரா.—

இந்தியன் ஆக்ஸிஜன், விபத்துக்குள்ளான தொழிலாளர்கள் (த.கோ.) — 169

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்), திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (அவசரச் சட்டம்) (நி.தீ.) — 316, 317, 319

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 319—320

ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) சட்டமுன் வடிவு, 1979 — 314, 315

ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்வது குறித்து (த.கோ.) — 407—408

கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ.) — 290—291

தொழிலாளர் நலத்துறை, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு — 145—148

பக்கங்கள்

குடிநீர்—

திருச்செந்தூருக்கு அளித்தல் — 384—385

பள்ளிப்பத்து ஊராட்சி சமுதாயக் கிணறுகள் — 264—265

பொன்னையாற்றிலிருந்து சோளிங்கருக்கு விநியோகம் — 12

குழந்தைவேலு, திரு. ப.—

காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்னை, தஞ்சாவூர் பகுதிகளில் பதட்ட நிலைமை (க.ஈ.அ.) — 425—427

திருவில்லிப்புத்தூர் தொகுதி நிலங்களில் மணல் மூடியது (க.ஈ.அ.) — 298—299

மேட்டூர் அணைத் தண்ணீர் வழங்குதல் (தகோ.) — 294

கூட்டுறவு—

தஞ்சை மாவட்டம் இணைப் பதிவாளர் — 133—139

நிலவள வங்கிகள், சிறு விவசாயிகள் செலுத்தும் பங்குத் தொகை — 133—13?

பனையூர் பால் வழங்கு சங்கம் நிர்வாகம் — 272

மாநில பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம், கலைத்தல் — 28—32

கைத்தறி—

அனைத்து நாட்டு கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி பிரிவு, விவரங்கள் — 159—162

கூட்டுறவுச் சங்கங்கள், அபராத வட்டி, தள்ளுபடி — 280—283

கோதண்டராமன், திரு. வி. கே.—

குடியாத்தம் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் — 269—272

சரிகை நிறுவனம், தமிழ்நாடு, தகவல்கள் — 275—279

பக்கங்கள்

சண்முகம், திரு. கூத்தகுடி ச.—தொடர்ச்சி.

உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறும் கடிதங்களும் உறைகளும் தமிழுக்கு முன்னுரிமை (த.கோ.) 406—407

ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 309—312

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்வது குறித்து (த.கோ.) 40, 41
ஓ.பி. 181

சமரசம், டாக்டர் கே.—

"எலப் நிறுவனம்" தருமபுரி மாவட்டம், அரசு ஏற்றல் 37—39

ஒகேனக்கல் ஆறு, தருமபுரி மாவட்டப் பாசன வசதிகள் 155—156

சமூகநலம்—

முதியோர்கள் உதவிப்பணம் 373—375

சரிகை—

சரிகை நிறுவனம், தமிழ்நாடு, தகவல்கள் 275—279

சவுந்திரராஜன், திரு. செ. வீ.—

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 220—222

சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.—

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் 592

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 212, 213, 214

சென்னை தேனாம்பேட்டை கமலக்கண்ணன் தொடக்கப் பள்ளி, நிர்வாகச் சீர்கேடுகள் 259—262

ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—தொடர்ச்சி.

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தொழிலாளர்களும் தலைவர்களும் கைது, திருச்சி (ஓ.கி.) (த.கோ.) 60, 42, 43

சாலைகள்— 16—20

மயிலாடும்பாறை—மள்ளப்புரம், மலைச் சாலை

சிவசாமி, திரு. செ.—

ஆர். எஸ். மங்கலம், ஆயக்கட்டு பகுதியில் தண்ணீர் வரி வசூல் 243—246

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 224—225

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தொழிலாளர்களும் தலைவர்களும் கைது, திருச்சி (ஓ.கி.) 46

சிறு சேமிப்பு— 129—132

கிராம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களிலிருந்து வசூல்

சிறு தொழில்கள்—

பனைப் பொருட்கள் தயாரிப்பு, நிறுவனம் திருச்செந்தூரில் அமைத்தல் 27—28

சுந்தரம், திரு. ப.— 367—368

ஜோலார்பேட்டை அருகே இரயில்வே மேம்பாலம்

சுந்தரராஜ், திரு. நா.— 10

திருக்களம்பூர் கோவில், வாழை மரங்களைப் பாதுகாத்தல்

சுப்பிரமணியம், திரு. ஓ.—

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலை நிறுத்தம் (ஓ.கி.) 234

சுப்பிரமணியன், திரு. கே. ஜே.— 139—140

களம்பூரில் உயர் செகண்டரிபள்ளி, துவக்குதல்

	பக்கங்கள்
சுப்பிரமணியன் திரு. சின்ன சேலம் மா.—	
உள்ளாட்சி மன்றங்கள் தார்சாலை அமைக்க மானியம்	381—382
தென் ஆற்காடு மாவட்ட நலப்பள்ளி ஆசிரியர்கள் சம்பளம் வழங்காமை	389—391
மாநில பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம், கலைத்தல்	28—32
சுப்பிரமணியன், திரு. வ. மு.—	
வைகை அணைக் கால்வாய்கள், வெள்ளத்தால் பாதிப்பு	393—396
சுப்ரவேலு, திரு. கா.—	
கல்லூரி மாணவியர் விடுதிகள் மருத்துவ வசதி	378—379
சுப்பு, திரு. க.—	
அம்பத்தூர் நகரியம், நகராட்சியாக்குதல்	127—129
இணை இயக்குனர் (மலேரியா) பதவி, காலியாக இருத்தல்	364—367
சென்னை மருத்துவக் கல்லூரி, காலியாயுள்ள பதவிகள்	251—253
சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு வாகனப்படி வழங்கப்படாமை	10
தற்காலிக உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள், தேர்வு (க.ஈ.)	68, 71—72, 73
திண்டுக்கல் மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள் வேலை நிறுத்தம் (த.கோ.)	410—412
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979	202, 203
மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	184, 186; 187
மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு திருத்தச் சட்டமுன் வடிவு 1979	304—305

	பக்கங்கள்
செல்லப்பா, திரு. அ.—	
தஞ்சை விவசாயிகளின் கோரிக்கை மனு, நடவடிக்கை விவரம்	23—26
செல்வராசன், திரு. அ.—	
ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை	5—7
சோமசுந்தரம், திரு. எஸ். டி.—	
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979	74—79, 94, 113, 114 194—197, 198, 199 200—208
விவசாயத் தொழிலாளர்கள், கீழ்த்தஞ்சை கூலி நிர்ணயம் (அ.அ.)	283—286
சௌந்தரபாண்டியன், திரு. பெ.—	
தமிழ்நாட்டு அரிசனங்கள், வட மாநிலத்தில் கொடுமை (க.ஈ.அ.)	65—66, 67, 68
சௌந்திரராசன், திரு. கே.—	
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.நி.)	82, 95—98
சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர்.—	
தற்காலிக உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள், தேர்வு (க.ஈ.அ.)	68—71 72, 73

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குமுறை—

உட்கார்ந்து கொண்டே உறுப்பினர்கள் பேசுதல் கூடாது 281

பேரவைத் தலைவரின் அனுமதியில்லாமல் பேசுதல் கூடாது. அனுமதியில்லாமல் பேசினால் அவ்வாறு பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டி வரும்.

பேரவைத் தலைவரை, "இன்னது தான் சொல்ல வேண்டும்" என்று உறுப்பினர்கள் கட்டாயப்படுத்த முடியாது. 332

பேரவையை அவமதிக்கும் விதத்தில் பேசுதல் கூடாது 331

குற்றச்சாட்டுகள்—

எந்த ஓர் அதிகாரியின் மீதாவது குறிப்பாக குற்றம் சாட்டும்போது, முன்னதாக எழுதிக் கொடுத்துவிட்டு சொல்ல வேண்டும். (அ.ச.மு.) 325

குற்றஞ்சாட்டப்பட்டவர் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாதபோது அவரைப் பற்றிக் குற்றஞ்சாட்டிப் பேசுதல் கூடாது. குற்றச்சாட்டுகள் பொதுவானவையாக இருந்தால் அவைக் குறிப்பில் இருக்கலாம். (அ.ச.மு.) 82—83

கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் இருக்கக் கூடாது (வி.வி.) 261, 279

"வெளியே இருக்கிற அதிகாரிகள் மீது குற்றம் சுமத்துகிற நிலையிருந்தால், முதலிலே எழுதிக் கொடுத்தால், தலைவர் அவர்கள் அமைச்சருக்குச் சொல்லவும், அது பற்றிய தகவல்களை அமைச்சர் சேகரித்து அவைக்குத் தரவும் வசதியாக இருக்கும். அவ்வாறில்லாமல், முன்னதாக எழுதிக் கொடுக்காமல் குற்றச்சாட்டுகளை—அவையிலில்லாத அதிகாரிகள் மீது சொன்னால், அதிகாரி

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

குற்றச்சாட்டுகள்—தொடர்ச்சி.

களுக்குப் பாதுகாப்பு இராது என்ற காரணத்தாலே அதைச் சொன்னேன். ஆனால், உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்கிறேன் என்று சொன்ன காரணத்தினாலே, தலைவர் அவர்களோ, அமைச்சர் அவர்களோ அதுபற்றி ஆராய்வார்கள். விசாரணை நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்." (அ.ச.மு.) 330—331

குறுக்கீடுகள்—

உறுப்பினரொருவர் பேசும்போது, மற்றொருவர் தம்மைப் பற்றி ஏதாவது சொல்லியிருந்தால் குறுக்கிடலாம். (அ.ச.மு.) 84—85

பேசும் முறை—

ஏற்கெனவே எழுப்பப்பெற்று பதிலளிக்கப் பெற்றுவிட்ட ஒரு பிரச்சினையை மீண்டும் எழுப்பி பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்துவது சரியல்ல (த.கோ.) 413

சட்ட முன்வரைவின் நோக்கத்திற்கு அப்பால் சென்று பேசக் கூடாது. (அ.ச.மு.) 234

வெளியே இருப்பவர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் தகவல் வந்தது என்று மட்டும் சொன்னால் நல்லது 234

நடைமுறை—

அமைச்சர் விளக்கம் அளித்த பிறகு கேள்விகள் கேட்கக் கூடாது. (ஓ.கி.) 289

அமைச்சரிடமிருந்து அறிக்கை வந்திருந்தால் உறுப்பினர்களது அறிவிப்புகள் பேரவையில் எடுத்துக் கொள்ளப் பெற்றிருக்கும். அதுபற்றித் தகவல் வேண்டுமென்றால் தலைவரின் அறையில்தான் கேட்க வேண்டும் (த.கோ.) 285

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—தொடர்ச்சி.

"அரசுத் தரப்பிலிருந்து தகவல் கிடைக்காத நிலையில் உறுப்பினர்கள் கொடுத்துள்ள பல அறிவிப்புகள் எடுத்துக்கொள்ளப் பெறாமல் இருக்கின்றன. இன்று கூட்டத் தொடரின் கடைசி நாள் என்பதாலேயே, 'தகவல் கோரல்' என்பதன்கீழ் அவரவர்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளிப்பதன் மூலம் அமைச்சர்களும் அவற்றைத் தெரிந்து கொள்ள முடியும் என்று நினைத்து எல்லோருக்கும் வாய்ப்பளிக்கிறேன். இதையே விதிதாக ஆக்கிவிடுவது சரியல்ல". (த.கோ.) 410

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை உறுப்பினர்களின் வேண்டுகோளின் பேரில் எடுத்துக் கொள்ளலாமா எனப் பேரவைத் தலைவர் கேட்கும் போது அரசுத் தரப்பில் தகவல் இன்னும் கிடைக்காததால் பிறகு எடுத்துக்கொள்ளலாம் என சொல்லப் பெறுவதை உறுப்பினர்கள் ஆட்சேபித்தபோது பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :—

"உண்மையிலேயே இந்த அவையில் கவன ஈர்ப்புத் தீர்மானமானாலும் ஒத்திவைப்புத் தீர்மானங்களானாலும் அது அவசரம் மட்டுமல்ல அவை எல்லாம் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று உணர்ந்துதான் நாம் விதிகளிலே அதற்கு தனி இடத்தைத் தந்திருக்கிறோம். கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப் பெற்றால் அவற்றுக்கு அமைச்சர்கள் உடனடியாகத் துறைச் செயலாளர்கள் மற்ற அதிகாரிகள் மூலமாகத் தகவல்களைச் சேகரித்து இந்த அவைக்குத் தந்தார்களேயானால், உண்மையிலேயே அவற்றின் பொது முக்கியத்துவத்தை உணர்ந்ததாகக் கருதப்படும். ஆகவே நான்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—தொடர்ச்சி.

அமைச்சர்களை வேண்டிக் கேட்டுக்கொள்வது, எந்த நிகழ்ச்சிகள் நடந்தாலும் அவற்றுக்கு முன்கூட்டியே, அவர்கள் பத்திரிகைச் செய்திகளைப் படிக்கக்கூடிய வர்கள்— அவர்கள் செயலாளர்களும் படிக்கக்கூடியவர் கள் எனவே அவர்களாகவே தேவையான தகவல்களைச் சேகரித்து, அறிக்கை தயாரித்துக் கொள்ளலாம். நடைபெறும் நிகழ்ச்சிகளில் எது முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதி முன்கூட்டியே தகவல்களைத் தயாராக வைத்திருந்தால் இங்கு உணர்வுப் பூர்வமாக எழும் வாதங்கள் முழுவதையும் தவிர்க்க முடியும்; அவையின் நேரமும் வீணாவதைத் தவிர்க்க முடியும்." (த.கோ.) 169

ஒத்திவைப்புத் தீர்மானத்தில் அரசு தன் அறிவிப்பைத் தந்த பிறகு அதைப்பற்றி எந்தப் பிரச்சினையையும் எழுப்புதல் கூடாது. (ஒ.தீ.) 69

ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தவர்கள் பேசிய வுடன், அப் பிரச்சினையில் பேரவை உறுப்பினர் ஒருவரைப் பற்றியும் சம்பந்தப்படுத்தியிருந்தால் "அந்த உறுப்பினரும் தன்னுடைய கருத்தைச் சொல்ல சந்தர்ப்பம் தர வேண்டும். அவர் ஏதேனும் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்" எனப் பேரவைத் தலைவர் குறிப்புரைத்தார். (ஒ.தீ.) 237

ஓர் உறுப்பினர், தாம் சம்பந்தமில்லாத ஒரு பிரச்சினையில் விளக்கம் கேட்க இடமில்லை (அ.ச.மு.) 329

ஒரு சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெறுகிற நிலையில், அதனை எதிர்க்கின்றவர்களில் ஒருவர் அமைச்சர் பொறிந்தவுடன், "நான் இதனை எதிர்க்கிறேன், மறுக்கிறேன்" எனச் சுருக்கமாகப் பேச

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—தொடர்ச்சி.

வேண்டும். எல்லாக் கட்சியினர்களும் பேசுவதற்கு அனுமதிக்கப் பெற வேண்டும் என்பது சரியல்ல. இன்று அனுமதிக்கப் பெறுகிறது என்பதால் இதையே நடைமுறையாக ஆக்கிக்கொள்ள முடியாது. (அ.ச.மு.) 184—192

ஒரு பொருள் குறித்து சில சட்ட முன்வடிவுகளை ஒரு கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறபோது முதலில் ஒரு சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டவுடன், பொது விவாதத்தை எல்லாச் சட்ட முன்வடிவுகள் சம்பந்தமாகவும் வைத்துக்கொண்டு, பிறகு ஒவ்வொரு சட்ட முன்வடிவாக எடுத்துக்கொண்டு நிறைவேற்றலாம். (அ.ச.மு.) 212, 213, 214

ஒழுங்குப் பிரச்சினை என்று ஓர் உறுப்பினர் எழுப்புகிறபோது அதை அனுமதிப்பது பற்றிப் பேரவைத் தலைவர் முடிவு செய்ய வேண்டுமே தவிர உறுப்பினர்கள் முடிவு செய்ய அவர்களுக்கு அதிகாரம் இல்லை. 330

கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புதல் கூடாது. (து.வி.) 261

பேரவைத் தலைவரின் அறையிலேயே தள்ளப்பட்டு அது பற்றிய தகவல் உறுப்பினருக்கும் அனுப்பப் பெற்ற பிறகு, அதனையே பேரவையில் வந்து எழுப்புதல் கூடாது. (த.கோ.) 426

முதல் நாள் நடந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒட்டி அரசுத் தரப்பிலிருந்து சில விளக்கங்களைப் பெற ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். "ஏற்கெனவே அவையில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் விவாதிக்கப்பட்ட பொருள்

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—தொடர்ச்சி.

பற்றி மீண்டும் ஓர் ஒழுங்குப் பிரச்சினையின் வாயிலாக விவாதத்தை எழுப்புவது முறையல்ல; இருந்தாலும் அவசர அவசியத் தன்மைக்கேற்ப சூழ்நிலையை யொட்டி அதுபற்றிக் கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்கப் பெற்றது. இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஒரு கட்சியின் சார்பாக அக்கட்சியின் தலைவர் பேசியதற்குப் பிறகு அக்கட்சியின் துணைத் தலைவரும் பேசுவது முறையல்ல. பேரவையின் மரபு தொடர்ந்து காப்பாற்றப்பெற உறுப்பினர்கள் பேரவைத் தலைவருடன் ஒத்துழைக்க வேண்டும்" என தலைவர் குறிப்புரைத்தார். (ஓ.பி.) 179

வினாக்கள்-விடைகள் முடிவுற்றபின் அடுத்த அலுவலை எடுத்துக்கொள்வதற்கு முன், "சீரோ ஹவர்" என்பது இந்தப் பேரவையில் கிடையாது. 465

வினா நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புதல் கூடாது. (வி.வி.) 385

'வெளிநடப்புச் செய்ததால் நாங்கள் கொடுத்து இருந்த
ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தள்ளிவிட்டேன்' என்று
தலைவர் சொல்வது சரிதானா என்பதாக ஓர் உறுப்
பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.
"நம்பிக்கை இல்லாத் தீர்மானம் விவாதிக்கப் பெறுகிற
போது ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புகள்
ஆகியவை எடுத்துக்கொள்ளப் பெறுவதில்லை. இருப்
பினும் பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து
அதை உடனே எடுத்துக்கொள்ளலாமா என அரசுத்
தரப்பில் கேட்டதற்கு, மறுநாள் எடுத்துக்கொண்டால்,
தகவல் முழுவதையும் சேகரித்துக் கொடுப்பதாகத்
தெரிவித்தார்கள். பிறகு அன்றே பிற்பகல் 1 மணிக்கு

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—தொடர்ச்சி.

எடுத்துக்கொள்வதானால் அதற்குள் தகவல்களைச் சேகரித்துக் தருவதாக உறுதியளித்தார்கள். எதற்கும் இணங்காது, உடனடியாக எடுத்துக்கொள்ளாததால் வெளிநடப்புச் செய்கிறோம் என முத்திரைவைப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள் வெளிநடப்புச் செய்ததால் நான் அப்பொருள் குறித்த விவாதம் தேவையில்லை எனக் கருதி அவற்றைத் தள்ளுபடி செய்ததோடு வேண்டுமானால் புதிதாக எழுதித் தரட்டும்" என தெரிவித்தேன். இப்போது "புதிதாக எழுதிக் கொடுத்துள்ளதை இன்றைக்கு எடுத்துக்கொள்ள அரசுத் தரப்பில் தயாராக உள்ளதால் நான் அதை அனுமதிக்கிறேன்" எனப் பேரவைத் தலைவர் தீர்ப்பு அளித்தார். (த.கோ.) 40—45

வெளிநடப்பு செய்யும்போது கட்சித் தலைவர் தான் விளக்கம் சொல்லலாம். (ஒ.தி.) 62

82-வது விதியின் கீழ் அமைச்சர் அளித்த அறிக்கையின் மீது கேள்வி கேட்க முடியாது. (அறிக்.) 285

நீக்கம்—

பேரவைத் தலைவரின் அனுமதியின்றி பேசப் பெற்றவை நீக்கப்பெற்றது (ஒ. தி.) 53—54, 84

பேரவையில் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாத ஒருவர் பெயரைச் சொல்லி, குற்றம்சாட்டியபோது, அப்பெயர் நீக்கப்பெற்றது. 82—83

பேரவைத் தலைவரின் அனுமதியின்றி பேசப் பெற்றவை நீக்கப்பெற்றது. (அ.ச.மு.) 380

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—

சட்ட முன்வடிவின் ஆய்வின்போது குற்றச்சாட்டுகளைத் 226
தவிர்த்து, சட்ட முன்வடிவின்மீது பேச வேண்டும்.

வினாக்கள்-விடைகள்—

அமைச்சரிடம் இருக்கக்கூடிய தகவல்களை ஒட்டியவையாக 250
இருக்கவேண்டும் (து.வி.)

அவரவர்களது தொகுதி சம்பந்தப்பட்ட கேள்விகளை 254
அவரவர்கள் கேட்பது நல்லது. (து.வி.)

உடுக்குறியிட்ட வினாவுக்கான பதில் விரிவானதாக இருக்குமானால் அதை அச்சடித்து மேசை மீது 372
வைத்துவிடலாம். 244

சுருக்கமாகக் கேட்கப்பெற வேண்டும். (து.வி.)

நீண்டதாக இல்லாமல் சுருக்கமாக இருத்தல் வேண்டும். 25
(து.வி.)

மூலக் கேள்வி குறிப்பிட்டதொரு தொகுதியைப் பற்றிய 28
தாக இருப்பின் எல்லா உறுப்பினர்களுக்கும் துணை
வினா கேட்க அனுமதிக்க இயலாது. (து.வி.)

மூலக் கேள்வி கொடுத்த உறுப்பினர் இரண்டு துணை
வினாக்கள் கேட்டால் போதும் என்று அலுவல் ஆய்வுக்
குழுவிலே எடுத்த முடிவை பேரவைத் தலைவர் உறுப்
பினர்களுக்கு நினைவுபடுத்தி, "நேரம் இல்லாத
காரணத்தால் அந்தந்தத் தொகுதிகள் சம்பந்தப்பட்ட
கேள்விகளை அந்தந்த தொகுதி உறுப்பினர்கள் மட்டும்
கேட்டால் போதும். பொதுப்படையான நோக்க
முள்ள கேள்வியாக இருந்தால் மற்றவர்களும் கேட்க 2, 5
வாய்ப்பு தரப்பெறும்" என்று தெரிவித்தார் (து.வி.)

	பக்கங்கள்
தலைவர்—தொடர்ச்சி.	
தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.	
வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.	
மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டும். (து.வி.)	138, 145, 158,
மூலக் கேள்வியை ஒட்டியதாக இல்லையெனில் தனிக் கேள்வி போடவேண்டும் (து.வி.)	159
யோசனை சொல்வதாக அமையக் கூடாது. (து.வி.)	276
தாமரைக்கனி, திரு. இரா.—	
திருவில்லிப்புத்தூர் நிலங்களில் மணல் மூடியது (க.ஈ.)	298—299
புகையிலை, வேதாரண்யத்தில் தேக்கம்.	396—399
திருவேங்கடம், திரு. பெ. சு.—	
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979	358—359
ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	217—219
தமிழ்நாட்டு அரிசனங்கள், வட மாநிலத்தில் கொடுமை (க.ஈ.)	65, 67
புதுப்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக்குதல்	140
மேல்நிலைப் பள்ளிகள், ஒன்றியங்களில் துவக்குதல்	136—139
திரை அரங்குகள்—	
திறந்தவெளி, அனுமதி	257—258
தீர்மானங்கள்—	
அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்	429—610

	பக்கங்கள்
துரை கலியமூர்த்தி, திரு.—	
சிதம்பரம் துணைக் கருவூலம் பணிகள் வங்கி மூலமாக நடத்தப் பெறுதல்	9
சிதம்பரம் பழைய மருத்துவமனை கட்டடம் கல்விக்கூடமாக பயன்படுத்துதல்	274—275
சிதம்பரம் பாளையங்கோட்டை ஏரி, அணையாக்கல்	265—266
சென்னை மாணவர்களுக்கு விடுதிகள்	377—378
துரை கோவிந்தராசன், திரு.—	
காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினை, தஞ்சாவூர் பகுதிகளில் பதட்ட நிலை (க.ஈ.)	425—427
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.தி.)	115—118
துரை முத்துசாமி, திரு.—	
இ.ஐ.டி. பாரி சர்க்கரை தொழிற்சாலை, நெல்லிக்குப்பம், தீ விபத்து	169—172
புழலேரி பகுதி நெற்பயிர்கள் பாதிப்பு, கடனைச் செலுத்த முடியாத நிலை (க.ஈ.)	423—425
துரைமுருகன், திரு.—	
குடிநீர், பொன்னையாற்றிலிருந்து சோளிங்கருக்கு விநியோகம்	12
செட்டேரியில் அணை, வட ஆற்காடு மாவட்ட ஏரிகளில் நீர் வரத்து	153—154
துலுக்காணம், திரு. வ.—	
கோமுகி ஆறு, தியாகதுருகம் அருகே பாலம், போக்குவரத்து வசதி	152—153

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தேர்வுகள்—

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்; தேர்வுகள், தேறியவர்களின் எண்ணிக்கை 7—9

தொ.

தொழிலாளர்கள்—

கூடலூர் பகுதி அரசு தேயிலைத் தோட்டங்கள் காண்ட்ராக்ட் முறையில் வேலை 256

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்வது குறித்து (த.கோ.) 40—45, 240, 405—406, 413—414

(ஒ.தீ.) 45—64

(ஒ.பி.) 176—183

டன்லப் தொழிற்சாலை கலவரம் (த.கோ.) 406

தொழிலாளர் நலத்துறை, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு 145—148

விவசாயத் தொழிலாளர்கள், கீழ்த்தஞ்சை, கூலி நிர்ணயம் (அ.அ.) 283—286

ஜின்னிங் ஆலைகள், பெண் தொழிலாளர்களின் ஊதியங்கள் 142—145

தொழிற்சாலைகள்—

இ.ஐ.டி. பாரி, நெல்லிக்குப்பம் தீ விபத்து (க.ஈ.) 167—172

இந்தியன் ஆக்ஸிஜன், விபத்துக்குள்ளான தொழிலாளர்கள் (த.கோ.) 169

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தொழிலாளர்கள்—தொடர்ச்சி.

"கோக்" கரி கிடைக்காமை, கோவை பவுண்டரிகளில் வேலை பாதிப்பு (க.ஈ.) 239—303

தீப்பெட்டி தொழிற்சாலைகள், குடியாத்தம், மூடப்பட்டிருத்தல். 269—272

பீங்கான் தொழிற்சாலை, விருத்தாசலம் மூடப்படும் நிலை (க.ஈ.) 172—175

ந.

நடராசன், திரு. ஆ.—

உள்ளூர் [illegible], எம்.பி.பி. [illegible] கம்பெனி ([illegible]) செலுத்துதல் 263

கோவை மருத்துவக் கல்லூரி, மருத்துவ மனை, வேலை நிறுத்தம் (ஒ.தீ.) 231—232

நாராயணசாமி, திரு. கே.—

அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 (அ. அ. தி.) 74, 183, 194

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979

நிலங்கள்— 246—251

புறம்போக்கு, ஆக்கிரமிப்பை அகற்றுதல்

நீக்கம்— 61, 80, 81, 82, 83, 84, 279, 330, 464, 465, 582, 583, 584, 591, 592, 596

DII A 348—6

ந—தொடர்ச்சி.

பக்கங்கள்

நீர்பாசனம்—

ஒகேனக்கல் ஆறு, தருமபுரி மாவட்ட பாசன வசதிகள் 155—156

காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்னை, தஞ்சாவூர் பகுதிகளில் பதட்ட நிலைமை (க.ஈ.) 425—427

செட்டேரியில் அணை, வட ஆற்காடு மாவட்ட ஏரிகளில் நீர் வரத்து 153—154

திருமேனி ஏரி, பராமரிப்பு 22—23

நீர்ச் சேதாரம், தஞ்சை மாவட்டம், தடுப்புத் திட்டங்கள் 20—22

பாளையங்கோட்டை ஏரி, சிதம்பரம், அணையாக்குதல் 265—266

புதிய தொண்டக்காடு, வாய்க்கால் திட்டம் 266—267

மேட்டூர் அணை, தண்ணீர் வழங்குதல் (த.கோ.) 294—297

வைகை துணைக் கால்வாய்கள், வெள்ளத்தால் பாதிப்பு 393—396

நோய்கள்—

மலேரியா நோய், கிராமங்களில் கொய்னா மருந்து வழங்கல் 399—402

ப.

பணிகள்—

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள், பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை 5—7

பரமசிவம், திரு. மொ.—

தைலாபுரம் மருத்துவமனை பணியாளர்கள் 155—157

பழனிவேல், திரு. என்.—

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.நி.) 94—9

ப—தொடர்ச்சி.

பக்கங்கள்

பள்ளிகள்—

அரசினர் பள்ளிகள், சிதம்பரம், உயர்செகண்டரி வகுப்புகள் துவக்குதல் 139

அரசு உயர்நிலைப்பள்ளி, புதுப்பாளையம், மேல்நிலைப் பள்ளியாக்குதல் 140

அரசுப் பள்ளிகள், திருநெல்வேலி மாவட்டம், உயர் இடைநிலைக் கல்வி வகுப்புகள் 141—142

உயர் செகண்டரி பள்ளி, கடம்பூரில் துவக்குதல் 139—140

காலக்கண்ணாயன் தொடக்கப்பள்ளி, சென்னை தேனாம்பேட்டை நிர்வாகச் சிக்கல்கள் 259—262

மேல்நிலைப் பள்ளிகள், ஒன்றியங்களில் துவக்குதல் 136—139

பாண்டியன், திரு. பி. எச்.—

வீடுகள், இடவசதி கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவை 13—16

பால்வளம்—

பால் பண்ணை, மாதவரம், வேலை நிறுத்தம் (த.கோ.). 160

பாலகிருஷ்ணன், திரு. சோ.—

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 337—339

பாலங்கள்—

இரயில்வே பாலம், கரூர் அருகே 391

இரயில்வே மேம்பாலம், காட்பாடி-சித்தூர் சாலை, பழுது பார்த்தல் 152

இரயில்வே மேம்பாலம், செங்கல்பட்டு அருகே 392—393

இரயில்வே மேம்பாலம், ஜோலார்பேட்டை மேம்பாலம் 367—368

கோமுகி ஆறு, தியாகதுருவம் அருகே போக்குவரத்து வசதி 152—153

ப—தொடர்ச்சி.

புகையிலை—

வேதாரண்யத்தில் தேக்கம்	396—399

பொன்னையன், திரு. சி.—

மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 (ச.அ.நி.)	304—305

போக்குவரத்து—

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம், இடமாற்றம்	3—4
பல்லவன் போக்குவரத்துக் கழகம், தொழிற்பயிற்சிக் கல்வி பெற்றவர்கள்	20
லாரிகள், தேசிய உரிமங்கள்	368—373

ம.

மணிமாறன், திரு. ஆர்.—

ஜின்னிங் ஆலைகள், பெண் தொழிலாளர்களின் ஊதியங்கள்	142—145

மணிமாறன், திரு. மா.—

அரிசனங்களின் வீடுகள், பழுது பார்த்தல்	387—388
ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979	306—309
கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள், அபராத வட்டி தள்ளுபடி	280—283
தஞ்சை மாவட்டம் அரிசன விவசாயிகள், உழவு மாடுகள் வழங்குதல்	150—152
நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979	92, 209
லாரிகள். தேசிய உரிமங்கள்	368—373

ம—தொடர்ச்சி.

மருத்துவம்—

	பக்கங்கள்
இணை இயக்குனர் (மலேரியா) பதவி, காலியாக இருத்தல்	364—367
"எலப் நிறுவனம்" தருமபுரி மாவட்டம், அரசு ஏற்றல்	37—39
ஓமியோபதி பிரிவுகள், அரசு மருத்துவ மனைகளில் ஏற்படுத்துதல்	32
ஓமியோபதி மருந்தகங்கள், சிகிச்சை வசதிகள்	33—37
தற்காலிக உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள், தேர்வு (க.ஈ.)	68—73
பி.ஐ.எம். பட்டதாரிகள், துணை மருத்துவ அதிகாரிகளாக நியமனம்	157—159

மருத்துவமனைகள்—

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, வேலை நிறுத்தம் (ஒ.தீ.)	230—239
பொது மருத்துவமனை, சென்னை, விரிவுபடுத்துதல்	402—404
மருத்துவமனை, செஞ்சி, படுக்கைகள் அதிகரிப்பு	273—274
மருத்துவமனை, தைலாபுரம், பணியாளர்கள்	150—157
திண்டுக்கல் மருத்துவ மனை, மருத்துவர்கள், செவிலியர்கள் வேலை நிறுத்தம் குறித்து	410—412 414—416 419—423

மனோகரன், திரு. கி.—

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்	534—535, 536, 537, 540,
கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலை நிறுத்தம் (ஒ.தீ.) (த.கோ.)	356 167—168

பக்கங்கள்

மனோகரன், திரு. கி.—தொடர்ச்சி.

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தொழிலாளர்களும் தலைவர்களும் கைது, திருச்சி (ஒ.தி.) 50—51, 53, 55, 57, 58—59, 60—61, 63

(ஒ.பி.) 177, 178, 180, 181, 183

(த.கோ.) 44—45

(அ.அ.) 240

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1979 185, 190

விதி 23-ஐத் தளர்த்தல் (தீ.) 65

மார்க்கபந்து, திரு. ரா.—

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 343—348

சட்டங்கள், தமிழாக்கும் பணி 135—136

மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—

ஓமியோபதி பிரிவுகள், அரசு மருத்துவ மனைகளில் ஏற்படுத்துதல் 38

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தொழிலாளர்களும் தலைவர்களும் கைது, திருச்சி (ஒ.தீ.), (த.கோ.) 53, 40—41

பக்கங்கள்

மாரிமுத்து திரு. ஏ. ஆர்.—தொடர்ச்சி

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.நி.) 80—81, 82, 86, 89, 91—94

மின்சாரம்—

தெரு விளக்குகள், வயிரம்பேட்டை 376—377

விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு, மயிலம் ஒன்றியம் 255

வேளாண்மைப் பணிகளுக்கு மின் இணைப்பு, சாணார்பட்டி 353—355

முத்தையா, திரு. இரா.—

மலைச் சாலை, மயிலாடும்பாறை-மன்னப்புரம் வரை 16

ய.

யூசப் திரு. யா. சை. மு.—

புறம்போக்கு நிலங்கள், ஆக்கிரமிப்பை அகற்றுதல் 246—251

ர.

ரகுமான்கான், திரு. அ.—

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தொழிலாளர்களும் தலைவர்களும் கைது, திருச்சி (ஒ.தீ.), (த.கோ.) 46—48, 40, 42

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 79—80, 81, 82, 83, 84, 85—89

ர.—தொடர்ச்சி.

	பக்கங்கள்
ராமணி, திரு. கு.—	
கோக் இடைக்காடை, கோவை, பவுண்டரிகளில் வேலை பாதிப்பு (க.ஈ.)	299—303
கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலை நிறுத்தம் (ஒ.தீ.), (த.கோ.)	232—233, 153, 165, 169
சிறுசேமிப்பு நிதி, கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களிலிருந்து வசூல்	129—133
ராமலிங்கம், திரு. ஏ.—	
சிதம்பரம், அரசினர் பள்ளிகள், உயர் செகண்டரி வகுப்புகள் துவக்குதல்.	139

ல.

லத்தீப், திரு. எம். ஏ.—	
அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்	597—601
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.	319, 323 324—326, 329, 331, 332,
ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	215, 216, 217
கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலை நிறுத்தம் (ஒ.தீ.)	236—237

ல—தொடர்ச்சி.

	பக்கங்கள்
லத்தீப், திரு. எம். ஏ.—	
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979	82, 83; 98—105, 199, 200, 204
மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	191

வ.

வடிவேல், திரு. கு.—	
கரூர் அருகே இரயில்வே பாலம்	391
வரதராஜன், திரு. என்.—	
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.	209—210
மின்வாரியம், பயிற்சிப் பணியாளர்கள்	375—376
வரிகள்—	
உள்ளூர் மேல்வரி, ஏ.சி.சி. சிமெண்ட் கம்பெனி (மதுக்கரை) செலுத்துதல்	263
தண்ணீர் வரி, ஆர்.எஸ். மங்கலம் ஆயக்கட்டு பகுதியில் வசூல்	243—246
வாரியங்கள்—	
மின்வாரியம், பயிற்சிப் பணியாளர்கள்	375—376
விடுதிகள்—	
கல்லூரி மாணவியர் விடுதிகள், மருத்துவ வசதி	378—379
மாணவர்களுக்கு விடுதிகள், சென்னை	377—378

	பக்கங்கள்
விவசாயிகள்—	
தஞ்சை விவசாயிகள் கோரிக்கை, நடவடிக்கை	23—26
விஜயராகவன், திரு. பொ.—	
கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம், இடமாற்றம்.	3—4
வீட்டுவசதி—	
வீடுகள், இடவசதிக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவை.	12—16
வேணுகோபால், திரு. த.—	
பனையூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கம் நிர்வாகம்	279
வேலுச்சாமி, திரு. ஓ. சோ.—	
திருநெல்வேலி மாவட்டம் அரசுப் பள்ளிகள் உயர் இடைநிலைக் கல்வி வகுப்புகள்	141—142
வேலை வாய்ப்பு—	
மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு, உதவி புரிய குழு	379—381
வேளாண்மை—	
நிலங்களில் மணல் மூடியது, திருவில்லிபுத்தூர் தொகுதி (க.ஈ.)	298—299
விவசாயம் சம்பந்தமாக முதலமைச்சர் பிரதமருக்கு அளித்த மகஜர் குறித்து (த.கோ.)	427—428

ஜ.

ஜெபமணி, திரு. ஏ.—	
டன்லப் தொழிற்சாலை கலவரம் (த.கோ.)	401

	பக்கங்கள்
ஜெயராமன், திரு. வெ. இரா.—	
பெரியாறு கருளியாறு பகுதி ஆசிரியர்கள் சொந்தியப்படி	262—263
ஜேம்ஸ், திரு. ஜே.—	
அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்	594—597
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979	339—343
ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.	312—313, 314
கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் (ஒ.தீ.)	291—292
கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் (த.கோ.)	408—409 416
கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலை நிறுத்தம் (ஒ.தீ.).	335
(த.கோ.)	163, 166
சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை, தொழிலாளர்களும் தலைவர்களும் கைது, திருச்சி (ஒ.தீ.), (த.கோ.)	46—48 63—64
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு குறைத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ச.ஆ.தி.).	81, 106—109
மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979	187, 192

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1979 பிப்ரவரி 22-ம் நாள்.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கோவில்பட்டி ஜி.வி.என். கல்லூரி

* குறுகிய கால வினா எண். 1. திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவில்பட்டி, ஜி.வி.என் கல்லூரியை ஜனவரி முதல் வாரத்திலிருந்து நிர்வாகம் மூடி விட்டதால் சுமார் 1,000 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் மேற்படி கல்லூரியைத் திறக்க எடுக்கப் பெற்ற நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) இது குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி ஜனவரி மாதத்திலிருந்து ஏறக்குறைய 2 மாதங்களாக மூடப்பட்டிருக்கிறது. அங்கே செமஸ்டர் முறையிலே பரீட்சைகள் இருப்பதன் காரணமாக அந்த மாணவர்கள் பாடங்களைப் படிக்கமுடியாமல் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதற்குப் பிரதானமான காரணம் அந்த மாணவர்கள் தமிழகத்திலே வேறு எங்கும் இல்லாத அளவிற்கு விடுதிக் கட்டணம் அந்த நிர்வாகம் வசூலிக்கிறது என்றும்

அவர்கள் சாப்பிடக்கூடிய தட்டுக்களுக்கு தினமும் 10 பைசா வீதம் மாதம் 3 ரூபாய் பல வருடங்களாக அவர்கள் வசூலிக்கிறார்கள் அதை நிறுத்தவேண்டுமென்றும் அவர்கள் கேட்டதற்காக அப்படிக் கேட்ட மாணவர்களை விடுதியிலிருந்து விலக்கியிருக்கிறார்கள். அப்படி விலக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றும் அந்த மாணவர்கள் கேட்ட காரணத்திற்காக அந்தக் கல்லூரியை மூடியிருக்கிறார்கள். அதனால் மாணவர்களுடைய படிப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நிர்வாகம் கல்லூரியைத் திறக்கச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா அல்லது அரசாங்கமே அந்தக் கல்லூரியை ஏற்று நடத்தத் தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் நடவடிக்கைகளை குறித்து கல்லூரி முதல்வரால் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையென்றும் அந்தக் கல்லூரியின் சூழ்நிலை வகுப்புகளை நடத்த ஏற்புடையதாக இல்லையென்றும் மாவட்ட அதிகாரி தெரிவித்திருக்கிறார். அந்தத் துணை ஆய்வாளர் அதைப்பற்றி ஆய்ந்து அறிந்து அறிக்கையை அரசுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளார்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியின் நிர்வாகத்திற்கும் அந்த முதல்வருக்கும் அவர்களுக்குள்ளேயே தகராறுகள் இருக்கின்றன, அந்தக் காரணத்தினாலே அந்த நிர்வாகம் அந்த முதல்வரை நீக்கவேண்டும் என்பதற்காக நிர்வாகம் அந்தக் கல்லூரியை மூடியிருக்கிறது. ஆகவே, நிர்வாகத்திடம் கடுமையாகக் கண்டித்துச் சொல்லி அந்தக் கல்லூரியை அரசு திறக்கச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அந்த நிர்வாகத்தைக் கட்டுப்படுத்த இடைக்காலத்திலேயாவது அந்தக் கல்லூரியை அரசு எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> தலைவர் அவர்களே, அறிக்கை கிடைத்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். நேரம் இல்லாத காரணத்தால் அந்தந்தத் தொகுதிகள் சம்பந்தப்பட்ட கேள்விகளை அந்த அந்த உறுப்பினர்கள் மட்டும் கேட்டால் போதும். பொதுப்படையான நோக்கமுள்ள கேள்வியாக இருந்தால் எல்லோருக்கும் கேட்பதற்கு வாய்ப்பு உரிமை உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> தலைவர் அவர்களே, ஒருவேண்டுகோள். இன்றைக்கு 15 முதல் 20 கேள்விகள் கொடுக்கப்படுகின்றன. 40 கேள்விகள் கூட எடுத்துக் கொள்ள முடியும். எப்படியென்றால் யார் கேள்வியைக் கேட்டு இருக்கிறார்களோ அவர்கள் 4, 5 உப கேள்விகளைக் கேட்கின்ற முறையைக் கொண்டுவந்தால். . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசிய போது கேள்வி கொடுத்த உறுப்பினர் இரண்டு முறைகள் கேட்டால் போதும் என்று முடிவெடுத்து இருக்கிறோம்.

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> நான் சொல்வது, கேள்வி கேட்ட உறுப்பினருக்கு 4, 5 உப கேள்விகள் கேட்க வாய்ப்புக் கொடுப்பதன் மூலமாக 30, 40 கேள்விகள் கூட ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை கனிவாக நியாயமாக இருந்தாலும்கூட அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுக்கப்பட்ட முடிவுப்படி கேள்விகளை எடுத்துக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை</u>
<u>அலுவலகம்.</u>

<u>குறுகிய கால வினா எண்.2.</u> திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை காரி நிலையத்தை நாகர்கோவிலிலிருந்து வேறு இடத்தி அரசு மாற்றுகின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கின்றதா ?

(ஆ) அதனை நாகர்கோவிலிலேயே நிரந்தரமாக இருப்பதற்கு அரசு நிரந்தர வழிவகை செய்யுமா ?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u>

(அ) இல்லை.

(ஆ) ஆம்.

வர்களே,
அதிகாரி
செய்யப்
்களுக்கு
சதவீத
டையில்
அதிகாரிகள்

[1979 பிப்ரவரி 22

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தினுடைய மேனேஜிங் டைரக்டர் நாகர்கோவிலில் இருப்பதால் திருநெல்வேலியிலிருந்து, அங்கே பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்களும் மற்றவர்களும் நேரடியாக அவரைச் சந்தித்துப் பேசுவதற்கு சிரமங்கள் இருக்கின்றன, ஜெனரல் மானேஜரிடம் எந்தவிதமான அதிகாரமும் இல்லாமல் இருக்கிறது. அவருக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து வரக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு ஏற்பாடுசெய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தை கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து மாற்றாமல் பொது மேலாளருக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற குறைபாடுகளைக் களையச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : சபாநாயகர் அவர்களே. ஏற்கனவே நாகர்கோவிலில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை பணிமனை இருப்பதால் ஆட்கள் எடுக்கும்பொழுதுகூட பெரும்பாலும் நாகர்கோவில் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலம் எடுப்பதன் காரணமாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு பாதிக்கப்படுகிறது. எனவே, இங்கிருந்தும் ஆட்களை எடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுவதுபோல நடைமுறையில் ஒன்றுமில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு புதிய திட்டத்தில் பேருந்து விடப்படுகிறது என்றாலும், அந்தப் அறிக்கையில் சம்பந்தப்பட்ட எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சி படும். ஆட்கள் எடுக்கப்படுகிறார்கள். நெல்லை மாவட் ப் பொறுத்த வரையில் கட்டபொம்மன் போக்கு மாண்க் கழகத்தால் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் 40 வேண்டும் பேருந்துகள்தான் ஓட்டப்படுகின்றன. 60 சதவீதம் கள் சம்துகள் தனியார் வசம் இருக்கின்றன. நெல்லை மாவட் மட்டும் ல் அதிக அரசுப் பேருந்துகளை விடுவதற்கு அர கேள்வியக்கை எடுக்கிறது. அப்பொழுது அங்கு நெல்லை மாவட் உரிமை உக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யும் என்பதை க்கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 22]

ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகள்.

*வினா எண் 137-அ.— திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு முதல் அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு அரசில் பணிபுரியும் ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி. எஸ். அதிகாரிகள் மொத்தம் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எத்தனை பேர் ?

(இ) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே,

(அ) தமிழ்நாடு அரசில் தற்பொழுது 245 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், 100 ஐ.பி.எஸ். அதிகாரிகளும் உள்ளனர்.

(ஆ) அகில இந்திய ரீதியில் இவர்கள் நியமனம் செய்யப் படுவதால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென்று பதவி ஒதுக்கீடுகள் கிடையாது. ஆகவே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பற்றிய தகவல் இல்லை.

(இ) தமிழ்நாடு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் 29 அதிகாரிகள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், 4 அதிகாரிகள் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

ஐ.பி.எஸ். அதிகாரிகளில், 13 அதிகாரிகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும், 1 அதிகாரி பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவராகவும் உள்ளனர்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, ஐ.பி.எஸ். அதிகாரிகளில் தமிழ் தெரியாத அதிகாரிகள் உண்டா என்பதை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, பொதுவாக ஐ.பி.எஸ். அதிகாரி என்றாலும், ஐ.ஏ.எஸ். அதிகாரி என்றாலும், அகில இந்திய அளவிற்கு அவர்கள் ரெக்ரூட் செய்யப் படுவதாலும், 50 சதவீதத்தை அந்தந்த மாநிலங்களுக்கு அவர்கள் அனுப்பிவிட்டு, பிற மாநிலங்களுக்கு 50 சதவீத அதிகாரிகளை அனுப்புவது வாடிக்கை. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் வேறு பல மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இங்கே இடம்பெற்றிருக்கிறார்கள்.

[1979 பிப்ரவரி 22

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களைப் பற்றிய சட்டநாதன் பரிந்துரையை மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசு அனுப்பியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு என்று அவர்கள் ஒதுக்கீடு செய்வதில்லை. பொதுவாக அவர்கள் ஒதுக்கீடு செய்வது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள் இவர்களுக்குத்தான்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் ஆகியவர்களில் தாய்மார்கள், அதாவது பெண்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, மொத்தமாக 245 அதிகாரிகள் என்று குறிப்பிட்டேன். அதிலே ஆடவர், பெண்டிர் எத்தனை பேர் என்பதற்குக் கிட்டப்பா அவர்கள் தனிக்கேள்வி போடக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி சண்முகம். : தலைவரவர்களே, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் தமிழ் நாட்டிலே பொறுப் பேற்றவுடன் கட்டாயம் தமிழ் கற்க வேண்டுமென்று இந்த அரசு பின்பற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, இந்த அரசு கற்றுக் கொடுக்க முடியாது. ஆனால், தமிழ் தாய்மொழி அல்லாதவர்கள் தமிழில் தேர்ச்சி பெறுவதற்காக முதல் ஆறு மாதத்திற்கு மாதம்தோறும் ரூ. 50/- தமிழ் ஆசிரியர் ஒருவர் வைத்துத் தமிழ் கற்றுக்கொள்வதற்காக உதவிப் பணமாகத் தரமபடுகிறது. அவர்கள் தமிழில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழு நடத்தும் தமிழ்மொழிப் பரீட்சைகளையும் பாஸ் செய்ய வேண்டுமென்ற நியதியும் உள்ளது. அகில இந்திய சர்வீஸ் என்ற காரணத்தினால் இங்கேயிருந்து போகிறவர்கள், அசாமிற்குப் போனாலும் சரி, மராட்டியத்திற்குப் போனாலும் சரி, ஒரிசாவிற்குப் போனாலும் சரி, அவர்கள் அந்தந்த மொழிகளைக் கற்க வேண்டியிருக்கும். பொதுவாக, அங்கு செல்கின்ற அதிகாரிகள் அந்தந்த மொழிகளைக் கற்றுக் கொள்வது இயற்கை. இங்கேயும் வட நாட்டிலிருந்து வந்த பல அதிகாரிகள் முடிந்தவரை தமிழ் கற்றுப் பேசுகிறார்கள் என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 137-ஆ வினாவையும் இதோடு ஒட்டி எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

*வினா எண் 137-ஆ.— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1977–78 ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். பரிட்சைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, 1977–78 ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். பரிட்சைகளில் தேர்தெடுக்கப்பட்டவர்களுள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை முறையே 15ம், 4-ம் ஆகும்.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்படக்கூடிய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் தேர்வில் வெற்றி பெறுவதற்காகப் தமிழ்நாடு அரசால் பயிற்சி வகுப்புகள் கூட நடத்தப்படுகிறது. அப்படியும் இந்த எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அதற்கான காரணத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, அதற்குக் காரணம் எனக்குத் தெரியாது.

[முற்பகல் 9-10].

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, 1977–78ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பதவிகளுக்குத் தமிழ்நாட்டில் தேர்வு பெற்றவர்கள் 15 பேர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது கடந்த ஆண்டில் இருந்ததை விட குறைவா, அதிகமா ? குறைவு என்றால் அதற்குக் காரணம் என்ன? குறைவை நிவர்த்திக்க இந்த அரசு ஏதாவது விசேஷ முயற்சி எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் ஏற்கனவே தெரிவித்தேன், ஏன் குறைகிறது என்பதைப் பற்றிக் காரணம் எனக்குத் தெரியாது, என்று. ஆனால் 1977–78 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள், தாழ்த்தப்பட்டவர்கள் உள்பட, தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 15 பேர்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, இந்த ஐ.பி.எஸ். அதிகாரிகள் மாநில அரசின்கீழ் வேலையில் அமர்த்தப்படுகிறார்களா ? அல்லது மத்திய அரசின்கீழ் வேலையில் அமர்த்தப்படுகிறார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் என்றால் இந்தியன் அட்மினிஸ்டிரேடிவ் சர்வீஸ், இந்தியன் போலீஸ் சர்வீஸ் என்பது உறுப்பினருக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, தமிழகத்தில், முந்தைய ஆண்டுகளை விட வர வரக் குறைவானது என்ற கருத்தோட்டம் இருக்கிறது. அதற்குக் காரணம், கல்வியின் தரம் போதிய அளவு இல்லையென்றும் மக்களிடையே பரவலாகப் பேசப்படுகிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் காரணம் தெரியாது என்று சொன்னார்கள். ஆனால், பொறுப்புள்ள நமது அரசு, பிற்பட்ட மக்களை முன்னேற்றுகின்ற அளவுக்கு, அதற்கென தனியாக ஹாஸ்டல்களை வைத்து, கோச்சிங் கொடுக்க, இன்னும் அவர்களை முன்னுக்குக் கொண்டுவர சரியான முயற்சி எடுக்குமா என அறியவிரும்புகிறேன். அத்துடன் இன்னும் ஒன்று. பிற்பட்ட வகுப்பினரில் மெஜாரிட்டி கம்யூனிட்டீஸ்களுக்கு—எல்லா உத்தியோகங்களிலும்—மாநில சர்வீஸ் உட்பட, போதுமான பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லையென்ற நிலையிருக்கிறதே அதனை நிறைவு செய்கிற அளவுக்கு அரசு முயற்சி எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏன் ஐ. ஏ. எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளின் எண்ணிக்கை குறைகிறது என்ற கேள்வி கேட்டபொழுது எனக்குத் காரணம் புரியாது என்றேன். விவரம் புரிந்த கந்தசாமி அவர்கள் அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து, கல்வியின் தரம் குறைவாக இருக்கிற காரணத்தாலே என்று பரவலாகப் பேசப்படுகிற காரணத்தாலே, அந்தக் கல்வியின் தரத்தை உயர்த்தி அதன் மூலம் எண்ணிக்கையை உயர்த்த ஆவன செய்ய இயலுமா என்ற அருமையான யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பின்தங்கியவர்கள் எவ்வளவு பேர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர்கள் ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் ஏற்கனவே பதில் சொன்னேன். திரு. கணேசன் மீண்டும் ஒரு முறை கேட்க வேண்டுமென்பதாக இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். 1977–78-ல் ஐ.ஏ.எஸ். பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்

கள்—தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 15 பேர்கள். அந்த 15 பேர்களில் 4 பேர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

சிதம்பரம் துணைக் கருவூலம்.

* வினா எண். 121—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சிதம்பரம் துணைக் கருவூலப் பணிகள்ஸ்டேட் பாங்க் மூலம் நடத்தப்படுவதற்கு மாத கமிஷன் தொகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : கமிஷன் தொகை ஒன்றும் கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 122-ம், 123-ம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

சோளிங்கபுரம் தாயார் சன்னதி திருப்பணி.

*வினா எண். 124—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டம், சோளிங்கபுரம் பழைய தாயார் சன்னதி கோயிலை புதுப்பிக்க அரசு அளித்த மான்யத் தொகை எவ்வளவு ?

(ஆ) தனிப்பட்டவர்கள், மடங்கள் அறநிலையத் துறையின் மூலமாக நிதி உதவி செய்துள்ளார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) வடாற்காடு மாவட்டம், சோளிங்கபுரம் பழைய தாயார் சன்னதி கோயிலைப் புதுப்பிக்க அரசு இதுவரை எவ்வித மானியமும் அளிக்கவில்லை.

(ஆ) அறநிலையத் துறை மூலம் நிதியுதவி ஏதும் இதுவரை அளிக்கப்படவில்லை. ஆனால் தனிப்பட்ட ஒருவரிடமிருந்தும் மடாதிபதி ஒருவரிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் நிதி உதவி பெறப்பட்டுள்ளது.

[1979 பிப்ரவரி 22

திருக்களம்பூர் கோவிலில் உள்ள வாழை மரங்கள்.

*வினா எண். 125— திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் திருக்களம்பூர் கிராமத்தில் உள்ள கோவிலில் தண்ணீர் இல்லாமல் வளரும் வாழை மரங்களைப் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இத்திருக்கோவிலின் சிறப்புக்கும், புகழுக்கும் எவ்விதபங்கமும் ஏற்படாமல் தக்க முறையில் அங்குள்ள வாழைகளைப் பேணி பாதுகாக்க திருக்கோயில் செயல் அலுவலருக்கு அறநிலையத் துறை ஆணையரால் தக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

Conveyance allowance of employees of Madras Corporation

*126. *Q.* **Thiru K. Suppu** : Will the Hon. the Minister for Local Administration be pleased ro state—

(*a*) whether it is a fact that the conveyance allowance granted to the Corporation employees in Madras has been stopped and the amount already given is being recovered : and

(*b*) If so, the reasons therefor ?

திரு. கா. காளிமுத்து : (அ) வாகனப்படி முழுவதும் நிறுத்தப்படவில்லை. மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர்படி ரூ. 75/- வீதமும் பெறுகின்றனர். உயர்த்தப்பட்ட 60 சதவிகிதம் தான் 1-12-73 முதல் நிறுத்தப்பட்டது. அதற்குமுன்பு வழங்கப்பட்ட கூடுதல் தொகை திரும்ப பிடிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) வாகனப்படி 60 சதவிகிதமாக உயர்த்தப்பட்ட பின்பு மாநகராட்சி அலுவலர்களின்படி அரசு அலுவலர் பெறுவதைவிட மிகக் கூடுதலாக இருந்தது. ஒரே அளவில் வாகனப்படி இருக்க வேண்டுமென அரசு கருதியது.

1979 பிப்ரவரி 22]

மணல்மேடு பேரூராட்சி.

*வினா எண். 127— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா -

(அ) மாயூரம் ஒன்றியம் மணல்மேடு பேரூராட்சியில் நிர்வாக அதிகாரி மீது பேரூராட்சி மன்றத்தினர் புகார் மனுக்கள் எவையேனும் அனுப்பியுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் அரசு அது பற்றி மேற் கண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ)—(ஆ) புகார்கள் ஆதாரமற்றவை என்றும் பொறுப்புத் தலைவரும், நிர்வாக அலுவலரும், கருத்து வேறுபாடின்றி நிர்வாகத்தை சரிவர நடத்துவதாக உறுதி கூறி எழுதிக் கொடுத்ததால் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது என்று கோட்ட வளர்ச்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

திரு. என். கிட்டப்பா : மணல் மேடு பேரூராட்சி பொறுப்பு உறுப்பினரும், தலைவரும், ஏனைய மன்ற உறுப்பினர்களும், எனக்கு அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் தந்த தகவலின் அடிப்படையில் தான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படி அறிவிக்கிறார்கள். என்றாலும் இத்தகைய முறைகேடு இனி தொடர்ந்து நடைபெறாமல் பாதுகாப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே அந்த புகார்களே ஆதாரம் அற்றவை என்று தகவல் கிடைத்து இருக்கிறது. அத்தோடு பொறுப்புத் தலைவரும், நிர்வாக அலுவலரும் ஒற்றுமையாக செயல்படுவதாகவும் உறுதி கூறி எழுதிக்கொடுத்ததால் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது என்று கோட்ட வளர்ச்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பொறுப்புத் தலைவரும் நிர்வாக அதிகாரி அவர்களும் ஒற்றுமையாக பணியாற்றுவதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. என்றாலும், அந்த முறை இல்லை என்றுதான் ஆளும் கட்சி உறுப்பி

ளரும் கூட, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னிடம் உரைத்தார்கள். இனியாயினும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவா அவர்களே சிக்கல் ஏற்கனவே தீர்ந்து விட்டது. இனிமேல் ஒன்றும் இல்லை.

* வினா எண். 87—திரு. துரைமுருகன் :—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னையாற்றிலிருந்து சோளிங்கர் நகரத்திற்கு குடிநீர் எடுத்துச் செல்லப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், வழியில் உள்ள தியார்குப்பம், கீரைச் சாத்து, மிளகாய் குப்பம் ஆகிய கிராமங்களுக்கு அந்த குழாய்களிலிருந்து நீர் வழங்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை,

(இ) இவ்வினா எழ இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 88, 89 ஒன்றாக எடுக்கப்படும்.

இடவசதி கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வீடுகள்

* வினா எண். 88—திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு தொழிலாளர்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் எத்தனை வீடுகள் Accommodation Control-ல் இருந்து நடப்பாண்டில் விடுவிக்கப்பட்டிருக்கிறது

(ஆ) சென்னை நகரில் Accommodation Control-ல் எத்தனை வீடுகள் தற்போது உள்ளன ?

* வினா எண். 89— திரு. மு. அரங்கநாதன் மாண்புமிகு தொழிலாளர்நலத் துறைஅமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை நகர எல்லைக்குள் எத்தனை வீடுகள் அகாமடேஷன் கன்ட்ரோல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது?

(ஆ) அப்படி அகாமடேஷன் கண்ட்ரோலுக்கு உட்படுத்தப்படும் வீடுகளுக்கு எந்த அடிப்படையில் அரசு வாடகை நிர்ணயிக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்தலைவரவர்களே 1—1—1978 முதல் 30—6—1978 வரையில் வாடகைக்கு விடப்பட்ட வீடுகள் 30. 1—7—1978 முதல் 31—12—1978 வரையில் வாடகைக்கு விடப்பட்ட வீடுகள் 25. 31—12—1978 முடிய முடிக்கப்பட்ட வீடுகள் 1,517.

அக்கமடேஷன் கண்ட்ரோலில் உள்ள வீடுகளுக்கு வாடகை எப்படி நிர்ணயிப்பது என்பதும் அந்தக் கேள்வியிலே ஒன்றாகும். குடியிருப்புக் கட்டிடங்களுக்கான மொத்தச் செலவில் ஆண்டொன்றுக்கு மொத்தம் 9 சதவீத மொத்த வருமானமும், குடியிருப்பில்லாத கட்டிடங்களுக்கான மொத்தச் செலவில் ஆண்டொன்றுக்கு மொத்தம் 12 சதவீத மொத்த வருமானமும் கிடைக்கும் வகையில் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது. கட்டிடம் எந்த இடத்தில் கட்டப்பட்டுள்ளதோ அந்த இடத்தின் நிலவர மதிப்பு, கட்டிடம் கட்டியதற்கான செலவு, சம்பந்தப்பட்ட சட்டத்தின் 1—வது விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒரு வசதியோ பல வசதியோ செய்து கொடுக்கப்பட்டதற்கான செலவு ஆகியவை மேற்படி கட்டிடத்தின் மொத்தச் செலவில் அடங்கும்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, மற்ற மாநிலங்களில் அக்காமடேஷன் கண்ட்ரோலில், பொது மக்களுக்கும் இடவசதி கொடுக்கப்படுகின்றன. அது போன்ற உதவியோ, வசதியோ நம்முடைய அரசில் உண்டா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அத்தோடு தற்பொழுது 400 ரூபாய் வரையில் மாத வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இந்த அக்காமடேஷன் கண்ட்ரோலில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதில் ஆயிரம், இரண்டாயிரம் மாத வருமானம் உள்ளவர்களையும் அக்காமடேஷன் கண்ட்ரோலின் கீழ் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படுமா ? யாரோ சில குறிப்பிட்ட வகுப்பினருக்கு கொடுப்பதற்காக நாம் இப்பொழுது

[1979 பிப்ரவரி 22

அக்காமடேஷன் கண்ட்ரோலில் எடுத்துக் கொண்டிருக்கிறோம் அந்தப் பிரிவினரையும் ரத்து செய்ய ஆலோசனை இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தில் என்ன மாற்றம் செய்வதாக இருந்தாலும், தமிழ் நாட்டிற்கு ஏற்ற வகையில் செய்யவேண்டும். மேலும் இந்தப் பிரச்சினை மிக ஆழமாக சிந்தித்து முடிவு எடுக்க வேண்டிய ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, (1) அக்காமடேஷன் கண்ட்ரோல் சட்டப்படி எந்த அடிப்படையில் வீடுகளை அரசு மேற்கொள்கிறது ? (2) அக்காமடேஷன் கண்ட்ரோல் சட்டப்படி மேற்கொள்ளப்படும் வீடுகளுக்கு குடிசை மாற்று வாரியம் அல்லது வீட்டு வசதி வாரியம் போன்றவைகளில் நிர்ணயிக்கப்படும் அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ? (3) அப்படி மேற்கொள்ளப்படுகிற வீடுகளுக்கு மாநகராட்சிக்கு அந்த வீட்டு உரிமையாளர்கள் கட்ட வேண்டிய வரியை விடக் கம்மியாக வாடகை தரப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அது மட்டுமல்ல, அக்காமடேஷன் கண்ட்ரோல் கீழ் கொடுக்கப்படும் வீட்டை அதில் குடியிருப்பவர்கள் சரிவர பராமரிக்காமல் இருக்கிற காரணத்தால் வீட்டு உரிமையாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, கேள்வி, அக்காமடேஷன் கண்ட்ரோலில் எத்தனை வீடுகள் இருக்கின்றன, எத்தனை வீடுகள் விடுவிக்கப்பட்டு இருக்கின்றன, எப்படி வாடகை நிர்ணயிக்கப்படுகிறது என்பதைப் பற்றியதாகும். புதிய கட்டிடங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ரூ. 25க்கு மேலும், ரூ. 400-க்குள்ளும் உள்ள வீடுகள் அக்காமடேஷன் கண்ட்ரோல் சட்டத்தின் கீழ் வரும். அது காலியாகிவிட்டால் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக அது அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேல் இருக்கக்கூடிய வாடகை பெறும் வீடுகள் அக்காமடேஷன் கண்ட்ரோல் கீழ் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற பிரச்னை மிகவும் ஆழமாக சிந்திக்க வேண்டிய விஷயம். மற்ற கேள்விகள் நிரம்ப இருப்பதால் எனக்கு ஒன்றும் புரியவில்லை, ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை. அதுவும் வீட்டு வசதி வாரியத்தையும் இழுத்து விட்டதால், மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 22]

சார், இப்போது அக்காம
திரு. வி. கே. கோதண்டராமன் : அந்த வீட்டுச் சொந்தக்
டேஷன் கண்ட்ரோலில் உள்ள வீடுகளை அந்த வீட்டுச் சொந்தக் தம் சொந்த உப
காரர்களிடமிருந்து வேறு ஒருவர் வாங்கி, வேண்டும் என்று
யோகத்திற்காக அதை வைத்துக்கொள்ள இல்லையா,
சொன்னால், உடனே அது விடுவிக்கப்படுவது அப்படியானால்
அப்படி இல்லை என்று புகார் வந்து உள்ளதா, போடப்படுமா?
உடனடியாக அதைத் தவிர்க்க உத்தரவு

தலைவரவர்களே
மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இருக்கிறது.
சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பே

If any person, land-lord or land-lady, applies for personal occupation (i.e. owner occupation) it should be released"

என்று கேட்டால்,
தானே அந்த வீட்டில் குடியிருக்க வேண்டும் கொடுக்க வேண்டும்
அவர்களுக்கு அந்த வீட்டை ரிலீஸ் செய்து இருக்கிறது என்ற கார
என்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பே கொண்டு வருகிறது.
ணத்தால் அரசு அந்த வகையில் நடந்து கூறப்பட்டிருக்
''ஓனர்ஸ் ஆக்குபேஷன்'' என்று கோர்ட்டில் கொண்டு வருகிறோம்.
கிறது. அதன்படிதான் நடந்து

தலைவரவர்களே, அக்காம
திரு. பி.எச். பாண்டியன் : பழைய கட்டிடங்களை அரசு
டேஷன் கண்ட்ரோல் விதியின்படி வந்தது 1969 ஆம்
எடுத்துக் கொள்கிறது. இந்தச் சட்டம் புதிதாகக் கட்டப்
ஆண்டு என்று நினைக்கிறேன். ஆகவே, கண்ட்ரோல் கீழ் எடுப்
பட்டுள்ள வீடுகளையும் அக்காமடேஷன் என்பதையும், அதோடு
பதற்கு அரசிடம் உத்தேசம் உண்டா மட்டும் கொடுக்கப்படு
இப்போது அரசாங்க சிப்பந்திகளுக்கு ஊழியர்களாக இருக்கும்
கின்ற அந்த வீடுகளைப் பொது நல கொடுக்கும்
சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களுக்கும்
உத்தேசம் அரசுக்கு உண்டா ?

தலைவரவர்களே,
மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 5 ஆண்டுகளுக்கு
ஏற்கனவே நான் சொன்னதுபோல் முதல் மேலும் வீடுகள்
விதிவிலக்கு இருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு இருக்கிறபோது
கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை சிரமம்
மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை ஏற்பது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, இந்தக்
திரு. மு. அரங்கநாதன் : கண்ட்ரோலில் எத்தனை
கேள்வியிலேயே அக்காமடேஷன் இருக்கின்றன என்பது இருக்கிறது.
வீடுகள் மேற்கொள்ளப்பட்டு

அப்படி இருக்கிறபோது, எத்தனை வீடுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்ற தகவலை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை. அடுத்தபடியாக, நான் கேட்டது, மாநகராட்சிக்கு அவர்கள் கொடுத்து வருகின்ற வரியை விட வாடகை கம்மியாக இருக்கிறது, அதைப் போக்க என்ன முயற்சிகளை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்ற கேள்வி, அதற்கும் பதில் வரவில்லை. அதை ஒட்டி மாநகராட்சி அலுவலர்களுக்கும் அக்காமடேஷன் கண்ட்ரோல் மேற்கொள்ளப்படும் வீடுகள் வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, எத்தனை வீடுகள் விடுவிக்கப்பட்டு இருக்கின்றன, எத்தனை வீடுகள் இருக்கின்றன என்பதைப் பற்றி சொல்லிவிட்டேன். மற்ற எந்தப் பிரச்னையாக இருந்தாலும், ஆர அமர, நின்று, நிதானித்து முடிவு எடுக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறேன்.

மயிலாடும்பாறை-மள்ளப்புரம் மலைச் சாலை.

*வினா எண். 128— திரு. இரா. முத்தையா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டம் வருஷநாடு மலையில் மயிலாடும்பாறையில் இருந்து மள்ளப்புரம் வரை மலைச்சாலை ஒன்று அமைப்பதற்கான திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, மதுரை மாவட்டம் வருஷநாடு மலைப்பகுதியில் மயிலாடும் பாறையில் இருந்து மள்ளப்புரம் வரையில் சாலை ஒன்று அமைக்க வேண்டுமென்று சென்ற ஆண்டு அமைச்சரவர்களிடம் சென்று அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக்கூறினேன். அதைக் கவனிப்பதாக அமைச்சரவர்கள் அப்போது சொன்னார்கள். ஆனால் இப்போது அந்த கேள்விக்கே இடமில்லை என்று அதிர்ச்சி தரத்தக்க வகையில் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆண்டிப்பட்டி பகுதி மலைப் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மலைச்சாலை அமைக்

கப்பட்டால் இராஜபாளையத்திற்கு 50 மைல் தூரம் சுற்றி, சுற்றிச் செல்வது குறையும். ஆகவே, சிக்கனத்தைக் கருதியும், போக்குவரத்தை அபிவிருத்தி செய்வது கருதியும், ஏறத்தாழ ஒரு லட்சம் மக்கள் பயனடைவார்கள் என்பதைக் கருதியும் உடனடியாக இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற சாலையின் பெரும்பகுதி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் இருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு நிதி நிலை கட்டுப்பாடு இருப்பதால் அரசுதான் அந்த சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. சாலையின் நீளம் கிட்டத்தட்ட 20.8 கிலோ மீட்டர் வரும். அதையும் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலிருந்து அரசு எடுத்து, செப்பனிட அரசு முடிவதை செய்ய வேண்டியிருக்கிறது. அந்த சாலை அமைக்கும் பணியை அரசு செயல்படுத்தும் திட்டங்களில் தற்போது சேர்க்காததற்குக் காரணம் அந்த ஒரு சாலைக்கு மட்டும் 23,80,000 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நடப்பு நிதியாண்டிலே நிதி கட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தால் அரசு அப்பணியை எடுத்துக்கொள்ளவில்லை. கிராமப்புற வளர்ச்சியின் நோக்கத்தைக் கருதி, மத்திய அரசு இப்படிப்பட்ட திட்டங்களுக்கு அதிக நிதி உதவி அளிக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை கேட்டுக்கொண்டிருக்கிறது. மத்திய அரசின் முடிவு தெரிந்த பின்னால்தான் இத்திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, போன நிதியாண்டிலேயே சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் மத்திய சர்க்காரை வற்புறுத்தி இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்தார்கள். இத்திட்டம் வத்திராயிருப்பிலிருந்து வருசைநாடு, மள்ளப்புரம், மயிலாடும்பாறை ஆகிய மலைப்பகுதி கிராமங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்ற காரணத்தால் கிராமப்புற முன்னேற்றத்தைக் கருதி இத்திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா? சில தீய சக்திகளின் தலையீடுகளால்தான் அப்பணி தடைப்படுகிறது என்று தெரிகிறது. அது உண்மையானால் அந்த தீய சக்திகளின் தலையீடு முறியடிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, மத்திய அரசிடம் நிதி கேட்டிருப்பது இந்த ஒரு சாலைக்கு மட்டுமல்ல. இதுபோன்ற பல சாலைப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசும் கிராமப்புறச் சாலை மேம்பாட்டுக்கு இந்த ஆண்டு அதிக நிதி உதவி அளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். தீய

சக்தி என்று குறிப்பிட்டார்கள். அந்த தீய சக்தி யார் என்று சுட்டிக்காட்டினால் கண்டிப்பாக அரசு அந்தத் தடை சுற்களை நீக்கும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் ஒரத்தநாடு பகுதியிலிருந்து இந்த ரோடு போக்குவரத்து சரியாக இல்லை என்ற காரணத்தால் மக்களிடம் பெரிய குமுறல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதற்குக் குறைந்த பட்ச தொகையாவது ஒதுக்கி, இப்பணியை நிறைவேற்ற முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே. இது ஒரு மலைச்சாலையாக இருப்பதால் குறைந்தபட்சத் தொகை ஒதுக்கி இப்பணியை மேற்கொண்டால் விபத்துக்கள் நேரிடலாம். 'பேரபட்வால்ஸ்' எல்லாம் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, அது சாத்தியமில்லை. இந்த மலைச்சாலையை அமைக்க குறைந்தபட்சம் 23,80,000 ரூபாய் தேவைப்படுகிறது. இது அதிகமான ஒரு தொகை. அதனால் தற்போது இல்லை என்று சொன்னேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, கேரளா, மைசூர் மாநிலங்களிலே மலைப்பகுதி ரஸ்தாக்கள் நல்ல முறையில் இருப்பதால்தான் அங்கெல்லாம் மலை வளம் பெருகி, மக்கள் நல்வாழ்வு வாழ்கின்ற வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் மலைச்சாலை வசதி இல்லாத காரணத்தால்தான் மலை வளம் பெருக வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே இதை ஒரு விசேஷ திட்டமாகக் கருதி இந்த மலைப்பகுதி அனைத்துக்கும் நல்ல ரஸ்தா வசதியை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மலைச்சாலை வசதிகளை ஏற்படுத்த அதிக நிதி தேவைப் படுவதால், மாநில அரசு மத்திய அரசின் நிதி உதவியைப் பெற்றுதான் நிறைவேற்ற முடியும். ஆகவே, இப்படிப்பட்ட திட்டங்களுக்கு மத்திய அரசு அதிக நிதி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசின் உதவி கிடைத்ததும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் வருஷநாட்டுப் பகுதிக்கு ஒரு பொதுக்கூட்டத்திற்கு நான் காலையில் புறப்பட்டு, மாலையில் நடந்து போய்ச் சேர்ந்தேன். அப்படிப்பட்ட பகுதிக்கு நல்ல சாலை அமைக்க இந்த அரசு, மத்திய அரசின் உதவியைப் பெற்று உடனடியாக துரித நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழித்தடம் எது என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

[முற்பகல் 9-30]

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, இந்த வருஷநாடு சாலை சம்பந்தமாக மத்திய அரசிடம் இருந்து நிதி பெற்று அந்தப் பணிகளை எடுத்துக்கொள்வதாக அமைச்சர வர்கள் கூறினார்கள், அதேபோல் மதுரை மாவட்டத்தில் இருக்கக்கூடிய பாச்சலூர், செம்பராங்குளம், ஆயக்குடி பகுதியில் ஒரு சாலை அமைக்க வேண்டும் என்ற திட்டம் 10 ஆண்டு களுக்கு முன்பே பரிசீலனையில் இருந்தது. அது தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் அந்த ரோடு விவசாயிகள் பொருட்களைக் கொண்டு வருவதற்கு வசதியான ஒரு சாலையாக இருக்கின்றது. ஆகவே அந்தச் சாலையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற சாலை பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. ஆகவே தனிக்கேள்வி கேட்டால் அதுபற்றி பதில் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டு நான் கேள்வி கேட்கக் கூடிய நேரத்திலே ரஸ்தாக்கள் மேம்பாடு திட்டத்திற்கென்று கிட்டத்தட்ட 110 கோடி ரூபாய் என்ற அளவில் திட்டமிட்டு நாங்கள் மத்திய அரசிற்கு அனுப்பி இருக்கிறோம் என்றார்கள். அந்தத் திட்டம் என்ன ஆனது, அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு அந்தத் திட்டத்தை அமல் நடத்த என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த நாடு சுதந்திரம் அடைந்து 31 ஆண்டுகள் ஆன பின்னாலும் ஏறத்தாழ 38 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள், அதாவது கிராமப்புறச் சாலைகள் தமிழ்நாட்டிலே பேருந்துகள் செல்வதற்குத் தகுதியற்ற அளவிலே இருக்கின்றன. அந்த நிலை போக்கப்பட வேண்டும் என்று கருதியதோடு மட்டுமல்லாமல், கிராமப்புறங்களிலே பேருந்துகள் பொது மக்களின் நலன் கருதி விடப்பட வேண்டும் என்றால் முதலில் சாலைகள் செப்பனிடப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு 76 கோடி ரூபாய் செலவில் 750 வழித்தடங்களை அமைக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. இந்தத் தொகையினை உடனடியாக

கணக்கில் எடுத்துக்கொண்டு தர வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். மத்திய அரசிலே இருந்து எந்த அளவுக்கு கிடைக்குமோ அதற்குத் தக்கபடி இந்த நிதியாண்டிலேயே திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் தொழிற் பயிற்சிக் கல்வி முடித்த பயிற்சியாளர்கள்.

*வினா எண் 129—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் (பெருநகர்ப் பிரிவு) ஐ.டி.ஐ பயிற்சியாளர்கள் 1973–74, 1974–75 ஆகிய ஆண்டுகளில் பயிற்சி முடித்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் எத்தனைப் பேருக்கு வேலை தரப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 1973–74-ல் 332 ஐ.டி.ஐ. பயிற்சியாளரும் 1974–75-ல் 225 பேரும் பல்லவன் போக்குவரத்துக் கழக (பெருநகர் பிரிவில்) பயிற்சி முடித்தனர்.

(ஆ) அவர்களில் 1973–74-ல், 68 பேருக்கும் 1974–75-ல் 33 பேருக்கும் வேலை தரப்பட்டது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆற்றுக் கால்வாய்கள்.

*வினா எண் 130—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்தில் நீர்ச் சேதாரத்தைத் தவிர்க்க நீர்ப் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் ஆற்றுக் கால்வாய்கள் குறுக்கி கட்டப்பட்டு வருகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஓர் விவர அறிக்கை* சபையின் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

*......120–121ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அவையின் விவர அறிக்கையில் ஆறுகளில அவசியமான இடங்களில், அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் கரைகளைக் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அண்மையிலே ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக மாயூரம் பகுதியில் பழவாற்றுக் கரை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. கரையே இல்லாதிருந்த நிலையினை மாற்றுகின்ற வகையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட 55 இலட்ச ரூபாய் அளவில் கரை அமைக்கப்பட்டது. ஆனால் அந்தக் கரைகளும் இப்போது சரியாக பராமரிக்கப்படாத காரணத்தால் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அதனை உடனடியாகத் தவிர்ப்பதற்கு அரசால் ஒரு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்திலேகூட நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் சென்று பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், அந்தப் பழவாற்றின் கரை உடைப்பின் காரணமாக பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் சேதம் அடைந்து வருவதை தவிர்ப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ள முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அந்தப் பகுதியில் பழவாற்றின் கரைகள் சமீப வெள்ளத்தின் போது அடைக்கப்பட்டிருந்ததை நானும் நேரிலே சென்று பார்த்து வந்து இருக்கிறேன். அதற்குரிய மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. காவிரி டெல்டா பகுதிகள் பயன்படுகின்ற வகையில் 70 கோடி ரூபாய் செலவிலே ஒரு திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின் மூலமாக கிட்டத்தட்ட நான்கைந்து ஆண்டுகளாக வேலைகள் நடை பெற்றுக் கொண்டு வருகின்றன. ஆகவே பழுது பார்க்கப்பட வேண்டிய இடங்கள் எல்லாம் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்டத்தில் பாசனத் திட்ட முறைகளை மேம்படுத்த முன்னர் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் உலக வங்கியின் உதவியுடன் திட்டமொன்று தயாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்தத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது? அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு புதிய அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1968–69-ல் விரிவுபடுத்தப்பட்ட பழுது பார்க்கும் பணித்திட்டத்தின் கீழ் ரூ.49 கோடிக்கு மதிப்பீடுகள் செய்து அதற்குப் பின்னர் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 70 கோடிக்கு அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த வேலைகள் தொடர்ந்து நடை

பெறுகிற காரணத்தால் எல்லாப் பகுதிகளுமே இந்தத் திட்டத்தின்கீழ் பழுதுபார்க்கப்பட்டு சரி செய்யப்படும்.

திருமேனி ஏரி.

***வினா எண். 131—திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தாலுக்காவில் உள்ள திருமேனி ஏரியின் தென்கரையை பராமரிக்கவும், ஏரியில் நீரைத் தேக்கி விவசாயத்திற்கு நீர் அளிக்கவும், மீன் வளர்க்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருமேனி ஏரியின் தென் கரை ஏற்கனவே இவ்வாண்டு மராமத்து செய்யப்பட்டு விவசாயத்துக்கு பயன்படும் வகையில் நல்ல முறையிலுள்ளது. பாசன வசதிகளுக்கு, குந்தகம் ஏற்படுமாகையால் இந்த ஏரியில் மீன் வளர்க்க அனுமதிக்கப்படுவதில்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, மன்னார்குடி தாலுகா திருமேனி ஏரி ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குப் பாசனம் கொடுக்கக்கூடியது. திருமனைக் கோடு பகுதியைச் சேர்ந்தவர்கள் லிப்ட் இரிகேஷன் ஸ்கீம் வேண்டுமென்று கோரி அரசுக்கு விண்ணப்பத்திருக்கிறார்கள். அதற்குரிய ஆயத் தீர்வை கட்டவும் தயாராயிருக்கிறார்கள். ஆகவே அந்தத் திருமேனி ஏரி தென் கரையை வலுப்படுத்தி பாசனத்திற்கு உகந்த முறையில் தண்ணீர் அளிக்க அரசு சிறப்புத் திட்டம் ஒன்றைத் தீட்டுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருமேனி ஏரி பாமினி ஆற்றிலிருந்து தனிக் கால்வாய் மூலம் கொண்டு வரப்படும் தண்ணீரால் நிரப்பப்படுகிறது. இதன் மூலம் பதியப் பட்ட ஆயக்கட்டின் அளவு 265 ஏக்கர் 59 சென்ட்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் ஆயிரக்கணக்கான ஏக்கர் இந்த ஏரியின் மூலம் பாசன வசதி பெறுவதில்லை. மேலும் இந்த திருமேனி ஆற்றின் கரையைப் பலப்படுத்தி அதன் மூலம் மீண்டும் பாசன வசதியை அதிகரிக்க வேண்டும் என்று பொறியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : ஆயக்கட்டில் இருப்பது 265 ஏக்கர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது சரியாக இருக்கலாம். ஆயக்கட்டில் இல்லாத பகுதிகளையும் கணக்கில்

எடுத்துக் கொண்டால் ஆயிரக்கணக்கான ஏக்கர் இருக்கலாம். அதையும் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை விவசாயச் சங்கத்தின் கோரிக்கை மனு.

***வினா எண். 132—திரு. அ. செல்லப்பா :** மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் விவசாயப் பேரணி நடத்திய விவசாயிகள் விவசாயச் சங்கத்தின் சார்பாக அரசிடம் கோரிக்கை மனு ஏதேனும் கொடுத்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அவையின் முன் விபர *அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. அ. செல்லப்பா : தஞ்சை மாவட்டம், கடந்த புயல், வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டது என்பதை எல்லோரும் நன்கு அறிவர். அப்படியிருந்தும் 34 வட்டாரங்களில் 22 வட்டாரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட வட்டாரங்கள் என்றும், எட்டு வட்டாரங்கள் பெரும் பகுதி பாதிக்கப்பட்டவை என்றும், நான்கு வட்டாரங்கள் மட்டும் பாதிக்கப்படாத வட்டாரங்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் இந்தப் புயலால், வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு இன்றைய தினம் துயரத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த நான்கு வட்டாரங்களையும் பாதிக்கப்பட்ட வட்டாரங்கள் என்று அறிவிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தஞ்சை மாவட்டத்தில் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கெல்லாம் ஏற்கனவே அரசாங்கத்தின் மூலம் சலுகைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் இங்கே தந்துள்ள விவர அறிக்கையில்— அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தரப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்— அந்த விவர அறிக்கையில் விளக்கமாகவும் விவரமாகவும் பல சலுகைகள் பற்றி, எடுத்துக் கொள்ளப்பட்ட

---

* 122-125ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

நடவடிக்கைகள்பற்றி, கோரிக்கைகள் என்ன என்பதையும்பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் தஞ்சைப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகள் அளிக்க வேண்டுமோ அவைகள் எல்லாம் காலாகாலத்தில் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-40.]

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நான்கு பகுதிகள் மட்டும் பாதிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். அந்த நான்கு வட்டங்களிலும், சென்ற ஆண்டு குத்தகை பாக்கியை ஒத்தி வைக்க வேண்டும் என்று இந்த மன்றத்தில் மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த நான்கு பகுதிகளும் பாதிக்கப்பட்ட காரணத்தால் தான் குத்தகை பாக்கியை ஒத்தி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். அதோடு அந்த மசோதாவில் பாதிக்கப்பட்ட இடங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கு எல்லாம் சலுகைகள் அளிப்பதற்கு அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை.)

திரு. அ. செல்லப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்தில் விவசாயி உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு அதிகப்படியான விலை கொடுக்க வேண்டும் என்றும், விவசாயியினுடைய உற்பத்தி செலவு அதிகமாகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி உற்பத்தி செலவு அதிகமாகக்கூடிய இந்த நேரத்தில் நெல்லுக்கு விலையை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று ஏன் இந்த அரசு மத்திய அரசை தட்டி கேட்கக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நெல்லுக்கு அதிகமான அளவில் கொள்முதல் விலையைக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குப் பலதடவை எடுத்துச்சொல்லி வந்திருக்கிறோம். எப்போதெல்லாம் டெல்லிக்குப் போகிறோமோ அப்போதெல்லாம் இந்தக் கருத்தை மத்திய அரசிடம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, தமிழக முதல்வர் அவர்கள் தென்னகத்திலுள்ள முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டி, நெல்லுக்குக் கட்டுப்படியான கொள்முதல் விலை கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை கேட்டிருக்கிறார்கள். அதோடு விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய அளவில் ஒரு குவின்டாலுக்கு 129 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. நமக்குச் செலவு ஒரு குவிண்டாலுக்கு 117

ரூபாய் 92 காசு ஆகிறது. இதோடு 11 ரூபாய் 58 காசு சலுகையாக கிடைக்கும் அளவில் கோதுமைக்குக் கொடுப்பது போல நமக்கு சப்ஸிடி கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்தியில் அக்ரிகல்சரல் பிரைஸ் கமிஷன் என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. அந்த மத்திய அரசின் நிறுவனம்தான் கொள்முதல் விலையை எல்லாம் நிர்ணயம் செய்கிறது. அரியானா போன்ற மாநிலங்களில் கோதுமைக்குக் கட்டுப்படியான கொள்முதல் விலை கொடுத்து வருவது போல், தென்னகத்தில் நெல் பயிரிடுகின்றவர்களுக்கும் கட்டுப்படியான விலை கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியிருக் கிறோம் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, பேரணியில் பிரதானமாக எடுத்துச் சொல்லப்பட்டது, விவசாயி உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பது. அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் ''நெல்லின் கொள்முதல் விலையைக் கணிசமாக உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிடம் தமிழக அரசு தொடர்ந்து வன்மையாக வலியுறுத்தி வருகிறது'' என்றும், ''தமிழக விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தமிழக அரசு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 1978ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1ஆம் தேதி முதற்கொண்டு மோட்டா ரக நெல்லுக்கு குவின்டாலுக்கு 90 ரூபாயும் நடுத்தர ரகத்திற்கு 95 ரூபாயும் என்ற விலைகளிலும் வெளிச்சந்தை வர்த்தக அடிப்படையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை வாங்க ஏற்பாடு செய்தது. வெளிச்சந்தை விலைவாசி நிலைமையை மனதிற் கொண்டு தேவைப்படும் காலம்வரை இந்தத் திட்டம் தொடர்ந்து நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது'' என்று சொல்லப்பட்டிருக் கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒரு கேள்வியை நீட்டித்துக் கேட்கக் கூடாது. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : இப்படி இந்த அறிக்கையில் சொல்லி யிருக்கும்போது, தேவைப்படும் காலம்வரை ஏன் வாங்கவில்லை? இப்போது என்ன நிலை என்றால் 70 ரூபாய்க்குத்தான் வாங்கு கிறார்கள். அப்படியில்லாமல் 90 ரூபாய் என்றும் 95 ரூபாய் என்றும் தொடர்ந்து வாங்கினால் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, 90 ரூபாய் என்றும் 95 ரூபாய் என்றும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 1978ஆம் ஆண்டில் சம்பா அறுவடை காலத்தில் வாங்கப்பட்டது. இப்போது அந்த நிலை இல்லை. மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் 77 ரூபாய் விலையில் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இப்போது 85 ரூபாய் என்று

முத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. மேலும் அரசின் இருப்பு நிறைய இருக்கின்ற காரணத்தால் அரசே கொள்முதல் செய்கின்ற சூழ்நிலை இப்போது அரசுக்கு இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மத்திய அரசு 90, 95 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கும்போது, இப்போது 129 ரூபாய் அளவுக்கு வேண்டும் என்று கேட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற பிரச்னை நெல்லுக்கு கொடுக்கப்படுகின்ற விலை குறைவு என்பது மட்டுமல்ல. முக்கியமான பிரச்னை. இப்போது நிர்ணயித்திருக்கின்ற 85 ரூபாய் விலையிலேயே கொள்முதல் செய்வதற்கு ஆள் இல்லை. இந்த நிலையில் 129 ரூபாய் என்று ஏற்றினால் அப்போது யார் வந்து கொள்முதல் செய்வார்கள் ?.....ஆகவே அரசாங்கம் தனது பொறுப்பை தட்டிக் கழிக்கின்ற வகையில்தான் இப்போது சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய நெல்லை மார்க்கட்டில் அரசாங்கம் நிர்ணயிக்கின்ற விலையில் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய பிரச்சினையைத் தட்டிக் கழிக்கின்ற எண்ணம் இந்த அரசுக்கு எள்ளளவும் இல்லை. ஆனால், அதே நேரத்தில் ஜனதா கட்சியின் தலைவராக அமர்ந்திருக்கும் அருமை அண்ணன் ஜேம்ஸ் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே இன்னும் மிகுந்த கவனத்தோடு ஈடுபடுவார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால், கடந்த 1½ ஆண்டுகளாக இந்த அரசு தமிழகத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர், இந்த விவசாயிகள் பிரச்னையிலே எந்த அளவுக்கு அக்கறை காட்டி வருகின்றது என்பதை அறிவார்கள். மேலும், இந்த 90, 95 ரூபாய் கொடுத்து ஏன் வாங்கக் கூடாது என்று மைய அரசைக் கேட்டிருந்தால், நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த ஆட்சியைப் பொறுத்த அளவிலே 85 ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயித்த பின்னரும்கூட, ஓரளவிற்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலமாக விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கான ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 133

(குறுக்கீடு) கிருஷ்ணன் ஒவ்வொரு கேள்விகளுக்கும் நீங்கள் கைத்தூக்கிக் கொண்டிருந்தால், தங்களை அனுமதிக்க இயலாது. எந்தப் பிரச்னையிலும் பரவலாக நான் அனுமதி தருகிறேன். எனவே நீங்கள் உட்காருங்கள். கேள்வி எண் 133.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தாங்கள் இந்தப் பக்கமே பார்ப்பதில்லை.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள். கேள்வியைத் தாங்கள் கேட்கின்றீர்கள். ஆனால் அந்தக் கேள்வி வரும்போது தாங்கள் இல்லை.

பனைப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள்.

வினா எண் 133—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தொகுதியில் பனைபொருட்கள் தயாரிக்கும் கைத்தொழில் நிறுவனம் அமைக்கும் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எங்கெங்கு அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) (ஆ) : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தக்க பனை ஓலைப் பொருட்கள் திருச்செந்தூர் அருகே உள்ள குலசேகரப்பட்டிணம், மெஞ்ஞானபுரம் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு நிலையத்தைச் சார்ந்த மாநில இணைய யூனிட்டுகள் மூலம் பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. சுமார் 200 குடும்பங்கள் இதில் ஈடுபட்டுள்ளன. புதிதாக நிறுவனம் அமைக்கும் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவர் அவர்களே, திருச்செந்தூர் பகுதியில் அதிகமான பனைகள் இருக்கின்றன. இதனால் மூலப் பொருட்கள் சுலபமாக கிடைக்க வழிவகை உள்ளது. அந்த அடிப்படையில், அடிப்படைத் தொழில் வாய்ப்புகள் இல்லாத நிலையில் உடன்குடி, குலசேகரப்பட்டிணம், ஆறுமுகனேரி, சீருடையாபுரம், பரமன்குறிச்சி, மெய்யூர் போன்ற பகுதிகளில் அதிகமான மக்கள் வாழ்கின்றார்கள். அப்படிப்பட்ட இடங்களில், இருக்கின்ற மக்களின் எண்ணிக்கையை மனதில் கொண்டு, இந்த நிறுவனங்கள் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 பிப்ரவரி 22

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : தலைவர் அவர்களே, திருச்செந்தூர் தொகுதி முழுவதுமாக எவ்வளவு பனை பொருள்கள் கிடைக்கின்றனவோ, அவைகளை எல்லாம் இந்த இரண்டு மையங்களில் பயிற்சிபெற்ற ஆண், பெண்களை வைத்து துணை பொருட்கள் உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். அங்கு கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களின் அளவு அதிகமாக இருக்கிறது. அதனால் மேலும் பயிற்சி நிலையஙகள் தேவைப்படுகின்றன என்ற சூழ்நிலை வருமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. சோ. பாலகிருஷ்ணன்</u> : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த அளவில் திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் பனைத் தொழிலிலே மிகவும் அதிகமாக ஈடுபட்டிருப்பதால், இந்தப் பனைத் தொழிலுக்கென்று ஒரு வாரியம் அமைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன் ?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாடு மாநில பனைவெல்ல விற்பனை இணையம்என்ற தனியான நிறுவனம் ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் பனைவெல்ல கூட்டுறவு சங்கம் இருக்கிறது. மாவட்ட அளவிலே சம்மேளனமும், மாநிலத்திலே ஒரு இணைப்பும் இருக்கின்றன. இது பற்றி அடுத்த கேள்வியில் விளக்கம் வர இருக்கின்றது. அடுத்த கேள்வி வரும்போது இதற்குப் பதில் சொல்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இக்கேள்வி திருச்செந்தூர் தொகுதியைப் பற்றியது. இப்படி எல்லோருக்கும் இந்தக் கேள்வியில் சந்தர்ப்பம் அளிக்க இயலாது. அடுத்த கேள்வி 134.

<u>மாநில பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம்.</u>

<u>*வினா எண். 134 —திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்</u> : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் உள்ள மாநில பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தைக் கலைத்து விடுவது குறித்து ஏதேனும் முடிவு எடுத்துள்ளதா ?

1979 பிப்ரவரி 22]

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை இணையத்தை கலைத்து விடும் செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

[முற்பகல் 9–50]

<u>திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்</u> : பனை வெல்லம் அதிகமாகத் தயாரிக்கின்ற ஒரு பகுதியாக செங்கை மாவட்டம் அச்சிறுபாக்கம் இடையக்காடு பகுதி இருக்கிறது. அங்கு மரம்ஏறும் தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள். பனை பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவவும் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவவும் இந்த அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : உறுப்பினர் அவர்கள் வேண்டுகோளை அரசு பரிசீலிக்கும்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : பனைமரத் தொழிலாளர்கள் கன்னியாகுமரி ஜில்லா, திருநெல்வேலி ஜில்லா, இராமநாதபுரம் ஜில்லா, கோயம்புத்தூர் ஜில்லா ஆகிய பல்வேறு பகுதிகளிலே இருக்கிறார்கள். இப்போது பனை வெல்லத்திற்கு விலை அதிகமாகக் குறைந்திருக்கும் காரணத்தால் அந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது வரை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு லோன் கொடுக்கப்பட்டு வந்தது. அது தற்போது நிறுத்தப்பட்டிருப்பதால் அவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலில் ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளை நீக்குகின்ற வகையிலும், அந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கிற வகையிலும் அரசாங்கத்திலிருந்து அந்தத் தொழிலாளர்களுக்கு லோன் கொடுத்து அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களை அரசாங்கம் வாங்க ஏற்பாடு செய்யப்படுமா?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : மாநில பனை வெல்ல தும்பு உற்பத்தி மையம் என்பது ஆங்காங்கு நிறுவப்பட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மாவட்ட அளவில் உள்ள சம்மேளனங்களுக்கும் தேவையான பொருள் உதவி, மூலப் பொருள்களை வாங்குவதற்கான உதவி, கருவிகள் வாங்குவதற்கான உதவி ஆகியவற்றைச் செய்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். அப்படி அந்தச் சங்கங்கள், இவற்றுக்கான உதவிகள் வேண்டுமென்று கேட்டால் இந்த இணையம் உதவி செய்யும். இந்த இணையத்தின் மூலமாக உதவி கிடைக்கவில்லை என்று ஏதேனும் தனிப்பட்ட முறையில் குறை இருந்தால் ஏதேனும் சங்கங்களுக்கு இந்த இணையத்தின் மூலம் உதவி கிடைக்கவில்லையென்று சொன்னால் அது பற்றிக் கவனிக்கப்படும்.

[1979 பிப்ரவரி 22

திரு. ந. தனசேகரன் : இந்த சொசைடி ஆண்டாண்டு கால
மாக அந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஏழைத்
தொழிலாளர்களுக்கு எந்த உதவியும் செய்ததாக இல்லையென்ற
குறைபாடு இருந்து வருகிறது. அதை மாற்றியமைத்து சொசைடி
நல்ல முறையில் செயல்படவும் ஏற்றுமதி செய்யப்படக்கூடிய
பொருள்களை அரசாங்கமே ஏற்றுமதி செய்வதற்கும் வழிவகை
செய்து ஏழைத் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க அரசு
முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாநில அளவில்
உள்ள மையத்தில் முன்பு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு
இருந்து சரியாகச் செயல்படவில்லை என்பதன் காரணமாக
1976-ம் ஆண்டு தனி அலுவலர் நியமிக்கப்பட்டு 1976–77,
1977–78-ம் ஆண்டில் மைய இணையத்தின் மூலமாக விற்பனை
அதிகமாகியிருக்கிறது. - ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பும்
அதிகமாகியிருக்கிறது. பொதுவாக உதவி செய்யவில்லை என்று
சொல்வதை விட இன்னின்ன சங்கங்களுக்கு இணையம் உதவி
செய்யவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் தகுந்த நட
வடிக்கை எடுக்கப்படும்.

திரு. பொ. விஜயராகவன் : இப்போது தனி அதிகாரி
களைப் போட்டு இது செயல்பட்டு வருகிறது என்று சொல்லு
கிறார்கள். இதை மாற்றியமைத்து ஜனநாயக முறையில்
அமைப்பை ஏற்படுத்தி அந்த அமைப்புகளின் மூலமாக கன்னியா
குமரி மாவட்டத்தில் அதிகமாக இந்தத் தொழிலாளர்கள் வாழ்
வதன் காரணமாக, பாம் கோலா. பனம் சர்க்கரை வெளி
நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற பனை பொருள்களைத்
தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க இந்த அரசு முன்
வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : திரும்பவும் ஆங்
காங்குள்ள சங்கங்களுடைய செயல்பாடுகளைச் சீர்திருத்தும்
செய்ததற்குப் பிறகு அந்த அமைப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட
நிர்வாகிகள் மூலம் நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்பதுதான்
அரசின் கொள்கை. பனைப் பொருள்கள் உற்பத்தி செய்வது
குறித்தும் ஏற்றுமதி செய்வது குறித்தும் பாம் கோலா போன்ற
வற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்கவேண்டுமென்
றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அதை
மாதவரத்தில் பரிட்சார்த்தமாகச் செய்து பார்த்ததில் அதற்கு
மகப் பெரிய வரவேற்பு இருப்பது தெரிய வந்தது. ஆகவே,
பாம் கோலா தயாரிக்கும் முயற்சியில் அந்த மையம் ஈடுபட்டி
டிருக்கிறது. அதைத் தொடர்ந்து மற்ற மாவட்டங்களிலும்
விரிவுபடுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 22]

திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே, இராமநாதபுரம்
மாவட்டத்திலே லட்சத்திற்கும் அதிகமான பனை மரங்கள் இருக்
கின்றன. அந்த மரங்களை, அந்தத் தொழில்களை நம்பி, அங்கே
தொழிலாளர்கள் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.
அந்தப் பனைப் பொருட்களை வைத்து பனங்கற்கண்டு, சாக்
லேட் போன்றவைகளைத் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்
சாலையை நிறுவுவதற்காக அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்
அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறார் என்று அறிகிறேன், அந்தத்
திட்டத்தை நிறைவேற்ற அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்
களே, இந்த இணையத்தின் மூலம் பிரஷ் செய்தல், பனஞ்சாற்றி
லே இருந்து ஜாம் செய்தல், பனஞ்சர்க்கரை செய்தல், மிட்டாய்
செய்தல், கற்கண்டு செய்தல், பனந்தும்பு செய்து வெளிநாடு
களுக்கு ஏற்றுமதி செய்தல் போன்றவைகளைச் செய்வதற்காக
ஒரு தொழிற்சாலை நிறுவும் திட்டத்தை முகவை மாவட்ட
ஆட்சித் தலைவர் அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது அர
சின் பரிசீலனையில் இருக்கிறது. தக்க நேரத்திலே விரிவான
நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே,
மது விலக்கு அமலுக்கு வந்ததற்குப் பிறகு ஆண்டுக்கு இப்
படிப்பட்ட தொழில்களின் மூலமாக ஏற்பட்ட முன்னேற்றத்தின்
மதிப்பில் எவ்வளவு உயர்ந்து உள்ளது? தமிழகத்திலே எத்தனை
இடங்களிலே இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்
றன? அவைகளின் மூலமாக எத்தனை குடும்பங்கள் பயன்பெறு
கிறார்கள் என்ற தகவலைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே,
தனிக் கேள்வி போட்டால் தெரிவிக்க இயலும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இந்த
பனை பொருட்களைச் செய்கின்ற தொழிலிலே பெருவாரியாக
மகளிர் தான் ஈடுபட்டிருக்கின்றார்கள். அந்தக் காரணத்தினாலே
அவர்கள் அதிகாரிகளிடம் நேரடியாகத் தொடர்புகொள்
வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. இதற்குத் தனிப் பிரிவு
கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் முடியாது என்று சொல்லி
விட்ட காரணத்தால் குறைந்தது இவ்வளவு டார்ஜட் (குறியீடு)
என்று வைத்து அதை நிறைவேற்றுவதற்கு அரசு ஏற்பாடுகளைச்
செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்
களே, இலக்கு என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெளி
வாகச் சொன்னால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

[1979 பிப்ரவரி 22

திரு. தே. ஞானசிகாமணி : தலைவர் அவர்களே, காதி போர்டிலிருந்து 110 லட்சம் ரூபாய் பனை மரத்திலிருந்து பொருட்கள் செய்யும் தொழிலாளர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுமதிக்கப்பட்டிருந்தும்கூட 25 ஆயிரம் தொழிலாளர்கள் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எந்தவிதமான கடனோ, மானியமோ அனுமதிக்காததன் காரணம் என்ன? இரண்டாயிரம் பனைத் தொழிலாளர்களுக்கு பனைப் பொருட்கள் செய்கின்ற தொழிலாளர்களுக்கு கடன் தருகிறோம் என்று சொல்லி 7 ஆயிரம் ரூபாய் வீதம் வசூல் செய்தும் இதுவரையிலே உண்மையிலேயே கடனோ மானியமோ கிடைக்காததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இங்கே மாநில இணைப்பு மையங்கள் எப்படிச் செயல்படுகின்றன, கலைக்கப்படப் போகின்றனவா என்பது பற்றிய கேள்விக்கு நான் பதில் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். தனிப்பட்ட புகார்பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, பனை மரத்தைப் பொறுத்தமட்டில் எந்தப் பொருளும் வீணாகாமல் எல்லா விதமான பொருட்களையும் பயன்படுத்தி பொருட்களைச் செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. இப்போது பலவிதமான கைத்தொழில் நிலையங்கள் இருக்கின்றன. அவைகளை மேலும் பரவலாக விரிவாக்கினால் கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமாதலால் அதை அரசாங்கம் செய்யுமா? அது மட்டுமல்ல, ஏற்கனவே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு குறைந்த ஊதியம் தான் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அந்த ஊதியத்தை அதிகப்படுத்திக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்தப் பணி மையங்களிலேயேயும் பொருள்கள் உற்பத்தி செய்கின்ற நிலையங்களிலேயும் வேலையிலே ஈடுபட்டிருக்கின்ற ஆண்களானாலும் சரி, பெண்களானாலும் சரி இயற்கைக்கு மீறிய உழைப்பு தேவைப்படுகிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். மரம் ஏறுதல், நார் எடுத்தல் போன்றவற்றில் நவீன முறைப்படி அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அதன்மூலம் அவர்களுடைய வருவாய் அதிகமாவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 135-ம், 136-ம் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

1979 பிப்ரவரி 22]

[முற்பகல் 10–00.]

அரசு மருத்துவ மனைகளில் ஓமியோபதி பிரிவுகள்.

*வினா எண். 135—திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—தமிழ்நாட்டில் அரசு மருத்துவ மனைகளில் அரசு ஓமியோபதி பிரிவு ஆரம்பித்து பல படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்படி அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன்: திண்டுக்கல்லில் உள்ள மதுரை மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஹோமியோபதி மருந்தகம் ஒன்று 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் நாள் முதல் செயல்பட தொடங்கியுள்ளது. மற்றொன்று சேலம் தலைமை மருத்துவமனையில் ஆரம்பிப்பதற்கான அனுமதி அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. இவைகளை அனுபவமாகக் கொண்டு மேலும் அரசு மருத்துவமனைகளில் ஹோமியோபதி பிரிவு ஆரம்பிப்பது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

ஓமியோபதி மருந்தகங்கள்

*வினா எண். 136—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி மருந்தகங்கள் நமது மாநிலத்தில் எத்தனை உள்ளன?

(ஆ) உள்ளிருப்பு நோயாளிகள் தங்கி மருத்துவம் பெற எத்தனை மருத்துவ மனைகள் உள்ளன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன் : (அ) திண்டுக்கல்லில் உள்ள மதுரை மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஹோமியோபதி மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்ட மருத்துவமனையில் ஹோமியோபதி மருந்தகம் திறப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சென்னை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட ஹோமியோபதி மருத்துவமனை ஒன்றில் மட்டுமே உள்ளிருப்பு நோயாளிகள் மருத்துவம் பெற வசதி உள்ளது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் இதுவரை ஓமியோபதி மருத்துவத் துறையில் படித்துத் தேறிய மாணவர்கள் எத்தனைபேர்கள் இருக்கிறார்கள்? அவர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்கப்பட்டுவிட்டதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவரவர்களே, இதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை, தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, ஓமியோபதி மருத்துவமனைகளுக்குச் செலவு குறைவாக ஆகும் என்று கருதுகிறேன். அப்படியிருந்தால், ஏழை எளிய மக்கள் பயன்பெறத் தக்க அளவிற்கு, கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட மருத்துவ மனைகளை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஓமியோபதி மருத்துவ மனைகளைக் கிராமப்புறங்களில் நிறுவ வேண்டுமென்ற காரணத்திற்காக, பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஓமியோபதி மருந்தகங்களைத் திறப்பதற்கான சாத்தியக் கூறுகளைப்பற்றி ஊராட்சி வளர்ச்சி இயக்குநர் துறையிடத்தில் கேட்டிருக்கிறோம். அது ஆராய்ச்சியில் இருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, ஓமியோபதி பிரிவுகளை மருத்துவமனைகளில் ஏற்படுத்த வேண்டிய சில யோசனைகளைப்பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். நல்லது. அதேபோன்று ஆயுர் வேதம், சித்தம் ஆகிய இரண்டும் நம் நாட்டு மருத்துவ முறை மருந்துகள். அவற்றைப் பிரபலமாக மக்கள் இன்று வரவேற்றுக்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதில் அதிகமான பிரிவுகளை ஏற்படுத்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவரவர்களே, நம்முடைய தமிழகத்தின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து இருக்கின்ற சித்த மருத்துவத் துறையை விரிவாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு இன்றைக்கு அதுபோன்ற மருத்துவப் பிரிவுகளைப் பல்வேறு மருத்துவமனைகளில் உருவாக்கவும், இருக்கின்ற சித்த மருத்துவப் பிரிவுகளை விரிவாக்கவும் இன்றைக்குத் திட்டமிட்டு அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே ஆயுர்வேத மருத்துவ மனைகளை ஆங்காங்கு நிறுவுவதற்கான திட்டமும் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, (Indigenous system of medicine) என்ற முறையில் யூனானி முறைக்கு ஊக்கம் தரும் முறையில் யூனானி மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளப்படுமா? யூனானி மருத்துவத் துறைப் பிரிவுகளை மருத்துவமனைகளில் ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவரவர்களே, ஏற்கனவே அண்ணா மருத்துவமனையில் யூனானி மருத்துவப் பிரிவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. யூனானி கல்லூரி ஒன்றைச் துவங்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஓமியோபதி மருத்துவர்களில் பலர் அலோபதி மருத்துவ முறையில் ஊசி போடுகிறார்கள், அலோபதி மருந்துகளைக் கொடுக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதிலே குறிப்பிட்ட சில பகுதிகளில் நரிக்குறவர்கள்கூட இத்தகைய அலோபதி முறையில் ஊசி போட்டுக்கொண்டு வருவது, அனுமதியில்லாமல் ஊசி போட்டுக் கொண்டு வருவது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவரவர்களே, அப்படி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அதுபோல நடைபெற்றுக் கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிப்பார்களேயானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, ஓமியோபதி கவுன்சிலில் அங்கத்தினர்களை 2—11—1978-ஆம் தேதி அன்று தேர்தல் செய்த பிறகும் இதுவரையிலும் அதற்குக் கவுன்சில் சேர்மன் தேர்ந்தெடுக்கப்படவில்லை, இந்தக் கவுன்சிலை அமைக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அத்துடன், இப்பொழுது மருத்துவக் கல்லூரிகளில் இட நெருக்கடியிருக்கிறது. ஓமியோபதி மெடிகல் ட்ரீட்மெண்ட் என்றால் ஏழைகளுக்குக் குறைந்த விலைக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இவைகளை அதிகரிக்க ஓமியோபதி படிப்பதற்குள்ள வாய்ப்பை ஏற்படுத்த அதிகக் கல்லூரிகளை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 பிப்ரவரி 22

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, தற்பொழுது ஓமியோபதி கல்லூரி ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. அதைக் கட்டடம் கட்டி விரிவுப்படுத்துகின்ற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருந்துக்கொண்டிருக்கிறது. அடுத்து, கவுன்சிலைப்பற்றிக் கேட்டக் கேள்விக்குத் தனிக் கேள்வி போடுவார்களேயானால் விரிவான பதிலைச் சொல்லலாம்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, பெருவாரியான கிராமப்புற பகுதிகளில் ஓமியோபதி மருத்துவர்கள் என்று சொல்லிக்கொண்டு பல பேர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் உண்மையாக ஓமியோபதி மருத்துவப் படிப்பு படித்தவர்களா என்பதை ஆராய இந்த அரசு, மக்கள் நல்வாழ்வைக் கருதி ஆய்வு எடுக்குமா என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, அப்படித் தவறு நடைபெறுவதைச் சுட்டிக் காட்டுவார்களேயானால் அதன்மேல் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவரவர்களே, கோவை நகரம்—5 இலட்சம் மக்களைக் கொண்ட அந்த மாபெரும் நகரத்தில் ஓமியோபதி மருத்துவமனை ஒன்றை அரசு சார்பில் ஏற்படுத்த உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புவதோடு ஒரே மருத்துவமனையில் ஓமியோபதி, அல்லோபதி, சித்த வைத்தியம் பல்வேறு மருத்துவப்பிரிவுகளை, வைத்திருக்கிறார்கள். அதைத் தனித்தனியாக நிறுவ அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஓமியோபதி மருத்துவமனையை எல்லா மாவட்டங்களிலும் உருவாக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய திட்டம். அதனுடைய முதல் கட்டமாக சேலத்திலே துவங்கப்பட இன்றைக்கு ஆவன செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, திண்டுக்கல்லில் இந்தப் பிரிவு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இதனுடைய ஆய்வை அறிந்ததற்குப் பின்னாலே, அதற்குப் பிறகு ஏனைய மாவட்டங்களில் விஸ்தரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஒரே மருத்துவமனையில் பல்வேறு மருத்துவப் பிரிவுகள் செயல்படுவதனால் குழப்பம் ஏற்படுகிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு மருத்துவப் பிரிவையும் நன்கு புரிந்து கொள்ளக்கூடிய வகையில், அந்தந்த மருத்துவமனையில், இது, இது இந்த, இந்தப் பிரிவைக் குறிக்கும் என்று எல்லோருக்கும்

1979 பிப்ரவரி 22]

விளங்கும்படியாக விளம்பரப் பலகைகள் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே, குழப்பம் ஏற்பட வாய்ப்பு ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, கிராம சித்த வைத்தியசாலைகளுக்கு வழங்கக்கூடிய மருந்துகள், ஓராண்டுக்குக் கொடுக்கக்கூடிய மருந்துகள் 2 மாதம் கூட வருவதில்லை என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா ? அப்படியானால் அதைப் போக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர்
அவர்களே, சித்த மருத்துவப் பிரிவுக்கு வழங்கப்படுகிற மருந்து
கள் சில இடங்களில் பற்றாக்குறையாக இருக்கிறது, சில இடங்
களில் தேவைக்கு அதிகமாக இருக்கிறது என்பது இப்பொழுது
ஆய்வு செய்யப்படுகிறது. ஆகவே இனிமேல், மருந்துகளை
வழங்கும்போது அதிகமாகத் தேவைப்படும் இடங்களுக்கு அதிக
மாகவும் குறைவாகத் தேவைப்படும் இடங்களுக்குக் குறைவாக
வும் மருந்துகள் தருவதற்கு வழிவகை செய்யப்படும். ஏற்
கனவே, மருந்துத் தட்டுப்பாடு எதுவும் இருக்கக்கூடாது என்று
உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருக்கிறது என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் "எலப் நிறுவனம்".

*வினா எண். 137—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தருமபுரி மாவட்டத்தில் "எலப் நிறுவனம்" மூலம் நடந்து வரும் தொழுநோய் கட்டுப்பாட்டு பணியாளர்கள் சம்பள விகிதங்கள் சீரமைக்கப்படுமா ?

(ஆ) எலப் நிறுவனத்தை அரசு ஏற்று நடத்தும் உத்தேசம் உள்ளதா ?

(இ) எலப் நிறுவனத்திற்கு அரசு ஏதேனும் மான்யம் வழங்கி ஆதரிக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) இது தனியார் நிறுவனமாக இருப்பதால் சம்பள விகிதங்கள் சீரமைப்பது பற்றி அரசு முடிவு செய்வதற்கு ஏதும் இல்லை.

(ஆ) தற்சமயம் இல்லை.

(இ) மானியம் வழங்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த தர்மபுரி மாவட்டத்திலேயுள்ள '' எலப் நிறுவனம் '' அன்னிய நாட்டு உதவியோடு நடக்கிறது என்பதை அமைச்சரவர்கள் பதிலிலிருந்து அறிகிறோம். அங்கே பணியாற்றும் தமிழக மருத்துவர்களுக்கு நல்லவிதமான சலுகை கிடைக்காத காரணத்தால், அரசே அதை ஏற்று நடத்த முன்வருவதற்கு வேண்டிய வழிவகை செய்ய இயலுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தொழுநோயாளிகளுடைய நோயைக் களைய வேண்டுமென்பதற்காக, பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த டேனியன் என்பவரால் தொடங்கப்பட்ட டேனியன் நிறுவனத்தால் இந்தத் தொழு நோய் நிறுவனம் 1968-ல் தர்மபுரி மாவட்டத்தில் துவங்கப்பட்டது. அவர்கள் 5 ஆண்டுகள் நடத்துவது என்றும் 5 ஆண்டுகளுக்குப் பின்னாலே அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அதற்குப் பின்னால் மேலும் 5 ஆண்டுகள் அவர்கள் நடத்த வேண்டுமென்று அரசு விருப்பம் தெரிவித்ததற்குப் பின்னாலே, அவர்கள் நடத்த வழிவகை செய்தார்கள். இப்பொழுதும் அவர்கள் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அரசு, இயக்குநரிடத்திலே இதுபற்றி விசாரித்தபொழுது இன்னும் சிறிதுகாலம் அவர்களே நடத்துவது உசிதமாக இருக்கும். வேண்டுமானால் அவர்களுக்கு உதவித்தொகை வழங்கலாம் என்று தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் அவசியத்தைக் கருதி இன்னும் 1983-ஆம் ஆண்டு வரை அவர்கள் நடத்தலாம் என்ற முடிவு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 இலட்சம் உதவித் தொகை வழங்கும் திட்டம் நிதித் துறையினுடைய ஆலோசனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த '' எலப் நிறுவனம் '' தனியார் துறையைச் சேர்ந்ததாக இருந்தாலும் அரசினுடைய அங்கீகாரம் பெற்றுத்தான் இன்றைக்கு நடைபெற்று வருகிறது. அரசு நிறுவனங்களிலே பணி புரியக்கூடியவர்களுக்கு எப்படி வசதிகள் அளிக்கப்படுகிறதோ அப்படி இல்லாத காரணத்தால், சென்ற ஆண்டிலே 2 மாதம் அங்கு போராட்டமே நடத்தி இருக்கிறார்கள். அதனால், அரசுக்குத்தானே தொந்தரவாக இருக்கிறது. ஆகவே, அரசு நிறுவனங்களிலே பணி புரியக் கூடியவர்களுக்கு எப்படி கொடுக்கப்படுகிறதோ, அப்படி கொடுக்கப்பட வேண்டும், நல்லமுறையிலே அவர்கள் பணியாற்றப்பட வேண்டுமென்று அமைச்சரவர்கள் உத்திரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். தனியார் நிறுவனம் என்பதாலே நாம் ஆணையிட முடியாது, ஆலோசனை வேண்டுமானால் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-10.]

2. அறிவிப்புகள்.

(அ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு திரு. ந. குப்புசாமி அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் திரு. ந. குப்புசாமி பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் அறிவிக்கிறேன்.

(ஆ) வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கு நியமனம்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தலுக்கு திரு. அ. மா. பரமசிவன் அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட்ட வேட்பாளரின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், திரு. அ. மா. பரமசிவன் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் அறிவிக்கிறேன்.

[1979 பிப்ரவரி 22

3. தகவல் கோரல்.

திருச்சி சிம்கோ மீட்டர் நிறுவனம் கதவடைப்பு குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிம்கோ மீட்டர் விஷயம் பற்றி நேற்று வெளிநடப்பு செய்தோம். ஆசிரியர்கள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்படு கின்றனர். இது விஷயம் பற்றி உங்களுடைய விவரமான....

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்ன பொருள் குறித்து நானும் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்....

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே நமது மாநிலத்தில் ஆசிரியர்கள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். இது விஷயமாக....

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, சிம்கோ சம்பந்தமாக நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்....

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, கட்டாயம் அனு மதிக்க வேண்டும் என்று சொல்கிறேன். ஆமாம், அவ்வளவு தான் அந்த வார்த்தையில் எவ்வளவு அழுத்தம் அடங்கியிருக்கிறது என்று புரியும்....................

திரு. ஜே. ஜேம்ஸ் : நானும் வலியுறுத்த விரும்புகிறேன்....

திரு. கே. கந்தசாமி : ஆசிரியர்கள் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறதா? அது மீண்டும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளங்கோவன் அதைத்தான் சொன்னார். திரு. கந்தசாமியும் அதைத்தான் சொல்கிறார். இதை முடித்துக் கொண்டு பிறகு அதற்கு வருவோம்......

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, அனுமதிக்கிறீர்களா இல்லையா என்பது உங்கள் விருப்பம். இந்த அவையில் வெளிநடப்பு செய்த காரணத்தினால்தான் அதை அனுமதிப்பது அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பிறகும் அதை அனுமதிக்க மாட்டோம் என்று சொல்வது மரபு இல்லை.

1979 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மன்னிக்க வேண்டும். உறுப்பினர்கள் நான் அத்தனை சொல்லியும் கேளாமல் வெளிநடப்பு செய்தார்கள். அதனால் அதை தள்ள வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. நான் சொன்னதை ஏற்றுக் கொண்டிருந்தால் பரவாயில்லை.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : நான் மறுபடியும் அதை எழுதிக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நான் அடுத்தபடி அரசு தரப்பிலே கேட்கிறேன். தயவு செய்து அமருங்கள்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : வெளி நடப்பு செய்த காரணத்தி னால தான் என்று சொன்னால், வெளிநடப்பு செய்யாத எங்க ளுக்கு எங்கள் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வெளிநடப்பு செய்தபோதே திரு. ஏ. ஆர். மாரிமுத்து பேசியிருக்கிறார். நல்ல வாய்ப்பைத் தவற விட்டு விட்டீர்கள். அந்த நேரத்தில் பேசியிருக்கலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அதை நாங்கள் இன்றைக்குப் பேசப்போகிறோம் என்ற எண்ணத்தில்தான்—பேசவில்லை சந்தர்ப்பத்தை நழுவவிட்டு விட்டேன் என்று சொல்லாதீர்கள். அதை நான் ஆட்சேபிக்கிறேன். இன்றைக்கு நீங்கள் அதை அனுமதிக்கப் போகிறீர்கள், அதை எடுத்துக்கொள்ளப் போகி றீர்கள் என்ற காரணத்தால்தான் நான் அதைக் குறிப்பிடாமல் இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. ஆர். மாரி முத்து, நீங்கள் 20 ஆண்டுகளாக சட்டமன்றத்தில் இருக்கிறீர்கள். இந்தச் சமாதானம் சொல்லாதீர்கள். வாய்ப்புக் கிடைக்கிற போது எந்தப் பிரச்னையையும் குறித்துப்பேச முற்படுவது தான் மரபு. அதை பேசித்தான் ஆகவேண்டும். நாளைக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற ஊகத்தில் நீங்கள் பேசவில்லை என்று சொல் வது ஏற்றுக் கொள்ளமுடியாது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஊகம் இல்லை. நீங்கள் எடுத்துக் கொள்வீர்கள் என்று நினைத்தேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களுக்குப் பேச வாய்ப்பு இருந்தது என்று சொன் னீர்கள். வாய்ப்பு நாங்கள் பேசுவதற்கு இருக்கலாம். அமைச்சர் களிடமிருந்து பதில் பெறுவதற்கும் மேற்கொண்டு எந்த நட வடிக்கை எடுக்கப்படும் என்று கேட்டறிவதற்கும்தான் அதைக் கொடுத்தேன்.

[1979 பிப்ரவரி 22

[முற்பகல் 10-20]

திரு. அ. ரகுமான்கான்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர்,
நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது இன்றைக்கு விவாதம்
இல்லை. அது 26-ந் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது
(மாண்புமிகு திரு கி. மனோகரன் எழுந்தார்).

திரு. ஜே. ஜேம்ஸ்: சார் பாயின்ட் ஆப் ஆர்டர். நான் ஒரு
....

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் என்னுடைய விளக்கத்தைக் கேட்ட பிறகு பேசலாம்.

நேற்று இந்தப் பிரச்சனையை அவையில் எழுப்பப்பட்டபோது
தலைவரவர்களே, நீங்கள் என்னைப் பார்த்து கேட்டீர்கள். அர
சாங்கத் தரப்பில் தயாராக இருந்தால் எனக்கு ஆட்சேபணை
இல்லை என்று பெருந்தன்மையோடு மரபைக் காத்து சொன்னீர்
கள். நான் தயாராக இல்லை; தகவல் எனக்கு கிடைக்கவில்லை
என்று தெரிவித்தேன். அதற்குப் பிறகு நமது தொழிலாளர் நல
அமைச்சரவர்களைக் கூப்பிட்டு நீங்கள் ஏதாவது ஒரு ஸ்டேட்
மென்ட் தர முடியுமா என்று கேட்டபோது ஒரு மணிக்குள்ளாக
வேண்டுமானால் தருகிறேன் என்று தெரிவித்தார்கள். அப்
போது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எழுந்து ஒத்தி வைப்புத்
தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கும்போது, ஒரு மணி வரையில்
வழக்கமான நிகழ்ச்சியை நடத்திவிட்டு, அதன் பிறகு இந்த
ஒத்திவைப்புத் தீர்மானத்தை எப்படி எடுத்துக்கொள்ளலாம்
என்று கேட்டார்கள். நான் கேட்டதை வைத்துக்கொண்டு,
எனது நினைவிலே இருப்பதை வைத்துக்கொண்டு பேசுகிறேன்.
ஒரு மணிக்கு அல்லது நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று
சொன்னபோது, அப்போது அவர்கள் சொன்னார்கள், இல்லை,
இல்லை இன்றைக்கு இப்போது அதை எடுக்க வேண்டுமென்று,
இல்லாவிட்டால் வெளிநடப்புச் செய்வோம் என்று எதிர்க்கட்சி
தலைவர்களும் மற்றவர்களும் முடிவு செய்து, அதற்குத்
தயாராக இருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு நினை
விருக்கிறது; அவைக் குறிப்பேடும் இருக்கிறது. குறிப்பேட்டை
யாரும் படித்துப் பார்க்கலாம். நான் சொன்னேன். நாளை
தகவலை சேகரித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் திருப்தி
படுகிற வகையில் தருகிறேன் என்று சொன்ன பிறகும் வெளியேறி
னார்கள். அதன் பிறகு அனுமதி மறுக்கப்பட்டது. வெளிநடப்புச்
செய்த காரணத்தால்தான் சபாநாயகர் அவர்கள் அனுமதி
மறுத்துவிட்டார்கள் என்பது அவ்வளவு பொருத்தமுடையதாக
இல்லை. (குறுக்கீடு) நான் சொல்வது சரியா இல்லையா என்
பதைப் பின்னால் தெரியப்படுத்துங்கள். நேற்று நண்பர்
உமாநாத் அவர்கள் இங்கே இல்லை. பெரியவர் சங்கரய்யா
அவர்கள்தான் இருந்தார்கள். அவர்களுக்கு நடந்த சம்பவம்

நன்றாகத் தெரியும். ஆகவே, நான் சொல்வது, சபாநாயகர்
அவர்கள் எந்த நேரத்திலும் நீங்கள் வெளிநடப்பு செய்த காரண
த்தால் அனுமதி மறுக்கப்பட்டது என்று சொல்லவில்லை. சர்க்
கார் தரப்பில் தயாராக இருந்தால் நான் அனுமதிக்கிறேன்.
என்று சொன்னார்கள். திருப்பித், திருப்பி அதைச் சொன்னார்
கள். நான், தகவல் என்னிடம் இல்லை நாளை தருகிறேன்
என்று சொன்னேன்.

எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் ''நாங்கள் கொடுத்தது
என்னவாயிற்று'' என்று இப்போது கேட்டார்கள். நான் கேட்
கிறேன். நாளை தருகிறேன் என்று உங்களைப் பார்த்து
மெத்தப் பணிவோடு கேட்டபோது, தகவல் சேகரித்துத் தரப்
படும் என்ற உணர்வுகூட இல்லாமல் வெளியேறிய பிறகு இன்
றைக்கு வந்து—நேற்றைக்கு வெளியேறியது நேற்றைய பத்திரிக்
கையில் செய்தி வந்துவிட்டது; இன்றைக்கும் அப்படி செய்தி
வெளிவரவேண்டுமென்ற முடிவோடு—கேட்கிறீர்களா?

திரு. ரா. உமாநாத்: பத்திரிக்கையில் செய்தி வருகிறது, வரத்
தான் செய்யும். எங்கள் விருப்பமும் அதுதான், உங்கள் விருப்ப
மும் அதுதான். ஆனால்,

People must kn w what is happening here· When Rome was
in fire Nuro was fiddling, It is like that.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு உமாநாத் அவர்களே,
என்னுடைய அனுமதியைக் கேட்காமல் எழுந்து பேசுவது சரி
யல்ல.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்கள் விரும்பி
னால் இன்றைக்கு அந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக்
கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அது சபாநாயகர்
அவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அந்த ஒத்தி வைப்புத்
தீர்மானத்தை அனுமதிக்கிறேன்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

தொழிலாளர்களும் அவர்களது தலைவர்களும் திருச்சியில் கைது செய்யப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 20—2—1979 அன்று
திருச்சியில் தொழிலாளர்கள் மீதும் தொழிலாளர்கள் தலைவர்கள்
மீதும் தாக்குதல், லத்தி சார்ஜ் செய்து கைது செய்து இருக்கிற
சம்பவம் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை

ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் செ. சிவசாமி, கூத்தகுடி ச. சண்முகம், அ. ரகுமான்கான், சொ அழகர்சாமி, மு. அம்பிகாபதி, பி. உத்திராபதி, ரா. உமாநாத், கு. ரமணி, சி. கோவிந்தராஜன், வி.கே. கோதண்டராமன், என். வரதராசன், ஏ. ஆர். மாரிமுத்து, ஓ. சுப்பிரமணியம், ஜே. ஜேம்ஸ், கே, கந்தசாமி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. சிவசாமி.

திரு. செ. சிவசாமி: பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, சிம்கோ தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக திருச்சியிலே கடுமையான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அந்தச் சம்பவங்கள் உடனடியாக சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப் படவேண்டும் என்ற நோக்கத்தோடு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டது. அதை எடுத்துக் கொள்வதிலேயே ஒரு நாள் தள்ளிப்போய்விட்டது. இன்றைக்குத்தான் அதை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன்.

அங்கே ஆயிரக் கணக்கில் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜானகிராமன், சந்திரன், போன்றவர்களும் ஜானகிராமச்சந்திரன் என்ற பெண்மணி உட்பட. மேலும் நூறு பெண்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் திராவிட முன்னேற்றக்கழக சங்கச் செயலாளர் கைது செய்யப்பட்டிருக்கிறார். சி.பி. ஐ. கட்சியைச் சேர்ந்த சக்ரபாணி, ராஜகோபால் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜனதாக் கட்சியைச் சேர்ந்த வேலுசாமி எஸ்பவர் கைது சேய்யப்பட்டிருக்கிறார். மாதர் அணியைச் சேர்ந்த ஜெயலஷ்மி என்பவர் கைது செய்யப்பட்டிருககிறார். அதுமட்டுமல்ல, அங்கே காட்டுமிராண்டித்தனமான முறையிலே போலீசாரால் தடியடி பிரயோகம் நடத்தப்பட்டிருக்கிறது. சர்வ கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே அடக்கு முறை கையாளப்பட்டிருக்சிறது. இதத் காரணமாக இந்தச் சபையை ஒத்திவைத்து இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க வேண்டும் என்று எங்களுடைய கட்சியின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவரவர்களே, கடந்த 107 நாட்களாக திருச்சியிலே இருக்கக்கூடிய சிம்கோ மீட்டர் கம்பெனியைச் சேர்ந்த 1,400 பேர்கள் அமைதியான முறையில் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். ஆனால், நியாயமான கோரிக்கைகளுக்காக போராடி வருகின்ற அந்தந் தொழிலாளர்களின் மீது தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டு அடக்கு முறை கையாளப்பட்டு ஆயிரக்

கணக்கான பேரை இந்த அரசு கைது செய்திருக்கிறது. கட்சி வேறுபாடின்றி எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் அங்கே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருவதன் காரணம், தொழிலாளர்களுடைய பிரச்சினையில் இந்த அரசாங்கத்தின் அணுகுமுறை தவறான வகையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காண்பிப்பதற்காகத் தான். தொழிலாளர்கள் முக்கியமான கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சீக்கிரமாக முடிக்க வேண்டும். திரு. சிவசாமி அவர்கள் சுருக்கமாகவும், அழகாகவும் சொன்னார்கள். ஆகவே, நீங்கள் நான் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுப்பதற்கு முன் ஒத்திவைக்கப் பட்டதைப் போல பேசக் கூடாது. ஏன் ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்பதை மட்டும் சொல்ல வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் ; தலைவரவர்களே. அங்கே 1,500 பேர்கள் வேலை செய்கிறார்கள். 400 பேர் அன்றாடக் கூலிக்காக பணியாற்றி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் லத்தி சார்ஜ் நடத்தப்பட்டது போன்றவற்றை மட்டும் பேசுங்கள், அங்குள்ள பிரச்சினைகள் குறித்தெல்லாம் இங்கே இப்போது பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே. தொழிலாளர்கள் தங்களது நியாயமான கோரிக்கைகளுக்காகப் பேராடியிருக்கிறார்கள். இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தத் தொழிலாளர்களுடன் பேசுவதற்கு மறுக்கிறார்கள் மேலும் தொழிலாளர்களுக்கு விரோதமான வகையில் 12(3) செட்டில் மென்ட் செய்திருக்கிறார்கள். இதன் காரணமாகத் தான் கிளர்ச்சி நடந்து இருக்கிறது. மேலும் இது போன்ற கிளர்ச்சிகள் டால்மியாபுரம், சவுரிமலை போன்ற இடங்களில் நடந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும். நீங்கள் பேச ஆரம்பித்தால் முடிப்பதே இல்லை. ஆகவே நான் கவனமாக இருக்க வேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தொழிலாளர்கள் மீது அடக்கு முறை கையாளப்பட்டிருக்கிறது. ஆகவே இது ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். ஆகவே இது குறித்து

[திரு. அ. ரகுமான்கான்] [1979 பிப்ரவரி 22

விவாதிப்பதற்கு இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வேண்டுகிறேன்.

[முற்பகல் 10–30]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த விஷயத்தை அரசாங்கம் சீரியஸாக எடுக்கும் என்று நினைக்கிறேன். நம்புகிறேன் என்று சொல்லவில்லை, நினைக்கிறேன், நேற்று நான் போய் இருந்து ஜனங்களில் ரெப்ரஸெண்டேட்டிவ்ஸை கலந்து பேசி வந்திருக்கிறேன். பந்த் நடந்தது. அனைத்துக் கட்சிகளின் வேண்டுகோள்படி. கடை வீதிகளில் ஆண்கள் நோட்டீஸ் போட்டு மனம் உணர்ந்து செய்திருக்கிறார்கள். அதேமாதிரி டிரான்ஸ்போர்ட்டும் செய்தது. It was a peaceful affair.

ஒரு ' ஸ்ட்ரேஞ்சு திங் '.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதனால் பேரவையின் அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று சொல்ல வேண்டுமே தவிர நோட்டீஸ் அடித்தது, கடைகளை அடைத்தது போன்ற விவரங்களுக்குள் செல்வது கூடாது. அது நடந்து விட்டது.

திரு. ரா. உமாநாத் : போலீஸ் ஆக்ஷன் பற்றிச் சொல்கிறேன். ரூட் மார்ச் நடத்தியிருக்கிறார்கள். (குறுக்கீடு) என்ன தலைபோகிற விஷயமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைபோகிற விஷயமா என்று சொல்லக் கூடாது. பேரவைத் தலைவர் சொல்கிற முறையை ஏற்று நடக்க வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : நான் உங்களைப் பார்த்துச் சொல்லவில்லை, எங்களுக்குள்ளே கன்சல்டேஷன்ஸ் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

நாளைக்கு பந்த் என்றால் இன்று 500 ஆர்ம்ட் போலீஸ் ஸிட்டி வழி பூராவும் ரூட் மார்ச் நடத்த சிவில்வாரா திருச்சியில் நடக்கிறது. டிக்டேட்டர்ஷிப்பில் நடப்பது போல் நடந்திருக்கிற ரூட் மார்ச் நடத்தியிருக்கிறார்கள். மக்களை டெரரைஸ் செய்து பந்த்தை க்ரஷ் செய்ய நினைத்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலும் பந்த் நடந்திருக்கிறது. அப்போது என்ன ரூட் மார்ச்சா செய்தார்கள் ?

1979 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எக்ஸ்யூஸ் மீ. ஒத்திவைப்பு தீர்மானத்தை அனுமதித்ததுபோல் பேச வேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : மூன்று லத்திசார்ஜ் நடத்தப்பட்டது. நான் போலீஸ் ஆக்ஷன் பற்றிப் பேசுகிறேன். பீஸ்புள் பிக்கட்டிங்க் நடத்தப் போனவர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கு 144 தடை கிடையாது. People have been terrorised. அந்த மாதிரி நடத்தப்பட்டிருக்கிறது. நாய்களை அடிக்கிற மாதிரி போலீஸ் அடித்திருக்கிறது. கற்களை வீசினார்கள் என்று சொல்லப் போகிறார்கள். 10 மணிக்கு கெய்ட்டி தியேட்டரை விட்டு வெளியே வந்தவர்களை அடி அடி என்று நாயை அடிப்பதுபோல் அடித்தார்கள். இன்னொன்றும் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். இன்னின்ன காரணங்களுக்காக அவையின் அலுவல்களை ஒத்தி வையுங்கள் என்று இரண்டு மூன்று நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

திரு. ரா. உமாநாத் : நான் போலீஸ் ஆக்ஷன் பற்றிப் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; போலீஸ் ஆக்ஷன் பற்றி எவ்வளவு நிமிடங்கள் வேண்டுமானாலும் பேச முடியும். சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. ரா. உமாநாத் : நீங்கள் தலையிடாமல் இருந்திருந்தால் இதற்குள் முடித்திருப்பேன். ஒன்றரை நிமிடங்கள்தான் ஆகியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கு டென்ஷன் இருக்கிறது, ஆகவே ஒத்திவையுங்கள் என்று சொல்லுங்கள்.

திரு. ரா. உமாநாத் : அதுதான் தீர்மானத்தில் இருக்கிறதே, அதைப் பற்றி ஏன் சொல்ல வேண்டும். ஒரு ஆள் 100 ரௌடிகளை...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதித்த பிறகு பேச வேண்டியதை இப்போது சொன்னால் எப்படி ?

திரு. ரா. உமாநாத் : ஒரு ஆள் நூறு ரௌடிகளை வைத்துக் கொண்டு அப்பாவி ஜனங்களை விரட்டி தன் வீட்டிற்குள்ளே வைத்து அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். ஆட்டின் பீடி முதலாளி ' லா ' வை தன் கையில் எடுத்துக் கொண்டு அதற்கு

போலீஸ் ப்ரொட்டக்ஷன் கொடுக்கப்பட்டது. அவர் வெண் படையைச் சேர்ந்தவர், இந்தமாதிரி அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன என்றுதான் சொல்கிறேன். கடைசியாக நான் சொல்ல விரும்புவது, இந்த டிஸ்பூட்டைப் பொறுத்தவரைக்கும் 11-ம் தேதி நான் பேசிவிட்டேன். அதை நான் இப்போது ரிப்பீட் பண்ண விரும்பவில்லை. தொழிலாளர் அமைச்சர் அவர்களைப் பார்த்து முதலமைச்சர் அவர்கள் இதை எப்படியாவது செட்டில்மெண்ட் செய்து வையுங்கள் என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு என்ன நடந்தது என்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் இப்படித்தான் விவரங்களுக்குள் போய் பேசுவதா? திரு. உமாநாத் போன்றவர்கள் இதற்கு வழி காட்ட வேண்டும். தயவு செய்து தீர்மானத்தை யொட்டி பேசுங்கள்.

திரு. ரா. உமாநாத் : நான் தீர்மானத்தை யொட்டித்தான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியென்றால் இன்னின்ன காரணங்களுக்காக தீர்மானத்தை விவாதிப்பதற்காக நடவடிக்கையை ஒத்தி வையுங்கள் என்று மட்டும் சொன்னால் போதும்.

திரு. ரா. உமாநாத் : அதைத்தான் நானும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய நேரத்தில் பாதி நேரத்தை நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், என்ன செய்வது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலாவது இதற்கு ஒரு வழியை காட்டுங்கள். நேரம் போவதைப்பற்றி கவலை இல்லை.

திரு. ரா. உமாநாத் : கொடுத்திருக்கின்ற தீர்மானத்தில் இன்னின்ன காரணங்களுக்காக ஒத்தி வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது, அவற்றை சொல்லி அட்மிட் பண்ண வேண்டும் என்று கேட்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது.

(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும். மாண்புமிகு உமாநாத் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு தாங்கள் அனுமதி அளித்துள்ளது போல இவ்வளவு நேரம் அடுக்காக பேசிக் கொண்டே போகிறார். மேலும் தனது நேரத்தை சபாநாயகர் அவர்கள் பாதி எடுத்துக் கொண்டார்கள்

என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து கொண்டு போனால், இதே முறையை மற்றவர்களும் கடைபிடிக்க ஆரம்பிப்பார்கள். அப்படி ஆரம்பித்தால் பிரச்சனைக்கே முடிவு வராது. என்ன காரணத்திற்காக அவை நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு, இந்தத் தீர்மானத்தை அவை அனுமதிப்பதாக இருந்தால், அதற்குமேல் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இதைப்பற்றி விரிவாகப் பேசுவதற்கு சந்தர்ப்பம் இருக்கும். அப்படியிருக்கும்போது இதுதான் சந்தர்ப்பம், இதை இழந்துவிடக் கூடாது என்று பேசிக்கொண்டிருப்பது, அவையின் மரபை.... (குறுக்கீடு) அவையின் மரபை மீறுவதாக நான் கூற முன்வரவில்லை. அவையின் மரபை மீறுவது போன்ற தோற்றத்தை உருவாக்கினால், அதற்காக என்னிடம் கோபப்படக் கூடாது.

திரு. ரா. உமாநாத் : யாரிடமும் நான் கோபப்படுவதில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் இப்போது எந்தப் பிரச்சினையையும் எழுப்பவேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : நான் தொடர்ந்து சொல்ல விரும்புகிறேன். இதில் ஃபாக்ட் என்ன வென்றால், இதில் பேச்சுவார்த்தை நடத்தும்போது, முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். பின்னால் என்ன நடந்தது என்றால்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு நேரம் போனாலும் பரவாய் இல்லை. முதலாவது எனக்கு தெரிந்து கொள்ள வேண்டியது, ஒத்திவைப்புத் திர்மானத்தில் எப்படி பேச வேண்டும் என்பதை நாம் முடிவு செய்யவேண்டும். அதற்கு உமாநாத் போன்றவர்கள் வழிகாட்ட வேண்டும். அப்படியில்லாமல் விவரமாக பேசிக்கொண்டிருப்பது சரியல்ல..

திரு. ரா. உமாநாத் : அப்படியென்றால் இதில் பேசக் கூடாது என்று சொல்லுங்கள். இதில் லத்தி சார்ஜ் நடந்திருக்கிறது. போலீஸ் தாக்கியிருக்கிறது......செட்டில்மென்ட் நடத்த வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்ன பிறகு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செட்டில்மென்ட் நடந்ததைப்பற்றியெல்லாம் பேசக்கூடாது, சுருக்கமாகப் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. ரா. உமாநாத் : அங்கு லத்தி சார்ஜ் நடந்தது மட்டும் அல்ல, அந்த டிஸ்பூட்டையே உடைக்கின்ற முறையில், அங்குள்ள யூனியனை க்ரஷ் செய்வதற்காகவும், அங்கு ஏ.டி.எம்.கே. யூனியனை ஏற்படுத்துவதற்காகவும் பெருமாளை அனுப்பி, 17-ம் தேதி இதுபற்றி பேச்சு நடந்திருக்கிறது. இதன் காரணமாக தொழிலாளர்கள் தங்கள் நம்பிக்கையை இழந்துவிட்டிருக்கிறார்கள். விவகாரங்கள் சீரியஸாக இருக்கிறது. இன்னும் பதட்ட நிலை இருந்து கொண்டிருக்கிறது.......Crushing of the Bandh, Crushing of the Union நடந்திருக்கிறது. 50 சதமானம் பெர்மனன்ட், 50 சதமானம் முதலமைச்சர் முடிவு செய்த பின்னால் என்று முடிவு செய்யப்பட்டது. இப்போது 50 ரூபாய் என்றும் ஆறு மாதம் கழித்து 52 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. இப்படியெல்லாம் ஒரு சதி நடக்கிறது. பந்தை க்ரஷ் செய்து, புது யூனியனை ஏற்படுத்தி விடவேண்டும் என்ற முயற்சி நடைபெறுகிறது. இப்படிப்பட்ட விவரங்களை எல்லாம் விவாதிப்பதற்காக சபையின் அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே,........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். இந்த விஷயமும் முடிந்துவிட்டது.

திரு. எம். ஏ. லத்தீப் : முடியவில்லை. நீங்கள் சில அப்ஸர்வேஷன் சொல்லியிருக்கிறீர்கள். அதைப்பற்றி சொல்வதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. I have the right to express my opinion. I know that everything is under the control and discretion of the Speaker. That is implied.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : லத்தீப் அவர்களைப் போல் ஒவ்வொருவரும் கேட்க ஆரம்பித்து விட்டால் சபை அலுவல்கள் எப்படி நடக்கும்? தயவு செய்து உட்காருங்கள். நான் தங்களை அனுமதிக்க முடியாது.

[முற்பகல் 10–40]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தவர்கள் ஒன்று இந்த அவையை ஒத்திவைக்க வேண்டுமென்று பேசியானதற்குப் பிறகு வேறு ஏதாவது பேசுவதுதான் நியாயம். எனவே, லத்தீப் அவர்கள் பேச விரும்பினால் அவர்கள் பேசுவதைத் தடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) தீர்மானம் கொடுத்தவர்களைக் கேட்டுக் கடைசியில் அவர்கள் லத்தீப் அவர்களைப் பேசுவதற்கு அனுமதி தரமுடியும் என்று நான் சொல்ல முடியாது. அது சபாநாயகர் அவர்களுடைய உரிமை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, 'சிம்கோ மீட்டர்ஸ்' பிரச்சினையை குறித்தவரையிலும், இந்த 'சிம்கோ' தொழிற்சாலையில் ஐ.என்.டி.யு.சி நீண்ட நாட்களாக இருக்கக்கூடிய சங்கம். இது ரிகக்னைஸ்ட் யூனியன். இந்த ரிகக்னைஸ்ட் யூனியன் இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்ட் 12 (3) செக்ஷன்படி ஒரு அக்ரிமெண்ட் போட்டு முடிந்திருக்கிறது. இப்போது சி.ஐ.டி.யு. சங்கம் ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி ஆரம்பித்த சங்கத்தார் இந்த 12 (3) அக்ரிமெண்டை மீறி புதிய அக்ரிமெண்ட் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது செய்யப்பட்டுள்ள இந்த 12 (3) அக்ரிமெண்ட் அரசின் முத்தரப்பிலே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும். அந்த ஒப்பந்தத்தை மாற்றி, ஐ.என்.டி.யு.சி. சங்கத்தை உடைத்து, தங்கள் சங்கத்தை பலப்படுத்த முயற்சி செய்து கொண்டு வருகிறார்கள். இதேமாதிரி முயற்சியில் அரசு ஈடுபட்டால், எத்தனையோ இண்டஸ்ட்ரீஸ்கள் 12 (3) அக்ரிமெண்டால் பாதிக்கப்படும். தமிழ்நாட்டிலே எங்கு பார்த்தாலும் இப்படிப்பட்ட ஒரு நிலைமை வரும். எனவே, இந்த அக்ரிமெண்டுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடாதென்றும், இந்த அக்ரிமெண்டுக்கு அரசு ஆதரவு அளிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி, இதைப்பற்றி மேலும் விவாதிக்க இந்தச் சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ். (திரு. வி. கே. கோதண்டராமன் குறுக்கீடு). தயவுசெய்து உட்காருங்கள்.

உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திரு. லத்தீப் அவர்களுக்குச் சொன்னதைதான் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களுக்கும் சொல்கிறேன். அவர்கள் இதை மீறிப் பேசினால் ரிகார்டு ஆகாது.

[1979 பிப்ரவரி 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது பாயிண்ட் ஆப் ஆர்டர் கொடுத்தாக வேண்டுமென்று விதிகளைக் காட்டுங்கள்.

திரு. ரா. உமாநாத : விதிகள் இருக்கின்றன. பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்பதற்கு விதிகளில் இடம் இருக்கிறது. அதை அக்செப்ட் பண்ணுவது அல்லது பண்ணாதது உங்களைப் பொறுத்தது. நாங்கள் எல்லா பார்ட்டிகளும் கலந்து கொண்டது என்று சொல்லும்போது அது அவுட் ஆப் ஆர்டர் என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. போலீஸ் ஆக்ஷனைப் பற்றி விரிவாகப் பேசும் போது மட்டுந்தான் பேசக்கூடாது என்று சொன்னேன். கட்சிகளைப் பற்றிச் சொல்லும்போது ஒன்றும் சொல்லவில்லை.

திரு. ரா. உமாநாத் : நீங்கள் அப்படி ரெக்கார்ட் பண்ணினீர்கள். அதைத் திசை திருப்ப வேண்டிய நிலைமை தேவை இல்லை. It is out of context நீங்கள் கொடுத்த ரூலிங்கையே மீறி அமைச்சர் அவர்கள் எந்தெந்த பார்ட்டிஸ் என்று பேசியிருக்கிறார்கள். நான் அதைப் பற்றிச் சொல்லும்போது அது தீர்மானத்திற்கு உட்பட்டது அல்ல என்று சொன்னீர்கள். You said that it is out of order.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

THE HON. THIRU R. MANOHARAN : Wait Mr. James. I shall finish my speech.

திரு. ஜே. ஜேம்ஸ் : தாங்கள் ஒன்று சொன்னீர்கள்.

Under rules, point of order can be raised by any Member. The point of order must be allowed.

1979 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புஸ்க்ரிஷன் என்று டையது.

[முற்பகல் 10–50].

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1978,ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் நாளன்று திருச்சி சிம்கோ மீட்டர்ஸ் நிர்வாகத்தினருக்கும் அப்போதைய ஒரே சங்கமான சிம்கோ மீட்டர்ஸ் ஒர்க்கர்ஸ் யூனியனுக்கும் (ஐ. என். டி. யூ. சி.) தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு விகிதம், உற்பத்தி அளவு, பஞ்சப்படி முதலியவை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவ்வொப்பந்தம், 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் வரை அமலில் தொடர்ந்து இருக்கும். இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதற்குப் பிறகு, புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிம்கோ மீட்டர் லேபர் யூனியன் மற்றும் சிம்கோ மீட்டர் ஸ்டாப் யூனியன் (சி. ஐ. டி. யு.) 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16-ம் நாளன்று, ஊதிய உயர்வு, பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி, ஊக்குவிப்பு ஊதியம், போனஸ் ஆகிய கோரிக்கைகளை முன்னிட்டு 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ம் நாள் முதல் வேலை நிறுத்தம் துவங்கப் போவதாக அறிவித்தன. இக்கோரிக்கைகள் திருச்சி தொழிலாளர் துறை அலுவலர் முன்னிலையில் பேச்சு வார்த்தையில் இருக்கும் பொழுது தொழிலாளர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 6-ம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்ற காரணத்தினால் நிர்வாகத்தினர் தொழிற்சாலையை 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12-ம் நாள் முதல் கதவடைப்புச் செய்தனர். தொழிலாளர் துறையின் ஆலோசனைக்கு ஏற்பவும் பெருவாரியான தொழிலாளர்களின் விண்ணப்பத்தை முன்னிட்டும் நிர்வாகத்தினர் 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20-ம் நாள் முதல் கதவடைப்பை நீக்கினார்கள். தற்பொழுது நிறுவனம் பகுதியாக இயங்குவதாகவும், சி. ஐ. டி. யு. தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வதாகவும், மேலும் இத்தொழிலாளர்கள் 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ம் நாள் முதல் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருவதாகவும் அறியப்படுகிறது.

திரு. ரா. உமாநாத் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கை படிக்கும் போது என்ன பாயின்ட் ஆப் ஆர்டர். . .

[1979 பிப்ரவரி 22

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது பாயிண்ட் ஆப் ஆர்டர் கொடுத்தாக வேண்டுமென்று விதிகளைக் காட்டுங்கள்.

<u>திரு. ரா. உமாநாத :</u> விதிகள் இருக்கின்றன. பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்பதற்கு விதிகளில் இடம் இருக்கிறது. அதை அக்செப்ட் பண்ணுவது அல்லது பண்ணாதது உங்களைப் பொறுத்தது. நாங்கள் எல்லா பார்ட்டிகளும் கலந்து கொண்டது என்று சொல்லும்போது அது அவுட் ஆப் ஆர்டர் என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. போலீஸ் ஆக்ஷனைப் பற்றி விரிவாகப் பேசும்போது மட்டுந்தான் பேசக்கூடாது என்று சொன்னேன். கட்சிகளைப் பற்றிச் சொல்லும்போது ஒன்றும் சொல்லவில்லை.

<u>திரு. ரா. உமாநாத் :</u> நீங்கள் அப்படி ரெக்கார்ட் பண்ணினீர்கள். அதைத் திசை திருப்ப வேண்டிய நிலைமை தேவை இல்லை. It is out of context நீங்கள் கொடுத்த ரூலிங்கையே மீறி அமைச்சர் அவர்கள் எந்தெந்த பார்ட்டிஸ் என்று பேசியிருக்கிறார்கள். நான் அதைப் பற்றிச் சொல்லும்போது அது தீர்மானத்திற்கு உட்பட்டது அல்ல என்று சொன்னீர்கள். You said that it is out of order.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> பாயின்ட் ஆப் ஆர்டர்.

THE HON. THIRU R. MANOHARAN : Wait Mr. James. I shall finish my speech.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தாங்கள் ஒன்று சொன்னீர்கள்.

Under rules, point of order can be raised by any Member. The point of order must be allowed.

1979 பிப்ரவரி 22]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> டிஸ்க்ரிஷன் என்னுடையது.

[முற்பகல் 10-50].

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் நாளன்று திருச்சி சிம்கோ மீட்டர்ஸ் நிர்வாகத்தினருக்கும் அப்போதைய ஒரே சங்கமான சிம்கோ மீட்டர்ஸ் ஒர்க்கர்ஸ் யூனியனுக்கும் (ஐ. என். டி. யூ. சி.) தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு விகிதம், உற்பத்தி அளவு, பஞ்சப்படி முதலியவை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவ்வொப்பந்தம், 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் வரை அமலில் தொடர்ந்து இருக்கும். இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதற்குப் பிறகு, புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிம்கோ மீட்டர் மேனர் யூனியன் மற்றும் சிம்கோ மீட்டர் ஸ்டாப் யூனியன் (சி. ஐ. டி. யு.) 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16-ம் நாளன்று, ஊதிய உயர்வு, பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி, ஊக்குவிப்பு ஊதியம், போனஸ் ஆகிய கோரிக்கைகளை முன்னிட்டு 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ம் நாள் முதல் வேலை நிறுத்தம் துவங்கப் போவதாக அறிவித்தன. இக்கோரிக்கைகள் திருச்சி தொழிலாளர் துறை அலுவலர் முன்னிலையில் பேச்சு வார்த்தையில் இருக்கும் பொழுது தொழிலாளர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 6-ம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்ற காரணத்தினால் நிர்வாகத்தினர் தொழிற்சாலையை 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12-ம் நாள் முதல் கதவடைப்புச் செய்தனர். தொழிலாளர் துறையின் ஆலோசனைக்கு ஏற்பவும் பெருவாரியான தொழிலாளர்களின் விண்ணப்பத்தை முன்னிட்டும் நிர்வாகத்தினர் 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20-ம் நாள் முதல் கதவடைப்பை நீக்கினார்கள். தற்பொழுது நிறுவனம் பகுதியாக இயங்குவதாகவும், சி. ஐ. டி. யு. தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வதாகவும், மேலும் இத்தொழிலாளர்கள் 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ம் நாள் முதல் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருவதாகவும் அறியப்படுகிறது.

<u>திரு. ரா. உமாநாத் :</u> பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அறிக்கை படிக்கும்போது என்ன பாயின்ட் ஆப் ஆர்டர். . .

திரு. ரா. உமாநாத் : தாங்கள் என்னை அனுமதிக்க வில்லை.

The Hon: Thiru K: Monoharan : I am not yielding.

Thiru R. Umanath : I am a member of this house. I have got certain rights.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ரைட்டை முறையாகக் காப்பது தான் என்னுடைய வேலை.

திரு. ரா. உமாநாத் : நான் பேசுகிறபோது தாங்கள் அனுமதிக்கவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

THE HON THIRU K. MANOHARAN: am sorry I am not yielding. Till I Complete my statement. I will not set down.

THIRU R.'UMANATH: It is a history of one dispute..

மாண்புமிகு பேரவைத் தலைவா : தயவு செய்து கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

(திரு. ரா. உமாநாத் நின்று கொண்டே இருந்தார்கள்.)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தயவு செய்து தாங்கள் இரண்டு பேர்களும் என்னை அறிக்கை படிக்க அனுமதிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12 (3)-ன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அரசு மறுபடியும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று இருப்பினும் இந்தப் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையின் உயர் மட்ட அளவில் பேசப்பட வேண்டியது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்பியபடி சென்னை தொழிலாளர் இணை ஆணையர் முன்னிலையில் இரு தரப்பினரோடும் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12-ம் தேதியன்று பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 18, 19-ந் தேதி ஆகிய நாட்களில் முதல் அமைச்சர் அவர்கள் முன்னிலையிலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

நிலைமை இவ்வாறு இருக்க, 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20-ந் தேதி அன்று சிம்கோ மீட்டர்ஸ் பேக்டரியில் வேலை நிறுத்தம் செய்துவரும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திரா காங்கிரஸ் கட்சிகளைத் தவிர்த்து மற்ற அனைத்துக் கட்சிகளும் 'பந்த்' ஒன்று ஏற்பாடு செய்தார்கள்.

1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20-ந் தேதி அன்று காலை திருச்சி நகரத்தில் சென்று கொண்டிருந்த பேருந்துகளின் மீது கற்களை வீசியதாகத் தெரிகிறது. ஆறு இடங்களில் இது மாதிரி பேருந்துகளின் மீது கற்கள் வீசப்பட்டிருக்கின்றன. திருச்சி கோட்டை காவல் நிலையம் குற்ற எண். 230/79-ல் இ.பி.கோ. 336, 427 என்ற பிரிவுகளின் கீழும், மற்றும் திருவெறும்பூர் காவல் நிலையம் குற்ற எண். 173/79 இ.பி.கோ. 147, 427 பிரிவுகளின் கீழும், சம்பந்தப்பட்ட பேருந்துகளின் ஓட்டுநர்கள் கொடுத்த முறையீட்டின் பேரில், வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக 48 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். பேருந்துகளுக்கான சேதம் ஏறக்குறைய ரூ. 3,000 என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நகர காவல்சட்டம் செக்ஷன் 30(2) கீழ் அமுலிலிருந்த தடைஉத்திரவை மீறியதற்காக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, திரு. அனந்தன் நம்பியார் உட்பட 124 பேர் கைது செய்யப்பட்டு, 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20-ந் தேதி மாலையே சொந்த ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பெல் நிறுவனம் காவேரி ஸ்டக்சரல்ஸ் போன்ற பெருந் தொழிற்சாலைகள் பாதிக்கப்படாமல் இயங்கின. காந்தி மார்க்கெட்டில் உள்ள எல்லாக் கடைகளும் மற்ற கடைகளும் திறந்திருந்தன. கல்லூரி ஆசிரியர்களின் போராட்டத்தால் கல்லூரிகள் நடக்கவில்லையே தவிர, உயர்நிலைப்பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளும் இயங்கின. புறநகர் பேருந்துகள் பாதிக்கப்படவில்லை. காலையில் குறுகிய கால அளவிற்குப் பிறகு நகரப் பேருந்துகளும் வழக்கம்போல் ஓடின. நிலைமை சீராக இருக்கிறது. எனவே இது குறித்து பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி: ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார் ஸ்டேட்மெண்டில் ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு தன் அறிவிப்பைத் தந்த பிறகு ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் அதைப்பற்றி எந்தப் பிரச்னையையும் எழுப்பக் கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : அமைச்சர் கொடுத்த அறிக்கையில் தொழிலாளர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் சொல்லக் கூடாது. அறிவிப்புக்குப் பிறகு ஒன்றுமே பேசக் கூடாது. அது முறையல்ல, மரபும் அல்ல.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, அரசாங்கத்தரப்பில், நடைபெற்ற சம்பவங்களை ஜஸ்டிஃபை செய்து தான் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காண வாக்குறுதி கொடுக்கப்படவில்லை. தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள் காரணமாக இந்த அவையிலேயிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது என்று சொல்லி, அடையாளப் பூர்வமாக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்).

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, அரசின் பதில் கொஞ்சம் கூட திருப்தியாக இல்லை. நூறு நாட்களுக்கு மேல் பேசப்பட்டு வரக்கூடிய தொழிலாளர் பிரச்னை. முதலமைச்சரவர்கள் பேசி ஒரு கட்டத்தில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்னையில் அவர்கள் தீர்த்து வைக்கப்போவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பதிலில் அதைப்பற்றி ஒன்றும் குறிப்பு இல்லை. இது அரசாங்கத்தின் தொழிலாளர் கொள்கை சம்பந்தப்பட்ட மிகப் பெரிய விஷயம். ஆகவே, நாளைக்காவது அரசாங்கம் இதைப்பற்றி இந்தப் பிரச்னையைத் தீர்க்கப் பதில் சொல்ல............

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எக்ஸ்கியூஸ் மி. நீங்கள் வெளிநடப்புச் செய்வதற்கு முன்னால் பேசிவிடுவது நல்லது. அப்பொழுது வெளிநடப்பு செய்வதற்கு அவசியம் இருக்காது. என்னுடைய அறிக்கையில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன், முதலமைச்சர் கூப்பிட்டுப் பேசி, 12(3) ஒப்பந்தம் இருந்தாலும்கூட, அதை உடைக்க முடியாது என்ற சூழ்நிலை

இருந்தாலும்கூட மனிதாபிமான அடிப்படையில் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமென்று கூறி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வெளிநடப்புசெய்வதற்கு முன்பேயே அவரது கருத்துக்களை உருவாக்கிக் கொண்டிருப்பார்களேயானால் அதை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் போனார்களே என்று இன்றைக்கு நீங்கள் போக வேண்டிய அவசியமில்லை.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அந்தப் பேச்சுவார்த்தைகள் முதலமைச்சரவர்கள் தொடர்ந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் பிரச்னை என்னவென்றால் அதைப்பற்றி அரசாங்கத்தினுடைய பதில் என்ன என்று தெரியாமல் நாங்கள் இந்தப் பிரச்னையை இதோடு நிறுத்திவிடுவது சரியல்ல என்று சொல்லி நாங்கள் இன்றைக்கு அடையாளபூர்வமாக வெளிநடப்புச் செய்கிறோம். முதலமைச்சர் வாக்குறுதியின் அடிப்படையில் இந்தப் பிரச்னை பற்றிய தீர்ப்பை நாளைக்கு அரசாங்கம் வெளியிடுமானால் அதற்குப் பிறகு அரசாங்கத்தின் நடவடிக்கைகளை வைத்து எங்கள் கருத்துக்களைக் கூற முடியும். இன்றைக்கு இந்தப் பிரச்னையைத் தீர்க்க அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். 12(3) செட்டில்மெண்ட் இருந்தாலும்கூட, அந்தப் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென்ற அடிப்படையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அடையாளப் பூர்வமாக வெளிநடப்புச் செய்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் (திரு. ரா. உமாநாத் தவிர) வெளிநடப்புச் செய்தார்கள்].

திரு. ரா. உமாநாத் : என்னவோ சீப் மினிஸ்டர் முன்னால் இருக்கிறது என்று அவை முன்னவரவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்கள் கட்சித் தலைவர் சொல்லிவிட்டார்.

திரு. ரா. உமாநாத் : முன்னவரவர்கள் சொன்னார்கள், அது நடந்து கொண்டிருக்கும்பொழுது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சங்கம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனால்தான்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சங்கரய்யா சொல்வதை ஏற்றுக்கொள்வதா, உமாநாத் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வதா என்று தெரியவில்லை. ஒரு கட்சிக்கு இரண்டு தலைவர்களா பதில் சொல்ல வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : அந்த மாதிரி புளைவட் செய்து காட்ட வேண்டாம். தலைவர் சொன்னதுடன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சங்கரய்யா வெளியே இருக்கிறார்கள்.

[முற்பகல் 11-00]

திரு. ரா. உமாநாத் : சங்கரய்யா அங்கே இருக்கிறார், எனக்குத் தெரியும்.................

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஒரு நிமிடம், நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் போங்கள்............

திரு ரா. உமாநாத் : நீங்கள் தப்பாகச் சொல்வதால், உண்மைக்கு மாறாகச் சொல்வதால், அதை 'கரெக்ட்' செய்துவிட்டு நான் வெளிநடப்புச் செய்யப் போகிறேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தலைவர் சொல்லியாயிற்றே...............

திரு. ரா. உமாநாத் : தலைவர் சொன்னதுடன், அமைச்சர் தப்பாகச் சொன்னதையும் கரெக்ட் பண்ணி, அந்த ஃபாக்டையும் சொல்லி விட்டு வெளிநடப்புச் செய்யப் போகிறேன். அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறபொழுது, அந்த அரசாங்கத்தினுடைய கட்சி யூனியனை ஃபார்ம் செய்ய அங்கே முயற்சி..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசியதெல்லாம் நீக்க வேண்டியிருக்கும்.. பேரவைத் தலைவர் சொல்வதைக் கேளுங்கள்.

THIRU. R. UMANATH :

He can speak anything. Can't I speak the truth?

நீக்க வேண்டுமென்றால் நீக்குங்கள். மறுபடியும் சேர்க்க எனக்குத் தெரியும். I will again see that it is recorded.

(திரு ரா. உமாநாத் வெளிநடப்பு செய்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளிநடப்பு செய்யும் பாது கட்சித் தலைவர்தான் விளக்கம் ஏதாவது சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சபை தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக நான் இதைத் தெரிவிக்கிறேன். திரு. உமாநாத் அவர்கள் மிகவும் வருத்தப்பட்டார். இப்படி முதலமைச்சர் நல்லெண்ணத்தோடு அவர்களை எல்லாம் கலந்து பேசி 12(3) செட்டில்மெண்டை உடைக்க முடியாவிட்டாலும், மனிதாபிமான உணர்ச்சியோடு செய்கிறேன். அதற்கேற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது எப்படி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் யூனியனை ஆரம்பிக்கலாம் என்று கேட்டார்கள். எனக்கு அந்த வரலாறும் தெரியாது. அமைக்கப்பட்ட முறையும் தெரியாது. எப்பொழுது நடந்தது என்பதும் தெரியாது. ஆனால், அப்படிப்பட்ட பேச்சு வார்த்தைகளிலே நான் ஈடுபடுவேன் என்று சொல்லும்போது, முதலமைச்சர் சுமுகமாகத் தீர்க்க பேசச் சொல்லிக்கொண்டிருக்கும்போது சில கட்சியினர் பந்த் நடத்தினார்களே அது எந்த வகையில் நியாயம் என்பதை ஜேம்ஸ் போன்றவர்கள் உணர்ந்து—முடிவெடுத்து விட்டார்களானால் நான் குறுக்கே நிற்க முடியாது கொள்ளவேண்டும். இதைத் தான் அழகர்சாமி அவர்கள் கூத்தகுடி சண்முகம் அவர்களோடு பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால் இருக்கிற நிலைமையைச் சொல்கிறேன். அரசாங்கத்தின் நிலைமை மிகத் தெளிவாக இருக்கிறது. நிச்சயமாக முதலமைச்சர் ஈடுபட்டு இதற்கு ஒரு பரிகாரம் காண்பதற்குத் தயாராக இருக்கிறார் என்ற உறுதி நின்றுகொண்டே இருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த உறுதியிலே அவர் பின் வாங்கப் போவதில்லை. இதைத் தெளிவாகத் தெரிவித்த பிறகு மற்ற கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன்.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே கொடுத்த அறிக்கையைப் பார்க்கின்றபொழுது இருக்கிற பிரச்னைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அரசு செய்ததை மீண்டும் ஜஸ்டிபை செய்வதாகத்தான் இருக்கிறது. அங்கே, தொழிலாளர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வகை தேடுகிற முறையில் அந்த அறிக்கை அமைந்திருக்கும் என்று சொன்னால் உண்மையிலே நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அது மட்டுமல்லாமல், அந்தப் பிரதேசத்தில் உள்ள பதட்ட நிலையை அகற்றுவதற்கு இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்றால் உண்மையிலே இல்லை. இந்த அறிக்கையிலேகூட அது சம்பந்தமாக எதுவும் இல்லை.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 பிப்ரவரி 22

அதுமட்டுமல்லாமல், திரு. உமாநாத் கூறியதுபோல், ஒருபக்கம் முதலமைச்சர் பேச்சு வார்த்தை நடத்துகிறோம் என்று சொல்லும் போது, மறுபக்கம் தங்கள் கட்சி யூனியனைத் தாங்க முயற்சி எடுப்பது, Unfair labour practice என்று நான் இங்கே கூறிக்கொண்டு, இந்த அறிக்கை சமாதானம் அளிக்காத முறையில் இருப்பதால், இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.)

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் வன்முறையில் ஈடுபட்டிருப்பது அரசோ, நிர்வாகமோ, அல்ல, தொழிலாளர்கள்தான் வன்முறையிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கூறியது உண்மைக்கு மாறானது மட்டுமல்ல. சிக்கலை மேலும் அதிகமாக்குமே தவிர, குறைக்காது, அத்துடன் இப்பிரச்னையைத் தீர்க்க அரசு தெரிவித்த பதில் எங்களுக்குத் திருப்திகரமாக இல்லை. ஆகவே, எங்கள் கட்சியும் வெளியேறுகிறது.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்.)

[முற்பகல் 11-10]

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> * *

(முஸ்லீம் லீக் உறுப்பினர் திரு. எம். ஏ. லத்தீப் வெளி நடப்புச் செய்தார்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ** **
என்று எல்லாம் கொஞ்ச வேகமாக திரு. லத்தீப் பேசினார். ஆகவே, அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று ஆரம்பித்து, சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். பத்திரிகைகளும் அதை வெளியிட வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 பிப்ரவரி 22]

<u>(5) அரசினர் தீர்மானம்</u>

<u>விதி 23-ஐத் தளர்த்தல்</u>

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை '' தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 23-ஐத் தளர்த்தி, இப்பேரவையில் இன்று அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(6) கவன ஈர்ப்புகள்

<u>அரிசன மக்களை ஏமாற்றி வட மாநிலம் அழைத்துச் சென்று கொடுமைபடுத்தி வேலை வாங்கியதாகக் கூறப் பெறுவது குறித்து :</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> சட்டமன்றப் பேரவை விதி 41-ன்கீழ் திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், சேலம் மு. ஆறுமுகம், ஆகியோர் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

<u>திரு. பெ. சு. திருவேங்கடம் :</u> தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் ஒன்றியம் மேல்வில்வராய நல்லூர் அரிசன மக்கள் 21 பேரை ஏமாற்றி அதிகக் கூலி தருவதாகக் கூறி உத்திரப் பிரதேச மாநிலம், மீர்ஜாப்பூர் மாவட்டம், தில்லா என்னுமிடத்திற்கு அழைத்துச் சென்று இரண்டு மாத காலம் ஸ்ரீகன்னா கம்பெனியில் வேலை கொடுமையான முறையில் வாங்கப்பட்டு சிலர் கொடுமைகள் தாங்க முடியாமல் இறந்துவிட்டும், கூலியும் கொடுக்கப்படாமல் ஏமாற்றப்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:</u> தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த 21 அரிசனங்கள் உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள கான்ராக்டருக்கு விற்பனை செய்யப்பட்டு இருப்பதாக, 1979-ஆம் ஆண்டு சனவரி திங்களில் நடந்த வட ஆற்காடு மாவட்ட வளர்ச்சிக் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்தப் புகாரை ஒட்டி வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்தார்.

[திரு. பெ. செளந்தரபாண்டியன்] [1979 பிப்ரவரி 22

2. திரு. மரியசாமி நாயுடு என்பவருடைய சகோதரர் திரு. ராஜு நாயுடு உத்திரப் பிரதேச மாநிலத்தில், மீர்சாபூர் மாவட்டத்தில், தல்லா என்ற இடத்தில் உள்ளஷ்கன்னா என்ற நிறுவனத்தில் மேற்பார்வையாளராக (மேஸ்திரி) வேலை செய்கிறார். மேற்சொன்ன ராஜு நாயுடு நம்பியந்தல் கிராமத்திற்கு சில மாதங்களுக்குமுன் வந்திருந்தார். வில்வராயநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த 21 அரிசனங்களும் நம்பியந்தல் கிராமத்தைச் சேர்ந்த 20 இந்து மக்களையும் அவர் ‘தல்லா’ என்ற இடத்திற்கு வேலைக்காக அழைத்துச் சென்றார். அவர்கள் கூலி வேலை செய்வதற்கு வருவதாகத் தாங்களே கூறியதாகச் சொல்லப்படுகிறது. திரு மரியசாமி என்பவர் அவருடன் தல்லாவிற்கு அழைத்துச் சென்று அங்கு விட்டு விட்டு வந்து விட்டார். காவல் துறையின் புலனாய்விலிருந்து அவர்களுக்கு அங்கு கூலி குறைவாகக் கொடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் கொடுமைக்கு உட்படுத்தப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது. காவல் துறையினரின் அறிவுரைப்படி, திரு. மரியசாமி நாயுடு 29—12—78 அன்று ‘‘தல்லா’’ விற்குச் சென்று 13—1—79 அன்று மேற்சொன்ன அரிசன மக்கள் இருவரைத் தவிர மற்ற எல்லோரையும் கிராமத்திற்குத் திரும்ப அழைத்து வந்து விட்டார். ஒருவர் மட்டுமே தல்லாவிலேயே உடல் நலிவுற்று மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு அங்கு இறந்து விட்டார். மற்றொருவர் இன்னும் அவருடைய சொந்த கிராமத்திற்குத் திரும்பவில்லை.

3. விசாரணையிலிருந்து தல்லாவிற்கு அழைத்துச் சென்று விட்ட அரிசன மக்களுக்கு முன்பணம் கொடுக்கப்பட்டும், அங்கு அவர்கள் தங்குவதற்கு சிறு கூடாரங்களும், ஆடைகளும் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அவர்கள் கிராமத்திலிருந்து தல்லாவிற்குப் போகவும் அங்கேயிருந்து திரும்ப கிராமத்திற்கு வந்ததற்கும் ஆன ரயில் கட்டணத்தையும் மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனமே ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. மிகுந்த குளிரினால் அந்தத் தொழிலாளர்கள் தல்லாவில் சரியாக வேலை செய்ய முடியவில்லை என்றும் அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

4. இது விவரம் பற்றி 3—2—79 அன்று நடந்த வட ஆற்காடு மாவட்ட வளர்ச்சிக்குழு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. இதுபற்றி மேலும் தீவிர நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்றும் இத்தவறுக்கு உடந்தையானவர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டதால் மாவட்ட ஆட்சியர், வருவாய்த்துறை கோட்டாட்சியரை தீவிர விசாரணை நடத்தும்படி பணித்துள்ளார். அவரது அறிக்கை பெற்றபின் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

1979 பிப்ரவரி 22]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களை திருப்பதிக்கு அருகிலேதான் வேலை இருக்கிறது என்று சொல்லி அழைத்துச் சென்றார்கள். அதற்கு மாறாக 21 அரிசனங்களை உத்தரப் பிரதேசத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அவர்களை அங்கு அழைத்துச் சென்றதிலிருந்து, தகவல் வந்து, புகார் சொல்லி, அவர்களைத் திருப்பி அழைத்து வந்தது வரையில் 55 நாட்கள் ஆகியிருக்கிறது. ஆனால் 40 ரூபாய்தான் கூலி கொடுக்கப்பட்டிருக்கிறது. மொத்த நாட்களுக்கும் கூலி கொடுக்கப்படவில்லை. சொன்னதற்கு மாறாக அழைத்துச் சென்றதால் பிச்சாண்டி என்பவர் வேலை செய்ய மறுத்து, ஊருக்குத் திரும்ப முயற்சி செய்ததால், அவர் அங்கே கடுமையாக அடிக்கப்பட்டு, கொடுமைப் படுத்தப்பட்டதால் இறந்திருக்கிறார். அவர் இறந்ததற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு 55 நாட்களுக்கு அனைவருக்கும் கூலி கொடுக்கப்பட வேண்டும். இறந்து விட்ட பிச்சாண்டி குடும்பத்திற்குக் கம்பெனியிலிருந்து அல்லது அரசாங்கத்திலிருந்து ஈட்டுத் தொகை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்— தலைமை]

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய புகாரை வைத்துக் கொண்டுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட கம்பெனிக்கும் அழைத்துச் சென்றவர்களுக்கும் தேவையான அறிவுரைகளைச் சொல்லி, அவர்களைத் திருப்பி அழைத்துவர அவருடைய அலுவலகத்திலுள்ள ஒரு அலுவலரை நியமித்திருக்கிறார். அவர் அந்த இடத்திற்குச் சென்று, எல்லா விவரங்களையும் விசாரித்து அறிக்கை தந்த பிறகு யார், யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவர்கள்மீது எல்லாம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். கூலி பாக்கி இருந்தால் அதை வாங்கித்தர தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அமைச்சரவர்கள் விளக்கம் அளிக்கும்போது இன்னொரு தகவலையும் தந்தார்கள். நம்பியந்தல் கிராமத்திற்கு அரிசனங்கள் அழைத்துச்செல்லப்பட்டார்கள். கண்ணம்மாள் என்ற அரிசன பெண் கடுமையாகத் தாக்கப்பட்டு இறந்திருக்கிறார். வேறு இருவரும் இறந்திருக்கிறார்கள். இறந்த குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் மிகவும் ஏழைகள். ஆகையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு உடனடியாக ஏதாவது நிவாரண உதவி செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> தலைவரவர்களே, யார், யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், எத்தனை பேர் இறந்திருக்கிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் அரசுக்குத் தெரிந்த பிறகு யார் யாருக்கு பரிகாரம் தரவேண்டுமோ அவர்களுக்கு நிச்சயமாக பரிகாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) <u>மருத்துவப் பணியில் தற்காலிக உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்து.</u>

<u>திரு. க. சுப்பு:</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ் நாடு மருத்துவப் பணியில் தற்காலிக உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இதுவரை பின்பற்றப்பட்டு வந்த நடைமுறை விதிகளிலிருந்து விலகி, பணி மூப்பு நிலை பற்றிய நடைமுறைகளைப் புறக்கணித்து விட்டதால் ஏற்பட்டுள்ள அதிருப்தியால் நேர்ந்துள்ள பதட்ட நிலை'' குறித்த அவசரப் பொது முக்கியததுவம் வாய்ந்த நிகழ்வினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:</u> தலைவரவர்களே :

எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் ஹவுஸ் சர்ஜன்ஸ் பயிற்சி முடித்த பின்னர், இந்திய மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்து கொள்கிறார்கள். இவர்களுள், தமிழ்நாடு மருத்துவப்பணியில் தற்காலிகப் பணி வேண்டுவோர், மருத்துவப் பணியாளர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநருக்கு விண்ணப்பித்து வந்தனர். அவர்களின் விண்ணப்பங்கள் வந்த தேதி வாரியாக இயக்குநரால் பதிவு செய்யப்பட்டு வந்தன.

2. இம்மாதிரி வரும் மனுக்களை, அவர்கள் எம்.பி.பி.எஸ்ஸில் தேர்ச்சி பெற்ற ஆண்டை அடிப்படையாக வைத்து பதிவு செய்யப்பட்டது. பின்னர், யார் அதிக சதவீத மதிப்பெண்கள் பெற்றார்களோ, அவர்களை முதலிலும், அதற்குக் குறைந்து மதிப்பெண்கள் பெற்றவர்களை அதற்குக் அடுத்தபடியாகவும் வைத்து மதிப்பெண்களின் அடிப்படையில் மனுக்கள் வரிசைப் படுத்தப்பட்டன. உதவி மருத்துவர் (Assistant Surgeons) பதவிகள் காலியாகும்போது அந்தப் பட்டியலிலிருந்து தற்காலிக நியமனங்கள் செய்யப்பட்டன. ஆனால், பெரும்பாலானவர்கள், தாங்கள் விரும்புகின்ற இடங்களில் பதவி கிடைக்காததனாலும்,

அல்லது உடனடியாக வேலையில் சேரும் ஆர்வமும், சூழ்நிலையும் இல்லாததாலும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கப்பட்ட இடங்களில், போய்ச் சேரவில்லை.

1978-ஆம் ஆண்டில் மட்டும் இம்மாதிரி தற்காலிக நியமனம் செய்யப்பட்ட மொத்த உதவி மருத்துவர்கள் (Assistant Surgeons) 346. இவர்களில் 160 டாக்டர்கள் மட்டுமே வேலையில் சேர்ந்தார்கள். மற்றையோர் வேலையில் சேரவில்லை.

3. இம்மாதிரி பதவியில் நியமிக்கப்பட்ட டாக்டர்களில் பெரும்பாலோர் வேலையில் சேராத காரணத்தினால், காலதாமதம் ஏற்படுவது மட்டுமல்லாமல், பல இடங்களில், குறிப்பாக ஆரம்ப சுகாதார நிலையங்கள், தொழுநோய், காசநோய் மருத்துவ மனைகள் ஆகியவைகளில் தொடர்ந்தாற்போல் டாக்டர்கள் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. கிராமப்புற மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இல்லை என்ற குறைபாடுகள் ஒரு புறமும் வேலை கொடுத்தால் போதும் நாங்கள் பதவியில் சேரத் தயார் என்று கூறும் படித்த மருத்துவ பட்டதாரிகளின் கோரிக்கை ஒரு புறமும் ஆக ஒன்றுக்கொன்று முரண்பாடான சூழ்நிலை நிலவி வருகிறது. கிராமப்புறத்திலுள்ள மருத்துவ நிலையங்களில் டாக்டர்கள் பதவியில் சேர்ந்து பணியாற்ற வேண்டிய நிலையை உருவாக்க வேண்டுமானால், ஏற்கனவே இருந்து வந்த முறையை மாற்றியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவேதான், அந்த முறையை மாற்றி பத்திரிகைகளில் விளம்பரம் செய்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அவ்விளம்பரத்தின் படி கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட சம்மதம் உள்ளவர்கள் மட்டுமே, உதவி மருத்துவர் (Assistant Surgeons) வேலைக்கு மனு செய்யலாம் .

(1) ஆரம்ப சுகாதார நிலையம், தொழுநோய் மருத்துவமனைகள், மலைப்பகுதிகளிலுள்ள அல்லது பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளிலுள்ள மருத்துவமனைகள் அல்லது அரசு விரும்புகின்ற வேறு எந்த மருத்துவ மனையிலாவது 3 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும்.

(2) அந்த 3 ஆண்டு காலத்தில் மாற்றம் வேண்டி கோரிக்கை மனுக்கள் அனுப்பக் கூடாது.

(3) மேற்கூறிய நிபந்தனைகள் மீறப்படுமேயானால், அந்த மருத்துவர் அரசுக்கு ரூபாய் 5,000 நஷ்ட ஈடு தருவதாக ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

[திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்] [1979 பிப்ரவரி 22

இந்தச் சூழ்நிலையில்தான் ஏற்கெனவே இருந்து வந்த முறை மாற்றப்பட்டது.

4. தமிழ்நாடு மருத்துவப் பணியில் காலியாக இருந்த 315 பதவிகளுக்கு மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு விண்ணப் பித்த சுமார் 1,500 மருத்துவர்களைத் தேர்ந்தெடுக்க உயர் மட்ட அதிகாரிகள் ஐந்து பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப் பட்டது. அந்தக்குழு கீழ்க்கண்ட நியதிகளைப் பின்பற்றி மருத்துவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதிக பட்சம் வழங்கப்படவேண்டிய மதிப்பெண்கள் .. 200

அதில்:—

(1) கடைசி ஆண்டு எம். பி. பி. எஸ்., தேர்வில் பெற்ற மதிப்பெண்ணின் சதவீதம் (அதாவது ஒரு மாணவர் 65 சதவீதம் பெற்றிருந்தால் அந்த மாண வருக்கு 100க்கு 65 மதிப்பெண்கள் அளிக்கப்பட வேண்டும்) 100

(2) எம். எஸ்., எம். டி. போன்ற மேற்பட்டப்படிப்பு படித்து இருந்தால் மதிப்பெண்கள் 20

(3) மருத்துவப் பட்டப்படிப்பில் சிறப்பாகத் தேறி பதக்கங்கள் போன்றவைகள் பெற்றிருந்தால் அதற்கு மதிப்பெண்கள் 10

(4) விளையாட்டுக்களில் திறமையாக விளங்கியதற்கு சான்றிதழ்கள் இருக்குமானால் அதற்கு மதிப்பெண் கள் 10

(5) என். சி. சி., ஏ. சி. சி., ஸ்கௌட் போன்றவைகளில் பணியாற்றி இருந்தால் அதற்கு மதிப்பெண்கள் 5

(6) சேரிப்பகுதிகள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள், தொழுநோய் போன்ற மருத்துவ சமூகப் பணிகள் செய்திருந்தால் அதற்கு மதிப்பெண்கள் 5

ஆக மொத்தம் 200 மதிப்பெண்களில், 150 மதிப்பெண்கள் மேற் குறிப்பிட்ட வகையில் வழங்கப்பட்டுள்ளது.

1979 பிப்ரவரி 22] [திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்]

மீதமுள்ள 50 மதிப்பெண்களை. 5 பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் நேர்முகத் தேர்வின்போது அதிகபட்சம் எவ்வளவு மதிப்பெண்கள் வழங்கப்படலாம் என வரையறுக்கப் பட்டுள்ளது. அதாவது :—

(1) மருத்துவத் தொழில் அறிவும் தொழில் நாட்டமும் (Professional knowleuge and aptitute) 10

(2) தனிமனிதச் சிறப்பியல்புகளும், தோற்றமும் (Personality and bearing) 10

(3) விழிப்புணர்வு (Mental alertness .. 10

(4) கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டு தெரிவிக்கும் ஆற்றல் (Capacity to express and convey the ideas clearly) 10

(5) உணர்வாற்றலும், பொது அறிவும் (Common sense and General knowledge) 10

மொத்தம் .. 50

ஆகவே, திட்டவட்டமாக வரன்முறைகளும், விதிகளும் வகுக் கப்பட்டுள்ளதால், தேர்வுக்குழு தவறு இழைப்பதற்கோ அல்லது வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டுவதற்கோ இயலாது. மாற றப்பட்ட இந்தப் புதியமுறை தவறு இழைப்பதற்கும், வேண்டி யவர்களுக்கு சலுகை காட்டவும் வழிவகுத்து விடும் என்று அஞ்சுவதற்கு எந்தக் காரணமும் கிடையாது.

[முற்பகல் 11.20]

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தற்காலிகமாக மருத்துவர்களை நியமனம் செய்கின்ற பிரச்சனை இது. நிரந்தரமாக அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு தேர்வா ணைக்குழு இருக்கிறது. அது சில வரைமுறைகளை வைத்துக் கொண்டிருக்கிறது. தற்காலிக மருத்துவர்களை நியமிப்பதற்கு ஏற்கெனவே இருந்த விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவதுதான் நல்லது. 1974-லே பதிவு செய்தவர்களுக்குக் கிடைக்காமல், 1978-லே பதிவு செய்வதற்குக் கிடைக்கின்றநிலைமை இருக்கிறது. மேலும் பின்னாலே வந்தவர்கள் பணியாற்றிவிடுவதால் ஏற் கெனவே பணியாற்றியவர்கள் என்ற அந்த சர்வீஸும் அவர் களுக்குக் கிடைக்கிறது. அதிகாரிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் விருப்பம் போல் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். நேர் முகத் தேர்விலே 50 மார்க்குகள் கொக்கடுப்படுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே அவர்களுக்கு எப்படித் தோன்றுகிறதோ

அப்படித்தான் மார்க்கு போடுவார்கள். அவர்கள் எப்படி வேண்டுமானாலும் போட்டுக் கொள்வார்கள். ஆகவே, அவரவர்களுக்கு வேண்டியவர்களைத் தேர்ந்து எடுத்துக்கொள்கின்ற நிலை இருக்கின்றது. மேலும் தற்காலிக மருந்துவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கென்று ஊர் ஊராகச் சென்று அலைவது சிறந்ததாக இருக்காது. மேலும் 1974-லே பதிவு செய்தவர்களை விட்டுவிட்டு 1978-லே பதிவு செய்தவர்களைக்கூட தேர்ந்தெடுக்கின்ற நிலை இருக்கின்றது. ஆகவே, புதிய நடைமுறையை விடுத்து ஏற்கெனவே இருந்த நடைமுறையைப் பின்பற்றுவதுதான் சரியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த நடைமுறையின்படி போடப்பட்ட மருத்துவர்கள் அந்தந்த இடங்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொன்னேன். 336 மருத்துவர்கள் அப்படிப்பட்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டு, போய்ச் சேர்ந்தவர்கள் 160 பேர் தான். ஆகவே, கிட்டத்தட்ட 250 இடங்கள் காலியாக இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இப்படி நீண்டகாலமாக மலைப் பகுதியிலும், உள்ளார்ந்த கிராமப் பகுதிகளிலும் உள்ள மருத்துவ மனைகளிலும், ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளிலும் மருத்துவர்கள் இல்லாத நிலையைப் போக்க வேண்டும் என்றுதான் அரசு கருதுகிறது. மருத்துவர்கள் அனுப்பப்பட்டாலும் அவர்கள் போய்ச் சேருவதில்லை என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக இருந்து வந்த காரணத்தால்தான் இந்த மாதிரி வரைமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எந்த இடத்தில் போட்டாலும் போய்ப் பணியாற்றுவதற்குத் தயார் என்று சொல்லிவிட்டு அப்படி அனுப்பப்படும்போது அதிலே தவறுவார்களேயானால் 5 ஆயிரம் ரூபாயை அவர்கள் இழக்க வேண்டும் என்ற நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சில குறிப்பிட்ட கிராமங்களிலே உள்ள மருத்துவமனைகளிலே நீண்டகாலமாக, இப்படி மறுக்கப்படுகின்ற காரணத்தால் மருத்துவர்களே இல்லாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. இப்படிப்பட்ட நிலைமை தமிழ்நாட்டிலே பல இடங்களிலே ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள மக்கள், குறிப்பாக பிரசவத்திற்கு வருகிற தாய்மார்கள் மிகுந்த வேதனைக்குள்ளாகிறார்கள் என்பது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பிறகுதான் குறிப்பாக ஏழை மக்களை பக்கத்திலுள்ள மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல வாகன வசதிகள் இல்லை. எனவே மக்கள் நலனை மனதில் கொண்டு இத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. வரிசைக் கிரமமாக அனுப்பப்பட்டும் அவர்களுக்குப் போய் சேரவில்லை என்பதற்கு சான்றுகள் உள்ளன. அதில் ஒன்றைத்தான் நான் எடுத்துச் சொன்னேன். தவறுகள் நடைபெறாமல் நிச்சயமாகப் பார்த்துக்கொள்ளப்படும். அப்படி தவறு ஏதாவது நடைபெறுமானால் மாண்புமிகு உறுப்பினர்கள்

குறிப்பிட்டுக் காட்டுங்கள், அதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

திரு. க. சுப்பு : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கலாம். 300 இடங்கள்தான் காலி இருக்கிறது என்று சொன்னால் வேலையில்லாமல் ஐயாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். 200 பேர்கள் தான் வந்தார்கள். 150 பேர்கள் வரவில்லை என்றால் அடுத்த லிஸ்ட் இருக்கிறது. போகா விட்டால் நியமனம் இல்லையென்று சொல்லலாம். 300 காலியிடங்கள் என்றால் ஐயாயிரம் பேர்கள் இருக்கிறார்கள் வேலையில்லாமல். ஆகவே, இப்படிச் செய்வதால் விருப்பு வெறுப்புக்கு இடம் கொடுக்க வழி இருக்கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : ஐயாயிரம் பேர்கள் இருக்கிறார்கள வேலையில்லாமல் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதற்காக நன்றி. ஆனால் யார் யார் வேலைக்கு வர வேண்டும் இந்த நிபந்தனைகளோடு என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்தவுடன் அதில் 1,500 பேர்கள்தான் விளம்பரத்தில் கூறியுள்ளதுபோல் வேலை செய்ய, மலைப்பகுதிகளுக்குச் சென்று வேலை செய்ய ஆசைப்பட்டவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979-ம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இம் முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

[1979 பிப்ரவரி 22

(ஆ) TAMIL NADU PAWNBROKERS (AMENDMENT) BILL, 1979.

The Hon. Thiru K. NARAYANASWAMY: Mr. Speaker, Sir, I beg to move for leave to introduce the Tamil Nadu Pawnbrokers (Amendment Bill, 1979.

The motion was put and carried and leave was granted.

The Hon. Thiru K. NARAYANASWAMY: Sir, I introduce the Bill.

Mr. Deputy speaker : The Bill is introduced.

(இ) நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு, 1979-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1979) ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும். '' என்று முன்மொழிகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களை ஒரு தரம் பார்த்துவிட்டு இதை முன் மொழிந்து பேசுகிறேன். காரணம், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பொதுவுடைமைப் பூங்காவில் பூத்த வாசனை மிக்க மலராக இந்தச் சட்டப் பேரவை மூலம் தமிழக மக்களுக்கு இதை அறிமுகம் செய்கிறேன் என்பதற்காகத்தான் முதலிலே பேரறிஞர் அண்ணாவைப் பார்க்கிறேன். இன்றிருக்கிற அரசு, தமிழக அரசு, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி நடக்கிற அரசு அண்ணாவின் கொள்கையை இந்த ட. பட்டிருன்றத்தில் வைத்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

கஞக்குப்

அதில் ஒன் ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16-ம் தேதியன்று நடைபெறா றப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.
தவறு ஏதாவ

1979 பிப்ரவரி 22] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

[முற்பகல் 11-30]

1961-ம் ஆண்டு அப்போது வருவாய்த்துறை அமைச்சராக இருந்த மாணிக்கவேலு நாயக்கர் அவர்கள் இந்தச் சட்டத்தை கொண்டு வருகின்ற பொழுது, இங்கிருந்த முற்போக்கு எண்ணம் உடைய கட்சிகள் வெளிநடப்பு செய்தது. அன்று ஒருங்கிணைந்த கட்சியாக இருந்த இந்திய கம்யூனிஸ்டு கட்சி அந்தச் சட்டத்தை கடுமையாக விமர்சித்துவிட்டு வெளிநடப்பு செய்தது. இந்தச் சட்டம் அவசரச் சட்டமாக அறிவித்த உடனேயே அன்றைக்குக் கடுமையாக விமர்சனம் செய்த கம்யூனிஸ்டு கட்சி இங்கு இருக்கின்ற இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்ஸிஸ்டு கட்சி சட்டம் கொண்டு வருகிற போது, அதை பாராட்டினால் காலதாமதமாகி விடும் என்று கருதி அவசரச் சட்டத்தை உடனேயே பாராட்டி விட்டார்கள். அரசின் சார்பில் அதற்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சி. மார்க்சிஸ்ட் கட்சி ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல்பேரறிஞர் அண்ணா அவர்களின் பொதுவுடைமை பூங்காவில் பூத்த மலர் என்றால் இது வாசமிக்க மலராகத்தான் இருக்கும் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும், எதிர்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும் தெரியும். ஆனால் 1961-ல் இந்தச் சட்டம் வருகிறபொழுது கடுமையாக விமர்சித்தவர்கள் யாரெல்லாம் என்பது அப்போதுள்ள சபைக் குறிப்புகளைப் பார்த்தால் தெரியும். அன்றைக்கு நான் சார்ந்திருக்கிற கட்சியில் 15 பேர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள். அண்ணா அவர்களும் மற்றவர்களும் 15 பேர்களாக இருந்தாலும், ஏழெட்டு பேர்கள் அன்றைக்குக் கடுமையாக விமர்சித்தார்கள். அன்றைக்கு விமர்சித்தவர்கள் எல்லாம் இன்றைக்கு இது பேரறிஞர் அண்ணாவின் பொதுவுடைமைப் பூங்காவில் பூத்த பூ என்று தெரிந்திருந்தாலும் வரவேற்காமல் இருப்பதற்கு காரணம் இன்றைக்கு இருக்கிற அரசு நல்ல சட்டமாக கொண்டு வரவில்லையே என்பதற்காக வரவேற்காமல் இல்லை. தாங்களே கொண்டு வந்திருக்கலாம். அப்படியிருக்க இந்த சோமசுந்தரம் கொண்டுவந்திருக்கிறானே, இதைப் பாராட்டலாமா என்று இருந்திருக்கலாம். இருந்தாலும் இந்தச் சட்டப் பேரவைக்கு வரும், வரும்போது வரவேற்கலாம், பாராட்டலாம் என்பதற்காக அவர்கள் காத்திருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சித் தலைவர் எ. ஆர். மாரிமுத்து அவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் இதை வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நீண்ட நாள் சோஷியலிஸ கருத்துக்களை நெஞ்சிடத்தில் கொண்டுள்ளவர். அன்றைக்கு 1961-ல் கூட காங்கிரஸ்காரர்கள் கொண்டு வந்த சட்டத்தை பலர் எதிர்த்து இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நான் கடைசியில் பேசுகிற பொழுது, யாரெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் நன்றி சொல்ல வேண்டும் என்றிருந்தேன்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 பிப்ரவரி 22

இப்போது இதை அறிமுகப்படுத்துகின்ற நேரத்தில் ஒன்றைச்
சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். முதல் உச்சவரம்பு
சட்டம் வருகிற பொழுது, உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் எடுக்கப்
படுகிற நிலத்திற்குப்பணம் கொடுக்கின்ற முறை என்கிறபொழுது
இப்போதுள்ள புதிய சட்டம் தேவையா என்று சிலர் கேட்கக்
கூடும். அதில் இருந்த சில சங்கடங்களைப் போக்கத்தான்
இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். அதில் ஒன்று சொல்ல வேண்டுமென்றால்,
அவர்கள் நஷ்ட ஈடு என்ற வார்த்தை—காம்பன்சேஷன் என்ற
வார்த்தை இருந்து இப்போது நீக்கப்பட்டிருக்கிறது. ஒரு
தொகை என்றுதான் இதில் இப்போது வந்திருக்கிறது. அதை
நடைமுறைப்படுத்துகிறபொழுது, அதில் இருக்கிற சிக்கல்களை
யும் போக்கியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு 18 ஆண்டுகளில் இதுவரை
சுமாராக 80 ஆயிரம் ஏக்கர் நிலங்கள்தான் ஒப்படை செய்யப்
பட்டிருக்கிறது என்றால், இதில் பல சிக்கல்கள் இருந்தது
என்பது உங்களுக்குத் தெரியும். அதற்காக அந்தச் சிக்கல்களை
எல்லாம் போக்கடித்து இருக்கிறது என்பதை முதலில் தெரி
வித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, பணம் கொடுக்கிறபோது, எந்த முறையைக்
கையாண்டார்கள் என்றால், நிலத்தில் என்ன விளைபொருள்
போட்டிருந்தார்களோ அதைக் கணக்கிட்டு நஷ்ட ஈடு கொடுக்கப்
பட்டு வந்தது. அப்படி நிலங்களை எடுக்கும்போது, ஒரே தர
முள்ள நிலத்தில் சில இடத்தில் பணப் பயிர்களைப் போடுவார்கள்.
சிலர் கரும்புப் பயிர் போடுவார்கள், சிலர் உணவுப் பொருளுக்
காக நெல் பயிர் போடுவார்கள், சிலர் பருத்தி போடுவார்கள்,
சிலர் மஞ்சள் போடுவார்கள்.

ஆனால் விளைகின்ற பொருள்களுக்கு அதற்கு வேண்டிய,
சந்தை விலை ஆண்டுக்கு ஆண்டு அல்ல; மாதத்திற்கு மாதம்,
வாரத்திற்கு வாரம் மாறுபடக் கூடும். ஆனால் இன்றைக்கு
அவர்களுக்கு 18 (1) (3)-ன்படி அறிவிப்பு செய்கின்றபோது,
அன்றைக்கு சந்தையில் என்ன விலை விற்கிறதோ, அதைத்
தான் நிர்ணயிக்கின்ற நிலைமை ஏற்படும். அப்படி நிர்ண
யிக்கின்ற அந்த விலை இருக்கின்றதே, அது அறுவடை கால
மாக இருந்தால் அதன் விலை குறைவாக இருக்கும். அல்லது
சாதாரண காலமாக இருந்தால் விலை கூடியிருக்கும். அப்போது
பருவந்திற்கு ஏற்றபடி பயிரின் விலை மாறும். அப்படி மாறு
கின்றபோது. ஒரே நிலத்திற்கு ஒரே மாதிரியான விலையை நிர்ண
யிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. இது நியாயமில்லை
என்பதை எண்ணித்தான் இப்படி செய்யப்பட்டுள்ளது.

1979 பிப்ரவரி 22] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அந்தச் சட்டப்படி
அது மட்டுமல்ல, அன்றைக்கு இருக்கின்ற அந்தச் சட்டப்படி இருக்கின்றது. அவர்
அதிகாரிகளுக்கு அதிகமான அதிகாரங்கள் இருக்கின்றது. அவர்
கள் அன்றைக்கு இருக்கின்ற நிலவரத்திற்கு ஏற்றவாறு ஒரு
அறிவிப்பைக் கொடுக்கலாம். ஆனால், அப்படி அறிவிப்பு கொடுக்
கப்படுகின்ற அந்த அதிகாரம் இப்போது கட்டுப்படுத்தப்பட்
டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக நிலத்தின் அடிப்படை
வரியிருக்கிறதே, அந்த வரியின் அடிப்படையில் இன்றைக்கு
அதற்குக் கொடுக்க வேண்டிய பணத்தை நிர்ணயிக்கிறார்கள்
என்பதை நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்
கொள்கிறேன்.

வேண்டுமானால்,
அது மட்டுமல்ல. இன்னும் சொல்ல இங்கேயிருக்கின்ற,
1961லே இந்தச் சட்டம் வருகின்றபோது கட்சியும் இதைப்
கம்யூனிஸ்ட் கட்சிகளும், நான் சேர்ந்திருந்த பல குறைபாடு
பற்றிச் சொல்லுகிறபோது, இதிலே இருக்கின்ற ஆனால் இந்தக்
களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நீக்கப்பட்டதா என்று
குறைபாடுகள் பூராவும் இன்றைக்கு ஆண்டுகளுக்கு முன்னாலே
நீங்கள் கேட்டால், இன்றைக்கு 18 குறைபாடுகளையும்
இருந்து சொல்லப்படுகின்ற அத்தனை என்பதை நான்
ஒரே சட்டத்தின் மூலமாக நீக்க முடியாது நாம் அனைவரும்
உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். முயற்சி
ஒன்றாகச் சேர்ந்து, குறைபாடுகளை நீக்குவதற்கான தெரிவித்துக்
களைச் செய்கிறோம் என்பதை நான் உங்களுக்குத மூலமாக
கொள்கிறேன். அது மட்டுமல்ல. நில உச்ச வரம்பு நிலங்கள்
நிலங்களை எடுக்கிறோம். யாரிடத்திலே அதிகமான எடுத்து
இருக்கின்றதோ, அவர்களிடமிருந்து அந்த நிலங்களை ஏழை
யாருக்கு நிலமில்லையோ, அவர்களுக்கு, நிலமில்லாத அந்த
களுக்கு அந்த நிலங்களை கொடுக்கிறோம். அப்படி அந்த
நிலங்களை நிலமில்லாத ஏழைகளுக்கு கொடுக்கும்போது, கொடுப்
நிலத்தின் விலையை சந்தை விலையைவிட அதிகமாகக் உதாரணமாகச்
பதற்கு பழைய சட்டத்திலே இடமிருக்கிறது. விலை ஒரு
சொல்லவேண்டுமானால், அன்றைக்கு நிலத்தில் சட்டத்தின்மூலம்
ஏக்கர் ரூ. 2,000 என்றால், இந்தப் பழைய இதைப்பற்றி
ரூ. 4,000, ரூ. 5,000 என்று கொடுக்கலாம். ஏழைகளிடத்திலே
எண்ணிப் பார்க்கவேண்டும். நிலமற்ற 2 அல்லது 3
நிலத்தைக் கொடுக்கும்போது சந்தை விலையைவிட பணக்காரர்
மடங்கு பணத்தை வாங்கி, ஏற்கெனவே நிலமுள்ள பழைய சட்டம்.
களுக்குக் கொடுக்க வழிவகை செய்கின்ற சட்டம் கொடுக்கப்படுகின்ற
ஆகவேதான், நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் பணத்தைக் கொடுக்க
போது, அவர்களால் அந்த நிலத்திற்கான கொடுக்க முடியா
முடியாமல், 20 ஆண்டுகள் தவணைகளிலும் விட்டிருக்கிறார்கள். அதை
மல், பல பேர் அந்த நிலத்தையே ஏற்பட்டிருக்கிறது
அவர்கள் அனுபவிக்க முடியாத நிலை

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குறைபாடுகளையெல்லாம் நீக்கி, இன்றைக்கு இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், இந்தச் சட்டம் வருகிறபோது ஒரு குடும்பம் என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியும், ஒரு குடும்பம் என்றால், கணவன், மனைவி, மேஜராகாத ஆண்கள், மேஜரான பெண்கள் எல்லாமாகச் சேர்ந்து 5 பேர்களுக்கு மேற்படாதது ஒரு குடும்பம். ஆனால், ஒரு குடும்பத்தில் கணவனிடம் நிலம் இருந்தாலும், அந்தக் குடும்பத்தில் மனைவியிடம் நிலமிருந்தாலும், வேறு யாருக்கு நிலமிருந்தாலும், பழைய சட்டப்படி உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தனித்தனியாக அதைக் கணக்கிட்டு தனித்தனியாக கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது.

(முற்பகல் 10-40)

அந்த விதிமுறைக்குப் பாதுகாப்பு கொடுக்கிறபோது ஒரு குடும்பம் என்றால் அதில் யாருக்கு நிலம் இருந்தாலும் சரி, கணவனுக்கு நிலம் இருந்தாலும் சரி, மனைவிக்கு நிலம் இருந்தாலும் சரி, அத்தனையையும் ஒன்றாகக் கூட்டி ஒரு 'பாமிலி யூனிட்' என்று வைத்துக்கொண்டு அதைக் கொடுக்கவேண்டும் என்று இந்தச் சட்ட முன்முடிவு வழிவகை செய்கிறது என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். அடுத்தபடியாக, என்ன முக்கியமானது என்றால் மலைப்புறம் இருக்கிறது. மலைப்புறத்தில் இருக்கிற நிலங்களை எடுக்கிறபோது எவ்வளவு பணம கொடுக்க வேண்டுமென்று பழைய சட்டத்தில் குறிப்பிடவில்லை. அதே போல் காடுகள், காடு என்றால் உங்களுக்குத் தெரியும். இயற்கையாக வளர்ந்த காடுகள், மனித முயற்சியால் வளர்கிற காடுகள், மனித முயற்சியால் வளர்கிற பழத் தோட்டங்கள் இவைகளையெல்லாம் பார்க்கிறபோது பழைய சட்டப்படி ஒரு ஏக்கரில் எவ்வளவு மரங்கள் இருக்கிறதோ, அந்த மரங்களுக்கு விலை போட்டு பணம் கொடுக்கிறார்கள். இயற்கையாக வளர்ந்த காடுகளில் மனித முயற்சி இல்லை. அதில் 200 மரங்கள் ஒரு ஏக்கரில் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படிப் பார்க்கும்போது அடர்ந்த காடாக இருந்தால் ஒரு ஏக்கருக்கு மரங்களுக்கு கொடுக்கப்படுகிற தொகை ரூ. 50,000, ரூபாய் ஒரு லட்சம் கூட வந்துவிடும். இன்று எந்த நிலமாக இருந்தாலும் சரி, நான் முதலில் சொன்னபடி, அது அடர்ந்த காடாக இருந்தாலும் சரி, மூன்று போகம் விளைகிற நன்செய்யாக இருந்தாலும் சரி அல்லது பொன் விளையும் பூமியாக இருந்தாலும் சரி அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ. 3,500 தான் என்பதை இங்கே மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பழைய சட்டப்படி இரண்டு போகம் விளைகிற நன்செய் நிலங்களுக்கு ரூ. 15,000 கொடுத்திருக்கிறார்கள். ரூ. 15,500 கொடுத்திருக்

கிறார்கள். ரூ. 15,500 என்பதற்கும் இன்றைக்குள்ள ரூ.3,500 என்பதற்கும் ஏறக்குறைய ஐந்துமடங்காகிறது. ஐந்து மடங்கு நிலயற்ற ஏழைகளிடம் வாங்கப் பட்டிருக்கிறது. இன்று மனிதனால் வளர்க்கப்பட்ட காடாக இருந்தாலும் சரி அல்லது பழத்தோட்டங்களானாலும் சரி எல்லாவற்றிற்கும் ரூ. 3,500-க்கு மேற்படாமல் கொடுக்கப்படுகிறது. ரூ. 2,000 கொடுக்கப்படுகிறது. ரூ. 1,000 கொடுக்கப்படுகிறது. முதலிலே இருந்த சட்டத்தில் தரிசு நிலங்களுக்கு வழிவகை செய்யவில்லை. இன்றிருக்கிற சட்டத்தில் தரிசு நிலங்களுக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. தரிசு நிலங்களுக்கு இன்றைக்கு பணம் கொடுக்கிறது எவ்வளவு என்று குறிப்பிட்டிருக்கிறோம். தரிசு நிலங்கள் என்றால் ஏறக்குறைய ரூ. 50-ல் இருந்து ரூ. 700 வரை வரும். அப்படித்தான் இன்று இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவை நீங்கள் எல்லோரும் ஆதரிப்பீர்கள் என்பது எனக்கு நன்கு தெரியும். நான் முதலில் பேசுகிறபோது பேரறிஞர் அண்ணா அவர்களைப் பார்த்து விட்டுப் பேசினேன் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படிப் பார்க்கும்போது நீங்களும் பார்த்திருப்பீர்கள். அதில் பார்க்கிறபோது, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று போட்டிருக்கிறது. இங்கு உட்கார்ந்திருக்கிற அத்தனைப்பேர்களும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றை ஏற்றுக்கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஏற்றுக் கொள்வார்கள், நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அவர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்வதைவிட நான் வேறு ஒன்றை இதைவிட அதிகமாக ஏற்றுக்கொள்வது என்னவென்றால், அண்ணா சொன்ன தெளிவு, கனிவு, துணிவு. ஆனால் இந்தச் சட்டத்தை நீங்கள் படித்துக் கொண்டுவருகிறபோது நன்கு தெளிவாகப்படித்துக் கொண்டுவந்திருக்கிறீர்கள். அப்படி தெளிவுபடுத்திக் கொண்டு வந்திருக்கிற நீங்கள் அதிலிருக்கிற குறைபாடானாலும் சரி, அதிலிருக்கிற நன்மைகளானாலும் சரி அதைத் தெளிவாகச் சொல்லுங்கள், துணிவாகச் சொல்லுங்கள். அவற்றை இந்த அரசு ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த தயங்காது. ஒன்று சொல்கிறேன். இது எங்களுக்கு திருப்தியை தருகிறது, உங்களுக்கு திருப்தி எப்படியோ தெரியாது. உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள் என்று கூறி இந்த சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோரி இதை முன்னுரையாக நான் வைக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கொண்டுவந்திருக்கக்கூடிய நில உச்ச வரம்பு கட்டுதல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை உங்கள் மூலம் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த

[திரு. அ. ரகுமான்கான்] [1979 பிப்ரவரி 22

மசோதாவை இங்கே அறிமுகம் செய்த மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அண்ணாவின் திருவுருவப் படத்தைப் பார்த்துவிட்டு
இந்த விவாதத்தில் தன் கருத்துக்களை சொல்வதாகச் சொன்
னார்கள். அண்ணா அவர்கள் அவர்களுக்கு மட்டும் சொந்த
மானவர் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும்
சொந்தக்காரர்தான். ஆகவே நானும் அண்ணாவைப் பார்த்து
விட்டுத்தான் இந்த விவாதத்தில் பேசப் போகிறேன்.

அண்ணா அவர்கள் சொன்னார்கள், சோஷலிஸம் என்பது
வெறும் உச்சரிப்புகளில்மட்டும் இருந்துவிடக்கூடாது சோஷலிஸம்
என்பது நாவின் நடனமாக மட்டும் இருந்துவிடக் கூடாது.
சோஷலிஸம் என்பது வெறும் காகிதப் பூவாக இருந்துவிடக்
கூடாது. சோஷலிஸம் என்பது அடிப்படையாக நடைமுறைப்
படுத்துகின்ற பல்வேறு அம்சங்களைப் பெற்று இருக்கவேண்டு
மென்று சொன்னார்கள். அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த
தற்குப் பிறகு அவர்கள் பல நிலச் சீர்த்திருத்தங்களை அறிமுகப்
படுத்தினார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக 1967 ஆம்
ஆண்டிற்கு முன்னதாக ஆளுங்கட்சி பீடத்திலே அமர்ந்திருந்த
காங்கிரஸ் ஆட்சி நிலச் சீர்த்திருத்தம் செய்ய வேண்டுமென்று
சொன்னாலும் உண்மையாக நிலச் சீர்த்திருத்தத்தைச் செய்தார்
களா என்றால் இல்லை. அவர்களும் சோஷலிஸம் என்று
பேசினார்கள். ஆவடி சோஷலிஸம் என்றார்கள்,
எத்தனையோ சோஷலிஸம் என்று சொன்னாலும் கூட நிலச்
சீர்திருத்தத்தைச் சரியாக அவர்கள் அமல் நடத்தவில்லை.
அந்தப் புள்ளிவிவரங்களையெல்லாம் நான் இந்த மாமன்றத்திலே
வைக்க விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே
30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்சவரம்பு கொண்டு வந்தார்கள்.
நிலச்சீர்திருத்தத்தை அவர்கள் அறிவித்தார்கள்.
* * * * * * நான் திருட வருகிறேன் உங்களுடைய
பாக்கெட்டுகளை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளுங்கள்—
நான் உதாரணத்திற்குத்தான் சொல்லுகிறேன்—என்று காவல்
துறையினர் இன்ன நேரத்திற்கு இப்போது வருகிறோம் என்று
திருடர்களுக்கு அறிவிப்பதைப் போல செய்து விட்டு திருடுவதைப்
போல * * * * *

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்
சார். மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது இப்போது கொண்டு
வந்திருக்கிற சட்டத்தைப் பற்றிச் சொன்னால் நல்லது * *
* * * * * * * * என்று சொல்லுவது ஒரு பெரிய
குற்றச்சாட்டு, ரொம்பத் தப்பானது. அதை நான் ரொம்ப
ஆட்சேபிக்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் சொன்னது

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப் பெற்றது.

1979 பிப்ரவரி 22] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

சாதாரண குற்றச்சாட்டு அல்ல, அதை அவர்கள் வாபஸ் பெற
வேண்டும், இல்லையென்றால் அவைக் குறிப்பிலிருந்து எடுத்து
விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, திரு. ரகுமான்
கான் அவர்கள் இன்னொன்றையும் கூறினார்கள், போலீசார்
திருடர்களுக்குச் சொல்லிவிட்டுத் திருடுகிறார்கள் என்று சொல்
லியது அவ்வளவு பொருத்தமாக இல்லை. இந்தக் அவைக்
குறிப்பிலே அது இருப்பது முறையாக இருக்காது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள்
உணர்ச்சி வசப்படாமல் சிந்தித்துப் பார்க்க வேண்டும்மென்று
கேட்டுக்கொள்கிறேன் * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஜேம்ஸ் அவர்
கள் சொன்னதைப் பற்றி முதலிலே சொல்லிவிடுகிறேன்.
திரு. ரகுமான்கான் பேசியது அவருடைய உதாரணம், உதார
ணம் எப்படி வேண்டுமென்றாலும் சொல்லட்டும். அதிலே
மரியாதை குறைவு ஒன்றுமில்லை, அது அப்படியே அவைக்
குறிப்பிலே இருக்கலாம், * * * என்று சொன்னது
கொஞ்சம் டேமேஜிங் ஆக இருக்கிற குற்றச்சாட்டு என்று தான்
நான் நினைக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : * * * அப்போது பொதுக் கூட்டங்
களிலே அப்படி அனவுன்ஸ் பண்ணி பண்ணித்தான் கொண்டு
வரப்பட்டது அந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்ட
போது அந்த டிபேட்டிலே அப்படியெல்லாம் பேசப்பட்டிருக்கிறது.
ரிக்கார்ட்ஸ் இருக்கின்றதே. ஆகவே அதை ரிப்பீட் பண்ணுவதிலே
ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே. அண்ணா
அவர்களே அப்படி கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள்
அப்படியென்றால் அண்ணாவுக்கு விரோதமாக நடத்தப்
போகிறீர்களா ?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நிலச் சீர்திருத்தங்கள் கொண்டு
வரப்பட வேண்டுமென்று பொதுக் கூட்டங்களிலே பேசியிருக்க
லாம், அது ஒரு பொதுக் கருத்து, ஆனால் * * * *
என்று சொல்வது ரொம்ப சீரியஸான அலிகேஷன்

* *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

[1979 பிப்ரவரி 22

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ஆம் தேதியிலிருந்து 30 ஆம் தேதி வரையிலே இந்த மன்றத்திலே அந்த மசோதாக்கள் மீது பேச்சுக்கள் நடை பெற்றிருக்கின்றன, அப்போது காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் 10. 12 ஆண்டுக்காலம் சொல்லிச் சொல்லி வந்து. ஆணாகப் பிறக்குமா பெண்ணாகப் பிறக்குமா என்று தெரியாமல் கடைசியிலே இரண்டும் இல்லாமம் அலியாகப் பிறந்திருக்கிறது என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாராயணசாமி நாயுடு பேசியிருக்கிறார் என்பது என்னுடைய கருத்திலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

அவர் மட்டும் பேசவில்லை. இன்னும் பலரும் அதே கருத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். கடுமையாகச் சாடியிருக்கிறார்கள் என்பதைத் தகவலுக்காகச் சொல்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அவர் சொல்வது வேறு. நான் சொல்வது வேறு, நான் சொல்வது. * * * * என்று சொல்வதை நான் எதிர்க்கிறேன். அதை சொல்லக்கூடாது,

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே. அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள், அதற்கு விளக்கம் சொல்ல விரும்புகிறேன், * * * *

திரு. எம். ஏ. லத்தீப் : அவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அது தவறாகவும் இருக்கலாம். அதை மறுக்கவும் சம்பந்தப்பட்டவருக்கு உரிமை உண்டு. அந்தக் கருத்தும் இருக்கலாம். அதன் மறுப்பும் இருக்கலாம். அதைச் சொல்வதே கூடாது. சொல்லவே கூடாது என்று உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த முடியாது. பாராளுமன்ற சட்ட விதிகளுக்கு மாறாக எதுவுமில்லை, சொல்லும் உரிமை அங்கத்தினர்களுக்கு உண்டு, சரியா தவறா என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொள்வார்கள். சுட்டிக்காட்டிச் சொல்வதற்கும் உரிமை உண்டு. இப்படி இரண்டும் வருகிறது. எனவே ஒன்றை நீக்குவது சரியல்ல.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டத்தைப் பற்றி விமர்சனம் செய்வது சட்டவிதிகளுக்கும், நடைமுறைக்கும் மாறானது என்று சொல்லவில்லை, ஆனால் * * * என்று சொன்னால். அந்த நேரத்தில் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தவர் இப்பொழுது பதில் சொல்வதற்கு வாய்ப்பில்லை. அப்படிப்பட்டவர்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்பிருந்தால் அவர்கள் பதில் சொல்லலாம், இதில் உறுப்பினரவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். ஒட்டு மொத்தமாக இன்ன குறைபாடு என்று சொல்வதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் * * * என்று சொன்ன வாக்கியங்களைச் சபைக் குறிப்பிலிருந்தும். பத்திரிகைக் குறிப்பிலிருந்தும் நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன், மற்றபடி பொதுப்படையாக விமர்சனம் செய்து பேசலாம், * * * *

திரு. அ. ரகுமான்கான்

திரு. என். சங்கரையா : அவர் சொன்னது அரசியல் விமர்சனம்தான், அது கூட முடியவில்லை என்றால் எந்தக் கட்சியைப் பற்றியும் எதுவும் சொல்ல முடியாது? எப்படிக் குற்றச்சாட்டுகள் வரும்? * * * என்று சொன்னாலே. அதுவே தவறு என்றால் எப்படி? நேற்று கூட மந்திரி மீது குற்றச்சாட்டு சொன்னதும், அவர்கள் மறுத்ததும் ரிக்கார்டிலே இருக்கட்டும் என்று முடிவு செய்யப்பட்டது, எனவே, இதைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்,

திரு. அ. ரகுமான்கான் : அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் .. ..

திரு. எம். ஏ. லத்தீப் : அப்படிச் சொல்வது கூடாது. .. .. என்றால் அது அனுமதிக்கப்படவில்லை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சொல்லி விடுகிறேன் * * * என்பதை மட்டும்தான் நீக்கச் சொல்லியிருக்கிறேன், ஜெனரலாக சார்ஜ் இருந்தால் சொல்வதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை * * * * என்று குறிப்பிட்டுச் சொன்னதைத்தான் நீக்கும்படி கூறினேன், ஸ்பெசிபிக்காக இல்லாமல் ஜெனரலாக குற்றச்சாட்டு இருந்தால் அது இருக்கலாம். இதற்கு மேல் இது பற்றிப் பேச வேண்டாம். வேறு விஷயத்தை உறுப்பினரவர்கள் பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. அ. ரகுமான்கான் : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, அன்றைக்கு அதிகாரத்திலே இருந்தவர்கள் இப்படிப்பட்ட முற்போக்கான நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரப் போகிறோம் என்றெல்லாம் சொல்லிவிட்டுச் செய்ததால் அதை அமல்......

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே,....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சி சார்பில் பேசும் பொழுது பேசுங்கள், இது சம்பந்தமாக இனி பேச வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : இது வெளியிலே தெரிந்துவிட்ட காரணத்தால் தான் அதைச்சரியாக அமுல் நடத்த முடியவில்லை,

திரு. வி. கே. கோதண்டராமன் : அன்றைக்கு இருந்த அமைச்சரும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கட்சியின் சார்பிலே பேசும் பொழுது பதில் சொல்லுங்கள், நீங்கள் மேற்கொண்டு பேசினால் நான் நீக்க வேண்டியிருக்கும். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கட்சியின் சார்பிலே பேசும் பொழுது சொல்லுங்கள். இதை அனுமதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதையெல்லாம் சபைக் குறிப்பிலே இருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன். உங்களுக்குச் சம்பந்தம் இல்லாத விஷயம். உங்கள் கட்சியிலே அடுத்தவர் பேசும் பொழுது பேசலாம். நினைப்பவர்கள் எல்லாம் அவரவர்களுடைய கருத்துக்களை இடையிடையே எழுந்து சொல்வது என்றால், அவையை நடத்தவே முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் ; உறுப்பினருக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்லக்கூடாது .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவருக்குச் சம்பந்தம் இல்லை என்று சொன்னதையடுத்து என்ன சொன்னேன் என்பதை நீங்கள் கவனிக்கவில்லையென்றால், இன்னொரு முறை

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நினைவூட்டுகிறேன். அவருடைய கட்சியின் சார்பிலே பேசும் போது சொல்லட்டும் என்று சொன்னேன். இடையிலே வேண்டாம் என்று சொன்னேன். அவரைப்பற்றி ஏதாவது சொல்லியிருந்தால் குறுக்கிடலாம். ஆகவேதான் சம்பந்தம் இல்லை என்று சொன்னேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஒழுங்குப் பிரச்னை.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்னை ஒழுங்காக இருக்க வேண்டும். ஒழுங்குப் பிரச்சனையை எப்பொழுது அனுமதிக்கலாம், எப்பொழுது அனுமதிக்கக்கூடாது என்று எனக்குத் தெரியும்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குறுக்கீட்டின் காரணமாக பொன்னான என்னுடைய நேரம் வீணாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அருள்கூர்ந்து தாங்கள் அதை இணைத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்றைக்கு அதிகாரத்திலே இருந்த காங்கிரஸ் கட்சி சோஷலிசத்தைப் பற்றி பேசினாலும், நடைமுறையில் அமுல்படுத்துகிற நேரத்தில் சோஷலிசத்தைக் கொண்டு வரவில்லை என்றுதான் நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனெனில், அவர்கள கொண்டு வந்த சட்டத்தில் கரும்பு நிலங்களுக்கு விதிவிலக்கு, மேய்ச்சல் நிலங்களுக்கு விதிவிலக்கு, கல்வி நிலையங்களுக்கு விதிவிலக்கு என்று விதிவிலக்கு கொடுத்தார்கள். யாரைக் காப்பாற்றுவதற்காக மேய்ச்சல் நிலங்களுக்கு விதிவிலக்கு, கரும்பு நிலங்களுக்கு விதிவிலக்கு ? தங்களிடம் இருந்தவர்களைக் காப்பாற்றத்தான் இந்தச் சட்டம் அன்றைக்குக் கொண்டு வரப்பட்டதே தவிர, முற்போக்குச் சட்டமாகக் கொண்டு வரவில்லை. அதற்கான புள்ளிவிவரத்தை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

உங்களுக்கெல்லாம் தெரியும், அன்றையதினம் 1967-ம் ஆண்டிற்கு முன்பு மொத்தம் எடுத்துக் கொள்ளப்பட்ட உபரி நிலம் 24,194 ஏக்கர். 1967 வரைக்கும் காங்கிரஸ் ஆளுகின்றபொழுது இங்கே எடுத்துக்கொண்ட உபரி நிலம் 24,194 ஏக்கர். இந்த உபரி நிலத்திலே எடுத்துக்கொள்ளப்பட்ட நிலம் 16,330 ஏக்கர். அதில் விவசாயிகளுக்கு எந்த நிலமும் தரப்படவில்லை. அன்றையதினம் காங்கிரஸ் ஆளுகின்றபொழுது கொண்டு வரப்பட்ட நில உச்ச வரம்பு சட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்ட நிலமான 24,194 ஏக்கரில் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலம் 16,330 ஏக்கர். அதில் விவசாயிகளுக்கு எந்த நிலமும் தரப்படவில்லை. ஆகவேதான் சொன்னேன், உதட்டிலே சோஷலிசம் பேசிக்கொண்டு உள்ளபடி நிலப் பிரபுக்களைப் பாதுகாப்பதற்காக அன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

[திரு. அ. ரகுமான்கான்] [1979 பிப்ரவரி 22

[நண்பகல் 12-00]

இதற்கு பிறகு கலைஞர் அவருடைய ஆட்சிக்காலத்திலே கரும்பு நிலங்களுக்கு அளிக்கப்பட்ட விதி விலக்குச் சட்டத்தை ரத்து செய்ததை இங்கே கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன். அதைப்போலவே திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி யின் போது மேய்ச்சல் நிலங்களுக்குள்ள விதி விலக்கை, ரத்து செய்தார்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தின்போது 30 ஸ்டேண்டர்ட், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது 15 ஸ்டேண் டர்ட் ஏக்கர் என்று இருந்தது. அது மட்டுமல்ல, அதை இங்கே புள்ளி விவரத்தோடு கொடுக்க விரும்புகிறேன். 31—1—1974 வரை அறிவிக்கப்பட்ட உபரி நிலம், தி.மு.கழக ஆட்சியின் போது 90,284 ஏக்கர் என்பதை இம் மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். இதில் வழக்குகள் இருப்பதால் எடுத்துக் கொள்ளப்படாத நிலங்கள் 2,306 ஏக்கர்.

குத்தகைதாரர்களுக்கும், நிலமற்ற விவசாயிகளுக்கும் அளிக் கப்பட்ட நிலங்கள் 62,387 ஏக்கர். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதே அவர்கள் அதைப் பெற்றிருக்கின்றனர். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதே நிலச் சீர்திருத்த உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இது போன்ற முற்போக்கான காரியங்களைத் திராவிட முன்னேற்றக்கழக அரசு அமுல் படுத்தியது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் புள்ளி விவரத்தை மாற்றி மாற்றி சொல்கிறார்கள். காங்கி ரஸ் ஆட்சிக் காலத்தில் 30 ஏக்கர் நிர்ணயித்த பிறகு உபரி நிலம் 60 ஆயிரம் ஏக்கர் கிடைத்தது. தி.மு.கழக ஆட்சியின்போது 24— ஏக்கர் இதை தூக்கி அதிலும் அதைத் தூக்கி இதிலும் போட்டு மாற்றிப் பேசுகிறார்.

திரு. அ. ரகுமான்கான் : நான் மீண்டும் புள்ளி விவரம் சொல்கிறேன். 31—1—1974 வரை அறிவிக்கப்பட்ட உபரி நிலம் 90,284 ஏக்கர். காங்கிரஸ் கொண்டு வந்த நிலம் 24,194 ஏக்கர் உபரி நிலம் கிடைத்தது. இதில் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலம் 16,330 ஏக்கர். இதைப்போலவே இதி லும் விவசாயிகளுக்கு எந்த நிலமும் தரப்படவில்லை. ஆகை யால் தி.மு.கழக ஆட்சியின் போது இது போல முற்போக்கான அம்சங்கள் அடங்கியுள்ள சட்டம் கொண்டு வரப்பட்டது.

1979 பிப்ரவரி 22] [திரு. அ. ரகுமான்கான்]

இந்தச் சர்க்காரும் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார் கள். என்ன காரணங்களுக்காக அது கொண்டு வரப்படுகின் றது என்பதை எடுத்துச் சொன்னார்கள். அரசு எடுக்கும் உபரி நிலங்களுக்கு, குடும்பம் என்ற முறையில் இல்லாமல், தனிப் பட்டவர்களுக்கு என்ற முறையில் நஷ்ட ஈடு தரப்படவேண்டும் என்பதற்காகவும், அதைப்போலவே நஷ்ட ஈடு என்ற வார்த் தைக்குப் பதிலாக (காம்பன்சேஷன்) என்ற வார்த்தைக்குப் பதி லாக அமௌண்ட் என்று அரசியல் சட்டத்தின் 31-வது பிரி வில் திருத்தப்பட்டு இருக்கிறது. அதற்கு ரேடிபிகேஷன் கொடுக் கின்ற முறையில் இன்னொரு திருத்தம் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. உபரி நிலங்களுக்கு மார்க்கெட் விலைகளைக்கூட்டி அதிகத் தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே நல்லநிலமாக இருந்தாலும் 3,000-க்கு மேல் போகக் கூடாது என்ற அடிப்படையில் கொடுக்க வேண்டும். அது போலவே நிலஉச்சவரம்புச் சட்டதிருத்தத்தை மேற்கொள்வதற்காக வழக்கு களின் எண்ணிக்கை அதிகமாய்ப்போய்விடுகிறது. ஆகவே, உரிய நேரத்தில் வழக்குகளை டிஸ்போஸ் செய்ய முடியவில்லை. அதற் காக டிரிப்யூனல்கள் அமைத்து அந்த வழக்குகளை எவ்வளவு விரைவாகத் தீர்த்து வைக்க முடியுமோ அவ்வளவு விரைவாக டிஸ்போஸ் செய்து நஷ்ட ஈட்டை விலையாகக் கொடுக்க வேண் டும். அதுபோல ஒரு டிரிப்யூனலில் இருந்து இன்னொரு டிரிப் யூனலுக்கு அந்த வழக்குகளை டிரான்ஸ்பர் செய்கின்ற அதி காரம் இருக்க வேண்டும். இது போன்ற திருத்தங்கள் அடங் கிய சட்டத்தைத் தான் கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே நான் சொல்லிக்கொள்வது எல்லாம் இவைகளின் மூலமாக அவர் எடுத்துச் சொன்ன அந்த சோசலிஷ சமுதாயம் உரு வாகிவிடாது பொதுவுடைமைப் பூங்கா மலர்ந்து விடாது. உண் மையான பொதுவுடைமை பூங்கா மலரவேண்டுமானால் அதற்கு அடிப்படை அம்சம் கவனிக்கப்பட வேண்டும். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்பது வரவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் 'உழுபவனுக்கு நிலம் சொந்தம்' என்று சட்டம் கொண்டு வந்தது. மத்திய அரசாங்கம் அங்கீகாரம் வழங்க மறுத்து விட்ட காரணத் தாலே அதை நடைமுறைக்குக் கொண்டு வரமுடியாமல் போய் விட் டது. இன்று மத்திய அரசாங்கத்தில் இருக்கும் ஜனதா அர சாங்கத்தின் கேபினட் கூடி ஒரு தீர்மானத்தை எடுத்து இருக்கி றார்கள். நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாக, நில உச்ச வரம்பு சம்பந்தமாக எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும், உழுபவ னுக்கே நிலம் சொந்தம் என்று சட்டம் கொண்டு வந்தாலும், அதை நீதிமன்றம் தடுக்க முடியாது. அந்த வகையில் அந்த ஷரத்துக்களை அரசியல் சட்டத்தின் 9-வது அட்டவணையில் இணைக்க இருக்கிறார்கள். இதற்கு முன்னால் அரசியல் சட் டத்தில் 'ரைட் டு பிராப்பர்ட்டி' என்பது பண்டமென்டல் ரைட் டில் இருந்தது. ஆகவே, நிலவுடைமை என்பது ஜீவதார உரிமை

குறிப்பிட்டு பேசியிருக்கக் கூடும். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் குறிப்பிடுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நன்றி, நிலம் உழுபவனுக்குத்தான் சொந்தம் என்பதை எப்போது அமலாக்கப் போகிறீர்கள்? அதற்கு——————————(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் இப்போது கூற முற்படுவது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். பிள்ளைகள் படித்து, பட்டம் பெற்று, வேலைக்குப் போய்விட்ட பிறகு பிள்ளைகளா வந்து நிலத்தை உழப்போகிறார்கள்? ஆகவே, தான் முதலமைச்சரவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். உண்மையாக நிலத்தில் உழாதவனுக்கு எதற்கு நிலம்? உழுபவனுக்கே நிலம் சொந்தமாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

திரு. அ. ரகுமான்கள் : முதலமைச்சரவர்கள் அதைமட்டும் சொல்லவில்லை. அமைச்சர்கள் எல்லாம் மாணிக்கவாசகரைப் போல நடந்துகொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். பெரியார் நூற்றாண்டு விழாவிலே பேசும்போது அர்ச்சகர்கள் . . . . . . (மணியடிக்கப்பட்டது).

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் முதலமைச்சர் கிண்டலாகப் பேசினார்கள் என்று சொன்னார்கள். அதற்கு பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொன்னதற்கு நன்றி; மகிழ்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். விளக்கம் வேண்டாம். நேரமாகிறது.

திரு. எஸ். ஆர். இராதா : அவர் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொல்லும்போது, பழைய பாக்கி வேறு இருக்கிறது. பிரேமா கொலை வழக்குபற்றிய பிரச்சனை வரும்போது நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொன்னார். இதுவும் அதோடு சேர்ந்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பிரேமா கொலை வழக்கைப்பற்றி என்னைவிட அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் அப்போது சொன்னது நிரூபிக்கப்பட்டால் தன்னுடைய பதவியை அவர்கள் ராஜிநாமா செய்யத் தயாரா என்று கேட்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, நண்பர் ரகுமான்கான் அவர்கள் நல்ல பழக்கமறிஞர், கழகத்தில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். ஆனால் வேகமாக ராஜிநாமா செய்வாரா என்று என்னை கேட்டுவிட்டார். நான் திடீரென்று அப்படி ஒரு முடிவு எடுக்கத் தயாராக இல்லை. ஏனென்றால் ரகுமான்கான் அவர்கள் திடீரென்று முடிவு எடுக்க சக்தி படைத்தவர்கள். நான் அப்படியல்ல. ஒரு முடிவு எடுப்பதற்கு முன்னால் என்னுடைய கட்சித் தலைவர்களை கலந்து, அவர்கள் கருத்தை ஏற்று, அதற்குப் பிறகுதான் முடிவு செய்ய முடியும். ஆனால் பிரச்சனைகளைப்பற்றி பேசுவதற்கு தயாராக இருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, இதிலே இரண்டு பிரச்சனைகள் இருக்கின்றன. ஒன்று பிரேமா கொலை வழக்கைப் பற்றி பேசும்போது, யார், யார் அதிலே சம்பந்தப்பட்டவர்கள் என்று நிரூபிக்க முடியுமா என்பது. (மணியடிக்கப்பட்டது) நிரூபிக்கப்பட்டால் அவர்கள் தன்னுடைய பதவியை ராஜிநாமா செய்வார்களா என்பது இன்னொன்று எல்லாவற்றிற்கும் என்னிடம் ஆதாரம் இருக்கிறது. வேண்டுமானால். . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போதும், நீங்கள் உட்காருங்கள். திரு. மாரிமுத்து அவர்கள் தொடர்ந்து பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கிற மசோதா நஷ்ட ஈட்டுத்தொகையை எப்படி நிர்ணயிப்பது என்பது பற்றியது. முன்னால் கொண்டு வந்திருக்கிற சட்டத்தில் இருப்பதை மாற்றி, அதைவிட கொஞ்சம் குறைத்து ஈட்டுத் தொகை கொடுக்க வகை செய்கிறது இந்த மசோதா. இதை அடிப்படையாக வைத்து இங்கே விவாதிக்கும்போது திரு. ரகுமான்கான் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் கூறியதில் எனக்கு ஆட்சேபணை இல்லை அதாவது நான் முன்னால் ஆட்சேபித்ததைத் தவிர.

முன்னால் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டுவந்த சட்டத்தைவிட திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவந்த சட்டம் ரொம்ப முற்போக்கானது, அதனால் மிக அதிகமான நிலம் கிடைக்கும் என்று ஒரு வாதத்தைச் சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் அந்தச் சட்டத்தைப் படித்துப் பார்க்க வேண்டும். அந்தச் சட்டம் வரும்போதும் நான் இருந்தேன். இந்தச் சட்டம் வரும்போதும் நான் இருந்தேன். அந்த செலக்ட் கமிட்டியிலும் இருந்திருக்கிறேன்; இந்த மசோதாவுக்கான செலக்ட் கமிட்டியிலும் நான் இருந்

திருக்கிறேன். இரண்டு கமிட்டிகளிலும் பங்கு கொண்டு, பணியாற்றியிருக்கிறேன். எந்த ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதாக இருந்தாலும் அந்தச் சட்டத்தை அமுலாக்குவது, சட்டம் கொண்டுவரப்பட்ட நாளிலிருந்து என்றிருக்கும், இல்லாவிட்டால் முன்தேதியிட்டு—ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட்—என்றிருக்கும். அதுதான் வழக்கம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்த சட்டத்தில் 6 மாதம் தள்ளி அமுலாக்கப்படும் என்றிருந்தது. அப்படிச் சொல்லும்போது நிலச் சொந்தக்காரர்களுக்கு எவ்வளவு வசதியாக இருக்கும் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, அது ‘லூப்ஹோல்’ இல்லாமல் கொண்டுவரப்பட்ட சட்டம் அல்ல; மீண்டும் ஒரு முறை அவர்கள் அந்தச் சட்டத்தைப் படித்துப் பார்க்க வேண்டும்.

அப்போது அந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறபோது 6 மாதம் கழித்துத்தான் அமலாக்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால் பொதுவாக எந்தச் சட்டமும் ரெட்ராஸ்பெக்டிவ் என்ற வகையிலே முன் தேதியிட்டுத்தான் அமுலாக்கப்படும். அப்படியில்லாமல் 6 மாதம் கழித்து அமுலாக்கப்படும் என்று அப்போது கொண்டுவரப்பட்டது என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும் அந்த விஷயத்திற்குள்ளே போக நான் விரும்பவில்லை.

ஆனால் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் பேசுகின்றபோது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டுவந்த சட்டம்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே இன்னொரு நிலைமை இருப்பதை அவர் பார்க்கத் தவறி விட்டார் என்று கருதுகிறேன். அதாவது 6 மாத காலத்திற்குள் எந்தவிதமான நிலமும் விற்கவோ வாங்கவோ கூடாது என்று குறிப்பிடப்பட்டிருந்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, அதிலே யாருக்கு வேண்டுமானாலும் மாற்றி எழுதிக்கொள்ளலாம் என்று இருக்கிறதே அதை அவர்கள் பார்க்கவில்லையா என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் நான் [illegible] காரியத்தை இப்போது பேசிக் கொண்டிருக்க விரும்பவில்லை. ஃபேக்ட்டை-க்காகச் சொன்னேன்.

அடுத்து, இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் நான் வரவேற்கிறேன். ஆனால் இதிலே ஒரு சின்ன சந்தேகம் இருக்கின்றது. இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் அமுலாக்கப்பட்ட பிறகு எவ்வளவு நிலங்கள் எடுக்கப்பட்டது என்பது தெரியவேண்டும். இந்தச் சட்டம் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ம் நாளிலே இருந்து அமலுக்குக்கொண்டுவரப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதற்கு முன்னாலே எடுக்கப்பட்ட நிலங்களுக்கும் காம்பென்சேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்களைப் பொறுத்தவரையில், முன்னாலே எடுக்கப்பட்ட நிலத்திற்கு காம்பென்சேஷன் வாங்கியவர்களுக்கு ஒரு தொகையும், பின்னால் காம்பென்சேஷன் வாங்கியவர்களுக்கு இன்னொரு தொகையும் கொடுக்கப்பட்டது என்பது சட்டபூர்வமாக நிற்குமா என்பதுதான் எனக்கு ஏற்பட்ட சந்தேகம். இதிலே டிஸ்கிரிமினேஷன் இருக்கிறது. அந்த டிஸ்கிரிமினேஷனைப் போக்குவதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை.

மேலும் காம்பென்சேஷன் இன்னும் எவ்வளவு நிலத்திற்கு கொடுக்கப்பட இருக்கிறது என்பது தெரிந்தால் நல்லது. உதாரணமாக ஒரு 60 ஆயிரம் ஏக்கர் எடுத்துக்கொண்டு அதிலே 58 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குக் கொடுத்துவிட்ட பிறகு 2 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு குறைந்த காம்பென்சேஷன் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால் இதிலே ஒன்றும் பெரிய ஆதாயம் வந்துவிடுவதில்லை. ஆகவே இவைகளை எல்லாம் தெளிவுபடுத்தினால் சமுதாயத்திற்கு எவ்வளவு பெரிய நலன் ஏற்படுகிறது என்பதை நாம் காணமுடியும். ஆகவே ஒட்டுமொத்தமாக இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். அதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் இந்த மாதிரி பொதுவான சிலவற்றை நாம் கருத்திலே கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல. முன்பெல்லாம் கணவனுக்கு சொத்து இருக்கலாம், மனைவிக்கு சொத்து இருக்கலாம், மைனர் குழந்தைகளுக்கு இருக்கலாம் என்று இருந்தது. ஆனால் இதையெல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாக காம்பென்சேஷன் கணக்கிடுகிறபோது குறைத்துத்தான் வரும். ஆனால் அந்தந்த யூனிட்டிற்கு வருகிற காம்பென்சேஷன் அதிகமாக இருக்கலாம். ஆகவே அதிலே லாபம் இருப்பதால் இது ஒரு நல்ல மாற்றம்தான் என்பது என்னுடைய கருத்து. மேலும் நாளைக்கு இதனால் ஏற்படுகின்ற காரியங்களை எல்லாம் எண்ணிப்பார்த்துத்தான் மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவந்திருப்பார்கள் என்பதிலே எனக்கு ஒன்றும் சந்தேகம் கிடையாது. இருந்தாலும் எனக்கு

ஏற்பட்ட சந்தேகங்களுக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில்
கூறவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை
வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

<u>திரு. என். பழனிவேல்</u> : தலைவர் அவர்களே,
உபரி நிலங்களுக்கு நஷ்டயீடு வழங்கக்கூடிய முறையில் வந்திருக்
கக்கூடிய இந்த மசோதாவை குற்றம் சொல்லவில்லை என்
றாலும்கூட உபரி நிலம் எங்கே இருக்கிறது என்பதில்தான் எனக்கு
பிரச்சனை இருக்கிறது. இதுபோன்ற சட்டம் இந்த மா
நிலத்தில் 18 ஆண்டு காலமாக அமலில் இருந்து கொண்டிருக்
கிறது. 30 ஸ்டாண்டர்டு ஏக்கர், 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்
றெல்லாம் 18 ஆண்டுகாலமாக பல்வேறு தலைவர்களின் ஆட்சியின்
கீழ் அமலில் இருந்து கொண்டிருக்கிறது. சுமார் 1½ கோடி ஏக்கர்
விஸ்தீரணம் நிலங்கள் உள்ள நம் மாநிலத்தில் 80,000 ஏக்கர்
நிலம் மட்டுந்தான் விநியோகிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்
கள் கூறினார்கள். இந்த மசோதாவை அவர்கள் அறிமுகம் செய்
யும்போது பேரறிஞர் அண்ணா அவர்களைப் போல் தெளிவாக
வும், கனிவாகவும், துணிவாகவும் கூறுகிறேன் என்று சொன்
னார்கள். அதை நான் வரவேற்கிறேன். தெளிவுடனும், துணி
வுடனும் இது அமல்படுத்தப்படுமானால் நான் உண்மையிலேயே
பாராட்டுவேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். பி. சோமசுந்தரம்</u> : நான் சொன்
னது உறுப்பினர்கள் எல்லாம் நன்றாகப் பார்த்து விட்டு வந்திருக்
கிறீர்கள்——நீங்கள் நல்லதைச் சொன்னாலும் கெட்டதைச்
சொன்னாலும் தெளிவாகச் சொல்லுங்கள், துணிவாகச் சொல்
லுங்கள்——கனிவாகச் சொல்லுவதும் சொல்லாததும் உங்கள்
விருப்பத்தைப் பொறுத்தது என்றுதான் சொன்னேன்.

<u>திரு. என். பழனிவேல்</u> : அமைச்சர் அவர்கள் இந்தச் சட்
டத்தை அமல் நடத்தக்கூடிய நேரத்தில், கனிவு என்ற வார்த்
தையை உபயோகப்படுத்தாமல் நிலம் அத்தனையும் எடுக்க
வேண்டும். இன்று நிலம் எடுக்கமுடியாத சூழ்நிலைக்குக் காரணமே
அந்தக் கனிவுதான் என்று கருதுகிறேன். கறாராக இப்போது
இருக்கக்கூடிய நிலங்களை எடுக்க இப்போது இருக்கக்கூடிய
அதிகாரிகளை நம்பினால் இது இப்படியேதான் இருக்கும்.
ஆங்காங்கு மக்கள் குழுக்களை அமைத்து, சர்வகட்சிக் குழுக்களை
அமைத்து இப்படிப்பட்ட உபரி நிலங்கள் எங்கே இருக்கின்றன,
யாரிடம் இருந்து எடுக்கவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம்
அறிந்து முடிவு எடுக்கவேண்டும்.

என்னுடைய தாலுகாவில் நரேந்திரா பால் பண்ணைக்குச்
சொந்தமாக 1,300 ஏக்கர், எஸ்.எஸ். ராஜனுக்கு 1,400 ஏக்கர்
ஆக மொத்தம் 2,700 ஏக்கர், நிலம்சம்பந்தமாக கடந்த ஏழெட்டு
ஆண்டுகாலமாக கேஸ் இருந்து கொண்டிருக்கிறது. இன்றையதினம்
ஒரு ஏக்கருக்கு ஐயாயிரம் ரூபாய் ஆறாயிரம் ரூபாய் குத்தகைப்
பாக்கி செலுத்தவேண்டுமென்று கேஸ் போட்டிருக்கிறார்கள்.
அந்தக் கேஸ் நின்றுக்கும் ஏ.ஓ. முன்னால் இருக்கிறது. அந்த
ஏ.ஓ. ஒரு பெரிய பெருந்தனி. அவர் தாலுகா ஆபீசுக்கு வருவது
கிடையாது. அவர்களுடைய தொடர்பு எல்லாம் நிலப்பிரபுக்
களுடைய வீடுகளில்தான். அதிகாரி எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்
எல்லாம் உடனே நிலப்பிரபுக்களுக்குத் தெரிந்துவிடும். அப்போப்
பட்ட அதிகாரிகளை வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தை
அமல் நடத்துவது என்பது நிலங்களை விநியோகிப்பது
என்பது முடியாத காரியம் என்று சொல்ல விரும்புகிறேன்.

உபரி நிலத்தை ஏழை அரிசன விவசாயிகளுக்கு, நிலமற்ற
வர்களுக்குக் கொடுக்கவேண்டும். நிலத்திற்குக் கண்டிப்பாக
நஷ்ட ஈடு கொடுக்கக்கூடிய முறை இருக்கக்கூடாது. அவர்கள்
நஷ்ட ஈடு அல்ல, ஒரு சிறு தொகைதான் என்று சொல்லியிருக்
கிறார்கள். எப்படி வேண்டுமானாலும் நீங்கள் வைத்துக் கொள்
ளுங்கள். சாகுபடி செய்யக்கூடிய அந்த ஏழை எளியவர்களிடத்
தில் இருந்து ஒரு பைசா கூட அரசு வசூலிக்கக்கூடாது.

கீழே இருக்கக்கூடிய கேஸ்களை விசாரிக்கக்கூடிய லாண்ட்
கமிஷனிடம் ஆயிரக்கணக்கான கேஸ்கள் பைசலாகாமல் இருக்
கின்றன. உடனடியாக அந்தக் கேஸ்களைப் பைசல் செய்ய
கீழே இருக்கக்கூடிய தனி அதிகாரிகள் மட்டுமல்லாது மக்கள்
குழுக்களை அமைத்து அந்தக் கேஸ்களை உடனடியாகப் பைசல்
செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மார்க்
சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக் கொண்டு
என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கே. சௌந்திரராசன்</u> : தலைவர் அவர்களே,
இன்றையதினம் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்
கின்ற நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் என்னுடைய
சில கருத்துக்களை எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்தச்
சட்டம் 1961-ஆம் ஆண்டு இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்
பட்டிருந்தாலும் காங்கிரஸ் இயக்கம் 1931-ஆவது ஆண்டில்
கராச்சியில் போட்ட தீர்மானத்தின் அடிப்படையில்
Land for the tiller என்ற அடிப்படையில் தீர்மானம்
போட்டு, மெல்ல மெல்ல 1961-ல் இந்தச் சட்டம் கொண்டு
வரப்பட்டு நிறைவேற்றிய நேரத்தில், 1961 ஏப்ரல் மாதத்தில்
அதனுடைய முன்வடிவு கொடுக்கப்பட்டு, பின்னால் பொறுக்குக்

குழுவுக்கு அனுப்பப்பட்டு, 1961 ஆகஸ்டு திங்களில் சட்ட
மாக நிறைவேற்றிய நேரத்தில் இங்கு இருந்த எதிர்க்கட்சிகள்
எல்லாம் — இங்குள்ள காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கூட
வருத்தப்பட்டுக் கொண்டார் — காங்கிரஸ் இயக்கத்தைப் பற்றி
பேசுவது சரியல்ல என்று சொன்னார்களா? அன்றைக்கு இவர்கள்
காங்கிரஸ் இயக்கத்தில் இருந்தார்களா என்பது தெரியவில்லை.
அன்றையதினம் சோஷியலிச இயக்கத்தில் இருந்தார்கள் என்று
நினைக்கிறேன். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் கல்யாணசுந்
தரம் அவர்கள், இந்த மன்றத்தில் இருந்த மற்ற எதிர்க்கட்சித்
தலைவர்கள், அறிஞர் அண்ணா அவர்கள், மற்றும் சோஷியலிச
கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் அன்றைக்கு இந்தச் சட்டம்
நிறைவேற்றிய நேரத்தில், இந்தச் சட்டத்தினால் எதுவும்
வந்துவிடப் போவதில்லை, இது மாயாபஜார் என்ற அளவில் தான்
இருக்கிறது என்று சொல்லிவிட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) தலைமை

அன்றைக்கு இப்போதிருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்நத
சிலரும் கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். அப்போது சொல்
லப்பட்டது, இந்தச் சட்டம் 52-லேயே வரும் என்று எதிர்
பார்த்தோம். அப்போதிருந்து கொண்டுவரப்படாமல் இப்
போது இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதால் எந்த பெரிய
நலனும் வந்துவிடப் போவதில்லை; ஏதோ புலி வரப்போகிறது,
புலி வரப்போகிறது என்று சொல்லிக் கொண்டிருநதது. இப்
போது பூனையாகத்தான் வந்திருக்கிறது என்று எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள். மேலும் இந்தச் சட்டத்தைப்பற்றி குறிப்
பிடுகிறபொழுது, இது நல்ல குழந்தையாக இருக்கும் என்று
நினைத்தோம், ஆனால் இந்தக் கரு வெறும் மகோதரமாகத்
தான் இருக்கிறது என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
இப்படியெல்லாம் சொல்லப்பட்ட இந்தச் சட்டம் இப்போது
உயிரைப் பெற்று வந்திருக்கிறது என்று சொன்னால், உள்ளபடியே
இப்படிப்பட்ட இச்சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்து
இருக்கிறது என்று சொன்னால் அதற்காக நாம் பாராட்ட
கடமைப்பட்டிருக்கிறோம். இநதச சட்டத்தை முன்னால்
கொண்டு வந்த நேரத்தில் இந்த மாமன்றத்தில் திராவிட முன்
னேற்றக் கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள்
சொன்னார்கள். இந்த மசோதா மிகவும் இளைத்திருக்கிறது
என்று சொல்லி பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்பட்ட சட்டம்,
மாமனார் வீட்டுக்குப் போய்விட்டு வந்த பின்பும் அங்குள்ள வறு
மையின் காரணமாக மருமகன் வலுவிழந்துதான் காணப்படுகிறார்
என்று சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு பேராசிரியர்
அவர்கள் பேசும்போது, இது ஒரு உயிரிழந்த சட்டமாகவும்,
எலும்புக்கூடான சட்டமாகவும்தான் இருக்கிறது என்று

சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல இது கொஞ்சம்
கொஞ்சம் இருந்த ஜீவனையும் இழந்து வந்திருக்கிறது என்று
அப்போது எதிர்த்துப் பேசிய கலைஞர் அவர்கள் சொல்லியிருக்
கிறார்கள். இப்போது இழநத ஜீவனை மெல்ல மெல்ல பெறச்
செய்து இப்போது நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்
அறிஞர் அண்ணா அவர்களின் ஆசையைப் பூர்த்தி செய்கின்ற
வகையில் இதைக் கொண்டு வந்திருப்பதால் தான், அண்ணா
அவர்களின் படத்தைப் பார்த்து விட்டுப் போகவேகாக அமைச்சர்
அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். எந்த
முறையில் சட்டம் கொண்டு வரவேண்டுமோ, அந்த முறையில்
இப்போது சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இநதச்
சட்டத்தைப்பற்றி குறிப்பிடுகிறபொழுது, நண்பர் ராமசாமி அவர்கள்
அவர்கள் மசானியலிஸம் என்பது காகிதப் புலியாக இருக்கக்
கூடாது என்று சொன்னார்கள். நான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்
னேற்றக்கழகத்தில் அண்ணாவைப்பற்றித் தெரியாதவர்கள்யாரும்
கிடையாது. அண்ணாவைப்பற்றியும் அண்ணாவின் கொள்கை
களைப்பற்றியும் தெரிநதவாகள், அண்ணாவோடு இணை
திருந்தவர்கள், அண்ணாவோடு ஒன்றாக இருந்தவர்கள், இப்படிப்
பட்டவர்கள்தான் இங்கே இருக்கிறார்கள். ஆகவே இங்கே
இருக்கின்றவர்களைப்பற்றி ராமசாமி அவர்கள் சந்தேகப்
பட மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

அண்ணா அவர்களின் கொள்கைகளுக்கு வலுவூட்டுகின்ற
வகையில் நிலத்தின் விலையை நிர்ணயிக்கிறபொழுது, சந்தை
யிலுள்ள விலை இருக்கும் அளவுக்கு மட்டுமே இருக்க வேண்டும்
என்று அப்போது எதிர்க்கட்சிகள் சாடியதை— வருவாய்த் துறை
அமைச்சர் அவர்கள் சீராக்கும் விதத்தில், சட்டத்தின் மூலம்
விலையை நான்கு அல்லது அய்ந்து மடங்கு மட்டும் என்று
குறைக்கின்ற வகையில் சீரான திட்டத்தைக் கொண்டு வந்து,
நிலத்தினுடைய விலை 350 ரூபாயிலிருநது 3,500 ரூபாய் வரை
என்ற அடிப்படையில் கணக்கிட வேண்டும் என்ற வகையில்
திருத்தத்தைக் கொண்டு வந்து, இந்தச் சட்டமுன்வடிவைக்
கொண்டுவந்திருக்கிறார்கள். மேலும்,

The Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Act

என்ற சட்டத்தின் அடிப்படையில் உழுபவனுக்கே நிலத்தை
சொந்தமாக்கிவிடலாம் என்று சொன்னார்கள். அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அதற்கு தடையாக
இல்லை. அதை சரியான நேரத்தில் கொண்டு வருவதற்கு
நமது புரட்சித் தலைவர் அவர்கள் தங்களைத் தயார்படுத்திக்
கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெளிவாக
குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பொதுவாக எங்களைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுக்குத் தெரிந்த அளவு நிச்சயமாகத் தெரியவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம். அவர்கள் எந்த அளவுக்கு எங்களை விளங்க வைக்கிறார்களோ அந்த அளவுக்கு அதை நான் வரவேற்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நீங்கள் சொன்ன கருத்துக்கு எனக்கே விளக்கம் வேண்டுமென்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஏற்கனவே விளக்கம் இல்லை. நான்தான் விளக்க வேண்டுமென்று சொன்னால் எப்படி என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னேன். அமைச்சர் அவர்களுக்குப் புரியவில்லை என்று சொல்லுகிறார்கள். சோஷலிசத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொன்னார்கள். நான் அதற்காகத்தான் சொன்னேன். ஒருவேளை மாண்புமிகு லத்தீப் அவர்களுக்கு அதிலே நல்ல ஞானம் அல்லது பாண்டியத்தியம் அல்லது ஆற்றல், அறிவு எது இருந்தாலும் அதை வைத்து இந்தப் புரியாத மந்திரிகளுக்கு புரிய வைக்க அவருடைய திறமை முழுவதையும் பயன்படுத்த வேண்டுமென்றுதான் குறிப்பிட்டேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : எனக்குத் தெரிந்த காபிடலிசம், கம்யூனிசம், சோஷலிசத்தைப் பற்றிச் சொல்ல முடியும். இந்த பிளஸ், பிளஸ், பிளஸ் ஈக்வெல் டு என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படியானால் அது உண்மையிலேயே பெரிய காரியந்தான். லத்தீப் அவர்களுக்கே புரியவில்லை என்றால் சாதாரணமான காரியம் அல்ல.

திரு. எம். ஏ. லத்தீப் : கம்யூனிசம் கம்யூனிசமாகத்தான் இருக்க முடியும். அது காபிடலிசமாக இருக்க முடியாது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : மசோதாவின் பேரில் பேசுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : மசோதாவின் பேரில்தான் பேசுகிறேன். அமைச்சர் அவர்கள் சொல்கிற சோஷலிசப் பூங்காவில் கொஞ்ச நேரம் தென்றலை அனுபவிக்கக் கூடாதா

இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றுவதன் வாயிலாக எவ்வளவு உபரி நிலத்தை அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்க வேண்டும், அதுமட்டுமல்லாமல் எவ்வளவுபேர் இதனால் பயனடையப் போகிறார்கள் என்பதையும் இதிலே தெரிவித்திருக்க வேண்டும், எவ்வளவு பேர் பயனடையப் போகிறார்கள் என்பதைப் பற்றியும் தெரிவிக்கவில்லை. எவ்வளவு உபரி நிலம் நாட்டு மக்களுக்குக் கொடுக்கப்படும் என்பதையும் தெரிவிக்கவில்லை, இதிலே மாபெரும் பயன் விளையப் போகிறது என்று மட்டும் சொல்வதானால் அதற்கு ஒரு சட்டம் தேவையில்லை. அதற்கு ஒரு துறையும் தேவையில்லை. அமைச்சரும் தேவையில்லை. இந்த அவையும் தேவையில்லை. எல்லோரும் உட்கார்ந்து விவாதிக்க வேண்டிய அவசியமும் இல்லை. விளைவைச் சொல்லாமல் ஒன்றைச் விளைவு இருக்க வேண்டும், என்று சொன்னால் எப்படி சொல்லி இப்படி ஏற்படப் போகிறது எதிர்பார்க்கிறீர்கள்? எவ்வளவு பேர் ஏற்படப் போகிறது? என்ன இதைப் பற்றியெல்லாம் பயனடையப் போகிறார்கள்? என்று சொன்னால் யார் சொல்லாமல் பயனடையப் போகிறோம் என்பதுதான் பிரச்சினை, இந்த பயனடையப் போகிறார்கள் என்பதுதான் பயனடையப் போகிறார்களா? ஏழை நாட்டு ஏழை எளிய மக்கள் பயனடையப் போகிறார்களா? நிலம் இல்லாமல் விவசாயிகள் பயனடையப் போகிறார்களா? தவித்துக் கொண்டிருக்கிறவர்கள் பயனடையப் போகிறார்களா? யார் பயனடைந்து எப்போதுமே நடந்து கொண்டிருப்பது போல் பயனடையப் போகிறார்களோ அவர்கள்தான் பயனடையப் போகிறார்களோ கொண்டிருக்கிறார்களோ என்ன விளக்கம் கொடுத்திருக்கிறார்கள், இந்த மசோதாவிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்? இதிலே சில ஷரத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆர்டிகிள் 46 பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆர்டிகிள் 46-ல் சொல்லப்படுவது—ஷெட்யூல்டு காஸ்ட்ஸ் ஷெட்யூல்ட் டிரைப்ஸ் இவர்களுடைய நல்வாழ்வுக்காக சமூக பொருளாதார அடிப்படையில் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அநீதிகளைப் போக்குகின்ற வகையில் பொருளாதார சாதனங்களைப் பயன்படுத்த வேண்டுமென்பது டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ்— அண்டர் ஆர்டிகள் 46—

I do agree with you-the commendable proposal that you have presented to this House.

[பிற்பகல் 12-40]

ஆனால் நான் கேட்கிறேன், இந்தச் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் முன்னுரிமை கொடுத்து ஏதாவது சொல்லப்பட்டு இருக்கிறதா? சார்லஸ் லேண்ட் வருகிறபோது, அந்த உபரி நிலத்தை நிலமில்லாதவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்பொழுது ஆர்டிகிள் 46 ஐப் பயன்படுத்தி

இருப்பதால் முன்னுரிமை தாழ்ந்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடி
மக்களுக்கும் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட. பொருளாதார
சமூக ரீதியிலே வீக்கர் செக்ஷனாக இருக்கிற பலவீனத்தரப்
பினருக்கும் கொடுக்கப்படும் என்று சொல்லியிருப்பார்களானால்
நான் இதை வரவேற்றிருப்பேன். அலங்காரத்திற்காக இரண்டு
ஆர்டிகிள்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள், ஆர்டிகிள்
என்றால்

It may be Articles of the
constitution or political articles.

என்ற வகையிலேதான் இருக்கிறதே தவிர வேறு அல்ல என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

இந்தச் சட்டம் வந்திருப்பதற்குக் காரணம்—நான் அமைச்சர்
அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்— பேரிலி என்று
சொல்லப்படுவது. ஒரு யூனிட்டாக எடுத்துக் கொள்ளப்பட்டு
நட்ட ஈடு கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லப்படுகிற
கருத்தை ஹைகோர்ட் நிராகரித்து விட்டு தனித்தனி நபர்கள்
என்ற முறையிலே எடுத்துக்கொண்டு அவரவர்களுக்குச் சேர
வேண்டிய பங்கு என்ன என்பதை நிர்ணயிக்கக்கூடிய வகையிலே
நட்ட ஈட்டைக் கொடுக்கவேண்டும் என்ற முறையிலே தீர்ப்
பளித்து இருக்கிறது. அந்தத் தீர்ப்பினால் தான் இந்தச் சட்டம்
இங்கே வந்திருக்கிறது. பேரிலி என்பதை விளக்கி அந்த
முறையிலே மாற்றி வந்திருக்கிறது, 'காம்பன்சேஷன்' என்பதை
'அமவுண்ட்' என்று மாற்றியிருக்கிறார்கள், நான் வரவேற்
கிறேன். நட்ட ஈடு என்று சொன்னால் அது அதிகமாக
இருக்கும், ஏதாவது ஒரு 'அமவுண்ட்' தொகையை பிக்ஸ் பண்ண
வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். வரவேற்கிறேன்,
ஆனால் அது நடைமுறையில் எப்படி நடந்தது என்று கவனிக்க
வேண்டும், அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்,
நீங்களே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள்,

"The amount payable for the sumplus lands taken over under
Tamil Nadu Act 58 of 1969 was found in certain cases to be higher
than the market value of such land.

என்று சொல்லியிருக்கிறீர்கள், ஏனென்றால் உங்களுடைய
அதிகாரிகள் இருக்கிறார்களே, அந்த அதிகாரிகள் நிர்ணயித்த
தொகை என்னவென்றால் மார்க்கட் வேல்யூவிற்கு அதிகமாக
இருக்கிறது என்று ஒத்துக்கொண்டு இருக்கிறீர்கள். சட்டம்,
நோக்கம், கொள்கை, கோட்பாடு, தேசத்தினுடைய அபிலாஷை,
நாட்டினுடைய விருப்பம், காலத்தினுடைய கட்டளை இருக்
கிறது. ஆனால் அதிகாரிகள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால்

மார்க்கட் வேல்யூவிற்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள்,
எப்போது, அப்போது கொடுத்திருக்கிறார்கள். இப்போது
தொகையை நிர்ணயிக்கின்ற உரிமையை அதே அதிகாரிகளுக்குத்
தான் கொடுக்கிறீர்கள், தொகை என்றால் என்ன, எப்படிக்
கொடுப்பது, தொகை என்பது with reference to what?

எதற்கு கம்மென்சுரேட் ஆக இருக்க வேண்டும், எதற்கு கரஸ்
பாண்டிங் ஆக இருக்க வேண்டும், யார் செய்யவேண்டுமென்று
சொன்னால்

You cannot give that power and discretion to the Officers.

என்று வரும்பொழுது ஆர்பிட்ரரினஸ் இருக்கிறது. ஒரு
இடத்திலே குறைத்துக் கொடுக்கலாம். அதுவும் சமூக நீதிக்கு
ஒவ்வாதது. உங்களை நான் கேட்டுக்கொள்வது பள்ளத்தை
மேடாக்குங்கள். ஆனால் பேட்டைப் பள்ளமாக்காதீர்கள்,
மேடு இருக்கிறது, மேடு இருக்கிறது, அதைப் பள்ளமாக்கவேண்டு
மென்று அதிலே கவனம் நீங்கள் செலுத்துகிறீர்களே தவிர
மேட்டையும் சமப்படுத்தி. பள்ளத்தையும் மேட்டையும் சமப்
படுத்தி சமமான நிலையை உண்டாக்குவதற்கு வழிசெய்ய
வில்லை, அதுதான் சோஷலிஸமா?

Is that social justice Is that socialism?

நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? ஓரிடத்தில் இருக்
கின்ற பள்ளத்தை நிரப்புவதற்கு வேறொரு இடத்தில் பள்ளத்
தைத் தோண்டி அங்கேயுள்ள மண்ணை இங்கே கொண்டுவந்து
போட்டு இதைச் சமமாக ஆக்கி அங்கே பள்ளமாக ஆக்கு
கிறீர்கள், இதுதான் சமூக நீதியா? ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு
உதவாது. 'ஆல் பவர் மைனாரிட்டியால் பிரின்சிபிள்ஸ்' எல்
லாம் இருக்கிறது. சோஷலிச பிரின்சிபிள்ஸ் எல்லாம் இருக்கிறது
என்றெல்லாம் சொல்லலாம். ஆனால் நீங்கள் புத்தகத்திலே படிக்
கிறீர்களே. அந்தப் புத்தகப்படிப்பு கவைக்கு உதவாது, நாட்டிலே
உள்ள அபிலாட்சைகளை, நாட்டிலே உள்ள உணர்வுகளை, சமூக
அமைப்புகளை, ஆகிய இவைகளையெல்லாம் பாரபட்ச
மற்ற நிலையிலே வைத்து எண்ணி நீங்கள் காரியத்தைச்
செய்தால்தான் வெற்றி அடைவீர்களே தவிர வேறு வகையில்
நீங்கள் வெற்றி அடைய முடியாது, இந்த சோஷலிசக் கொள்
கைகளை நிறைவேற்ற நான் கேட்டுக்கொள்வது என்னவென்
றால், முதலிலே சமுதாயத்திலே இருக்கின்ற பல்வேறு தரப்
பட்ட மக்களிடையே இந்த உணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்,
பெரும்பான்மையானவர்களுக்கு இந்த உரிமை நமக்கு இருக்
கிறது என்ற நாவெட்டுகூட இல்லை. ஏழை எளிய மக்கள்,
கிராமங்களிலே உள்ள மக்கள் மிகவும் நல்ல மக்கள், நம்முடைய
நாட்டு மக்கள் இருக்கிறார்களே அவர்கள் தெய்வீகமானவர்கள்.
அவர்களைப்போல நல்ல மக்கள் உலகத்திலேயே கிடையாது
(மணியடிக்கப்பட்டது).

[1979 பிப்ரவரி 22

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): கொஞ்சம் சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். இன்னும் 5 பேர் பேசவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: ஒரு காலத்திலே இருக்கின்ற பெரும் பணக்காரர்கள். பெரும் நிலக்கிழார்கள் இருக்கிறார்களே அவர்கள் சொல்வதுதான் சட்டம் என்று நினைத்துக்கொண்டிருக்கின்ற வழக்கம் நம் நாட்டு மக்களிடத்திலே இருக்கிறது, எனவே, உங்களுக்கு உரிமை உண்டு என்ற சமுதாய மேம்பாடு உணர்வை மக்களுக்கு ஏற்படுத்தியாக வேண்டும், இதை மக்கள் மூலமாகச் செய்ய வேண்டும். அதற்கு அந்த உணர்வுகளை மக்களுக்கு அளிக்க வேண்டும். அதிகாரிகளிடத்திலே கொடுத்துவிட்டு, தொகையை நிர்ணயிக்கச் சொன்னால் எப்படி நிர்ணயிக்கப் போகிறார்கள்?

ஒரு இடத்திலே சொல்கிறார்கள். அது என்ன என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. 9 ரூபாய் ஒரு ஏக்கருக்கு என்று சொல்கிறார்கள், 20 தடவை 'ஆன்யூவல் வேல்யூ அலாங் வித் 9 ருபீஸ்' என்று என்னமோ போட்டாக்காரன் ஃபிக்ஸ் செய்வது மாதிரி செய்கிறார்கள், 10 ரூபாய் என்று வைக்கட்டும். ஏன் 9 ரூபாய்?

What is the criteria ? What are the norms ? What is the basis upon which you have fixed Rs. 9 and also fixed the annual value ? Nothing of the kind. It is only arbitrariness. Because you have got the sovereign right to pass and the majority to pass any Act, you fix up something arbitrarily without there being any principle, without there being any criteria whatsoever. The Law Department just writes something, passes it over to the Minister and the Minister presents it before the House. Because you have got the majority, it is finished. What will happen ? What are the implications ? What are the consequences ?. What are the principles ? What are the norms ? Nothing of the kind. Simply with your brutal majority just bulldoze it and get it passed and dump it upon the heads of the people.

THE HON. THIRU S. RAGHAVANANDAM : Is brutal majority a parliamenary expression?

1979 பிப்ரவரி 22]

Thiru M. A. Latheef: You please ask our Finance Minister who has been a very successful and active Member of Parliament and also the Revenue Minister. There is nothing unparliamentary in saying like that (Thiru R. Thamaraikani rose). Oh our Thamaraikani, very good.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே. நம்முடைய லத்தீப் அவர்கள் நல்லமுறையிலே தமிழிலே பேசிக் கொண்டிருந்தார்கள், இப்பொழுது ஆங்கிலத்திலே பேசுவதால் அவருடைய கருத்துக்களை எங்களுக்குப் புரியவில்லை, எங்களுக்கு ஆவலாக இருக்கிறது, தமிழிலே கேட்க வேண்டுமென்று.

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு உறுப்பினரவர்களின் உணர்வுகளை நான் மதிக்கிறேன், முடிந்த அளவிலே தமிழிலே பேச முயற்சி செய்கிறேன்.

இவையெல்லாம் இருக்கின்றன. இதில் பிட் பிட்டாகப் பார்த்தால் என்னவோ இருக்கின்றன, நான் இறுதியாக மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வது. ஆர்டிகிள் 46, ஆர்டிகிள் 39-ஏ, அண்ட் பி-இல் நீங்கள் சொல்லியிருக்கிறபடி அவைகள் நிறைவேற வேண்டுமென்றால் எந்தெந்த அடிப்படையிலே எப்படி அமல்படுத்த வேண்டும், யார் யாருக்கு கிடைக்க வேண்டும், அமல்படுத்த வேண்டும். யார் செயல்படுத்த வேண்டும் என்பதை நினைத்துச் [illegible] என்று எங்களுக்குக் கொடுக்கவில்லை, அதற்கான விளக்கம் என்ன என்று ஒன்றும் கொடுக்கவில்லை, இருக்க வேண்டும். அந்த விளக்கங்கள் ஒன்றும் கொடுக்க நினைக்க இல்லை. நீங்கள் சரியான அமென்ட்மென்ட் கொடுத்த [illegible] ஹைகோர்ட் தீர்ப்புக்காக என்று வைத்து [illegible] சட்டச் சிக்கலைத் தீர்க்க [illegible] அதனால் பயன் நினைத்துக்கொண்டு வருகிறீர்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இல்லை, ஏழைகளுக்கும், ஆர்டிகிள் 46-லே சொல்லியிருக்கிறீர் முன்னுரிமை கொடுத்து, இந்தச் சட்டம் முழு அளவில் களை [illegible] நிறைவேற்றுவதற்கு இந்தக் குறைபாடுகள் இருந்தாலும் பயனளிக்கும், இதில் சில குறைபாடுகள் நீக்கி விடவேண்டும், அதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் நீக்கி செய்வதை எல்லாம் அரசாங்கம் [illegible] அரசாங்கம் வேண்டிய அவசியமில்லை. இதில் எதிர்க்கட்சி [illegible] வேண்டியதை நிறைவேற்றுவதாக இருந்தால், உள்ள நல்ல நோக்கங்கள் நாங்கள் சொன்ன கருத்துக் களை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவார்களேயானால் விரும்பத் தக்கது. அந்த அளவிற்கு இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன்.

[பிற்பகல் 12-50]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற மசோதாவை ஆதரித்து சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இந்த மசோதா, ஏதோ அமைச்சரவர்கள் கூறியதுபோல், பெரிய சோஷலிசப் பூங்காவை அமைப்பதற்கு உதவுமா என்பதில் நிச்சயமாக எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. காரணம், ஏற்கனவே இருந்த சட்டத்திலிருந்த எண்ணத்திற்கு மாறாக, உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஏற்கனவே இருந்த சட்டத்தின் எண்ணத்தைத்தான் அமுல்படுத்தக் கொண்டு வந்தோம். ஆனால், சில வழக்குகள் உயர்நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தால், உயர்நீதிமன்றம் எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதோ அதை எண்ணிப் பார்க்காமல், சட்ட நுணுக்கத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கியதின் காரணமாக, குடும்பத்திற்கு நஷ்ட ஈடு வழங்குவது முறையாகாது, பாதிக்கப்பட்ட தனி நபர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்ற கருத்தை எடுத்துக் கூறியதன் காரணமாக ஏற்கனவே இருந்த சட்டம் அமுல்படுத்தப்பட்ட முறையில் அளிக்கப்பட்ட ''காம்பன்சேஷன்'' குறைந்துவிட்டது, பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் காம்பன்சேஷன் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும் என்பதைத் தவிர்ப்பதற்காக இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம். ஆக, இந்தச் சட்டத்தில் எந்தவிதமான வித்தியாசமும் ஏற்படவில்லை. ஏற்கனவே இயற்றப்பட்ட சட்டத்திலிருந்த எண்ணம் எதுவுமே இந்தச் சட்டத்தில் மாறவில்லை. அதிலிருப்பதற்கு ஊக்கம் அளிக்கிற வகையில் வார்த்தைகளை மாற்றியமைக்கத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று நான் எண்ணு கிறேன்.

1961-வது ஆண்டு முதன்முதலாக நிலச்சீர்திருத்தச் சட்டத்தை இங்கே கொண்டுவந்தபொழுது பல குறைபாடுகள் இருந்தன என்பதனை திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களும் இங்கே எடுத்துக் கூறினார்கள். அன்றையதினம் இருந்த சமுதாயத்தின் பின்னணியைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை முன்மொழிந்து பேசுகின்றபொழுது அண்ணாவைப் பார்த்து நான் கூறுகின்றேன் என்று தன் குறையை எல்லாம் எடுத்துக் கூறினார்கள். நான், மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். 1961-வது ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டம் இங்கே கொண்டு வந்தபொழுது இந்த மாநிலத்தில் அல்லது இந்த நாட்டிலிருந்த சமுதாய அமைப்பு, நிலச் சீர்திருத்தக் கொள்கையில் மக்களுக்கு

சமுதாயத்தில் மக்களுக்கு இருந்த
இருந்த எண்ணம், சமதர்ம எதிர்ப்பு, இவற்றையெல்லாம்
எண்ணம், அன்றைக்கிருந்த அண்ணாவின் படத்தைப் பார்க்கிற
சிந்தித்துப் பார்க்கிறபொழுது பெருந்தலைவர் காமராஜர்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்க்கவேண்டும். அந்தச்
படத்தையும் சற்று பார்த்து எண்ணிப் கொள்கைக்காக வாதிட்டு,
சூழ்நிலையில் முதன்முதலாக அந்தக் இந்த நாட்டில் பாரி,
அன்றையதினம் அந்த எண்ணத்தை கொண்டுவந்து நிறைவேற்றி
இந்தச் சட்டத்தை இங்கே நிச்சயமாக பெருந்தலை
இருக்கிறார்கள் என்று சொன்னால், சேர்த்து பாராட்டக் கடமைப்
வா காமராஜர் அவர்களையும் இந்தச் சட்டத்தில் ஏற்கனவே
பட்டிருக்கிறோம். ஏனென்றால், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்
இருந்த குறைபாடுகளை சட்டத்தை நிறை
வேண்டுமென்றோ அல்லது இந்தச் செய்தது அல்ல.
முடியாமல் வேண்டுமென்றோ பொறுத்தஅளவில் ஒரு
பெருந்தலைவர் காமராசரைப் அவர் உறவினர்
சென்ட் நிலம் கூட அவருக்கோ, வைத்துச் சென்றதும் இல்லை
களுக்கோ வைத்திருந்ததும் இல்லை. மசோதாவால் அல்லது இந்தச்
இந்த நாட்டு ஏழைகள் இந்த வேண்டும், இந்த நாட்டில் சமதர்ம
சட்டத்தால் நன்மை பெற என்று எண்ணத்தின் காரண
சமுதாயம் உருவாக வேண்டும் காமராசர் அவர்கள் பாடுபட்டார்கள்
மாகத்தான் பெருந்தலைவர் விரும்புகிறேன். 1961-ம்
என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட மாமன்றத்தில் கொண்டு வந்த
ஆண்டு இந்த மசோதாவை இந்த இருந்த தி.மு.கழகம் அன்றைய
போது, அன்று எதிர்க்கட்சியாக பிரியாமல் இருந்தார்கள். அவர்
தினம் அவர்கள் இரண்டாகப் அதற்கு திருத்தங்கள் கொண்டு
கள் சேர்ந்து இருந்தபொழுது என்னுடைய எண்ணம். தப்பு இருந்
வரவில்லை என்பது தான் விரும்புகிறேன். ஆக இந்த மசோதா
தால் திருத்திக்கொள்ள கொண்டு வராமல், இன்றையதினம்
விற்கு திருத்தங்கள் கூட பொருத்தம் ஆகாது. இந்தச் சட்டம்
அதை குறை கூறுவது இல்லாத சட்டம், பூரண வடிவத்
பூரண வடிவத்தோடு, குறைபாடு வடிவத்தோடு அமைந்திருக்கிறது
தோடு குறைபாடு இல்லாத பல குறைபாடுகள்
என்று வாதாட நான் வரவில்லை. முதல் 2வது திருத்தச்
இருந்தன. ஆனால் 1961-ம் ஆண்டு தேவையான அளவுக்கு
சட்டமாக வந்த 1972 வரையில், சொன்னாலும், அந்த
நன்மைகள் வரவில்லை என்று இந்தச் சட்டத்தின் வாயி
திருத்தச் சட்டம் வந்தபோது தான் நன்மைகள் உண்டாகி விட்டது.
லாக என்ன பெரிய அளவுக்கு பினாமி பெயரில் இருக்
எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலங்கள் எடுத்து ஏழைகளுக்கு கொடுப்ப
கின்றன. அந்த நிலங்களை என்றால் நிச்சய
தற்கு இந்த அரசு ஏதாவது செய்திருக்கிறதா இந்த அரசு வந்து.
மாக இல்லை. இரண்டு ஆண்டுகள் ஆகின்றன

ஏற்கனவே இருந்த சட்டத்தில் இருந்த குறைபாடுகள் அப்படியேதான் இருக்கின்றன. ஒரு சட்டம் நாங்கள் கொண்டு வரவிருக்கிறோம், பினாமி நிலங்களை நிச்சயமாக எடுக்க இருக்கிறோம் என்று கூறுகிறோம். அதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1972-வது ஆண்டு திருத்தச் சட்டம் இங்கே நிறைவேறிய போது நான் இந்த அவையில் இருந்தேன். அது சம்பந்தமாக எவ்வளவு விமரிசனங்கள் எவ்வளவு ஊழல் குற்றச்சாட்டுகள் எல்லாம் இங்கே எழுப்பப்பட்டன என்பதை இந்த நாடு நன்கு அறியும். சட்டம் நிறைவேறுவதற்குள்ளாக பழைய பத்திரங்களை எவ்வளவு பேர், அரசோடு தொடர்பு உள்ளவர்கள் தங்கள் நிலங்களை மற்றவர் பெயர்களில் எழுதி வைத்துக் கொண்டு இருந்தார்கள் என்பதை இந்த நாடு நன்கு அறியும். எனினும் திருந்தபாடில்லை. அதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என்னைப் பொறுத்த மட்டில் இது நல்ல சீர்திருத்தம் தான். சமூகத்திற்கு நல்லது தான். இப்பொழுது ஜனதா பார்ட்டி நல்ல சீர்திருத்தம் ஏற்படுத்த வேண்டும்; உழவர்களுக்கு, விவசாயிகளுக்கு ஏற்ற அளவு அரசு நன்மை செய்ய வேண்டும் என்று கருதித்தான் இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அத்தோடு ஏற்கனவே இந்த அரசு ஒரு மசோதா கொண்டுவந்து அது பரிசீலனை செய்யப்பட்டது. அந்த மசோதாவை சட்டமன்றத்திலே மீண்டும் வைத்து நிறைவேற்றவில்லை. அதை இந்த அரசு நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். உண்மையிலேயே உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தமாக வேண்டும். அதிலும் குறிப்பாக குத்தகைக்காரர்கள் விஷயத்தில் இடைத்தரகர்க பொழுது லாபம் அடைகின்ற முறையில் இருக்கிறது. உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டம் வந்தாலும் கூட உழுபவன் யார் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். உழுபவனுக்கு அந்தச் சட்டம் நன்மை தரக்கூடியதாக அமைய வேண்டும். இடையிலுள்ள தரகர்களுக்கு நன்மை தருவதாக அமையக் கூடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அத்தோடு டெனன்ட்ஸ்ப்ரொடக்ஷன் ஆக்ட் என்று ஒன்று இருக்கிறது. அது இப்பொழுது நடைமுறையில் சரிவர அமுலாக்கப்படுவது இல்லை. நிலக்குத்தகைகாரர்கள் பதிவு செய்ய இயலாமல் போகின்ற வகையில் நிலச் சொந்தக்காரர்களால் தடுக்கப்பட்டு ஏழை விவசாயிகள் பாதிக்கக்கூடிய சூழ்நிலை இங்கே இருக்கிறதென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-00]

கடைசியாக ஜனதா கட்சியைப் பொறுத்த வரையில் நான் தெரிவிக்க விரும்புவது இப்போது நிலத்தை—சொத்துரிமை என்பதை பண்டமெண்டல் ரைட்டில் இருந்து கூட நீக்கி இருக்கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த மசோதா இப்போது அமைந்து இருக்கும் முறையிலும் வரவேற்கிறேன். மேலும் இது நல்ல மசோதாவாக, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் அமைந்து, இப்போது இருக்கின்ற பினாமி நிலங்களை எடுத்து ஏழைகளுக்குக் கொடுக்கும் மசோதாவாக இந்த அவை முன் கொண்டு வரவேண்டும் என்றுகேட்டு, அதற்கு ஆவன செய்ய அரசு முற்பட வேண்டும் என்று கேட்டு அமர்ந்துக்கொள்கிறேன்.

திரு பொ. உத்திரபதி: மாண்புமிகு தற்காலிக பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்களால் நிலச் சீர்திருத்தம் என்ற பெயரால் ஒரு மசோதா இங்கே கொண்டு வரப்பட்டு, அதன் மீது விவாதம் நடத்திக்கொண்டு இருக்கிறோம். அதன் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக சில யோசனைகளை நான் சொல்ல முன் வருகிறேன்.

இந்த நிலச் சீர்திருத்தம சட்டம் என்பது 1961-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது. ஒரு நபருக்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வந்தார்கள். திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் அதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று மாற்றினார்கள். எனது மதிப்பிற்குரிய நண்பர், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் கூட திரு. ரகுமான்கான் பேசுகிறபோது சில விவாதங்களைச் செய்தார்கள். ஆனால், நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1961-ம் ஆண்டு இதே சட்டமன்றத்தில் காங்கிரஸ் கட்சி உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்தபோது, அது ஒரு மோசடியான சட்டம் என்றும், அது மக்களுக்கு உதவாத சட்டம் என்றும், நிலப்பிரபுகளுக்கு ஆதரவு அளிக்கும் சட்டம் என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அன்றைக்கு ஒன்றாக இருக்கக்கூடிய காலத்தில் அந்தச் சட்டத்தை எதிர்த்தது. நாங்கள் கோயம்புத்தூரில் இருந்து தோழர் B. சீனிவாச ராவ் அவர்கள் தலைமையிலும், மதுரையில் இருந்து மணலி கந்தசாமி தலைமையிலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று பிரசாரம் செய்து 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் 1-ம் தேதி முதல் 15-ம் தேதி வரையில் அந்த மோசடியான சட்டம் திருத்தப்படவேண்டும் என்றும் ஒரு குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும், பினாமிகளை ரத்து செய்ய

வேண்டும் என்றும், கோவில் நிலங்களை எடுக்கவேண்டும் என்றும், சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டோம். அதற்காக 16,000 பேர் சிறைக்குச் சென்றோம், நாங்கள் சிறைக்குச் சென்றதற்கான நோக்கம் எங்கள் கோரிக்கையை அரசாங்கம் உணரவும், அதை வலியுறுத்தவும் தான். ஆனால் அதற்கு காங்கிரஸ் அரசாங்கம் அளித்த இதயபூர்வமான பரிசு என்னவென்றால் அந்த 16,000 தோழர்களுக்கும் 2 மாதம் முதல் 6 மாதம் வரையில் சிறைதண்டனை. ஆனால் அந்தச் சட்டத்தால் மிச்ச நிலம் கிடைத்ததா? ஒரு செண்ட் நிலம் கூட கிடைக்கவில்லை. எந்த நிலப்பிரபுவாவது பாதிக்கப்பட்டாரா? இல்லை. நிலப்பிரபுக்கள் பாதுகாக்கப்பட்டார்கள். அவர்களுக்கு முன்பே தெரியுமா? தெரியும். அவர்கள் வேண்டுமானால் சொல்லாமல் இருந்து இருக்கலாம். ஆனால் ஒரு மாதத்திற்கு முன்னதாகவே பத்திரங்கள் எல்லாம் வாங்கி, அதிலே எழுதி வைத்து தப்பித்துக்கொண்டு விட்டார்கள். அந்த நேரத்தில் பத்திரங்கள் கிடைக்காமல் இருந்த காட்சியை தமிழக மக்கள் பார்த்துக்கொண்டு தான் இருந்தார்கள். காங்கிரஸ் கட்சி அதை இல்லை என்று சொல்லமுடியாது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அதை அனுபவ ரீதியாகச் சொல்லுகிறது. அது போகட்டும். அவர்கள் என்ன செய்தார்கள். நிலப்பிரபுக்களைப் பாதுகாத்தார்கள், மடங்களைப் பாதுகாத்தார்கள், கோவில்களைப் பாதுகாத்தார்கள், இதைப் பார்த்துக்கொண்டிருந்த தமிழக மக்கள் அந்த காங்கிரஸ் கட்சியை எங்கே அனுப்பி வைக்கவேண்டுமோ அங்கே அனுப்பி வைத்து விட்டார்கள். இதையெல்லாம் செய்வோம் என்று அடுத்து அண்ணாவைப் பார்த்து அமைச்சர்கள் சொன்னார்கள். அந்த போராட்டக் காலத்தில் என்ன நடந்தது என்பது எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. எங்களது ஒப்பற்றத் தலைவர் தோழர் கல்யாணசுந்தரம், அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கொண்டு இது நிலச் சீர்திருத்தச் சட்டம் அல்ல, இது மோசடியான சட்டம் என்று வாதம் நடத்தினார்கள், வெளியேறினார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் சொன்னதை உண்மையிலேயே இந்த சபை ஒப்புக்கொள்ளவேண்டும். 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொன்னார். என்ன நடந்தது? 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொன்னபோது எப்படி ஒரு செண்ட் நிலம் கூட கிடைக்கவில்லையோ அதேபோல 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொன்னபோது பழைய நிலப்பிரபுக்கள் தப்பித்துக் கொண்டார்கள். எழுதி வைத்துக்கொண்டார்கள். ஆனால் கொஞ்ச நிலம் கிடைத்தது. காங்கிரஸ் கட்சி காலத்தில் இருந்ததை விட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொஞ்சம் நிலம் கூட கிடைத்தது. அந்தச் சட்டத்தின்

ஓட்டையை அடைத்தீர்களா? கடுமையான சட்டத்தைப் பிரகடனம் செய்தீர்களா? இல்லை? பெரும் நிலப் பிரபுக்கள் தப்பித்துக் கொள்ள சட்டத்தில் ஓட்டை இருந்தது; தப்பித்து விட்டார்கள். ஆனால், இப்போது என்ன சட்டம் வந்திருக்கிறது? அத்தனை நிலப் பிரபுக்களும் தப்பித்துக்கொள்ள இன்றைக்கும் சட்டத்தில் ஓட்டை இருக்கிறது.

நான் ஒன்றை மட்டும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் திருவெண்ணைநல்லூரில் வைகுண்ட சாமி பெயரில் நத்தம் சாரி நிலத்தில் 3 ஏக்கர் நிலத்தை எடுக்கலாம் என்று ஒதுக்கப் நேரத்தில் சட்டம் கொண்டு வந்தார்கள். 3 ஏக்கர் நிலத்தை எடுத்துக் கொடுத்துவிட்டீர்களா? கோர்ட்டுக்குப் போனார்கள். தீர்ப்பு வந்தது. எப்படி வந்தது? எடுத்தது தவறு என்று தீர்ப்பு வந்தது. சட்டத்தில் இருந்த ஓட்டையே அதற்குக் காரணம். அதைப் பயன்படுத்தி, தீர்ப்பு வழங்கப்பட்டது. எடுத்த நிலத்தை மீண்டும் கொடுத்துவிட்டார்கள்.

இப்போது வந்திருக்கிற சட்டத்தில் கொடுக்கின்ற நட்டத் தொகையை குறைத்துக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. இங்கே ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே 8 ரூபாய் விலை பெறும் நிலம்— அதாவது மிச்ச நிலம் அதனுடைய மார்க்கெட் வால்யூ எவ்வளவு தெரியுமா? அதிகாரிகள் 23 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். நீங்கள் விலையைக் குறைத்துக் கொடுக்கலாம் என்று சொல்கிறீர்கள். அங்கே விலை நிர்ணயம் இப்படி இருக்கிறது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றி அந்த அதிகாரிகளிடம்தான் கொடுக்கப்போகிறீர்கள். அதிகாரிகள் என்ன செய்வார்கள்? 8 ரூபாய் நிலத்திற்கு 23 ரூபாய் நிர்ணயம் செய்தமாதிரிதான் செய்யப்போகிறார்கள். எப்படி இருந்தாலும் சட்டத்திலுள்ள ஓட்டைஉடைசல்களை முதலில் அடைக்க வேண்டும். இல்லாவிட்டால் எந்தவிதமான பயனும் இருக்காது.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தினால் மிச்ச நிலம் கிடைக்கும் என்று நினைத்தால் ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் நிலம் என்று வரையறை செய்ய வேண்டும். இன்றைக்கு பினாமி முறையில் பலர் வைத்துக்கொண்டிருக்கிற லட்சக்கணக்கான ஏக்கர் நிலத்தை எடுக்க இந்த அரசு ஒன்றும் செய்யவில்லை. சட்டம் கொண்டு வந்தால் தைரியமாகக் கொண்டு வர வேண்டும், கொண்டுவரும்போது அதிலே ஓட்டை இருக்கக்கூடாது; நிலப்பிரபுக்கள் தப்பித்துக்கொள்ள இடம் இருக்கக்கூடாது.

[திரு. பொ. உத்திராபதி] [1979 பிப்ரவரி 22

பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறீர்கள். பெரியார் வழியில் நடக்கிறோம். அண்ணா வழியில் நடக்கிறோம் என்று சொல்கிறீர்கள். அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிற நீங்கள் ஏன் கோயில் நிலத்தை எடுக்கவில்லை? ஏன் மடத்து நிலங்களை எடுக்கவில்லை? நம்முடைய ரெவின்யூ மினிஸ்டர் அவர்களுக்குத் தெரியும். தஞ்சை மாவட்டத்தில் ஒரு மடம் இருக்கிறது. அங்கே ஒரே ஒரு சாமி மொட்டையடித்துக் கொண்டிருக்கிறார். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. மூட்டை, மூட்டையாக நெல் இருக்கிறது. ஒரு சாமியாருக்கு அவ்வளவு நிலம், நெல் எதற்கு? முந்திய குறுவை சாகுபடி நெல்லை இந்தக் குறுவை அறுவடைக்கு முன்தான் விற்பார். அப்போதுதான் மூட்டைக்கு 150 ரூபாய் கிடைக்கும். விலை ஏறிய சமயம்பார்த்துத்தான் விற்பார். பல்வேறு இடங்களிலும் இப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது.

நான் கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன். பெரியார் வழியில் நடக்கிறோம். அண்ணா வழியில் நடக்கிறோம் என்று சொல்வது உண்மையானால் கோவில் பேரிலும் மடத்துப் பேரிலும் இருக்கிற நிலங்களை எல்லாம் தைரியமாக எடுங்கள். அதில் தயக்கம் காட்டுவீர்களானால் உங்கள் ஆட்சியில் மக்களுக்கு சந்தேகம் ஏற்படும்.

அடுத்து, இப்போது 75—25 வாரம் நிர்ணயம் செய்து 25 சதவீதம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால்கூட கொடுக்க முடியாது. 10 சதவீதம் என்று சொன்னால் கூட கொடுக்க முடியாது. தாண்டி விடுவதற்காக இப்படிச் சொல்கிறேன் என்று நீங்கள் எண்ணாதீர்கள். கொடுக்க முடியாத நிலையில் இன்றைக்கு விவசாயிகள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சரவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். விவசாயிகள் இனிமேல குத்தகை கட்ட முடியாது. அவர்கள் கட்டுகின்ற நிலையிலும் இல்லை. அதற்குரிய வழிவகையும் இல்லை. நியாயமாக பினாமியாக இல்லாத குத்தகை விவசாயிகளுக்கு அந்த நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும்.

1970 ஜனவரி மாதத்திலேயே கேரளத்தில் நிலப்பிரபுத்துவ முறையை முடித்தாகிவிட்டது. ஏன் அந்த முறையை இங்கே கொண்டுவர முடியவில்லை. உழுபவனுக்கே நிலத்தை சொந்தமாக்கவேண்டுமென்றால் தைரியமாக கோவில் நிலத்தையும் மடத்து நிலத்தையும் எடுக்க வேண்டும். கேரளத்தில அப்படி எடுத்திருக்கிறார்கள். அங்கே சாமியாரையும் கோபித்துக் கொள்ளவில்லை. கோவில் சிப்பந்திகளுக்கு அரசாங்கம்

1979 பிப்ரவரி 22] [திரு. பொ. உத்திராபதி]

சம்பளம் கொடுக்கிறது. ஆகவே, கேரளத்தைப் போல ... யும் மக்கள் குழு அமையுங்கள். அதிகாரிகளை நம்பவேண்டாம். நஷ்டயீடு கொடுக்க வேண்டாம். எதற்காக நஷ்டயீடு கொடுக்க வேண்டும்? தியாகராச முதலியாருக்கு 14,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அவரை தப்பிக்கச் செய்வதற்காக காங்கிரஸ் ஆட்சி காலத்திலே அதை கரும்புக்காடு என்று எழுதச் சொன்னார்கள். இன்றைக்கு கரும்பு கார்ப்பரேஷன் அமைப்பதாகச் சொல்கிறீர்கள்.

[பிற்பகல் 1-10]

இன்றைக்கு இந்தக் கரும்பு கார்ப்பரேஷன் மூலமாக 5 ஆயிரம் ஏக்கர் நிலத்தை எடுத்திருக்கிறார்கள, இப்போது அந்தக் கார்ப்பரேஷனுக்கு 87 இலட்சம் ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறது. என்று சொல்லப்படுகிறது, நான்காண்டுக்காலம் ஆகிவிட்டது அந்த நிலம் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு. அதிலே 87 இலட்சம் ரூபாய் நஷ்டம் வருகிறது என்று சொன்னால் அது யாருடைய தப்பு? அதிகாரிகளுடைய தப்பா? அதிகாரிகளுடைய தப்பு கிடையாது, விவசாயத் தொழிலாளர்களுடைய தவறும் கிடையாது, ஆனால் இப்போது ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள், அந்த நிலம் திரும்ப அந்தத் தியாகராஜ முதலியார் அவர்களுக்கே போகப் போகிறதாகச் சொல்லப்படுகிறது. அது விஷயமாக அவர் அமைச்சரவர்களைக் கூடச் சந்தித்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

மாண்புமிகு திரு, எஸ், டி, சோமசுந்தரம் : தலைவரவர்களே. அமைச்சரை இந்த நாட்டு மக்கள் யார் வேண்டுமானாலும் வந்து சந்திக்கலாம், அதிலே தப்பு ஒன்றும் கிடையாது. எல்லோரும் சந்திக்கிறார்கள் ஏழைகளும் சந்திக்கிறார்கள். ஆனால் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். பணக்காரர்கள் என்னைச் சந்திக்கிறபோது உங்களுடைய துணை எனக்கு இருப்பதன் காரணத்தால் என்னை அவர்கள் ஒன்றும் செய்துவிட முடியாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு, பொ, உத்திராபதி : தலைவரவர்களே, நான் சந்தித்தது தவறு என்று சொல்லவில்லை, அந்தக் கரும்பு கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்குப் பாதகமான நிலை உருவாகிக் கொண்டிருப்பதாக ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது, நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், அது அதிகாரிகளின் தவறு கிடையாது, நான்காண்டுக் காலமாக தொழிலாளர்களின் தவறும் கிடையாது, இந்த 87 இலட்ச ஏற்பட்ட புயல். வெள்ளம் காரணமாகத்தான் ஆகவே அந்த 87 லட்ச ரூபாய் நட்டம் ஏற்பட்டது.

ரூபாயை மானியமாகக் கொடுத்து இந்தக் கார்ப்பரேஷனைத் தீவிரமாகப் பணியாற்றுவதற்கு உத்திரவளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உண்மையான நிலச் சீர்திருத்தச் சட்டத்தை இந்தச் சட்டமன்றத்திலே கொண்டுவந்து உழுகின்ற விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோயில், மடம் போன்றவற்றிற்கு இருக்கக் கூடிய நிலங்களை எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டும்—கேட்டுக் கொண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நான் ஒருங்கிணைந்த சட்டம் இல்லாததினால் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை, என்றாலும் இதில் சில அம்சங்களை வரவேற்கிறோம், ஆகவே இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், அதோடு உண்மையான நிலச் சீர்திருத்த சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு திரு, எஸ். டி, சோமசுந்தரம் : தலைவரவர்களே, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியில் சார்பிலே நான் இதை எதிர்க்கிறேன், என்று சொன்னார்கள், அப்படி எதிர்ப்பதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது, ஆனால் நான் முதலிலே அறிமுகப்படுத்திய போது இங்கே வந்து வரவேற்பதற்குக் காலதாமதம் ஆகிவிடும் என்று கருதி அவசரச் சட்டம் கொண்டு வந்து உடனேயே ஆதரித்து இரண்டு கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள், அது பத்திரிக்கையிலே கூட வந்திருக்கிறது, ஆகவே நான் ஒன்று கேட்க விரும்புகிறேன், இது உங்களுடைய கொள்கையா அல்லது கட்சியினுடைய கொள்கையா என்று கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு, மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறபோது நாங்கள் ஆதரித்தோம். ஆனால் இதிலே சில விதிகள் தெளிவாக இல்லை, மேலும் காம்பென்சேஷன் போன்றவை எல்லாம் தெளிவாகச் சொல்லப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன், மேலும். திரு. பொ. உத்திராபதி அவர்கள், இந்தச் சட்டம் தெளிவான சில கருத்துக்களைக் கொண்டிருக்காத காரணத்தால் இதனை எதிர்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்,

திரு, கே, கந்தசாமி : தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது கோயிலிலே இருக்கின்ற நிலங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள்.

அரசாங்கம்
ஆனால் மதச்சார்ப்பற்ற ஆட்சி நடக்கிற கைவைப்பது
இந்து கோயிலுக்குரிய சொத்துக்களை மாத்திரம் விரும்புகிறேன்.
நல்லதாக இருக்குமா என்று கேட்டுக் கொள்ள கொண்டி
பல லட்சக் கணக்கில் மற்றமத ஸ்தாபனங்கள் வைத்துக் நிலங்களை
ருக்கும் போது, இந்துக்களிடமிருந்து மட்டும் இந்த வலியுறுத்திக் கூற
எடுப்பது முறையல்ல என்ற கருத்தை நான்
விரும்புகிறேன்,

திரு, பொ, உத்திராபதி : தலைவரவர்களே. நான் மதத் சொல்லவில்லை, கோயில்
திற்கு விரோதமாகச் பணியாற்றக்
நிலத்தை எடுத்துக் கொள்வதன் மூலம் கோயிலிலே வேண்டும்
கூடிய ஊழியர்களுக்கு அரசாங்கம் சம்பளம் வழங்க அந்த
என்று சொன்னேனே தவிர மதத்திற்கு விரோதமாக கூறிக்
வார்த்தையை நான் பயன்படுத்தவில்லை என்பதைக்
கொள்ள விரும்புகிறேன்,

திரு, துரை கோவிந்தராசன் : பேரவைத் தாற்காலிகத் துறை அமைச்சர்
தலைவர் அவர்களே, இந்த அவைமுன்வருவாய்த்துறை வரம்புச்
அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற இந்த உச்ச கருத்துக்களைத்
சட்டத்தை ஆதரித்து என்னுடைய ஒன்றிரண்டு பேசிய அத்
தெரிவிக்கக் கடைமைப்பட்டிருக்கிறேன், இங்கே எதையுமே எதிர்த்து
தனை பேர்களும் ஆதரித்ததற்கு மாறாக. திரு, லத்தீப்
பழக்கப்பட்ட நமது மாண்புமிகு உறுப்பினர் என்று
போன்றவர்கள் எல்லாவற்றிலுமே ஒன்றுமேயில்லை சோஷலிசம்
சொல்கிற அளவிற்கு ஜனநாயகம், கம்யூனிஸம், இருக்கிற
என்கிற உள்ளுணர்வுகளை உள்ளடக்கி ஒன்றாக அறிந்து
அண்ணாயிஸத்தை அறிந்துகொள்கிற வாய்ப்பினை இந்தச்
கொள்ள முடியாத நிலையில் இருக்கிற உறுப்பினர்கள் பேசுகிற
சட்டத்தில் எதுவும் இல்லையென்று எப்போதும் பேசியிருக்கிறார்கள்,
வழக்கமான பேச்சுக்களையே இங்கே சட்ட 57-வது விதி
ஆனால் இந்தச் சட்டம் 1961-ம் ஆண்டு விதிப்படி திருத்தப்
யில் ஆரம்பித்து, 1970-ம் ஆண்டு 17-வது என்று உயர்த்தப்
பட்டு. 1972-ம் ஆண்டு சட்டம் மூலம் 40 ஏக்கர் மீண்டும் 30 ஏக்கர்
பட்டு பின்னர் 32-வது விதிப்படி திருத்தப்பட்டு திருத்தியமைக்கப்பட்டு
என்றளவிற்கு பலமுறை இந்தச் சட்டம் வரப்பட்டிருக்கிறது, ஆனால்
இந்த அவையில் கொண்டு இந்தியக் கம்யூனிஸ்ட்
இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில். மனம் இல்லை.
கட்சி உறுப்பினர்களுக்கு இதை ஆதரிப்பதற்கு என்று சொல்
இந்தச் சட்டத்தில் ஒரு தெளிவு இல்லை மூலம் உபரி
லியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் ஏக்கர்களுக்கு மேலாக
நிலங்கள் ஏறத்தாழ இரண்டு லட்சம் ஆண்டுகாலத்தில் 90.000
கிடைக்க வழி இருந்தும். 16 இதுவரையில் ஒதுக்கப்
ஏக்கருக்கு ரூ, 8.34 கோடி

[திரு. துரை கோவிந்தராசன்] [1979 பிப்ரவரி 22

பட்டிருந்தும், இன்னும் ஏறத்தாழ 1,44,000 ஏக்கர்களுக்கு ஒதுக்கீடு இதுவரையில் செய்யப்பெறவில்லை இன்றைக்குப் போட்டிருக்கக்கூடிய சட்டத்தின் மூலம் அடித்தளத்தில் இருக்கிற ஏழை எளிய விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தை உள்ளடக்கியிருக்கிற இந்த அரசு, அடித்தளத்தில் நிலமற்றிருப்பவர்களுக்கு அதிக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து எடுத்துக் கொள்கிற நிலத்தைக் கொடுக்கும்போது விலை நிர்ணயிக்கிற நிலையில், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் முன்னால் இருக்கிற சட்டப்படி ஒரு ஏக்கருக்கு ரூ. ரூ. 15.000 வரை ஈரோடில் இருக்கிற பகுதியிலுள்ள நிலங்களுக்குத் தரவேண்டுமென்று தந்து கொண்டிருந்த நிலையில் இன்றைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் பொன் விளையும் பூமியாக இருந்தாலும். வாழை பயிரிடக் கூடிய நிலமாகயிருந்தாலும் அல்லது வெற்றிலைக் கொடிக்கால் போன்ற நிலமாக யிருந்தாலும் ரூ. 3500க்கு மேற்படாத அளவிற்குத்தான் தொகை வழங்க வேண்டும் என்று வழிவகை செய்யப்பட்டிருக்கிற இந்த மசோதாவை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது, அதே நேரத்தில் இந்தச் சட்டத்தின்மூலம் எவ்வளவு மிச்சம் வரும் என்பது பற்றி பல்வேறு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள், நானும் என் கருத்தை இங்கே எடுத்துக்காட்டுவது நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன், முன்பிருக்கிற சட்டப்படி இருபது ஏக்கர் நிலத்திற்கு ஒரு லட்சத்திற்கு மேலாக தொகை கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள், அது குறிப்பிட்ட ஒரு போக நிலம், ஆனால் இப்போதுள்ள சட்டப்படி அதன் மூன்றில் ஒரு பாகம்தான் கிடைக்கும், பெரிய நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து, நிலச் சுவாந்தாரர்களிடமிருந்து எடுக்கப்படுகிற உபரிநிலம் நிலமற்ற ஏழைகளுக்குப்போய் சேருகிற வகையில். எளிய முறையில் அந்தக் கடனைத் தீர்த்து தன்னை அதிலிருந்து விடுவித்துக் கொள்கிற அளவிற்கு அந்தத் தொகை குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் அடித்தளத்தில் இருக்கிற மக்கள் எந்த அளவிற்கு மகிழ்ச்சியடைவார்கள, எந்த அளவிற்கு அவர்கள் உள்ளத்தில் பூத்த பூவாக இத்திட்டம் அமையும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், காடாக இருந்தாலும்சரி அல்லது மரங்கள் அடர்ந்த காடுகளாக இருந்தாலும்சரி, பழந்தோட்டங்களாக இருந்தாலும் சரி அல்லது எந்தவிதமான மரங்கள் இருக்கிற பகுதிகளாக இருந்தாலும் சரி ஒரு ஏக்கர் ரூ. 3,500 க்கு மேல் போகக் கூடாது என்ற வகையில் வரையறுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது வரவேற்க வேண்டிய ஒன்றல்லவா? முன்பு ரூ, 15.000, ரூ. 20.000 என்றெல்லாம் கொடுத்து வந்ததற்கு மாறாக இப்போது எந்தளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது

1979 பிப்ரவரி 22] [திரு. துரை கோவிந்தராசன்]

என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும், மூன்று ரூபாய் தண்ணீர் தீர்வை செலுத்துகிற நன்செய் நிலங்களுக்கு அவை ரூ. 600க்கு மேல் போகாத அளவிற்கு கையகப்படுத்துகிற இந்தச் சட்டத்தை பாராட்டாமல் இருக்கமுடியாது,

[பிற்பகல் 1·20]

இப்படிப்பட்ட ஒரு சட்டத்தின் மூலமாக ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல்—இங்கு பேசிய மாண்புமிகு கம்யூனிஸ்டுக் கட்சி நண்பர் அவர்கள் சொன்னதுபோல்—ஆலயங்களுடைய நிலங்களுக்கு அறவே உச்சவரம்பு கட்ட வேண்டும் என்று தெரிவித்தார்கள். ஆனால் ஜனநாயகமும், சோஷியலிஸமும், கம்யூனிஸமும் இந்த மூன்றும் உள்ளடங்கியிருக்கிற நிலையில், அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ இதைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில் கோயில்களின் நிலங்களை எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் எழுப்புகிற சந்தேகங்கள் எல்லாம், உழுபவர்களுக்கே நிலம் என்கிற நிலையில், குத்தகை உரிமை இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றவர்கள், குத்தகை என்ற பெயரால் எவ்வளவு பேர்கள் இன்றைக்கு பினாமியாக வைத்திருக்கின்றவர்கள் தமிழகத்தில் மூலை முடுக்குகளில் இருக்கின்றார்கள் என்பதையும். எந்த அளவுக்கு இதில் ஜனநாயக சோஷியலிஸம் நடைபெறுகிறது என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். பெரிய நிலச் சுவான்தார்களிடமிருந்து நிலங்களை எல்லாம் எடுக்கவேண்டும் என்று கூறுகின்ற நேரத்தில் அப்படிப்பட்ட பூத்த மலர்களுக்கு—சோஷியலிஸத்துக்குசொந்தக்காரர்கள் என்று சொல்லக் கூடியவர்கள், குத்தகை என்ற பெயரால், எத்தனை பேர்கள் பினாமிகளின் பெயரால் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள், எவ்வளவு பேர்கள் இதில் உள்ளடங்கியிருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்த்தாக வேண்டும்.

ஆனால் இந்தச் சட்டப்படி முன்பு எதையும் கொடுக்கவில்லை என்பதற்கு மாறாக ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கின்ற அளவுக்கு கிடைக்கிற நிலத்தை பயன்படுத்திக் கொள்ளவும், அதிலிருந்து கடன் பெற முடியவில்லை என்கின்ற நிலைக்கு மாறாக ஏழை எளியவர்கள் தங்கள் உரிமைகளை எட்டிப் பிடிக்கின்ற அளவுக்கு உரிய வகையில் இந்தத் திருத்தச் சட்டம் வந்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியதாகும். அதே நேரத்தில் 90 ஆயிரம் ஏக்கர் என்பதற்குப் பதிலாக, அதற்கு மாறாக ஒரு லட்சத்து 44 ஆயிரம் ஏக்கர் நிலங்களை இன்னும் இரண்டு மூன்று ஆண்டுக் காலத்திற்குள் அத்தனை பேருக்கும், முன்னால் இருந்து கொண்டிருந்த விலைக்கு மாறாக புதிய சட்டத்தின் குறிப்பிட்டிருக்கின்ற விலையின் அடிப்படையில் ஏழை

[திரு. துரை கோவிந்தராசன்] [1979 பிப்ரவரி 22

எளிய மக்களுக்குக் கிடைக்கின்ற வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் இந்தச் சட்டத்தின் மூலமாக மற்ற மாநிலங்களும், கர்நாடகம், கேரளம், வங்காளம், பீகார், ஆந்திரா போன்ற மாநிலங்கள் எல்லாம், இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வருவதின் மூலமாக அவர்களும் இந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தங்கள் சட்டத்தை கொண்டுவருவதற்கு அக்கறை எடுத்துக் கொள்வார்கள் என்கின்ற வகையிலும் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை மற்ற மாநிலங்களும் பாராட்டுகிற அளவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்கு நான் மனப்பூர்வமாக வாழ்த்தி பாராட்டி, முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 1—24-க்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

97. தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு பொது இடங்கள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்டத்திற்கு விதிகள் செய்வது குறித்து வருவாய்த்துறையின் 1978-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் தேதியிடப்பெற்ற 2598ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு 1960ஆம் ஆண்டு பொது இடங்கள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1960) 8 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

98. 1973-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ஆம் தேதியிடப் பெற்ற, தமிழ்நாடு அரசிதழின் பாகம் II, பிரிவு I, பக்கம் 573-ல் வெளியான ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 1973 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ஆம் தேதியிடப்பெற்ற 5263 1973-ஆம் எண் அறிவிப்பை நீக்குவது குறித்து ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித்துறையின் 1978ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ஆம் தேதியிடப்பெற்ற 150436/ME/76—26ஆம் குறிப்

1979 பிப்ரவரி 22]

பாணையில் வெளியான அறிவிப்பு (1940ஆம் ஆண்டு மேட்டூர் நகரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1940) 4 (1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

99. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள், ஊராட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்களின் தேர்தல் நடத்துதல்) விதிகளை வகுப்பது சம்பந்தமாக ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித்துறையின் 1978ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் தேதியிடப்பெற்ற 1229ஆம் எண் அரசாணையிலும், 1978-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் தேதியிடப்பெற்ற 1920ஆம் எண் அரசாணையிலும் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

ஏதுவுமில்லை.

[20ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 130க்கான விடையைக் காண்க.]

இணைப்பு I.

(அ) & (ஆ) : காவிரி கயவாய்ப் பகுதி ஏற்பாட்டினைக் காலத்திற்கேற்ப மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ், காவிரி கயவாய்ப் பகுதி பாசன ஏற்பாட்டில் தற்போதுள்ள கால்வாய்களைத் தரப்படுத்தியும் வடிகால்களையும், ஓடைகளையும் மேம்படுத்தியும் பொறி மதகுகள் முதலியவற்றைக் கட்டியும் அதனை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இவ்வாறு மேம்படுத்துவதன் மூலம் காவிரி கயவாய்ப் பகுதி முழுவதிலும் சமமான அளவிலும் உரிய காலத்திலும் நீர் வழங்குவது உறுதி செய்யப்படும். அது மட்டுமன்றி, கடைமடைப் பகுதிகளில் வடிகால்களில் ஏற்படுகின்ற நெருக்கடியும் குறைக்கப்படும்.

பழைய காவிரி கயவாய்ப்பகுதி ஏற்பாட்டினை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணிகளைச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது :

(1) கல்லணையின் உறுதியை மேம்படுத்தும் வகையிலும் வெள்ளத்தைத்திறமையாகக் கட்டுப்படுத்தும் வகையிலும் அதனை வலுப்படுத்துவது.

(2) முதன்மையாறுகளுக்கும் கிளையாறுகளுக்கும் பின் வரும் வகையில் சீரமைப்புகளைச் செய்தல்—

(அ) அவசியமான இடங்களில் கரைகளை வலுப்படுத்துதல் ;

(இ) ஆறுகளிலும் கிளையாறுகளிலும் தெரிந்தெடுத்த பகுதிகளில் கரைகளைக் கட்டுதல் ;

(உ) முதன்மையாறுகளிலும், கிளையாறுகளிலும் பொறி மதகுகளைக் கட்டுதல், படுகை அணைகளை பொறி தமகு அணைகளாக மாற்றுதல்.

(3) 'ஏ' வருப்பைச் சேர்ந்த கால்வாய்களுக்கும் 50 ஏக்கர் வரை பாசனம் தருகின்ற அதன் கிளை கால்வாய்களுக்கும் பின்வருவன போன்று சீரமைப்புச் செய்தல் :—

(அ) இந்தக் கால்வாய்களை சீரமைத்துத் தர நிலைக்கு கொண்டு வருதல், மேலும் இவற்றில் படுப்பு அணைகளையும் பிளவுக்கால்களையும் (Notches) அளவீட்டுச் சுவர்கள் முதலியவற்றையும் அவசியமான இடங்களில் கட்டுதல் ;

இறந்தகால்வாய்கள் பிரியுமிடங்கள், அனைத்திலும்
(ஈ) இறந்தகால்வாய்கள் குழாய்களாலான மதகுப்
கற் கட்டுப்பாட்டிலான அல்லது நேராக அமைத்தலும்
பொறிகளையமைத்தல், கால்வாய்களை திருத்தியமைத்தலும், கால்வாய்களை
அவற்றின் தூரங்களைத் திருத்தியமைத்தலும், மண்டல்களை அகற்றுதல்.
அவசியமான இடங்களில் மண்டல்களை அகற்றுதல்.

(4) பின்வரும் நடவடிக்கைகள் மூலம் காவிரி கயவாய்ப் பகுதியில் வடிகால் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்—

(அ) காவிரிக் கிளையில் மேல் அணைக்கட்டுக்கு முன்னர் குறுக்காக ஒரு தடுப்பு அணையைக் கட்டுவதன் மூலம் காவிரியில் வெள்ளம் புகுதலைக் கட்டுப்படுத்துதல்;

(இ) மேட்டு நிலங்களிலிருந்து பெருகி வருகின்ற வெள்ளத்தைத் திசை திருப்பி அல்லது தடுத்து வெள்ளத்தால் விளையும் சேதத்தைக் குறைத்தல் ;

(உ) பெருத்த அளவிற்கு அதிகப் நீரைத் தாங்கிக்கொள்ள அவசியமான இடங்களில் வகையில் தற்போதுள்ள வடிகால்களை இவ்வாறு பெருகும் இடங்களில் சீரமைத்தல்; அல்லது, தற்போதுள்ள வெள்ளப் பெருக்கினை சமாளிக்கும் வகையில் போனால், கூடுதல் வடிகால்களையோ சீரமைத்திட முடியாமற் போனால், கூடுதல் வடிகால்களைக் வெட்டுதல் ;

(எ) கடலுக்கு சென்று விழுகின்ற நேரடியான வடிகால்களை அமைத்தல், தற்போதுள்ள வடிகால்கள் வளைந்து வளைந்து செல்லுமானால், அவற்றை நேராக்குதல் ;

(ஐ) வடிகால்கள் பெருகி விழுகின்ற இடங்களில் அவை தேங்கிப் பெருக விடாமல் தடுக்கும் பொருட்டு அத்தகைய இடங்களில் அவற்றைக் கட்டுப்படுத்துதல்.

(5) கீழ் கொள்ளிட அணைக்கட்டில் உள்ள மதகுக் கதவுகளைப் பழுதுபார்க்கும் அங்கு மின்விசை மூலம் மதகுகளை ஏற்றுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தும் அவ்வணைக்கட்டுக்குச் சீரமைப்புகளை செய்தல்.

(6) ஒவ்வொரு வயலுக்கும் பாசன வாய்க்கால், வடிகால் அமைத்துத் தருவது, கரைகளைத் திருத்தியமைப்பது போன்ற வயல் சார்ந்த பணிகளை நிறைவேற்றுதல்.

இணைப்பு II.

[23ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 132க்கான விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் விவசாயப் பேரணி பின்கண்ட ஆறு கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டது :—

(1) தஞ்சை மாவட்டம் பூராவும் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட வேண்டும்.

(2) இந்த ஆண்டுக்கு உள்ள நிலவரி அது சம்பந்தப்பட்ட தண்ணீர் வரி, செஸ், சர்சார்ஜ், பஞ்சாயத்து வரிகள், விவசாய வருமான வரி அனைத்தும் வஜா செய்யப்பட வேண்டும்.

(3) 1977ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் தேதிக்கு முந்திய விவசாயக் கடன்கள் அனைத்தையும் (கூட்டுறவு, அரசுடைமை வங்கிகள் மூலம் கொடுக்கப்பட்டது) ரத்து செய்ய வேண்டும்.

(4) விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 120-ம் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 140-ம் அடிப்படை விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

(5) நெல்லுக்கு உள்ள மாவட்டக் கட்டுப்பாடுகளை நீக்கி விவசாயிகள் தங்கள் நெல்லை தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமானாலும் கொண்டு போய் விற்பதற்கு உரிமை வழங்கப்பட வேண்டும்.

(6) தமிழக அரசால் நியமிக்கப்பட்ட விவசாய விசாரணைக் குழு தஞ்சை மாவட்டத்துக்கு வருகைதந்து நேரடியாக விசாரணை செய்ய வேண்டும். மற்றும் அக்குழுவில் தஞ்சை மாவட்ட விவசாயக் சங்கத்தின் பிரதிநிதி ஒருவரை குழு உறுப்பினராக நியமிக்க வேண்டும்.

2. மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கோரிக்கை எண். 1:

தமிழகத்தில் எந்தப் பகுதியும் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதாக பொது அறிவிப்பு ஏதும் அரசினால் வெளியிடப்படவில்லை.

புயல், வெள்ளம் இவற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விளைச்சல் 37 பைசாவுக்கு (பழைய கணக்குப்படி 6 அணாவுக்கு) குறைவாக உள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு

செய்தால், அப்பகுதிகளுக்கு அன்னவாரி சான்றிதழ்கள் வழங்கி நிலவரி முழுவதையும் வஜா செய்ய அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. அதற்கிணங்க தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டத்தில் உள்ள 34 வட்டாரங்களில் 22 வட்டாரங்கள் பாதிக்கப்பட்ட பகுதியாகவும் 8 வட்டாரங்களில் பெரும்பகுதி கிராமங்கள் பாதிக்கப்பட்ட பகுதியாகவும் அறிவித்துள்ளார். புயல் தாக்காத (வெள்ளம் அடிக்காத) நான்கு வட்டாரங்கள் மட்டுமே பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படவில்லை.

கோரிக்கை எண். 2 :

அரசு நிலை ஆணை எண். 533 (வருவாய்) 1978ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 2ஆம் நாளில் 1387ஆம் பசலியில் தமிழகம் முழுவதிலும் கடந்த வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அன்னவாரி சான்றிதழ்கள் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிலவரி, தண்ணீர் வரி, செஸ், சர்சார்ஜ், கூலி தண்ணீர் வரி, பணப் பயிர் வரி முதலிய வரிகளை வஜா செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

கோரிக்கை எண். 3 :

கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்யவோ தவணைக் காலத்தை மாற்றவோ அரசுக்கு அதிகாரம் இல்லை. குறுகிய காலக் கூட்டுறவுக் கடன்களை பாதிக்கப்பட்ட பகுதிகளில் வருவாய்த் துறை வழங்கும் அன்னவாரி சான்றிதழைப் பொறுத்து மத்திய காலக் கடன்களாக மாற்ற மட்டுமே இடம் உண்டு. அதற்கு இணங்க, குறுகிய காலக் கூட்டுறவு கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசுடைமை வங்கிகளும் இம்மாதிரி கடன்களை மாற்றுவதற்கு இணங்கியுள்ளன.

கோரிக்கை எண். 4 :

நெல் கொள்முதல் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலையை உயர்த்தும் உரிமை மாநில அரசுக்குக் கிடையாது. நெல்லின் கொள்முதல் விலையைக் கணிசமாக உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிடம் தமிழக அரசு தொடர்ந்து வன்மையாக வலியுறுத்தி வருகிறது.

தமிழக விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தமிழக அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 1978ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1ஆம் தேதி முதற்கொண்டு மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 90-ம் நடுத்தர

ரகத்திற்கு ரூ. 95 என்ற விலைகளிலும் வெளிச்சந்தை வர்த்தக அடிப்படையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை வாங்க ஏற்பாடு செய்தது. வெளிச்சந்தை விலைவாசி நிலைமையை மனதிற் கொண்டு, தேவைப்படும் காலம்வரை இந்தத் திட்டம் தொடர்ந்து நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது. 1978ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி மாதம் 1ஆம் தேதி முதல் 1978ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் தேதிவரை 1,03,877 அரிசி டன்களுக்குச் சமமான நெல் 400 நிலையங்களின் மூலமாக வாங்கப்பட்டது. நேரடிக் கொள்முதல் நிலையங்களில் நெல் வரத்து நின்று விட்டதால் மேற்படி நிலையங்கள் மூடப்பட்டு விட்டன.

கரும்பின் விலையைப் பொறுத்தவரை, கரும்பு (கட்டுப்பாடு) ஆணை 1966-ன்கீழ் ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய கரும்பின் விலையை மத்திய அரசு நிர்ணயிக்கிறது. இந்த விலை கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை அளவைப் பொறுத்தது. வேளாண்மை விளைபொருள் விலை நிர்ணயக் குழுவிற்கும் மத்திய அரசிற்கும் தமிழ்நாடு அரசு 1976-77, 1977-78ஆம் ஆண்டுகளில் ஒரு டன்னுக்கான குறைந்தபட்ச கரும்பு விலையை 8·5 சதவித சர்க்கரை தரத்தின் அடிப்படையில் ரூ. 125 எனவும். அதற்குமேல் அதிகப்படியான 0·1 சதவிதம் கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 1-ம் கூடுதலாக கொடுக்கலாம் என்றும் பரிந்துரைத்தது. கடந்த 1977-78 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு சட்டரீதியான அடிப்படை விலையை 8·5 சதவித கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 85 என நிர்ணயித்தது. மேலும் அதிகப்படியான 0·1 சதவித சர்க்கரை கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 1-ம் கூடுதலாகக் கொடுக்கலாம் என்றும் நிர்ணயித்தது. டன் ஒன்றுக்கு ரூ. 85 என மத்திய அரசு விலை நிர்ணயித்தபோதிலும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மூலம் டன் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 125வரை சர்க்கரைத் தரத்தின் அடிப்படையில் விலை கிடைக்க தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

கோரிக்கை எண். 5 :

விவசாயிகளின் இக்கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு கடந்த மே மாதம் முதல் லெவி கொள்முதல் முறையையும், அதை ஒட்டிய கட்டுப்பாடுகளையும் நீக்கிவிட ஆணை பிறப்பித்துள்ளது.

கோரிக்கை எண். 6 :

தற்பொழுது விவசாய விசாரணைக் குழுவில் 21 உறுப்பினர்கள் உள்ளனர். இக்குழுவில் பல்வேறு விவசாயச் சங்கங்களைச் சார்ந்தோரும் உள்ளனர். மேலும் உறுப்பினர்களை விசாரணைக் குழுவில் சேர்க்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

விசாரணைக் குழு மாநிலம் முழுவதும் செல்ல அரசு அனுமதி வழங்கியுள்ளது. தஞ்சை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் குழுவின் கூட்டங்களை நடத்தி அங்குள்ள விவசாயிகள் தங்கள் பிரச்னைகளை குழுவின் முன்வைக்க வாய்ப்பு அளிக்குமாறு அரசு, குழுவின் அமைப்பாளரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

[1979 பிப்ரவரி 23

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதனுடைய வரலாறு சுட்டு அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். முதலில் அது நகராட்சியாக இருந்து, அதற்குப் பிறகு நகரியமாக மாற்றப்பட்டது. தொழிலகங்களுடைய கோரிக்கைக்கு இணங்க அது நகரியமாக மாற்றப்பட்டது. இப்போது சுட்டு அவர்கள் சொல்கிற கருத்தை, மாறுபட்ட கருத்தாக இந்த அரசு கருதவில்லை. எனவே, நியாயமான இந்த கோரிக்கையை நிச்சயம் அரசு கவனிக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பொதுவாகவே நகரியமாக உள்ள பகுதிகளை நகராட்சியாக மாற்றுவதற்கு அரசுக்கு என்ன சங்கடம் இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எந்தச் சங்கடமும் இல்லை. தொழிலகங்கள் நகரியமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலும், சில சுற்றுலாப் பகுதிகள் நகரியமாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலும் இப்படி அமைக்கப்படுகின்றது. ஏற்கெனவே அம்பத்தூர் நகரியமாக இருப்பதைப்போல், கொடைக்கானலையும் நகரியமாக மாற்ற வேண்டுமென்று சில தொழில் அதிபர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சில நகரியப் பகுதிகள் அதாவது மணிமுத்தாறு நகரியமாக இருந்தாலும் சரி, தாளையூத்து நகரியமாக இருந்தாலும் சரி, அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல், அங்குள்ள தொழிலதிபர்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். ஆகவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை வைத்து, இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் எல்லா நகரியங்களையும், நகராட்சிகளாக ஆக்கவோ அல்லது பஞ்சாயத்துக்களாக ஆக்கவோ நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எல்லா நகரியங்களையும் நகராட்சிகளாக மாற்றும் உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, சில தொழிலகங்கள் இதை நகராட்சியாக இருப்பதை ஆட்சேபிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதனால் அவர்களுக்கு என்ன நஷ்டம் என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நகரியங்களில் ஈடுபடுவது அரசே நிர்வாக பணிகளில் இந்த ... இதற்கு ஒரு காரணம்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, அம்பத்தூர் முதலில் நகராட்சியாக இருந்து, பின்னர் சிலருடைய வேண்டுகோளுக்கிணங்க நகரியமாக மாற்றப்பட்டதாகக் கருதுகிறேன். மீண்டும் மக்களுடைய கோரிக்கையை மகேசன் கோரிக்கை என்ற அடிப்படையில், அதை நகராட்சியாக மாற்றுவதற்கு துரித நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அம்பத்தூர் நகராட்சியாக இருந்தது, நகரியமாக மாற்றப்பட்டது என்பது தொழிலகங்களுடைய வேண்டுகோளுக்கு மட்டுமல்ல. சட்ட மேலவையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இப்படி மாற்றப்பட்டது என்று ஒரு குறிப்பும் இருக்கிறது. ஆனால், இப்போது மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் சுட்டிக் காட்டிய அடிப்படையில், அங்கே இருக்கின்ற கட்சி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களையும் அறிந்து, அதைப்பற்றி நிச்சயமாக சொன்ன கருத்தின் அடிப்படையில் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு சேமிப்பு நிதி வசூல்.

*வினா எண். 138 — திரு. கு. ராமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) சிறு சேமிப்பு நிதி, கிராம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களில் இருந்து வற்புறுத்தி அவற்றின் சேமிப்பு நிதியிலிருந்து திரட்டப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், நிதி இலக்காவின் யோசனைப்படி இப்படி செய்யப்படுகிறதா ?

(இ) இப்படி நிதி திரட்ட பள்ளி ஆசிரியர்கள் பயன்படுத்தப்படுகிறார்களா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

(இ) இல்லை.

[1979 பிப்ரவரி 23

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் கட்டாயமாக இல்லை என்று கூறிவிட்டார்கள். ஆனால், [illegible] புகார்கள் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. சிறு சேமிப்பு என்பது இஷ்டப்பட்டவர்களிடம் வசூலிக்கப்படலாம். வலிய கட்டாயமாக கலெக்ஷன் பண்ணுவது தவறு. [illegible] கூட்டுறவு சங்கங்களில் நிதி வசதி இல்லாத இடங்களில் அதிகாரிகள் ஒரு கோட்டா மாதிரி நிதி தரவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள். இந்தப் போக்கு இன்றைக்கு இருந்து வருகிறது. இதை அரசு தடுத்து இஷ்டப்பட்டவர்களிடமிருந்து வசூலிப்பதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : சிறு சேமிப்பு நிதி வசூல் தொடர்பாக ஆசிரியர்களை அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் கட்டாயமாக நிதி வசூல் செய்ய வேண்டுமென்ற உத்தரவு நிதித்துறையிலிருந்தோ அல்லது சிறு சேமிப்பு இயக்குனர் அலுவலகத்திலிருந்தோ பிறப்பிக்கப்படவில்லை. ஆகையால், வற்புறுத்தலுக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி : அவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை. அப்படி பிறப்பிக்கவும் முடியாது. இந்த ஸ்தாபனத்தின் மேலதிகாரிகள் இப்படிக் கொடுத்துத் தீரவேண்டுமென்று மறைமுகமான நிர்ப்பந்தங்கள் கொடுத்து வருவது தடை செய்யப்படுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): நிர்ப்பந்தங்கள் இருந்தால் தடுத்து நிறுத்த அரசு முன்வரும்.

டாக்டர் கே. சமரசம் : சிறு சேமிப்புத் துறையில் 1978–79 ம் ஆண்டு அரசின் இலக்கு என்னவு? இதுவரை எவ்வளவு வசூலாகியுள்ளது.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர் : 1–4–78 முதல் 31–3–79 முடிய அரசின் இலக்கு தொகை 37.25 கோடி ரூபாய் ஆகும். டிசம்பர் 1978 வரை 35.93 கோடி ரூபாய் வசூலாகியுள்ளது.

திரு. ஏ. செல்லப்பா : சிறு சேமிப்பு நிதி என்ற பெயரால் ஏழை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெறுகிற நேரத்தில் சிறு சேமிப்பு பத்திரங்கள் மூலமாக 500 ரு. 1000 ரூ. என்று சேமிப்பு நிதி வசூலிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

1979 பிப்ரவரி 23]

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : [illegible] வசூலிக்கப்பட [illegible] சிறு சேமிப்பு நிதி எந்த வற்புறுத்தலின் [illegible] தெரிவித்துவிட்டேன். [illegible] இல்லை என்று [illegible]

திரு. க. மதுசூதனன் : சிறு சேமிப்பு நிதி வசூல் செய்வதற்கு [illegible] அறிவிக்க எந்தெந்த அதிகாரிகள் [illegible] இயலுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): [illegible] நடத்தப்படுகிறது. மாவட்டந்தோறும் [illegible] ஒரு மாத காலம் நடக்கிறது. [illegible] செய்யப்படுகிறது. [illegible] அதிகாரிகள், [illegible] படுகிறது.

திரு. [illegible] : சிறு சேமிப்பு [illegible] வசூலின் [illegible] ஆசிரியர்களுக்கு [illegible] ஆசிரியர்களுக்கு பொது [illegible] இலக்கீட்டை [illegible] சிறு சேமிப்பு நிதிக்கு [illegible] கூட்டுறவுச் [illegible] பிடிப்புப் பணத்தில் [illegible] உள்ள கொடுக்கச் [illegible] சேமிப்பில் வசூலிக் [illegible] சங்கங்களுக்கு [illegible] பணத்தைப் [illegible] செய்யப்படுமா? [illegible] கிறார்கள், வசூலிப்பது [illegible]

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): அரசுத் தரப்பில் கட்டாயமாக [illegible] இல்லை. [illegible] வற்புறுத்தலும் [illegible] இருந்து [illegible] கொடுக்கப்படவில்லை. [illegible] கிடையாது. [illegible]

திரு. ம. மணிவாசகம் : சிறு சேமிப்புக்காக ஆசிரியர்களுடைய [illegible] பிடித்துக் கொடுக் [illegible] பொது நிதியிலிருந்து வசூல் செய்து [illegible] முழுக்க [illegible] கிறார்கள். [illegible] சேமிப்பு நிதி வேண்டுமென்பதற்காக [illegible] ஆசிரியர்கள் [illegible] தனிப் பணத்தை [illegible] என்று போட்டுக் கொண்டு [illegible] பட்டவர்களுக்கு [illegible] உருவாக்கப்படுகிறது. [illegible] நன்கொடை வசூலித்து [illegible] கிறது இதைத் தடுத்து [illegible]

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): [illegible] கட்டாயம் இங்கே இல்லை. இலக்கை முடிக்க வேண்டும் என்கிற [illegible] வசூலாகிவிட்டது. டிசம்பர் 1978 வரை 35.93 கோடி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1979 பிப்ரவரி 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள் — விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

அம்பத்தூர் நகரியம்.

நிச்சயிக்கப்பட்ட தொகைக்கு மேல் அதிகமாக வசூலாகிவிடுகிறது. 31-3-1979 முடியும் நேரத்தில் இலக்குத் தொகை 37.25 கோடி ரூபாயைத் தாண்டி 50 கோடி ரூபாய் வரை செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையால், வற்புறுத்தலுக்கு அவசியம் இல்லை.

தஞ்சை மாவட்டக் கூட்டுறவு இணைப் பதிவாளர்.

*வினா எண். 139—

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளரைப் பற்றி அண்மையில் அரசுக்கு புகார் மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு கே. எ. கிருஷ்ணசாமி :

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளர் மீது வந்த புகார் மனுக்களின் மீது கூடுதல் பதிவாளரால் விசாரணை செய்யப்பட்டு அவர்மீது இலாகா பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளரைப் பற்றி எந்தெந்த விதமான புகார்கள் வந்திருக்கின்றன? நிர்வாக சம்பந்தமான புகார்களாயிருந்தால் அத்தகைய புகார்கள் இனியும் ஏற்படாமல் இருப்பதற்கு மிகத் தீவிரமான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை கூட்டுறவு இணைப்பதிவாளரின் மீது வந்த புகார்கள் இரண்டு. ஒன்று அவர் தனது மகளின் திருமணத்தின் போது திருவேங்கடம் என்ற அந்த இணைப் பதிவாளர் காவிரி சிறப்பங்காடியிலே ரூபாய் 1,016 வரை கடனுக்கு பொருள்களை வாங்கி அதனை ஐந்து தவணைகளிலே திருப்பிக் கொடுத்துள்ளார். மேலும், வாங்கப்பட்ட பொருள்களுக்கு இரண்டு சதவீதம் தள்ளுபடி செய்து பணம் கட்டியுள்ளார். இரண்டு சதவீதம் தள்ளுபடி என்பது காவிரி சிறப்பங்காடியில் உள்ள அங்கத்தினர்களுக்குத்தான் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், திருவேங்கடம் உறுப்பினராக அங்கே பதிவு செய்யவில்லை. இது ஒரு முறை கேடு.

இரண்டாவது முறைகேடு, நாகர்கோவிலில் உள்ள தனது மருமகனுக்கு பொருட்கள் அனுப்ப சிறப்பங்காடியின் டி. என். ஓ. 445 எண்ணுள்ள லாரியை உபயோகித்திருக்கிறார். ஒரு கிலோ மீட்டருக்கு 1 ரூபாய் வீதம் கொடுப்பதற்குப் பதில் கிலோ மீட்டருக்கு 60 பைசா வீதம்தான் அதுவும் 7 மாதங்களுக்குப் பிறகு சிறப்பங்காடியில் தொகையினைக் கட்டினார்.

மேற்கூறிய இரண்டு குற்றச்சாட்டுகளுக்காக பதிவாளர் தனது குறிப்பாணையின் மீது 4-5-78 இல் திருவேங்கடம் மீது குற்றச்சாட்டுக்கள் வரைந்து அவை பரிசீலனை செய்யப்பட்டு கூட்டுறவுத் துறையின் வாயிலாக 25-11-78ல் 6 மாத காலத் திற்கு திருவேங்கடம் அவர்களுக்கு இணைப்பதிவாளருக்கு ஊதிய உயர்வினை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். அவர் தஞ்சையிலிருந்து வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டு இப்போது செயல்பட்டு வருகிறார் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

நிலவள வங்கிகளில் உறுப்பினா பங்குத்தொகை.

*வினா எண். 140—

திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலவள வங்கிகளிலிருந்து கடன் பெறும்போது சிறு விவசாயிகளிடமிருந்து பெறும் ஷேர் காபிடலின் சதவிகிதம் என்ன ?

(ஆ) அதைக் குறைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், பொருளாதாரத் தில் பின்தங்கிய விவசாயிகள் ஆகியோரிடமிருந்து கடன் தொகையில் இரண்டு சதவிகிதம் முதல் ஆண்டிலும், அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டும் ஒரு சதவிகிதமும் ஆக நான்கு ஆண்டு காலத்தில் மொத்தம் ஐந்து சதவிகிதம் பங்குத் தொகையாக பெறப்படுகிறது.

(ஆ) இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, மிக சிறிய விவசாயிகள் விஷயத்தில் அதனை நீக்குகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளிலே தற்போது வசூலிக்கப்படும் பங்குத் தொகை, இந்திய ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு உட்பட்டது. அவர்களுடைய கட்டளை அது. எனவே, அதில் மாற்றம் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 23

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) உயர்நீதி மன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ்உள்ள குற்றவியல் நீதி மன்றங்கள் 14—11—1976 முதல் தீர்ப்புகளை யும், ஆணைகளையும் தமிழில் வழங்க வேண்டுமென்ற காரணத்தி னால் குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்படுத்தும் சட்டங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற சட்டங்கள், சிவில் நீதி மன்றங்களால் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவை கள் மொழி பெயர்ப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இருப் பினும் சொத்து மாற்றுச் சட்டம், அதாவது டிரான்ஸ்ஃபர் ஆஃப் ப்ராப்பர்ட்டி மொழி பெயர்க்கப்பட்டு விட்டது. அது ஆணைக் குழுவின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளிகள்.

*வினா எண். 142—திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா ?

(அ) ஒன்றியத்திற்கு ஒன்று என்ற கணக்கில் எத்தனை ஒன்றியங்களில் உயர் செகண்டரி துவக்கப்பட்டுள்ளன ?

(ஆ) ஒன்றிய அளவில் உயர் செகண்டரி பள்ளிகள் துவக் கப்படாத ஒன்றியங்கள் எத்தனை ?

(இ) அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) 327 ஒன்றியங்களில்.

(ஆ) 47.

(இ) மேல்நிலைப் பள்ளிகளே இல்லாத 47 ஒன்றியங் களில், 33 ஒன்றியங்களின் மேல்நிலைப் பள்ளிக் கல்வியின் தேவையை அருகிலுள்ள நகராட்சிகளில் உள்ள மேல்நிலைப்பள்ளி கள் பூர்த்தி செய்கின்றன. மீதமுள்ள 14 ஒன்றியங்களில், ஓரிரு உயர்நிலைப் பள்ளிகளே உள்ளன. அவைகளும் மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தும் அளவுக்கு வசதிகளோ அல்லது சேரும் மாணவர்களின் எண்ணிக்கையோ இல்லை. இத்தகைய ஒன்றியங்களின் மேல் நிலைப் பள்ளிக் கல்வியின் தேவையை அருகிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி ஒன்றியங்களி லுள்ள மேல் நிலைப் பள்ளிகள் பூர்த்தி செய்கின்றன.

1979 பிப்ரவரி 23]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, என்னு டைய தொகுதியில் துரிஞ்சாபுரத்தில் இல்லாமல் இருக்கிறது. அதனால் திருவண்ணாமலைக்கு, 7, 8 மைல் தூரம் பஸ்ஸிலே செல்ல வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. எனவே, மல்ல வாடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. இந்த ஆண்டாவது அதை மேல் நிலைப் பள்ளியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்பொழுது புதிதாக மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்குவதற்கு எந்த முடிவையும் அரசு மேற்கொள்ளவில்லை. ஆனால் மாண்பு மிகு உறுப்பினரவர்களுடைய அந்தக் கருத்தினைக் கவனத் திலே நான் எடுத்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9–20.]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அமைச்சரவர்கள் சொல்லும் போது ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் மேல்நிலைப் பள்ளி அமைப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னார். வரு கிற ஆண்டிலே ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று மேல்நிலைப் பள்ளி அரசுப் பள்ளிகளிலே நிச்சயமாக ஆரம்பிக் கப்படுமா? அதே போல், அம்பாசமுத்திரம் யூனியன் பகுதியிலே உயர் செகண்டரி பள்ளி ஒன்று அரசு தரப்பிலே ஆரம்பிக்கப் படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, புதிதாக மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்குகின்ற முடிவை அரசு எடுத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கவனத்திலே எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, தொடங்கப்பட்டுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் அன்எகனாமிக்கல் ஸ்டிரென்த் உள்ள பள்ளிகள் எவையேனும் உள்ளனவா ? ஆமெ னில், அவை பற்றிய விவரத்தை அளிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, துவக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் சில பாடங்களைப் போதிப்பதற்கான தேவையான தகுதிபடைத்த ஆசிரியர்கள் இல்லையென்று கூறப்படுகிறதே அது உண்மையா ? குறிப்பாக, லேடி வெலிங்டன் காலேஜுக்கு ஒட்டியுள்ள மாடல் பள்ளியில்

கணக்கு ஆசிரியர் இல்லையென்று கூறப்படுகிறதே அப்படிப்பட்ட குறையினை உடனடியாக நீக்க அரசு முன்வருமா ? குறிப்பாக, பரீட்சை வருகிற காலமாக இருப்பதால், இந்தக் காலத்திலும் இல்லையென்ற குறையை நீக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, ஹையர் செக்கண்டரி பள்ளிகளை ஆரம்பிப்பதற்குப் பொதுமக்கள் பங்குத் தொகை கட்ட வேண்டுமென குறிப்பிட்டிருந்தார்கள். துவக்கப்பட்ட எல்லா பள்ளிகளாலும் அந்தப் பங்குத் தொகை கட்டப்பட்டுவிட்டதா ? அப்படி இல்லையென்றால், கிராமப் புறங்களில் உள்ள பள்ளிகள் அப்பங்குத் தொகையைக் கட்ட கஷ்டமாக இருக்கிற காரணத்தால், அதைத் தளர்த்த அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கொடுக்காத பள்ளிகள் மீது நாம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நான் முன்பே கூறியிருக்கிறேன். ஆகவே, அப்படி இருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்சினையே எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி ஒன்றியத்துக்கு ஒன்று என்ற கணக்கில் எத்தனை ஒன்றியங்களில் உயர் செகண்டரி துவக்கப்பட்டுள்ளது, துவக்கப்படவில்லையென்பதாகும். ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் உயர்செகண்டரி பள்ளிகள் இல்லை என்றும் ஆசிரியர்கள் இல்லையென்றும் உறுப்பினர்கள் சொல்லிக்கொண்டே கேள்வி கேட்டுக்கொண்டு போனால் முடிவே இருக்காது. கடைசியாக, திரு. துரை முத்துசாமியைக் கேட்க அனுமதிக்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, முதல் கட்டமாக, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒன்று என்ற திட்டத்தின்கீழ் அனுமதியளிக்கப்பட்ட அத்தனை இடங்களிலும் கட்டிடம் கட்டப்பட்டு விட்டதா ? குறிப்பாக, சங்கராபுரம் ஒன்றியத்திற்கு வழங்கிய பள்ளிக்குத் தேவையான தொகையையும் கட்டிவிட்டார்கள். மற்றவற்றையும், பங்குத்தொகையையும் கட்டி விட்டார்கள். அங்கு உடனடியாக, கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசினர் மேல் நிலைப் பள்ளிகளுக்குப் பரிசோதனை ஆய்வுக் கூடம் கட்டுவதான முடிவை எடுத்து அது கட்டப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி கேட்டவருக்கு இரண்டாவது சந்தர்ப்பம். ஆகவே, திரு. பெ.சு. திருவேங்கடம்.

திரு. பெ.சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, 14 ஊராட்சி ஒன்றியங்கள், நகரங்களுக்குத் தூரமாக இருந்ததாலே மேல் நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கிற கருத்து இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த 14 ஊராட்சி எவை, எவை என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அந்த 14 ஒன்றியங்களின் பெயர்களாவன : பூண்டி, சித்தாமூர், கீரப்பாளையம், கம்மாபுரம், திருநாவலூர், வல்லம், வானூர், கொள்ளிடம், சேதுபாவா சத்திரம், கடலூர், விராலிமலை, குஜிலியாம்பாறை, நரிக்குடி, கன்னன்குடி.

*வினா எண். 143—திரு. ஏ. ராமலிங்கம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

சிதம்பரம் அரசினர் நந்தனார் ஆண்கள், பெண்கள் பள்ளிகளில் உயர் செகண்டரி வகுப்புகள் தொடங்க அரசுக்கு உத்தேசம உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சிதம்பரம் அரசினர் நந்தனார் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. ராமலிங்கம் : அனுமதி வழங்கப்பட்டமைக்கு மிக்க நன்றி. இருப்பினும் சையன்ஸ் லேபரட்டரி கட்டிட வசதி இல்லை. ஆகவே, கட்டிட வசதியும் சையன்ஸ் லேபரட்டரியும் கொண்டு வர அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

*வினா எண். 144—திரு. கே.ஜே. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், களம்பூரில் Higher Secondary பள்ளி துவக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

[1979 பிப்ரவரி 23

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம் களம்பூரில் உள்ள அரசு உயர் நிலைப் பள்ளியில் 1978–79-இல் மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் துவக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. கே.ஜே. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, களம்பூரில் உள்ள பள்ளிக்கும் அதே தொகுதியைச் சேர்ந்த இன்னொரு அரசு உயர்நிலைப்பள்ளிக்கும் போதுமான சயன்ஸ் லேபரட்டரிக்கான கட்டிட வசதிகள் இல்லை. கட்டிடம் கட்ட இந்த ஆண்டில் அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, முதல் கட்டமாக ஆய்வுக் கூடங்களை கட்டுகின்ற ஒரு செயலிலே அரசு இறங்கியிருக்கிறது. அந்த வகையிலே அரசினர் உயர் நிலைப்பள்ளிகளுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கும்.

* வினா எண் 145—திரு. பெ.சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வட ஆற்காடு மாவட்டம் புதுப்பாளையம் ஒன்றியத்தில் உள்ள புதுப் பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியை ஹையர் செகண்டரி பள்ளியாக மாற்றும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம், புதுப்பாளையம் ஒன்றியத்தில் உள்ள புதுப்பாளையம் அரசு உயர் நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. பெ.சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, புதுப்பாளையம், கலசப்பாக்கம் போன்ற இடங்களில் உள்ள மேல் நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இடையில் நிறுத்தி வைக்கப்பட்டது, அதை மீண்டும் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

1979 பிப்ரவரி 23]

*—வினா எண். 146—திரு. ஓ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை அரசுப் பள்ளிகளுக்கு உயர் இடை நிலைக் கல்வி வகுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : திருநெல்வேலி மாவட்டத்தில் 25 அரசு உயர் நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் 25,000 ரூபாய் பொது மக்களிடம் இருந்து வசூல் செய்து கட்ட வேண்டும் என்றும் அப்படி அவர்கள் கட்டவில்லை என்றால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாவட்ட கல்வி அதிகாரி அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்த ஆணை கல்வி இயக்குநருடைய அலுவலகத்தில் இருந்து பிறப்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. ஆகவே இது பற்றி அரசு என்ன கொள்கையை மேற்கொள்ளவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல் நிலைப் பள்ளிகளுக்கு ரூபாய் 25,000 கட்ட வேண்டும் என்பது வழக்கமாக புதிய பள்ளிகள் ஆரம்பிப்பதற்கான வழக்கத்தையொட்டி எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், மேல் நிலைப் பள்ளிகளுக்கு கட்டாயப் படுத்தவில்லை என்பதோடு, அந்தத் தொகையை கட்ட வேண்டும் என்று சொல்வதற்கு காரணமே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஒத்துழைப்பையும், தலைமை ஆசிரியர்கள் பெற வேண்டும் என்றும் அது மட்டுமல்லாது பொது மக்கள் மூலமாகவும் பெற்றோர்கள் சங்கத்தின் மூலமாகவும் இந்தத் தொகையை வசூல் செய்வதுதான் மேல் நிலைப் பள்ளிகள் தொடர்ந்து நல்ல முறையில் இயங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

திரு. ந. குலசேகரன் : நெல்லை மாவட்டத்திலே மேல் நிலைப் பள்ளிகள் திறக்கப்பட வேண்டும் என்று அரசிடம் வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை? இதில் அரசு அனுமதித்த விண்ணப்பங்கள் எத்தனை? எந்த அடிப்படையில் அவைகள் திறக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாணவர்களுடைய தேவைகளின் அடிப்படையிலும் அது அமைந்து இருக்கிற இடங்களுடைய அமைப்புகளை வைத்தும்

நாம் மேல் நிலைப் பள்ளிகளை துவக்கியிருக்கிறோம். ஏறக் குறைய அனுமதி கேட்டு வந்ததில் பெரும்பான்மையான வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகின்றன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஒரே மன்றத்தில் ஊராட்சி மன்றங்களுக்கு ஒரு மேல் நிலைப் பள்ளி திறக்கப்படும் என்று அமைச்சர் கூறியிருக்கிறார்கள். வாசுதேவ நல்லூரில் ஆறு கீழ் நிலைப் பள்ளிகள் இருந்தும் ஒரு மேல் நிலைப் பள்ளி கூட இல்லை. இங்கிருந்து வடக்கே ராஜபாளையம் 12 மைலில் ஒரு மேல் நிலைப் பள்ளியும், தெற்கே புளியாங்குடி 12 மைலில் ஒரு மேல் நிலைப் பள்ளியும் இருக்கின்றன. இதனால் மக்கள் தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள். இங்கே வாசுதேவ நல்லூரில் ஒரு மேல் நிலைப் பள்ளி தொடங்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நாங்கள் புதிதாக மேல் நிலைப் பள்ளிகள் திறக்கவிருக்கின்றோம். இன்னும் முடிவு பெறவில்லை. அந்த நேரத்தில் உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படும்.

ஜின்னிங் ஆலைகளில் பணியாற்றும் பெண் தொழி லாளர் ஊதிய விகிதங்கள்.

*வினா எண். 147— திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

ஜின்னிங் பேக்டரிகளில் வேலை செய்யும் பெண் தொழி லாளர்களின் கூலியை உயர்த்தச் செய்வது குறித்த செயற் குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பஞ்சு அரைவு, பஞ்சு அழுத்துதல் கழிவுப்பஞ்சு ஆகிய வேலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு (பெண்கள் உட்பட) குறைந்த அளவு ஊதிய விதங்கள் ஏற்கனவே 1969 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்விதங்களை மாற்றி யமைக்க அரசுக்கு ஆலோசனை கூற ஒரு குழு அமைக்கப்பட் டுள்ளது. இக்குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றபின் குறைந்த அளவு ஊதிய விதங்களை மாற்றி அமைக்க வாய்ப்பு இருக்கிறது.

[முற்பகல் 9-30.]

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, அந்த அறிக்கையை எவ்வளவு விரைவாக அமல் படுத்துவதற்கு வழிவகைகள் இருக்கின்றனவோ, அவ்வளவு துரிதமாக அதைச் செய்ய போதுமான நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறபோது, வேலைப் பளு அதிகமாக இருக்கிற அளவிற்கு கிடைக்கிற கூலி சரியாக இல்லை என்ற புகார் பெண் தொழிலாளர்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டு வருகிறது என்பது உண்மை நிலையாக இருக்கிற காரணத்தால் அதை மாற்றியமைக்க அரசு தீவிர மாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டு இருக்கிறது என்பது உண்மை. எனவே விரைவில் அறிக்கை கொடுக்கவேண்டும் என்று அந்தக் குழு கேட்டுக் கொள்ளப்படும். அந்தக் குழுவின் பரிந்துரை வந்தபின் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, ஜின்னிங் பாக்டரியில் தொழிற்சாலைச் சட்டம் முறையாக அமல்படுத்தப்படாமல், தொழிற்சாலைச் சட்டத்திற்கு விரோதமாக சிறுமிகள் ஜின்னிங் பாக்டரியில் வேலைக்கு அமர்த்தப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மூலக்கேள்வி ஜின்னிங் பாக்டரியில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களின் கூலியை உயர்த்தச் செய்வது குறித்த செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா என்பதாகும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஒரே தொழிலில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கும், ஆண் தொழிலாளர்களுக்கும் இடையே கூலி வித்தியாசம் — விவசாயத் தொழிலில் இருந்தாலும், வேறு எந்தத் தொழிலில் இருந்தாலும் — இருக்கிறது. ஆணோடு பெண் சரிநிகர் சமானமாக கருதப்படவேண்டும் என்று எண்ணுகிற ஆட்சியில் இருபாலாருக்கும் ஒரே விதமான கூலி நிர்ணயிக்க மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஆவன செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, "Equal Remuneration Act of 1976" நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் படி ஒரே தொழிலில், ஒரேவிதமான வேலையைச் செய்து கொண்டு இருந்தால் ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே அளவு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதிலே எங்காவது மாறுபாடு இருந்து

[1979 பிப்ரவரி 23

மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு ஏற்ற [illegible]யம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்த ஜின்னிங் பாக்டரியில் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வேலை இருக்கிறது. இருப்பினும் தினக்கூலி என்ற வகையில் அவர்களை வைத்துக்கொண்டு, அந்த தினக்கூலியைக் கூட சரியாகக் கொடுக்காமல் சுரண்டுகிறார்கள். ஆகவே, அரசு அமைத்துள்ள அந்தக் குழுவே, தொடர்ச்சியாக 6 மாதம் வேலை செய்து இருந்தால் அவர்களுக்கும் நிரந்தரமாக பணி கொடுக்க வேண்டும் என்றும், அந்தக் கூலியையும் நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் பரிசீலித்து பரிந்துரை செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழுவில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா, ஐ.என்.டி.யு.சி., திரு. ஆறுமுகம், ஏ.ஐ.டி.யு.சி., ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்களைக் கண்டு, இந்த முறையீட்டைக் கொடுத்தால், அந்தக் குழுவால் அந்தக் கோரிக்கை கவனிக்கப்படும்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவரவர்களே, நீண்டகாலமாக தினக்கூலியாக இருப்பது என்கிற பிரச்னை ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது. இது பற்றி அமைச்சர் அவர்கள் ஒரு சீரான தெளிவான சட்டத்தை உருவாக்குவதன் மூலமாக நீண்டகாலமாக தினக்கூலியாக இருக்கும் முறையை மாற்ற தக்க நடவடிக்கையை, புரட்சிகரமான நடவடிக்கையை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்ற காரணத்தால் தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, ஜின்னிங் பாக்டரியில் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு சம்பந்தமான ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 1969-ம் ஆண்டு அந்தச் சட்டம் வந்தது என்று சொன்னார்கள், சட்டம் வந்தபோது நிர்ணயிக்கப்பட்ட கூலி எவ்வளவு ? தற்போது குழு போடப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். அந்தக் குழுவைக் கண்டு கேளுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் வரதராசன் அவர்களுக்கு அமைச்சர் அறிவுரை தந்தார்கள். அந்தக் குழு உறுப்பினர்களுக்கு இந்த அரசு வசதி செய்து கொடுத்து இருக்கிறதா ? இங்கே அவர்களுக்கு எங்காவது

1979 பிப்ரவரி 23]

அலுவலகம் இருக்கிறதா ? எங்கே போய் அவர்களைக் கண்டு நாங்கள் அந்தக் கோரிக்கையைக் கொடுக்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் [illegible] செய்து அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, [illegible] அந்தக் குழு என்று சொல்லவில்லை. முதலிலே [illegible] குழு அமைக்கப்பட்டது, 1969-ல் [illegible]. அந்தக் குழு கூற்றுப் படி 1977-ம் ஆண்டு [illegible] மனுக்கொடுக்கிறார்களோ அவற்றைப் [illegible]ணம் செய்து [illegible] பரிந்துரை வழங்கும். அது தான் [illegible] பெற்று [illegible] செய்து பரிந்துரை [illegible] அதை நன்றாக உபயோகித்துக் கொள்ளும்படி மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. [illegible] : தலைவரவர்களே, பல்வேறு தொழிற்சாலைகளில் குறைந்தபட்சம் ஊதியம் கொடுப்பதற்காகவே [illegible] தொழிலாளர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைச் சட்டத்தின் மூலம் மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கேட்பது மூலக்கேள்வியை ஒட்டிய துணைக் கேள்வியாக இருக்க வேண்டும்.

தொழிலாளர் நலத் துறையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு.

*வினா எண் 148 — திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொழிலாளர் நலத்துறையில் எத்தனை பேருக்கு எத்தனை சதவீதம் வேலை வழங்கப்பட்டிருக்கிறது மாவட்ட ரீதியாக ?

(ஆ) சட்ட ரீதியான ஒதுக்கீடு செய்யப்படுவது இத்துறைக்கு பொருந்தாது என்று தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் அதன் 1973—74-க்கான ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில் அதன் மீது அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) தொழிலாளர் துறையிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை 223.

வழங்கப்பட்டிருக்கும் சதவிகிதம் 12.
மாவட்ட ரீதியாக நியமனம் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

1.	திருச்சி	14
2.	சேலம்	26
3.	சென்னை	47
4.	செங்கல்பட்டு	17
5.	திருநெல்வேலி	5
6.	கோயம்புத்தூர்	30
7.	நீலகிரி	19
8.	மதுரை	20
9.	ராமநாதபுரம்	9
10.	தஞ்சாவூர்	13
11.	புதுக்கோட்டை	..
12.	கன்னியாகுமரி	1
13.	தென் ஆற்காடு	5
14.	வட ஆற்காடு	14
15.	தர்மபுரி	3
		223

(ஆ) ஆம்.

(இ) மறுபரிசீலனை செய்து சட்ட ரீதியான ஒதுக்கீடு முறை அமைச்சுப் பணிக்கான நேரிடை நியமனங்களிலும் 1975 ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஏற்கனவே 1973-74 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் Reservation for S.C. and S.T. is not applicable in Labour Department என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவர்கள் அதற்கு பதில் கூறவில்லை. இப்போது 12 சதவிகிதம் தான் தந்துகொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசியல் சட்ட ரீதியாக 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டோருக்கு தர வேண்டும். அப்படி இருந்தும் ஏன் தரவில்லை? அதற்கு யார் காரணம்? அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முனவருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த தகவல் சரியானது. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், 31 சதவிகிதம் பிற்பட்டோர் மக்களுக்கும் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று அவர்களுக்கும் வேலைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டு கொடுக்க அவர்களுக்குக் கட்டாயமாக ஒதுக்கிய சதவிகிதப்படி நியாயம் கிடைப்பதற்கு வேண்டுமென்று அதற்கு வேண்டிய எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. [illegible] : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொழிலாளர் நலத் துறையிலே 223 பேர்களுக்கு மட்டும் தான் இப்போது வேலை வாய்ப்பு தரப்பட்டுள்ளது என்று கனம் அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இதை மேலும் அதிகப்படுத்த அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 18 சதவிகிதத்திற்குப் பதிலாக 12 சதவிகிதம்தான் இருக்கிறது என்பதையும், 18 சதவிகிதமாக ஆக்கி உயர்த்த இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. [illegible] : தலைவரவர்களே, நம்முடைய தமிழ் நாட்டில் பெரும்பாலான தனியார் தொழிற் கூடங்களில் அவைகள் அரசிடமிருந்து மானியம் பெற்றும் வங்கிகளிலிருந்து கடன் பெற்றும் தொழில் நடத்திக் கொண்டிருக்கின்றன. இந்த 18 சதவீத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்க சொல்லி, கட்டாயமாக அவர்களையும் 18 சதவிகிதம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் பகுதியில் தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. அங்கு பெரும்பாலும் முஸ்லீம் சமுதாயத்தினருக்கு மட்டும்தான் வேலை கொடுக்கிறார்கள். அப்படி இல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் 18 சதவிகிதம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மூலக்கேள்வி தொழிலாளர் நலத் துறையில் எத்தனை சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது என்பதாகும். அதற்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

திரு. [illegible] : சார், பார்டர் கிளாசில் இருந்தவர்களையும் பார்வேர்டு கிளாசில் சேர்க்கப்பட்டது என்றும், ஆகவே, பார்வேர்டு கிளாசுக்கு அதிகமாக இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டு வருவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? பக்கத்திலுள்ள மற்ற ஸ்டேட்களில்

[1979 பிப்ரவரி 23

ஆந்திரா, கர்நாடகம் அங்கெல்லாம் 35, 36 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிலும் செய்ய திட்டம் உண்டா?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அவ்வப்போது அறிவிக்கப்படுகிற அரசு ஆணைக்கேற்ப தொழிலாளர் நலத்துறை நடந்து கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, 18 சதவீதம் கொடுத்தாக வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறதா? அது என்றைக்கு போடப்பட்டது என்றும் இனி வரக்கூடிய காலி இடங்களை நிரப்பும் வரை அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே 1975லே இருந்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்போது அந்த சதவீதத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கேண்டிடேட்டை எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்து அனுப்பும்போது அந்த முறையைக் கையாண்டு அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் முயற்சி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா. சை. ம. பாரூக்: தலைவரவர்களே, வினா எண். 148-க்கு உட்பட்ட துணைக் கேள்விகள் போடப்படும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் தனியார் வேலைகளை தாழ்த்தப்பட்டவர்களுக்கல்லாமல், தமிழர்களை நீக்கிவிட்டு முஸ்லிம்களுக்குக் கொடுப்பதாகவும், தமிழர்களுக்குக் கொடுக்கவில்லை என்ற வகையிலும் கேள்வியைக் கேட்டார்கள். அந்தக் கேள்வி அனுமதிக்கப்படுமானால் முஸ்லிம்கள் தமிழர்கள் அல்ல என்கின்ற கருத்தை உண்டாக்குமாகையால் தயவு செய்து அதைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூடலூர் வட்டத்தில் பால் வழங்கு சங்கங்கள் மூலம் கடன்கள்.

*வினா எண். 149—திரு. கே. உச்சி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1977-78-ம் ஆண்டில் நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டப் பேரவை தொகுதியில் எத்தனை அரிசன மக்களுக்கு பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பசுக்கள் வாங்க கடன் வழங்கப்பட்டது?

1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 1977-78-ம் ஆண்டில் நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் உள்ள அரிசன மக்களுக்கு பால் விநியோக கூட்டுறவு சங்கங்களின் மூலம் பசுக்கள் வாங்க கடன் வழங்கப்படவில்லை.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, அந்தப் பகுதியில் மக்களும் ஏழ்மையான மக்கள், அதாவது அரிசன மக்கள் அன்றாட வாழ்க்கை வசதி கூட இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இனியாவது இந்த அதிகமான அளவில் பசுக்களைக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த அரசு இனிமேல் இந்த விஷயத்தை அனுதாபத்தோடு கவனிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. போ. கோபாலன்: தலைவரவர்களே, நீலகிரியில் வாழும் அரிசன மக்களுக்கு விரைவில் பசுக்கள் வாங்குவதற்கு கடன் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால், அந்த மக்களுக்கு பணம் கொடுப்பதற்கு பதிலாக பசுக்களாக வாங்கித்தர அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இருக்கின்ற அந்த மக்களுக்குப் பசுக்கள் வாங்கித்தரவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. தற்போது விலை உயர்ந்து விட்ட காரணத்தால் தான் அரசால் வாங்கித்தர இயலவில்லை. ஆகவே இனிமேல் அரசாங்கம் அதற்குரிய நடவடிக்கை எடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விலை அதிகமாகிவிட்டது என்று கூறினார்கள். அப்படியானால் அந்தப் பகுதியிலே பால் மாடு வழங்குவதிலே பெரிய தவறுகள் நடந்திருப்பதாகவும் அது குறித்து கபால் என்ற இடத்தில் நடந்த விழாவின்போது அமைச்சரவர்களிடத்தில் அவர்களின் நேரடிக் கவனத்திற்கு அங்கிருக்கக்கூடிய பணியர்கள் என்ற வகுப்பைச் சேர்ந்த இருவர் விண்ணப்பம் கொடுத்திருப்பதாகவும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அது உண்மையா? அது உண்மையானால் அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, பால்மாடே வழங்கப்படாதபோது அது வாங்குவதில் தவறு எப்படி ஏற்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நான் கலந்துகொண்ட விழாவில் அப்படி யாரும் குறை சொல்லவில்லை.

தஞ்சை மாவட்டத்தில் வழங்கப்பெற்ற உழவு மாடுகள்.

*வினா எண். 150—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

1977–78-ல் தஞ்சை மாவட்டத்தில் அரிசன விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உழவு மாடுகள் வழங்கப்பட்டதா?

மாண்மிபுகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஆம்

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மானியம் வழங்கப்படுகிறது என்று கூறினார்கள். அய்.ஆர்.டி.பி. மூலமாக வழங்கப்படுகின்ற மாடுகளுக்கு மட்டும் தான் மானியம் வழங்கப்படுவதாக கூறப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப்படுகின்ற மாட்டிற்கும் மானியம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள நன்னிலம் வட்டம், கும்பகோணம் வட்டம், சீர்காழி வட்டம் ஆகிய மூன்று வட்டங்களில் 19 நபர்களுக்கு அரசாங்கம் மானியமாக மாடுகள் வழங்கி இருக்கின்றது. அரசாங்கம் தான் வழங்குகின்றதே தவிர கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வழங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தஞ்சை மாவட்டம் பற்றிய கேள்வி. எனவே தஞ்சை மாவட்ட உறுப்பினர்கள் கேட்டால் போதும்.

திரு. மா. மணிமாறன் : கூட்டுறவுச் சங்கங்கள் ஹரிஜனங்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் வழங்குகிறார்கள், அப்படி வாங்கப்படுகிற மாடுகளுக்கு அரசு மானியம் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மூலக் கேள்வி உழவு மாடுகள் பற்றியது, ஆனால் உறுப்பினர் அவர்களின் துணைக் கேள்வி கறவை மாடுகளைப் பற்றிக் கேட்கிறார்கள், கறவை மாடுகளுக்கு அரசாங்கம் மானியம் வழங்கிக் கொண்டிருக்கிறது.

திரு, இரெ, இராசமாணிக்கம் : ஹரிஜன விவசாயிகளுக்கு முந்தைய அரசு இனாமாக உழவு மாடுகளை வழங்கி வந்தது. அந்தத் திட்டம் இப்போது அமலில் இருக்கிறதா ? சென்ற ஆண்டு உழவுமாடுகள் ஹரிஜன விவசாயிகளுக்கு எவ்வளவு இனாமாக வழங்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு, பெ. சௌந்தரபாண்டியன் : திட்டம் எங்கேயும் போய்விடவில்லை, இருந்துகொண்டிருக்கிறது, தஞ்சை மாவட்டத்தில் 19 நபர்களுக்கு கடந்தாண்டு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி : ஹரிஜன விவசாயிகளுக்கு உழவு மாடுகள் கொடுக்கிறபேரால் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மூன்று தாலுக்காக்களுக்கு மனுக்கள் போடப்பட்டு குலுக்குச் சீட்டு மூலம் குலுக்கியெடுப்பதன் மூலம் கொடுக்கிறார்களே தவிர, இப்படிப்பார்க்கிறபோது தஞ்சை மாவட்டத்தைச் சுற்றிவர இரண்டு ஆண்டுகளாகின்றன. ஆகவே, குலுக்குச் சீட்டு இல்லாமல் ஏழை ஹரிஜன விவசாயிகளுக்கு அரசாங்கமே நேரடியாக மனுக்களைப் பரிசீலனை செய்து உழவுமாடுகள் வழங்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டிய்ன் : கிடைக்கிற நிதியை வைத்துக்கொண்டுதான் இந்தப் பணியை இத்துறை செய்யவேண்டியிருக்கிறது. இதை மாற்றியமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கடன் திட்டத்தையும் புகுத்தலாமா என்று இந்தத் துறை தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது,

திரு. அ. செல்லப்பா : தஞ்சை மாவட்டத்தில் ஹரிஜன விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் பாபனாசம் வட்டம் தவிர பிற வட்டங்களுக்கு அளிப்பதாகச் சொல்கிறார்கள் அமைச்சர் அவர்கள் பதிலில். வலங்கைமான் தொகுதியில் பாபனாசம் வட்டம்தான் தாழ்த்தப்பட்ட தொகுதி. அப்படி இருக்க ஏழை ஹரிஜன மக்கள் வலங்கைமான் தொகுதியில் அதிகமாயிருப்பதால் பாபனாசம் வட்டத்திற்கும் மானியம் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஒவ்வொரு ஆண்டும் இரண்டு மூன்று வட்டங்களை எடுத்து உழவுமாடுகள் வழங்குகிற பணியை அரசு செய்துகொண்டிருக்கிறது, பாபனாசம் வட்டம் இதுவரையில் இடம்பெறவில்லையென்றால் அது வருங்காலத்தில் நிச்சயம் இடம் பெறும்.

திரு. செ. இராமலிங்கம் : கடந்த இரண்டாண்டுகளாகத் தஞ்சை மாவட்டம் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு கும்பகோணம், மாயூரம், பாபனாசம், சீர்காழி தாலுக்காக்களில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்தும் அரசு ஊழியர்களுக்கு கிடைத்து வருகிற சலுகைகள், பிற தொழில் செய்கிறவர்கள், பிற தொழில்களில் இருப்பவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை, எனவே இந்த மானியத்தை உயர்த்தி விவசாயிகளுக்கு வழங்க அரசு முன் வருமா?

[1979 பிப்ரவரி 23

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மானியத்தை உயர்த்துவதற்கு தற்போது வழியில்லை. இருந்தாலும் மற்ற விவசாயிகளுக்கும் உதவுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்,

காட்பாடி-சித்தூர் சாலை இரயில்வே மேம்பாலம்,

*வினா எண் 151—திரு. எஸ், ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள காட்பாடி-சித்தூர் போகும் சாலையில் இரயில்வே மேம்பாலம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அம்மேம்பாலம் எப்போது பழுது பார்க்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இம்மேம்பாலத்தினை திரும்பக் கட்டும் பணி தென் பிராந்திய இரயில்வேயின் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் எடுத்துக்கொள்ளப்படும்.

கோமுகி ஆற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண் 152—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தாலுகா தியாகதுருகம் அருகில் நெடுஞ் சாலையில் கோமுகி நதியின் குறுக்கே உள்ள பாலத்தை நிரந்தர போக்குவரத்துக்கு ஏற்ப சீரமைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. வ. துலுக்காணம் : தியாகதுருகம் அருகில் நெடுஞ் சாலையில் கோமுகி நதியின் குறுக்கே உள்ள அந்தப் பாலம் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் வரும்போது அந்தப் பாலத்திற்கு பக்கத்திலுள்ள மண் சாலையில் அரிப்பு ஏற்பட்டு ஒரு மாத காலத் திற்கு மேலாக போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டு இருந்தது. வெள்ளம் வரும்போது அந்தப் பாலத்தில் போக்குவரத்து செல்ல முடிவதில்லை, மக்கள் செல்ல முடிவதில்லை, அந்தப் பாலம் வெள்ளையன் காலத்தில் கட்டப்பட்டது. தற்போது அந்தப் பாலம் மிக மோசமானதொரு நிலையில் இருக்கிறது. வெள்ளம் வரும்போது அங்கு போக்குவரத்துத் தடை ஏற்படுகிறது. ஆகவே போக்குவரத்து வசதியை ஏற்படுத்த நிரந்தரமான முறையில் அங்கு ஒரு புதிய பாலத்தை அமைத்துத் தர அரசு முன்வருமா?

1979 பிப்ரவரி 23]

[முற்பகல் 9–50]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பாலம் தற்போது 5,5 மீட்டர் அகலம் உள்ளதாக இருக்கிறது, இதை போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இல்லாத விதத்தில் அமைக்க வேண்டும் என்றால் ஏழு மீட்டர் அகலமுள்ளதாக இருக்க வேண்டும். அதற்கான முறையில் வருங்காலத்தில் இருக்கின்ற நிதிநிலைமைக்கு ஏற்ப இப்படிப்பட்ட வேலைகளை எடுத்துக்கொள்ள அரசு முயற்சி செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. வ. துலுக்காணம் : இந்தப் பாலத்தை அகலப்படுத்தாமல் இருப்பதால் வெள்ளம் தடுக்கப்படுகிறது, ஆகவே, எந்தவித தடையும் இல்லாமல் தண்ணீர் சீராக வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்தையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள ஏரிகள்,

*வினா எண், 153—திரு. துரைமுருகன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் தாலுகாவில் செட்டேரியில் ஓர் அணை கட்டப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமாக முனிவூர் ஏரி, ஜெயப்புரம் ஏரி, ஆண்டி அப்பனூர் ஏரி, சந்திரபுரம் ஏரி ஆகியவைகளில் நீர்வரத்து பாதிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) இந்த ஏரிகளுக்குப் போதுமான நீர் இந்த நீர்த்தேக்கத்தில் கட்டியுள்ள ஆற்று மதகு மூலம் விடுவதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1975-ல் பெய்த பெருமழையினால் அணை நிரம்பி இந்த ஏரிகள் பாதிக்கப்படவில்லை. அதன் பிறகு சரிவர மழை இல்லாமல் அணையில் முழு அளவு நீர் நிரம்பவில்லை. ஆதலின் இதன் கீழுள்ள ஏரிகள் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளன.

[1979 பிப்ரவரி 23

(இ) இந்நீர்த் தேக்கத்திட்டத்தின் செயல் முறைகளை இன்னும் குறைந்தது 5 அல்லது 6 ஆண்டுகள் கண்காணித்து அதன் முழு பலன்களையும் அறிந்த பின்னர் அதில் ஏதேனும் இடர்ப்பாடுகள் இருந்தால் அவற்றின் மேம்பாட்டிற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த சேட்டேரி அணையினால் கீழேயுள்ள ஏரிகளுக்கு தண்ணீர் வருவதில்லை, இந்த அணைக்கும் சரியாக தண்ணீர் வருவதில்லை, ஆகவே இதை அதிகப்படுத்த அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இயற்கையாக மழை அதிகமாக இருந்தால் அதிகமாக தண்ணீர் வரும், (சிரிப்பு),

திரு. எம். ஏ. லத்தீப் : பெரு மழை ஏற்பட்ட நேரத்திலும் இந்த ஏரிகளில் தண்ணீர் நிறையவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், மேலும் இதிலுள்ள சப்ளை வாய்க்கால் எல்லாம் தடைபட்டு இருக்கிறது, இருக்கின்ற நீர் ஆதாரங்களும் தடைபட்டிருக்கிறது, ஆகவே இதற்கான நீர் ஆதாரங்களை சீர்படுத்தி, தடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமானால் மழைக் காலத்தில் இந்த ஏரிகளில் தண்ணீர் தேங்குவதற்கு வழி ஏற்படும், ஆகவே அதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா ? இதை மாநிலம் முழுவதும் செய் வதற்கும் அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரியில் 1975-ம் ஆண்டு பெய்த பெருமழையில் தண்ணீர் நிரம்பியது, அதற்குப்பிறகு தண்ணீர் நிரம்பவில்லை, அதற்காக 'ரிவர் ஸ்லூயிஸ்' ஏற்படுத்தி அதன் மூலமாக கீழே உள்ள சந்திராபுரம் போன்ற ஏரிகளில் தண்ணீரை நிரப்ப முயற்சி கள் எடுக்கப்பட்டு வருகின்றன, அதேபோல் தமிழகத்தில் பல 'ரிவர் ஸ்லூயிஸ்' ஏற்படுத்துவதற்கும் அரசு முயற்சிகள் எடுத்து வருகின்றது.

திரு. பெ.சு. திருவேங்கடம் : இந்த அணையின் கீழ் இருக்கின்ற இரண்டு மூன்று ஏரிகளில் அடிக்கடி தண்ணீர் நிரம்புவதில்லை, இப்படி ஏரிகளில் தண்ணீர் நிரம்பாத காலங்களில் இதிலுள்ள விவசாயிகளுக்கு ஏதாவது சலுகைகள், நிவாரணம் அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணையின் கீழ் உள்ள ஏரிகளில் ஐந்தாறு ஆண்டுகளுக்கு தண்ணீர் எந்த அளவுக்கு வருகின்றது என்பதை கண்காணித்து பரிசீலித்த பின்னால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது,

1979 பிப்ரவரி 28]

தருமபுரி மாவட்டத்தில் பாசன வசதிகள்,

*வினா எண் 154- டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒகேனக்கல் ஆற்றிலிருந்து பம்பிங் ஸ்டேஷன் மூலம் நீர் எடுத்து பாசன வசதிகளை உருவாக்க அரசு ஏதேனும் செயல் திட்டம் வகுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை,

டாக்டர் கே, சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்யாணம் பண்ணியும் பிரம்மசாரி, கடன் பட்டும் வெறும் பட்டினி என்பதோடு காவிரி பாய்ந்தும் பஞ்சப் பகுதி தர்மபுரி மாவட்டம் எனும் நிலையிலுள்ளது, கர்நாடகத் தில் பிறந்து தர்மபுரி மாவட்டத்தில் துள்ளிக் குதித்து, மேட்டூரில் தவழ்ந்து விளையாடி, தஞ்சையை வாழ வைத்து கடலில் சங்கமம் ஆகிறது காவிரி, இப்படிப்பட்ட காவிரி பாய்கின்ற தர்மபுரி மாவட்டத்தில் வறட்சி நீங்கி வளர்ச்சி பெறப் பொன்னகர பகுதியை மெருகூட்ட. பம்பிங் ஸ்டேஷன் அமைத்து இந்த நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்படுத்துவதற்கு அரசு நட வடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரியாக இருக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படித்தான் இருப்பேன் என்று சொன்னால் அதற்கு ஆட் சேபணை இல்லை, (சிரிப்பு) மேலும் ரிவர் பம்பிங் ஸ்டேஷன் அமைத்து. அதன் மூலம் தண்ணீரை எடுத்து பாசனத்திற்குப் பயன்படுத்துகின்ற திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

ஆனால் அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய தொகுதியில் 'ரிவர் பம்பிங் ஸ்கீம்' ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு. அதன் மூலமாக தென் பெண்ணையாற்றில் நீரை எடுத்து, 281 ஏக்கர் குண்டல்பட்டி கிராமத்திற்குப் பக்கத்தில் பாய்ச்சப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் இப்போது நிறை வேற்றப்பட்டு வருகிறது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தென்பெண்ணையாற்றில். குண்டலப்பட்டி கிராமத்தில் பம்பிங் ஸ்டேஷன் மூலம் ஒரு திட்டம் நிறைவேற்றப்படுவதாகச் சொல்லுகிறார்கள். இன்னும் அந்த திட்டம் ஆரம்பிக்கப்பட வில்லை. எனவே, விரைவில் ஆரம்பிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 பிப்ரவரி 23

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே. குண்டலம்பட்டி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்று சொன்னேன். ஆரம்பிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், அது உடனடியாக பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, காவேரி ஆற்றிலிருந்து தண்ணீர் பம்ப் மூலமாக கிடைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொன்னார்கள், ஆனால். தர்மபுரி மாவட்டத்தில் சிறுபாசன திட்டத்தின் கீழ் நிறைய திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் வறட்சி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பாசன வசதிகளை அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, கசிவு நீர் தடுப்பு அணைகள் கட்டப்பட்டு வருகின்றன, அதன் மூலம் இன்று ஓரளவு பாசன வசதியை அதிகரித்து வருகிறோம். மேலும் அந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, ஒகேனகல் பம்பிங் ஸ்கீம் திட்டம் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், இந்த வறட்சி பகுதிகளுக்கு நீர் வருவதற்கு இது ஒரு சிறந்த திட்டம் என்ற காரணத்தால், இனிமேலாவது அதைப்பற்றி பரிசீலனை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒகேனகல் திட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே மின்சார உற்பத்திக்கான முறையிலே கர்நாடக மாநிலமும், தமிழக மாநிலமும் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டு வருகின்றது, ஆகவே, அங்கே பாசன வசதியைப் பொறுத்த அளவிலே திட்டம் இன்னும் பரிசீலனையில் இல்லை.

கைலாபுரம் மருத்துவமனை.

*வினா எண் 155—திரு. மொ. பரமசிவம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா

வாணூர் ஒன்றியத்தில் உள்ள கைலாபுரம் மருத்துவ மனையில் போதுமான பணியாட்களை அமர்த்தவும் மருந்து வகைகள் வழங்கவும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை,

திரு. மொ. பரமசிவம் : தலைவர் அவர்களே, இந்த ஆஸ்பத்திரியிலே போதுமான படுக்கை வசதியில்லை. அதனால், பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரிக்கு அனுப்பப்படுகிறார்கள். அதைப் போக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, வாணூர் ஒன்றியத்தில் கைலாபுரத்தில் நடைபெற்று வருவது அரசு மருத்துவமனை அல்ல. அது தென் ஆற்காடு மாவட்டம் கிளியானூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசரமாக வருகின்ற பிரசவங்களுக்கு படுக்கைகள் இருக்கிறதே தவிர, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதிகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

B. I. M. பட்டதாரிகள்.

*வினா எண் 156--திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .—

(அ) ஆண்டிற்கு 15 B.I.M. பட்டதாரிகள் துணை மருத்துவ அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு வந்தது, பின்னர் 7 ஆகக் குறைக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆமெனில் அந்த எண்ணிக்கையை மீண்டும் உயர்த்தும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ஆண்டுக்கு 15 இந்திய மருத்துவர்களை அதாவது பி. ஐ. எம். பட்டதாரிகள் துணை மருத்துவர்களாக நியமிக்கப்பட்டு வந்தார்கள். குறைக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் குறைக்கப்பட்டு விட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன. எனவே, அதை மீண்டும் பரிசீலித்து “ பீ இந்தியன், பை இந்தியன் ” என்ற கருத்திற்கேற்ப 15-க்கும் குறைவில்லாமல் அத்தகைய பட்டதாரிகளை துணை மருத்துவர்களாக நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, சித்த மருத்துவ பயிற்சியை ஊக்குவிக்கும் முறையிலே சித்த மருத்துவம் தமிழக மக்களுக்கு பெரிதும் கிடைக்கச் செய்வதற்கும், இந்த ஐந்தாண்டு கால இறுதிக்குள் குறைந்தது ஆண்டுக்கு 20 மருத்துவ மனைகள் வீதம் 100 தாலுகாக்களில் தாலுகா அல்லாத கிராமங்களில் சித்த மருத்துவ மனைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று குறிப்பிட்டபடி, இதுவரையில் தமிழகத்தில் 49 தாலுகாக்களில் சித்த மருத்துவ மனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது ஆரம்பிக்கப்படுகின்ற சித்த மருத்துவ மனைகளில் தேவையான மருத்துவர்கள் அவ்வப்போது காலியாகும் இடங்களுக்கு அமர்த்தப்படுவார்கள். ஆகவே, 15 பேர்களுக்கும் குறைவாக நியமிக்கும் நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00 மணி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கோ. இளங்கோவன் : தமிழ்நாட்டில் பணி புரியக் கூடிய மொத்தம் பி. ஐ. எம். டாக்டர்கள் எத்தனை பேர்? பட்டம் பெற்று எத்தனை பேர் பணியில்லாமல் இருக்கிறார்கள் ? அரசு அதனை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பி.ஐ.எம். பட்டதாரிகள் துணை மருத்துவ அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 1972-73-ல் 26 பேர் ; 1973-74-ல் 15 பேர் ; 1974-75-ல் 26 பேர் ; 1975-76-ல் 18 பேர் ; 1976-77-ல் 13 பேர் ; ஆக இவ்வளவு பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. செ. இராமலிங்கம் : குடந்தை மருத்துவ மனையில் சித்த வைத்தியப் பிரிவை விரிவுபடுத்தவும் பல் சிகிச்சைப் பிரிவு, இ. என். டி. பிரிவு ஆரம்பிக்கவும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 13 லட்சம் ரூபாய்க்கு திட்டம் தீட்டப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிட்ட இடத்தைப் பற்றிக் கேட்டால் அமைச்சரிடம் எங்கே பதில் இருக்கும் ? மூலக் கேள்வி சித்த வைத்தியர்களைப் பற்றி மாநில அளவில் கேட்கப்பட்டதாகும். கும்பகோணத்தைப் பற்றிக் குறிப்பாகக் கேட்டால் அமைச்சரிடம் எங்கே விளக்கம் இருக்கும் ?

திரு. செ. இராமலிங்கம் : குடந்தை மருத்துவ மனையில் சித்த வைத்தியப் பிரிவு தொடங்க சோழன் போக்குவரத்துக் கழகம் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்து அந்த சித்த

வைத்தியப் பிரிவு தொடங்கப்படாததன் காரணமாக சோழன் போக்குவரத்துக் கழகம் கொடுத்த நன்கொடையைத் திரும்பப் பெற்றுக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. மீண்டும் சித்த வைத்தியப் பிரிவை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மூலக் கேள்வி சித்த வைத்தியப் பிரிவில் பணியாற்றுகிற மருத்துவ அதிகாரிகளைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால் விரிவாகப் பதில் சொல்ல இயலும்.

கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல்.

*வினா எண் 157 —திரு. என். பெட்டப்பா : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அனைத்து நாட்டு கோ-ஆப்டெக்ஸ் என்ற ஏற்றுமதிப் பிரிவினை அமைத்திடும் கொற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : (அ) ஆம்.

(ஆ) கைத்தறித்துணி ஏற்றுமதியை விரிவாக்கவும், கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளை நேரிடையாக ஏற்றுமதி செய்யவும் " கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல்" என்னும் ஒரு பிரிவை தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் 1—7—1975 முதல் ஏற்படுத்தியுள்ளது.

திரு. என். பெட்டப்பா : தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற கைத்தறித் துணிகளைச் சிறப்பாக விற்பனை செய்வதற்காகத் தமிழகத்தில் மட்டுமல்லாமல் மத்தியில் இருக்கும் டில்லியில் கூட கைத்தறித் துணிக் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்திருக்கிறது. கைத்தறித் துணியை அயல்நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளில் விரும்பி வாங்குவதாகத் தெரிகிறது. ஆகவே தமிழக அரசு முக்கியமான அயல்நாடுகளில் கைத்தறித் துணிக் கண்காட்சிகளை நடத்த ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : இந்த ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள துண்டு, சட்டை துணி போன்ற ரகங்களை ஆஸ்திரேலியா, பிரான்ஸ் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனலின் நோக்கம் நேரடி ஏற்றுமதி செய்வதாகும். ந

[1979 பிப்ரவரி 23

அது நேரடியாக நடைபெறாமல் ஏஜென்சி மூலமாக நடைபெற்று வருகிறது. ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டுமென்ற நோக்கத்துடனும், நேரடியாக நடத்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலும் கைத்தறித் துறை இயக்குநர் இன்னும் பல நாடுகளுக்குச் சென்று வர இருக்கிறார்கள். அவர்கள் சென்று அந்தந்த நாடுகளின் நிலைமையை அறிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. இ. கணேசன் : ஏற்றுமதியாகும் ரகங்கள் எங்கெங்கு தயாரிக்கப்படுகிறது ? எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது ? ஆண்டு ஏற்றுமதி எவ்வளவு ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : 1975-ஆம் ஆண்டுக்கு முன் தமிழ்நாட்டில் கடலூர் பகுதிகளில் மட்டும் ஏற்றுமதி ரகமான லுங்கிகளைத் தயாரித்து வந்தனர். ஆனால், கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதிப் பிரிவு ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சுந்தரபாண்டியம், மதுரை, கடையநல்லூர், சேலம், ஈரோடு, கோவை, கரூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களிலுள்ள சங்கங்களிலும், தொழில் வல்லுநர்களை அனுப்பி ஏற்றுமதி ரகங்களில் உற்பத்தியை அதிகரிக்க உதவி புரிந்துள்ளது. உற்பத்தி செய்யப்படுகிற கைத்தறித் துணிகள் ஆஸ்திரேலியா, பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதுவரை ஆண்டு ஏற்றுமதி ஒரு கோடி ரூபாயாக இருந்தது. அதை இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தும் திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது. வருகிற ஆண்டில் ஆண்டு ஏற்றுமதியை மூன்று கோடி ரூபாயாக உயர்த்த தமிழகத்தில் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டே ஒரு ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு அயல்நாடுகளில் ஏற்றுமதியினுடைய அளவை அதிகரிக்க வெளிநாடுகளிலே சுற்றுப் பயணம் செய்துவந்தது. அந்தக் குழுவின் அறிக்கை என்ன ? அந்தக் குழு வெளிநாடுகளுக்குச் சென்றுவந்ததற்குப் பின்னாலே ஏற்றுமதியிலே எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரங்கள் என்னிடத்திலே தற்போது இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே அதிகமான அளவிற்கு, குடந்தை, காஞ்சிபுரம், ஆரணி ஆகிய இடங்களிலே தயாரிக்கப்படுகிற பட்டாடைகளுக்கு மிகுந்த வரவேற்பு இருக்கிறது. அந்த வகையில் பட்டாடைகளை அதிகமாக ஏற்றுமதி செய்வதற்காக இந்தத் திட்டத்தில் தனியாகப் பிரிவை அமைத்து அதிகமாக விற்பனை செய்யக்கூடிய பட்டாடைகளை விற்பதற்கு அரசு முன்வருமா ?

1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, தனியார் துறையில் பட்டாடைகளும், பட்டினால் செய்யப்பட்ட பொதுமேட் டைகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கோ-ஆப்டெக்ஸ் இண்டர் நேஷனல் மூலமாக பட்டாடைகளை ஏற்றுமதி செய்யக்கூடிய அடிப்படையில் தான் கைத்தறி இயக்குநர் மார்ச் மாதத்திலே ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று வர இருக்கிறார். அந்தப் பயணம் முடிந்த பிறகு அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை, பரமக்குடி போன்ற கைத்தறி மையங்களில் ஏற்றுமதி மையங்கள் ஏற்படுத்தி அந்தக் கைத்தறியாளர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, அதிகமான ஏற்றுமதி ரகங்களை உற்பத்தி செய்வதற்கு தறிகளிலே சில முக்கியமான முன்னேற்றங்களைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. இந்தத் திட்டம் கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு சங்கத்திற்கும் விரிவு ஆக்கப்பட்டு இருக்கிறது. பரமக்குடி, அருப்புக் கோட்டை போன்ற பகுதிகளிலே தேங்கிக் கிடக்கிற துணிகளின் விற்பனை செய்வதற்கும், அப்படிப்பட்ட ரகங்களை உற்பத்தி செய்வதற்கும் ஆன திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது. தறிகளில் தேவையான மாற்றங்களைச் செய்த பின்பு மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய எண்ணம் நிறைவேறும் என்று கருதுகிறேன்.

திரு. நெல்லை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, கரைபோட்ட வேஷ்டி, சேலைகளை உற்பத்தி செய்வது மில் துறையினருக்கு வழங்காமல் கைத்தறிக்கே வழங்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வந்தது, அது இப்போது எந்த நிலையிலே இருக்கிறது ? அப்படி உரிமை வழங்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் தான் சொல்லலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஏற்றுமதிக்கு வெளிநாடுகளிலே நல்ல வாய்ப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த ஏற்றுமதிகளுக்கு மத்திய அரசு ஏதாவது உதவிகள் அளிக்கும் திட்டத்தை அறிவித்து இருக்கிறதா? அது மட்டுமல்ல, இப்போது ஏற்றுமதி அரசாங்கத்தின் மூலமாக நடைபெறுகிறதா? மாநில கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வாங்கச் செய்யக்கூடிய ஏற்பாடா? அப்படியானால் ஏற்கெனவே அந்த அந்தச் சங்கங்களுக்கு வாங்கியதற்கான பணம் காலத்திலே

[1979 பிப்ரவரி 23

போய்ச் சேரவில்லை என்ற புகார் இருக்கிறது. உடனுக்குடன் அந்தப் பணம் அவர்களுக்குப் போய்ச் சேர நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் என்ற மாநில பிரதம சங்கம் பல்வேறு இடங்களிலே உள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளைக் கொள்முதல் செய்கிறது, அதை விற்பனை செய்து வருகிறது. பல்வேறு சங்கங்களில் உற்பத்தியாகும் ஏற்றுமதி ரகங்களை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்து கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனத்தின் மூலமாக ஏற்றுமதி செய்கிறது. பிரதம சங்கத்திலிருந்து கொடுக்கக்கூடிய தொகை அவரவர்களுக்குப் போய்ச் சேருவதற்குக் காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். காலதாமதம் தவிர்க்கப்பட்டு ஒரு மாதத்திற்குள்ளாக அந்தத் தொகை அவர்களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்று இப்போது அரசு அதிலே மிக தீவிரமாக கவனம் செலுத்தி அந்தத் தாமதம் தவிர்க்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்பு.

ஆளுநர் செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 21—2—1979 ஆம் தேதியிடப்பெற்ற செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நான் 9—2—1979 ஆம் தேதியன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிகழ்த்திய உரைக்கு உங்கள் நன்றியறிவிப்புத் தீர்மானம் இடைக்கப் பெற்றமைக்கு எனது மன நிறைவைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

3. தகவல்கள் கோரல்.

(அ) கோவை மருத்துவ மனை, மருத்துவக் கல்லூரி வேலை நிறுத்தம் குறித்து.

திரு. ரு. ரமணி : தலைவர் அவர்களே, ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த விஷயம். கோயம்புத்தூர் மருத்துவ மனை, மருத்துவக் கல்லூரிகளில் பணிபுரிகின்ற 800-க்கும் மேலான டாக்டர்கள், ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். நான் அதற்கான காரணத்திற்குள் பூராவும் செல்லவில்லை. அந்த வேலை நிறுத்தத்தினால் ரொம்ப மோசமான நிலை ஏற்பட்டு 4 ஆயிரத்திற்கும் அதிகமான அவுட்பேஷண்ட்ஸ் வந்து போகக் கூடிய மருத்துவமனைகள் நடக்கமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் அமைச்சர் அறையிலிருந்தே போன் செய்து அங்கிருந்த டீனுக்கு குறிப்பிட்டவரை டாக்டராகப் போட வேண்டுமென்று, நியமிக்க வேண்டுமென்று சொன்னதாகவும், டீன் மறுக்கவே கெட்ட வார்த்தைகளில் திட்டியதாகச் சொல்லி அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த பொதுஜன முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயத்தை இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-10]

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் நடந்த நிகழ்ச்சி பற்றி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இன்னும் இதை அனுமதிக்கவில்லை. ரமணி அவர்கள் சொன்னதை வழிமொழிகிறேன் என்று சொல்லுங்கள் போதும். நானும் என் கட்சியும் அதை வழிமொழிகிறது என்று சொல்லுங்கள் போதும். இன்னும் இந்தப் பிரச்சனையை நான் எடுத்துக் கொள்கிறேனா இல்லையா என்றுகூட முடிவெடுக்கவில்லை. எனவே, அதற்கு உள்ளே போக வேண்டாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கூறியபடி நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். அதுசம்பந்தமாக இன்றைய தினமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, தோழர் ரமணி அவர்கள் கொடுத்தது ஒன்று. அடுத்ததாக, 26 ஆம் தேதி மாதவரம் பால் பண்ணை ஊழியர்கள் அனைவரும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்னையை முதலில் முடித்து விடுவோம். இந்தப் பிரச்னையோடு ஒட்டியதாக பேசுங்கள்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, திரு. ரமணி அவர்கள் கொடுத்திருக்கின்ற மாதிரியே நானும் என் கட்சியின் சார்பில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதை உடனடியாக எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளு கிறேன்.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, ரமணி அவர்கள் தெரிவித்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒட்டி யதாக நானும் கொடுத்திருக்கிறேன். அவசரமாக இதை எடுத் துக்கொண்டு, சபையை ஒத்தி வைக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, தோழர் ரமணி கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தையொட்டி நானும் கொடுத்து இருக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசுத் தரப்பில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் எடுத்துக் கொள்ள முடியு மானால் எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர் களே, இது பற்றித் தகவல் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் மருத்துவக் கல்லூரி முதல்வரிடத்தி லும் கேட்கப்பட்டிருக்கிறது. தகவல் வந்ததற்குப் பிறகு இந்த அவையில் வைக்கப்படும்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்னை நேற்று காலை 7 மணி, 8 மணி அளவில் தொடங்கி மிகப் பெரிய பிரச்னையாக ஆகி, கோவை நகரத்திலே உள்ள மக்கள் பேசு கின்ற பிரச்னையாக வளர்ந்து இருக்கிறது. 24 மணி நேரத்தில், கோவை நகரத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி சம்பந்தமாகத் தெரிந்துக் கொள்ளக் கூடிய வழியில்லாமல் ஒரு அரசு இருக்கு மானால்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசுத் தரப்பிலே தயார் என்று சொன்னால் நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் கேட்ட தற்குத் தயாராக இல்லை என்ற அளவிற்குச் சொன்ன பிறகு அதற்குமேல் விளக்கம் சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல.

திரு. க. அன்பழகன் : தங்களுக்கு ஒரு மகத்தான பொறுப்பு இருக்கிறது. நாட்டிலே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பக்கத்திலும் முறைபடுத்தி நடந்துகொள்கின்ற கடமை இருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். இந்தப் பக்கத்திலானாலும் சரி, அந்தப் பக்கத்திலானாலும் சரி, கொடுக்கின்ற பிரச்னையை முறைப்படுத்தி நடத்துவதில் எனக்குக் கடமையிருக்கிறது. அதை நான் இல்லை என்று சொல்லவில்லை.

திரு. க. அன்பழகன் : தகவல் இல்லை என்று சொல்வது உண்மைக்கு மாறான செய்தி. இந்தத் தகவல் தெரியாது என்று சொல்வது இந்த அவையை அவமதிப்பதாகும். நாட்டிலே மிகப் பெரிய பிரச்னை, மருத்துவமனை மூடப்படும் நிலை, கோவை யிலே எதிர்பாராமல் ஏற்பட்டு விட்டது. இந்த நிகழ்ச்சி நடந்த உடனேயே அதைப்பற்றி சொல்லி பொதுமக்களுக்குத் திருப்தி ஏற்படும் விதத்திலேயும், மக்களுக்கு ஆறுதல் ஏற்படும் விதத்தி லேயும் அரசாங்கம் நடைபெறுமானால் அந்த அரசாங்கத்திலே ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு அர்த்தம் இருக்க முடியும். ஒத்தி வைப்புத் தீர்மானமெல்லாம் 24 மணி நேரத்திற்குள்ளே நடந்த பிரச்னையைப்பற்றி.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் அவர்கள் 24 மணி நேரத்திற்குள்ளே நடந்த பிரச்னையைப்பற்றி அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும், இதைத் தயாரித்திருக்க வேண்டும் அல்லது தகவல் சொல்லியிருக்க வேண்டும் என்று சொல்லப் போகிறார். ஆனால், உறுப்பினர்கள் கொடுத்ததே எட்டரை, எட்டே முக்கால் மணிக்குத்தான்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, உறுப்பினர்கள் எட்டே முக்கால் மணிக்குக் கொடுத்திருக்கலாம். ஆனால் அர சாங்கத்திற்கு நேற்று காலையிலிருந்தே செய்தி வந்திருக்க வேண்டும். அதைத் தெரிந்து கொண்டு தெரிவிக்க முடியவில்லை யென்றால் அரசாங்கம் எதைப்பற்றியும் அக்கறை காட்டவில்லை என்றுதான் அர்த்தம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நேற்று ஒரு மணிக்கே கொடுத்து விட்டேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, தகவல் இல்லை என்று அவர்கள் சொல்வது சரியல்ல. செய்தி எங்களுக்கு வந்ததைப் போலவே உங்களுக்கும் வந்திருக்கும். இந்தத் தீர்மானம் கொண்டு வந்திருப்பவர்களுக்கே இவ்வளவு தகவல்கள் வந்திருக்கின்றன. அதே மாதிரி மாண்புமிகு முதலமைச்சரவர்களோடு அந்த

ஆஸ்பத்திரியில் இருந்த டாக்டர்களே நேற்று மந்தியானத்திற்கு மேல் பேசியிருக்கிறார்கள். அப்படித்தகவல் வந்திருக்கிறது. நமது மதிப்பிற்குரிய மாநிலத்தின் கவர்னர் அவர்களுக்கும் இது தெரிந்திருக்கிறது.

எப்படி என்பதையெல்லாம் நான் இப்பொழுது சொல்ல வில்லை. நீங்கள் அனுமதியுங்கள் நாங்கள் பேசுகிறோம். அந்த முறையில் செய்தி தெரியவில்லை என்று சொல்வது நியாயம் அல்ல. நிறைய டைம் இருக்கிறது. இங்கேயிருந்து டெலி போனில் பேசினால், 15, 20 நிமிஷங்களில் விஷயம் கிடைத்துவிடும். அந்த நகரமே அல்லோலகல்லோலப்படுகிறது. மாணவர்களும் மற்றவர்களும் ஸ்டிரைக் செய்வதால். ஆகவே, சரியான காரணம் இருப்பதால் .. ..

மாண்புமிகு பேரவைத்தலைவர் : தயவு செய்து பேரவைத் தலைவர் சொல்வதைக் கேட்டுக் கொள்ளுங்கள்........

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இந்த விஷயத்தைவிட மிக முக்கியமான விஷயம் வேறு எதுவும் இல்லை ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து ஒருவர் சொன்னால் போதும். பேராசிரியர் சொன்னதற்கும், ரமணி சொன்னதற்கும் நான் தீர்ப்பளிக்கிறேன். (கூச்சல்-குழப்பம்) தயவு செய்து அமருங்கள். எல்லோரும் சொல்ல நேரம் இல்லை. ......

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இது கோயம்புத்தூர் நகரத்தை மட்டும் பொறுத்த விஷயம் அல்ல, அனைத்து தமிழ் நாட்டையும் பொறுத்த சமாச்சாரம். இன்றைய தினம் கோயம்புத்தூர் மருத்துவ மனை மூடப்பட்டிருக்கிறது. வேலை நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே இருக்கிற மருத்துவர்கள் அனைத்து தமிழ்நாட்டு மருத்துவர்களை; வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ள வேண்டும், அனைத்து மருத்துவக் கல்லூரி மாணவர்களும் கலந்து கொள்ள வேண்டு மென்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். ஆகவே அனைத்து மருத்துவக் கல்லூரிகளும் மூட இருக்கின்றன..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பொறுப்புள்ள தலைவர். தயவு செய்து இதையெல்லாம் பேசக்கூடாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆக, அரசாங்கத்துக்குத் தெரியவில்லை என்பதை நான் கண்டிக்கிறேன். இந்தத் தீர்மானத்தை உடனடியாக எடுக்க நீங்கள் வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர வர்களே, தமிழகம்

திரு. மு. அம்பிகாபதி : அவதிப்படுவதைப்
முழுவதும் இலட்சக்கணக்கான நோயாளிகள் என்றால், இதை
பற்றிய விஷயத்தை விவாதிக்க விரும்பவில்லை
விட முக்கியமான விஷயம்.........

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செய்தி தெரியவில்லையென்று நான் சொன்னதாகச் சொல்கிறார்கள். அது தவறு. முழுச் செய்தியும் சேகரிக்கப்படவில்லை என்றுதான்சொன்னேன். ஆனால், தெரிந்ததற்குப் பின்னாலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்..................

(கூச்சல்-குழப்பம்)

திரு. பெ. சு. திருவேங்கடம் : தயவு செய்து என்னைப் பேச அனுமதியுங்கள்..........

திரு. க. அன்பழகன் : நேற்று 1 மணிக்கே எதிர்க்கட்சி சார்பாக ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிப்பு கொடுக்கப் பட்டது என்று திருவேங்கடம் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர், செயலாளரிடம் 1 மணிக்கோ, 3 மணிக்கோ கொடுத்திருக்கிறார்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நேற்று 1 மணிக்கு கொடுத்து விட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1 மணி இருக்கலாம். ஆனால் 24 மணி நேரத்திற்கு முன்னதாக என்று சொன்னதாலே சொன்னேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர் களே, கோவை ஆஸ்பத்திரியில் நடைபெற்ற அந்த வேலை நிறுத்தத்தைப் பற்றிய விளக்கத்தைத் தாங்கிய கோவை மாலை முரசு பத்திரிகையை உங்கள் அனுமதியோடு—நமது எதிர்க்கட்சித் துணைத்தலைவரவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார். நேற்றைய முன் தினம், அதாவது 21-ந் தேதி 1.15 க்கு இது நடைபெற்றதாக பத்திரிகையிலே செய்தி இருக்கிறது. நேற்றைக்கு—நண்பகலுக்குப் பிறகு ஒத்திவைப்புத் தீர்மானங்களை இங்கே கொண்டு கொடுத்திருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பின ரவர்கள் பேசியிருக்கிறார்கள். இங்கே பேசிய அமைச்சரவர்கள் போதுமான தகவல்களை, அதனுடைய முக்கியத்துவம் கருதி அது எந்த அளவிற்கு தமிழகம் முழுமையும் பாதிக்கக்கூடும் என்ற அச்ச உணர்ச்சி காரணமாக, தெளிவாகத் தகவல்கள் அனைத்தையும் திரட்டி அவைக்கு அளிக்க வேண்டும் என்ற

பொறுப்புணர்ச்சியோடு இங்கே அவர்கள் தனது கருத்தை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நான் பணிவோடு இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புவது அப்படிப்பட்ட நிலைமைகள் நடைபெறும்போது, எந்த அளவுக்கு விரைவாக செய்திகளைச் சேகரித்து அவைக்கு அளிக்க முடியுமோ அப்படி அளிப்பதுதான் ஒரு அரசிற்கு நல்லது என்ற கருத்தை வலியுறுத்திய பேராசிரியர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, மேற்கொண்டு அப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாது என்ற உறுதியைச் சொல்லி, அவர் தகவல் சேகரித்து, முழுமையாகக் கிடைத்தவுடன் இந்த அவைக்கு வைப்பார் என்று நான் இந்த அளவுக்கு எடுத்துச் சொல்லி ஒத்திவைப்புத் தீர்மானத்தை வாபஸ் வாங்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமர்நாத் : நாங்கள் ஏன் வாபஸ் வாங்க வேண்டும்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள். இந்த அவையின் வேண்டுகோளாக நான் பேசப் போகிறேன். உண்மையிலேயே இந்த அவையில் கவன ஈர்ப்புத் தீர்மானமானாலும், ஒத்திவைப்புத் தீர்மானமானாலும், அது அவசரம் மட்டுமல்ல அவை எல்லாம் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று உணர்ந்து தான் நாம் விதிகளிலே அதற்கு தனி இடத்தைத் தந்து இருக்கிறோம். கவனஈர்ப்பு ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பெற்றால் அவற்றுக்கு அமைச்சர்கள் உடனடியாக துறைச் செயலாளர்கள் மற்ற அதிகாரிகள் மூலமாக தகவல்களைச் சேகரித்து இந்த அளவுக்குத் தந்தார்களேயானால், உண்மையிலேயே அவற்றின் பொது முக்கியத்துவத்தை உணர்ந்ததாக கருதப்படும். ஆகவே நான் அமைச்சர்களை வேண்டிக் கேட்டுக் கொள்வது, எந்த நிகழ்ச்சிகள் நடந்தாலும் அவற்றுக்கு முன்கூட்டியே, அவர்கள் பத்திரிகைச் செய்திகளைப் படிக்கக் கூடியவர்கள் அவர்கள் செயலாளர்களும் படிக்கக்கூடியவர் கள் எனவே அவர்களாகவே தேவையான தகவல்களைச் சேகரித்து, அறிக்கை தயாரித்துக் கொள்ளலாம். நடைபெறும் நிகழ்ச்சிகளில், எது முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதி முன்கூட்டியே, தகவல்களைத் தயாராக வைத்திருந்தால் இங்கு உணர்வுபூர்வமாக எழும் வாதங்கள் முழுவதையும், தவிர்க்க முடியும்; அவையின் நேரமும் வீணாவதைத் தவிர்க்க முடியும்.

எனவே, கவனஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர் மானங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து அது பற்றிய தகவல்களை உடனடியாகச் சேகரித்து அவைக்குத் தரும் படியாக செய்ல்படுவது நல்ல மரபை ஏற்படுத்துவதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சர் சொல்லும் போது, நான் இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் மற்ற அதிகாரிகளையும் கேட்டு சேகரித்து வைக்கிறேன் என்று சொல்கிறார். அதற்கு எந்த லிமிட்டும் இல்லை. எந்தக் கால அளவையும் சொல்லவில்லை. நாளை மட்டும்தான் சட்டமன்றம் இருக்கிறது அதற்குப் பிறகு நான்கு நாட்கள் இடைவேளை. ஆயிரக்கணக்கான மக்கள் அந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற முடியாமல் இருக்கிறது. தமிழ்நாடு பூராவும் அது பரவும் என்று ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள் ஆகவே அமைச்சர் அவர்கள் செய்திகளை சேகரித்து, இன்றைக்கே இப்பொழுதே என்ன செய்தி கிடைத்திருக்கிறதோ அந்தச் செய்திகளைக் கொடுக்க வேண்டும். செய்தியே வரவில்லை என்று அமைச்சர் சொல்லவில்லை. செய்திகள் வந்திருக்கிறது. அதனால் கிடைத்த செய்திகளை........

(ஆ) மாதவரம் பால் பண்ணையில் வேலை நிறுத்த அறிவிப்பு குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : சபாநாயகர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையில் 26-ம் தேதி ஸ்ட்ரைக். அதுபற்றி எடுத்துக் கொள்ளவேண்டும். உங்கள் வீட்டிற்குக் கூட பால் வராது (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி அறையில் வந்து கேளுங்கள்.

(இ) இந்தியன் ஆக்ஸிஜனில் ஏற்பட்ட விபத்து குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன் : இன்டியன் ஆக்ஸிஜனில் ஒரு விபத்து ஏற்பட்டு இரண்டு தொழிலாளர்கள் ஆஸ்பிடலில் இருக்கிறார்கள் அது சம்பந்தமாக கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையும் அறையில் வந்து கேளுங்கள்.

4. கவன ஈர்ப்புத் தீர்மானம்.

(அ) நெல்லிக்குப்பம் இ. ஐ. டி. பாரி சர்க்கரைத் தொழிற் சாலையில் ஏற்பட்ட விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை திருவாளர்கள் சி. கோவிந்தராசன், திரு மு. அம்பிகாபதி, திரு துரை முத்துசாமி ஆகியோர் கொண்டுவந்து இருக்கிறார்கள். திரு. சி. கோவிந்த ராசன்........

[1979 பிப்ரவரி 23

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, நெல்லிக்குப்பத்திலுள்ள ஈ. ஐ. டி. பாரி சர்க்கரைத் தொழிற்சாலையில் 12—2—1979 காலையில் திடீரென்று டர்பைன் பாய்லர் வெடித்து இரண்டு சூபர்வைசர்கள் ஸ்தலத்திலேயே இறந்துவிட்டதாலும் சிலரின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய படுகாயங்கள் ஏற்பட்டுள்ளதாலும் தொழிலாளர்கள் பொதுமக்கள் ஆகியோரிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் நெல்லிக்குப்பத்திலுள்ள இ. ஐ. டி. பாரி (இந்தியா) லிமிடெட் தொழிற்சாலையில் 12—2—1979 அன்று காலை 10-35 மணியளவில் க்ரஷர் டர்பைன் வெடித்ததினால் இருவர் உயிரிழந்தார்கள் மற்றும் இருவர் காயம் அடைந்தார்கள். காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த விபத்தினை காஞ்சிபுரம் தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வாளர் அவர்கள் நேரில் சென்று புலன் விசாரணை செய்துள்ளார். அவர் தனது அறிக்கையில், இந்த டர்பைன் ஆனது புதிதாக நிர்மாணிக்கப்பட்டது என்றும், அது அலகாபாத் மெஸர்ஸ். திருவேணி இன்ஜினியரிங் கம்பெனியிடமிருந்து வாங்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். டர்பைனில் உள்ள ரோட்டர் ஷாஃப்ட் மற்றும் டிஸ்க்குகள் தரமில்லாத உலோகத்தினால் செய்யப்பட்டு, அவைகளில் ஏற்பட்டிருந்த உள் வெடிப்பினால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இந்த டர்பைன் மிக அதிக வேகத்தில், அதாவது நிமிடத்திற்கு 7500 சுற்றுகள் வீதம் சுழலக்கூடியது. இந்த விபத்திற்கான சரியான காரணத்தைக் கண்டுபிடிப்பதற்கு மேற்கொண்டு தகுந்த புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, அந்த விபத்தில் சூப்பர்வைசர் சச்சிதானந்தம், ஆபரேட்டர் பொன்னுவேலும் ஸ்தலத்திலேயே இறந்தார்கள். அந்த டர்பைன் கவர்னர் வால்வு ஸ்ட்ரக் அப் ஆகி, அதைப் பார்க்கிற போது அந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது. நானே அந்த இடத்தை நேரில் சென்று பார்த்தேன். அந்த இயந்திரங்கள் பூராவும் தூள் தூளாகி, கூரையைப் பிளந்து கொண்டு நகரத்திற்குள்ளே வந்து அந்தத் தூள்கள் விழுந்து இருக்கின்றன. அருகில் இருந்த சூப்பர்வைசரும், ஆபரேட்டரும் இறந்து விட்டனர். மற்றவர்கள் எல்லாம் அபாயகரமான நிலையில் இருக்கிறார்கள். இது உண்மை.

1979 பிப்ரவரி 23] [திரு. சி. கோவிந்தராசன்]

இந்த விபத்து நேர்ந்ததற்கு அடிப்படைக் காரணம், அந்த மெஷினில் இப்படிப்பட்ட ஸ்டீம் பவர் அதிகமாக இருக்கக்கூடியது என்று தெரிந்து இருந்தும், அந்த இயந்திரத்தைக் கையாள்வதிலும், அதைப் பராமரிப்பதிலும், கண்காணிப்பதிலும், பாதுகாப்பு ஏற்பாடு திட்டவட்டமாகச் செய்வதிலும், அந்தத் தொழிற்சாலை நிர்வாகம் தவறியிருக்கிறது. தொழிற்சாலை ஆய்வாளர்கள் கவனக் குறைவாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட இயந்திரங்கள் பாதுகாப்பான முறையில், அதற்கான சேப்டி மெஷர்ஸ் செய்யப்பட்டு இருக்கிறதா என்பதைக் கண்காணிக்கத் தவறியிருக்கிறார்கள். அதனால் தான் இப்படிப்பட்ட கோர விபத்து ஏற்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் தொழிற்சாலை முதலாளிகள் சொல்வதைக் கேட்டுக் கொண்டு வராமல், தொழிலாளர் ஆய்வாளர்கள் கராராக நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவுகள் பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, புலன் விசாரணை நடந்து தகவல் கிடைத்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன தகவல்கள் மனதிற்கு மிக்க வேதனையைத் தருகிற காரணத்தினால் சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரிஸ் அவர்களை அனுப்பி விசாரணை செய்து ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-30].

*திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, தொழிலாளர்களை கருவேடைப்புச் செய்து, பட்டினிப் போட்டுபணிய வைக்கலாம், சரியாக பாதுகாப்பான முறையில் இயந்திரங்களை வைக்காமல், சீராக அமைக்கப்படாத இயந்திரங்களை வைத்து தொழிலாளர்களை சொல்லலாம். இப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு தமிழ்நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. நெல்லிக்குப்பத்திலுள்ள இந்த சர்க்கரை ஆலையில் இரண்டு பேர் இறந்திருக்கிறார்கள் ; சிலர் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது என்று தோழர் சி. கோவிந்தராசன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அரசாங்கம் முன்பே எச்சரிக்கையாக இருந்திருந்தால் பரிசீலித்து நடவடிக்கை எடுத்திருக்கலாம் ; இப்படிப்பட்ட பலகீனமான இயந்திரங்களை, தரக் குறைவான இயந்திரங்களைப் பொருத்துவதை தடுத்திருக்காலம். இதில் ஏதோ சிக்கல் நடந்திருக்கிறது. மேலும் இந்த மாதிரி இல்லாமல் மற்ற தொழிற்சாலைகளிலும் இப்படிப்பட்ட சம்பவம் நடக்காமல் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இந்த விபத்திற்கும் அரசுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. ஆங்காங்கே, எந்தெந்த மெஷினரியை இன்ஸ்டால் செய்வது என்பதை அந்தந்த நிறுவனங்கள்தான் முடிவு செய்

கின்றன. இதைச் சொல்லி, இரண்டு தொழிலாளர்கள் இறந்திருக்கிறார்கள். இருவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பது வருந்தக் கூடிய காரியம் என்பதால் இதிலே என்னென்ன செய்ய முடியுமோ அவைகளை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*<u>திரு. துரை முத்துசாமி :</u> தலைவரவர்களே, இந்த விபத்தில் இருவர் இறந்திருக்கிறார்கள் ; சிலருக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஏதாவது வேலை வாய்ப்பு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ்.இராகவானந்தம் :</u> 'ஒர்க்மென் காம்பன்சேஷன் ஆக்ட்' இருக்கிறது. அதன்படி 'நிவாரண'ம் கிடைக்கும். பாதிக்கப்பட்டக் குடும்பங்களில் வேலை செய்வதற்கு தகுதியான பிள்ளைகள் இருப்பார்களானால் அவர்களுக்கு வேலை கொடுக்க தொழிற்சங்கத் தலைவர் திரு. சி. கோவிந்தராசன், எம்.எல்.ஏ. அவர்கள் தொடர்ந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

<u>(ஆ) நிலக்கரி பற்றாக்குறையால் விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற்சாலை மூடப்படும் அபாயமும்; தொழிலாளர்கள் அவதியும் குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து, திரு. சி.கோவிந்தராசன் அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

<u>திரு. சி. கோவிந்தராசன் :</u> தலைவரவர்களே, ''தேவையான நிலக்கரி கிடைக்காத காரணத்தால் விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற்சாலை மூடப்படும் அபாயமும், அதில் பணிபுரியும் 300 தொழிலாளர்களின் குடும்பங்கள் அவதிக்குள்ளாகும் நிலைமையும் உள்ளது'' பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனையை மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> தலைவரவர்களே,

தமிழ்நாடு மண்பாண்ட நிறுவனம் கீழ்க்கண்ட உற்பத்தி நிலையங்களை இயக்கி வருகிறது.

1. பீங்கான் தொழிற்சாலை, விருத்தாசலம்.
2. கற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம்.
3. பணி வசதி நிலையம், விருத்தாசலம்.
4. கலை பொருட்கள் நிலையம், விருத்தாசலம்.
5. கலை பொருட்கள் நிலையம், பெரம்பூர்.
6. பீங்கான் நிலையம், ஓமலூர்.
7. இயந்திரச் செங்கல் தொழிற்சாலை, திருமழிசை.

பீங்கான் தொழிற்சாலையின் உற்பத்திப் பொருட்கள் உலை எண்ணைச் சூளைகளில் சூளையிடப்படுகின்றன. இங்கு உற்பத்திப் பொருட்களை இடை நிலை அளவில் சூளையிடவே சிறிது நிலக்கரி பயன்படுத்தப்படுகிறது. சுமார் 1,000 டன்கள் வங்காள, பீகார் 'பி' பிரிவு நிலக்கரி கற்குழாய் தொழிற்சாலை, பணி வசதி நிலையம் ஆகியவற்றின் மாத முழு உற்பத்திக்கு தேவைப்படுகிறது. விருத்தாசலம் தொழிற் கூடங்களில் இருப்பிலிருந்தும் மற்றும் கூட்டுறவு நிலையங்களால் வரவழைக்கப்படும் மட்டரக நிலக்கரியையே இயந்திரச் செங்கல் தொழிற்சாலையும் ஓமலூரிலுள்ள பீங்கான் நிலையமும் உபயோகப்படுத்துகின்றன. இவற்றிற்காக மாதத்திற்கு சுமார் 240 டன்கள் நிலக்கரி எரிக்கப்படுகின்றன. தொழில் வணிக இயக்குநரின் பரிந்துரையின மேல் இந்திய நிலக்கரி நிறுவனம் (கிழக்குப் பகுதி) வங்காளம், பீகார் நிலக்கரி தேவையின் பெரும் பகுதியை வழங்குகிறது. இருப்பு பற்றாக்குறையினாலும் வாகன்கள் கிடைக்காமையினாலும் நிலக்கரி வரவு ஒழுங்காக இருப்பதில்லை. 28—10—1978 அன்று அனுப்பப்பட்ட 996 டன்களே கடைசியாக கிடைக்கப்பட்டவை. செப்டம்பர் அக்டோபர் 1978-ல் நிலக்கரி சுரங்கங்களில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அக்டோபர் 1978-க்குப் பிறகு நிலக்கரி கிடைக்கவில்லை. இந்திய நிலக்கரி நிறுவனம் மற்றும் இரயில் போக்கு வரத்து இவற்றுடன் நேரடி தொடர்புக்குப் பிறகு 28—12—1978-ல் வங்காளத்திலுள்ள சின்னக்குறியிலிருந்து 1,161 டன் நிலக்கரி 41 வாகன்களில் ஏற்றி அனுப்பப்பட்டது. சனவரி 1979 இரண்டாவது வாரத்தில் கொருக்குப் பேட்டையில் டாசெல் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட சில வாகன்களில் உள்ள நிலக்கரியை இரயில்வே தனது உபயோகத்துக்கு இறக்கிக் கொண்டது. உடனே இந்நிலையை ரயில்வேயின் உயர் அதிகாரியின கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது. எனினும் எல்லா வாகன்களின் போக்கிடம்தெரியவில்லை. முடிவாக இரயில்வே 30 பாக்ஸ் வாகன்கள் நிலக்கரியை தான் எடுத்துக் கொண்டதாக தெரிவித்தது. 11 வாகன்களுடைய போக்கிடம் தெரியவில்லை. சமீபத்தில் ஒரு வாகன் விருத்தாசலத்திலுள்ள டாசெல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டதாக தெரிகிறது. நிலக்கரியின் பற்றாக்குறை

யினால், அரசின் துணை கொண்டு சிங்கரேணி சுரங்க நிறுவனத்துடன் நவம்பர் 1978 முதல் இணை முயற்சிகள் எடுக்கப்பட்டு, அலுவலர்களின் நேரடி தொடர்பிற்கு பிறகு ஒவ்வொன்றும் 55 டன் கொண்ட 16 பெரிய வாகன்களில் நிலக்கரி 31—12—1978 அன்று அனுப்பப்பட்டது. இந்நிறுவனத்தின் தொடர் நடவடிக்கையின் காரணமாக 11 வாகன்கள் ஈரோடில் இறக்கப்பட்டதாகவும் 5 வாகன்களின் போக்கிடம் தெரியவில்லை என்பதும் தெளிவாயிற்று. இரயில்வே உயர் அலுவலர்களிடம் தொடர் நடவடிக்கை மேற் கொண்டதன் பேரில் திருச்சி டிவிஷனில் ஆபரேடிவ் சூப்ரண்டென்டின் மூலமாக சுமார் 440 டன் நிலக்கரி கொடுப்பதாக இரயில்வே தரப்பிலிருந்து வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதன் பகுதியாக சுமார் 385 டன் நிலக்கரி இதுவரை கிடைக்கப் பெற்றது. எஞ்சிய பகுதி இன்னும் எதிர் பார்க்கப்படுகிறது. மேற்கூறப்பட்ட இரண்டு வண்டித் தொடர்களுக்கான நிலக்கரியின் கிரயமாக நிறுவனம் ரூ. 1,85,000 செலுத்தியுள்ளது. அதன் பேரில் 385 டன் நிலக்கரி மாத்திரமே கிடைக்கப்பெற்றது.

இரயில்வேயிடமிருந்து கிடைக்கப்பெறாத நிலக்கரிக்கான ஈட்டுத் தொகை கோரப்பட்டுள்ளது. இது வரை இரயில்வேயிடமிருந்து ஈடாக பெறப்பட்ட கரியையும் சேர்த்து கையில் உள்ள பயன்படுத்தக்கூடிய கரியின் இருப்பு சுமார் 200 டன் ஆகும். இது 6 நாட்களுக்கான சூளை உபயோகத்துக்கு போதுமானது. இதற்கிடையில் நிறுவனம் இந்திய நிலக்கரி நிறுவனத்துடனும் இரயில்வே போக்குவரத்து அலுவலகத்துடனும் நேரடி தொடர்பு கொண்டதன் பலனாக 1 முழு வண்டித் தொடர் நிலக்கரி (சுமார் 1,000 டன்கள்) பிப்ரவரி 9-ம் தேதி அனுப்பப்பட்டதாக தகவல் கிடைத்துள்ளது. இம்மாதம் 25-ந் தேதிக்குள் அது கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பிலுள்ள நிலக்கரி தீரும் முன் இப்போது அனுப்பப்பட்டுள்ள நிலக்கரி கிடைக்காவிடில் உற்பத்தி நிறுத்தம் தவிர்க்க முடியாமல் போகலாம். நிலக்கரி சரிவர கிடைக்காத நிலைமையில் கற்குழாய் தொழிற்சாலையிலும் 30க்கும் மேற்பட்ட சிறு தொழில் உற்பத்தியாளர்களுக்கு உதவி செய்யும் பணி நிலையத்திலும் சூளைகளின் வேகம் குறைக்கப்பட்டுள்ளது.

<u>திரு. சி. கோவிந்தராசன் :</u> பேரவைத் தலைவரவர்களே, அந்த நிறுவனத்தினுடைய அடிப்படைத் தேவையான பொருள் நிலக்கரியாகும். 1½ கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ள அந்த நிறுவனம் 1½ கோடி ரூபாய் என்ற அளவில் ஆண்டு தோறும் உற்பத்தி செய்கிறது. அதற்கு அடிப்படைத் தேவையான நிலக்கரி மாதம் ஒன்றுக்கு 1,200 டன் என்று சொல்லப்படுகிறது. கடந்த 6 மாத காலமாக அந்த 1,200 டன் மாதா மாதம் சரிவரக் கிடைக்கவில்லை. 50 சதவிகிதத்திற்கும் குறை

வாகத்தான் கிடைத்து வருகிறது. இது அதிகாரிகளுக்கும் தெரியும். அதற்கு டெப்பாசிட் பண்ணப்படுகின்ற தொகையின் அளவு 1 இலட்சத்து 85 ஆயிரம் என்று அமைச்சரவர்களே தெரிவித்தார்கள். அப்படிக் கிட்டத்தட்ட 2 இலட்சம் ரூபாய் முன்பணமாக கோல் இந்தியா நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டு அதற்காக நிலக்கரி அனுப்பப்படும்போது அதை இரயில்வே இலாக்கா வழியிலே எடுத்துக்கொண்டு விட்டது என்று சொல்லப்படுகின்ற காரணத்தால் நிறுவனத்திற்கு நிலக்கரி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு இருக்கிறது. இதனை அமைச்சரவர்களே தெரிவித்தார்கள். ஏற்கனவே நிலக்கரி 6 மாத காலமாக கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கும்போது இப்படிப்பட்ட நிலைமை வேறு ஏற்பட்டு அதிக தொல்லை தரப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு முன்னமே தலையிட்டு உடனடியாக நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை. ஒரு மாதத்திற்கு 1,200 டன் தேவை என்று அமைச்சரவர்களே, சொன்னார்கள். இப்போது இருப்பதும் 200 டன்தான் என்றார்கள். அது 6 நாட்களுக்குத்தான் வரும் என்றும் சொன்னார்கள். ஆகவே, இந்த அபாயகரமான நிலையைப் போக்குவதற்கு, தொழிலாளர்கள் வேலை இழப்பதைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு உடனடியாக ஆவன செய்யுமா என்பது அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளதைப் போன்று 6 மாத காலமாக நிலக்கரி பெறுவதிலே மிகப்பெரிய சிரமங்கள் இருக்கிறது என்பதை அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. இருந்தாலும் 28—10—1978 அன்று 996 டன் நிலக்கரி பெற்றிருக்கிறோம். அதற்குப்பிறகு 21—12—1978 அன்று 1,161 டன் நிலக்கரி அனுப்பியிருக்கிறார்கள். அந்த நிலக்கரி வந்து சேரவில்லை. இதற்கெல்லாம் காரணம், பொதுவாக இப்போது இந்தியா முழுவதுமாக நிலக்கரி கிடைப்பதிலே சிரமங்கள் ஏற்பட்டிருப்பதுதான். வருகின்ற வழியிலே நிலக்கரி இரயில்வே நிறுவனத்திற்குத் தேவைப்பட்டதால் அவர்கள் அதை எடுத்து வைத்திருக்கிறார்கள். எனவே அதற்காக நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இப்போது செய்யப்படுகின்ற முயற்சிகளின் காரணமாக நிலக்கரி வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நிலக்கரி சரிவர கிடைக்காத நிலைமையால் கற்குழாய் தொழிற்சாலையிலும் 30-க்கும் மேற்பட்ட சிறு தொழில் உற்பத்தியாளர்களுக்கு உதவி செய்யும் பணி நிலையத்திலும் சூளைகளின் வேகம் குறைக்கப்பட்டுள்ளது என்றுதான் சொன்னேனே தவிர அவற்றை மூடிவிடுகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வேலை இழப்பு என்பது எந்தத் தொழிலாளருக்கும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 23

5. ஒழுங்குப் பிரசனை.

சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலை வேலை நிறுத்தம் குறித்து:

[முற்பகல் 10–40.]

திரு.என்.சங்கரய்யா : பாயின்ட் ,ஆப் ஆர்டர். நேற்றைய தினம் சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலை பிரச்னை சம்பந்தமாக பல்வேறு எதிர்கட்சிகள் வெளிநடப்பு செய்த பிறகும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்தும் அநதப் பிரசனையைத் தீர்ப்பதற்காக அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியதை தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால் எதிர்கட்சிகள் இவ்வளவு வற்புறுத்தியும்கூட அதை மதிக்கக்கூடிய போக்கு.... ஒரு நாளைக்கு ஒரு ஆளுக்கு ரூ. 4.50 கூலி என்றால், இதை அரசாங்கம் அங்கீகரிக்கிறது என்றால், இப்படி இந்த நாட்டில் இருக்கும் அரசாங்கம் சொல்லிகொண்டிருந்தால் அதை ஏறக முடியாது என்ற வகையில் இநதப் பிரச்னைபற்றி உடனடியாக அரசாங்கம் ஒரு தீர்வுக்கு வந்தாலொழிய இந்த சபை நடவடிக்கைளை மேற்கொண்டு தொடர்ந்து நடத்துவது ஜனநாயகத்திற்கு, தமிழ்நாடு மக்களின் உணர்வுக்கு பொருத்தமானதாகாது என்று நாங்கள் கருதுகிற காரணத்தால், மந்திரிசபைக்கு கூட்டுப்பொறுப்பு இருக்கக்கூடிய காரணத்தால், முதல் அமைச்சர் அவர்கள் இங்கு இல்லாமல் போனாலும் மந்திரிசபை இந்தப் பிரச்னைபற்றி எல்லாக் கட்சித் தலைவர்களையும் வைத்துக்கொண்டு அதற்கு ஒரு தீர்வு கண்டாலொழிய இந்தச் சபை நடவடிக்கைகள் நடைபெறுவது ஜனநாயக மரபுகளுக்கு விரோதமானதாகும் என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வந்து அதுபற்றி அரசு உடனடியாக பேசசு வார்த்தைகள் நடத்தி தீர்வு காணும் வரையில் இந்தச் சபையை ஒத்திவைக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த அடிப்படையில் பிரச்னையெல்லாம் முடிந்த பிறகு இதைக் கிளப்புகிறார்கள் என்று கேட்கிறேன். இது அதற்கு ஏற்ற சமயம் அல்ல. எத்தகைய பிரச்சனையையும் ஆய்வதற்கு ஒரு வழி உண்டு. அதற்கான வழிமுறைகள் இருக்கின்றன. அதற்கு என்று ஒரு முறை இருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டதற்குப் பின்னால் இப்படி ஒரு ஒழுங்கு பிரச்னை கிளப்புவது என்பது மரபல்ல. அவை முன்னவர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டுவிட்டுச் சொல்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : இதற்கு ஒரு தீர்ப்பு கண்டாலொழிய இந்தச்சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு நடத்துவது தமிழ்நாட்டு ண்புக்கு, ஜனநாயக முறைகளுக்கு ஏற்

1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இநதப் பிரச்னை நேற்று இங்கே கிளப்பப்பட்டது. விளக்கம் பெறுவதற்கு முன்பு அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். எனது விளக்கங்கள் பத்திரிகைகளில் வநததை அவர்கள் படித்திருக்கக்கூடும். இன்றைக்குக் காலை புது டெல்லியில் இருக்கும் முதல் அமைச்சர் அவர்களோடு தொடர்புகொண்டு சிம்கோ மீட்டர்ஸ்-ல் நடைபெற்றுக்கொண்டிருக்கிற நிகழ்சியைப் பற்றிக் குறிப்பிட்டு இன்றைக்கு இந்தப் பிரச்னை பற்றி அவர்கள் ஒருவேளை விவாதிக்க வேண்டும் என்று விரும்பக் கூடும். ஆகையினால் அதுபற்றி ஒரு தெளிவான கருத்தை நீங்கள் சொல்வீர்களானால் அதை அவைக்குத் தெரிவிப்பதற்கு வழியிருக்கும் என்று நான் குறிப்பிட்டேன். நான் திரு. சங்கரய்யா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, அங்கிருந்து கொண்டு நிர்வாகத்தோடு முதல அமைசசர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் நிர்வாகத்தோடு பேசுவதறகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் தன்னை இப்போது ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுப் பொறுப்பு அமைச்சரவை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன. இப்போது திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டது போல எதிர்கட்சித் தலைவர்கள் அனைவரையும் கூட்டி இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புவார்களே யானால் இநத அரசுக்கு அதுபற்றி நிச்சயமாக வேறுபட்ட அபிப்பிராயம் இல்லை என்பதைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எனக்கு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தெரிவித்தது 26-ம் தேதி நான் முதல் அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தைப்பற்றிய தீர்ப்பை அல் சபையில் முழுமையான எனது முடிவைத் தெரிவிக்கிறேன் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதற்கிடையில் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடைபெறுவது தவறு ஆகாது. அப்படி தொடர வேண்டும் என்று சங்கரய்யா போன்ற தலைவரவர்களுக்கு விருப்பமிருக்குமானால் அதற்கு குறுக்கே இருப்பதற்கு நான் தயாராக இல்லை. இதை மனதிலே கொண்டு— இதில் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் அக்கறை இருக்கிறது என்பது எனக்கும் தெரியும். இது ஒரு குறிப்பிட்ட கட்சிப் பிரச்னை அல்ல. ஆக அனைத்து கட்சிகளுக்கும் உரிய பிரச்னையாக கருதி, அந்த முறையில் அணுகு முறையை கையாண்டு, சுமூகமாக அணுகி இதற்கு ஒரு முடிவு காண்கின்ற சூழ்நிலையை உருவாக்குவது தான் நன்றாக இருக்குமே தவிர, வேகத்தை வெளியே காட்டி, இருக்கின்ற அருமையான சூழ்நிலையை மேலும் நல்லதாக உருவாக்கவேண்டுமென்று விரும்புகிறோமோ அதற்கான முயற்சியில் அனைவரும் இந்தத் துறையில் அரசுக்கு ஒத்துழைப்புத்தர கேட்டுக்கொள்கிறேன். எனது விளக்கத்திற்குப் பிறகு சபாநாயகர் அவர்களே, நீங்கள் என்ன முடிவை சொல்லுகிறீர்களோ அதன்படி நடப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: எங்களுடைய பிரப்போசல் வெறும் சிம்பிள், எங்களுடைய பிரச்னை, தொழிற் சங்கங்களே இந்த தமிழ்நாட்டில் ‘,Whether it should exist or whether it should be liquidated’’. அது தான் பிரச்னை, அந்த அளவுக்கு பெரிதாக போய் விட்டது, இந்த நிலையில் எல்லாக் கட்சிகளையும் கூட்டி வைத்து பேச வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை.....

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மன்னிக்க வேண்டும், உமாநாத் அவர்களுக்கு தெரிவிக்க விரும்புவது, ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் நடைபெறுகின்ற வேலை நிறுத்தத்தைப்பற்றி இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம் அதை அவர்கள் கொஞ்சம் திசை திருப்பி அவர்களுடைய திறமையை பயன்படுத்தி தொழிற்சங்கங்களை எல்லாம் தொலைத்து விடுவது என்றும், அதில் ஒரு கூறு தான் இது என்று அவர்கள் கருதுவார்களேயானால், தயவு செய்து அதை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும், அப்படி மாற்றிக்கொள்ளாமல் இருப்பது உங்களை நீங்களே பலவீனப்படுத்திக்கொள்வதாகும், பலம் பொருந்திய தொழிற் சங்கம் உங்களிடத்தில் இருக்கின்றது என்ற நம்பிக்கை இருக்குமானால், தயவுசெய்து இப்படிப்பட்ட பேச்சுக்களை பேச வேண்டாம், இப்படிப்பட்ட பேச்சுகளுக்கே இடமில்லை. நிச்சயமாக சொல்லுகிறேன், தொழிற் சங்கங்களை நசுக்குவதற்கு இந்த அரசு இல்லை என்பதையும், அவர்கள் தாங்களாகவே அழித்துக் கொண்டால் தான் அழியுமே தவிர, பலம் பொருந்திய தொழிற் சங்கங்களாக இருந்தால் அவற்றை யார் நினைத்தாலும் அழிக்க முடியாது என்பதை தெரிவித்து குறிப்பிட்ட பிரச்னையில் நின்று உங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்றேன்.

திரு. ரா. உமாநாத்: குறிப்பிட்ட பிரச்னையில் நின்று தான் பேசுகிறேன், இந்தப் பிரச்னையில் உள்ள தகராறுகளை ‘ஸால்வ்’ செய்து விட்டால். மற்ற தொழிற்சங்கப் பிரச்னைகள். மற்ற தொழிலாளர்கள் போராட்டங்கள் எல்லாம் தானாக தீர்ந்துவிடும், ஒவ்வொரு தொழிற் சங்கங்களுக்கு தனித்தனி நிலை இருக்கிறது. They will have an independent existence. இந்த நிலையில் இதை உடனடியாக எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து பேசி இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று தான் நாங்கள் சொல்லும் பிரபோசல், அதை முன்னவர் அவர்கள் சொல்லிவிட்டார். அதாவது இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் தொழிலாளர் நல அமைச்சர் லேபர் டிப்பார்ட்மெண்ட்டோடு சேர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார், என்று சொன்னார், ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் பேசியது தான், லேபர் கமிஷனர் முன்னால். எங்களை கூப்பிடும்போது போகிறோம், ஆனால் மானேஜ்மெண்ட் பேச்சு

வார்த்தைக்கு வரமாட்டேன் என்று சொல்கிறார்கள், He refuses to come அப்படி இருக்கும்போது. என்ன பேச்சு வார்த்தை நடத்தப் போகிறார், கேட்டின் வெளியே நின்று கொண்டு. அவர்கள் உள்ளே இருக்கிறார்கள், ஆதலால் உள்ளே வரமாட்டேன் என்று சொல்லுகிறார்கள், இப்படி இருந்தால் என்ன நடக்கும், தொழிலாளர்களையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு, உமாநாத் அவர்கள். நேற்றைய தினம் தரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உங்கள் சார்பில் நேற்றைய தினம் பதில் தரப்பட்டது, ஆனால், நீங்கள் இதையொட்டி வெளி நடப்பு செய்தீர்கள். ஆகவே, நேற்றோடு இந்தப் பிரச்னை முடிந்துவிட்டது, இன்றைக்கு இந்தப் பிரச்னையைப் பற்றி யாரும் ஒத்திவைப்புத் தீர்மானம் தரவில்லை. எந்தக் கட்சியிலிருந்தாவது ஒத்தி வைப்புத் தீர்மானம் தரப்பட்டிருந்தால்தான் இப்பொழுது இதைப்பற்றி ஏதாவது பேச முடியும். இப்போது உமாநாத் அவர்கள் எழுப்புகின்ற பிரச்னையும் நியாயமாக இருக்கும், எதிர்க் கட்சிகள் யாரும் இன்று இந்தப் பிரச்னையைப்பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் தரவில்லை, அப்படியிருக்கும்போது. இந்தப் பிரச்சினையைப்பற்றி இப்போது பேசுவதே தவறு, இருந்தாலும் இருக்கின்ற சூழ்நிலைக்கேற்ப. இதில் இருக்கின்ற அக்கறைத்தன்மையை எண்ணித்தான் இதைப்பற்றிய கருத்துக்களை சொல்ல அனுமதித்தேன், அதுவும் திரு. சங்கரையா அவர்கள் தான் இதில் பேசினார்கள், அதற்கு முன்னவர் அவர்களும் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள், அதற்குள் நீங்கள் எழுந்து பேசுகிறீர்கள், சங்கரய்யா அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் நிலையில் இப்போது நீங்கள் பேசுவது முறைதானா? சபையின் மரபை நாம் காப்பாற்றவேண்டும்....

திரு, என், சங்கரய்யா: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தளவில். தயவுசெய்து அதை பிளவுபடுத்த முயற்சிக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிளவுபடுத்த அல்ல, இந்த அவையின் மரபைத்தான் காப்பாற்றுங்கள் என்பதற்காகத்தான் சொன்னேன், முதலில் சங்கரய்யா அவர்கள் பேசினார்கள், இப்போது திடீரென்று உமாநாத் எழுந்து பேசினால் என்ன பொருள் என்று தான் கேட்டேன்......

(முற்பகல் 10·50)

திரு, ரா, உமாநாத்: நான் டெபுடி லீடர்; டிவைட் பண்ணுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோபப்படாதீர்கள்; நான் சொல்வதைக் கேளுங்கள். பிறகு வாதாடுங்கள்.

[1979 பிப்ரவரி 23

திரு. ரா. உமாநாத் : வித்தின் த அவுசில், நீங்கள்
இப்படி ஈடுபடுகிறீர்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்படிப் பேச
வது சரியல்ல. நான் சொல்வதைக் கேளுங்கள். இங்கே
கட்சியின் தலைவர், துணைத் தலைவர் என்ற பாகுபாடில்லை.
ஒரு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார், அதற்குப்
பிறகு உமாநாத் நீங்கள் உங்களுடைய பிரச்னையைச் சொல்லி
தீர்கள். எனவே, இதிலே தலைவர், துணைத் தலைவர், உறுப்
பினர் என்ற பாகுபாடில்லை.

திரு. ரா. உமாநாத் : நாங்கள் ஒரு குரூப். ஹி இஸ் லீடர்;
ஐ ஆம் டிபுடி லீடர். எங்களுக்குள்ளேயே நீங்கள் டிவைட்
பண்ணப் பார்க்கிறீர்கள். It is your Job to hear us. I am in that
group. Please do not divide us.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே ஒவ்வொரு
உறுப்பினர்களின் உரிமையும் காப்பாற்றப்பட வேண்டியது என்
கடமை. அதேபோல் கட்சிகளின் உரிமையையும் காப்பாற்றுவது
என் கடமை. நீங்கள் ஏதாவது கருத்து தெரிவிப்பதாக இருந்
தால் தெரிவியுங்கள் ஒவ்வொரு உறுப்பினர்களின் உரிமையை
யும் காப்பாற்ற வேண்டியது என் கடமை........

(திரு. என். சங்கரய்யா குறுக்கீடு)

மாண்புமிகு திரு.கி.மனோகரன்: திரு.சங்கரய்யா அவர்களே,
ஒரு நிமிடம் பேச என்னை அனுமதியுங்கள். ஒரு கடுமையான
குற்றச்சாட்டை உமாநாத் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்,
உங்களைப் பிரிக்கின்ற முயற்சியில் சபாநாயகர் ஈடுபட்டார்கள்,
என்று. அதன் மூலம் சபாநாயகர் அவர்களுக்கு என்ன லாபம்
என்று தெரியவில்லை.

திரு. ரா. உமாநாத் : சபாநாயகருக்கு என்ன லாபம் என்
பது எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இரண்டாவது,
கொள்கை அடிப்படையில் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கின்ற
உங்களை இவ்வளவு சுலபமாக பிரித்து விடுவார்கள் என்ற அவ
நம்பிக்கை உங்களுக்கு வரக் கூடாது.
சர் மலார் டி
கிறார், என்று மாநாத் : எங்களுக்கு அந்த நம்பிக்கை இல்லை.
பேசியது தான் நம்பிக்கை, நப்பாசை இருக்கலாம் அல்லவா?
டும்போது போ

1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோபப் படாதீர்கள்.
அமைதியாகப் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தயவுசெய்து திரும்பவும்
சொல்ல விரும்புகிறேன், பிரித்தாளும் தந்திரம் நமக்குத் தேவை
யில்லாதது, இந்த அடிப்படையில் தயவு செய்து பிரச்னையை
அணுகாமல். இப்போது சபாநாயகர் அவர்கள் தெளிவாகச்
சொன்னார்கள், யாரும் இதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம்
கொடுக்கவில்லை, அப்படி கொடுக்காத நிலையில் திடீரென்று
எழுந்து 'ஒத்தி வையுங்கள், ஒத்தி வையுங்கள்' என்று பேசிக்
கொண்டிருப்பது மரபுக்கு மீறிய செயல் என்பதை ஏற்றுக்கொள்
வீர்கள், சங்கரய்யா அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்
கொண்டு நான் தெரிவித்தது. இந்த சபையின் நடவடிக்கைகள்
தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும், அதிலே பிரச்னை இல்லை;
ஆனால், அதே நேரத்தில் சங்கரய்யா அவர்கள் ஒரு கருத்தைத்
தெரிவித்தார்கள், நாம் கூடிப் பேசுவோம். அந்தக் கூட்டுப்
பொறுப்பு இந்த அமைச்சரவைக்கும் இருக்கிறது, அந்த முறை
யிலே எதிர்க்கட்சியினரை அழைத்துப் பேசுங்கள் என்று தெரிவித்
தார்கள், அதை நான் ஏற்றுக் கொண்ட பிறகும், 'ஒத்தி
வையுங்கள், ஒத்தி வையுங்கள்' என்று தொடந்து சொல்லிக்
கொண்டிருப்பீர்களானால், தயவுசெய்து நான் தெரிக்க விரும்பு
வது, அதை இந்த அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே அவை
யின் முன்னவர் அவர்கள் கூடிப் பேசுவோம் என்று ஒத்துக்கொண்ட
பிறகு. எப்போது பேசுவது என்பதை அறிவிக்காததுதான் ஒரு
சங்கடமாக இருக்கிறது, எப்போது இந்தப் பிரச்னையைப்
பற்றிக் கூடிப் பேசுவது என்பதை அவர்கள் அறிவிக்க வேண்டும்;
அது அவசியமும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே,
கூத்தகுடி சண்முகம் அவர்களுடைய கேள்விக்கு எனது பதில்.
இன்று $1\frac{1}{2}$ மணிக்கு இந்த சபை முடிந்த பிறகு, நாம் தாராள
மாகக் கூடிப் பேசலாம்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, $1\frac{1}{2}$ மணிக்குக்
கூடிப் பேசுவது என்பது எங்களுக்கு மாத்திரமல்ல; மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்கும் இயலாத காரியம், எனவே, உடனடி
யாகவே, அவை நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில். அவை
முன்னவர் நிதி அமைச்சர் என்கிற முறையிலும். முதலமைச்ச
ருக்கு அடுத்துள்ள அமைச்சர் என்ற முறையிலும் குறிப்பிட்ட
எதிர்க் கட்சித் தலைவர்களை அழைத்து, உடனடியாக சிம்கோ
தொழிற்சாலையைப் பற்றிப் பேச வேண்டுமென்று கேட்டுக்

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 23

கொள்கிறேன், அதோடு. கல்லூரி ஆசிரியர்களைப் பற்றியும் பேச வேண்டுமென்று விரும்புகிறேன். காரணம், இன்றைக்கு ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதற்கு எந்த வித விமோசனமும் இல்லையா என்ற அளவுக்கு அவர்கள் எதிர்க் கட்சியின் குரலை சட்ட சபையில் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கும் சேர்த்துப் பேசுகின்ற அளவுக்கு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், இப்போதே, அவை நடந்து கொண்டிருக்கும்போதே எதிர் கட்சியின் முக்கிய தலைவர்களை அழைத்துப் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு முதலில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னையும் முதலமைச்சர் அவர்களையும் இணைக்கின்ற முயற்சியிலும், பிணைக்கின்ற முயற்சியிலும் பெரிதும் அக்கறை உள்ளவர்களாக இருக்கிறார்கள். முதலில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதுதான் எங்களது மன ஒட்டம் என்பதைத் தயவு செய்து உமாநாத் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று பெரிதும் விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அந்த மன ஓட்டம் எப்படி வந்தது என்று எனக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அரசியலில் உள்ள மன ஓட்டம் எப்படி என்பது உங்களுக்கும் தெரியும். எல்லோருக்கும் தெரியும். அந்த ஓட்டப் பந்தையங்களைப் பற்றிய விவாதம் இப்போது தேவையில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளபடி அந்தக் கூட்டத்தை 12 மணிக்கு வைத்துக் கொள்ளலாம்.

திரு. ரா. உமாநாத் : நட்சத்திரம், நாள் எல்லாம் நம்புகிறீர்களா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : உங்கள் பக்கத்தில் இருக்கும்போது நம்ப வேண்டியதுதான்.

திரு. வி. கே. கோதண்டராமன் : 12 மணிக்கு ராகு காலம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ராகு காலத்தில் நடக்கிற கூட்டத்தில் திரு. கோதண்டராமன் அவர்கள் கலந்து கொள்ள வேண்டாம். அதிலே நம்பிக்கை இல்லாதவர்கள் கலந்து கொள்ளலாம்.

1979 பிப்ரவரி 23]

திரு. வி. கே. கோதண்டராமன் : ராகு காலம் முடிந்து விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 10½ மணியில் இருந்து 12 மணியோடு ராகு காலம் முடிந்த பிறகுதான் கூட்டத்தை ஆரம்பிக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் பிரதிநிதிகள் இன்றைய தினம் 5 மணிக்குச் சந்தித்துப் பேசுவதாக முடிவு செய்து அழைக்கப்பட்டிருக்கிறார்கள். சுமுகமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) தமிழ நாடு 1979 ஆம் ஆண்டு மதுவிலர்கு (திருத்த) சட்ட முன் வடிவ

THIRU K. NARAYANASWAMI: Sir I move that leave be granted for the introduction of the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1979*

MR. SPEAKER: Motion moved "that leave be granted for the introduction of the Tamil Nadu Prohibiton (Amendment) Bill 1979"

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் இப்போது அவையில் அறிமுகம் செய்வதற்காக வந்துள்ள இந்த மசோதாவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். அறிமுகம் செய்யக்கூடிய கட்டத்தில் எதிர்க்க வேண்டுமென்பதற்கான காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். முதலாவதாக 1937-ஆம் ஆண்டில் மதுவிலக்கு அமலுக்கு வந்த நேரத்திலிருந்து இதுவரை அந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்ததில் கொண்டு வரப்படாத கொடுமையான தண்டனைகள் இந்த மசோதாவில் முதல் முறையாகப் புகுத்த முயற்சிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு அந்தக் குற்றத்தை பலர் செய்யும்போது எல்லோருக்கும் ஒரே தண்டனைதான். ஆனால் இந்த மசோதாவில் ஒரே குற்றத்தைச் செய்யக்கூடியவர்களுக்கு ஒரு பிரிவினருக்கு ஒரு வகையான தண்டனை, மற்றொரு பிரிவினருக்கு வேறு வகையான தண்டனை என்று இரு வகைகளாக இருக்கின்றன. மூன்றாவது இந்த மதுவிலக்குச் சட்டத்தை எவ்வளவு கடுமையாக ஆக்கினாலும் அதன் மூலம்

* 22-2-79 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. என். சங்கரய்யா] [1979 பிப்ரவரி 2

மக்களை மதுப் பழக்கத்திலிருந்து அகற்றுவது என்பது முடியாது. பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் இதுவரை அபராதத் தோடோ அல்லது எச்சரிக்கையோடோ விடுதலை செய்யப் படுவார்கள். இனிமேல் அந்த விதமான விதிவிலக்கு இன்றி கட் டாயமாக சிறைத்தண்டனை அளிக்கப்படுவார்கள். அப்படிப் பட்ட ஒரு அவல நிலைமை சாதாரண ஜனங்களுக்கு ஏற்படு வதை விரும்பவில்லை. சாதாரணமாக கொலைக் குற்றங்களில் கூட ஜாமீன் கொடுப்பதற்கான வழிவகைகள் இருக்கின்றன. ஆனால் மதுவிலக்குக் குற்றத்தில் கைது செய்யப்படுகிறவர் களுக்கு ஜாமீனில் வருவதைக் கூட மிக மிகச் சிரமம் ஆக்கும் கொடுங்கோன்மை நிறைந்த சட்டம்.

[முற்பகல் 11–00]

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் —தலைமை]

நம்முடைய நோக்கம் நல்ல நோக்கமாக இருந்தாலும் அந்த நோக்கம் இதன் மூலம் நிறைவேற்றப்பட முடியாது. தமிழ்நாட் டிலே உள்ள மக்களுக்குப் பெருத்த துன்பங்களை ஏற்படுத்தும் என்பதை நான் இந்த சட்டத்தை அறிமுகப்படுத்தக்கூடிய கட் டத்திலே நான் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா பல விவாதத்திற்குரிய அம்சங்களைக் கொண் டிருக்கிறது. அந்த அம்சங்களைக் கொண்டிருக்கிற இந்த மசோதாவை, அவசரமாகக் கொண்டுவரப் பட்ட அவசரச் சட்டத்தை அதற்குப் பதிலாக இந்த மசோதா கொண்டுவரப் படுகிறது. அவசரமாகக் கொண்டுவருவதற்குரிய காரணங் களை இங்கே சொல்லவில்லை. ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு பில் இண்ட்ரட்யூஸ் பண்ணப்படுகிற ஸ்டேஜிலே, மினிஸ்டர் அதை இண்ட்ரட்யூஸ் பண்ணிய பிறகு எதிர்க்கட்சியினர் ஒருவர் தான் ஷார்ட் ஆக, நான் இதை எதிர்க்கிறேன், மறுக்கிறேன், ஏற்க வில்லை என்ற முறையிலே சுருக்கமாகப் பேசவேண்டுமென்பது தான் விதி. ஆகவே சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்ன விதி எதிலே இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அசெம்பிளி விதி 92 இலே இருக்கிறது.

திரு. க. சுப்பு ;விதியிலே இருக்கிறது. ஒரு மெம்பர் அப்போஸ் பண்ணுகிறபோது, முதலிலே அமைச்சர் விளக்கம் சொல்லி அதற்கு அப்புறம் தான் மெம்பர்கள், நாங்கள் பேசவேண்டுமென்றுதான் விதி இருக்கிறது. ஆனால் இங்கே அமைச்சர் விளக்கங்கள் சொல்லவில்லை, நாங்கள் தான் பேசுகிறோம்.

1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் ஒரு கருத்தைச்
சொல்லி விடுகிறேன். திரு. சுப்பு அவர்கள் ஒவ்வொரு முறையும்
தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன் என்று சொல்லிவிட்டு
அமைதியாக அமர்கிறார்கள். நன்று. நான் தெரிவிக்க விரும்பு
வது, ஆளுநர் உரையிலே 24-ஆவது பத்தியை நான் படித்துக்
காட்ட விரும்புகிறேன். ''மதுவிலக்குக் கொள்கையில் அசை
யாத நம்பிக்கை கொண்டுள்ள இந்த அரசு, அக்கொள்கையை
தீவிரமாகச் செயலாக்குவதற்காக அண்மையில் அவசரச் சட்ட
மொன்றைப் பிறப்பித்துள்ளது. வார்னீஷ் போன்ற பொருட்
களை அரசைச் சார்ந்த நிறுவனங்கள் மட்டுமே தயாரிக்க வேண்டும்
என்பதோடு, கள்ளச் சாராயத்தின் விளைவாக உயிரிழப்பு
நேரிடின், அதற்குக் காரணமானவர்களுக்கு ஆயுள் தண்டனை
விதிக்கவும் இந்த அவசரச் சட்டம் வகை செய்கின்றது. பல்வேறு
மதுவிலக்குக் குற்றங்களுக்குக் குறைந்த பட்ச தண்டனைகள்
கொடுக்க வேண்டிய நிலையையும் இச்சட்டம் ஏற்படுத்தியுள்ளது.
மேலும் தொடர்ந்து கடுமையான குற்றங்களில் ஈடுபடுவோர்
களை, அவர்கள் வழக்கமாக வசிக்கும் பகுதியிலிருந்து மாறி
வேறிடத்தில் வாழ்ந்தாக வேண்டிய நிலைக்கும் இது வழி
செய்கிறது.'' என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே தான் நான்
தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ''எதிர்பார்த்த
பலனையும் ஓரளவுக்கு இந்த அவசரச் சட்டம் அளித்துள்ளது.
அடித்தளத்து மக்கள் வாழ்வு உயர உதவும் மதுவிலக்கைச்
செம்மையாகச் செயல்படுத்த உதவும் இந்த அவசரச் சட்டத்தை
இடைக்காலத்தில் ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாகச்
சில மாற்றங்களுடன், சட்டமாக்க அரசு நடவடிக்கைகள் எடுத்
துள்ளது. மன்ற உறுப்பினர்கள் இந்த உயரிய நோக்கம் நிறை
வேற தங்களது மேலான கருத்துக்களைக் கூறி இதனை ஆதரிப்
பார்கள் என நம்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையை நன்கு
செயல்படுத்துவதற்காக காவல் துறையைச் சீரமைத்து, பலப்
படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வரு
கின்றது.'' என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இன்னொன்
றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சர்
அவர்கள் மேல்நாடுகளில் சுற்றுப்பயணத்திலே ஈடுபட்டிருந்த
போது தொடர்ச்சியாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்
மதுவிலக்கு அவசரச் சட்டத்தை எதிர்த்துக் கடுமையான கட்டு
ரைகளைத் தீட்டிக்கொண்டு இருந்தபோது நான் ஒரு அறிக்கை
விட்டேன். அந்த அறிக்கையிலே, இந்த அவையிலே ஆர்டினன்ஸை
ரீப்பிளேஸ் செய்ய ஒரு மசோதா வருகின்றபொழுது
உறுப்பினர்களுடைய மேலான கருத்துக்களை, எதிர்க்கட்சித்
தலைவர் உட்பட— கருத்துக்களைத் தெரிவிப்பார்களேயானால்
அதுகுறித்து அரசு பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்வதற்கு இந்த
அரசு தயக்கம் காட்டாது என்று நான் அறிக்கையிலே தெரிவித்து
இருக்கிறேன். நான் இன்னொன்றையும் இங்கே தெரிவிக்க
விரும்புகிறேன். நாங்கள் எங்களுக்குள்ளே பேசிய ரகசியங்களை
வெளிப்படுத்துகிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் கருத
மாட்டார் என்று கருதுகிறேன். இப்போது உங்களது அறிக்கை
மிகவும் பொறுப்புள்ள அறிக்கையாக அமைந்திருப்பதை நான்

வரவேற்கிறேன், ஆகவே, அதற்குப் பிறகு நான் அதுகுறித்து எழுத வில்லை, சட்டமன்றம் கூடும்பொழுது என் கருத்துக்களைத் தெரிவிக்கிறேன், என்று தெரிவித்து இருக்கிறார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இந்த மசோதா ஆய்வுக்கு வருகிறபோது பல திருத்தங்களை உறுப்பினர்கள் தெரிவிப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்புக்களைப் பயன் படுத்தி கொள்ளலாம். இந்த மசோதாவை முன்மொழிகிற போது எதிர்ப்பதைத் தெரிவிக்க வேண்டாம் என்று உங்கள் அனை வரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. க. சுப்பு</u> : நான் சொல்லவந்தது அதுதான். ஆளுநர் உரையிலே சிலதிருத்தங்களுடன் இந்தச் சட்டம் வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது, ஆனால் இந்த மசோதாவைப் பார்த்தாலே அந்தத் திருத்தங்கள் வரவில்லை, ஆகவே திருத் தங்கள் இதிலே இல்லாததற்கு என்ன காரணம், ஆளுநர் உரை யிலே சொல்லியதற்கு விரோதமாக இது வருகிறதா என்று சொல்லவேண்டும்.

இது முக்கியமான பல அம்சங்களைக் கொண்டிருக்கிற காரணத்தால் இதை அவசரச்சட்டமாகப் போடக்கூடிய அளவிற்கு என்ன அவசியம் ஏற்பட்டது. சட்ட மன்றம் கூடாத நேரமாக இருந் தால் அவசரச் சட்டம் போட்டோம் என்று சொல்வார்களேயா னால், அப்பொழுது அவசரச் சட்டம் போடாமல் இருந்தால் நாடு குடி மூழ்கி போய்விடுமா? அப்படி என்ன அவசரம் ஏற்பட்டது அரசியல் சட்டத்திற்கு முரணாக இது போடப்பட்டிருக்கிறது, அரசியல் சட்டத்திற்கு விதிமுறைகளுக்கு முரணாகக் காணப் படுகிறது. இரண்டாவதாக, ஆளுநர் உரையில் கூறப்பட்டிருப் பதற்கு இணங்க, மாற்றம் இல்லாத முறையில் வந்திருக்கிறது. இந்த இரண்டு அம்சங்களின் காரணமாகவும் நான் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் Rule 92 (*1*) reads as follow:—

If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who oppose the motion, may without further debate, put the question theron.

ஒருவர்தான் இன்ட்ரொடியூஸ் செய்வதை அப்போஸ் செய்து பேச முடியும், அதற்குப் பிறகு அப்போஸ் செய்கிறோம் என்று தான் சொல்ல வேண்டும் அப்படித்தான் ரூல்ஸ் இருக்கிறது.

<u>திரு. என். சங்கரய்யா:</u> அறிமுகப்படுத்துகிறார்கள். அதைப் பற்றி இங்கே பேசயிருக்கிறோம், அதை டெக்னிகல் பாயிண் டாக...

<u>திரு. க. சுப்பு</u> : நான் குறிப்பிடுவது, ஒருவர் அப்போஸ் செய்தால், a brief statement from the member similarly கொண்டு வருபவர்கள் member who moves the resolution statement கொடுக்க வேண்டும். ஆனால் அவை முன்னவரவர்கள் கொடுத்தார்கள். பரவாயில்லை, அதைப்போல எங்களிலே ஒருவர் கேட்க வில்லை என்றால் இன்னொருவர் கேட்கலாம். ஒன்றில் ஸ்டிரிக் டாக பாலோ செய்தால் இன்னொன்றிலும் ஸ்டிரிக்டாக பாலோ செய்யவேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : கட்சிக்கு ஒருவராகப் பேச ஆரம்பித்தால் என்ன செய்வது ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Deputy Speaker, Sir, on a point of elucidation, I will read the rule and explain. I am sorry about the interpretation given by the hon. Member, Thiru Subbu on this very simple, commonsense interpretation of rule 92.

The Rule 92 reads as follows :—If a motion for leave to introduce a Bill is opposed—now it is opposed—the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion, may without further debate, put the question thereon. I have only said that I am introducing, the Bill. When it is opposed, the Speaker, after premitting, if he thinks fit, he may allow. I emphasise, if he thinks fit, and may without further debate, put the question thereon. Therefore, the interpretation of the hon. Member is not correct.

<u>திரு. ரா. உமாநாத்</u> : ரூலை இப்பொழுது படித்திருக்கிறீர் கள். அதில் மறுபடியும் இண்டர்ப்ரடேஷனுக்குப் போகவில்லை. ஒரு கன்வென்ஷன் எஸ்டாபிலிஷ் ஆகிவிட்டது, அப்போஸ் செய் வது என்றால் எல்லா பார்ட்டிகளும் அப்போஸ் செய்வது என்றால் செய்யலாம் என்ற கன்வென்ஷன் ஏற்பட்டு விட்டது. நீங்கள் இப்பொழுது டிசைட் செய்ய வேண்டியது, அந்த கன்வென்ஷன்படி நிற்கிறீர்களா அல்லது ரூலிலேயே நிற்பீர்களா ? ரூலிலேயே நிற்போம், கன்வென்ஷன்படி இல்லை என்று சொன்னால், இன் னொரு கன்வென்ஷன் என்று வரும்பொழுது எங்களுக்கும் இடம் கிடைக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : அனுபவம் உள்ள சட்டமன்றப்பேரவை செயலாளர் குறிப்பிடுவது, இதற்குமுன்னால் இது மாதிரி இன்ட்ரொடியூஸ் செய்யும்பொழுது ஒவ்வொருவரும் ஒரு கட்சியிலிருந்து, கட்சியின் சார்பிலே இன்ட்ரொடக்ஷனை அப்போஸ் பண்ணுவதாகச் சொல்லவில்லை. மறுக்கிறேன் அல்லது எதிர்க்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்களே தவிர

டிபேட் நடந்தது கிடையாது, அப்படி ரூல்ஸ், கன்வென்ஷன் கிடையாது. இன்ட்ரொடியூஸ் செய்து பிறகு ஆய்வுக்காக டிபேட் வரும்பொழுது அந்த டிஸ்கஷனில் பங்கு கொள்வார்களே தவிர, இப்பொழுது அப்போஸ் செய்கிறோம் என்று மட்டும் சொல்லலாம், இப்பொழுது டிபேட் தேவையில்லை.

திரு. மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு கடுமையான அல்லது மதுவிலக்கைத் தீவிரப்படுத்த வேண்டுமென்ற ஒரு சட்டத்தை எதிர்க்க வேண்டுமென்பது எங்களுடைய நோக்கம் அல்ல என்றாலும் கூட, நம்முடைய மாண்புமிகு அவை முன்னவரவர்கள் இங்கு ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்ற வகையில், நான் அதைப்பற்றி ஒருசில விஷயங்களைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நாட்டில் ஒன்றும், எமெர்ஜென்சியைப் போல ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க வேண்டிய சூழ்நிலை வந்து விடவில்லை, ஆனால் ஆறு மாத காலத்திற்கு முன்னால் மிக அவசரம் அவசரமாக ஒரு பயங்கரமான சட்டத்தை, அதாவது நாடு கடத்துகின்ற அளவில் தண்டிக்கலாம், ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு ஆளை மாற்றி விடலாம் என்று தண்டிக்கலாம் என்ற அளவிற்குச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதிலே பல்வேறு ஓட்டை உடைசல்கள் இருப்பதை நான் சுட்டிக் காட்டிய பொழுது அவை முன்னவர் நிதியமைச்சரவர்கள், முதலமைச்சர் வெளி நாட்டிலிருந்த நேரத்தில் ஒரு அறிக்கையை விடுத்தார்கள்.

[முற்பகல் 11-10].

எதிர்க்கட்சித் தலைவரும் மற்ற தலைவர்களும் இதுபற்றி பேசாமல் இருப்பது நல்லது, சட்டமன்றத்திலே அதைப்பற்றி விவாதித்து நல்ல முடிவு காணலாம் என்று சொன்னார்கள். அப்பொழுது நான் அதைப் பாராட்டியதையும் குறிப்பிட்டார்கள்' இது பொறுப்புள்ள அறிக்கை என்று. ஏனென்றால், பல பொறுப்பில்லாத அறிக்கைகள் வந்திருந்த நேரத்தில் ஒரு பொறுப்புள்ள அறிக்கை விட்டார்கள் என்ற முறையில், வேறு யாராவது அந்த அறிக்கையை விட்டிருந்தால் பிரச்னைகள் விரிவடைந்து இருக்கும். எனவே பொறுப்பானவர் விட்ட அறிக்கை, உடனடியாக மற்ற பிரச்னைகளை நிறுத்துகின்ற அளவுக்கு, அமைந்ததால் அதைப் பாராட்டினேன். நான் இப்பொழுதும் சொல்கிறேன், இப்படி சட்டமன்றம் கூடுகிற நேரத்தில், இவ்வளவு பெரிய பிரச்னையை விவாதித்து முடிவெடுக்கலாம், பெரிய தண்டனையைக் கொடுப்பதைப்பற்றி செலக்ட்கமிட்டிக்கு விட்டு•

முடிவெடுக்கலாம். சிந்திக்கலாம் என்று சொன்னேன். அதுகூட சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடர் முடியும்வரை காத்திருந்து நடக்கும்போது அதைப்பற்றி கவலைப்படாமல், நடந்து முடிந்தவுடன், அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தது மிக மிக கண்டிக்கத்தக்கது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இடைக்காலத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் பலர் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு வந்திருக்கிற திருத்தத்திற்குப் பிறகு, பாதிக்கப்பட்டவர்களிடம் எந்த அமைச்சரும் மன்னிப்பு கேட்கப் போவது இல்லை. பரிகாரம் தேடப் போவ இல்லை. பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் இந்த அவசரச் சட்டத்தினால்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாய்ன்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரில்கூட பல மசோதாக்களை இங்கே அறிமுகம் செய்தபொழுது, எதிர்க் கட்சித் தலைவர்கள் அவற்றை எதிர்த்து கருத்துக்களைத் தெரிவித் தார்கள். அந்த முறையை நாம் இதுவரையிலும் கையாண்டு வருகிறோம். இப்பொழுது இந்த மசோதா மீது கூட எனக்கு முன்னதாக இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசியிருக் கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் அனுமதி வழங்கியிருக்கிறீர்கள். இன்னும் இரண்டு தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். இப்பொழுது விதிமுறைப்படி இல்லையென்ற முடிவுக்கு வந்து (மணியடிக்கப் பட்டது) நீங்கள் திட்டவட்டமாக இந்த விதிமுறைப்படி சட்ட மன்றத்தை நடத்துவது என்று சொன்னாலும் கூட ஏற்கனவே இரண்டு தலைவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிற காரணத்தால் எனக்கும் தாங்கள் இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு முன்பு அந்த முறை இருக்கிறது என்று தாங்கள் சொல்வது—நான் வருத்தத்தோடு சொல்கிறேன்— தவறான தகவல். ஒருவர், இரண்டு பேர் கருத்து சொல்லி இருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அத்தனை கட்சித் தலைவர்களும் பேசி இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே— நீங்கள் சொல்வது மாதிரி— ஒரு தடவை, இரண்டு தடவை நடந்துகூட இருக்கலாம். நான் இருக்கிற ரூலைச் சொன்னேன். கன்வென்ஷன் எப்பொழுதோ ஒரு தடவை, இரண்டு தடவை, நடந்திருக்கிறது என்று சொன்னீர்கள். I am not sure about that.

திரு. ரா. உமாநாத் : நான், sure ஆகச் சொல்கிறேன். I am sure.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அப்படிச் சொன்னால், கன்வென்ஷன் இருக்கிறது என்பதற்காகக் கடைபிடிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. விதி இருக்கும் போது விதியைத்தான் கடைபிடிக்க வேண்டுமே தவிர, நடைமுறையைக் கடைபிடிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் சம்பந்தமான மசோதாக்களை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிற பொழுது எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்பு தரப்பட்டதாக எனக்கு ஞாபகம். ஆனால், தாங்கள் படித்துக் காட்டிய சட்டத்தின்படி அதற்கு இடம் இல்லையென்று கூறி இருக்கிறீர்கள். நான் ஆலோசனையாகத் தெரிவிக்க விரும்புவது எப்படி இதற்கு முன்னாலிருந்த மசோதாக்களுக்கு வாய்ப்பு தரப்பட்டதோ அதே போல் இந்த மசோதாவுக்கு நீங்கள் வாய்ப்பு தந்துவிட்டு அதற்குப் பிறகு வேண்டுமானால் இதை முன் உதாரணமாகக் கொள்ளலாமா, வேண்டாமா என்பதைப் பற்றி அந்த விதிகளையும் அதே நேரத்தில் இந்த நடைமுறையையும் வைத்து தாங்கள் தீர்ப்பு வழங்குவது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சட்ட முறைப்படி நடக்க வேண்டுமா அல்லது கன்வென்ஷன் அடிப்படையில் இயங்க வேண்டுமா என்று கேள்வி கேட்டு இதில் தீர்வு ஒன்றைச் சொல்லுங்கள் என்று கேட்டார். இங்கு சட்ட அமைச்சர் படித்துக் காட்டியதை நான் மீண்டும் படித்துக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. தேவையும் இல்லை. கன்வென்ஷன் என்ற ஒரு கருத்தை பார்த்தால், நமது மின்சாரத் துறை அமைச்சர் எடுத்துச் சொன்னதுபோல நேற்றைக்கு கூட அனுமதித்து இருக்கலாம். ஆக கன்வென்ஷனுக்கும், கான்ஸ்டிடியூஷனுக்கும் இடையில் ஒரு கன்வீனியன்ஸ் என்ற அளவுக்கு சில நேரத்தில் நிலைமைகள் நடைபெற்று இருக்கக்கூடும். அதையே முன் உதாரணங்களாக வைத்துக் கொண்டு இப்படித்தான் நாங்கள் இருப்போம் என்று விவாதத்தை விட்டு விட்டு, இரண்டு பேர் ஏற்கனவே பேசியிருக்கிறார்கள், நேற்றும் பேசினார்கள். மற்றவர்களும் பேசவிருக்கிறார்கள், அதனால் தங்கள் கருத்தை கன்வீனியன்ஸ் ஆக சுருக்கமாகப் பேசி சபைக்கும் நல்ல வாய்ப்பை தந்தால் உதவியாக இருக்கும் என்பதை தங்களுடைய மேலான பார்வைக்கு, தங்களுடைய சீரிய ஆலோசனைக்கு வைக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்திப்: நான் விதி 92 பற்றிப் பேசப் போகிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோரும் தங்கள் கருத்துக்களைப்பற்றிப் பேசி விவாதித்துதான் ஆக வேண்டுமா. எடுத்துக் கொண்டிருப்பது ஒரு பில்.....

திரு. எம். ஏ. லத்தீப் : எல்லோரும் பேசியிருக்கிறார்கள் என்றால், அதைப்பற்றி நான் பேசக் கூடாதா ?

My interpretation is different.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் தங்கள் கருத்துக்களைச் சொல்லவேண்டும், அதை [illegible] பண்ணித்தான் ஆக வேண்டும் என்று இருக்கிறதா என்ன ?

THIRU M. A. LATHEEF. Mr. Deputy Speaker Sir, on a point of order. An interpretation has been submitted by the Hon'ble Law Minister about the letter and spirit of Rule 92. I submit that Rule 92 is not opposed to the established convention of this House. This should be interpreted in such a way as to uphold the convention established in this house. I submit that Rule 92 says that 'If a motion for leave to introduce a Bill is opposed—it may be opposed by a single member or many members or more than one member,—the Speaker, after permitting, if he thinks fit—that is left to your discretion—a brief statement from the member who moves and from a member who opposes the motion—a member means, a Minister or any member who ever he may be—may without further debate, put the question thereon'. Here the article 'a member' is used. Article 'a' connotes and includes not only single member but also any member of this House. Therefore, the letter and spirit of the rule must be properly understood. The convention that we have established for years and years in this House is only within the spirit and letter of the rule and according to the pith and substance of the rule, and it is in conformity with the letter and spirit of this rule. There is no conflict between the convention and the rule. Convention stands for rule and the rule stands for convention.

[முற்பகல் 11-20].

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னைப் பொறுத்த வரையில், நான் சொல்கிறேன். 'from a member' என்பதை 'from the member who oppose the motion' என்று போட்டு இருக்கலாம் 'from a member' என்பது எனக்குத் தெரிந்தவரையில் ஒரு மெம்பர் தான். நான் அப்படித்தான் எடுத்துக்கொள்கிறேன். சட்ட அமைச்சர் வேண்டுமானால் விளக்கம் கொடுக்கட்டும். என்னைப் பொறுத்த வரையில், இன்டர்டியூஸ் செய்கிறபோது அப்போஸ் செய்வது ஒரு மெம்பராகத்தான் இருக்கமுடியும்.

திரு. கு. ரமணி : 'A member' என்றால் 'Only one member' என்று தாங்கள் கருதுகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாராளு மன்றத்தில், பல பேர் எழுதிக் கொடுத்து இருந்தால், யார் முதலில் கொடுத்தார்களோ அவர் அல்லது அடுத்து யார் வரு கிறார்களோ அவர்களை அனுமதிக்கலாம் என்று கன்வென்ஷன் இருக்கிறது. ஏற்கெனவே அப்படித்தான் நடந்து வந்து இருக் கிறது. மாண்புமிகு அமைச்சர் சொன்ன மாதிரி இதன் மீது இப்போது விவாதம் வைத்துக் கொள்வதாலேயே, இதைக் கன்வென்ஷனாக ஆக்கிக்கொள்ள முடியாது. இதைக் காரணம் காண்பித்து பின்னால் வரும் பில்லில் எல்லாம் இதையே பின் பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டு, ஒவ்வொருவரும் நேரம் கருதி, பின்னாலே பில் இன்டர்டியூஸ் செய்த பின்னால் விவாதத்தில் பேச வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தால், குறைவான நேரத்தை எடுத்துக்கொண்டு சுருக்கமாக கருத்தைச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : நான் மறுபடியும் சொல்கிறேன் May's Parliamentary practice காலாவதியாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் May's Parliamentary practice சொல்லவில்லை.

திரு. என். சங்கரய்யா : நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யும்போதே பல பேர் பேசியிருக்கிறார்கள். அந்த முறை யைத் தாங்கள் பின்பற்றுவதாக இருந்தால் எங்களுக்கு ஆட்சே பணை இல்லை.

திரு.ஜே.ஜேமஸ் : துணைத் தலைவரவர்களே, மது விலக்குக் கொள்கையை எங்கள் கட்சியை விட அதிகமாக ஆதரிப்பவர்கள் யாராகவும் இருக்க முடியாது என்றாலும் இங்கே கொண்டு வந்து இருக்கக்கூடிய மசோதாவைப் பார்க்கிறபோது உண்மையி லேயே அரசுக்குக் கூட இந்த மசோதா மீது நம்பிக்கை இல்லை என்ற எண்ணம் தோன்றுகிறது. காரணம் என்னவென்றால், அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது இருந்த நிலையில் தான் இந்த மசோதா இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது; ஆளுநர் உரையில் அவசரச் சட்டத்தில் பல மாறுதல்களோடு இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்படும் என்று சொன் னார்கள். ஆனால் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் இங்கே அது கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அடுத்ததாக, இந்தச் சட்டத்தில் இருக்கிற பெரிய பயங்கரமான நிலை என்னவென்றால் குற்றவாளிகள் ஆயுள் தண்டனை பெறு வதற்கும், நாடு கடத்தப்படுவதற்கும் வாய்ப்பு இங்கே இருக்கின்றன. இந்த இரண்டு தண்டனைகளைப் பொறுத்த மட்டில் நிச்சயமாக வசதி உள்ளவர்கள் இந்த தண்டனைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்பது கடந்த ஆண்டுகளில்

எப்படி அமல்படுத்தப்பட்டது என்பதில் இருந்து பார்க்கிறபோது நமக்குத் தெரிகிறது. ஏழைகளைத்தான் இந்த இரண்டு தண்டனைகளும் பாதிக்கும் ஆகவே, இந்தச் சட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஆகவே, இதை எதிர்க்கிறேன் என்று சொல்லி, அமர்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா விவாதத்திற்கு வரும்போது விரி வாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துக்களை தெரிவிக்கிறேன். இருந்தாலும் இந்தச் சட்டம் அறிமுகப் படுத்தும்போது நான் சில விஷயங்களைச் சொல்ல வேண்டும் என்பதற்காக நான் இங்கே இப்போது பேசுகிறேன். இது ரொம்ப அவசரமாகக் கொண்டுவரப்பட்ட சட்டம். தொழிற் சாலை மூடப்பட்டு இருந்தால் அதைத் திறக்க அவசரச் சட்டம் இல்லை. பள்ளி ஆசிரியர்கள் பிரச்னை என்றால் அதைத் தீர்க்க அவசரச் சட்டம் இல்லை. மது விலக்கை அமல் படுத்த ரொம்ப அவசரமாகச் சட்டம் கொண்டு வந்து இருக்கிறீர்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: ஏற்கனவே இப்போது இந்த பில் மீது பேசுவதா வேண்டாமா என்பது குறித்து சர்ச்சை நடந்தது. இப்போது நீங்கள் கொண்டுவந்து இருக்கிற பில் மீது பேசாமல் அதற்கு வெளியே போய் பேசிக் கொண்டிருக் கிறீர்கள். பில்மீது மட்டும் பேசுங்கள்.

***திரு. மு. அம்பிகாபதி :** துணைத் தலைவரவர்களே மிக அவசரமாக ஆயுள் தண்டனை வழங்குவது, நாடு கடத்துவது' ஊர் விட்டு ஊர் மாற்றுவது — மாறுகால், மாறு கை வாங்குவது இதிலே இல்லாவிட்டாலும் கொஞ்சநாள் கழித்து மதுரை வீரனில் வருவதைப்போல வரும் என்று தெரிகிறது— என்றெல்லாம் இச் சட்டத்திலே இருக்கிறது. கேரளாவிலே மத்திய அரசு இந்தச் சட்டத்தை ஆதரிக்கவில்லை. அங்கே முதலமைச்சராக இருக் கிற வாசுதேவ நாயர் எதிர்த்திருக்கிறார். வெஸ்ட் பெங்காலில் எதிர்த்திருக்கிறார்கள். திரிபுராவில் எதிர்த்திருக்கிறார்கள். இங்கேதான் தீவிரமாக அமல்படுத்துகிறோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். இலட்சக்கணக்கான மது மரத் தொழிலாளர் களுக்கு பாதுகாப்பு இந்த நாட்டிலே இருக்கிறதா? மதுவிலக்கை சரியாக அமல்படுத்துவோம் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக் கிறதா? உங்களுக்கே நம்பிக்கை இல்லாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட ஒரு கடுமையானச் சட்டத்தை சட்டமன்றக் கூட் டத்தை முடித்து வைத்தப் பிறகு அவசரமாகக் கொண்டு வந் இருக்கிறீர்கள். அது சரியல்ல என்பது எங்களுடைய கருத்து. இந்த மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி விவாதம் வரும்போது விரிவாக நாங்கள் பேச இருக்கிறோம். இது மிகவும் மோசமான சட்டம், ஆள் தூக்கிச் சட்டம், இந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்க்கிறோம் என்பதை மட்டும் இப்போது கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இண்ட்ரடியூஸ் செய்யும்போதே எதிர்த்து, கருத்துக்களை எல்லாம் சொல்லிவிட்டீர்களே. விவாதத்திலும் அதைத்தானே சொல்லப்போகிறீர்கள்.

திரு. க. அன்பழகன் : எதிர்ப்பவர்களுக்கு எல்லாம் சந்தர்ப்பத்தை இப்போதே கொடுத்துவிட்டால் பின்னால் தங்களுக்குத் தொல்லையில்லாமல் போய்விடும்.

HON'ble THIRU K. NARAYANASWAMI MUDALIAR. Mr. Deputy Speaker Sir, a few Hon'ble Members have supported this Bill and a few others also criticised the introduction and the replacement of the ordinance by this Bill. There is ample scope for discussion. When the Bill passes through various stages there will be enough time for me to answer point by point regarding every part of the criticism that has been made by the Hon'ble Members, Hon ble Thiru K. Suppu, Hon'ble Thiru Sankari ah, and the Hon'ble Member Thiru James whose Government at the Centre has given permission to introduce this Bill and also Thiru Ambigapathy who vuoted the authority of the Kerala Chief Minster the West Bengal Chief Minister, for the purpose of not supporting this legislation. I will give answers at the appropriate time. I beg leave of this House for introduction of this legislation.

MR. DEPUTY SPEAKER—The question is.—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1979."

The motion was put and carried and leave was granted:

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR:—Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER:—The Bill is introduced.

(ஆ) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 7/1979)— தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சட்ட முன் வடிவை இங்கே நான் அறிமுகப்படுத்தும்போது, நான் 16-ந் தேதி அறிமுகப்படுத்தியபோது 17-ந் தேதி விவாதத்திற்கு எடுத்தால் பேசுவதற்கு வாய்ப்பு இருக்காது: விவாதப்

பேசுவதற்கு போதிய வாய்ப்பு தரவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதன் பேரில், இது மிகவும் முக்கியமான ஒரு சட்டம் என்பதாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு நிலச் சீர்திருத்தம் பற்றி முதலிலே வருகிற ஒரு சட்டம் என்பதாலும் மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க 16-ந் தேதி அறிமுகப்படுத்தி, 22-ந்தேதி விவாதத்திற்கு எடுத்துக் கொண்டோம் என்பதை நான் இங்கே தெரிவிப்பதற்குக் காரணம் இதை அவசர அவசரமாக இங்கே நிறைவேற்றக்கூடாது, எல்லா உறுப்பினர்களும் நன்கு படித்து பார்த்துவிட்டு, தங்களுடைய மேலான கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பது தான். அதற்கு ஏற்ற வகையில் விவாதத்திற்கு நேற்று பூராவும் இதற்காக ஒதுக்கி, இங்கே இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய எண்ணங்களைச் சொல்வதற்கு வாய்ப்பு கொடுத்த பிறகு இன்றைக்கு நான் பதில் சொல்கிறேன் என்றால் அரசின் சார்பில் இது எவ்வளவு முக்கியமானது என்று இங்கே இருக்கிற உறுப்பினர்கள் கருதுகிறார்களோ அதைப் போல அரசும் கருதுகிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்று இதுபற்றி பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், பெரும்பாலும் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இதை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள்.

[முற்பகல் 11·30.]

அவர்கள் பேசுகிறபோது அதை வரவேற்றுப் பேசினார்கள். நான் இதைச் சொல்கிறபோது யாரும் தவறாகக் கருதக்கூடாது. இதைப் போல நிலச் சீர்திருத்தச் சட்டம் இன்னும் பல வர இருக்கின்றது என்பதால் தான் இதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பேசுகிறவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட நேரங்களிலே பலர் இது குறித்துப் பேசினார்கள். இதற்கு முன்னாலே இரு அரசுகள் இருந்திருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் அரசு இருந்திருக்கிறது. அப்போது எல்லாம் எப்படி நடந்திருக்கிறது என்பதைப்பற்றிப் பேசினார்கள். இந்த மாதிரி நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து அதன்மீது பேசுகிற போது, மாண்புமிகு உறுப்பினருக்கு ஒதுக்கப்படுகிற நேரத்தில் அது குறித்து 10 சதவீதமும் இனிமேல் இந்த அரசு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு பத்து சதவீதமும் ஒதுக்கிவிட்டு கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவைப்பற்றி முழுமையான உங்களது கவனத்தைச் செலுத்தினால் தான் எங்களுக்கும், அரசுக்கும், பொதுமக்களுக்கும் நன்மையாக இருக்கும். ஆனால், பேசியவர்களில் பெரும்பாலோர் சட்ட முன்வடிவிற்கு ஒதுக்கிய நேரத்தைவிட மற்றவைகளுக்கு அதிகமான நேரங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் அவர்கள் தங்களுடைய ஆசையைச் சொல்லியிருக்கிறார்கள். நடந்து முடிந்த இரு அரசுகளைப் பற்றியும், நிலச்சீர்திருத்தச் சட்டத்திலே அந்த இரண்டு அரசுகளும் என்ன செய்திருக்கிறது

என்பதைப்பற்றியும் இங்கே மாறுபட்ட கருத்துக்களைச் சொன்னாலும், அவர்கள் தங்கள் ஆசைகளைச் சொல்வதிலேயே அதிகமான நேரத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆசைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்ட முன் வடிவைப்பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு ஆசைகளைச் சொல்கிற போது அவர்கள் பினாமி நிலங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி பலவற்றைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் நான் உங்களிடத்திலே சொல்லாவிட்டாலும், இந்த சட்டத்தை பொதுவாக எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். அதுவும் குறிப்பாக ஒன்றைச்சொல்கிறேன். இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே வரவேற்றது மட்டுமல்ல. இது குறித்த அவசரச் சட்டம் வந்த உடனேயே அந்தக் கட்சியின் சார்பிலே அதிகாரபூர்வமாக வரவேற்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். மேலும் தமிழக அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்த அவசரச் சட்டம் ஒரு முன்னோடித் திட்டம் இதை நாங்கள் வரவேற்கிறோம் என்றும எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பல சட்டங்கள் வரவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலத்தான் ஜனதாக்கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே பேசுகிறபோது பல குறைகளைச் சொன்னாலும் கடைசியிலே வரவேற்று இருக்கிறார்கள். ஆனால் அவர்களும் பேசுகிறபோது பினாமி நிலங்களைப்பற்றிச் சொன்னார்கள். பினாமி நிலங்களைப் பொறுத்தவரையில் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். எனக்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால், பினாமி நிலம் எப்போது வந்தது, யாரால் வந்தது, எந்தக் காலத்திலே வந்தது என்பதை எல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசுகிறபோது அண்ணாவைப் பார்த்து விட்டு மட்டும் பேசுகிறார்கள் என்றும் அண்ணாவை மட்டும் பார்த்தால் போதாது பெருந்தலைவர் காமராஜ் அவர்களையும் பார்க்க வேண்டும் என்றும் சொன்னார்கள். நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் அண்ணாவைப் பார்க்கிற போது அண்ணா அவர்கள் காரியங்களைச் செய்கிற அந்தத் தன்மையையும் சேர்த்துப் பார்க்கிறேன் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தின்படி நல்ல கருத்துக்களைச் சொல்பவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்கள் சொல்வதையும் கேட்க வேண்டும் என்ற வகையில்,

" எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு."

என்று திருவள்ளுவன் சொன்ன குறளை மக்களுக்கு அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆகவே நான் அண்ணா அவர்களைப் பார்க்கின்ற நேரத்திலே அவர்கள் காரியங்களைச் செய்கிற அந்தத் தன்மையையும் சேர்த்துத்தான் பார்க்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1961-லே இந்த மாதிரிச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது அண்ணா அவர்கள் இங்கே இருந்தார்கள். அவர்களுடன் நான் சார்ந்திருந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 15 பேர்கள் இருந்தார்கள்.

இங்கிருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு இருந்தார்கள். பேராசிரியர் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லாம் இந்த மாதிரி இதை எதிர்த்திருக்கிறார்கள், வெளி நடப்பு செய்திருக்கிறார்கள் என்று நான் சொல்லி, அதற்குப் பிறகு இங்கே உள்ள இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் அவசரச் சட்டம் வந்தவுடனே ஆதரித்திருக்கிறார்கள். ஆனால் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் ஆதரிக்காது இருக்கக் காரணம் சோமசுந்தரம் கொண்டு வந்திருக்கிறான். ஆகையினால் ஆதரிக்கக்கூடாது என்றல்ல..........

திரு. மு. கருணாநிதி : துணைத்தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்டு கட்சி நண்பர்கள் இந்தச் சட்டம் வரப்போகிறது என்று அறிவித்தவுடன் அறிக்கை மூலம் ஆதரித் தார்கள், ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அப்படிச் செய்யவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அதற்குரிய காரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போதே நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் நண்பர் திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் அந்த அறிக்கையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு உச்ச வரம்புச்சட்டத்தை சரியாக செய்யவில்லை, நாங்கள் செய்கிறோம். உச்சவரம்புச் சட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு தவறுகளைச் செய்து விட்டது; அதை நாங்கள் திருத்துகிறோம் என்கின்ற கருத்துப்பட பேசி அவர்கள் கட்சி ஏடுகளில் வெளி வந்தது. அப்படி வெளிவந்த பிறகும் நான் அந்தச் சட்டத்தை ஆதரிக்கிறேன் என்று அறிக்கை விடுவது அவ்வளவு நல்லதாக யிருக்காது என்பது மாத்திரமல்ல, இப்படிச் சட்டம் வருகிற நேரத்தில் அவையில் அதைப்பற்றி விமர்சிக்கலாம் வரவேற்கலாம் இன்னும் என்னென்ன புதுமைகளைச் செய்யலாம் என்று யோசனைகள் கூற இருந்தோமே தவிர ஒரு நல்ல சட்டத்தை, எல்லோரும் வரவேற்கக் கூடிய ஒரு சட்டத்தை நாங்கள் நிறைவேற்றப் போகிறோம் என்று அறிவிக்கிற நிலையில் முன் பிருந்த ஆளுங்கட்சியைக் குறைகூறி அறிக்கையில் அப்படி வாசகங்கள் அமைப்பது நல்லதல்ல என்று சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். திரு. காமராஜ் காலத்தில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர், அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி,

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 23

அண்ணா அவர்களின் வழியைப் பின்பற்றி 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று கொண்டு வந்தது. காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் கைப்பற்ற முடியாத நிலங்களை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கைப்பற்றியிருக்கிறோம். பல்லாயிரக் கணக்கான நிலங்களைக் கைப்பற்றி பல்லாயிரக் கணக்கான நிலமற்ற விவசாயிகளுக்கு அளித்திருக்கிறோம். இவ்வளவையும் மறந்துவிட்டு ஒன்றாகயிருந்த அமைச்சர் திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒன்றுமே செய்யவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று வருத்தத்தில் தான் அறிக்கை விடவில்லையே தவிர வேறு அல்ல. இப்போதும் அதை ஆதரிக்கத்தான் தயாராயிருக்கிறோம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: நான் பேசுகிற போது அதைத்தான் சொல்ல வந்தேன். நான் கொண்டு வந்தேன் என்பதற்காக அவர்கள் ஆதரிக்காமல் இல்லை, இந்த சட்ட முன்வடிவு இந்த அவையில் வரும்போது நேரடியாக ஆதரித்து விடுவோம் என்ற அளவில்தான் அவர்கள் ஆதரிக்கவில்லை என்றுதான் நேற்று சொன்னேன். அப்படிச் சொல்லிய பிறகு, அதைப்பற்றி பேசிய அவர்களது கட்சி உறுப்பினர்கள் அதை ஆதரிக்காமலும் எதிர்க்காமலும் பேசியதற்கு காரணம், நேற்று எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் இங்கே இல்லாத காரணத்தால் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் இன்று ஆதரிப்பார்கள் என்றுதான் சொல்ல வந்தேன். அதைச் சொல்லி முடிப்பதற்கு முன்பே அதை ஆதரித்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. இந்தச் சட்டத்தைப்பற்றிப் பேசுகிறபோது இதிலுள்ள பலவற்றைப் பற்றிப் பேசினார்கள். இந்தச் சட்டத்தினால் எவ்வளவு நிலம் வரும் என்று சிலர் பேசியிருக்கிறார்கள். இதைச் சொல்லக் காரணம். முதலில் இருக்கிற சட்டத்தில் உள்ள குறைகளை, குறைபாடுகளை நீக்குவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று முன்னுரையில் பேசுகிறபோது சொன்னேன். இருக்கிற சட்டத்தில் எவ்வளவோ குறைகள் இருக்கின்றன, அவை போக்கப்பட மட்டும்தான் இந்தச் சட்டம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய காங்கிரஸ் கட்சி தலைவர் இதை ஆதரித்துப் பேசிவிட்டு இதனால் எவ்வளவு நிலம் வரும், நிலம் வராவிட்டால் இதனால் உபயோகம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கும் சொல்வேன் மற்றவர்களுக்கும் சொல்வேன். 18 ஆண்டு காலத்தில் இந்தச் சட்டத்தின்மூலம் எடுக்கப்பட்ட நிலம் ஏறக்குறைய 92,000 ஏக்கர் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்றிருக்கிற சட்டப்படி இன்னும் எடுக்கப் போகிற நிலம் 80,000 ஏக்கர் இருக்கிறது என்பதையும் 40,000 பேர்களுக்குக் கொடுக்க இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்

1979 பிப்ரவரி 23]

(முற்பகல் 11-40).

<u>திரு. மு. கருணாநிதி</u>: 16 ஆண்டுகளாக 90 ஆயிரம் ஏக்கர் எடுத்திருப்பதாக குறிப்பிட்டார்கள். ஆறு ஆண்டுகள் என்றும் 10 ஆண்டுகள் என்றும் பிரித்து. ஆறு ஆண்டுகளாக எவ்வளவு இருந்தது, அதற்குப் பின்னால் பத்தாண்டு காலப் பகுதியில் எவ்வளவு என்று பிரித்து அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: அதையும் நாம் கொடுக்க இருக்கிறோம், மேலும் இது முக்கியமான, தேவையான சட்டம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் இதில் பேசிய பல உறுப்பினர்கள். பலவிதமான கருத்துக்களை கூறி வரவேற்றுப் பேசினார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் இங்கே சொல்லப்பட்ட கருத்து, இதில் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என்று எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் குறிப்பாக இன்னின்ன முறையில் இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். சட்டத்தில் நிலவரியின் அடிப்படையில் தான் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நிலவரி என்று சொல்லும் போது, நிலத்தின் தரம் எப்படி இருக்கிறது என்பதையும் பார்த்து நிலத்தினுடைய வரி நிச்சயிக்கப்படுகிறது. நிலத்தினுடைய தரம் என்று சொல்லும் போது, அதில் கிடைக்கின்ற உதவிகள், நிலத்தினுடைய விளைச்சலின் தன்மை, இவற்றையெல்லாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. அதற்கான முறையில் கணக்கிட்டு, நிலவரியின் அடிப்படையில், இருபோகமானால், நன்செய் நிலமாக இருந்தால் ஒரு போகமாக இருந்தால், ஐந்து ரூபாய் என்று சேர்த்துக்கொண்டிருக்கிறோம். புன்செய் நிலமாக இருந்தால் 9 ரூபாய் என்று சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இப்படி வரும்போது, சிலவற்றுக்கு 9 ரூபாய் என்றும், சிலவற்றுக்கு 5 ரூபாய் என்றும் வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், எடுக்கப்படுகிற நிலத்தை யார் யாருக்கு கொடுப்பது என்பதைப்பற்றியும், நிலம் கொடுக்கும்போது, ஆதி திராவிட மக்களுக்கு முதலிடம் தந்து கொடுக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது முன்பே இருக்கிறது.........

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u>: நான் குறிப்பிட்டது, அரிசன மக்கள், பழங்குடி மக்கள் இவர்களுக்கு நிலம் கொடுக்கப்படும் என்று அரசியல் சட்டத்தின் பிரிவு 46 பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு நிலம் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது, இப்படி நிலம் கொடுக்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்பதை சொல்லவேண்டும் என்று கேட்டேன். தாங்கள் பதில் சொல்லும்போது சொன்னால் போதும்.

1979 பிப்ரவரி 23] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அதற்குப் பிறகு பார்மா. இலவசமாக அதிகளுக்கு கொடுக்கிறோம்; அதற்குப் பிறகு நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுக்கிறோம் ... இப்படி ... கொடுக்கிறோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்பிருந்த சட்டப்படி எவ்வளவு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது இப்போது வருகிற சட்டத்தில் எவ்வளவு கொடுக்க இருக்கிறோம் என்பதைப் பற்றி சில உறுப்பினர்கள் கேட்டார்கள். எனவே, இதைப்பற்றி உறுப்பினர்களுக்கு உதாரணம் தெரிவிப்பது நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். திருச்சி மாவட்டத்தில் முன்பிருந்த சட்டத்தின்படி 9 ஏக்கர் 96 சென்ட் நிலம் எடுக்கப்பட்டது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணம் என்னவென்றால் ரூ. 66,862·70. ஆனால் இன்றைக்குள்ள சட்டப்படி அவர்களுக்கு பணம் கொடுப்பதானால் ரூ. 28,618 கொடுக்க வேண்டும். எனவே, பழைய சட்டப்படி அவர்களுக்கு ரூ. 40,000 அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது இருபோக நஞ்சை நிலம்.

ஒருபோக நிலமும் எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி 20 ஏக்கர் 12 சென்ட் எடுக்கப்பட்டது. முன்பிருக்கின்ற சட்டப்படி இவர்களுக்கு ரூ. 1,08,913·04 கொடுக்கப்பட்டது. ஆனால், புதிய சட்டப்படி ரூ. 29,920 தான் கொடுக்கவேண்டி வரும். எனவே, இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

புஞ்சை நிலத்திற்கும் உதாரணம் சொல்ல விரும்புகிறேன். 4 ஏக்கர் 12 சென்ட் நிலம் எடுக்கப்பட்டது. முன்பு கொடுத்த நஷ்ட ஈடு ரூ. 14,294·16. ஆனால் புதிய சட்டப்படி ரூ. 2,301 தான். எனவே இதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ரூ. 2,000 எங்கே? ரூ. 14,000 எங்கே? 7 மடங்கு வித்தியாசம் இருப்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல்தான் தஞ்சை மாவட்டத்திலே ஒரு இடத்திலே 10 ஏக்கர்கள், 8 ஏக்கர்கள் என்று நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 4,938 கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அதற்கு ரூ. 2,756 தான் கொடுக்க முடியும். புஞ்சை நிலத்திற்கு மட்டுமல்லாமல் நீர்ப்பாசன வசதியுள்ள புஞ்சை நிலம் என்று சொல்கிறபோது, அதற்கும் ஒரு ஏக்கருக்கு ரூ. 3,500 தான். ஆனால் முன்பு ஒரு நிலத்திற்கு ரூ. 9,593 கொடுத்திருக்கிறார்கள். அது பழைய கணக்கு. இப்போது அதற்கு ரூ. 1,862 தான். எவ்வளவு வித்தியாசம் இருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதேபோல், கோயம்புத்தூரிலே இருபோகம் விளைகின்ற புஞ்சை நிலமாக இருந்தால், பழைய கணக்குப்படி ரூ. 13,458 கொடுக்கவேண்டும். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற கணக்குப்

கொடுக்
அதற்குப் பிறகு பர்மா, இலங்கை அகதிகளுக்கு விவசாயத் தொழி
கிறோம் ; அதற்குப் பிறகு நிலமில்லாத ஸ்தாபனங்களுக்கு கொடுக்கிறோம்
லாளர்கள் கூட்டுறவு கொடுக்கிறோம் என்பதை நான் உங்
இப்படி எல்லாம் நாங்கள்
களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈடு கொடுக்கப்பட்டது
முன்பிருந்த சட்டப்படி எவ்வளவு நஷ்ட கொடுக்க இருக்கி
இப்போது வருகிற சட்டத்தில் என்னென்னாக கேட்டனர். எனவே,
றோம் என்பதைப் பற்றி சில உறுப்பினர்கள் உதாரணம் தெரிவிப்பது நலமாக
இதைப்பற்றி உறுப்பினர்களுக்கு திருச்சி மாவட்டத்தில் முன்
இருக்குமென்று நினைக்கிறேன். 96 செண்ட் நிலம் எடுக்கப்
பிருந்த சட்டத்தின்படி 9 ஏக்கர் பணம் என்னவென்றால்
பட்டது. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட இன்றைக்குள்ள
பழைய சட்டப்படி ரூ. 66,862·70. ஆனால் ரூ. 28,618
சட்டப்படி அவர்களுக்கு பணம் கொடுப்பதானால் அவர்களுக்கு
கொடுக்க வேண்டும். எனவே, பழைய சட்டப்படி என்பதை நான்
ரூ. 40,000 அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிறது நஞ்சை நிலம்.
தெரிவித்துக் கொள்கிறேன். இது இருபோக

அப்படி 20
ஒரு போக நிலமும் எடுக்கப்பட்டிருக்கிறது. முன்பிருக்கின்ற சட்டப்படி
ஏக்கர் 12 செண்ட் எடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்டது. ஆனால்,
இவர்களுக்கு ரூ. 1,08,913·04 கொடுக்கவேண்டி வரும்.
புதிய சட்டப்படி ரூ. 29,920 தான்
எனவே, இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

சொல்ல விரும்புகிறேன்.
புஞ்சை நிலத்திற்கும் உதாரணம் முன்பு கொடுத்த
4 ஏக்கர் 12 செண்ட் நிலம் எடுக்கப்பட்டது. புதிய சட்டப்படி ரூ. 2,301
நஷ்ட ஈடு ரூ. 14,294·16. ஆனால் பார்க்க வேண்டும். ரூ. 2,000
தான். எனவே இதையும் எண்ணிப் 7 மடங்குகள் வித்தியாசம்
எங்கே ? ரூ. 14,000 எங்கே ?
இருப்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு இடத்திலே
அதேபோல்தான் தஞ்சை மாவட்டத்திலே 8 ஏக்கர்கள் என்று
நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. 10 ஏக்கர்கள், ரூ. 4,938 கொடுத்
எடுத்தாலும், இந்த நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு அதற்கு ரூ. 2,756
திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு நிலத்திற்கு மட்டுமல்லாமல்
தான் கொடுக்க முடியும். புஞ்சை நிலம் என்று சொல்கிறபோது,
நீர்ப்பாசன வசதியுள்ள புஞ்சை நிலம் தான். ஆனால் முன்பு
அதற்கும் ஒரு ஏக்கருக்கு ரூ. 3,500 கொடுத்திருக்கிறார்கள். அது பழைய
ஒரு நிலத்திற்கு ரூ. 9,593 தான். எவ்வளவு வித்
கணக்கு. இப்போது அதற்கு ரூ. 1,862 எண்ணிப் பார்க்கவேண்டும்.
தியாசம் இருக்கின்றது என்பதை

இருபோகம் விளைகின்ற
அதேபோல், கோயம்புத்தூரிலே பழைய கணக்குப்படி ரூ. 13,458
புஞ்சை நிலமாக இருந்தால், இன்றைக்கு இருக்கின்ற கணக்குப்
கொடுக்கவேண்டும். ஆனால்,

படி அதற்கும் ரூ. 3,500 தான். தஞ்சை மாவட்டத்தில் சீர்காழியில் புஞ்சை நிலத்திற்கு பழைய கணக்குப்படி ரூ. 1,782 தந்தால், இன்றைக்கு அதற்கு ரூ. 116 தான். இப்படியெல்லாம் கணக்குகள் இன்றைக்கு வருகின்றது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, நஷ்ட ஈடு கொடுக்கின்றதைப் பொறுத்த மட்டில் 1960 லிருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கிறீர்களா ? இதற்கிடையிலே சில பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. சில பேர்களுக்கு கொடுக்கப்படாமல் அவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஏற்கனவே கொடுக்கப்பட்டவர்களிடமிருந்து பணம் திருப்பி வாங்கப்படுமா ? இல்லாவிட்டால், அது முரண்பாடாக இருக்குமே? இதை எப்படித் தவிர்க்கப் போகிறார்கள் என்பதை தெளிவுபடுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11–50]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அது மட்டுமல்ல. இதுவரை எடுக்கப்பட்ட நிலங்களுக்கு நாம் கொடுத்திருக்கிற பணம் பத்திரம் மூலமாக 7,06,35,000 ரூபாய். ஆனால் நேரடியாகப் பணமாகப் கொடுத்தது 1,37,32,000 ரூபாய் ஆகும். (குறுக்கீடு) நேரடியாக என்றால் என்னவென்று முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பத்திரயாகக் கொடுக்க ரிசர்வ் பாங்கியில் அதிகாரம் வாங்கவேண்டும். ஏறக்குறைய 7½ கோடி ரூபாய்க்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். 7½ கோடிக்கு மேல் போய்விட்டால் முழுவதும் பணமாகக் கொடுக்கவேண்டும் என்ற நிலை ஏற்படும் என்ற காரணத்தால் கொஞ்சம் பத்திரங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961-ல் ஆரம்பித்தது என்று தெரியும். 1969-ல் ஆரம்பித்த வழக்குகள் உயர்நீதி மன்றத்தில் 55 வழக்குகள் இருக்கின்றன. அதேபோல் சுப்ரீம் கோர்ட்டில் 269 வழக்குகள் இருக்கின்றன 1974-ல் இருந்து. அரசு மூலமாக நியமிக்கப்பட்டிருக்கும் லாண்ட் ரெவின்யூ தீர்க்கப்பட வேண்டிய கேஸ்கள் 78 கேஸ்கள் இருக்கின்றன என்று என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான் கான்: நண்பர் சுப்பு அவர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை—

Regarding the question of giving retrospection effect to the cases pending under the High Court the Minister has not replied. Therefore I invite the attention of the Hon. Minister to answer to that question specifically.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பு அவர்கள் சட்டத்தை நன்றாகப் படித்த வழக்கறிஞர் என்று நன்றாகத் தெரியும். ரிட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் எதற்காகக் கொடுத்திருக்கிறது, எதற்காகக் கொடுக்கப்படவில்லை என்று சட்டத்தில் நன்றாகத் தரப்பட்டிருக்கிறது. இந்த சட்ட முன்வடிவை முன்மொழிந்த உடனேயே திரு. சுப்பு அவர்கள் என்னிடம் நேராகக் கேட்டார்கள். நான் சிரித்துக்கொண்டே தெரியாது என்று சொன்னேன். அதிலே பாமிலி ஒன் யூனிட் என்று இருக்கிறது. ஒரு குடும்பத்தில் இருப்பவர்களைத் தனித் தனியாகக் கணக்கிடாமல் மொத்தமாக கணக்கிட்டு ரிட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் போடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற சட்டப்படி இதுவரை தீர்ந்த கணக்குகளுக்கு ரிட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நம்முடைய இன்டென்ஷன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

The intention is, "It was therefore, proposed to amend the said Act suitably, with effect from the 6th April 1960, to give effect to the intention that the amount payable is determined for the family as a whole, with necessary provision for validating cases, conforming to the provisions of the Act as proposed to be amended and for reopening cases not conforming to the provisions of the Act as proposed to be amended for disposal according to the provisions of the Act as proposed to be amended'

நம்முடைய இன்டென்ஷனுக்கு விரோதமாக இருக்கிறது. பெண்டிங்காக இருக்கும் கேஸ்கள் ரொம்பக் குறைவு. ரிட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் குறைவான ஆட்களுக்குத்தான் வரும். ஆகவே, எல்லோருக்கும் ரிட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் என்று கொடுத்து திரும்ப வசூலிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இன்றைக்கு இருக்கிற சட்டத்தில் எழுப்பியிருக்கிறார்கள். ரிட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் கொடுக்காமல் இருந்தால் செல்லுமா என்று கேட்டார்கள். கொடுக்காமல் இருந்தாலும் செல்லும். சட்ட இலாகாவுடன் எல்லாம் பேசித்தான் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு இருக்கிற சட்ட முன்வடிவின்படி இதுவரை யார் யாருக்குப் பணம் கொடுக்கப்பட்டு விட்டதோ அந்தப் பணத்தைத் திருப்பி வாங்குவதற்கு வழி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கும்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு ....

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, அவர்களிடத்
திலிருந்து திரும்ப அந்தப் பணத்தை வாங்குவதற்கு வழியில்லை
என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் அதிலே பாகுபாடு,
டிஸ்கிரிமினேஷன் வந்துவிடும். ஏற்கெனவே, பணத்தைப்
பெற்றவர்கள் பெரும் பணக்காரர்கள்தான், அவர்களுக்கு போது
மான நட்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது
இந்தச் சட்டத்திலே எடுக்கப்படப்போகிற நிலத்திற்கு அந்த
நிலங்கள் எல்லாம் சிறு பண்ணைக்காரர்களுடையது தான்,
ஆகவே, அவர்களுக்கு தொகை தான் கொடுக்கப்போகிறீர்கள்.
நட்ட ஈடு அல்ல. பெரும் பண்ணைக்காரர்கள் நட்ட ஈட்டை
வாங்கிகொண்டு போகிறபோது, இவர்கள் மட்டும் அப்படியில்லா
மல் தொகை என்றமுறையிலே வாங்கினால் அது டிஸ்கிரிமினேஷன்
ஆகிவிடும். ஏற்கெனவே, கொடுத்தவர்களிடம் இருந்து விகிதாச்
சார அடிப்படையிலே, இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே பெற
முடியாவிட்டால் அது நல்ல சமூக நீதிக்கு வழி வகுக்காது.
அது சமூக அநீதியாக மாறிவிடும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : ஏற்கெனவே கொடுத்தபோது அதிகமாக
வாங்கி இருப்பார்கள், அவர்களிடமிருந்து திரும்ப வாங்க முடி
யாது என்று சொன்னால் ஏற்கனவே அவர்களுக்கு
அப்படிக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருந்திருக்கிறது. ஆகவே
அது இந்தச் சட்டத்தின் மூலமாக தடுக்கப்பட முடியாது.
அதைத்தான் திரு. லத்தீப் அவர்களும் சொன்னார்கள்.
ஆகவே இந்தச் சட்டம் கோர்ட்டிலே நிற்காது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்டத்தை அவையிலே கொண்டுவருகிறபோது
அது கோர்ட்டிலே நிற்குமா நிற்காதா என்று சொல்கிறபோது நீதி
மன்றத்திலே இது நிற்கும் வெற்றிபெறும் என்ற உறுதிப்பாட்டின்
மேல் தான் கொண்டு வரப்படுகிறது, இது மட்டுமல்ல, எந்தச்
சட்டமும் கொண்டுவரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். அவர்களுக்கு முதலிலே கொடுத்த பணத்தை வாங்க
வேண்டுமென்றும் அதை எப்படிச் செய்வது என்றும் நீங்கள் பேசு
கின்ற போது உங்கள் நல்ல எண்ணத்தைச் சொன்னீர்கள்.
உங்கள் நல்ல எண்ணத்தை நான் பாராட்டுகிறேன். அதைச்
செய்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறது அரசு என்பதை உணர்
கிறேன். ஆனால் நீங்கள் எந்த எந்த முறையில் எப்படி. எப்படி
யெல்லாம் பலவகைகளிலே கேள்விகள் கேட்டாலும் நான் எதை
யும் சொல்லிவிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சொல்லாததற்குக் காரணம் நம்முடைய எதிர்க்கட்சி
தலைவர் பேசியபோது எங்களுடன் கலந்து ஆராய்ந்து விட்டு
நீங்கள் இதைக்கொண்டுவந்து இருக்கலாமே என்ற அவர்களுடைய
நல்ல எண்ணத்தைச் சொன்னார்கள். அந்த நல்ல எண்ணத்தை
நான்வரவேற்கிறேன். ஆனால் சில நேரங்களிலே எல்லோருடனும்

பேசிவிட்டுச் சட்டங்கள் கொண்டு வருவதிலே சங்கடங்கள் ஏற்
படும். 1961 ஆம் ஆண்டிலே நிலச் சீர்திருத்தச் சட்டம்
கொண்டு வரப் பட்டது. ஆனால், 1957, 1958 ஆம் ஆண்டிலே
நடைபெற்ற ரிஜிஸ்ட்ரேஷனை வாங்கிப் பார்த்தால் புரியும்.
நிலச் சீர்திருத்தம் போன்றவைகள் எல்லாம் முன்கூட்டியே
எங்களிடத்திலே பேசி விட்டுத்தான் நீங்கள் கொண்டு வர வேண்டு
மென்று கேட்டால் அவைகளை நிச்சயமாக நிறைவேற்ற முடியாது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : துணைத்தலைவர் அவர்களே, நான்
சொல்லாத ஒன்றை அமைச்சர் சொல்கிறார். எங்களோடு கலந்து
பேசியிருக்கவேண்டும். செலக்ட் கமிட்டிக்கு விட்டு இருக்க
வேண்டும், பிறகு சட்டமன்றத்திலே சட்டமாகக் கொண்டு வந்
திருக்க வேண்டுமென்று நான் சொன்னது மதுவிலக்குச் சட்டத்
தைப்பற்றி, இந்தச் சட்டத்தை அல்ல. ஏனென்றால் எனக்கு
நன்றாகத் தெரியும். 1961 ஆம் ஆண்டு முன்கூட்டியே புலி
வருகிறது, புலி வருகிறது என்று சொல்லிச் சொல்லி நிலங்கள்
எல்லாம் பிரிக்கப்பட்டு அதன் காரணத்தினால் உரிய அளவிற்கு
நிலங்களை எடுக்கமுடியாத நிலைமை ஏற்பட்டது என்பது
எல்லாம் எனக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தெரியும் என்பது
எனக்குத் தெரியும். எங்களுக்குத் தெரியாமல் கொண்டுவந்
ததை எப்படி நாங்கள் பாராட்டுவது என்று அவர்கள் தெரிவித்
தார்கள். எங்கள் கட்சியைத் பற்றித் தவறாகத் கூறியிருக்கிறீர்
கள், தி.மு.க. செய்ய மறந்ததைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.
எப்படிப் பாராட்டுவது என்று சொல்லியிருக்கிறீர்கள், குறை
சொல்லியிருக்கிறீர்கள் என்று இங்கே சொன்னார்கள், அந்த
வாக்கியமும் குறிப்பிலே இருக்கிறது. நான் பணி
புலி வருகிறது என்று சொன்னார்கள். புலியைக் கொண்டு வரக்
வன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், கொண்டு வரமாட்டேன்.
கூடிய ஆற்றல் எனக்கு இல்லை. ....
கொண்டு வந்தால் ஏதாவது செய்து விடும்

திரு. மு. கருணாநிதி : இங்கே அமைச்சர் அவர்கள் ஏன்
தான் அவசரப் பட்டு ஒரு குழப்பமான சூழ்நிலையில் புரிந்து
கொள்கிறார் என்று தெரிய வில்லை. 1961 ஆம் ஆண்டு
காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்திலே புலி வருகிறது, புலி வரு
கிறது என்று அவர்கள் முதலிலேயே சொல்லி நிலப்பிரபுக்களை
உறக்கத்திலே இருந்து விழிக்க வைத்து அவர்கள் தங்களுடைய
நிலங்களை பினாமி நிலங்களாக மாற்றிக் கொள்ள வாய்ப்பும்
வசதியும் தேடிக் கொடுத்தது என்பது பற்றித்தான். இப்போது
கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டம் புலி வருகிறது என்ற அள
விலே கொண்டு வரப்பட்ட சட்டம் அல்ல. அமைச்சர் அவர்கள்
திருத்திக் கொள்ள வேண்டும்.

[நண்பகல் 12-00.]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்பொழுது கொண்டு வரப்பட்டதைப் பற்றி சொல்லவில்லை. புலி வருகிறது என்று சொன்னார்கள். புலி வரவில்லை என்றாலும், புலி வருகிறது என்று நான் பயமுறுத்த மாட்டேன். புலியைக் கொண்டு வரும் ஆற்றல் இல்லை. ஆனால் புலியைக் கொண்டு வராவிட்டாலும், உங்கள் துணையைக் கொண்டு பசுவையாவது கொண்டு வந்து விடுவேன். அந்தப் பசு வரும்பொழுது எல்லோருக்கும் நன்மை பயக்கும்.

திரு. மு. கருணாநிதி : பசுவை மட்டும் கொண்டு வாருங்கள். பசுவையும் கன்றையும் கொண்டு வராதீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கன்று இல்லாவிட்டால் பசுபால் கறக்காது.

திரு. மு. கருணாநிதி : சென்னைக்கு அமைச்சர் புதிது. சென்னையிலே கன்று இல்லாமலே, வைக்கோல் கன்றுகளை வைத்துக் கொண்டு பால் கறக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் சென்னைக்கு புதிதுதான். ஆனால் பசுவிடமிருந்து பால் கறப்பதில் புதிது அல்ல. ஆனால் கன்று இருக்கும்பொழுது பால் எட்டு லிட்டர் கறக்கும் என்றால், கன்று செத்த பிறகு வைக்கோல் கன்றை வைத்துக் கறந்தால் 6 லிட்டர் தான் கறக்கும் என்பது அவருக்குத் தெரியாது. ஏனென்றால் அவருக்கு அனுபவம் இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : பசுவிலிருந்து பால் கறப்பதில் அமைச்சரவருக்குத் திறமை உண்டு என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஆகையால் நீண்ட நேரம் இதைப்பற்றிப் பேசாமல் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் ஒன்றை மட்டும் உங்களுக்கு நான் சொல்வேன். இங்கே பேசும் பொழுது துணிவு இருக்கிறதா என்றெல்லாம் பேசினார்கள். எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொன்ன ஒரே கட்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிதான். (குறுக்கீடு) குறிப்பிலே இருப்பதைச் சொல்லியிருக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி ; காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் வந்திருக்க வேண்டும். அப்படியில்லாதது வருந்தத் தக்கது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மன்னிக்க வேண்டும் குறிப்பிலே இருக்கிறது. [illegible]சியிலே [illegible]ல்லும்பொழுது எங்கள் கட்சியின் சார்பிலே அதை எதிர்க்கிறோம் என்று சொன்னார்கள். நான்கூட எழுந்து கேட்டேன், கட்சியின் சார்பிலே சொல்கிறீர்களா அல்லது தனிப்பட்ட முறையிலே சொல்லுகிறீர்களா என்று. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், கட்சித் தலைவர் அழகர்சாமி அவர்கள் வந்திருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளும் ஒத்துக் கொண்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றும் சொல்லாமல் விட்டிருக்கிறது, நீங்கள் எதிர்த்திருக்கிறீர்கள்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவரவர்களே, நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாகத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சி என்ன கொள்கையைக் கொண்டிருக்கிறது என்று அமைச்சரவர்களுக்குத் தெரியும். நஷ்டயீடு கொடுப்பதில் பல பேருக்குக் கொடுக்கப்பட்டு விட்டது, இனி கொடுக்கப்பட வேண்டியவர்கள் கொஞ்சம்தான். இந்த நஷ்டயீட்டைக் குறைத்துக் கொடுப்பதற்கு யோசனை சொல்லியிருக்கிறோமே தவிர, நஷ்டயீட்டைக் குறைப்பது வேண்டாம் என்று சொல்ல மாட்டோம். குறைகளை நீக்கி, நிலங்களைச் சொந்தமாக ஆக்கும் முறையில் ஒருங்கிணைந்த சட்டத்தைக் கேரளா போன்று கொண்டு வந்தால் தான் இப்படிப்பட்ட சட்டம் நல்ல முறையில் இருக்க முடியும், நஷ்டயீட்டைக் குறைப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை.

திரு மு. கருணாநிதி: திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றும் சொல்லாமல் விட்டுவிட்டது என்று அடிக்கடி சொல்லி வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சொல்லுகின்ற அதே கருத்தின் அடிப்படையில் இங்கே நேற்று உறுப்பினர்கள் பேசினார்கள் என்று நான் அவர்களைக் கேட்டு அறிந்திருக்கிறேன். உழுபவர்களுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையிருந்தபொழுது கொண்டு வரப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அதிலே சில திருத்தங்களைக் கோரி, பிறகு ஆய்வுக்கு அனுப்பப்பட்டு, அதற்குப் பிறகு ஆட்சி கலைக்கப்பட்டு விட்ட காரணத்தினால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட முடியவில்லை. இங்கே உழுபவனுக்கே நிலம் சொந்தமாக ஆக்கப்பட வேண்டுமென்று சொல்கின்ற காரணத்தால், ஒரு படியாக அமைகின்ற இந்தச் சட்டத்தை எதிர்க்கிறோம் என்று பொருள் இல்லை. எனவே, இந்தச் சட்டத்தை நிச்சயமாக நாங்கள் ஆதரிக்கிறோம். அதில் எழுகின்ற பிரச்னைகளைப் பற்றித்தான் எங்கள் கட்சியைச் சேர்ந்த சுப்பு அவர்கள் பல கேள்விகளைக் கேட்டார்களே அல்லாமல் இந்தச் சட்டம் வரக்கூடாது என்ற எண்ணத்தில் அல்ல, எப்படி இந்த பிரச்னைகளைத் தீர்க்கப் போகிறீர்கள் என்பதற்காகத்தான் கேட்டார்கள்.

அதே நேரத்தில் அமைச்சரவர்கள் தன் உரையின் இறுதிப் பகுதியிலாவது, 1961ஆம் ஆண்டு முதல் 1969ஆம் ஆண்டு வரையில் எடுக்கப்பட்ட உபரி நிலங்கள் எவ்வளவு என்பதையும், 1969 ஆம் ஆண்டுக்குப் பிறகு அல்லது 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு கழக ஆட்சியிலே எடுக்கப்பட்ட நிலங்களின் மொத்தப் பரப்பளவு எவ்வளவு என்பதையும், இந்தச் சட்டத்தின் மூலமாக எடுக்கப்பட இருக்கின்ற நிலத்தின் பரப்பு அளவு எவ்வளவு என்பதையும் அறிவிப்பார்களேயானால் அது நாட்டு மக்களுக்கு பலன் உள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவைத் துணைத் தலைவரவர்களே, நான் முதலிலே பேசும்பொழுது சொன்னேன். எல்லோரும் ஆதரித்திருக்கிறார்கள் என்று சொல்லும்பொழுது. அவர்கள் பலவற்றைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள், பினாமி நிலத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள், உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று பேசியிருக்கிறார்கள். அவைகளை நான் வரவேற்கிறேன். ஆனால் அவர்கள் முடிக்கும்பொழுது எதிர்க்கிறார்களா அல்லது ஆதரிக்கிறார்களா என்று சொல்லாமல் விட்டு விட்டதைக் குறித்துத்தான் கேட்டேன். ஆனால் இப்பொழுது அந்தக் கேள்வி எழவில்லை, ஏனென்றால் கட்சித் தலைவரே ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள், அதற்காக நன்றி.

இங்கேயிருக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு பக்கம் காங்கிரஸ் அரசு, இன்னொரு பக்கம் கம்யூனிஸ்டு கட்சி அரசு இருக்கிறது. இதெல்லாம் இருக்கிற பொழுது, அங்கே இது நடக்கிறது. இங்கே இது நடக்கிறது என்று நீங்கள் சொல்கிறபொழுது, அதை அவையிலே சொல்கிறபொழுது—பொதுக் கூட்டங்களிலே சொல்கிறபொழுது வேண்டுமானால் தவறாக இருக்கலாம்—இங்கே சொல்கிறபொழுது சரியாகத் தெரிந்து கொண்டு சொல்வது நலம். அந்தக் கருத்தை நான் எதிர்க்கவில்லை. எந்தெந்த நிலத்தை எடுக்கவேண்டும் கோயில் நிலத்தை எடுக்க வேண்டுமா? மடங்கள் நிலத்தை எடுக்கவேண்டுமா? என்பதையெல்லாம் அரசு எதிர்க்கிறதா, ஆதரிக்கிறதா என்பதுஅல்ல. அந்த அந்த மாநிலத்திலே, அது அது என்று சொல்லும் போது உண்மை எது என்று பார்த்து பேச வேண்டும். கேரளத்திலே கோயில் நிலத்தை எடுத்து விட்டதாகச் சொன்னார்கள். அங்கே எடுக்கவில்லை சட்டத்திலே விதி விலக்கு கொடுத்திருக்கிறார்கள்......

திரு. சோ. அழகர்சாமி : அங்கே விதிவிலக்கு கிடையாது. கோயில், தர்மஸ்தாபன நிலங்களை எடுத்து உழவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவுமல்லாமல், 1970 ஜனவரி 1-ந் தேதி, வாரம் குத்தகை வாங்குகிற முறை அறவே நீக்கப்

பட்டுவிட்டது. நிலம் சாகுப்படியாளர்க்ளுக்குச் சொந்தமாகி விட்டது. தஸ்திக் அலவலன்ஸ் என்று பழைய இனாம் ஒழிப்புச் சட்டப்படி கொடுத்து வருகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அதனை வாங்கி சரியாகப் படித்துப் பார்த்தால் தெரியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கேரள சட்டத்தை நாம் பார்த்தால், Restriction of ownership and possession of Land in excess of ceiling area and disposal of excess lands .. ..

The provisions of this chapter shall not apply to

Lands owned or held by the Religious, charitable or Educational institutions of public nature என்றிருக்கிறது.

இன்னும் வரவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடைசியாக நான் சொல்லவேண்டுமானால், இந்தச் சட்டத்தை எல்லா உறுப்பினர்களும் வரவேற்கிறார்கள். அதற்கு நான் மகிழ்ச்சியைத் தெரிவித்து, இந்தச் சட்டத்தை வாக்கெடுப்பிற்கு விடுமாறு அவைத் துணைத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : சட்டத்திலே எந்தெந்த அளவிலே கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டு கொண்டிருந்த நேரத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், நிலம் பெறுகிறவர்கள் 6வது பட்டியலிருந்து 2வது பட்டியலுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். உச்ச வரம்பைக் கொண்டு எடுக்கப்பட்ட நிலம் சரியாக விளம்பரம் செய்யப்படாத காரணத்தால் உச்ச வரம்பு நிலத்தைப் பெறமுடியவில்லை. எனவே, ஆதரைஸ்ட் ஆபீசர் விளம்பரம் செய்ய வில்லை என்று முறையாக அனுப்பினார்களானால் ஆர்டர் போட்டாலும்கூட அரசாங்கத்திற்கு மீண்டும் அரசு ரீகன்சீடர் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. என். கிட்டப்பா : பேரறிஞர் அண்ணா அவர்கள் மடங்கள், ஆதினங்கள், கோயில்கள் ஆகியவைகளுக்குச் சொந்தமான அத்தனை நிலங்களையும் அரசாங்கமே எடுத்துக்கொண்டு உழைக்கக்கூடிய விவசாயிகளுக்கு நேரிடையாக அளிக்க வேண்டுமென்று இதே அவையில் அறிவித்திருக்கிறார்கள். அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் என்ன கருதுகிறார்கள், என்ன சொல்கிறார்கள் என்பதை அறிய இயலுமா?

திரு. என். வரதராஜன்: துணைத்தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறது என்று நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

[திரு. என். வரதராஜன்] [1979 பிப்ரவரி 23

அரசு நஷ்டஈட்டுத் தொகையைக் குறைத்துக் கொடுப்பது நல்லது. நாம் நிலத்தை சிறு விவசாயிகளுக்கோ, அரிசனங்களுக்கோ வழங்கும்போது அவர்களிடம் நஷ்டஈடு பெறாமல் அரசே உதவித் தொகையை நஷ்ட ஈடாகக் கொடுக்கும் முறையை கடைபிடிக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சி வற்புறுத்துகிறது. அது சம்பந்தமாக அமைச்சர் ஏதாவது பதில் அளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

[பிற்பகல் 12–10.]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 7/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பெற்று சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகளில் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 7.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தம் : தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்.

In Clause 7, in sub-clause (8), under the heading "Part I",—

(1) in paragraph 3,—

(i) in clause (ii) (*a*), *for* "twenty times the land revenue on the land plus rupees nine per acre" *substitute* the following, namely :—

"twenty times the aggregate of,—

(A) the land revenue on the land ; and

(B) rupees nine per acre ;"

(ii) in clause (ii) (*b*), *for* "twenty times, the land revnue on the land plus rupees five per acre", *substitute* the following, namely :—

"twenty times the aggregate of, —

(A) the land revenue on the land ; and

(B) rupees five per acre ;"

1979 பிப்ரவரி 23] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

(iii) in clause (iii), *for* "twenty times the land revenue on the land plus rupees five per acre", *substitute* the following, namely :—

"twenty times the aggregate of,—

(A) the land revenue on the land ; and

(B) rupees five per acre";

(2) *to* paragraph 6, *add* the following proviso at the end, namely :—

"Provided that notwithstanding anything contained in paragraph 4, where the lands acquired from a person by the Government under this Act include forest land and other land, the annual value of all such lands and the annual value of the trees on forest land shall be added together and the amount payable for such lands including the trees on such forest land, shall be determined in accordance with the scales specified in clauses (i) to (vi) of this paragraph, subject to the modification that the expression "the annual value of the land together with the annual value of the trees" shall be construed as "the annual value of the forest land and other land together with the annual value of the trees on forest land."

(3) *for* paragraph 8, *substitute* the following paragraph, namely :—

8. The amount payable under this Part shall be the aggregate of the amount as calculated under,—

(i) paragraphs 4, 5 and 7, in the case where land acquired is the land other than the forest land ;

(ii) paragraphs 6 and 7, in the case where land acquired is forest land ;

(iii) paragraphs 6, 5 and 7, in the case where lands acquired include forest land and other land as is referred to in the proviso to paragraph 6; less the amount payable under section 54 to a tenant, in respect of the land concerned.";

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 7 திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 8 முதல் 10 வரை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு 1979-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 7/1979) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(இ) தமிழ்நாடு 1979-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவ.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு 1979-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மொத்தம் 6 மசோதாக்கள் இருக்கின்றன. 6 மசோதாக்களும் லோகல் அட்மினிஸ்டிரேஷனைச் சேர்ந்தவைதான். ஆகவே இந்த மசோதாவை அறிமுகம் செய்த பிறகு உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டால் அதற்குப் பின்னாலே மொத்தமாக மற்ற மசோதாக்களை அறிமுகம் செய்து நிறைவேற்றலாம். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இதற்கு ஒத்துக் கொண்டால் அவ்வாறு செய்யலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபோன்று ஒரே சட்ட முன் வடிவில் விவாதிக்க முடியாது. காலமானாலும், தனித்தனியாகத்தான் விவாதிக்க வேண்டும் என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே தனித் தனியாக விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொன்றிற்கும் 1 மணி நேரம் 1½ மணி நேரம் ஆகும். நீங்கள் சொல்வது போல் எடுத்தால் அதற்கு 3 நாட்கள் ஆகும். ஏனென்றால் மொத்தம் 6 மசோதாக்கள் இருக்கின்றன.

* 13—2—79 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதே சட்டசபையில் ஏற்கனவே சொல்லப்பட்ட முடிவு விஷயம் ஒன்றாக இருந்தாலும் கூட ஒவ்வொரு மசோதாவையும் தனித் தனியாக டிஸ்கஸ் செய்து பாஸ் செய்ய வேண்டும் என்பதுதான். ஒன்றாக பாஸ் செய்வது சட்டப்படி முறையல்ல. எனவே சட்டத்தை நாம் கடை பிடித்துத்தான் ஆக வேண்டும். இந்த சபையில் ஒரு முறை இதை நானே கேள்வியாக எழுப்பினேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரே நேரத்திலே எல்லா மசோதாக்களையும் பாஸ் செய்ய முடியாது. ஆனால் டிஸ்கஷனை ஒரே நேரத்தில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு பில்லாக பாஸ் செய்வதற்கு விதிகளிலே முரண்பாடு கிடையாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிடுவது ஒரு பில்லை இன்டர்டியூஸ் செய்து டிஸ்கஷனில் இருக்கும்போது இன்னொரு பில்லை டிஸ்கஸ் பண்ணுவது முறையாகாது, ஒரே சப்ஜக்டாக இருந்தாலும் கூட. ஊராட்சி மன்றம் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கு தனி அலுவலர்கள் நியமிப்பது பற்றி மசோதாக்கள் அவர்களது பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு என்று ம்சோதாக்கள் கொண்டு வரப்பட இருக்கின்றன. ஆகவே அந்த மசோதாக்களை ஒன்றாக நிறைவேற்றுவதற்கு விதிகளிலே இடம் இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பில்களை நிறைவேற்றுவது தனித்தனியாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் அதன் மீது விவாதம் நடைபெறுவது, ஒரு பில் இன்டர்டியூஸ் செய்த பிறகு, அதற்கு அடுத்து வரும் பில்கள் அனைத்தும் அதே சப்ஜெக்டாக இருப்பதால், மொத்தமாக உறுப்பினர்கள் எல்லா பில்கள் மீது கருத்து தெரிவித்து விட்டால், பின்னர் பில்களை தனித் தனியாக நிறைவேற்றி விடலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு பில் மீது எல்லோரும் பேசட்டும். பின்னர், மற்ற பில்களை ரொட்டீனாக நிறைவேற்றிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் சொன்ன கருத்தைத்தான் நான் சொல்கிறேன். இன்று அவை முன் இருக்கிற மசோதாக்கள் அனைத்தும் லோக்கல் அத்தாரிட்டீசைப் பொறுத்தது தான். ஆகவே, ஒரு பில்லை பேசுகிற போதே, ஊராட்சிகளைப் பற்றியும் ஒன்றியங்களைப் பற்றியும், நகராட்சிகளைப் பற்றியும், மாநகராட்சிகளைப்பற்றியும் உறுப்பினர்கள் பேசி விட்டால், அதற்குப் பிறகு எல்லா பில்களையும் பாஸ் செய்து விடலாம். ஒவ்வொரு

பில் மீதும் பேசுவது என்றால், இன்றைக்கு 6 பில்கள் இருக்கின்றன ; அவற்றின் மீது பேசுவது என்றால் 3 நாளாகும். அதற்காகத்தான் இந்த முறையைப் பின்பற்றலாம் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த முறையில்தான் முன்பு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினரும் மொத்தமாக அந்த பில்கள் மீது கருத்துக்களைச் சொல்லி விட்டால், பின்னர் எல்லா பில்களும் நிறைவேற்றுவதற்கு வசதியாக இருக்கும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: துணைத் தலைவரவர்களே, கொண்டு வரப்படுகின்ற மசோதாக்கள் அனைத்தும் தனித்தனியாக இருக்கின்றன. கார்ப்பரேஷன், முனிசிபால்டி, பஞ்சாயத்து என்று தனித்தனியாக இருக்கிறது. ஒரு பில்லில் பேசுகிறவர் இன்னொரு பில்லில் பேசமாட்டார். ஆகவே ஒவ்வொரு பில்லையும் தனித்தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எனக்கு ஆட்சேபணை இல்லை. நேரம் கருதி அப்படி நான் சொன்னேன். அவையின் முடிவை நான் ஏற்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நேரம் ஆனாலும் பரவாயில்லை. ஒவ்வொரு, மசோதாவையும் தனித்தனியாக நிறைவேற்றலாம். தேர்தல் நடத்துவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்திருக்கிறீர்கள். அதை மூடி மறைக்க இப்படிச் சொல்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வித் பிளஷர், ஒவ்வொரு பில்லாக எடுத்துக் கொள்வது என்று முடிவு எடுத்தாகிவிட்டது. இதன் மீது டிஸ்கஷன் வேண்டாம். உட்காருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நன்றி, நீங்கள் சொல்லி விட்டீர்கள். ஆகவே, ஒவ்வொரு மசோதாவும் தனித்தனியாக பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே அதை ஒப்புக் கொண்டாகி விட்டது. அதன் மீது மேற்கொண்டு விவாதம் வேண்டாம். திரு பெ. சு. திருவேங்கடம்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்தச் சட்டங்கள் தேர்தல்களை ஒத்திப்போடுகின்ற சட்டங்கள். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. லத்தீப், நீங்கள் எதற்காக இப்போது எழுந்து பேசுகிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : I am raising a constitutional objection. இந்தச் சட்டங்கள் எல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தின் ஆர்ட்டிகிள் 40-ல் சொல்லப்பட்டிருக்கின்ற ஆணைக்கு விரோதமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இந்த பில் மீது பேசுவதாகச் சொல்லி எழுதிக் கொடுத்து இருக்கிறீர்கள். நீங்கள் முதலில் பேச விரும்புகிறீர்களா ?

THIRU M. A. LATHEEF: Sir, I am raising an objection to the very introduction of these Bills. It is illegal. I shall explain. Article 40 of the Constitution lays down as follows :—

"The State shall take steps to organise village panchayats and endow them with such powers and authority as may be necessary to enable them to function as units of self-government."

When such is the case, the introduction of these Bills is not correct since it goes against Article 40 of the Constitution. This House is therefore not competent to discuss them. I shall substantiate. My first point is that these Bills, about to be introduced, are against the letter and spirit of the directive principles enshrined in Article 40 of the Constitution. Article 40, which I have quoted already, is a specific directive. We cannot go against it. We are in duty bound to follow it. This Government is not only strangling but killing the existing panchayats, both positively and negatively. As such anything repugnant to the Constitution cannot be considered and cannot be adopted by this legislature because it is a particular and specific directive that lays a duty upon the State, which means the Government, to see that Panchayats are retained, panchayats are organised so that they may function as units of Government. When such is the case, how can we agree to Bills of this nature, which goes against the spirit of the Constitution. What I say is, this Government has no constitutional validity, this executive has no constitutional competence to bring these Bills before this House, since they are against the letter and spirit of the Constitution. As such this House has no constitutional validity and executive has no right to ask this House to pass these Bills. Therefore I say, that this Bill and similar Bills should be dismissed *in limin* without their being any consideration. If this Government proceeds

to bring in these Bills and goes forward with them because of its majority in the House, then I would submit that it will transgress the limit imposed upon them by the Constitution; it will be over-riding the provisions of the Constitution and it will kill democracy and will endanger the very spirit of the Constitution.

(பிற்பகல் 12–20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்துகிறேன். இந்த பில்லை பாஸ் செய்வதற்கு கான்ஸ்டிடியூஷனில் இடம் இருக்கிறதா இல்லையா என்பதை கோர்ட்தான் டிசைட் பண்ண முடியும், சட்டசபை டிசைட் பண்ண முடியாது.

THIRU M. A. LATHEEF: The Courts cannot interfere in our sovereign authority. This House is the sovereign authority. Courts cannot usurp the powers of this House......

THE HON. THIRU S. RAMACHANDRAN.—I would just remind the hon. Member Thiru Latheef that it is already time. The time is now past 12.

THIRU M. A. LATHEEF: You cannot go against the time. You are going against the Constitution......

THE HON. THIRU S. RAMACHANDRAN.—This Bill is in no way unconstitutional. Even Article 40 of the Constitution to which my Hon. Friend Thiru Latheef has drawn the attention of the House clearly mentions about organisation of panchayats. As it is, under separate enactments, the panchayats are already organised and they are existing in our State as entitles. In no way the panchayats are being obviated by any legislative measure. What has been brought before the House is only seeking extension of time limit. That is not elimination of panchayats as organisations. So, it is in accordance with the spirit and form of the Directive Principles to which our Hon. Friend was kind enough to draw the attention of the House. So, there is nothing unconstitutional. This House has got every right and soverignty to go through this Bill and pass the same.

THIRU M. A. LATHEEF.—I am not going to speak for long. I am not going to give a lengthy exposition about what the Hon. Minister has stated. But I am quite clear that under Article 40—the Directive principles of the Constitution—read with Articles 50, it is the constitutional duty of the Government to see that the panchayats are properly organised

in time and they are not kept in abeyance or they are not benumbed. This Government is trying to benumb the panchayats, the lower-most unit of this Government, so that not to accomplish something social and legal but only with a political motive.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'ஸ்பிரிட்' என்கிறார்கள் ; வேறு என்னவெல்லாமோ சொல்கிறார்கள். சிரிக்கிறார்கள், கோபப்படுகிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆகையால் தயவு செய்து தமிழில் பேசினால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனிக்காக வேண்டுமானால் நான் தமிழிலே மீண்டும் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால் மீண்டும் தமிழில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

ஆகவே, நான் சொல்வது என்னவென்றால் இந்தச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமான சட்டம் என்பது தான். இந்தச் சர்க்கார் கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சட்டம் முறையானது அல்ல, ஆகவே, இதை ஆதரிக்க முடியாது என்றும் இது சட்டப்படி செல்லாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இதற்கு நிவாரணமும் உங்களிடத்திலேயே இருக்கின்றது .1973-லேயே ஒரு டெசிஷன் இருக்கிறது. ஆனால் நீங்கள் கோர்ட்டுக்குப் போகாதீர்கள் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தச்சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது குறித்து எங்களுடைய கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1970 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களும், ஊராட்சி மன்றத் தேர்தல்களும் நடைபெற்றன. 1971-லே பொதுத் தேர்தல் நடைபெற்றது. பிறகு 6 மாதங்களுக்குள் நகராட்சி மன்றங்களின் தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால், இப்போது தேர்தல்கள் எல்லாம் தள்ளிப் போடப்படுகின்றன. இவ்வாறு ஊராட்சி ஒன்றியங்களுடைய தேர்தல்கள் தள்ளிப் போடப்பட்டால் அது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் கிராமங்களினுடைய வளர்ச்சி மெத்தவும் பாதிக்கப்படும் என்பதையும் ஏற்கெனவே தள்ளிப்போடப்பட்ட காரணத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே இந்த அரசுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] 1979 பிப்ரவரி 23

கிராம வளர்ச்சிக்கு என்று அக்கறை எடுத்துக்கொண்டு என்ன
தான் பல பெரிய திட்டங்களைத் தீட்டினாலும் ஊராட்சி ஒன்
றியக் குழுக்கள் இல்லாவிட்டால் அவை சரியாக நடைபெறாது.
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கூட்டுறவுத்
துறையானாலும், தொழில் வளர்ச்சித் துறையானாலும், சுகா
தாரத் துறையானாலும் ஆக எந்தத் துறையானாலும் அன்றைக்கு
ஊராட்சி ஒன்றியங்களுடைய தலைவர்கள் இருந்து அவற்றை
நல்ல முறையிலே செயல்படுத்தி வந்தார்கள். ஆனால், ஜனநாய
கத்திலே நம்பிக்கையுள்ள அரசாங்கம் இது என்று பல சட்டமன்ற
உறுப்பினர்கள் சொன்னார்கள். அப்படி ஜனநாயகத்திலே நம்
பிக்கையுள்ளதாகச் சொல்லப்படும் இந்த அரசாங்கம் என்ன
காரணத்தால் ஏறக்குறைய இரண்டாண்டு காலமாக இந்தச்
சட்டத்தைக்கொண்டு தேர்தல்களை ஒத்தி வைத்தார்கள் என்பது
எனக்குப் புரியவில்லை. தேர்தலுக்கென்று வாக்காளர் ஜாபிதாக்
கள் ஆளுநர் அவர்கள் ஆட்சிக்காலத்திலேயும் எடுக்கப்பட்டன.
மத்தியிலே ஜனதாக் கட்சி வந்த பிறகும் வாக்காளர் ஜாபிதாக்கள்
எடுக்கப்பட்டன. பிறகு, நீங்கள் ஆட்சிக்கு வந்த புதிதில் ஒரு
முறை வாக்காளர் ஜாபிதாக்கள் எடுக்கப்பட்டன. இப்போதும்
கூட வாக்காளர் ஜாபிதாக்கள் எடுக்க வேண்டும் என்று அதிகாரி
களிடம் சொல்லப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். நீங்கள்
இப்படியே தேர்தலைத் தள்ளிப் போட்டுக் கொண்டு போகிறீர்
கள். கேட்டால் மழை காலம் வருகிறது, பிறகு கோடை காலம்
வருகிறது, பிறகு வாக்காளர் ஜாபிதாக்கள் எடுக்கப்பட்டு வரு
கிறது போன்ற காரணங்களை எல்லாம் சொல்லி ஒவ்வொரு முறை
யும் தேர்தலைத் தள்ளிப் போடுகின்ற ஒரு செய்கை ஜனநாயகத்
திலே மெத்த அக்கறை கொண்டுள்ள ஒரு ஆட்சி செய்கின்ற காரி
யமா என்பதை நான் இந்த நேரத்திலே கேட்க ஆசைப்படுகிறேன்.
இன்றைய தினம் கிராமங்களிலே, நான் முதலிலேயே சொன்னது
போல் மோசமான நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன.
எங்களுடைய கட்சியினுடைய சார்பிலே மாண்புமிகு திரு. புலவர்
கோவிந்தன் அவர்கள் பேசுகிறபோது ஆசிரியர்கள் நியமனத்தி
லேயும் ஏராளமாக லஞ்சம் வாங்கப்படுகிறது என்று சொன்னார்
கள். அது செய்யாற்றிலே மட்டுமல்ல, அனைத்துக் கிராமங்களிலும்
உள்ள ஒன்றியங்களிலே இப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்து
கொண்டு இருக்கின்றன. தேர்தல்கள் தள்ளிப்போடப்படுகின்ற
காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்படு
கின்றன என்பதையும் இப்படியே போனால் கிராமங்களின்,
வளர்ச்சி அடியோடு பாதிக்கப்பட்டுவிடும் என்பதையும் நான்
இந்த நேரத்திலே தெரிவித்தாக வேண்டும்.

அடுத்து, இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். எற்கெனவே
இருந்த நிலையில் ஏப்ரல், அல்லது மே-யிலே தேர்தல் வரக்கூடிய
சாத்தியக்கூறு இல்லை என்று தெரிய வருகிறது. இப்போது
இன்னும் நீட்டிக்கப் போகிறீர்கள். இப்படியே நீட்டித்துக்
கொண்டே போகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டால் கிராமங்களின்

1979 பிப்ரவரி 23] [திரு. பெ. சு .திருவேங்கடம்]

வளர்ச்சி அடியோடு பாதிக்கப்படும் என்றுசொல்லிக்கொள்கிறேன்.
ஆகவே, ஜனநாயகத்தில் நம்பிக்கை காட்டுகின்றதாகச் சொல்லப்
படும் இந்த அரசு அவ்வாறு நம்பிக்கை காட்டுகின்ற வகையில்
உடனடியாக ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி மன்ற தேர்தல்களை
நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று எங்களுடைய
கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கேட்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12–30]

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, இங்கு கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை
மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நாங்கள் கடுமையாக
எதிர்க்கிறோம். பொதுவாக பஞ்சாயத்து முறை என்பதே, அதி
காரங்களைப் பரவலாக்கக்கூடியதொரு முறையில் ஏற்பாடு செய்
யப்பட்டிருக்கிறது. டிசென்ட்ரலைஸ் செய்வதற்காக," ஆனால், இப்
போது தொடர்ச்சியாக ஒவ்வொரு முறையும் கொண்டுவரப்
படுகிற இந்த மசோதா ஜனநாயகத்திற்கே வேட்டு வைக்கக்கூடிய
முறையில்தான் அமைந்திருக்கிறது. சென்ற முறையே இந்த
மன்றத்தில் கூறப்பட்டது. இந்த ஒருமுறை மட்டும் நீங்கள் அனு
மதியுங்கள், நாங்கள் நிச்சயமாக மறுமுறை மீண்டும் இந்த மசோ
தாவை கொண்டுவரவேண்டிய அவசியமிருக்காது என்று மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால்,
அது இப்போது மீறப்படுகிறது. காரணம் கூறப்படுவது, மழை
காலம், அறுவடை காலம், கோடை காலம், வசந்த காலம்,
பனிக்காலம், என்று ஒவ்வொரு காலத்திலும் வோட்டு போடமுடிய
வில்லையா அல்லது வாக்காளர் பட்டியலைத் தயார் செய்ய முடிய
வில்லையா என்று கேட்க விரும்புகிறேன். இப்படிச் சொல்லக்
கூடிய காரணங்கள் ஆதாரமற்றவை. அல்லது அவை ஏற்றுக்
கொள்ள முடியாத காரணங்களாக இருக்கின்றன. அதோடு கூட
இன்று பல்வேறுயிடங்களில் ஊராட்சி மன்றங்களினால் ஏற்படுத்
தப்படுகிற வேலைகளில் பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. குறிப்
பாகச் சொல்லப் போனால், அதிகார துஷ்பிரயோகம் நடைபெறு
கிறது. கோவை மாவட்டத்தில் தேரூர் ஒன்றியத்தில் ஒரு சுற்
றறிக்கை விடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயதது ஊழிய
ரும் குடும்பக் கட்டுப்பாட்டிற்காக ஆள்களை கட்டாயம் கொண்டு
வர வேண்டும் என்று இப்படிப்பட்ட உத்தரவுகள் எல்லாம் பிறப்
பிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட நிகழ்ச்சி தொடர்ச்சியாக
நடைபெறுகிறது. அதே போல் கிராமப்புறங்களில் உள்ள சாலை
களில் சரள் போட்டு செப்பனிட முடியாமல், செக் வாங்கவேண்டு
மென்றால் கோட்ட வளர்ச்சி அதிகாரியைநாடவேண்டியிருக்கிறது.
எங்கள் ஒன்றியத்தில் உள்ள நகரம் என்ற பஞ்சாயத்தைப்
பொறுத்த வரையில் நிதி இருக்கிறது. ஆனால், டி.டி.ஓ.வால்
மறுக்கப்படுகிறது. ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி திருப்பி
விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எந்தவிதமான முன்
னேற்றகரமான வேலைகளும் செய்யப்படுவதில்லை. இன்று கிரா
மப்புறங்களில் உள்ள மின்சார விளக்குகளைப் பார்க்கிறபோது

அங்கே பல்புகளைப் பொருத்த வேண்டிய இடங்களில் குருவிகள் கூடுகட்டி சுகமாக வாழ்ந்து வருகின்றன. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை கிராமப்புறங்களில் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து நீடித்தால் ஜனநாயகத்திற்கு வேட்டு வைக்கிற ஒரு முறையாகத்தான் அது இருக்கும். அதை அனுமதிக்க முடியாது என்பதை வலியுறுத்திக் கூறி அமர்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை).

*திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் மீது நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். மக்களுக்கு உண்மையிலேயே தொண்டு செய்ய வேண்டியது ஊராட்சிகள்தான். ஊராட்சிகள் மக்களிடம் பணம் பெற்று நேரடியாக அவர்களுக்காக செலவு செய்யும் ஓரே ஸ்தாபனமாகும். அம்மாதிரியுள்ள ஒரு நிலைமையில் இப்போது அந்த வேலைகள் நடைபெறமுடியாமல் ஆங்காங்குள்ள தலைவர்கள் செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு மக்கள் குழு என்று ஒரு குழு ஏற்படுத்தினார்கள். ஊராட்சி மன்றம் என்று ஒன்று இருக்கிறது. ஊராட்சி மன்றத்தில் ஒரு தலைவர் இருக்கிறார், துணைத் தலைவர் இருக்கிறார், உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதோடு மக்கள் குழு என்று ஒன்று அமைத்திருக்கிறார்கள் அதிகாரிகள் மூலம். அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்றால், ஆளும் கட்சியில் உள்ளவர்களை அதிகமாக மெம்பர்களாகப் போட்டு ஒரு குழுவை நியமித்தார்கள். அந்தக் குழுவிற்கு ஆளும் கட்சியில் உள்ளவர்களை தலைவராகப் போட்டிருக்கிறார்கள். ஒரு நகரப் பஞ்சாயத்து தலைவர் இங்கே எம்.எல்.ஏ. ஆகக் கூட இருக்கிறார்கள். அந்த அதிகாரி போட்ட குழுவில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் தலைவராக இருக்கிறார், எம்.எல்.ஏ. உறுப்பினராக இருக்கிறார். ஆக, இப்படிப்பட்ட மக்கள் குழு தேவையா என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்கள் குழு போட்டிருப்பது கட்சிப் பிரசாரத்திற்காகவா அல்லது மக்களுக்கு தொண்டு செய்யவா என்பது விளங்கவில்லை, ஆகவே இந்தக் குழு தேவை இல்லையென்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

மேலும் பேரூராட்சிகளைப் பற்றி சொல்லும்போது, கடந்த நான்கைந்து ஆண்டுகளாகவே நிதி நிலைமை மோசமாக இருந்து கொண்டிருக்கிறது. சட்ட மன்றத்தில் இதற்கு முன்பும் இதைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறேன். வருகின்ற வருமானத்தில் 90 சதவீதம் சம்பளத்திற்கே போய்விடுகிறது. எந்தவிதமான மெயின்டனஸ்ஸும் செய்ய முடியவில்லை. சட்ட மன்றத்தில் முன்பு சினிமா சட்டம் வந்த நேரத்தில் நான் பேசும்போது, சொன்னேன், புதிதாக வருகின்ற சட்டத்தினால், பேரூராட்சியின் வருமானம் குறைந்து விடும், ஆகவே அப்படிப்பட்ட பேரூராட்சி மன்றங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று சொன்னேன். அப்போது நமது நிதி அமைச்சர் அவர்கள், இந்த சட்டத்தினால்

எந்தவிதமான நஷ்டமும் ஏற்படாது, அப்படி ஏதாவது நஷ்டம் வந்தால் அதை அரசாங்கம் ஈடு செய்யும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இந்த சினிமாச் சட்டத்தினால், பாபநாசம் பேரூராட்சியில், ஏறத்தாழ 15 ஆயிரம், 16 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி எந்தெந்த ஊராட்சிகள் பேரூராட்சிகள் ஆகியவைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறதோ அவைகளுக்கெல்லாம் மானியமாக அரசு தொகை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சினிமாச் சட்டம் வந்ததின் காரணமாக வருமானம் குறைந்து கொண்டே வருகிறது. பல பேரூராட்சிகளில் சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை கூட ஏற்பட்டிருக்கிறது.

பேரூராட்சிகள், ஊராட்சிகள் ஒன்றியங்கள் இவைகளின் நிதி நிலைமையைப்பற்றி ஆய்வு செய்வதற்காக அரசு ஒரு ஆய்வுக் குழுவை அனுப்பியது. இந்தக் குழு வந்து ஆய்வு செய்தும் எந்த விதமான பிரயோசனமும் இல்லை. நாங்கள் கேட்டுக் கொள்வது கிராம பஞ்சாயத்துக்களுக்கு மேட்சிங் கிராண்ட் கொடுப்பது போல், பேரூராட்சிகளுக்கும் வீட்டு வரியில் பாதி அளவுக்காவது மேட்சிங் கிராண்ட் தர வேண்டும், அல்லது டி.எ.யையாவது சர்க்கார் ஒத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இப்போதுள்ள நிலையில் பேரூராட்சிகள் கண்டிப்பாக இயங்க முடியாது. அந்தந்த யூனியன்களைச் சேர்ந்த பெருந் தலைவர்கள் துணைப் பெருந்தலைவர்கள், யூனியன் ஆணையாளர், கோட்ட வளர்ச்சி அதிகாரி, அந்தந்த தொகுதி எம்.எல்.ஏ. ஆகிய இவர்களை எல்லாம் சேர்த்து ஒரு குழு அமைக்கப்படும் என்று ஒரு உத்தரவு வந்தது. பின்னால் என்ன காரணத்தினாலோ அதன் கூடவே 'கேன்ஸல்' உத்தரவும் வந்து விட்டது. இப்போதுள்ள நிலையில் வித்தில் போடப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள நிலையில் ஸ்பெஷல் ஆபீஸர்களை வைத்துக்கொண்டு எந்த வேலையும் நடைபெறுவதில்லை. எங்கு பார்த்தாலும் லஞ்சமும் ஊழலும் நடந்து கொண்டிருக்கிறது.

மேலும், ஊராட்சிகளைப் பொறுத்தளவில், மின் வசதி, ரோடு வசதி, குடி தண்ணீர் வசதி, இவைகளை செய்து கொடுக்க வேண்டும், ஆனால் இப்போது ஒன்றும் செய்து கொடுக்க முடிவதில்லை. ஊராட்சிகளுக்கு தேர்தல் நடந்து சுமார் ஒன்பது ஆண்டுகளாகிவிட்டது. மக்களுடைய தேவைகளை சரியாக நிறைவேற்றி வைக்கவும் முடியவில்லை. எங்கே போனாலும், குடி தண்ணீர் வசதி, மின் வசதி, போக்குவரத்து வசதி இவைகளைப் பற்றி மக்கள் கடுமையாக கேட்கிறார்கள். ஊராட்சித் தலைவர்களைப் பார்த்து கடுமையாக தாக்க ஆரம்பித்து விட்டார்கள். இதை எங்கு பார்த்தாலும் திட்ட ஆரம்பித்து விட்டார்கள். தலையெல்லாம் பார்த்துவிட்டு எப்போது தேர்தல் வரும் என்று தலைவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நான்கைந்து ஆண்டுகளாக தேர்தல் நடைபெறவில்லை. ஆகவே, 9 ஆண்டுகளுக்கு முன் நடைபெறாத ஊராட்சி மன்ற தேர்தலை சீக்கிரமாக நடத்துவதற்கு அரசு முன் வரவேண்டும்.

[திரு. ரெ. கி, சவுந்திரராஜன்] [1979 பிப்ரவரி 23

இன்னொன்று, ஊராட்சி ஒன்றிய தேர்தல், ஊராட்சி மன்ற தேர்தல், ஆகியவைகள் கட்சி சார்பற்ற முறையில் நடைபெறுமா அல்லது கட்சி சார்பில் நடைபெறுமா என்பது தெரியவில்லை. கட்சி சார்பற்ற முறையில் நடைபெற வேண்டும் என்று மறைந்த பெருந்தலைவர்கள் எல்லாம், குறிப்பாக பெரும் தலைவர் காமராஜ் போன்றவர்கள் அறிஞர் அண்ணா போன்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கட்சி என்பது கூடாது. ஊராட்சிகளிலோ, ஊராட்சி ஒன்றியங்களிலோ அரசியலைப் புகுத்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த முறையில் ஊராட்சி தேர்தல்களை கட்சி சார்பற்ற முறையில் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. போ. கோபாலன்; தலைவர் அவர்களே, இந்த திருத்தங்களை சட்ட முன்வடிவை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இந்த ஊராட்சி ஒன்றியங்களைப் பற்றி சொல்லும்போது, இப்போது அவைகளின் தேர்தல் நீட்டிக்கப் பட்டிருக்கிறது. இதற்கு முன்னாலும் பல்வேறு கட்டங்களில் நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிவோம். சில நேரங்களில் நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய சில இடையூறுகளின் காரணமாக குறிப்பிட்ட காலத்தில் தேர்தலை நடத்த முடியாமல் போய்விடக்கூடும். இயற்கையால் ஏற்படுகின்ற மாறுதல் காரணமாக சில காரியங்களை குறிப்பிட்ட காலத்தில் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றபோது காலங்கடந்து நடத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கடந்த ஆண்டு ஏற்பட்ட புயலின் காரணமாகவும், மழையின் காரணமாகவும் இந்த மாநிலத்தில் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டிருந்தன. இவற்றை சீர்திருத்துவதற்கு நிர்வாகத்திலுள்ள அரசு ஊழியர்கள், அரசு பணியாளர்கள், இவர்கள் எல்லாம் சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்ததின் காரணமாக இப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படுகிறது என்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12–40]

இப்படி புயலாலும், மழையாலும் பாதிக்கப்பட்ட கிராமங்களிலே உள்ளவர்கள் இருப்பதற்கே இடமில்லாமல், அவர்கள் எந்த இடத்திலே இருந்தோம் என்பதே தெரியாமல் மறைந்து போயிருப்பதைப் பார்க்கிறோம். நீலகிரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், ஒரு கிராமமேகூட மண் மேடிட்டு மறைந்து போயிருக்கின்ற காட்சியை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அப்படிப்பட்ட இடத்திலே வாழ்ந்தவர்கள், அவர்கள் வாழ்ந்த இடமே தெரியாமல், கிராமமே தெரியாமல் வீடுகளை இழந்து இன்றைக்கு உட்கார்ந்து கொண்டிருக்ககூடிய அந்த மக்களுக்கு மாற்று இடங்களைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். அப்படி அவர்களுக்கு மாற்று வீடுகள் அமைத்துக் கொடுத்து, அங்கு வாக்காளர்கள் மீண்டும் ஏற்படுத்திக்

1979 பிப்ரவரி 23] [திரு. போ. கோபாலன்]

கொடுப்பதற்கான வாக்குறுதியை அவர்களுக்கு நாம் கொடுத்தாக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை இந்த அரசு அங்கே உருவாக்குவதற்கு கால அவகாசம் தேவை என்பதை தயவு செய்து எதிர்க் கட்சியினர் எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே, முழுமையான வாக்காளர் பட்டியலைத் தயாரித்து, முறையான வகையிலே தேர்தல் நடத்தப்பட இருக்கிறது. அப்படியல்லாமல் அவசரப்பட்டு, அரைகுறையாக ஏற்பாடுகள் செய்து தேர்தலை நடத்தக் கூடாது. யார் வெற்றி பெற்றாலும், அங்குள்ள மக்களுக்கு உண்மையான முறையிலே, ஜனநாயக முறையிலே தேர்தலை நடத்த வேண்டுமென்ற காரணத்தாலே தான், சிறப்பான ஏற்பாடுகள் செய்து, இந்தத் தேர்தலை இந்த அரசாங்கம் நிச்சயம் விரைவிலே நடத்துவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அந்த உறுதியோடுதான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே, இந்தச் சட்டத்தை நாம் அத்தனை பேரும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தேர்தலை நடத்துவதற்கு அச்சப்படுகிறது, தேர்தலை இப்போது நடத்தினால் இந்த அரசுக்கு பாதகமான விளைவுகள் ஏற்படக் கூடுமோ என்றெல்லாம் நீங்கள் கருதி கொண்டாலும், உள்ளபடியே இன்றைக்கு நாட்டிலே அப்படிப்பட்ட நிலைமை இல்லையென்பதை நானும் சொல்கிறேன்; நீங்களும் அறிவீர்கள் என்பதை நான் அறிவேன். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கின்ற காரணத்தாலே, தேர்தலை எப்போது நடத்தினாலும் ஜெயிக்கும் நிலையில், இந்தத் திருத்தச்சட்டம் இப்போது கொண்டு வரப்படுவது அவசியம் என்ற காரணத்தாலே தான் இங்கு வைத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் எடுத்துச் சொன்னார்கள், மக்கள் குழு என்ற ஒரு குழுவை ஏற்படுத்தும் போது, அந்தக் குழு ஆளும்கட்சியினரே நடத்தக்கூடிய ஒரு குழுவாக இருக்கிறது, அதற்கு தலைவரும் அவர்களே, உறுப்பினர்களும் அவர்களே என்று ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஆனால், மக்கள் குழு என்று அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் குழுவில் ஏறக்குறைய பஞ்சாயத்துக்களில் உறுப்பினர்கள் இருப்பதுபோல், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பிரதிநிதி என்ற முறையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டு, பஞ்சாயத்து யூனியன்களிலே அவர்கள் எப்படி மாதந்தோறும் கூட்டங்களை நடததுகிறார்களோ, எப்படித் தீர்மானங்களை போடுகிறார்களோ அதேபோல் இந்த மக்கள் குழுவிலே உள்ளவர்களும் மாதந்தோறும் கூடி சில தீர்மானங்களைப் போடுகின்றார்கள் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இந்த மக்கள் குழுவிலே உள்ளவர்களுக்கு அதிகாரமற்ற பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் இந்த பஞ்சாயத்து நிர்வாகத்திற்கு ஒரு ஆலோசனைக் குழுவாக, அந்த நிர்வாகத்திற்கு ஆலோசனை சொல்லக்கூடிய

வகையிலேதான் செயல்படுகிறார்கள் என்பதையும் மனதிலே கொள்ளவேண்டும். இந்த ஒரு வாய்ப்பைத்தான் அரசு அவர்களுக்கு அளித்திருக்கிறது. 76லே நாட்டிலே அவசர கால நிலைமை பிரகடனப்படுத்தியபோது, இந்த சிறு வாய்ப்புக்கூட மக்களுக்கு அளிக்கப்படவில்லை என்பதை எண்ணிப் பாருங்கள். மாதந்தோறும் கூடுகிறார்கள். கிராமங்களிலே உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்கிறார்கள். அங்கு நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றும் பீ.டீ.ஓ. மூலமாக பல்வேறு குறைபாடுகள் நீக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் இங்கே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, நீங்கள் அவகாசம் தாருங்கள். தேர்தலைச் சந்திக்க இந்த ஆளும் கட்சி அச்சப்படவில்லை. எனவே, இதை ஒரு விரிவான முறையிலே ஒரு சுமுகமான நிலைமையிலே தேர்தலை நடத்தி, ஒரு நல்ல நிர்வாகத்தை அமைக்க வேண்டுமென்பதற்காக இந்த அவசரச் சட்டம் இப்போது தேவைப்படுகிறது, அந்த வகையிலே நாம் இதை அனுமதிக்க வேண்டுமென்று சொல்லி, இந்த திருத்த முன்வடிவை ஆதரித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை எங்கள் கட்சியின் சார்பாக நாங்கள் எதிர்க்கிறோம். கடந்த மூன்று தடவைகளாக மதிப்பிற்குரிய மந்திரியவர்கள் நமக்கு வாக்குறுதி அளித்தார்கள். ஒவ்வொரு தடவையும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக தேர்தல் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே வருகிறது. அமைச்சர் அவர்கள் பதில் கொடுக்கக்கூடிய நேரத்தில் எந்தத் தேதியில் சரியாகத் தேர்தலை நடத்தப் போகிறோம் என்று அறிவிக்க வேண்டும். அந்தத் தேதியாவது மாறக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து முனிசிபாலிடிகள், தேர்தல்கள் நடத்தாதன் காரணமாக பலவிதமான கோளாறுகள் ஏற்பட சந்தர்ப்பம் இருக்கிறது. நான் தொடர்ச்சியாக 17 வருஷமாக பஞ்சாயத்துத் தலைவராக இருந்து வருகிறேன். அதனால் அங்கு என்ன நடக்கிறது, எந்த அளவுக்கு வேலை நடக்கிறது, கோளாறு ஏற்படுகிறது என்று ஓரளவு தெரிந்து வைத்திருக்கிறேன். பஞ்சாயத்து நிதிநிலைமையைப் பொறுத்த அளவில் அதிகமாக அவற்றைக் கொல்வது நாட்டில் இருக்கக்கூடிய விலைவாசி ஏற்றந்தான். அந்த விலைவாசி ஏற்றம் சாதாரண மக்களைப் பாதிப்பது போல் பஞ்சாயத்துக்களையும் பாதிக்கிறது. பஞ்சாயத்துச் சொத்துக்கள் தற்போது சரியாகக் காக்கப்படுவதில்லை. லைட்டுகள் எரிவதில்லை. காட்டு கருவேலம் வெட்டுவதில் ஆளும் கட்சியினர் தலையிடுகிறார்கள். சாத்தூர் தாலூகாவில் குலசேகரம் கிராமத்தில் ஏழை வ்வசாயிகள் மேல் கேஸ் போடப்பட்டிருக்கிறது. ஏ.டி.எம்.கே. அமைப்பாளர் போலீஸ் ஸ்டேஷன் வரை அவற்றைக் கொண்டு செல்லும் நிலைமை இருக்கிறது. சாதாரண மக்களுக்கு எல்லாவிதமான வசதிகளும்

செய்யப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் பஞ்சாயத்துச் சட்டம் கொண்டு வரப்பட்டது. நடைமுறையில் தேர்தல்கள் ஒழுங்காக நடைபெறாத காரணத்தால் பல கோளாறுகள் ஏற்பட சந்தர்ப்பம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு.செள. வே. வரதராஜன் : தலைவர் அவர்களே அங்கத்தினர் அவர்கள் கட்சி ஆண்டு கொண்டிருக்கும் கேரளாவில் எத்தனை ஆண்டுகளாக பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெறாமல் இருக்கிறது என்பதை அங்கத்தினர் அவர்கள் அறிவார்களா ?

திரு. செ. சிவசாமி : நாம் இப்போது தமிழ் நாட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் விஷயத்தைத் தெரிந்து கொண்டுதான் கேட்கிறார்கள். அதனால் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையென்று நினைக்கிறேன்.

இன்றுவரை ரோடுகள் சரி செய்யப்படவில்லை. கிராமாந்திர ரோடுகள் சரி செய்யப்படாததன் காரணமாக பஸ் போக்குவரத்து கிராமங்களுக்குப் போக முடியாத நிலைமை இருக்கிறது. குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை சாதாரண கிராம மக்கள் மீது திணிக்கிறார்கள். குறியீடு அளவை நிர்ணயிப்பதன் காரணமாக நிலைமை மோசமாகியிருக்கிறது. இதன் காரணமாகத்தான் ஏற்கனவே மத்திய அரசாங்கத்தை மாற்றக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அது இங்கேயும் ஏற்பட்டுவிடக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தலைப் போன ஆண்டே நடத்தியிருந்தால் ஆளும் கட்சிக்கு நிச்சயமாக அதிகமான வாய்ப்புகள் கூட இருந்திருக்கும். இன்று அந்த நிலை சன்னஞ் சன்னமாகக் குறைந்து வருகிறது. உடனடியாக இப்போதாவது தேர்தலை நடத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏசுடையான் என்ற சாதாரண அரிசன்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தச் சட்ட முன்வடிவைப் பற்றிப் பேசுங்கள். தனிப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட நிலைமைகளைப் பற்றியெல்லாம் இதிலே பேசுவது சரியல்ல.

திரு. மு. சுந்தரராஜன் ; உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சாத்தூர் தாலூகாவில் குலசேகரம் கிராமத்தில் முள் வெட்டுவதில் கட்சிக்காரர்களால் தகராறு வந்தது என்ற முறையில் உண்மைக்கு மாறான * ஒன்றைச் சொன்னார்கள்.

[திரு. மு. சுந்தரராஜன்] [1979 பிப்ரவரி 23

அவர்கள் குறிப்பிட்ட இடம் ரெவின்யூ டிப்பார்ட்மென்டுக்குச்
சொந்தமான நிலம், அதாவது புறம்போக்கு நிலம். நாலா
யிரம் ரூபாய்க்கு மேல் ஏலத்திற்குப் போகவேண்டிய முள்ளை பஞ்
சாயத்துத் தலைவர் அரசாங்கத்துக்குத் தெரிவிக்காமல் தானா
கவே வெட்டி எடுக்க முனைந்தபோது தகவல் தெரிந்த ஊர்ப்
பொதுமக்கள் தாசில்தாருக்குப் பெட்டிஷன் கொடுத்து நிறுத்தி
அரசாங்க நோடிபிகேஷன் போடப்பட்டு ஏலம் விடப்பட்டிருக்
கிறது. இதுதான் உண்மையான தகவல். உறுப்பினர் அவர்கள்
உண்மைக்கு மாறான * தகவலைத் தருகிறார்கள்.

[பிற்பகல் 12-50]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர்
பேசியபோது பயன்படுத்திய 'பொய்' என்ற வார்த்தையை
'உண்மைக்கு மாறான' என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. செ. சிவசாமி :</u> நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.
என்ன சம்பவம் நடந்தது என்பதை நான் சபைக்குச் சொல்லத்
தயாராக இருக்கிறேன். ஆதாரம் கையிலே இருக்கிறது. ஏசு
வடியான் என்பவர் டீச்சர்ஸ் டிரெயினிங் பாஸ் செய்துவிட்டு
13 ஆண்டுக்காலமாக வேலைக்காகக் காத்திருக்கிறார். ஆனால்,
அந்த ஒன்றியத்திலே அவருக்கு முதலிடம் கொடுக்காமல் இருக்கி
றார்கள்..................

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உறுப்பினர் அவைமுன்பு
இருக்கிற சட்ட முன்வடிவின் மீது பேச வேண்டும், சட்ட முன்
வடிவின் ஆய்வின்போது குற்றச்சாட்டுக்கள் கூடாது. இந்தச்
சட்டத்தைத் திருத்தினால் என்ன தவறு என்பதை மட்டும்
சொல்லுங்கள்.

<u>திரு. க. அன்பழகன் :</u> தலைவர் அவர்களே, பேசுகின்ற
உறுப்பினருடைய நோக்கம் இதைத் திருத்துவதன் மூலம் நாள்
கடத்தினால் அதன் மூலம் எப்படி ஊழல் வளர்கிறது என்ற
விவரங்களைச் சொன்னார்கள். ஒட்டு மொத்தமாக சொல்வ
தனால் ஊழல் வளர்வதற்கு இது உதவி செய்கிறது என்று
சொல்லலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேராசிரியர் அவர்கள்,
திரு. சிவசாமி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை ஒட்டு
மொத்தமாகச் சொல்லிவிட்டார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
திருத்தப் பெற்றது.

1979 பிப்ரவரி 23]

<u>திரு. செ. சிவசாமி :</u> ஆகவே காலாகாலத்திலே தேர்தலைக்
கொண்டு வந்து தேர்தலின் மூலம் மக்கள் சுதந்திரத்தை அனு
பவிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை
முடித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தின்மீது மாண்பு
மிகு உறுப்பினர்கள் தங்களுடைய எண்ணங்களை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக இங்கே வரவிருக்கிற 6
சட்டத் திருத்தங்கள் மீது பேசுகின்ற சட்டமன்ற உறுப்பினர்
களின் மையக் கருத்து ஒன்றே ஒன்றுதான் இருக்கும் என்று நான்
உறுதியாகக் கருதுகிறேன். தேர்தல்களைத் தள்ளிப் போடக்
கூடாது. அவைகளை நடத்தவேண்டும் என்பதுதான். மாண்பு
மிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்துக்
களின் சாரம் அதுதான். நான் கூட, இன்னும் கொஞ்சம்
காரமாகச் சொல்லுவார்கள் என்று நினைத்தேன். ஆனால்
காரத்தைக் குறைத்துக் கொண்டு சாரத்தை அதிகமாக்கித் தந்த
தற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கின்றேன்.

திரு. திருவேங்கடம் அவர்கள் பேசுகின்ற பொழுது தேர்
தல்கள் தள்ளிவைக்கப்படுகிற காரணத்தால் ஊராட்சி ஒன்றி
யங்கள் சீர்கெட்டுக் கிடக்கின்றன என்ற கருத்தை வலியுறுத்திச்
சொன்னார்கள். நான் ஒன்றைக் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். கடந்த முறை தேர்தல்கள் தள்ளிவைக்கப்பட
வேண்டுமென்று சட்டப் பேரவையைக் கேட்டபொழுது வாக்கா
ளர் பட்டியல் முழுமையாகத் தயாரிக்கப்படவேண்டுமென்ற கருத்
தினைச் சொன்னேன். அதற்கு பிறகு மழை காரணத்தினால்
தேர்தலை நடத்த வசதியில்லை என்ற காரணத்தால் இந்தச்
சட்டத் திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்பதை நான் ஏற்
கெனவே குறிப்பிட்டுக் காட்டினேன்.

சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கோபால் பேசும்பொழுது
குறிப்பிட்டதைப் போல் கடுமையான புயலும், மழையும்
நாட்டைப் பாதிக்கிற காரணத்தால் தேர்தல்களை முறையாக
நடத்துவது சரியாகுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள்
நிச்சயமாக எண்ணிப் பார்ப்பார்கள் என்று கருதுகிறேன். அதி
லும் இந்தத் துறையிலே உள்ள ஊழியர்கள், அரசு அலுவலர்கள்
வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தருகின்ற
பணியிலே தங்களை முழுமையாக ஈடுபடுத்தியிருக்கின்ற நேரத்
திலே அவர்கள் தேர்தல் பணிகளை கவனிக்க இயலாது, கிராமங்
களிலே உள்ளவர்கள் வேளாண்மை தொழிலிலே ஈடுபட்டிருக்கிற
இந்த நேரத்திலே தேர்தலில் கலந்துகொள்ள வசதி இருக்காது
என்ற காரணத்தால் தேர்தல்கள் தள்ளிவைக்கப்பட்டிருக்
கின்றனவே தவிர வேறு உள் நோக்கம் இல்லை என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கா. காளிமுத்து] [1979 பிப்ரவரி 23

மழை காலம் வந்துவிட்டது, கோடை காலம் வந்துவிட்டது, வசந்த காலம் வந்துவிட்டது என்று சொல்கிறார்கள் என்று திரு. கிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் மழை காலத்தைத்தான் குறிப்பிட்டேனே தவிர, கோடை காலம், வசந்த காலம் என்பதற்காக தள்ளிவைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே ஒரு பதில் இங்கே வர இருக்கிற மற்ற மசோதாக்களுக்கும் அதுவே பதிலாக அமையும் என்ற காரணத்தால் இங்கே திரு. சிவசாமி அவர்கள் மிகவும் வற்புறுத்திக் கேட்டார்கள் அப்படி அவர்கள் வற்புறுத்திக் கேட்ட பிறகு அறிவிக்காமல் இருப்பது சரியல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருத்தையும் தெரிந்து நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். ஜூன் இறுதிக்குள் அனைத்துக் உள்ளாட்சித் தேர்தல்களையும் நிச்சயமாக இந்த அரசு நடத்தும் என்கின்ற உறுதியைத் தெரிவிக்க விரும்புகிறேன். வாக்குறுதி உறுதியாக இருக்கும் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஜூன் இறுதிக்குள் தேர்தல்கள் நிச்சயமாக நடக்கும். ஆகவே, மற்றைய மசோதாக்களில் பேசவிருக்கின்ற உறுப்பினர்களின் கடுமையை இது குறைக்கும் என்று உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவநம்பிக்கைபடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஜூன் என்பது அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு) இப்பொழுது பிப்ரவரி மாதம் நடக்கிறது. இதற்குப் பிறகு எந்த ஜூன் மாதம் வருகிறதோ அதைத்தான் குறிப்பிடுகிறேன்

வாக்காளர்கள் பட்டியலை இன்னும் முழுமைப்படுத்த வேண்டுமென்ற உணர்வில் அரசு முயற்சிக்கிறது. 1—1—1978-இல் 21 வயது அடைந்தவர்கள் வாக்காளர்களாகச் சேர்க்கப்பட்டார்கள். 1—1—1979 இப்பொழுது முடிந்து விட்டது. ஆகவே, அதில் 21 வயது அடைந்தவர்களை வாக்காளர்களாகச் சேர்க்காமல் இருப்பது ஜனநாயகத்திற்கு விரோதம் ஆகும். ஆகவே, அவர்களும் நிச்சயமாக வாக்காளர்கள் ஆகக் கூடிய நிலைமைகளைப் பெற வேண்டுமென்ற முறையில் அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தத் துணை வாக்காளர்கள் பட்டியல் மார்ச் இறுதிக்குள் முடிந்துவிடும். ஆகவே, அவர்களும் வாக்காளர்களாகக்கூடிய தகுதி உடையவர்கள் ஆகிறார்கள்.

இன்னொன்றையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் எடுத்துத் தெரிவித்தார்கள். இந்தத் தேர்தல்கள் தள்ளிப் போடப்படும் காரணத்தால், தனி அதிகாரிகளின் நிர்வாகம் நடக்கின்ற காரணத்தால் ஊழல்கள் பெருகிவிட்டன. வேலைகள் தடைப்படுகின்றன. வளர்ச்சிப் பணிகள் முறையாக நிறைவேறவில்லை என்று தெரிவித்தார்கள். இங்கே ஒன்றைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருந்தாலும்கூட சில பிரச்னைகள் நிச்சயமாக இருக்கும், ஆனால் தேர்தல் நடைபெற்று மக்கள்

1979 பிப்ரவரி 23] [திரு. கா. காளிமுத்து]

பிரதிநிதிகள் பொறுப்பேற்றால் இன்றைக்கு இருப்பதைவிட வளர்ச்சி வேகம் அதிகமாகும், ஊராட்சி மன்றங்களும், ஒன்றியங்களும் இன்னும் சீராகவும் சிறப்பாகவும் இயங்க அவைகள் வழிவகுக்கும் என்பதை நான் உறுதியாக ஏற்றுக்கொள்கிறேன்.

திருவேங்கடம் அவர்கள் பேசும்பொழுது ஆசிரியர் நியமனத்தில் பல தவறுகள் நடந்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு புகாரைச் சொல்லுகின்ற நேரத்தில் அந்தப் புகாரை அலட்சியப் படுத்துவதில்லை, எதிர்க்கட்சியினர் சொல்லுகிறார்களே என்று அதற்கு உள்நோக்கம் கற்பித்து உதாசீனப்படுத்துவதில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். அந்தப் புகார்கள் வந்ததன் அடிப்படையில், பரவலாக அப்படிப்பட்ட புகார்கள் வந்ததன் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஒன்றியங்களிலே பொறுப்பேற்றுக் கொள்ளும் வரையில், ஆசிரியர் நியமனங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு நியமனம் செய்ய வேண்டுமென்ற உத்தரவை அரசு அறிவித்திருக்கிறது என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல மக்கள் குழுவைப்பற்றித் தெரிவித்தார்கள். நான் அந்தக் குழுவைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன் என்று கருதுகிறேன். அது நிச்சயமாக ஊராட்சி மன்றங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் நிர்வாகத்திற்குத் துணைபுரிவதாக இருக்க வேண்டுமே தவிர நிர்வாகத்திற்குத் தொந்தரவு புரிவதாகவோ அல்லது நிர்வாகத்தில் தலையிடுவதாகவோ இருக்கக் கூடாது. அதை மீறி செயல்படும் சூழ்நிலைகள் வரும்பொழுது அதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிப்பார்களேயானால் நிச்சயமாக அதுபற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்து, நான் தந்திருக்கின்ற இந்த வாக்குறுதிகளின் அடிப்படையில் இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 1/1979) சட்டமாக நிறைவேறற்ப் பெற வேண்டும்'."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

7. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கோவை மருத்துவ மனை, மருத்துவக் கல்லூரி வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையில் நான் வழங் கிய தீர்ப்புக்கு இணங்க இப்பொழுது ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்கிறேன்.

"கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பணி யாற்றும் மருத்துவர்கள், ஒரு சட்டமன்ற உறுப்பினர் நடத்தைக் காரணமாக வேலை நிறுத்தம் செய்துள்ளனர். அதனால் அங் குள்ள நோயாளிகள் மற்றும் பேறுகால தாய்மார்கள் பாதிக்கப் பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து"

விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு, திரு. ஆ. நடராசன், திரு. பெ. சு. திரு. வேங்கடம், திரு. கே. உச்சி, திரு. கே. ரமணி, திரு. ஆர். வெங்கிடு, திரு. ஆர். கிருஷ்ணன், திரு. பி. சொரணம், திரு. டி. ஞானசிகாமணி, திரு. ஆர். உமாநாத், திரு. எஸ். சிவசாமி, திரு. ஒ. சுப்பிரமணியம், திரு. மு. அம்பிகாபதி, திரு. நன்னிலம் மா. மணிமாறன், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எம். ஏ. லத்தீப், திரு. எஸ். அழகர்சாமி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது [illegible] சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 21 ஆம் நாள் புதன்கிழமையன்று 1 மணி அளவில் கோவை மருத்துவக் கல்லூரி-மருத்துவ மனையில் ஒரு வேலை நிறுத்தத்தை துவங்கியிருக்கிறார்கள். அந்த வேலை நிறுத்தத் திற்கான காரணம், நம்முடைய கிணத்துக்கடவு சட்ட மன்ற உறுப்பினர்— தொலைபேசியில் சொன்னபொழுது, தான் சொன்ன சீனியர் ஹவுஸ் சர்ஜன் ஒருவரை நியமிக்கவில்லையென்பதால் அந்த டீன் அவர்களை தரக்குறைவாகப் பேசிய காரணத்தால், அந்த அறையிலேயிருந்த அதிகாரிகள் இந்த விவரத்தை அங்கே யுள்ள ஊழியர்களிடத்திலே எடுத்துச் சொன்ன காரணத்தினால் அங்கே ஒரு வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. இதன் காரணமாக, ஆயிரக்கணக்கான நோயாளிகள் மிகுந்தத் தொல் லைக்குள்ளாகி வருகிறார்கள். அதன் காரணமாக, தாய்மார்கள், பேறு காலத் தாய்மார்கள் மிகுந்த தொல்லைக்கு ஆளாகியிருக் றார்கள். இந்த வேலை நிறுத்தத்தை அரசாங்கம் உதா சீனமாகக் கருதி வருகிறது. 72 மணி நேரமாக வேலை நிறுத்தம் நடைபெற்ற பின்னரும், கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் பேச்சு வார்த்தை நடத்தியதற்குப் பின்னாலும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளவில்லையென்ற காரணத்தினாலும், அந்தப் பகுதி யிலே இருக்கிற டாக்டர்களும் மருத்துவக் கல்லூரி மாணவர்களும், அங்கேயிருக்கிற ஊழியர்களும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட் டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இது ஒரு பிரச்னையாக இருக்கிறது. ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள் அதிகாரத்திலே தலை தலையிடுவதும், தங்களுடைய இஷ்டமாக அதிகாரத்திலே தலை யிட்டு, காரியங்களைச் செயல்படுத்தி வருவதனால், இந்தப் பிரச்னைபற்றி பேச அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல் முதலமைச்சரவர்களுடைய அலுவலகத்திலே யிருந்து விசாரணை நடந்து, ஏன் இந்தப் பிரச்னை, என்ன பேசினார் என்று கேட்பதற்குப் பதிலாக, அங்கேயிருக்கிற அதிகாரி களோடு, கோவை மருத்துவக் கல்லூரி அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர் பேசியது எப்படி வெளியானது என்பதை விசாரித்திருக்கிறார்கள். இது தவறான நடவடிக்கை என்பதைத் தெரிவித்துக்கொள்வ தோடு நேற்றையதினம் இரவு ஒரு அறிக்கை விடப்பட்டது. இந்தச் சட்டமன்ற உறுப்பினர் வெளியிட்ட அறிக்கை அது. அரசாங்கத்தைக் கவிழ்க்க அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய் கிறார்கள் என்று அறிக்கை விட்டது, கோவை தினத்தந்தி பத்திரிகையிலே இன்றைக்கு வந்திருக்கிறது. அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு இந்த நடவடிக்கை என்று பத்திரிகையிலே அறிக்கை கொடுத்திருப்பதன் காரணமாகத்தான் (மணியடிக்கப் பட்டது)..... எனவே பத்திரிகையிலே தகவல் கொடுத்திருக்கிறார் கள். அதற்குப் பின்னாலே, தகவல் வரவில்லையென்று மாண்பு

[திரு. ஆ. நடராஜன்] [1979 பிப்ரவரி 23

மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இங்கே
தெரிவித்திருக்கிறார்கள். அதே நேரத்திலே அவருடைய
அலுவலகத்திலேயிருந்து பேசியவர் சட்டமன்ற உறுப்பினர்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தகவல்களை
விசாரிப்பதற்கும் அதைப் போலவே ஏற்கனவே பல சமயங்
களிலே இந்தச் சட்டமன்ற உறுப்பினர் (மணியடிக்கப்பட்டது)
இப்படி நடந்திருக்கிற காரணத்தால், சபையின் இதர அலுவல்
களை ஒத்திவைத்து, இந்தப் பிரச்னைபற்றி விவாதிக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. கு. ரமணி :</u> தலைவரவர்களே, கோவையில் 21-ம்
தேதி அன்றைக்கு, கோவை மருத்துவக் கல்லூரியினுடைய 'டீன்'
நமது முதலமைச்சர் அவர்களால் மிகவும் நம்பிக்கையோடு
செங்கல்பட்டு பொது மருத்துவ மனையில் இருந்து, கோவை
ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து இருக்கிற நல்ல ஊழியர், அவர்
அங்கே டீன் ஆக இருக்கிறார். அவருக்கு இங்கே ஒரு அமைச்
சருடைய அறையில் இருந்து டெலிபோன் கால், அது இங்கே
நம் எல்லோருக்கும் தெரிந்த கந்தசாமி அவர்கள்
அனுப்பியதாக எனக்குச் செய்தி. அந்தச் செய்தியில் உடனடி
யாக அங்கே இருக்கிற ஜகதீசன் என்ற ஒரு ஹவுஸ் சர்ஜன்,
அவரை சீனியர் ஹவுஸ் சர்ஜன் என்று ஆக்க வேண்டும் என்று
கேட்க— அது விதிப்படி, சீனியாரிட்டியின் விதிப்படிதான்
கிடைக்க முடியும் என்று சொல்ல........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவு செய்து சொல்
கிறேன்—நீங்கள் அதன் உள்ளே, விஷயத்தின் உள்ளே போகிறீர்
கள்.

<u>திரு. கே. கந்தசாமி :</u> தலைவரவர்களே, நான் யாரிடமும்
தொலைபேசியில் பேசவில்லை—இங்கே கந்தசாமி என்று சொல்
கிறார்கள்.

<u>திரு. கு. ரமணி :</u> நம் கந்தசாமி அவர்கள் கவலைப்பட
வேண்டாம், ஆளும கட்சியைச் சேர்ந்த கந்தசாமி அவர்களை
சொன்னேன்.

<u>திரு. கி. மனோகரன் :</u> அதென்ன நம் கந்தசாமி ?

<u>திரு. கு. ரமணி :</u> நம் அவை உறுப்பினர் என்று சொல்
கிறேன். அவரும் நம் உறுப்பினர், நமது நண்பர்தான், அவரும்
எனக்கு வேண்டியவர்தான், ஆனால் அவர் ஆளும் கட்சியைச்
சேர்ந்தவர், இவர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் என்று சொன்
னேன். அவருடைய மனத்தை புண் படுத்த வேண்டும்

1979 பிப்ரவரி 23] [திரு. கு. ரமணி]

என்று சொல்லவில்லை. அவர் போனில் பேசும்போது உங்க
ளால் இது கூட செய்ய முடியாதா என்று கேட்டிருக்கிறார்.
டீன் மறுக்கவே "உங்கள் தகப்பனார் சொத்து போய்விடுமா
என்று கேட்டுள்ளார்" — அது சட்டப்படி தப்பு என்று சொல்
கிறேன். இவர் தொலைபேசியில் பேசும்போது — அங்கே
அருகில் டாக்டர்கள் மற்ற ஹவுஸ் சர்ஜன்கள் இருந்திருக்
கிறார்கள். இது அவர்களுடைய மனத்தை மிகவும் புண்படுத்தி
யிருக்கிறது — இந்த விஷயத்தை எனக்கு எங்கள் கட்சியினர்
சொன்னார்கள். இதனால் மனவருத்தம் அடைந்த மாணவர்கள்,
மருத்துவர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இந்த
விஷயத்தை அவர்கள் அதிகாரிகளிடத்தில் சொன்னால் அதிகாரி
கள் அவர்களை தனியாக கூப்பிட்டு மிரட்டப்படுகிறார்கள்.
மேலும் இந்தப் பிரச்னையை....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இன்னும் 6 பேர் பேச
வேண்டியிருக்கிறது. திரு. கு. ரமணி அவர்கள் பிரச்னையிலே
அதன் உள்ளே போகிறீர்கள்.....

<u>*திரு. கு. ரமணி :</u> ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில்
மாணவர்கள் முழுவதும், ஹவுஸ் சர்ஜன்கள் எல்லோரும் மற்ற
டாக்டர்கள் ஊழியர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்
கிறார்கள். ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து மருத்துவம் பெற
வேண்டிய ஒரு நல்ல நிலைமையில் செயல்பட வேண்டிய அந்த
ஆஸ்பத்திரி வேலை செய்யவில்லை. அந்த ஆஸ்பத்திரியின் டீன்
மிகவும் மன வேதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். இப்படிப்
பட்ட தலையீடு வராமல் தடுப்பதற்கு, விவாதம் நடத்தி முடிவு
செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் விவர
மான முறையில் அவையில் சொன்னார்கள். இந்த நிலை குறிப்
பாக கோயம்புத்தூரில் மட்டும் அல்லாமல், தமிழகம் முழுவதும்
ஒரு பதட்டமான நிலைமை உருவாகியிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தாங்கள் அந்தப் பிரச்
னையை எடுத்துக் கொண்டீர்கள், அதைப் பற்றி பேசுங்கள்
போதும்.

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> குறிப்பாக கோயம்புத்தூரில்
டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இதனால்
ஆயிரக்கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
இப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாகாமல் தடை செய்திருக்க
வேண்டும். அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தியிருக்க
வேண்டும். அதை விட்டு விட்டு அதன் மீது ஆய்வுக்கான
முடிவை நாம் கல்லூரிகளிலே எடுத்திருக்கிறோம். இந்த

[திரு. மு. அம்பிகாபதி] [1979 பிப்ரவரி 23

விஷயத்திலே திரு ஸ்டீபன்ஸன் என்பவர் 29—1—1979 அன்று 1-15 மணிக்குப் போன் பண்ணினார் என்று சொல்லப்படுகிறது. போனில் பேசியிருப்பவர் ஆளும் கட்சியைச் சேர்ந்த திரு. கந்தசாமி என்று சொல்லப்படுகிறது. இந்த விஷயத்தை திரு. கிருஷ்ணன் எனக்கு கோயம்புத்தூரிலிருந்து போனில்கூறினார்...

[பிற்பகல் 1-10]

திரு. பி. முசிரிபுத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்); தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொலைபேசியில் செய்தி வந்தது என்று சொன்னார்கள், அவர் சொன்ன அந்த நபர் தான் செய்தி கொடுத்தாரா என்பதை எப்படி தெரிந்து கொள்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அவையில் நடைபெறுகின்ற விவாதத்தில் வெளியே இருப்பவர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் தகவல் வந்தது என்று மட்டும் சொன்னால் நல்லது,

திரு. மு. அம்பிகாபதி; சரி, தகவல் வந்தது என்றே வைத்துக் கொள்வோம், அதை சுமுகமாக தீர்த்து இருக்கலாம். கிட்டத்தட்ட 11-45 மணி நேரமாக அங்கே மருத்துவர்கள் வேலை நிறுத்தம் செய்து இருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் இது ஒரு பயங்கரமான சூழ்நிலையை எற்படுத்தியருக்கிறது. ஆகவே இந்த பிரச்னை குறித்து விவாதிக்க, மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து என்று இப்போது சொல்ல முடியாது, அது தான் முடியப் போகிறதே, அதனால், அமைச்சரின் விளக்கத்தை அறிந்து கொள்கிற வகையில் விவாதிக்க எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன்; பேரவைத் தலைவரவர்களே. கோவை மருத்துவக் கல்லூரி ஆஸ்பிடலில் நடைபெற்று வருகிற வேலை நிறுத்தப் போராட்டம் பற்றி எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் விரிவாகப் பேசி விட்டார்கள். இந்த வேலை நிறுத்தம் ஏன் ஏற்பட்டது என்ற அடிப்படைக் காரணத்தை அரசுத் தரப்பில் அறிந்து அதற்கான நிவாரணம் காண வேண்டும் என்ற அடிப்படையிலும் வேறு வேலை நிறுத்தங்களில் உள்ளது போல் மெத்தனமாக இருக்கக்கூடாது என்ற அடிப்படையிலும் இதைக் கொண்டு வந்து இருக்கிறோம். காரணம் என்னவென்றால், தினசரி 4,000 நோயாளிகள் மருத்துவ வசதி பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது. மேலும் அந்த மருத்துவர்களுக்கு சரியான நிவாரணம் அளிக்கப்படவில்லையென்றால் தமிழகம் முழுவதும் வேலை நிறுத்தம் செய்யும் அபாயகரமான சூழ்நிலை ஏற்படும். இந்தப் பிரச்னை காட்டுத் தீ போல் பரவுகிற அபாயம் இருப்பதால் அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து இது சம்பந்தமாக விரிவாக விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 23]

திரு. ஜே. ஜேம்ஸ்; பேரவைத் தலைவரவர்களே, கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்ச்சி காரணமாக இன்றையதினம் கோவை மருத்துவ மனையில் உள்ள மருத்துவர்களும், நர்சுகளும், மற்றும் நான்-மெடிகல் ஸ்டாஃப் அனைவரும் வேலை நிறுத்தம் செய்து இருக்கிறார்கள். அதோடு கூட நோயாளிகளுக்குச் சமையல் செய்து கொடுக்கிற சமையல்காரர்கள் கூட வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருப்பதாக செய்தி வந்து இருக்கிறது. மேலும், தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்குள்ள சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு ஆதரவாக மாணவர்களும் கலந்து கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, இன்று இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாக வடிவெடுத்துக்கொண்டு இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? அதைப் பற்றி நான் விரிவாக கூறவிரும்பவில்லை. இணைத்துக்கட்டு இருந்தாலும் ஆளும் கட்சியைச் சேர்ந்த கல்லூரியின் பெரிய அதிகாரி சட்ட மன்ற உறுப்பினர் மருத்துவக் கல்லூரியின் பெரிய அதிகாரி தான் விரும்பியவரோடு நடந்து கொண்ட பெரிய முறைகேட்டால், அப்பாய்ண்ட் ஒருவரை அந்த அதிகாரி அப்பாயின்ட் செய்யாமல், அந்த அதிகாரியைத் மெண்ட் ஆர்டர் கொடுக்காமல் இருந்ததால், ஆகவே, ஆளும் தரக்குறைவாக பேசியதாகக் கூறப்படுகிறது. மற்றவர்களும் நிர்வாகத் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும், என்பதை இந்த தில் எந்த அளவிற்குத் தலையிடுகிறார்கள் ஆகவே, எந்த அளவிற்கு நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது. சீர்கேடு ஏற்படுவதற்கு அரசுத் அரசாங்கத்தில், நிர்வாகத்தில் சேர்ந்தவர்கள் காரண தரப்பில் இருக்கின்ற ஆளும் கட்சியைச் இங்கே சுட்டிக்காட்ட மாக இருக்கிறார்கள் என்பதை நான் விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக முதலமைச்சர் அமைச்சரோடு தொடர்பு கொண்டு பேசியபோது முதலமைச்சர் கூட இந்த நிகழ்ச்சிக்கு ஒரு ஆறுதல் தருவதற்கு பதிலாக, பாதிக்கப்பட்ட அதிகாரிக்கு ஆறுதல் கூறுவதற்கு பதிலாக, அந்த அதிகாரியைக் கண்டித்து, இந்த வேலை நிறுத்தத்திற்குக் காரணம் டீன்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற அச்சத்தை, திரட்டை கூறியிருக்கிறார்கள் என்றால் இந்த அரசில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு இந்த மாநிலத்தில் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதையும் நான் பணிவோடு கூறிக்கொள்கிறேன். ஆகவே தான் இது முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. நோயாளிகளுக்கு மருத்துவம் பெறுவதற்கு வசதி குறைவு ஏற்பட்டு இருக்கிறது. மாநிலம் முழுவதும் இந்தச் சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை நாம் உணர்ந்து, இந்தப் பிரச்னையை உடனடியாகத் தீர்ப்பதற்கு, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் ஏற்பட்டிருக்கிற இந்தப் பிரச்சனையினுடைய தன்மை நம்மை விவேகத்தின்பால் இழுத்துச் செல்கிறது என்று நான் கருதுகிறேன். காரணம் இந்தப் பிரச்சனையில் குறிப்பிடப்பட்டிருப்பவர்கள், ஒரு புறம் சட்ட மன்ற உறுப்பினர், இந்த அவையிலே இருக்கக்கூடியவர் ; இன்னொருபுறம் ஒரு மருத்துவக் கல்லூரியினுடைய டீன் ஆக இருக்கக்கூடியவர். இரண்டுபேரும் பொறுப்பானவர்கள். சட்டமன்ற உறுப்பினர் ஏதோ சொன்னார் என்பதற்காக அது தவறு என்ற அடிப்படையில் டீன் அவர்களால் வருத்தம் தெரிவிக்கப்பட்டக் காரணத்தால் அங்கே இருக்கிற பணியாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர் யாரும் அதிகாரிகளிடத்திலே கோரிக்கை வைக்கக்கூடாதா என்றெல்லாம் கூட கேள்விகள் எழுகின்றன. ஆனால் அப்படி வைக்கும்போது எந்த முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்பதுதான் பிரச்சனை. தவறான முறையில் நடந்திருக்கிறார் என்பது குற்றச்சாட்டு. அது விசாரிக்கப்பட வேண்டும். அப்படியே விட்டுவிட்டால் சட்ட மன்ற உறுப்பினர் ஒருவரை மட்டுமல்ல ; எல்லோரையும் பாதிக்கும். ஆகையால் அப்படி நடந்ததா என்று விசாரிக்க வேண்டும். அதை இந்த அவைக்கும் முறையாக அறிவிக்க வேண்டும். அப்போதுதான் எழுந்துள்ள பிரச்சனை தீரும் ; அது இந்த அவையின் கௌரவத்தையும் உயர்த்துவதாக இருக்கும்.

அதேமாதிரி, டீன் அவர்கள் தன்னுடைய பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றி இருக்கிறாரா ? அப்படி டீன் இடத்தில் சொல்லப்பட்டிருந்தால்— நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது முறையாக அவரிடம் வருத்தம் தெரிவிப்பதில் தவறு இல்லை. சம்பந்தப்பட்ட உறுப்பினரும் வேறு யாராவது சம்மந்தப்பட்டிருந்தால் அவர்கள் கூட வருத்தம் தெரிவித்துக் கொண்டால் அதனால் தவறு இல்லை, அவர்களுடைய கௌரவத்தை உயர்த்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்பாக வேலை நிறுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. இது சாதாரண தொழிற்சாலை வேலை நிறுத்தம் போல் அல்ல. இங்கே வேலை நிறுத்தம் ஏற்பட்டால் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். மேலும் நடந்த சம்பவத்தை முறையாக அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை அங்கே இருக்கின்ற ஆட்சித் தலைவராக இருந்தாலும் அல்லது வேறு யாராக இருந்தாலும் அவர்களுக்கு இருக்கிறது ; அவர்கள் அதைச் செய்யத் தவறி இருக்கிறார்கள். காலையில் அமைச்சரவர்கள் முழுத் தகவல் இல்லை, எனக்கு முழுத் தகவல் வரவில்லை என்று சொன்னார்கள். அப்படி செய்தி வரவில்லை என்று சொன்னால் அது நல்லதல்ல. பொறுப்புள்ளவர்கள்

முறையாக அரசுக்குத் தெரிவிக்கவில்லை என்பது வருந்தத் தக்கது ; அப்பேர்ப்பட்ட நிலையை அனுமதிக்கக்கூடாது. மற்ற இடங்களுக்கும் இது பரவாமல் தடுக்கக்கூடிய பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு. ஆகையால் பொறுப்பாக எல்லாவற்றையும் விசாரிக்க வேண்டியவர்களாக நாம் இங்கே இருக்கிறோம். ஆகையால் இந்த சபையின் இதர அலுவல்களை இன்று இல்லாவிட்டாலும் நாளைக்கு (சிரிப்பு) ஒத்திவைத்து, ஏனென்றால் இப்போது ஒத்திவைக்க நேரம் இல்லை ; அதனால் நாளைக்காவது ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.— இங்கே எழுப்பப்பட்டிருக்கிற பிரச்சனையில் இந்த அவையிலுள்ள உறுப்பினரும் சம்பந்தப்பட்டிருப்பதால் அந்த உறுப்பினரும் தன்னுடைய கருத்தைச் சொல்ல சந்தர்ப்பம் தரவேண்டும். திரு. கா. வே. கந்தசாமி அவர்கள் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

*திரு. கா. வே. கந்தசாமி.— மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் என்னைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருப்பதால் ஒரு தன்னிலை விளக்கத்தை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் 21–2–1979 அன்று கோவைக்கோ அல்லது மற்ற இடங்களுக்கோ யாரிடத்திலும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவில்லை. நான் எந்த டெலிபோனிலும் பேசவில்லை. யாரிடத்திலும், டீன் இடத்திலோ அல்லது மற்றவர்களிடத்திலோ இதற்கு முன்னாலும், எம்.எல்.ஏ. ஆனதற்குப் பின்னாலும் கோவை மருத்துவக் கல்லூரிக்கோ அல்லது கோவை மருத்துவமனைக்கோ சென்று எதையும் வலியுறுத்தவில்லை. அப்படி இருந்தும் என்மேல் ஏதோ ஒரு அபாண்டமான குற்றச்சாட்டை சாட்ட வேண்டுமென்று சொல்லி, என்பேரில் அவதூறான ஒரு குற்றச்சாட்டு இருப்பதாகச் சொல்லி தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் நான் நேற்றையதினமே 'தினத்தந்தி' யில் என்னுடைய மறுப்பை கொடுத்திருக்கிறேன். நான் யார் மீதும் அவதூறாகச் சொல்லவில்லை என்று இம்மாமன்றத்திலே தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1–20]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, 21–2–79 அன்று மாண்புமிகு சட்டமன்ற கிணத்துக்கடவு தொகுதி உறுப்பினர் திரு கே. வி. கந்தசாமி அவர்கள் டாக்டர் ஜெகதீசன் என்ற மருத்துவ பட்டதாரிக்கு சீனியர் ஹவுஸ் சர்ஜன்ஷிப் கொடுக்குமாறு சென்னையிலிருந்து கோவை மருத்துவக் கல்லூரி முதல்வர் அவர்களிடம் தொலைபேசி மூலம்

தொடர்பு கொண்டதாகவும், முதல்வர் அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே தகாத வார்த்தைகளை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பயன்படுத்தியதாகவும், அதை அருகில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த அச்சுதன், சண்முகம் என்ற இரு இளநிலை உதவியாளர்களும் ஒரு சமையற்காரரும் இதை டாக்டர்களிடம் பரப்பி இருக்க வேண்டும் என்றும், அதனால் டாக்டர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளனர் எனவும் அறிகிறேன்.

மாண்புமிகு பேரவை உறுப்பினர் பற்றி இது உள்ளதால் குறிப்பிட்டு குற்றம் சாட்டுவதற்கு முன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற சட்டப் பேரவை விதியின் அடிப்படையில் மாண்புமிகு திரு கே. வி. கந்தசாமி அவர்களின் விளக்கத்தையும் பெற்றுள்ளேன். அதன்படி 21–2–79 அன்று கோவையில் யாரிடமும் தொலைபேசி மூலம் சென்னையிலிருந்தோ மற்ற இடத்திலிருந்தோ கோவை மருத்துவ மனைக்கோ, கல்லூரிக்கோ தொடர்பு கொள்ளவில்லை என மறுத்துள்ளார்.

எனினும் தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு யார் பேசினார்கள் என்பது பற்றி அரசு விசாரிக்கும். மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை 22–2–79 மாலை 2 மணி அளவில் மருத்துவர்கள் சங்க நிர்வாகிகள் திரு. கிருஷ்ண குமார், திரு. சுந்தரம், திரு. முத்துச்சாமி, திரு. பைரவநாதன் ஆகியோர் சந்தித்து சம்மந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர் நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் இத்தகைய சம்பவங்கள் இனி நடக்காது என்று உறுதி அளிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்கள் நலனை உத்தேசித்து மருத்துவர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டதுடன் இக் கோரிக்கை பற்றி அரசுக்கு அறிக்கை அனுப்புவதாக தெரிவித்துள்ளார்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில்--

(1) தீவிர சிகிச்சைப் பிரிவு.

(2) பிரசவப் பிரிவு.

(3) அவசரப் பிரிவு

(4) விபத்துக்குள்ளானோர் சிகிச்சைப் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

கோவை போன்ற பெரு நகரத்தில் மருத்துவ வசதிக்கு குறைவில்லை என்றாலும் கூட அரசு மருத்துவ மனை இயங்க வேண்டிய அவசியத்தை கருதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள

மருத்துவர்கள், உதவி மருத்துவர்கள், ஏனைய மருத்துவ பணியாளர்கள் அனைவரும் வேலைக்குத் திரும்புமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. எனவே அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். இதனைக் கொண்டு வந்தது நானாக இல்லாத காரணத்தால் விவாதத்திற்குள் போக விரும்பவில்லை. ஒரு சிறு விளக்கம் தான் கூற விரும்புகிறேன்.

இது குறித்து விசாரிக்கப்படும் என்ற அளவிலே மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். ஏதோ அரசு அளவில் விசாரிக்கப்படும் என்ற நிலை இல்லாமல் ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரிக்கின்ற ஒரு சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்துமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இதே சட்டமன்ற உறுப்பினரைப் பற்றி ஏற்கனவே ஒரு புகார் வந்து அவர் மீது வழக்கு தொடரப் பட்டிருக்கிறது என்பது நாடறிந்த ஒரு விஷயமாகும். மேலும் இப்போது வந்திருக்கின்ற இந்தப் பிரச்சினையில் தொலைபேசி சென்னையிலிருந்து பயன்படுத்தப்பட்டதா அல்லது சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுடைய அறையிலிருந்தே பயன்படுத்தப் பட்டதா, எப்படி எங்கிருந்து வந்தது என்பதை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரிப்பதுதான் நல்லது என்று கருதுகிறேன். ஆகவே அவ்வாறு ஒரு நீதிபதியைக் கொண்டு இப்பிரச்சினை விசாரிக்கப்படும் என்று மாண்புமிகு அவை முன்னவரவர்கள் ஒரு உறுதி மொழியை அளிப்பாரேயானால் அது இந்த வேலை நிறுத்தத்தை நிறுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட ஒரு உறுதி மொழியை நம்முடைய முன்னவரவர்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இ. மனோகரன் : பேரவைத் தலைவலரவர்களே, தன்னிலை விளக்கம் என்ற பேரால் சர்ச்சைக்கு உருவாக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் ஒரு அறிக்கையையும், அதையொட்டி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்ததற்கு பிறகு நிச்சயமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதி அளித்ததற்குப் பிறகு பல சந்தர்ப்பங்களில் என்னை நம்பியே பழக்கப்பட்ட நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு அப்படிப்பட்ட ஒரு விசாரணை தேவை இல்லை என்று நான் சொன்னால் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பி நான் அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க தேவை இல்லை என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

8. அமைச்சரின் அறிக்கை.

சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலை வேலைநிறுத்தம் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, இங்கே கேள்வி நேரத்தை யொட்டி சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களையும் கூட்டி அதற்கு உடனடியாக பரிகாரம் காண்பதற்காக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். முதல் அமைச்சரவர்கள் ஊரில் இல்லை என்று நான் கருத்து தெரிவித்தவுடன் திரு சங்கரய்யா அவர்கள் எழுந்து கூட்டுப் பொறுப்பாகத் தானே செயல்படுகிறீர்கள், ஆகவே எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து நாமெல்லாம் உட்கார்ந்து பேசுவோம் என்று கேட்டுக் கொண்டார்கள். அதை ஏற்றுக் கொண்டு 12 மணிக்கு அந்த அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட நாங்கள் அனைவரும் கூடினோம். அதிலே சில எண்ணங்கள் பறிமாறப்பட்டன. கோரிக்கைகள் வைக்கப் பட்டன. விளக்கங்கள் தரப்பட்டன. அங்கே எடுத்துக் கொண்ட முடிவு நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக டெல்லியில் இருக்கிற முதல் அமைச்சரோடு தொடர்பு கொண்டு அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களைக் கூட்டி நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேச வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றக் கட்சித் தலைவர்கள் தந்த கருத்துக்களையெல்லாம் நமது அமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டு அந்த அடிப்படையில் டெல்லியில் இருக்கிற முதல் அமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்கள். நமது முதல் அமைச்சர் அவர்கள் உடனடியாக நிர்வாகத்தினரை அழைத்து நீங்கள் பேசுங்கள் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க நாளைக் காலை 11-30 மணிக்கு நமது அமைச்சர் அவர்கள் நிர்வாகத்தினரை சந்தித்துப் பேச இருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தை வெற்றி பெற வேண்டுமென்று நீங்கள் அனைவரும் விரும்புவது போல் நானும் விரும்புகிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

100. 1977–78 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 7-வது ஆண்டறிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.].

101. 1974–75 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

102. 1974–75 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டு கணக்குகள் [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

103. 1975–76 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

104. 1975–76 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டு கணக்குகள் [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*42. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 8/1979).

*43. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்டத்தின் முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1979).

*44. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1979).

*22-2-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1979 பிப்ரவரி 24

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

I. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

ஆர். எஸ். மங்கலம் ஆயக்கட்டு பகுதிகளில் வரி வசூல்

*வினா எண் 122— திரு. செ. சிவசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976–77-ல் முகவை மாவட்டம் ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்கு வைகை தண்ணீர் விட்டதற்காக ஏக்கர் ஒன்றுக்கு தண்ணீர் வரி ரூ. 5 வீதம் போடப்பட்டு பாதிக்கு மேல் வசூல் செய்யப்பட்டதா—

(ஆ) தண்ணீர் விட்டது உண்மையா?

(இ) வசூலிக்கப்பட்ட மொத்த அபிவிருத்தி வரி எவ்வளவு?

(ஈ) தற்போது வசூல் எவ்வளவு செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) கேட்புத் தொகை ரூபாய் 55,493·77-ல் ரூபாய் 7,541·87 வசூலிக்கப்பட்டது. பிறகு, 9—9—77 அன்று முகவை மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த அறிவுரைக்கிணங்க வசூலிப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இல்லை.

(இ) அபிவிருத்தி வரி அல்லது மேம்பாட்டு வரி (Betterment வசூலிக்கப்படவில்லை.

(ஈ) இவ் வினாவிற்கு இடமில்லை.

சம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அங்கு ரெமிஷன் தரவேண்டும் என்று கேட்டு, பல வருடங்களாக கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் ஆர். எஸ். மங்கலம் ஏரிக்கு தண்ணீர் விட்டதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வசூல் செய்வது வெந்த புண்ணில் வேல் கொண்டு பாய்ச்சுவது போல் இருக்கிறது. விவசாய மக்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் என்று வசூலிப்பது மிகவும் பாதகமானது.

அது மட்டுமல்ல. இந்த ஆர். எஸ். மங்கலம் ஏரியிலிருந்து 7,000 ஏக்கர்களுக்கு தண்ணீர் பாய வேண்டும், சுமார் 15 கிலோ மீட்டர் நீளம் கொண்ட பெரிய ஏரி, இப்படிப்பட்ட ஏரி இப்போது சரியானபடி பராமரிக்கப்பட்டு வராமல் இருப்பதால் இந்த ஏரியிலிருந்து நல்ல முறையில் விவசாயிகள் தண்ணீர் பெற முடியவில்லை. இப்படிப் பட்ட நிலையில் விவசாயிகளிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வசூலிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இந்த ஏரியிலிருந்து விவசாயிகளுக்கு தண் ரீர் வராததற்கு காரணம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி : தண்ணீர் வராததற்குக் காரணம் இந்த ஏரியில் போடப்பட்டிருக்கிற 'ஃபாலிங் ஷட்டர்ஸ்' சரியாக வேலை செய்யாமல் இருப்பதால் தண்ணீர் எல்லாம் வெளியே போய்விடுகின்றது. இப்படிப்பட்ட நிலையில் தண்ணீர் கொடுத்ததற்காக விவசாயிகளிடம் ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வரி வசூலிப்பது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வைகை ஆற்று சீரமைப்புத் திட்டத்தின் கீழ் எந்தெந்த பகுதிகளில் எல்லாம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறதோ அந்தப் பகுதிகளில் உள்ள ஆயக்கட்டுகளில் ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வரி என்று போடப்பட்டிருக்கிறது. முதலில் போடப்பட்ட இந்தத் திட்டம் 1977-க்குள் இந்த வேலை முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த முறையில் ஆர். எஸ். மங்கலம் ஏரியிலுள்ள ஆயக்கட்டுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வசூலிப்பது என்று ஆரம்பித்த வசூலிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு முன்பு போடப்பட்ட திட்டம் பூராவும் நிறைவேறாத காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆர். எஸ். மங்கலம் பகுதியில் உள்ள ஆயக்கட்டுக்காரர்களிடமிருந்து வசூல் செய்து வந்தது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, ஐந்து ரூபாய் ஏக்கர் ஒன்றுக்கு வசூலிப்பது என்று அரசாங்கம் ஆர்டர் போட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது அது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். தற்காலிகமாக இல்லாது பஞ்சப் பகுதியாக இருக்கின்ற பகுதிகளில் நிரந்தரமாக இப்படிப்பட்ட தீர்வை வசூலிப்பதை நிறுத்தி வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருடம் எல்லாம் பஞ்சம் வரக்கூடாது என்பதற்காகத்தான் வைகை சீரமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த வேலை முடிந்ததும், ஆர். எஸ். மங்கலம் ஏரிக்குத் தேவையான தண்ணீரை விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யும். மேலும் நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர் விடுவதாக இருந்தால்தான் தண்ணீர் தீர்வை வசூலிக்கப்படும். இயற்கையின் கோளாறு காரணமாக தண்ணீரை பயன்படுத்த முடியவில்லை என்றோ தண்ணீர் கிடைக்கவில்லை என்றோ அல்லது தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை என்றோ இருக்குமானால் அந்தப் பகுதிகளில் தண்ணீர் தீர்வை வசூல் செய்யக்கூடாது என்று மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்களில் தண்ணீர் கிடைக்கவில்லை அல்லது தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை என்றோ வருகின்ற இடங்களில் தண்ணீர் தீர்வை வசூலிக்கப்படுகிறது என்ற நிலை எங்காவது இருக்குமானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக அதை நிறுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இப்படி பஞ்சப் பிரதேசத்திலே வசூல் செய்யப்பட்ட ரூபாய், மீண்டும் விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுமா? இந்தக் கண்மாய் ரிப்பேர் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கண்மாய் நல்ல முறையிலே ரிப்பேர் செய்யப்படும். ஆனால் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்தை அரசு எடுத்துக் கொள்ளாது. முன்னால் இருந்த அரசு இராமநாதபுரம் மாவட்டத்தில், இன்னும் சில சீர்திருத்த வேலைகள் செய்வதற்காக வசூல் செய்தது. அதற்குப் பின்னால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாததால், திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்தது. எனவே, விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படுகின்ற பணம் அவர்கள் கணக்கில் அரசு வைத்து, அவர்களுக்காகவே பயன்படுத்தும். இல்லாவிட்டால், அந்தப் பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

[1979 பிப்ரவரி 24

திரு. ஓ. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1976–77ஆம் ஆண்டில் இது நடந்தது. 1976–77ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் வெள்ளாமை வராத காரணத்தால், வரியைத் தள்ளுபடி செய்கின்ற நேரத்தில், தண்ணீர் வரி வசூல் செய்திருக்கிறார்கள். அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா? அடுத்து, வைகை மேம்பாட்டுத் திட்டத்தினால், தண்ணீர் பாய்ச்சப்பட்டது என்று சொல்லுகிறார்கள் அமைச்சர் அவர்கள். ஆனால், புதிதாக சேர்க்கப்பட்ட 40,000 சொச்சம் ஏக்கரில் ஆர்.எஸ். மங்கலம் கண்மாய் பகுதியும் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எஸ். மங்கலம் ஏரிப் பகுதி ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டதன் காரணமாகத்தான் ஐந்து ரூபாய் அதனுடைய ஆயக்கட்டு நிலங்களுக்கு விதிக்கப்பட்டது. ஆனால் நான் முதலிலே தெரிவித்தபடி மேம்பாட்டுத் திட்டம் முடிவடையாத காரணத்தால், ஆர்.எஸ். மங்கலம் கண்மாயில் தேவையான தண்ணீர் வராத காரணத்தால், இந்த ஆயக்கட்டிலே தண்ணீர் பாய்ச்சாத காரணத்தால், வசூலிக்கப்பட்டது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் வசூல் செய்ய வேண்டியது ரூ. 50,000 சொச்சம். வசூல் செய்தது ரூ. 7,000 சொச்சம். அந்த வசூல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் அரசிடம் அவர்கள் கணக்கிலே இருக்கிறது.

புறம்போக்கு நில ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.

*வினா எண். 123.—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு வாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களை அப்புறப்படுத்த என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது ?

(ஆ) இம்முறைகளை மாற்றி ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அவை யாவை ?

1979 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :
(அ) புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தவர்களை
அப்புறப்படுத்த, தமிழ்நாடு 1905 ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்பு
சட்டம், மற்றும், தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு பொது வளவுகள்
(அனுமதி இல்லாத அனுபோகதாரர்களை வெளியேற்றுதல்)
சட்ட விதித் துறையின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்
படுகிறது.

(ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே,
ஏழை விவசாயிகளுக்குப் பணக்காரர்கள் ஆற்றுப் புறம்போக்கு,
குளத்துப் புறம்போக்கு, பாட்டைப் புறம்போக்கு ஆகிய நிலங்
களை ஆக்கிரமிப்பு செய்து சொல்லொணா துயரம் கொடுத்துக்
கொண்டு வருகிறார்கள். அவர்களை வெளியேற்றுவதற்காக
நடவடிக்கை எடுக்கப்படுகின்ற நேரத்திலே, மிகப் பழைய
சட்டங்களை வைத்துக் கொண்டிருப்பதன் காரணமாக, அவர்
களுக்கு மிகுந்த நேரம் கொடுக்கப்பட்டு, அதனால் நடவடிக்கை
காலதாமதம் ஆகிறது. அதனால் ஏழைகள் பாதிக்கப்படுவதை
உணர்ந்து, உடனடியாக அந்தச் சட்டங்களை மாற்றியமைத்து,
இத்தகைய ஆக்கிரமிப்பு செய்தவர்கள் மீது உடனடியாக நடவடி
க்கை எடுக்கப்படுமா? உடனடியாக ஆக்கிரமிப்பை நீக்குவதற்கும்
நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவது
என்றால், அவர்களுக்கு முதலிலே அறிவிப்பு கொடுத்து, பிறகு
தான் வெளியேற்றப்பட வேண்டுமென்று சட்டம் இருக்கிறது.
அதன்படி ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதற்கு சம்
பந்தப்பட்ட அதிகாரிகள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.
விரைவிலே அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சொந்தத்தில்
குடியிருப்பு இல்லாத, ஏழை, தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு
ஏற்கனவே விவசாய நிலம் அளிக்கப்பட்டு வந்தது. அது
தொடர்ந்து அளிக்கப்படுமா? மாண்புமிகு உறுப்பினர் யூசுப்
அவர்கள் தெரிவித்தது போல், வசதிபடைத்தவர்கள், தங்கள்
செல்வாக்கைப் பயன்படுத்தி ஆற்றுப் புறம்போக்கு, குளத்துப்
புறம்போக்கு போன்ற புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து,
நீண்டகாலம் சொந்தம் கொண்டாடி வருவதைத் தடுப்பதற்கும்
இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா
என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்

[முற்பகல் 9-10.]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வசதியுடையவர்கள் எல்லாம் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆக்கிரமிப்பு எப்படிச் செய்துள்ளார்கள் என்று பார்த்தால் நீண்ட பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்புச் செய்து வைத்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் உடனே வெளியேற்ற இந்த அரசு எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வருகிறது. வெளியேற்ற முயற்சி எடுத்துக் கொள்ளும்போது அவர்கள் தடை உத்தரவு எல்லாம் பெறக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. அரசு அந்தச் சிக்கல்களை எல்லாம் நீக்கி ஆக்கிரமிப்புச் செய்தவர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது முதல் கேள்விக்குப் பதில்.

இரண்டாம் கேள்விக்குப் பதில் : இந்த அரசு நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுக்கிறது என்று சொல்லுகிறபோது அரசினுடைய நிலத்தில் மட்டும் மனைப்பட்டா கடந்த எட்டு மாதத்தில் அதாவது அக்டோபர் முதல் இன்று வரையிலும் 30,839 பேருக்கு மனைப்பட்டா இந்த அரசு கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. ந. சண்முகம் : புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்திருப்பவர்களை வெளியேற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அதே போல் ஏரியின் உள் வாயில்களில் இருக்கும் நிலப்பரப்புக்களை எல்லாம் ஆக்கிரமிப்புச் செய்து கொண்டு ஏரிக்கு வருகிற தண்ணீரைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : புறம்போக்கு நிலத்திலே ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களைப் பொறுத்த வரை அரசு இரண்டு விதமான நடைமுறையை மேற்கொள்கிறது. அந்த நிலம் அரசு அல்லது பொது மக்களுக்காக, சமுதாயத்திற்காகத் தேவைப்படுகிறது என்பது ஒன்று. அதே போன்று ஏரி உள்வாயிலில் பணக்காரர்களானாலும் ஏழைகளானாலும் ஆக்கிரமிப்புச் செய்து வைத்திருப்பவர்களைப் பொறுத்த வரை நாலைந்து ஏக்கரே ஆக்கிரமிப்புச் செய்து வைத்துக் கொண்டதாக இருப்பினும் அது 100 ஏக்கர் அல்லது 200 ஏக்கர் ஆயக்கட்டைப் பாதிக்குமானால் சமுதாய நன்மையைக் கருதி ஆக்கிரமிப்பாளர்கள் யாராக இருந்தாலும் பொது மக்கள் நலன் அதிகமாக காப்பாற்றப்பட வேண்டுமென்ற காரணத்தால் அவர்கள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள்.

திரு. பொ. மத்திராபதி : புறம்போக்கு நிலத்தில் பெரிய மனிதர்கள் ஆக்கிரமிப்புச் செய்தவர்களை அப்புறப்படுத்துவது பற்றி அக்கறை இல்லை. ஆற்றுப் படுகைகளில் அரசாங்கத்திற்குத் தேவையான நிலத்தில் சிறு விவசாயிகள் சாதாரண விவசாயத் தொழிலாளி ஆக்கிரமித்திருக்கக்கூடிய இடங்களில் கூட நோட்டீஸ் விடப்படுவதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து அந்த இடத்தைக் காலி பண்ண அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் முதலிலேயே சொன்னபடி ஏரி உள்வாயில் என்று சொல்லுகிறபோது பணக்காரர்கள் ஏழைகள் என்று பார்க்கவில்லை. ஆனாலும் சாதாரண விவசாயிகளுக்கு வீட்டு நிலம் மாற்று இடம் கொடுக்கப்படுகிறது. வருவாய்த் துறை அரசு நிலங்களில் மனைகளைக் கொடுக்கிறது. பின்தங்கிய வகுப்பினருக்கு அந்தத் துறையின் மூலம் அரசே நிலங்களை வாங்கி அவர்களுக்குக் கொடுக்கிறது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : கொள்கை அளவிலே அமைச்சர் அவர்கள் சொல்வது சரிதான். 100 ஏக்கர் நஞ்சை சாகுபடி செய்யக்கூடிய சில இடங்களில், இராமநாதபுரம் மாவட்டத்தில் 250 ஏக்கர் கண்மாய் இருக்கிறது. அதிலே 50 வருஷ காலமாக ஆக்கிரமிப்பு இருக்கிறது. இந்த விசேஷ நிலைமைகளை அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் சில ஆண்டுகள் என்று சொன்னேன். அவர்கள் 50 ஆண்டுகள் 50 வருஷங்கள் பொறுத்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில நாட்கள், சில வாரங்கள். எங்கெங்கு இடத்தில் தவறு நடக்கிறது என்று சொன்னால் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி அதுவல்ல. 100 ஏக்கர் நஞ்சைக்கு சில இடங்களிலே 250 ஏக்கர் என்று கண்மாய் இருக்கிறது. அந்த இடங்களுக்கு அது பொருந்தக் கூடாது. 50 வருஷ காலமாக ஆக்கிரமிப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையை அரசு விசேஷமாகக் கவனித்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஒரு ஏரி இருக்கிறது என்றால், ஆயக்கட்டு 100 ஏக்கர் என்பார். ஏரி 200 ஏக்கர் இருக்கிறது என்று சொல்கிறார் என்று கருதுகிறேன். அரசு பரிசீலனை செய்து அப்படியானால் அவசியமானால் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 24

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, புறம்போக்கு எத்தனை வகைப்படும்? எத்தனை ஏக்கர் நிலங்கள் அரசுப் புறம்போக்குகள் என்ற முறையிலே மொத்தமாக உள்ளது? அதிலே எவ்வளவு ஏக்கர்கள் ஆக்கிரமிப்பில் உள்ளன என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் துணைக் கேள்வி போடும்பொழுது அதற்கு அமைச்சரின் கையில் தகவல் இருக்க வேண்டும். அந்த முறையிலே போட வேண்டும்.

திரு. ரெ. வி. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்து திடீர் கொட்டகைகளைப் போட்டு ஆளும் கட்சியின் கொடியையும் கட்டி, தலைவர்களின் படங்களையும் மாட்டி வைப்பதன் காரணமாக அதிகாரிகள் அவைகளை அப்புறப்படுத்துவதற்குப் பயப்படுகிறார்கள், அல்லது அவர்கள் மிரட்டப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இது எல்லாம் அரசுக்குத் தெரிந்தால் சும்மா விட்டு விடாது என்பது அவர்களுக்கே தெரியும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இந்த ஆக்கிரமிப்பிலே இரண்டு விதம் இருக்கிறது. ஒரு கிராமப்புறத்திலே நகரப்புறத்திலே உள்ள பெரிய மனிதர்கள் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். சாதாரண மக்கள் நீண்ட காலமாக அந்த நிலத்திலே உழுது தண்டத் தீர்வை எல்லாம் கட்டிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படப் போவதாகப் பயமுறுத்தப் படுகிறார்கள். ஆகவே புறம்போக்கு நிலங்களிலுள்ள சாதாரண மனிதர்களுக்கு அந்த நிலங்களைப் பட்டாச் செய்து கொடுக்கவும். அதே நேரத்திலே பெரிய மனிதர்களை அப்புறப்படுத்துவதற்கும் ஆன ஒரு சீரான கொள்கையை அரசு கடைப்பிடிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, பெரிய மனிதர்களா, வசதியுள்ள மனிதர்களா என்றோ, சிறிய மனிதர்களா வசதியற்ற மனிதர்களா என்றோ பார்ப்பது கிடையாது. அனுமதியின்றி ஆக்கிரமிப்புச் செய்தால் ஒரேவிதமான தண்டத் தீர்வை போடப்படுகிறது. நிலமற்ற ஏழைகளுக்கு இந்த அரசு எல்லா உதவிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஒன்று சொல்ல

1979 பிப்ரவரி 24]

விரும்புகிறேன். 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இந்த மாதம் வரையிலும் நிலப் பட்டாக்கள்—மனைப் பட்டாக்கள் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்—29,707 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சும்மா கொடுப்பதில்லை, அவர்களுக்கு கிடைத்து விட்டது. இந்த அரசு வந்த பிறகு பட்டா கொடுக்கப்பட்டவர்களுக்கு உண்மையிலேயே பட்டா கிடைக்கவில்லை யென்றால் உடனே அரசுக்குத் தெரியப்படுத்தினால் நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லியிருக்கிறது. பட்டா கிடைக்கவில்லை யென்று இதுவரையில் எனக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, புறம்போக்குகளில் பலவிதம் இருக்கிறது. அதிலே நத்தம் புறம்போக்கில் சாலை அமைத்திருக்கிறார்கள். சாலைகள் அமைக்கப்பட்ட இடங்களிலே தொடர்ந்து வீடுகளைக் கட்டி விடுகிற காரணத்தால் அவைகளை அதிகாரிகள் அப்புறப்படுத்துவதற்கு கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, நத்தம் புறம்போக்கை சாலைப் புறம்போக்காக மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, சாலைப் புறம்போக்கு நத்தத்தில் ஆரம்பிக்கிறது என்றால் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக நடைபெற்றிருக்கிறது. அதைப்பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும்.

சென்னை மருத்துவக் கல்லூரி.

குறியிட்ட வினா எண் 4: திரு. க. சுப்பு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மருத்துவக் கல்லூரியில் சமூக மற்றும் தடுப்புத் துறை (Social and Preventive Medicine) பேராசிரியர், துணைத்தலைவர் இடம் கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக காலியாக இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:—

(அ) சென்னை மருத்துவக் கல்லூரி இணைப் பேராசிரியர் பதவி செப்டம்பர் மாதம் 1978-ல் நிரப்பப்பட்டது. பேராசிரியர் பதவி 31-1-1978-முதல் காலியாக உள்ளது.

(ஆ) பேராசிரியர் பதவியை நிரப்புவதற்குத் தடுப்பு மருந்து இயக்குநரை அரசு திருத்திய செயற்குறிப்பு அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

[முற்பகல் 9-30]

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, இதிலே ஒரு சிறு திருத்தம். தடுப்புத் துறை பேராசிரியர், துணைத் தலைவர் என்று போட்டிருக்கிறார்கள். துறைத் தலைவர், ஹெட் ஆஃப் தி டிபார்ட்மெண்ட் என்று இருக்க வேண்டும். பட்ட மேல்படிப்புத் துறையில்

M.B.B.S., தவிர House-Surgeons Training—D.P.H. M.Sc. (Engineering) Factory Inspectors, B.Sc., (Nursing), M.D. (Social and Preventive Medicine)

போன்ற இந்த வகுப்புகளுக்குப் பாடம் சொல்லித்தரும் பொறுப் பேற்று இருக்கும் துறை. இவ்வளவு பாடங்களுக்கும் பயிற்சி கொடுக்கும் துறை இது. இதில் ஒன்றரை ஆண்டுக்காலமாக இந்தப் பதவி காலியாக வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிலே என்று சொல்லப்பட்டால், ஒன்றரை ஆண்டுக் காலமாகக் காலியாக வைத்திருப்பதால், D.P.H. Students Part-I தேர்வுக்கு இன்றைக்குப் போகிறார்கள். இந்தப் பாடங்களை யார் எடுத்தார்கள், எத்தனை பீரியட்கள் எடுத்தார்கள் என்ற விவரங்களைச் சொன்னால்கூட நன்றாக இருக்கும். மாணவர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கின்ற அளவிற்கு ஒன்றரை ஆண்டுக்காலமாக இவ்வளவு முக்கியமான பொறுப்பு காலியாக இருப்பதற்குக் காரணம் என்ன? அதை அரசாங்கம் விளக்குமா என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவரவர்களே. (Associate Professor of Social and Preventive Medicine) தடுப்பு மருந்து இணைப் பேராசிரியர் பதவியிலே இப்பொழுது பணியாற்றிக் கொண்டிருப்பவர் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியிலிருந்து மாற்றப்பட்ட சரஸ்வதி கிருஷ்ணன் தற்பொழுது பணியாற்றிக் கொண்டிருக்கிறார். பேராசிரியர் ஆற்ற வேண்டிய பணியை இணைப் பேராசிரியர் ஆற்றிக் கொண்டிருக்கிறார். ஆகவே, படிப்புச் சொல்லித் தருவதிலோ அல்லது மாணவர்களைக் கவனிப்பதிலோ எந்தவிதமான இடர்ப்பாடும் இல்லை. ஆனால், பேராசிரியர் பதவிக்கு நியமிக்கத் தகுந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய காலக்கட்டம் இருக்கின்ற காரணத்தினால் அதைப் பற்றித் தடுப்பு மருந்து இயக்குநரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. திருத்தப் பட்டியல் வந்தவுடன் போடப்படும்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, நான் கேட்டிருப்பது, பேராசிரியர் துறைத் தலைவர் பற்றி. இது முக்கியமான பொறுப்பு. அது காலியாக வைக்கப்பட்டிருக்கிறது. (Associate Professor of Social and Preventive Medicine) போட்டிருக்கிறார்கள். அவர் அதி

[illegible] செய்ய முடியுமா? சர்க்காரை
[illegible], பாலிசியைச் [illegible]. இப்படி ஒன்றரை
அதிகாரிகள் மிஸ்லீட் பண்ணுகிறார்கள். [illegible] காரணம் என்ன?
ஆண்டுகாலமாகப் போடாமல் வைத்திருப்பதன் [illegible] நியமிக்க வேண்டுமென்று வைத்
தங்களுக்கு விருப்பமானவர்களை [illegible] என்றால் ஒன்
இருக்கிறார்களா? இது நிர்வாகக் குறைபாடு [illegible] சொல்லிக்
[illegible] ஆண்டுக்காலமாக இவ்வளவு [illegible] கோயம்புத்தூரிலே நடந்த
கொடுக்கப்பட்டவை [illegible] ஒன்றரை ஆண்டுக் காலமாக இவ்
தற்போது [illegible]. [illegible] காலியாக வைத்திருப்பதைக் கவனத்திற்
வளவு முக்கியமான பதவி காலியாக வைத்திருப்பதைக் [illegible] விளக்கத்தைப் பரிசீலனை
கொண்டு, அதிகாரிகள் சொல்லும் [illegible] கேட்டுக் கொள்கிறேன்.
செய்ய வேண்டுமென்றுதான் [illegible]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவரவர்களே. யாரோ ஒருவருக்குச் செய்ய வேண்டுமென்பதற்காக ஒரு பதவியைத் நிறைவு செய்வதைத் தாழ்த்து [illegible] கொண்டிருக்காது. ஆகவே, தகுந்த இந்த அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்காது. சரியானவர்களை நியமிக்க உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

திரு எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, எம். எம். சி. மருத்துவக் கல்லூரியில் முக்கியமான இந்தப் பதவி, பேராசிரியர் பதவி ஒன்று, ஒன்றரை ஆண்டுக் காலமாகக் காலியாக இருப்பது மாணவர்களின் கல்வித் தரத்தைப் பாதிக்கத்தக்க நிலையிலே இருக்கிறது. இதில் அரசாங்கத்தின் கருத்து என்ன? ஒன்றரை ஆண்டுக் காலமாக ஏன் நியமிக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, ஏற்கனவே இதற்கான விளக்கம் தரப்பட்டு விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—அதே கேள்வியை சுப்பு கேட்டார். நீங்களும் அதையே கேட்கிறீர்கள். நேரத்தைக் கொஞ்சம் சேமித்தால் நல்லது.

வேளாண்மைப் பணிகளுக்கு மின் இணைப்பு

வினா எண். 158 *திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் இதற்கு கனிவான விடைவுக்கு விடை பணிப்பாரா—

சாணார்பட்டி வட்டாரத்தில் நிலத்தடி நீர் அதிகமாக இருப்பதால் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதை விரைவு படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்பகுதியில் 1—7—1978 வரை மின் இணைப்புக் கோரி வந்துள்ள 16 மனுக்களில், 14 மனுக்கள் நடைமுறையிலும், மற்றும் அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்களைச் சார்ந்துள்ளன. மீதமுள்ள இரண்டு மனுக்களுக்கும் மனுச் செய்த தேதியின் அடிப்படையில் மட்டும் முன்னுரிமை அளிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

திரு. மொ. ஆண்டி அம்பலம்: தலைவரவர்களே சாணார்பட்டி யூனியனில் நிலத்தடி நீர் அதிகமாக இருக்கிறது என்று அரசு சர்டிபிகேட் கொடுத்திருக்கிறது. அப்படியிருந்தும் விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு ரொம்ப தாமதமாக இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் கவனித்து உடனடியாகக் கொடுக்கப்படும் என்று அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நிலத்தடி நீர் சம்பந்தமான சான்றிதழ் இப்பொழுது தேவையில்லை. வந்த 16 மனுக்களில் 14 மனுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இன்னும் இருபது கேள்விகள் இருக்கின்றன. இப்பொழுதே 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. தொகுதி சம்பந்தப்பட்ட கேள்விகளை தொகுதி உறுப்பினர் கேட்டாலே போதும். மற்றவர்கள் நேரத்தைச் சேமிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, இந்தப் புறம்போக்கு நிலங்கள், நிலத்தடி நீர் ஆகியவை ரொம்ப முக்கியமான விஷயங்கள்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குத் தெரியும் அவ்வளவு நேரம், அமைச்சரிடத்திலிருந்து பல தகவல்களைச் சேகரித்துக் கொடுத்ததற்குப் பிறகுதான் நான் மறு கேள்விக்குப் போனேன். ஆனால் ஏறக்குறைய இருபது பேர்கள் கையை உயர்த்துகிறார்கள். அதற்கென்று அனுமதி தாருங்கள் . ஒரு மணி நேரம்கூட எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இருபது கேள்விகளை ஒரு மணி நேரத்திற்குள் முடிக்க வேண்டும், அடுத்த படியா ஒத்தி வைப்புத் தீர்மானம், விவாதங்கள் ஆகியவை வரும்பொழுதும் அதற்கும் அதிக நேரம் தேவை என்று இதே உறுப்பினர்கள் கேட்கிறார்கள். நான் இதை எப்படி முடிக்க முடியும் எனவே, தயவு செய்து அமருங்கள்.

திரு. மொ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவரவர்களே, தென் மாவட்டங்களில் மின் அழுத்தக் குறைவின் காரணமாக விவசாயிகள் தங்கள் பம்புசெட்டு ஓடவில்லை என்றும் கூறுவதும், மோட்டார்களில் காயல் பொய்த்துப் போவதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள் என்பதும் இந்த அரசுக்குத் தெரியுமா? அதனை நீக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போடவும்.

வினா எண். 159—திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதியில் மயிலம் ஒன்றியம் பேரணி கிராமத்தில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் தொடர்பு பெற 1972-ல் ஸ்டாம்பு அக்ரிமெண்ட் செய்து இருந்தும் நாளது வரை மின் தொடர்பு தராமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—(அ) ஆம்.

(ஆ) இப்பகுதியில் 56 பேருக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் 1971–72-ல் அனுமதியாகியும், போதிய அளவு மனுதாரர்கள் தயார் நிலையில் அப்போது இல்லாதிருந்ததால் மின் இணைப்பு வழங்க இயலவில்லை. தற்போது, திட்டம் மறு மதிப்பீடு செய்து 68 பேர்களுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் முன்னர் அனுமதி வழங்கப் பட்ட 56 பேர்களும் உள்ளனர்.

திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : இப்பொழுதுகூட—இன்று வரை எந்தவிதமான வேலையையும் துவக்கவில்லை. 1972-லேயே அக்ரிமெண்ட் செய்து சுமார் 7 வருஷமாகிவிட்டது. அதனால் துரிதமாக வேலையைத் துவக்கித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. வேலைகள் துரிதமாக நடைபெற மின் வாரியத்திற்கு ஆணை அனுப்பப்படும்.

[1979 பிப்ரவரி 24

கூடலூர் பகுதியிலுள்ள அரசு தேயிலைத் தோட்டங்கள்.

*வினா எண் 160—திரு. கே. உச்சி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியிலுள்ள அரசு தேயிலைத் தோட்டங்களில் ஒவ்வொரு பிரிவு வேலையும் காண்ட்ராக்ட் முறையில் கொடுப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், புதிய தொழிலாளர்களை அங்கு வேலைக்கு சேர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) கட்டிடம் கட்டுதல், ரோடு போடுதல், பாலம் கட்டுதல், பாலிதின் பைகள் ஷீட்டுகள் தயாரித்தளித்தல் போன்ற வேலைகள் மட்டுமே காண்ட்ராக்ட் முறையில் செய்யப்படுகின்றன.

(ஆ) நுட்பத் திறமை தேவையில்லாத காண்ட்ராக்ட் முறையில் செய்யப்படும் இதர வேலைகளுக்கு இலங்கை அகதிகள் நியமனம் செய்யப்படுகின்றனர். கொத்தன், தச்சு போன்ற திறமையுள்ள வேலைகளுக்கு வெளியாட்கள் நியமிக்கப்படுகின்றனர்.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, அமைச்சர் சொல்வதில் இருந்து அங்கே தேயிலைத் தோட்டங்களில் சில வேலைகள் காண்ட்ராக்ட் முறையில் கொடுக்கப்படுவதில்லையென்ற அளவு தெரிகிறது. ஆனால், எனக்குத் தெரிந்த அளவில் அரசு தேயிலைத் தோட்டங்களில் ஏராளமான வேலைகள் காண்ட்ராக்ட் முறையில் கொடுக்கப்படுகிறது. அதை அரசு அறியுமா? அப்படி இருந்தால் அதை நிறுத்தி, காண்ட்ராக்ட் முறையில் ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு இல்லையென்ற காரணத்தாலும், அவர்கள் அதிக நேரம் வேலை செய்து குறைந்த ஊதியம் பெறுகின்ற காரணத்தாலும் அதை நீக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, காண்ட்ராக்ட் முறையில் வேலைகள் விடப்படுகின்ற பட்டியலையே நான் தந்திருக்கிறேன். அது தவிர, நேரடியாக விடப்படுகின்ற வேலைகள் பட்டியலையும் தந்திருக்கிறேன். ஆகவே, எந்த எந்த வேலைகள் காண்ட்ராக்ட் முறையில் விடப்பட வேண்டிய அவசியம் இருக்கிறதோ அந்த வேலைகள் மாத்திரம் காண்ட்ராக்ட் முறையில் அளிக்கப்படுகின்றன. நுட்பத் திறமை தேவையில்லாத காண்ட்ராக்ட் முறையில் செய்யப்படும் இதர வேலைகளுக்கு இலங்கையிலேயிருந்து வந்திருக்கிற அகதிகளும் மற்றவைகளுக்கு மற்றவர்களும் நியமிக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையின்படி காண்ட்ராக்ட் அளிக்கப்படுகிறது என்றும் தெரிவித்திருக்கிறேன்.

1974 பிப்ரவரி 24

திறந்தவெளி கிணு [illegible]

* வினா எண் 161 திரு. எம். [illegible] செய்தி அறநிலையத்துறை அமைச் [illegible] விடையளிப்பாரா [illegible]

(அ) திறந்தவெளி கிணறு [illegible] அரசு [illegible]

(ஆ) ஆம், எனில், இது [illegible]

(அ)- (ஆ) மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: [illegible]

[illegible]

(முற்பகல் 9-30)

திரு. பொ. சிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள திரை அரங்குகளில் இந்தி-ஆங்கிலம் போன்ற படங்கள் அதிகமாக திரையிடப்படுகின்றன. அப்படி திரையிடப்படும் திரை அரங்குகளுக்கு தமிழ் திரைப்படம் எடுப்பதற்காக தமிழக அரசு ஆணை ஏதுவும் இருக்கிறதா......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது திறந்தவெளி திரை அரங்குகளைப் பற்றிய கேள்வி. அது பற்றிய பிரச்னைகள் பொருத்தமாக இருக்கும். மொத்தமாக பதில் அளிப்பதற்கும் உதவியாக இருக்கும். அமைச்சர் அவர்கள் தயாராக வந்திருக்க முடியாது என்றாலும் அமைச்சர் விரும்பினால் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்கு தொடர்பற்ற கேள்வி என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டதன் விளைவாக தமிழ் நாட்டு மக்களுக்கு இந்தச் செய்தி பயன் அளிக்கும் என்ற முறையில், தமிழ் நாட்டில் தமிழ் திரைப்படங்கள் திரையிடப்படுவதற்கு போதிய திரை அரங்குகள் இல்லை என்ற அந்த நிலையை மனதில் எண்ணி வேறு மொழி திரைப்படங்களை ஆண்டு முழுவதும் திரையிட்டுக் கொண்டிருக்கிற அரங்குகள் கண்டிப்பாக தொடர்ந்து 12 வாரங்கள் ஒரு தமிழ் படத்தை திரையிட்டாக வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள மத்திய சிறைச்சாலையில் இவ்வாறு திறந்தவெளி அரங்கம் கட்டுவதற்கு அனுமதி கோரப்பட்டு அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் வந்துள்ளனவா? அப்படி எந்த மத்தியச் சிறைச் சாலையில் திறந்தவெளி அரங்கம் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, பொது மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள திரை அரங்குகள் தான் இந்தத் துறைக்கு அனுமதி கோரி வருகின்றன. சிறைச்சாலைகளுக்குள்ளே அப்படி அமைக்கப்பட விரும்பினால் அது ஒரு வேளை சிறைத் துறையை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் சட்டத்துறை அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கலாம். இந்தத் துறைக்கு அப்படிப்பட்ட செய்தி ஏதும் வரவில்லை. அப்படி வந்தால் அதுபற்றி வகனிக்கப்படும்.

காமாட்சியம்மன் தொடக்கப்பள்ளி நிர்வாகம்.

*வினா எண் 162 திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கீழ்க்கண்ட வினாக்களுக்கு மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் விடையளிப்பாரா:

(அ) சென்னை தேனாம்பேட்டையில் தனியார் நிர்வாகத்தில் இருக்கும் காமாட்சியம்மன் தொடக்கப்பள்ளியில் நடைபெறும் நிர்வாக சீர்கேடுகளைப்பற்றி அரசுக்கு முறையீடுகள் வந்திருக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) முறையீடுகள் குறித்து விரிவான விசாரணை நடத்தி அறிக்கை அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே இது [illegible] பற்றிய கேள்வி. இந்தத் தொடக்கப்பள்ளியைப் பற்றி [illegible] அமைச்சர் [illegible] கேள்விக் கேட்டு [illegible] ஒரு பள்ளியைப் பற்றி [illegible] தனியார் [illegible] சென்னையில் உள்ள [illegible] நடைபெறும் நிர்வாக [illegible] அவர்கள் அறிக்கை கேட்டிருக்கிறார். தொடக்கப்பள்ளியில் ஆசிரியர்களுக்கு [illegible] நிர்வாகத்திலுள்ள முறையீடுகள் பற்றி [illegible] சீர்கேடுகளின் [illegible] அமைச்சர் அவர்களை [illegible] கொடுப்பதற்கு [illegible] கொள்கிறேன். [illegible] தனியார் [illegible] வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அதுபோன்ற [illegible] நடவடிக்கைகளை நடத்துவது போன்று [illegible] பள்ளிகளில் [illegible] கடைப்பிடிக்க அரசாங்கம் [illegible] எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, குற்றப்புலனாய்வுத் துறைக்கு [illegible] குறிப்பிட்ட [illegible] குற்றப்புலனாய்வுத்துறை இதில் [illegible] அனுப்பப்பட்டது. குற்றப்புலனாய்வு பேரில் பள்ளிக் கல்வி அலுவலர் விருப்பதாக அறிவித்ததின் பேரில் சென்னை மாவட்டக் கல்வி அதிகாரி [illegible] நகர கவுன்சிலில் தென் சென்னை நடத்தியதாகவும் அப்பள்ளியில் ஒழுங்கீனம் குறித்து விசாரணை செய்ததாகவும் முறையீடுகள் சரியான வேடுகளை பரிசீலனை எனவும் முறையீடுகள் பெற்று அரசுக்கு காகவே நடந்து வருகின்றன விசாரணை நடத்தி அறிக்கை கல்வி அதிகாரி தல்ல எனவும் விசாரணை குற்றப்புலனாய்வுத்துறை அனுப்பியுள்ளார்.

[1979 பிப்ரவரி 24

களுடைய அறிக்கைகளில் வேற்றுமை காணப்படுகிறதால், இது குறித்து விசாரணை செய்து அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்கப்பட்டுள்ளார். அந்த அறிக்கை கிடைக்கப் பெற்று இந்த குறைபாடுகள் உண்மையே என்று தெரியவருமேயானால், தனியார் பள்ளி விதிகளின் படி முறையாக செயல்படாத பள்ளிகளின் நிர்வாகிகளை நிறுத்தவோ அங்கீகாரத்தை ரத்து செய்யவோ நடவடிக்கை எடுக்கலாம். தற்காலிகமாக [illegible] வசதிகளுக்கு புறம்பாக நடக்கும் பள்ளிகளை அரசு ஏற்று நடத்த அவ்விதிகளில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, பள்ளிக் கல்வி இயக்குநர் அறிக்கை கிடைத்தவுடன், விதிகளின் படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆர். சாந்திரப்பா: இதற்காக கல்வி அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்திலே ஒரு முக்கிய விஷயம், கல்வி மேல் அதிகாரியே இதற்கு உடந்தை என்று குற்றச் சாட்டு வருகின்றன. இது போன்ற குறைபாடுகள் இல்லாமல் மேல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி திரு. சாந்திரப்பா அவர்கள் தொகுதியில் உள்ள ஒரு பள்ளியைப் பற்றியதாகும். நீங்கள் உட்காருங்கள்.

திரு. கோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அந்தப் பள்ளி குறித்து எனக்கும் புகார் வந்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கனவே அறிவிப்புத் தந்து இருக்கிறேன், ஒரு வினா குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியில் உள்ளதைப் பற்றி என்றால், அவருக்கு இரண்டு துணைவினா எழுப்ப அனுமதி அளிக்கப்படும். இந்த முறையில் தான் அலுவல் ஆய்வுக் குழுவிலும் முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. திரு. அழகர்சாமி, வற்புறுத்திக் கேட்காதீர்கள். நேரம் கருதி கேட்டுக் கொள்கிறேன், குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர் இரண்டு கேள்விகள் கேட்டால் போதும்.

திரு. ந. ராணி: பொதுவான பிரச்னைகளில் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவை நான் இங்கே தெரிவித்தேன். உறுப்பினர்கள் என்னிடம் இப்படிக் கேட்பதை விட, முன் வரிசையில் உள்ள உங்கள் தலைவர்களைக் கேட்டுக்கொண்டால் நல்லது.

1979 பிப்ரவரி 24]

திரு. ந. ராணி: குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர் [illegible] அவருக்கு மட்டும் [illegible] பொதுவான முறையாகும். ஆனால் [illegible] ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறிப்பிட்ட [illegible] பற்றியதாகும். [illegible] ஆய்வுக் குழுவில் [illegible] அந்தப் பள்ளி [illegible] திரு. அழகர்சாமி [illegible] வந்து இருக்கிறது [illegible] உறுப்பினர்களுக்கும் [illegible] இல்லை [illegible] ....

திரு. கோ. அழகர்சாமி: [illegible] கேள்வி நேரத்தில் [illegible]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: [illegible] திரு. அழகர்சாமி [illegible] இருக்கிறது [illegible]

திரு. கோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, [illegible] வந்து இருக்கின்றன. [illegible] விஷயங்கள் [illegible] வினா எழுப்ப [illegible] வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகர்சாமி, [illegible] உறுப்பினர்களுக்கும் [illegible] உறுப்பினர் [illegible] வினா எழுப்ப [illegible] அந்த [illegible] வந்து இருக்கலாம். இந்தக் கேள்விக்கு [illegible] அலுவல் ஆய்வுக் குழு [illegible] வேண்டும் [illegible] வாய்ப்பு [illegible] முடிவு [illegible] நீங்கள் [illegible] வேண்டும்.

திரு. கோ. அழகர்சாமி: அலுவல் ஆய்வுக் குழுவில் [illegible]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகர்சாமி, [illegible] முடிவு எடுக்கவில்லை. [illegible] கேட்க வேண்டும் [illegible] நீங்கள் கேள்வி [illegible] எடுத்துக் [illegible] வேண்டுமா?

திரு. கோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியில் இருக்கும் நிர்வாக சீர்கேட்டைப்போல் எங்கள் ஊரில் உள்ள பள்ளியிலும் இருக்கிறது என்று சொல்லி

கேட்பதுதான் சரியில்லை என்ற வகையில் முடிவு எடுத்து இருக்கிறோம். நான் சொல்ல விரும்புவது, அந்தப் பள்ளி பற்றியே எனக்குப் புகார் வந்து இருக்கிறது. அந்தப் பள்ளியில் உள்ள வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு ஆசிரியரைப் பற்றி நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி போன்று அத்தனை உறுப்பினர்களும் வலியுறுத்திக் கேட்க ஆரம்பித்தால், நேரம்போதாது. புகார் வரப்பெற்றுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புக் கொடுப்பது என்பது இயலாது. நேரம் குறைவாக இருக்கிற காரணத்தால்தான், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு மட்டும் துணை வினா கேட்க வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அவர் துணைவினா கேட்டு விளக்கம் பெற்று விட்டார்.

திரு. சோ. அழகர்சாமி : அந்த ஆசிரியர் இரண்டு மாதகாலமாக வேலை இல்லாமல் இருக்கிறார். தயவு செய்து தாங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். புறம்போக்கு நிலங்கள் பற்றிய கேள்வி வந்தபோது, அதற்காக 20 நிமிடங்கள் தரப்பட்டது. அது பொதுவான கேள்வி. ஆனால் இந்தக் கேள்வி ஒரு தொகுதி சம்பந்தப்பட்டது. சம்மந்தப்பட்ட உறுப்பினர் வினா எழுப்பி விட்டார். உட்காருங்கள். வினா எண். 163.

பெரியாறு, சுருளியாறு பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பிராந்தியப் படி.

*வினா எண். 163—திரு. வெ. இரா. ஜெயராமன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பெரியாறு, சுருளியாறு மின்திட்ட கீழ் முகாம்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிராந்தியப் படி வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை (Isolated locality Allowance) வழங்க எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது,

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, மலைப் பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பிராந்தியப் படி வழங்குவதற்கு அரசு உத்தரவிட்டும், கோவை மாவட்டம் பரளி மின்நிலைய பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை. அரசு உத்தரவிட்ட பின்பும் வழங்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக்கேள்வி போடவும்.

ஏ.சி.சி. சிமெண்ட் கம்பெனியிடமிருந்து உள்ளூர் மேல்வரி வசூலித்தல்.

*வினா எண். 164—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மதுக்கரை ஏ.சி.சி. சிமெண்ட் கம்பெனியார் மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திற்கு செலுத்த வேண்டிய உள்ளூர் மேல் வரி (லோகல் சர்சார்ஜ்) பாக்கி எவ்வளவு?

(ஆ) அதனை வசூலிக்க எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—

(அ) ரூ. 40,10,268·36.

(ஆ) தலைமை நீதிமன்றம், முக்கியப் பிரச்சினை குறித்து இறுதி முடிவுகள் எடுக்கும்வரை, உள்ளூர் மேல்வரி நிலுவைத் தொகைகளை வசூலிப்பதிலிருந்து அரசைத் தடைசெய்யும் வகையில் சென்னை உயர்நீதி மன்றத்தில்—கம்பெனி பல மனுக்களைத் தாக்கல் செய்து, தடை ஆணைகளையும், உறுத்துக் கட்டளைகளையும் (Injection) பெற்றுள்ளது.

[முற்பகல் 9·40]

திரு. ஆ. நடராசன் : தலைவரவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளுடைய உள்ளூர் மேல் வரி நீதிமன்றத்தில் தடை காரணமாக தடைப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்த நடப்பாண்டில் புறம்போக்கு இடங்களில் கல் உடைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்போது நடைமுறையில் இருக்கிற விதிப்படி உள்ளூர் மேல் வரி வசூல் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நிச்சயமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

[1979 பிப்ரவரி 24

ஆரணி மாட்டுச் சந்தை.

* வினா எண். 165—திரு. வீ. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

ஆரணி நகரத்தின் மத்தியில் உள்ள மாட்டுச் சந்தையினை பையூர் குளக்கரைக்கு மாற்றுவது குறித்த கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. வீ. அர்ச்சுனன் : தலைவரவர்களே, மக்கள் நெரிசல் காரணமாகவும், போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதன் காரணமாகவும் ஆரணி நகரின் மத்தியில் இருக்கிற மாட்டு சந்தையை பையூர் குளக்கரைக்கு மாற்றுவது சம்பந்தமாக 1971 ஆம் ஆண்டிலேயே நகராட்சி தீர்மானம் போட்டுள்ளது. அதன் பேரில் அந்த மாட்டு சந்தையை மாற்றியமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ? மக்களிடமிருந்து அதுபற்றி ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அப்படி கோரிக்கை எதுவும் வரவில்லை. ஆனால் நகரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிதாக ஒரு மாட்டு சந்தையை செட்டிகுளம் அருகில் ஷபியுல்லா தெருவில் அமைக்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பள்ளிப்பத்து ஊராட்சியில் சமுதாயக் கிணறுகள்.

* வினா எண். 166—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பள்ளிப்பத்து ஊராட்சி செங்குழியிலும், எருசலேமிலும் சமுதாய நலக் கிணறுகள் தோண்டப்பட்டு முடிவு பெறாமல் பல ஆண்டுகளாக இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

1979 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) செங்குழி, நாதன்கிணறு என்ற இடங்களில் சமுதாயக் கிணறுகள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ளன. எருசலேமில் சமுதாயக் கிணறு இல்லை.

(ஆ) இவற்றை விரைவில் உபயோகத்திற்குக் கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, சமுதாயக் கிணறு எந்த அடிப்படையில் அமைக்கப்படுகிறது. அதனால் மக்களுக்கு என்ன நன்மை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கிணற்றிலே தண்ணீர் இருக்கும். அதனால் மக்களுக்கு பயனுண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 167, 168 ஆகியவை மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

சிதம்பரத்திலுள்ள பாளையங்கோட்டை ஏரி.

* வினா எண் 169—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டம், பாளையங்கோட்டை ஏரியை வலுவான அணையாக திருத்தியமைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தை வேலு: ஆம்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, சிதம்பரம் வட்டம் பளையங்கோட்டை ஏரி மிக முக்கியமான ஏரி. அதனால் நூற்றுக்கணக்கான பிற ஏரிகள் பாசனம் பெறுகின்றன. 1977, 1978 ஆம் ஆண்டுகளில் பெய்த பெருமழையின் காரணமாக ஏரியின் கரைகள் உடைப்பு எடுத்து பயிர்கள் அழிந்திருக்கின்றன. அதைப் போலவே பாண்டி ஏரி, சின்னபாண்டியன் ஏரி, நகரபாடி ஏரி போன்ற ஏரிகள் எல்லாம் உடைப்பு எடுத்து, சேதம் ஏற்பட்டிருக்கிறது. அந்தஏரிகளை எல்லாம் ஆழப்படுத்தி, கரைகளை வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1979 பிப்ரவரி 24

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே இந்த ஏரியைப் பொறுத்தவரையில் 533 ஏக்கர் பாசன வசதி உடையது. 1977 ஆம் ஆண்டில் இரண்டு உடைப்புகள் ஏற்பட்டு ஏறத்தாழ 12,000 ரூபாய் செலவில் அவைகள் அடைக் கப்பட்டன. மீண்டும் கரைகளை வலுப்படுத்துவதற்காக இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, இப்போது எவ்வளவு ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது ? சுற்றியுள்ள ஏரிகளையும் ஆழப்படுத்தி, கரைகளை வலுப்படுத்திக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இந்த ஏரியில் இரண்டு உடைப்புகள் ஏற்பட்டன. அதற்கு ஏறத்தாழ 12,000 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. அதற்குமேல் இந்த ஏரியில் கரை களை வலுப்படுத்துவது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

புதிய தொண்டியக்காடு வாய்க்கால் திட்டம்.

* வினா எண். 170—திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவேரி வளர்ச்சிப் பணித் திட்ட ஆய்வில் உள்ள நியூ தொண்டியக்காடு வாய்க்கால் திட்டத்தினை செயலாக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு : புது தொண்டியக்காடு வாய்க்காலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தின் விரிவான ஆய்வு முடிவுற்று மதிப்பீடு மற்றும் வரைபடங்களும் தயாரிக்கப் பட்டுவிட்டு, இவற்றின் பரிசீலனையும் முடியும் தருவாயில் உள் ளன.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, இந்த நியூ தொண்டியக்காடு வாய்க்கால் பகுதியில் பல பள்ளப் பகுதிகள் இருக்கின்றன. மழை வரக்கூடிய காலங்களில் தொடர்ச்சியாக அந்த பள்ளப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் நாச மடைகிறது ; ஒவ்வொரு ஆண்டும் இந்த நிலை இருந்துகொண் டிருக்கிறது. நடவு நட்ட 3 மாதத்திலேயே அழிந்துவிடுகிறது. ஆகவே மேலும்காலம் கடத்தாமல் விரைவில் தொடங்கி, நிறைவேற்ற அமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுப்பார்களா ?

1979 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவ ரவர்களே, இதற்காக 7½ இலட்சம் ரூபாயிலே மதிப்பீடு செய்யப் பட்டு கடந்த 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் தேதி அரசு அதற்கான ஆணை பிறப்பித்துள்ளது. அதற்கான பூர்வாங்க வேலைகளைத் தொடருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட் டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்பு மிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினையும் ஏற்றுக்கொண்டு கூடிய சீக்கிரத்தில், விரைவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

* வினா எண் 171—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் புதிய 'ஒழுங்கு முறை விற்பனைக் கூடம்' ஏற்படுத்திடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்கள் அத்தனையும் இத்தகைய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்தால் விவசாயிகளுக்கும் தகுந்த வருமானம் வரும். இடைத் தரகர்கள் இல்லாத நிலையும் ஏற்படும். ஆகையால் இனியேனும் அரசு அது பற்றிச் சிந்தித்து குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இதனை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர் களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய கேள்வி தஞ்சை மாவட்டத்தில் புதிய ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் ஆரம்பிக்கப்பட இருக்கிறதா என்பதுதான். தஞ்சை மாவட்டத்தில் ஏற்கெனவே 24 இடங்களில் விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆகவே மேலும் புதிய விற்பனை கூடம் என்று ஒன்று துவங்குவதாக இல்லை. ஆனால் கிளைகள்

[1979 பிப்ரவரி 24

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் வேலைகளை இன்னும் தீவிரமாக்க ஒரு துணைக்கூடம் நாகப்பட்டினத்தில் அமைப்பது குறித்து பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் ஏறத்தாழ 70 கோடி ரூபாய் அளவிலே புதிதாக ஒரு செயல் திட்டம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இதற்காக உலக வங்கியினுடைய உதவியை நாடி இருக்கிறோம். அந்த 70 கோடி ரூபாய் கிடைத்தால் 200-க்கு மேற்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைத் திறந்து அதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தேவையான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுத்தருவதற்குரிய நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலமாக விற்பனை செய்யப்படுகின்ற பொருட்கள் அதாவது லிஸ்ட் ஆப் கமாடிட்டீஸ் எவை எவை என்று அறிவிக்க இயலுமா? அடுத்து புதுக்கோட்டை மாவட்டம் தனி மாவட்டமாக பிரிக்கப்பட்டும் அந்த மாவட்டத்திலே விற்பனைக் கூடங்கள் இல்லை. ஆகவே, தஞ்சை மாவட்டத்தில் இருப்பது போல் புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் ஒரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்திலே உள்ள விற்பனைக் கூடங்களில் விற்பதற்குரிய விளைபொருள்களாக 8 பொருள்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன : 1, நெல், 2. உளுந்து, 3. துவரை, 4. பச்சைப் பயிறு, 5. நிலக்கடலை, 6. தென்னை , 7. முந்திரி, 8. புகையிலை. இந்த 8 விளை பொருட்களும் அங்கே விற்பனைப் பொருட்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்து புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் புதியதாக ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் நாளைக்கு ஆரம்பிக்கப்பட இருக்கிறது. என்ற நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, இந்த தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் பல ஒழுங்கீனங்கள் நடந்திருப்பதாக சொல்லப்படுகிறது. அப்படி ஏதாவது தவறுகள் நடைப்பெற்றிருந்தால் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய

1979 பிப்ரவரி 24]

விரும்புகிறேன். மேலும் 1975—76-ல் அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏதாவது கட்டணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி செய்யப்பட்டிருந்தால் அது எவ்வளவு தொகை என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, இதன் தொடர்பாக தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூட்டத்தின் தலைவர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்து தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் விற்பனைக் கட்டணமாக 1974-75லே 8,50,720 ரூபாய் 85 பைசாவும், 1975-76-லே 9,54,682 ரூபாய் 91 பைசாவும், 1976–77-லே 13,60,644 ரூபாய் 94 பைசாவும், வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடியாத்தம் நகரிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள்.

*வினா எண் 172—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரில் உள்ள கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடிக்கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவைகளை மீண்டும் திறந்து நடத்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) இவ்வாறு அரசிற்கு தகவல் எதுவும் இதுவரை வரவில்லை.

(ஆ) வினாவற்கு இடமில்லை.

[முற்பகல் 9-50]

திரு. வி. கே. கோதண்டாாமன் : அங்கே அறுபது தீப்பெட்டித் தொழிற்சாலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன, அவைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே நானும் தகவல்கொடுத்திருக்கிறேன், அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை உரிமையாளர்களும் கொடுத்துள்ளார்கள். அதற்கான காரணம், அந்தத் தொழிற்சாலைகளுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற

மூலப் பொருள்களான க்ளோரைட், வாக்ஸ் பாஸ்பரஸ் போன்ற மூலப் பொருள்கள் நேர்மையாகவும் ஒழுங்காகவும் அவர்களுக்கு விநியோகிக்காத காரணத்தினால்தான் அவை மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே இதைப் பரிசீலனை செய்து அவற்றை உடனடியாகத் திறந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூடப்படவில்லை என்ற தகவலைத் தந்திருக்கிறேன். அவை திறக்கப்படுமா என்று மீண்டும் உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். மூடப்படவில்லை என்று சொல்லும்போது திறக்கப்படுமா என்ற கேள்விக்கு இடமில்லையென்று கருதுகிறேன். அவர்கள் எந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளைச் சொல்கிறார்கள் என்று சொன்னால், அதைத் தெளிவுபடுத்தினால் நான் விளக்கம் தர முடியும். அங்கு இரண்டு வகையான தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. ஒன்று, தமிழ்நாடு அரசு தொழில் வணிகத் துறை இயக்குநருடைய மேற்பார்வையில், நேரடி ஆளுகைக்கு உட்பட்டு கூட்டுறவுச் சங்கமாக தீப்பெட்டித் தொழிற்சாலைகள் நடந்து வருகின்றன. காதி கிராமக் கைத்தொழில் ஆணைக்குழு அங்கீகாரம் பெற்று சான்றிதழ் பெற்று 175 பதிவு செய்யப்பட்ட சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் அங்கு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள். தனிப்பட்ட முறையில் சிறிய அளவில் கிராமக் கைத்தொழில் ஆணைக்குழுவின் சான்றிதழ் பெற்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற 175 தொழிற்சாலைகளைக் குறிப்பிடுகிறார்களா அல்லது தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுப் பணிச்சங்கம் என்று சொல்லி அரசாங்கமே பணிச் சங்கம் ஒன்றை அமைத்து சிறிய சிறிய அளவில் 56 தொழிற்சாலைகளுக்கு நாமே மூலப்பொருட்கள் எல்லாம் கொடுத்து அவர்களை தீக்குச்சி உற்பத்தி செய்யச் சொல்லி வாங்கி விற்பனை செய்து கொடுக்கிறோம், அந்தத் தொழிற்சாலைகளை அவர்கள் குறிப்பிடுகிறார்களா என்பதைத் தெரிவித்தால் தக்க பதில் சொல்ல முடியும் என்பதை தலைவர் அவர்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: பலதரப்பட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அதிலும் குறிப்பாக குடிசைத் தொழிலை மேலும் மேலும் அபிவிருத்தி செய்வோம். திறப்போம். வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்போம் என்று சொல்லக்கூடிய இந்த நேரத்தில் இந்த 'டி' க்ளாஸ் என்று சொல்லக்கூடிய தொழிற்சாலை இருக்கிறதே, அங்கு நாள் ஒன்றுக்கு 3 கோடி க்ரோஸ்தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறது. அதன் மூலம் வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று சொன்னால் நாள் ஒன்றுக்கு 100 க்ரோஸ் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு அவர்களுக்கு அனுமதி அளிப்பாரா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மத்திய அரசின் ஆணைப்படி ஆண்டு ஒன்றுக்கு ஏழரை கோடி தீக்குச்சிகள் தயாரிக்கக் கூடிய சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குச் சில சலுகைகள் இருக்கின்றன. இயந்திரத்தை அல்லது மின்சாரத்தைப் பயன்படுத்தி தீக்குச்சிகள் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு ரூ. 4.30 வரி கட்ட வேண்டும் என்று சொன்னால் இப்படி சிறிய அளவிலான தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ரூ. 3.20 கட்டினால் போதும் என்று சொல்லி அவர்களுடைய ஆண்டு உற்பத்தி ஏழரை கோடி தீக்குச்சிகள் இருக்க வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதற்கு மேலும் சிறிய அளவில் தீப்பெட்டி உற்பத்தி செய்ய வாய்ப்பிருந்தால் மேலும் ஏற்படுத்தி தொழில் கூட்டுறவுப் பணிச்சங்கத்தில் அவர்களை உறுப்பினர்களாக ஆக்கி தேவையான மூலப் பொருட்களைக் கொடுத்து தொழிலை வளர்க்க வாய்ப்பு இருக்கிறது. அதை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் மேலும் ஒரு கூட்டுறவுப் பணிச் சங்கம் ஏற்படுத்த முடியுமா என்பதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். எனவே அது வரும்போது மேலும் ஒரு நூறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அங்கே உருவாவதற்கு வாய்ப்பிருக்கிறது. மூலப்பொருட்களைப் பொறுத்தவரையில் இப்போது கட்டுப்பாடு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: மேலும் நான்கு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பாராட்டுகிறேன். இப்போதே ஆறு மாதத்திற்கு முன்னால் புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக வேண்டிய அனுமதி கோரி அந்தந்த பஞ்சாயத்து ரெவன்யூ ஆபீசர் போன்றவர் ஹெல்த் ஆபீசர், பஞ்சாயத்து யூனியன் போன்றவர்கள் அனுமதி அளிக்காததால் முட்டுக்கட்டையாக இருந்து கொண்டிருக்கிற நிலை இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அனுமதி கொடுக்க முடியாது. ஆகவே குடிசைத் தொழில்களுக்குக் கூட நான் நேரில் போய்ப் பார்த்து யாத அளவிற்கு பாதகமாக இல்லை. நிலை இருக்கிறது. ஆகவே சொன்ன பிறகும் கொடுக்கமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே அதற்காக நல்லதொரு உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, குடிசைத் தொழில் என்கின்ற வரிசையில் தீப்பெட்டித் தொழில் வந்தாலும், தீப்பெட்டித் தொழிலை எந்த இடத்தில் ஆரம்பிப்பது என்று பரிசீலிக்கும்போது அதற்குத் தேவையான சில அடிப்படையான பாதுகாப்புகளை வலியுறுத்துவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இதற்கான மூலப்பொருட்கள் எந்த நேரத்திலும் தீப்பற்றி எரியக் கூடிய வகையில் இருப்பதால், சில கட்டுப்பாடுகளை நிர்ணயிக்க வேண்டியது தவிர்க்கமுடியாதது. அதே நேரத்தில் இதில் ஏற்படுகின்ற சில தடங்கல்களை

நான் அறிவேன். பல்வேறு உறுப்பினர்களும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களும் இதிலுள்ள சிரமங்களை சொல்லியிருப்பதின் காரணமாக இதற்கு எளிமையான முறையில் அனுமதி வழங்குவது பற்றி அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. விரைவில் இதுபற்றி முடிவு எடுத்ததும், அந்த முடிவுகளை அறிவிக்கும். அந்த முடிவு வந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற இடர்பாடுகள் தவிர்க்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பனையூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கம்.

*வினா எண். 173.—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம் பனையூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பில் தற்போது எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) சங்கம் கூட்டுறவு விதிமுறைக்கு உட்பட்டு இயங்கி வருகின்றதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) பனையூர் கூட்டுறவு பால் விநியோக சங்கம் என்பது இல்லை. ஆனால் ஆருத்ராபட்டு கூட்டுறவு பால் விநியோகச் சங்க விவகார எல்லையில் பனையூர் கிராமம் உள்ளது. இச்சங்க நிர்வாகப் பொறுப்பில் தற்போது ஆறுபேர் உள்ளனர்.

(ஆ) ஆம்.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆருத்திராப்பட்டு கூட்டுறவு பால் வழங்கும் சங்க நிர்வாகத்தில் இப்போது ஆறு பேர்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரை இந்த நிர்வாகப் பொறுப்பில் எத்தனை பேர்கள் இருந்து வந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அத்துடன் இந்தச் சங்கம் இப்போது என்ன நிலையில் பணி புரிகின்றது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சங்கத்தின நிர்வாகக் குழு எழு பேர்கள் கொண்டதாகும். ஆனால் நிர்வாகத்தில் சில குறைபாடுகள் இருப்பதாகச் சொல்லி சில உறுப்பினர்கள் நிர்வாகக் குழுவிலிருந்து ராஜிநாமா செய்தார்கள். ராஜிநாமா செய்ததற்குப்பிறகு காலியான இடங்களுக்கு முறையான விண்ணப்பங்கள் பெறப்பட்டு மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்போது ஆறு பேர் கொண்ட நிர்வாகக் குழு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செஞ்சி மருத்துவ மனை.

*வினா எண் 174 — திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி (தென்னாற்காடு மாவட்டம்) மருத்துவமனை
பில் உள்ள படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தக் கோரி
விண்ணப்பம் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்.— (அ)
மற்றும் (ஆ) செஞ்சி அரசினர் மருத்துவமனையிலுள்ள
படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் கோரிக்கை
ஒன்று மருத்துவத் துறை இயக்குநரின் ஆய்வில் உள்ளது.
இதுபற்றி கருத்துரு பெறப்பட்டவுடன் அரசு ஆய்ந்து
முடிவெடுக்கும்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பட்ஜெட்டிலாவது படுக்கை எண்ணிக்கை அதிகப்படுத்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: செஞ்சி
அரசு மருத்துவ மனையில் தற்போது 28 படுக்கைகள் உள்ளன.
செஞ்சி அரசினர் மருத்துவ மனையிலுள்ள படுக்கைகளின் எண்
ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான கோரிக்கை ஒன்று தென்
னாற்காடு மாவட்ட மருத்துவ அதிகாரியிடமிருந்து மருத்துவத்
துறை இயக்குநருக்கு வந்துள்ளது. மருத்துவப் பணி மற்றும்
குடும்பநலத்துறை இயக்குநர் அவர்கள் நிதிப் பற்றாக்குறையினால் 1978-79 ஆம்
ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டத்தில் சேர்க்கப்பட
செஞ்சி மருத்துவ மனையை விரிவாக்கும் திட்டம் ... எனினும் செஞ்சி மருத்துவ
வில்லை என்று கூறியுள்ளார். 1979-80 ஆம் ஆண்டிற்கான
மனையை விரிவாக்கும் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்காக தென்
இரண்டாம் பகுதி திட்டமாக அலுவலரிடமிருந்து விவரங்கள்
னாற்காடு மாவட்ட மருத்துவ அந்த விவரங்கள் கிடைத்தும் அர
கோரப்பட்டுள்ளன என்றும் செயற்குறிப்பு அனுப்புவதாகவும் கூறி
சின் பரிசீலனைக்கு ஒரு குடும்பநலத்துறை இயக்குநரிட
யுள்ளார். மருத்துவப் பணி செயற்குறிப்பு வந்த பிறகு அரசு தகுந்த
மிருந்து இது பற்றி

(ஆ) தமிழ்நாடு சரிகை நிறுவனத்திற்குத் தேவையான இயந்திரங்கள் எத்தனை வாங்கப்பட்டன?

(இ) அதில் செயல்படாமல் இருக்கும் இயந்திரங்கள் உண்டா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: (அ) தமிழ்நாட்டிலுள்ள சரிகை நிறுவனம் 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாளில் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) பத்து தட்டையாக்கும் (Flattening Machines) இயந்திரங்களும், 20 நூற்பு இயந்திரங்களும் (Spinning Machines) மற்றும் 16 வெள்ளிக் கம்பி இழுக்கும் (Silver Wire Drawing Machines) இயந்திரங்களும் வாங்கப்பட்டன.

(இ) இல்லை.

திரு. வி.கே. கோதண்டராமன்: சார், தமிழ்நாட்டிற்குத் தேவைப்படுகின்ற சரிகை 49 எஸ்.டபிள்யூ.ஜி. என்கிற மெல்லிய சரிகையாகும். அதற்குப் பதிலாக, 47 எஸ்.டபிள்யூ.ஜி. என்கிற கனமான சரிகையைத் தயாரிக்கின்ற மெஷினரிகளைக் கண்மூடித்தனமாக......................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி இல்லை, யோசனை சொல்லுகிறீர்கள்.

திரு. வி.கே. கோதண்டராமன்: தேவையான மெஷினரிகளை வாங்குவதற்குப் பதிலாக, ஏதேதோ மெஷினரிகளை வாங்கி இப்போது அது செயல்படவில்லை. இதிலே உற்பத்தி செய்யக்கூடிய இந்தக் கனமான சரிகை தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை என்கிற காரணத்தால், பல மெஷின்கள் இப்போது வேலை செய்யாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது உண்மையா? இது விஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டு வாங்கப்பட்ட இந்த எந்திரம் பழுதுபட்ட நிலையிலே இருந்தது. அந்த எந்திரத்தை தயாரித்த நிறுவனம் ஒரு ஜப்பான் நிறுவனமாகும். அந்த நிறுவனத்தோடு தொடர்பு கொண்ட போது, அது கலைக்கப்பட்ட செய்தி சொல்லப்பட்டது. அந்த நிறுவனத்தால் செய்யப்பட்ட அந்த எந்திரத்திலுள்ள உருளை எந்த உலோகத்தினால் செய்யப்பட்டது என்பதைக் கண்டுபிடிக்காத நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் குறைபாடுகள் ஏற்பட்டது. இப்போது கோவையிலே, டெக்ஸ்டூல் கம்பெனியோடு தொடர்பு கொண்டு

அதைப்போன்ற மாற்று உருளைகள் தயார் செய்யப்பட்டு, 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் நமக்குத் தேவையான நல்ல சரிகைகளை உற்பத்தி செய்வதன் மூலம், 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை 29 இலட்சம் ரூபாய் இலாபத்தில் இந்த நிறுவனம் இயங்கிக்கொண்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். லட்சுமிநாராயணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழ்நாடு சரிகை நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற சரிகை, வெளி மார்க்கெட்டிலே உள்ளதைக் காட்டிலும் குறைந்த விலையில் விற்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. சுப்புலட்சுமி செகதீசன்: வெளி மார்க்கெட்டில் விற்கக்கூடிய சரிகையின் விலைக்கும் அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற சரிகையின் விலைக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா: சரிகை விலை இரண்டு மடங்காக ஏறி குஜராத்தில் இருப்பவர்கள் கொள்ளையடிக்கும் நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்க்க குஜராத்தில் தயாரிக்கப்படுகிற அந்த முறையை குஜராத்திற்குச் சென்று கண்டு பிடித்து தயாரிக்க நிறைய வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்த அரசு முன்வருமா? தமிழ்நாட்டில் வெள்ளி சரிகை தயாரிப்பதில் அரசு ஈடுபட்டிருக்கிறதா?

மாண்புமிகு திருமதி. சுப்புலட்சுமி செகதீசன்: தமிழ்நாடு வெள்ளி சரிகை நிறுவனத்தின் மூலம் முன்பு சூரத்திலிருந்து இழைகளை வாங்கி தங்க முலாம் கொடுக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. இப்போது வெள்ளிக் கட்டிகளில் இருந்து நாமே வெள்ளி இழைகளை உற்பத்தி செய்து அந்த இழைகளுக்குத் தங்க முலாம் பூசப்பட்டு தேவையான சரிகைகளை இந்த நிறுவனம் தயாரித்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: கூட்டுறவு முறையில் இயங்கும் பட்டு கைத்தறி நிறுவனங்கள் இந்தச் சங்கங்களின் மூலமே சரிகை வாங்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திருமதி. சுப்புலட்சுமி செகதீசன்: இப்போது அந்த முறை அமலில் இருந்து வருகிறது.

[1979 பிப்ரவரி 14

<u>டாக்டர் கே. சமரசம் :</u> இந்தச் சரிகை நிறுவனம் இலாபத்தில் நடைபெறுகிறதா ? அல்லது நஷ்டத்தில் நடைபெறுகிறதா ? விவரம் அறிவிக்க இயலுமா ?

<u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :</u> 1977 ஆம் ஆண்டு வரை 1·35 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரை 0·29 லட்சம் ரூபாய் லாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> இந்தச் சரிகை உற்பத்தி செய்வதற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு தங்கம், எவ்வளவு வெள்ளி இன்றைக்கு அதற்கு ஒதுக்கப்படுகிறது ? அந்தத் தொழிற்சாலைக்கு நிர்ணயிக்கப்பட்ட திறன் 400 மார்க். ஆனால் அதற்குப் பதிலாக 200 மார்க்தான் அங்கே உற்பத்தி உள்ளது என்று சொல்லப்படுகிறது. 400 மார்க் அளவுக்கு உற்பத்தியைக் கொண்டு வருவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

<u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :</u> உற்பத்தியின் அளவு 993 மார்க்குகள் என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிறுவனத்திற்கு மொத்தம் எவ்வளவு தங்கம், வெள்ளி தேவைப்படுகிறது என்ற விவரக் குறிப்பு இல்லை. பின்னர் சேகரித்துத் தருகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. என். வரதராஜன் :</u> தமிழ்நாட்டில் கைத்தறிக்கு முக்கியமாகத் தேவைப்படுகிற இந்தச் சரிகை ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு தேவைப்படுகிறது. வெளி மாநிலத்திலிருந்து எவ்வளவு இறக்குமதி செய்யப்படுகிறது. இறக்குமதி செய்கிற இடத்திலிருந்து கொள்ளையடிக்கும் விலையில் வாங்க வேண்டிய நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. முழுத் தேவையையும் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்ய திட்டம் இருக்கிறதா ?

<u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :</u> இப்போது தமிழ்நாட்டு சரிகை நிறுவனத்தினுடைய இயந்திரங்கள் பழுது பார்க்கப்பட்ட நிலையில் எல்லா இயந்திரங்களும் நன்றாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதுவரை இந்த நிறுவனம், தயாரிக்கும் சரிகை, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதுமானதாக இல்லை. இங்கே இருக்கும் ஏஜென்டுகள் சூரத்திலிருந்து வாங்குவதன் மூலம் கொள்ளை லாபம் அடிப்பதாகப் புகார்கள் வந்ததன் அடிப்படையில் தமிழக அரசு ஒரு குழுவை நியமித்து அந்தக் குழு நேரடியாக சூரத்திற்குச் சென்று அங்கிருந்து சரிகைகளை பெற்று வரு

1979 பிப்ரவரி 24]

றது. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் நமக்குத் தேவையான சரிகைகளை நாமே உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலை இந்த நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* *

<u>திரு. இ. கணேசன் :</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக்கூடாது. இந்தக் கேள்வியை அவை நடவடிக்கைகளில் இருந்து நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

<u>திரு. எஸ். ஜே. இராமசாமி :</u> சரிகை உற்பத்தி செய்யக் கூடிய இடமாக இருக்கக்கூடியது காஞ்சிபுரம் நகரமாகும். காஞ்சிபுரத்தில் சரிகை தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று முன்போ திட்டம் இருந்தது. அது என்ன நிலையில் இருக்கிறது ? அதை ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

[முற்பகல் 10–10]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தாங்கள் கேட்ட கேள்வி பட்டுத் தொழிற்சாலை பற்றியா ? அல்லது சரிகைத் தொழிற்சாலை பற்றியா? எதைக் கேட்கிறீர்கள் ?

<u>திரு. எஸ். ஜே. இராமசாமி :</u> சரிகையைத் தான் கேட்கிறேன். சரிகையை வாங்குவதற்காக சூரத்திற்குச் சென்று பல சொசைட்டிகள் வாங்குகிறார்கள். அப்படி சங்கங்கள் மூலமாக வாங்குகிற போது அதை கண்காணிக்கை செய்ய ஏற்பாடு செய்யும்படி அரசு உத்திரவிடுமா ?

<u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :</u> தலைவர் அவர்களே, முன்பு ஒவ்வொரு சங்கமும் தனிப்பட்ட முறையில் சூரத்திற்குச் சென்று சரிகையை வாங்கி வந்தார்கள். அதனால் சில முறைகேடுகள் ஏற்பட்டன என்பதை அறிந்த பிறகு இப்போது அதற்காக ஒரு குழுவை அரசாங்கம் நியமித்து அந்தக் குழு தான் இப்போது எல்லாச் சங்கங்களுக்கும் தேவையான சரிகையை சூரத்திற்குச் சென்று வாங்கிவந்து கொடுக்கிறது. இதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி.

*வினா எண். 177— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் இருந்து அபராத வட்டி தள்ளுபடி செய்யுமாறு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :

(அ) வீடு கட்டுவதற்காக அரசு வழங்கியுள்ள கடன்கள் மீதான அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யுமாறு கோரிக்கைகள் வந்துள்ளன.

(ஆ) 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் வரை ஒவ்வொரு கடனிலும் சேர்ந்திருந்த அபராத வட்டியை தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும், இந்தப் பொருள்பற்றி வந்துள்ள கோரிக்கைகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, வீடு கட்டுகிற சங்கங்களைத் தவிர, மற்ற கூட்டுறவு சங்கங்கள் தாங்கள் வாங்கிய கடனுக்காக வட்டியைக் கட்ட முடியாத நிலையில் இருக்கும்போது அபராத வட்டி போடுவது சரியல்ல, முறையிலே அதைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டு கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதைத்தான் நான் கேட்டிருக்கிறேன். ஆனால், அமைச்சர் அவர்கள் வீடு கட்டும் சங்கங்கள் பற்றி பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்கள் வியாபாரத்திற்காக வாங்கிய கடனைப் பற்றித்தான் கேள்வி.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கைகள் எதுவும் அரசுக்கு வரவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாநில அரசு மத்திய அரசிடம் வாங்கிய கடனுக்கும் மத்திய அரசு உலக வங்கியிலிருந்து வாங்கிய கடனுக்கும் வட்டியைக் கட்ட முடியாத நிலைமை இருக்கும்போது அபராத வட்டி வசூலிப்பது சரிதானா ? உண்டான வட்டியையே கட்ட முடியாத போது அபராத வட்டியைக் கேட்பது சரியாக இருக்காது. ஆகவே, இந்த அபராத வட்டி என்பதை அறவே எந்தக் கடனானாலும் தள்ளுபடி செய்ய வழங்குவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, வினாக்கள் தற்போது இல்லை, தமிழ்க் கேள்வி போடவும்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, பல கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து இந்த அபராத வட்டியை வசூலிக்கக் கூடாது என்று கோரிக்கை வந்திருக்கிறது. பாபநாசம் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறது. அதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, கோரிக்கை வந்திருந்தால் அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நேற்றைய்த அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 2 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். வரவேற்கக் கூடிய அம்சம். பரமக்குடியிலே 5 ஆயிரம் கைத்தறி நெசவாளர் குடும்பங்கள், 27 கூட்டுறவு சொசைட்டிகள் இருக்கின்றன. ஆகவே, அவர்களுக்கு இந்தத் திட்டத்திலே இடம் உண்டா? வீடு கட்டுவதிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் என்னுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டும். பொதுவாக அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய கோரிக்கை வந்துள்ளதா என்று கேட்கப்படுகிறது. தாங்கள் குறிப்பிட்ட இடத்தைப் பற்றிக் கேட்டால் எப்படி அமைச்சர் பதில் சொல்ல முடியும்? அபராத வட்டி வாங்குவது சரியா அல்லது முறையல்ல என்ற முறையில் கேட்டால் போதும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, பரமக்குடியிலிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறது. பதிப்பிற்குரிய ஏராளமாக அவர்கள் கைத்தறிப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வெளி நாடுகளுக்கு அனுப்பப்படும் என்று சொன்னார்களே அது எந்த நிலையிலே இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி எழுப்பியிருக்கிறார்கள். மத்திய அரசு 1,500 ரூபாய் மானியமாகக் கொடுக்க ஒப்புக் கொண்டால் தமிழ்நாட்டிலே அந்தத் திட்டத்தை எந்த எந்தச் சங்கங்களுக்கு கொண்டுவர முடியும் என்பது பரிசீலிக்கப்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பரமக்குடியிலே ஏழை நெசவாளர்கள் அதிகமாக

[1979 பிப்ரவரி 24

இருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்தில் இருந்துவருகிறது. எந்தச் சங்கங்கள் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனவோ எந்தச் சங்கங்கள் இலாபத்தில் இயங்குகின்றனவோ அந்தச் சங்கங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு செ. சிவசாமி : பரமக்குடி பற்றி......

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சோஷலிச நாடுகளுக்குக் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்வது பற்றிய பரிசீலனை அரசின் செயற்குறிப்பில் இருந்து வருகிறது.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, ...
(குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆறுமுகம் அவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசக் கூடாது. அவையில் மரபைக் காப்பாற்றுங்கள். அவர்கள் அருமையான சட்டமன்ற உறுப்பினர். மரபைக் கட்டிக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் கூறைநாட்டில் உள்ள கைத்தறி கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக அங்கே கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளுக்கு அபராத வட்டித் தொகை நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னால் கொடுக்கப்பட்டது. அப்படிக் கொடுக்கப்பட்டதற்கான பதிலில் மாண்புமிகு அமைச்சரவர்கள் பெரும்பாலும் அதைத் தள்ளுபடி செய்ய அரசு ஆலோசித்து வருகிறது என்று அப்பொழுது அறிவித்திருந்தார்கள். எனவே, அதனை யொட்டி மாயூரம் கூறைநாட்டில் உள்ள கைத்தறி கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்ற அந்தக் கடனுக்கு அபராத வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, 27-4-70 வரை சேர்ந்த அபராத வட்டிகளைத் தள்ளுபடி செய்து அரசு ஆணை வழங்கிவிட்டது. அதற்குப் பிறகு இந்த அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகள் அரசுக்கு வருகின்றன. இந்தக் கோரிக்கையில், அரசுக் கடன் மீதான வட்டி பூராவையும்

1979 பிப்ரவரி 24]

தள்ளுபடி செய்து அசல் தொகையைக் கடைபோன தவணைகளில் பிடிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்துள்ளது. இதை நிதித் துறை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இந்த வட்டியையும் கடனையும் நீண்டகாலத் தவணை முறையில் செலுத்த முடியுமா என்ற செயற்குறிப்பை இப்பொழுது இந்தத் துறை பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை அளித்தல்.

கீழ்த்தஞ்சை விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 82-வது விதியின் கீழ் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியைச் சார்ந்த நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம் சீர்காழி ஆகிய ஏழு வட்டங்களில் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பு வேளாண்மைப் பருவத்தின்போது இச்சட்டத்தின்படி கொடுக்கப்பட வேண்டிய ஊதிய விகிதங்களை மாற்றி அமைக்க விவசாயத் தொழிலாளர்களின் முறையீடுகள் மீது, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், நில உடைமையாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு முத்தரப்புக் கூட்டம் நடத்தினார்கள். ஆனால் ஒரு உடன்பாடும் ஏற்படவில்லை. ஆகவே அரசு, இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூலி விகிதங்களை மறுபரிசீலனை செய்வதற்காக அரசு ஆணை எண் 1600, வருவாய், 15-7-1978-ம் நாளில் ஓர் ஒரு நபர் கமிஷனை நியமித்தது. வருவாய் வாரிய உறுப்பினர் திரு. ராமச்சந்தர் இக்கமிஷனாக நியமிக்கப்பட்டார். 1978, ஜூலை மாதத்தின் சந்தை விலையைக் கணக்கிற்கொண்டு ஒரு இடைக்கால அறிக்கையை கமிஷன் அளித்தது. அறிக்கையை அரசு நிர்ணயித்த விலையைக் கருத்திற்கொண்டு, பூராவும் பணமாக தினம் வழங்கப்படும் பொழுது 50 காசுகளை உயர்த்திக் கொடுக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும்.

[திரு. எஸ். ஆர். சோமசுந்தரம்] [1979 பிப்ரவரி 2?]

நில உடைமையாளர்கள் சார்பிலும், தொழிலாளர்கள் சார்பிலும் உள்ள முறையீடுகளை ஒரு நபர் கமிஷன் விசாரித்தது. ஒரு நபர் கமிஷன் இருதரப்புக்களையும் விசாரித்து இடைக்கால பரிந்துரைகளை அரசிடம் அளித்தது. ஆனால் அது வரையில் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்களுக்கு ஒரு கூலி, பெண்களுக்கு ஒரு கூலி என்று இருந்து வந்தது உங்களுக்குத் தெரியும்.

பெரியவர்களைப் பொறுத்த வரையில் உழுதல், விதை தெளிப்பது, நாற்று பிடுங்குதல், நடவு, கால்வாய்களைப் பண்படுத்திச் சீராக்குதல், பாதுகாத்தல், விதை தெளிப்பதற்கும் நாற்று நடுவதற்கும் நிலங்களைப் பண்படுத்துதல், நிலத்தில் விளைபொருட்கள் மற்றும் இதர வேளாண்மையுதவிப் பொருட்களை மனித சக்தி மூலம் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்வது.

[முற்பகல் 10-20]

ஆகிய வேலைகளில் சம்பந்தப்பட்ட நாட்களுக்கு ஆண்கள் செய்தாலும் சரி பெண்கள் செய்தாலும் சரி - தினசரி 7 லிட்டர்கள் நெல்லும், ரூ. 2.80-ம்--முதலில் இருந்தது உங்களுக்கு தெரியும் அல்லது ஜூன் முதல் தேதி முதல் செப்டம்பர் 30-ம் தேதி வரையில் தினசரி ரூ. 7.20-ம், அக்டோபர் முதல் தேதி முதல் மே மாதம் 31-ம் தேதி வரை தினசரி ரூ. 6.60-ம்.

(2) நாற்று நடுதல், களை எடுத்தல் அல்லது மேலே குறிப்பிடாத இதர விவசாய வேலைகளுக்கு ஒரு தினத்திற்கு 6 லிட்டர்கள் நெல்லும், ரூ. 1.80-ம் அல்லது ஜூன் மாதம் முதல் தேதி முதல் செப்டம்பர் 30-ம் தேதி வரை ஒரு தினத்துக்கு ரூ. 5.60-ம் அக்டோபர் முதல் தேதி முதல் மே மாதம் 31-ம் தேதி வரை ஒரு தினத்துக்கு ரூ. 5-ம் கொடுக்கப்படும்.

சிறியவர்கள் எல்லா விவசாய வேலைகளுக்கும் 4 லிட்டர்கள் நெல்லும், ரூ. 1.50-ம் கொடுக்கப்படும். அல்லது ஜூன் முதல் தேதி முதல் செப்டம்பர் 30-ம் தேதி வரை ஒரு தினத்துக்கு ரூ. 4 கொடுக்கப்படும். அக்டோபர் முதல் தேதி முதல் மே மாதம் 31-ம் தேதி வரை ஒரு தினத்துக்கு ரூ. 3.60 கொடுக்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை

உழுவது தவிர இதர வேலைகளுக்கு வேலை நேரம் ஒரு நாளுக்கு 7 மணி நேரமும், உழும் வேலைக்கு ஒரு நாளைக்கு 5 மணி நேரமும் ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரவில் வேலை செய்யப் பணிக்கப்படும் நாட்களுக்கு 50 சதவிகிதம் கூடுதல் கூலி உயர்வாகக் கொடுக்கப்பட வேண்டும்.

அறுவடை விளைச்சலின் நெல்லில் ஒவ்வொரு 54 லிட்டர்களுக்கும் 6 லிட்டர்கள் பங்கு கொடுக்கப்படும்.

1979 பிப்ரவரி 21] [திரு. எஸ். ஆர். சோமசுந்தரம்]

இவ்வூதிய அமைப்பு முறை வேலையிலோ அல்லது ஒப்பந்த வேலையிலோ பங்கு பெறும் ஆண் பெண் இருபாலருக்கும் சமமான ஊதியத்தை அளிக்க வகை செய்துள்ளது. மேற்கண்ட பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை இம்மன்றத்துக்கு அறிவிக்கிறேன்.

(திருவாளர்கள் கே. இராமலிங்கம், கோ. இளங்கோவன், ஏ. சுப்பிரமணியன் ஆகியோர் எழுந்து நின்றனர்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சருடைய அறிக்கை மீது யாரும் கேள்விகள் கேட்க முடியாது. ஏதாவது தகவல்கள் வேண்டும் என்றால், எழுதிக் கொடுங்கள்.

திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு அமைச்சர்கள், ஒரு அறிவிப்பினை தந்தார்கள். நன்றி. அதில் பெரியவர்கள் சிறியவர்கள் என்று......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் 'ஸ்டேட்மெண்ட்' மீது கேள்விகள் கேட்கக் கூடாது. எழுதிக் கொடுங்கள்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய 'சஜஷன்' என்னவென்றால், அதாவது 'ப்ரொசீஜரில்' அப்படிக்கான் செய்வார்கள். 'லோக் சபா'வில் அஜெண்டாவில் Such and such a Minister will make such and such a statement என்று போட்டுவிடுவார்கள். இங்கு அப்படி செய்ததாகத் தெரியவில்லை. It is a surprise. இனிமேல் 'லோக் சபா' ப்ரொசீஜரை அப்படிச் செய்வது நல்லது. அடுத்தது, அந்த 'ஸ்டேட்மெண்ட்' காப்பியும், அமைச்சருடைய ஸ்டேட்மெண்ட் காப்பியும் must be circulated to all the members.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப் பற்றி வேண்டுமென்றாலும் ரூல்ஸ் கமிட்டியிலே அப்படி பரிசீலனைக்கு வரும்போது, உங்களுடைய சஜஷனை கமிட்டியில் எடுத்துச் சொல்லி, தலைவரோ மாற்றலாம்.

திரு. ரா. உமாநாத்: காப்பியை சர்குலேஷன் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைக் கொடுக்கச் சொல்லலாம்.

திரு. ரா. உமாநாத்: கல்வி அமைச்சர் அவர்கள் நேற்று ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளை இன்றைக்கு 5 மணிக்கு சந்தித்து பேசப்போவதாகச் சொன்னார். அந்தச் சந்திப்பு சம்பந்தமாக என்ன ஆயிற்று என்று ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒத்தி வைப்பு தீர்மானம் நடந்து முடிந்த பிறகு மற்ற விஷயங்களைப் பேசிக் கொள்ளலாம். கேள்வி நேரம் முடிந்த பிறகு ஒத்தி வைப்புத் தீர்மானம்தான். பிறகு இதை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஒ. சுப்பிரமணியன்: இது வேறு விஷயம்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை முடிந்த பின்னால் எடுத்துக் கொள்ளலாம். தயவுசெய்து அமருங்கள்.

3. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.

(அ) கும்பகோணம் கல்லூரி ஆசிரியர்களும், ஆசிரியைகளும் கைது செய்யப்பெறுவதாக கூறப்பெறுவது குறித்து :

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : ''கும்பகோணம் அரசினர் ஆடவர் கல்லூரி ஆசிரியர்கள், கும்பகோணம் அரசினர் பெண்கள் கல்லூரி ஆசிரியைகள் 22—2—79 அன்று ஐ.பி.சி. சட்டம் 143, 341, 188 ஆகிய பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இதையொட்டி மாணவர்களும் வேலை நிறுத்தம் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பொது மக்களின் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது. இப்பதட்ட நிலை குறித்து விவாதிக்க'' பேரவையின் இதர அலுவல்கள் ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு

1. திரு. செ. இராமலிங்கம்
2. திரு. கோ. இளங்கோவன்
3. திரு. கூ. ச. முருகேசன்

ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன், திரு. செ. இராமலிங்கம்,

திரு. ரா. கிருஷ்ணன் : ஏற்கனவே இன்றைக்கு இது சம்பந்தமாக..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள், இது முடியட்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : இதையும் சேர்த்து எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சேர்த்து எடுக்க முடியாது.

* திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, குடந்தை ஆடவர் கல்லூரி ஆசிரியர்களும், பெண்கள் கல்லூரி ஆசிரியைகளும் நேற்றைக்கு முதல் நாள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். அதே போன்ற நிலையிலும் ஆசிரியர்கள் சென்னையிலும் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப் பட்டிருக்கிறார்கள். ஆனால் குடந்தை ஆசிரிய, ஆசிரியைகள் விடுதலை செய்யப்படவில்லை, அவர்களில் 2 பேர் கர்ப்பிணிப் பெண்கள், 6 பேர் கைக் குழந்தைகளுடன் கைது செய்யப் பட்டுள்ளனர்— அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அவர்கள் மீது கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டு வழக்குகள் போடப்பட்டுள்ளன. அவர்கள் வேலூர் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

புது கல்வி முறையினால் கல்லூரி ஆசிரியர்கள் எவருக்கும் வேலை இழப்பு *ஏற்படாது என்று இந்த அரசுஆணை பிறப்பிக்க வேண்டும். கல்வி அமைச்சரின் உறுதி மொழி ஆணையாக பிறந்தால்தான் ஆசிரியர்களுக்கு நிம்மதி பிறக்கும். புரையோடிய பிறகுதான் புண்ணை கவனிப்போம் என்ற இந்த அரசின் அலட்சிய போக்கு மாற வேண்டும். அறிவை வளர்க்கும் ஆசிரிய சமுதாயத்தினரின் வாழ்வுப் பிரச்னையைக் கவனிக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது. எனவே இதை உடனே முக்கிய கோரிக்கையாக ஏற்று இன்றைக்கே பரிகாரம் காண வேண்டும். அத்தோடு மட்டும் அல்லாது குடந்தை கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டியாக வேண்டும். இது பற்றி விவாதிக்க இந்த அவையின் வேறு நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே அனைத்துக் கல்லூரிகள் சம்பந்தமாக நான் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எடுத்துக் கொண்ட தீர்மானத்திற்கு அமைச்சர் பதில் சொல்லட்டும். அதற்குப் பிறகு நீங்கள் பேசலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் கொடுத்ததையும் சேர்த்து எடுத்துக் கொண்டால் மொத்தமாக பதில் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படி சேர்த்து எடுத்துக் கொள்ளமுடியாது. 42-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்ட தீர்மானத்தில் ஒரு உறுப்பினர் கருத்தைச் சொன்ன பின்னர், அமைச்சர் பதில் சொல்வதுதான் முறையாக இருக்கும். . இந்த முறையை மாற்ற வேண்டாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. தனியாகக் கேட்பதற்கு பதிலாக நான் கேட்பதையும் சேர்த்து விட்டால் அமைச்சர் சேர்த்து பதில் சொல்லட்டும் என்று நினைத்தேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இரண்டு வகையான ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. ஒன்று கும்பகோணம் கல்லூரியை மட்டும் பொறுத்தது. மற்றொன்று பொதுவாக அனைத்துக் கல்லூரிகளில் உள்ள நிலமையை குறித்தது. தாங்கள் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தனித்தனியாக பதில்கூற சௌகரியமாக இருக்கும்.

[முற்பகல் 10—30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தனித்தனியாக எடுத்துக்கொள்ள விரும்புகிறாரா, மொத்தமாக எடுத்துக்கொள்ள விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தனித்தனியாக எடுத்துக் கொள்கிறேன். கும்பகோணம் கல்லூரி பற்றி இப்போது சொல்லிவிடுகிறேன்.

இம்மாதம் 19-ம் தேதி முதல் கல்லூரி ஆசிரியர்கள் சில கோரிக்கைகளை வற்புறுத்தி போராட்டம் நடத்தி வருகிறார்கள். அரசு ஏற்கனவே அவர்களுடைய குறைகளைக் கவனித்து, குறைகளை அகற்றத் தேவையான நடவடிக்கை எடுக்கும் என்றும். எனவே ஆசிரியர்கள் இப்போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும் வேண்டியது. இருந்தும் 22-2-1979-ல் நடந்த போராட்டத்தில் மாநிலத்தில் பல பகுதிகளிலும் கல்லூரி ஆசிரியர்கள் அரசு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்னும், கோட்டாட்சியாளர் மற்றும் வட்டாட்சியாளர் அலுவலகம் முனனும் மறியல் செய்ததின் விளைவாக கைது செய்யப்பட்டார்கள்.

தஞ்சாவூா மாவட்டத்தில் உள்ள கும்பகோணத்தில சுமார் 130 ஆசிரியர்களும், 69 ஆசிரியைகளும் கைது செய்யப்பட்டார்கள். சாதாரணமாக கைது செய்யப்பட்ட ஆசிரியர், ஆசிரியைகளும் மாலையில் விடுவிக்கப்படுகிறார்கள். கும்பகோணத்தில் 130 ஆசிரியர்களும், 66 ஆசிரியைகளும் விடுதலையை ஏற்க மறுத்துவிட்டனர். அரசு ஆசிரியர்களின்பால் உள்ள மரியாதை காரணமாக கைது செய்த ஆசிரியர்களை மாலையில் விடுவித்துவருகிற

நடைமுறையைக் கடைப்பிடித்து வருகிறது. எனவே, இந்நிலைக்கு அரசு பொறுப்பல்ல என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். என்னுடைய இந்த விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

(திரு. மச. இராமலிங்கம் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதி 42-ன் கீழ் அமைச்சர் அறிக்கை அளித்த பின்பு கேள்விகள் கேட்கக் கூடாது, உட்காருங்கள். மாண்புமிகு கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை எனபதால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(ஆ) கல்லூரி ஆசிரியர்களது போராட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம், மறியல் செய்து கொண்டிருப்பதும், 23—2—1979 அன்று அமைச்சருடன் பேச்சு வார்த்தை மூலம் சுமுகமான முடிவு ஏற்படாமலும், ஆசிரியர்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவது என்று முடிவு செய்து, போராடுவதாலும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு திரு. ஆர். கிருஷ்ணன், திரு. ஆர். உமாநாத், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கின்ற சொரணம், திரு. என். வரதராஜன், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. ஆர். கிருஷ்ணன்.

திரு. கே. கந்தசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்...... துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே முதன் முதலில் இது சம்பந்தமாக ரூல் 42-ன கீழ் நோட்டீஸ் கொடுத்து இருந்தேன். அதை 41-வது விதியின் கீழ் என்று மாற்றிவிட்டார்கள். இப்போது ரூல் 42-ன் கீழ் அனுமதிக்கிறீர்கள். நான் கொடுத்ததை மாத்திரம் மாற்றியது முறைதானா ?

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நானும் இரண்டு நாட்களுக்கு முன்பு கொடுத்தேன்.

[1979 பிப்ரவரி 24

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு திரு. கந்தசாமி, திரு. மு. அம்பிகாபதி ஆகியோர் கொடுத்தி ருந்த தீர்மானம் விதி 41-ன் கீழ் அவையில் ஏற்கனவே எடுத்துக் கொள்ளப்பட்டு விட்ட காரணத்தால், இன்றைக்கு யார் யார் கொடுத்தார்களோ அவர்கள் பெயர் மட்டும் அறிவிக்கப்பட்டது. இதில் ஒழுங்குப் பிரச்னை இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவரவர்களே, இந்தப் புதிய கல்வி முறை திட்டத்தால் இந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்கு வேலை பறிபோகும் என்ற சந்தேகம் எழுந்து, அதற்குத் திருப்தி கரமான பதில் இந்த அரசிடம் இருந்து வரும் என்று எதிர் பார்த்தார்கள். ஏற்கனவே, இங்கே பல முறை சில வாக்குறுதி கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், அந்த வாக்குறுதிகள் சரியான முறையில் நிறைவேற்றப்படாமல் இருக்கிற காரணத்தால், அவர் கள் நம்பிக்கை இழந்து அவர்கள் போராடிய நேரத்தில் கடந்த செப்டம்பர் மாதத்தில் சில உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட பின்பும், அவைகள் சரி யாக நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக, தனியார் கல்லூரி களைப் பொறுத்தவரையில் அந்த ஆசிரியர்கள் வெளியேற்றப் படுகிறார்கள். அரசுக் கல்லூரிகளிலும் இப்படிப்பட்ட அவல நிலை இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். அன்று சொல் லப்பட்டது, நேரடியாக அந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவோம் என்று. அது நிறைவேற்றப்படவில்லை. மூன்று மாதம் டிபாசிட் கட்டவேண்டும். அந்தப் பணம் சி.இ.ஓ. மூலமாக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் என்று சொன்னார்கள். அதுவும் செயல்படுத்தப்படவில்லை. மேலும், 1,200 ஆசிரி யர்கள் 10 (ஏ) (1) ஆக இருக்கிறார்கள். வேலை நிரந்தரம் இல்லை. அவர்களில் 300 பேரை இப்போது ரெகுலரைஸ் செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கி றது. மீதம் உள்ள ஆசிரியர்கள் 900 பேர் நிலமை என்ன? அதோடு, அந்த ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், சமீபத்தில் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த மேல் நிலைக்கல்வி திட்டத்தி னால் பலருக்கு பாதிப்பு ஏற்படும் நிலை இருக்கிறது.

அதை மாறி, மாறி கேட்டாலும்கூட ஏதோ நாங்கள் புதிய வழிமுறைகளைக் கொண்டுவருகிறோம், கொண்டுவருகிறோம் என்று சொல்கிறார்களே தவிர, நிரந்தரமாக இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறோம் ; இதனால், ஆசிரியர்களுக்குப் பாது காப்பு ஏற்படும் என்று திருப்திகரமாக அமைச்சரின் பதில் இல்லை.

நேற்றுகூட பேச்சுவார்த்தையில் கூறும்போது சம்பளத்தை நேரடியாக வழங்குவோம் என்ற வாக்குறுதி ஒத்துக்கொள்ளப் படவில்லை. பேச்சு வார்த்தையில் கலந்துகொண்டு கல்லூரி இயக்

1979 பிப்ரவரி 24] [திரு. ரா. கிருஷ்ணன்]

குநர் அது சாத்தியம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, இப்படிப்பட்ட ஒரு நிலையில் அவர்கள் திருப்திகரமாக பதிலளிக்கவில்லை என்ற காரணத்தால் மாநிலம் பூராவும் தொடர்ந்து போராடுவது என்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கி றார்கள். இந்த நிலையில் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார் கள் ; தேர்வுகள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த நேரத் தில் இந்த முடிவு சரியல்ல. ஆகவே, இது ஒரு முக்கியமான பிரச்னையாக இருப்பதால், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது, கடந்த 5, 6 நாட்களாக நடைபெற்றுக்கொண்டி ருக்கின்ற கல்லூரி ஆசிரியர்களுடைய போராட்டம் ஒரு சுமுக மான முறையில் அவசியம் முடிவு பெற்றாக வேண்டும். இல்லை என்றால், அது அரசுக்கும் ஒரு பிரச்னையாக இருக்கும் ; ஆசிரி யர்களுக்கும் ஒரு பிரச்சனையாக இருக்கும்.

அதுமட்டுமல்ல வருகின்ற மார்ச் மாதம் 20-ந் தேதி கல்லூரி மாணவர்களுக்கு பரீட்சை ஆரம்பிக்கும் என்று நாள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்னை தீர்க் கப்படவில்லை என்றால் மாணவர்கள் எந்த அளவுக்குப்பாதிக்கப் படுவார்கள் என்பதை இந்த அரசு நன்கு உணரும் என்று எண்ணு கிறேன். ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை மீண் டும் மீண்டும் நாங்கள் கொண்டு வருகிறோம்.

இப்போது மிக முக்கியமாக இருக்கிற பிரச்னை ஆசிரியர் களுக்குப்பணிப் பாதுகாப்பு வேண்டும் என்பது. அதற்கு அமைச்ச ரவர்கள் ஆசிரியர்களிடம் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ''ப்ரொப்போசல்'' கேட்டோம், அவர்கள் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். ஆசிரியர்கள் கொடுக்கவில்லை என்றாலும் அரசாங்கம் தானாகவே ஒரு ப்ரொப்போசலை ஆசிரியர்கள் முன் வைத்தால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா, இல்லையா என்பது தெரியும்.

அதோடு ''டைரக்ட் பேமென்ட்'' ஆசிரியர்களுக்கு நேரடி யாகச்சம்பளம் கொடுக்க வேண்டுமென்று ஒரு பிரச்சனை இருக்கி றது. அவர்களுக்கு அரசுதான் சம்பளம் கொடுத்துக்கொண்டி ருக்கிறது. செக் மூலமாகக் கொடுப்பதாக நான் அறிகிறேன். ஆனால், தனியார் கல்லூரிகளில் ''கரஸ்பான்டன்ட்'' மூலமாகக் கொடுப்பதால் சில முறைகேடுகள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்க நேரடியாக அரசே கொடுக்க வேண்டுமென்று சொல்கி றார்கள். இது நியாயமான கோரிக்கை. இதனால், அரசுக்குக் கூடுதலான செலவுகூட ஏற்படப்போவதில்லை.

[திரு, ஜே. ஜேம்ஸ்] [1979 பிப்ரவரி 24

அடுத்தபடியாக 10 (ஏ) (1) ஆசிரியர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதோடு குடும்ப நலத் திட்டமும் அவர்களுக்கு அமுல்படுத்தப்பட வேண்டும்; எச்.ஆர்.ஏ. கொடுக்க வேண்டுமென்ற பிரச்னைகள் எல்லாம் இருக்கின்றன. நேற்றைய தினம் மாண்புமிகு அமைச்சரவர்களும், கல்லூரி கல்வி அதிகாரிகளும் ஆசிரியர்களும் இது சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்தினார்கள். ஆனால் நான் கேள்விப்பட்டது அந்த பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடியவில்லை என்று. அரசு தரப்பில் ஆசிரியர்களின் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்ற சூழ்நிலை இருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

நான் கூறுவதெல்லாம் கடந்த 5, 6 நாட்களாக ஆயிரக்கணக்கான கல்லூரி ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டு, சிலர் விடுதலை செய்யப்பட்டிருந்தாலும் சிலர் சிறையிலே வாடுகின்றனர். சில ஆசிரியர்களை போலீஸ் லாரிகளில் ஏற்றிச் செல்வதற்குப் பதிலாக மண் அடிக்கிற லாரிகளில் ஏற்றிச் சென்று அவர்கள் அவமதிப்பு செய்யப்பட்டதாக நான் அறிகிறேன். இப்படிப்பட்ட போக்குகள் இல்லாமல், இந்த பிரச்சனை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும்.

நேற்றைய தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றிகரமாக இல்லாத காரணத்தால் இனிமேல் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அல்லது அனைத்து சட்டமன்ற கட்சித் தலைவர்களையும் அழைத்து அரசுத் தரப்பில் பேசத் தயாராக இருந்தால் ஒரு வேளை இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வாய்ப்பு இருக்கும் என்று கூற விரும்புகிறேன். ஆகவே, அரசு இந்த கருத்தை ஏற்றுக்கொண்டால் நல்லது. இந்தப் பிரச்னையை நாம் விரிவாக விவாதித்து முடிவு எடுப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கடந்த 22ஆம் தேதியிலிருந்து கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி வருவதை நாம் எல்லாம் அறிவோம். அதன் காரணமாக பல கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 10-40]

அதனாலே மாணவர்கள் தங்களுடைய படிப்பை, படிக்கின்ற நல்ல வாய்ப்பை இழந்து இன்றைய தினம் வீட்டிலே இருக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கல்லூரிகளைப் பொறுத்த மட்டிலே மாணவர்கள் சில சமயங்களில் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். ஆசிரியர்கள் சில சமயம் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இந்த அடிப்படையில் கல்லூரிக் கல்வி பாதிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்

1979 பிப்ரவரி 24] [திரு. செ. அரங்கநாயகம்]

வதைப் போலவே நாங்களும் உணருகிறோம். ஆகவே அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பது இந்த அரசினுடைய ஒரு கடமையாக நாங்கள் நினைத்து, அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கூறியதைப்போல நேற்றைய தினம் பேச்சு வார்த்தை நடைபெற்றது. ஆனால் அவர்கள் குறிப்பிட்டதைப் போல வெற்றிகரமாக நடக்கவில்லை என்பதை என்னாலே ஏற்றுக் கொள்ள முடியாது. வெற்றிகரமாக முடிந்து விட்டது, இன்னின்ன முடிவுகள் செய்திருக்கிறோம் என்கிற கட்டத்தில் நான் உங்களிடத்தில் ஒரு அறிக்கை சமர்ப்பிக்க இயலாமல் இருக்கிறேன் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நேற்றைய தினம் பேசி முடிவெடுக்கின்ற நேரத்திலே அவர்கள், தாங்கள் வேறு சிலரைக் கேட்கவேண்டும், அவர்களைக் கேட்டுவிட்டுச் சொல்கிறோம் என்று சொல்லிச் சென்றிருக்கிறார்கள். ஆக அந்த அளவிலேதான் அவர்கள் சென்று இருக்கிறார்களே தவிர பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது என்ற நிலைமையிலே எங்களிடத்திலே இருந்து பிரிந்து செல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாணவர்களுடைய படிப்பு பாழாகிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலைமையில் போராட்டத்தை முறியடிக்கின்ற வகையிலே நடவடிக்கைகள் எடுத்து மாணவர்களுடைய படிப்புக்கு வழிவகைளைச் செய்ய வேண்டும் என்கிற கடமை சாதாரணமாக எந்த அரசுக்கும் இருக்கின்ற நிலைமையில், இந்த அரசு ஆசிரியப் பெருமக்களை அழைத்து அவர்களுடன் நல்ல முறையிலே பேசி நல்லவிதமாக முடிவு எடுக்க வேண்டும், அதன் விளைவாக கல்லூரி நன்ருக நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தோடு அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறோம். நாங்கள், இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்தஸ்தைப் பார்க்காமல், நாங்கள் தான் அவர்களை அழைத்து அவர்களுடன் நேற்றைய தினம் கிட்டத்தட்ட 4 மணி நேரம் பேசி இருக்கிறோம். ஆசிரியர்களிடத்திலே எந்தவிதமான அந்தஸ்தையும் பார்க்கின்ற நிலைமையில் அரசோ, அமைச்சரோ இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இன்றையதினம் அவர்கள் வருவார்களேயானால் அவர்கள் தங்களுடைய இறுதி முடிவினைத் தெரிவிப்பார்கள். அந்த அடிப்படையிலே முடிவு தெரிந்தால் அநேகமாக ஒன்றரை மணிக்குள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதை நான் ஒரு அறிக்கையாக இங்கே தர இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இப்போது அவையை ஒத்தி வைத்து விவாதிப்பதற்குரிய அளவில் நிலைமை பதட்டமாக இல்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[1979 பிப்ரவரி 24

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

4. தகவல் கோரல்

மேட்டூரணை தண்ணீர் குறித்து

திரு. ரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மார்ச் மாதம் 15 ஆம் தேதி வரை தண்ணீர் தேவைப்படுகிறது. மேட்டூர் அணையை மூடிவிடுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இது குறித்து விதி 41-ன் கீழ் நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். ஒருவேளை அது மேட்டூர் அணையை மூடிய பிறகு எடுத்துக்கொள்ளப்படுமா அல்லது மூடுவதற்கு முன்னாலே எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் மேட்டூர் அணையிலே இருந்து திறந்துவிடப்படுகின்ற தண்ணீரை மார்ச் 15ஆம் தேதி வரையில் நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கையினை எழுப்பியுள்ளார்கள். 25-2-1979 வரையிலே மேட்டூர் அணையிலே இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு இருந்தது. அதை மீண்டும் நீடிக்க வேண்டும் என்று அரசு கருதிய காரணத்தால் வருகிற 28-2-1979 வரையிலேயும் அது நீடிக்கப்படுகிறது. மேலும் மேட்டூர் அணையை 28-2-1979 அன்று மூடினாலும் அதற்குப் பின்னாடி ஏறத்தாழ ஒரு வாரம் அந்த வாய்க்காலிலே தண்ணீர் போய்க்கொண்டிருக்கும் என்று வேளாண்மைத்துறையின் மூலமாகவும், நீர்ப்பாசன துறையின் அதிகாரிகளின் மூலமாகவும் எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது.

ஆகவே அந்தத் தகவலின் அடிப்படையில் 28-2-1979 வரையில் தண்ணீர் திறந்துவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 41 ஆவது விதியின் கீழ் கொடுத்திருந்தார்கள். அமைச்சர் அவர்கள் இன்று ஸ்டேட்மெண்ட் கொடுப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அதற்கு சந்தர்ப்பம் வரவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தகவல் கோரலாக எழுப்பி அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலும் கொடுத்துவிட்டார்கள். ஆகவே இதுபற்றி மேலும் விவாதம் வேண்டாம். ஸ்டேட்மெண்ட் வந்த பிறகுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இதன் முக்கியத்துவம் கருதி கேள்வி எழுப்பப்பட்டு பதிலும் பெறப்பட்டிருக்கிறது.

(மூன்று உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்.)

1979 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூன்று பேர்கள் நின்று கொண்டிருந்தால் யாரை அழைப்பது. திரு. கூத்தகுடி சண்முகம்.

(மூன்று உறுப்பினர்கள் நின்றுகொண்டிருந்தனர்.)

திரு. கூத்தகுடி ச. சண்முகம்; என்னை அழைத்துவிட்டீர்கள். ஆகவே நான் பேசிவிட்டுத்தான் உட்காருவேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூன்று பேர்கள் நின்று கொண்டிருந்தால் எப்படி, முதலில் திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் பேசட்டும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே நான் ஒரு முக்கிய கவன ஈர்ப்புப் தீர்மானம் கொடுத்திருந்தேன் கிளர்ச்சிக்குப் பிறகுதான் கவனத்திற்கு வரும் என்றால் கிளர்ச்சிகளைத் தொடங்கலாம். 23ஆம் தேதி எடுத்துக்கொள்ள சபாநாயகர் அவர்களிடம் கேட்டேன். இன்றைக்கும் கொண்டுவரப்படவில்லை. நான் அதன் விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. மாடுகளை வாங்கமுடியாமல் தெருவில் ஆயிரக்கணக்கில் மாடுகள் போய்க்கொண்டிருக்கின்றன. ஆட்டு இறைச்சி கிலோ ரூ. 20-க்கு விற்கப்படுகிறது. நானே போய் மாடுகளை ஓட்டினால்தான் கவனத்திற்குவரும் சொன்னபடி செய்தால் நல்லது. ஆகவே தயவுசெய்து அதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களிடமிருந்து அறிக்கை வந்திருந்தால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும். ஆகவே தயவுசெய்து அதைப்பற்றி என் அறைக்கு வந்து கேளுங்கள்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில் அவசர அவசியம் என்று கருதினால் ஒருநாள் விவாதிக்கிறோம் பிறகு மீண்டும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது விதி. ஆனால் ஆசிரியர்கள் பிரச்னையைப் பொறுத்தவரையில். தினந்தோறும் இதே வேலையாகயிருக்கிறது. இந்த நாட்டில் ஆசிரியர்கள் பிரச்சினையைத் தவிர வேறு பிரச்சினைகள் இல்லையா ? தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் விடக்கூடிய பிரச்னை எவ்வளவு முக்கியமானது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் கேள்விக்கு பொறுப்பாக பதிலளித்தார்கள். இப்போது ஒரு விளக்கம் கேட்கிறோம். நீங்கள் இப்படியே போனால் எல்லோரும் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருப்பார்களா விவசாயிகள் பிரச்னைபற்றி பேசுவதற்கு நேரம் இல்லையா ? ஆசிரியர்கள் பிரச்னைபற்றி டெய்லி எடுத்துக்கொண்டிருக்

கிறோம். ஆகவே ராசமாணிக்கம் அவர்கள் ஒரு துணைக் கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கவேண்டும். பல நேரங்களில் நாம் விதிமுறைகளை மீறியிருக்கிறோம். இப்போது மீறச் சொல்லவில்லை. திரு. ராசமாணிக்கம் அவர்கள் ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 41-வது விதியின்கீழ் நோட்டீஸ் கொடுத்து அமைச்சர் அவர்கள் பதில் தயாரித்து, ஸ்டேட்மெண்டை இங்கே வைத்து கேள்வி கேட்கிற நிலையில் இதை எடுத்துக்கொள்ளவில்லை. கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருந்தார்கள். இன்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாக சொல்லியிருந்தார்கள். ஸ்டேட்மெண்ட் கொடுக்கவில்லை. ஆனால் இந்த பிரச்னையின் முக்கியத்துவத்தை கருதி அமைச்சர் அவர்கள் 28-ம் தேதி வரை தண்ணீர் தொடர்ந்து விடப்படும் என்று பதில் சொல்லிவிட்டார்கள். அதோடு முடித்துவிடலாம் என்றுதான் சொன்னேன். பலமுறை நடைமுறை விதிகள், விதிமுறைகள் மீறப்பட்டிருக்கிறது என்றால் தொடர்ந்து மீற வேண்டும் என்பது அவசியமில்லை. ஆகவேதான் சொல்கிறேன் ஒரு கேள்வி கேட்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் இப்படிப்பட்ட முறை பின்பற்றப்படுமேயானால் பேரவை முறையாக நடக்க அது தடங்கலாக இருக்கும், ஆகவேதான் சொல்கிறேன். (குறுக்கீடு) முதலில் கேட்ட

(முற்பகல் 10–50)

கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். மேலும் விளக்கம் பெற வேண்டுமானால் இன்னொரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுங்கள். இப்போது எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு).

திரு. கோ. இளங்கோவன்: அமைச்சர் அவர்களே, பதில் சொல்ல தயாராய் இருக்கிறார்கள். நீங்கள் அனுமதித்தால் என்ன..........

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நானே விளக்கம் தந்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ராஜமாணிக்கம் அவர்கள் கொடுத்த விதி 41 கவன ஈர்ப்புத் தீர்மானம்—அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்துள்ள விவரம் வருகின்ற 5-ம் தேதி எடுத்துக் கொள்ளப் போவதாக சட்டமன்றத் துறை அறிவித்திருக்கிறத மேலும் இது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாக இருப்ப தால் ராஜமாணிக்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு வி

விவரங்களைச் சொன்னேன். மேலும் 5-ம் தேதிக்குள் தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை இல்லை என்று கோடிட்டு காட்டுவார்களேயானால் அதுபற்றி அரசு மீண்டும் பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: நான் ஏற்கனவே ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரி மூடப்பட்டு பல நாட்களாகின்றன..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கு முன் இரண்டு கல்லூரிகளின் பிரச்னைகள் பற்றி சொல்லப்பட்டது. அமைச்சர் அவர்களும் பதில் தந்துவிட்டார்கள். அத்துடன் அது முடிந்துவிட்டது. அதற்குப் பின்னால் தனித்தனியாக ஒவ்வொருவரும் பிரச்சினைகளை கேட்டுக் கொண்டு இருப்பது சரியல்ல. (குறுக்கீடு) தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். திரு. வரதராஜன் அவர்கள் கொடுத்த தீர்மானமும் ஆய்வில் இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: ஆய்வில் இருக்கிறது என்றால் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆய்வில் இருக்கிறது, அவ்வளவுதான் இப்போது சொல்ல முடியும்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர் அவர்களே: நான் ரொம்ப சீரியஸான ஒரு தீர்மானம் கொடுத்து பத்து நாட்கள் ஆகின்றன........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுவும் ஆய்வில் இருக்கிறது. அதைப்பற்றி அறையில் வந்து கேளுங்கள்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, பழனிக்கு அருகேயுள்ள ஒரு பிரச்சினைப்பற்றி நான் ஒரு தீர்மானம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுவும் ஆய்வில் இருக்கிறது. அதைப்பற்றியும் அறையில் வந்து கேளுங்கள்.

திரு. க. அன்பழகன்: அறையில் என்றால் யார் அறையில் வந்து கேட்பது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத் தலைவரின் அறையில் நான். இப்போது இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. அதற்கு நேரம் வேண்டும். தயவுசெய்து அதற்கு அனுமதியுங்கள். அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம், திரு. தாமரைக்கனி அவர்கள்,

5. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்.

(அ) பெருமழை காரணமாக திருவில்லிபுத்தூர் தொகு-
தியில் விவசாய நிலங்களில் மணல் மூடியதன் காரணமாக
விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே,
" அண்மையில் பெய்த பெரும் மழையால், திருவில்லிப்
புத்தூர் தொகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாய
நிலங்களை மணல் மூடிவிட்டதால் விவசாயிகளிடையே
ஏற்பட்டுளள பதட்ட நிலை குறித்த " அவசரப் பொது
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை
மற்றும் பாசனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு
கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே.
இராமநாதபுரம் மர்வட்டத்தில் கடந்த நவம்பர் மாதத்தில்
ஏற்பட்ட கடும் மழையால் 301 கிராமங்களில் விளை
நிலங்களில் பணல் மேடிட்டு, விவசாயம் செய்ய லாயக்கற்ற
நிலை ஏற்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமருந்து
அறிக்கைகள் வரப் பெற்று, அரசு தனது ஆணை எண்.
எம். எஸ். 213 நாள் 6—2—1979-ல் மேற்கண்ட நிலங்களைச்
சீர்திருத்தம் செய்ய ஆணையிட்டது.

வேளாண்மைத் துறையின் பொறியியல் பிரிவு பொறி-
யாளர்கள் மேற்க்கண்ட கிராமங்களில் விரிவான நில அளவு
செய்ததில், திருவல்லிப்புத்தூர் தாலுகாவிலிருக்கும் 10
கிராமங்களில் சுமார் 170 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டுள்ள-
தாகத் தெரிய வருகிறது. வேளாண்மைத் துறையினர்
உடனடி நடவடிக்கைகள் மேற்கொண்டனர் இச்சேதத்தின்
மதிப்பு ரூபாய் 42,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்-
கண்ட 170 ஏக்கர் நிலத்தில் 16—2—1979 வரை ரூபாய்
21,600 மதிப்புள்ள சீர்திருத்தப் பணிகள் 36·32 ஏக்கர் நிலங்களில்
செய்யப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையினர் வசமுள்ள 2
மண் தள்ளும் இயந்திரங்கள் (புல்டோசர்) தற்சமயம்
ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மகாராஜபுரம், வெள்ளப்பொட்டல்
ஆகிய இரு கிராமங்களிலும் பணிகள் முடிவடைந்துள்ளன.
கோவிந்தநல்லூர் கிராமத்தில் தற்சமயம் பணிகள் நடை-
பெற்று வருகின்றன. இம்மாத இறுதிக்குள் பணிகள் முடிவடை-
யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, உடனடியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்
பாடு செய்த முதல் அமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மைத்
துறை அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட கலெக்டர் அவர்

களுக்கும், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மணல் மேட்டிலுள்ள
நிலங்களிலே மணலை அப்புறப்படுத்துவதற்கு செய்யப்படும்
இந்த ஏற்பாடு முழுவதும் மானியமா, பாதி மானியமா அல்லது
ஒரு ஏக்கருக்கு எவ்வளவு மானியம்? தவிர, 3 ஏக்கருக்கு
குறைந்தவர்களுக்கு முழுவதும் இனாமாக இந்த வேலை செய்து
கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்]

மாண்புமிகு திரு. ப. குழந்தை வேலு : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழ் நாட்டில் வெள்ளத்தால்
பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு என்னென்ன சலுகைகள் அளிக்கப்
பட்டது என்பது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, இந்த
செயல்முறைகள் நடந்து வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்தப் பகுதியிலுள்ள சிற்றாறுகளால் ஏற்படும்
மணல் அரிப்பைத் தடுக்க அரசு என்ன ஏற்பாடுகள்
செய்திருக்கிறது? இந்த மண் அரிப்பைத் தடுத்து, நீர்ப்பாசன
வசதி செய்ய, ஆங்காங்கே செக் டாம்கள் அமைக்கப்படுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் வறட்சிக்கு
இலக்கான பிரதேசம். எங்கெங்கே தடுப்பு அணைகள் கட்ட
முடியுமோ, அங்கங்கே ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. கசிவு
நீர் குட்டைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இது போன்ற
பாசன வசதிகளை எல்லாம் செய்து வருகிறோம்.

(ஆ) 'கோக்' கரி கிடைக்காததால், கோவை, கோவை நகரைச்
சுற்றியுள்ள பவுண்டரிகளில் வேலை பாதிக்கப் பெற்றுள்ளது
குறித்து.

திரு. கு. ரமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
" கோவை நகரத்திலும், அதன் சுற்று வட்டாரத்திலும் 300-க்
கும் அதிகமான பவுண்டரிகள் 'கோக்' கரி இல்லாததால் வேலை
நடக்காமல் முடங்கி சில ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை
இல்லாமலும், தொழில் உற்பத்தி முடங்கியும் உள்ளதால் ஏற்
பட்டுள்ள நிலைமை குறித்து " அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு தேவையான கோக்கரியை
(Coke) கல்கத்தா நகரில் உள்ள நிலக்கரி அனுப்பும் இயக்குந
ரிடமிருந்து (Director, Transportation, Coal) பெறுவதற்

கான ஏற்பாடுகளையும் கோக்கரியை கொண்டு வருவதற்கு வேண்டிய ரயில் சரக்குப் பெட்டிகளை (Wagon) ரயில் இயக்கம் இயக்குநரிடமிருந்து (Director, Rail Movement) பெறுவதற்கான ஏற்பாடுகளையும் கவனிப்பது தமிழ்நாடு தொழில் வணிக இயக்குநரின் பொறுப்பில் உள்ளது. அவ்வாறு பெறப்படும் கோக்கரியை தொழில் வணிக இயக்குநரின் அறிவுரைப்படி சிறுதொழில் நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யும் பொறுப்பை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) ஏற்று விநியோகம் செய்து வருகின்றது.

2. தமிழ்நாட்டில் தற்போது கோக்கரியை பயன்படுத்தும் 300 பவுண்டரிகள் (Foundries) உள்ளன. இவைகளில் பெரும்பாலானவை கோயம்புத்தூர் மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. அவைகளுக்கு தேவையான கோக்கரி மாதத்திற்கு 3,500 டன்களாகும். தமிழ்நாடு பெறும் கோக்கரி ஒதுக்கீட்டின் உச்சவரம்பின் அளவு குறைவாய் உள்ளதாலும், அவற்றைக் கொண்டு வருவதற்கு போதிய ரயில் சரக்குப்பெட்டிகள் கிடைக்க முடியாத நிலைமையினாலும் தமிழ்நாட்டில் குறிப்பாக கோவையில் கோக்கரி பற்றாக் குறை ஏற்பட்டிருக்கிறது.

3. 1978 ஆம் ஆண்டில் தமிழகத்திலுள்ள பவுண்டரிகளின் கோக்கரி தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சிட்கோ நிறுவனம் 2,000 டன்கள் அடங்கிய இரண்டு ரேக்குகள் பெற்று வந்தது. 1979 ஆம் ஆண்டில் இந்த கோக்கரியின் தேவைகளைப்பூர்த்தி செய்வதற்காக பங்கீட்டு அளவை அதிகப்படுத்த வேண்டும் என்று நவம்பர் 1978 திங்களில் வேண்டுகோள் விடப்பட்டது. ஆனால் ரயில் இயக்கம் இயக்குநர் மாதம் ஒன்றுக்கு ஒரு ரேக்கு கடின கோக்கரியும் (B. P. Hard Coke Bee Hive Hard Coke) பி. ஹைவ்) கடின கோக்கரியும் அனுப்புவதற்கு சரக்குப் பெட்டிகள் வசதிகளை செய்ய அனுமதித்துள்ளார். அதிகப்படியான ஒரு ரேக்கு பி.பி. கடின கோக்கரி கேட்கும்போது ஒரு ரேக்கு கடின கோக்கரியை குறைத்துவிட்டார். முறையீடுகள் செய்ததின் பிறகு தற்போதுள்ள ஒரு காலாண்டிற்கு 6 (3 பி.பி. *3 பி ஹைவ் கடின கோக்கரி)ரேக்குகளுக்கு பதிலாக 7 ரேக்குகள் (4 பி பி. கடின கோக்கரி *3 பி ஹைவ் கடின கோக்கரி) அனுப்புவதற்கு ரயில் இயக்கம், இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார். ஜனவரி 1979-ல் உள்ள கோட்டாவிற்காக (Quota) ஒரு ரேக்கு கோக்கரியில் பெட்டிகள் எடுத்து வரவேண்டியுள்ளது. இதற்கிடையில் கிராமத்தொழில் அமைச்சர் மைய அரசு ரயில் அமைச்சருக்கு மாதம் ஒன்றுக்கு 3 ரேக்குகள் (3,000 டன்கள்) பி.பி. கடின கோக்கரி (B. P. Hard Coke) இரண்டு ரேக்குகள் லாயபெட் சுரங்கத்திலிருந்தும் மற்றுமொன்று துர்காபூர் சுரங்கத்திலிருந்தும் அனுப்ப வேண்டும் என்று கடிதம் எழுதியுள்ளார். போதுமான கோக்கரியை தமிழகத்திற்கு கொடுக்குமாறு மைய அரசு மின்சார அமைச்சருக்கும் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

4. மைய அரசு ரயில்வே அதிகாரிகளுடன் இந்திய கோல் நிறுவனம் அதிகாரிகளுடன் தொழில்வணிகத்துறை, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி (சிட்கோ) அலுவலர்களும் பலமுறை கலந்து பேசினார்கள். நமக்குத் தேவையான கோக்கரியை கொண்டு வர முடியாததற்கான இரண்டு காரணங்கள் பின்வருமாறு :—

(அ) ஒவ்வொரு மாநிலத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள ரயில் சரக்குப் பெட்டியின் உச்ச வரம்பின் அளவை திடீர் என்று அதிகப்படுத்த முடியாது.

(ஆ) பாரத் கோகிங் கோல் நிறுவனத்திடமிருந்து போது மான கோக்கரி அனுப்புவதற்கு ரயில் சரக்குப் பெட்டிகள் கிடைப்பதில்லை.

5. எனினும் இந்திய நிலக்கரி நிறுவனத்திடம் (Coal India Ltd) போதிய அளவு கோக்கரி உள்ளது என்றும் அவற்றை ரயில் மூலமாகக்கொண்டு வருவதற்குப் பதிலாக சாலை மூலமாகக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தால் கோக்கரி பற்றாக்குறையின் நிலைமையை சீர்படுத்தலாம் என்றும் இந்திய நிலக்கரி நிறுவனத்துடன் சிட்கோ நிறுவனம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக அறிய முடிந்தது. ஆகவே, சிட்கோ நிறுவனம் சாலை மூலமாக கோக்கரியை தமிழ்நாட்டிற்கு கொண்டுவருவதற்கான தகுந்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டிற்கு மாதத்திற்கு 1,000 டன்கள் கோக்கரியை சாலை மூலமாகக் கொண்டு வருவதற்கு பாரத் கோக்கிங் கோல் நிறுவனத்தின் (B. C. C. L.) அனுமதியைப் பெற்றிருக்கிறது. மேற்குறிப்பிட்ட அளவிற்கு மேலும் தேவையான. கோக்கரியை நிலக்கரி சுரங்கங்களிலிருந்து பெறுவதற்கு சிட்கோ நிறுவனம் உத்தேசித்திருக்கிறது.

6. கோவையிலுள்ள கோக்கரி பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு சென்னையிலுள்ள கோக்கரி மண்டியிலிருந்து கோவைக்கு 324 டன்கள் கோக்கரி 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28 ந் தேதி அன்றிலிருந்து சாலை மூலமாகக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. கோவைக்குரிய கோக்கரி ரயில் சரக்குப் பெட்டிகள் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9-ந் தேதி முதல் வர ஆரம்பித்திருக்கின்றன. 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17 ஆம் நாள் வரை 509 டன்கள் கோக்கரி கோவைக்கு வந்துள்ளது. 1,000 டன்கள் கோக்கரி ரயில் சரக்குப் பெட்டிகள் மூலமாக 1979 மார்ச் திங்கள் ஆரம்பத்தில் கோவை வந்தடையும் என்று நம்பகமாகத் தெரிகிறது. மேலும் சாலை மூலமாக கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்துள்ள கோக்கரி இன்னும் 10 நாட்களில் வந்து சேரும்.

7. மேற்கூறிய சிட்கோ நிறுவனம் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளின் காரணமாக கோவையிலும் மற்றும் சுற்றுப்புற வட்டாரத்திலும் உள்ள கோக் (Coke) பற்றாக்குறை விரைவில் நீங்கிவிடும்.

[1979 பிப்ரவரி 24

[முற்பகல் 11-00]

திரு. கு. ரமணி : அமைச்சர் அவர்களின் நீண்ட அறிக்கை
யில் பல விஷயங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது வர
வேற்கத்தக்கது. ஆயினும் இப்போது சுமார் 300 நிறுவனங்கள்
நின்று போய்விட்டதால் ஒரு சில ஆயிரம் தொழிலாளிகளுக்கு
வேலை இல்லாத நிலையும், உற்பத்தி முடங்கக்கூடிய நிலை
யும் ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சிக்கல்கள் நீடிக்கக்
கூடாது. கோக் உற்பத்தியாகிற இடத்திலிருந்து கிடைப்பதற்
கான பேச்சுவார்த்தை நடத்தி வெற்றிகரமாக முடிந்திருக்கிற
நிலையில் ரயில் மூலம் கொண்டுவருவதில்தான் கஷ்டமான
நிலைமை இருக்கிறது. பல வருஷங்களாக இந்த நிலைமை
இருந்து வருகிறது. ஆகவே, மாற்று ஏற்பாடு என்ற முறை
யில் அமைச்சர் குறிப்பிட்ட சாலை வழியாக லாரிகள் மூல
மாகத் தொடர்ச்சியாகக் கரி கொண்டு வர ஒரு ஏற்பாட்டைச்
செய்ய உடனடி நடவடிக்கை எடுத்து தொழிற்சாலைகள் நிற்
காமல் தொடர்ந்து செயல்பட உத்தரவாதம் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை
யொட்டி நான் ஒரு சிறு விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.
நமக்குத் தேவையான 3,500 டன் கோக் கரியை ரயில்வே
வாகன்கள் மூலமாக உரிய காலத்தில் கொண்டு வர சிரமம் ஏற்
படுகிறது என்பது கடந்த கால அனுபவம். அதைக் கருத்தில்
கொண்டு கோக் கரிகள் நிறுவனத்துடன் பேசி ஆயிரம் டன்
மாதம் ஒன்றுக்கு சாலை வழியாக கொண்டு வருவது என்று பேசி
அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். லாரி மூலமாக இப்
போது கோக் கரி வர ஆரம்பித்திருக்கிறது. மார்ச் மாதத்
திற்குள் ஆயிரம் டன் கரி சாலை வழியாக வந்து சேரும். இந்த
நிலைமை தொடர்ந்து நீடிக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.
சாலை மூலம் ஆயிரம் டன்கள், மீதமுள்ளவை ரயில்வே வாகன்
கள் மூலமாகப் பெற்று பவுண்டரிக்குத் தேவையான கோக் கரி
தாமதம் இல்லாமல் உரிய காலத்தில் வழங்க அரசு எல்லா
விதமான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மறுபடியும் அந்தத்
தொழில் முடங்காமல் தொடர்ந்து நடைபெறுவதற்காக கோவை
யிலே கோக் கரியைப் பயன்படுத்தக்கூடிய நிறுவனங்கள், மிகப்
பெரும்பான்மையானவை கோவையிலே தான் இருக்கின்றன.
கொஞ்சம் தான் மற்ற ஜில்லாக்களிலே இருக்கின்றன.
ஆகவே, கோவையிலே அந்த கரியை சில ஆயிரம் டன்களை
சேமித்து வைக்கக்கூடிய ஏற்பாடு இருந்தால், அந்தக் தொழிற்
[illegible]லைகள் மூடப்படக்கூடிய நிலைமை ஏற்படாது. அதற்கு அரசு
கத்து[illegible] செய்யுமா? மேலும் சாலை மூலமாகக் கொண்டு வரு
போது [illegible]ருக்கடி ஏற்படுகிற காரணத்தினால் கப்பல் மூலமாகவும்
அரசு [illegible]

1979 பிப்ரவரி 24] [திரு. கு. ரமணி]

கொண்டுவருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? ஏனென்
றால் அரசு கப்பல் நிறுவனம் ஒன்றை ஏற்கெனவே வைத்திருக்
கிறது. அதன் மூலம் இதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்
களே, மாதமொன்றுக்கு 3,500 டன் கரிதான் நமக்குத் தேவைப்
படுகிறது. அதற்கு மேல் தேவையில்லை என்ற காரணத்தாலும்
இந்த 3,500 டன்களை உரிய காலத்தில் கொண்டு வருவதற்கு
ரெயில்வே வாகன்கள் கிடைக்க வில்லை என்ற பிரச்சினை
தானே தவிர கரி கிடைக்கவில்லை என்பது பிரச்சினை இல்லை
என்ற காரணத்தாலும் சேமித்து வைப்பதன் மூலமாக சிறு
தொழில் நிறுவனங்களுக்கு செலவு அதிகமாகும் என்ற காரணத்
தாலும் கரி வந்தால் தான் சேமிக்க முடியும், வருவது அந்தந்த
மாதத்திற்கு தேவைப்படுகிற காரணத்தால் வந்தவுடன் அந்தந்த
பவுண்டரிகள் வாகன்களிலிருந்து அப்படியே எடுத்துச் சென்று
விடுகின்ற நிலைமை இருக்கும்போது, சேமித்து வைப்பதால்'
அதற்கான செலவும், சேமித்த வைப்பதற்காக ஒரு முறை இறக்கி
வைத்து பிறகு தேவைப்படுகிறபோது அந்தந்த சிறு தொழில் நிறு
வனங்களுக்கு ஏற்றுகிறபோது ஏற்படுகிற செலவு இப்படிப் பல
செலவுகள் ஏற்படும். ஆதலால் சிறு தொழில்கள் தான் அதனால்
பாதிக்கப்படும் என்ற காரணத்தாலும் சேமிக்க வேண்டிய அவ
சியம் இல்லை. அதைக் கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்
கொள்ளும் அடிப்படையிலே தான் சாலையின் மூலமாகவும் இப்
போது வந்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

6. அறிவிப்பு:

ஆளுநர் இசைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் - 1979ஆம் ஆண்டு
மோட்டார் வண்டிகள் வரிவிதுப்பு (திருத்த) சட்ட முன்வடிவை
பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தம்முடைய
இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு
இதே சட்டசபையில் நான் ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டை.
ஆதாரம் கொடுத்து சொல்லியிருக்கிறேன். சம்பந்தப்பட்ட
சிமிண்டை கொடுத்து அதை அவர்கள் அனலைஸ் பண்ணுவதாக
வும் கலப்படம் இருக்கிறதா இல்லையா என்று பார்த்து சொல்வ
தாகவும் சொன்னார்கள். ஆனால் இதுவரையிலே என்ன
ஆயிற்று என்று தெரியவில்லை. கலப்படம் ரொம்ப அதிகமாகி
விட்டது..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: யாரிடம் கொடுத்
தீர்கள்?

திரு. செ. சிவசாமி : தலைவரிடத்திலே தான் கொடுத்தேன்...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றி இப்போது என்னிடத்திலே தகவல் இல்லை, சென்ற சட்ட மன்றக் கூட்டத்திலே சொன்னதாக சொல்கிறீர்கள். விசாரித்துச் சொல்கிறேன்.

7. அரசினர் சட்டமுன் வடிவுகள்.

(அ) மோட்டார் வண்டிகள் மீது வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தினுடைய வருவாயைப் பெருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே, மார்ச் 3ஆம் தேதி பட்ஜெட் என்று தெரிவித்திருக்கிறீர்கள். அதற்கு முன்னாலே இப்படி வரி விதிப்பு என்று கொண்டு வருகிறீர்கள். பட்ஜெட்டிலே கொண்டு வருவதை இப்போதே கொண்டு வருகிறீர்கள், இது லீக்கேஜ் ஆகாதா? ஏப்ரல் 78 லிருந்து மார்ச் மாதம் வரையிலே என்று ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்திருக்கிறீர்கள் போன. சட்ட மன்றத்திலேயே சொல்லியிருக்கலாம், அந்த பட்ஜெட்டிலே சொல்லாமல் அல்லது சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலே சொல்லாமல் இப்போது 1979ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் வர இருக்கிறபோது இந்த புதிய வரியை கொண்டு வருகிறீர்கள், இப்படி இடை செருகலாக ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து கொண்டு வருகிறீர்கள், இதனால் பாதிக்கப்படப் போவது தனிப்பட்ட முதலாளிகள் அல்ல, பூராவும் கார்ப்பரேஷன்கள் தான் பாதிக்கப்படுகின்றன. அதன் காரணத்தினால், பொது மக்கள் தான் பாதிக்கப்பட இருக்கிறார்கள். லம்ப் சம்மாக கட்ட வேண்டுமென்று சொல்கிறீர்கள், ஏற்கெனவே அந்தத் தொழிலாளர்களுக்கு எல்லாம் போனஸ் இல்லை என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையிலே ஏற்கெனவே இருக்கக்கூடிய வரியிலே 68 சதவீதம் ஒரே வாரத்திற்குள்ளாகக் கட்ட வேண்டும் என்று சொல்லி இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட அதிகமான வரியை பொது மக்களின் மீது தான் போடுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட முறையிலே விதிகளுக்குப் புறம்பான முறையிலே கொண்டுவரப்படுவது சரியல்ல என்பதைத் தெரிவித்து கொண்டு இந்த மசோதாவின் அறிமுகத்தை எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய கூற்றிலேயே, இது வருகின்ற ஆண்டுக்கு அல்ல, கடந்த ஆண்டுக்கு என்பது புலனாகிறது. This is a surcharge levied on taxation, which was itself provided for in the last Budget. சென்ற பட்ஜெட்டிலேயே, டவுன் பஸ்களுக்கு 90 ரூபாயிலிருந்து 115 ரூபாயாகவும், மொஃபசல் பஸ்களுக்கு 180 ரூபாயிலிருந்து 195 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. அதற்குக் கூடுதல் வரியாகத்தான் கடந்த ஆண்டுக்கு இது விதிக்கப்படுகிறது.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, கூடுதல் வரி என்று சொல்கிறார்கள், புதிய வரி விதிப்பு முறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை. 1979ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரைக்கும் வருகிறது. அதனால்தான் சொல்கிறேன்.

THE HON. THIRU C. PONNAIYAN : This is a tax not for the next year but this is a tax for the current year 1978–1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

" தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, " தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1979) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

---

* 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதிய அரசு சிறப்பிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

*திரு. மா. மணிமாறன் : மாமன்றத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஓரிரு கருத்துக்களை சொல்லலாம் என்று கருதுகிறேன்.

தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக்காலத்தை நீட்டித்தல்) சட்டத்தின் கீழ் (குடியரசுத் தலைவர் சட்டம் 32/1976), ஊராட்சிகளின் உறுப்பினர்கள், தலைவர்கள் ஆகியோரது பதவிக்காலம் 1—11—1978 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதை, 1—5—1979 வரை நீட்டிக்க வேண்டும் என்று நம்முடைய அமைச்சரவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். அவர்கள் நேற்று பேசும் பொழுதே சொன்னார்கள், தேர்தல் விரைவில் வரும், ஆகவே, அங்கத்தினர்களின் பேச்சில் காரசாரம் வேண்டாமென்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்னார்களே தவிர,. அவர்கள் சொன்ன விளக்கத்திலேயே பல குழப்பங்கள் இருக்கின்றன.

தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டதற்கு அவர்கள் சொல்லும் காரணம், ஒருதடவை சொல்கிறார்கள், ஒருசில வாக்காளர்கள் பட்டியல் தயாரிக்கவில்லை என்று சொல்கிறார்கள், பிறகு சொல்கிறார்கள் நேரம் சரியாக இல்லை, மழைக்காலமாக இருக்கிறது என்று சொல்லி, அதனால்தான் ஊராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடித்துக் கொண்டிருக்கி'றாம் என்று சொல்கிறார்கள். காலம் சரியாக இருக்கிறதோ இ லையோ, இப்பொழுது ஓட்டு கேட்பது கடினமாக இருக்கிறது. வாக்காளர்களுக்கோ , வேட்பாளர்களுக்கோ கடினமாக இல்லை, ஆட்சியிலிருப்பவர்களுக்குத் தான் கடினமாக இருக்கும் என்பதைத் தவிர வேறு எந்த கடினமும் இல்லை. ஊராட்சி மன்றங்களுக்கு வாகன வசதி சரியாக செல்லாது என்று சொல்லுகிறார்கள். ஊராட்சி மன்றத் தேர்தல் என்றால் வாகன வசதிப் பற்றி பேசப்படுகிறது. ஊராட்சி ஒன்றியத் தேர்தல் என்றால் வாகன வசதிப் பற்றி பேசப்படவில்லை. அவர்கள் சொல்வதில் தவறு இல்லை. இன்று அமைச்சர்கள் சட்டத்தைத் திருத்தித் திருத்தி அவர்களுக்கு அலுத்துப்போய் விட்டது., நான் அலட்சியம் என்று அதைச் சொல்லவில்லை, அந்த அளவிற்குத் திருத்தப்பட்டுவிட்டது. வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்காகக் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று வருத்தப்பட வேண்டிய கட்டத்தில் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறோம. ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மட்டும் இன்றைக்கு இல்லை. ஊராட்சி மன்றத் தலைவர்கள் தான் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களாக வருகிறார்கள். ஊராட்சி மன்றத் தலைவர்கள் இருக்கும்பொழுது பெருந்தலைவர்கள் நீக்கப்பட்டதற்குக் காரணம மர்மமாக இருக்கிறது. அவசர காலத்தின்பொழுது, சர்வாதிகாரத்தின் பொழுது, பல ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களைக் கலைத்து விட்டு, தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களிடம் அதிகாரத்

தைக் கொடுக்க எண்ணிச் செய்தார்கள். ஆனால் அதில் அவர்கள் தோல்விதான் கண்டார்கள். இப்பொழுது ஜனநாயத்தின் பேரால் பொறுப்பேற்றிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வந்ததற்குப் பிறகும் இன்றைக்கு ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருநதலைவர் இல்லாமல், விதவையாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மிக வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவரை நீங்கள் ஏற்றுக் கொள்ளாததன் காரணம் என்ன இன்றைக்கு ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? சர்வாதிகாரம் ஊராட்சி ஒன்றியத் பெருந்தலைவரை உருவாக்க முடியும் என்று முன்னாலிருந்தவர்கள் எதிர்பார்த்தார்கள். ஜனநாயகத்தின் பெயராலே நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும் கூட , ஊராட்சி ஒன்றிய —பெருந் தலைவர்களைத் தேர்ந்தெடுக்காமல், ஊருக்கு ஊர் மக்கள் குழு அமைத்திருக்கிறீர்கள். ஊராட்சி மன்றங்களுக்கு. ஊராட்சி ஒன்றியங்களுக்கு மக்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலை நீடித்துக்கொண்டே போனால், போகிற போக்கில், அமைச்சர்களுக்கே கூட மக்கள் குழு அமைப்பார்களோ என்ற ஐயம் இருக்கிறது. தயவுசெய்து அப்படி செய்யாதீர்கள். மக்கள் குழுவிலே இருக்கிற உறுப்பினர்களைப் பயன்படுத்திக் கொண்டு ஊராட்சி மன்றங்களையும் ஊராட்சி ஒன்றியங்களை யும் உங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள். நான் உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், நன்னிலம் ஒன்றியம், ஆலங்குடி பஞ்சாயத்து ஊராட்சி மன்றத்திலே இருக்கிற மக்கள் குழு உறுப்பினர்கள் மன்றத் தலைவர் செய்யாத வேலையை எல்லாம் செய்கிறார்கள். பம்ப் செட்டைப் பிடுங்குகிறார்கள். பாதையை மாற்றுகிறார்கள். ஊராட்சி மன்றத் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஆனால், அவர் செய்யாத வேலையையெல்லாம், மக்கள் குழு உறுப்பினர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எதற்கெடுத்தாலும் மக்கள் குழு போட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இந்து மத அறநிலைய போர்டுக்கும் மக்கள் குழு போட்டிருக்கிறீர்கள். பல இடங்களிலே கட்சிக்காரர்களை, ஆளுங்கட்சிக்காரர்களைத் தேர்ந்தெடுக்க, ஒரு சதியாக இந்த ஆட்சி மக்கள் குழுக்களை ஆக்கிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது மக்கள் உங்கள்மீது நம்பிக்கை வைக்காத காரணத்தால், குழுக்களை நம்புகிறீர்கள். குழு சட்டாயம் குழி தோண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் குழுக்களால், பல தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. கிருஷ்ணகிரி நகராட்சியைப் பற்றிய செய்தியை நான் அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். அங்கு இரண்டு தமிழ் ஆசிரியர்கள் இடம் காலியாக இருந்தது. அந்த இடங்களில் ஒரு எஸ். சி.யையும், ஒரு ஓ.சி.யையும் போட்டார்கள். அந்த எஸ்.சி., ஓ.சி. ஆசிரியர்கள்

[திரு. மா. மணிமாறன்] [1979 பிப்ரவரி 24

பொறுப்பேற்றதற்குப் பின்னால், அங்கே இருக்கிற வேறு ஒருவருக்கு புரமோஷன் கொடுக்கவேண்டுமென்ற காரணத்தால், இரண்டு பேரையும் நீக்கிவிட்டு, அந்த வேறு ஒரு பெண் தமிழ் ஆசிரியருக்கு புரமோஷன் கொடுத்திருக்கிறார்கள். முதலில் இரண்டு பேரையும் நீக்கிவிட்டதால், எஸ். சி. போட வேண்டிய இடத்தில், ஓ.சி.யைப் போட்டிருக்கிறார்கள். அந்த மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது என்பதையும் மீண்டும் அந்த அரிசன வகுப்பைச்சேர்ந்த நபருக்குப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. மா. மணிமாறன்</u> : மாண்புமிகு அமைச்சரவர்கள் மிக வேகமாகவும், விரைவாகவும் செயல்படக் கூடியவர். மிகக் கனிவாகப் பேசுகிறார். பொதுக்கூட்டத்தில் அப்படி இல்லாவிட்டாலும்கூட, இங்கு கனிவாகப் பேசி காரியங்களை ஆற்றுவதற்காக நான் நன்றி கூற கடமைப்பட்டு இருக்கிறேன்.

மக்கள் குழு இருக்கிற காரணத்தாலே, இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் வேலை சரியாக நடைபெறவில்லை. மக்கள் குழுவிலே இருக்கிற உறுப்பினர்கள், ஒன்றியங்கள், பஞ்சாயத்துக்களிலே இருந்து போகிற வேலைகளை, நீங்கள் கட்சியிலே சேர்ந்தால்தான், செய்வோம் என்று சொல்கிறார்கள். டி.டி.ஓ. விடம் முறையிட்டால், அவர் அதைத் கவனிப்பதில்லை. கொறடாச்சேரி ஒன்றியத்தில் அம்மாதிரி நடக்கிறது. ஊரிலே இருக்கிற மக்கள் பள்ளிக்கூடம் கட்டுவதற்காக இடத்தை வாங்கி, ஊராட்சி ஒன்றியத்திலே பதிவு செய்திருக்கிறார்கள். ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள், அங்கு வேறு கட்சி இருக்கிற காரணத்தால், பள்ளிக்கூடம் கட்டக்கூடாது என்று சொன்னார்கள், டி.டி.ஓ.விடம் சொன்னால் அவர் சரியாகக் கேட்கவில்லை, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டதற்கு கவனிக்கிறேன் என்று சொல்கிறார். மக்கள் குழு என்று வைத்துக்கொண்டு அரசியல் பிரச்சாரத்திற்காக, இருப்பவர்களைத் கட்சியிலே சேர்க்க பயன்படுத்துகிறார்களே தவிர, உள்ளூர் வளர்ச்சியில், கிராம வளர்ச்சியில் அக்கறை காட்டவில்லை. இதன் காரணமாக, காரியங்கள் சரியாக நடக்கவில்லை. 4, 5 ஒன்றியங்களிலே ஒன்றியத் தலைவர் பார்க்கிற வேலையை, ஒரு டி.டி.ஓ. சரியாகப் பார்க்க முடியவில்லை. ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களை உருவாக்காத காரணத்தால், உள்ளாட்சித் துறை சீர்குலைந்து இருக்கிறது. ஏறத்தாழ 2 ஆண்டுகளுக்கு மேலாக இந்த நிலையிருக்கிறது என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 24] [திரு. மா. மணிமாறன்]

மக்கள் குழு ஏற்படுத்தியிருக்கிற காரணத்தாலே காலத்தை நீட்டித்துக்கொண்டு, ஆட்சி நடக்கிற வரையில் நீட்டிக்கலாம் என்று தயவுசெய்து கருதாதீர்கள். உள்ளாட்சித் துறையிலே நீங்கள் அக்கறை காட்டுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11—20)

உள்ளாட்சித் துறைகளிலே உள்ள தனி அதிகாரிகள் ஏற்கெனவே உள்ள வீட்டு வரியை கூட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு தேர்ந்து எடுக்கப்பட்ட பெரு நகரங்களிலே கூட ஒரு தனி அதிகாரியை போட்டு வைத்திருக்கிறார்கள். அவர்களிடம் வீட்டு வரியை குறைப்பதற்கு கோரிக்கையை வைப்போமானால் அந்தக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு வருகின்றன. உள்ளாட்சித் துறை அந்த அளவுக்கு சீர்கேடு அடைந்து இருக்கிறது.

சென்ற காலம் மழை காலம் பனி காலம் என்றார்கள் இப்போது அடுத்து வந்த காலம் இலையுதிர் காலமாக இருக்கிறது வரும் காலம் வசந்த காலம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வசந்த காலம் மறுபடியும் வரும் என்றும் நினைக்கிறார்கள். அது வரவே வராது என்று கூறுகிறேன். உள்ளாட்சித் துறையை வளர்ச்சி இல்லாமல், உள்ளாட்சி நிர்வாகம் பாதிக்கப்பட்டு பொது மக்கள் அவதிக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு மட்டும் 10 லட்சம் 15 லட்சம் ரூபாய் ஊராட்சிகளுக்கு வரவேண்டியிருக்கிறது. அதை நிதி அமைச்சரிடமும், உள்ளாட்சித் துறை அமைச்சரிடமும் தெரிவித்து இருக்கிறேன்.

சென்ற ஒவ்வொரு தடவையும் காலம் கடத்தி வந்திருப்பதால் பஞ்சாயத்து துறைகளில் பணம் வராமல் அவர்களெல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை சொல்லிக்கொண்டு காலத்தை நீட்டுவதால் காலத்தை ஓட்டிவிடலாம் என்று கருதாமல் தேர்தலை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம்</u> : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக என்னுடைய நண்பர்கள் பலர் இங்கே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இவ்வளவு காலம் அந்த தேர்தல்களை ஒத்தி வைப்பதால் ஆளும் கட்சிக்கு நன்மை ஏற்படும் என்று நினைத்தார்கள்—சாதகமான சூழ்நிலை உருவாகும் என்று நினைத்ததற்கு மாறாக இப்பொழுது பாதகமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. என்ன காரணத்திற்காக உண்மையிலேயே தேர்தல்களை தள்ளிப் போட்டார்களோ தெரியாது. ஜனநாயக முறைப்படி தேர்தல்கள் நடத்தப்படும் என்றார்கள், ஜனநாயக முறைப்படி நடத்தப்

பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த இடங்களிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆலோசனைக் குழுக்கள் என்ற பெயரில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் சில இடங்களிலே நிர்வாகத்திலே தலையிடுகின்றனர்.

ஊராட்சி மன்றத் தலைவர்களையும், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களையும் கூட்டி அவர்களின் ஆலோசனைகளை கேட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என்று இந்த அவையில் அறிவிக்கப்பட்டது. இம்மாதிரி கூட்டங்கள் நடத்தி அந்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவது சிறந்த ஜனநாயக முறைதான். ஆனால் அது இப்பொழுது நடைமுறையில் இல்லை. இந்த இடைக் காலத்தில் இம்மாதிரி கூட்டங்கள் நடைபெறவேயில்லை. முறைகேடுகள் பெருகி உள்ளன.

உதாரணத்திற்கு சொல்லப்போனால், அரசு ஆணை கூட அமல் படுத்தப்படவில்லை. நிர்வாகத்தில், ஆசிரியர்களின் மாற்றங்கள், நியமனங்கள் போன்றவைகளில் ஆளும் கட்சியினர் தலையிடுகின்றனர். சிங்கம்புணரியில் ஆசிரியர்கள் மாற்ற உத்தரவுகளிலே தலையிட்டிருக்கிறார்கள். அரசு ஆணை கூட அமல்படுத்தப்படவில்லை.

இப்பொழுதாவது நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து இம்முறைகேடுகளை தவிர்ப்பார்களா, தேர்தல் நாளை அறிவித்து விட்டார்கள். ஜூன் 20-ம் நாள் தேர்தல் என்று அறிவித்து விட்டார்கள். கட்டாயம் அப்போதாவது நடக்குமா? இந்த இடைக் காலத்திலே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை கட்டாயப்படுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஆசிரியர்களை இடையிடையே மாற்றுகிறார்கள். நிர்வாக சௌகரியம் கருதி செய்யப்பட்ட மாற்றங்களாக இருந்தால் பரவாயில்லை. எந்த அடிப்படையும் இல்லாமல் இவ்வாறு செய்தால் கையூட்டு வாங்கிக் கொண்டு மாற்றுதல் செய்தால்—இவையெல்லாம் கவனிக்கப்பட வேண்டும். சில இடங்களிலே ஒரு ஆண்டுக்குள்ளாக ஒரு பி.டி.ஓ.வை ஐந்து தடவை மாற்றியிருக்கிறார்கள். இதை ஒரு உதாரணத்திற்கு சொல்கிறேன். ஆசிரியர்கள் நியமனம், மாற்றல் எல்லாம் நிர்வாக சௌகரியத்திற்காகத்தான் இருக்க வேண்டும். அவர்கள் மாற்றச் சொல்லிவிட்டார்கள், ஆகவே அதற்கு ஆளும் கட்சிக்காரர்களிடமிருந்து ரெப்ரசன்டேஷன் கொண்டு வருகிறது—இதையெல்லாம் மாற்ற வேண்டும் என்று—இந்த முறைகேடுகள் நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் அமைச்சரைச் சொல்லவில்லை. ஏதோ நிர்வாக சீர்திருத்தத்திற்காக மாற்றியிருக்கிறார்கள். எனக்கு அதில் ஆட்சேபணை கிடையாது. ஆனால் அங்கே பிரச்சாரம் என்னவென்றால், நான் அப்படிச் சொல்லிவிட்டேன், அதனால் மாற்றி விட்டார்கள் என்று சொல்லி, அதற்காக அங்கேயிருந்து ரெப்ரசன்டேஷன் வருகிறது. இதன் மூலமாக என்ன நடக்கும் என்று பாருங்கள். ஆகவே, நான் கேட்டுக் கொள்வது, தேர்தலை குறிப்பிட்ட காலத்தில் நடத்துங்கள். அதோடு மாத்திரமல்ல, இந்த நாட்டின் ஜனநாயக முறையும் காப்பாற்றப்பட வேண்டும்.

குழு அமைத்தார்கள். அந்தக் குழுவை எந்த அதிகாரியும் கூட்டவில்லை. மாவட்ட அளவில் கலெக்டர் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டுகிறார். மற்றபடி ஒன்றியக் குழுக்கள் எதுவும் செயல்படவில்லை. தேர்தல் நடத்தப்படவேண்டியிருக்கிற இந்த இடைக்காலத்தில் ஜனநாயகம் செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆனால் பெருவாரியான இடங்களில் அவைகள் அதிகாரிகளால் செயல்படுத்தப்படாமல் இருப்பது சரியானதல்ல. அதற்கு என்ன காரணம்? எந்த அதிகாரத்தைக் கொண்டு அப்படி அவர்கள் நடந்து கொள்கிறார்கள்? அப்படி கூட்டங்களை ஒழுங்காகக் கூட்டாமல் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாரா? யார் யார் அப்படி நடத்தாமல் இருக்கிறார்கள் என்பது குறித்து ரிப்போர்ட் கேட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். அப்படியே அவர்கள் கூட்டம் கூட்டினாலும் சட்ட மன்றம் கூடும்போது கூட்டுகிறார்கள். அப்போது நான் எம்.எல்.ஏ.க்கள் வரமாட்டார்கள். நம் இஷ்டத்திற்கு காண்டிராக்ட் விட்டுக் கொள்ளலாம். நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று செய்கிறார்கள். தேதி வாரியாக நான் இதைக் குறிப்பிட முடியும். சட்டமன்றம் எப்போது நடைபெறும் என்று தெரிந்து இருந்தும், இப்படி அந்த நேரத்தில் அந்தக் குழு கூட்டங்களை நடத்துவது சரியல்ல. இப்படியயெல்லாம் நான் அதிகாரிகளைக் குற்றம் சொல்வதற்கு பதிலாக அமைச்சரைத்தான் சொல்ல வேண்டும். அமைச்சர் தான் அரசாங்கத்திற்கு பொறுப்பு. அதிகாரிகள் இப்படி நடந்து கொள்ளும் போக்கை அமைச்சர் உடனே களையவேண்டும்.

ஜூன் 20 தேதிக்குள் நிச்சயமாக தேர்தல் நடத்த வேண்டும். அப்படி நடக்குமா என்று எனக்குச் சந்தேகம் வருகிறது. முதலமைச்சரை கலந்து கொண்டு செய்கிறேன் என்று அறிவிப்பு செய்கிறபோதே சொன்னார்கள். ஜூன் 20-ம் தேதிக்கு முன்னால் தேர்தல் வைத்துக்கொள்ள முதலமைசசரோடு கலந்து முடிவு எடுங்கள். 20—ம் தேதிக்குப் பின்னால் என்று அறிவித்து விடாதீர்கள். ஏற்கனவே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மதுரையில் ஒரு அறிவிப்பு கொடுத்தார்கள். திருச்சியில் இருந்து முதலமைச்சர்

அவர்கள் ஒரு அறிவிப்பு கொடுத்தார்கள். இரண்டும் ஒரே நேரத்தில் ஒரே நாளில் பத்திரிக்கையில் வந்தது. ஆகவே, அறிவிப்பு செய்கிறபோது கவனமாகச் செய்யுங்கள். ஜூன் 20-ம் தேதிக்குள் என்று சட்ட மன்றத்தில் அறிவிப்பு செய்த மாதிரி நிறைவேற்றினால் அது மகிழ்ச்சி தரத்தக்கதாக இருக்கும். மேலும் நான் குறிப்பிட்ட ஒழுங்கீனங்கள் போக்கப்பட்டால் நல்லது என்றும் அந்த முறையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பஞ்சாயத்துக்களின் ஆயுட்காலத்தை மேலும் 6 மாதத்திற்கு நீட்டுவதற்காக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு மசோதா கொண்டு வந்து இருக்கிறார்கள். ஒவ்வொரு தடவையும் ஒத்தி வைப்பதற்கு அமைச்சர் சொல்கிற காரணம் ஒவ்வொரு மாதிரியாக இருந்தாலும், இந்த முறை தந்திருக்கிற காரணம் மிகவும் விசித்திரமாக இருக்கிறது. இடைக்காலத்தில் மழை வந்து விட்டது. ஆகவே, மக்களை சந்திப்பதற்கு அரசியல் கட்சிகளுக்கு சிரமம் ஏற்பட்டு விட்டது. அரசியல் கட்சிகள் வாகனங்களை பயன்படுத்த சிரமம் ஏற்பட்டு விட்டது என்றெல்லாம் காரணம் சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக எந்த அரசியல் கட்சியும் தேர்தல் வைத்தால் அந்த அரசியல் கட்சிதான் ஜெயிக்க வேண்டும் தேர்தலில் என்ற எண்ணத்தில் வைப்பார்கள். அடுத்த கட்சிக்கு மக்களைச் சந்திக்க வாய்ப்பில்லை என்ற காரணத்திற்காக, அதற்கான சிரமங்கள் ஏற்பட்டு விட்டது என்ற காரணத்திற்காக இப்படிச் செய்யமாட்டார்கள். தனது கட்சிக்கு மக்களைச் சந்திக்க சிரமம் ஏற்பட்டு விட்டது என்ற ஒரே காரணத்திற்காகத்தான் இப்போது தேர்தலை நடத்த முடியாமல் போய்விட்டது என்று அவர்கள் சொல்லி 6 மாத காலம் பஞ்சாயத்துக்களின் ஆயுட்காலத்தை நீட்டவும், தேர்தல் பின்னர் நடத்த காலமும் கேட்டு மசோதா கொண்டு வந்து இருக்கிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்குமானால் இந்தச் சாக்குபோக்கான காரியங்களைச் சொல்லாமல், உண்மையிலேயே தகுந்த சமயத்திலே தேர்தல் நடத்த முன் வந்து இருக்க வேண்டும். பஞ்சாயத்துகளின் ஆயுட்காலத்தை இந்த முறையில் நீட்டித்துக் கொண்டு போகின்ற முறை சரியல்ல, அந்த முறையில் பஞ்சாயத்துக்களும் செயல்பட உரிமையில்லை என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11-30]

எத்தனை ஆண்டுகளுக்கு என்று தேர்தலிலே உறுப்பினர்களும் தலைவர்களும் நின்று வெற்றிபெற்று, பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படுகின்றனவோ அத்தனை ஆண்டு காலம்தான் சட்டரீதியாக செயல்பட உரிமை உண்டு. அதற்கு மேலாக மறைமுக

மாக சட்டத்தின் வாயிலாக அல்லது அதிகாரத்தின் வாயிலாக அவர்கள் ஆயுட்காலத்தை நீட்டிக் கொடுத்தாலும், நிச்சயமாக சட்டரீதியாக அது செல்லுபடியாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே இந்த அரசுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்பதை அறிந்திருக்கிறோம். ஆகவே, மக்களை சந்தித்து மீண்டும் வாக்குகளைக் கேட்கப் பயப்படுகிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். நாட்கள் போக போக உங்கள் நிலைமைதான் மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது; மக்களைச் சந்திக்க சிரமப்படுவீர்கள். ஆகையால் எவ்வளவு நாட்களுக்கு முன்னதாகவே தேர்தலை நடத்துகிறீர்களோ அந்த அளவுக்கு உங்களுக்கு நல்லதாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஜனதா அரசு அல்லது ஜனதா கட்சி மேற்கொண்டிருக்கிற கொள்கையை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடிப்படையாக அதிகாரங்கள் ஆனாலும் சரி, அல்லது திட்டங்கள் ஆனாலும் சரி, அவற்றை எந்த வகையிலே அமைத்துக்கொள்வது என்ற பொறுப்பு மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஏற்கெனவே இருக்கிற நிலைமை என்னவென்றால் கிராமப்பகுதிகள் திட்டமானாலும் நகரப்பகுதிகள் திட்டமானாலும், கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் அப்பாற்பட்ட திட்டங்களைத் தயார் செய்வதால் அந்தத் திட்டங்கள் அந்தப் பகுதி மக்களுக்கு பயனற்றதாக அமைந்துவிடுகின்றன. ஆகையால் திட்டங்களைத் தயார் செய்கின்ற பொறுப்பு கிராமங்களுக்கு அதிலும் குறிப்பாக பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை இன்றைக்கு ஜனதா அரசு மேற்கொண்டிருக்கிறது. அதையே மத்திய அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அரசும் அறியும். ஆகவே, இந்தப் பஞ்சாயத்துக்கள் தேர்தலை உடனடியாக நடத்தி, பஞ்சாயத்துக்களுக்குத் தேவையான திட்டங்களைத் தயார் செய்வதற்கான உரிமையைக்கூட பஞ்சாயத்துக்களுக்கே வழங்கி, காரியங்களைச் செய்ய இந்த அரசு உடனடியாக முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற பஞ்சாயத்துக்கள், ஒரு காலத்தில் ஏதோ ஒருமுறையில் மாற்றியமைக்கப்பட்டது என்பதை இந்த அரசு அறியும். முறையான வகையில் பஞ்சாயத்துக்கள் செயல்படக் கூடிய அளவில் '' வயபில் யூனிட் ''களாக அவைகளை அமைக்க வேண்டுமென்று பலமுறை நாங்கள் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். இங்கே பல்வேறு சந்தர்ப்பங்களிலே கூறும்போதெல்லாம், இப்போது தேர்தல் வருகின்ற காரணத்தால் அங்கே பஞ்சாயத்துக்களை மாற்றியமைக்க சிரமம் இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆறு மாதத்திற்கு ஒரு

முறை ஆயுட்காலத்தை நீட்டிக்கொண்டே இருக்கிறீர்கள். எப்போதுதான் தேர்தல் என்ற திட்டவட்டமான ஓர் அறிவிப்பு இல்லை. ஆகவே, தேர்தல் வைக்கப்படும் என்ற ஓர் உறுதியான நிலை இல்லாத காரணத்தால் கன்னியாகுமரி மாவட்டத்தில் வயபிள் யூனிட்டாக இல்லாத பஞ்சாயத்துக்களை உடனடியாக மாற்றியமைக்க இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு பஞ்சாயத்துக்கள் அரசியல் காரணமாக மிகவும் சிறிய பஞ்சாயத்துக்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. 200 பேர், 300 பேர் ஜனத்தொகை கொண்ட பஞ்சாயத்துக்கள் கூட இருக்கின்றன. அந்தப் பஞ்சாயத்தினுடைய வருமானத்தைப் பார்த்தால் அந்த ஏரியாவில் லைட்டுக்கள் போடுவதற்குக்கூட போதாது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் மாற்ற, பஞ்சாயத்துக்களை வயபிள் யூனிட்டுகளாக மாற்றியமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதற்காக இப்போது நீங்கள் அறிவித்திருப்பதைக் காட்டிலும் கொஞ்சம் காலதாமதமானாலும் பரவாயில்லை; அதை நாங்கள் பொறுத்துக்கொள்கிறோம்; அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க மாட்டோம் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ரா. கிருஷ்ணன்:</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்று மாண்புமிகு அமைச்சரவர்கள் வருகின்ற ஜூன் மாதத்திற்குள் தேர்தலை நடத்த முடிவு செய்துவிட்டோம் என்று சொன்னார்கள். ஆனால், இந்த சட்டம் மே மாதத்தோடு காலாவதி ஆகிற காரணத்தால், மறுபடியும் இப்படி ஒரு அவசரச் சட்டத்தைக்கொண்டுவந்து ஆயுட்காலத்தை நீட்டி விடுவார்களோ, அதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறதோ என்ற ஒரு சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை முதலிலே தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போதுள்ள நிலைமையில் தேர்தலை இந்தக் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் முடித்துவிடுவோம் என்று நேற்று இங்கே கூறினார்கள். இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்தால், நகரப் பஞ்சாயத்துக்களில் மக்களுடைய உணர்வுகளை எடுத்துக்கொள்ளாமல் சிலர் தனி அதிகாரிகள் என்ற பெயரால் "ஸ்பெஷல் ஆபீசர்ஸ்" என்ற பெயரால்—வீட்டு வரியை தாறுமாறாகக் கூட்டியிருக்கிறார்கள். அதனால் ஒரு பெரிய போராட்டம் உருவாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ரிவிஷன் என்று சொல்லுகின்றபோது உண்மையான விலை மதிப்பைத்தான் கணக்கிட்டு போட்டிருக்கிறோம் என்று சொன்னாலும் கூட இப்போது திடீரென்று 5 மடங்கு, இன்னும் சொல்லப்போனால் 10 மடங்கு கூட சில இடங்களிலே வீட்டுத் தீர்வை போடப்பட்டிருக்கிறது. ஆகவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படாது. அதுமட்டுமில்லாமல்

இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு பதட்டமான சூழ்நிலை கிராமப்புறங்களில் இருப்பதையும் நாம் பார்க்கிறோம். அதோடு உரிய வேலைகளும் சரியாக நடைபெறுகிறதா என்றால் அப்படி வேலைகள் எதுவும் நடைபெறுவதாகவும் தெரியவில்லை. பொதுவாக வாசுதேவநல்லூரைப் பொறுத்தவரையில் அங்கே பல்வேறு கிராமங்களில் இத்தகைய நிலைமைகள் இருக்கின்றன. கடந்த 8 ஆம் தேதி பல ஊராட்சி ஒன்றியங்களிலே நடக்கக்கூடிய பல பெரிய தில்லுமுல்லுகளைக் கண்டித்து மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும், இதர இயக்கங்களின் சார்பாகவும் போராட்டங்கள் நடைபெற்றாலும், அதற்குப் பிறகாவது ஏதாவது நல்ல திட்டங்கள் இருக்கிறதா என்றால் எதுவுமே கிடையாது என்பதைத்தான் பார்க்க முடிகிறது. கிராமப்புறத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள், எருமை மாட்டின் மேலே மழை பெய்த மாதிரி என்று. அதுபோன்றுதான் இப்போது நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. எந்தவித திட்டமும் இல்லாத நிலைமைதான் இருக்கின்றது. அங்கே தெருவிளக்குகளில் பல்புகள் இருக்க வேண்டிய இடங்களில் குருவிகள் கூடுகட்டி வாழ்கின்றன. அதேபோன்று மழை காலங்களில் அங்கே சகதிகள் ஏராளமாக இருக்கின்றன. மேலும், கை பைப்புகள் போட்டிருக்கக்கூடிய இடங்களில் சகதிகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளே மாறி மாறி ஏற்பட்டுக்கொண்டிருந்தால் ஜனநாயகத்திற்கு வேட்டு வைக்கக்கூடிய நிலைமைதான் ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் போக்குகின்ற வகையில் உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு பலவிதத்திலேயும் அங்கே ஆலோசனை சொல்வதற்காக ஆலோசனைக் குழுக்கள் என்ற பெயராலே குழுக்கள் அமைத்து நிலைமைகளை சரியான அளவில் பராமரிப்பதற்குரிய ஒரு முறையை ஏற்படுத்த அரசு தயாராக இருக்கிறதா என்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு வருகிற ஜூன் மாதத்திலேயே தேர்தலை நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு அமருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> பேரவை முன்னுள்ள கேள்வி :—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

[1979 பிப்ரவரி 24

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் பதவிக்காலத்தை நீட்டித்தல் திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றம் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1979) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

இ. ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "ஆளுநர் அவர்களால் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் தேதி யன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாவது திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 16/1978) இப்பேரவை நிராகரிக்கிறது" என்ற திருத்தத் தீர்மானத்தை திருவாளர்கள் மு. அம்பிகாபதி, ஆர். கிருஷ்ணன், சோ. அழகர்சாமி, கூத்தக்குடி சண்முகம், செ. சிவசாமி, பொ. உத்திராபதி ஆகியோர் கொடுத்திருக்கின்றனர். இவர்களில் திரு. ரா. கிருஷ்ணன் அவர்கள் அத்தீர்மானத்தை முன் மொழிவார்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, "ஆளுநர் அவர்களால் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் தேதி யன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாவது திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 16/1978) இப்பேரவை நிராகரிக்கிறது" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் வழிமொழியப்பெற்றது.

[முற்பகல் 11-40.]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 3/1979) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

* 1979, ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதிய அரசு இதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1979 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு கிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானமும் அவையின் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். உள்ளாட்சித் துறை பற்றிய அத்தனை தீர்மானங்களும், விவாதமும் ஒரே படியாக இருக்கிறது. பேசுகிற அத்தனை பேர்களும் விரைவில் தேர்தல்களை வைக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்கள். இன்னும் பத்து பில்கள் உள்ளன. ஆகவே சுருக்கமாகப் பேசினால்தான் அவற்றை எடுத்துக் கொள்ள வசதியாகயிருக்கும். எனவே சுருக்கமாகப் பேசும்படி உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கு கொடுத்திருக்கக்கூடிய தீர்மானத்தை வலியுறுத்தி ஒரு சில வார்த்தைகள் கூற முற்படுகிறேன். தனி அதிகாரிகள் தொடர்ச்சியாக நியமிக்கப்படுகிற காரணத்தால் பல்வேறு அதிகார துஷ்பிரயோகமும், ஊழல்களும் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நேற்று பல்வேறு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். இந்த ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆலோசனைக் குழுக்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப் பட்டன என்பது பற்றி இன்னும் ஒரு தெளிவான முடிவு இல்லை. எங்கள் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கிட்டத் தட்ட முப்பதுக்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த அவையில் கூறுகிறபோது அனைத்துக் கட்சிகளையும் இணைத்துத்தான் அந்த ஆலோசனைக் குழு நியமிக்கப்படும் என்றெல்லாம் கூறப்பட்டது. ஆனால் கூறப் பட்ட அந்த வாக்குறுதி மீறப்படுகிறது. இதில் வேடிக்கை என்னவெனில், அம்பாசமுத்திரம் ஒன்றியத்தில் உள்ள ஆலோசனைக் குழுவில் ஒருவரை நியமித்தார்கள். நியமித்த அவர் யார் என்று கண்டுபிடிக்க முடியாமல் ஒரு பத்து நாட்கள் அந்தப்பேரை வைத்து தேடித் திரியக்கூடிய ஒரு பரிதாபகரமான நிலையிருந்தது. 'அன்நோன் பீகர்ஸ்'-ஐ ஆலோசனைக் குழுவில் போட்டிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து இரண்டே இரண்டு பேர்களைத்தான்— சேரன்மாதேவி, பாப்பாக்குடி—இவை களைத் தவிர எந்த ஒன்றியத்திலும் உள்ள ஆலோசனைக் குழுவில் எங்களுக்கு பிரதிநிதித்துவம் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு பிரதான எதிர்க்கட்சியாக இருந்ததைப் அவர்களுக்கு சரியான பிரதிநிதித்துவம் இல்லை என்றதாக,

ணத்தால் அவர்கள் அந்தக் குழுக்களில் பங்கெடுக்க முடியாது என்று நிராகரித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைதான் இருக்கிறது. அதேபோல் அம்பாசமுத்திரம் ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாலைந்து ஊராட்சி மன்றத் தலைவர்கள் இருந்தாலும் கூட அவர்களைக்கூட அந்தக் குழுவில் இணைக்கவில்லை. ஏன், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தை பொறுத்த வரையில் எங்கள் கட்சிக்கு அக்குழுவில் இடமில்லை. 'அண்நோண் பிகர்ஸை' போட்டிருக்கிறார்கள். சர்வ கட்சிகளுக்கும் அந்த ஆலோசனைக் குழுக்களில் பிரதிநிதித்துவம் இருக்கும் என்று சொல்லியும் இப்படித்தான் நிலை இருக்கிறது. மாநிலம் பூராவும் இதே நிலைதான். எங்கள் வாசுதேவநல்லூர் ஒன்றியத்தில் உள்ள ஆலோசனைக் குழுவைப் பொறுத்தவரையில் அது இதுவரை இரண்டு முறைதான் கூடியிருக்கிறது. ஒரு முறை நோட்டீஸ் கொடுத்தார்கள். மறுநாள் கூடப் போகிறோம் என்று முதல் நாள் நோட்டீஸ் கொடுத்தார்கள். அந்த நேரத்தில் தனி அதிகாரியாக இருப்பவர், கோவில்பட்டி கோட்ட வளர்ச்சி அதிகாரி, விளாத்திகுளத்திற்கு அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி எங்களுக்கு தகவல் கொடுக்காமலே போய் விட்டார். கடைசியில் அந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெறவில்லை. சென்னையிலிருந்து ஒரு அதிகாரி வருகிறார். ஆகவே என்னால் வர முடியவில்லை என்று காலை ஒன்பது மணிக்கு எங்களை வரச் சொல்லிவிட்டு மாலை 6 மணிக்கு வந்து சேர்ந்தார்கள். இப்படிப்பட்ட பரிதாபகரமான சூழ்நிலை இருக்கிறது. ஆக, இந்த ஆலோசனைக் குழுவிற்கு சரியான முக்கியத்துவம் கொடுக்கப்படாத ஒரு நிலை இருக்கிறது என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டும். பி.டி.ஓ., மற்ற அதிகாரிகள் ஆலோசனைக் குழு கொடுக்கக்கூடிய ஆலோசனைகளை எடுத்துக்கொண்டு செயல்படுத்துகிறார்களா என்றால் அவற்றிற்கு சரியான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

வந்து விட்டு திரும்பி வேறு சாலை வழியாக போக வேண்டிய நிலை ஏற்பட்டது. தனி அதிகாரிகள் முறையாக செயல்படவில்லை என்பதை காட்டுவதற்காக நடைபெற்ற நிகழ்ச்சியை தான் இங்கே எடுத்துக் கூறினேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சில அதிகாரிகள் தன்னிச்சையாக நடந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மக்களுடைய உணர்வுகளை கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்படுகின்றார்களா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தன்னிச்சையாக வீட்டுவரிகளை எல்லாம் தாறுமாறாக ஏற்றியதின் காரணமாக, மக்களிடம் அதிருப்தி ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை கவனத்தில் கொண்டு, இனிமேல் தனியதிகாரிகளை நியமிக்கின்ற இது போன்ற சட்டங்கள் இந்த மன்றத்திற்கு வர வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்ததாக, லத்தீப் அவர்கள் பேசிவிட்டு அவசரமாகப் போகவேண்டும் என்றார்கள். திரு. லத்தீப் அவர்கள் பேசுகிறீர்களா?......

திரு. என். இட்டப்பா : நாங்கள்தான் முதலில் பேச வேண்டும் என்று நீங்கள் தான் முதலில் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் தான் சொன்னேன், இல்லையென்று சொல்லவில்லை. இதை மூவ் செய்த திரு. கிருஷ்ணன் அவர்களுக்கு முதலில் வாய்ப்பு கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையில் அவர்கள் முதலில் பேசினார்கள். அதற்கு அடுத்து தி.மு.க. சார்பில் ராஜமாணிக்கம் பேசப் போவதாகச் சொல்லப்பட்டது. இடையில் திரு. லத்தீப் அவர்கள் பேசிவிட்டுப் போக வேண்டும் என்று சொன்னார்கள். சிறிய அட்ஜஸ்மெண்ட் தான். வேறு ஒன்றும் இல்லை.

திரு. என். இட்டப்பா : நீங்கள்தான் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான்தான் சொன்னேன். இப்போது லத்தீப் அவர்கள் பேசட்டும். நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். நான் சொல்வதை இப்போது கேளுங்கள்.

திரு. என். இட்டப்பா : எப்போதுமே கேட்டுக் கொண்டிருப்பதில் பழக்கப்பட்டவர்களாக இருக்கிறோம்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது பலவிதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன் திருத்தச் சட்டம் வந்ததைப் போல்தான் இதுவும் ஒரே மாதிரியான அமைப்பை சேர்ந்ததாக,

You have given extension to the life of the Commissioner but not an effective life to the B.D.O.

பி.டி.ஓ. என்றிருக்கிறது. அவர் பஞ்சாயத்துத் தலைவர் செய்து கொண்டிருக்கக்கூடிய வேலையை செய்யக்கூடிய நிலைமை இருக்கின்றது. இது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். தெரியாது என்பதில்லை. அவர் பார்த்திருக்கிற இடம் அப்படி. என்ன செய்வார். இந்தப் பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் அந்த யூனியனிலே இருக்கக்கூடிய பி.டி.ஓ.க்களிடத்திலும், அந்த பஞ்சாயத்திலே இருக்கக்கூடிய என்ஜீனியர்களிடத்திலும், இன்னும் அந்த யூனியன்களிலே வேலை செய்யக்கூடிய எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களிடத்திலும், இன்னும் சொல்லப்போனால், அங்கே வேலை செய்யக் கூடிய சாதாரண பியூன்களிடத்திலும் போய் நிற்கக்கூடிய நிலைமை இருக்குமானால், அந்தப் பியூன்களுக்கு இருக்கக் கூடிய மரியாதைகூட இவர்களுக்கு இல்லாத ஒரு நிலைமை இருக்குமானால், இது என்ன ஜனநாயகம்? இதை எப்படி ஒரு லோகல் செல்ப் கவர்ன்மெண்ட் என்று சொல்ல முடியும்? இந்த நிலைமை தேவையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தேர்தலை தள்ளி வைப்பதற்கு ஒரு காரணம் சொல்லப் படுகின்றது. எலக்டோரல் தயாரிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. குழந்தைகள் பிறந்துகொண்டுதான் வரும்; வயது வந்தவர்கள் வளர்ந்துகொண்டுதான் வருவார்கள். இது ஊழிக்காலம் உள்ளளவும் நடைமுறையிலே இருந்து கொண்டுதான் இருக்கும். எனவே, இது ஒரு காரணமா? (குறுக்கீடு)

மழையை ஒரு காரணமாகச் சொல்லுகிறார்கள். மழைக் காரணம் என்று சொன்னாலும், விவசாயம் நடந்துகொண்டு தான் இருக்கும். அறுவடை காலம் வரும்; பயிர் செய்கிற காலம் வரும். ஆனால், இவர்கள் ஒரு காலத்திற்கு என்று ரிசர்வ் செய்து விட்டார்கள். அதனால், நீட்டிக்கின்றார்கள். இப்படி நீட்டித்துக்கொண்டே போனால், அரசியல் ரீதியாக உங்களால் அறுவடை செய்ய முடியாது. இனிமேல் அப்படி அறுவடை செய்கின்ற வாய்ப்பு உங்களுக்கு கிடைக்காது. அந்தக் காலம், அதாவது அந்த மான்சூன் காலம் உங்களுக்குப் போய் விட்டது. எனவே, அந்த அறுவடை மற்றவர்களுக்குத்தான் கிடைக்கும், இனிமேல் தேர்தல் வைத்தால், அந்த அறுவடை உங்களுக்கு கிடைக்காது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். நீங்கள் மக்களைச் சந்திக்க விரும்பினால், உங்களுக்கு ஜனநாயகத்திலே நம்பிக்கை இருக்குமானால்....

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதையை விதைத்தவர்களால்தான் அறுவடை செய்ய முடியும்.

திரு. எம். ஏ. லத்தீப்: விதைக்காதவர்கள்கூட இன்றைக்கு வேறு விதமாக அறுவடை செய்கின்ற காரணத்தால்தான், இந்த ஜனநாயகத்திற்கே ஆபத்து ஏற்படுகிறது. ஏற்கனவே, விதைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அப்போது அறுவடை செய்ய வருவார்கள். ஆகவே, அந்த அறுவடை உங்களுக்கு கிடைக்காது என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொன்று தெரு விளக்கு எரியவில்லை. ரோடு சரியில்லை, சுகாதாரம் இல்லை, மருத்துவ வசதி இல்லை....

திரு. என். கிட்டப்பா: பேரறிஞர் அண்ணா அவர்கள் 'விதைக்காது விளையும் கழனி இருக்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அது எந்தக் கழனி என்பதையும் அண்ணன் கிட்டப்பா அவர்கள் விளக்க வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: சரி அதை விட்டு விடுங்கள். அண்ணாவைப் பற்றி அவர்களுக்குச் சொன்னால் தெரியாது.

(திரு. என். கிட்டப்பா எழுந்தார்.)

திரு. கிட்டப்பா அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நான் கிட்டப்பா அவர்களுக்கு அண்ணா அவர்களைப் பற்றித் தெரியாது என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சருக்கு அண்ணா அவர்களைப் பற்றித் தெரியாது என்று நீங்கள் சொன்ன காரணத்தால் திரு. கிட்டப்பா அவர்களுக்குக் கோபம் வருகிறது என்று நினைக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அதை நான் விட்டு விடுகிறேன். நான் உங்களைக் கேட்டுக் கொள்வது—நாங்கள் எல்லாம் தொகுதிக்குப் போக வேண்டுமென்கிறீர்களா அல்லது போகக் கூடாது என்று நினைக்கிறீர்களா? பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேசி முடித்துவிட்டு தொகுதிக்குப் போகப் போவதாகத்தான் தாங்களே கூடச் சொன்னீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: போகமுடியாத நிலைமை. போனால் என்ன வேலை செய்ய வேண்டும்? பஞ்சாயத்து யூனியன் வேலை, முனிசிபாலிடி வேலை [illegible] செய்ய வேண்டியிருக்கிறது. ஒன்றரை லட்சம் ஜனத்தொகையில் இரண்டு முனிசிபாலிடிகள், பஞ்சாயத்துக்கள் எல்லாம் இருக்கின்றன. [illegible] சரியாக இல்லை. அங்கே குப்பை கொட்டிக் கிடக்கிறது. [illegible] சரியில்லை. மருத்துவ வசதியே இல்லை என்று இந்த பகுதி சட்டமன்ற உறுப்பினர் எல்லா வேலைகளையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. நாங்கள் சொன்னால் கூட நடப்பதில்லை, [illegible] இல்லை. ஆனால் வேறு காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அது வேறு விஷயம். ஆகையால் தயவு செய்து அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். [illegible] ஜூன் மாதம் ஜூலை மாதம் தேர்தல் நடக்குமென்று நினைக்கிறேன். அதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: இந்த மசோதாவில் இன்னும் 10 பேர் பேச வேண்டும். தயவு செய்து முடியுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: தனி அதிகாரிகள் இருக்கிறார்களே [illegible] தயவு செய்து அமைச்சர் அவர்கள் [illegible] இந்தக் கட்டத்தை [illegible] வேண்டுமென்று [illegible] முடிக்க வேண்டும். ஒரு உண்மையைச் சொல்லுகிறேன். பல ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவ்வளவுதான் சொல்ல முடியும். தனி அதிகாரிகள் என்று சொல்லி அவர்களிடத்தில் அதிகாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மக்கள் [illegible] என்று நிலையில் [illegible] கொடுக்கக்கூடிய வேலை [illegible] நிலை ஏற்பட்டிருக்கிறது. [illegible] தலைவர்களே ஸ்பெஷல் ஆபீசருக்கு [illegible] கொடுத்தால்தான் வேலை நடக்கும் என்ற நிலை இருக்கிறது. விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

[illegible] சொல்ல விரும்புகிறேன். திருவண்ணாமலை பி.டி.ஓ. [illegible] ஆசிரியரை நியமிக்க வேண்டும். ஆசிரியரை நியமிப்பதற்கு [illegible] வேண்டுமென்பதற்காக ஒருவர் முக்கிய பிரமுகரை [illegible] சிபாரிசு செய்யுங்கள் என்று சொல்லுகிறார். முதல் நாள். இரண்டாவது நாள் அதே நபர் வந்து சொல்லுகிறார் - தயவு செய்து நீங்கள் சொல்லாதீர்கள், முதல் நாள் சொல்லுங்கள் என்று சொன்னவர் இரண்டாவது நாள் சொல்லாதீர்கள் என்று கெஞ்சுகிறார். நானே அவரைப் பார்த்து இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து சரிப்படுத்தி விட்டேன். நீங்கள் சொன்னால் காரியம் கெட்டுப் போய்

விடும் என்று சொன்னார். பொறுப்புணர்ச்சியோடு நான் இதைச் சொல்லுகிறேன். திருவண்ணாமலை பி.டி.ஓ. இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு ஒருவருக்கு ஆசிரியர் வேலை கொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதை நான் சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டி வரும். இது நல்ல நடைமுறையல்ல. ஒரு அதிகாரியைக் குறிப்பிட்டு குற்றச்சாட்டு சொல்லுகிறீர்கள். முன்னாலே எழுதிக் கொடுக்காமல், அறிவிப்புக் கொடுக்காமல் குறிப்பிட்டு இப்படிப் பேசுவது என்ற பழக்கத்தை எல்லோரும் கடைப்பிடிக்க ஆரம்பித்தால் எல்லா அதிகாரிகளைப் பற்றியும் யார் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் சொல்லலாம் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். ஸ்பெசிபிக்காகக் குற்றம் சொல்லும்போது அதை எழுதிக் கொடுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: இதிலே நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்கிறேன். நீக்குவதாக இருந்தால் நீங்கள் அதை மறைக்கிறீர்கள் என்று அர்த்தம். இந்த மன்றத்தில் இதை எடுத்துச் சொல்லி இப்படி நடந்திருக்கிறது, இதற்கு என்ன பதில் என்று கேட்கிறேன். இதிலே என்ன பொறுப்பற்ற தன்மை இருக்கிறது?

[நண்பகல் 12-00]

நான் ஒரு மன்ற உறுப்பினர். நடந்துவிட்ட நிகழ்ச்சியைப் பற்றி நான் சொல்கிறேன். எல்லா அதிகாரிகளைப் பற்றியும் சொல்ல முடியுமா? நல்ல அதிகாரிகளும் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி சொல்ல முடியுமா? நடந்து விட்டதைப் பற்றி நான் சொல்கிறேன். அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களால் இங்கே ஒரு ஆதாரப் பூர்வமான குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறது. இது ஊழலற்ற அரசு என்ற வாதங்களை இங்கே நீங்கள் வைக்கிறீர்கள். ஆதாரப் பூர்வமாக இந்த அதிகாரி இவ்வளவு பணம் வாங்கியிருக்கிறார் என்று சொல்லி அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்கிறார். ஆனால் அதைப் பற்றி எழுதித் தரவேண்டுமென்று தாங்கள் சொல்வது சரியல்ல. சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரும் பக்கத்திலே இருக்கிறார். அவரும் அதை உறுதிப்படுத்தத் தயாராக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒரு அதிகாரியைப் பற்றி குற்றச்சாட்டை

இங்கே சொன்னார்கள். அதை நிரூபிப்பதற்கும் தயாராக இருப்பதாகச் சொல்லி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புகிறேன். துணைத் தலைவர் அவர்களோ அல்லது பேரவைத் தலைவர் அவர்களோ அதை விசாரித்து அப்படி அந்த அதிகாரி லஞ்சம் வாங்கினார் என்று தெரியுமானால் அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க நாங்கள் தயார். ஆனால் அது பொய் என்று நிரூபிக்கப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் மீது இந்த மன்றம் எந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று சொன்னாலும் அவர் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இதே வாதங்களை அருமை நண்பர் இராதா அவர்கள் இங்கே எழுப்பிய போது நான் ஆதாரம் தருவதாகச் சொன்னேன், ஆதாரம் தராவிட்டால் பதவியை ராஜினாமாச் செய்வதாய்ச் சொன்னேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை, தயவு செய்து அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நானோ அல்லது பேரவைத் தலைவரோ விசாரணை நடத்தலாம் என்று சொன்னார்கள். அது சம்பந்தப்பட்ட அமைச்சரோ இங்கே இருக்கிறார், அவர் இருக்கிற காரணத்தாலே........

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே.

The Hon. Member takes the responsibility for a statement made in this house ....

இந்த மன்றத்திலே பேசுகின்றபோது பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார், நீங்கள் விசாரியுங்கள், தவறு என்று தெரியுமானால் அரசாங்கம் அந்த அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்கும், இல்லையென்று தெரியுமானால் இந்த மன்றம் எடுக்கும் நடவடிக்கைக்குக் கட்டுப்பட அந்த உறுப்பினர் தயாராக இருக்கிறாரா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அமைச்சரின் அந்த அறைகூவலை நான் ஏற்றுக் கொள்கிறேன் அதை நிரூபிக்காமல், அது உண்மைக்குப் புறம்பாக இருந்தால் நான் இந்த மன்றம் சொல்கிற எதையும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அது உண்மையாக இருந்தால் அவர்கள் ராஜிநாமா செய்வதற்குத் தயாராக இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது போன்ற ஊழல் புகார்கள் ஆதாரங்களோடு எழுதிக் கொடுக்கிறபோது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அப்படி சில அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானால் சில விவரங்களை நான் அவர்களுக்குத் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல ஆசிரியர்கள் நியமனத்திலே புகார்கள் வந்தன என்ற அடிப்படையிலே நான் ஆசிரியர்கள் நியமிக்கின்ற பணியை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே ஒப்படைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதிலே ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் குறிப்பிடுவது, பொதுவாக குறைபாடுகள் இருந்தால் அவைகளைப் பற்றி எடுத்துச் சொன்னால் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்பதை விளக்கமாகச் சொன்னார்கள். ஆனால் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இந்த அவையிலே ஒரு குற்றச்சாட்டை, இந்த அவையில் இல்லாத ஒருவரைப் பற்றிய குற்றச்சாட்டைச் சொல்லி பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அமைச்சர் ராஜிநாமா செய்வாரா என்று கேட்டு தப்பித்துக் கொள்வது சரியல்ல. குற்றச்சாட்டின்மீது தயக்கம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறோம். அமைச்சர் ராஜிநாமா செய்வாரா என்று கேட்டுவிடுவது தப்பித்துக் கொள்கிற காரியமே தவிர, பொறுப்பேற்றுக் கொள்கிற காரியம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பொறுப்பேற்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதை விசாரிக்க வேண்டும். அந்தக் குற்றச்சாட்டு உண்மையென்று சொன்னால் நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. ஆனால் ஒரு குற்றச்சாட்டைக் கூறிய அங்கத்தினர் எந்தத் தண்டனையையும் ஏற்றுக் கொள்ளத் தயாரா என்று கேட்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு உரிமையில்லை என்பதைக் கூற விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், ஒரு அங்கத்தினர் தவறான தகவலைக் கூறினால் அவர் மீது இந்த அவை தக்க நடவடிக்கையை எடுக்க அதிகாரமும், உரிமையும் இருக்கிறது. அந்த வேளையில் தான் இந்தக் கேள்வி வருமே தவிர இப்பொழுது எந்தத் தண்டனையையும் ஏற்றுக் கொள்ளத் தயாரா என்று கேட்பதற்கு உரிமையில்லை, அதை அங்கத்தினர் ஏற்றுக் கொள்ளவும் தேவையில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் நான் சொன்னதைத் தவறாகக் குறிப்பிடுகிறார்கள்........

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் கேட்க விரும்புவது........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரகுமான்கான் அவர்கள் என்னுடைய அனுமதியைப் பெற்றுப் பேச வேண்டும். நானும் நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன். என்னுடைய அனுமதியில்லாமல் பேசினால் எல்லாவற்றையும் நீக்க வேண்டிவரும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. குற்றச்சாட்டைச் சொல்லுகின்றபொழுது நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று அவர்கள் தான் முன் வந்தார்கள். பொறுப்பு என்ன என்பதைத்தான் நான் விளக்கினேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதன் மேல் ஒழுங்குப் பிரச்சினை இனிமேல் தேவையில்லை. விவாதம் எழுப்பத் தேவையில்லை என்று சொல்கிறேன். இதைப் பற்றி இனிமேல் பேசினால் நீக்கச் சொல்வேன்.

(திரு. பெ.க. திருவேங்கடம், திரு. அ. ரகுமான்கான், திரு. து. புருஷோத்தமன் ஆகியோர் எழுந்து நின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூன்று பேரும் நிற்கிறீர்கள், மூன்று பேரும் பேசப் போகிறீர்களா ?

திரு. து. புருஷோத்தமன் : நீங்கள் யாரைப் பேசச் சொல்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூன்று பேருமே உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு உரிமையிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணுவதற்கு உங்களுக்கு உரிமையிருக்கிறது. அதை அனுமதிப்பதற்கோ மறுப்பதற்கோ எனக்கு உரிமையிருக்கிறது. இதைப் பற்றிப் பேசினால் நீக்கச் சொல்வேன்.

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் [illegible]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது [illegible] ஒன்றுமில்லை. குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் கொடுக்க சார்ந்தப்பட்ட உறுப்பினர் இருக்கிறார், குற்றச்சாட்டைச் சொல்லிய உறுப்பினர் இருக்கிறார், அமைச்சர் இருக்கிறார். அவர் சொல்லட்டும். நீங்கள் விளக்கம் கேட்க இடமில்லை.

திரு. பெ.க. திருவேங்கடம் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். எங்கள் பகுதியைப் பற்றிச் சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்த தகவலைப் பற்றிச் சொன்னால் எல்லோருக்கும் உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கருத்தை [illegible] அப்புறம் சொல்லுங்கள்.

திரு. பெ.க. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருவண்ணாமலை பகுதியைப் பற்றி மாண்புமிகு லத்தீப் அவர்கள் சொன்னார்கள். அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். உறுப்பினரவர்கள் கூறியதில் உண்மையிருக்கிறது. அந்தப் பகுதியிலே ஆசிரியர்கள் நியமனத்தின் பொழுது லஞ்சம் பெற்றுக் கொண்டு அதிகாரிகள் ஆசிரியர்களை நியமிக்கிறார்கள் என்று சொல்லி [illegible] தொகுதி அங்கொரு [illegible] முன்னேற்றக் கழக அமைப்பாளரே அரசுக்கு ரிப்போர்ட் அனுப்பி, இப்பொழுது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மிக்கப் பணிவன்போடு இந்த மன்றத்திற்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, இந்த அரசு எல்லாவற்றையும் நேர்மையான அரசு என்பதைத் திருவேங்கடம் அவர்கள் எடுத்துக் காட்டியதற்காக நன்றி.

திரு. எம். ஏ. லத்தீப் : அமைச்சர் கட்சியைச் சேர்ந்த அமைப்பாளர் அவர்களே கண்டுபிடித்து அனுப்பியிருக்கின்ற காரணத்தால், கட்சி வேறு, ஆட்சி வேறு என்ற நிலையில்,

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 பிப்ரவரி 24

ஆட்சி மன்றத்தை ஒழிக்கத் தவறிவிட்டது என்ற காரணத்தின் மீது மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்கள் இராஜினாமா செய்வாரா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. இராதா அவர்கள் பன்றத்தை அவமதிக்கும் விதத்தில் பேச வேண்டாம். எதையாவது சொல்ல வேண்டுமென்றால் விஷயத்தைச் சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : திரு. ராதாவை அனுமதித்தால் என்னையும் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டரா அல்லவா என்பது என்னுடைய விருப்புரிமையில் இருக்கிறது. நான்தான் முடிவு செய்ய வேண்டுமே தவிர அவை, நீங்கள் முடிவு செய்ய உங்களுக்கு அதிகாரம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : அவருக்கு எந்த உரிமையைக் கொடுக்கிறீர்களோ அந்த உரிமையை எனக்குக் கொடுங்கள்.

[பிற்பகல் 12-10]

HON. DEPUTY SPEAKER : Allowing a member to raise a Point of Order is my discretion.

THIRU M. A. LATHEEF : But you are showing discrimination in inforcing your discretion.

HON. DEPUTY SPEAKER : That is your opinion.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இராதா அவர்கள் சொன்னதையும், அது சம்பந்தமாக கிட்டப்பா அவர்கள் சொன்னதையும் நீக்க உத்தரவிடுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் அப்படி பேச வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் வெளியே இருக்கிற அதிகாரி

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 பிப்ரவரி 24] [பேரவைத் துணைத் தலைவர்]

கள் மீது குற்றம் சாட்டுகிற நிலையிருந்தால், முதலிலே எழுதிக் கொடுத்தால், தலைவர் அவர்கள் அமைச்சருக்குச் சொல்லவும், அதுபற்றிய தகவல்களை அமைச்சர் சேகரித்து அவைக்குத் தரவும் வசதியாக இருக்கும். அவ்வாறில்லாமல், முன்னதாக எழுதிக் கொடுக்காமல் குற்றச்சாட்டுகளை — அவையிலில்லாத அதிகாரிகள் மீது சொன்னால், அதிகாரிகளுக்குப் பாதகமாய் இருக்கும் என்ற காரணத்துக்காகத்தான் சொன்னேன். ஆனால், உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்கிறேன் என்று சொன்ன காரணத்தினாலே, தலைவர் அவர்களோ, அமைச்சர் அவர்களோ அது பற்றி ஆராய்வார்கள். விசாரணை நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன், மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

திரு. தென்னை ப. அரங்கநாதன் : ஆதாரமில்லாமல் புகார்கள் கொடுக்கிறார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தக் கட்சியிலே புகார்கள் கொடுத்தால் என்ன, இந்தக் கட்சியிலே புகார் கொடுத்தால் என்ன? விசாரிக்க அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் என்னுடைய பேச்சை முடிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன் என்று சொன்ன பிறகுதான் அடுத்த பெயரை அழைக்க வேண்டுமா? நீங்கள் உங்கள் பேச்சை முடிக்க 3 நாள் ஆகும். (திரு. எம். ஏ. லத்தீப் குறுக்கிட்டு). நீங்கள் அதிக நேரம் எடுத்துக் கொண்டதாலே, நான் அடுத்த அங்கத்தினரை அழைத்தேன் . . . .

திரு. எம். ஏ. லத்தீப் : விசாரணை செய்ய வேண்டும். விசாரணை செய்ய வேண்டும் என்று சொல்கிறார்களே, நீங்கள் விசாரணை நடத்துங்கள். அதற்கு இந்த மன்றத்தின் சட்டம் என்ன என்று உங்களுக்குச் சொல்கிறேன். நான் இதைச் சவாலாக ஏற்றுக்கொள்கிறேன். நான் பொறுப்பேற்றுப் பேசுகிறேன். என்னைப் பயமுறுத்துகிறீர்களா? . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து மன்றத்துக்குப் புறம்பாகப் பேசாதீர்கள். நீங்கள் பேசியதைச் சொல்கிறேன் . . . .

திரு. எம். ஏ. லத்தீப் : இந்த மன்ற உறுப்பினர் என்ற முறையிலே என்னுடைய கடமையை நான் செய்கிறேன். நான் பொறுப்பற்ற முறையில் பேசி இருக்கிறேனா . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசி முடித்து விட்டீர்களா ? தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பொறுப்பற்ற முறையிலே பேசியதாக நான் எப்பொழுதும் சொல்லவில்லை. நான் சொன்னது, அவையிலில்லாத அதிகாரிகள்மீது முன்னதாகத்தெரிவிக்காமல் குற்றச்சாட்டுகளைச் சொன்னால், அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு இராது என்பதுதான். நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொன்னதால், நீங்கள் சொல்லியிருக்கிற குற்றச்சாட்டின்மீது விசாரணை நடக்கும், அத்தோடு நிறுத்தி விடுகிறேன் என்று சொன்னேன். இதற்கு ஏன் என் மேல் உங்களுக்குக் கோபம் வருகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : என்னுடைய குற்றச்சாட்டு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சத்தம் போட்டு இதைத்தான் நான் சொல்ல வேண்டுமென்று நீங்கள் என்னைக் கட்டாயப் படுத்த முடியாது. என்னுடைய முடிவை சொல்லி விட்டேன். நீங்கள் தொடர்ந்து பேச முன்வராததால் அடுத்த உறுப்பினரை அழைத்தால், அதில் என்ன தவறு. நீங்கள் தொடர்ந்து பேச விரும்பவில்லையென்றால் அமருங்கள்.

திரு. துரை கோவிந்தராசன் : பாய்ண்ட் ஆப் இன்பர்மேஷன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : அது சம்பந்தமாக இருந்தால் வேண்டியது இல்லை....

திரு. துரை கோவிந்தராசன் : இல்லை. இது வேறு. இந்த சட்டசபை 9 மணிக்கு ஆரம்பித்து 1½ மணி வரை நடக்கிறது. மாண்புமிகு திரு. லத்தீப் போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் பேச நேரம் போதவில்லை. ஆகையால் உறுப்பினர்களுக்கு விவாதங்களின் அடிப்படையில் நேரத்தை பகிர்ந்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எங்களுக்கும் அதே நிலை உருவாகியிருக்கிறது. 48-ல் ஒன்று போய் 47 இருக்கிறது. 47 பேருக்கும், எங்கள் கருத்தை கூறுவதற்கு, நேரத்தைப் பகிர்ந்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது எனக்கும் வசதியாக இருக்கும். நல்ல யோசனைதான். அலுவல் ஆய்வுக்குழுவில் அதைப்பற்றி பேசலாம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்தை கூறும்போது, நான் ஏற்கனவே இரண்டு முறை இந்த மசோதா கொண்டு வருவதை கடுமையாக ஆட்சேபித்திருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த 1977 ஜூன் மாதம் 7-ம் தேதி அன்று இந்தச் சட்டமன்றத்தில் ஆளுநர் அவர்கள் உரையாற்றினார்கள். உள்ளாட்சித் துறை தேர்தல்கள் பல ஆண்டுகளாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்தத் தேர்தல்கள் உடனடியாக முறைப்படி நடக்கும் என்று ஆளுநர் அவர்கள் இந்த சபையில் கூறியிருக்கிறார்கள். ஆனால், 1977 ஜூன் மாதம் போய் 1979 வந்த பிறகும், இந்த அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் முடியும் தருவாயில் உள்ளபோதும் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. அது மட்டுமல்லாது ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி, ஒன்றியத் தலைவர்கள் தங்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுத்த தலைவர் நீக்கப்பட்ட இடங்களில் அவர்களுக்குப் பதிலாக ஆலோசனைக் குழு ஒன்றை நிறுவி அவற்றில் ஆளும் கட்சிக்காரர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆலோசனைக் குழு என்று சொன்னாலும் அந்த இடத்தில் இருந்து கொண்டு அவர்கள் செய்யக்கூடிய காரியங்கள் நல்ல காரியங்களாக இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன். எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னார் இன்ன இடத்தில் அரசு நிர்வாகத்தில் தலையிட்டார்கள்—ஆசிரியர்கள் மாற்றத்திற்கு கையூட்டு வாங்கினார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். ஆசிரியர்களை எந்த அடிப்படையில் நியமனம் செய்கிறார்கள் ? எந்த அடிப்படையில் டிரான்ஸ்பர் செய்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறோம். உள்ளாட்சி மன்ற ஆசிரியர்கள் நியமனம், டிரான்ஸ்பர்கள் முதலியவற்றை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மாற்றியிருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். ஆனால் ஆசிரியர்கள் நியமனம் செய்வதை மட்டுமே மாற்றியிருக்கிறார்கள்—ஆசிரியர்கள் மாற்றம் செய்வது யாருடைய பொறுப்பில் இருக்கிறது ? அதை மாவட்ட ஆட்சித் தலைவர்களே கவனிக்கிறார்களா அல்லது தனி அதிகாரிகள் பொறுப்பில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். தேர்தல்கள் நடத்துவதற்கு கால தாமதம் செய்து காலத்தை நீட்டிக் கொண்டிருந்தாலே தங்கள் காலத்தை ஓட்டி விடலாம் என்று ஆளும் கட்சியினர் எண்ணக் கூடாது. ஒரு முறை மாற்றுவதற்குப் பதிலாக மூன்று முறை இடைக்காலத்திலேயே மாற்றியிருக்கிறார்கள். இது சம்பந்தம் ஆக எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஆதாரத்தோடு சுட்டிக் காட்டினார்.

(பிற்பகல் 12-20.)

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குத்தாலம் ஒன்றியத்தில் ஒரு ஆசிரியரை மாற்ற வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதற்கு காரணம் அவர் குடியிருக்கும் இடம் கோவி

லுக்குச் சொந்தமானது. அந்த இடத்தை ஒரு ஆளும் கட்சி நண்பர் வாங்குகிறார். அவர் உடனே அந்த ஆசிரியர் அந்த இடத்தைக் காலி செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறார். அந்த ஆசிரியர் அப்போது சொல்கிறார், இந்த இடைக்காலத்தில் என்னால் அந்த வீட்டைக் காலி செய்ய முடியாது. இன்னும் கொஞ்ச நாள் அந்த இடத்தில் நான் இருக்கிறேன் என்று சொன்ன காரணத்தால், அங்கேயுள்ள ஆளும் கட்சி அமைப்பாளர் உள்பட எல்லோரும் சேர்ந்து கொண்டு அந்த ஆசிரியரை அங்கிருந்து எப்படியும் மாற்றிவிட வேண்டும் என்று சொல்லி, புதியதாக ஒரு லிஸ்ட் தயாரிக்கச் சொல்லி, நடவடிக்கை எடுத்து மாற்றி இருக்கிறார்கள். இப்படி இடைஇடையே மாற்றங்கள் ஆங்காங்கு நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன என்பதை நான் அரசின் கவனத்திற்கு கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு என்னுடைய கஷ்டம் எல்லாம், நான் தொகுதிக்குச் செல்கின்ற நேரத்தில் மக்கள் எல்லாம் என்னிடத்தில் சொன்னது, மின்சார விளக்கு எரிய வில்லை, சாலை சரியில்லை, குடிநீர் வசதி சரியாக இல்லை என்பதாகும். இதை நான் சொல்கிறபோது இந்த வசதிகளை முன்னாலே இருந்த அரசு செய்து கொடுக்கவில்லையா என்று நீங்கள் நினைக்கக்கூடும். திராவிட முன்னேற்றக்கழக அரசு இருந்த நேரத்தில் எல்லா கிராமங்களுக்கும், சாலை வசதி செய்து தரப்பட்டது. அப்படி சாலை வசதி செய்து கொடுக்கப் பட்டவைகள் பின்னர் சரிவர பராமரிக்கப்படாமல் விட்டு விட்ட காரணத்தால், அவைகள் தற்போது சரியாக இல்லை. திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி காலத்தில் எல்லா கிராமங்களுக்கும், குறிப்பாக என் தொகுதியைப் பொறுத்தவரையில், குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது. அப்படி செய்து கொடுக்கப்பட்ட குடிநீர் வசதி சரிவர பராமரிக்கப்படாத காரணத்தால் பழுது அடைந்து இன்றைக்கு குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> தங்களுடைய கருத்தை இந்த பில் மீது மட்டும் சொல்லி 5 நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள். அவுட் சைட் தி ஸ்கோப் ஆப் பில் பேச வேண்டாம். நீங்கள் நினைத்ததைப் பேசுவதற்கு இது நேரம் அல்ல.

<u>திரு. இரெ. இராசமாணிக்கம் :</u> திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது எல்லா கிராமங்களுக்கும் மின் சார வசதி செய்துக் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதிசெய்து கொடுத்தது. அந்த மின்சார வசதி சரிவர பராமரிக்கப்படாத காரணத்தால், மின்சார சப்ளை சரிவர இல்லை என்ற குறை தற்போது இருக்கிறது. நான் இரண்டு மாதங்களுக்கு முன்பு தொகுதியில் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில் 240 மனுக்கள்

தரப்பட்டன. அந்த 240 மனுக்களையும் சம்பந்தப்பட்ட அதி காரிகளுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் அனுப்பி வைத்தேன். இதுவரையில் முறையாக நடவடிக்கை எடுத்த தாகவும் தெரியவில்லை. அவைகளுக்கு முறையான பதிலும் அதிகாரிகளிடத்தில் இருந்து வரவில்லை என்பதையும் இந்த நேரத் தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. பி. எச். பாண்டியன் தலைமை.)

தனி அதிகாரிகள் இருக்கிற காரணத்தால் வேலைகள் எவ் வளவு தாமதம் ஆகின்றன என்பதைச் சுட்டிக் காட்ட ஒன்றைக் குறிப்பிடுகிறேன். எனது தொகுதியில் மங்கைநல்லூர் என்ற இடத்தில் ஒரு அரசு மருத்துவ மனை கட்டுவதற்காக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ரூபாய் 70,000 செலவாகும் என்று மதிப் பிடப்பெற்று, 1975 ஆம் ஆண்டு அது தயாரிக்கப்பட்டது. அரசு பாதி தொகையை மானியமாகச் செலுத்த வேண்டும் என்று கேட்டார்கள். ஊராட்சி ஒன்றியம் ரூபாய் 10,000-த்தை அதற்கு முன்பணமாகக் கட்டியிருக்கிறார்கள். நாடப்ப செட்டியார் ரூபாய் 13,000 கட்டியிருக்கிறார். சிவவடிவேல் உடையார் ரூபாய் 13,000 கட்டியிருக்கிறார். இப்படி ஊராட்சி ஒன்றியம் ரூபாய் 10,000 கட்டி இருந்து இதுவரையில் கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டு சொல்கி றேன். ஒன்றியம் தனி அதிகாரியின் கீழ் இருப்பதால்தான் 1975-ம் ஆண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்பும் ஒன்றியம் பணம் செலுத்திய பின்பும் அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் குத்தாலம் ஒன்றியத்தில் 7 பாலங்கள் கட்ட 1975-ம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி அளித்தார் கள். அந்தப்பாலங்கள் 1975-ம் ஆண்டு கட்ட அனுமதிக்கிற போதே ரூபாய் 6,70,000 செலவாகும் என்று மதிப்பிடப் பெற்றது. ஆனால் இன்றையத் தின வரையில் அந்த 7 பாலங் களை கட்டுவதற்கு அரசு இதுவரையில் அனுமதி கொடுக்க வில்லை. இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடிய விரைவில் அனுமதி அளிக்கிறேன் என்று சொல்லி யிருக்கிறார்கள். அன்றைக்கு ரூபாய் 6,70,000 செல வாகும் என்று இருந்தது இன்றைக்கு கிட்டத்தட்ட 23 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவிற்கு 5 ஆண்டு காலத்தில் செலவு உயர்ந்து இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு, ஒரு முக்கியமான பிரச்சனை. ஊராட்சி ஒன்றியங் களுக்கு அமைச்சர்கள் வருகிறார்கள். கட்டிடங்களைத் திறக் கிறார்கள் ; வரவேற்கிறோம். நம்முடைய துணைத் தலைவ ரவர்கள் என்னுடைய தொகுதியில் குச்சிபாளையம் என்ற ஊரில்

பள்ளிக் கட்டிடம் ஒன்றைத் திறந்து வைத்தார்கள். அந்த ஊரில் ரோடு வசதி இல்லை; அது வேறு பிரச்சனை. அந்தக் கட்டிடத்தில் பொறிக்கப்பட்டிருக்கின்ற கல்லில், அந்த ஒன்றியத்தின் ஓவர்சீயர் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது; எஞ்சினீயர் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது; பி. டி. ஓ. பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது; கோட்டாட்சித் தலைவர் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது; ஊராட்சி தலைவரின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது; கட்டிட ஒப்பந்தக்காரர் பெயர் கூட பொறிக்கப்பட்டிருக்கிறது; ஆனால் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய பெயர் பொறிக்கப்படவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவைப்படும் சாமான்களை வாங்கும் போது மின்சார சப்ளைக்கோ அல்லது குடிநீர் பம்புகளுக்கோ, பைப்புகளுக்கோ வாங்கும்போது கூட்டுறவு சிறப்பு அங்காடியில் வாங்குவதற்கு டென்டர் கொட்டேஷன் தேவை இல்லை என்று சொல்கிறார்கள். குத்தாலம் ஒன்றியத்தில் அந்த அடிப்படையில் சுமார் 3 இலட்சம் ரூபாய்க்கான பொருட்கள் ஒரு கிராமத்திற்கு 5 பம்ப் செட்டுகள் என்ற வீதத்தில் வாங்க அனுமதித்தோம். அதை கும்பகோணம் சந்திரசேகரபுரம் கூட்டுறவு சிறப்பங்காடியில் வாங்கியிருக்கிறார்கள். அதில் சில பம்புகளை என்னுடைய ஊராட்சிக்குத் தந்தார்கள். அதை நான் பார்க்கும்போது மிக மோசமாக இருந்தது. பம்புகளில் பொருத்தப்பட்டிருந்த சாமான்கள் மிகவும் மோசமானவைகளாக இருந்தன. அதை உடனடியாக நான் ஒன்றியத்தினுடைய ஆணையாளர் கவனத்திற்கும், தனி அதிகாரியின் கவனத்திற்கும் கொண்டு வந்தேன். அந்த பம்பில் இருந்த வலைகள் எல்லாம் மிகப் பழையவை. 1½" பைப் கூரக் குறைவானது. அது மட்டுமல்லாமல் வெளி மார்க்கெட்டில் இருக்கின்ற நல்ல சாமான்களை விட விலையும் மிக அதிகம். கும்பகோணம் சந்திரசேகரபுரம் கூட்டுறவு சிறப்பங்காடியில் சப்ளை செய்த பொருட்களின் விலையைச் சொல்கிறேன். 5-ம் நம்பர் பம்ப் மெஷின் விலை ரூபாய் 115·50 காசு. பில்டர் பாயிண்ட் ரூபாய் 63. கப்ளிங் ரூபாய் 6·85 காசு. பைப்—மீட்டருக்கு ரூபாய் 23·10 காசு. இந்த விலைக்கு அந்த ஸ்டோரில் இருந்து சப்ளை செய்து இருக்கிறார்கள். அதே சாமான்களின் விலையை வெளி மார்க்கெட்டில் விசாரித்துப் பார்த்தேன். 5-ம் நம்பர் பம்ப் மெஷின் விலை ரூபாய் 100, 1½" கப்ளிங் ரூபாய் 6. பில்ட்டர் பாயிண்ட் ரூபாய் 45. பைப்—மீட்டருக்கு 19 ரூபாய். இந்த அளவுக்கு ரேட் வித்தியாசம் இருக்கிறது. கிட்டத்தட்ட ஆறில் ஒரு பங்கு வித்தியாசம் இருக்கிறது.

இதில் எப்படி தவறு நடந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே இரண்டு அமைச்சர்களும் இருக்கிறார்கள். அவர்கள் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த தவறு நடந்தது பற்றி சுட்டிக்காட்டப்பட்டு, அது பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. இப்போதுகூட அந்தச் சாமான்கள் திருப்பி வாங்கப்படவில்லை. நான் சுட்டிக்காட்டிய பின்னால் அந்த சாமான்களை திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், மேலே இருந்து, அதை திருப்பி அனுப்பாமல் எப்படியாவது வாங்கி பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று உத்தரவு வந்து கொண்டிருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது). ஒன்றியப் பொறியாளர் சாமான்களை வாங்கமாட்டேன்; பைப் மீட்டர் 1 மீட்டர் இவ்வளவு : வெயிட் இருக்க வேண்டும். அது இருந்தால் தான் வாங்குவேன் என்று சொல்கிறார். ஆனால் மேலே இருக்கிற அதிகாரிகள் அல்லது அவர்களுக்கு மேலே இருக்கிறவர்கள் "வெயிட்" எப்படி இருக்கிறது என்று பார்க்காமல் இதை எப்படியாவது வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) இதோ முடித்துவிடுகிறேன். அதையும் விசாரிக்க வேண்டுமென்று அமைச்சர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்டத் தவறுகள் எல்லாம் தொடர்ந்து நடைபெறுவது தடுக்கப்படுவதற்கு மேலும் தேர்தல்களைத் தள்ளிப் போடாமல் உடனடியாக தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, இன்று இந்த பஞ்சாயத்துத் திருத்தச் சட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

நம்முடைய மகாத்மா காந்தியடிகள் கிராமங்களுக்கு விடுதலை வேண்டுமென்ற நோக்கத்தோடு, கிராம சுயராஜ்யத்தினுடைய அடிப்படையில் நம்முடைய கிராமப் பஞ்சாயத்துக்களும் ஊராட்சி ஒன்றியங்களும் நிறுவப்பட்டன. நம்முடைய நாட்டின் அமைப்பு முறை "ஃபோர் பில்லர்ஸ் ஸ்டேட்" என்று சொல்வார்கள். அதாவது, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், சட்டமன்றம், நாடாளுமன்றம் என்ற இந்த நான்கு தூண்களில் கட்டப்பட்டது தான் இந்திய ஜனநாயகம்.

[பிற்பகல் 12-30]

ஆனால் இன்று மிக முக்கியமான ஊராட்சி ஒன்றியங்கள் தனிப்பட்ட ஸ்பெஷல் ஆபீஸர்கள் மூலமாக நடத்தப்படுகின்றன. ஸ்பெஷல் ஆபீஸர்ஸ் என்று சொல்லக்கூடிய அந்த விசேஷ அதிகாரிகள் சாதாரணமான ஸ்தாபனங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைப் பலரும் இங்கே விளக்கினார்கள்.

இன்றையதினம் மேல்மட்டத்திலே ஊழலற்ற ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதிலே எனக்குச் சந்தேகம் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் அதிகாரிகளைப்

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1979 பிப்ரவரி 24

பொறுத்தவரையில் மிக மோசமான நிலையில் காரியங்களைச் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு உண்மை என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது அந்த ஸ்பெஷல் ஆபீஸர்களுக்கு எல்லா அதிகாரங்களும் வந்துவிட்ட காரணத்தால் பல ஊழல்கள் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, கிராமத்திலே மிக முக்கியமானது ரோடு. சிவிலைசேஷன் வாக்ஸ் ஆன் தி ரோடு என்று கூடச் சொல்வது உண்டு. அதுபோல மிக முக்கியமானது ரோடு. அந்த ரோடுகள் பழுது பார்க்கப்படாத நிலையில் மிக மோசமாக இருந்துகொண்டிருக்கின்றன.

அடுத்தது கல்வி. அந்தக் கல்வியைப் போதிக்கின்ற பள்ளிகள் இந்த ஊராட்சி ஒன்றியங்களிலே பழுதுபார்க்கப்படாமல் மிகவும் மோசமான நிலையில் நடந்துகொண்டிருக்கின்றன.

அடுத்தபடியாக தெருவிளக்குகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தெருவிளக்கு என்பது இன்று பல கிராமங்களிலே போதிய அளவில் இல்லை சுற்றுப்பயணம் செய்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அந்த மலைப் பகுதியைப் பற்றி எடுத்துச் சொன்னேன். அந்த மலைப்பகுதி மக்கள், குடிநீர் வசதி இல்லாமலும், இயற்கைச் சோதனைகளுக்குள்ளாகி, ரோடு வசதி இல்லாமலும், சுகாதார வசதி இல்லாமலும் வேதனையோடு இருக்கிறார்கள். அவர்களுக்கு வசதி வாய்ப்பைப் பெற்றுத் தர வேண்டுமென்ற உணர்வை ஏற்படுத்துவதற்காக நான் முயற்சி செய்தேன். அவர்கள் இருவரும் வந்தபொழுது அங்கிருக்கும் பிரதிநிதிகள், ஆளுங் கட்சியின் அமைப்புச் செயலாளரும், இன்னும் சர்வகட்சித் தலைவர்களும் மகஜர் மூலம் தங்கள் குறையைக் கொடுத்தார்கள். அங்கே ஆற்றங்கரை இருக்கிறது. அங்கே காட்டு வெள்ளம் வரும்பொழுது, இரண்டு மூன்று ஆள் உயரத்திற்கு இன்னும் சொல்லப்போனால் அரை பனை மர உயர அளவிற்கு தண்ணீர் வரும். அந்த வெள்ளம் ஊருக்குள்ளே திடீரென்று நுழைந்து மக்களையும், வீடுகளையும் அடித்துச் செல்லும். மத்தியிலுள்ள கிணறுகளும் நிரம்பிவிடும். அதலால் காலரா போன்ற பயங்கரமான நோய்களுக்கு ஆளாகி நூற்றுக் கணக்கான மக்கள் வருஷா வருஷம் இறந்துவிடுகிறார்கள். அந்த நிலைமைகளை மாற்றக்கூடிய அளவிற்குக் குடிநீர்க் கிணறுகளுக்குக் கைப்பிடிச் சுவர் பழுதுபட்டிருப்பதைச் சரி செய்ய வேண்டும், கிணற்றைச் சுற்றி பிளாட்பாரம் கட்ட ஏறத்தாழ 5,000 ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக உத்தரவைப் பிறப்பிப்பதாகச் சொன்னார்கள். குடிநீர் வடிகால் வாரிய அமைச்சரவர்கள் வந்திருந்தபொழுது உறுதி அளிக்கப்பட்டது. ஆனால்

1979 பிப்ரவரி 24] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு நான் பார்த்தபொழுதும் அதே நிலைமைதான் இருந்தது. நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் இதைப்பற்றி வேதனையோடு எடுத்துரைத்தேன். அவர்கள் உடனடியாகப் பொது நிதியிலிருந்து பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஈடு செய்து தர வேண்டுமென்று என் முன்னாலேயே உத்தரவையிட்டார்கள். அந்த உத்தரவை அங்கிருந்த தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளரிடம் கொடுக்க, இதுவரையில் ஆணையாளர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, அந்தக் கிராமத்தையே பார்க்கவில்லை என் நிலைமையிருக்குமானால் யாரிடம் போய் நாங்கள் சொல்வது ? இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். மக்கள் தவறு செய்தால் மன்னனிடம் சொல்லலாம், மன்னனே தவறு செய்தால் யாரிடம் சொல்வது? நான் தெய்வ நம்பிக்கை உடையவன், ஆகவே, தெய்வத்திடம்தான் முறையிட வேண்டும், நம்பிக்கையில்லாதவர்கள் என்றால், அவர்கள் பாஷையில் சொன்னால் இயற்கையிடம்தான் சொல்ல வேண்டும். என்ன செய்வது? மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம், கங்கையே சூதகமானால் எங்கே போவது ? என்ற கேள்விக் குறியைத் தேவர் பெருமானுடைய வாசகத்தை, வேதனை மிகுந்த இந்த வாசகத்தை மாமன்றத்தின் அரசின் மேலான கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். அதிகாரிகளை நீங்கள் நம்புகிறீர்கள். எமெர்ஜென்சி காலத்தில் அதிகாரிகள் மிகக் கடுமையாக நடந்துகொண்டார்கள். இன்றையதினம் முதல்வரவர்கள் நல்லது செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். நல்லது செய்வதை பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறோம். ஆகவேதான் லாக்-அவுட் செய்யும் பொழுதுகூட எதிர்க்கட்சியினர் என்னை வரவில்லையா என்று கேட்டார்கள். நல்லது செய்ய வேண்டுமென்று புரட்சித் தலைவரவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அதிகாரிகள் உறுதுணையாக இருக்கவேண்டாமா ? ஒரு நல்லவர் போகிறார் என்றால், உதாரணத்திற்கு தாமரைக்கனி போகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருடன் செல்லக்கூடியவர்கள் தவறு செய்பவர்களாக இருந்தால், அவர்கள் தலைமையில் அவர்கள் செல்வதால் அவர்களுக்குக் களங்கம் ஏற்படும். அதைப்போல அதிகாரிகள் கட்டவிழ்த்துவிடப்பட்டு மிகத் தவறு செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதற்காக இதைச் சொன்னேன். ஒரு பொது நன்மை, சிறிய நன்மைகூட இதுவரை செய்யப்படவில்லை என்றால் என்ன ஆகும் ?

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களின் தனி அதிகாரிகளின் ஆயுள் காலத்தை மேலும் 6 மாதக் காலம் நீட்டித் தரவேண்டும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக் கூடிய இந்த மசோதாவை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்.] [1979 பிப்ரவரி 24

காரணம், ஜனநாயக அமைப்பின்படி ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்களின் தேர்தல்கள் நடைபெற்று மக்கள் ஆட்சி நடைபெறவேண்டும் என்பது நம் கொள்கை. ஏற்கெனவே இருந்த இன்டைரக்ட் எலக்‌ஷனை மாற்றி ஒன்றியங்களுக்கு நேரடித் தேர்தல்கள் நடத்தவேண்டும் என்பதற்காக நாம் ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம்.

ஆனால் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிற காரணங் களைப் பார்க்கும்போது உண்மையிலே அது வரவேற்கத் தக்கதல்ல, ஏற்றுக்கொள்ளத்தக்கதுமல்ல. எனக்கு முன்னால் பேசிய . பல்வேறு உறுப்பினர்கள் பஞ்சாயத்து ஒன்றியங்களில் தனி அதிகாரிகள் எந்த முறையில் செயல் படுகிறார்கள், லஞ்லாவான்யம் எந்த அளவில் நடை பெறுகிறது என்பதைப்பற்றியெல்லாம் வன்மையாக எடுத்துக் கூறினார்கள். நான் அவற்றைப் பற்றி மீண்டும் இங்கு குறிப்பிட விரும்ப வில்லை. ஆனால் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்.

நாம் மாநிலச் சுயாட்சி வேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் எந்த முறையில் செயல் படுகிறோம் என்பதை சற்று மனச்சாட்சியில் கை வைத்து எண்ணிப் பார்க்கவேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு நாம் சிறு அதிகாரங் களை வழங்கியிருக்கிறோம். அந்த அதிகாரங்களை ரத்து செய்கிற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட கௌன்சில்களை கலைத்துவிட்டு அந்தயிடங்களில் தனி அதிகாரிகளை வைத்திருக்கிறோம். மாநிலச் சுயாட்சி கேட்கிறபோது ஒரு மாநிலத்தில் அரசியலமைப்புச் சட்டப்படி நிர்வாகத்தை நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபோது, சட்டமன்றங்களைக் கலைத்துவிட்டு குடியரசு தலைவர் ஆட்சியை அமைக்கலாம் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டு ஒரு சட்ட மன்றத்தைக் கலைத்தாலும் கூட நாம் எந்தளவிற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறோம் என்பதைக் கவனிக்க வேண்டும். எதிர்ப்பு தெரிவிப்பதில் தவறு இல்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அந்தக் கொள்கை அல்லது அந்த உணர்வு ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்தைக் கலைக்கிறபோது இந்த அரசுக்கு வேண்டாமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். இப்போது நாம் நிறைவேற்றிய அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தில்கூட இனிமேலால், ஒரு சட்டமன்றத்தைக் கலைத்து ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தவேண்டிய நிலைமை யிருந்தாலும் கூட ஒரு ஆண்டுக்கு மேல் அது நீடிக்கக்கூடாது என்ற திருத்தத்தை நாம் இங்கே நிறைவேற்றியிருக்கிறோம்.

1979 பிப்ரவரி 24] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஆனால் பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இரண்டு ஆண்டுகள் ஒன்றியங்களில் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாமல் தனி அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஆட்சியை நடத்தியிருக்கிறோம். மேலும் ஆறு மாத காலம் தனி அதிகாரிகளின் ஆயுள்காலத்தை நீட்டிக்க வேண்டும் என்ற மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னால் உண்மையிலேயே இது ஜனநாயகப் படு கொலை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே நண்பர்கள் பலர் எடுத்துக் கூறினார்கள், தனி அதிகாரி களின் ஆட்சிக் காலத்தில் என்னென்ன ஏற்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி, ஒரு கிராமத்திற்கு அடிப்படைத் தேவையான குடிநீர், மின்சார வசதி, ரோடு வசதி போன்ற அடிப்படை வசதிகள் கூட நிறைவேற்றிக் கொடுக்க முடியாத அளவிற்கு இப்போது இருக்கிறது என்று சொன்னால், இந்நிலையை மக்கள் எற்றுக்கொள்வார்களா என்பதை இந்த அரசு சற்று சிந்திக்க வேண்டும். மட்டுமல்ல, இப்போது தனி அதிகாரிகளால் செய்யப்படுகிற தவறுகள் அத்தனையையும் இந்த மாநில அரசுதான் இன்று ஏற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமான நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம், தனி அதிகாரிகள் தவறு செய்யும்போது தேர்ந்தெடுக்கப்பட்ட கௌன்சில்ஸ் அல்லது தலைவர்கள் இருப்பார்களானால் அவர்களைக் கண்காணிக்கவும் மேற்பார்வை நடத்துவதற்கும், அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ளவும் ஒரு வாய்ப்பிருக்கிறது. ஆனால் இப்போது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், இந்த மாநிலத்தில் பஞ்சாயத்து ஒன்றியங்களில் தனி அதிகாரி களால் செய்யப்படுகிற தவறுகள் அத்தனையும் அரசாங்கத்தி னால்தான் செய்யப்படுகிறது என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 12-40]

ஆகவே, நடை பெறக் கூடிய அத்தனை தவறுகளுக்கும் இந்த அரசு தான் பொறுப்பேற்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு எந்த கிராமத்தை எடுத்துக்கொண்டாலும் தெரு விளக்குகள் எரிவதில்லை. கிராமங்கள் இருள் மயமாக இருக்கிறது என் பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் பல்புகளை பஞ்சாயத்துக்கள் போடுவதா அல்லது மின்சார இலாகா போடு வதா என்கின்ற ஒரு பிரச்னை முன்னால் இருந்தது. இப்போது ஏதோ ஒரு முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் சரிவர செயல்படாததின் காரணமாக கிராமங்களில் தெரு விளக்குகள் எரிவதில்லை என்பதை எனக்கு முன்னால் பேசிய நண்பர்களும் எடுத்துச்சொன்னார்கள். அடுத்து குடிதண்ணீர் பிரச்சனை பெரிய பிரச்னையாக இருக்கிறது. எந்த கிராமத்திற்குப் போனாலும் குடிதண்ணீர் சரியாக இல்லை என்ற நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. அரசு குடிநீர் வடிகால் வாரியம் என்ற ஒரு அமைப்பு ஒரு அமைச்சரின் கீழ் செயல்பட்டுக்கொண்டிருக்

கிறது என்ற நிலைமை இருந்தும், குடிதண்ணீர் வழங்க வழியில்லாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நமது ஜனதாக் கட்சித் தலைவர் அண்ணன் ஜேம்ஸ் அவர்கள் அதிக அதிகாரங்களைப்பற்றி சொன்னார்கள். அவர்கள் கட்சி தான் மத்தியில் இருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்காரிடத்தில் இருந்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வாங்கி கொடுத்தால், முனிசிபாலிட்டி பஞ்சாயத்துக்கள் எல்லாம் இன்னும் நல்ல முறையில் அதிக அதிகாரங்களோடு இயங்க முடியும். அந்த அதிக அதிகாரங்களை கேட்கின்ற முறையில் மாநில சுயாட்சியை இவர்கள் ஆதரிக்கிறார்களா என்பதை கேட்க விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டே, பஞ்சாயத்துக்களை தேர்ந்தெடுக்கப்படும் ஆயுள் காலத்தை குறைக்கின்றீர்கள். அப்படியிருக்கும்போது, இன்னும் அதிக அதிகாரங்களை வழங்கினால் ஜனங்களுடைய ஆயுள் காலத்தையே குறைத்துவிடுவீர்கள். ஆகவே, மேலும் அதிகாரங்கள் இப்போது தேவையில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும். மத்தியிலிருந்து அதிக அதிகாரங்களை மாநில அரசுக்கு கிடைத்தால், மாநில அரசு அதை உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்போது உள்ளாட்சித்துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களைகூட, மாநில அரசு உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்குவது இல்லை. நம்மிடம் இருக்கின்ற அதிகாரங்களையே நமது உள்ளாட்சித்துறை நிறுவனங்களுக்கு வழங்கவில்லை. இப்படியிருக்கும்போது, இன்னும் அதிகமான அதிகாரங்களை மத்திய அரசாங்கம் மாநில அரசுக்கு வழங்குவது எப்படி பொருத்தமாக இருக்கும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள நாம், கிராம ராஜ்யம் அமைக்கவேண்டும் என்று சொல்லுகிறோம். கிராம பகுதிகள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று சொல்லுகிறோம். ஆகவே இப்போதுள்ள பஞ்சாயத்துகளுக்கு இன்னும் அதிகமான அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்று சுட்டிக்காட்டி கேட்டுக்கொள்கிறேன். இப்போது வீட்டு வரி சுமத்தி

யிருக்கிறார்கள். தனி அதிகாரிகளை போட்ட பிறகு வீட்டு வரியை பொறுத்தளவில், 300 சதவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டால், 100 சதவீதம் அதிகமாக இருந்தால் அவற்றை மட்டும் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கலெக்டர் உத்தரவிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு தனி அதிகாரிகள் இந்த அளவுக்கு அதிகமான வீட்டுவரியை உயர்த்தியிருப்பதன் காரணமாக கிராமங்களிலுள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். மேலும் தனி அதிகாரிகள் நிர்வாகத்தை நடத்துகிற போது, மக்களுடைய உணர்வுகளை ஏற்றுக்கொள்வதில்லை. ஆகவே தான் விரைவில் தேர்தலை நடத்தவேண்டும் என்று இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியான ஒன்றை மட்டும் சொல்லவிரும்புகிறேன். இந்த மசோதா கொண்டு வந்திருப்பதற்கான காரணம் மழை பெய்த காரணத்தினால் தேர்தல் நடத்துவதற்கு சில இடையூறுகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்தால் இந்த அரசு அதிகமான மழை பெய்யக்கூடாது என்று விரும்புகிறது. மழை இல்லாமல் இருந்தால் பஞ்சம் ஏற்படும். ஆகவே நாட்டின் நன்மையைக் கருதி, மேலும் இது போன்ற மசோதாக்களில் இத்தகைய காரணங்களை சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சுந்தசாமி : தற்காலிகத் தலைவர் அவர்களே, திரு. ஜேம்ஸ் அவர்கள், இந்த அரசு மழை வேண்டாம் என்று விரும்புகிறது என்று சொன்னார்கள். மழை வேண்டாம் என்று எண்ணக்கூடிய அரசாக இருந்தால் அது மக்கள் விரோத அரசாகத்தான் இருக்க முடியும். ஆகவே அப்படியிருப்பதற்கில்லை என்று நினைக்கிறேன். மழை வேண்டாம் என்று எந்த அமைச்சர் எப்போது தெரிவித்தார் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் தனி அதிகாரிகள் நியமன காலத்தை நீட்டிக்கின்ற இந்த மசோதாவானது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பிட்டிருக்கின்ற காரணம் சரியான காரணமாக இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். காரணம், ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட காலத்தைவிட, பல ஆண்டுகள் நீடித்துக் கொண்டு வந்திருக்கிறோம். அது மட்டுமல்ல. அருமை உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொன்னதுபோல், 'நீங்கள் அறுவடை செய்வீர்களா' என்றார்கள். அதற்கு எங்கே நீங்கள் ஆளாகி விடுவீர்களோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. ஆகவே, உடனடியாக....

மாண்புமிகு திரு, கா. காளிமுத்து : மார்க்கபந்து போன்றவர்கள் துணை இருக்கும்போது, நிச்சயமாக நாங்கள் அதற்கு ஆளாக மாட்டோம்.

திரு ரா. மார்க்கபந்து :—இந்த உரிமையோடுதான் இதை நான் சொல்கிறேன். விரைவாக இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். தனி அதிகாரிகளின் ஆயுட் காலத்தை நீடிப்பதன் மூலம், விரும்பத்தகாத, வேண்டத்தகாத நிலைமைகள் தமிழகத்திலே குறிப்பாக ஒன்றியங்களினுடைய நிர்வாகத்திலே நடைபெற்று வருகின்றது. இங்கே லத்தீப் அவர்கள் பேசும்போது, காரசாரமான விவாதம் நடைபெற்றது. குற்றச்சாட்டுகளாக, சொல்லக்கூடாது என்கிற அளவுக்கு நாம் நிலைமைகளை உருவாக்கிவிடக்கூடாது. காரணம், இதற்கு முன்னாலே Public New Criminal Misconduct Repealing Act. இந்தச் சட்டம் கொண்டு வந்தபோது, குற்றம் சுமத்துபவர்கள் ஆதாரம் இல்லாமல் குற்றம் சுமத்தினால், அவர்களுக்கு 3 மாத சிறைத் தண்டனை என்ற வேண்டத்தகாத ஒரு ஷரத்து இருந்த காரணத்தினாலே, அதை நாம் ரத்து செய்தோம். இங்கே குற்றச்சாட்டு சொல்லப்படுகின்றது என்று சொன்னால், அதை இந்த அரசாங்கம் It has to take in a sportive manner நடைபெறுகின்ற தவறுகளை இந்த அரசாங்கத்திற்கு சுட்டிக் காட்டுகின்ற வகையிலே தான் உறுப்பினர்கள் கூறுகின்றார்கள். வேறு விதத்தில் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, ஒரு கருத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்கள் நியமிப்பதிலேயும், ஆசிரியர்களை மாற்றுவதிலேயும், முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அரசாங்க அதிகாரிகள் செய்கின்ற தவறுகளுக்கெல்லாம், அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலைமையைவிட, அப்படி தவறு செய்கின்ற அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சொல்ல வேண்டுமே ஒழிய, அதிகாரிகள் தவறு செய்து விட்டார்கள் என்பதற்காக இந்த அமைச்சர் அவையைக் கலைத்துவிட வேண்டுமென்றோ, அமைச்சர் அவை ராஜினாமா செய்யவேண்டும் என்றோ சொல்வது சரியான வாதமாக இருக்க முடியாது. அதேபோன்று, அரசுத் தரப்பிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு இவ்வளவு தூரம் பரிந்து, அவர்களுக்கு வக்காலத்து வாங்குவது என்று சொன்னால், ஏற்கெனவே அதிகாரிகள், சில அதிகாரிகள் தலைக்கனம் பிடித்துக்கொண்டு, பிறரை மதிக்க முடியாத நிலையிலே இருந்து வருகிறார்கள். அதற்கு தயவுசெய்து இந்த அரசு இடம் கொடுக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, இங்கே நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே, வெண்பாக்கம் பஞ்சாயத்து யூனியனிலே 20 ஆசிரியர்கள் நியமிக்கப்

பட்டனர். அப்படி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதிலே, ஒவ்
வொரு ஆசிரியரிடமும் ரூ. 2,000 வீதம் வசூல் செய்யப்பட்ட
20 ஆசிரியர்களுக்கு நியமன உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.
இதுபற்றி உடனடியாக அங்கே இருக்கக்கூடிய முன்னால்
பஞ்சாயத்து யூனியன் தலைவர் பெருமாள்சாமி என்பவர்
கலைக்டருக்கு ரிப்போர்ட் செய்தார். இது குறித்து மேலும்
கலைக்டர் விசாரணை நடத்தி, அந்த விசாரணையிலே அவர்
அந்த 20 ஆசிரியர்களையும் கூப்பிட்டு, உங்களுக்கு வேலைக்கு
உத்தரவாதம் தருகிறேன், நடந்த உண்மையைக் கூறுங்கள்
என்று கலைக்டர் விசாரிக்க, அந்த 20 ஆசிரியர்களும் ஆளுக்கு
ரூ. 3,000 கொடுத்தோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.
அந்த விசாரணையின் முடிவுப்படி பஞ்சாயத்து யூனியன் கமிஷனரை கலைக்டர் அழைத்து, நீங்கள் அந்த 60,000 ரூபாயை
ஆசிரியர்களுக்கு திருப்பித்தர வேண்டுமென்று கட்டளை
இடுகிறார்கள். அப்படி அந்த அதிகாரி, அந்த பீ.டீ.ஓ. 60,000
ரூபாயை கட்டுகிறார்கள். அதற்குப் பின்னாலே அவருக்கு
மாற்றல் உத்தரவு வருகிறது. அந்த அதிகாரியும், இன்னும்
டீ.டீ.ஓ.வும் அங்கே உள்ள பஞ்சாயத்து அதிகாரியும் மாற்றப்
படுகிறார்கள். இப்படி ஒரு அதிகாரி, ஆசிரியர்கள் நியமனத்
திலே ரூ. 60,000 வாங்கி, விசாரணை செய்யப்பட்டு,
திருப்பி 60,000 ரூபாயை கட்டிய பிறகு, அந்த அதிகாரிக்கு
மாற்றல் உத்தரவு வருகிறது என்று சொன்னால், அதற்குமேல்
அந்த அதிகாரியை கட்டுப்படுத்த முடியாது என்கிற அந்த நிலை
மையை கட்டாயமாக மாற்றியாக வேண்டும். அந்த நிலைமையை
நாம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் என் கருத்தைச் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். இந்த பஞ்சாயத்திலே.......

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே,
நம்முடைய மார்க்கபந்து அவர்கள் அதிகாரியால் 2,000 ரூபாய்
ஆசிரியர்கள் நியமனத்திற்கு வாங்கப்பட்டதாகவும், அப்படி
வாங்கப்பட்ட தொகையைப் பற்றி கலைக்டர் விசாரித்து
கண்டுபிடித்து, உண்மை என்று நிரூபிக்கப்பட்டு, அந்தத்
தொகையும் திருப்பிக் கட்டப்பட்டதாகச் சொல்லுகிறார்கள்.
அதற்குப் பிறகு அந்த அதிகாரி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்
கள் என்று சொன்னால், அந்த அதிகாரிக்கு அந்த தண்டனை
மட்டும்தானா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

[பிற்பகல் 12-50]

திரு. ரா. மார்க்கபந்து : அதிலே ஒரு சிறு திருத்தம். அந்த
60,000 ரூபாய் அந்த காண்டிடேட்டுகளுக்கே திருப்பிக் கொடுக்கப்
பட்டு விட்டது. அந்த அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்
கள். அத்தகைய அதிகாரிகளை இந்த அரசாங்கம் சும்மா
விட்டு விடக் கூடாது.

அடுத்து சாலைப் பராமரிப்பு. சாலைப் பராமரிப்புக்கு ஒரு ஒன்றியத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு ஒரு கிலோ மீட்டர் வரைக்கும் கூட ரோடு போடமுடியாது என்று சொன்னால் தேர்ந்தெடுக்கப்படுகிற 5 ஆண்டுக்காலத்திலே 5 கிலோ மீட்டர் தான் போட முடியும். எந்தவிதமான வேலையும் செய்யமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அதிகமான பணத்தை ஒதுக்குகின்ற அதிகாரத்தை அவர்களுக்கு தரவேண்டும்.

அடுத்து வேலை செய்கின்றபோது ஒப்பந்தங்களை விடுகிறார்கள். அப்படி விடுகிறபோது பலவிதமான சிக்கல்கள், தகராறுகள் வருகின்றன. என்ன என்னமோ போசப்படுகின்றன. ஆகவே அதற்குள்ளே நான் நுழையவில்லை. காண்ட்ராக்ட் முறைப்படி நடக்கிறதா என்று இந்த அரசாங்கம் கண்காணிப்பாக இருக்கவேண்டுமென்று வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல்களை நீட்டித்துக் கொண்டே போகிற காரணத்தாலே பஞ்சாயத்து தலைவர்கள் எல்லாம் கமிஷனர் இ. ஒ. போன்றவர்களின் முன்பு கைகட்டி அடிமைகளாக நிற்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு வேலைக்கு 5 ஆயிரமோ 10 ஆயிரமோ ஒதுக்கப்படுகிறது என்றால் அந்தத் தொகையைச் செலவு செய்கிறார்களோ இல்லையோ அது வேறு விஷயம். ஏறக்குறைய பில்போடுகிறபோது 10 சதவீதம், 15 சதவீதம் ஒதுக்கப்படவேண்டுமென்றும் இல்லையென்றால் பலவிதமான சர் சார்ஜிகள் வரும் என்றும் சொல்கிறார்கள். அரசாங்கம் செலவிடுகிற பணத்தில் ஒரு பகுதியை அதிகாரிகளுக்கு ஒதுக்கினால் தான் பில் பாஸாகும் என்ற நிலைமை இருக்கிறது. அதைத் தவிர ஆடிட் செய்யவேண்டுமென்றால் அதற்குரிய பர்சன்டேஜ் என்று இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை, தேர்தல்களை, நீட்டித்துக்கொண்டு போதவன்மூலம், தொடர்வதற்கு இடம் கொடுத்துவிடக் கூடாது; அதை செய்யாவிட்டால் இந்த அரசு அதிகாரத்திலே இருப்பதற்கு தகுதியில்லை என்ற நிலைமை வருகிறது. ஆகவே இந்த அரசாங்கம் It must have the effective control over the officials என்ற முறையிலே எனது கருத்தைச் சொல்லி இந்த மசோதாவை நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாக எதிர்ப்பு அளிக்க மறுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்பு வைக்கப்பட்டுள்ள தமிழக ஊராட்சி ஒன்றிய தனி அலுவலர்கள் பதவிக்காலத்தை 6 மாதங்களுக்கு நீட்டிப்பது சம்பந்தப்பட்ட மசோதாமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1970-ஆண்டு வாக்கிலே நடந்து முடிந்த தேர்தல் 1975 இல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டும் காலப்போக்கில் அதுவும் ஒத்தி வைக்கப்பட்டு இந்த ஆட்சி வந்து 2 ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் ஒத்திவைக்கப்படவேண்டிய நிலைமை இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. Government by the people, for the people and of the people என்ற நிலைமையை உருவாக்க வேண்டும். நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விரும்புகிற முதல்வர் அவர்களும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற அமைச்சர் பெருமக்களும் இயற்கையின் சோதனை அல்லது மனிதனின் முயற்சிக்கு அப்பாற்பட்ட மாற்றங்களின் காரணமாக தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இருந்தாலும், அரசு மக்களின் நன்னுக்காக இருக்கிற அரசு இந்த நிலைமைகளை யெல்லாம் பரிசீலனை செய்து காரணங்களைப் பரிசீலனை செய்து எவ்வளவு விரைவாகத் தேர்தலை நடத்தமுடியுமோ அவ்வளவு விரைவாக நடத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

[பிற்பகல் 1.00]

என்றாலும், இன்னும் ஆறு மாதம் என்று நீட்டித்திருப்பதை நான் பார்வார்ட் ப்ளாக் கட்சியின் சார்பாக எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் மிக வேதனையோடு சட்டமன்றத்தில் பல குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். நானும் குற்றச்சாட்டைச் சாட்டுகிறேன் என்ற விவரத்திற்குச் செல்லாமல், மன வேதனையை, மக்களின் குறைகளைச் சொல்லக்கூடிய மாமன்றம் இதுதான், இங்கே சொல்வதால் அதற்கு உடனடி நிவாரணம் கிடைக்கும் என்ற நல்ல நோக்கத்தோடு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பேப்பரிலே வர வேண்டுமென்று விளம்பரத்திற்காகவோ அல்லது ஆளுங்கட்சியைக் குற்றம் சொல்லி மக்கள் மன்றத்திலே அதற்குக் களங்கத்தை விளைவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லப்பட்டது அல்ல என்ற விளக்கத்தைக் கூற விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். அங்கேயுள்ள அதிகாரிகளுக்குப் பதில் இப்படித் திடீரென்று மக்கள் பிரதிநிதிகள் அங்கே பொறுப்பேற்ற உடனேயே, இருக்கின்ற குறைபாடுகள் அத்தனையும் உடனடியாக நீங்கி ஒளி பெற முடியும், மக்கள் பிரதிநிதிகள் வந்த மறு நிமிடமே கிராமப்புற மக்களின் குறைகள் அத்தனையும் நீங்கிவிடும் என்று எண்ணுவது முறையல்ல. என்றாலும், இன்றைக்கு இருக்கக்கூடிய அவல நிலை கணிசமாக மாற்றப்படும் என்ற நம்பிக்கையிருப்பதால்தான் மக்கள் பிரதிநிதிகளுக்கும் விரைவில் வாய்ப்பளிக்கும் அளவிற்கு தேர்தல்கள் நடத்தப்பட்டிருக்க வேண்டுமென்று வலியுறுத்தக் கூற விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 24] [திரு. கே. கந்தசாமி]

அந்தக் [illegible] [illegible] அரசாங்கம் [illegible] பொறுத்த அளவில் [illegible] very very [illegible] wind chapter and sad [illegible] chapter [illegible] history. மிக வேதனையோடு நான் குறிப்பிடுகிறேன். மிக கடமை உணர்வோடும் பொறுப்புணர்ச்சியோடும் நான் குறிப்பிடுகிறேன். சட்டத்திலுள்ள [illegible] [illegible] என்று [illegible] உணர்ந்து நான் கூறுகிறேன். [illegible] [illegible] [illegible] இடம் [illegible] [illegible] நான் குறிப்பிடுகிறேன். [illegible] ஆண்டு, [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] நடந்தது. [illegible] [illegible] [illegible] [illegible] வது. 50 [illegible] [illegible] [illegible] என்று [illegible] அனுப்பியிருக்கிறார். நான் [illegible] [illegible] [illegible] [illegible] முறை என் [illegible]? [illegible] [illegible] என் [illegible] இருக்கிறீர்கள் என்று [illegible] [illegible] [illegible] யோடு [illegible] வருகிற பஞ்சாயத்து தலைவரும் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் [illegible] அவர்களும் [illegible] [illegible] பினர்களும் [illegible] [illegible] [illegible]. [illegible] முறை [illegible]. அந்த நியாயம் செய்யக்கூடிய [illegible] அப்போது [illegible] அந்த [illegible] போய் சேராதே என்று கூறினார்கள். [illegible] [illegible] அந்த [illegible] [illegible] [illegible] றார்கள். ஆனால், அந்த [illegible] [illegible] [illegible] இருக்கிறது? Seniority was not considered. Merit was not considered. Communal backwardness or down trodden position was not considered.

1968-ம் [illegible] என்று நினைக்கிறேன். அந்த [illegible] [illegible] பால் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] வர் [illegible] [illegible] பதிந்து [illegible] அந்த அப்போது [illegible] [illegible] மன்ற உறுப்பினர் என்று [illegible] யில், [illegible]. பஞ்சாயத்து தலைவரும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும். [illegible] [illegible] [illegible] செய்திருக்கிறார். ஆனால், [illegible] [illegible]. [illegible] எடுத்தார்கள் [illegible]? மிகக் [illegible] [illegible] [illegible] அப்போது. [illegible] [illegible] [illegible] [illegible] நாம்பளையும் [illegible] [illegible], [illegible] [illegible] எடுத்திருக்கிறார்கள். இது என்ன நியாயம்? [illegible] [illegible] கேட்கவேண்டாமா? அதன் [illegible] [illegible] கவனிக்க [illegible]. உள்ளாட்சி [illegible] [illegible] [illegible] [illegible]. பிரம்ம [illegible] [illegible] [illegible] [illegible] என்று [illegible] நாதே [illegible]. இந்தக் [illegible] [illegible] [illegible] கல்வி [illegible] என்று [illegible] [illegible]. [illegible] [illegible] வேண்டியதுதான். ஆனால் தந்தை என்ற [illegible] இருந்து [illegible] பார்க்கவேண்டும். மகன் [illegible] வழியில் [illegible] என்ற நினைவிருக்கும்போது, என்று [illegible] [illegible] [illegible] குறிப்பிடுகிறார். [illegible] [illegible] இந்தக் [illegible] [illegible] [illegible] [illegible] நிறைந்த காலத்திலே, அதிகாரத்தை பெற்றுக்கொண்டபோது [illegible] நியாயம் ஏற்படும்போது உதவி கொடுக்க வேண்டும். பிரமாணமும்

கள் கொடுத்திருக்கிறார்கள். அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அடிக்கிற நேரத்தில் அடித்து அரவணைக்கிற நேரத்தில் அரவணைக்க வேண்டுமென்று கேட்கிறேன். சர்வ கட்சித் தலைவர்களும் வந்து வெளியே காத்திருக்கிறார்கள். ரூ. 5,000 முதல் ரூ. 7,000 வரை வாங்கியதாக புகார் மனுவை கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே கையெழுத்துப் போட்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் மதுரைக்கு வந்த பொழுது மனு கொடுத்திருக்கிறோம். நான் வேறு விவரங்கள் சொல்ல வேண்டியதில்லை. எல்லாம் அதிலே இருக்கிறது. 423 மார்க்குகள் வாங்கிய, பிற்பட்ட மலைவாழ் பிரிவைச் சேர்ந்த பெருமாள் என்பவருக்குக் கொடுக்கவில்லை. 260 மார்க்குகள் வாங்கியவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது என்ன நியாயம்? ஆகவே, அருள் கூர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் போன்ற பொறுப்புள்ள அதிகாரிகள் நேரிடையாக விசாரித்து, தவறு செய்தவர்களை டிஸ்மிஸ் செய்ததாக பத்திரிகையிலே வர வேண்டும். அப்பொழுதுதான் மற்றவர்கள் பயப்படுவார்கள்.

[பிற்பகல் 1-10]

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களிடம் ஒரு விவரம் பெற விரும்புகிறேன். நமது உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு ஒரு ஊழல் புகார் சம்பந்தம் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு ஒரு மனுவை கொடுத்திருக்கிறார். அது என்ன ஊழல் என்று தெரிந்தால் சரியாக இருக்கும்.............

மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர்: அவர் பேசும் பொழுதே சொல்லிவிட்டார்.....

திரு. கே. கந்தசாமி: ஊழலைப் பற்றி அதிகமாகப் சொல்லி பழக்கப்பட்ட உறுப்பினர் அதைக் கேட்க விரும்புகிறார்..

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்: நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். அவருக்கு அது பின்னால் தெரியவரும்.

திரு. கே. கந்தசாமி: பி.டி.ஓ. டி.டி.ஓ. ஆகியவர்கள் இவ்வாறு செய்திருக்கிறார்கள். அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கைகள் எடுங்க வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை இந்த மன்றத்தின் முன் வைத்து கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு தனி அதிகாரிகள் ஆளும் காலத்தை நீட்டிக்கின்ற மசோதாவில் நான் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். 1970-ல் பஞ்சாயத்து தேர்தல்கள் நடத்தியது. 1980 பிறந்து

விட்டால் இரண்டு ஐந்தாண்டுகள் முடிந்து விடும். ஆனால், நமது அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகள் நிரம்பியும் கூட இன்னமும் இந்த பஞ்சாயத்து தேர்தலைப் பற்றிய நடவடிக்கைகளை நீட்டித்துக் கொண்டே போவது சரியல்ல என்பது என்னுடைய எண்ணம். தனி அதிகாரிகளின் பதவிக்காலம் நீடித்துக் கொண்டே போவதால் தான் இன்றைக்கு, அதிகாரிகள் மேல் பெரும்பாலான குற்றங்கள் சுமத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமைக்கும் காரணம்—அதிகாரிகள் தவறு செய்வதற்கும் காரணம் ஆகும். எல்லா அதிகாரிகளும் குற்றம் செய்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இன்றைக்கு விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது என்று போராடக் கூடிய நிலையில் தனி அதிகாரிகள் கொண்டு வந்திருப்பதற்குக் காரணம்— நிலவரி 1·50 ரூபாய் என்பதற்கு பதிலாக நிலவரி 2 50 ரூபாய். (சர்சார்ஜ் வேறு) உயர்த்தியிருப்பதேயாகும். இந்த நிலைமை தமிழகம் பூராவும் இருக்கிறது. என் தொகுதியில் கூட ஒரு ஆசிரியரை 20 மைலுக்கு அப்பால் மாற்றியிருக்கிறார்கள். இடையிலே மாற்றவேண்டிய காரணம் என்ன? ஊராட்சி ஒன்றியங்கள் இருந்தால் இவற்றை எல்லாம் கண்காணிக்க வாய்ப்பு கிடைக்கும். இதனால், சட்ட மன்ற உறுப்பினர் சொல்வதைக் கேட்கிறீர்களா? ஆளும் கட்சி உறுப்பினர் சொல்வதைக் கேட்கிறீர்களா? ஆளும் கட்சி உறுப்பினர் சொல்வதைத்தான் கேட்கிறார்கள். இதற்கு காரணம் உள்ளாட்சி மன்றங்களிலே தனி அதிகாரிகள் ஆட்சி நடப்பது தான். என் தொகுதியில் மூன்று ஊர்களில் ''திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, கோட்டூர்'' ஆகிய ஊர்களில் உள்ள ஆலோசனைக் குழுக்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆட்கள் கிடையாது, மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்கள் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்கள் கிடையாது. இருப்பவர்கள் எல்லாம் ஆளும் கட்சி பிரமுகர்கள் தான். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கக்கூடாது என்று சொல்லவில்லை—இப்பொழுது சட்ட மன்றத்திலே எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருப்பதால் குற்றங்குறைகளை எடுத்துக் காட்டுகிறோம். அதுபோல் எல்லாக் கட்சிகளுக்கும் ஒரு இடம் ஒவ்வொரு ஊராட்சி மன்றங்களிலும் இருக்க வேண்டும். எதிர்காலத்திலாவது இந்த அமைப்பு உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, நான் சொல்ல விரும்புவது, சாலைகள், மின்சாரம் குடிநீர் போன்ற பிரச்சனைகள் குறித்து ஆகும். இந்த ஒன்றியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி இல்லாத காரணத்தால் தனி அதிகாரிகளிடத்தில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கை கட்டி நிற்கும் கால கட்டத்தில், மிகவும் கேவலமாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்களின் தலைவர்களின் பொறுப்பு அந்த வகையில் இருந்துக்கொண்டிருக்கிறது. இதை எல்லாம் போக்கவேண்டுமானால், இந்தத் தேர்தலை

[திரு. பொ. உத்திராபதி] [1979 பிப்ரவரி 24

ஒவ்வொரு ஆண்டும் 6, 6 மாதம் என்று ஒத்திப்போடுவதற்கு பதிலாக அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தது போல், ஜூன் மாதத்தில் தேர்தலை நடத்தவேண்டும். இதேபோல் ஒரு அறிவிப்பை 6 மாதத்திற்கு முன்பு பத்திரிகையில் பார்த்தேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் இருந்து திரும்பியவுடன் தேர்தல்கள் நடத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்போதும் ஜூன் மாதம்தான் தேர்தல் வரும் என்று சொன்னார்கள். இப்போது புதிய அமைச்சர் அவர்கள் டெல்லியில் இருக்கிறார்கள். இந்த அறிவிப்பை முதலமைச்சரைக் கலந்து கொண்டு தான் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். ஆனால் இந்த ஜூன் மாதத்திலும் குதிரைக்குக் கொம்பு முளைத்தது மாதிரி இல்லாமல் ஆட்சியாளர்கள் மக்களை சந்திக்கத் தயார் என்று வரவேண்டும். மக்கள் என்ன நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்றால் இப்படித்தான் ஆட்சியாளர்கள் தேர்தல் என்று சொல்வார்கள், ஆனால் தேர்தல் வராது என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். ஊராட்சி மன்றத் தலைவர்களும் தேர்தல் வராது, இன்னும் ஓர் ஆண்டு காலத்திற்கு நாமே தலைவராக இருந்து கொண்டு இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க ஆட்சியாளர்கள் மக்களைச் சந்திக்கத் தயாராகி, அரசு கொடுத்து இருக்கும் வாக்குறுதிகள் எதுவும் இதுவரைக்கும் நிறைவேற்றப்படவில்லை. இப்போது உள்ளாட்சித் துறை அமைச்சர் கொடுத்து இருக்கும் வாக்குறுதியாவது நிறைவேற்றப் படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்த தற்காலித் தலைவருக்கு நன்றி கூறி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன் வணக்கம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவையின் தற்காலிகத் தலைவரவர்களே, நேற்று நான் அறிவித்த அந்த அறிவிப்புக்கிணங்க, அந்த அறிவிப்பிலே நம்பிக்கைக்கொண்டு இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஜூன் மாதத்திலே தேர்தலை நடத்த வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்திச் சொல்லி, தேர்தல் தள்ளிப் போடப்படுகின்ற காரணத்தாலே என்னென்ன குறைபாடுகள் நேர்ந்து இருக்கின்றன என்பதைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தேர்தல்கள் தள்ளிப்போடப் படுகின்ற காரணத்தாலே மட்டும் பிரச்சனைகள் எழுகின்றன. மக்கள் பிரதிநிதிகள் வந்தால் இந்தப் பிரச்சனைகள் இருக்காது என்பது பொருள் அல்ல என்றாலும் எப்படி கடலில் அலைகள் ஓய்வதில்லையோ, அதைப்போல் நிர்வாகத்தில் இருக்கின்ற பிரச்சனைகளும் தீர்ந்துபோய்விடாது. மக்கள் பிரதிநிதிகள் வந்தால் பல்வேறு குறைபாடுகள் களைய வாய்ப்பு இருக்கும் என்ற நம்பிக்கை அரசுக்கும் இருக்கிறது. ஆனால் நான் ஏற்கனவே தெரிவித்தபோல், ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டு, தனி அதிகாரிகள் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு பல்வேறு பணிகள் அதிகாரிகள் தான் ஆற்றவேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது.

1979 பிப்ரவரி 24] [திரு. கா. காளிமுத்து]

[illegible] ஆய்வுரைகளை வழங் [illegible] உறுப்பி [illegible] இருக் [illegible] இறேன்.

[illegible]

[பிற்பகல் 1-20]

[illegible]

[illegible] இரண்டு தேர்தல்களு [illegible] என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள [illegible] இறேன்.

இங்கே பல்வேறு குறைபாடுகள், குற்றச்சாட்டுக்கள், இன்னும் சொல்லப்போனால் ஊழல் புகார்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. அந்த புகார்கள் இதற்கு முன்னாலே நேரடியாக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டபோதெல்லாம் அரசு அக்கறையுடன் நடவடிக்கை எடுத்திருக்கிறது ; இன்னும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதையும், எந்த அதிகாரி தவறு செய்திருந்தாலும் அந்த அதிகாரியைக் காப்பாற்ற அரசு நிச்சயமாக முயற்சி செய்யாமல் மக்களைக் காப்பாற்றும் முயற்சியிலே நல்லமுறையில் நடவடிக்கை எடுத்து, தவறு செய்தவர் யாராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணன் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் பேசும்போது சிங்கம்புணரியில் இருக்கக்கூடிய டி. டி. ஓ-வை ஆளும் கட்சியின் தலையீடு காரணமாக நான் மாற்றிவிட்டேன் என்று சொல்லி, அமைச்சரை நோக்கி ஒரு பெரிய பணி வெடிப்பே வந்தது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட பணி வெடிப்பு எதுவும் நடக்கவில்லை என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது தேர்தலை எப்படித் தள்ளிப்போடலாம் என்று கேட்டுவிட்டு இன்னொன்றையும் சொன்னார்கள். கன்னியாக்குமரி மாவட்டத்தில் இருக்கிற ஊராட்சிகள் இயங்க வசதி இல்லாமல் இருக்கின்றன. அவைகளை சீரமைப்பதற்காக ஒரு வேளை தேர்தலைக் கொஞ்சம் தள்ளிப் போட்டாலும் எதிர்க்கமாட்டோம் என்று கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவைகளை தேர்தலுக்கு முன்னால் மாற்றியமைத்து, சீரமைக்கின்ற வாய்ப்புகள் இருக்கிறதா, வசதி இருக்கிறதா என்பதை அரசு ஆராயும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டு வரி அதிகமாகியிருக்கிறது; தனி அதிகாரிகள் அதிகமாக்கி விட்டார்கள் என்று இங்கே சிலர் சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உள்ளாட்சி அமைப்புக்குத் தேவையான சில பணிகளைச் செய்ய வேண்டுமென்றால் சில வரிகளை விதித்துத்தான் ஆக வேண்டும். எந்தச் சர்க்காராக இருந்தாலும் வரி விதிக்காமல் வசதிகள் செய்ய நிச்சயமாக முடியாது. அரசாங்கமாக இருந்தாலும் சரி, ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும் சரி, நகராட்சியாக இருந்தாலும் சரி, வேறு ஏதோ, எங்கோ இருந்து வசதிகள் இறக்குமதியாகக் கூடியது அல்ல. மக்களுடைய பணத்தைப் பெற்றுதான், அவர்களுடைய ஒத்துழைப்புடன் தேவையான பணிகளைச் செய்ய முடியும்.

வீட்டு வரி அதிகம் அல்லது நில வரி அதிகம் விதித்துவிட்டார்கள் என்று சொல்கிறவர்கள் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். தண்ணீர் வசதி இல்லை என்கிறார்கள், சாலை

வசதி இல்லை என்கிறார்கள் ; மின்சார விளக்கு வசதி இல்லை என்கிறார்கள். இவைகளைச் செய்ய வேண்டுமென்றால் அதற்கு என்ன வழி? அந்தந்த ஊராட்சிகள் நிதி திரட்டி, அரசின் உதவியையும் பெற்றுதான் அந்த வசதிகளைச் செய்ய முடியும். அதற்கு வரி போட்டுத்தான் முடியும். ஆனால், அப்படி வரி போடும்போது தாங்க முடியாத அளவுக்கு வரி போடப்பட்டிருக்கிறது அல்லது நூறு சதவீதத்திற்கும் அதிகமாக வரி போடப்பட்டிருக்கிறது என்று புகார் அரசுக்கு வருமானால் அதை நிறுத்தி வைக்க அரசு நிச்சயமாக முயற்சி செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக குடிநீர் பற்றாக்குறை, மின்சார விளக்கு எரியவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். மின்சார விளக்கு அதாவது தெருவிளக்கு எரியவில்லை என்ற குறையைப் போக்க மின்சாரத் துறையின் ஒத்துழைப்புடன் என்னென்ன செய்யலாம் என்பதை நானும் மின்சாரத் துறை அமைச்சரவர்களும் கூடி பேசியிருக்கிறோம் ; விரைவில் அதுபற்றி ஒரு முடிவு எடுக்க இருக்கிறோம்; சில முடிவுகளை ஏற்கனவே எடுத்திருக்கிறோம். இவைகள் இந்தக் குறையைப் போக்க பயன்படும் என்று நம்புகிறேன்.

ஆக, ஒரு வகையில் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும்; தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வந்துவிட்டால் உள்ளாட்சி அமைப்புகள் இன்னும் உயிரோட்டத்துடன் இயங்கும் என்பதை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது.

உள்ளாட்சி அமைப்புகளை முழுமையாக இயங்கச் செய்ய, திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, கிராமங்கள் சுதந்திரம் பெற்று, [illegible] இந்த அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்ற உறுதிமொழியை அளிப்பதோடு, வருகின்ற ஜூன் மாதத்திலே தேர்தல் நடக்கும் என்ற உறுதியோடு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்த மசோதாவை ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம். அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, ஒன்றை விட்டுவிட்டார்கள். ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் மற்றவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதாவது ஊராட்சி ஒன்றிய [illegible] நியமிப்பது பற்றி ஒரு குறையைச் சொன்னார்கள். அதற்கு என்ன பதில் என்று அமைச்சரவர்கள் சொல்லவில்லை. பதிவு செய்கின்ற குழுவில் டி. டி. ஓ., பி. டி. ஓ. எல்லாம் இடம் பெற்றிருக்கிறார்கள். அதே மாதிரி அந்தக் குழுவில் சம்பந்தப்பட்ட எம். எல். ஏ. வையும் சேர்த்துக் கொண்டால் இப்படிப்பட்ட தவறு

[திரு. எஸ். [illegible]] [1979 பிப்ரவரி 24]

சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. [illegible] தேர்தல் [illegible] இப்போதே [illegible] வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: [illegible] தேர்தல் [illegible] வரும் [illegible] அவர்களும் [illegible] இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்றும் [illegible] திரு. [illegible] விரும்புகிறேன். [illegible] இயக்கம் [illegible] வேண்டும் என்று [illegible] என்று [illegible] நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுப்பதும் [illegible] இந்த நோக்கத்தை தெரிவித்துக்கொள்ள [illegible] கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஜூன் மாதத்திலே தேர்தல் வரும் என்று சொன்னார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஊராட்சி

1979 பிப்ரவரி 24] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

களின் தேர்தல் நடைபெற்ற பிறகு ஊராட்சி ஒன்றியங்களின் தேர்தல் நடைபெற்ற பிறகு [illegible] உறுப்பினர்கள் [illegible] வேண்டிய நிலைமைகள் [illegible] இருக்கின்றன. ஆகவே, இரண்டு தேர்தலும் ஒன்றாக நடத்தப்படுமா அல்லது தனித் தனியே நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு [illegible] தலைமை தாங்கினார்கள்)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அந்தச் [illegible] இன்னும் [illegible] மிகத் தெளிவாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டு தேர்தல்களும் ஒன்றாகவே நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஜூன் மாதம் தேர்தல் வரும் என்றார்கள். மிக்க நன்றி. [illegible] இந்தத் தேர்தல் எந்த அடிப்படையில் நடத்தப்படும்? [illegible] அடிப்படையிலே நடத்தப்படுமா அல்லது [illegible] இல்லாத அடிப்படையிலே நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அது குறித்து [illegible] அமைத்துக் கூடித் தலைவர்கள் கூட்டத்திலே முடிவு செய்யப்பட இருக்கிறது. ஆகவே ஊராட்சித் தேர்தல்கள் கட்சியின் அடிப்படையிலே இல்லாத அளவிலும், ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் கட்சியின் அடிப்படையிலேயும் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[illegible]: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் [illegible] [illegible] அதைத் தான் [illegible] எவ்வாறு அமையப்போகிறது என்பதை அரசு தெளிவாக்க வேண்டும் என்று [illegible].

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அமைப்பது அரசுதான் [illegible] [illegible]

திரு. [illegible]: தலைவரவர்களே, [illegible] [illegible] ஆகும். அந்தக் [illegible] அறிய விரும்புகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கள் கிழமை, 1979 பிப்ரவரி 26.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. தகவல் கோரல்

(அ) பேரவைத் தலைவர் அமைச்சராகப் போவதாக பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இன்றைய செய்தித்தாளில் முக்கியமான செய்தியாக தாங்கள் அமைச்சராக வரப் போவதாக ஒரு நல்ல செய்தி வந்திருக்கிறது. அதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவைத் தலைவராக தாங்கள் கடைசி நாளாக இன்று வீற்றிருக்கப் போகிறீர்கள். ஆகவே, இன்றைக்கு அதிகமான துணைக் கேள்விகளுக்கு அனுமதி வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய இந்த அவையில் காக்காய் பிடிக்கக் கூடாது என்பது அவை விதிகளில் ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என் பேரில் என்ன கோபம் என்று தெரியவில்லை.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் காக்காய் பிடிக்கக் கூடாது என்று சொன்னார்கள். இங்கு காக்காய் வருவதற்கு வழியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, பாராட்டிப் பேசினால், காக்காய் பிடிப்பதாகச் சொல்லுகிறார்கள், அப்படியென்றால், எதிர்த்துப் பேசினால் என்ன சொல்லுவார்கள் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது பற்றி அரசு தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாளர்கள் மு. அம்பிகாபதி, ரா. கிருஷ்ணன், சோ. அழகர்சாமி, கூத்தக்குடி ச. சண்முகம், செ. சிவசாமி, பொ. உத்திராபதி ஆகியோர் சார்பாக திரு. ரா. கிருஷ்ணன் முன்மொழிந்த திருத்தத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:- ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

(பிற்பகல் 1·30.)

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி திங்கட்கிழமை அன்று காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்பேரவைக்கான விதிகளும், ஆணைகளும்.

— எதுவுமில்லை —

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 45. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1979).

* 46. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1979).

* 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பொது சுகாதாரத் துறை இணை இயக்குனர் (மலேரியா) பதவி.

*குறுகிய கால வினா எண் 5— திரு. க. சுப்பு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொசு ஒழிப்புப் போன்ற முக்கியப் பணியை நிர்வகிக்கும் இணை இயக்குனர் (மலேரியா) (Joint Director of Public Health (Malaria)) பதவி காலியாகவே வைக்கப்பட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) 16—6—1978 ஆம் நாள் இணை இயக்குநர் (மலேரியா) பதவி காலியாகவே இருந்தது. அன்று முதல் தடுப்பு மருந்து இயக்குநர் அவர்கள் இப்பதவிக்கு கூட்டுப் பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ளார்.

(ஆ) உதவி தடுப்பு மருந்து இயக்குநர் ஒருவரை இணை இயக்குநராக பதவி உயர்வு செய்து அமர்த்துவது பற்றி அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இந்தப் பதவிக்குரிய சம்பளத்தைக் கொடுப்பது மத்திய சர்க்கார். ஆகவே இந்தப்பதவி நிரப்பப்படவில்லை என்றால் மாநிலத்திற்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வும் இல்லாமல் இருக்கிறது, சம்பளத்தையும் வாங்குகின்ற நிலைமையும் போய்விடுகிறது. பதவியை நிரப்பவில்லை என்றால் இதற்குரிய சம்பளப் பணத்தை மத்திய சர்க்காருக்கு திருப்பிக் கொடுக்க வேண்டிய நிலை வரும். இது நிரப்பப்படாமல் இருப்பதற்குக் காரணம் அதிகாரிகளுக்குள்ளும் அவர்களுக்கு மேலே இருக்கின்றவர்களுக்கும் இடையில் ஏற்படுகின்ற குழப்பம், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று வருகின்ற காரணத்தால் தான் நிரப்பப்படாமல் இருக்கிறது. ஆகவே இதற்குரிய காரணத்தை ஆராய்ந்து விரைவில் இதன் மீது முடிவு எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இது போன்ற இணை இயக்குநர் பதவியை நிரப்ப தடுப்பு மருந்து இயக்குநர் 1978 ஜூலை மாதத்தில் செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியிருந்தார். அச் செயற்குறிப்பில் தடுப்பு மருந்து உதவி இயக்குநர் ஐந்து பேர்களை குறிப்பிட்டு அவர்களில் பணியில் மூத்தவரை பதவி உயர்வு செய்யலாம் என்ற கருத்தை தெரிவித்துள்ளார். இந்த ஐந்து பேரில் மூத்தவர் மீது சில குற்றச்சாட்டுகள் விசாரணையில் உள்ளது என்று இயக்குநர் கூறியதால் அதைப் பற்றிய விவரங்கள் எதிர்பார்க்கப்பட்டன. மற்றும் மேற்படி செயற்குறிப்பை ஆராய்ந்து பார்த்ததில் அச்செயற்குறிப்பு முழுமையாக இல்லை. ஆகையால் கீழ்க்கண்ட விவரங்கள் தேவைப்பட்டன:

1. இயக்குநர் குறிப்பிட்ட ஐந்து தடுப்பு மருந்து உதவி இயக்குநர்களுடைய தமிழ்நாடு தேர்வு ஆணைக் குழுவினால் நிச்சயிக்கப்பட்ட முதுமைப் பட்டியல்.

2. இந்த ஐந்து உதவி இயக்குநர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டின் விவரம்.

3. பொது சுகாதாரப் பிரிவில் எந்த முதுமைப் பட்டியல் பதவி உயர்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

4. இந்த ஐந்து பேர்களின் ரகசியக் குறிப்பை இது நாள் வரை பூர்த்தி செய்தல். இந்த விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. இவைகள் வந்தவுடன் அரசு பரிசீலனை செய்து, யாருக்கும் பாதகம் ஏற்படாமல் இப்பதவி நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, சில நேரங்களில் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு கிடைக்கின்ற நேரத்தில் விஜிலன்ஸ் என்கொயரி என்று ஏதாவது ஒரு பெட்டிஷனை அனுப்பிவிடுவது வழக்கமாக இருந்து வருகிறது. இப்படி எத்தனையோ இருப்பதை என்னால் சொல்ல முடியும். விஜிலன்ஸ் என்கொயரி இருப்பவர்களுக்கே பதவி உயர்வும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எஜுகேஷன் டிப்பார்ட்மெண்டை எடுத்துக் கொண்டால், சேலம் சி.இ.ஓ. மீது இருந்த விஜிலன்ஸ் என்கொயரி கூட பதவி உயர்வின் போது அரசால் வித்ட்ரா செய்யப்பட்டிருக்கிறது. பள்ளிக் கல்வி இயக்குநராக இருந்து வருபவர் மீது கூட இது போன்ற விசாரணை இருந்து வருகிறது. அப்படியிருந்தும், பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வேண்டுமென்றே பதவி உயர்வைத் தடுப்பதற்கும், சிலர் விஜிலன்ஸ் என்கொயரிக்காக பெட்டிஷன்களை அனுப்பி, ப்ரமோஷன் ஆர்டர்களைக் கெடுத்து வருகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியென்றால், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பதவி உயர்வு பெறும் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தவறு செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும் செய்திருந்தால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு அரசாங்கம் தயங்காது. மேலும் இந்தப் பதவியைப் பொறுத்த வரையில் இதை நிரப்புவதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இதைப் போலவே டயரக்டர் ஆப் மெடிக்கல் சர்விஸ் பதவி கடந்த ஒன்றரை ஆண்டுகளாக காலியாக இருக்கிறது. அதைப் பற்றி இந்த அவையிலும் கூறப்பட்டிருக்கிறது. எப்போது அந்தப் பதவி நிரப்பப்படும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, இந்த இணை இயக்குநர் பொறுப்பிற்கு நியமனம் செய்வது வேலை தேடித்தரும் அலுவலகத்திலிருந்து இண்டர்வியூ அனுப்பி செய்கிறார்களா அல்லது அமைச்சர் அவர்களே நேரடியாகச் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இது பதவி உயர்வு. ஏற்கனவே பணியில் இருக்கும் மூத்தவர்களுடைய பட்டியலைக் கேட்டு, அதிலே மூத்தவராக உள்ளவருக்கு இந்தப் பதவி உயர்வு அளிக்கப்பட இருக்கிறது. இது வேலை தேடித்தரும் அலுவலகத்திலிருந்து பட்டியல் கேட்டு நிரப்பப்படுவதல்ல.

திரு. ஜெ. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, எந்த ஒரு பதவியும் 6 மாதங்களுக்கு மேல் நிரப்பப்படாமல் இருக்குமானால், அதை நிரப்பக் கூடாது என்று ஒரு அரசு ஆணை இருக்கிறது. ஆகவே, இப்படிப் பல பதவிகள் 6 மாதங்களுக்கு மேல் காலியாக வைக்கப்பட்டு, பல இடங்களில் நிரப்பப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? இந்தக் குறைப்பாட்டினை நிவர்த்திக்க அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல பதவிகள் இப்படி பல துறைகளிலே காலியாக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். என்னுடைய துறையிலே இப்படி பதவிகள் காலியாக இருப்பதைப்பற்றித்தான் எனக்குத் தெரியும். பல துறைகளிலே காலியாக இருப்பது பற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய துறையிலே இருப்பதைப் பற்றி நடவடிக்கைகள் எடுப்பதற்கான வழிவகைகள்செய்யப்பட்டு வருகின்றன.

நெ. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர் ...கொக ஒழிப்புத் திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து ...து வரும் மானியம் நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப் ...படுகிறதே. அது உண்மையா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அப்படி எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் உரையாற்ற இருக்கின்ற காரணத்தால் கேள்வி நேரத்தை ஒரு மணி நேரத்திற்குள் முடித்துக் கொள்வது நல்லது. எனவே, அதிகமாக துணைக் கேள்விகள் போடாமல் இருந்தால் நலமாக இருக்கும். நான் அதிகமான துணைக் கேள்விகளை அனுமதிக்கவில்லை என்று யாரும் வேதனைப்பட வேண்டாம்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : ஒரு விளக்கம். எங்களைப் பொறுத்தவரை சரி. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் 3 மணி நேரம் பேசினால், முதலமைச்சர் 6 மணி என்றெல்லாம் எங்களுக்குத் தகவல் வருகின்றது. நான் 5 மணிக்கு ஊருக்குச் செல்வதற்காக பயணச்சீட்டை வாங்கி வைத்துள்ளேன். ஆகவே, இந்த நேரம் ஒதுக்குவதிலே அவர்கள் விஷயத்திலும் கடைப் பிடித்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் இருவரும் இந்த அவையிலே இருக்கும்போது சொன்னால் நலமாக இருக்கும். எனக்கு துணையாக இருக்கும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, அவர்கள் இருக்கும்போதும் சொல்கிறேன்.

ஜோலார்பேட்டை அருகே இரயில்வே மேம்பாலம்.

*வினா எண். 167 திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் வாணியம் பாடி ரோட்டிலிருந்து நாட்றம்பள்ளிக்கு பிரிந்து செல்லும் சாலையின் அருகே ஜோலார்பேட்டை இரயில்வே ஜங்ஷன் அருகில் மேம்பாலம் கட்ட இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ;

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. பி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, இந்தச் வறு யின் குறுக்கே ரயில்வே கேட் உள்ளதால், இந்த ரயில்வேகள் ஜோலார்பேட்டையிலே இருப்பதால், அடிக்கடி ரயில் போக்கு வரத்தும், கூட்ஸ் போக்குவரத்தும் இருப்பதால், அந்தப் பகுதி மக்கள் இந்தக் கேட்டைக் கடந்துதான் திருப்பத்தூருக்கோ அல்லது வேலூருக்கோ செல்லவேண்டி இருப்பதால், இந்த ரயில் கேட் அடிக்கடி மூடப்படுவதால், இந்த முக்கியத்துவங்களை கொண்டு, இந்தச் சர்க்கார் இதைப் போக்குவதற்கு உடனடி யாக அங்கே மேம்பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு இந்த அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலை வர் அவர்களே, குறிப்பிட்ட மேம்பாலத்தைப் பற்றிய செயற் குறிப்பு அரசிடம் இல்லை. லெவல் கிராசிங்கில் மேம்பாலம் முக்கிய மான இடங்களில் தேவையின் அடிப்படையில் கட்டப்பட வேண்டு மென்று, அந்த அடிப்படையில் இந்த அரசினுடைய பரிந்துரை கள் அவ்வப்போது மத்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது. ஆனால், மத்திய அரசைப் பொறுத்தவரையில் கடந்த 3 ஆண்டு களாக எந்த லெவல் கிராசிங்கிலும் மேம்பாலம் கட்டுவதற்கு அனுமதி தரவில்லை. இப்படி நிதி ஒதுக்கீடு தரப்படாமல் இருப்பதால், மாநில அரசு பலமுறை மத்திய அரசை இதுபற்றி வலியுறுத்திக் கொண்டு வருகிறது. மேலும் வலியுறுத்தும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, இந்தப் பாலம் பற்றி மத்திய அரசுக்கு இந்த அரசால் பரிந்துரை செய்யப்பட் டுள்ளதா? அப்படிச் செய்யவில்லை யானால், உடனடியாக இந் தப் பரிந்துரையைச் செய்து, இதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதைவிட மிக முக்கியமான பல பாலங்கள் 3 ஆண்டு களாக பரிந்துரை செய்யப்பட்டும் மத்திய அரசிடமிருந்து பதில் வரவில்லை. தாங்கள் சொல்லும் முக்கியத்துவத்தைப் பற்றியும், பரிசீலனை செய்து, ஆய்வு செய்து அதன் அடிப்படையில் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

லாரிகளுக்கு தேசிய அளவிலான உரிமங்கள்.

* வினா எண் 168 — திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சரக்கு ஏற்றும் லாரிகளுக்கு தேசிய அளவில் பர்மிட் கோரி அரசிற்கு வேண்டுகோள் வரப்பட்டதா?

(ஆ) என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

[முற்பகல் 9–10.]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) எஸ்.டி.ஏ. மாநில அரசு போக்குவரத்து அதிகாரி யால் அறிவிப்பு (நோட்டிபிகேஷன்) செய்தபின் வரப்பெற்ற 25 விண்ணப்பங்களையும், மாநில போக்குவரத்து அதிகாரியின் 4—4—1977 தேதியில் தீர்ப்பினை எதிர்த்து எஸ்.டி.ஏ.டி. எனும் மாநில போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன் றத்திற்கு மேல் முறையீடு செய்து, அம்மன்றத்தால் மாநில போக்குவரத்து அதிகாரியின் மறு பரிசீலனைக்கு உத்திரவிடப் பட்ட 16 மனுக்களையும் ஆக மொத்தம் 41 விண்ணப்பங் களையும் விசாரித்து 12—2—79-ல் மாநில அரசு போக்குவரத்து அதிகாரி ஏற்கனவே காலியாக இருந்த 6 இடங்களுக்கும் 6 தேசிய பொது சரக்கு ஏற்றும் லாரி அனுமதி வழங்கி ஆணையிட்டது.

திரு. மா. மணிமாறன்: மொத்தம் எத்தனை பேர் மனு செய்துள்ளார்கள்? எவ்வளவு பேருக்கு பர்மிட் கொடுக்கப் பட்டது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நான் ஏற்கனவே கூறினேன். காலியாக இருந்த இடங்கள் 6 என்று. ஒட்டு மொத்தமாக உரிமங்கள் 5—2—76-ல் இந்த ஆட்சி பொறுப் புக்கு வருவதற்கு முன்னால் 250 உரிமங்கள் இருந்தன. மொத் தம் 736 உரிமங்களுக்கு மனுக்கள் வந்தன. அவற்றில் 222 உரிமங்களுக்கு 9—4—76-ல் உரிமங்கள் வழங்கப்பட்டன. 28 உரிமங்களுக்கு அவர்கள் குறித்த காலத்தில் வாகனங்களை ஒப்பு விக்கத் தவறிய காரணத்தால் ரத்து செய்யப்பட்டு மீண்டும் 29—9—76-ல் மனுக்கள் வரவழைக்கப்பட்டு 10—12—76-ல் 28 மனுக்களின் பேரில் மீண்டும் உரிமங்கள் தரப்பட்டன. இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு 12—2—79-ல் லாப்ஸ்டு வாகன்சி என்று சொல்லப்படுகிற விடுபட்ட காலி இடங்களுக்கு மட்டும் மனுக்கள் வரவழைக்கப்பட்டு எஸ்.டி.ஏ. யால் 16 மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு காலி இடங்களான 6 இடங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

டாக்டர் கே. சமரசம்: சரக்கு ஏற்றும் லாரிகளுக்கு தேசிய பர்மிட் வழங்க என்ன விதிமுறைகள் கையாளப்படுகின்றன? எவ் வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நேஷனல் லாரி பர்மிட் என்று சொல்லப்படுகிற தேசிய சரக்கு வாகன அனுமதி, மத்திய மோட்டார் வாகனச் சட்டத்தின் 55 மற்றும் 63 இனால் 11 பிரிவின்படியும், 30—10—75 ஆம் தேதிய மத்திய உள்

துறை அரசு ஆணையின்படியும், மத்திய அரசு அவசரச் சட்டம்
1976 ஆம் ஆண்டு 25-வது திருத்தச் சட்டப்படியும் உரிமங்கள்
வழங்கப்படுகின்றன. அப்படி வழங்கும்போது இண்டர்
ஸ்டேட் பர்மிட் என்று சொல்லப்படுகிற மாநிலங்களுக்கு
இடையிலான உரிமங்களை ஏற்கனவே பெற்று ஓட்டுகிறவர்களுக்கு
50 சதவிகித உரிமமும், மாநிலத்துக்குள்ளேயே சரக்கு உந்து
களை ஓட்டுகிறவர்களுக்கு 25 சதவிகித உரிமமும், புதிதாக
வருகிற ஓட்டுநர்களில் எக்ஸ் சர்விஸ்மென்னுக்கு 25 சதவிகித
மும், தாற்காலிக பர்மிட் (டெம்பரரி பர்மிட்) வைத்து ஓட்டு
கிறவர்களில் எந்த அளவுக்கு தற்காலிக பர்மிட் அதிக அள
வுக்கு வைத்திருக்கிறார்களோ அதைப் பொறுத்து அவர்களுக்கு
முன்னுரிமை தர வேண்டுமென்ற அடிப்படையில் உரிமங்கள்
வழங்கப்படுகின்றன.

<u>திரு. ப. சந்திரன் :</u> காலியான ஆறு இடங்களுக்கு தேசிய
பொது சரக்கு வாகன உரிமங்கள் வழங்கப்பட்டதாகக் கூறி
யிருக்கிறார்கள். அதற்கு முன்னதாக உரிமங்கள் எவ்வளவு
பேருக்கு வழங்கப்பட்டது? எப்போது வழங்கப்பட்டது?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> ஏற்கனவே நான்
அது பற்றிக் கூறினேன். 12—2—79-ல் காலியான 6 இடங்
களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி
பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் 10—12—76-ல் 28 இடங்
களுக்கும் 9—4—76-ல் 222 இடங்களுக்கும் உரிமங்கள் வழங்
கப்பட்டிருக்கின்றன.

<u>திரு. துரை முத்துசாமி :</u> தலைவர் அவர்களே, தினம்
தினம் காலையிலே பத்திரிகையிலே பார்க்கிறபோது விபத்து
ஆண்டாக இருக்கிற வகையிலே லாரியோடு பஸ்ஸும் பஸ்ஸோடு
லாரியும் மோதியதாகச் செய்திகள் வந்துகொண்டே
இருக்கின்றன. இரவு நேரங்களிலே நான் லாரிகளை ஓட்டவேண்டு
மென்று கொண்டுவரக்கூடிய முறையிலே அவைகளைத் தடை
செய்ய அரசு முன்வருமா? அதற்காக சட்டம் கொண்டுவரப்
படுமா?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவர் அவர்களே,
சாலை விபத்துக்களைப் பார்க்குமுகத்தான் இதுபோன்ற சரக்
குப் பெருந்துகள். நெடுந்தூரம் செல்கின்ற சரக்குப் பெருந்துகள்,
நேஷனல் பெர்மிட், இண்டர் ஸ்டேட் பெர்மிட் என்ற முறையிலே
வாங்கியிருக்கின்ற சரக்குப் பெருந்துகள் ஆகியவைகளில் இரண்டு
ஓட்டுநர்கள் இருக்கவேண்டுமென்று தென் மாநில அரசுகள்
உத்திரவு பிறப்பித்துள்ளன.

<u>திரு. வெ. பாலகுரு :</u> தலைவர் அவர்களே, அண்மை
யிலே தென் மண்டல சரக்கு வாகன உரிமங்கள் எத்தனை பேர்
களுக்கு வழங்கப்பட்டன? அவைகள் எந்த விதிகளின் கீழ் வழங்கப்
பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> பேரவைத் தலைவர்
அவர்களே, அண்மையிலே ஸ்டேட் பெர்மிட் என்று சொல்
லப்படுகிற தென் மாநில சரக்கு வாகன உரிமங்கள் 261 பேர்
களுக்கு வழங்கப்பட்டன. அவை மத்திய மோட்டார் வாகனச்
சட்டத்தின் 55-வது பிரிவு, தமிழ்நாடு மோட்டார் வாகனச் சட்
டம் 189 இ. 2. 4 ஆகிய பிரிவுகளின் அடிப்படையிலே வழங்கப்
பட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த எந்தத் தகுதியின்
அடிப்படையில் எந்த விதியின் அடிப்படையிலே உரிமங்கள்
வழங்கப்பட்டன என்று கேட்டார்கள். தன் பெயரிலோ, தன்
மனைவி பெயரிலோ, கூட்டு வணிக நிறுவனத்தின் பெயரிலோ,
கூட்டாளியின் பெயரிலோ தேசிய அனுமதியோ, கூட்டு மாநில
அனுமதியோ அல்லது 4 சரக்கு வண்டிகளுக்கு மேலோ இல்லாத
வரும் கர்நாடகம், ஆந்திரம், கேரளம் போன்ற அண்டை மாநிலங்
களுக்குள் மேற்குறிப்பை ஒப்புவிப்பவரும் ஆன மனுதாரர்களுக்கு
முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கேரள மாநிலத்திலே இண்டர்
ஸ்டேட் பெர்மிட் என்று சொல்லக்கூடிய பெர்மிட்டைப் பெற்று
சரக்கு பெருந்தை ஓட்டியவர்கள் 17 பேர்களும் மனுச்செய்தார்
கள். அந்த 17 பேரும், அவர்களில் யாருக்கும் பாரபட்சம்
இல்லாமல் அவைகளை ஒப்புவிக்க முன்வந்த 17 பேருக்கும் உரி
மங்கள் ஒட்டுமொத்தமாக வழங்கப்பட்டன. கர்நாடக மா
நிலத்திற்கு ஒருமுனைவரி சலுகை வைத்திருக்கும் 92 மனுதாரர்கள்
தங்களது இலவச வரி மேற்குறிப்புகளை ஒப்புவிக்க சம்மதம்
தெரிவித்தனர். அவை முதுநிலைப்படி வரிசைப்படுத்தப்பட்டது.
கூட்டு மாநில அனுமதிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால்
முதல் 30 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது. முதல் 30 பேர்
களிலே யார் முதல் தேதியிலே உரிமையைப் பெற்றார்களோ
அவர்களுக்கு முதல் உரிமையும், இரண்டாவது நாளிலே பெற்றவர்
களுக்கு இரண்டாவதாகவும், 3-வது நாளிலே பெற்றவர்களுக்கு
மூன்றாவதாகவும் இதுபோன்று கொடுக்கப்பட்டது. அதுபோன்று
டேட் ஆப் ரிஜிஸ்ட்ரேஷன் என்பதில் சீனியாரிட்டி என்று
சொல்லப்படுகின்ற முறையிலே அந்த விதிமுறைகளின்கீழ் 97
பேர்களில் முதல் 30 பேர்களுக்கு வழங்கப்பட்டது. ஆந்திர மா
நிலத்திற்கு இலவச மேற்குறிப்பு வைத்திருக்கும் 163 மனுதார்
கள் தங்களுடைய இலவச வரி மேற்குறிப்புகளை ஒப்புவிக்க சம்
மதம் தெரிவித்துள்ளனர். அவை முதுநிலைப்படி வரிசைப்படுத்தப்
பட்டது. அவர்களிலேயும் யார் முதல் நாளில் உரிமம் பெற்றார்
களோ அவர்களுக்கு முதலாவதாகவும், இரண்டாம் நாளிலே
பெற்றவர்களுக்கு இரண்டாம் நாளிலேயும், மூன்றாவது
நாளிலே பெற்றவர்களுக்கு மூன்றாவதாகவும் வழங்கப்பட்
டது. அடுத்து தாற்காலிக உரிமம் என்ற அடிப்படையிலே டெம்

பரமிட் பெர்மிட் வைத்திருக்கின்றவர்களுக்கு அந்த மனுதாரர்களுக்கு 42 பேர்கள் மனுச் செய்தார்கள். அந்த 42 பேர்களுக்கும் வழங்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் அரசின் தேசிய மயத் திட்டக் கொள்கையின் காரணமாக பேருந்து வண்டிகளை இழந்த நபர் ஒருவருக்கு சட்டப்படி வழங்கப்பட்டது. அதோடு தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த 6 மனுதாரர்கள் மனுச் செய்துகொண்டனர். அந்த 6 பேர்களுக்கும் கொடுக்கப்பட்டது. அடுத்து எக்ஸ் சர்விஸ்மென் என்ற அடிப்படையிலே முன்னாள் இராணுவத்தினர்களுக்கு சரக்குவண்டிகள் ஓட்டுநர் பயிற்சி பெற்றவர்கள் 40 பேர்கள் மனுச் செய்தார்கள். அந்த 40 பேர்களுக்கும் கொடுக்கப்பட்டது. இலங்கை அகதிகள் ஓட்டுநராகப் பயிற்சிபெற்றவர்கள் 15 பேர்கள் மனுச் செய்தார்கள். அந்த 15 பேர்களுக்கும் வழங்கப்பட்டது. ஓட்டுநர்கள் உரிமத்தோடு பொறியாளர் பட்டப்படிப்பையும் படித்தவர்கள் 7 பேர்கள் வழங்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு உரிமையாளர்களும் ஓட்டுநர்களாகவும் உள்ள மொத்தம் 76 பேர்கள் மனுச் செய்திருக்கிறார்கள். அந்த ஓட்டுநர்கள் உரிமம் எடுத்த தேதி முதுநிலை வரிசைப்படி அவர்களில் முதல் 23 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

[முற்பகல் 9–20]

திரு. ஜெ. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்தக் கூட்டத்தொடர் இன்றோடு முடிவடைகிறதா அல்லது நாளையும் அவையைக் கூட்டி நடத்துகின்ற எண்ணம் இருக்கிறதா? ஏனென்றால், இப்பொழுது போகின்ற போக்கைப் பார்க்கும்பொழுது இன்றைய தினம் முடிக்கும் வாய்ப்பு இல்லை என்று எண்ணுகிறேன். பல அங்கத்தினர்கள் ஊருக்குப் போவதற்கு டிக்கெட் எடுத்து விட்டார்கள். கூப்பனை மறுபடியும் ரீபண்ட் செய்வது என்பது மிகவும் கடினம். கேள்விக்குப் பதில் கூறும்பொழுது அமைச்சரும் பதிலைச் சுருக்கமாகச் சொன்னால் நீங்கள் விரும்புவதைப்போல் ஒரு மணி நேரத்திற்குள் கேள்வி நேரம் முடிவடையும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டால் நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே சொன்னதைப் போல, விரிவான பதிலாக இருக்குமானால் அச்சடித்து மேசை மேல் வைத்து விடுவது நலமாக இருக்கும். பதிலுக்காக நீண்ட நேரம் எடுத்துக்கொண்டால் நேரம் வீணாகிவிடும். ஜேம்ஸ் அவர்கள் சொல்வதில் நல்ல கருத்து இருக்கிறது. நீண்ட நேரம் ஆகுமென்றால் பதிலை அச்சடித்து மேஜையின்மீது வைத்து விடலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, மூலமானவாக இருந்தால் அச்சடித்து வைத்து விடலாம். நான் நீண்ட நேரம் பதில் சொன்னது துணைக் கேள்விக்குத் தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜெ. ஜேம்ஸ் : மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாக விளக்கம் தருவதுகுறித்து நான் மறுத்துக் கூறவில்லை. ஒரு மணி நேரத்திற்குள் காரியங்கள் முடிய வேண்டுமென்றால் இந்த நிலையை மேற்கொண்டால் முடியாது என்பதற்காகத்தான் சொல்ல விரும்புகிறேன்.

முதியோர்களுக்கு உதவிப்பணம்

*வினா எண். 178— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. கா. அழகர்சாமி : கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறுபது வயதுக்கு மேற்பட்ட எல்லா முதியோர்களுக்கும் உதவிப்பணம் வழங்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அறுபது வய
துக்கு மேற்பட்டவர்களுக்கு எந்தெந்த வகையானவர்களுக்கு,
எந்தெந்த அடிப்படையில் உதவிப்பணம் வழங்கப்படுகிறது?
தற்பொழுது வழங்கப்படும் உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு
எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா? அறுபது வயதுக்கு மேற்
பட்ட எல்லோருக்கும் தர இயலவில்லை என்றாலும்கூட, குறிப்
பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த உதவித் தொகையை
வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செய
லர்) : பேரவைத் தலைவரவர்களே, வாழ வழியற்று,
மரபுப்படியோ வழக்கப்படியோ காப்பாற்றுவதற்குக் கடமைப்
பட்ட உறவினரற்று அனாதையான நிலையில் உள்ள முதிய
வர்களுக்கு சமூகப் பாதுகாப்பு நடவடிக்கையாக அவர்களுக்கு
உதவி அளிப்பதற்காக "மூப்பு கால உதவித் தொகை" வழங்கப்
படுகிறது. புகலற்ற நிலையில் குருடு, தொழு நோய், மன நோய்,

[1979 பிப்ரவரி 26

பக்கவாதம் அல்லது உறுப்பு இழப்பு இவை எதனாலாவது உழைத்
துப் பிழைக்க முடியாத ஏலாமை நிலையில் 60 வயதும் அதற்கு
மேற்பட்டும் உள்ளவர்களுக்கும், புகலற்ற நிலையில் 65 வயதும்
அதற்கு மேற்பட்டும் உள்ளவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ்
ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய்
உதவித்தொகை வழங்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இப்
பொழுது இந்த முதியோர்களுக்கு வழங்கக்கூடிய உதவித்தொகை
யானது 1962 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் கொண்டு
வரப்பட்ட காலத்தில் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்ட
தோ அதே எண்ணிக்கையில்தான் வழங்கப்படுகிறது என்பது
அரசுக்குத் தெரியுமா? ஆகவே, இப்பொழுது, முதியோர் உதவித்
தொகை பெறுவதற்குத் தகுதியுள்ள, எந்தவிதமான வருமானமோ
எந்தவிதமான சொத்து சுகமோ இல்லாதவர்கள் அத்தனைபேர்
களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுமா? இப்பொழுது
கொடுக்கப்படுவதற்கு சுமார் ஒரு கோடி ரூபாய் ஆகும் என்று
கருதுகிறேன். நான் சொன்னவாறு செய்வது என்றால் மேற்
கொண்டு ஒரு கோடி ரூபாய்தான் வரும் என்று நினைக்கிறேன்.
எனவே, விவசாயக் கூலிகளாக இருந்து, இப்பொழுது உழைக்கச்
சக்தியற்ற நிலையில் மனுச் செய்து கொண்டுள்ள அத்தனை
பேர்களுக்கும் முதியோர் உதவித் தொகையை இனியாவது
வழங்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):
பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது 60,972 பேர்களுக்கு
வழங்கப்படுகிறது.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவரவர்களே, இந்த
மனுக்களைப் பரிசீலனை செய்து முடிவெடுப்பதில் ஏற்படக்
கூடிய தாமதம் ஸ்கேண்டலெஸ் அண்ட் சீரியஸ் ஆக இருக்
கிறது, ஆறு மாதங்களாகியும் கூட டெசிஷன் எடுப்பதில்லை. அதற்
குள் போட்டவர்களே செத்து விடுகிறார்கள். எனக்குத் தெரிந்தே
மூன்று கேஸ்களில் செத்துவிட்டார்கள். கொடுப்பதும்
ரெகுலராகக் கொடுப்பதில்லை. இடையிலே நிறுத்தி விடுகிறார்
கள். இது முதியோர் உதவிப் பணமா அல்லது மூச்சடைக்கும்
உதவிப் பணமா என்ற நிலையில் இருக்கிறது. இந்த புரோசீஜரை
கட் ஷார்ட் செய்வதற்கு என்ன ஏற்பாடு?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):
பேரவைத் தலைவரவர்களே, புகலற்றோர் இயல்பாக வசிக்
கின்ற வட்டத்தின் தாசில்தாருக்கு தங்கள் விண்ணப்பங்களை
அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் குறித்து விசாரணை
நடத்தி சரிபார்த்த பின்னர், அந்த விண்ணப்பங்கள் மீது ஆணை

1979 பிப்ரவரி 26]

வேண்டி தாசில்தார் தனது அறிக்கையை வருவாய்க் கோட்ட
அதிகாரிக்கு அனுப்புவார். உதவித் தொகையை வழங்குவதற்கு
வருவாய்க் கோட்ட அதிகாரியே பொருத்தமான அதிகாரி
யாவார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தத்தம் மாவட்டங்
களில் இத்திட்டத்திற்கு மேற்பொறுப்பு வகிக்கிறார்கள்.
விண்ணப்ப நாளைப் பொறுத்து மூப்பு கால உதவித் தொகை
தற்போது வழங்கப்படுகிறது. இதனால் அதிக வயதில் ஆதர
வற்றவர்களாகி உதவித் தொகை கேட்டு விண்ணப்பிக்கும் சில
உரிய நேரத்தில் உதவித்தொகை பெற முடியவில்லை. எனவே,
மூப்பு கால உதவித் தொகையை அனுமதிக்கும்போது 70
வயதும் அதற்கு மேம்பட்டும் உள்ளவர்களின் விண்ணப்பங்கள்
அனைத்தும் (விண்ணப்ப நாள் எவ்வாறாயிருப்பினும்) முதலில்
முடிவு செய்யப்பட வேண்டும் என்றும், 65 முதல் 69
வயதுள்ளவர்களின் விண்ணப்பங்கள் அவை வரப்பெற்ற நாட்
களைப்பொறுத்து முடிவு செய்யப்பட வேண்டும் என்றும் அரசு
கட்டளை இட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 179. திரு.
என். வரதராசன் ....

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து நான்
சொல்வதைக் கேளுங்கள். என்னென்ன தகவல்கள் ஓரளவுக்கு
கிடைக்க வேண்டுமோ அது கிடைத்தாகிவிட்டது. நேரத்தைப்
பற்றி நான் முதலிலேயே சொல்லி விட்டேன். ஆகவே, அமர்ந்துங்கள்
வினா எண். 179. திரு. என். வரதராசன்— மாண்புமிகு
மின்சாரத் துறை அமைச்சர்.

மின்வாரியத்தில் பயிற்சிப் பணியாளர்கள்

*வினா எண். 179—திரு. என். வரதராஜன்: மாண்புமிகு
மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா —

(அ) மின்வாரியத்தில் தமிழகம் முழுவதும் எடுத்துக்
கொள்ளப்பட்ட அப்ரண்டிஸ்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் பயிற்சிக் காலம் முடிந்த பின் வீட்டுக்கு
அனுப்பப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம்
அளிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஈ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு, ச, இராமச்சந்திரன் :

(அ) 1,682 பேர்,

(ஆ) 109 பேர்,

(இ) இல்லை,

(ஈ) கேள்விக்கு இடமில்லை,

திரு, என், வரதராஜன் : தலைவரவர்களே. இவ்வாறு அப்ரண்டிஸாக சேர்ந்து ஆயிரம் பேருக்கு மேல் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அறியப்படுகிறதே அவர்கள் அனைவருக்கும் விரைவில் வேலை கிடைக்கும் முயற்சியை மின் துறை எடுக்குமா என அறியவிரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, ச, இராமச்சந்திரன் : வேலைக்கான பயிற்சிதான் மின் வாரியத்தில் அளிக்கப்படுகிறது, வேலை காலி ஏற்பட்டால்தான் இவைகளையெல்லாம் மின் வாரியம் கவனிக்க முடியும், இவர்களுக்கு வேலை தேடுகின்ற நிறுவனமாக மின் வாரியம் இல்லை,

திரு, வி,கே. கோதண்டராமன் : சார். 3 ஆண்டுகள் முடிந்த உடனே கட்டயமாக வெளியே அனுப்பி விடவேண்டுமென்று அரசு ஆணைஇட்டுள்ளதா? அப்படியானால். இது வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கும் வழியா என்பதை உணர்ந்து மீண்டும் அவர்களே தொடர்ந்து வேலை செய்வதற்கு அதே துறையிலேயோ அல்லது வேறு எந்தத் துறையிலேயோ வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படுமா என அறியவிரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, ச, இராமச்சந்திரன் : தலைவரவர்களே. இதன் நோக்கம் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்குவது அல்ல, வேலையைத் தெரிந்துகொள்வதற்குப் பயிற்சி அளிப்பது, ஓராண்டிலேயிருந்து 3 ஆண்டுகள் வரை அத்தகைய பயிற்சி அளிக்கப்படுகிறது, பயிற்சி முடிந்த உடன் வெளியே அனுப்பப்படுகிறார்கள்,

வயிரம்பேட்டையில் தெரு விளக்குகள்,

*வினா எண், 180—திரு, டி, ஆர், இராசாராம் ரெட்டி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திண்டிவனம் தொகுதி இடையாளம் ஊராட்சி வயிரம் பேட்டையில் தெரு விளக்குகள் போட மின் துறையினரால் 1972-ல் கம்பங்கள் நட்டும் ஒயர் இழுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில். அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு, ச, இராமச்சந்திரன் :

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

சென்னை நகரில் மாணவர்களுக்கு விடுதிகள்,

*வினா எண் 181—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் கல்வி பயிலும் மாணவர்கள் விடுதிகளில் தங்கி படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் தங்கும் விடுதிகள் அமைத்துத்தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

தற்பொழுது சென்னை நகரில் கல்விப் பயிலும் மாணவர்களுக்கு போதிய விடுதி வசதிகள் ஏற்கனவே உள்ளதால் தனியாக விடுதி கட்டுவதற்கு ஏதும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் கல்வி பயிலும் மாணவர்களில் இன்னும் ஹாஸ்டல் வசதி கிடைக்காதவர்கள் எத்தனை பேர் உள்ளனர் என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து, 92 TNER ரூல்படி Backward and Most Backward உதவித் தொகை, ஹாஸ்டலில் தங்கிப் படிப்பவர்களில் இன்னும் எவ்வளவு பேர்களுக்கு கிடைக்க வேண்டியுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சென்னையிலுள்ள அரசாங்கக் கல்லூரிகளில் போதுமான விடுதி வசதிகள் உள்ளன என்கின்ற விவரத்தைத் தந்திருக்கிறார்கள். மற்ற, இரண்டாவது கேட்ட கேள்விக்கு விவரம் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேட்கவும்.

(சில உறுப்பினர்கள் கையைத் தூக்கிக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை நகரத்தை ஒட்டிய கேள்வி இது. ஆகவே, வினா எண். 182......

[1979 பிப்ரவரி 26

திரு. சி. ஆறுமுகம் : சென்னை நகரத்தை ஒட்டிய கேள்விகளை சென்னை நகர உறுப்பினர்கள்தான் கேட்க வேண்டும் என்றால், சென்னை நகரத்திற்கு மட்டும்தான் இந்த சட்டச் சபையா ? தமிழ்நாடு முழுவதற்கும்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மதுராந்தகம் தொகுதி உறுப்பினர். அடுத்து வினா எண். 182.

கல்லூரி மாணவியர் விடுதிகளில் மருத்துவ வசதி.

*வினா எண். 182—திரு. கா. சுப்பிரவேலு : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுக் கல்லூரி மாணவிகள் விடுதிகளில் மருத்துவ வசதிகள் அளிக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்லூரிக் கல்வி இயக்குநரின் கீழ் இயங்கிவரும் 13 பெண்கள் கலைக் கல்லூரிகள், 2 பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவற்றுள் 14 கல்லூரிகளில் மாணவியர் விடுதிகள் உள்ளன, அவற்றுள் 6 கல்லூரிகளுக்கு தற்போது மருத்துவ வசதி உள்ளது,

மருத்துவ வசதியற்ற கல்லூரிகளின் விடுதி மாணவிகள் நோய்வாய்ப்பட்டால். தக்க துணையுடன் அருகிலுள்ள அரசினர் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப் பெற்று சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது,

[முற்பகல் 9-30]

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் மருத்துவ வசதி ஆறு கல்லூரி மாணவிகள் விடுதிகளில் அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். எந்த வகையில் மருத்துவ வசதிகள அளிக்கப்படுகிறது ? மருத்துவர்கள் அங்கே எந்த முறையில் நியமிக்கப்பெற்று பணியாற்றுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இராணி மேரிக் கல்லூரியில் மருத்துவ மனை உள்ளது, முழு நேர மருத்துவர் உள்ளார். அவருக்கு மருத்துவ மனையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு உண்டான ஊதியம் அளிக்கப் படுகின்றது.

1979 பிப்ரவரி 26]

அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. தஞ்சாவூர். அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. கும்பகோணம். எம், சி, முத்தையாபிள்ளை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. திண்டுக்கல் ஆகிய கல்லூரிகளில் பகுதிநேர மருத்துவர்கள் உள்ளனர், அவர்களுக்கு மாதம் ரூ. 100 ஊதியம் வழங்கப் பெறுகிறது,

வெலிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரி. சென்னையில் முழு நேர மருத்துவர் உள்ளார். அவருக்கு மருத்துவ மனையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு உண்டான ஊதியம் வழங்கப் பெறுகிறது.

சென்னை காயிதே மில்லத் அரசினர் கலைக் கல்லூரியில் பகுதி நேர மருத்துவர் உள்ளார். அவருக்கு மாதம் ரூ, 150 ஊதியம் அளிக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார். அரசினர் கல்லூரிகளிலே உள்ள மாணவிகளுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பது போலவே தனியார் துறை கல்லூரிகளிலே உள்ள மாணவிகளுக்கு மருத்துவ வசதிகள் செய்வதற்கு அரசு தரப்பிலே ஏதாவது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதுபற்றி விவரம் என்னிடத்தில் இல்லை, தனியாக கேள்வி கேட்டால் பதிலைச் சேகரித்துத் தரப்படும்.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு.

*வினா எண் 183—திரு. எஸ். கணேசன் :

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்பைத் தேடிச் செல்ல விரும்பும் இளைஞர்களுக்கு உதவ தமிழக அரசு ஒரு குழுவை அமைக்க உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) வெளிநாடுகளில். அதிலும் குறிப்பாக மேற்கு ஆசிய நாடுகளிலே புதியதாக ஏற்பட்டு வரும் வேலை வாய்ப்புகளை தமிழ்நாட்டில் உள்ளவர்கள் முறையாக பயன்படுத்தி பலனடை

வதற்கு வழி செய்யும் வகையில், கடல் கடந்த நாடுகளில் மனித சக்தியை பயன்படுத்தும் கழகம் (Oversees Manpower Corporation Limited) என்ற நிறுவனத்தை ரூ. 50 இலட்சம் மூலதனத்துடன் அரசு அமைத்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மேற்கு ஆசிய நாடுகளிலே படித்த நம் இளைஞர்களுக்கு வேலை தேடித் தருவதாகச் சொல்லி அவர்களிடம் தனியார் சிலர் ஆயிரக்கணக்கில் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஏமாற்றி வருவது அரசுக்குத் தெரியுமா ? அப்படி என்றால் அதைத் தடுப்பதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே அப்படி முறைகேடுகள் நடப்பதை தவிர்ப்பதற்காகத் தான் அரசு இந்த கழகத்தை நிறுவியுள்ளது. அது இதன் மூலம் முறையான நிலையில் தகுதியுள்ள இளைஞர்களுக்கு வேலை தேடித் தரமுடியும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிறுவனம் இதற்காக நிறுவப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்த நிறுவனம் செயல்பட ஆரம்பித்து விட்டதா ? எப்படி இந்த நிறுவனத்தின் மூலம் வேலைத் தேடித் தரப்படுகிறது ? அதற்கென்று கடைபிடிக்கப்படும் கொள்கை என்ன என்பதை எல்லாம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் கழகம் இதன் முதல் வேலையாக கடல் கடந்த நாடுகளில் பணிபுரிய விரும்பும் தகுதியுள்ள நபர்களையும் அங்குள்ள வேலையளிப்பவர்களுக்குத் தேவையான பலதரப்பட்ட தகுதிகளும் திறமைகளும் உள்ள நபர்களையும் தேர்ந்தெடுக்கும் பொருட்டு ஒரு புள்ளி விவர வங்கியைத் துவக்கியுள்ளது, மேலும் இது அங்குள்ள வேலை கிடைக்கும் வாய்ப்பினை ஆராய மேலே நாடுகளிலுள்ள நமது தூதுவர்களுடனும், வேலையளிப்பவர்களுடனும் வேலையளிப்பவர்களின் தரகர்களுடனும் தொடர்பு கொள்ள ஆரம்பித்து உள்ளது. அந்த நாடுகளில் தொழில் தொடர்பை ஏற்படுத்தி அங்குள்ள கட்டுமானப் பணிகளில் இங்குள்ள மக்கள் சக்தியைப் பயன்படுத்தவும் இக்கழகத்தின் நோக்கமாக இருக்கிறது, மேற்கூறிய பணிகளின் பூர்வாங்க வேலைகளை விரைவில் முடிக்க இந்தக் கழகத்தின் அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அரசாங்கம் 50 இலட்சம் ரூபாய் மூலதனத்தில் இப்படி ஒரு கழகத்தை அமைத்தது மிகவும் நல்ல காரியம். ஆனால் இந்தக் கார்ப்பொ

ரேஷன் மூலம் இங்கிருந்து வேலை வாய்ப்புக்காக விண்ணப்பம் செய்பவர்களிடம் இருந்து ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படுவது என்ற ஏற்பாடு இருக்கிறதா? அதே போல் அவர்கள் அங்கே போய் சேர்ந்தவுடன் அவர்களை அங்கே வரவேற்பதற்கும் வேலை கொடுப்பதற்கும் ஏதாவது ஸ்தாபனங்கள் அல்லது அந்த அரசின் மூலம், அல்லது இந்த அரசின் மூலம் ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை எல்லாம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்பொழுது பூர்வாங்க வேலைகளைத்தான் இந்தக் கழகம் துவக்கி உள்ளது. அங்குள்ள அரசுக்குச் சொந்தமான, அல்லது அரசுத் துறையல்லாத வேலைத் தரக்கூடிய நிறுவனங்களுடன் இக்கழகம் நேரிடையாகத் தொடர்புகொண்டு பெறுவதற்கான கட்டுமான பணிகளை எடுத்துக்கொண்டு நமது தொழிலாளர்களுக்கு வேலைகள் பெற்றுத் தரக்கூடிய பணிகள் முறையாக இந்தக் கழகம் துவக்கியுள்ளது.

திருத்தணி பேரூராட்சி.

*வினா எண். 184—திரு. ஆர். சண்முகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

உள்ளாட்சி மன்றங்களுக்குச் சாலை மான்யம்.

*வினா எண். 185—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகர மன்றங்களுக்கும், பேரூராட்சி மன்றங்களுக்கும் தார் சாலை அமைக்க அரசு மான்யம் ஏதேனும் கொடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம்.

[1979 பிப்ரவரி 26

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, நகராட்சிகளுக்கு எத்தகைய சதவிகிதம், பேரூராட்சிகளுக்கு எத்தனை சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது. 1978–79-ம் ஆண்டுகளில் எவ்வளவு தொகை உதவி அளிக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, நகராட்சிகளுக்கு ஓராண்டுக்கு ரூ. 15 லட்சம் மானியமாக அளிக்கப்படுகிறது. பேரூராட்சிகளுக்கு பாதித் தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, இன்று ஊராட்சி மன்றங்களுக்கு ரோடுக்காக கொடுக்கும் மானியமானது ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ரூ. 30,000-க்கு மேல் கொடுக்கவில்லை. அதை அதிகப்படுத்த திட்டம் உண்டா? அப்படிச் செய்தால் அந்த ரோடுகளை நல்ல முறையில் சீர்படுத்த முடியும். அதைச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, பேரூராட்சி செலவிடும் தொகையில் பாதி மானியமாக வழங்கப்படுகிறது. அதை அதிகப்படுத்தும் உத்தேசம் இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, தூசுபடாத தார் சாலை போடவும், சாதாரண தார் சாலை போடவும், இணைப்புச் சாலை போடவும் மானியம் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தூசுபடியாத சாலை அமைக்க மானியம் வழங்கும் செயற்குறிப்பு மட்டும்தான் உள்ளது.

ஊராட்சிகள் திரையரங்குகள் நடத்தல்

*வினா எண். 186—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்கள் நிதி வசதியைப் பெருக்கும் நோக்கததில் சினிமா தியேட்டர் கட்ட லைசென்ஸ் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஊராட்சி மன்றங்களே சினிமா தியேட்டர்களைக் கட்டி நடத்தி வருகிறதா?

(இ) நீலகிரி மாவட்டத்தில் எந்தெந்த ஊராட்சி மன்றங்களில் இருந்து கோரிக்கை வந்துள்ளது?

1979 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) நீலகிரி மாவட்டம், நடுவட்டம் பேரூராட்சியிலிருந்து மட்டும் கோரிக்கை வரப்பெற்றதாகவும் கூடுதல் விபரங்கள் கேட்டு அதை திருப்பி அனுப்பியிருப்பதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, கூடலூர் தொகுதியில் உள்ள நடுவட்டம் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அங்கேயுள்ள மக்கள் சினிமா பார்க்கவேண்டுமானால் உதகைக்கோ அல்லது கூடலூருக்கோதான் செல்லவேண்டும். ஆகவே, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன மனுவை மீண்டும் பரிசீலிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தொழிலாளர்கள் நிரம்பிய பகுதி என்பதால் அங்கே சினிமா பார்க்க வசதி செய்து கொடுக்க என்று திட்டம் இல்லை. பேரூராட்சி லாபம் கிடைக்கும் என்ற நிலை இருந்தால்தான் மேற்கொள்ளப்படும். லாபம் கிடைக்கும் நிலை இல்லை. ஆகவே கைவிடப்படுகிறது.

திரு. போ. கோபாலன்: தலைவரவர்களே, நடுவட்டம் பேரூராட்சி அந்த சினிமாக் கொட்டகையைக் கட்டி மற்றவர்களுக்கு அதை வாடகைக்கு விட்டு அதன் மூலம் வருமானம் ஈட்ட திட்டமிட்டு இருக்கிறார்கள். ஆகவே, பேரூராட்சி நஷ்டம் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆகவே, அரசு அதைப் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அதைப்பற்றி நிர்வாக அதிகாரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதினால் பிறகு கவனிக்கலாம்.

திரு. க. அரங்கசாமி: தலைவரவர்களே, இது போன்ற ஊராட்சி மன்றங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் திரையரங்குகள் கட்டவேண்டுமென்று விரும்பினால் அதற்கு அரசு என்னென்ன முறைகளைக் கடைப்பிடிக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, முறைகள் ஏதும் இல்லை. அதனால் லாபம் வரும் என்று உறுதியாகத் தெரிந்தால் அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, அந்தத் தொழிலில் லாபம் வராது என்று அரசு கருதுவதால் தனியார் துறையில் அனுமதி கேட்டால் அனுமதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : லாபம் வராத காரணத்தால் தனியார் யாரும் அதற்காக விண்ணப்பிக்கவில்லை.

திருச்செந்தூர் நகருக்கு குடிநீர்த் திட்டம்.

*வினா எண். 187—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செதூந்ர் நகருக்கு ஆவுடையார் குளத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்த திட்டம் எப்போது ஆரம்பிக்கப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ;

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, திருச்செந்தூர் நகர மக்களுக்கு தற்போது வழங்கப்படும் குடிநீர் பற்றாக்குறையாக இருப்பதால், அந்தத் திட்டத்தை விரிவு படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, திருச்செந்தூர் நகரின் மக்கள் தொகை இரட்டிப்பாக பெருகிவிட்டதாலும், எண்ணற்ற பயணிகள் அந்நகருக்கு வருவதாலும் திருச்செந்தூர் நகருக்கு வழங்கப் படும் தண்ணீர் போதுமானதாக இல்லை என்பதாலும், அத்திட்டத்தை அபிவிருத்தி செய்வது இன்றியமையாததாகும். இத்திட்டத்திற்கான ஆய்வுத் தொகையான ரூ. 27,200-ஐ பேருராட்சி தமிழ்நாடு வடிகால் வாரியத்திற்குச் செலுத்த வேண்டும். இதனை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்று நடத்த வேண்டும் என்று பேருராட்சி தீர்மானம் நிறைவேற்றி இருந்தாலும் அத் தொகையை இன்னும் வாரியத்திற்குப் பேரூராட்சி செலுத்தவில்லை. அத்தொகை செலுத்தப்பட்ட பின் குடிநீர் வாரியம் இதனை துவங்கும்.

ஆய்வின்போது ஆத்தூர் அருகே ஓடும் தாமிரபரணி ஆறு மற்றும் திருச்செந்தூர் அருகேயுள்ள ஆவுடையார்குளம் ஆகிய இடங்கள் நீர் எடுப்பதற்கான மூல இடங்களாக ஏற்றும் ஆய்வு செய்யப்படும்.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, ஆய்வுத் தொகையை மதிப்பீட்டுத் தொகையோடு சேர்த்துக் கட்டு வதற்கு அனுமதி வழங்கி அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, ஆய்வுத் தொகையை விரைவில் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் முயற்சி எடுக்க வேண்டும் செல்வாக்கை உபயோகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி : கேள்வியாகக் கேட்கிறேன். திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் நகருக்கு ஆவுடையார் குளத்தில் இருந்து குடிநீர் வழக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று கேட்டதற்கு அமைச்சர் இல்லை என்று சொல்லி விட்டார்கள், விளக்கம் சொல்லவில்லை.. (மணியடிக் கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

சென்னை நகராட்சித் திட்டங்களுக்கு உதவி.

*வினா எண். 188—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சியின் எந்தெந்த திட்டங்களுக்கு எந்தெந்த ஆண்டுகளில் உலக வங்கியிடமிருந்து எவ்வளவு தொகை கடனாக பெற்றுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்னை மாநகராட்சியால் செயல்படுத்தப்படும் சாலை திட்டங்கள் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்துவதற் கென மேற்கொள்ளப்பட்டுள்ள சென்னை நகர்புற வளர்ச்சித் திட்டங்களின் ஒரு பகுதியாகும். இச் சாலைத் திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.2 கோடி. இம் மூன்றாண்டுத் திட்டம் 1977–78 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மொத்த செலவில் 45 சதவீதம் உலக வங்கியின் கடனுதவி யாகும். இதுவரை இத் திட்டத்திற்கு செலவிடப்பட்டது 27.21 இலட்ச ரூபாயாகும். 1978—79-ல் 8.3 இலட்சம் செலவிடப்படும். மீதித் தொகை 1979—80-ல் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-40]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, எந்தெந்த திட்டங்களுக்கு உலக வங்கியிடமிருந்து மாநகராட்சி கடன் பெற்றது என்ற கேள்விக்கு சாலைத் திட்டம் ஒன்றை மட்டும் அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். குடிநீர்—வடிகால் வாரியம் தனியாகப் பிரிக்கப்பட்டபோது எவ்வளவு தொகை அதற்கு கடன் பெறப்பட்டது. அந்தத் தொகை முழுவதும் செலவிடப்பட்டுவிட்டதா ? அப்படி இல்லை என்றால் மாநகராட்சி நிதியிலிருந்து அந்த நிர்வாகம் நடைப் பெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, உலக வங்கி உதவியிலிருந்து மாநகராட்சி செய்யக் கூடியதை பதிலிலே சொல்லி விட்டேன். மற்றவைகளுக்கு தனிக் கேள்வி போடவும்.

திரு. சோ அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த மாநகராட்சித் திட்டங்களுக்கு உலக வங்கிக் கடனுக்கு நிபந்தனை ஏதாவது உண்டா ? வரி விதிக்கக்கூடிய அந்த யோசனை கூட அவர்களுடைய நிபந்தனையினால் தான் என்று நான் கேள்விப் படுகிறேன். ஏனென்றால் முன்னால் எல். டி. பாங்க் நிபந்தனை அப்படி இருந்தது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே தகவல் இல்லை. வாங்கியத் தொகையை 25 ஆண்டுகளில் திருப்பிக் கட்ட வேண்டும். முதல் 5 ஆண்டுகளுக்கு மாரட்டோரியம்—அதாவது தொகை செலுத்த வேண்டியதில்லை. அதற்குப் பின்னால் 25 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் அதற்கு வட்டி 9 சதவீதம்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அளித்த பதிலில் சாலை அபிவிருத்திக்கு அளிக்கப்பட்ட நிதியைப் பற்றிச் சொன்னார்கள். உலக வங்கியிலிருந்து பெறப்பட்ட தொகையினால் எந்தெந்தச்

சாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன ? நெடுஞ் சாலைகள் மட்டும் அபிவிருத்திக்கு எடுததுக் கொள்ளப்பட்டுள் ளனவா அல்லது நகரத்தின் உள்பகுதியிலுள்ள சாலைகளும் அந்த நிதியிலிருந்து பராமரிக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, தனிக் கேள்வி போடவும்.

அரிசனங்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளைப் பழுது பார்த்தல்

வினா எண். 189.—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

அரிசனங்களுக்கு 1967—ம் ஆண்டுக்கு முன் பங்குத் தொகை பெற்று அளிக்கப்பட்ட ஓட்டு வீடுகளுள் தற்போது மோசமான நிலையில் உள்ளவற்றை அரசே பழுது பார்த்துக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:— அரிசனங்களுக்கு 1967— ஆண்டுக்கு முன் பங்குத் தொகை பெற்று அளிக்கப்பட்ட ஓட்டு வீடுகளுள் தற்போது மோசமான நிலையில் உள்ளவற்றை அரசே பழுது பார்த்துக் கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. மா. மணிமாறன். தலைவரவர்களே, 1967-ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் குறைந்த தொகையில், 600 ரூபாய்க்குள் கட்டப்பட்டதால் அவை சரியாக இல்லை. அங்கு வாழ்கின்ற மக்கள் என்றைக்கு இடிந்து விழுமோ என்று அச்சத்தில் இருந்துக் கொண்டிருக் கிறார்கள். எனவே, அப்படி 1967-ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்ட ஓட்டு வீடுகளை இப்போது கட்டுகின்ற காங்கிரீட் வீடுகளாக கட்டிக் கொடுக்க முன்னுரிமை கொடுத்து, அவர்கள் அச்சமின்றி வாழ வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அரசாங்கம் ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்துவிட்டால, அது அவர்களுடைய உரிமை, உடமையாகிறது, ஆகவே, அரசாங்கம் மீண்டும் அந்த வீடுகளை பழுது பார்ப்பது என்பது

செய்யக்கூடிய காரியம் அல்ல. தனிப்பட்டவர்களின் வீடுகளை பழுது பார்த்துக் கொடுக்க ஆரம்பித்தால் அது எங்கே போய் நிற்கும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, கும்பகோணம் வட்டம் நாச்சியார் கோவிலில் 1967-ம் ஆண்டுக்கு முன்னால் இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் சென்ற ஆண்டு வீசிய கடும் புயலால் சேதம் அடைந்துள்ளன. அதற்கு அரசு வழங்குகின்ற நிவாரணத் தொகையான 200 ரூபாய் கூட ஓட்டுவீடு என்பதால் கிடைக்கவில்லை. ஆகவே, அப்படி சேதமடைந்த வீடுகளுக்கு நிவாரணத் தொகையாவது கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு அரசாங்கம் கொடுக்கிற மானியத் தொகையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எந்தெந்த பகுதிகளில் கொடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, பழைய வீடுகள், அதாவது காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும் சரி, கட்டப்பட்ட வீடுகள் மிகப் பரிதாபகரமான நிலையில் இருக்கின்றன. அவை எல்லாம் இடிந்து விழுகின்ற நிலையிலே இருக்கின்றன. அவை புதுப்பிக்கப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறபோது நாங்கள் கஞம் அதே வழியைத்தான் கடைப்பிடிப்போம் என்று சொல்வது சரியல்ல. ஆகவே இந்த மாதிரி இடங்களைப் பார்த்து அவற்றை புதுப்பித்து அங்குள்ள மக்களை வாழ வைக்க அரசு கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் போன்றவர்கள் குறிப்பிடுவதுபோல எந்த எந்த பகுதிகளில் இப்படிப்பட்ட வீசல்கள் பழுதுபார்க்கப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன என்று ஒரு அறிக்கை கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு சம்பந்தப்பட்ட கான்ட்ராக்டர் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க இருக்கிறது. அதோடு இந்த விஷயத்தை அனுதாபத்தோடு கவனித்து அதுபற்றி பரிசீலனை செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென் ஆற்காடு மாவட்ட நலப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம்.

*வினா எண் 190—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடைகுயளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள அரசினர் நல ஆரம்பப் பள்ளியில் (Welfare School) பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒன்றாம் தேதி சம்பளம் வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1977-ம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ம் நாள் வெளியிடப்பட்ட நிதித்துறை ஆணையின்படி 1977 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1-லிருந்து பணம் எடுக்கும் அலுவலர் (Drawing Officer) தனது அதிகார வரம்பிற்குட்பட்ட எல்லாப் பகுதிகளுக்கும் தனது தலைமையிடத்திலுள்ள கருவூலத்திலோ அல்லது துணைக் கருவூலத்திலோ தான் பணம் எடுக்க வேண்டும். தலைமையிடத்திலுள்ள பணியாளர் ஊதியம் மற்றும் இதர செலவினங்களைத் தவிர பிற பணியாளர் ஊதியம் மற்றும் செலவினங்கள் வங்கி காசோலை (Bank Draft) மூலம் தான் கொடுக்கப்பட வேண்டும். இதனால் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள அனைத்து அரிசன நலப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கடலூர் மாவட்ட அரிசன நல அலுவலர் அலுவலகத்தில் மாதாந்திர ஊதியப்பட்டியல் தயார் செய்து கடலூர் தலைமைக் கருவூலத்தில் பரிசீலிக்கப்பட்டு வங்கி மூலம் காசோலை (Bank Draft) பெறப்படும். அக் காசோலை விழுப்புரம், சிதம்பரம், விருத்தாசலம் மற்றும் திண்டிவனம் ஆகிய இடங்களைத் தலைமை இடமாகக் கொண்ட தனி வட்டாட்சியருக்கு அனுப்பப்படும். தனி வட்டாட்சியர் வங்கியில் மாற்றி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவார்கள். வட்டாட்சியருக்கு குறைந்தது இரண்டு வட்டங்கள் எல்லையாக இருப்பதால் ஒரே சமயத்தில் இரண்டு வட்டங்களுக்கும் செல்ல முடியாததால் முதல் நாள் ஒரு வட்டத்திலுள்ள பள்ளி ஆசிரியர்களும் மறுநாள் அடுத்த வட்டத்திலுள்ள பள்ளி ஆசிரியர்களும் ஊதியம் பெறுகிறார்கள் ஊதியப்பட்டியலை மொத்தமாக தலைமைக் கருவூலத்தில் கொடுத்து மொத்தமாக காசோலை பெறுவதில் சில நடைமுறை தாமதங்கள் ஏற்பட்டதால் அரிசன நலப்பள்ளி ஆசிரியர்களுக்கு முதல் தேதியில் ஊதியம் வழங்க முடியவில்லை.

[1979 பிப்ரவரி 26

தற்போது ஏற்படுகின்ற காலதாமதத்தை தவிர்க்க தனி வட்டாட்சியரே தத்தம் எல்லைக்குட்பட்ட அரிசன நலப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஊதியப்பட்டியல் தயார் செய்து ஊதியம் வழங்க 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ஆம் தேதியன்று தக்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது..

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, அரிசன நல ஆரம்பப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இன்னின்ன முறைகளில் சம்பளம் வழங்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் அவர் குறிப்பிட்ட அந்த முறைகளிலே சம்பளம் வழங்கப்படுகிற போது ஆசிரியர்களுக்கு சம்பளம் கிடைப்பது சில மாதங்களில் 15 ஆம் தேதி வரைக்கும் கூடப்போய்விடுகிறது. எனவே இந்த முறையினைக் கடைப்பிடிப்பதால், அதன்படி ஒவ்வொரு பள்ளியின் தலைமை ஆசிரியரும் மாவட்டத்தின் தலைநகருக்குச் சென்று சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு வந்து அவர்கள் ஆசிரியர்களுக்குக் கொடுப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளத்திற்கு ட்ராப்டாகவோ அல்லது செக்காகவோ கொடுத்தால் அவர்களுக்கு 2 அல்லது 3 தேதிகளுக்குள்ளாவது சம்பளம் கிடைக்க வழிவகை ஏற்படும். ஆகவே அந்த முறையை ஏற்படுத்த அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து தலைமை ஆசிரியர்கள் சென்று மொத்த சம்பளத்தையும் வாங்கி வருவதற்கான பயணப்படி சரியாகக் கொடுக்கப்படுவதில்லை என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அப்படியென்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, முன்பெல்லாம் இந்தத் தலைமை ஆசிரியர்கள் சென்றுதான் ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தைப் பெற்றார்கள். ஆனால் இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ஆம் தேதி ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அந்தந்த வட்டாட்சியர் அலுவலகத்திலேயே ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை வழங்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறோம். பயணப்படி தருவது பற்றி இங்கே குறிப்பு இல்லை. அப்படி வழங்கப்படவில்லை என்றால் அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் போன்றல்லாது இந்த அரிசன நலப்பள்ளிகள் தனியாக இருக்கின்றன. அவ்வாறு இல்லாமல் இதுவும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் போன்றே இருந்தால் நல்லது. அப்படி ஒரு முறையை ஏற்படுத்தினால் ஜாதி வித்தியாசம் ஏற்படாது. ஆகவே இது பற்றி அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கும் தொடர்பு இல்லை. இருந்தாலும் எதிர்காலத்தில் அவரது பிரச்சனைக்கு தொடர்பு ஏற்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கரூர் அருகே இரயில்வே பாலம்.

* வினா எண் 191—திரு. கு. வடிவேல : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கரூரில் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ன் குறுக்கே இருக்கின்ற இரயில்வே பாதையில் மேம்பாலமோ அல்லது சுரங்கப் பாதையோ கட்டுவதற்கு அரசிடம் ஏதாவது உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திரு. கு. வடிவேல : கரூருக்கு அருகாமையில் திருச்சியில் கரூர் வரையில் இருக்கக்கூடிய ரெயில்வேப்பாதையில் பல மாநிலச் சாலைகள், தேசியச் சாலைகள் குறுக்கிடுகின்றன. கரூரில் தேசிய நெடுஞ்சாலை குறுக்கிடும் இடத்தில் ரெயில்வேகேட் மூடப்படும் போது போக்குவரத்திற்கு பெரிதும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே அதுபற்றி அரசு ஒரு முடிவெடுத்து அங்கு ஒரு மேம்பாலமோ அல்லது கீழ்பாலமோ கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடத்திலுள்ள லெவல் க்ராஸிங்கை அகலப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை அந்தவிடத்தில் கட்டுவதற்கு அரசாங்கத்தினிடம் இப்போது பரிசீலனையில் இல்லை. ஆனால் கரூர் நகரத்திற்கு புறவழிச் சாலையில், தேசியச் சாலையில் ஒரு மேம்பாலம் சேர்க்கப்பட்டு மதிப்பீடு மத்திய அரசுக்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு அருகே இரயில்வே மேம்பாலம்.

*வினா எண் 192—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண் வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) சென்னை—திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் செங்கற்பட்டில் இரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது வேலை தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) ரு. 60 இலட்சம்.

(இ) இம்மேம்பாலம் அமைக்கும் பணியின் மதிப்பீடு மத்திய அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசு ஒப்புதல் கிடைத்தவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : எந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1974–75-ல் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட பத்து பணிகளுக்கு இன்னும் மத்திய அரசு ஒப்புதல் அளிக்காத நிலை இருக்கிறது. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டே, இந்த ஆட்சி பொறுப்பிற்கு வந்த பிறகு பலமுறை மத்திய அரசை வலியுறுத்தி இந்த அனுமதி தரும்படி மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் மத்திய அரசு எப்போது ஒப்புதல் தருகிறதோ அப்போதுதான் இது மேற்கொள்ளப்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கேள்விகளுக்கெல்லாம் மூன்று ஆண்டுகளாக எதிர்பார்க்கிறோம். நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே வலியுறுத்துகிறோம், எதிர்பார்க்கிறோம், கேட்கிறோம் என்பதற்குப் பதிலாக இதை அமல்படுத்த அவர்களை ஒத்துக்கொள்ளக்கூடிய வகையில் வேறு ஏதாவது முறைகளைக்

கையாள இந்த அரசு முன்வருமா? மூன்றாண்டுகளாக வரும் வரும் என்று வலியுறுத்துகிறோம், கேட்கிறோம் என்பதற்குப் பதிலாக அவர்களை ஒத்துக்கொள்ளக் கூடிய வகையில் செய்வதற்கு வேறு ஏதாவது முறையைக் கையாண்டு அவர்களை ஒத்துக் கொள்ளவைக்க முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அஞ்சல் மூலம் வலியுறுத்துவதோடு நின்றுவிடாமல் டெல்லி சென்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து இதுபற்றி தீவிர உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என இதன் தேவையை வலியுறுத்தி ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட நாடாளுமன்றததில் இதுபற்றி கேள்விகள் எழுப்பி அமைச்சர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தி வருகிறார்கள். இன்னும் கடுமையான முறையில். மத்திய அரசு உணரக்கூடியவகையில் எந்த வகையில் இதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமோ அப்படிக் கொண்டுவர கண்டிப்பாக மாநில அரசு முயற்சியினை மேற்கொள்ளும்.

வைகைத் திட்டத்தின்கீழ் உள்ள துணைக் கால்வாய்கள்.

* வினா எண். 193.— திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) வைகை சீரமைப்புத் திட்டத்தின்கீழ், விரகனூர் மதகு அணையிலிருந்து வெட்டப்பட்ட துணைக் கால்வாய்கள் சென்ற வெள்ளத்தில் பாதிக்கப்பட்டதினால் அரசுக்கு இழப்பு எவ்வளவு?

(ஆ) இத்திட்டத்தை சரியாக செயல்படுத்தாததுதான் அதிக இழப்புக்கு காரணமா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) சுமார் ரு. 20 லட்சம்.

(ஆ) இல்லை. அவ்வாறு சொல்ல முடியாது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* வினா எண். 194 —திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) வைகை ஆற்றுப் பகுதியில் துணைக்கால்வாய்கள் எவையேனும் வெட்டப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) அந்தக் கால்வாய்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதா?

(ஈ) ஆம் எனில் அதனால் எவ்வளவு லட்சம் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) வைகை ஆற்றின் குறுக்கே வீரகனூருக்கு அருகிலும் பார்த்திபனூருக்கு அருகிலும் இரண்டு மதகு அணைகள் கட்டப்பட்டு, ஒவ்வொரு மதகு அணையிலிருந்தும் தனித்தனியே இரண்டு பிரதானக் கால்வாய்கள் (இடது பிரதானக் கால்வாய், வலது பிரதானக் கால்வாய்) வெட்டப்பட்டுள்ளன.

(இ) மேற்கூறப்பட்ட கால்வாய்களில் கடந்த 1977ஆம் ஆண்டில் சில இடங்களில் வெள்ளச் சேதம் ஏற்பட்டது.

(ஈ) அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 27.490 லட்சமாகும்.

திரு. வ.மு. சுப்பிரமணியன் : ஒப்பந்தம் செய்த முறையே தவறு என்று சொல்லப்படுகிறது. ஒப்பந்தத்திற்கு மாறாக ஒப்பந்தக்காரர்கள் துணைக் கால்வாய்களுக்கு கரைகள் அமைக்க கரம்பை மண்ணைப் பயன்படுத்துவதற்கு பதிலாக ஆற்றுமணலைப் பயன்படுத்தினார்கள். ஆகவேதான் அவை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. ஆகவே அவர்கள்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அது அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தக்காரர்கள் தவறு செய்ததனால் இது ஏற்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அது அரசின் பரிசிலனைக்கு வந்தால் நிச்சயமாக கவனிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தவறு ஏற்பட்டதற்கு காரணம், இதற்கான கான்டிராக்டில் ஊழல் என்று சொல்லப்படுகிறது. இன்னும் சில கான்டிராக்டர்கள் ஒழுங்காக வேலை செய்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பணம் வழங்கப்படாமல், ஊழல் செய்தவர்கள் பணம் வாங்கிவிட்டார்கள் என்று தெரிகிறது. ஆகவே அரசு இதை பரிசிலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஊழல் எங்கு நடந்தாலும் அரசு அதன் மீது நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1977–78-ல் வந்த வெள்ளத்தின் காரணமாக அரசுக்கு வைகை கால்வாயில் 27½ லட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக சொன்னார்கள். மேலும் வைகையில் வந்த பெரும்வெள்ளத்தால், பல கால்வாய்கள், பல ரோடுகள் எல்லாம் சேதமடைந்தன. முக்கியமாக கால்வாய்களை பாதுகாப்பதற்காக கரை யோரங்களில் இருபுறங்களிலும் கரைகளைப் பலப்படுத்தி பாதுகாக்கப்படும் என்று அங்கே வந்திருந்த அமைச்சர்கள் சொன்னார்கள். அதற்கான திட்டம் ஏதாவது அரசினிடத்தில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1977–78 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் இந்த இரண்டு பிரதான கால்வாய்களிலும் உடைப்பு ஏற்பட்டத்தின் காரணமாக அரசுக்கு 27½ லட்சம் ரூபாய் அளவுக்கு சேதம் ஏற்பட்டது. மேலும் இது போன்ற சேதங்கள் வராதவாறு தடுக்க, கரைகளை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இதில் ஒப்பந்தம் முறையாக செய்யப்படவில்லை என்பதைத்தான் எல்லோரும் சொல்லிக்கொள்கிறார்கள். இந்த அணையில் கரம்பு மண் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஆற்று மண்ணை அள்ளி போட்டதினால் தான் இந்த உடைப்பு ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. இப்படி ஒப்பந்தத்திற்கு மாறாக ஆற்றுமண்ணை உபயோகித்த கான்டிராக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவே நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்தேன், ஆற்றுமணலை மட்டும் உபயோகித்து வாய்க்கால் கட்டப்பட்டிருந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், யார் இந்த ஊழலில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள்மீது நடவடிக்கை எடுப்போம் என்பதை மீண்டும் உறுதியாக சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : அமைச்சர் அவர்கள் விராகனூர் அணையைப் பற்றி சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி, தேனி தொகுதியைச் சேர்ந்த ஆத்தங்கரைப் பட்டி என்கின்ற இடத்தில் வைகை அணையிலிருந்து தண்ணீரை

எடுத்துச்செல்லும் கால்வாயும் சேதமடைந்து பல லட்சக் கணக்கான ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றிய விவரம் என்ன என்பதை தெரிவிக்க இயலுமா? இந்தச் சேதத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் யார் என்று கண்டுபிடித்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியிலுள்ள விவரங்கள் பற்றிய குறிப்புகள் என்னிடம் இப்போது இல்லை. பின்னால் சேகரித்து பதிலாக தருகிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, பாசனத் துறையில் கோடை காலத்தில் கால்வாய்களைவெட்டும்வேலையை செய்துவிட்டு, அதற்குரிய பில்களை மழை காலத்தில் வாங்கு வதாக தெரிகிறது. காரணம் மழை காலத்தில் வெட்டப்பட்ட இடம் கூட அழிந்து போய்விடுகிறது. இப்படிப்பட்ட ஊழல் நடைபெற்று வருகிறது, ஆகவே, இப்படிப்பட்ட தவறுகளைத் தடுக்க பாசனத்துறை முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கண்டிப்பாக முயற்சி செய்யும்.

வேதாரண்யம் பகுதியில் உற்பத்தியாகும் புகையிலை.

*வினா எண் 195—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம் தொகுதியில் உற்பத்தி ஆகிற புகை யிலை விற்பனை ஆகாயல் இருக்கிறது என்ற விவரம் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுடைய நிலை அறிந்து புகை யிலையிலிருந்து பலவித தொழிற்சாலை துவக்க அரசுக்கு உத் தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) மக்கள் உபயோகத்திற்காக புகையிலையை வாங்கி அதை மெல்லும் புகையிலையாக (Chewing Tabacco) மாற்று வதற்கு ஒரு கூட்டுறவு தொழிற் சங்கம் ஏற்படுத்துவது குறித்து

தொழில் மற்றும் வணிகத் துறையின் பரிசீலனையில் உள்ளது. தொழிற்சாலைகள் அமைப்பதற்கு செயற்குறிப்புகள் ஏதும் அர சின் பரிசீலனையில் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர் களே, வேதாரண்யம் பகுதியில் அதிக அளவு புகையிலை கிடைக் கிறது. இதை வெளியில் சென்று விற்பதற்கு மார்க்கட் கிடைக்க வில்லை. பீடி, சிகரெட் முதலியவைகளுக்கு மூலப் பொருளாக புகையிலை இருப்பதால், இந்தப் பகுதியிலேயே ஒரு தொழிற் சாலை அமைக்க வேண்டும் என்று அங்குள்ள மக்கள் விரும்பு கிறார்கள் அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தி செய்கின்ற புகையிலையை விற்பதற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஏற்பாடு செய்து, அதன் மூலம் ஓரளவுக்கு அதிக விலை கிடைத்து வருவது எல்லோருக்கும் தெரியும். மேலும் இங்குள்ள விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டு வந்த உதவி ஏற்கெனவே 1,500 ரூபாய் ஒரு ஏக்கருக்கு என்று இருந்தது. இப்போது அதை 2,500 ரூபாய் அளவுக்கு கொடுக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். மேலும் இதில் தொழிலாளர் சங்கங்களை ஏற்பாடு செய்வதின் மூலம் அந்தந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளிடையே புகையிலையை நல்ல முறை யில் விற்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கி றோம். வேதாரண்யம் பகுதியில் 5,500 அளவுக்கு இந்தப், புகையிலையை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் இருக்கிறார் கள். ஆனால் 751 பேர்கள் தான் தொழிற் சங்கத்தில் உறுப்பினர் களாக இருக்கிறார்கள். மீதமுள்ள 4,000 பேர்கள் அளவுக் குள்ள தொழிலாளர்களும் உறுப்பினர்களாக சங்கத்தில் சேர்ந் தால் இன்னும் நல்ல முறையில் புகையிலையை விற்பதற்கான சூழ்நிலை ஏற்படும்.

[முற்பகல் 10-00].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கின்றேன். யாண்புமிகு அமைச் சர் அவர்கள் கேள்விக்கு சுருக்கமாக பதில் சொன்னால், நேரத்தை மிச்சமாக்கலாம்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, ஏக்கர் ஒன்றுக்கு சாகுபடி செலவு ரூ. 2,500 தரப்படுகின்றது என்று சொன்னார் கள். ஆனால் அப்படிக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். எனவே, அப்படி கொடுப்பதற்கு இந்த

அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புகை
யிலை உற்பத்தி செய்யப்பட்டு, கூட்டுறவு விற்பனைச் சங்கம்
மூலமாக விற்கப்படாமல், 2 வருஷங்களாக தேங்கி இருக்கின்றது.
இந்தப் புகையிலையை வியாபாரிகள் குறைந்த விலைக்கு
கேட்டு, இப்போது மிகப் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகி
யிருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா? எனவே, இதை விற்பனை
செய்வதற்கு இந்த அரசே ஏற்பாடு செய்யுமா என்றும் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர்
அவர்களே, ரூ. 2,500 கூட்டுறவு சங்கத்தின் மூலமாக கடன்
வழங்கப்படுகின்றது. எப்படி வழங்கப்படுகின்றது என்று
சொன்னால், ரூ. 2,000 பணமாகவும், ரூ. 400
உரமாகவும், ரூ. 100 பூச்சி மருந்தாகவும் கொடுக்கப்பட்டு வரு
கின்றது. அப்படி கொடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சொன்னால், எந்தக் கூட்டுறவு சங்கத்தில்
அப்படி கொடுக்கப்படவில்லை என்பதை கோடிட்டிக் காட்டி
னால், உடனடியாக அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.
ஆனால், அதே நேரத்தில் கடந்த 1976–77-ல் 676 மெட்ரிக்
டன்னும், 1977–78-ல் 1,140 மெட்ரிக் டன்னும் தஞ்சை மாவட்ட
ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் விற்பனை செய்
வதற்கான ஏற்பாடுகள் செய்யபட்டிருக்கிறது. ஓரளவுக்கு
இன்றைக்கு நிலைமை சீரடைந்து வருகிறது என்பதையும்
தெரிவித்து கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே,
வேதாரண்யத்திலே புகையிலை விவசாயம் செய்வது தமிழகத்
திலே உள்ளவர்களுக்குத் தெரியும். ஆனால், புகையிலை உற்பத்தி
செய்வது என்பது ஒரு கடினமாக உழைப்பு. இந்த கடினமான
உழைப்பிற்கு சென்ற இரண்டு வருஷங்களாக இந்த
விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்ப
தற்காக இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதம்
இருந்ததும் நமக்கெல்லாம் தெரியும். நான் அமைச்சர்
அவர்களைக் கேட்டுக் கொள்வது, கூட்டுறது சங்கத்தின்
மூலம் விற்பனை செய்வதற்குப் பதிலாக, உடனடியாக
இந்த விவசாயிகளைப் பாதுகாக்கின்ற முறையில் இரண்டாண்டு
களாக தேங்கிக் கிடப்பதை அரசே கூட்டுறவு சங்கங்கள் மூலம்
கொள்முதல் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தப் புகையிலையை உற்பத்தி செய்வதன் மூல
மாக விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு இன்று ஏறத்தாழ 1,550
ரூபாய் லாபம் கிடைக்கிறது. ஒரு ஏக்கருக்கு மகசூலைக் கணக்
கிட்டால் ஏறத்தாழ 1,300 கிலோ கிடைக்கிறது. இதை சாகு

படி செய்ய செலவு ரூ. 4,500 ஆகிறது. ஆகவே, எப்படி
இருந்தாலும் விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற
எண்ணத்தோடு தான் இன்று புகையிலையை வாங்கும் வியாபாரி
களானாலும், கம்பெனிகளானாலும் அதிக விலை தர முன்னுக்கு
வரவில்லை என்றாலும், வேதாரண்யத்திலே தஞ்சாவூர் மார்க்
கெட்டிங் கமிட்டியின் ஒழுங்கு விற்பனைக் கூடத்தின் மூலமாக
இந்த புகையிலையை விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருகிறது. அதன் மூலமாக கொள்முதல் செய்ய வருகின்ற
வியாபாரிகளும், கம்பெனிகளும் இந்த ஒழுங்குமுறை விற்பனைக்
கூடத்தின் மூலமாக கொள்முதல் செய்துகொண்டிருக்கிறார்கள்.
இப்படி நிலைமை இன்னும் சீராக்கப்பட்டு வருகின்றது. அதற்
காக நாங்கள் பாடுபட்டுக்கொண்டு வருகிறோம்.

கிராமப் பகுதிகளில் கொய்னா மருந்துகள் வழங்கல்.

* வினா எண். 196—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா —

மலேரியா காய்ச்சலை அறவே ஒழிக்கும் நோக்குடன்
கொய்னா மருந்துகளை ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கிராம
அதிகாரிகள் மூலம் மக்களுக்கு இலவசமாக வழங்க ஆவன
செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : முன்பு
" கொய்னா " மருந்து கிராம அதிகாரிகள் மூலமும் அஞ்சலகங்
கள் மூலமும் கொடுக்கப்பட்டு வந்தது. மலேரியா சிகிச்சைக்கு
முதல் மருந்தாக கொய்னா இப்போது வழங்கப்படுவதில்லை.
தற்போது கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள காய்ச்சல் சிகிச்சை
நிலையங்கள், மருந்து வழங்கு நிலையங்கள் மூலமும் மலேரியா
சிகிச்சை மருந்துகள் " குளோரோகுயின் " " பிரைமாகுயின் "
வழங்கப்படுகின்றன. இது தவிர, மலேரியா தடுப்பு களப்பணி
யாளர்கள் வாயிலாக இந்த மருந்துகள் இலவசமாகக் கொடுக்கப்
பட்டு வருகின்றன.

திரு. என். கிட்டப்பா : தற்போது கிராமப் புறங்களில்
கொய்னா மருந்துகள் எந்த முறையில் வழங்கப்படுகின்றன?
கொய்னா மருந்து பெற அரசு அதிகாரிகளிடம் ஏதேனும் அனு
மதி பெறவேண்டியுள்ளதா? தற்போது தமிழ்நாட்டில் தேவை
யின் அளவுக்கு கொய்னா மருந்து தயார் செய்யப்படுகிறதா?
இல்லையென்றால் உற்பத்தியைப் பெருக்க அரசு மேற்கொண்டு
எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கையை அரசு அறிவிக்க இய
லுமா? நீலகிரி மாவட்டம்........—

[1979 பிப்ரவரி 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்கு துணைக்கேள்விகள் ஒரே சமயத்தில் கேட்கிறீர்கள். அப்படிக் கேட்டு விட்டு மறுபடியும் சந்தர்ப்பம் வேண்டுமென்று கோருகிறீர்கள். இதை உங்களுக்கு நினைவு படுத்துகிறேன்.

திரு. என். கிட்டப்பா : மன்னிக்க வேண்டும். தாங்கள் மீண்டும் அனுமதிக்க இயலாத சூழ்நிலை இருக்கும் காரணத்தால் தொடர்ந்து ஒரே சமயத்தில் கேட்க முற்படுகிறேன். நீலகிரி மாவட்டத்தில் நமது மாண்புமிகு உச்சி கவுடர் தொகுதியான கூடலூர் தொகுதியில் நடுவட்டம் என்ற ஊரில் கொய்னா மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை இருக்கிறது. அதை விரிவுபடுத்தி கொய்னா மருந்து உற்பத்தியை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : மலேரியா சிகிச்சைக்கு முதல் மருந்தாக கொய்னா இப்போது வழங்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக ''குளோரோகுயின்'' ''பிரைமாகுயின்'' ஆகிய மருந்துகள் தற்போது வழங்கப்படுகின்றன. இதை வழங்குவதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் 15 நாட்களுக்கு ஒரு முறை சென்று பார்த்து அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள் மூலமாக இந்த மருந்துகள் வழங்கப்படுகின்றன. மேலும் கிராமங்களில் எல்லா நேரங்களிலும் மலேரியா சிகிச்சை மருந்துகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூலமும், கிராமங்களில் காய்ச்சல் சிகிச்சை நிலையங்கள் மூலமும் மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மலேரியா தடுப்பு மருந்து தற்போது எந்தவிதத் தட்டுப்பாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கெள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தமிழகத்தின் பல பகுதிகளில் தற்போது மலேரியா நோய் கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் இப்போது புதிதாக வழங்கப்படுகின்ற இந்த மருந்துகள் மலேரியா எராடிகேஷன் ஸ்கீமில் தேங்கிக் கிடப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? நீலகிரி மாவட்டத்தில் இந்த மருந்துகள் அதிக அளவில் தேங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்போழுது புதிதாக இன்புளுவன்சா என்ற நோய் தமிழகம் முழுவதும் இருக்கிறது. அந்த நோயைக் தடுக்க ஆங்காங்கு மருந்துகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : மூலக் கேள்வி கொய்னா மாத்திரையைப் பற்றியது; மலேரியா காய்ச்சலைப் பற்றியது. இன்புளுவன்சா பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும். மலேரியா காய்ச்சல் கட்டுப் படுத்தப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களில் மலேரியா காய்ச்சல்

1979 பிப்ரவரி 26]

கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. எங்காவது மலேரியா வருமானால் மருந்து தர 'குளோராகுயின்', 'பிரைமாகுயின்' என்ற மருந்துகள் தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு ப. சந்திரன் : 'பிரிவென்ஷன் இஸ் பெட்டர் தேன் க்யூர்' என்று சொல்வார்கள். ஆகவே, மலேரியா காய்ச்சல் வருவதற்கு ஏதுவாக இருக்கும் கொசுக்களை அழிக்க கிராமப் புறங்களில் உள்ள குட்டைகளிலும், குளங்களிலும் மீன்களை விடும் திட்டம் எந்த அளவில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தற்போது மலேரியா கொசுக்களை ஒழிப்பதற்கும் மலேரியா வியாதியைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒன்றாக மலேரியா கட்டுப்பாடுத் திட்டத்தின்கீழ் பல்வேறு பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் தேவையான அளவுக்கு ஆங்காங்கு மருந்துகள் தெளிக்கப்பட்டு வருகின்றன. எந்தவிதமான வேகமான பரவலும் இந்த வியாதிக்கு இல்லாமல் இருக்கும் வகையில் நடவடிக்கைகளை சுகாதார இலாகா எடுத்து வருகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது சென்னையில் ஒரு விதமான காய்ச்சல்—டைபாய்டும் இல்லை; மலேரியாவும் இல்லை என்ற அளவில் 14 வயதுக்குட்டபட்டவர்களைத் தாக்குவதாக மருத்துவ அதிகாரிகளே தெரிவிக்கிறார்கள். அந்தக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : மலேரியா காய்ச்சலும் டைபாய்டு காய்ச்சலும் ஏற்பட்டால் அவர்களுடைய ரத்தத்தை எடுத்து சோதனை செய்வதன் மூலம் கண்டுபிடித்து அந்த இரண்டுநோய்களையும் போக்க மருந்துகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்த இரண்டுக்கும்நடுவில் ஒரு காய்ச்சல் வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அது பற்றி எந்தக்குறிப்பும் இப்போது இல்லை.

[முற்பகல் 10.10]

திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே, புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளான இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் போன்ற பகுதிகளிலே மலேரியா காய்ச்சல் வேகமாகப் பரவுவதாகச் செய்திகள் வருகின்றன. அது அரசுக்குத் தெரியுமா? அதிலே 7 பேர்கள் செத்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது, அதுவும் அரசுக்குத் தெரியுமா? அதைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் பகுதியிலே மலேரியா காய்ச்சல் என்று தெரிவிக்கப்பட்டவுடன் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக அதிகாரிகள் அங்கே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். போர்க்கால நடவடிக்கைகள் என்ற முறையிலே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்லாமல் மருந்துகள் தெளிப்பதற்கு போதிய மருந்துகளும் அங்கே அனுப்பப்பட்டிருக்கின்றன, ஆகவே அங்கே நிலைமை கட்டுக்குள் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி:—தலைவர் அவர்களே, இந்த கொய்னா என்ற மருந்து மிகவும் 'எபக்டிவ்' ஆனது என்று டாக்டர்கள் எல்லாம் அபிப்பிராயப்படுகிறார்கள். மலேரியா காய்ச்சலை அது நல்ல முறையிலே கட்டுப்படுத்தும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் கோயம்புத்தூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியிலும், நகராட்சிகளிலே உள்ள மருத்துவமனைகளிலேயும் அப்படிப்பட்ட மருந்துகள் கிடைப்பதில்லை, ஆனால் ஹெல்த் டிபார்ட்மெண்டிலே உள்ள பிரிவு மூலமாக அவைகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே அந்த ஆஸ்பத்திரிகளிலேயும் அந்த மருந்துகள் போதுமான அளவிற்குக் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, தற்போது எந்தவிதமான தட்டுப்பாடும் இருப்பதாக அரசின் கவனத்திற்கு வரவில்லை. உள்ளார்ந்த கிராமப் பகுதிகளிலே கூட குளோராகுயின், பிரைமாகுயின் போன்ற மருந்துகள் சுகாதார நிலையங்கள் மூலமாகவும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகவும் கொடுக்கப்படுகிறது. ஆகவே அத்தகைய தட்டுப்பாடு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை பொது மருத்துவ மனை.

*வினா எண் 197—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பொது மருந்துவ மனையில் 'ஏ' 'பி' வகுப்பு அறைகளை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கணேசன்: தலைவர் அவர்களே, சென்னை மருத்துவமனையில் கொஞ்சம் வசதியுடையவர்கள் நல்ல முறை யிலே சிகிச்சை பெற வேண்டுமென்பதற்காக 'ஏ', 'பி' வகுப்புக் களைகேட்டால், நீண்டகாலமாக எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் கேட்டால், பல நாட்கள் காத்து இருக்க வேண்டியிருக்கிறது. எனவே இந்த நெருக்கடியைப் போக்குவதற்கு ஏ, பி, வகுப்புகளை விரிவுபடுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, தற்போது சென்னை அரசுப் பொது மருத்துவமனை யிலே ஏ,பி, வகுப்பு அறைகளை விரிவுபடுத்தும் எந்தவித செயற் குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உறுப்பினர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அத்தகைய தட்டுப்பாடு எதுவும் இதுவரையில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அரசினர் தோட் டத்திலேயுள்ள மருத்துவ மனையிலே எந்த நேரத்திலே என்ன மருந்தைக் கேட்டாலும் மருந்து இல்லை என்று தான் சொல் கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சென்னை பொது மருத்துவ மனையில் உள்ள ஏ,பி, வகுப்பு அறைகளைப் பற்றியது. ஆகவே அமருங்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்த ஏ, பி, வகுப்புகள் சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது மேலவை உறுப்பினர்களுக்கு என்று சொன்னாலும்கூட, இரண்டாயிரம் ரூபாய்க்குமேல் வருமானமுள்ளவர்களுக்குத்தான் அமைச்சர் களுக்குத்தான் 'ஏ' வகுப்பு இருக்கிறது என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட மாறுபாடுகள் இதற்குள்ளேயே ஏற்றத் தாழ்வுகள் இருக்க வேண்டியது அவசியம் தானா? இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகாவது அத்தகைய மாறுபாடுகள் மாற்றப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, மிகுந்த பணம் படைத்தவர்கள் தங்களுடைய சிகிச் சைக்காக ஏ,பி, வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டு நீண்டகாலமாகச்

செயல்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போல் எந்தவிதமான பாகுபாடும் காட்டப்படவேண்டுமென்று முறையிலே அந்த வகுப்புகள் உருவாக்கப்படவில்லை. நான் ஒன்றைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். ஸ்பெஷல் அறை களில் சிகிச்சை பெறுகிறபோது கிடைக்கிற நேரடிப் பார்வையை விட, பொதுவாக இருக்கின்ற இடங்களிலே பெறுகின்ற டாக்டர் களின் பார்வை, செவிலியர்களின பார்வை உடனடியாகக் கிடைக் கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, இந்த 'ஏ' வகுப்பு, 'பி' வகுப்பு அறைகள் அதிகமாக விரிவாக்கப் படாத காரணத்தால் இன்றைக்குத் தனியார் துறையில் நர்சிங் மருத்துவமனைகள் அதிகமாக்கப்பட்டு, பலயிடங்களில் அனுமதி யில்லாமல் பல வீடுகளிலே ஆஸ்பத்திரிகள் இயங்குகின்ற நிலைமை இருக்கின்றது அதைத் தடுக்க நடவடிக்கை எடுப்ப தோடு, அரசும் 'ஏ' வகுப்பு, 'பி' வகுப்பு அறைகளை அதிகமாகத் துவக்குவதற்கு ஆவன செய்ய முடியுமா என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பின ரவர்களுடைய அந்த எண்ணம் பரிசீலிக்கப்படும்.

திரு. டி. கே. கபாலி : தலைவரவர்களே, பொது மருத்துவ மனையில் ஏழைகள் இட வசதியில்லாமல் கீழே படுக்க வைக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இடவசதி செய்து தர அர சுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, எவ்வளவு இடவசதிகளை உருவாக்கிக் கொண்டு போனாலும், அதிகமானவர்கள் அங்கே வருகின்றபொழுது சில நேரங்களில் பாய் தர வேண்டிய சூழ்நிலை கள் வந்து கொண்டுதான் இருக்கும், அதிக இடவசதிக்கு ஏற்பாடு செய்தாலும்கூட பாய் கொடுப்பதைத் தடுத்துவிட முடியாது. ஆனாலும், பொதுவாக வருகின்ற ஏழை எளியவர்களுக்கு நல்ல சிகிச்சை அளிக்க வேண்டுமென்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

திரு. என். சங்கரய்யா : 'பாயின்ட் ஆப் ஆர்டர்' சார். 'ஸீரோ அவரில்' உங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமக்கு 'ஸீரோ அவர்' கிடையாது. எனவே, அதைச் சொல்லாதீர்கள்.

1. தகவல் கோரல்.—தொடர்ச்சி.

(ஆ) சிம்கோ மீட்டர் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் குறித்து.

திரு. என். சங்கரய்யா : 23ஆம் தேதியன்று இந்தச் சட்ட சபையிலேயே திருச்சி சிம்கோ மீட்டர் சம்பந்தமாக ஒரு அவசர மான நிலைமை இருக்கிறது என்று எதிர்க்கட்சிகள் வரிசை யிலிருந்து எடுத்துச் சொல்லப்பட்டு, அது மிக அவசரமானது என்று ஏற்றுக்கொண்டுதான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 12 மணி அளவிலே எதிர்க்கட்சித் தலைவர்களோடு தொழி லாளர் நல அமைச்சர் பேச ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லி, ஏற்பாடு செய்து பேசினார்கள். அதன் பிறகு இங்கே ஒரு அறிவிப்பையும் செய்தார்கள். அதன்படி இன்றைக்கு 25, 26 தேதியாகியும் அது சம்பந்தமாக என்ன முடிவு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட வில்லை. அங்கே கம்பெனி நிர்வாகிகள் காலம்கடத்தும் நிலைக்குக் கொண்டு செல்வதற்கு நாம் அனுமதிக் கக்கூடாது. ஆகவே, அந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்றுதான் சபையின் எண்ணம். அந்த நோக் கங்கள் நிறைவேறக்கூடிய அளவிற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் இன்றைக்கு அரசாங்கத்தின் தரப் பிலிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 24ஆம் தேதி காலை திரு. உமாநாத் அவர் கள் மற்றவர்கள் சார்பாக நான்கு குறைகளைக் கொடுத்தார்கள். அதையொட்டிப் பேச்சுவார்த்தை நடந்தது. மன்னிக்கவும், அவர்கள் கொடுத்தது 23ஆம் தேதி. 24ஆம் தேதி 11 மணியி லிருந்து 2—10 மணி வரையல் முதலாளிகளை அழைத்துப் பேசி னேன். அப்பொழுதுகூட உமாநாத் அவர்கள் என்னை நேரில் சேம்பரில் கண்டு, இந்தக் கோரிக்கை வெற்றி பெற 'பிரஷரைஸ்' செய்து முயற்சி செய்யுங்கள் என்று சொல்லிச்சென்றார்கள். அதை யும் நான் முயற்சி செய்து பார்த்து கொண்டு இருந்தேன். 2—10 மணிக்குப் பிறகு மாலை 4 மணிக்கு கூடிப் பேசினோம். 4 மணி முதல் 5—30 மணி வரையில் என் இல்லத்திலே மீண்டும் பேச்சுவார்த்தை நடந்தது. நேற்று காலை 9 மணி முதல் 11

மணி வரையில் மீண்டும் பேச்சு வார்த்தை நடந்தது. நான்
இந்தக் கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டு
மென்று வலியுறுத்தினேன். ஐ.என்.டி.யூ.சி. தலைவர்களில் ஒரு
வரான திரு. பழனியாண்டி அவர்களை அழைத்து ஒத்துக்
கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இன்று
மாலை 3 மணிக்கு மீண்டும் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறார்
கள். பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது.

(இ) டன்லப் தொழிற்சாலையில் கலவரம் குறித்து.

திரு. ர. ஜெபமணி : சபாநாயகரவர்களே, பாயின்ட் ஆப்
ஆர்டர். 22-ம தேதி இரவு டன்லப் தொழிற்சாலையில் பயங்
கரமான ஒரு பெரிய கலவரம் நடந்து, இரண்டு தொழிலாளர்கள்
பயங்கரமாகத் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியிலே இருக்கிறாாகள்.
அதிலிருந்து டன்லப் தொழிற்சாலை மூடிக் கிடக்கிறது. இது
தொழிலாளர் பிரச்சினை மட்டுமலல, தொழிலாளர்களின்
மனைவிமார்கள், எப்பொழுது புருஷன் வருவான், எப்பொழுது
புருஷன் வருவான் என்று கேட்கும் அளவிற்குத் தொழிலாளர்கள்
தாக்கப்படுகிறார்கள். பத்திரிகையிலும் இந்தச் செய்திகள்
வரவில்லை. அரசுக்கும் இது தெரியவில்லை. இதைப்பற்றி
நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்.
தாங்கள் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்தது
என்னுடைய கவனத்தில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்
சரைக் கேட்டு, அதற்கு தயாராக இருக்கும் நேரத்தில் எடுத்துக்
கொள்கிறேன.

[முற்பகல் 10–20]

(ஈ) உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறும் கடிதங்களின் உறை
யும் தமிழில் அச்சடிக்கப்பெற்றிருத்தல் வேண்டும் என்பது குறித்து

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நான்
இரண்டு நாளைக்கு முன்னால் இந்த அவையிலே தமிழிலேதான்
எல்லாம் கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினேன்.
நீங்களும் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவித்தீர்கள். வினாக்கள்
பட்டியல் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிறது, மகிழ்ச்சிதான்.
இருந்தாலும் அந்தப் பார்வையிலே மாறுதல் கிடையாது. அந்தப்
பார்வையிலே மாறுதல் இல்லாதவரை, தமிழை நாம் ஆட்சி
மொழியாகக் கொண்டு வருகிறோம் என்பதில் பொருள் இல்லை.
எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கூடு ஆங்கிலத்திலே கொடுக்

கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, பெயரும் ஆங்கிலத்திலே
எழுதப்பட்டிருக்கிறது. அன்று நான், ஆங்கிலத்திலே கூடு
களோ, மற்றவைகளோ என் மேஜைக்கு வந்தால் கிழித்தெறி
வேன் என்று சொல்லியிருக்கிறேன். தமிழ் நாட்டிலே தமிழுக்கு
முன்னுரிமை வேண்டுமென்ற காரணத்தினால், எனக்கு ஆங்கிலத்
தில் அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் கூட்டை
உங்கள் முன்னால் கிழித்தெறிகிறேன். (ஒரு கூட்டை கிழித்
தெறிந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உணர்வு
களை நான் உணருகிறேன். இனி கூடுகளைத் தமிழில்தான்
அச்சடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன். ஏற்கனவே
இப்படிப்பட்ட கூடுகள் ஆயிரக்கணக்கில் அச்சடிக்கப்பட்டிருக்
கின்றன. அவை வீணாகக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்
கள். இருந்தாலும், தாங்கள் என்னிடம் வந்து பேசிவிட்டுப்
போன பிறகு, அதைக் கூட உபயோகிக்கக் கூடாது என்று நான்
உடனே உத்தரவிட்டிருக்கிறேன். தமிழிலே அச்சடித்த கூடு
களைத்தான் இனிமேல் பயன்படுத்த வேண்டுமென்று உத்தர
விட்டிருக்கிறேன். ஆகவே, தாங்கள் கோபத்தோடு இருக்க
வேண்டாம். மிகவும் ....

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : என் பெயர் டைப் செய்யப்
பட்டிருப்பதுகூட ஆங்கிலத்திலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கோபத்தோடு
இருக்க வேண்டாம். எல்லாம் படிப்படியாக தமிழிலே கொண்டு
வரப்படும்.

(உ) ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்
கள் குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, சேலம் மாவட்டம்,
திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள நல்லிப்பாளையத்தில் உள்ள
மிராசுதார், அங்கே மாட்டுக் கொட்டகையில் வைத்து தண்ணீரை
16 வயது அரிசனப் பெண் குடித்து விட்டாள் என்பதற்காக
அடித்துக் கொலை செய்து அந்தப் பிரேதத்தை மறைத்ததாகவும்
அதற்காக அங்குள்ள அரிசன மக்கள் எல்லாம் உண்ணாவிரதம்
இருக்கிறார்கள் என்று..........(மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் ஒத்தி வைப்புத்
தீர்மானம் கொடுத்தது என்னவாயிற்று என்று கேட்டாலே
போதும். பரவாயில்லை. விளக்கமாகச் சொல்லுங்கள் என்
றால், அதை உரையாக இழுக்கிறீர்கள். இன்னும் அதற்கான
பதில் என் கையில் வரவில்லை. அது வந்தவுடன் எடுத்துக்
கொள்ளப்படும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, 19-ம் தேதி இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்தேன். ஒன்றைத்தள்ளிவிட்டார்கள். இன்னொன்று.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று கடைசி நாளாக இருப்பதால் நீங்கள் கேட்கின்ற, எதிர்பார்க்கின்ற பதில்கள் இன்றே கிடைக்க வேண்டுமென்பது நியாயம் என்று உணரு கிறேன். ஆனால், என் அறைக்குப் பதில் வரவில்லை. பதில் வந்தவுடன் அவையில் வைக்கலாம்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, திருச்சி சிறைச்சாலையில் குடந்தை கல்லூரி ஆசிரியர்களும் மாணவர் களும் உண்ணா விரதம் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை ......(மணியடிக்கப்பட்டது).

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, இளையாங்குடி பகுதியில் விவசாயிகளிடத்திலே கூட்டுறவு அதிகாரிகள் கடுமையான முறையிலே ஜப்தி செய்து கொண்டி- ருக்கிறார்கள். அது சம்மந்தமாக ஏற்கனவே 42-வது விதியின்கீழ்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னாலிருந்த உறுப்பி னருக்கு சொன்ன பதிலையே இதற்கும் சொல்கிறேன்.

திரு. செ. சிவசாமி: அதோடு, கேரளாவிற்கு ஆடு மாடுகள் அனுப்புவது சம்பந்தமாகவும் நான் 42-வது விதியின்கீழ் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதோடு, சிமென்ட் கலப் படத்தைப் பற்றி இதே அவையிலே சுட்டிக்காட்டினேன். அதையே காட்டினேன். கெமிக்கல் அனலிசிஸ் பண்ணி பிறகு முடிவைச் சொல்வதாகச் சொல்லப்பட்டது. இதுவரை எந்த விதமான நடவடிக்கையும்......(மணியடிக்கப்பட்டது).

(ஊ) கல்லூரி ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சட்டமன்றத்தின் தொடர் கூட்டம் இன்றோடு முடிவடைகிறது. கடந்த சில நாட்களாக கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்து அது சம்பநதமாக அரசு தரப்பிலேயிருந்து பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அது வெற்றிகரமாக முடிந்து சமரசம் ஏறபடும் என்று எதிர்பார்த்தோம். தோல்வி இன்றைய தினம் பத்திரிகையில் பார்க்கும்போது அத ஆனால்.

அந்த வேலை
அடைந்ததாகக் காணப்படுகிறது. ஆகவே, போனால் எந்த
நிறுத்தம் இன்னும் நீடித்துக்கொண்டே என்பதை அரசு
அளவு மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் நன்றாகத் தெரியும்.
நன்றாக அறியும் என்பது நமக்கு ஆசிரியர்கள்............
அதோடு கும்பகோணத்தில் பல

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து கல்லூரி
ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் என்று சொல்லிவிட்டதோடு
போகவேண்டாம்.
நிறுத்திக்கொள்ளுங்கள். விளக்கமாகப் இருந்தால்
நான் அமைச்சரைக் கேட்கிறேன், தயாராக தாங்கள்
பதில் சொல்லட்டும். இல்லையென்றால்,
அரசின் கவனத்தை ஈர்த்தது போதும், உட்காருங்கள்........

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் வேறு ஏதோ
சொல்ல வேண்டுமாம், அவர் முடிக்கட்டும். பிறகு திரு. வரத
ராசன் பேசட்டும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் இன்னும்
முடிக்கவில்லை அவர் முடிக்கட்டும் உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, லேடி
டீச்சர்கள் கைது செய்யப்பட்டு வேலூர் மத்திய சிறைக்கு
எடுத்துச் செல்லும்போது சி. ஆர். சி. பஸ்ஸில் இடையில்
வழியிலேயே நிறுத்தப்பட்டு இரவு முழுவதும் ரோட்டிலேயே
தான் விடப்பட்டிருக்கிறார்கள் என்றும், பெண் போலீஸ்
காரர்கள் கூட அவர்களுடன் இல்லாமல் இருந்தார்கள்
என்றும் கூறப்படுகிறது, அது சம்பந்தமாக ஆசிரியர்கள் இன்று
ஆளுநரைச் சந்தித்து முறையீடு செய்யப்போகிறார்கள் என்றும்
தகவல் வந்தது. அது சம்பந்தமாக அரசு நடவடிக்கைகள்
எடுக்கவேண்டும். பிரச்னைகளுக்கு முடிவு காண முன்வர
வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்..........

திரு. என். வரதராசன்: தலைவர் அவர்களே, நான் 41
ஏற்கனவே மனு கொடுத்திருக்கிறேன். ஆனால் இதை
ஆக மாற்றியிருக்கிறீர்கள். நமது அரசு..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்
கள். திரு. சுப்பு.............

[1979 பிப்ரவரி 26

(எ) திண்டுக்கல் அரசினர் மருத்துவமனையில் மருத்துவர்கள் செவிலியர்களது காலவரையின்றி வேலை நிறுத்தம் குறித்து.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் எப்பொழுது வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறேன். நான் நோட்டீஸும் கொடுத்திருக்கிறேன்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் தான் இந்த நேரத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறேன்......

திரு. க. சுப்பு : என்னுடையதும் அதுதான். தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்து அதன் பிறகு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று இருக்கிறது. அதற்கு முன்னாடியே வந்துவிட்டது. எனக்கும் பேச அவகாசம் தேவை...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இன்று கடைசி நாள் என்பதாலேயே அவரவர்கள் பிரச்னையை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளிப்பதன மூலம் அமைச்சர்களும் அதைத் தெரிந்து கொள்ள முடியும் என்று நினைத்து எல்லோருக்கும் வாய்ப்பளிக்க நினைக்கிறேன். ஆனால், அதையே விவாதிப்பதற்கு எடுத்துக்கொள்கிறார்கள் என்றால் அது சரியல்ல. அதேபோல திரு. சுப்பு அவர்கள் தமது ஒழுங்குப் பிரச்னையில் என்ன முக்கியமானது என்பதைத் தெரிவிக்கட்டும்.

திரு. க. சுப்பு : இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொண்டு மற்றதை நீங்கள் அனுமதித்தால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

மதுரை மாவட்ட தலைமை மருத்துவ மனை திண்டுக்கல்லில் இருக்கிறது. அங்குள்ள டாக்டர்களும் நர்ஸுகளும், மற்ற நான்-மெடிகல் உத்தியோகஸ்தர்களும் இன்டெபனட் ஸ்டிரைக் ஆரம்பித்து இருக்கிறார்கள். ஏற்கனவே அவர்கள் சிட்டிங் ஸ்டிரைக் செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

அங்கே இருக்கிற டி. எம். ஓ. திரு. எஸ்.எம். அப்துல்கான் என்பவர் மீது வேண்டுமென்றே சிலர் சதி செய்து கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர்கள் சொல்லியிருக்கிற கோரிக்கை அதே ஆஸ்பத்திரியில் மகாதேவன் என்ற டாக்டரை சிலபேர் சதி செய்து கைது செய்யச் செய்திருக்கிறார்கள். அங்கே இருப்பவர்களும் அவருக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய பிரான்

என்ற விஜிலென்ஸ் ஆபீசரும், முஸ்தப்பா, சுப்பராஜ் என்ற டாக்டர்களும் ஒன்று சேர்ந்து புகார் கொடுத்தன் பேரில் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அந்த டி.எம். ஓ. பொறுப்பானவர், சிறப்பானவர் என்று பொது மக்களிடத்திலே பெயர் வாங்கியவர். அவர் டி. ஓ. லெட்டர் போட்டு இரண்டு பேரை மாற்றி விட்டார் என்பதற்காக, ஒருவர் ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரியில் பணியாற்றப் போய் விட்டார். அங்கே போன பிறகும் இங்கே பிரைவேட் பிராக்டீஸ் செய்கிறார் என்று தகவல். டி.ஓ. லெட்டர் போட்டு மாற்றினார் என்ற காரணத்திற்காக, அங்குள்ள பொறுப்பற்ற அதிகாரிகள் வேண்டுமென்றே அவரைக் கைது செய்திருக்கிறார்கள். இதை மேல் அதிகாரிகளே விசாரணை செய்திருக்கலாம் விஜிலென்ஸ் ஆபிசர் தேவையில்லை. அந்த விஜிலென்ஸ் விசாரணையில் ஆபிசர்—திரு. பிராங்க் என்பவர் அவரே ஒன்றும் விஜிலென்ஸில் வைக்க வேண்டியவர். அவர் நீங்களாகவே இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர் அல்லர். இதை விஜிலென்ஸ் ஆபீசரே விசாரணை செய்திருந்தால், அந்த கொண்டிருந்தால், எப்படி இதற்கு நடந்ததை தெரிந்து நடக்கிறார்கள் என்பதைப் புரிந்துக் விஜிலென்ஸ் அதிகாரிகள் இப்படிப்பட்ட நிலைமை இந்த இன்டெபனட் கொண்டிருந்தால் இப்படிப்பட்ட ஆகவே இது ஒரு அவசரமான ஸ்டிரைக் ஏற்பட்டிருக்காது. கொண்டு இன்டெபனட் பிரச்னை என்பதைப் புரிந்து மக்கள் தாங்க மாட்டார்கள் ஸ்டிரைக் தொடர்ந்து நடந்தால் ஆஸ்பத்திரி அது, அதனால் நோயாளிகள் அதிகமாக வரும் வேண்டும் என்று இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–30]

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, இதையெல்லாம் நாங்கள் கேட்டு விடுவதோடு முடித்து விடப் போகிறீர்களா, அல்லது இதற்கு மேலே ரிப்ளை உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கத் தயாராக இருந்தால் நானே அதை அவை முன்பு வைத்து இருப்பேன் என்று சொன்ன பிறகும், நீங்கள் எழுந்து சொல்கிறபோது, நான் எண்ணியது என்னவென்றால், நீங்கள் அதைச் சொல்லிவிட்ட காரணத்தால் அரசின் கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டு விட்டது, அவர்கள் அதன் மீது நடவடிக்கை எடுப்பார்கள், அந்த வகையில் என்னுடைய பளுவும் குறைந்தது என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்பி, அதன் மீது எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்கள். அமைச்சர் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறாரா என்று கேட்டுத்தான் நான்

அதை அனுமதிக்க முடியும். நீங்கள் என் பொறுப்பில் விட்டு இருந்தால், அமைச்சரை வலியுறுத்திப் பதில் பெற்று இங்கே வைத்து இருப்பேன். ஆகவே, தாங்கள் ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்பி அவர்களின் கவனத்திற்கு அந்தப் பிரச்னையைக் கொண்டுவருவதோடு நிறுத்தி அமரலாம்.

திரு. என். சங்கரய்யா : திருச்சி சிம்கோ மீட்டர் சம்பந்தமாக........

திரு. மு. அம்பிகாபதி : நான் இன்னும் சொல்லி முடிக்கவில்லையே......

திரு. க. சுப்பு : அமைச்சர் இறுதியாகப் பதில் சொல்லப் போகிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள்தானே சொன்னீர்கள், அமைச்சர் பதில் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை, நான் விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன் என்று.

திரு. க. சுப்பு : அது வேறு பிரச்னை, அமைச்சர் தயாராக இருந்தால் பதில் சொல்லட்டும். அவரை அது குறித்துக் கேட்காமலேயே வேறு பிரச்னைக்குப் போகிறீர்களே?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பதில் கூட சொல்லாவிட்டால் பரவாயில்லை என்று ஒழுங்குப் பிரச்னை என்று கிளப்பி, எல்லாவற்றையும் சொல்லி விட்டீர்கள். இந்த ஒழுங்குப் பிரச்னை எல்லாம் முடிந்த பிறகு, அமைச்சர் அவர்களை நான் கேட்கிறேன்.

(ஊ) கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் குறித்து

திரு. மு. அம்பிகாபதி : தலைவவரர்களே, நான் மன்னார்குடி அரசுக் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு சப்ஜெயிலில் வைத்துள்ளது குறித்து கொடுத்து இருந்தேன். அதை விட சீரியஸ் விஷயம் வேறு என்ன இருக்கிறது இந்த சபையில் விவாதிக்க. ஆகவே, அதை அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடத்தில் பதில் வரவில்லை. வந்தபின் அவையில் வைக்கப்படும்.

(ஆ) சிம்கோ மீட்டர் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் குறித்து—தொடர்ச்சி.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, திருச்சி சிம்கோ மீட்டர் பற்றி மாண்புமிகு அமைச்சர் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 24-ம் தேதி எதிர்கட்சித் தலைவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அரசாங்கம் சிம்கோ நிர்வாகத்தினரைக் கூப்பிட்டு அவர்களோடு அந்தப் பிரச்னை குறித்து விவாதித்ததாகத் தெரிவித்தார்கள். அரசு அதை எப்படித் தீர்ப்பது என்பது குறித்து கலந்து பேசப்பட்டது. அரசாங்கம் அதை நிறைவேற்றுவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி இந்த அவையில் அறிவிப்புச் செய்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் வேறு சில விஷயங்களைச் சேர்த்து சொன்னார்களே தவிர அதைப்பற்றி அரசின் நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு தடவை அந்தப் பிரச்னை கிளப்பப்பட்டு, அதற்குப் பதில் அளிக்கப்பட்டு, அது முடிந்துவிட்டது. அது குறித்து மறுபடியும் கிளப்பி, பதில் கேட்பது, வலியுறுத்துவது என்பது சரியல்ல.

திரு. என். சங்கரய்யா : பதில் கேட்டதற்கு மேல் விளக்கம் தான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அந்தக் கோரிக்கைகளைக் கேட்டவுடனே அவைகளைப் பற்றி நிர்வாகத்தோடு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டு இருக்கிறேன். அவ்வப்போது பேசியதைப் பற்றி இங்கே சொன்னேன். இன்று மாலையும் பேசுவதாக சொன்னேன். அந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி அதை நிர்வாகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்திக்கொண்டு இருக்கிறது என்றும் சொன்னேன். அதைத் தான் இப்போதும் சொல்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சிம்கோ மீட்டர் பிரச்னை பற்றி இங்கே திரு. சங்கரய்யா கிளப்பினார்கள். முதலாளியை அழைத்துப் பேசித் தீர்வு காண்பதாக எதிர்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசினார்கள். அதைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்தத் தொடர் கூட்டம் முடிந்தவுடன் நாம் பொதுக்கூட்டம் நடத்தவேண்டும். பொதுக்கூட்டம் நடத்துவதற்கு காவல் நிலையத்தில் அனுமதி பெறவேண்டும். ஆனால் இப்போது மின்சாரத்துறை அனுமதி பெற்று அதைக்கொண்டு வந்து காண்பித்த பிறகுதான் காவல்துறை

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1979 பிப்ரவரி 26

அனுமதி அளிக்கும் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே மின்சாரத்துறை அமைச்சர் இது குறித்து முடிவு செய்து இருந்தா லும்கூட மின்சாரத் துறையின் அனுமதி தேவையில்லை என்பதை இங்கே விளக்கிச் சொல்ல வேண்டும் என்று நான் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

திரு. தி. சு. நல்லத்தம்பி : தலைவரவர்களே, சென்னையில் இன்றைய தினம் பயங்கரமான கிருமி நோய் இருப்பதாகப் பொதுமக்கள் மத்தியில் பீதி இருப்பதைக் கண்டு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி ஏற்கனவே கேட்கப்பட்டு விட்டது. இது தீர்ந்து போன பிரச்னை, உட் காருங்கள்.

அடுத்து, 41-வது விதியின் கீழ்............

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் சொன்ன விவகாரம் குறித்து, அமைச்சர் அவர்களைக் கேட்பதாகச் சொன் னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏதேனும் விளக்கம் சொல்ல விரும்புகிறீர்களா ?

(ஏ) திண்டுக்கல் அரசினர் மருத்துவ மனையில் மருத்துவர்கள், செவிலியர்கள், காலவரையின்றி வேலை நிறுத்தம் குறித்து— தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, திண்டுக்கல் ஆஸ் பத்திரியில் வேலை நிறுத்தம் சம்பந்தமாக நான் 42-வது விதி யின்கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்கும் சேர்த்து பதில் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் தயாராக இருந்தால் அதற்கும் சேர்த்து பதில் அளிக்கலாம்.

1979 பிப்ரவரி 26]

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, கடந்த 15, 16 தேதிகளில் வடாற்காடு மாவட்டம் ஆரணியில் அரிசனங் களுக்கும் அரிசனங்கள் அல்லாதவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரம் சம்பந்தமாக காவல் துறையினர் அந்த நிகழ்ச்சி யில் சம்பந்தப்படாதவர்களையும் பழிவாங்கும் நோக்கத் தோடு தேடிக் கொண்டிருக்கிறார்கள் ; நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றித் தங்களுக்கு பதில் வந்திருக்கும். அறையிலேயே தள்ளப்பட்ட ஒன்றை மீண் டும் அவையிலே எழுப்பக்கூடாது.

திரு. ப. சந்திரன் : எனக்கு இதுவரையில் பதில் ஒன்றும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்த தீர் மானம் தள்ளப்பட்டுவிட்டது. அந்தத் தகவலும் தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது. அடுத்து, மாண்புமிகு சுகாதார அமைச்சரவர்கள்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 25-ம் தேதி இட்ட கடிதத்தில் லஞ்ச ஒழிப்பு இயக்குநர் தெரிவித்த தகவல்:

1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 24-ம் தேதி அன்று காலை 10-30 மணிக்கு மதுரை மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் எம். எஸ். எம். அப்ஸல்கான், திண்டுக்கல் தலைமை மருத்துவ மனையில் தீர்த்தாம்பட்டி ஊரைச் சேர்ந்த திரு. சுருட்டையன் என்பவரிடமிருந்து காசநோய் உள் நோயாளியாக சேர்க்கப்படுவதற்கு ரூ. 100 (நூறு ரூபாய் மட்டும்) கேட்டு வாங்கியதற்காக திண்டுக்கல்லைச் சேர்ந்த லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் மாவட்ட மருத்துவ அலுவலரைப் பிடித்து கைது செய்ததாகத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். பீனாப்தலின் பரிசோதனையும் இதை உறுதியாக்கியுள்ளது. லஞ்சமாகப் பெற்ற 100 ரூபாய் அவருடைய அலுவலக அறையை ஒட்டிய குளியல் அறையில் இருந்து எடுக்கப்பட்டது. செக்ஷன் இ.பி.கோ. 161 மற்றும் பிரிவு 5(2) அதன் கூட 5(1) (டி)-ல் 1947 லஞ்ச ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட டாக்டர் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேலும் தொடர்ந்து விசாரணையில் இருப்பதாக லஞ்ச ஒழிப்பு இயக் குநர் தெரியப்படுத்தி உள்ளார்.

[திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்] [1979 பிப்ரவரி 26

1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 25-ந் தேதியிட்ட
மருத்துவ, குடும்ப நல இயக்குநர் அவர்களிடமிருந்து வந்த
கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரியப்படுத்தியுள்ளார் :

உதவ் மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்களை தொலை
பேசி மூலமாகப் பேசியதில், மாவட்ட மருத்துவ மனையில் உள்ள
அலுவலர்கள், ஊழியர்கள் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள்
25-ந் தேதி காலை முதல் மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்
களை லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் சரியான முறைப்படி கைது
செய்யவில்லை என்று உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வதாக
தெரிவித்துள்ளார். அன்று மருத்துவர்கள் வெளி நோயாளி
களைப் பார்க்கவில்லை. அவசரப் பிரிவில் ஒரு மருத்துவரும், உள்
நோயாளிகள் பிரிவில் ஒரு மருத்துவரும் பணி புரிகிறார்கள்.
அவசர நோயாளிகளையும் பிரசவ நோயாளிகளையும் கவனிப்
பதில் எவ்வித தடங்கலும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.
மேலும் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26-ந் தேதி அன்று
மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்களை விடுவிக்கவில்லை
என்றால் மேற்படி அலுவலர்கள் ஊழியர்கள் சிறு விடுப்பில்
செல்லப்போவதாகவும், தொடர் உண்ணாவிரதம் இருக்கப்
போவதாகவும் தெரிவித்துள்ளார். வெளியூர்களிலிருந்து டாக்
டர்கள், செவிலியர்கள் கொண்டுவந்து மருத்துவ மனை
நடப்பதற்கு ஆவன செய்துள்ளார்.

மேலும், அந்த மாவட்ட மருத்துவ அலுவலர், நீதிபதி
முன்னால் கொண்டு செல்லப்பட்டு, அங்கே அவர் ஜாமீனில்
விடுதலை செய்யப்பட்டுள்ளார். புலன் விசாரணை நடை
பெறுவதாலும், வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதாலும், இது
பற்றி மேலும் விவாதிக்க வேண்டியதில்லை என்பதால் அவையை
ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஊ) கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் குறித்து—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கல்லூரி ஆசிரிய
யர்கள் போராட்டம் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சரவர்கள்
இந்தக் கூட்டத் தொடரில் கடைசி நாளாக இன்று இருப்ப
தால்—ஒரு அறிக்கை கொடுத்தால் நலமாக இருக்கும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பீ. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : நாங்கள்
நான்கு பேர் அதுபற்றி ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறோம்
அதற்கும் பதில் சொல்லிவிட்டால் நல்லது.

1979 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் சம்பந்தமாக பேச்சு
வார்த்தை நடத்தி, அவர்களுடைய முக்கிய கோரிக்கைகளை
பரிசீலித்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இங்கே மாண்புமிகு
உறுப்பினர்கள் வலியுறுத்தியதை நான் நினைவில் கொண்டு
எந்தவிதமான நிபந்தனையுமின்றி, அவர்களோடு கலந்து பேசி
னேன். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள்
கேட்டபோது கூட, முறிந்துவிட்டது என்று சொன்னபோது,
முறிந்து விட்டது என்று நான் ஏற்றுக்கொள்ள முடியாது; ஆனால்
வெற்றிகரமாக முடிந்துவிட்டது என்று அறிக்கை கொடுக்க
நான் தயாராக இல்லை என்று சொன்னேன். அதற்குக் காரணம்
என்னோடு பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டவர்கள்,
பல்வேறு கருத்துக்களை ஒப்புக் கொண்டு, வெளியிலே இருக்
கிறவர்களைக் கலந்துவிட்டுத்தான் எங்கள் கருத்தை வெளி
யிடுவோம் என்று கூறிச் சென்றார்கள். என்னிடம் பேசிய
வர்கள் விரும்பினால் முடிவை எடுக்கக்கூடிய நிலையில் இல்
லையோ என்ற நிலையை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறது.
அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. என்றா
லும் அன்று பேச்சுவார்த்தையில் நடந்தது என்ன என்பதை
இன்று இறுதிநாள் என்பதால் மாண்புமிகு உறுப்பினர்கள்
தெரிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுவது இயல்புதான்.

[முற்பகல் 10-40]

அதுமட்டுமல்ல. இன்றைக்கு சில இடங்களிலே இந்தப்
போராட்டத்தினுடைய விளைவாக வன்முறை தலைதூக்கி இருக்
கிறது என்பதையும் நான் வேதனையோடு சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். ஆசிரியர்கள் போராட்டம் நடைபெறுகிற
போது வன்முறைச் சம்பவம் ஏற்படுமேயானால் இந்த நாட்
டிற்கு வேறு விடிவுகாலமே இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். மற்றவர்களுக்கு நல்லவைகளைக் கற்றுத் தர
வேண்டிய ஆசிரியர்களுக்கு யார் போய் வழிகாட்டுவது என்று
தெரியவில்லை. ஆகவே ஆசிரியப் பெருமக்கள் தங்களுடைய
பொறுப்பினையும் கடமையையும் உணர்ந்து அதற்குரிய செயல்
களிலே இறங்கவேண்டும். என்னிடத்திலே பேச்சுவார்த்தை
நடத்தப்பட்ட பிறகு அதன் முடிவினை பாதிக்கப்பட்ட ஆசிரியர்
களிடத்திலேசென்று சொல்லி அவர்களுடைய எண்ணம் என்ன என்
பதையும் உணர்ந்து அதற்குப் பிறகு அவர்கள் நடவடிக்கைகளிலே
ஈடுபடுவார்களேயானால் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக
இருக்கிறேன். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை என்ன
வென்றால் பேச்சுவார்த்தையின்போது பேசிய அத்தனையும்
முழுமையாக ஆசிரியர்கள் மத்தியிலே சென்று அவர்கள் சொல்ல
வில்லை என்கிற சந்தேகம்தான் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.
மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் இங்கே வலியுறுத்தியது
இரண்டு பிரச்சினைகள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.
ஒன்று பணிப் பாதுகாப்பு, மற்றொன்று நேரடி ஊதியம்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 பிப்ரவரி 26

பி.யூ.சி. எடுக்கப்பட்டுவிட்ட பிறகு அதனால் ஆசிரியர்கள் வேலை இழக்கின்ற போது அவர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டும் என்பதே பணிப்பாதுகாப்பு. அப்படிப்பட்ட பணிப் பாதுகாப்பு 31–3–1977 தேதிக்கு முன்னதாக வந்த ஆசிரியர்களுக்கு மட்டும்தான் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு வந்த ஆசிரியர்களுக்கு இல்லை. அவர்களுக்கும் தரவேண்டும் என்கிற கருத்தை அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நீங்களும் வலியுறுத்து கிறீர்கள். அந்த 31–3–1977 வரைக்கும் சேர்ந்த ஆசிரி யர்கள் மட்டுமின்றி இன்று வரைக்கும் சேர்ந்த ஆசிரியர் களுக்கும் அந்தப் பணிபாதுகாப்பு தர அரசு ஒத்துக் கொண்டுள்ளது என்பதை மட்டும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதற்குப் பிறகு 10 ஏ 1 ஆக வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு தர வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் இவர்கள் மட்டுமல்ல, கல்லூரியிலே மட்டுமல்ல, உயர்நிலைப்பள்ளி களிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நாங்கள் பணிப் பாதுகாப்பு தருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம். அதற்காக இப்போது தேர்வாணைக்குழுவோடு பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு தருவதற்கு எந்த வகையிலே முடியுமோ அந்த வகையிலே நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் அவர்கள் தருகின்ற செய்திகள், அல்லது வெளியீடுகளைப் பார்க் கின்றபோது அரசின் மீதே ஒரு பலத்த குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சர் கமிஷன் மூலம் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு உடன டியாக வேலை தந்தாகவேண்டும். அதைத் தடுத்து நிறுத்து கிற அதிகாரம் அரசுக்கும் இல்லை. அவர்களுக்கும் இல்லை. ஆகவே அவர்கள் வந்து சேர்வதால் வேலை இழந்த ஆசிரியர் களுக்கு வேலை தர இயலாது.

அதுமட்டுமல்ல. மேல் நிலைப்பள்ளியிலே பணியாற்றிய பத்து ஆசிரியர்களுக்கும் வேலை தரவேண்டும் என்று சொன் னார்கள். அப்படி அவர்களுக்கு வேலை தருவதானால் 10 ஏ 1 என்ற அளவிலே வேலை செய்து பிறகு வேலை இழந்த 10 பேர்களுக்கு வேலை தர இயலாது என்று சொன்னபோது அதனால் பரவாயில்லை இவர்களுக்குத் தந்தால் போதும் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட கருத்தை வலியுறுத்தியவர் கள்தான் இன்றைக்கு அரசின் மீது ஒரு மிகப்பெரிய குற்றச் சாட்டைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க் கின்ற போது மிகுந்த வேதனையாக இருக்கிறது. பேச்சு வார்த்தைக்கு வருகின்ற போது எதை நினைவிலே வைத்துக்

1979 பிப்ரவரி 26] [திரு. செ. அரங்கநாயகம்]

கொண்டு பேச்சுவார்த்தையிலே ஈடுபடுகிறார்கள் என்று தெரிய வில்லை, அதிலும் படித்த ஆசிரியப் பெருமக்கள் இப்படி இருக்கிறார்களே என்பதை எண்ணிப் பார்க்கும்போது மிகுந்த வருத்தத்தோடு இதனைச் சொல்கிறேன்.

அடுத்து நேரடி ஊதியம். அவர்களுக்குத் தர வேண்டிய சம்பளத்தை அவர்கள் கணக்கு வைத்திருக்கின்ற ஒரு பேங்கிற்கு செக் மூலமாக அனுப்பி அங்கே வரவு வைக்க வேண்டும். அதுவே மிகச் சிறந்த வழி என்ற அவர்கள் சொன்னதன் பேரில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்று சொல்லப்பட்டிக்கிறது. ஆனால் அவர்கள் அது குறித்து எந்தவிதமான பேச்சுவார்த்தை யும் நடக்காததைப் போலச் சொல்லிக் கொண்டிருப்பது உண்மையிலேயே பேச்சுவார்த்தை என்பதற்கே ஒரு இழிவை ஒரு அவமதிப்பினை ஏற்படுத்தியதுபோல் தான் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் என்னோடு 4 மணி நேரம்பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச் சினைகள் குறித்து முடிவுகளைக் கண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் அவைகளை மற்ற ஆசிரியப் பெரு மக்களிடம் எடுத்துச் சொல்லாமல் மீண்டும் இந்தப் போராட்டத் திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்றுதான் தெரிகிறது. இதனால் மாணவர்களின் படிப்பு பாழாக்கிக்கொண்டு வருகிறது. மாண வர்களின் கல்வி பாதிக்காத வகையிலே ஆசிரியர்கள் அரசோடு ஒத்துழைக்கவேண்டும். ஆசிரியர்களுடைய போராட்டம் வெற்றி கரமாக முடியவேண்டும் என்ற மாண்புமிகு உறுப்பினர் களுடைய உணர்வுக்கேற்ப, அதனை நிறைவேற்ற ஒத்து ழைப்பு தர வேண்டிய கட்டத்திலே இருப்பவர்கள் ஆசிரியப் பெருமக்கள்தான். அரசைப் பொறுத்த வரையில் தன்னால் ஆனதை தன்னால் முடிந்ததைச் செய்திருக்கிறது என்றும் இனிமேலும் செய்யும் என்பதையும் இங்கே சொல்லி இந்த அளவோடு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(ஏ) திண்டுக்கல் அரசினர் மருத்துவ மனை மருத்துவர்கள், செவலியர்களது காலவரையின்று வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து — தொடர்ச்சி.

திரு கே. சட்டுசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர். இன்று சட்ட மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கொண்டுவந்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதை மன்றம் கேட்டது. லஞ்சம் ஒழிப்பு அதிகாரிமூலம் கைது செய்யப்பட்டிருக்கிறார் அங்கிருக் கக்கூடிய டாக்டர். புலன் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. பொறுப்புள்ள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருப்பதாக

தகவல் கோரல்

திரு. என். வரதராஜன் : எனது தொகுதி திண்டுக்கல் ஆகவே அங்கு நடந்த சம்பவம்பற்றி சில விஷயங்களைச் சொல்ல வேண்டும். இந்தச் சபையில் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளிப்பதற்கு முன்பாக எனது கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன். அங்கு இரண்டு கோஷ்டிகள் டாக்டர்களிடையே செயல்படுவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே லஞ்சமா இல்லையா என்ற பிரச்னை உட்பட அனைத்தையும் பரிசீலிக்க உடனடியாக நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் திண்டுக்கல் நகரத்திற்குச் செல்வது சரியாக இருக் கும் என்று கூறவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் இதுபற்றி பாயின்ட் ஆப் ஆர்டர் மூலம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். ஆகவே இதில் மேலும் விவாதம் நடத்து வது என்பது பொருத்தமானதல்ல. எனவே இதை இத்தோடு விட்டுவிடலாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கநாதன் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அதிகாரிகள் ஆசிரியர்களை நியமிப்பதில் குற்றச்சாட்டுகள் வந்தபோது மாற்றங்கள் மாத்திரம் செய்யப்பட்டன. ஆனால், நேற்று திண்டுக்கல்லில் மருத்துவரை உடனடியாக கைது செய்திருக்கிறார்கள் என்று சொன்னதற்கு, இரண்டுக்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டை அவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒரு குற்றச் சாட்டு வந்து அவரை வேறு ஊருக்கு மாற்றியிருக்கிறார்கள். அந்த விசாரணை அது விசாரணைக்கு விடப்பட்டிருக்கிறது. செய்வது, டிஸ்மிஸ் முடித்ததற்குப் பிறகு அவரை சஸ்பெண்ட் செய்வது, வழக்கு போடுவது இவை தொடர்ந்து நடைபெறுகிற நிகழ்ச்சி. இது விஜிலன்ஸ் என்று சொல்லப்படுகிற குற்றப் புலனாய்வுத் துறை நேரடியாக இருந்து கையும் களவுமாக ஒரு நோட்டைக் கொடுக்கிறபோது அல்லது பணம் கொடுக்கிறபோது அவர்களே இருந்து பார்த்து கைது செய்வது. இது போல் ஒரு நிகழ்ச்சி பத்து நாட்களுக்கு முன்பு எங்கள் சுற்றுலாப் பொருட் காட்சியில் ஒரு என்ஜினியர் அங் கிருந்த அரங்கு நடத்துபவரிடம் அப்படி ஒரு தொகையைப் பெற்ற போது கையும் களவுமாக பிடிபட்டு கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். இதுதான் இரண்டுக்கும் உள்ள வேறுபாடு.

திரு. கே. கந்தசாமி : அதிகாரிகளைக் கையும் களவுமாகப் பிடித்து நடவடிக்கை எடுத்திருக்கிறபோது அதற்கு எதிராக கைது செய்தது தவறு, லஞ்சம் வாங்குவதை நான் ஆதரிக்கிறேன் என்று மக்களுக்குத் தெரியப்படுத்துகிற முறையில் போராட்டம் ஒன்றை

[திரு. கே. கந்தசாமி] [1979 பிப்ரவரி 26

எமெஸன்ஷியல் சர்வீஸிலுள்ள மருத்துவ அதிகாரிகள் நடத்து கிறார்கள் என்றால் அப்படியானால் பொது மக்களின் நிலை என்ன? அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வரவேண்டும். ஆகவே இதில் அரசின் நிலை என்ன?

[முற்பகல் 10-50]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையை என்னுடைய பதிலிலே கொண்டு வரலாம், எடுத்துக்கொண்டு பதில் கூறலாம் என்று இருந்தேன். இப்போது இந்தப் பிரச்னையை உருவாக்கி விட்டிருக்கிறார்கள் என்றாலும், மாண்புமிகு கந்தசாமி அவர்களுடைய கேள்விக்குத் தகுந்த விடை, அளிக்க வேண்டியது என்னுடைய பொறுப்பாகும் என்று நான் உணர்ந்திருக்கிற நிலையில், இந்த அவைக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். நியாய முறைப்படி எப்படி வழக்குகளை நடத்துவது, குற்றங்கள் நடைபெறுவதைக் கண்டுபிடிப்பது, எந்த வகையில் அதன்மீது நடவடிக்கை மேற்கொள்வது என்பதை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களுடைய பதிலிலிருந்து ஓரளவு தெளிவாக்கப் பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அந்த முறையில் பார்க்கும் போது, தவறு செய்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சரிதானா, அதிகாரிகள் நடவடிக்கைகளில் தவறியிருக்கின்றார்களா, அல்லது குற்றஞ்சாட்டப்படுபவர்கள் உண்மையில் குற்றவாளிதானா என்பதை அறிந்து தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு அதிகாரிகள் மீது தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலை வரும்போது, எந்த முறையில் அவர்கள் மீது சட்ட முறைப்படி நடவடிக்கை எடுக்க முடியுமோ அதைச் செய்வோம் என்றும் அதைப் போலவே நியாய முறைப்படி நடந்து முடிந்து விட்டிருக்கின்ற நிலையில் திடீரென்று இங்கு குறிப்பிட்டபடி, முக்கியத்துவமான, பொறுப்புள்ள பதவியில் இருக்கின்ற மருத்துவர்கள் உண்ணா நோன்பு இருப்பது, வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது போன்றவை நாட்டில் ஏற்படுவதற்கு அனுமதிக்கப்படுமானால், இந்த நாட்டில் மக்களுக்கு வாழ்க்கை உரிமை தரவேண்டிய அரசு இருக்கின்ற வாய்ப்பு-வசதிக்குள் இருந்து செயல்படுவதற்கு தகுதியில்லை என்று சொல்ல வேண்டிய நிலையை இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, நிச்சயமாக கண்டிப்பாக இப்படிப்பட்ட தவறுகளை வேண்டுமென்றே செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அரசின் சார்பாக உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதோடு எனக்குக் காலையில் வந்த செய்தி, அங்குள்ள முஸ்லீம் பெருங்குடி மக்கள் அவர் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர் என்பதால், ஒரு ஊர்வலம் எடுப்போம் என்று முயற்சி செய்தார்கள் என்றும்

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தகவல் வந்திருக்கிறது. அது இப்படிப்பட்ட நிலையில் எங்கு கொண்டு போய்விடும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் சிந்திப்பதற்கும், அதைப்பற்றி நல்லதொரு வாய்ப்பு தரப்பட்டு இருக்கிறது என்கின்ற நிலையில் உங்கள் முன் வைத்து, மீண்டும் உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் இறங்குபவர்கள் மீது அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் ஆண்டிப்பட்டி தொகுதியில் ஒரு யூனியனில் ஆசிரியர் நியமனம்பற்றி ஒரு புகாரைச் சொன்னார். அதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரித்துக் கொண்டு இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்புகள்.

(அ) மழையினால் புழலேரி ஆயக்கட்டின் கீழுள்ள நெற் பயிர்கள் பாதிக்கப்பெற்றதினால் விவசாயிகள் கடன்களைத் திரும்பத் தர இயலாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம். தீர்மானம் கொடுத்த திரு. மாரிமுத்து அவர்கள் இருக்கையில் இல்லாததால் இதை வேறு யாராவது எழுப்பினால் அமைச்சர் அவர்களே இதற்கான பதில் அறிக்கையைப் படிக்கலாம்.

திரு. துரை முத்துசாமி : திரு. மாரிமுத்து அவர்கள் இல்லாததால் நான் அதை வாசிக்கிறேன். "செங்கல்பட்டு மாவட்டம், புழல் ஏரி ஆயக்கட்டின் கீழ் உள்ள நெற் பயிர்கள் கடந்த மழையினால் பெருவாரியாக பாதிக்கப்பெற்றதின் காரணமாக விவசாயிகள், கூட்டுறவுச் சங்க கடன்களைத் திருப்பித் தர இயலாது இருப்பதைக் குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தீர்மானத்தைத் தந்த திரு. மாரிமுத்து அவர்கள் இருக்கையில் இல்லை என்றால் அதற்காக நீங்கள் அதைப் படிக்க வேண்டும் என்றில்லை... மாரிமுத்து அவர்கள் சார்பாக இதை எழுப்புகிறேன் என்று சொல்லிவிட்டாலே போதும், தீர்மானம் முழுவதையும் வாசிக்க வேண்டும் என்பதில்லை.

The Hon. Thiru S. RAMACHANDRAN ; Mr. Deputy Speaker Sir, Under rul 41, sub-clause (6), if on a matter being taken up a member in whose name it stands is absent, the Speaker at the request of any member may direct that the statement on the matter may be made. That is all.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நானும் அதையே தான் சொன்னேன். அதனால்தான் வாசிக்கக் கூடாது என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் வகையிலே அறிக்கையைப் படிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நாம் கடைபிடிக்கின்ற மரபு என்னவென்று சொன்னால், 41-வது விதியின் கீழ் அந்தத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கின்ற அங்கத்தினர் அந்தத் தீர்மானத்தை படிப்பதுதான் மரபு. ஆகவே, அந்த மரபை மாற்றுகின்ற முறையிலே இல்லாமல், அந்தத் தீர்மானத்தை அங்கத்தினர் வாசிப்பதுதான் முறை..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 41-வது விதியின்கீழ் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தது காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து. அவர் இப்போது அவையிலே இல்லாத காரணத்தால், அவர் பெயரிலே உள்ளதை ஒருவர் வற்புறுத்தினால், அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். அவர் அந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தால் வாசிக்கச் சொல்லியிருப்பேன். ஆகவே அனுமதி மறுக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைக் கோளாறுகளால் பயிர் பாதிப்பு ஏற்படும்போதெல்லாம், எந்தக் குறுகிய கால விவசாயக் கடன்கள் மூலம் பயிரிடப் பெற்றனவோ அந்தக் குறுகியக் காலக் கடன்கள் நடப்பாண்டில் ஏற்படுகின்ற கெடு தேதியன்று வசூலிக்கப்படுவதில்லை. வருவாய்த்துறை அதிகாரிகள் சராசரி மகசூல் 6 அணா அல்லது அதற்கும் குறைவாக உள்ளது என்று விகிதாச்சார விளைவு அடிப்படையில் வழங்குகின்ற சான்றிதழ்களின் அடிப்படையில், குறுகிய காலக் கடன்கள் அடுத்த ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் மத்திய காலக் கடன்களாக மாற்றப்படுகின்றன.

புழுலேரி பகுதியில் நாரவாரிக்குப்பம், கொடுங்காயூர், ஆண்டியார்குப்பம் ஆகிய மூன்று கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் உள்ளன. இந்த மூன்று சங்கங்களில் நாரவாரிக்குப்பம் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் மட்டுமே (7 பெரிய விவசாயிகளுக்கும் 15 சிறு விவசாயிகளுக்கும் சேர்ந்து) மொத்தம் 22 உறுப்பினர்களுக்கு அறுபத்தி நான்காயிரம் ரூபாய் கடன் வழங்கியுள்ளது. இக்கடன்களைத் திரும்பச் செலுத்தும் கெடுநாள் 28—2—1979 ஆகும். இந்தப் பகுதியில் சராசரி மகசூல் ஆறு அணா அல்லது அதற்கும் குறைவாக உள்ளது என்று விகிதாச்சார விளைவு அடிப்படையில் சான்றிதழ்கள் வருவாய்த்துறை அதிகாரிகளால் வழங்கப்படவில்லை. இருப்பினும் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி வருவாய்த் துறை அதிகாரிகள் மூலம் நாரவாரிக்குப்பம் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் கடன் விளைவிக்கப்பெற்ற பயிர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்று அறியத்தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. வருவாய்த்துறை அதிகாரிகள் சராசரி மகசூல் ஆறு அணா அல்லது அதற்கும் குறைவாக உள்ளது என்று சான்றிதழ்கள் வழங்கினால் அதனடிப்படையில் குறுகியக் காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற தக்க நடவடிக்கை எடுக்கப் பெறும்.

(ஆ) காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்னையில் தஞ்சாவூர் பகுதிகளில் எழுந்துள்ள பதட்ட நிலைமை குறித்து.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் நடந்த பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடியாததற்கு தமிழ்நாடு அரசுதான் காரணம் என்று கேரள நீர்ப்பாசன அமைச்சர் கேரள சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்ததாகக் கூறப்படும் காரணத்தால், தஞ்சாவூர் பகுதிகளில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து'' நான் 41-வது விதியின் கீழ் கொடுத்துள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[முற்பகல் 11—00]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, பிப்ரவரி திங்கள் 23-ம் நாள் ''இந்து'' பத்திரிக்கையில் வந்த செய்தி ஒன்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதில் கேரள மாநில அரசின் தொழிலாளர் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்

அவர்கள் 22—2—1979அன்று கேரள சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு அரசு 1976-ல் தமிழ்நாடு, கேரள, கருநாடக மாநிலங்களுக்கிடையே காவிரிப் பிரச்சினையில் ஏற்பட்ட உடன்பாட்டினை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகக் கூறியதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் உண்மை நிலையைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட விரும்புகிறேன் :—

1976ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25, 26-ம் நாள், மத்திய விவசாய மற்றும் பாசன அமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாநிலங்களுக்கிடையே காவிரி பிரச்னைபற்றி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அப்பொழுது தமிழ்நாடு, குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் இருந்தது. அப்போதைய ஆளுநர் தமிழ்நாட்டின் சார்பாக பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டார். பின்னர், மத்திய விவசாய அமைச்சரிடமிருந்து ''கருநாடக, கேரள, தமிழக மாநிலங்களால் ஒப்புக் கொள்ளப் பட்டு முடிவு பெற்ற உடன்படிக்கை'' என்று குறிப்பிட்ட வரைவு அடங்கிய கடிதம் ஒன்று, அப்போதைய ஆளுநருக்கு வந்தது. பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டவர்கள் எவராலும் இந்த அறிக்கையில் கையொப்பமிடப்படவில்லை. அப்போதைய தமிழ்நாடு ஆளுநரே இப்படிப்பட்ட ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதில் கருத்துவேற்றுமை கொண்டிருந்ததாகத்தெரியவருகிறது.

2. தமிழ்நாடு, மத்திய அரசை காவிரி நீர்ப் பிரச்சினையில் தீர்வு காண, ''நடுவர் குழு'' ஒன்று நிறுவும்படி 1971-ல் வற்புறுத்தி வந்துள்ளது என்பதை இந்த அவையின் கவனத்திற்கு இச்சமயத்தில் கொண்டுவர கடமைப்பட்டுள்ளேன். அப்பொழுது முன்னாள் பிரதம அமைச்சர், ''மைசூரில் மக்களாட்சி இல்லாதபோது மைசூர் அரசைக் கட்டுப்படுத்தும் எந்த நடவடிக்கை எடுப்பதும் உசிதமல்ல'' என்று அப்போதைய தமிழ் நாடு முதலமைச்சருக்கு எழுதியிருந்தார். மேலும் 1971-ல் உச்ச நீதி மன்றத்தில் இப்பிரச்னை குறித்த வழக்கில் தாக்கல் செய்த எழுத்து மூல வாக்குமூலத்தில் மத்திய அரசு கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருந்தது.

நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகள் ''இந்திய அரசியல் சட்ட 262-விதிக்குட்பட்டும், சட்டத்திற்கு அதாவது மாநிலங்களுக் கிடையேயான நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினைகள் சட்டம், 1956 (Inter-State Water Disputes Act, 1956)-ன் படியும் பாராளுமன்ற ஜனநாயக முறையில் அரசியலமைப்புச் சட்டப்படி அமைக்கப் பட்ட மாநில அரசுக்களுக்கிடையே, பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும், அவ்விதப் பேச்சு வார்த்தைகள் இந்திய அரசியல் சட்டம் 356-ஆவது விதியின்கீழ் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களுக்கிடையே நடத்தக்

கூடாது, நடத்தவும் முடியாது என்று கூறப்பட்டது. கருநாடக அரசு உச்ச நீதி மன்றத்தில் அப்பொழுது தாக்கல் செய்த தங்களது எழுத்துமூல வாக்குமூலத்திலும் மேற்கண்ட கருத்தையே கொண்டிருந்தது. எனவே, மத்திய அரசும், கருநாடக அரசும் கொண்டிருந்த கருத்தின் அடிப்படையில் எடுத்துக்கொண்டாலும், குடியரசுத் தலைவரின் ஆட்சியில் இந்த மாநிலம் இருந்தபோது இது போன்ற பிரச்சினையில் தமிழ்நாடு அரசை உடன்படிக் கைக்கு உட்படுத்துவது முறையாகாது.

3. இந்த அரசு, 24-12-1977-ல் நமது முதலமைச்சர் அவர்களால் மத்திய விவசாய மற்றும் பாசன அமைச்சருக்கு எழுதிய கடிதத்தின் மூலம் மத்திய அரசுக்கு இவ்விவரங்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. பின்னர் 5-8-1978, 3-9-1978 ஆகிய தேதிகளில் டில்லியிலும் 9-10-1978-ல் பெங்களூரிலும் முதலமைச்சர்கள் மட்டத்தில் நடந்த பேச்சு வார்த்தைகளில் காவிரி நீர் பங்கீடு முறைகளைப் பற்றிய ஓர் உடன்படிக்கை 1976 ஆகஸ்டில் இருந்தது என்று கூறுவது சரியானதல்ல என்று, இக்கருத்துக்களின் அடிப்படையில் நமது முதலமைச்சர் வலியுறுத்தியிருக்கிறார்.

1. தகவல் கோரல் — தொடர்ச்சி.

(ஏ) டெல்லியில் பிரதமருக்கும் மற்றவர்களுக்கும் விவசாயம் சம்பந்தமாக முதலமைச்சர்கள் அளித்த மகஜர் குறித்து—

திரு. சோ. அழகர்சாமி: பாயின்ட் ஆப் ஆர்டர். பத்திரிகைகளில் முக்கியமான ஒரு செய்தி வந்திருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விவசாய சம்மந்தமான விஷயங்கள் பற்றியும் மற்ற விஷயங்கள் பற்றியும் விவாதிப்பதற்காக டில்லி சென்று வந்திருக்கிறார்கள். விவசாயம் சம்பந்தமாக 12 முதலமைச்சர்கள் கையெழுத்திட்டு பிரதமர், துணைப் பிரதமர், விவசாயத் துறை அமைச்சர் ஆகியவர்களிடம் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய கடனுக்கு, விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய கடனுக்கான வட்டியை 11 சத விகிதத்திலிருந்து 6 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும், நலிந்த ஆலைகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் போல் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத விவசாயிகளுக்கும்

கடன் கொடுக்க வேண்டுமென்பது போன்ற விஷயங்களை
உள்ளடக்கி ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு
கையெழுத்துப் போட்ட முதலமைச்சர்களின் பெயர்களிலே நம்
முடைய முதலமைச்சர் அவர்களின் பெயரைக் காணோம்.
முதலமைச்சர் அவர்கள் ஏன் அதிலே கையெழுத்திடவில்லை.
அது சம்மந்தமான கூட்டத்திலே கலந்து கொண்டார்களா என்
பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள்
அதிலே கலந்து கொண்டார்களா இல்லையா, 12 பேர்கள்
கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே
செய்தி போடப்பட்டு இருப்பதிலே இது விடப்பட்டுவிட்டதா?
அவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்கள் இங்கே இருக்கும்
பொழுது சொல்ல மறுப்பது ஏன்? சபாநாயகர் தான் தீர்ப்பு
அளிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் முடிவு செய்
திருக்கிறபடி எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர்
அவர்களும் அதற்குப் பிறகு நானும் பேச வேண்டியிருப்பதால்
இந்தப் பிரச்சினைகள் பற்றியெல்லாம் அதிலே பேசலாம் என்று
கருதினேன். இருந்தாலும் அந்த நிலை உருவாக்கப்பட்டதனால்
நான் பதில் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன். அந்தக்
கடிதம் அவர்களுக்கு அனுப்பியது— கலந்துகொள்ளவில்லை என்
பதையும் எங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்பதையும்
ஆனால் எங்கள் கொள்கை என்ன என்பதையும் விருப்பம் என்ன
என்பதையும் விவசாயிகள் சார்பாக நாங்கள் அங்கே விவாதத்
திலே எடுத்து உரைத்து இருக்கிறோம் என்பதை மட்டும் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

திரு துரை முத்துசாமி : தலைவர் அவர்களே,
20 ஆம் தேதி என்னுடைய தொகுதியிலே வெலிங்டன் ரிசர்வ்
வாயரிலிருந்து 28 ஆயிரம் ஏக்கர் தண்ணீர் பாயக்கூடிய பகுதி
யிலே தண்ணீர் தீர்வையை 50 ரூபாயிலிருந்து 90 ரூபாயாக
உயர்த்தியிருப்பது பற்றி நான் கவன ஈர்ப்பு கொடுத்திருந்
தேன். அதை எடுத்துக் கொண்டார்களா இல்லைய என்று
தெரியவில்லை. அதனுடைய நிலைமை என்ன என்பதைத்
தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றி
அறையிலே வந்து கேளுங்கள்.

4. அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும்
தீர்மானம், அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்
கள் ஆகியவை மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து
அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும்
தீர்மானமும் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்
களும் விவாதம்—தொடர்ச்சி.

திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்
இந்த அமைச்சரவையின் மீது அளிக்கப்பட்டுள்ள நம்பிக்கை
யின்மைத் தீர்மானத்தை ஆதரித்தும் இந்திய மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா கட்சி,
முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளின் சார்பில் தரப்பட்டுள்ள
கண்டனத் தீர்மானங்களை ஆதரித்தும் என்னுடைய கருத்துக்
களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு அவையிலே, நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத்
தீர்மானம் கொண்டு வருவது என்பது ஜனநாயக முறையில்
அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் நம்முடைய அமைச்சர்
களிலே ஒருவர் பிப்ரவரி 24 ஆம் தேதி சென்னையிலே பேசிய
தாக 25 ஆம் தேதி பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது.
வேளாண்மைத்துறை அமைச்சருடைய பேச்சு.

''எப்படியாவது அ. இ. அண்ணா தி.மு.க. ஆட்சியை
கவிழ்த்துவிட வேண்டும் என்று கருணாநிதி துடிக்கிறார். எங்
கள் மீது குற்றச்சாட்டு இருந்தால் கருணாநிதி கூறட்டும்.
ஜனநாயக முறைப்படி நடக்கட்டும். அதை விட்டுவிட்டு மக்கள்
வரிப்பணத்தை பாழாக்கும் நோக்கத்துடன் 6 மாதத்துக்கு
ஒரு முறை வீதம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு
வருகிறார். சட்டமன்றம் நடைபெறும்போது ஒரு
மணிக்கு 4 ஆயிரம் செலவாகிறது. நம்பிக்கையில்லாத் தீர்
மானம் கொண்டு வந்து பல மணி நேரத்தை வீணாக்குவதன்
மூலம், மக்கள் வரிப்பணத்தைப் பாழாக்குகிறார் கருணாநிதி''
என்று கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட வகையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும்
கண்டனத் தீர்மானங்களையும் கொண்டுவருவது எந்த
விதத்தில் ஜனநாயக முறைக்கு மாறானது என்பதை என்
னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தத் தீர்மானங்களை
கொண்டு வந்த கட்சித் தலைவர்களாலும் புரிந்துகொள்ள
முடியவில்லை. பாராளுமன்றத்திலே பல ஆண்டுகள் அனுபவம்

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 29

பெற்ற முன்னவர் அவர்களாலும் புரிந்துகொள்ளமுடியாது
என்றே நான் நம்புகிறேன். ஒரு மணிக்கு '4 ஆயிரம்
ரூபாய் செலவாகிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானம்
கொண்டு வரலாமா என்று கேட்கிறார். ஆனால் பல விஷயங்
களைப்பற்றி பிரச்சினைகள் எழுப்பப்பட்டபோது எல்லாம்
நம்முடைய முதலமைச்சர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரு
கிற நேரத்திலே அவைகளைப்பற்றியெல்லாம் விளக்குகிறேன்
என்று குறிப்பிட்டு பல விஷயங்களை இந்த மன்றத்தின்
மூலம் நாட்டுமக்களுக்கு விளக்க இந்த நம்பிக்கையில்லாத்
தீர்மானத்தை, கண்டனத் தீர்மானங்களைப் பயன்படுத்திக்
கொள்ளப் போகிறேன் என்று கூறியிருக்கிறார். எனவே நாலா
யிரம் வீண் செலவு அல்ல, நல்ல செலவு தான், நல்ல விவாதங்
களை மேற்கொள்வதற்காக அமைகின்ற செலவுதான்
என்பதை முதலிலே நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டு
இருக்கிறேன்.

(முற்பகல் 11–10)

ஒரு தீர்மானம் அவையிலே விவாதிக்கப்படுகின்ற நேரத்
தில் அது பணத்தை பாழாக்குகின்ற விஷயம், ஜனநாயகத்
திற்கு முரணானது என்று ஒரு அமைச்சர் வெளியிலே பேசுவது
அவையின் உரிமையைக் கூட பாதிக்கக்கூடிய ஒன்றாகும்.
நான் அதற்காக உரிமைப்பிரச்சினை எதையும் இங்கே
எழுப்பப் போவதில்லை. இருந்தாலும் அவையிலே உள்ள
உறுப்பினர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வர
வேண்டுமென்றுதான் எடுத்துச் சொன்னேன்.

இந்த அரசின்மீது ஏற்கனவே ஒருமுறை திராவிட முன்னேற்
றக் கழகத்தின் சார்பில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அளிக்கப்
பட்டு விவாதிக்கப்பட்டது. அப்பொழுது நான் மிகத் தெளி
வாகக் குறிப்பிட்டேன், உங்கள் மீது நம்பிக்கையில்லை,
உடனடியாக ராஜினாமா செய்து விடுங்கள் என்று உங்களை
அச்சுறுத்துவதற்காகவோ, உங்களுக்கு அறிவுரை கூறுவதற்கா
கவோ இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை என்றும்,
இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பயன்படுத்திக்கொண்டு,
இருக்கின்ற பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அரசு
தான் செல்லுகின்ற போக்கிலேயிருந்து தன்னை மாற்
றிக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும் இந்தத் தீர்மானம்
பயன்படும். அதற்காகவே இந்தத் தீர்மானத்தை நாங்கள்
கொண்டு வந்திருக்கிறோம், இல்லாவிட்டால் ஆறு மாத
காலத்திற்குள்ளாக இந்த அரசு பதவியிழக்க வேண்டுமென்ற
அடிப்படையிலே நாங்கள் நிச்சயமாகத் தீர்மானத்தைக் கொண்டு
வந்திருக்க மாட்டோம் என்று மிகத் தெளிவாக நான் குறிப்பிட்
டிருக்கின்றேன்.

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

அதற்குப்பிறகு, இந்த ஆட்சி அமைந்த பிறகு ஏறக்குறைய
இரண்டாடுகளை எட்டிப்பிடிக்கின்ற அளவிற்கு நடைபெற்
றிருக்கிறது. இந்த இரண்டாண்டுக் காலத்திற்குள் தமிழ
கத்திலே நடைபெற்றிருக்கின்ற பல்வேறு சம்பவங்களைச் சுட்டிக்
காட்டி, இதன்காரணமாக இந்த அரசின்மீது நம்பிக்கையில்லை,
திருத்தப் பார்த்தோம் முதன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்
போது, ஆனால் முயன்று முயன்று பார்தோம், திருத்த
முடியவில்லை, எனவே இப்பொழுது நாங்கள் கண்டனத் தீர்மானங்
களையும், நம்பிக்கையில்லாத் தீர்மானங்களையும் இந்த அரசின்
மீது அளித்திருக்கிறோம் என்று நான் திட்டவட்டமாகத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் நேரத்திற்கு முன்பு, இன்றைய முதலமைச்சரவர்கள்
பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினார்கள். அதிலே
மிக முக்கியமான ஒரு வாக்குறுதி, அவரது கைப்படவே
எழுதிய கட்டுரையாகத் தென்னகம் பத்திரிகையில், ஆனந்த
விகடன் பத்திரிகையில் அழகாக வெளியிடப்பட்டது.
அதிலே அவர்கள் குறிப்பிட்டார்கள்:

''நான்கைந்து வாரங்களுக்கு முன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சித் தலைவரும் எனது மரியாதைக்குரியவருமான பி, ராம
மூர்த்தி அவர்கள் அ.தி.மு.க. வுக்கு என்ன கொள்கை என்று
தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டபோது நான் சொன்ன
சிலவற்றில் விவசாயிகளுக்குத் தரப்பட வேண்டிய வருவாய்
உத்திரவாதத்தைப் பற்றியும் சொன்னேன். நான் சொன்னது,
சொல்வது இதுதான். வருடத்தில் ஒரு சில மாதங்களே
வேலை. அதறகுப் பிறகு எங்கோ, எப்படியோ அன்றாட
கூலி வேலைகளைத் தேடி அலைந்து ஏதாவது ஓர் நாள்
கிடைக்கும் மிக மிகக் குறைந்த கூலியைக் கொண்டு கஞ்சி
கூட சரிவரக் குடிக்காமல் வாடுகின்றவர்களுக்கு முதலில் மாதம்
இவ்வளவு வருவாய் கிடைக்கும், அதாவது தரப்படும் என்கின்ற
உத்திரவாதம், காப்பு நிதி, போனஸ் போன்ற அனைத்தும் மில்
தொழிலாளருக்குத் தரப்படுவது போல கொடுக்கப்பட வேண்டும்.
இன்று தினப் பத்திரிகையில் தமிழக அரசு ஒரு குழுவை நியமித்
திருப்பதாக படித்தேன்.'' இன்று என்றால் அன்று கழக
ஆட்சியின் போது' விவசாயிகளுக்கு அன்றாட கூலியை எந்த
அளவிற்கு உயர்த்தலாம் என்பது பற்றி ஆராய்ந்து கருத்து
கூறவே அந்தக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக அதில் விளக்கப்
பட்டிருந்தது. தினக்கூலி என்பதை அறவே அகற்றியே ஆக
வேண்டும். மாதச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.
அதுவும் போக லாபத்தில் பங்கும் தரப்பட்டு தீர
வேண்டும். வாயில்லாப் பூச்சியான விவசாயிகளை அவ்வப்
போது ஒரு சில ரூபாய்களை அதிகப்படுத்துவதன் மூலம்
பாவனை காட்டி, அவர்களைப் புகழ்ந்து பாராட்டிப் பேசியே

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 26

நெடுங்காலத்திற்கு ஊமைகளாக அழுத்திவிடலாம் என்று யாரும் மனப்பால் குடிக்க வேண்டாம். விவசாய சமுதாயம் இனிமேலும் பொறுத்திருக்கும் என்று வீண் கற்பனையில் யாரும் மூழ்கி இருக்க வேண்டாம்.'' என்று நம்முடைய முதல மைச்சர் அவர்கள் விகடன் பத்திரிகையிலே ஒரு கட்டுரை எழுதி, அதை தென்னகம் ஏடு அன்றைக்கு எடுத்து வெளியிட்டிருந்தது! இப்போது விவசாய சமுதாயம் பொங்கி எழுந்து, பொறுமை இழந்து போர்க்கொடி உயர்த்தி இருக்கிற காட்சியினைக் காணு கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயிக்கான கூலியை உயர்த்த வேண்டும் என்பதற்காக ஒரு குழு அமைத்த போது அது இன்றைய முதல் அமைச்சர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படாமல் விவசாயிகள் போர்க் கோலம் பூணுவதற்கு முன் அவர்களுக்கு வாழ்க்கை உத்திரவாதம் அளிக்க வேண்டும், மாத வருமான உத்திரவாதம் அளிக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இன்றைக்குப் பத்திரிகையிலே பார்த்தால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எப்படி கூலி உயர்வு அதிகப்படுத்தப்பட்டதோ அது போன்ற செய்தியைத் தான் கீழத் தஞ்சையிலே உள்ள விவசாயத் தொழிலாளர் களுக்கு அதிகப்படுத்தப்பட்டது என்ற செய்தியைத் தான் நாம் காண்கிறோம். எனவே தேர்தலுக்கு முன்பு மக்களிடத்திலே, நாங்கள் வந்தால் அதைச் செய்யப் போகிறோம், இதைச் செய்ய போகிறோம் என்றெல்லாம் வாக்குகளைப் பெறுகின்ற வேலை மிக எளிதாக நடைபெற்று முடிந்தது.

அது மாத்திரமா, இராமநாதபுரம் மாவட்டத்திலே, நம் முடைய முதலமைச்சர், அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக சுற்றுப் பயணம் செய்து, தேர்தல் பிரச்சாரம் நடத்திய பொழுது சொன்னார். இந்தப் பகுதியிலே உள்ள முக்குலத்து மக்களுக்கு நான் ஒரு வாக்குறுதி அளிக்கிறேன். என்று சொன்னார். அந்த வாக்குறுதி 10—6—1977 ஆம் நாளன்று தென்னகம் பத்திரிகையில் மிகப் பெரிய எழுத்தில், இரண் டாவது பேனர் என்று சொல்வார்களே, அந்த இரண்டாவது பேனராக, கொட்டை எழுத்துச் செய்தியாக வெளியிடப்பட்டு உள்ளது. என்ன சொன்னார் இன்றைய முதலமைச்சர் அன் றைக்கு? 'குற்றப் பரம்பரைச் சட்டம் இன்னமும் அமுலில் இருக்கும்போது நாட்டில் நடைபெறுவது மக்கள் ஆட்சியா என்ற சந்தேகம் அனைவருக்கும் எழத்தான் செய்யும். நான் இந்தப் பகுதி மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால், அரசு அந்தக் குற்றப் பரம் பரைச் சட்டத்தை அகற்றும்' —எம். ஜி. ஆர். 10—6—1977 அருப்புக்கோட்டை கூட்டத்தில் என்று செய்தி வந்தது.

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

அங்கேயிருந்த மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி அற்றிருந்த காரணத்தாலோ அல்லது இவர் சொல்கிறாரே, நம்பத்தான் வேண்டுமென்ற காரணத்தாலோ வாக்குகளை வாரி வாரி வழங்கினார்கள். ஆனால், குற்றப் பரம்பரைச் சட்டம் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் காலத்திலேயே அகற்றப்பட்டு விட்டது என்பதை அந்தப் பகுதி மக்களுக்கு யாரும் எடுத்துச் சொல்லவும் இல்லை. அல்லது அவர்கள் அறிந்திருந்தாலும் இவர் சொல்லியிருக்கிறாரே என்ற காரணத்தினால் மீண்டும் அந்தக் குற்றப் பரம்பரைச் சட்டத்தை ரத்து செய்யப் போகிறார்கள் போலும் என்று எண்ணிக் கொண்டு வாக்கு அளித்தார்கள்.

இவைகளெல்லாம் தேர்தலுக்கு முன்பு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள்; தேர்தல் முடிந்த பிறகு கூட—கவர்னர் அவர் களது உரையில் 17,000 நியாய விலைக் கடைகள்—16,000 நியாய விலைக் கடைகள் என்று சொல்லி, ஆயிரம் கிராமங் களை விட்டு விட்டார்களே என்று நான் எடுத்துக் காட்டி, அதற் கென்ன அதையும் சேர்த்துக் கொண்டால் போகிறது என்று 17,000 நியாய விலைக் கடைகள் வரும் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது 13,000 நியாய விலைக் கடைகள் வந்திருப்பதாக கவர்னர் உரையிலே அறிவிக்கப்பட்டது, பத்திரிகையிலும் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால், ஏதேனும் புதிதாக இந்த அரசால் அமைக்கப்பட்ட நியாய விலைக் கடைகள் என்று இல்லாமல், ஏற்கனவே இருந்த சொசைட்டிகள் மூலம் இந்தக் கடைகள் இன்றைக்குச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் மத்திய மாநில அரசு மானியமாக ரூ. 3,000 தரப்படுவதாக சொல் லப்படுகிறது. அதிலே பணி புரிகின்ற எஸ். எஸ். எல். சி. படித்த நபருக்கு மாதச் சம்பளம் ரூ. 100 கொடுத்தால், ஆண்டுக்கு ரூ. 1,200 ஆகிறது. மீதமுள்ள ரூ. 1,800 ஐக் கொண்டு சில்லறை செலவுக்கும், அந்த நியாய விலைக் கடைக்கு வேண்டிய மேஜை, நாற்காலி, மற்றும், விற்கப்பட வேண்டிய சாமான்கள்—தராசு உட்பட—இவைகளெல்லாம் வாங்கப்பட வேண்டிய செலவும் இந்த ரூ. 1,800 லே அடங்கு கிறது. பெரும்பாலான நியாய விலைக் கடைகளில் தராசு, படிக்கல் கூட இல்லையென்கின்ற நிலையை நாம் நேரிலே கூட அறிய முடிந்தது.

குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்திலே, சில நியாய விலைக் கடைகளைப் பற்றி நான் விசாரித்தேன். அந்தக் கடைகளுக்குச் சாமான்கள் வாங்க வேண்டுமென்றால் வேலூரிலே இருக்கிற மார்க்கெட்டிங் சொஸைட்டிக்குப் போக வேண்டிய சூழ் நிலை. 1 கிலோ டின், 25 டின்கள் நியாய விலைக் கடைக்குத் தேவை என்கின்ற மனு போடப்படுகிறது.

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 2.

ஒரு மாதம் கழித்து, அந்தக் கடைக்கு 25 டின்கள் அல்ல, 5 டின்கள்தான் அனுப்பப்படுகின்றன என்ற செய்தியும் நம்பகமாக எனக்குக் கிடைத்தது.

நான் சில புள்ளி விவரங்களை, இந்த நியாய விலைக் கடைகளிலே, இரண்டு மூன்று கிராமங்களிலே எடுத்திட முயற்சித்தேன்.

[முற்பகல் 11–20]

சுமைதாங்கி என்ற இடத்தில் நியாய விலைக் கடை எப்படி நடைபெறுகிறது என்பதற்கு ஒரு உதாரணம்—தனியார் கடையில் ஒரு கிலோ மிளகாயினுடைய விலை ரூ. 7·50 பைசா, நியாய விலைக் கடையில் ரூ. 11.00. தனியார் கடையில் தனியா ஒரு கிலோ 2.35 காசு, நியாய விலைக் கடையில் ஒரு கிலோ ரூ. 3.12 காசு. தனியார்கடையில் புளி கிலோ 4 ரூபாய் 84 காசு, நியாய விலைக் கடையில் 6.00. கடலைப் பருப்பு தனியார் கடையில் 3 ரூபாய், நியாய விலைக் கடையில் கிலோ ரூ. 3 20 காசு. துவரம் பருப்பு தனியார் கடையில் ரூ. 4.40 காசு, நியாய விலைக் கடையில் 5 ரூபாய். உளுத்தம் பருப்பு தனியார் கடையில் 4.00 ரூபாய், நியாய விலைக் கடையில் ரூ. 4.72 காசு, அரிசி ரூ. 1.40 காசு தனியார் கடையில், நியாய விலைக் கடையில் ரூ. 1.65 காசு. கடலை எண்ணெய் தனியார் கடையில் ரூ. 6.80 காசு, நியாய விலைக் கடையில் 7.38 காசு. இது சுமைதாங்கி.

அடுத்து திருவலம்—அங்கேயும் வலம் வந்தேன் எப்படி இருக்கிறது என்று பார்க்க—அங்கே தனியார் கடையில் மிளகாய் கிலோ 7 ரூபாய். நியாய விலைக் கடையில் 9.00 ரூபாய். மிளகு கிலோ 18 ரூபாய் தனியார் கடையில், நியாய விலைக் கடையில் 27.00 ரூபாய். தனியா கிலோ 2·75 காசு தனியார் கடையில், நியாய விலைக் கடையில் ரூ. 3 30 காசு—துவரம்பருப்பு தனியார் கடையில் 4.50 காசு, நியாய விலைக் கடையில் கிலோ ரூ. 5.90 காசு—கடலை எண்ணெய் கிலோ 6.80 காசு. தனியார் கடையில், நியாய விலைக் கடையில் 7.40 காசு—மஞ்சள் தனியார் கடையில் கிலோ 7 ரூபாய், நியாய விலைக் கடையில் 13 ரூபாய்—சீரகம் தனியார் கடையில் 19·00 ரூபாய், நியாய விலைக் கடையில் 27.00 ரூபாய்—தனியார் கடை, நியாய விலைக் கடைகளின் பில்களுடன் தான் விவரங்களைச் சொல்கிறேன்.

காட்பாடியில் தனியார் கடையில் உளுத்தம்பருப்பு 4.00 ரூபாய், நியாய விலைக் கடையில் 4.55 காசு. துவரம்பருப்பு தனியார் கடையில் 4.50 காசு, நியாய விலைக் கடையில் 5·25 காசு—புளி தனியார் கடையில் 3.50 காசு, நியாய விலைக் கடையில் 11.50 காசு, சீயக்காய் 3.50 காசு தனியார் கடையில், நியாய விலைக் கடையில் 4.20 காசு.

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

இது நியாய விலைக் கடைகள் நாட்டில் நடை பெறுகின்ற லட்சணம். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து முதலில் 'அ' என்ற எழுத்தைப் போட்டு அ. தி. மு.க. என்று ஆக்கியது போல, நியாய விலைக் கடைகளுக்கு முன்னால் 'அ' என்ற எழுத்தைப் போட்டு அநியாய விலைக் கடைகள் என்று மாற்றுவார்களேயானால் பொருத்தமாக இருக்கும் என்று நான் இந்த அரசுக்கு ஆலோசனை கூற விரும்புகிறேன்.

இன்னொரு பெரிய திட்டத்தை வாக்குறுதி அளித்ததற்கு ஏற்ப 14—1—1978 பொங்கல் திருநாள் அன்று நமது முதலமைச்சர் அவர்கள் தொடங்கினார். பத்திரிகைகளிலே எல்லாம் பெரும் விளம்பரம் வந்தது.

"பல்லாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு, வீடு தேடி வரும் மலிவு விலை காய்கறித் திட்டம்—முதல்வர் புரட்சித் தலைவர் தொடங்கி வைத்தார்" என்று அப்போது நமது முதல்வர் அவர்கள் பேசிய பேச்சு, அவர்களுடைய பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. குறிப்பாக அண்ணா பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. மூன்று சக்கர வண்டிகளில் காய்கறிகளை வைத்து விற்பனை செய்யப்படும். வீட்டுக்குத் தேவையான எல்லா காய்கறிகளும் வீடு தேடி வரும். அலுவலகம் சென்று விட்டு வீடு திரும்புபவர்கள் கையில் பை தூக்கி கொண்டு காய்கறி வாங்க செல்ல அலைய வேண்டியதில்லை. வீட்டில் இருக்கும் சகோதரிக்கும் கடைகளுக்குச் சென்று காய்கறிகளைப் பார்த்து பார்த்து வாங்க வேண்டியதில்லை. வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கவும் இது பயன்படுகிறது. இந்தத் திட்டத்தை மற்ற நகரங்களுக்கும் விஸ்தரிக்கும்போது ஆயிரக்கணக்கான மூன்று சக்கர வண்டிகள் தேவைப்படும். இப்படிப்பட்ட வண்டிகள் உற்பத்தி செய்ய ஒரு தொழிற்சாலையைத் துவக்கலாம், அதனால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கு இடமிருக்கிறது—எப்படி இருக்கிறது? காய்கறிகளில் தொடங்கி, மூன்று சக்கர வண்டிகள் செய்ய தொழிற்சாலைகள் கட்டுவது, பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு இப்படி அந்தத் திட்டம் அதிகமான அளவில் பொது மக்களுக்குப் பயன்படும் என்று சொன்னார்கள்.

அந்தப் பேச்சு எல்லாப் பத்திரிகைகளிலும், ஆளும்கட்சி பத்திரிகைகளிலும் மிக விரிவாக வெளியிடப்பட்டது. ஒரு கண்ணாடி வியாபாரியின் கதையைச் சொல்வார்கள். ஒரு கண்ணாடிக் கடைக்காரன் தன்னிடத்திலே இருக்கும் கண்ணாடிகளைவிற்று. அதிலே வரும் பணத்தைக் கொண்டு வேறு சில பொருள்களை வாங்கி வியாபாரம் செய்து, அதிலே வருகிற பணத்தைக் கொண்டு பெரிய பங்களா கட்டி, அந்த பங்களாவில் வசிக்கும் நேரத்தில் சீமான் வீட்டுப் பெண்கள் வந்து என்னைத்

திருமணம் செய்துகொள் என்று கேட்கிற நேரத்தில் இப்படி
காலால் உதைப்பேன் என்று சொல்லி, உதைத்துக் காட்டி
அதனால் அந்தக் கண்ணாடிக் கூடையையே உடைதது விட்டான்
என்று அல்நார் கதையைச் சொல்வார்கள். அதேபோல்த்தான்
இவர்கள் அறிவித்துள்ள காய்கறி வியாபாரம். 3 சக்கர
வண்டிகள், 3 சக்கர வண்டிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை.
அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்ய ஆயிரக் கணக்கான
பேர், அந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்களைத்
தயாரிக்க கிராமங்கள்தோறும் தொழிற்சாலை என்று அந்த
அளவிற்குப் பரவலாக திட்டத்தை அறிவித்தார்கள். மிளகாய்ப்
பொடி மசாலாப்பொடி வீட்டுக்கு வீடு கொண்டு வரப்படும் என்று
சொல்லப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு மிளகாய்ப்பொடி தூவப்
பட்டதா, அல்லது சென்னை நகர மக்களின் கண்களில் மிளகாய்ப்
பொடி தூவப்பட்டதா, அந்தத் திட்டம் என்ன ஆயிற்று!
விரிவாக்கப்படும், விஸ்தரிக்கப்படும் என்று ஆரம்பிக்கப்பட்ட
திட்டம், அதுவும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளன்று
ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்ன ஆயிற்று என்பதை இந்த
அவையே அறிந்து கொள்ள விரும்புகிறது.

வேலை வாய்ப்புத் திட்டத்தைப்பற்றுச் சொல்கிறபோது
ஏறத்தாழ 1 லட்சதது 30 ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்து
இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். கிராமங்களில் அவர
வர்கள் செய்து கொண்டு இருக்கும் வேலைகளைக் கணக்கில்
எடுத்துக் கொண்டு, மேலவையில் முதலமைச்சர் பேசியதாக
எனக்கு நினைவு, பத்திரிகைகளிலும் பார்த்தேன், வெள்ளம்,
புயல் இப்படிப்பட்ட சேதங்கள் நிகழ்ந்த காலத்தில் கிராமப்
புறத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்பு
பெறுகிறார்கள். அவர்களை எல்லாம்கூட இந்த 1 லட்சத்து 30
ஆயிரம் பேர்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்ன
தாக எனக்கு நினைவு. நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்
கிறேன். 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு எந்தத் திட்டங்களைத்
தீட்டி, எந்தெந்த கிராமங்களில், யார் யாருக்கு வேலை கொடுத்து
இருக்கிறீர்கள் என்ற பட்டியலை இந்த அரசு வெளியிடுமா? வெளி
யிட முடியுமா? அப்படி ஒரு பட்டியல் இருக்கிறதா? 1 லட்சத்து 30
ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்தோம் என்றால் வறட்சிப் பணிக
ளை நிறைவேற்ற திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த
நேரத்தில் 5—6 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தோம்,
அந்தக் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. அதனால் தான்
வேலைவாய்ப்புபற்றி பேசுகையில் பேராசிரியர் அன்று கேட்ட
நேரத்தில் 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு
என்பது ஆங்காங்கு கிராமங்களில் இருக்கும் மக்கள் தங்களுடைய
முயற்சியால் ஆங்காங்கு நடத்திக் கொண்டு இருக்கிற, பெற்றுக்
கொண்டிருக்கிற வேலைவாய்ப்புகள் ஒரு நாளில், 1/2 மணி நரம்,

1/4 மணி நேரம், அந்த வேலை வாய்ப்புகள் உத்தரவாதமான வேலை வாய்ப்புகள் அல்ல என்று சொன்னார்கள். ஆகவே 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு நிச்சயமாகத் தரப்படவில்லை ஏன் இதை நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன் என்றால், 1977 நவம்பர் மாதம் சர்விஸ் கமிஷன் ஒரு விளம்பரம் செய்தது. அதன்படி அலுவலகப் பணியாளர், பிரிவில் தற்காலிகப் பணிகளில் இருக்கும் இளநிலை உதவியாளர் கள், டைப்பிஸ்ட்டுகள், ஸ்டெனோ டைப்பிஸ்டுகள், ஆகியோரை பணியில் நிலைப்படுத்துவதற்கும் இளைஞர் அணி தொண்டர்களை பணியில் சேர்த்துக் கொள்வதற்கும் விசேஷ யோக்கிய தாம்சம் அளிக்கும் பரீட்சை—எஸ்.எஸ்.எல்.சி. தரம் என்று குறிப்பிட்டு, சர்வீஸ் கமிஷனரால் மனுக்கள் கோரப்பட்டன. அந்த விசேஷத் தேர்வில் 3,000 பேர் பங்கேற்றார்கள். தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. அந்த 3,000 பேரில் 98 சதவிகிதம் வெற்றி பெற்றார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த சர்வீஸ் கமிஷன் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு 1978ஆம் ஆண்டில் வேலை கொடுத்து விடலாம் என்று தமிழக அரசு முடிவு செய்து இருப்பதாகவும் கூறப்பட்டது. நிலைமை என்ன? அந்த விசேஷத் தேர்விலே, முடிவுகள் அறிவிக்கப்பட்டு வெற்றி பெற்றவர்கள் ஓராண்டு காலமாக காத்துக் கொண்டு இருக்கிறார்கள். யாருக்கும் வேலை வாய்ப்புகள் இதுவரையில் அளிக்கப்படவில்லை. அவர்கள் பத்திரிகைகளிலே கடிதங்கள் எழுதுவதுமாகவும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு மகஜர்கள் அனுப்புவதுமாக இருக்கிறார்கள். நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். 3,000 பேர்களும் இன்னும் நிலைப்படாமல் இருக்கிறோம் என்று முறையீடுகள் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

நான் சேலம் சென்று இருந்தேன் நேற்றைக்கு. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 6ஆம் தேதி அன்று சேலத்திற்குச் சென்று மாக்னசைட் தொழிற்சாலை ஒன்றை அரசின் சார்பில் திறந்து வைத்து அந்தத் திறப்பு விழாவில் பேசியிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையில் ஏற்கனவே 3,000 தொழிலாளர்கள் வேலையிலே ஈடுபட்டு இருந்தார்கள். அந்தத் தொழிற்சாலயை நடத்த முடியாத காரணத்தாலோ என்னவோ தனியார் அதை நடத்தாத காரணத்தாலே அரசே அதை ஏற்று நடத்துவது என்று முடிவு செய்தது. அது பாராட்டத்தக்கது என்றாலும் தொழிலாளர்களுக்கு இந்த அரசு என்ன உரிமை அளித்து இருக்கிறது என்று பார்த்தால் ஏறத்தாழ அந்த 3,000 பேரையும் நாங்கள் தொடர்ந்து வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம் என்று அவர்களுக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டு இருந்தும்கூட, அதிலே 3,000 பேரையும் அந்தத் தொழிற்சாலையிலே வேலைக்கு எடுத்து கொள்ளவில்லை.

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 26

[முற்பகல் 11-30]

50 சதவீதத்திற்குக் குறைவாகத்தான் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். பெரிய கொடுமை—20 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம், 12 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் சர்வீஸ் எல்லாம் வெட்டப்பட்டு, அந்த சர்வீஸ் காலம் அவர்களுக்கு கிடையாது என்ற ரீதியில் புதிதாக 'வேலையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களைப்போல இன்றைக்கு அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

மத்திய அரசு சில நிறுவனங்களை அரசின் சார்பில் எடுத்துக் கொண்ட நேரத்திலும்சரி, கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது ஈரோடு போன்ற இடங்களிலே மின்சார நிறுவனங்களை அரசின் நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டபோதிலும் சரி, அதி லுள்ள தொழிலாளர்களை எல்லாம் அப்படியே எடுத்துக், கொண்டது மட்டுமல்ல ; அவர்களுடைய சர்வீஸ் 'கட் ஆகாமல் , சர்வீஸ் வெட்டப்படாமல் எடுத்துக் கொள்ள உத்தர வாதத்தை அளித்தது என்பதை இந்த அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே, தொழிலாளர்கள் இன்றைக்கு சேலம் மாநகரில் மாக்னசைட் தொழிற்சாலை தொடங்கப்பட்ட நேரத்தில் அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கு மாறாக எடுக்கப்பட்டிருக் கிறார்கள் என்ற குற்றச்சாட்டை எடுத்து வைக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆரம்ப காலத்திலே தொழிலாளர்களுக்கு தோழனாக இந்த அரசு விளங்கும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் தொழிலாளர்களுக்கு தோழனாக விளங்கும் என்றுசொன்ன இந்த அரசுதான், அரசினுடைய முதலமைச்சர்தான் கவர்னர் மூலமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதை சட்ட விரோதம் என்று அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தார் என்பதை யும், அதற்கு தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் சமுதாயம் பெரும் போராட்டம் நடத்த வேண்டி இருந்தது என்பதையும், அந்த அவசரச் சட்டம் காலாவதி ஆகிவிட்டது என்பதையும், நாடு அறியும் ; தொழிலாளர் சமுதாயம் அறியும். எனவே, தொழிலாளர்களுடைய தோழன் என்று பேசிக் கொள்ள இந்த அரசுக்கு எள்ளளவும் தகுதி கிடையாது என்பதை நாற்றுக் கணக் கான உதாரணங்களால் என்னால் கூற முடியும்.

அதைப்போல சென்னைக்கு அருகாமையில் உள்ள டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலையில் ஏற்பட்ட அமளி. அந்தத் தொழிற் சாலையில் உள்ள தொழிலாளர்கள் காவல் துறையினருடைய அடக்குமுறைக்கும், அதே நேரத்தில் ஆளும் கட்சியினரும் சேர்ந்து

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

தாக்குவதற்கும் கடுமையாக ஆளாக்கப்பட்டார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். அங்கே ஏ.ஐ.டி.யு.வைச் சேர்ந்த தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பதினரும் கே.டி.கே. தங்கமணி, கோபு அவர்கள் தலையில் ஒரு ஊர்வலம் நடத்தி, அமைச்சரைச் சந்திக்க கோட்டைக்கு வருகின்ற நேரத்தில் அவர்கள் கைது செய்யப்படுவதற்குப் பதிலாக தாக்கப்பட்டார்கள் போலீஸ்காரர்களால் ; ஆளும் கட்சிக்காரர்களால் தாக்கப் பட்டார்கள் தங்கமணியும் கோபுவும்.

அதுமாத்திரமல்ல. அவர்களைத் தாக்கிய ஆளும் கட்சித் தொண்டர்கள், , ஹரிபட் அவர்கள் உண்ணாவிரதம் இருந்த அந்த பந்தலையும் எரித்து சாம்பலாக்கி விட்டார்கள். இவைகள் எல்லாம் தொழிலாளர் நலனுக்கு பாடுபடுகின்ற அரசினுடைய சாதனையின் ஒரு கூறு என்று சொன்னால் அது மிகையாகாது.

சிம்கோ மீட்டர் தொழிற்சாலையில் ஏறத்தாழ 100 நாட் களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது ஒரு போராட்டம். 12 (3) செட்டில்மென்ட். இதையே இன்றைக்கு முன்னோடியாக வைத்துக் கொண்டு, அதில் உள்ள முற்றுப் புள்ளியையோ, கமாவையோ மாற்ற இயலாத காரியம் என்று ஏற்கனவே அரசாங்கத்தின் சார்பில், அமைச்சரின் சார்பில் அறிவிக்கப்பட்டு விட்டதால் அந்த தொழிலதிபர் ' நான் தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக ஆக்க மாட்டேன்; தற்காலிகத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் 41/2 ரூபாய் சம்பளம் ஆக்க மாட்டேன் ' என்கிற ஆணவத்தோடு, துணிச்ச லோடு இந்தத் தொழிலாளர்களைப்பற்றி இன்றைக்கு பேசுகிறார் என்றால் திருச்சி நகரம் தொழிலாளர்களுக்கு இரக்கம் காட்டு கின்ற வகையில், அனுதாபம் தெரிவிக்கின்ற வகையில், பரிவு காட்டுகின்ற வகையில் ஒருநாள் பொது வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டும்கூட, ஏன் இன்னும் சில நாளில் திருச்சி மாவட்டத்திலே அப்பேர்ப்பட்ட கொந்தளிப்பான நிலை தொழிலாளர்களுக்காக ஏற்படும் என்ற நிலை உருவாகி இருந்தும்கூட ஒரு தொழிலதிபர் ' நான் கொஞ்சமும் இணங்க மாட்டேன் ; தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய கோரிக்கை களுக்கு விடை தருகின்ற அந்த வேலைக்கு நான் வரமாட்டேன். என்று சொல்கிறார் என்றால் அது அந்த தொழில் அதிபர்களுக்கு அரசாங்கம் தருகின்ற மறைமுகமான ஆதரவு, ஆக்கம், ஊக்கம் இவைகளைத் தவிர வேறென்ன காரணம் கூற முடியும்.

அடுத்து திருச்சி மாவட்டத்திலே கரூரிலே எல்.ஜி.பி. பஸ் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அந்த போராட்டத்திலே ஒரு சுமுகமான முடிவு எடுக்கப்படுகிறது. நண்பர் திரு. உமாநாத் அவர்கள் கூட அன்றைக்குச் சுட்டிக்காட்டி னார்கள். அந்தச் சுமுகமான முடிவு எடுக்கப்படுகிற நேரத்தில் அங்கே இருக்கின்ற அந்த மண்டலப் போலீஸ் அதிகாரி ஒரு

படையோடு அந்த நிறுவனத்தின் உள்ளேயே சென்று அங்கே இருக்கின்ற தொழிலாளர்களை அடித்து, வதைத்து சித்திரவதை செய்கிறார். அவ்வளவு கடுமையாக அங்கே நடைபெறுகின்றன.

ஆவடித் தொழிற்சாலையிலே நடைபெறுகிற அல்லல்களை எடுத்துக்காட்ட அமைதியான முறையிலே ஊர்வலம் சென்றபோது ஊர்வலத்திலே கலந்துகொள்வதற்கு முன்பாகவே திராவிட முன்னேற்றக்கழகத்தினுடைய தலைவர்களாகிய திரு. சுப்பு அவர்களும், திரு. கோபு அவர்களும், தி. ரவைக்கண்ணன் அவர்களும் மற்றுமுள்ள தொழிற் சங்கத் தலைவர்களும் ஆக நூற்றுக்கு மேற்பட்டோர் அன்றைக்குக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே முதலாளிகளுக்கு பாதுகாப்பு தரப்படுகிறது. ஆளும் கட்சியினர் தொழிலாளர்களுடைய போராட்டங்களை அடக்குவதற்கு பயன்படுத்தப்படுகிறார்கள். இவைகளை எல்லாம் பார்க்கிற நேரத்திலே தான் இங்கே தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசு செயல்படுகிறது என்பதற்கான நூற்றுக்கணக்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டி கண்டனத் தீர்மானத்தை நம்முடைய நண்பர் அவர்கள் கொண்டு வந்து அதிலே பேசி இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசு செயல்படுகிறது என்பதைக் காட்டுவதற்காகவும், அதே நேரத்திலே முதலாளிகள் தங்களுடைய பிடிவாதத்திலேயிருந்து இறங்கிவர வேண்டும் என்பதை எடுத்துச் சொல்வதற்காகவும் தொழிலாளர்களுடைய சங்கத்தின் தலைவர்கள், அரசியல் கட்சியினுடைய தலைவர்களை அணுகி எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழ்நாடு முழுவதும் இதனை அரசுக்கு உணர்த்துகிற வகையில் கடைஅடைப்பு, பொது வேலைநிறுத்தம் என்ற அறிவிப்பை அனைத்துக் கட்சிகளின் சார்பிலே வெளியிட்ட நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வானொலியிலே பேசிய பேச்சும், அதற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் எந்த அளவிற்கு வன்முறையைத் தூண்டிவிட்டன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அதே நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் நம்முடைய நண்பர், ஜனதாக் கட்சியினுடைய தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்களுடைய அந்தப் பாணியிலே பேச விரும்பவில்லை. திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் செய்த ஏதோ ஒரு குற்றத்திற்காக அவர்களைப் பாராளுமன்றத்திலேயிருந்து விலக்கி 5 நாட்களுக்கு சிறையிலே வைப்பது என்கிற முடிவு எடுக்கப்படுகிறது. அந்த முடிவு எடுக்கப்படுவதற்கு முன்பேகூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் நிருபர்களிடத்திலே ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறேன். இது மறுபரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் நான் இங்கே இந்த அரசின் அணுகுமுறையைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு கட்சியினுடைய தலைவர் சிறையிலே போடப்படுகிறார் என்ற செய்தி வருமேயானால் அதற்காகப் போராட, கிளர்ந்தெழ ஆர்ப்பாட்டங்கள் நடத்த அந்தக் கட்சியிலே உள்ள தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும் உரிமை உண்டு. அது பல நாட்களாக, பல ஆண்டுகளாக நம்முடைய நாட்டிலே நாம் கண்டுவருகிற முறை. அந்த வகையிலே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டிலே அப்படிப்பட்ட கிளர்ச்சிகளிலே ஈடுபட்டார்கள். அவர்கள் ஈடுபட்டது சரி; அது தவறு என்ற அந்த விவாதத்திலே இறங்க விரும்பவில்லை. அப்போது அவர்களுடைய பத்திரிகையிலே சில நடவடிக்கைகள் பற்றிய செய்தி வெளியிடப்பட்டன. நான் கேட்கிறேன், இப்படிப்பட்ட முறைகளை எல்லாம் அனுமதிக்கக்கூடாது என்று சொல்கின்ற இந்த அரசினுடைய பத்திரிகைகள் அந்தக் காலத்திலே எப்படி நடந்துகொண்டன என்பதைத்தான் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களைத் தண்டிப்பதற்கு முன்பே 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் அன்று அண்ணா பத்திரிகையின் முதல் பக்கத்திலே எழுதப்பட்ட செய்தியைப் படிக்கிறேன்: ''இந்திரா காந்திக்கு தண்டனை கொடுத்தால் ஏற்படும் கொந்தளிப்பை எப்படி அடக்குவது என்று ஜனதா அரசு யோசித்து வருகிறது. இந்திரா காந்திக்கு தண்டனை அளிக்கப்பட்டால் அதன் விளைவாக ஏற்படும் கொந்தளிப்பை எப்படி சமாளிப்பது என்பது பற்றி மத்திய அரசு தீவிரமாக யோசித்து வருகிறது. இந்தப் பிரச்சினை எழுப்பியுள்ள கொந்தளிப்பைக் கண்டு டெல்லி அதிர்ச்சி அடைந்திருக்கிறது.'' இது ஆளும் கட்சிப் பத்திரிகையிலே வருகின்ற செய்தி. வன்முறைகளைத் தூண்டிவிடுகின்ற செய்திகளை வெளியிடுவது நல்லதா ?

[முற்பகல் 11-40]

இது முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி எடுத்துக் கூறுகிற மணிவாசகங்களில் ஒன்று. ஆனால், அவர்களுடைய பத்திரிகைகளில், கொந்தளிப்பு ஏற்படும், புயல் ஏற்படும், அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றும், ஜனதா அரசு திணறுகிறது என்றெல்லாம் செய்திகள் வெளியிடப்படுகின்றன என்றால் இந்தச் செயல்களை அவர்கள் மறைமுகமாகத் தூண்டி விடுகிறார்கள் என்று பொருள் அல்லவா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதே பத்திரிகையில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாளில் இரண்டாம் பக்கத்தில் இன்னொரு செய்தி. என்ன செய்தி. மாணவர்கள், இளைஞர்கள் எப்போதும் ஒழுங்காகப் படிக்க வேண்டும் என்று உபதேசம் செய்ய நமது முதல் அமைச்சர் தவறுவதே இல்லை. ஆனால், அண்ணா பத்திரிகையில் என்ன செய்தி வருகிறது. என்ன அறிவிப்பு தெரியுமா?

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 26

''இந்திரா காந்தி மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்து இருக்கும் ஜனதா அரசின் போக்கைக் கண்டித்து இன்று சென்னையிலிருந்து டெல்லி புறப்படும் க்ராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் ரயில் முன் இளைஞர் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் படுத்து மறியல் செய்வார்கள். அணி அணியாக போராட்டத்தில் ஈடுபடுவார்கள். இவ்வாறு இனியன் சம்பத் அறிக்கையில் கூறியுள்ளார்.''

இது அண்ணா பத்திரிகையில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் வெளிவருகிற செய்தி. அப்படியானால் இதையெல்லாம் தூண்டி விடுகிறவர்கள் யார்? நாட்டிலே என்ன நடைபெற்றாலும், திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டிவிடுகிறது, அல்லது எதிர்கட்சிகள் தூண்டிவிடுகின்றன என்று குற்றஞ் சாட்டுகிறவர்களைக் கேட்கிறேன். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கைது செய்யப்படுவதற்கு முன்பே தண்டவாளத்தில் படுப்போம், ரயிலை நிறுத்துவோம், ரயிலைப் போக விட மாட்டோம் என காங்கிரஸ் கட்சி நண்பர்கள், காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்துகிறபோது இளைஞர் காங்கிரஸ் கட் விடுத்த அறிக்கையை ஆளும் கட்சிப் பத்திரிகை வெளியிடுகிற என்றால் வன்முறைக்கு மறைமுகமாகவோ அல்லது நேர யாகவோ தூபம் வீசுகிற காரியம் அல்லவா இது.

நான் நேரில் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழ சட்டமன்றக் கட்சி அலுவலகத்திற்கு நான் சென்று கொண்டிருந் போது, அண்ணா சாலை வழியாகச் செல்கிறபோது, அண்ணா சிலைக்கு அருகாமையில் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசா அவர்களின் கொடும்பாவியை இளைஞர் காங்கிரஸ் தீ வைத் கொளுத்தியபோது போலீஸ் அதை வேடிக்கை பார்த்துக்கொ டிருந்தார்கள். போலீஸார் அவர்களை உடனடியாக சுட வே டும் என்றோ அல்லது தடியடிப் பிரயோகம் செய்யவேண் மென்றோ நான் கூறவில்லை. அவர்கள் ஆத்திரம், அவர்க தலைவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்ற காரணத்தா தங்களுடைய மனக்கொந்தளிப்பை காட்டவேண்டும் என்று காட் கிறார்கள். ஆனால், அதற்கு ஆளும்கட்சிப் பத்திரிகை அதற் எடுப்பு எடுத்துக் கொடுப்பதாக, அதற்கு உற்சாகமளிப்பதா ஊக்கப்படுத்துவதாக செய்திகளை வெளியிடலாமா என்று நா கேட்க விரும்புகிறேன். அதோடு, 18 ஆம் தேதி அதே ப திரிகையில் வருகிறது. என்ன வருகிறது.

''நாடாளுமன்றத்தின் இருஅவைகளிலும் மறியல். இந்திரா கை எப்போது? டெல்லியில் பதட்ட நிலை. ராணுவம் குவிகிறது''

முதல் பக்கத்தில் இது கொட்டை எழுத்தில் வருகிற இவைகளுக்குப் பிறகுதான் நாகர்கோவில் சம்பவம். நாகர் கோவில் பகுதியில் வெள்ளோடு என்ற இடத்தில் ஒரு பஸ் தீக்கி யாக்கப்பட்டு அதேயிடத்தில் எழு பேர்களும் அதற்குப் பிற

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

மூன்று பேர்களும் ஆக மொத்தம் பத்து பேர்கள் கொல்லப்படுகிறார்கள். அதற்கு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன், வழக்கு பதிவு செய்ததற்காக. ஆனால், இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நடைபெறுகிற அளவிற்கு இந்த அரசில் அங்கம் வகிப்பவர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்களாக இருப்பவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள், அமைச்சர்களாக இருப்பவர்கள் தங்களுடைய மேற்பார்வையில் நடைபெறுகிற பத்திரிகைகள் இவைகளையெல்லாம், இப்படிப்பட்ட சம்பவங்களை தூண்டிவிடுகிற அளவிற்கு செய்திகளை வெளியிடுவது குற்றமல்லவா? இன்னொன்றும் நான் கேட்க விரும்புகிறேன். நாகர்கோவிலில் நடைபெற்ற சம்பவத்திற்கு அங்குள்ள ஒரு ஐந்தாறு பேர்களைப் பிடித்து வழக்கு போட்டிருக்கிறீர்கள். கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. ஒப்பிட்டுக் காட்டுவதற்காகச் சொல்கிறேன். நாகர்கோவிலில் பஸ் கொளுத்தியதுபோல் ஒரு சம்பவம் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய போராட்டத்தில் நடைபெற்றிருந்து, பத்து பேர்கள் செத்திருந்தால் இப்படி வழக்கு போடப்பட்டிருக்குமா? நாகர்கோவில் வட்டாரத்தோடு வழக்கு முடிந்திருக்குமா? நாகர்கோவிலுக்கு எடுத்துச் சொன்னவர் மதுரையில் இருக்கிற கட்சிச் செயலாளர். மதுரைக் கட்சிச் செயலாளருக்கு எடுத்துச் சொன்னவர் சென்னையில் இருக்கிற கருணாநிதி, அன்பழகன், சாதிக் பாட்சா. எனவே, இதில் ஒரு பெரிய சங்கிலித் தொடர்பு இருக்கிறது. ஆகவே போடு 500 பேர்கள்மீது வழக்கு என்று வெள்ளோட்டிலிருந்து ஆரம்பித்து சென்னை வரையில் உள்ள எங்கள் அத்தனை பேர்களையும் அழைத்து வழக்கு போட மாட்டார்களா? அப்படியா போடுவோம் என்றா ஆச்சரியப் படுகிறீர்கள்! போடாதவர்களா என்ன? இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மதுரைக்கு வந்திருந்த நேரத்தில் சில அசம்பாவித நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வழக்கு இருக்கிற காரணத்தால் விவரங்களுக்குள் போக விரும்பவில்லை.

ஆனால் அது சதி, செற்யகுழு கூடி சதி நடத்தப்பட்டு அந்த சதியின் காரணமாகதான் கருணாநிதியும் அன்பழகனும் மற்றவர்களும் இந்தக் கொலை முயற்சியில் ஈடுபட்டார்கள். துண்டிவிட்டார்கள். என்கின்ற அளவுக்கு எங்கள் மீது 307, 302, 120பி இப்படி எல்லாவித சட்டப்பிரிவுகளும் எங்கள் மீது தூவப்பட்டிருக்கின்றன. வழக்குகளும் தொடரப்பட்டிருக்கின்றன. ஆனால் இதே நிலைமையில் ஏன் மூப்பனாரை சதிக் குற்றத்தில் ஈடுபடுத்தவில்லை என்று நான் கேட்க மாட்டேன். ஏன் நண்பர் மாரிமுத்துவை இப்படிப்பட்ட குற்றத்திலே ஈடுபடுத்தவில்லை என்று நான் கேட்க மாட்டேன். நான் கேட்பது எல்லாம் ஒரு கட்சிக்கு ஒரு முறை என்று வைத்துக் கொண்டிருக்கிறீர்களே ஏன்! நாகர்கோவிலில் நடைபெற்ற சம்பவத்திற்கு யார்

பொறுப்பு என்பதைப் பார்த்து அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அதைப் போல மதுரையில் நடைபெற்ற சம்பவங்களுக்கு யார் பொறுப்பாளி என்று கருதுகிறீர்களோ அவர்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் மீது வழக்கும் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக நாங்கள் முன்பே அறிவித்து 144 தடை இருக்கின்ற காரணத்தால் நாங்கள் 144 தடை உத்தரவை மீறி இந்திரா காந்தி அம்மையார் வருகின்ற வழியிலே கறுப்புக் கொடி காட்டப் போகின்றோம் என்று அறிவித்துவிட்டு முதல் நாள் கூட்டத்திலும் இதைப்பற்றி விரிவாக அறிவித்துவிட்டு— நானும் பேசினேன்— இன்றைக்கு அந்த வழக்கிலே யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் பேசிவிட்டு மறு நாள் நாங்கள் கறுப்புக் கொடியை எடுத்துக் கொண்டு செல்கிறோம். ஆனால் நாங்கள் சதி வழக்கில் ஈடுபட்டோம் என்று வழக்கு போடுகிறார்கள். அதை வாபஸ் வாங்குங்கள். நாங்கள் நம்பிக்கையிலலாத் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்கிறோம் என்று பேரம் பேசிக் கொள்வதற்காக இதைச் சொல்லவில்லை.

அந்த வழக்கு என்னவாகும் என்று முதலமைச்சர் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார். மற்ற அமைச்சர்களுக்கும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கருணாநிதி தண்டனையிலிருந்து தப்பவே முடியாது என்று பேசுகிறார்கள். அதைப்பற்றி பயமில்லை. என்ன வந்துவிடும்! என்ன தூக்கு தண்டனையா வந்துவிடும்! அதைவிடப் பெரிய தண்டனை உலகத்தில் கிடையாது. அந்த தண்டனை கொடுக்க உங்களுக்கு இஷ்டமிருக்குமானால் கொடுத்து விடுங்கள். பூட்டோ சொன்னார். "நானே தூக்கு தண்டனை எனக்கு அளிக்கப்பட்டாலும் என்னுடைய சார்பிலும் என் குடும்பத்தின் சார்பிலும் கருணை மனு அளிக்க தயாராக இல்லை" என்று சொன்னார். அதையேத்தான் நானும் சொல்ல விரும்புகிறேன். இந்த வழக்கில் இந்திரா காந்தியை கொல்வதற்காக கருணாநிதியும் அன்பழகனும் சாதிக் பாட்சாவும் மற்றவர்களும் முயற்சித்தார்கள் என்று எங்களுக்கு தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டாலும் நாங்கள் அதை புன்னகையோடு ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். என்பதை மாத்திரம் இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் இந்த முரண்பாட்டை நாட்டுக்கு விளக்க வேண்டியவனாக இருக்கிறேன். பஸ்ஸுக்கு தீ வைக்கப்பட்டு 10 பேர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். கறுப்புக் கொடி போராட்டத்தில் யாரும் கொல்லப்படவில்லை. சில அசம்பாவிதங்கள் நடைபெற்றன. அதற்காக நான் வருந்துகிறேன். இல்லையென்று சொல்லவில்லை. அதே நேரத்தில் அசம்பாவிதம் எப்படி நடந்தது என்ற அந்த ஆராய்ச்சியில் நான் நுழைய விரும்பவில்லை.

அந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்
காரணம், அந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்
தால். ஆனால், அதற்கு ஒரு ந்யாயம், இதற்கு ஒரு ந்யாயமா ?
அதற்காக அவர்கள் மீதெல்லாம் ஒரு சதி வழக்கு போடுங்கள்
என்று நான் கேட்கவில்லை. எங்கள் மீது மட்டும் இப்படி
தொடர்ச்சியாக சங்கிலித் தொடர்போல வழக்கு போட்டிருக்
கிறீர்களே, இது ந்யாயம்தானா என்பதை கேட்டுக் கொள்
வதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

மேலும் சட்டம் ஒழுங்கு அமைதி தமிழகத்திலே எந்த அள
வுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய ஜேம்ஸ்
அவர்கள் தன்னுடைய தீர்மானத்தை முன் மொழிந்து பேசு
கின்ற நேரத்திலே விரிவாக குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதே
அவையில் புட்லூர் தண்டபாணியின் மர்ம மரணம் பற்றியும்
அவர் எந்த விதத்தில் கொலை செய்யப்பட்டார் என்பது பற்றி
யும் பல ஆதாரங்களை— அவர் கையெழுத்துக்களோடு கூடிய
ஆதாரங்களை அவருடைய துணைவியார் தந்த மனுக்களோடு
கூடிய ஆதாரங்களை, அவர் எழுதி வைத்த கணக்கில் யார்யாருக்கு
எவ்வளவு செலவு செய்து அந்த காண்டிராக்டைப் பெற்றிருக்
கிறார் என்பதைப் பற்றியும் ஆதாரம் இருந்தது. கொலை
செய்யப்பட்டவர் வேறு யாரும் இல்லை, அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்தான்— அவருடைய
கொலையைப் பற்றி இவ்வளவு ஆதாரங்களை எடுத்துச் சொல்லி
யும்கூட இதுவரை எந்த நடவடிக்கையாவது எடுக்கப்பட்டதா?

இங்கே இளஞ்செழியன்
பேராசிரியரும் மற்றவர்களும் இங்கே இளஞ்செழியன்
படுகொலையைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். திருவில்லிப்புத்
தூருக்கு பேச செல்லுகிறான் 12 வயது பாலகன் இளஞ்செழியன்.
பேசி முடித்துவிட்டு திரும்பி வருகிறான் மதுரைக்கு மற்றவர்
களோடு. வருகிற வழியில் கல்லால் அடித்துக் கொல்லப்படு
கிறான். இளஞ்செழியன் காரிலேயே பிணம் ஆகிறான். மிச்ச
மிருந்தவர்கள்— புகார் கொடுக்கின்றார்கள்— போலீஸ் புலன்
விசாரணை நடத்துகிறது. இந்த விசாரணை முடிவதற்குள்
அங்கேயிருக்கின்ற ஆட்சித் தலைவருக்கு அவசரம், கார் மரத்
திலே மோதியதால் இளஞ்செழியன் இறந்தான். கார் மரத்திலே
மோதியதற்கு காரணம் கல் வீசப்பட்டது என்கிறார். நான்
இப்போது கேட்க விரும்புகிறேன் பேராசிரியர் கேட்டதையே
திரும்பக் கேட்கிறேன். கார் மரத்திலே மோதியது இருக்கட்டும்.
கார் மீது கல் வீசப்பட்டதால் கார் மரத்திலே மோதியது என்று
மாவட்ட ஆட்சித் தலைவரே ஒப்புக் கொண்டிருக்கிறாரே—
அதற்காவது வழக்கு உண்டா? விசாரணை உண்டா, நடவடிக்கை
உண்டா ? அந்த மாவட்ட ஆட்சித் தலைவரையும் ஒரு படி
மிஞ்சிவிட்டார் நமது முதலமைச்சர் அவர்கள். மதுரையிலே
நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு விழாவில் பெரியாரைப்
பற்றி பேசுவதற்கு முதலமைச்சர் எடுத்துக் கொண்ட நேரத்தை
விட அதிகமாக— இளஞ்செழியனுடைய சாவைப் பற்றி எடுத்துக்

கொண்டு இவரே புலன் விசாரணையில் ஈடுபட்ட பெரிய போலீஸ் துப்பறியும் நிபுணரைப் போல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே பேசி இருக்கிறார்— இளஞ்செழியனுடைய சாவு கொலை அல்ல; விபத்துதான் என்று சொன்ன பிறகு எந்த நியாய உணர்வு படைத்த போலீஸ்காரராக இருந்தாலும் தன்னுடைய பதவியை எண்ணிப் பயப்படுவானே தவிர புலன் விசாரணையில் ஈடுபடுவானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11—50)

மாணவர்கள் நிலை என்ன? தியாகராயா கல்லூரிக்குள் நுழைகிறார்கள் போலீசார் துணையோடு ஆளும் கட்சிக்காரர்கள்; பச்சையப்பன் கல்லூரிக்குள் நுழைகிறார்கள்; ரணகளை ஆகிறது; மாநில கல்லூரிக்குள் செல்கிறார்கள்; ரணகளை ஆகிறது. இப்படி கல்லூரிக்கு கல்லூரி காவல் துறையினரின் உதவியோடு ஆளும் கட்சிக்காரர்கள் நுழைந்து மாணவர்களைத் தாக்குகின்ற அவலநிலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பொது வேலை நிறுத்தம் நடந்த நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர் புருஷோத்தமன் சைதாப்பேட்டைத் தொகுதியில் தனியாக வருகின்ற நேரத்தில் போலீசாரால் கைது செய்யப்படுகிறார். அப்படி கைது செய்யப்பட்டவரை போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருந்தால் பரவாயில்லை. ஆனால், போலீசார் எங்கே ஆளும் கட்சிக்காரர்கள் நின்று கொண்டிருக்கிறார்களோ, நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கின்றார்களோ அங்கே அழைத்துக் கொண்டு வந்து, அங்கே ஆளும் கட்சிக்காரர்கள் அவரை நையப் புடைப்பதும், அடித்து தீர்ந்து விட்ட பிறகு திருப்தி தானா என்று கேட்டுவிட்டு அதன் பிறகு போலீஸ் நிலையத்திற்கு கொண்டு போய் சிறையிலே அடைக்கப்படுகிறார். அது நியாயம்தானா? முறைதானா? நேர்மை பற்றிப் பேசுவதற்கு இந்த அரசுக்கு தகுதி இருக்கின்றதா என்று கேட்க விரும்புகிறேன்.

பொது வேலை நிறுத்தம் முடிந்த பிறகு கூட பவானி, ஆப்பக்கூடல் பகுதியில் போலீஸ் லாரியில் ஏற்றப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக, மார்க்சிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லீம் லீக் இன்னும் காந்தி-காமராஜ் காங்கிரஸ் கட்சி, குடியரசுக் கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்தவர்களையெல்லாம் லாரியில் ஏற்றப்படுகின்ற நேரத்தில், லாரியில் உள்ளவர்களை இழுத்துப் போட்டு ஆளும் கட்சிக்காரர்கள் தாக்கிய கொடுமை நடைபெற்றிருக்கிறது. அதிலே தொழிற் சங்கத் தலைவர் புஷிர் என்பவர் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

மார்க்சிஸ்ட் கட்சியின் மன்றங்கள்,
உப்பிலிபாளையத்தில் மன்றங்கள் அடித்து தகர்த்து
திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடர்பாக.
எறியப்பட்டன. பொது வேலை நிறுத்தத்தின்

யெல்லாம் கண்டிக்கின்ற கண்டனக்
திருப்பூரில் இவைகளை அனைத்துக் கட்சிகளினுடைய கண்
கூட்டம் நடைபெறுகிறது. அந்தக் கண்டனக் கூட்டத்தில் அன்றைக்கு
டனக் கூட்டம் அது. ஒருவர் விடுப்பிலே இருக்
பணியிலே ஈடுபடத் தேவையில்லாத உடையிலே இல்லாமல் மப்டி
கின்ற ஒரு போலீஸ்காரர் போலீஸ் கொண்டிருக்கிறார்.
யில் சைக்கிளில் அந்தப் பக்கம் போய்க் சார்ந்த ஒரு பஸ் அதிபரின்
அந்த நேரத்தில் ஆளும் கட்சியைச் கூட்டத்தில் வேகமாக.
மகன் பஸ்ஸை எடுத்துக் கொண்டு முயற்சியில் ஈடு
நுழைந்து இந்தக் கூட்டத்தைக் கலைக்கின்ற உள்ள போலீஸ்
படுகின்ற அந்த நேரத்தில் அந்த மப்டியிலே செத்திருக்கிறார். என்ன
காரர் அந்த பஸ்ஸால் அடிக்கப்பட்டு அந்த பஸ் அதிபரின்
நடவடிக்கை எடுக்கப்பட்டது? குற்றத்தை போடலாமா
மகன் மேல் இருப்பதை மாற்றி டிரைவர் மேல் உரியவர் மீது
என்கின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர
நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

கைது செய்யப்பட்ட
பல்லாவரம் காவல் துறையினரால் வேண்டுமென்று சோடா
சாராய வியாபாரி ஒருவரை விடுவிக்க காவல் நிலையத்தின்
பாட்டில்கள், கற்கள் அத்தனையும் அந்தக் மதுவிலக்குச்
மீது வீசப்பட்டன என்ற செய்திகள் வந்தன. கட்சி பிரமுகரை
சட்டத்தின்கீழ் விசாரிப்பதற்காக ஒரு ஆளும் அழைத்துச்
அரியலூர் காவல் நிலையத்திற்கு போலீசார் அந்த
சென்ற போது ஆளும் கட்சியினர் நூற்றுக்கணக்கில் நிலைமையைச்
காவல் நிலையத்தை முற்றுகை இடுகிறார்கள். கைதியை விடு
சமாளிக்க முடியாத அந்தப் போலீசார் இந்தக் வைத்தார்கள்.
தலை செய்து வீட்டிற்கு அனுப்பி

அமெரிக்கா போன்ற நாடுகளுக்
வெளி நாட்டிலே இருந்து தாயகம் திரும்பு
கெல்லாம் சென்று விட்டு முதல் அமைச்சர் தலைநகரத்திலே
கிறார். அவர் தமிழகத்திற்கு திரும்பி வரவேற்கப்
சென்னை மாநகரத்திலே விமான நிலையத்திலே அருகாமை
பட்டு காலை $10\frac{1}{2}$ மணி அளவிலே அண்ணா சிலைக்கு உரை
யில் போடப்பட்டிருந்த மேடையில் மக்களைச் சந்தித்து விமானம்
யாற்றுவார் என்று அறிவிக்கப்படுகிறது. ஆனால் வருகிற நேரம்
தாமதமாக வருகிறது. முதல் அமைச்சர் இங்கே அதற்கிடை
ஏறத்தாழ பிற்பகல் 2 அல்லது 3 மணி இருக்கும். அரிசனத் தோழர்
யில் முதல் நாள் பாங்கோ ஆறுமுகம் என்ற அந்த அரிசனத்
செத்து விடுகிறான். முதல் நாள் செத்து விட்ட கொண்டு அந்த
தோழனின் பிணத்தை காலையிலே எடுத்துக் போலீசார்,
வழியாகச் செல்லுகிறார்கள். முன் கூட்டியே

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 26

அண்ணா சிலைக்கு அருகே கூட்டம் இருக்கின்றது என்று சொல்லி
தடுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் போக விட்டு விட்டார்கள்.
அந்தப் பிரேத ஊர்வலம் செல்லலாம் என்ற அளவிலே முதலை
போலீசார் அப்படிப் போக விட்டு விட்டார்கள்.

பிரேத ஊர்வலம் அண்ணா சிலை அருகே செல்கிறது. அதிலே
50 அல்லது 60 பேர்தான் செல்லுகிறார்கள். அப்போதுபோகக்
கூடாது என்று தடுக்கிறார்கள். போலீசாரும் 'நீங்கள் திரும்பச்
செல்லுங்கள்' என்று சொல்லுகிறார்கள். கிராமப் புறங்களில்
—எனக்கு நம்பிக்கையில்லை சாஸ்திர சம்பிரதாயங்களில் என்
றாலும்—பல பேருக்கு நம்பிக்கையுண்டு. இறந்தவன் திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன்தான் என்றாலும், உற்றார்
உறவினருக்கு அந்த நம்பிக்கை இருக்கக்கூடும். இடுகாட்டுக்குச்
செல்லுகிற பிணத்தை அதே வழியில் திரும்ப எடுத்துச் செல்லக்
கூடாது என்பது ஒரு ஐதீகம், ஒரு வைதீக மனப்பான்மை. ஆனால்
அதற்கும் கட்டுப்பட்டு திரும்ப எடுத்துச் செல்லுகிறார்கள்.
அண்ணா சிலை வழியாக இல்லாமல் பெரியார் சிலை வழியாக
வேறு பக்கமாக கிருஷ்ணாம்பேட்டைக்குச் செல்ல எடுத்துச் செல்
லுகிறார்கள். ஆளும் கட்சியினர் கைகளில் கொடிகளோடு இருந்
தார்கள். அவர்களில் 200-க்கு மேற்பட்டவர்கள் பிணத்தைத்
துரத்திச் சென்று பிணத்தை வண்டியிலிருந்து கீழே இழுத்துப்
போட்டு உதைத்து, மிதித்து கொள்ளிச் சட்டியைப் பிடுங்கிக்
கொண்டு அதை எடுத்துச் சென்ற சிறுவனை உதைத்து அங்கிருந்த
பெண்களை அடித்து எவ்வளவு தொல்லைக்கு ஆளாக்கியிருக்
கிறார்கள். அதற்குப் பிறகு கண்டனக் கூட்டங்கள், அதைப் பற்
றிய மறுப்பு அறிக்கைகள் இவ்வளவு வெளி வந்தன.

நான் கேட்கிறேன்—முதலமைச்சர் அவர்கள் அண்ணா
சிலைக்கு அருகில் பேசத் தொடங்குகையில் 'காலையில் சில அசம்
பாவிதங்கள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன்—அதற்காக வருந்து
கிறேன். அதைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் கண்டிக்
கிறேன்' என்று இரண்டு மூன்று வாசகங்களை மாத்திரம் சொல்லி
யிருப்பாரேயானால் அந்தப் பிரச்சினை பெரிதாகவே ஆகியிருக்
காது. ஒரு அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த தோழன், அவனு
டைய பிணம் தூக்கி எறியப்படுகிறது. மிதிக்கப்படுகிறது. ஆனால்
ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுகிறார்கள்— கருணாநிதி
பிணம் தின்னும் கழுகு என்று. நான் அவர்களுக்கு மேடையில்
பதில் சொன்னேன் 'நான் என்றைக்கும் உங்களைத் தின்றது
கிடையாதே' என்று. 'பிணம் அகப்பட்டால் போதுமே, அதை
வைத்துக் கொண்டு விளம்பரம் செய்வதுதானே வேலை' என்று
பேசுகிறார்கள். எனக்குத் தெரியாதா நீங்கள் தேர்தல் நேரத்தில்
ஒட்டிய போஸ்டர்களை மறந்துவிடவில்லை. அவை பிணங்களின்
போஸ்டர்கள் அல்லவா உயிரோடு இருந்தவர்களுடைய போஸ்
டர்களையா போட்டீர்கள். அரசியல்வாதிகள் இப்படிப்பட்ட
சூழ்நிலைகள் ஏற்படுகிற நேரத்தில் அதை அரசுக்கு எடுத்துச்

1978 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

சொல்லவும், அரசு அதைக் கண்டிக்கத் தவறினால் மக்கள் மன்
றத்தில் எடுத்துச் சொல்லவும் கடமைப்பட்டவர்கள். அந்த
வகையிலேதான் ஒரு பிணத்திற்குக் கூட இப்படிப்பட்ட கொடுமை
நடைபெற்றிருக்கிறதே என்று சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்ட
நிலைமையை அன்றைக்கு நாட்டு மக்களுக்கு நாங்கள் எடுத்துச்
சொன்னோம்.

அவைகள் மட்டுந்தானா ஆளும் கட்சிக்காரர்கள் இழைத்த
கொடுமைகள் -- உத்தமபாளையம் தாசில்தாரை இழிவுபடுத்தி
அந்தப் பகுதி ஆளும் கட்சி அமைப்பாளர் அங்கே பேசினார் என்று
அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மதுரை மாவட்ட ஆட்சித்
தலைவர் அலுவலகத்திற்கு முன்னால் அரசு ஊழியர்கள் ஆர்ப்
பாட்டம் நடத்தியதும் இந்த ஆட்சிக் காலத்தில்தான். பெண்
களிடத்தில் தவறாக நடந்து பிடிபட்டார்கள் சில குண்டர்கள்.
அவர்களைத் தஞ்சை நகரத்தில் காவல் நிலையத்தில் அடைத்
தார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று ஆளும்
கட்சிக்காரர்கள் காவல் நிலையத்தில் நுழைந்து அதிகாரிகளை
மிரட்டி அங்குள்ள ரெக்கார்டுகளைக் கிழித்தெறிந்திருக்கிறார்கள்.
பரமக்குடி தாசில்தார் சம்பவம் பரம ரகசியம் அல்ல. எல்
லோருக்கும் பகிரங்கமாகத் தெரிந்த ஒன்றுதான். அதன்மீது என்ன
நடவடிக்கை எடுக்கப்பட்டது தாசில்தார் மீது என்ன குற்றம்
சுமத்த முடியும் என்ற முயற்சியிலே ஈடுபட்டார்களே தவிர என்ன
நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேனாம்பேட்டையில் ஒன்றரை
ஆண்டு காலத்திற்கு முன்பு கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களைப்
பிடித்துச் சென்றார்கள். அவர்களைப் காவலர்கள் கைது செய்
கிறார்கள். ஆனால் ஆளுங்கட்சிக்காரர்கள் அவர்களைப்
பிடித்து அடித்தார்கள், கட்டி வைத்தார்கள். என்ன நடவடிக்கை
எடுக்கப்பட்டது ?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

போலீஸ் லாக்கப்பில் இருந்த உறவினரை, மகனை மீட்க
போலீஸ் லாக்கப்பில் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. உள்ளே புகுந்து
''வெளியே விடுகிறாயா இல்லையா'' என்று மிரட்டி மகனை
அழைத்து வருகிறாரே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?
இவை எல்லாம் ஆளும் கட்சியினர் நிர்வாகத்தில், நீதியில் சட்
டத்தில் தலையிடுகிற காரியங்கள் அல்லவா? முன்னாள் நாடாளு
மன்ற உறுப்பினர் தி.சு. லட்சுமணன் அவர்கள் மேல் பயங்கர
மான வழக்குகளை இந்த அரசு போட்டிருக்கிறது. இதற்கிடை
யில் அவர் எந்த நேரத்திலும் கொலை செய்யப்படுவார் என்ற
அளவுக்கு மிரட்டல் பாணங்கள். சட்ட மன்ற உறுப்பினர்
ராஜரத்தினம் அவர்கள் வீட்டில் நடைபெற்ற சம்பவம் என்ன?
யாரோ குண்டர்கள் — அண்ணா திராவிட முன்னேற்றக் கழ
கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லமாட்டேன் — யாரோ

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 26

குண்டர்கள் ராஜரத்தினம் வீட்டில் நுழைந்து அவரை அடித்
தார்கள், காயப்படுத்தினார்கள். ராஜரத்தினம் நான்கு பேர்மீது
புகார் செய்தார். புகார் செய்த உடனே நான்கு பேரைக்கைது
செய்தார்கள். நான் கூட மகிழ்ச்சியடைந்து பத்திரிகைக்குச்
செய்தி வந்தபோது துணையாசிரியர்களிடத்தில் ''அண்ணா தி.மு.
க.வைச் சேர்ந்தவர்கள் என்று போடாதீர்கள்'' என்று சொன்
னேன். ராஜரத்தினமே 'குண்டர்கள்' தாக்கினார்கள்' என்று
சொன்ன செய்தியை அப்படியே போடுங்கள் என்று கூடச்சொல்லி
அனுப்பினேன். அப்படித்தான் செய்திகூட முரசொலிப் பத்தி
ரிகையில் கூட போடப்பட்டது.

[நண்பகல் 12.00]

என்ன நடந்தது? 4 பேர்களை கைது செய்தார்கள். கைது
செய்யப்பட்டவர்கள் உடனடியாக ஜாமீனிலே விடப்படு
கிறார்கள். ஆனால், அகில இந்திய அண்ணா தி.மு.க. அல்ல—ஆன
லும் திரு ராஜரத்தினம் அடிபட்ட காரணத்தால் — அடித்தவர்
களுக்கு சிபாரிசாக ஆளுங்கட்சிக்காரர்கள் வருகிறார்கள். திரு.
ராஜரத்தினம் மருத்துவ மனையிலே அனுமதிக்கப்படுகிறார்.
மருத்துவ மனையிலே இருக்கிற அடிபட்டவரை உடனடியாக
கைது செய்கிறார்கள். ஜாமீனிலே வெளியே வரமுடியாதபடி
326 செக்ஷனில் போட்டு அவரை கைது செய்கிறார்கள். அடி
பட்டவர் கைது செய்யப்படுகிறார், ஆனால் அடித்தவர்கள் உட
னடியாக ஜாமீனிலே விடப்படுகிறார்கள்.

முருகையனுடைய கொலை வழக்கு. சேலத்திலே நம்முடைய
முதலமைச்சர் பேசிய பேச்சை நேற்று டேப் ரிக்கார்டிலே கேட்டு
விட்டு அதற்குப் பிறகு தான் சேலத்திலே பொதுக் கூட்டத்திலே
நான் பேசியிருக்கிறேன். முருகையன் என்பவர் கொலை செய்
யப்பட்டிருக்கிறார் என்று பேசியதாக அறிந்தேன். முருகையன்
''என்பவராக'' ஆக்கப்பட்டதற்காக நான் வருத்தப்படுகிறேன்.
வாய்தவறி வந்த வார்த்தையாக இருக்கலாம். ஆனால் முருகையன்,
''என்பவர்'' அல்ல, சோவியத் போன்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம்
செய்துவிட்டு வந்தவர், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலே
ஒருவர், நாகப்பட்டினம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர்.
அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தக் கொலைக்கு
ஒரே ஒரு ஆள் தான் காரணம் என்று அங்கே இருக்கிற டி.ஐ.ஜி.
தேவாரம் என்பவர் பிடிவாதமாகச் சொல்லி வருகிறார். அன்
றைக்கு அவை முன்னவர் கூட எதிர்க்கட்சித் தலைவர்களிடத்
திலே வாக்களித்தார், என்னை நம்புங்கள் என்று. பேராசிரியர்
பேசும்போது கேட்ட நேரத்திலே கூட அதற்கு முன்னவர் பதில்
சொல்கிறபோது கொலைகாரர்களை சும்மாவிடமாட்டோம் —
கவர்னர் உரையிலே வருகிற வாசகத்தை — சொன்னார்கள், ஒரு
வரல்ல, பலர் தான் என்று எடுத்துச் சொன்னபோது கூட ப

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

ராக இருந்தாலும் சும்மா விடமாட்டோம் என்று வாக்களித்தார்
கள். அவர்கள் சொன்னது எனக்கு சற்று மகிழ்ச்சியை அளித்
தாலும், பலரால் கொலை செய்யப்பட்டதாக அந்தப் பகுதிமக்கள்
அனைவரும் சொல்கிறபோது கொலை செய்தவர் ஒரே ஒரு ஆள்
தான் என்று டி.ஐ.ஜி. பிடிவாதமாக சொல்கிறார். 37 இடங்
களிலே குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். மருத்துவ
விசாரணை சர்டிபிகேட் என்ன சொல்கிறது.

முடிந்தால் அவையிலே வையுங்கள் பார்க்கலாம். முத்துப்பேட்
டையிலே உள்ள டாக்டர் என்ன சொல்கிறார். நான்கிற்கு மேற்
பட்ட பல்வேறு ஆயுதங்களால் முருகையன் உடலிலே காயங்கள்
ஏற்படுத்தப்பட்டுள்ளன. நான்கிற்கு மேற்பட்ட ஆயுதங்கள்
என்றால் குத்திய போஸ் என்ன பிரம்மாவா? நான்கு கைகளிலே
நான்கு ஆயுதங்களை வைத்துக்கொண்டு குத்த, இல்லை, அவர்
மனிதர், இரண்டு கைகள் தான். ஒரு கையால் தான் குத்த முடி
யும். 37 குத்துக்களை வாங்கி பிணமாக விழுகிறார். முருகையன்,
நாடாளுமன்ற உறுப்பினர், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித்
தலைவர்களிலே ஒருவர். முதலமைச்சர் சென்று இரங்கல்
தெரிவிக்கிறார். அதற்குப் பிறகு நடைபெற்ற சம்பவங்கள் என்ன?
4,5 பேர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அந்தப் பகுதி
யிலே உள்ள மக்கள் அத்தனை பேரும் சொல்லியும்கூட தேவா
ரம் சொல்கிறார் இல்லை. இல்லை ஒரே ஒரு ஆள் தான் என்று.
தேவாரம் சென்னைக்கு வருகிறார். யாரைச் சந்திக்கவோ நான்
அறியேன் பராபரமே, அவர் நிருபர்களைச் சந்திக்கிறார், நிரு
பர்கள் கேட்கிறார்கள், 37 இடங்களிலே குத்தப்பட்டிருக்கிறாரே?
ஒரே ஒரு ஆள் மீது தான் வழக்கா என்று. தேவாரம் பதில்
சொல்கிறார். குத்தியவரே சொல்கிறாரே என்று குத்தியவரையே
ஒத்துக்கொள்ளவைத்துவிட்டு இந்தச் சதியிலே ஈடுபட்டிருக்கின்ற
மற்றவர்களை விடுவிப்பதற்கான பயங்கரமான சதி நடக்கிறதா
என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. முருகையன் கொலைப்
பற்றி முருகையனின் மனைவியினிடத்திலே கூட போலீஸ் அதிகாரி
கள் விசாரணை நடத்தவில்லை. உங்களுடைய கணவர் என்
றைக்கு ஊருக்குச் சென்றார். என்றைக்கு திரும்பி வருவதாகச்
சொன்னார், அவருக்கும் மற்றவர்களுக்கும் தகராறு உண்டா
என்று கேட்டிருக்க வேண்டாமா? முருகையன் அவர்களுடைய
அண்ணன் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார், அதை நான்
படிக்கமுடியும், ஆனால் நேரமில்லை, முருகையனின் போர்த்திய
சால்வைகூட ரத்தக்கறை படிந்து இருக்கிறதாம், அந்த சால்வை
யை கூட போலீசார் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவில்லை.
முருகையன் பாக்கெட்டிலே வைத்திருந்த சாவியை, அவர் கட்டி
யிருந்த கடிகாரத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள், அதை
திரும்ப கொடுக்கவேண்டுமென்று கேட்டு அவர்கள் மனு போட்
டார்கள். ஆனால் சர்க்கார் தரப்பு வக்கீல் அங்கே வாதாடிய
தைப்பற்றி கண்ணீர்சிந்தக் கடிதம் எனக்கு எழுதியிருக்கிறார்கள்?

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 26

என்ன கடிதம் தெரியுமா? சர்க்கார் தரப்பு வக்கீல் வாதிடுகிறாராம், ''என்ன கடிகாரம் தேவையா காமராஜர் என்ன கடிகாரமா கட்டியிருந்தார்'' என்று சர்க்கார் தரப்பு வக்கீல் கேட்கிறாராம். அதுமட்டுமில்லாமல், ''அந்தச் சாவி தேவை என்றால் கோத்ரெஜ் பீரோதானே, அந்தக் கம்பெனிக்கு எழுதினால் இன்னொரு சாவி தர மாட்டானா?'' என்று சர்க்கார் தரப்பு வக்கீல் கேட்கிறாராம். இப்படிப்பட்ட நிலையில் அவருடைய துணைவியாரையும், உற்றார் உறவினரையும் விசாரிக்காத சூழ்நிலையில் இன்றைக்கு முருகையன் படுகொலையைப்பற்றிப் புலன் விசாரணை நடைபெற்று இருக்குமேயானால், இந்த மன்றத்திலேயிருக்கின்ற எதிர்க் கட்சியாகிய நாங்கள் இஆலே சரியான விசாரணை நடைபெறவில்லை என்கின்ற குற்றச்சாட்டை எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கின்றோம். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பிறகாவது இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகின்ற கடமையும் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற எங்களுக்கெல்லாம் நிச்சயமாக இருக்கின்றது.

இன்னொன்று, உளி வீச்சு சம்பவம் பற்றிப் பேசினார்கள். அது கேலிக்குரியதாக, கிண்டலுக்குரியதாக, எதிர்க் கட்சித் தரப்பிலே அனுதாபத்திற்குரியதாக அந்தப் பேச்சுக்கள் எல்லாம் அமைந்தன என்றாலும், நம்முடைய முதலமைச்சரவர்களும் நம்முடைய முன்னவரவர்களும் பேரவையிலும் மேலவையிலும் பேசுகின்ற நேரத்தில், நாங்கள் அதற்காக வருத்தப்படுகிறோம் என்று சொல்லியிருந்தாலும்கூட, உளி வீச்சு சம்பவம் நடைபெற்றது குறித்து ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றவுடன் உங்கள் கட்சிப் பத்திரிகை என்ன செய்தி வெளியிடுகிறது? கைது செய்த போலீஸ்காரர் கருணாநிதிக்குச் சொந்தக்காரர் என்று, எனக்கே தெரியாத ஒரு இரகசியத்தை அவர்கள் வெளியிடுகிறார்கள். ஒருவேளை என்னுடைய இனத்தவராக இருக்கலாமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் ரிமாண்ட் மனு கொடுத்த இன்ஸ்பெக்டர்—சப் இன்ஸ்பெக்டர் அல்ல சொந்தக்காரர் பட்டியளில் வருபவர் அல்ல,—பக்கத்திலே இருக்கின்ற ஊரைச் சேர்ந்த நடராஜன் என்ற இன்ஸ்பெக்டர் கொடுத்திருக்கிறார், அதிலே உளி வீசிய செபாஸ்டியன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதை ஏற்றுக்கொள்வதில் என்ன தவறு இருக்கிறது? 'ஆமாம் கருணாநிதி மீது உளி வீசியது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன்தான், இருந்தாலும் நாங்கள் அவரைக் கைது செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம்' என்று சொன்னால் அது ஆளுங்கட்சிக்குப் பெருமைதரக் கூடிய காரியமாக இருக்காதா? அடிக்கடி சொல்வீர்களே, பாலசுந்தரம் கொலை, பாலசுந்தரம் கொலை என்று. அந்தப் பாலசுந்தரத்தைக் கொலை செய்ததாகக்

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

குற்றம் சாட்டப்பட்டவர் யார்? திராவிட முன்னேற்றக் கழகத் தைத் சார்ந்த மாசிலாமணி என்ற மாணவரும், திராவிட முன் னேற்றக் கழகத்தைச் சார்ந்த மற்ற மூன்று மாணவர்களும் என் றல்லவா குற்றம் சாட்டப்பட்டார்கள். அவர்களை உடனடியாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல என்று அறிவித்தோமா? அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படவில் லையா? அவர்கள் ஆயுள் தண்டனை பெற்று வேலூர் சிறைக்குள் இன்றைக்கு அடைபட்டுக் கிடக்கவில்லையா? எனவே, 'ஆமாம், செபாஸ்டியன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான்' எதிர்க் கட்சித் தலைவர் மீது உளி வீசியதற்காக நாங்கள் அவ னைச் சட்டப்படி தண்டிப்பதற்காக வழக்கு தொடர்ந்திருக்கி றோம் என்று சொன்னால் உங்களுடைய பெருமை என்ன குறைந் தாவிடப் போகிறது? அதை ஏன் பூசி மெழுகப் பார்க்கிறீர்கள்? அதை ஏன் கேலி செய்கிறீர்கள்? உளி வீச்சு ஒரு கதை என்கி றீர்கள், உளி வீச்சு ஒரு நாடகம் என்கிறீர்கள். ஆளுங்கட்சி பத்திரிகையே எழுதுகிறது, '' இப்போது கருணாநிதி புதிதாகத் தொடங்கியிருக்கிற உளி நாடகம் அந்த மேடையில் எத்தனை நாட்களுக்குத் தொடருகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப் போம்'' என்று தென்னகத்திலும், '' உளி வீச்சு நாடகத்தை வைத்து கருணாநிதி கும்பல் செய்து வருகிற அரசியல் மோசடி கள் அம்பலமாகும்'' என்று அண்ணா பத்திரிகையிலும் வெளி யிடப்பட்டிருக்கிறது.

நான் இன்னொரு பத்திரிகையையும் படித்துக்காட்ட விரும்பு கிறேன். அவையிலுள்ளவர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன். இது இந்தச் சட்டமன்ற கோட்டைக் கொத் தளத்திற்குள்ளேயே படிப்பகத்திலே அனுமதிக்கப்பட்டிருக்கின்ற பத்திரிகை, அதனால், இதைப் படிப்பது தவறாகாது. தலைவ ரவர்களே, நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன், உங்கள் அனுமதியோடு படிக்கிறேன்:

சர்வ கட்சிக் கூட்டம்

பராக்! பராக்!! நாராயணசாமி 9 நாள்

உளி வீச்சைக் கண்டித்து, மன்னை

உண்ணாவிரதம்!

அன்பில் தர்மலிங்கம் திருச்சி மலைக்கோட்டை உச்சியில்

வேட்டியில்லாமல் தீக்குளிப்பு!

கம்யூனிஸ்ட் மாணிக்கம் மழுங்கிப்போன அரிவாளால்

கழுத்தை அறுத்துக்கொள்ளுதல்!

உளி வீச்சு சம்பவத்தைக் கண்டித்து அப்துல் சமதுபாயின்

மீண்டும் ஒரு சுன்னத்!

பார்வர்டு பிளாக் ஆண்டித் தேவரின் உடன்கட்டை ஏறு

தல்!

வி. பி. சிந்தனின் பத்து நாள் பத்திய சாப்பாடு !

குசேலரின் கழுமரம் ஏறுதல் !

சுந்தர்ராஜனின் சுண்ணாம்புக் காளவாயில் குதித்தல் !

குமரி அனந்தன் குமரியிலிருந்து சென்னைவரை தரையாலே நடந்து வருதல் !

சட்டமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்காகப் படிப்பகத்திலே வாங்கிப் போடப்படும் பத்திரிகை. இதைப்பற்றி முன்பே பலமுறை தங்களிடத்தில் சொல்லியிருக்கிறேன் அலுவல் அறையில், முன்னவரிடத்திலும் சொல்லியிருக்கிறேன். இந்த அளவிற்கு உளி வீச்சு சம்பவத்தை நீங்கள் எழுதிவிட்ட காரணத்தினால் நான் ஒன்றும் புண்படப் போவதில்லை. நிலைமைகள் எப்படியிருக்கின்றன என்பதை எடுத்துரைப்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனேயல்லாமல் வேறல்ல என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறேன்.

[பிற்பகல் 12–10]

நம்முடைய முதல்மைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நேரத்தில் 1977 ஆம் ஆண்டு மே திங்கள் 23 ஆம் நாளில் ஒன்றைச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று பதவிக்குப் போகிறவர்களின் கணக்கை இப்பொழுதே சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் பதவிக்குப் போனபின் தவறு செய்து சொத்து சேர்த்திருந்தால் நடவடிக்கை எடுத்து அவர்களுடைய கணக்கைத் தீர்த்து விடுவோம் என்று நம்முடைய முதலமைச்சர் பேசினார். அப்படி கணக்குத் தீர்க்க பல பேருடைய பட்டியல் என்னிடத்திலே இருக்கிறது.

நாகர்கோயிலுக்குச சென்று பார்த்தால் அங்கே முன்னாள் எம்.பி. கட்டியிருக்கிற மாட-மாளிகை, கூட கோபுரம் நம்முடைய முதலமைச்சருடைய கண்ணுக்குத் தெரியாடல் போகாது. தில்லை நகரத்திலே ஒரு எம்.பி. கட்டியிருக்கிற மாட மாளிகை, கூட கோபுரம், உப்பரிகை, நம்முடைய முதலமைச்சரவர்களுடைய கண்ணுக்குத் தெரியாமல் போகாது. எனவே, தஞ்சைக்குச் சென்றாலும், வேறு எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் அவர் சொன்ன கணக்குத் தீர்க்கவேண்டியவர் பட்டியலில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அவரால் புரிந்துகொள்ள முடியும்.

ஊழல்கள்—என்னுடைய ஆட்சியில் அது நடைபெறாது, இது கொள்கை என்று இப்பொழுது கூடச் சொன்னார். நம்முடைய நண்பர் கந்தசாமி அவர்கள் எழுப்பிய பிரச்சனைக்கு, சுப்பு அவர்கள் தொடர்ந்து எழுப்பிய பிரச்சனைக்கு முதலமைச்சர் பதில் அளிக்கிற நேரத்தில் இது எங்களுடைய கொள்கை, இதிலேயிருந்து நழுவ மாட்டோம் என்று சொன்னார்.

கட்சிக்குக் கட்சி பாரபட்சம் காட்டு
ஊழல்கள் பலவிதம். ஊழல்தான்.
வதுகூட ஊழல்தான். ஆளுங்கட்சி தலையீடு கூட சொல்கிறேறன்
ஒரு உதாரணம் சொல்கிறேன்—சின்ன உதாரணம் அன்று ஜே-1
1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12 ஆம் நாள் காவலர்கள்
சைதாப்பேட்டை காவல் நிலைய சரகத்தில் உள்ள ஏன்
மிஸ்ஸி என்ற ஒரு பெண்ணைக் கைது செய்கிறார்கள். 28 ஆம் எண்.
தெரியுமா ? சைதாப்பேட்டை ஆத்துச்சேரியில் சாராயம்
வீட்டில் மணியினுடைய மனைவி மிஸ்ஸி என்பவளை கைது
விற்றதாக சைதை உதவி ஆய்வாளர் அச்சுதன் நாயர் உப
செய்து அவரிடமிருந்து சாராயம், விற்கப் பயன்படுத்திய கைப்பற்றப்
கரணங்கள் எல்லாம் கைப்பற்றி, ரூபாய் 53 பணமும் நிலையம்
பட்டு, சுமார் 10 மணிக்கு ஜே. 1 சைதை காவல் குற்ற
கொண்டுவந்து லாக் அப் செய்கிறார். அவர்மீது ஜே. 1 அவசரச்
எண். 307/79-ல் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. சிறைத் தண்
சட்டத்தின்படி இதற்காக ஒரு நபருக்கு 5 வருட யாரையும்
டனையும், ரூபாய் 7,000 அபராதமும் விதிக்கலாம் ; முதல் குற்ற
ஜாமீனில் விட முடியாது. அவசரச் சட்டத்தின்படி தண்டனையும்,
வாளிக்கு கட்டாயமாக 6 மாதம் கடுங்காவல் இரண்டாவது, போலி
ரூபாய் 2,000 அபராதமும் விதிக்கலாம். ஆனால், இரவு
சாருக்கு ஜாமீனில் விட அதிகாரமே இல்லை. இல்லத்திலேயிருந்து
சுமார் 1 மணிக்கு ஒரு முக்கியமானவருடைய வடிவேலுவுடைய மகன்
தொலைபேசியில் ஆணை வந்து இரவு, கொடுத்து இந்த மிஸ்ஸி
டி.வி. ராஜேந்திரன் என்பவர் ஜாமீன் விடுதலை செய்து
என்ற அம்மையாரை தன் பொறுப்பிலே சட்டம், இவ்
கொண்டு போகிறார்கள் என்றால், மது விலக்குச் சட்டம், ஆளுங்
வளவு அதி தீவிரமாகக் கொண்டு வரப்படுகிற செய்யப்பட்ட ஒரு
கட்சிக்காரருடைய தலையீட்டால், கைது அதிகாரம்
பெண்—ஜாமீனில் விட முடியாது, அதுவும் விடுக்கின்ற வரையறுக்கப்பட்ட
போலீசுக்குக் கிடையவே கிடையாது என்று
பிறகு, எப்படி ஜாமீனில் விடப்பட்டார்.

அதைப்போலவே ஒரு வழக்கு—அது 15 ஆம் தேதி — இது
13 ஆம் தேதி. இதே அச்சுதன் நாயர் என்ற சைதை காவல்
நிலைய உதவி ஆய்வாளர், இதை ஆத்து நகரில் சித்ரா என்கிற
ஒரு பெண்ணைக் கைது செய்கிறார். அந்தப் பெண் நிறைமாத
கர்ப்பிணி. அவரை ஜாமீனிலே விட மறுக்கிறார்கள். சிறைச்
சாலையிலே அடைக்கிறார்கள். சிறைச்சாலையிலேதான்
பிரசவம் கூட நடைபெற்றது என்ற செய்தி வருகிறது. ஏன்
இரண்டு வழக்குகளுக்கு இரண்டு விதமான டிரீட்மெண்ட் என்று
கேட்கிறேன் ? இதிலே இரண்டு நிலை எடுக்கவேண்டிய காரணம்
என்ன ? ஆளும் கட்சியினருடைய தலையீடு என்பதைத் தவிர
வேறு காரணம் ஏதாவது கூற முடியுமா ?

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 26

ஊழலே இல்லை, குறைபாடுகளே இல்லை, முறை கேடுகளே
இல்லை என்று சொல்கிறீர்களே —நான், நமது அமைச்சர் —
கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள்
இன்று அமைச்சரவையில் அமர்ந்துள்ளார் —அவர் அமைச்சராகி
விட்டார் —நான் மகிழ்ச்சியடைகிறேன், வரவேற்கிறேன் வாழ்த்து
கிறேன் —ஆனால், அவர் 1977 ஆம் ஆண்டு அண்ணா தி.மு.க.
ஆட்சி அமைக்கிறபோது—பிறகு, 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள்
18 ஆம் நாளில் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திற்கு —குவாலிடி
பிரிண்டர்ஸ் முழு உரிமையாளர் ஆக விளங்கும் திரு. கே. ஏ.
கிருஷ்ணசாமி அவர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட —முக்கியப்
பாட புததகங்களை அச்சு வேலைகளை செய்யக்கோரும் ஒப்
பந்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல இலட்ச ரூபாய்க்கான
ஒப்பந்தம் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களின் சொந்த நிர்
வாகத்திற்கு அ.தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு ஒப்பந்தம் கொடுக்
கப்பட்டிருக்கிறது. டெண்டர் விட்டார்களா என்பது தெரியாது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலை
வர் கூறுகிற சம்பவம் வழக்கு மன்றத்திற்குச் சென்று முறையாக
விவாதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. தயவுசெய்து
அந்த தீர்ப்பை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்
படித்துப் பார்த்து அதில் ஏதாவது இருந்தால் இந்த மாமன்றத்
திலே வைக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அவரே
சொல்கிறமாதிரி '' புழுதி வாரி தூற்றுகிற '' அந்தப் பணியில்
ஈடுபடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே நீதிமன்றத்திற்கு
சென்றது அது அல்ல. நீதிமன்றத்திற்குச் சென்றது திரு. கே. ஏ.
கிருஷ்ணசாமி அவர்கள் மேல் சபைக்கு நின்றதை எதிர்த்து தேர்
சகாயம் தொடர்ந்த வழக்கு. அந்த விவரத்திற்குள்ளே நுழைய
நான் தயாராக இல்லை, அந்தத் தீர்ப்பைப்பற்றி சரியா தவறா
என்று சொல்லவரவில்லை. ஆனால், 1977-ல் பதவிக்கு வந்த
பிறகு ஒரு பெரிய ஒப்பந்தம் அவர் உரிமையாளராக இருக்கும்
நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தில்
1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாளில் மேலவைத்
தேர்தலின் நின்று வெற்றி பெறுகிறார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி எழுந்திருக்கிறார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தயவுசெய்து
அமருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடிக்கும் வரையில்
தாங்கள் யாரும் குறுக்கிடப்போவது இல்லை என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 26]

திரு. மு. கருணாநிதி : 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம்
நாளில் அவர் அமைச்சர் ஆகிறார். அமைச்சர் ஆவதற்கு முன்பு,
அவருக்கே தெரிகிறது தாம் குவாலிடி பிரிண்டர்ஸினுடைய
உரிமையாளராக இருந்து ஒப்பந்தக்காரராக இருந்தால் சரியாகாது
என்று தெரிகிறது. அதனால் அதை மாற்றி வேறு ஒருவருக்கு
தந்துவிட வேண்டும் என்று விரும்புகிறார். அதனால் இவர்
கடிதம் எழுதினார் பாட நூல் நிறுவனத்தாருக்கு. அவர் கடிதம்
எழுதிய தேதி 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள்.
அவர் எழுதிய கடிதத்தில் அவருடைய சகோதரர் மாணிக்கம்
என்பவருடைய மகன் குணாளன் பெயரால் ஒரு மேகலை எண்டர்
பிரைசஸ் என்ற நிறுவனம் இருப்பதாகவும் அவரை இந்த ஒப்பந்
ததாரராக பொறுப்பேற்று —திரு. கே. ஏ. கிருஷ்ணசாமிக்கு
பதிலாக நியமிக்க வேண்டும் என்றும் கடிதம் எழுதுகிறார்.

அவருக்கு பதில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12-ம் நாளன்று
வருகிறது. என்ன சுறுசுறுப்பு பாருங்கள், நம் பாட நூல் நிறு
வனத்திற்கு! 12-ம் தேதியே பதில் கடிதம் வருகிறது. திரு.
கே. ஏ. கிருஷ்ணசாமிக்கு தந்த ஒப்பந்ததாரர் உரிமையை ரத்து
செய்கிறோம். அந்த ஒப்பந்தத்தை திரு. குணாளனுக்கு
உரிமையாக்குவது (மேகலை எண்டர்பிரைசின்-உரிமையாளர்) சம்
பந்தமாக தனியாகத்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்று
தெரிவிக்கிறார்கள். பதில் நியாயமானதாகத்தான் தோன்றுகிறது.

(பிற்பகல் 12—20.)

நேரத்தில் வழக்
நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிற
கறிஞர் ராகவாச்சாரி அவர்கள் பாட நூல் நிறுவனத்தின்
தலைவர் மோகனரங்கம் அவர்களைப் பார்த்துக் கேட்கிறார்—
அவர் 55 வயதைத் தாண்டியவர்— ராஜாஜி மண்டபத்தில் முதல
மைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் 55 வயதைத் தாண்டிய
வர்களுக்கு யாருக்கும் வேலை நீட்டிப்பு கிடையாது என்று சொன்
னார்— அடுத்த 2 நாளுக்குப் பிறகு வேலை நீட்டிப்புப் பெற்றவர்
இந்த மோகனரங்கம். அந்த மோகனரங்கத்தை வழக்கறிஞர்
ராகவாச்சாரி கேட்கிற போது, கோர்ட்டாருக்குச் சொல்லுங்
கள். ஒப்பந்தத் தேதிக்கும் ஒப்பந்தம் ரத்தான தேதிக்கும்
இடையில் அச்சிட குவாலிடி பிரின்டர்ஸ்ஸுக்கு ஆர்டர் கொடுக்
கப்பட்டதா ? ஒப்பந்தம் ரத்தான பிறகு ஒரு வேலையும்
கொடுத்ததாக எனக்கு நினைவு இல்லை என்று அவர் பதில்
சொல்கிறார். வேறு யாருக்காவது புத்தகம் அச்சிடக் கொடுத்
தார்களா ? மேகலை ஏஜென்சியாருக்குக் கொடுத்தார்கள்.
மேகலை ஏஜென்சியார் யார் ? அவருடைய சகோதரர் மகன்
குணாளன் என்று சொல்லப்படுகிறது. நான் என்ன குறிப்பிடு
கிறேன் என்றால் ஒப்பந்தம் செய்து கொண்டவர் தான் அமைச்சர்
ஆகின்ற தகுதியைப் பெற்றவுடன் அந்த ஒப்பந்தத்தை நான்

ரத்து செய்து கொள்கிறேன் என்று சொல்வதற்குப் பதிலாக இவர்களை, இன்னாரை நியமித்துக் கொள்ளுங்கள் என்று உத்தரவிட்டு அல்லது கடிதம் எழுதி அது கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றால் அது முறைகேடு இல்லையா என்று இந்த அவையில் நான் குற்றச்சாட்டு வைக்க விரும்புகிறேன் அல்லாமல் வேறு அல்ல.

பாட நூல் நிறுவனம் சர்க்காருக்குத் தொடர்புடையது அல்லவா என்பதைப் பற்றி சர்க்காரியா விசாரித்து இருக்கிறார். அது குறித்து சர்க்காரியா கமிஷன் சொல்கிறது. இதிலே வருகிற குறிப்பில் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தின் நோக்கங்களைப் பற்றிச் சொல்கிறபோது '' தமிழ்நாடு அரசு, இந்நிறுவனத்திற்கு மாற்றித் தரக்கூடிய அதன் சொத்துக்கள், உரிமைகள், சிறப்பு உரிமைகள், பொறுப்புகள் எல்லாவற்றிடனும் பாட நூல்களை வெளியிடுவது தொடர்பான தமிழ்நாடு அரசின் அலுவலையும் ஏனைய நடவடிக்கைகளையும் கையகப்படுத்தி மேற்கொள்வது அந்த அலுவலையும், நடவடிக்கைகளையும் தொடர்ந்து நடத்தி வருவது, தமிழ்நாடு அரசு அவ்வப்போது அளிக்கக்கூடிய அதிகாரங்களைச் செலுத்துவது, கடமைகளை ஆற்றுவது கட்டளைகளை நிறைவேற்றுவது, பொதுக் கல்வி, தொழில் நுட்பக் கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆக்கம் தருவது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இவைகளை மையமாக வைத்து சர்க்காரியா, அவர்கள் அப்போதிருந்த கல்வி அமைச்சர் அவர்கள் முறைகேடாக நடந்து கொண்டார் என்று சொல்லி சாட்டப்பட்ட குற்றச்சாட்டை விசாரித்து, சர்க்காரியா அவை நிரூபிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அந்தக் குற்றச்சாட்டுக்கள் என் மீது சாட்டப்பட்டு இருந்தாலும், அல்லது அன்றைக்கு அமைச்சர் பொறுப்பிலே இருந்தவர்கள் மீது சாட்டப்பட்டு இருந்தாலும், அவைகள் எல்லாம் தவறானது என்று அன்றைக்கு நாங்கள் தெரிவித்து புத்தகம் கூட வெளியிட்டு இருக்கிறோம். அதை இந்த அவையில் வைத்து விட்ட அந்தக் காரணத்தாலே அது பற்றி நான் ஒன்றும் இப்போது விளக்கமாக பதில் அளிக்க விரும்பவில்லை. நம் கட்சியை விட்டு வேறு கட்சிக்குப் போய் விட்டார்கள் என்ற காரணத்திற்காக அது தவறு என்றும் நான் விளக்க விரும்பவில்லை. ஆனால் பாட நூல் நிறுவனத்திற்கும் அரசாங்கத்திற்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்பது சர்க்காரியா அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பாட நூல் நிறுவனத்தின் நோக்கங்கள், கொள்கைகள், விதி முறைகள் இவைகளில் சொல்லப்பட்டு இருக்கிறது என்பதற்காகத்தான் இதை நான் இங்கே எடுத்துக் காட்டினேன்.

ஒவ்வொருவருக்கும் எப்படிப்பட்ட பதவிகளுக்கு எல்லாம் வர முடிகிறது. ஒருவர் தூதுவராக ஆக்கப்பட்டு இருக்கிறார். டெல்லிக்கு. அவர் நம்முடைய முதலமைச்சருக்கு ஒரு சவால் விட்டார். எப்போது தெரியுமா? சேலத்தில் நாடாளுமன்றத்

தேர்தலில் வேட்பாளராக நிற்கிறபோது ஒரு தேர்தல் கூட்டத்தில், அ.தி.மு.க. மேடையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நேரத்தில் அவரது மேடையில் பேசிய ஒருவர் சொன்னார். 1972-ல் ஒரு கைதியை விடுவிக்க ராஜாராம் ஒரு லட்சம் ரூபாய் பெற்றார் என்று புகார் கூறப்படுகிறது. இது பற்றி சம்பந்தப்பட்டவர்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்று கூறினார். அந்தக் கூட்டத்தில் பேசிய எம்.ஜி.ஆர். அந்தப் புகார் மத்திய அரசு சம்பந்தப்பட்ட விஷயம் என்று கூறினார். அதைப் பற்றி ராஜாராம் ஒரு அறிக்கை வெளியிட்டார். அது எல்லாப் பத்திரிகையிலும் வந்தது. என்ன அறிக்கை தெரியுமா? என்னைப் பற்றி இதுவரையில் சொல்லப்படாத புகார் எம்.ஜி.ஆர். கூட்டத்தில் சொல்லப்பட்டது என்று பத்திரிகை வாயிலாக செய்தி அறிந்தேன். யாரோ ஒரு கைதியை விடுதலை செய்ய ஒரு லட்சம் ரூபாய் நான் 1972-ல் பெற்றதாக ஜேப்பியார் புகார் கூறி இருக்கிறார். 1972 முதல் 1976 சனவரி வரையில் நான் அமைச்சராக இருந்து இருக்கிறேன். அதுவரையில் எம்.ஜி.ஆரோ அல்லது எம்.ஜி.ஆர். கட்சியைச் சேர்ந்தவர்களோ அப்படி எந்தப் புகாரும் கூறவில்லை. தேர்தலில் அவர் கட்சியை எதிர்த்து போட்டியிடுகின்ற ஒரே காரணத்தால் அவர்கள் இந்தப் புகாரைச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அந்தப் புகார் உடனடியாக நிரூபிக்கப்பட்டால்தான் இத்தொகுதியில் போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் அல்லது அப்படி நிரூபிக்கப்படாவிட்டால் குறைந்த பட்சம் எம்.ஜி.ஆர். கட்சி வேட்பாளர் வாபஸ் வாங்கக்கூட வேண்டாம் என்றால், அதற்குப் பதிலாக எம்.ஜி.ஆர். பகிரங்க மன்னிப்பு கேட்பாரா? இப்படி ராஜாராம் கேட்டார்.

மன்னிப்பு கேட்பாரா என்று கேட்டார் அப்படியா கேட்டாய்? டெல்லிக்குப் போ தூதராக என்று நம்முடைய முதலமைச்சர் இன்று அவரை அனுப்பியிருக்கிறார். இது அவருடைய பரந்த மனப்பான்மை; இதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அந்த ஊழல் புகார் என்னவாயிற்று என்பதே என்னுடைய சந்தேகம்.

இன்னொன்று, திண்டுக்கல் மருத்துவமனைப் பற்றி பேசினார்கள். என்னிடம் ஒரு விவரம் இருக்கிறது. திண்டுக்கல்லிலே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சௌந்திரராஜன் அவர்களும், மாயத்தேவர், எம்.பி. அவர்களும் ஒரு நாள் திடீரென்று அந்த மருத்துவ மனையில் சர்பிரைஸ் விசிட் சென்றார்கள். அப்போது டாக்டர் உத்தமபுத்திரன் ஆரம்ப சுகாதார நிலையம், சின்னாளம்பட்டி, மதுரை மாவட்டம்— 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 14-ம் நாளன்று காலை 11 மணியளவில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சௌந்திரராஜன் அவர்கள் மாயத்தேவர், எம். பி. அவர்களோடு மருத்துவ மனைக்குச் சென்றபோது சுமார் 2,000 ரூபாய் மதிப்

புள்ள, டபிள்யூ.எச்.ஓ. அளித்த, விலை உயர்ந்த மருந்துகளை டாக்டர் உத்தமபுத்திரன் கடத்திச் சென்றபோது கையும் களவுமாகப் பிடித்தார்கள். அது வரவேற்கத்தக்கது. அதற்கு ஒரு சபாஷ்.

2,000 ரூபாய் மதிப்புள்ள மருந்து திருட்டைக் கண்டு பிடிக்கிறார், நம்முடைய அமைச்சர். கையும் களவுமாக, பக்கத்திலே மாயத்தேவரை சாட்சியாக வைத்துக் கொண்டு பிடிக்கிறார்கள். உடனடியாக சஸ்பெண்ட் செய்ய உத்தரவிட்டார். அதற்கு ஒரு சபாஷ் கூடவே தருவோம்.

அதற்குப் பிறகு சுமார் 10 நாட்களிலே மீண்டும் அதே மருத்துவ மனையில் அந்த உத்தமபுத்திரன் வேலைக்கு அமர்த்தப்பட்டார். விசாரணை நடத்தப்படவில்லை; சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. காரணம் என்ன? இடையிலே என்ன நடந்தது? எவ்வளவு புரண்டது? இந்த உத்தமபுத்திரர்கள் ஆட்சியில் அந்த உத்தமபுத்திரன் மீண்டும் எப்படி அதே மருத்துவ மனையில் வேலைக்கு அமர்த்தப்பட்டார்? இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திலே நான் எழுப்புகின்ற இந்த வினாவிற்கு பதில் தேவை.

இன்னொன்று. செங்கற்பட்டு மாவட்டத்திலே ஏ.பி.பி.— அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர் கிரேடு 2 பதவி. அதை தேர்ந்தெடுக்க அழைக்கப்பட்ட நபர்கள் 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 3-ம் நாளில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. ஆனால் நேர்முகத் தேர்வுக்கு வராத, இராதாகிருஷ்ணன் என்பவர் அந்த அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர் கிரேடு 2 பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒரு கமிட்டி போட்டு, அந்தப் பதவிக்கு ஆள் நியமனம் செய்கிறார்கள். ஆனால் அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர் தேர்வுக் குழுவின் இண்டர்வியூவுக்கு போகாத இராதாகிருஷ்ணன் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுகிறார். உடனடியாக அரசு கடிதம் போகிறது. எல்.டிஸ். 20102/78, நாள் 1979-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 24-ம் நாளன்று. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர் இராதாகிருஷ்ணனை அந்த பதவிக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் அவருக்கு அந்த பதவி கொடுக்கக் கூடாது என்றும் அரசாங்கம் தெரிவிக்கிறது. இண்டர்வியூவுக்குப் போகாதவரை அந்தப் பதவிக்கு எடுக்கக் கூடாது என்று 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24-ம் நாளில் அரசாங்கம் தெரிவிக்கிறது. அதற்குப் பிறகும் இராதாகிருஷ்ணன் ஒழுங்கு முறைகளுக்கு மாறாக அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர் கிரேடு 2 ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார். பிரா[illegible]தானா? இது எப்படி நடந்தது என்று அறிய வேண்டாமா? இது முறை இடையிலே என்ன நடந்தது என்று கூற வேண்டாமா? இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் பயன்படாது என்று கருதுகிறீர்களா? இதற்கு

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் காலாகாலமாக போக்குவரத்துத் துறையில் பதவி உயர்வு கொடுப்பதில் அரசாங்கம் உத்தரவு போட்டிருந்தது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த அந்தக் காலத்தில் கூட 'பிரேக் இன்ஸ்பெக்டர்கள்' அதாவது 'மோட்டார் வெகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்ஸ்' அவர்களுக்கும் சூப்பிரண்டுகளுக்கும் பதவி உயர்வு கொடுக்க அரசு 1:1 என்ற முறையில் தான் உத்தரவு போட்டிருந்தது. அந்த முறையில்தான் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது திடீரென்று ஒரு உத்தரவு. அந்த 1:1 உத்தரவு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்தது. அதன் பிறகு இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது. இந்த ஆட்சி கலைக்கப்பட்டு இங்கே குடியரசுத் தலைவர் ஆட்சி கவர்னர் ஆட்சி நடைபெற்றது. அப்போதும் 1:1 தான் இருந்தது. ஆனால் ஊழல் எல்லாம் ஒழிக்கப்போகிறோம் என்று சொன்ன இந்த ஆட்சியில் என்ன நடந்தது? அந்த 1:1 என்ற உத்தரவு மாற்றப்பட்டது. ஒரு சூப்பிரண்டுக்கு பதவி உயர்வு கொடுத்தால் 4 பிரேக் இன்ஸ்பெக்டர்களுக்கு பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று 1:4 என்கிற வகையில் என்ற உத்தரவு வந்தது. 1:1 என்ற உத்தரவு மாற்றப்பட்டு பிரேக் இன்ஸ்பெக்டர்கள் மோட்டார் வெகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்களுக்குச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 150-க்கு மேற்பட்டவர்கள் பெரும் பணம் வசூல் செய்தார்கள் என்றும் அதன் காரணமாக வசூலிக்கப்பட்ட தொகை கொடுக்கப்பட்டதன் காரணமாக அதற்கு பரிசாக இந்த சூப்பிரண்டு மோட்டார் வெகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு அளிக்கப்படுகின்ற பதவி உயர்வு 1:1 என்று இருந்ததற்குப் பதிலாக 1:4 என்று அதாவது ஒரு சூப்பிரண்டு பதவி உயர்வு பெற்றால் அதற்குப் பிறகு 4 பிரேக் இன்ஸ்பெக்டர்கள் பதவி உயர்வு பெற்ற பிறகுதான் அடுத்த ப்ரமோஷன் சூப்பிரண்டுக்கு என்று மாற்றியிருக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அதை இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மூலமாக இந்த அவைக்கு எடுத்துக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அடுத்து இன்னொன்று' பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் என்று ஒன்றிருக்கிறது. அதிலே இரண்டு கப்பல்கள் ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்தன. அதிலே பழுது ஏற்பட்டதாகவும் அது பழுது பார்க்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. அந்தப் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கு சாமான்களை ஏற்றுகின்ற கப்பல்கள் இரண்டு வாங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் பால்டிகா டைப் என்கிற லெனின்கிராட் கப்பல்களை வாங்கித் தர ஒரு கம்பெனி முன் வந்தது. அந்தக் கப்பல்களின் நம்பர்கள் என்னவென்றால் ஒன்று 642; இன்னொன்று 643. அந்தக் கப்பலினுடைய தாங்கும் சக்தி 38,250 மெட்ரிக் டன்ஸ். அந்தக் கப்பல் கடலுக்குள்ளே செல்லுகின்ற ஆழம் 32 அடி. ஒவ்வொரு கப்பலும் 7.5 மில்லியன் யூ.எஸ். டாலர் விதம் 15 யூ.எஸ். டாலர்களுக்கு விலை பேசி முடிப்பதாக அந்த இடைத் தரகராக கம்பெனிக்காரர்கள் சொன்னார்கள். 15 மில்லியன் டாலர் என்கிற போது ஒரு மில்லியன் என்றால் 10 இலட்சம். அதாவது 150 இலட்சம் டாலர் அதாவது ஒரு டாலருக்கு 8 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் ஆகிறது. அவ்வாறு 12 கோடி ரூபாய் என்று சொன்ன பிறகு தமிழ்நாடு அரசு அப்போது பேச்சு வார்த்தையைத் தொடரவில்லை. அதற்குப் பிறகு சில நாட்கள் கழித்து தமிழ்நாடு அரசு மெஸ்ஸர்ஸ் ஆக்போர்ட் ஹார்பர் என்ற கம்பெனி மூலமாகப் பேச்சு வார்த்தை ஆரம்பித்தது. அவர்கள் அந்தக் கப்பலை 22.5 மில்லியன் டாலருக்கு வாங்கித் தருவதாக சொன்னார்கள். 22.5 மில்லியன் டாலர் என்றால் அது கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய். அதே கப்பல்களின் விலை 12 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்ட நேரத்திலே தட்டிக் கழிக்கப்பட்டது. அப்படித் தட்டிக் கழித்த தமிழ்நாடு அரசு மறுபடியும் மெஸ்ஸர்ஸ் ஆக்போர்ட் ஹார்பர் கம்பெனியார் மூலம் போய் 18 கோடி ரூபாய் என்று அவர்கள் சொன்ன அதே [illegible] வாங்க முன் [illegible] கார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் மேனேஜிங் [illegible] திரு. அய்.ஏ.எஸ். அவர்களும் அனந்தநாராயணன் என்ற டெக்னிக்கல் மேனேஜரும் அதிகாரப் பூர்வமாகவோ, அதிகாரப் பூர்வம் இல்லாத முறையிலோ [illegible] விஷயமாக அவர்களும் அங்கே சென்றார்கள். அவர்கள் ஹார்பர் சென்று அந்த ஆக்போர்ட் கம்பெனியாருடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். [illegible] 1978-ம் ஆண்டு [illegible] திங்கள் 11-ம் நாளுக்குள் அந்தக் கப்பல்களை வாங்குவதற்கு [illegible]. அதாவது [illegible] ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அந்தக் [illegible] தமிழ்நாடு அரசு மத்திய அரசிடம் [illegible] அதற்கான ஒப்புதலைப் பெற முடியவில்லை. ஆக அதற்குப் பிறகு அந்த இரண்டு கப்பல்களுக்கும் உரிய விலையினை ஒப்பந்தம் [illegible] 17 மில்லியன் டாலருக்குத் தருவதாக அறிவித்து விட்டார்கள். மத்திய அரசிடம் இருந்து ஒப்புதல் 1978-ம் ஆண்டு [illegible] திங்கள் 11-ம் நாளுக்குள் வராத காரணத்தால் இலண்டனில் [illegible] அதே கம்பெனியார் 17 மில்லியன் டாலருக்குத் தருவதாக அறிவித்து விட்டார்கள். ஆனால் மறுபடியும் ஆக்போர்ட் கம்பெனியுடன் அதே கப்பல்களை முன்பு சொன்ன 22.5 மில்லியன்

டாலருக்கு வாங்கித் தருவதாகக் கேட்டார்கள். இந்த நிலையைப் பார்க்கும்போது முதலில் அந்தக் கப்பல்களின் விலை [illegible] பார்க்கும்போது ரூபாய் 12 கோடியாக இருந்தது. அதைத் தமிழ்நாடு சர்க்கார் முதலில் அக்கறை [illegible] இருந்துவிட்டு பிறகு அதை 18 கோடிக்கு வாங்க முன் வந்தது. அப்போது மத்திய சர்க்காருடைய ஒப்புதல் கிடைக்கவில்லை. ஒப்புதல் கிடைக்காததற்குக் காரணம் இரண்டு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதாவது பல்வேறு கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் [illegible] கடிதங்கள் மூலமாகவும் நேரடியாகவும் மத்திய சர்க்காரிடத்திலே இந்த விவரங்களைக் கூறிய காரணத்தால் மத்திய சர்க்கார் அதற்கான ஒப்புதலை அளிக்கத் தயங்கியது.

அது கடைசியாக பிறகு 13.6 கோடி ரூபாய் அளவிலே ஒப்பந்தம் [illegible] அதன் விலையை அறிவித்து விட்டார்கள். அந்தக் கப்பல்களை மாநில சர்க்கார் வாங்க மத்திய சர்க்கார் ஒப்புதல் அளித்திருந்தால் அதனுடைய விலையைவிட 6 கோடி ரூபாய் அதிகமாக விலை கொடுத்து தமிழக அரசு வாங்க வேண்டியிருந்திருக்கும். நான் இன்னொன்றும் சொல்கிறேன். [illegible] போன்ற சில சாமான்கள் சேர்த்து வாங்கினால் கூட அதிலேயும் ரூபாய் 2½ கோடி, ரூபாய் 3 கோடி இடையிலே செல்கிறது.

யாருக்குச் செல்கிறது. எங்கே செல்கிறது. [illegible] ஸ்விட்சர்லாந்துக்கா, அமெரிக்காவுக்கா, எந்த வழியாக மீண்டும் இந்தியாவிற்கு வரப் போகிறது? நல்ல காலம். அது இடையில் தடைபட்டிருக்கிறது. மத்திய அரசால். அது தொடருமானால் மாநில அரசு அதை வாங்குமானால் பெரும் [illegible] அது ஆனாக வேண்டியிருக்கும் என்பதை எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். [illegible] இல்லாத அரசாங்கமா இந்த அரசாங்கம்?

பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் கவர்னர் உரை மீதான விவாதத்தில் பேசும்போது பஸ் முதலாளிகளிடம் வாங்கிய பணம் எவ்வளவு லட்சம் என்ற கேள்விக் கணையை விடுத்தார்கள். சினிமா முதலாளிகளிடம் பெட்ரோல் முதலாளிகளிடமிருந்து வாங்கிய பணம் எவ்வளவு லட்சம் என்ற கேள்விக் கணையை விடுத்தார்கள். இன்னொரு கேள்விக் கணையையும் நான் இதனுடன் சேர்த்து விடுக்கின்றேன். [illegible] வேந்தர்களிடம் சலுகைகள் செய்வதாக அறிவித்து ஏறத்தாழ ரூ. 20 லட்சத்திற்கு மேல் இந்த அரசு அரசாங்கத்திலே உள்ள முக்கியமானவர்கள் அதற்குரிய வெகுமானத் தொகையாகப் பெற்றிருக்கிறார்களா இல்லையா என்று நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்றும் இங்கே

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப் 2

நான் சொல்ல விரும்புகிறேன். நமது அமைச்சர் திரு. இராஜா முகமது அவர்கள் இந்த அமைச்சரவை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த காலத்தில் இருந்தவர் அல்ல. அப்போதெல்லாம் அவர்கள் கார்ப்பரேஷனில் வேலை பார்த்தவர். தங்களிடம் அனுமதி பெற்று சில கடிதங்களை நான் இங்கே படிக்கிறேன். இந்தக் கடிதங்களின் உண்மை நகல் கோர்ட்டில் இருக்கின்றன. அதனுடைய போட்டோஸ்டெட் காப்பிகள் இவை— இதனுடைய உண்மை அசல்களைப் பார்க்க வேண்டுமானால் முதல் அமைச்சர் அவர்கள் முயன்றால் கோர்ட்டில் இருந்து பெற்று படித்துப் பார்க்கமுடியும்.

* * * *
* * * *
* * * *

* * 1975-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாள் அவர் எழுதுகிறார். சென்னை நகராட்சி மன்றத்திலிருந்து எழுதுகிறார். 1975-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாளில்.

அன்புக்குரிய ஜனாப் அப்பாஸ் அவர்களுக்கு எழுதுவது. நலம்; நலம் நாடுகிறேன். தங்கள் கடிதம் கண்டேன். தங்களுடைய மகன் விஷயமாய் எனக்குத் தெரிந்த பாதிப்பில்லாத ஒரு முயற்சித்ததில் தங்களுக்கு யோசனை கூறினேன். நெருக்கடி நிலை காரணமாக முயற்சிகள் தடைபட்டு வருகின்றன. நான் சந்தித்த என்ஜினீயரை பம்பாய்க்கு மாறுதல் செய்ய உத்தரவு இட்டிருக்கிறார்கள். அவர் இம்மாதம் 17 ஆம் தேதி பம்பாய்க்கு செல்கிறார். அதற்குள் முடிந்த அளவுக்கு முயற்சி செய்வதாக வாக்களித்துள்ளார்கள். இறைவன் அருள் இருப்பின் காரியம் கைகூடும்.

ஒரு வேளை காரியம் கைகூடாவிட்டாலும் நமக்கு எந்தவிதமான பாதிப்பும் வராது. நம்பிக்கையோடு இருக்கவும். இந்தக் கடிதம் கண்டவுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு ஒரு விண்ணப்பம் எழுதி உங்களுடைய மகனின் கையெழுத்துடன் எனக்கு அனுப்பவும். அமைச்சர் பண்ருட்டி அவர்களிடம் சொல்லி முயற்சி செய்து பார்க்கலாம். (இப்படி எங்கு எழுத வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.) " ந் இ கமிஷனர், கார்ப்பரேஷன் ஆப் மதராஸ், மதராஸ்-3. " எந்தவிதமான பாதிப்பும் வராது என்ற நம்பிக்கையோடு இருக்கவும். என்னாலான உதவிகளைச் செய்வேன் என்று கடிதம் முடிக்கப்பெற்றிருக்கிறது. பாதிப்பு ஒன்றும் ஏற்படாது என்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் 21 ஆம் தேதி ஒரு கடிதம் எழுதுகிறார். அவர் சொல்லியது பண்ருட்டி அவர்கள் மூலம் நடைபெறவில்லை போலும். ஆகவே, இன்னொரு கடிதம்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

அன்புள்ள ஜனாப் அப்பாஸ் அவர்களுக்கு. ராஜா முகமது
கடிதம். தங்களின் கடிதமும் கண்டேன். 19 ஆம் தேதி எனது
மைத்துனருக்கு நிச்சயதார்த்தம். திண்டுக்கல்லில் இருந்ததால்
18 ஆம் தேதி அன்றே சென்னையில் இருந்து புறப்பட்டு விட்
டேன். 18 ஆம் தேதி தங்கள் கடிதமும் கண்டேன். 18 ஆம்
தேதி அன்றே அவர் பணத்தை என்னிடம் கொடுத்துவிட்டார்கள்.
நான் உடனே புறப்பட்டு விட்டதால் தங்களிடம் அன்று எதுவும்
தெரிவிக்கவில்லை. பணம் என்னிடம் பத்திரமாக உள்ளது.
இம்மடல் கண்டதும் சென்னைக்கு உடனே எழுதவும்.

பாதிப்பு இல்லை என்கிறார்கள். அதற்கு என்ன பொருள்?
கொடுத்த பணம் திரும்பி வந்துவிடும் என்பதுதான் அதற்கு
அர்த்தம். * *
அமைச்சரானதற்குப் பிறகு 1978-ல் ஒரு கடிதம் சென்னையி
லிருந்து பெரியகுளத்திற்குச் செல்கிறது. பெரியகுளத்தைச்
சேர்ந்த ஸ்ரீனிவாசன் பி.ஏ., பி.எல்., அட்வகேட். அவர் பெரிய
குளத்தில் இருக்க வேண்டியவர். சென்னைக்கு வருகிறார். சென்
னைக்கு வந்து அவர் ஒரு கடிதம் நமது ராஜா முகமது அவர்களின்
தகப்பனாரிடத்தில் கொடுக்கனுப்புகிறார். என்ன கடிதம்
தெரியுமா?

(பிற்பகல் 12-40)

இதில் என்ன இருக்கிறது—......

" டியர் அழகிரிசாமி—இன்று நான் உனக்கு எழுதிய கடிதம்
கிடைத்திருக்குமென்று நினைக்கிறேன். இப்பவும் நம் தோப்பை
கிரயம் பேசி அட்வான்ஸ் வாங்கிவிட்டேன். இந்த லெட்டர்
கொண்டுவரும் நம் மந்திரியின் தகப்பனார் திரு. காதர் மைதீன்
ராவுத்தர் அவர்களிடம் உடனே தோப்பை ஒப்புவித்து விடவும்.
மாயாண்டியையும் அவர் மனைவியையும் அவர்கள் வேலைக்கு
வைத்துக்கொள்வதாகச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு சம்
பளம் பேசி வேலை செய்யச் சொல்லியும் தோப்பை பொஸஷன்
கொடுத்துவிட்டு எனக்கு உடனே தபால் எழுதவும். இப்படிக்கு—
கே. சீனிவாசன்...... "

இப்படி நேரில் கொடுத்து அனுப்பிய கடிதம் போதாது என்று
* இன்லெண்ட் கடிதம் ஒன்றை தபாலில் அனுப்புகிறார். அதில்
என்ன இருக்கிறது என்றால்...... " டியர் அழகிரிசாமி, நான்
நேற்று உனக்கு தபாலில் எழுதிய கடிதம் கிடைத்திருக்குமென்று
நினைக்கிறேன். அதன் பிறகு பார்ட்டி வந்து தோப்பு கிரயம்
பேசி அட்வான்ஸ் வாங்கிவிட்டேன். உனக்கும் நேற்று மந்திரி
அவர்கள் தகப்பனார் மூலம் லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்கி
றேன். அவர் கொண்டு வந்து கொடுப்பார். தோப்பை உடனடி

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

யாக, அவரிடம் ஒப்படைத்து விடவும், நீ கணக்கை உடனே அனுப்பு. பணம் அனுப்பிவிடுகிறேன். நான் இந்த மாதக் கடைசியில் அல்லது அடுத்த மாதம் முதல் வாரத்தில் மதுரைக்கு வரும்போது [illegible]றேன். அப்போது நீ அங்கு வந்தால் எல்லா விவரமும் பேசிக் கொள்ளலாம். [illegible] அவர்களிடம் [illegible] எனக்கு உடனே பதில் போடவும். இந்த [illegible] பதில் போடவும். இப்படிக்கு, [illegible]...." இது கடிதத்தின் நகல்.

வேண்டுமென்றால், இது தகப்பனார் வாங்கியது, எனக்கு சம்பந்தம் இல்லை என்று அவர் சொல்லக்கூடும். தகப்பனார் [illegible] கொடுத்திருக்கலாம். இந்தச் சம்பவம் நடந்த நேரத்தில் இது அங்குள்ள மக்களுக்கு எல்லாம் தெரிந்து, அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் எல்லோரும் இதைப்பற்றிப் பேசத் தொடங்கி [illegible] களிலும் இது குறித்து கூறப்பட்டு, அந்தக் காரியம் இடையே அப்படியே நின்று விட்டது. எனவே, இப்படி நடைபெற்ற ஒரு ஊழல்---அந்த ஊழலுக்காக சம்பாதிக்கப்பட்ட பணம் எல்லாம் அப்படியே இருக்கின்றன. நடந்த விஷயங்களைத்தான் இந்த கடிதங்கள் நமக்குத் தெளிவாக்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, ஊழலே இல்லை, நாங்கள் சம்பாதிக்கவே இல்லை என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கின்ற அமைச்சர்கள் எவ்வளவுக்கு இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பதை எடுத்துச் சொல்வதற்காகத்தான் இதைப்பற்றிச் சொன்னேனே தவிர, வேறு அல்ல.

இறுதியாக, சட்டம் ஒழுங்கு அமைதியை காப்பதில் தமிழ் நாட்டில் போலீஸின் கரங்கள் எந்த அளவுக்கு கட்டப்பட்டிருக் கின்றன என்பது குறித்து [illegible] நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அளித்தவர் களும் இங்கே பேசியிருக்கிறார்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானத் தில் பேசிய நாங்களும் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். ஒரு சம்பவத்தைச் சொல்லவேண்டுமென்றால், இந்திரா காந்தி அம்மை யார் தமிழ்நாட்டிற்கு வந்த நேரத்தில் திருச்சியிலே கறுப்புக் கொடி காட்டிய அன்பில் தர்மலிங்கத்தையும், மன்னை நாராயண சாமியையும் எங்கள் வழக்கோடு இணைப்பதற்காக இந்த அரசு முயற்சி செய்தது. அதற்காக ஒரு பெரிய போலீஸ் அதிகாரியை திருச்சிக்கு அனுப்பினார்கள். அவர் திருச்சிக்குச் சென்று "மன் னை நாராயணசாமி கையிலே பெரிய அரிவாளோடு நின்றார், அன்பில் தர்மலிங்கம் கடப்பாரையோடு நின்றார்" என்று நீங் கள் ஒரு புகாரை கொடுங்கள் என்று திருச்சியிலுள்ள அதிகாரிகளை கேட்டிருக்கிறார் இந்த அதிகாரி. அதற்கு திருச்சியிலுள்ள அதி காரிகள் அப்படி எழுதிக்கொடுக்க மறுத்துவிட்டார்கள். அப்படி எழுதி வாங்கப்பட்டிருக்குமானால் மதுரை, கோவை, காஞ்சி, சென்னை என்று இணைக்கப்பட்ட வர்களோடு திருச்சி மாநகர[illegible]

[illegible] இணைக்கப்பட்டிருக்கும். அங்கிருக்கின்ற அதிகாரிகள் [illegible] இருந்து சென்ற அதிகாரியின் [illegible] அது மாத்திரமல்ல, அதற்கு [illegible] அன்பில் தர்மலிங்கமும், மன்னை [illegible] அந்த அதிகாரிகள் [illegible] நாராயணசாமியும் [illegible] தனியாக நிறுத்தி வைத்து [illegible] கறுப்புக் கொடி காட்டியவர்களை [illegible] [illegible] அப்புறப்படுத்திவிட்டோம் என்று சொல்லிவிட்டார் அவர்கள் புகார் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இங்கிருந்து சென்ற அதிகாரி அவர்களை மிரட்டிவிட்டு வந்தார்.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற வேறு சில அதிகாரி கள் இந்த அரசுக்கு பயந்து கொண்டு பொய் வழக்கு போடுகின்ற காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருப்பார்களே [illegible] தெரிந்து [illegible] சொல்லிக்கொள்வது என்றே யானால், நான் அவர்களுக்குச் சொல்லுவது, நீங்கள் எந்த [illegible] இன்றைக்கு வேண்டுமென்றால் [illegible]. ஆனால் இன்றைக்கு காரியத்தையும் செய்துகொண்டிருக்கலாம். நாளைக்கு ஆட்சிகள் மாறுகிற விசாரணைக் கமிஷன் என்பது நாட்டிலே தொடர்கதையாக ஆகிவிட்ட நேரத்தில் எல்லாம் வைக்கப்படுகிற [illegible] ஒரு கமிஷன் நடை [illegible] [illegible] அதிகாரிகளுடைய ஆலோசனைகள் [illegible] பெற்றதோ அதைப்போல அதிகாரிகளைப் பற்றி இந்த ஆட்சி மாறிய [illegible] இந்த வழக்குகள் இணைக்கப்பட்டு விசாரணைக் கமிஷன் [illegible] பிறகு இன்னொரு ஆட்சி வருகிற நேரத்தில் விசாரணைக் கமிஷன் இப்படிப் வரும். அப்போது நிச்சயமாக குற்றவாளிக் கூண்டில் அந்த பட்ட அதிகாரிகள் ஏற்றப்படுவார்கள். அவர்களுடைய அந்த [illegible] நிச்சயமாக நடைபெற்ற [illegible] வழக்குகளுக்காக இது நிச்சயமாக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் [illegible] என்பதை இந்த [illegible] எச்சரிக்கை [illegible] இருக்கிறேன். [illegible] என்றால், [illegible] அதிகாரிகள் தாக்கி எறியப்படுகின்றார் நேர்மையாக நடக்கின்ற அதிகாரிகள் இங்கே குறிப்பிட்டார் கள். [illegible] அவர்கள் கூட அன்றைக்கு இங்கே நடந்த ஆளுங்கட்சி கள். தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய [illegible] ஒருவர் [illegible] திருச்சியிலே இருந்த [illegible] திருச்சியி லேயே [illegible]. அந்தக் காரணத்திற்காக அவர் திருச்சியி லிருந்து நான்குநேரிக்கு மாற்றப்பட்டார். அவர் நான்குநேரிக் குப்போய் வேலையில் சேருவதற்குள்ளாக [illegible] நடைபெறுகிறது. எனவே, [illegible] சென்று சார்ஜ் எடுத்துக் கொள்வதற்குள் இவர் நான்குநேரிக்குச் சென்று [illegible] போ" என்று அவரை "நீ அங்கே போகாதே, வேறு [illegible] இந்த அளவுக்கு நேர்மையாக அங்கிருந்து மாற்றி விட்டார்கள். [illegible] வருகிறது. இப்படி நடந்து கொள்கின்ற அதிகாரிக்கு தண்டனை [illegible] ஆட்டிப்படைக்கும் தன் அதிகாரிகளை தங்கள் இஷ்டம் போல் [illegible] கொண்டிருக்கிறது. எனவே [illegible] இன்றைக்கு தொடர்ந்து [illegible] எந்த அரசும் நிலையானது தான் அதிகாரிகளுக்குச் சொல்கிறேன். அதே போல் விசாரணைக அல்ல. அதிகாரிகள் நிலையானவர்கள், [illegible] கமிஷன்களும் தொடர்கதையாக ஆகிக்கொண்டிருக்கின்றன.

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 2

ஆக, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே என்னுடைய
கருத்துக்கள் பலவற்றை எடுத்துக்கூறியிருக்கின்றேன். இவைகளு
கெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பா
கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த அமைச்சரவை மீ
எங்களுக்கு நம்பிக்கையில்லையென்றாலும், நான் கூறியவற்று
கெல்லாம் முதலமைச்சர் அவர்கள் பதிலளிப்பார் என்ற நம்பி
கையோடு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்
அமைகின்றேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமி
சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் எதிர்
கட்சித் தலைவர் அவர்களும், இதற்குமுன் மற்ற எதிர்க் கட்சி
தலைவர்களும், உறுப்பினர்களும் சேர்ந்து கண்டனத் தீர்மான
கள், நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்
அதற்குப் பதில் அளிக்க வேண்டிய பொறுப்பிலே நான் என்
கடமைகளைச் செய்ய முன் வந்திருக்கிறேன்.

இங்கே ஒட்டுமொத்தமாக பல்வேறு கட்சிகளைச் சேர்ந்
வர்கள், குற்றச்சாட்டுகளை எடுத்து வைத்து, பல்வேறு பிரச்சனை
களுக்கு பதில் பெற விரும்பியிருக்கிறார்கள். எங்களுடைய அரசின்மீது நம்பிக்கை இல்லை என்று கூறி
துடன், கண்டனத் தீர்மானங்கள் மூலம் குற்றச்சாட்டுகளை
எங்கள்மீது சுமத்தியவர்களும், உண்மை நிலை என்ன என்பதை
தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை, அவர்கள் வெளிப்படு
படுத்தியதன் மூலம் கிடைத்த வாய்ப்பை எனக்கு அளித்ததற்கா
நான் இந்த அமைச்சர் அவையின் சார்பாக நன்றி கூறி
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இங்கே பேசிய கருத்துக்களின் தலைப்புகள்
வெள்ள நிவாரணம், கல்வி, தொழில், பதிவு பெறாத அர
அலுவலர்கள் சங்கம், தேர்தல்கள், பொதுப் பணித் துறை
வருவாய்த் துறை, வணிக வரி, அறநிலையத் துறை, பஞ்சம
வைபூல், உள்துறை, காவல் துறை, அதோடு மதுவிலக்கு, உணவு
துறை, கூட்டுறவுத் துறை, சமூகநலத் துறை, நாட்டு உடைமை
கொள்கை, மொழி, அண்ணாயிசம் என்றெல்லாம் இங்கே இத்
தனை தலைப்புகளை வைத்து, அதற்கு பதில் கூறவேண்டிய
அளவிற்கு அவர்கள் நிறைய பொருள்களை, கருத்துக்களைத்
தந்திருக்கிறார்கள்.

இங்கே முதலில் மாமன்ற உறுப்பினர்களை பணிவோடு கேட்
கொள்கிறேன். என்னுடைய பதிலுக்குப் பிறகு, நீங்கள் என்ன
முடிவு எடுக்கப் போகிறீர்கள் என்பதைப் பற்றி நான் எண்ண
மல், அந்த எண்ணத்தைக் கொண்டு இங்கே நான் கருத்துக்களை
கூற முன் வரவில்லை என்பதையும், எனக்குத் தெரிந்த உண்மை

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

களை, என்னிடம் இருக்கின்ற ஆதாரங்களை மூலமாக எடுத்துக்
கொண்டு கூறுகின்ற நிலையில் என்னுடைய பேச்சு அமைய
இருக்கின்றது என்பதைக் கூறிக் கொள்கிறேன். இங்கே,
இந்த மாமன்றத்திலே இருக்கின்றவர்கள், நீங்கள் சில சமயம்
பேசும்போது இங்கே கேட்டுக் கொண்டிருப்பவர்கள். நேரமாகி
றது என்று நினைக்கிற சூழ்நிலை உருவாகுமானால்,
சீக்கிரம் முடித்துவிட்டார் என்ற வகையிலே கருத்துக்கள்
சொல்வதும், ஆனால் வெளியிலே போய் மேடையிலே பேசும்
போது இன்னின்ன கேள்விகளைக் கொடுத்தோம், குற்றச்
சாட்டுக்களை முன்வைத்தோம், அதற்கெல்லாம் சரியான பதில்
தரப்படவில்லை என்று கூறுவதும் சாதாரணமாக நடந்து கொண்
டிருக்கிறது என்பதை இங்கே நான் தலைவர் அவர்களுக்கு சுட்டிக்
காட்ட வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 12-50).

சொல்லுகிறார்கள்.
அதோடு சில நேரங்களில் இன்னொன்றும் அறிஞராகவோ,
நான் இலக்கண இலக்கியம் படித்த தமிழ் புலமை பெற்றவனா
தமிழ்க் கவிஞனாகவோ அல்லது தமிழில் கருத்துக்களை எடுத்து
கவோ இல்லாத காரணத்தால் நான் என் சந்தேகத்தைத் தீர்த்து
வைத்து பாமன்ற உறுப்பினர்களுடைய வெளியே போகிற
வைக்க முயலும்போது அதைக் கேட்டுவிட்டு தெரிந்தவர்கள் 'மூத்த
உறுப்பினர்கள், தமிழைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள
அமைச்சர் என்ன பேசினார் என்றே எங்களால் சுமத்துகிறார்
முடியவில்லை' என்ற குற்றச்சாட்டை என்மீது வேண்டியவனாக
கள் என்பதையும் நான் இங்கே சொல்லிக் கொள்ள
இருக்கிறேன்.

ஆதாரங்களைப்
பட்டியல்களைக் கையிலே வைத்துக்கொண்டு தன்னுடைய கருத்தை
படித்துக் காட்டினால் 'அவர் எங்கே அல்லவா
வெளியிட்டார். அதிகாரிகள் எடுத்துக் கொடுத்ததை பேசினால்
படித்தார்' என்று சொல்லுகிறார்கள். நானாகப் ஒரு
பெரியது புரியவில்லை என்கிறார்கள். இன்றுபோட்ட உறுப்பினர்
சங்கடமான நிலையில் இருந்து எதிர்க்கட்சி ஆதாரத்தோடு
களுக்கு ஒரு நல்ல விளக்கத்தைத் தருவதற்கு பட்டது ஒரு
தரப்பட்டுள்ள பட்டியலையும், விவரங்களையும் அந்தத் தமிழ்
வேலை என் தமிழ் புரியாது என்ற காரணத்தால் பெற்றுக்கொள்வதாக
புரியும் என்ற நிலைமையில் அந்த முயற்சியை
இருக்கிறேன்.

20 தலைப்பு
நான் முதலில் குறிப்பிட்டது போல் ஏறக்குறைய இந்த
களில் நான் பதில் கூறவேண்டியவனாக இருக்கிறேன். ஒரே
20 தலைப்புகளில் எத்தனையோ மாமன்ற உறுப்பினர்கள், அல்ல,
பிரச்னையைப் பற்றியல்ல. ஒரே துறையைப் பற்றி

வேறு வேறு கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இவை களுக்கெல்லாம் பதில் கொடுக்கவேண்டிய கட்டாயத்திற்கு என்னை ஆளாக்கிவிட்டிருப்பதால் மாமன்ற உறுப்பினர்கள் நேரமாகிறது என்று கோபித்துக்கொள்ள மாட்டார்கள் என்றும், கேட்பதிலே அக்கறை காட்டுவார்கள் என்றும் நான் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன். அவர்களுக்கு எப்படி என்னிடத்திலிருந்து பதிலை எதிர்பார்க்க உரிமை இருக்கிறதோ அதுபோல் அந்த ஒத்துழைப்பை அவர்களிடத்திலிருந்து எதிர்பார்க்க எனக்கும் நியாயமான உரிமையுண்டு, அந்த ஒத்துழைப்பைத் தருவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். அந்த வகையில் ஒவ்வொன்றை யும் வரிசைப்படுத்திக் கொண்டு போகக்கூடாது என்றாலும் நான் ஒருசிலவற்றை எடுத்துக்கொண்டு பேசுவது முறையாக இருக்கு மென்று நான் கருதுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : இன்றோடு சட்டசபைக் கூட்டத் தொடர் முடிந்து மார்ச் 3 ஆம் தேதி ஆரம்பமாகப் போகிறது: பல உறுப்பினர்கள் சாயங்காலம் ஊருக்குப் போக டிக்கெட் வாங்கி விட்டார்கள், நானும் கூட வாங்கிவிட்டேன். மாலை 6 மணிக்கு ட்ரெயின். ஆகவே, காலையில் 1½ மணிக்கு முடிந்து மாலையில் கூடுவதாக இருந்தாலும் 5 மணிக்குள் முடிக்கிற மாதிரி இருந்தால் நலமாக இருக்கும். இன்று காலையில் இந்தப் பிரச்சினை பற்றிக் கேட்டபோது எதிர்க்கட்சித் தலைவர் அவர் களும், முதலமைச்சர் அவர்களும் வந்த பிறகு முடிவு செய்யலாம் என்று தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

திரு. துரை முருகன் : கவர்னர் உரைக்கான ரிப்ளையையும் சேர்த்து இப்போது பேசப் போவதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதையும் சேர்த்து பட்ஜெட்டில் பதில் சொல்லி விட்டால் போகிறது.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலை வர் அவர்களே, அந்த வாய்ப்பை எனக்குத் தர நிச்சயமாக மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால் இங்கே ஒவ் வொருவரும் எங்களுடைய குற்றச்சாட்டுகளுக்குப் பதில் தேவை என்று கேட்கிற முறையில் அமர்ந்திருக்கிறார்கள் என் பதும். எங்களுடைய விளக்கத்திற்குப் பிறகு அவர்கள் வாக் களித்து இதைப் பற்றி ஒரு முடிவை நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டியிருக்கும் காரணத்தால் இன்றைய் தினமே முடித்துவிடு வது நல்லது என்று கருதுகிறேன். ஆனால் இத்தனை தலைப்புகளிலும் ஒவ்வொருவரும் பேசிய கருத்துக்களுக்கும் நான் பதில் கூற வேண்டியிருப்பதால் தலைவர் என்ன முடிவு செய்கிறார்களோ அதற்கேற்ப ஒத்துழைக்கக் கடமைப்பட்டவன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : ஒரு மணிக்கு முடித்துவிட்டு மீண்டும் மணிக்கு தொடங்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, காலையிலே நான் இதுபற்றி நினைவுபடுத்தினேன். தாங்கள் அப்போது, எதிர்க்கட்சித் தலைவரும் இல்லை, முதலமைச்சரும் இல்லை, வந்தவுடனே சொல்லவேண்டுமென்று கூறினீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேச ஆரம்பித்த பிறகு அதிலே தலை யிட்டால் ஏதோ குற்றச்சாட்டுகள் சொல்கிறபோது தலையிட் டார் என்று கருத்து வரும். பார்வையாளர்கள் வருகிறபோது எங்கள் தலைவர் கலைஞர் 3 மணி நேரம் பேசப் போகிறார். என்று சொன்னார், உடனே பக்கத்திலே இருந்த ஒருவர் எங்கள் புரட்சித் தலைவர் 6 மணி நேரம் பதில் சொல்லப் போகிறார் என்று சொன்னார்கள். ஆகவே அது முடிந்தவுடனே நான் கிளம்பினேன். மாலையில் 3½ மணிக்கு தொடங்கினால் 5 மணி வரை வைத்துக் கொண்டு முடித்துவிடலாம். நாங்கள் எல்லாம் கன்னியாகுமரிக்கு பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி மீட்டிங்குக்காகப் போக வேண்டும், ஆகவே சீக்கிரம் முடித்துவிட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: என்னுடைய யோசனை என்ன வென்றால், இங்கே பல்வேறு தீர்மானங்களின்மீது பலரும் நிறையப் பேசியிருக்கிறார்கள், முதலமைச்சர் பதில் சொல் வதற்கு நேரம் கொடுக்க வேண்டியது அவசியம். அதைச் சுருக்குவது நியாயமில்லை. நமக்கும் பதில் தேவைப்படுகிறது. என்னுடைய யோசனை என்னவென்றால் 1½ மணிக்கு ... usual முடித்துவிடலாம். பிறகு எப்போது முடிப்பது என்பதை இடையிலே பேசி முடிவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் இல்லாதபோது, மாண்புமிகு முதலமைச்சர் இல்லாதபோது இதைப்பற்றி திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் எழுப்பினார் கள், அவர்கள் வந்தபிறகு எழுப்பினால் இங்கே பேசி முடிவு எடுக்கலாம் என்றுதான் நான் சொன்னேன். திரு. உமாநாத் அவர்கள் சொன்னதுபோல தனியாக இதற்காக கூடவேண்டியது இல்லை, இங்கேயே பேசி முடிவு எடுக்கலாம்.

திரு. மு. அம்பிகாபதி : 1 மணிக்கு முடித்துவிட்டு 3 மணிக்கு ஆரம்பித்து 6 மணிக்கு விட்டால் போதும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தாங்கள் என்ன கூறுகிறீர்கள் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1979 பிப்ரவரி 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1 மணிக்கு முடித்துவிட்டால் 3 மணிக்கு திரும்பி ஆரம்பிக்கலாம். 1½ மணிக்கு முடித்தால் திரும்பவும் 3 மணிக்கு வர இயலாது. அப்போது 3½ மணிக்கு ஆரம்பிக்கவேண்டி இருக்கும். 3 மணிக்கு ஆரம்பித்தால் 6 மணி வரையில் வைத்து முடித்து விடலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எனக்கு பதில் சொல்லுகிற உரிமை இருக்கிறது. அந்த உரிமையை எனக்குக் காப்பாற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எதாவது சொல்லவேண்டிய அவசியம் இருந்தால் எனக்கும் வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்பது தங்களுக்குத் தெரியும். அதற்கும் தயவுசெய்து எனக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: "லாஸ்ட் ரைட் ஆப் ரிப்ளை" எங்களுக்குத்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு உமாநாத் அவர்கள் புதிதாக பிரச்சினையைக் கிளப்பினார்கள். நீங்கள் பேசியதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் பதிலோடு முடிகிறது. திரும்பவும் பேசவேண்டுமென்று சொல்லிக் கொண்டே போனால் முடிவே இருக்காது.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டது "ரைட் ஆப் ரிப்ளை" யைப்பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொன்னதற்குப் பின்னாலே உங்களுக்கு வாய்ப்பு உண்டு. அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டும். அந்த வாய்ப்பு அவருக்கு உண்டு. அதோடு முடிகிறது. அதற்குப் பிறகு நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை.

திரு. என். சங்கரய்யா: தாங்கள் சொல்வது என்ன என்று தெளிவாகத் தெரிந்தால் நல்லது. தீர்மானங்களை முன்மொழிந்தவர்களுக்கு "ரைட் ஆப் ரிப்ளை" இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் உரைக்குப் பின்னால் உங்களுக்கு வாய்ப்பு உண்டு.

1979 பிப்ரவரி 26] [பேரவைத் தலைவர்]

[பிற்பகல் 1-00]

அதற்குப் பிறகு முதலமைச்சர் பதில் கொடுக்கின்ற வாய்ப்பு உண்டு. அதோடு முடிகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: "ரிப்ளை" செய்யலாம். மறுபடியும் பதில் கொடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை அல்ல. "ரிப்ளை" செய்வதற்கான வாய்ப்பு உண்டு என்ற கருத்தைத் தான் சொல்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: ரைட் ஆப் ரிப்ளை முடிந்தபிறகு சீப் மினிஸ்டர் கிளாரிபிகேஷன் கொடுக்கலாம். நாங்கள் அவர்களிடத்தில் கேட்பது மாதிரி.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தயவுசெய்து மன்னிக்க வேண்டும். அவர்கள் சொன்ன பிறகு விளக்கங்களை மீண்டும் சொல்வதற்கு வாய்ப்பு தேவை என்ற நிலைமை எற்பட்டால் அதைக் குறிப்பிடுவதற்கு முதலமைச்சருக்கு உரிமை தரப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 3 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-01 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

4. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்கள் ஆகியவை மீது விவாதம்— தொடர்ச்சி.

[பிற்பகல் 3-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை மாலை 3 மணி அளவில் மீண்டும் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களுடைய தன்னிலை விளக்கத்தைச் சொல்லுவார்.

[1979 பிப்ரவரி 26

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் என்மீது நேரிடையாக ஒன்றிரண்டு குற்றச்சாட்டை
கூறியிருக்கிறார்கள். எனவே நான் தன்னிலை விளக்கமாக
சில விஷயங்களை அவை முன் கூறி விளக்குவது என்னுடைய
கடமையாக இருக்கிற காரணத்தினால் நான் அதை விளக்குகிறேன்

முதலாவதாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில
கடிதங்களை இங்கே காட்டி அவை வழக்கு மன்றத்திலே இருக்
கிறது. வேண்டுமானால் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லி
வழக்குமன்றத்திலே இருக்கக்கூடிய வழக்கு பற்றிய ஒன்றை
இங்கே விவாதித்திருக்கிறார்கள். என்மீது அவதூறாக பழி
கூறியதற்காக மாண்புமிகு மேலவை உறுப்பினர் ஆற்காடு
வீராசாமி அவர்கள் மீது நான் மான நட்ட வழக்கு ஒன்றை
தொடர்ந்திருக்கிறேன். அவை வழக்கு மன்றத்திலே விவாதத்
திலே இருக்கின்றன. அந்த வழக்கில் விசாரணைக்கு வைக்கப்
பட்டுள்ள அவர்கள் தரப்பு கடிதங்கள் சிலவற்றை இங்கே
கொண்டுவந்து பேசியிருக்கிறார்கள். இப்படி வழக்கு மன்றத்
திலே உள்ள விஷயத்தைப்பற்றி இங்கே பேசுவது சரியா,
தவறா என்பதை தலைவர் அவர்கள் தீர்மானிக்கும்படி கேட்டுக்
கொள்கிறேன்.

இரண்டாவதாக என்னுடைய தந்தை ஒரு சொத்தை வாங்கு
வதற்காக முன் பணம் கட்டியிருக்கிறார் என்று சொல்லி ஒரு
வழக்கறிஞர் ஒருவர் எழுதிய கடிதத்தை கொண்டு வந்து காட்டி
யிருக்கிறார். அது பற்றியும் நான் விரிவாக விளக்கம்
சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறேன். காரணம்
அதுவும் வழக்கு மன்றத்திலே போய் வழக்காக பதிவு செய்யப்
பட்டிருப்பதுதான். * * *
ருக்கும் தெரிந்ததுதான். அது எல்லோ
நியாயமற்றவை; ஆதாரம் அற்றவை. அவர் கூறிய குற்றச்சாட்டுகள்
வாரி வீச வேண்டும் என்ற நோக்கத்துடன் வேண்டுமென்றே புழுதி
நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள பேசியிருக்கிறார்.
என்னவென்றால்—வழக்கு மன்றத்திலே தாக்கல் செய்திருக்கின்ற விரும்புவது
விஷயங்களை அவைகள் கடிதங்களானாலும் சரி, வேறு
ஏதாவதாக இருந்தாலும் சரி அதை இம்மாமன்றத்தில் எடுத்துப்
பேசுவது நியாயமாகுமா என்று கேட்கிறேன். இந்தக் குற்றச்
சாட்டுகள் ஆதாரம் அற்றவை; நியாய மற்றவை. வேண்டு
மென்றே புழுதிவாரி தூற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு
எழுப்பப்பட்டவை என்று சொல்லிக் கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

1979 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர்
அவர்களே, இங்கு பேசிய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு
கலைஞர் அவர்கள், விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே
இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்பது
வீண் பண விரயம் என்று பேசியிருப்பதாக தெரிகிறது. நான்
உண்மையிலேயே எங்கள் கருத்தை தெரிவித்துக் கொள்வது
இந்த நேரத்தில் மிக பொருத்தமாகவும், தேவையானதும்
ஆகும் என்று கருதுகிறேன். அப்படி அவர்கள் கூறியிருப்பார்
களேயானால் அது சரியானது அல்ல என்றும் நான் அதற்காக
எங்கள் அமைச்சரவையின் சார்பில் என் வருத்தத்தை தெரி
வித்துக்கொள்கிறேன். இங்கே நான் ஒன்று குறிப்பிட விரும்பு
கிறேன்— நம்பிக்கையில்லாத் தீர்மானம் போன்றவைகள்—
கண்டனத் தீர்மானம் முதலியவைகள், ஒரு நாட்டின்மேல்,
மக்களின்மேல் நம்பிக்கையை பாதுகாக்கவும், முன்னால் இருந்த
தவறுகள் மீண்டும் தொடர்ந்து விடக் கூடாது என்ற எண்ணத்
தினாலும், தவறுகளை செய்தவர்களை மக்கள் என்ன முடிவைத்
தந்திருக்கிறார்களோ அதே முடிவு இப்பொழுது இருப்பவர்களுக்கு
வந்துவிடக்கூடாதே என்ற நல்லெண்ணத்துடனும் சொல்லப்
பட்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே எடுத்துக் காட்ட
விரும்புகிறேன். இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் கூட
இதே கருத்தைத்தான் வலியுறுத்திச் சொன்னார்கள்.

என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே
நாங்களும் அப்படிப்பட்ட நிலையை அடைந்துவிடக் கூடாது
என்பதற்காக நாங்கள் அதை வலியுறுத்துகிறோம் என்ற வகை
யில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கூறியது இந்த நேரத்தில்
எனக்கு நினைவிற்கு வருகிறது. எனவே இப்படிப்பட்ட தீர்
மானங்கள் கொண்டு வருவது தேவை என்பதும், அவர்கள் எந்த
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து இருக்கிறார்களோ அந்த
மக்களுக்கு அவர்கள் செய்யும், ஆற்றும் கடமை என்கிற
எண்ணத்தில் இத்தீர்மானங்கள் கொண்டு வரப்படுகின்றன
என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து அதை வரவேற்பதிலே
மகிழ்ச்சியும் அடைகிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே முதலில் உணவுத் துறை சம்பந்தப்பட்ட பிரச்னை
களிலே மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் 5½ லட்சம்
ஏக்கர் குறுவை சாகுபடி இன்று 3½ லட்சம் ஏக்கர் என்ற அள
விற்குக் குறைந்து விட்டது, தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 14
கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகள் நஷ்டம் அடைந்து
இருக்கிறார்கள். கூட்டுறவு வங்கிகளிலிருந்தும் மற்ற வங்கி
களில் இருந்தும் 10 கோடி ரூபாய் கடனாக கொடுக்கப்பட்டிருக்
கிறது என்று சொன்னாலும் மூன்று லட்சம் ஏக்கரில்தான்
உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இதிலிருந்து கிடைக்கின்ற

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தென்னார்க்காடு மாவட்டத்தில் 5 நிலையங்களும் இந்த வருடத்தில் திறக்கப்பட்டுள்ளன. வெளிச் சந்தை விலைகளையும் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். தேவை ஏற்படின் மேலும் கொள்முதல் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற 1½ ஆண்டுகளில் உணவுத் துறையை நோக்கும்போது நெருக்கடிபோல காட்டும்படியாக எதும் இல்லை. உணவு நிலைமை வசதியாக இருக்கிறது. நியாயமான விலைக்கு அரிசி தாராளமாகக் கிடைக்கிறது. மற்ற பொருள்களின் விலையும் முன்பு இருந்ததைவிட குறைவாகவே உள்ளது. இது மிகுந்த மன நிறைவை அளிக்கும் சாதனை என்று கூறாவிட்டாலும் அந்த அளவிற்கு நற்நிலை உருவாகி இருப்பதைக் கண்டு நாம் மகிழ்ச்சி கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன்.

கோதுமைக்குச் செய்துள்ளது போலவே நெல்லுக்கும் சாகுபடிக்கு ஆகும் செலவின் அடிப்படையில் விலை நிர்ணயிக்க வேண்டும் என்றும் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 130 கொடுக்க வேண்டும் என்றும், அந்த அளவிற்கு நெல்லின் கொள்முதல் விலை உடனடியாக உயர்த்த சிரமமாக இருந்தால் கோதுமைக்கு ரூ. 115 கொடுப்பது போல் விலை நிர்ணயிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டு வந்துள்ளது. தொடர்ந்து இக் கருத்தை வலியுறுத்தி வருவோம் என்று கூறிக் கொள்கிறேன்.

[பிற்பகல் 3-10]

தொடர்ந்து இந்தக்கருத்தை வலியுறுத்துவோம். நெல் கொள்முதல் விலையில் குவிண்டால் ஒன்றுக்கு 85 ரூபாய்தான் என்று மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. இதற்கு மேல் தனியாக போனஸ் ஆகவோ அல்லது வேறு எந்த வகையிலோ கொடுக்கக் கூடாது என்பதை மத்திய அரசு தெளிவாக்கியிருக்கிறது. நாம் கொள்முதல் செய்வதற்கு ரிசர்வ் வங்கி 60 கோடி முதல் 100 கோடி ரூபாய் வரை முன்பணம் தருகிறது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையை விட அதிகம் கொடுத்து நாம் கொள்முதல் செய்தால் ரிசர்வ் வங்கியிலிருந்து பணம் கொடுக்க வசதியில்லாமல் போகும். மேலும் கொள்முதல் விலையை உயர்த்தும் போது நுகர்வோருக்கு வழங்கும் அரிசியின் விலையைக் கூட்ட நேரிடும். ஏனென்றால் கோதுமைக்கு மத்திய அரசு கொடுக்கின்றபடி மானியம் கொடுத்தால்தான் நுகர்வோர் கொடுக்கும் விலையை ஏறாமல் பார்த்துக் கொள்ள முடியும். ஆகையால் நெல் கொள்முதல் விலையை உயர்த்த மத்திய அரசு மாநில அரசுக்கு மானியம் கொடுக்க வேண்டுமென்று தொடர்ந்து

வலியுறுத்தி வருகிறோம். மத்திய அரசு மானியம் கொடுக்காத வரையில் கொள்முதல் விலையை உயர்த்த வழியில்லை. ஆகை யால் நம்முடைய கோரிக்கையை மத்திய அரசை ஏற்றுக் கொள்ள செய்வதுதான் ஒரே வழி என்று தமிழக அரசு கருதுகிறது. இந்த அடிப்படையில் தன்னுடைய கருத்தைத் தெளிவாக மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்பதை இங்கே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

கேரள மாநிலத்தில் குவின்டால் ஒன்றுக்கு 120 ரூபாய் அனுமதித்து அந்த அளவில் அங்கே நெல் கொள்முதல் செய்யப் படுகிறது என்ற தகவல் இங்கே கூறப்பட்ட இந்த விலையில் 60,000 டன் வாங்கப்படுகிறது என்று அழகர் சாமி அவர்கள் கூறினார்கள். அதன்படி ஏன் இங்கும் செய்யக்கூடாது என்று கேட்டிருக்கிறார்கள். கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுக்க நாம் எந்தெந்த வழிவகைகளைக் கடைபிடிக்கின்றோமோ அவை களை இந்திய அரசுக்குக் கூறி, எந்தெந்த வகைகளிலே இந்த விலையை அதிகரிப்பதற்கு நாம் முயற்சி செய்து, அதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அவைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதிலே ஒருமனதாக இருப்பதால் இதை நீண்ட நாட்களுக்கு அவர்கள் அலட்சியப்படுத்த மாட்டார்கள் என்பதை நான் நம்புகிற காரணத்தால் தான் அவர்கள் ஒரு நல்ல வழிமுறையைக் காண்பார்கள், தள்ளிவிட மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். நல்ல முடிவை எதிர்பார்க்கிறேன் என்று சொன்னேன். அந்த அளவில் நாங்கள் சில முறைகளை ஏற்படுத்த விரும்பி, ஆங்காங்கே சில தாலுக்காக்களில் நெல் கொள்முதல் செய்யும் முறைகளை மேற்கொண்டோம். அதாவது ஒரு ஏக்கர் நிலம் ஒருவர் வைத் திருந்தால் அவரிடமிருந்து ஒரு குவின்டால் நெல் வாங்கப்படும். ஒரு ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருந்தால் முதல் ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஒரு குவின்டால் விதமும், அதற்கு மேற் பட்டு எத்தனை ஏக்கர் வைத்திருக்கிறரோ அதற்கு ஏக்கருக்கு இரண்டு குவின்டால் விதமும் வாங்கப்பட ஆணையிடப்பட்டிருப் பதாகத் தெரிகிறது.

நான் முன்பே குறிப்பிட்டது போல இத்திட்டத்தின் கீழ் 3 ஆயிரம் டன்னிற்கும் கேரள அரசு கொடுக்கிறது என்று எடுத்துக் காட்டி, தமிழகமும் இந்த விலையைக் கொடுத்து வாங்க வேண்டும் என்று சொல்லுவது விரும்பத்தக்கதாக இருக்காது என்று எடுத்துக் கூறும்போது அவர்கள் எந்தெந்த தாலுக்காக் களில் என்னென்ன செய்கிறார்கள் என்பதை நாமும் பின் பற்ற முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் செய் ததை நாமும் செய்ய முடியாது என்பதையும் எடுத்துக்கூறி நம்முடைய பிரச்சினை மிகப் பெரியது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு வெளிநாடுகளுக்கு நம்முடைய தேவைக்கு போக மீதி இருக்கின்ற நெல்லை நேரடியாகக் விற்பனைக்குக் கொடுக்க, விற்க, ஒருவேளை நமக்கு உரிமை வருகின்ற நிலைமை ஏற்படுமானால் விவசாயிகளுக்கு மிக நன்மை உண்டாக்கக்கூடிய நிலைமை உருவாகும் என்ற எண்ணமும் எங்களுக்கு இருக்கிறது. ஆகவே அதையும் நாங்கள் எந்த அளவிலே சொல்ல முடியுமோ அந்த அளவில் சொல்லி இருக்கிறோம். அவர்கள் அனுமதி கொடுப்பது என்பது தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் நாங்கள் முயற்சிக்கிறோம் என்பதை இந்த மாமன்றம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அந்த முயற்சியில் ஈடுபட்டுள் ளோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள் சில கருத்துக்களை இங்கே எடுத்துக் காட்டியிருக் கிறார்கள். "ஒரே வேலை செய்யக்கூடிய டிப்பார்ட்மென்ட் தொழிலாளர்களுக்கு ரூ. 5, ரூ. 4 என்ற வகையில் மின்சார துறையிலும், கன்ஸ்ட்ரக்ஷன் துறையிலும் சம்பத்தை உண்டு பண்ணுபவர்கள், சம்பத்தை நடுபவர்கள், [illegible] இழுப்பவர்கள், காண்ட்ராக்ட் ஊர்க்கார்க்கு அதிகச் சம்பளம். அதாவது

இப்படி ஏற்கனவே டிப்பார்ட்மெண்டில் செய்யப்பட்ட அந்த வேலைகள் பூராவும் காண்ட்ராக்டர்களால் செய்யப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் வேலையை ஒப்படைப்பவர்கள் ஒப்பந்தக்காரர்களை அவர்கள் பயன்படுத்துகின்ற தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்கும்படி வற்புறுத்தலாம்; ஆனால் எந்த விதத்தில் அவ்வூதியம் கொடுக்கப்படவேண்டுமென வற்புறுத்த இயலாது. ஊதியம் கொடுக்கப்படவில்லையாயின், அத்தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஊதியத் தொகையை ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுக்க வேண்டிய தொகையிலிருந்து பிடித்துக் கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. நிறைவேற்றுவதற்கு இரண்டு, மூன்றாண்டு காலமெடுக்கின்ற பெரிய மின் திட்டங்களின் வேலைகளில் மின்வாரியத் தொழிலாளர்களை ஈடுபடுத்த இயலாது. இதுபோன்ற வேலைகள் ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. சில இடங்களில் இத்தொழிலாளர்களுக்கு வாரியத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதை விட குறைந்த ஊதியம் கொடுப்பதாகத் தெரிய வருகிறது. இதை இந்த அரசு கவனித்துக்கொள்ளுகிறது என்பதையும் இதைப்பற்றி நிச்சயமாக ஏதாவது வழிவகை ஏற்படுத்த முடியுமா என்பதையும் இந்த அரசு சிந்திக்கும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இங்கே பொதுப்பணித் துறையைப் பற்றிப் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள், ''ஆயிரம் யூனிட்டுக்கு மேல் என்றால் 15 பைசா கட்டவேண்டும். இதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்து ஒரேயடியாக 12 பைசா என்று நிர்ணயித்துவிடுங்கள். அதற்கு மேல் ஒரு பைசா கூட வேண்டாம். அதற்குமேல் சர்சார்ஜ், மீட்டர் சார்ஜ் என்றெல்லாம் போடாதீர்கள். 12 பைசா போடும்படி வர்த்தக சபை கூட சொல்வதற்குக் காரணம், விவசாயத் தொழில் என்பது ஒரு முக்கியமான தொழில். எனவே, விவசாயிகளுக்கு இந்த மின்சாரத்தை இனாமாகக் கூட கொடுக்கலாம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குறைவழுத்த முறையில் மின்சார வாரியத்திற்கு யூனிட் ஒன்றுக்கு அடக்க விலை சுமார் 45 காசு. ஆனால் சிறு விவசாயிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 12 பைசா வீதமும், மற்றவர்களுக்கு யூனிட் ஒன்றுக்கு 14 பைசா வீதமும் மின்சப்ளை செய்யப்படுகிறது. இந்த அடிப்படைக் கட்டணங்கள் தவிர மாதமொன்றுக்கு இணைப்பு ஒன்றுக்கு உயரளவு ரூ. 5-க்கு உட்பட்டு பரிதிறன் ஒன்றுக்கு ரூ. 1.25 என்ற நிர்ணயித்

திட்டணமும், மீட்டர் வாடகை மாதமொன்றுக்கு ரூ. 4 வீதமும் வசூலிக்கப்படுகிறது. இக் கட்டணங்களை அனைத்தையும் சேர்த்துக் கணக்கிட்டாலும் மின்வாரியத்தின் அடக்க விலைக்கு 50 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. எனவே, விவசாயக் காரியங்களுக்கான மின் கட்டணத்தை மேலும் குறைக்க இயலாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விளக்கத்திற்கு பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து மாண்புமிகு திரு. சாதிக்பாட்சா அவர்கள், "இன்னொரு முக்கியமான பிரச்சினை; இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த அரசாங்கம் எப்படி அலட்சியமாக நடந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் மாவட்டத்திலே ஜேடர்பாளையம் அணைக்கட்டு இருக்கிறது. அங்கே 1977 ஆம் ஆண்டிலே ஏப்ரல் மாதத்திலே ஒரு கசிவு, லீக்கேஜ் ஏற்பட்டது. அந்தக் கசிவைச் சரிக்கட்டுவதற்காக ஒரு திட்டம் போடப்பட்டது. அதற்கு மதிப்பீடு 48 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. செலவாகியிருப்பது 36 இலட்சம் ரூபாய் தான். இந்த வேலையில் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். அதை பகிரங்கமாகச் சொன்னால் நடவடிக்கை எடுக்க கஷ்டமாக இருக்கும் என்று சொல்லி நான் இரகசியமாக கடிதம் எழுதி அன்றைக்குப் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த திரு. இராமச்சந்திரனுக்கும் முதலமைச்சருக்கும் விண்ணப்பங்கள் அனுப்பினேன்". என்று கூறினார்.

[பிற்பகல் 3.20]

ஆனால் இதுவரையில் ஒரு நடவடிக்கையும் கிடையாது. இதிலே 10,000 ஏக்கர் பாசனவசதி குறைந்து 10 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொல்லி கலெக்டருக்கு பொதுமக்கள் மனுக்கொடுத்து கலெக்டர் அதைப்பற்றி விசாரித்துக் கொண்டிருப்பதாகக் குறை கூறினார்கள்.

1977ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜேடர்பாளையம் அணையில் இராஜ வாய்க்காலுக்கு தண்ணீர் எடுக்கப்படும் பகுதியில் அணைக்கட்டிற்கு அடியில் இலேசான கசிவு ஏற்பட்டது. ரூ. 1,000 செலவு செய்து ரூ. 5,000 முதல் ரூ. 6,000 வரை பில் போட்டு எடுத்துள்ளது. இதற்கு ஒப்பந்தக்காரர் என்பவரைக் கூட்டு சேர்த்து இளநிலைப் பொறியாளர் திரு. கே. சின்னசாமியே வேலை செய்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த வட்டாரங்களில் பாசன வசதிகள் நிர்ணயிக்க அதற்குரிய மதிப்பீடுகள் தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அந்த முறையிலேயும் இந்த அரசு அலட்சியப்படுத்தவில்லை. அதற்கு வேண்டிய பணிகளை அரசு செய்து கொண்டிருக்கிறது. அடுத்தபடியாக, காவிரிப் பிரச்னை என்னவாயிற்று என்று கேட்டிருக்கிறார்கள். காவிரிப் பிரச்சினை பற்றிப் போச முதல் அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டுவார்கள். டில்லிக்குப்போய் வந்து மீண்டும் என்ன நிலைமை என்று எதிர்க்கட்சித் தலைவர்களைக் கூட்டிப் பேசுவதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்கள். இதுவரை என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. காவிரிப் பிரச்னையில் இந்த அரசு முறையாக, தீவிரமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை சுமத்தியிருக்கிறார்கள். காவிரிப் பாசனத்தில் தமிழ்நாடு தற்போது பயன்படுத்தும் மொத்தத் தண்ணீரில் 100 டி.எம்.சி. தண்ணீரை சேமிப்பு மூலமாக குறைத்துக் கொள்ள வேண்டும் என்று மைய அரசு மீண்டும் வலியுறுத்தி வருகின்றது. இதை இந்த அரசு சாத்தியமானதாக ஏற்றுக் கொள்வதற்கில்லை. அதோடு, 1976-ம் ஆண்டு குடியரசுத் தலைவரின் ஆட்சியின்போது ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும் இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் தொடரவேண்டும் என்றும் மைய அரசும் கர்நாடக அரசும் கேரள அரசும் வற்புறுத்தி வருகின்றன. இந்த ஒப்பந்தம் தமிழ்நாடு அரசுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை என்பது நமது கருத்து. எனவே, இந்த பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் எதுவும் காண முடியவில்லை. இதைப்பற்றி மேற்கொண்டும் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் ஏற்பாடு செய்யலாமா என்று கேட்டு கோப்பில் ஒரு சுற்றறிக்கை எழுத உத்தரவிடுகிறேன். வெகு விரைவில் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அந்த கோரிக்கை வரும். அதில் என்ன யோசனை சொல்லப்படுகிறதோ அதைக் கேட்டு, இந்தப் பிரச்னையில் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்பதையும், அதே நேரத்தில் இதில் அவசரப்பட்டு அரசே எந்தவிதமான முடிவும் எடுக்க விரும்பவில்லை என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். திரும்பத் திரும்ப வற்புறுத்தினாலும், 1976-ம் ஆண்டில் ஆளுநர் அவர்கள் ஆட்சியில் ஜனாதிபதி ஆட்சியின் கீழ் அப்போது ஏற்படுத்திக் கொண்டதாகச் சொல்லப்படுகிற ஒப்பந்தத்தில் பேசி முடித்து விட்ட விஷயமாக இது கருதப்படுகின்ற காரணத்தால் அதே நேரத்தில் அந்தக் கொள்கையை, அந்த முடிவை நாம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலையில் மேலும் கணக்கு எடுக்க வேண்டும்

என்றும், அதில் எங்கள் பங்கை கொடுத்து விட்டால், அதை எப்படி பயன்படுத்திக் கொள்வதைப் பற்றி நாங்கள் முடிவு செய்து கொள்வோம் என்பதை நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். என்றாலும் அவர்கள் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறுக்கிட்டு நம்மை கட்டுப் படுத்திக் கொள்ள முடியாது என்கின்ற காரணத்தால் தான் இந்த பேச்சு நீண்டு கொண்டேயிருக்கிறது. விரைவில் இந்தப் பிரச்னை பற்றி தீர்க்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது என்றாலும், இன்னும் அவர்கள் நட்புறவோடு பேசுவது போல் காணப்படுவதால், இந்தப் பிரச்னையில் முடிவு ஏற்பட கொஞ்சம் காலதாமதம் ஆகிறதே தவிர இப்படிப்பட்ட காவிரி நதி நீர் பிரச்னையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழகத்திற்கு கிடைத்தாக வேண்டிய உரிமை கிடைத்தாக வேண்டும், தந்தாக வேண்டும் என்பதில் இந்த அரசு பின்வாங்காது என்பதை இந்த மாமன்றத்திற்கு உறுதி கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகள் போராட்டத்தை பொட்டியும் மின் கட்டணத்தை பொட்டியும் அரசு எடுத்த நடவடிக்கை பற்றியும் சில கோரிக்கைகளை சிலர் இங்கே சொல்லியிருக்கிறார்கள். மின் கட்டணம் 10 பைசா, 9 பைசா என்றுருந்தது உயர்த்தப்பட்டது. முன்பு அதாவது 1970-ல் நடந்த போராட்டத்தின் விளைவாக இந்தக் கட்டணம் குறைக்கப்பட்டு, மீண்டும் 1972-ல் மின் கட்டணம் ஒரு அளவுக்கு நிச்சயிக்கப்பட்ட பின்னால், அவசர நிலை காலத்தில் சற்று மேலும் உயர்த்தப்பட்டு, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் 12, 14, 16 பைசா என்றிருந்த நிலையை 14, 12 என்ற அளவுக்கு எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் நேரில் ஒப்புக் கொண்டு விட்டு, பின்னால் வெளியே வந்து சில போராட்டங்களை தொடங்கிக் கொண்டிருப்பதின் விளைவாக, இப்போது மின் கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று சொல்வதும், அது மட்டுமல்ல, மின் கட்டணம் மட்டுமல்ல, வரியையும் கட்ட வேண்டாம் என்று சொல்லுகிற அளவுக்கு சிலர் இறங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு எடுத்துக் காட்ட வேண்டியது கடமை என்று எண்ணுகிறேன். எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஜப்திகளுக்காக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதற்கான ஒரு குறிப்பை இந்த மாமன்றத்தில் எடுத்துக் காட்டுவது, இந்த மாமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற சந்தேகத்தை தீர்க்கும் என்று நம்புகிறேன். கூட்டுறவு கடன் வசூல் சம்பந்தமாக எந்த அளவுக்கு காலம் கொடுக்கப்பட்டது என்பதை அறிந்திருக்கிறோம். 7—4—78-ல் எல்லா விவசாயிகளும் இரண்டு மாதத் தவணை கட்டினால் போதும் என்று அறிவிக்கப்பட்டது. 78-ல் சிறு விவசாயிகள் மீது நடவடிக்கை தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. 15-12-1978-ல் உயர்மட்டக் குழுவின் அறிக்கை மீது நடவடிக்கை

எடுப்பது வரையில் நடவடிக்கை இல்லை என்று கூறி நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த குழுவின் அறிக்கை வரும் [illegible] இல்லை என்று [illegible] இப்போது பெப்ருவரி 15 வரை நடவடிக்கை [illegible] முடிவு செய்து, அதற்குப் பிறகும் [illegible] இன்னும் தனது அறிக்கையை தரவில்லை. [illegible] அதுவரை [illegible] முடிவு அறிவிக்கப்படும் என்று [illegible] தவணை கொடுத்திருக்கிறோம். [illegible] மாக மின்சாரக் கட்டண வசூலில் ஒரு [illegible] இருக்கிறோம் [illegible] வரவேண்டிய அவசியத்தில் [illegible] உறுப்பினர்களுக்கும் [illegible] தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 3.30]

சில நேரங்களில் அரசியல்வாதிகள் தான் [illegible] தவிர்க்க முடியாத சூழ்நிலையின் விளைவாக தங்களுடைய எண்ணங்களை வெளிப் படுத்திக் கொள்வதற்கு சில சூழ்நிலைகளை [illegible] கொள்வார்கள் என்ற குறை கூறப்படுவதும், [illegible] இந்த நாட்டில் ஒழுங்கீனத்தை பொது நன்மையை [illegible] அதிலும் ஒரு கட்டுப்பாடான [illegible] வகையில், ஜாதியின் பெயரால் [illegible] காரியங்களை [illegible] போல், விவசாயிகளை தூண்டுகிற [illegible] அதில் [illegible] தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, அந்த வகையில் [illegible] செயல் படுகின்றவர்கள், அந்த அரசு [illegible] நிச்சயமாக [illegible] யாற்றிக் கொண்டிருந்தால் இந்த மாமன்ற உறுப்பினர்கள் [illegible] முடியுமா என்பதை இந்த மாமன்ற [illegible] முறையில் [illegible] என்று சிந்திப்பார்கள் என்பதும், அந்த வரி கொடுக்காதீர்கள் என்று இயக்கத்தை பற்றி பேசுவதோ, இருக்கின்ற ஜனநாயக அமைப்பில் உறுப்பினர்கள் சொல்வதோ, இந்த நாட்டில் இந்த மாமன்ற உறுப்பினர்கள் ஜனநாயகத்தை நன்கு உணர்ந்த இந்த [illegible] நிச்சயம் ஆதரவு [illegible] அப்படிப் பட்டவர்களுக்கு நிச்சயமாக நம்புகிறது. அரசு [illegible] என்றும் இந்த அரசு நிச்சயமாக வேண்டுமென்றே [illegible] வாதமாக அல்லது வேண்டுமென்றே செய்வார்கள் [illegible] வேறு வழி வாங்கும் நோக்கோடு காரியங்கள் [illegible] கண்டிப்பதற்கும், அதைப்பற்றி [illegible] அந்த வகையிலே மாமன்ற உறுப்பினர் [illegible] முறைகள் இருக்கின்றன. அந்த வகையிலே [illegible] உரிமையும் [illegible] களுக்கு கடமையும், பொறுப்பும், [illegible] இல்லாத [illegible] அந்த வகையிலே இந்த நம்பிக்கை இருக்கிறது. [illegible] கருத்துக்கள் தெரிவித்தால் உதவியாக இருக்கும். [illegible] நேரத்தில் வரி கொடா இயக்கத்தைப் போன்ற [illegible] அந்த வகையிலே [illegible] றான வழியில் தூண்டி விட்டு, அந்த வகையிலே [illegible] இழுத்துச் செல்கின்ற செயல் முறைகளுக்கு இந்த மாமன்றம் நிச்சயமாக ஆதரவு தராது என்று நான் எதிர்பார்க்கிறேன்.

வணிக வரித் துறை, மற்றும் அற நிலையத் துறை ஆகியவைகளைப் பற்றியும் இங்கே கருத்துக்கள் சொல்லப்பட்டன. நண்பர் சாதிக் பாட்சா அவர்கள் அதைப் பற்றி பேசியபோது, கெய்வார் கமிட்டியின் அறிக்கை என்ன ஆனது என்றும், 26—10—1978 அன்று சமர்ப்பித்த அந்த கமிட்டியின் பரிந்துரை மீது துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். நிர்வாக சம்பந்தமான நடைமுறைகளுக்கு கட்டுப் படாத பரிந்துரைகளை எடுத்துக் கொள்வது என்றும், அதற்கு விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் கேள்விக்குப் பதிலாக நான் சொல்ல விரும்புகிறேன். சில சட்டத்திற்கும், விதிகளுக்கும் திருத்தம் தேவைப்படாத பரிந்துரைகளை அமுல்படுத்துவது பற்றி வணிக வரி வாரியம் கட்டளைகள் பிறப்பித்துள்ளது. சட்டத்திற்கும், விதிகளுக்கும் திருத்தம் தேவைப்படும் பரிந்துரைகள் தனித்தனியாக அரசு பரிசீலனை செய்து, அதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

இதிலே பல பிரச்னைகள் இருக்கின்றன என்பதையும், அதைப் பற்றி குறிப்பிடுவது அவசியம் என்றும் நான் நினைக்கிறேன். ஒரு முனை வரி விதிப்பதைப் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. பல முனை வரியை ஒரு முனையாக மாற்றக் கூடாதா, செய்யக் கூடாதா என்று கேட்கப்பட்டது. இது சம்பந்தமாக ஆய்வு செய்வதற்கு 1972-லே சிறப்பு அதிகாரி தன் அறிக்கையிலே பல முனை வரி விதிப்பதிலே இருந்து முழுமையாக ஒரு முனை வரியாக மாற்றுவது இயலாது என்று குறிப்பிட்டுள்ளார்கள். கெய்வார் கமிட்டியும் தனது அறிக்கையிலே இதே பரிந்துரையைத் தான் செய்துள்ளது. பல முனை வரியை, ஒரு முனை வரியாக மாற்றுவது என்றால், அதனுடைய உற்பத்தி விநியோகம், மக்களின் வாங்கும் சக்தி ஆகியவை பரவலாக இல்லாமல் சுலபமாக இருக்க வேண்டும். மேற் குறித்த கட்டுப்பாடுகளுக்கு இணங்க தற்போது பல முனை வரியை, ஒரு முனை வரியாக மாற்றுவது பற்றி நடைமுறையில் உள்ள நிலைமைகளுக்கு ஏற்ப ஆய்ந்து முடிவெடுக்கப்படும் என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த இடத்தில், நான் சொல்ல விரும்புவது, எங்கள் தேர்தல் அறிக்கையிலே நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். ஒரு முனை வரியா, பல முனை வரியா என்பது பற்றி ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். அது மக்களுக்கு எந்த வகையில் நன்மை, தொல்லையாக இருக்காது என்பதை ஆய்ந்து பார்த்து, அதற்கேற்ப நடவடிக்கையில் இறங்குவோம், துரிதப் படுத்தி செயல்படுவோம் என்ற கருத்தை நாங்கள் வெளியிட்டிருந்தோம். அந்த முறையிலே இதற்கு நாங்கள் மிகுந்த அக்கறை காட்டி, இதற்கு ஒரு நல்ல வழிவகை காணக்கூடிய முறையில், மற்றவர்களுக்கு தொல்லை இல்லாமல், அரசே ஒழுங்காக, அரசுக்கும் நஷ்டம் ஏற்படாத வகையில் நிறை வேற்ற வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது.

வணிகர் நல வாரியத்தைப் பற்றிச் சொல்லப்பட்டது. 1975 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில், கும்பகோணம் வர்த்தகக் கழகம்'' வணிகர் நல வாரியம்'' அமைப்பது குறித்து அரசுக்கு ஒரு குறிப்பு அனுப்பியது. அதை அரசு பரிசீலனை செய்தது. விற்பனை வரியை பண்டங்களை வாங்குவோர் செலுத்துகிறார்கள். வியாபாரிகள் செலுத்தவில்லை. வருமான வரி செலுத்துபவர்களுக்கோ, அல்லது எக்ஸைஸ் வரி செலுத்துபவர்களுக்கோ "பொது நல வாரியம்" ஏற்படுத்தப்படவில்லை. நலிந்த வியாபாரிகளுக்கு உதவி தேவைப்பட்டால், நாட்டிலுள்ள வங்கிகளை அணுகி உதவியாக கடனைப் பெற்றுக் கொள்ளலாம். ஆகவே மக்கள் செலுத்தும் வரிப் பணத்திலிருந்து, வியாபாரிகள் நலனுக்கு அத்தகைய வாரியம் தேவையில்லை என்று அரசு முடிவெடுத்துள்ளது.

விற்பனை வரி ஆலோசனைக் குழு ஒன்றை நியமிப்பது சம்பந்தமாக அரசு பரிசீலித்து வருகிறது என்பதை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

கூட்டுறவுக் கடன்களைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவராக [illegible] அவர்கள், விவசாயிகள் கடன்கள் ரத்து செய்யப்பட வேண்டும், விளைச்சல் கிடையாது என்று அவர்கள் போராடுகிறார்கள். அதைப் பற்றி அரசு கருத்தில் கொண்டு கருத்துச் சொல்லவில்லை என்று சொன்னார்கள்.

திரு. அழகர்சாமி அவர்களும், கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்யக்கூடிய நிலைமை எதிர்படும்போது இப்படிப்பட்ட காரணங்கள், சட்டங்கள் எல்லாம் கொண்டு வரப்படுகின்றன. 1974-75, 1977-78 ஆம் ஆண்டுகளில் காரண காரியத்தில் வசூல் ஒத்தி வைக்கப்பட்டது. எல்லாம் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு வசூல் செய்ய ஆரம்பித்திருக்கிறது. ஆனால் இப்போது நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு [illegible] ஆரம்பத்திலேயே முதல் போட வேண்டியிருக்கிறது. விவசாயம் செய்வது என்றால் [illegible] என்று குறிப்பிட்டார்கள்.

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும் மொத்த கடனுக்கு ஒரு பகுதியை இந்திய ரிசர்வ் வங்கி மறு நிதியிலிருந்தும் பொது மக்களிடத்திலிருந்து வசூலிக்கப்படும் வைப்புத் தொகையிலிருந்து பெறக் கூடிய மூலதனத்தை [illegible] ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்ற கடன்களை [illegible] வேண்டும். கூட்டுறவு வங்கிகள் கொடுக்க முடியாது. [illegible] ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த அரசு [illegible] ரத்து செய்வது என்பதை [illegible] விவசாயிகள் பல இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி அரசு கவனித்திருக்கிறது. இக்குழு [illegible] அதிகாரக் குழு ஆராய்ந்து வருகிறது. [illegible] அறிக்கை கொடுத்த பிறகுதான் அரசு இறுதியான ஒரு முடிவை

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 26

எடுக்க வேண்டியிருக்கிறது. அதுவரை கடுமையான நடவடிக்கை மூலம் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களை வசூலிப்பதை அரசு தடை செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

அதேபோல் திரு அழகர்சாமி அவர்கள், 'நீங்கள் கொடுக்கிற வாக்குறுதிகள் எத்தனையோ நிறைவேற்றப்படுவதில்லை; சிறு விவசாயிகளிடம் ஜப்தி பண்ணமாட்டோம் என்று சொன்னீர்கள்; தொடர்ந்து ஜப்தி நடக்கிறது. நில அடமான பாங்கியில் கடன் வாங்கிய காரணத்தால் அவ்வளவும் க்ளோஸ் - 1973 ஆம் ஆண்டில் வாங்கிய கடன் 5,000 ரூபாய்க்கு வட்டி ரூ. 1,607·71 என்றும், தண்ட வட்டி 2,048 ரூபாய் என்றும் இப்படி வசூல் செய்திருக்கிறார்கள்' என்று குறிப்பிட்டார்கள்.

நான் முதலில் பேசும்போதே குறிப்பிட்டிருக்கிறேன். இதைப் பற்றி நான் அங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த நிலைமைகளை இந்தியப் பேரரசு நிச்சயமாகக் கவனித்தே ஆக வேண்டுமென்பதை எந்த அளவுக்கு வற்புறுத்த முடியுமோ அந்த அளவுக்கு நாங்கள் வற்புறுத்தி யிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன். தமிழக அரசு விவசாயிகளுடைய கஷ்டங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டு எப்படியாவது நடந்தது நடக்கட்டும், நாம் நம்முடைய காரியத்தை நடத்திக் கொண்டு போகலாம் என்பது போல் இந்த அரசு இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கேயாவது, எந்த அதிகாரியாவது நாங்கள் இங்கே குறிப்பிடுகிற கருத்துக்கு மாறாக, வாக்குறுதிக்கு மாறாக செயல்பட்டால் எங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல, தெரிவிக்க வேண்டியவர்கள் தெரிவிக்கத் தவறி விட்டார்களேயானால், மாமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினால் தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதை அரசு சார்பில் உறுதியாக கூறவிரும்புகிறேன்.

<u>திரு. க. சுப்பு :</u> துணைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரை விவசாயிகளுக்கு இருக்கும் கடன்கள் முழுவதையும் ரத்து செய்திருக்கிறது. மராட்டிய மாநிலத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் 130 கோடி ரூபாய் முழுவதையும் ரத்து செய்திருக்கிறார்கள். நாம் மட்டும் விவசாயிகளுடைய கடன்களை ரத்து செய்ய முடியாமல் என்ன இடையூறு இருக்கிறது என்பதை அரசாங்கம் அறிவிக்குமா?

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> துணைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநில அரசு நிச்சயமாக அப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்திருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் கொஞ்சம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். மராட்டிய

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

[illegible] அதிகாரிகளையும் சந்திக்க ஏற்பாடு செய்து தெரிந்து கொண்டது. இன்னும் அமல்படுத்தவில்லை என்றும் அவர்கள் [illegible] வெளியிட்டிருக்கிறார்கள் என்றும், பயன்படுத்த [illegible] நிலைமை என்று குறிப்பிட [illegible] என்பதுதான் [illegible] அவர்களும் இதற்கான [illegible] விரும்புகிறேன். மத்திய அரசிலிருந்து [illegible] பணத்தைப் பெறவேண்டுமென்ற [illegible] அங்கே நிறையப் போராட்டம் நடத்து [illegible] என்பதைக் குறிப்பிடு [illegible]. பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன என்பதைக் கருதுகிறேன். [illegible] என்னுடைய கடமை என்று [illegible] என்றால், அப்படிச் செ[illegible] அரசும் அப்படிச் செய்கிறது நிலைமை இருக்குமானால் [illegible] மத்திய அரசு ஏற்றுக்கொள்கிற நிலைமை [illegible] என்பதைத் தெ[illegible] தமிழக அரசு மட்டும் வாளா இருக்காது என்பதைத் [illegible] அப்படி ஒரு நடவடிக்கையை எடுக்க [illegible] கொள்கிறேன். அப்படி ஒரு நிலைமை இருக்குமானால் இந்தியப் பேரரசு ஒத்துக் கொள்கிற நிலைமை [illegible] நிலைமையை [illegible] தமிழகம் அப்படிப்பட்ட ஒரு [illegible] ஏற்படுத்தத் தயங்காது என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 3-40]

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முத்துசாமி அவர்கள் பேசும்பொழுது [illegible] சேக்கனாங்குப்பம் என்ற [illegible] சென்ற கூட்டத் தொடரின்போது [illegible] வேலை கொடுக்க [illegible] விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அரசாங்கம் நிர்ணயித்தபடி கூலி [illegible] படவில்லை. அவர்களுக்கு அரசாங்கம் [illegible] போராட்டத்தை நடத்தி [illegible] கொடுக்கப்படவில்லை, அதற்காக அவர்கள் போராட்டத்தை [illegible] வேலை கொடுக்காததன் காரணம் [illegible] கூட அந்த மிராசுதார்கள் வேலை கொடுக்காமல் [illegible] நடந்து கொண்டிருந்த [illegible] அவர்கள் அப்போது சட்டமன்றம் நடந்து [illegible] திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர் [illegible] போது, நடந்தே இங்கே வந்து [illegible] சந்தித்ததாகவும் [illegible] உடைய தலைமையில் என்னைச் சந்தித்ததாகச் சொன்னார்கள். ஆனால் [illegible] குறைகளைச் சொன்னதாகவும் [illegible] கூலி [illegible] நிர்ணயிக்கப்பட்ட வேலை கொடுக்கப்படவில்லை, [illegible] கொடுக்கப்படவில்லை, சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன, [illegible] வழக்குகள் போடப்படுகின்றன என்று சொன்னதாகவும், அப் [illegible] போது நான் உறுதிமொழியைச் சொல்லி ஒரு வாரத்திற்குள் அவர்களுடைய குறைகளைப் போக்குவதாகச் சொன்னேன் என் [illegible] ஆனால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இன்னும் [illegible] 86 பேர்கள் கோர்ட்டிற்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை, மிராசுதார்கள் அவர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கவில்லை. அவர்களுக்கு [illegible] நிர்ணயம் செய்யப்பட்ட கூலி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்து இருக்கிறார்கள்.

[illegible] வாரியம் மூலமாக செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி [illegible] விவசாயத் தொழிலாளர் [illegible] கலந்தாலோசித்தபோது [illegible] கூலி வழங்கப்படுகிற [illegible] முறையாக நிர்ணயிக்கப்பட்ட [illegible]

என்ற தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள். குறைந்த அளவு ஊதியம் வழங்கப்படுகிறது என்ற புகார் வருமானால், அதன் மீது தனி நடவடிக்கை இப்போது தேவையில்லையென்றிருந்தாலும் அப்படிப்பட்ட நடவடிக்கை தேவை என்ற கட்டாயம் உருவாக்கப்படுமானால் இந்த மாமன்றத்தின் எண்ணத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளுகின்ற இந்தத் தமிழக அரசு நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ளும், அவர்களுக்குக் கூலி குறைத்துக் கொடுப்பதை, சட்டபூர்வமாகத் தடுக்க, அவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஆட்களை வைத்து அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றுவார்களானால் அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து திரு. பண்ணை சேதுராம் அவர்கள் பேசும்போது:

<u>திரு. துரை முத்துசாமி :</u> துணைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 36 வழக்குகள் அவர்கள்மீது போடப்பட்டிருக்கிறது, அவைகளை வாபஸ் வாங்கவேண்டுமென்றும், திருட்டுப்போன சொத்துக்களைத் திருப்பி வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டு இருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆண்டு ஆகிவிட்டது, இன்னும் வழக்குகள் திரும்பப் பெறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> நான் வெளியிட்ட கருத்துக்களை அவர்கள் ஒரு முறை அந்தப் புத்தகத்தை வாங்கிப் படித்து எந்த உறுதிமொழியை நான் கொடுத்தேன் என்பதை அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உடைமைகள் கிடைத்துவிட்டால் அவைகளை அதிகாரிகள் வைத்துக்கொண்டிருக்க முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் வைத்திருந்து திருப்பித் தராமல் இருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக அதைக் கொடுக்கும்படி செய்ய வேண்டிய நிலைமையை, பொருட்கள் கிடைத்து விட்டனவா என்று பார்த்து அதற்கேற்ப அந்தப் பணியை அவர்கள் செய்யுமாறு தூண்டிவிடுவதன் மூலமாக வேகமாக விரைவாக அவர்கள் அந்தப் பணியைச் செய்ய முன் வருவார்கள் என்ற நிலையில் அந்த வகையில் தான் உறுதிமொழி தந்திருக்கப்படுமே தவிர வேறு வழியில் தந்திருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், வழக்குகள் திரும்பப் பெறப்படுவது என்பது பரிசீலனையில் இருக்கிறது என்றும் வழக்குகளைச் சட்டப்பூர்வமாக திரும்பப்பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் அதைப்போன்று பல வழக்குகள் திரும்பப்பெற வேண்டியிருக்கிறது என்று ஒவ்வொன்றையும் பார்த்து திரும்பப் பெறுகின்ற முறையிலே சிந்திக்கப்படுகிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்றையும் இங்கே நான் குறிப்பிட

அடைந்த பேட்டை முஸ்லீம்கள் தாக்குதல் நடத்தினர், இரு பிரிவினருக்கும் இடையில் கலவரம் வராமல் தடுப்பதற்காக போலீஸ் படையினர் உள்ளே சென்றனர்—ஆத்திரம் அடைந்த முஸ்லீம்கள் அவர்கள் மீது கற்களை வீசினர்—இதனால் கலவரம் ஏற்பட்டு—காவல் துறையினர் 64 பேரை கைது செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

கடயநல்லூர் காவல் துறையினர் முறையாக வழக்குகளை எந்த வகைகளில் பதிவு செய்யலாமோ அப்படித்தான் செய்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதைத்தவிர காவல் துறையினர் மசூதிக்குள் நுழைந்து தாக்கினார்கள் என்பது உண்மை இல்லை என்பதையும் காவல் துறையினர் மசூதிக்குள் நுழையவே இல்லை என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுமென்றே இப்படிச் செய்யவில்லை என்றும் கூறும்போது, முஸ்லீம் மக்கள் மீது இந்த அரசு மைனாரிட்டி என்ற வகையில் அலட்சியம் காட்டுகிறது என்பதையும், நாங்கள் அவர்களுக்கு ஏதோ பாதகத்தை விளைவிக்க விருப்பப்படுவது போலவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்கள், அவர் அதைச் சொல்லும் போது, இந்தச் சட்டமன்றத்தின் தொடக்கத்திலே 1977-ம் ஆண்டு கூட்டத்தில் அவர் பேசியபோதும், முஸ்லீம்களின் பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டார்—நான் அப்போதே கூறியது, எங்கள் கட்சியிலும் மற்றும் பிற கட்சிகளிலும் முஸ்லீம் நண்பர்கள் வந்து இருக்கிறார்கள். அப்படி முஸ்லீம்களின் பிரதிநிதி அவர் மட்டும் என்று சொல்வது சரியல்ல. நான் ஒருவன்தான் முஸ்லீம்களின் பிரதிநிதி என்று சொல்லவேண்டாம்—என்றுதான் சொன்னேனே தவிர அவர் முஸ்லீம் அல்ல என்றோ, முஸ்லீம்களின் பிரதிநிதி அல்ல என்றோ கூறவில்லை என்பதை அவருக்கு குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

நாங்கள் அலட்சியப்படுத்தவில்லை என்பதற்காகவும், ஒரு பணியிலே யார்யாரை ஜாதியைப் பாராமல், மதத்தைப் பாராமல், காவல் துறையில் கூட அவர்கள் செயல்படவேண்டும் என்பதற்காக, பொறுப்பு வகிக்கவேண்டும் என்ற அடிப்படையில் நியமித்து இருக்கிறோம் என்பதை நான் இங்கே ஒரு உதாரணத்தின் மூலம் கூற விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்தில் மொய்னுதீன் மாவட்ட ஆட்சித் தலைவர், பகீர் முகமது மாவட்ட நீதிபதி. முகமது அலி காவல்துறை கண்காணிப்பாளர் அப்துல்லா, துணைக்கண்காணிப்பாளர் கோவை நகரம் மகபூப் ஜான், ரகசிய பிரிவு மற்றும் புலனாய்வுத் துறை, கோவை. இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே மாவட்டத்தில் எந்தெந்த துறைகளில் பதவி வகிக்கிறார்கள் என்

பதை குறிப்பிட்டுக் காட்டுவதற்கு என்று தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் முஸ்லீம்கள் என்றோ, கிருஸ்டியன் என்றோ வேறு வகுப்பினர் என்றோ, ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று கருதியோ, மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதியோ யாரையும் எந்தப் பணிகளுக்கும் தேர்ந்தெடுப்பது இல்லை, வேறுபடுத்தியது இல்லை என்பதையும் நாங்கள் அதிகாரபூர்வமான சீனியாரிட்டி தகுதிப்படி எத்தனை வருடங்கள் எங்கே இருந்தார்கள் என்பதை கருத்தில் கொண்டு எந்தெந்த இடங்களில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்கிற நிலைமை இருக்கிறதோ அந்த இடங்களுக்கு மாற்றப்படுகிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிடுவது அவர் என்னுடைய கருத்துக்களை நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்கிற எண்ணத்தில் தான் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

நான் இங்கே ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். எதற்கு எடுத்தாலும் இந்த அரசு வந்த பிறகு வகுப்புக் கலவரங்கள், ஜாதிக் கலவரங்கள் அதிகமாகிவிட்டது என்று குறைகூறுவதில்—அவர்கள் வேண்டுமென்றே குறைகூறுகிறார்கள் என்று நான் குறிப்பிடவில்லையென்றாலும், எப்படியோ விளம்பரத்தின் மூலமாகவோ அல்லது அவர்களுக்கு செய்தி அதிகமாக விளம்பரப்படுத்தப்பட்டு தரப்படுகிற காரணத்தாலே இங்கே கூறுகிறார்கள் என்ற வகையில் நான் சில உதாரணங்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

1947 ஆம் ஆண்டு வகுப்புக் கலவரங்கள். 1947 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் நாளன்று மதுரை மாவட்டம் தேவதானம்பட்டியில் இந்துக்களும் அரிசனங்களும் திருவிழா ஒன்றை நடத்தும் வகையில் பஜனை பாடிக்கொண்டு வரும்போது, வழியில் முஸ்லீம்கள் 50 பேர் இந்துக்களைத் தாக்கி காயப்படுத்தி இருக்கிறார்கள். பின்னர் 400 இந்துக்களும், 100 முஸ்லீம்களும் ஆயுதங்கள், கம்புகள் எடுத்துக்கொண்டு வீடுகளுக்கு தீ வைத்துவிட்டனர். இதனால் துப்பாக்கிச்சூடு நேர்ந்தது. இது ஏதோ இந்து முஸ்லீம் கலவரம், ஏதோ மத நம்பிக்கையால் ஏற்பட்ட கலவரம் என்று சொல்லிவிடலாம். ஆனால் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 5 ஆம் நாளன்று நெல்லை மாவட்டம் மேலப்பாளையத்தில் தேசிய முஸ்லீம் லீகைச் சார்ந்தவர்களுக்கும், முஸ்லீம் லீகைச் சேர்ந்தவர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. முஸ்லீம்கள் 4,000 பேர் கூடி கலவரம் செய்ததால் ஒரு. எஸ். ஐ. யும், 3 காவலர்களும் காயமுற்றனர். எஸ். ஐ. கீழே விழுந்துவிட்டார். காவல் துறை கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தால் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். 3 பேர் இறந்தார்கள். ஒரு எஸ். ஐ. 3 காவலர்கள் உட்பட 11 பேர் காயமுற்றனர் என்ற செய்தியை நாம் கவனிக்கவேண்டும்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

1979 பிப்ரவரி 26]

[பிற்பகல் 3—50]

விரும்புகிறேன். ஒரு தொழி
ஒன்றை இங்கே நான் குறிப்பிட நாட்டிலே உருவாக்கப்படும்
லுக்கு ஒரு சங்கம் என்ற நிலைமை இந்த அரசு வரவேற்கும்,
என்றால் அதைப் பற்றி நிச்சயமாக நான் கூறிக் கொள்ள விரும்பு
ஒத்துழைக்கும் என்பதையும் இங்கே
கிறேன்.

புதிதாக தோன்றினால்தான்.
இந்த நாட்டில் சங்கங்கள் புதிது புதிதாகத் தோன்றினால்தான்
அதன் விளைவாக பிரச்னைகள் என்றால் அதை ஏற்றுக் கொள்ள
விளைவுகள் நன்றாக இருக்கும் என்பதையும், இப்பொழுது புதிய
வேண்டியது அவசியம் தேவை சட்டம் இல்லை; புதிதாக
சங்கங்கள் தோன்றுவதை தடுக்க இல்லை என்று எல்லா உறுப்
சங்கங்கள் வருவதை விரும்புவதும் அவர்கள் தந்த விவரத்தை
பினர்களும் கூறியிருக்கிறார்கள். முடிவுக்கு வந்தது என்பதை
எடுத்துக் கொண்டு அரசு இந்த விரும்புகிறேன்.
இங்கே நான் சொல்லிக் கொள்ள

மாண்புமிகு சாதிக் பாட்சா
அதைப்பற்றி பேசும்போது விவசாயிகள் போராட்
அவர்கள் கூட்டுறவுத் துறை பற்றியும், ஏற்கெனவே நான்
டத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள் மீண்டும் அதை
அதைப்பற்றி சொல்லியிருக்கின்ற காரணத்தினால் நம்புகிறேன்,
நான் சொல்ல வேண்டியது இல்லை என்று

கடயநல்லூரில் காதர்
மாண்புமிகு எம். ஏ. லத்தீப் அவர்கள் மசூதிக்கு உள்ளே
மொகிஜீன் மசூதி அருகே, போலீஸ்காரர்கள் தாக்கினார்
சென்று தொழுகை நடத்திக் கொண்டிருந்தவர்களை அவர்கள்
கள் என்று சொன்னார்கள். அதை முதலமைச்சர் சொன்னதை
சொன்னார்கள் என்று சொல்லுகிறார்கள். நான் தெரியவில்லை.
அவர்கள் எப்படிப் புரிந்து கொண்டார்கள் என்று பெற வேண்டிய
பாதுகாக்கப்பட வேண்டியவர்கள், பாதுகாப்புப் போக வேண்
வர்கள் இருக்கின்ற இடத்திற்கு காவல் துறையினர் உறுப்பினர்
டிய கட்டாயம் ஏற்படுகிறது என்பதை இம்மாமன்ற—அதைத்
கள் கட்டாயமாக வரவேற்பார்கள் என்று நம்புகிறேன் கொள்ள விரும்பு
தவர வேறு வழியில்லை என்பதையும் கூறிக்
கின்றேன்.

மொகிஜீன் மசூதிக்
திருநெல்வேலி கடயநல்லூரில் காதர் மங்கள் சுந்தர்
குள்ளே இரண்டு முஸ்லீம்—பிரிவுகள் ஒன்று இரண்டு பிரி
முஸ்லீம்கள் இரண்டாவது பேட்டை முஸ்லீம்கள்—முஸ்லீமை ஒரு பிரிவி
னர் இருக்கின்றனர். இறந்து போன ஒரு தமிழ்நாடு "வஃக்ப் போர்
னர் மசூதிக்குள் புதைக்க எண்ணினர்—வேறு பிரிவினர் அதற்கு
டின் வழக்கங்களின்படி அதன் காரணமாக மங்கள் சுந்தர் முஸ்லீம்
எதிர்ப்புத் தெரிவித்தனர். இருப்பினும் செய்தனர்—ஆத்திரம்
கள் சவ அடக்கத்திற்கான ஏற்பாடுகளை

அதேபோல் நெல்லை மாவட்டம் பாபநாசம் ஹார்வி தொழிலாளி ஒருவர், இதயத்துல்லா இறந்தார். அவர் இறந்தது குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று காவலர்கள் கோரிய காரணத்தால் 5,000 பேர் கூடி கற்கள் வீசினர். ஒரு இன்ஸ்பெக்டரும் 13 காவலர்களும் காயமுற்றனர். நிலையைக் கட்டுப்படுத்த காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். 4 பேர் இறந்தார்கள். 36 பேர் காயமுற்றனர். இதையெல்லாம் நான் குறிப்பிடுகிறபோது......

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதலமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்கள் கொடுப்பதை பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை; பழைய சம்பவங்களை மீண்டும் நினைவுப்படுத்தி இப்போதுள்ள அமைதியான சூழ்நிலையை கெடுத்துவிடக்கூடாது. இனிமேல் இது போன்ற நிகழ்ச்சிகள், வகுப்புக் கலவரங்கள் கட்டுப்படுத்தப்படும் என்று உறுதிமொழி தந்து அண்ணா வழியைப் பின்பற்றி இந்த நாட்டில் வாழும் எல்லா சமுதாயத்திற்கும் சமநீதி வழங்கப்படும் என்று உத்தரவாதம் கொடுத்தால் போதும். பழைய நிகழ்ச்சிகளை நினைவுகூர்வதால் இப்போதுள்ள அமைதி கெட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, புதிய எந்த ஆர்ப்பாட்டத்தையும் உருவாக்குவதற்காக அதை நான் சொல்லவில்லை. இங்கே வெளியிட்ட கருத்துக்கள் எந்தெந்த உணர்வுகளை மக்களுக்கு ஏற்படுத்தும் சூழ்நிலையை ஏற்படுத்தும் அளவிற்கு உருவாக்கப்பட்டது என்கிற காரணத்தால் அவர்களுக்கு பழைய நினைவுகளை ஏற்படுத்தி, இப்படியும் நடந்தது அந்தக் காலத்தில், அப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லை. நான் அரசியலில் இருந்தேனா என்பது கூட மக்களுக்குத் தெரியாத நிலையில், அதாவது அரசியலில் நான் விலாசம் இல்லாதவனாக முகவரி இல்லாதவனவாக இருந்தேன் அப்போதே இது நடந்து இருக்கிறது என்பதற்காக இதைச் சொன்னேன்.

[மாலை 4.00].

ஆகவே, இந்த அரசு வந்த பிறகுதான் இவைகள் நடக்கின்றன என்று கூறுவதைப்போல் இங்கே சிலர் கூறினார்கள். அப்படி அல்ல என்பதற்கு நான் அதைப்போன்ற நிகழ்ச்சிகளை பல்வேறு உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது. அதிலும் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் மிக வேகமாக என்னென்ன பேசினார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் நினைவு கூர்ந்து கொண்டால்

நல்லது என்பதற்காகத்தான் இதை நான் இங்கே குறிப்பிடுகிறேனே தவிர வேறல்ல. அவர்கள்தான் நான் இவைகளை இங்கே குறிப்பிட வேண்டிய கட்டாயத்திற்கு என்னை ஆளாக்கியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. லத்தீப் அவர்கள் இங்கே பேசும்போது, வேண்டுமென்றே ஒரு பிரச்சனையைச் சொல்லி, அது மக்கள் மத்தியில் வந்து, அதனால் வேறு விளைவுகள் வந்தால் நிலைமை எப்படி எல்லாம் இருக்கும்-அதனால் அதன் உண்மை என்ன என்பதைக் கண்டுபிடித்த பின்னால் அந்தப் பிரச்சனைப் பற்றி வெளியே கூறினால் என்ன என்று லத்தீப் அவர்கள் சொன்னார்கள். மற்றவர்கள் சொல்லிவிட்ட பிறகு, இந்த ஆட்சி வந்த பிறகு வகுப்புக் கலவரம் என்றாலும் சரி, ஜாதிக் கலவரம் என்றாலும் சரி, மதக் கலவரம் என்றாலும் சரி, அல்லது வேறு எந்தக் கலவரமானாலும் சரி, இப்படியெல்லாம் நடக்கிறது என்று சொல்லும்போது நான் அவை எந்த நேரத்தில், எந்த கட்டத்தில் நடந்தது என்பதையும் அதன் விளைவுகளையும் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் 1948 லிருந்தே, அதற்கு முன்னாலிருந்தே கூட நடைபெற்றிருக்கின்றன. நான் இங்கே குறிப்பிடுகின்ற சம்பவங்கள் எந்த ஆண்டிலிருந்து தொடருகிறது எப்படி நடந்தது, எப்படி பாதிக்கப்பட்டது என்பதை எடுத்துக்காட்டி, அது என்னுடைய வாதத்திற்கு ஆதாரமாக அமையும் என்பதால் வெளியிடுகிறேனே தவிர, வேண்டுமென்றே இது மக்களுக்கு தெரிந்து, புதிய குழப்பம், அல்லது கலவரம் வரவேண்டுமென்ற எண்ணத்தில் வெளியிடவில்லை. அந்த எண்ணம் இந்த அரசுக்கு நிச்சயமாக இல்லை. அப்படி ஏதாவது கலவரம் வந்தாலும் அதைத் தடுக்க நாங்கள்தான் இருக்கிறோம், அதைத் தீர்ப்பதற்கு நாங்கள்தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை மறந்துவிடவில்லை.

அதோடு, மகாத்மா காந்தியடிகள் சூடுபட்ட நேரத்தில் 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாளன்று கோவை மாவட்டத்தில் ஈரோட்டில் இந்துக்கள் முஸ்லீம் மக்களை தாக்கினார்கள், மசூதியை எல்லாம் சேதப்படுத்தினார்கள் என்ற குறிப்பு என்னிடம் இருக்கிறது. அதற்குக் காரணம் நான் முன்பே சொன்னதைப்போல காந்தியடிகளைக் கொன்றவன் ஒரு முஸ்லீம் என்ற எண்ணத்தின் காரணமாகத்தான் அப்படிச் செய்தார்கள். இதைத்தான் நான் மேல்வையில் குறிப்பிட்டேன். யார் யாரை தாக்கினார்கள், யார் யாரை கொன்றார்கள் என்பதைப் பற்றி முடிவு தெரிவதற்கு முன்னால் நாமாகவே ஒரு முடிவுக்கு

வருவதாக இருந்தால், அது உண்மைக்குப் புறம்பானதாக இருந்தால் கூட அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதைச் சொன்னேன். அப்போது அங்கே இருந்தவர்கள் அது உண்மை என்பதை ஏற்றுக் கொண்டார்கள் என்று நம்புகிறேன். அதைப் போல இந்த மாமன்றத்தில் உள்ளவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

ஏதோ ஆபத்தோ அல்லது தாக்குதலோ ஏற்படும்போது முன்னதாகவே இந்தக் கட்சியைச் சேர்ந்தவர் அல்லது இந்த மதத்தைச் சேர்ந்தவர் அல்லது இந்த சாதியைச் சேர்ந்தவர், அதனால் தான் இப்படிச் செய்தார், இதற்கு இதுதான் காரணம் என்று செய்தி வெளியிட விரும்பினால் நாட்டிலே அமைதி நிச்சயமாகக் கெட்டுவிடும், உண்மையிலேயே அவர் ஒரு குறிப்பிட்ட ஜாதிக்காரர் என்று இருக்குமானால், தீர்ப்பு வந்த பிறகு, அவர்களுக்கு என்ன தண்டனை கிடைக்க வேண்டுமோ அது நீதிபதி அவர்களால் தெரிவிக்கப்பட்டால் அதை நிறைவேற்ற இந்த அரசு நிச்சயமாக தயங்காது; தீர்ப்பின்படி தண்டனையை நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அடிப்படையிலே தான் நான் சொன்ன காரணத்தைக் கூறினேன். தாக்கப்படுகின்றவர் தாக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் - தாக்குகின்றவர் தாக்கிக்கொண்டே இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நான் குறிப்பிடுகின்ற சம்பவங்களை ஆதாரமாக வைத்து, பயன்படுத்தவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவையிலே குறிப்பிட்ட ஒன்றை இங்கே குறிப்பிட்டார்கள். ஒருவர் கொல்லப்பட்டாலோ அல்லது கொல்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலோ அதன் உண்மையான விவரங்கள் தெரிவதற்கு முன்னால் திடீரென்று ஒரு கட்சிக்காரரின் பெயரைச் சொல்லக்கூடாது என்று மேலவையில் சொன்னதாகவும் மேலவை உறுப்பினர்கள் அதை ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார்கள், மிகவும் மகிழ்ச்சி. ஆனால் அவர்கள் அப்படி ஒரு கருத்தைச் கூறுகின்ற அதே நேரத்தில், சென்னையிலே யாரோ கொல்லப்பட்ட சம்பவத்திற்கு அவர்களுடைய முதலமைச்சரவர்களுடைய கட்சியைச் சேர்ந்த புதிய அமைப்புச் செயலாளர் அந்த கொலைக்குக் காரணமானவர்கள் கருணாநிதிக் கட்சிக்காரர்கள் தான் என்று நேற்றும் இன்றும் பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதை, அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். யார் அப்படிச் சொன்னாலும் அவர், எங்கள் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி,

அமைச்சர்களானாலும் சரி, நானாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் அது கண்டிக்கப்பட வேண்டும். இந்த அரசு கண்டிக்கும் என்பதை அவர்களோடு சேர்ந்து நானும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த முறை மாற்றப்பட்டுத்தான் தீரவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் நான் அந்த பத்திரிகையைப் படிக்கவில்லை. நிச்சயமாக அவரிடம் கேள்வி கேட்டு, உரிய நடவடிக்கை எடுக்கிறேன். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களை உண்மை தெரிவதற்கு முன்னால் யாரும் சொல்லக்கூடாது என்ற கருத்தை எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வலியுறுத்தியிருக்கிறேன். அதன்படி நடந்துகொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப் போன்ற இன்னும் சில காரியங்களைப் பற்றி நான் இங்கே கூற விரும்பினாலும் இது போன்ற விஷயங்களிலெல்லாம், மாண்புமிகு அமைதியே உருவான திரு. சாதிக்பாட்சா அவர்கள் அவ்வளவு ஆழமாகப் போகவேண்டாம் என்று கேட்டுக் கொண்டதற்குப் பிறகு இந்தப் பிரச்சினைகளுக்கு நான் அதிக முக்கியத்துவம் கொடுப்பதை நிறுத்திக்கொண்டு வேறு பிரச்சினைகளுக்குச் செல்லலாம் என்று கருதுகிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இன்னொரு பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள்; ''தாழ்த்தப்பட்ட மகன் கிறிஸ்துவராக மாறுவதால், தாழ்த்தப்பட்ட மக்களாக கருதப்பட மாட்டார்கள் என்று சொல்வது, சமுதாய சத்வேகத்திற்கும் நல்லதல்ல. ஜனநாயகத்திற்கும் நல்லதல்ல.'' என்று குறிப்பிட்டிருக்கிறார். எப்பிரிவினையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்குவதும், அல்லது பட்டியலில் சேர்ப்பதும் மத்திய அரசின் கீழ்வருகின்ற அதிகாரம். சென்ற மாதம் மத்திய நாடாளுமன்ற குழு ஒன்று தமிழ்நாட்டிற்கும் அண்டை மாநிலங்களுக்கும் வந்திருந்தது. தாழ்த்தப்பட்டோர் பட்டியல்மற்றும் மலை ஜாதியினர் பட்டியலில் திருத்தம் சம்பந்தமாக அதாவது சில வகுப்புகளை பட்டியலிலேயிருந்து நீக்குவதும், சில வகுப்புகளை பட்டியலிலே சேர்ப்பதும் பற்றிய பல பொதுமக்களுடைய மற்றும் சில நிறுவனங்களுடைய மனுக்களைப் பெற்றுக்கொண்டார்கள். அதேபோல மற்ற மாநிலங்களிலேயிருந்தும் அக்குழுவினர் பெற்ற மனுக்களைப் பரிசீலித்து அவற்றை ஒருங்கிணைத்து அந்தந்த மாநில அரசுகளின் கருத்துக்களும் காலக்கிரமத்தில் கேட்கப்பட்டதாக அக்குழுவினர் சென்னையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த அரசுக்கு கிறிஸ்தவ சங்கங்களிடமிருந்து 75 ஆம் ஆண்டு வந்த பல முறையீடுகள் ஆய்வு செய்யப்பட்டு இந்து மதத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் அனைத்துச் சலுகைகளும் கிறிஸ்துவத்திற்கு மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அளிக்க 1975 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 26

ஆம் தேதியிட்ட எண். 733 என்ற சமூகநலத்துறையின் ஆணை
பிறப்பிக்கப்பட்டது. ஆனால் கல்வி நிலையங்களில் இட ஒதுக்
கீடு, பொதுப்பணிகளில் நுழைதல் சம்பந்தமாக, தலை முறை
மதம் மாறியமையை கருத்தில் கொள்ளாமல் கிறிஸ்துவத்திற்கு
மதம் மாறிய அனைத்துத் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்ட
வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு உள்ளதுபோல் அவர்களுக்கும்
31 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்வதை விரிவாக்கவும் ஆணைகள்
பிறப்பிக்கப்பட்டன.

கீழ்க்கண்ட சலுகைகள் இந்து மதத்தைச் சார்ந்த தாழ்த்
தப்பட்டவர்களுக்கு வழங்கப்படுவதைப் போல் கிறிஸ்துவத்
திற்கு மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வழங்கப்படு
கின்றன.

கல்வி முழுக்கட்டணச்சலுகை, மாநில அரசு உதவித் தொகை
பெற்ற விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கு உதவி, அரசு விடுதி
கள் மற்றும் அரசு உதவி பெறும் விடுதிகளில் சேர்தல், வீட்டு
மனை ஒதுக்குதல், உழவுத்தொழிலுக்கு நிலங்களை ஒதுக்குதல்
ஆகியவை கொடுக்கப்படுகிறது என்றாலும் அடிப்படை வசதி
களான குடிநீர் கிணறுகள், துப்புறவு வசதி, நடைபாதை ஒதுக்
கீடு, தெருவிளக்கு மற்றும் இடுகாடு ஒதுக்கீடு போன்றவற்றோடு
சில பொருளாதார மேம்பாட்டு திட்டங்களையும் இங்கே நான்
குறிப்பிட விரும்புகிறேன்.

அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். முதலியவற்றுக்கு சிறப்பு
பயிற்சித் திட்டம், வீடு கட்டுதலும் ஒதுக்கீடு செய்தலும், பால்
விநியோகக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க நிதியுதவி அளித்
தல், விவசாயக் கிணறுகள் தோண்டுதல், உழுவு மாடுகள், உழுவுத்
தொழில் கருவிகள் வாங்க கடன்கள், மானியம் அளித்தல், மற்
றும் கூடை பின்னுதல். கைக்குத்தல் அரிசி தயாரிததல் போன்ற
குடிசைத் தொழில்களுக்கு உதவி செய்தல். தொழில் முயற்சி
போன்ற திட்டங்களுக்கு மானியம் அளித்தல் சிறு தொழிலுக்கு
கடன் அளித்தல் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன, அதோடு
கீழ்க்கண்ட சலுகைககள் அவர்களுக்கு நாம் அளிப்பதில்லை.

இந்திய அரசு. படிப்புதவித்தொகையும். கல்வி நிலையங்
களிலும் பொதுப்பணிகளிலும் நுழைதல் சம்பந்தமாக 1
சதவத ஒதுக்கீடும் செய்ததால் நாம் அதற்கு ஏற்பாடு செய்ய
வில்லை.

இதைச் சொல்லும்போது திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்
பிட்டதையும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

''300 வருடங்களாக அனுபவித்துக்கொண்டிருந்த கிணறு,
சுடுகாடு, அந்தப் பாதை இவைகளில் இப்போது உரிமையில்லை
யாம். ஆனால் அரிசன நலத்துறை அமைச்சர் இங்கே பதில்
சொல்லுகிறார். பட்டா இல்லை என்று சொன்னார். பட்டா
இல்லாதது ஒரு பதிலா, எப்படி வேண்டுமானாலும் பட்டா
வாங்கி கொள்ளலாம்....

முகவையிலே வெங்கடேசபுரத்திலே மாளப்பட்டியிலே அவர்
களுடைய பாதை அடைக்கப்பட்டிருக்கிறது. போலீஸ்காரர்கள்
அவர்களை அடித்திருக்கிறார்கள். அடுத்து தஞ்சையிலே ஆண்
டுளம்பட்டி என்ற கிராமத்திலே அரிசனங்கள் கொடுமைப்படுத்
தப்பட்டிருக்கிறார்கள்.''

[மாலை 4–10.]

இதுபற்றி ஏற்கனவே சட்டப் பேரவையில் 41-வது விதி
யின்கீழ் 1978 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19-ம் நாள் அன்று பதில்
அளித்திருக்கிறார்கள். அப்போது இந்தப் பிரச்னைக்கு தீர்மான
மாக ஒரு முடிவு காண்பதற்காக வருவாய் வாரிய உறுப்பினர் ஒரு
வரை அனுப்பி அவர்கள் நேரில் பார்வையிட்டு உண்மை நிலை
யை அறிந்து ஒரு சுமுகமான முடிவு காண அரசாங்கம் நட
வடிக்கை எடுத்திருக்கிறது என்று கூறியுள்ளார். வருவாய் வாரிய
உறுப்பினர் அறிக்கை கொடுத்ததற்குப் பிறகு மேல் நடவடிக்
கைகள் எடுத்துக்கொள்ளப்படும். அப்பாதை சம்பந்தமான
கோர்ட் தாவா இருக்கிறது. தஞ்சையில் ஆண்டுளம்பட்டியில்
ஹரிஜனங்கள் கொடுமைப்படுத்தப் படுவதாக தகவல் வர
வில்லை. அப்படி ஏதாவது தகவல் இருந்தால், அதைக் கொடுத்
தால் அதைப் பற்றி விசாரிக்க இந்த அரசு தயங்காது. அடுத்த
படியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் வேங்கடேசபுரம்,
மாடப்பட்டியில் தனியாருக்குச் சொந்தமான ஒரு பட்டா நிலத்தில்
ஒரு மாரியம்மன் கோவில் இருக்கிறது. அங்கு இந்துக்களும்
ஹரிஜனங்களும் சென்று வருகிறார்கள். அந்த நிலத்
தைச் சுற்றி ஆடுமாடுகள் மேயாமலிருக்க வேலி போட்டுள்ளார்
கள். இந்தக் கோவிலுக்கு எல்லோரும் இந்துக்கள், ஹரிஜனங்
கள் எல்லோரும் செல்ல வழி இருக்கிறது. ஹரிஜனங்கள் அந்தக்
கோவிலுக்குச் செல்லக்கூடாது என்று யாரும் தடை செய்ய
வில்லை. ஒருவேளை அப்படிப்பட்ட தவறு ஏற்பட்டு அதை நிரு
பிக்க ஆதாரங்கள் இருந்தால், அதைச் சொல்வார்களேயானால்
இந்த அரசு மாவட்ட ஆட்சியாளர் அவர்களை நிலைமையை
விளக்கக்கோரி அவர்கள் தவறான தகவலைத் தந்திருந்தால்
நிச்சயமாக அவர்மீது எந்த வழியில் ஒரு அரசாங்கம் நடவடிக்
கை எடுக்கமுடியுமோ அதைச் செய்யும். நாங்கள் சொல்கிற
பதில்கள் அதிகாரிகளை விசாரிக்கச் செய்து அவர்கள் தருகிற
விளக்கங்களை, ஆதாரங்களைவைத்து இங்கே வெளியிடுகிறோம்.
அதில் ஏதாவது பாதகமான, இந்த மாமன்றம் தெரிந்த உண்மையை

மறைக்கக்கூடிய வகையில் சொல்லும்படியான நிலையில் அவர்கள் கூறியிருந்தார்கள் என்றால் அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள். நாங்களும் அதைச் செய்தாக வேண்டும். ஆகவே அந்த வகையில் இங்கே தருகிற பதில்கள் உண்மையில் உங்களுக்குக் கிடைத்த செய்திகளுக்கு மாறாக இருந்தால் அல்லது தவறாக இருந்தால் தயவுசெய்து ஆதாரத்தோடு சொல்லுங்கள் நாங்கள் அதற்கு ஆவன செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மலைஜாதியினர் மேம்பாட்டுக் குழு 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் நாளுக்குப் பிறகு கூட்டப்படவில்லை என்று குற்றஞ்சாட்டினார்கள். தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாட்டுக் குழு என்ற முறையில் என்னை தலைவராகவும், ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்களை துணைத் தலைவராகவும் கொண்டு மாற்றியமைக்கப்பட்டது. கீழ்க்கண்டவர்கள் இந்தக் குழுவில் உறுப்பினர்களாவார்கள். அரசு ஆணையர், மற்றும் செயலாளர், சமூக நலத் துறை; ஹரிஜன மக்கள்---பழங்குடியினர் நல இயக்குநர்; நிதித் துறையின் ஒரு பிரதிநிதி; சேலம் மாவட்ட ஆட்சியாளர் அல்லது அவரால் நியமிக்கப்படுவர். நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் அல்லது அவர்களால் நியமிக்கப் படுபவர்:. மாமன்ற உறுப்பினர்களும் அதில் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பெயர்களை வாசிக்க வேண்டுமென்று வற்புறுத்தமாட்டீர்கள், நேரத்தைக் கருதி என்று நினைக்கிறேன். ஆகவே மொத்தம் 27 பேர்கள் இந்தக் குழுவில் இருக்கிறார்கள்.

இந்தக் குழுவின் முதல் கூட்டம் கூட்டுகிற இடத்தைக் கேட்டு ஹரிஜன நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதப் பட்டிருக்கிறது. பதில் வந்ததும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப் படும். அந்தக் குழு கூட்டப்படும்.

<u>திரு. துரை முத்துசாமி :</u> தலைவரவர்களே, மலை ஜாதியினர் மேம்பாட்டுக் குழு 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் நாளில் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாக உத்தரவு வந்தது. இப்படி உத்தரவு வந்து நான்கு மாதங்களாகியும், இன்னும் ஒரு தடவை கூட கூடவில்லை என்பதையும், இதில் யாரும் அக்கறை காட்டவில்லை என்பதையும் நான் எடுத்துக் கூறினேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> நான் சொன்னதை சரியாக சொல்லவில்லையோ என்று ஐயப்படுகிறேன். இந்த விஷயமாக பல மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்தும் இப்போதுள்ள நிலைமைகளையும் இருக்கின்ற பிரச்னைகளையும் தெளிவாக கேட்டிருக்கிறோம். இவை அனைத்தும் வந்தவுடன்

கூட்டம் கூட்டப்படும். இதற்கான தேதி குறிப்பிடும்படி ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கப் பட்டிருக்கிறது. விரைவில் இந்தக் கூட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர்களுக்கு இந்த எடுத்து கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளைப்பற்றி குறிப்பிட்டு காட்ட வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்று கருதுகிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்காக இந்த அரசு எந்த நன்மைகளையும் செய்ய முன்வரவில்லை என்பதையும் அதற்காக அக்கறை காட்டவில்லை என்பதைப் போலவும் அவர்களுக்கு வந்த செய்திகளை வைத்துக்கொண்டு இப்பாமன்றத்தில் உறுப்பினர்கள் இங்கு குறை கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு முழுமையாக தகவல் கிடைக்கவில்லை என்பதாலோ சில நேரங்களில் சந்தேகங்களை வைத்துக் கொண்டு, தங்களிடம் இருக்கும் குறிப்புகளை வைத்துக்கொண்டு தங்கள் எண்ணங்களை வெளியிடுகிறார்கள். அதற்கு விளக்கம் தரவேண்டியது என்னுடைய கடமையாக இருப்பதாலும், நேரத்தைப்பற்றி நீங்கள் உத்தரவாதம் தந்திருக்கின்ற நம்பிக்கையோடும் சில குறிப்புகளை படிக்க வேண்டியவனாக இருக்கிறேன். தமிழ்நாட்டில் மொத்த ஜனத்தொகை 412 லட்சம் பேர்கள் என்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் 73 லட்சம் பேர்கள் என்றும், தமிழ்நாட்டிலுள்ள ஜனத் தொகையில் இது 17.75 விழுக்காடு ஆவார்கள் என்றும் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அவர்கள் சமூக பொருளாதார துறையில் எல்லாவிதத்திலும் முன்னேற்றம் அடைந்தால் தான் அவர்கள் நல்வாழ்வு பெற முடியும் என்ற அடிப்படையில் அரிசன பழங்குடி மக்கள் நலத்துறை மூலமாக— முக்கியமாக கல்வித்துறையில், தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனிப்பள்ளிகள், படிப்பு உதவித் தொகை, கல்லூரி மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி, மாணவர்களுக்கு இலவச கல்வி படிப்புக்கு உதவி, விடுதிகள் கட்டித்தருதல் ஆசிரியர்களுக்கு இல்லங்கள் அமைத்து தருதல் போன்றவை செய்து தரப்படுகின்றன. சில நேரங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டும்பொழுது, ஒரு அடிப்படையான கருத்தை வலியுறுத்திக்கொண்டு வருகிறோம். இனிமேல் புதிதாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனியாக வீட்டு வசதி செய்து கொடுக்கும்போது, மற்ற ஜாதி இந்துக்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள் இருக்கும் இடங்களின் மத்தியில் இந்த வசதிகளை செய்து கொடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கலந்து ஒட்டி வாழவேண்டும் என்ற அடிப்படையில் சில வசதிகளை செய்யவேண்டும் என்று திட்டம் இடுகின்ற பொழுது. இந்த வகையில் திட்டங்களை உருவாக்கவேண்டும் என்று வலியுறுத்தி வந்திருக்கிறோம். அரசு உத்தரவும் அதை குறிப்பிடு [illegible] தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மை வேலை வாய்ப்பு போன்ற துறையில், உழவு மாடுகள், வாங்க உதவி செய்தல், பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு உதவி செய்தல் தச்சுத்தொழில், கையல் தொழில் இவைகளுக்கு தேவையான கருவிகள் வாங்க உதவி செய்தல், குடிதண்ணீர் சாலை இவைகளுக்கான வசதிகள், பால்வழங்கும் கூட்டுறவு சங்கம் அமைக்க உதவி செய்தல், இப்படிப்பட்ட உதவிகள்— இது முன்னால் இருந்த அரசும் மேற்கொண்டிருந்தது. இந்தக் காரியங்களை அறவே செய்யவில்லை என்று நாங்கள் மறுக்கவில்லை என்பதையும், நாங்கள் கூடுதலாக செயல்படுத்த முயன்று கொண்டிருக்கிறோம் என்பதை குறிப்பாக சொல்லும்போது, இந்த வசதிகள் எல்லாம் மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும் என்பதோடு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று வழங்கப்படுகின்ற வசதியையும் சேர்த்து அனைவரும் ஒன்றாக இதில் பயன்படவேண்டும் என்ற எண்ணத்தோடு இதற்கான திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம் என்பதை கூற விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தனியாக சமுதாயக் கூடங்கள் கட்டிக் கொடுப்பது என்பதோடு, சமுதாய நிலையங்கள் மூலம் அரிசனங்கள், அவர்களுடைய குழந்தைகளுக்கு சுகாதாரமான முறைகளை கற்றுக்கொடுப்பது, தாழ்த்தப்பட்டவர்கள் எந்தவிதமான தாழ்வு மனப்பான்மையும் இல்லாமல் ஒன்றாக சேர்ந்து வாழ்வதற்குரிய வாய்ப்பு உருவாகும் என்பதை நான் முன்பே சொல்லி இருக்கிறேன்.

[மாலை 4–20]

அந்த நிலையில் அவர்களுக்கு அந்த தாழ்வு மனப்பான்மை இன்றி, தானும் சமமாக வாழ முடியும் என்கிற உறுதி மட்டுமல்ல, அவர்களுக்குள்ளேயே இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை நீக்கிக் கொள்ள வேண்டுமென்ற வகையிலே நாங்கள் அவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் எடுத்துச் சொல்லி வருகிறோம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு இடத்தில் நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். ஜாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே, ஜாதியில் உயர்வு தாழ்வு பார்க்கின்ற நம்பிக்கை உள்ளவர்களுக்கிடையே இந்தப் போராட்டங்கள் கலவரங்கள் ஒழிக்கப்பட வேண்டும். அதையும் மீறி யாரும் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற ஒரு கருத்து இருக்கக்கூடாது. அவர்களுக்குள்ளேயே தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதுகிற ஒரு நிலைமை இருக்குமானால், அதுவே அவர்களுடைய முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கும் என்பதை நாம் உணர்வோம். ஆகவே, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அந்த வகையில் எங்களுக்கு இந்த முயற்சியிலே உறுதுணையாக இருக்க வேண்டுமென்பதை எங்களு

வேண்டுகோளாக ஏற்று, அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே இயக்கமாக ஒருமித்து செயல்பட வேண்டும். ஏற்கனவே, இந்த அரசுக்கு பல வகைகளிலே உங்கள் ஒத்துழைப்பைத் தந்தாலும், இதிலே முழு மூச்சோடு ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கலப்பு திருமணம் செய்து கொள்பவர்களுக்கு அவர்கள் வாழ்க்கையிலே எந்தத் தொல்லைகளும் இல்லாமல் ஏதாவது தொழில் செய்து வாழக்கூடிய அளவிற்கு, உண்மையிலேயே எந்தக் காரணத்தைக் கொண்டும் விவாக ரத்து ஏற்படாது என்ற நிலைமையில், அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்திரவாதம் இருக்குமானால், அவர்களுக்கு ரூ. 5,000 கொடுக்க முடியுமா, அதற்கு நிதி இடம் கொடுக்குமா என்பதைப்பற்றி இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வருவாய் துறை பிரச்னையைப் பற்றி இங்கே பல மாமன்ற உறுப்பினர்கள், ஒரு கருத்தை எடுத்து வைத்துள்ளார்கள், அதிலே மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள், குறிப்பிடத்தக்க அளவிலே சில குறிப்புகளைத் தந்து, தவறுகள் எங்கெங்கே நிகழ்ந்து இருக்கின்றன என்பதையும், அவற்றை எப்படி நீங்கள் கவனிக்கப் போகிறீர்கள் என்ற கேள்வியையும் முன்வைத்து, அதற்கு என் பதிலை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன், அவர்கள் குறிப்பிட்டது மண்டபம், ராமேஸ்வரம் பகுதிகளில் வெள்ளச் சேதம் 10 கோடி ரூபாய்க்கு மேல் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்கு அரசாங்கமாவது, அதிகாரிகளாவது விரைந்து செயல்படவில்லை என்றும், அந்த வெள்ளம் ஏற்பட்ட பிறகு ஒருவாரம் கழித்து நான் அங்கே போனபோது பல சேதங்களைப் பார்த்தேன், அப்போதும் உயர் அதிகாரிகள் வந்து சேரவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், அந்த மக்களுக்கு யாரும் 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் நாளிலிருந்து 27ஆம் நாள் வரை ராமேஸ்வரம் பகுதியில் புயலால் ஏற்பட்ட சேதங்களை பார்வையிடுவதற்கோ, அந்த மக்களுக்கு ஆறுதல் சொல்வதற்கோ அரசு அதிகாரிகள் ஒருவரும் செல்லவில்லை என்றும் கூறியிருக்கிறார்கள்.

அதேபோல் ஒரு அமைச்சர் 26-ம் தேதி மண்டபம் காம்பிற்குப் போனவர் இராமேஸ்வரத்திற்குச் செல்லவில்லை என்றும், 26, 28 தேதிகளில் மற்றொரு அமைச்சர் இராமேஸ்வரத்திற்கு வந்தார் என்றும், அந்த அமைச்சரோடுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முதல் முறையாக வந்தார் என்றும் மன வருத்தத்தோடு கூறினார்கள்,

[திரு. எம். ஜி. ராமச்சந்திரன்] [1976 பிப்ரவரி 26

நான் இங்கே சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன், ஒரு இடத்தில் மக்களிடம் புயல் வரும் என்பதைச் சொல்லி அந்த மக்கள் கொஞ்சம் கூட அதை ஏற்றுக் கொள்ளாமல் அந்த இடத்தை விட்டுப்போக மறுத்தபோது போலீஸ் அதிகாரிகள் பலவந்தமாக அவர்களை வண்டியில் ஏற்றி ரயிலில் அனுப்பி வைத்திருக்கிறார்கள், அது இங்கிருக்கும் மாமன்ற உறுப்பினர்களுக்கும் பெரியவர் தேவர் அவர்களுக்கும் கூடத் தெரியும். அவர்களே. கூப்பிட்டிருக்கிறார்கள், நான், சென்றபோது சந்தித்தேன், இதை நான் குறிப்பிடக் காரணம்— மாவட்ட ஆட்சித் தலைவர் போனாரா இல்லையா என்பது கேட்க வேண்டிய கேள்விதான், அந்தப் பொறுப்பு இருக்கிறது என்றாலும்கூட அங்கே இருந்த அதிகாரிகள், உயர்மட்ட அதிகாரி வரவில்லை என்ற காரணத்தால் அவர்கள் காத்துக் கொண்டிருக்கவில்லை, செய்யவேண்டிய கடமையைச் செய்யாமல் இருந்து விட்டார்கள் என்ற நிலைமை இல்லை என்பதையும் பலவந்தமாக அந்த மக்கள் அந்தப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், அதற்குப் பிறகு அரை மணி நேரம், ஒரு மணி நேரத்திற்குள் மிகப் பெரிய ஆபத்து அங்கே ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அங்கே இருந்த எல்லோரும் என்னிடம் சொன்னார்கள், அவர்களே அந்த அதிகாரிகளைப் பாராட்டினார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன், ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் வந்தாரா இல்லையா என்பது நியாயமான பொருத்தமான எண்ணந்தான் என்றாலும் அவர் போகவில்லை என்பதற்காக அல்லது ஒரு சில அமைச்சர், அங்கே செல்லவில்லை என்பதற்காக அதிகாரிகள் தங்கள் கடமையை மறந்துவிடவில்லை என்பதையும் அவர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்ய எந்தெந்த வகைகளைப் பின்பற்ற வேண்டுமோ அவற்றையெல்லாம் பின்பற்றி மக்கள் உயிரைக் காப்பாற்றவும், பொருள்களைக் காப்பாற்றவும் அவர்கள் அனைத்துக் கடமைகளையும் செய்தார்கள் என்பதை பல நிகழ்ச்சிகள் மூலமும், அங்கே மக்களை நான் சந்தித்ததன் பேரிலும், நானே நேரில் சென்று பார்த்ததிலிருந்தும், பெரியவர்கள் எல்லாம் குறிப்பிட்டதிலிருந்தும் தெரிந்து கொண்டேன் என்பதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆனாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அதுவரை அங்கே ஏன் போகவில்லை என்பதைப் பற்றி நான் நிச்சயமாக அவர்களுக்குக் கடிதம் ஒன்று அனுப்பி என்ன காரணத்தால் போகவில்லை ஏன் போகவில்லை என்பதைத் தெரிந்து அடுத்தமுறை வாய்ப்புக் கிடைக்கும்போது இந்த மாமன்றத்தில் உறுப்பினர்கள் மத்தியில் வைப்பேன் என்று கூறிக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 26]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : மாவட்ட ஆட்சித் தலைவர் அப்போது லீவில் இருந்தார், டி.ஆர்.ஓ. செயலாற்றினார், அதுதான் உண்மை, ஏதோ புதிதாக குற்றம் சொன்னது போல் சொல்லுகிறார்கள். அதுதான் புரியவில்லை,

மாண்புமிகு திரு. எம் ஜி. இராமச்சந்திரன் : அந்தப் பகுதியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருந்த நிலைமையை எடுத்துச் சொன்னதற்காக அரசின் சார்பாக நன்றி கூறிக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பொதுவான பிரச்சினை. நேரடியாக அரசாங்கத்தின் மீது குறை சொல்லுகிற பிரச்சினை அல்ல. ஒரு கலெக்டர் லீவில் போனது போகாதது ஆகிய விவரங்கள் அரசாங்கத்திற்கு முன்கூட்டியே தெரிவித்திருக்க வேண்டும். உறுப்பினர் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் சொல்லித்தான் தெரியவேண்டுமென்ற நிலை சரியல்ல. அரசாங்க சார்பில் தெரிவிக்க வேண்டியவர்கள் தங்களுக்கு ஏன் தெரிவிக்கவில்லை என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழும்போதுதான் பதில் தேவையாகிறது. வேலைகள் ஒழுங்காக நடந்து கொண்டிருக்கும்போது அவர் விடுமுறையில் போனாரா இல்லையா, என்பது எழாது. அவர் அங்கு இல்லாததால் என்ன குறைகள் ஏற்பட்டன என்பதைப் பற்றிய பிரச்சினை எழும்போதுதான் கேள்வி கேட்டு பதில் வருமே தவிர, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் விடுமுறையில் போகும்போது அரசுக்குத் தெரிவிப்பார்கள் என்று நிச்சயமாக எனக்கு முன்னால் ஏழு ஆண்டுகளுக்கு மேல் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் சொல்லமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : முதல்வர் அவர்கள் என்னைப் பற்றிக் குறிப்பிட்ட காரணத்தால் குறிப்பிடுகிறேன். நீண்ட பேச்சில் அதிகமாகக் குறுக்கிட விரும்பவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் போகவில்லை என்ற புகாரை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது மட்டுமே சாதிக் பாட்சா அவர்கள் எழுப்பியது அல்ல, அதற்கு முன்பே பத்திரிகையில் அறிக்கையாக வெளியிட்டிருக்கிறார். பலரும் அதைப் போட்டிருக்கிறார்கள். இதுவரை மாவட்ட ஆட்சித் தலைவரைக் காரணம் ஏன் கேட்கவில்லை. லீவில் இருந்தார் என்ற பதிலைப் பெறவில்லை என்பதுதான் பேராசிரியர் எழுப்பிய வினாவாகும். அவர் விடுப்பில் இருந்தார் என்றாலும், புயல், வெள்ளம் இவற்றால்

மக்கள் பாதிக்கப்பட்ட நேரத்தில் விடுப்பை ரத்து செய்துவிட்டு அந்த இடத்திற்குச் செல்வது மாவட்ட ஆட்சித் தலைவரின் கடமையாக இருந்திருக்க வேண்டும்.

[மாலை 4–30]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன். : தலைவர் அவர்களே, நிச்சயமாக இந்தப் பதில் வரும் என்று எனக்குத் தெரியும அதை இங்கே நான் படிக்க வேண்டாமென்று கருதி னாலும் சொல்கிறேன், 23 ஆம் தேதியன்று சென்னைக்கு அந்த மாவட்ட ஆட்சியாளர் வந்தவுடனே, திரும்பிப் போகவேண்டும் என்று எச்சரித்து அவர் திரும்பப் போயிருக்கிறார் என்ற தகவல் இங்கே தரப்பட்டிருக்கிறது. விடுமுறையிலே அவர் இருந்தாரா இல்லையா என்பது தெரியவில்லை. அவர் இங்கே வந்து எச்சரிக்கப்பட்டு திரும்பியிருக்கிறார் என்ற தகவல் இங்கே தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எச்சரிக்கப்பட்டு திரும்பிச் சென்றவர் எப்படி விடுமுறையில் இருந்திருக்க முடியும் என்பது தெரியவில்லை. திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் வேறு காரணத்தால் அப்படி தவறாகச் சொல்லியிருக்க வேண்டுமே தவிர வேறல்ல.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, டி.ஆர்.ஓ. அவர்கள் பொறுப்பில் இருந்து தீவிரமாகச் சிறப்பாகச் செயல்பட்டார். அதற்காக நாங்கள் எங்கள் கட்சியின் சார் பாகத் தீர்மானம் கூட போட்டு இருக்கிறோம். அந்தக் கலெக்டர் லீவிலே இருந்தார் என்பது எனக்குத் தெரியும். தெரிந்த தகவலைத்தான் இங்கே தருகிறேன், தவறான தகவலை இந்த அவையிலே சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அவர்கள் மீண்டும் அந்தப் பிரச்சினையைச் சொல்வ தால் நான் சொல்ல விரும்புகிறேன்........

திரு. துரை முருகன் : முதலமைச்சர் மீது எந்தவிதமான குற்றமும் இல்லை, அதிகாரிகள்தான் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றிப் பேசியவுடனே மறு நாளே கூப்பிட்டுக் கேட்டிருக்கலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எச்சரிக்கப்பட்டவுடனே அந்த நிலையில் விடுமுறை யில் செல்லக்கூடாது என்றவுடனே திரும்பச் சென்றிருக்கிறார் என்றால், தவிர்க்க முடியாத காரணத்தால் வந்து இருக்கலாம்

என்று சொல்லமுடியாது, ஏன் அவர் வந்தார் என்று இனித் தான் கேட்கவேண்டுமென்றும் அதிலே தவறு இல்லை என்றும் அதற்காக வெட்கப்படவில்லையென்றும் அது பெரிய குற்ற மில்லையென்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் திரும்பிச் செல்லாமல் விடுமுறையில் இருந்து என குடும்பம்தான் பெரிது, மற்றப் பிரச்சி னைகள் பற்றி கவலையில்லை என்று கருதியிருப்பாரானால் அரசு அதிகாரிகள் அதைக் கவனித்து இருப்பார்கள். அவர் போயிருக்கிறார் என்றால் அவர் கடமையுணர்ச்சியுடன் இருக் கிறார் என்றும் தெரிவித்துக் கொண்டு, திரு கூத்தக்குடி சண்முகம் அவர்கள் சொன்னதற்குப் பிறகுதான் தீர்மானம் போட்டிருக் கிறார்கள் என்பது எனக்குத் தெரியும் என்று தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் எங்களை சந்தேகத்திற்கு இடமாக எடுத்துக் கொள்வார்கள் என்று எண்ணமாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். மதுரை சென்றிருந்த வருவாய் வாரிய உறுப்பினர் திரு. எஸ். பி. சீனிவாசன் அங்கேயே தங்கி நிவாரணப் பணிகளை ஒருமுகப்படுத்தினார். 25-11-78, 26—11—78 அன்றும் சமூக நலத்துறை அமைச்சர் இராமநாதபுரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை மாவட்ட ஆட்சித் தலைவருடன் பார்வையிட்டார். மத்திய குழு உறுப்பினரான திரு ராஜாபாதர் அவர்களை, 28-11-1978 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் மண்டபம், இராமேசுவரம், வேதாளை முதலிய புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குக் கூட்டிச் சென்றார். திரு. ராஜாபாதரை வழியனுப்பிவிட்டு, அன்று மாலையில் மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. இராமகிருஷ்ண தேவர், இளையான்குடி தொகுதியைச் சார்ந்த உறுப்பினர் திரு. செ. சிவசாமி அவர்களுடனும், திருப் பாலைக்குடியிலும் மோறப்பள்ளையிலும் பாதிக்கப்பட்ட வீடு கள், படகுகள், முதலியவற்றை பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறி நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டார். மீன் துறை இயக்குநரும் நவம்பர் 28—29 நாட்களில் இராமேசு வரத்திலும், மண்டபத்திலும் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு சென்னை திரும்பியவுடன் தலைமைச் செய லாளருடன் தொடர்புகொண்டு கடற்கரைப் பகுதிகளில் மூழ்கியிருக்கும் படகுகளை மீட்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு கடற்படை அதிகாரியின் உதவி கொண்டு மேற்கொண்டார். உள்ளாட்சித் துறை அமைச்சர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இருவரும் 29-11-1978-லும் 30-11-1978-லும் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வை யிட்டனர். வருவாய் வாரிய உறுப்பினர் மற்றும் நிவாரண ஆணையர் திரு. நடராசன் அவர்களும் இராமேசுவரத்தையும்

மண்டபத்தையும் பார்வையிட்டார். 5-12-1978 அன்று
வருவாய்த் துறை அமைச்சர் இராமேசுவரம், தேவிப்பட்டினம்
திருப்பாலக்குடி கிராமங்களைப் பார்வையிட்டார். 12-12-78
அன்றும் 13—12—78 அன்றும் முதல் அமைச்சர் என்று அழைக்கப்
படுகின்ற நான் இராமநாதபுரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட
பகுதிகளைப் பார்வையிட்டேன்.

உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்களின் குற்றச்சாட்டு உண்
மைக்குப்புறம்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாரும் அதிலே
அலட்சியப்படுத்திவிட்டார்கள் என்றோ, எந்தவிதமான நட
வடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதற்கோ அடிப்படை
ஆதாரம் இருக்க முடியாது. அப்படி உண்மையிலேயே குறிப்
பிடப்பட்ட உதவிகள் மறுக்கப்பட்டிருந்தால், தேவையான
வர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருந்தால் அதை எடுத்துக்
காட்டுவது உறுப்பினர்களின் பொறுப்பு என்பது மட்டுமல்ல,
அதை நிறைவேற்ற வேண்டியது எங்கள் கடமையாகும்
என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

30 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. 1,190 குடிசைகள்
முழுமையாகவும், 5,964 குடிசைகள் பகுதியாகவும் சேத
மடைந்தது. சேதமுற்ற குடிசைகளுக்கான கருணை மானியம்
ரூ. 100 அல்லது ரூ. 50 ஆக ரூ. 3,58,680 வழங்கப்பட்டுள்ளது.
முதலில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஒரு வாரத்திற்கு, ஒரு
குடும்பத்திற்கு 5 கிலோ வீதம் அரிசி வழங்கப்பட்டது. மேலும்
மீனவர்கள் வீடு இழந்து, படகுகள் சேதமடைந்ததால்
மீன் பிடிக்க சில காலம் செல்ல இயலாததால் 135 கடலோரப்
பகுதிகளில் வாழும் 5,439 மீனவர்களுக்கு ஒவ்வொரு குடும்பத்
திற்கும் கூடுதலாக 15 கிலோ அரிசி வழங்கப்பட்டது.
ரூ. 1,87,968 மதிப்புள்ள 5,874 வேட்டியும், புடவையும்
வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளின்
விவரங்களாவன—

1. கட்டுமரங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டவை ஒவ்
வொன்றுக்கும் ரூ. 2,000. பகுதிச் சேதமடைந்த ஒவ்வொன்
றுக்கும் ரூ. 1,000 .

2. நாட்டுப் படகுகள்/ வள்ளம் முழுமையாகப் பாதிக்கப்
பட்டவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 4,000. பகுதிச் சேதம்
அடைந்த ஒவ்வொன்றுக்கும் ரூ. 2,000.

3. நைலான் வலைகள்.—முழுச் சேதம் ரூ. 3,000,

நிவாரணம் 50 சத விகிதம் மானியமாகவும், 50 சதவிகிதம்
கடனாகவும் அளிக்கப்படுகிறது. நிவாரணம் அளிப்பதற்கு
மீன் துறை இயக்குநருக்கு அரசு ரூ. 50 இலட்சம் அளித்துள்ளது.

இப்படி எந்தெந்த வகைகளில் நாங்கள் எங்களால் கடமைகளை
உத்தரவின் மூலமாகச் செயல்படுத்த உத்தரவிட்டும், அவை
கள் ஒழுங்காக, முறையாகப் போய்ச் சேரவில்லை என்று
நிரூபித்தால் எந்த அதிகாரிகள் அந்த தவறைச் செய்தார்களோ
அவர்கள் மீது நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம்
என்று ஒவ்வொன்றிலும் குறிப்பிடுவதுபோல் ஒட்டுமொத்த
மாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள்
ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். வேதாளை என்னுமிடத்
தில் ஆறுமுகம் என்னும் மீனவர் படகைக் காப்பாற்றும் முயற்சி
யில் உயிரிழந்தார் என்றும், அவர் இறந்ததைப் பற்றி மாவட்ட
ஆட்சித் தலைவர் கொடுத்த அறிக்கை தவறானதென்றும்,
அந்தப் பகுதி மக்கள் வன்மையாக மறுக்கிறார்கள். ஆளும்
கட்சியைச் சேர்ந்த ஐகுபர், மாவட்ட ஆட்சித் தலைவர் விடுத்த
அறிக்கை உண்மைக்குப் புறம்பானது என்று சொல்வதாகக் கூறு
கிறார்கள்.

திரு. சாதிக் பாட்சா அவர்கள் இதே பொருள் பற்றி
5—12—1978 நாளிட்ட முரசொலி பத்திரிகையிலும் தனது
கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். திரு. ஆறுமுகம் என்ற மீன
வரின் இழப்பு பற்றி மண்டபத்தைச் சேர்ந்த கிராமத் தலைமை
அலுவலர் (ஹெட்மேன்) கொடுத்த அறிக்கை கீழ்வருமாறு—

''மண்டபம் குரூப் வலையர்வாடி கிராமத்தைச் சேர்ந்த
பெரிய கருப்பன் மகன் ஆறுமுகம் என்பவர் மண்டபம் கிராமத்
தைச் சேர்ந்த எகியா என்பவருடைய விசைப்படகில் தினக்கூலி
யாக வேலை செய்து வந்தார். இவருக்கு தினக்கூலி ரூ. 7
கிடைக்கும். 24-11-1978-ம் தேதி மாலை புயல் காற்று
அடித்துக்கொண்டிருக்கும்போது தான் வேலை பார்த்து
வரும் விசைப்படகைக் கண்காணிக்கும்பொருட்டு மற்றொரு
விசைப்படகு இந்த விசைப்படகுடன் மோத வரும்பொழுது,
அதை தடுத்து நிறுத்த எத்தனிக்கும்பொழுது, தன்னுடைய
நெஞ்சில் அடிபட்டு அந்தக் காயத்துடன் சிகிச்சை எதுவும் பெறா
மல் மண்டபம் தென்கடற்கரையிலிருந்து சுமார் இரண்டு மைல்
நடந்து தான் குடியிருக்கும் வலையார்வாடி கிராமத்திற்குச்
சென்று கிராம முறைப்படி வைத்தியம் செய்து பலனில்லாமல்
24-11-1978-ம் தேதி இரவு சுமார் 10 மணி அளவில்
இறந்துவிட்டார். இறந்துபோன ஆறுமுகத்திற்கு வயது சுமார்
26 இருக்கும். இவருக்கு நிலமோ, வீடோ சொந்தத்தில்
மண்டபம் குரூப் கிராமத்தில் கிடையாது. இவர் வசதி
யற்றவர். இவருக்கு தினக் கூலியில் கிடைக்கும் சம்பளம்
தவிர வேறு வருமானம் கிடையாது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 26

இவர் வசதியற்றபடியாலும், வசதியற்ற குடும்பத்தை விட்டு விட்டு இறந்துபோனபடியாலும் ஆறுமுகம் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்கலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஆயிரம் நிவாரணத் தொகையாகக் கொடுக்கலாம் என்ற அரசு ஆணைக்கு ஏற்ப, இயற்கை எய்திய திரு ஆறுமுகம் அவர்களின் மனைவி திருமதி சீனியாயி அம்மாள் அவர்களுக்கு ரூ. 1,000 வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அதை நிறைவேற்ற அரசு ஆணையிட்டது, அதை நிறைவேற்றினார்கள்.

[மாலை 4·40].

மீனவருக்கு 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவி முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுக்க வேண்டியதை ஏன் இங்கே நிறைவேற்றவில்லை என்று கேட்டால், மீன் பிடிக்கிற தொழிலில் ஈடுபட்டு இருக்கும் பொழுது இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், ஒரு கட்டுமரத்திற்கு ஏற்படவிருக்கும் விபத்தை தடுக்கப்போய்தான் நடந்தது என்றும். இந்தக் கேள்வியைக் கேட்ட, விளக்கத்தை விரும்பிய மாண்புமிகு உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அவர் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபடாதிருக்கும் போது, இன்னொரு படகை விபத்திலிருந்து காப்பாற்றப்போய் இந்த விபத்திற்கு ஆளானார் என்ற காரணத்தினால்தான் அந்த உதவிப்பணம், மீனவர்களுக்காக வழங்கப்படும் உதவிப் பணம் ரூபாய் 5,000 கொடுக்கப்படவில்லை என்றும், தவிர இந்த நிலைமை ஏற்பட்டால், நிச்சயமாக நிதி நிலைமை அந்த அளவுக்கு இருக்காது என்பதையும்—உண்மையாகவே மீன் பிடிக்கச் சென்று வீடு திரும்பாத பரிதாபமான மீனவர்களின் குடும்பங்களுக்கு கொடுக்கவேண்டிய தொகை நாங்கள் சொன்னபடி கொடுக்கமுடியாமல் போய்விடும் என்று இந்த அரசு அச்சப்படுகிறது என்பதை நான் கூறவிரும்புகிறேன்.

இருப்பினும் இதுபோல் நிலைமை ஏற்பட்டால் ஆயிரமாவது கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு பரிசிலனை செய்து வருகிறது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதேபோல இன்னொரு குறையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் சொல்லியிருக்கிறார். 1977-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின்போது வீடு இடிந்து அந்த வீட்டில் புருஷனும் மனைவியும் இறந்து விட்டனர். அது பற்றிய விவரங்களைக் கொடுதது அவர்களுக்கு ஏன் உதவிப்பணம் கொடுக்கப்படவில்லை என்று கேட்டிருக்கிறார். சென்ற 1977-ம் வருடம் அக்டோபர் 26-ம் நாள் பெய்த மழையின் போது இரண்டுபேர் வீட்டின் ஸன்ஷேட் விழுந்து புருஷனும் வயது 50, மனைவியும்

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

வயது 42 இறந்து விட்டார்கள் என்றும் அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட துறைக்கு புகார்கள் அனுப்பியும் ஏதும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும், மழையில் உயிரிழந்த குடும்பங்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய உதவித் தொகை ரூபாய் ஆயிரம் கொடுக்கப்படவில்லை என்றும் கேட்டிருக்கிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் நடவடிக்கைகளின்படி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணைப்படி உதவித் தொகையான ஆயிரம் ரூபாய் இறந்தவர்களின் மகன், திரு. கந்தசாமி அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். திரு கந்தசாமி அவர்களின் பெயரில் உள்ள 96194 என்ற நம்பரில் அஞ்சல் துறையில் உள்ள சேமிப்புக் கணக்கில் போடப்பட்டு, அவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படி உண்மையென்று அரசுக்குத் தெரிந்த எல்லாவிதக் குடும்பங்களுக்கும் கொடுக்க வேண்டிய உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் ஒரு குறையைப் பற்றி கூறினார்கள். பாலதண்டாயுதம் நகர் என்ற பெயரால் ஒரு நகர்—அவரைப்பற்றி அதிகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஏன் என்றால் அவர்களுடைய வாழ்நாட்களிலே 14 வருடம் ஜெயிலில் இருந்திருக்கிறார் என்றும் அவர் அப்போது தனக்கு அதிகமாக உதவி செய்திருக்கிறார் என்றும் இங்கே குறிப்பிட்டுப்பேசியிருக்கிறார்கள்.

அவர்கள் பெயரால் ஒரு நகர் சென்னையை அடுத்த கோடம்பாக்கத்தில் அமைத்திருந்ததாகவும் அதை தற்போது அகற்றப் பார்க்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் அங்கே எம்.ஜி.ஆர். பெயரால் நகர் ஒன்றை நிறுவ இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய பெயரால் அப்படி ஒரு நகர் இருந்து அது அங்கே அமைக்கப்பட்டு, இப்படி ஒரு நகர் அங்கே இருக்கக் கூடாது என்று சொல்லுகிறார்கள் என்றால், அதுவும் சட்டத்திற்கு முரணாகச் செய்திருக்கிறார்கள் என்றால் அது மிகவும் கண்டிப்பதற்கும், நடவடிக்கைகள் எடுப்பதற்குமுரிய விஷயம் ஆகும். அப்படி நடந்திருந்தால் அந்த அதிகாரி யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக் கொள்கிறேன். எனக்கு வந்த தகவல் எம்.ஜி.ஆர். நகரை காலி செய்து விட்டார்கள் என்றும் அதற்குப் பிறகு அந்த நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். எது உண்மை என்று தெரியவில்லை.

[1979 பிப்ரவரி 26

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: எம்.ஜி.ஆர். நகர் என்று
இல்லை. பாலதாண்டாயுதம் நகர் என்று இருப்பது உண்மை.
முதன்முதலில் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் அவர்கள் அங்கே
வீடுகள் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அதன்படி
அவர்கள் வீடுகள் கட்டிக்கொண்டு இருக்கின்றனர். பின்னர்
அரசாங்கம் அங்கே தண்ணீர் தேங்கியிருக்கிறது என்று சொல்லி
காலி செய்யச் சொன்னார்கள். அங்கேயுள்ள அந்தப் பள்
ளத்தைத் தூர்த்து விட்டால் வீடுகள் கட்டிக்கொள்ள சிரமம்
இருக்காது. ஆகவே, அதைச் செய்ய அரசு முன் வர
வேண்டும். அந்த பாலதண்டாயுதம் நகர் அப்படியே
இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: 1976-ம் ஆண்டில்
பரமக்குடியில் இருக்கும் பாலதண்டாயுதம் நகரில் 91 பேர்களுக்கு
நில ஒப்படை செய்யப்பட்டது. 40 முதல் 45 வரை உள்ள
நபர்கள் குடிசை போட்டுள்ளனர். ஒரே ஒரு நபர் மட்டும்
கல் கட்டிடம் கட்ட அடித்தளம் போட்டு இருக்கிறார்.
ஒப்படை செய்யப்பட்ட நிலம் ஊரணிப் புறம்போக்கு. ஒப்
படை செய்கிறபோது அந்த ஊரணியைச் தூர்த்து விட்டு குடிசை
கட்டவேண்டும் என்று நிபந்தனை போடப்பட்டது. அவ்
வாறு செய்யாமல் குடிசை போட்டதால் நவம்பர் மாதத்தில்
ஏற்பட்ட பெருமழையால் அந்த இடத்தில் 5 அடி தண்ணீர்
நின்றுவிட்டது. அந்த இடம் தாழ்வான இடம் என்றும், அந்த
இடத்தை மேடு செய்யாவிட்டால் எதிர்காலத்தில் ஆபத்து
ஏற்படக்கூடும் என்பதாலும், அத்தகைய நிலைகளைப் போகச்
சென்னையிலே அந்தப் பிரச்சினைகள் குடிசை வாழ் பகுதியிலே
இருக்கின்றனவோ, அதைப்போல தமிழ்நாடு எங்கும் ஆங்காங்கு
புறம்போக்கு நிலங்களில் குடிசை போட்டு குடியிருப்பவர்களைப்
பற்றி சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்றும்,
குறிப்பாக ஏரிகள், குளங்கள், தாழ்வான பகுதிகள் ஆகிய
இடங்களில் வீடுகள் கட்டி இருந்தாலும் குடிசைகள் கட்டியிருந்
தாலும் அவர்கள் நிச்சயமாக அந்த இடங்களில் இருக்க அனு
மதிக்கக்கூடாது. அதனால் மழை காலங்களில் அவர்கள்
வாழ முடியாமல் கஷ்டப்படும் நிலையேற்படுகிறது. இதற்கு
மாற்றுவழி கண்டுபிடித்தாக வேண்டும் என்ற நிலையில் இந்த
அரசு தீவிரமாக திட்டமிட்டு பரிசீலித்து வருகிறது என்பதையும்,
அந்த வகையில் சென்னை மாநகரத்தில் ஏரிப் பகுதிகளில் வாழும்
மக்கள், வெள்ளம் வந்தபோது குறைந்தது 4 அடி அளவிற்கு
அல்லது 3 அடி அளவிற்கு தண்ணீர் தேங்கியிருக்கும் தாழ்வான
பகுதிகளில் வசிப்பவர்கள் அவர்களை எங்கே மாற்றுவது என்ற
பிரச்சினையையும், அதேபோல இனிமேல் வரிகட்டாது புறம்
போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு கூடாது என்ற திட்டத்தையும்,
அங்கே அப்படி குடியிருப்புகள் கட்ட விரும்புகிறவர்கள் இருந்

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தால் அவர்களுக்கு மேடான இடத்தில் வீடுகள் கட்டித்தரவும்
திட்டமிட்டு, அந்த இடத்தில்தான் அவர்களுக்கு வீடு கட்ட
வேண்டும் என்று வந்தால் அந்த இடத்தை உயர்த்திக்கொடுக்கும்
நிலையையும் நாங்கள் செய்து தர இருக்கிறோம். நான்
வெள்ளப்பகுதிகளில் நேரில் சென்று பார்த்த நேரத்தில் மழை
நேரத்தில் இடுப்பளவு தண்ணீரில் அந்த வீடுகள் முழுகிக்
கிடந்ததைப் பார்த்தேன்.

திரு. செ. சிவசாமி: அங்கே தேங்கியிருக்கும் தண்ணீர்
போவதற்கு ஒரு சிறு பாலம் போட்டுவிட்டால் தண்ணீர் போய்
விடும். ஏற்கனவே 47 குடிசைகள் இருக்கின்றன. அந்தத்
தண்ணீர் வடிந்து விட்டால் மற்றவர்கள் குடிசை போடு
வதற்கும் வசதியாகப் போய்விடும். ஆகவே, பாலம் கட்டித்
தர அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: மனிதாபிமானத்
தோடு பார்த்தால் இந்தக் கேள்வியை நியாயமானதாகத்தான்
நான் கருதுகிறேன். அதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள்.
ஆனால் எல்லா இடங்களிலும் இப்படி அனுமதிக்கத் தொடங்கி
னால், இதன் முடிவு என்ன ஆகும் என்பதையும், அதை சீராக
எல்லோருக்கும் பயன்படும் வகையில் அமைக்க முடியுமா என்ப
தையும், நிதி போதுமா என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள்
சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 4·50]

குடிசைவாழ் பகுதி மக்களுக்கு நல்ல வீடுகள் கட்டிக்கொடுக்க
வேண்டும்; விளக்கு வசதி, தண்ணீர் வசதி போன்ற எல்லா
வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று நாம்
விரும்பினாலும் கூட ஆழமான பகுதிகளில் செய்து கொடுப்பதி
னால் எந்தவிதமான பயனும் அவர்களுக்குக் கிடைக்காது;
மேடான இடத்தில் அவர்கள் இருக்க ஏற்ற வசதி செய்து
கொடுத்தால்தான் நீண்ட நாட்கள் அவர்களுக்கு பாதகம்
இல்லாமல் ஆபத்து இல்லாமல் இருக்கும் சூழ்நிலையை உரு
வாக்க முடியும் என்று இந்த அரசு கருதுகிறது; ஆனால்
மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை அலட்சியப்படுத்த
வில்லை என்றாலும் அதே நேரத்தில் நான் சொல்லுகின்ற கருத்
தையும் சிந்தித்துப்பார்த்து, தக்க யோசனை கூற வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தமட்டில், எரியாத வீடுகளை
அமரர் அண்ணா அவர்கள் கட்டிக்கொடுத்தபோது, அங்கே
பள்ளமான இடத்தில் கட்டி இருப்பதால் மக்கள் எவ்வளவு அவதிப்
படுகிறார்கள் என்பதை தண்ணீரில் இறங்கிப்பார்த்த அனுபவத்
தில் கூறுகிறேன். அதை மாற்றியாகவேண்டும். அவர்களே

சொன்னார்கள். எங்காவது மேடான இடத்தில் எங்களுக்கு
வீடுகளைக் கட்டிக் கொடுங்கள் அல்லது இங்கே தண்ணீர்
வந்தால் ஆபத்து வராமல் இருக்க ஏதாவது செய்யுங்கள் என்று
சொன்னார்கள். அதை சிந்தித்துப் பார்த்து, அக்கறையோடும்
அனுதாபத்தோடும் நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்
என்பதை இங்கே கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

வெள்ள நிவாரணத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது சென்னை
யில் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்றும் யார் யாரோ
சிபாரிசு செய்தார்கள் என்றெல்லாம் சொல்லி, இங்கே நாங்கள்
சரியாக, ஒழுங்காக, சீராக பணம் கொடுக்கவில்லை என்றும்
எங்கள் கட்சியை அதாவது தஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்
தலையிட்டு மற்ற கட்சியைச் சேர்ந்த கஷ்டப்பட்ட மக்களுக்கு
உதவிகள் கிடைப்பதை தாமதப் படுத்தினார்கள் அல்லது உதவி
கிடைக்காமல் செய்ய முயற்சி செய்தார்கள் என்றும் குறை
கூறினார்கள்.

நான் முன்னதாகவே சொல்லியிருக்கிறேன். சில இடங்களில்
தவறு நடந்து இருந்தால் சுட்டிக்காட்டினால் நடவடிக்கை
எடுக்க முடியும். ஆனால் அகில இந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுடைய சிபாரிசுகளுக்கு
நாங்கள் அதிகக் கவனம் செலுத்தினோம் என்றும் அந்த
வகையில் நாங்கள தனிப்பட்ட கட்சி அபிமானத்தோடு அதி
காரிகள் நடக்கும்படி செய்தார்கள் அல்லது அதிகாரிகள் அப்படி
நடந்தார்கள் என்றெல்லாம் குற்றஞ்சாட்டினார்கள்.

அது தவறு. இப்போது எதிர்க்கட்சியில் இருக்கிற பொறுப்
புள்ளவர்கள் சிபாரிசு செய்தவர்களுக்கெல்லாம் பட்டியல் போட்டு
உதவி செய்திருக்கிறார்கள் என்பதை மட்டும் இங்கே குறிப்பிட
விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, என்னுடைய
தொகுதிப் பிரச்சனை ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர
கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அண்ணா நகர்
நமசிவாயபுரம் பகுதி இருக்கிறது. வெள்ளத்தில் சுமார் 400
வீடுகள் மூழ்கி, அவர்கள் பெருத்த சேதத்திற்கு ஆளாக்கப்
பட்டார்கள். அங்கு 40 பேர்களுக்கு 40 வீடுகளுக்குத்தான்
இந்த நிவாரணம் போய்ச் சேர்ந்தது. 400 வீடுகளில் மற்ற
வர்களுக்கு இந்த நிவாரணம் போய்ச் சேரவில்லை. இந்த
செய்தி எனக்கு ஏற்கெனவே வந்துவிட்டது. ஆனால் என
பேச நேரம் இல்லாத காரணத்தால் அப்போது சொல்வதற்கு
விட்டுப் போய்விட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இது அண்மை
யில் சொல்லப்பட்ட குறைபாடா அல்லது 15, 20 நாட்களுக்கு
முன்னால் சொல்லப்பட்டதா என்று தெரியவில்லை. இருந்தாலும்
இப்படிப்பட்ட குறைபாடு இருக்குமானால் நிச்சயமாக நட
வடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கக்
கூடிய தகுதி இருந்தும் 15 நாட்களுக்கு முன்னால்கூட கிடைக்
காதவர்களுக்கு மீண்டும் கிடைக்க வாய்ப்பு இருந்தது ; அதிலும்
கிடைக்கவில்லை என்றால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவ
ரவர்கள் கவனித்துச் சொல்வார்கள் என்றால் நிச்சயம்
இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, என்னுடைய தொகுதியிலும்
கோயமேடு பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்
கிடைக்கவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் உங்கள் எம்.
எல். ஏ. யிடம் போய் கேளுங்கள் ; அவர் கொடுப்பார் என்று
சொல்கிறார்கள். உதவித் தொகை எம். எல். ஏ. கொடுக்கிறாரா
அல்லது அரசாங்கம் கொடுக்கிறதா என்பது கூட அவர்களுக்குத்
தெரியாதா? அரசாங்கம்தானே உதவி செய்கிறது என்று கேட்டால்
ஆளும் கட்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் உதவியே
தவிர, உங்களுக்கு அல்ல என்று சொல்கிறார்கள். இதுவரையில்
நிவாரணம் அளிக்கவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்
களே, யார் அப்படிச் சொன்னார், எந்த அதிகாரி சொன்
னார் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அவர் மீது நிச்சயமாக
நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. சுப்பு : கோயமேடு பகுதியில் உதவித் தொகையை
விநியோகம் செய்தவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் சென்னை
நகரத்தின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். பாதிக்கப்
பட்டுள்ள பகுதியில் என்னுடைய பகுதியும் இருக்கின்ற கார
ணத்தால் ஒன்றை கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.
நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ளப் போவதில்லை. நம்
முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்
தவறுகள் இருந்தால் சுட்டிக்காட்டுங்கள், நடவடிக்கை எடுக்கி
கிறோம் என்று. ஆகவே என்னுடைய சேப்பாக்கம் தொகுதி
யைப் பொறுத்தவரையில் அங்குள்ள குறைகளைப் பற்றி பட்டி
யல் போட்டு மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுக்கு அனுப்பி
இருக்கிறோம். தாசில்தாருக்கும் அனுப்பி இருக்கிறோம். இது
வரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தொகுதிகள் நிறைய இருக்கலாம். ஆகவே எல்லா உறுப்பினர்களும் அதைச் சொல்ல ஆரம்பித்தால் அதற்கு மட்டுமே நேரம் சரியாகிவிடும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னார்கள். ஆகவே, எல்லோரும் பேச வேண்டும் என்று நினைக்கக் கூடாது.

<u>திரு. க. அன்பழகன் :</u> தலைவரவர்களே, தனித்தனியாக இந்தப் பிரச்சினை குறித்து எழுப்புவதற்கு நேரம் கிடையாது என்பதை நான் அறிவேன். ஆனால் சென்னை நகரத்திலே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருப்பதன் காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்படுகிற எல்லா விண்ணப்பங்களும் முறைப்படி பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஒரு அறிவிப்பைத் தருவார்களேயானால் உறுப்பினர்கள் தனித்தனியாக இதுபற்றிச் சொல்ல மாட்டார்கள்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களது கருத்தை உணர்வை நான் மதிக்கிறேன். நாங்கள் இந்த உதவியை யார் யாருக்கு கொடுக்க விரும்புகிறோம், யார் யார் அந்த உதவியைப் பெறுவதற்குரிய தகுதியை உடையவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறோம் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் தயவு செய்து நினைவுகூறவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாகும். அந்த வெள்ள நிவாரணத்திற்கு என்ற வகையில் பணத்தை ஒதுக்கி அரிசி, து ரி, இவைகளை ஒதுக்கிக் கொடுக்க முற்பட்டபோது நகரசபை, நகரமன்றத்தை நடத்துகின்ற அதிகாரிகள் மற்றும் ஆணையர் அவர்கள் யார் யாருக்கு பாதுகாப்பளித்து உதவிகள் வழங்கினார்களோ அந்த இடங்களிலே தங்கி இருந்தவர்களுக்கு மட்டும் இந்த உதவிகளைச் செய்வது என்பதுதான் முதலிலே கணக்கிலே எடுத்துக் கொண்ட முயற்சியாகும். ஆனால் போகப் போக கொஞ்சம் கொஞ்சமாக எண்ணிக்கை அதிகமாகி பின்னாலே பட்டியல் பெருகி தொடர்ந்து சிபாரிசுகள் வந்து கொண்டே இருந்தது என்பதையும் நாட்கள் நீடிக்க நீடிக்க எண்ணிக்கை அதிகமாகியது என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். இருந்தாலும் நாங்கள் துணிகளும், பொருளும் கொடுத்தோம் என்பது குறித்து நான் மேலவையிலே கொடுத்த விளக்கத்தையும் இங்கே திரும்பவும் படித்துக் காட்டி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் ஒரு குற்றச்சாட்டை இங்கே கூறினார்கள். அதாவது ஊழலை அனுமதிக்க மாட்டோம் என்று சொல்கிறீர்கள்.

[மாலை 5-00]

"எம். சுப்பிரமணி தான் தவறு செய்ததோடு அல்லாமல் அரசு ஊழியரையும் முறைப்படி தங்கள் அறிவுப்புக்கு மாறாக நடக்க வைத்துள்ளார்''. என்று ஒரு கடிதத்தைப் படித்துக் காட்டினார்கள். முழுமையையும் படிக்க நேரம் இல்லை என்று சொன்னாலும் குறிப்பிட்ட 9 டோக்கன்களை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாஜி கார்ப்பரேஷன் எம்.ஸி. சுப்பிரமணியத்திடம் 100 ரூபாய்க்கான டோக்கன்களை கொடுத்துவிட்டு செல்கிறார். ஆனால் அந்த டோக்கன்கள் உண்மையிலே பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படாமல் பாதிக்கப்படாதவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அவர்களிடமிருந்து சுப்பிரமணியம் பணம் பெற்றுக் கொண்டார் என்று அதில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எனக்கு வந்திருக்கிற குறிப்புகளிலிருந்து சொல்கிறேன். 19—2—1979 அன்று தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் சொன்ன இந்தக் குற்றச்சாட்டை மறுக்கிற வகையில் நான் இங்கே ஒரு செய்தியை வெளியிட வேண்டியிருக்கிறது. 77-ம் வட்டத்தில் பாளயத்தான் தெரு மைலாப்பூரான் தெருவில் அரிசி, துணி, பாதிக்கப்பட்ட ஐம்பது குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. குடிசைப் பகுதிகள் மழையால் வீடுகள் இடிந்து உண்மையில் பாதிக்கப்பட்ட எட்டு குடும்பங்களுக்கு மட்டும் தலா ரூ. 100 வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டது. கௌடியாமடம் சாலையில் 14 குடும்பங்களுக்கு அரிசி, துணி மட்டும் வழங்கப்பட்டது. இந்தப் பகுதியில் யாருக்கும் ரூ. 100 உதவித் தொகை வழங்கப்படவில்லை. ராயப்பேட்டை லாயிட்ஸ் சாலை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் இந்த இரண்டு பகுதியில் உள்ளவர்களுக்கு உதவி வழங்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி 77-வது வட்டத்தில் ரெவின்யூ அதிகாரியால் டோக்கன்கள் பாதிக்கப்பட்ட நபர்களைத் தவிர வேறு எவருக்கும் கொடுக்கப்படவில்லை. சுப்பிரமணியத்திற்கும் கொடுக்கவில்லை என்று குறிப்பு இருக்கிறது. உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் வருவாய் அதிகாரிகளால் குடிசைப் பகுதிகளில் உதவித் தொகை வழங்கப்பட்டது. உதவி பெற்ற எட்டு பேர்களிடமும் கையெழுத்து பெறப்பட்டுள்ளது. கணக்கில் எட்டு பேர்களுக்குதான் உதவித்தொகை வழங்கப்பட்டதாகக் காணப்படுகிறது. ஆகவே, ஒன்பது டோக்கன்கள் சுப்பிரமணியத்திற்கு வழங்கப்பட்டு அவை பாதிக்கப்பட்டவர்களுக்குச் சேரவில்லை என்பது ஆதாரமற்ற குற்றச்சாட்டு பட்டியல் இருக்கிறது. யார் யார் கையெழுத்து போட்டிருக்கிறார்கள் அல்லது விரல் அடையாளம் இட்டிருக்கிறார்கள் என்ற பட்டியல் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் முதல் அமைச்சர். அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது இதுபோன்று ஏராளமான பேர்களுக்கு வரவில்லை என்று நிலை இருக்கிறது. நான் சொல்லிய குற்றச்சாட்டினை நிரூபித்து எடுத்துச் சொன்னேன். அதிகாரிகள் எப்படியெல்லாம் விளக்கங்கள் தருவார்கள் நானும் ரெவின்யூ அமைச்சராக இருந்திருக்கிறேன்—என்பதை, எப்படி அதிகாரிகள் விளக்கங்கள் தந்து அரசாங்கத்தை திசைதிருப்புகிறார்கள் என்பதை இப்போதுதான் நான் புரிந்து கொண்டேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் ஒரு நெருக்கடியான நிலைக்கு ஆளாகியிருக்கிறேன். சில மாமன்ற உறுப்பினர்கள் குடும்பங்கள் கூட அரிசி, துணி முதலியவற்றை வாங்கியிருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்கெல்லாம் வழங்காமல் அவர்களை அலட்சியப்படுத்தி விட்டார்கள் என்று சொல்ல முடியாது என்பதையும், அவர்கள் சிபார்சு செய்தவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இங்கே நான் ஆதாரத்தோடு கூறமுடியும். ஆனால் அவர்களின் பெயர்களைச் சொல்ல நான் விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் உணருவார்கள். ஏன் தெரிவிக்கவில்லை என்பதை அவர்கள் நன்கு புரிந்து கொள்வார்கள் என்பதையும்கூறி—(ஓரிரு படங்கள் காண்பிக்கப்பட்டன) இந்தப் படங்களில் அவர்களது குடும்பத்தினர் இருக்கிறார்கள். அவர்களுடைய மைத்துனி அல்லது தாய் போன்றவர்கள் இதில் பங்கு கொண்டு வாங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் சொல்லும்போது அவர்கள் அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள், அவர்கள் பணத்தைச் சேர்த்தவர்கள் அல்ல என்பதில் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும் என்பதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். அந்த நிலையில் அவர்கள் இருக்கிறார்கள் என்ற அந்த நிலையைப் பாராட்ட வேண்டும். ஆனால் வேண்டுமென்றே யாருக்கும் கொடுக்க முடியாமல் மறைக்கிறார்கள் என்று சொல்வது விரும்பத் தக்கதல்ல. மாமன்ற உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் ஆதாரத்தோடு சொன்னார்கள். நான் வருவாய்த்துறை அமைச்சராக இருந்திருக்கிறேன். அதிகாரிகள் இப்படியும் திசை திருப்புவார்கள் என்பதை தான் தெரிந்து கொண்டதாகச் சொன்னார்கள் இந்த நல்ல எடுத்துக்காட்டை ஒரு உபதேசமாக வைத்துக் கொள்கிறேன். உங்கள் அனுபவத்தை எச்சரிக்கையோடு பயன்படுத்திக்கொள்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன். இதிலிருந்து நாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம், அதிகாரிகள் இப்படியும் திசை திருப்புவார்கள் என்பதை புரிந்து கொண்டேன் என்று அவர்கள் சொன்னதிலிருந்து நாங்களும் ஏமாந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லும்போது, நாங்கள் அதை அலட்சியப் படுத்தவோ அல்லது கேலி செய்வதாகவோ அமையாது. நிச்சயமாக அதை வரவேற்கிறோம். உங்கள் அனுபவத்தை நாங்கள்

கூறிக்கொள்
பயன்படுத்திக் கொள்வோம் என்பதை உறுதியாகக் டோககன்கலள
இறேன். எந்த அதிகாரியாவது இப்படிப்பட்ட விசாரணைக்குப்
தவறாக உருவாக்கித் தந்திருப்பார்களேயானால் நிச்சயமாக கடுமை
பின்னால் அது எனக்குத் தெரிய வருமானால், மாண்புமிகு தலைவர்
யான நடவடிக்கை எடுப்போம் என்பதையும் இதைப்பற்றி
அவர்கள் மூலமாக கூறிக் கொள்ள விரும்புகிறேன். விரும்பவில்லை.
இதற்கு மேலும் நான் கருத்துக் கூற

தொழில்துறையைப்பற்றி மிகப் பெரிய அளவில் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நான் தாமதமாக எடுத்துக் கொண்டதற்குக காரணம் உணவு உண்ட அயர்வடைந்திருப்பது சற்று மாறியிருக்கும். கேள்விகள் கேட்பவர்களுக்கு வேகமும் அதே நேரத்தில் நான் சொல்லக் கூடியதை கவனிப்பதில் மேலும் அதிக அக்கறையும்—அக்கறை இருக்கிறது—இல்லை என்று சொல்ல வில்லை —இன்னும் கொஞ்சம் அழுத்தமாகக கவனிப்பாாகள் என்ற நிலையில்—எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவலை நான் வெளியிடுகின்றேன். மணி ஐந்து ஆகிவிட்டது. தலைவர் தொடர்ந்து பேசுவதற்கு அனுமதிப்பார்கள் என்று நம்புகிறேன். பல மாமன்ற உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். முக்கியமாக உள்துறைபற்றி சொல்லியாக வேண்டும். முன்பாக தொழில்துறையை எடுத்துக் கொண்டு கருத்தை வெளியிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் ஆரணி பட்டு கூட்டுறவு நெசவு தொழிலாளர் சங்கத்தை எம்.எல்.ஏ. ஒருவர் தலையிட்டு கலைப்பதற்கு வழி செய்திருக்கிறார், அதில் இதுவரை தேர்தலும் நடைபெறவில்லை என்று. இங்கு சொல்லப்பட்டது. நிர்வாகக் குழு கலைக்கப்பட்டது என்றால். அதில் சில ஒழுங்கீனங்கள் நடைபெற்றது என்கின்ற காரணத்தால் 1978ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் தேதிய ஆணையில் நிர்வாகக் குழுவைக் கலைத்துவிட்டு தனி அதிகாரியை நியமித்தவிட்டபிறகு, அந்த நிர்வாகக் குழுவிலுள்ள இயக்குநர்கள், பின்னால் 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் தேதியில் அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது ஆகவே இதே நிர்வாகக் குழு 1978ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம்தேதியில் கலைக்கப்பட்ட நிலையில், 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் தேதி முதல் தனி அதிகாரியை நியமித்தி. ருக்கிறோம். இவருடைய பதவி காலம் ஓராண்டு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ஓராண்டு காலம் முடிந்தவுடன் இந்த நிர்வாகக் குழுவுக்கு இயக்குநர் தேர்வு நடைபெறும். ஆகவே இதில் உறுப்பினர் அவர்கள் சந்தேகப்படுவதுபோல் வேண்டுமென்றே செயல்படுத்த விடாமல் தடுககபபட்டிருக்கிறது என்று கருத மாட்டார்கள் என்று நம்புகிறேன்,

இன்னொன்று மிகப் பெரிய குற்றச்சாட்டாக கூறியிருக்கிறார்கள். ஆளுங் கட்சியில் இருப்பவர்கள் தொழில் நடத்தினால் அவர்களுடைய தொழிற்சாலையில் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என்கின்ற நிலை இருக்கிறது. அதற்கு உதாரணமாக சேலத்தில் கச்சநாயக்கன்பட்டி என்ற இடத்தில் சண்முகா மில் என்று ஒன்றை வைத்திருக்கிறார்கள். சண்முகா பிலிம்ஸ், என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. அத்துடன் அண்ணாமலை மூவீஸ் என்று வேறு இருக்கிறது. இந்தத் தொழிற்சாலையில் இரவு காலத்தில் பெண்களை வைத்துக் கொண்டு மூன்று ஷிப்டுகள் வேலை வாங்குகிறார்கள் என்றும் இரவு நேரத்தில் பெண்களை வைத்துக் கொண்டு வேலை வாங்கினால், என்னென்ன அக்கிரமங்கள் நடக்கும் என்றும், சின்ன பிள்ளைகளை வேலையில் வைத்திருந்ததால் கொன்றார்கள் சிவகாசியில், என்றும், உங்களுக்கு இது அனுசரணையாக இருக்கின்றது என்று தோன்றினால் நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

[மாலை 5.10.]

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தொழில்துறையைப் பொறுத்தமட்டில் எங்களுக்கு அனுசரணை, அனுசரணை இல்லை என்ற பிரச்சினைக்கே இடமில்லை என்பதையும், எங்களைப் பொறுத்தமட்டில் இந்த மாமன்ற உறுப்பினர்கள் எவ்வளவு அக்கறையோடு தொழிற்துறையிலே உள்ளவர்கள்மீது அக்கறை செலுத்துகிறார்களோ, அந்த அளவுக்கு தொழிலாளர்கள் வளர வேண்டுமென்பதற்காக, தொழிலாளர்கள் வளமாக வாழ வேண்டும், அவர்கள் நலன் பாதுகாக்கப்பட வேண்டும், அந்த அளவுக்கு உத்தரவாதம் இருக்க வேண்டும் என்ற வகையிலே அவர்கள் செயலாற்ற விரும்புகிறார்களோ, அந்த நிலையிலே இந்த அரசும் செயலாற்ற விரும்புகிறது. அதேபோல் இந்த அரசு மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதியை, கடமையை நிறைவேற்றத் தயாராக இருக்கிறது, இதிலே எள்ளளவும் ஐயம் வேண்டாம் என்பதை நான் விளக்கமாக வெளியிட விரும்புகிறேன்.

சேலத்திலே, கக்கல்நாயக்கன்பட்டி என்ற இடத்தில் இரண்டு தொழிற்சாலைகள், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிலே ஒன்று அண்ணாமலை காட்டன் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரிலும், மற்றொன்று குட் பேக் ஏஜன்சீஸ்என்ற பெயரிலும், இரண்டுதனிப்பட்ட நபர்கள் பேரில் பதிவு செய்யப்பட்ட வெவ்வேறு நிறுவனங்கள் ஆகும். அண்ணாமலை காட்டன் மில்ஸ் தொழிற்சாலையில் சுமார் 220 ஆண் தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். குட் பேக் ஏஜன்சியில், இந்தத் தொழிற்சாலையில் 15 ஆண் தொழிலாளர்களும், 80 பெண் தொழிலாளர்களும் வேலை செய்கிறார்கள்.

ஆகவே, இந்த தொழிற்சாலைகள் இரண்டும் தனித்தனியாக தொழிற்சாலைகளாக தெரியாத காரணத்தால், இதிலே அண்ணாமலை காட்டன் மில்ஸ் பிரதான தொழிற்சாலையாகக் கருதப்படுகிறது.

1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்த ஏ.ஐ.டி.யூ.சி. தொழிற் சங்கத்தைச் சார்ந்தவர்கள் சேலத்திலே உள்ள ஆய்வாளரை நேரடியாகச் சந்தித்து, இந்தத் தொழிற்சாலையிலே பெண் தொழிலாளர்கள் இரவிலே அனுமதிக்கப்படுகின்றார்கள் என்று சொல்லியதன் பேரிலே, அங்குள்ள உதவி தொழிற்சாலைகள் ஆய்வாளர் 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் தேதி அன்று இந்த இரண்டு தொழிற்சாலைகளையும் நேரிலே சென்று ஆய்வு செய்தபோது, அங்கே இரவிலே பெண் தொழிலாளர்கள் வேலை செய்யவில்லை என்றும், அந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்றும், அவர்கள் வேலை செய்தபோதே நேரடியாக விசாரித்ததாகவும், அவ்வாறு பெண் தொழிலாளர்கள் இரவிலே வேலை செய்வதில்லை என்று கூறியதாகவும் அறிக்கை கொடுத்துள்ளார். இந்தத் தொழிலாளர்களிலே பெரும்பாலானவர்கள் அண்ணாமலை காட்டன் மில்சைச் சேர்ந்தவர்கள். அவர்களே இரவிலே இங்கு பெண்கள் வேலை செய்யவில்லை என்று கடிதம் எழுதியுள்ளார்கள். அந்தக் கடிதத்தின் நகலும் என்னிடத்திலே இருக்கிறது. இப்படி இந்தத் தொழிற்சாலைகளில் பல நாட்கள் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளது. அப்படி ஆய்வு செய்யப்பட்ட போது, நேரடியாகவே அங்குள்ள தொழிலாளர்கள் விசாரணை செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படி விசாரித்தபோது பெண் தொழிலாளர்கள் வேலை செய்யவில்லை என்றும் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. கோவை தொழிற்சாலைகள் ஆய்வாளராலும் இந்தத் தொழிற்சாலைகள் ஆய்வு செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, அவரும் இதே கருத்தைக் கூறியிருக்கிறார்கள்.

1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சேலம் ஜில்லா மில் ஓர்கர்ஸ் யூனியனோடு (ஏ.ஐ.டி.யூ.சி. சங்கத்துடன்) இந்த தொழிற்சங்கம் இணைக்கப்பட்டது. அதன் மூலம் எழுத்துமூலம புகார் கொடுத்துள்ளது. அந்தப் புகாரில் பெண் தொழிலாளர்கள் அந்தத் தொழிற்சாலையில் இரவிலே வேலை செய்கிறார்கள் என்கிற குறிப்பு ஏதும் இல்லை. அந்தப் புகாரின் நகலும் இருக்கிறது. இந்த அண்ணாமலை காட்டன் மில்ஸ் ஓர்கர்ஸ் யூனியன் கட்சி சார்பற்ற முறையிலே இயங்கிக் கொண்டு வருகிறது. அந்த யூனியன் காரியதரிசி 1977 ஆம் ஆண்டு, சேலம் தொழிற்சாலைகள் ஆய்வாளர் அதாவது உதவி டைரக்டருக்கு கொடுத்துள்ள கடிதத்தின் உண்மை நகலை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். ''1973 ஆம் ஆண்டிலே ஜனவரி, பிப்ரவரி மாதத்திலே அண்ணாமலை காட்டன் மில்லில் ஸ்டிரைக் நடந்தது''

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 26

1973 ஆம் ஆண்டில் சி.ஐ.டி.யூ. கட்சியினர் சங்க குறுக்கீட்டின்
மேல் ஜனவரி, பிப்ரவரி 1973-ல் ஒரு ஸ்டிரைக் அண்ணாமலை
காட்டன் மில்லில் நடந்தது. இந்த ஸ்டிரைக் தோல்வியுறவே
அனைத்து மெம்பர்களும் வேலைக்குத் திரும்பினோம். இந்த
கஷ்டங்களாலும், ஊதிய இழப்பாலும் எங்கள் சங்கத்தை
1973-லேயே உடனடியாக கட்சிப் பற்றுதல் அல்லாத ஒரு சங்கம்
எஸ்.எல்.எம் 123 என்ற நம்பரில் பதிவு செய்து கொண்டோம்.
அது நாள் முதல் இது நாள் வரை அண்ணாமலை காட்டன்மில்
கிட்பேக் ஏஜன்சிஸ் ஆகிய இரண்டு ஸ்தாபனங்களிலும் அனைத்
துப் பணியாளர்களும் நிர்வாகத்தின் பூரண ஒத்துழைப்புடன்
எவ்வித பிரச்சினையுமின்றி அமைதியாகப் பணியாற்றி வருகின்
றோம்.

1973-ல் எங்களைத் தீய வழியில் அழைத்துச் சென்று வேலை
நிறுத்தத்தை உருவாக்கி துன்புறுத்திய சேலம் ஜில்லா பஞ்சாலைத்
தொழிலாளர்கள் சங்கம் எஸ்.எல்.எம். 78, சி.ஐ.டி. யுடன்
இணைக்கப்பட்டது. இதை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர்
கள் சங்கம், 1973 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 3 ஆம் நாள் மேற்படி
கிளை சங்கத்தை ரத்து செய்து அதன் சங்கத் தலைவர்களாகிய
திருவாளர்கள் கே. பொன்னுசாமி, ஆர். பி. அந்தோணிசாமி
முறையே தலைவர், செயலாளர், இருவரையும் சி.ஐ.டி.யு
சங்கத்தில் இருந்து மகாசபை தீர்மானத்தில் விலக்கப்பட்டனர்.
இவர்கள் அதற்குப் பின் ஏ.ஐ.டி.யூ.சியில் அடைக்கலம் புகுந்து
இந்த நிர்வாகத்தின்மேல் குரோத மனப்பான்மையுடன் அதிகாரி
களுக்கு வீண் புகார்களும், தொல்லைகளும் தந்து தங்கள்
நிலையை உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். இவை வீண்
புரட்சியே.

எங்கள் சங்கத்தின் அனைத்து மெம்பர்களும் மேற்படி இரண்டு
நிர்வாகங்களிலும் பணியாற்றி வருகிறோம். சங்க அங்கத்தி
தினர்கள் எவரும் வேலை செய்யவில்லை என்பதைத் தெளிவு
படுத்துகிறோம்.

1977 ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் எங்கள் சங்கங்கள்
243 ஆண்களும் 99 பெண்களும் ஆக 342 அங்கத்தினர்கள்
உள்ளார்கள். எங்களது வேலை விஷயமாகவே, ஊதியங்கள் இதர
சலுகைகள் எதிலும் எவ்வித குறைபாடுகளும் இல்லாமல்
இருக்கிறோம். மற்றும் பெண்கள் அனைத்துபேரும் ஜெனரல்
ஷிப்டில் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை
செய்கிறார்கள். இரவில் பெண்கள் யாரும் வேலை செய்வதில்லை.
இதை அனைத்திலாக்கா ஆய்வாளர்களும் அவ்வப்போது தங்கள்
ஆய்வுகளில் குறைபாடின்றி 'கண்டுள்ளார்கள் என்பதை சமூகம்
பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதே போல்தான் அடுத்த கடிதமும் எழுதப்பட்டிருக்கிறது
என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 26]

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, 80
பெண் தொழிலாளர்கள் வேலை செய்வதாகத்தான் முதல் தகவல்.
இப்போது 99 பெண் தொழிலாளர்கள் புதிதாக உள்ள சங்கத்தில்
சேர்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதுதான் புரியவில்லை.

[திரு. துரை முருகன் : (உட்கார்ந்து கொண்டே) குட்டி
போட்டு விட்டது].

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவரவர்
களுடைய விருப்பத்திற்கேற்றவாறு குட்டி போடுவது அவரவர்கள்
சாமர்த்தியத்தைப் பொறுத்தது. பழங்கத்தைப்
பொறுத்தது. மாமன்ற அவையில் இப்படி உட்கார்ந்து கொண்டே
பேசுகிற மரியாதை இருக்கிறது எனபதை உணர வேண்டும்....

திரு. துரை முருகன் : முதலமைச்சர் அவர்கள் தவறாகப்
புரிந்து கொள்ளக்கூடாது. பெண்கள் எண்ணிக்கை அதிகரித்
திருக்கிறது என்பதை குட்டி போடுவது என்று சொல்வது வட
ஆற்காடு மாவட்ட வழக்கம். இலக்கிய வார்த்தை அது.

இரண்டாவது நான் சொல்ல விரும்புவது — முதலமைச்சர்
அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கவர்னர் உரையில்
பேசும்போது சுருக்கமாகப் பேசினேன். நம்பிக்கையில்லாத் தீர்
மானத்திற்குப் பதில் சொல்லும்போது எல்லாவற்றையும் சொல்லு
கிறேன் என்றார்கள். நான் இப்போது ஒன்றே ஒன்று முதலமைச்
சர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். தற்போது குற்றச்
சாட்டுகளுக்கு மட்டும் பதில் சொல்லிவிட்டு புள்ளிவிவரங்களை
எல்லாம் டிமான்டின்போது வைத்துக்கொள்ளலாம்,
பட்ஜட்டில் வைத்துக் கொள்ளலாம் என்று யோசனையாகக்
கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : யோசனை
உங்களிடம் இருந்து வரவேண்டுமா? மாமன்ற உறுப்பினர்கள்
யோசனைப்படி முடிவு எடுத்து அந்த முடிவுக்கு மாறாக புதிய
யோசனை தருவது சரிதானா என்று நீங்கள்தான் தீர்மானம்
செய்துகொள்ள வேண்டும்.

நான் சொல்ல வந்ததைச் சொல்லுவதற்குள் திரு. கூத்தக்
குடி சண்முகம் அவர்கள் அவசரப்பட்டு விட்டார்கள். இந்தக்
கடிதம் எனக்கு மன நிறைவு தருவதாக இல்லை என்பதை
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே உபயோகப்படுத்தி
யிருக்கும் வாக்கியம்:

".............. தங்கள் ஆய்வுகளில் குறைபாடின்றி கண்
டுள்ளார்கள் என்பதை சமூகம் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்
கிறோம்".

[திரு. எம். ஜி. ராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 26

'சமூகம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இப்போது இருக்கும் எந்தத் தொழிலாளியும் எழுதமாட்டான்; தன்மானம் உள்ளவர்கள் எழுத மாட்டார்கள் என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். இதைப் பற்றி மறு பரிசீலனை செய்து அவர்கள் பதில் தரவேண்டுமென்ற எண்ணத்தில் இருப்பதால் வந்திருக்கிற கடிதத்தையும் படித்துக் காண்பித்து உண்மையைத் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இதை எடுத்துக் காண்பித்தேன். ஆகவே, இது அவ்வளவையும் ஏற்றுக் கொண்டேன் என்று பொருள் அல்ல; அடுத்த கடிதத்திலும் அதே வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

"............தங்கள் ஆய்வுகளில் குறைபாடின்றி கண்டுள்ளார்கள் என்பவை சமூகம் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்".

அடுத்த கடிதத்திலும் அப்படியே இருக்கிறது. இது எப்படி, யாரால் ஏன் எழுதப்பட்டது என்பதைக் கண்டு பிடிக்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் இது எங்களுக்கு மன நிறைவைத் தரவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 5–20].

இப்படிப்பட்ட செய்திகள் வந்திருக்கின்றன என்பதை உங்களுக்குச் சொல்லி இதை நான் தெளிவுபடுத்துவதோடு இது போன்றவைகள் அங்கேவருவதற்கு எப்படிப்பட்ட நிலைமைகள் இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் எப்படிப் பழக்கப்படுத்தி இருக்கிறார்கள் என்பதையும் நாங்கள் புரிந்திருக்கிறோம் என்பதற்காக படித்துக் காட்டினேனே தவிர நாங்கள் அதை ஏற்றுக்கொண்டோம் அல்லது அரசு ஏற்றுக் கொண்டது என்பதல்ல என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் கூத்தக்குடி சண்முகம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். குரோம்பேட்டையிலே ஒரு லெதர் தொழிற்சாலை இருக்கிறது. அதிலே 700 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள், அங்கே 8 மாத காலமாக உற்பத்தி நடைபெறவில்லை என்று கூறினார்கள். அதைப் போலவே திரு. மாரிமுத்து அவர்களும் குரோம்பேட்டையிலே குரோம் லெதர் பாக்டரி ஒன்று இருக்கிறது. அதிலே 7 மாதமாக 380 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், சம்பளம் கிடையாது, வேலையும் கொடுப்பதில்லை, அத்தொழிலாளர்கள் ரெகுலராக உள்ளே போகிறார்கள், வெளியே வருகிறார்கள், அவர்களுக்குச் சம்பளமும் இல்லை, வேலையும் இல்லை, மனுக் கொடுத்ததாகச் சொல்கிறார்கள் என்று எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

[1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

குரோம் லெதர் கம்பெனியில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு ஜூலை ஆகஸ்டு மாதங்களுக்கு ஊதியம் பட்டுவாடாச் சட்டத்தின கீழ் அதிகாரியின் முன் மனுச் செய்ததின் பேரில், அவ்வதிகாரி 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26ம்நாள் அன்று ஊதியம் பட்டுவாடாச் செய்ய உத்திரவு பிறப்பித்தார். பின்னர் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, குரோம் லெதர் கம்பெனியின் சொத்துக்கள் தங்கள் வங்கிக்கு அடமானமாக உள்ளதாக பட்டுவாடா சம்பந்தப்பட்ட மட்டில் வங்கிக்கு முன்உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளது. எனினும் சம்பளம் பட்டுவாடாச் சட்டத்தின் கீழ் ஊதியத்தை வாங்கிக் கொடுக்க பூந்தமல்லி சப்டிவிஷன் மாஜிஸ்ரேட்டிடம் முறையிடப் பட்டுள்ளது. நீதிபதியின் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

1978 ஆம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களுக்கான ஊதியம் பட்டுவாடா செய்வது குறித்து தொழிலாளர்கள் சம்பளம் பட்டுவாடா அதிகாரியிடம் விண்ணப்பித்துள்ளனர். அவர் இருதரப்பினரையும் கேட்டு அறிந்துள்ளார். உத்தரவுகள் விரைவில் பிறப்பிக்கப்படவிருக்கின்றன. நிதி நெருக்கடி காரணமாக இந்த நிறுவனம் சுமார் 7 மாதங்களாக சரியாக இயங்கவில்லை. இத்தொழிற் சாலைக்குக் கடன் கொடுத்த வங்கியே எடுத்து நடத்துவது பற்றி பேச்சு நடைபெறுகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் திரு. கோவிந்தராஜன் அவர்கள் இன்னொரு குற்றச்சாட்டையும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். காண்ட்ராக்ட் ரெகுலேஷன் செய்யப்பட்டு அபாலிஷ் ஆவதற்குப் பதில் எல்லா இடங்களிலும் காண்ட்ராக்ட் புகுத்தப்படுகிறது. ஒரே வேலை செய்யக்கூடிய டிபார்ட்மெண்ட் ஒர்க்கருக்கு அதிகச் சம்பளம், காண்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு ரூ. 5, 4 என்ற வகையில் மின்சாரத் துறையிலும், கன்ஸ்ட்ரக்ஷன் துறையிலும் கம்பத்தை உண்டுபண்ணுபவர்கள், கம்பத்தை நடுபவர்கள், லைனை இழுப்பவர்கள், இப்படி ஏற்கெனவே டிபார்ட்மெண்டில் செய்யப்பட்ட அந்த வேலைகள் பூராவும் காண்ட்ராக்டரால் செய்யப்படுகின்றது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்று கூறியிருக்கிறார்.

அரசு கட்டடம் கட்டும் நிறுவனங்களில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை நீக்குவது குறித்து 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் நாள் நடைபெற்ற தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டம் விவாதித்தது. ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை நீக்குவதற்குப் பதிலாக ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல்-நீக்குதல்) சட்டத்தில் விதிமுறைகளை பயன்தரத்தக்க வகையில் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று அமைச்சரவை முடிவு எடுத்தது.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர் களே நாங்கள் ஒரு சில நாட்களுக்கு முன் இதைப்பற்றிப் பேச வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டோம். இந்த நிலைமை ஏற்பட்டபொழுது அதிபர்கள் ஒத்துழைக்கும் மனப் பான்மையோடு நேரில் பேசும்பொழுது கேட்டுக்கொள்வதும் ஆனால் சென்ற பிறகு வேறு நிலைமைகளுக்கு மாறி இரு கிறார்கள் என்பதை மறுக்கத் தயாராக இல்லை. அதற்கு தகுந்த முறையில் அதிகாரிகளை வைத்து அங்கே என்ன நட பெறுகிறது என்பதை நேரடியாக அவ்வப்பொழுது கவனிக்கும் அளவிற்கு ஆங்காங்கு அதிகாரிகளை நியமிக்கலாமா என்பதைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம். இதைச் செயல்படுத்த முடியும் என்றால் அது பயன் உள்ளதாக அமையும் என்று கருதுகிறேன். அதுவும் பயனில்லாமல் போய்விடும் என்றால் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி மற்றவர்களைக் கலந்து கொண்டு குறிப்பாக சட்டத் துறையிலே யோசனைகளைக் கேட்டுக் கூட அட்வகேட்.ஜெனரல் போன்றவர்களிடம் என்ன சட்டத்தைக் கொண்டு வரலாம் என்பதைப் பற்றி முடிவெடுப் போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டி. ஐ. ஐ. சி. பிரச்னை எல்லோருக்கும் தெரிந்தது. அதைப் பற்றி நான் மீண்டும் இங்கே பேசி யார் சரியாக நடந்துகொண் டார்கள் யார் சரியாக நடந்துகொள்ளவில்லை என்று குறிப்பிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்ப மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆனால் வழக்கு மன்றத்தில் அவர் வெற்றி பெற்றதும் கூட சில நிகழ்ச்சிகளை உண்டாக்கிவிட்டது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதற்கு அனைவரும் பொறுப்பா இல்லையா அல்லது சட்டம் அப்படி இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த வகையில் முத்துசாமி ஒரு குற்றச்சாட்டை தொழில் துறை பற்றிச் சொல்லும் பொழுது குறிப்பிட்டிருக்கிறார்கள். டி.ஐ. ஐ. சி. நிறுவனம் அனந்தகிருஷ்ணனை நியமித்திருப்ப தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த டி.ஐ. சைக்கிள் நிறுவனத்தை அதிக அளவில் கடன் பெற்று ஆரம்பித்ததாகவும் அந்தக் கடனை இதுவரையில் திருப்பிக் கொடுக்கவில்லை என் றும் எப்படித் தலைவரை நியமிக்கலாம் என்றும் கேட்டிருக்கி றார்கள்.

[மாலை 5-30].

78 லெ்பதக் கேள்வியே தவறு என்றோ இதை கேட்கக் கூடாது வேண்டு(நான் கூறவில்லை. ஆனால் இது பற்றி நாங்கள் பல இட பார்த்தப்போது எங்களுக்கும் கிடைத்த விளக்கம் இருக்கிறபிறகு தான் இந்தக் கேள்விக்கு உண்டான பதிலை

சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன் திரு அனந்தகிருஷ்ணன், கோகுல் ரெட்டி போன்றவர் களால் இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிறு வனத்தின் முதல் தலைவர் திரு. ராமசாமி முதலியார் அவர்கள். இந்த நிறுவனத்திற்காக கூட்டுறவு வங்கியிலிருந்தும் டி.ஐ.ஐ.சி. நிதி நிறுவனத்திடமிருந்தும் கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்த நிறுவனம நஷ்டத்திலேயே இயங்கி வந்தால் கடன் அளித்த நிதி நிறுவனங்களின் ஆலோசனைப்படி சில மாறுதல் கள் செய்யப்பட்டது. மீண்டும் இந்த நிறுவனம் நஷ்டத்தி லேயே இயங்கி வந்ததால் கடன் கொடுத்த நிதி நிறுவனங்கள் இதன் மீது வழக்குகள் போட்டன.

திரு அனந்தகிருஷ்ணன் அவர்கள் தனிப்பட்ட எந்த கடனும் டி.ஐ.ஐ.சியிலோ கூட்டுறவு வங்கியிலோ பணம் பெறவில்லை என்றும் நிறுவனத்திற்காகத்தான் நிறுவனத்தில் சார்பாக நிதி யுதவி வாங்கியிருந்தார்கள் என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். உண்மையிலேயே அவர் போன்ற தொழில் துறை அனு பவம் வாய்ந்தவர்கள் இதற்கு பணியாற்ற வேண்டும் என்று நினைத்துத்தான் அவரை நியமிக்க நாங்கள் முன் வந்தோமே தவிர வேறு எந்த நினைப்பும் இல்லை, அரசியல் நோக்கமோ வேறு எந்த நோக்கமோ இல்லை என்பது இம்மாமன்ற உறுப்பினர்கள் நிச்சயமாக தெரிந்துக்கொண்டிருப்பார்கள் என்ப தில் எனக்கு சந்தேகம் இல்லை. நல்ல அனுபவம் தொழில் துறையிலே பெற்றவர்கள்—பரம்பரையாக அவர்கள் தொழில் துறையில் இருந்திருக்கிறார்கள் என்று மட்டும் இல்லாமல் தொழிலை தக்க முறையில் நடத்துவதற்கு அனுபவம் பெற் றிருக்கிறார்கள் என்ற கருத்தில்தான் அவர்களை நியமனம் செய்திருக்கிறோம் என்றும் நல்ல நோக்கத்தினாலேயே இந்த நியமனம் நடைபெற்றிருக்கிறது என்று நீங்கள் நம்ப வேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன்.

இங்கே 12(3) செட்டில்மென்ட் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்படும் பலதரப்பட்ட பிரச்னைகளில் தகராறு ஏற்பட்டால் சமரசம் செய்வதற்கும் அந்த சமரசத்தின் மூலம் தொழிலாளர் நலத்தையும் நிர்வாகத்தையும் மேம் படுத்தும் ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு கோவிந்தராஜன் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கி றார்கள்.

இது பற்றிய எண்ணத்திற்கு பாதகமாக இந்தப் பிரிவை தவறா கப் பயன்படுத்துகிறார்கள் என்றும் இங்கே குறிப்பிட்டிருக் கிறார்கள்.

சில தனியார்களுக்கு வேண்டிய சங்கங்கள் முதலாளிகளுக்காக தலையிட்டு 12 (3) செட்டில்மென்ட் செய்கிறது என்றும் தொழி லாளர்களுக்கு வேலை வாய்ப்பு என்ற முறையில் மட்டும் அவர்கள்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 26

கொஞ்சம் கூட அக்கறை காட்டுவது இல்லை என்று சொல்கிறார் கள். நான் நமது திட்டத்தைச் சொல்லி விரும்புகிறேன். லேபர் ஆபீசர், உதவி லேபர் ஆபீசர், லேபர் கமிஷனர் துணை லேபர் கமிஷனர் இணை லேபர் கமிஷனர் மற்றும் நிர்வாகத்தினர் போன்ற பொறுப்பான அதிகாரிகள் முன்னிலை யில் தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகம் ஆகிய இரண்டு தரப்பு களுக்கும் இடையே ஏற்படுகிற ஒப்பந்தம் ஆகும் இது. இரு தரப்பினரும் ஒப்புக்கொண்ட கால அளவு வரையிலும் ஒப்புக் கொள்ளாவிட்டால் 6 மாத கால வரையிலும் அந்த ஒப்பந்தம் இரு தரப்பினரையும் கட்டுப்படுத்தும். திருச்சி சிம்கோ மீட்டர் தொழிலாளர் பிரச்சினையை பொறுத்த வரையில் நிர்வாகத்தி னருக்கும் தொழிலாளர்களுக்கும் ஐ.என்.டி.யு.சி அலுவலருக் கும் திருச்சி தொழிலாளர் நல அலுவலர் முன்பாக முன்பு ஒரு ஒப்பந்தம் 17—4—1978 அன்று 12 (3) செட்டில்மென்ட் பிரிவின் கீழ் ஏற்பட்டது என்பதையும் இங்கே உள்ள மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.

அந்த ஒப்பந்தத்தில் நிரந்தரத் தொழிலாளிக்கு ஊதிய விகிதம், பஞ்சப்படி நிர்ணயிக்கப்பட்டது 31— 3— 1981 வரையில் அமலுக்கு இருக்கும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது தொழில் தகராறு சட்டத்தின் அடிப்படையில் ஏற்பட்ட ஒப்பந் தத்தை அரசு மறுத்து விடமுடியாது. இருப்பினும் அந்தப் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையில் உயர் மட்ட அடிப்படை யில் நான் விரும்புகிறபடி சென்னை தொழிலாளர் நல ஆணையர் தலையிட்டு 12— 2— 1979 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். 18— 2— 1979 அன்றும் 19— 2— 1979 அன்றும் என் முன்னிலை யில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால் நிலைமை என்ன ஆயிற்று என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரியும் என்று நான் கருதுகிறேன். ஆகவே இதைப் பற்றி நான் விளக்கம் கூறுவதற்கு முன் இன்றையதினம் அந்த யூனியனைச் சேர்ந்தவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போய் இருப்பதாகக் கேள் விப்பட்டேன். தீர்ப்பு என்ன ஆயிற்று என்று எனக்குத் தகவல் வரவில்லை. (திருச்சி. கோவிந்தராசன் : இன்ஜங்ஷன் கொடுக்க வில்லை.) மகிழ்ச்சி. மறுபடியும் பேச்சு வார்த்தை நடத்தக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று தெரிகிறது. ஆனால் அந்தத் தொழில் அதிபர் நிச்சயமாக விட்டுக் கொடுத்து ஓரளவு இணங்கி வருவார் என்று எதிர்பார்க்கிறேன் உங்களைப்போல் அமைச்சரவையும் எதிர்பார்க்கிறது. சட்டப்படி கட்டுப்படுத்த முடியாவிட்டாலும், நான் முன்னாலே தெரிவித்தபடி மனிதாபிமான உணர்வோடு இதைப்பற்றி ஏதாவது ஒரு வகையில் நல்ல முடிவு காண அவர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டு கோள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 26]

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே சிம்கோ விவகாரம் பற்றி முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லாத நேரத்தில் இந்த அவையில் இருக்கிற அத்தனை கட்சிகளும் கூடி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து அதை பெரும் அள விற்கு ஒரு பிரச்சினையாக ஆக்கி பிறகு அவை முன்னவர் அவர்கள் எதிர்க்கட்சிகளின் தலைவரவர்களை அழைத்துப் பேசுவதாக ஒப்புக்கொண்டு மாண்புமிகு பேரவைத் தலைவரின் அறையிலே நானும் மற்றும் உள்ள எதிர்க்கட்சித்தலைவர் களும் முன்னவரிடமும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரு டனும் இது பற்றி விவாதித்தோம். அப்போது அந்தப் பிரச்சினையை முடிவு கட்டுவதற்காக ஒரு நான்கு கோரிக்கை கள் நிறைவேற்றப்பட்டால் போதும் என்று யோசித்து நண் பர் உமாநாத் அவர்கள் சி.ஐ.டி.யு. சார்பாகவும் அங்கே போராட்டம் நடத்தும் தொழிலாளர்கள் சார்பாகவும் ஒரு குறிப்பை தந்து அந்தக் குறிப்பின் அடிப்படையில் அந்த தொழில் அதிபரை அழைத்து அவர்களிடம் அதை வலியுறுத்த வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அவர்களை வலியுறுத்து வதற்கு பதிலாக அவர் நீதி மன்றத்துக்குச் சென்று விட்டார் என்ற அளவிற்கு (குறுக்கீடு) சங்கம் சென்றால் என்ன விசுவநாதன் சென்றால் என்ன இரண்டும் ஒன்று தான். அந்தச் சங்கம் போய் இருக்கிறது என்றால் நான் நிச்சயமாக தைரியமாகச் சொல்லமுடியும். தொழில் அதிபரின் ஊக்கத்தின் தூண்டுதலின் காரணமாகத்தான் சங்கம் இன்று நீதிமன்றத் திற்குச் சென்று இருக்கிறது. எனவே தொழில் அதிபரோ அல்லது சங்கமோ யார் நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தாலும் அரசாங்கம் அவர்களைக் கட்டுப்படுத்தி தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி அந்த நிலையை தொழிலாளர்களுக்குச் சாதகமாக ஆக்க முடியும் என்று கடைசி நேரத்திலும் அங்கேயுள்ள தொழிலாளர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு முதலமைச்சரின் பதில் என்ன?

[மாலை 5.40].

மாண்புமிகு திரு எம்.ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர் களே, இந்த அரசைப் பொறுத்த வரை நான் முதலிலேயே குறிப்பிட்டேன். சட்டத்தை வைத்துக்கொண்டு மட்டும் அவ்வப் போது சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண விரும்புவது கூடாது என்பதும் கொஞ்சம் மாற்று வழிகளைக் கண்டுபிடித்து மனிதாபிமானத்தைப் பயன்படுத்த வேண்டுமென்பதும் என்னுடைய கருத்து மட்டுமல்ல: நான் என்று கூறும்போது அது இந்த அரசினுடைய கருத்து என்ற வகையிலே இந்த அரசினு டைய கருத்தும் அதுதான் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசின் நிலைமை அதுதான் என்று நான் கூறும்போது நான் ஆரம்பத்திலேயே இதுபற்றி விவாதிக்கத்

[திரு. எம் ஜி. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 26

மேற்கண்ட அமைச்சரவையின் முடிவு தொழிலாளர் நல ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட சட்டத்தின் விதிமுறைகளைப் பயன்தரத்தக்க வகையில் செயல்படுத்த வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். தொழிலாளர் நல ஆணையருக்கு கீழ் பணிபுரியும் அலுவலர்களுக்கு ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமம் வழங்குவது குறித்தும் மேற்கண்ட சட்ட விதிமுறைகளை மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பது குறித்தும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஒப்பந்தக் தொழில் நிலவும் நிறுவனங்களை ஆறு திங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்தல் வேண்டும் என்றும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட அமைச்சரவையின் முடிவு அரசுத் துறைகள், மின்சார வாரியம் மற்றும் கட்டிட வேலையில் ஈடுபட்டிருக்கும் எல்லா அரசு நிறுவனங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்ட விதிகளை கையாளும் முறையில் ஏற்படும் இடுக்கண்களைக் களைவதில் தொழிலாளர் நல ஆணையரின் உதவியை நாடுமாறும் இவ்வரசு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கின்றன.

குறைந்த பட்ச ஊதியச் சட்டம் அமல்படுத்தப்படும் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு இச்சட்டத்தின் கீழ் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் ஊதியத்திற்கும குறைவாக ஊதியம் வழங்கப்படக்கூடாது என்றும் தொழிலாளர் ஒப்பந்தம் (முறைப்படுத்துதல்-நீக்குதல்) சட்ட விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பிறகும் அப்படி யாராவது இந்த நியதியை மீறி நடைபெறுவார்கள் என்றால் தொழிலாளர் பிரதிநிதிகள் அவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லவும் அவைகளை என்னிடமோ அல்லது தொழிலாள நல அமைச்சரிடமோ விவாதிக்கவும் அல்லது கண்டு பேசி முடிவெடுக்கவும் அவர்கள் விரும்பினால் எப்பொழுதும் நாங்கள் ஒத்துழைப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ரா. உமாநாத்</u> : தலைவரவர்களே, இந்த நியதியை அமல் நடத்துவதில் எந்த அளவிற்கு நடக்கிறது என்பது ஒரு பிரச்னை. மறுபக்கத்தில் இந்த ஒப்பந்தத் தொழிலாளர் சம்பந்தமாக இந்த நியதியை அமல் நடத்தும்பொழுது பல தொழிலாளர்கள் வேலையை விட்டு நீக்கப்படுகிறார்கள். முதலமைச்சரின் கவனத்திற்காகச் சொல்கிறேன். புலியூர் சிமென்ட் பேக்டரியிலே பத்து வருஷம் சர்வீஸ் போட்ட 78 பெண்களுக்கு இந்த நியதியின்படி அந்தக் கூலி கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக வெளியேற்றப்படுகிறார்கள். இப்படிப் பல இடங்களிலும் நடக்கிறது. அதற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது?

1979 பிப்ரவரி 26]

<u>திரு. க. சுப்பு</u> : தலைவரவர்களே, இந்த குரோம் லெதர் கம்பெனி ஏழு மாதங்களாக மூடப்பட்டிருக்கிறது. அவர்கள் பேமென்ட் ஆப் வேஜஸ் சட்டப்படி சம்பளம் பெற முடிய வில்லை. எனவே இடைக்காலத்தில் அவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுத்துவிட்டு பிறகு அவர்கள் வாங்கும்பொழுது திரும்பப் பெற்றுக் கொண்டாலும் பரவா யில்லை. அப்படி ஏதாவது நிவாரணம் அளிப்பதற்குச் சிந்திக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்</u> : தலைவரவர்களே மாண்புமிகு சுப்பு அவர்களின் நோக்கத்தை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன் ஆனால் முதலமைச்சர் நிதி என்பது ஒரு கட்டுக்கோப்புக்குள் இருக்கும் நிதியாகும். மாதாமாதம் அதில் நிதி சேரும் என்ற நிலைமைகள் இல்லை. மற்றவர்கள் நல்லெண்ணத்தோடு கொடுத்தால் அல்லது நிகழ்ச்சி போன்றவற்றை நடத்திச் சேர்த்தால்தான் சேர்க்க முடிகிறது. வேறு வகையில் அதில் நிதி சேர்ப்பதற்கான நிலைமைகள் இருக்கின்றனவா என்று யோசிக்கும் பணியையும் மறந்து விடவில்லை. அந்தக் கடமை எங்களுக்கு இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகள் நேரிடும்பொழுதெல்லாம் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுப்பது என்பது ஒரு வாடிக்கையாக வழக்கமாக ஆகிவிட்டால் அதை நிறைவேற்றமுடியாத சங்கடங்கள் ஏற்படும். தொழிலாளர் பிரச்னை வரும்பொழுதெல்லாம் பதில் சொல்ல முடியாமல் ஏதோ சிலருக்குக் கொடுத்தோம் ஒரு சிலருக்குக் கொடுக்க வில்லை என்ற அவப்பெயர் இந்த அரசுக்கு வந்துவிடும் என்பதை மாண்புமிகு சுப்பு அவர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த வகையில் அவர் குறிப்பிட்ட இடைக்கால நிவாரணம் அளிக்க முடியுமா வழி உண்டா என்பதைப் பற்றி நிச்சயமாக நாங்கள் யோசித்து ஒரு முடிவெடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ரா. உமாநாத்</u> : தலைவரவர்களே நான் சொன்னது ஒப்பந்தத் தொழிலாளர் நியதிப்படி முடிவு எடுப்பது பற்றிச் சொன்னார்கள். அதை அமுலாக்குவது என்பது ஒரு பிரச்னை அதை அமல்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக பத்து வருஷம் சர்வீஸ் போட்டவர்களை புலியூர் சிமென்ட் பேக்டரியில் 78 பெண்களை வெளியேற்றியது சம்பந்தமாக உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். இப்படிப் பேக்டரிகளில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் வெளியேறுவதற்காக தொழிலிலிருந்தும் பாதுகாப்பதற்கு என்ன நடவடிக்கை அவர்கள் எடுக்க விரும்புகிறேன்.

தொடங்கும்போது சட்டம் அனுமதிக்காது என்று சொன்னபோது
மனிதாபிமானத்தோடு தீர்வு காண வேண்டும் என்று கூறினேன்.
இந்த கூலி போதுமானதா என்று முதல் முதலில் குறிப்பிட்ட
வனே நான்தான் என்பதை இங்கே நினைவுபடுத்துவது என்னு
டைய கடமையாகும். ஆகவே மீண்டும் அந்த தொழிலதிபரை
அழைத்து தொழிலாளர்களுக்கு ஏதாவது நல்லமுறையில்
மனத் திருப்தி ஏற்படுத்தும் வகையில் அணுகுமுறைகளை கையா
ளவேண்டும் என்ற கோரிக்கையை விடுக்க இந்த அரசு தயாராக
இருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ரா. உமாநாத்: துணைத் தலைவரவர்களே: ''ஸ்பெசி
பிக் பாயிண்ட்'' அதுவல்ல. இந்தப் பிரச்சினைக் குறித்து ரொம்ப
தூரம் பேசி எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் ஆளும் கட்சி
யும் சேர்ந்து அங்கே உட்கார்ந்து ஒரு ஸ்பெசிக் டிசிஷனுக்கு வர
வேண்டும்; நாளைய முதலாளியை வரவழைத்து லேபர் மினிஸ்டர்
அரவரை அந்த டிசிஷனை ஒப்புக்கொள்ள வைக்க வேண்டும் என்று
கூறினோம். நிதி அமச்சரவர்கள் அந்தக் கூட்டத்திற்குத்
தலைமை தாங்கினார்கள். நாளைக்கே ஏற்றுக்கொள்ள வேண்
டும்; இல்லை என்றால்......

மாண்புமிகு திரு கி. மனோகரன்: துணைத் தலைவரவர்
களே நடந்தது என்ன என்பதை சொல்லிவிடுகிறேன். நமது
எதிர்க்கட்சித் தலைவரவர்களும் மற்ற கட்சித் தலைவர்களும்
அங்கே இருந்தார்கள். அப்போது திரு உமாநாத் அவர்கள்
சில ''கைட் லைன்ஸ்'' என்ற பெயரால் நான்கு பிரச்சினை
களைக் குறிப்பிட்டு இந்த அடிப்படையில் விஸ்வநாதன் அவர்
களை அழைத்து பேசி ஓரளவுக்காவது பிரச்சினையைத்
தீர்க்க இணங்க வைக்க முயற்சி எடுங்கள் என்று எல்லோரும்
கேட்டுக்கொண்டார்கள். இன்னும் சொல்லப்போனால் எதிர்க்
கட்சித் தலைவரவர்கள் நீங்களே அந்த பொறுப்பை ஏற்றுக்
கொள்ளக் கூடாதா என்று என்னைக் கேட்டபோது தொழிலாளர்
நல அமைச்சர் இந்த காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்; அவர்
முதலமைச்சரையும் கலந்து பேச விரும்புகிறார்; நானும் முயற்சி
செய்கிறேன் என்று அங்கே சொல்லப்பட்டதே தவிர நாளை
காலையில் அல்லது மாலைக்குள் இணங்க வைப்பேன் என்று தொழி
லாளர் நல அமைச்சர் சொன்னார் என்று ஒரு வளையத்தை
ஏற்படுத்தி அந்த வளையத்திற்குள்ளே அவரை சிக்கவைத்து
நாளைக்கே பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென்று யாரும்
சொல்லவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அன்று பேசப்பட்டதெல்லாம் நமக்கு இருக்கிற அக்கறைதனை
ஆர்வத்தை துடிப்பை வெளியே காட்டினார்களே தவிர
சுலபமாக சுமுகமான ஒரு சூழ்நிலையை உருவாக எந்தெந்த
நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அதை மேற்

கொள்ளுங்கள் என்று சொல்லி அமைச்சரிடம் பொறுப்பை
ஒப்படைத்தார்களே தவிர திரும்பி வரும்போது முடிவோடு
வா'' என்று யாரும் உத்தரவு போடவில்லை; யாரும் அப்படி
திசை மாற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ''முடிவோடு வா''
என்று அவ்வளவு மரியாதைக் குறைவாக யாரும் சொல்ல
வில்லை. ஆனால் நடந்தது என்ன என்பதை நானும் சொல்ல
விரும்புகிறேன். நம்முடைய அவை முன்னர் அவர்கள்
அக்கறையோடு ஆர்வத்தோடு துடிப்போடு என்று சொன்னார்
களே இந்த மூன்று வார்த்தைகளை இணைத்து தொழிலாளர்
நல அமைச்சர் மாண்புமிகு இராகவானந்தம் அவர்களிடத்தில்
அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள். அவர்கள் ஃப்ரேம்
லைன் ஃப்ரேம் ஒர்க்'' செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்த
நான்கு பிரச்சனைகளையும் உடனடியாக முதலமைச்சரோடு
டெல்லிக்கு— தொடர்பு கொண்டு தொடர்ந்து திருச்சிக்கும்
தொடர்பு கொண்டு முடிவு செய்யும்படி சொன்னார்கள். அப்
போது இராகவானந்தம் அவர்கள் நாளை ஒரு திருமணத்திற்கு
செல்ல வேண்டுமென்று சொன்னார்கள். அப்போதுதான் அவ
கள் இல்லை என்றால் நீங்களே செய்யலாமே என்று முன்னவர்
அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அப்பபோது முன்னவர் அவர்
கள் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள். இந்த ப்ஃரேம்
ஒர்க்கை அடிப்படையாகக்கொண்டு அதை மனதிலே வைத்து
தொழிலாளர் சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சனையை தீர்ப்பது
உங்கள் கடமை என்று தொழிலார் நல அமைச்சரிடம்
சொன்னதை நாங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டு அந்த அறையி
லிருந்து வெளியேறினோம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, ஒரு
சிறிய வேறுபாட்டை மட்டும் நான் விளக்க விரும்புகிறேன்.
ஏனென்றால் அந்த சிறிய வேறுபாடு ஒரு பெரிய விளைவை
உருவாக்கி விடுமோ என்ற அச்சம் காரணமாக அப்படித் தெரிவித்
துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் தெரிவித்தது இந்த 4 கைட்லைன்ஸ்களை அடிப்படை
யாக வைத்து நீங்கள் பேசுங்கள், ஒரு நல்ல முடிவு காண்பதற்கு
முயற்சி செய்யுங்கள், எப்படியும் கிட்டத்தட்ட ஒரு நூறு நாட்
களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த வேலை
நிறுத்தம் நின்றாக வேண்டும், அதற்கு நீங்கள் எப்படி எப்படிப்
பேச வேண்டுமோ அப்படி அப்படிப் பேசி முடிவு கட்டுங்கள்,
விஸ்வநாதன் ஊரிலே இல்லை என்றால் அழையுங்கள் அவரை,
கூப்பிட்டுப் பேசுங்கள் என்பதுதான். இந்த 4 விஷயங்களையும்
அவரை ஏற்றுக்கொள்ள வைத்துவிட்டு நீங்கள் வாருங்கள் என்று—
நீங்கள் அத்தனைபேரும் பேசினீர்கள் என்பது உண்மை-மன்னிக்க
வேண்டும். நான் சொல்லவில்லை.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவரவர்களே, தங்களுக்
கும் தெரியும். அது மிகவும் அர்ஜன்சி என்ற காரணத்தினால்
எங்களுடைய தலைவர் அவையின் ஃபர்தர் ப்ரொசீடிங்ஸையே
நிறுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அப்பறம் தான், முன்
னவரவர்கள் சொன்னால் சரி என்று அந்த அர்ஜன்சியைக் கணக்
கில் எடுத்துக்கொண்டு, சபை நடக்கட்டும் நாம் அங்கே போய்
ஒரு முடிவு எடுப்போம் என்று கூறப்பட்டது. நான் நிச்சயம்
நம்முடைய முதல்வர் அவர்களை மாட்டிவைக்க மாட்டேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே,
தயவு செய்து திரு. உமாநாத் அவர்கள் இன்னொன்றையும்
புரிந்து கொள்ள வேண்டும். என்னை யாராலும் மாட்டி வைக்க
முடியாது என்பது நண்பர் திரு. உமாநாத் அவர்களுக்குத் தெரி
யும். நான் நடந்ததைச் சொல்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : ஆக அதைச் சொல்லி மறுநாள் அவர்
ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் பிறகு என்ன செய்ய
வேண்டும் என்று மாண்புமிகு முன்னவர் அவர்களும் எதிர்க்கட்சித்
தலைவர் அவர்களும் தங்களுடைய அனுபவத்தில் இருந்த சில
வழிமுறைகளை சஜஸ்ட் பண்ணினார்கள். ஏற்றுக்கொள்ளவில்லை
என்றால் இப்படிச் செய்யுங்கள் என்று கூறப்பட்டது.
It was a discussion held among ourselves. I do not want to divulge
what had transpired there. நான் விஷயத்தைச் சொல்லவில்லை.
அவற்றைச் சொல்லக் கூடாது என்ற அந்த நல்ல மரபை கடைப்
பண்ணுவேன். அப்படி அந்த சஜஷன் கூட கொடுக்கப்பட்டிருக்
கிறது. ஆனால் இன்றைய வரைக்கும் அந்த முதலாளிகள் அக்சப்ட்
பண்ணாத அளவில் அரசாங்கம் ஏன் அந்த ஆல்டர்நேடிவ்
சஜஷன்படி நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறு ஏன்
எடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே,
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், நாளை அவர்க
ளுடன் பேசுங்கள், அப்போது அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை
என்றால் உடனடியாக தேசியமயமாக்குங்கள் என்றார். உடனே
நான் அதற்கு சட்டத்திலே அப்படி இடம் இல்லை என்றும்,
பேச்சுவார்த்தை மட்டுமே நடத்த முடியுமே தவிர திடீரென்று
தேசியமயமாக்குவது என்பதற்கு சட்டத்திலே இடம் இல்லை
என்றும் கூறினேன். நான் பேசுகிறேன் என்று தான் சொன்னேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, உண்மைக்கு
மாறான ஒரு செய்தியை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை
அமைச்சர் தெரிவிக்கின்றார் என்பது முன்னவர் அவர்களுக்குத்
தெரியும். நண்பர் திரு. உமாநாத் அவர்கள் இந்த விஷயம்
குறித்து வெளியே சொல்ல வேண்டாம் என்று இப்போது கூறினார்.

...ருத்தம் பற்றிச்
...ருந்தாலும் கோவையிலே நடந்த வேலை நிறுத்தம் பற்றிச்
...சொல்ல வேண்டியிருக்கிறது. அது சம்பந்தமாக தொழிலாளர்
...ளுடைய பிரதிநிதிகளையும், முதலாளிகளுடைய பிரதிநிதிகளை
...யும் அழைத்து கேபினட் அறையில் உட்கார வைத்து பேசும்போது
...சமரசம் செய்துகொள்ள நான் சொன்னேன். தொழிற்சங்கத்
...தலைவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த முதலாளிக
...ளிடம் அரை மணி நேரம் விவாதம் நடந்தது. அப்போது,
...அப்படியானால் அந்த மில்களை தேசியமயமாக்குவதற்கு மத்திய
...சர்க்காரிலே பரிந்துரை செய்வது பற்றிச் சொன்னேன். அதற்குப்
...பிறகு மாலை $4\frac{1}{2}$ மணி அளவில் அந்த முதலாளிகள் வந்து
...தொழிலாளர்கள் சார்பாகச் சொன்னதை ஏற்றுக்கொண்டார்
...கள் என்று நான் குறிப்பிட்டு அதேபோல் நீங்களும் அந்தத்
...தொழிலதிபர்களிடத்திலே கண்டிப்பாகப் பேச வேண்டுமென்று,
...சொன்னேனே தவிர, அதை உடனடியாக நீங்கள் தேதியமய
...மாக்குங்கள் என்ற கருத்தை நான் சொல்லவில்லை. ஒரு முன்
...உதாரணத்தைத்தான் கூறினேன். எப்படி முதலாளிகளிடத்
...திலே நடந்துகொள்ள வேண்டும் என்று சொன்னேனே தவிர,
...மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சொல்
...அதுபோல் தேசியமயமாக்குங்கள் என்று சொல்லவில்லை. இது
...முன்னவர் அவர்களுக்குத் தெரியும்.

[மாலை 5-50]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : விவாதம் நீண்டு
கொண்டே போகாது, நான் சுருக்கமாக விளக்கிவிடுகிறேன். இப்
போது நமது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தந்த விளக்கம்,
தேசியவுடைமையாக்குங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்
கள் என்னிடம் கேட்டார் என்று நமது தொழிலாளர் நலத்துறை
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் இருந்து கேட்டது
வரை உண்மையைச் சொல்லவேண்டுமென்பதற்காகச் சொல்கி
றேன். நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது
கோவையில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி
அந்த முதலாளிகளை மிரட்டுவதற்காக நாங்கள் தேசியவுடைமை
யாக்கிவிடுவோம், ஜாக்கிரதை என்று அவர்களை மிரட்டியனுப்பி
னோம். அதற்குப் பிறகு அவர்கள் பயப்பட்டு, நாளைக்கே
ஆக்க முடியாது என்று தெரியும், தெரிந்திருந்தாலும் நேரே
வந்து ஒத்துக்கொண்டார்கள் என்றுதான் சொன்னார்களே தவிர
தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சொல்வதைப்
போல் சொன்னதாக எனக்கு நினைவு இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அவை முன்னவர்
அவர்கள் சொன்னதற்கும் நான் சொல்வதற்கும் உள்ளேவார்த்தை
வித்தியாசம் இருக்கும். தமிழ் வளம் அவர்களுக்குள்ளதைப்போல்
எனக்கு இல்லையென்றுத் தெரியும். நான் சொன்னது. I am
one of the Ministers. I am not the Chief Minister.

நீங்கள் அந்தளவிற்குப் போக வேண்டும் என்று சொன்னால்
அமைச்சர் அவர்கள் வந்த பிறகுதான் செய்ய வேண்டும். I
only do concililation.
கூப்பிட்டுப் பேசுவதுதான் செய்ய முடியும். மிரட்டல் என்
முதல் அமைச்சர் அவர்கள் வந்த பிறகு கலந்து செய்ய வேண்
நான் செய்ய முடியாது என்றுதான் சொன்னேன்.

திரு. மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்க
தேசியமயமாக்குவோம் என்று சொல்லி மிரட்ட வேண்டும் எ
நான் சொல்லவில்லை. கடுமையாகப் பேசுங்கள் தொழில் அ
களிடம் என்று சொன்னேன், அவர்கள் சொன்னார்கள், அ
முதல் அமைச்சர் அவர்கள்தான் செய்ய வேண்டும், நான் செ
முடியாது என்று. அப்போது சொன்னேன். முதல் அமைச்
அவர்களை அடுத்துள்ள அமைச்சர்கள் கடுமையாக நட
கொண்டு முதல் அமைச்சர் அவர்கள் அதை மென்மைப்படு
வேண்டும்; நீங்கள் முதல் அமைச்சர் அவர்கள் கடுமை
நடந்து கொள்ள வேண்டும் நாங்கள் மென்மையாக நட
கொள்வோம் என்று நீங்கள் சொல்வது பொருத்தமுடையத
என்று கூறி துணைத் தலைவர் அவர்களுக்கும், முதல் அமைச்
அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும் நான் பணி
புடன் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட விவாதங்க
நடைபெற்ற விஷயங்கள் மறுபடியும் வேறுவிதமாகச் சொல்
படுமானால் எங்களை விவாதத்திற்கு அழைத்தால் நாங்கள் வ
வதற்கு பிறகு பயப்படுவோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது, தலை
கள் பூராவும் தனியாகப் பேசியது. என்ன நடந்தது என்ப
வெளியே பேச வேண்டாம். பல உறுப்பினர்கள் 6 மணி
ஊருக்கு போக ரிசர்வ் செய்திருப்பதாக திரு. அழகர்சாமி அ
களைப் போன்றவர்கள் சொன்னார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : முன்னவர் அவர்கள் சொன்னதுதா
ஃபாக்ட்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும்
பிரச்சனைகள் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் பேச இரு
னார்கள். எனவே, மாண்புமிகு முதல் அமைச்சர் கேட்
கொண்டதுபோல் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒத்துக்கொண்
போல், எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனைபேர்களுக்கு
அதே போல் முன்னவர் அவர்கள் பேசியதும், தொழிலா
ளர்த்துறை அமைச்சர் அவர்கள்....................

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தேசிய
மாக்குவோம் என்று மிரட்டுவது என்று பிரச்சனை வந்ததிலிரு
அதுபற்றி பேசியவற்றை நீக்கிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள் தேசியமயமாக்குவோம் என்று சொன்னதி
ருந்து அமைச்சர் அவர்கள் சொன்னது, அது பற்றிய வாக்கியங்
களை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். பத்
திரிகைகளிலும் வரக் கூடாது.

திரு. ரா. உமாநாத் : அன்-பார்லிமென்டரி வார்த்தைகள்
என்றால் எக்ஸ்பஞ்ச் செய்யலாம். அந்தமாதிரி ஒன்றுமில்லையே.
டிஸ்ப்யூட் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது.
தொழிலாளிகளுக்கு எல்லாம் தெரியும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அந்தப் பிரச்
சனை இந்தக் குறிப்பேட்டில் இருக்க வேண்டாம் என்று சொன்ன
தற்குக் காரணம், அப்படியெல்லாம் பயமுறுத்தினால்—உடனடி
யாக எடுக்க முடியாது என்று தெரியும், ஆனால் பயமுறுத்துவது
போல் சொல்லலாம் என்று சொன்னால் முன்னால் இருந்த முதல்
அமைச்சர் அவர்களையும் பலகீனப்படுத்தும், இப்போதுள்ள அர
சையும் பலகீனப்படுத்தும்; பின்னால் வர இருக்கிற அரசுகளையும்
பலகீனப் படுத்தும்; ஆகவே, தயவு செய்து அந்தப் பிரச்சனை வர
வேண்டாம். ஒட்டுமொத்தமாக என்ன பேசப்பட்டது, என்ன
என்றெல்
நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பேசப்பட்டது என்றெல்
லாம் சொல்லலாமே தவிர, உள் விளக்கங்களுக்குப் போக வேண்
டாம். குறிப்பாக தேசியமயமாக்க வேண்டும் என்பது பற்றிப்
பேசியது குறிப்பில் இருக்க வேண்டாம் என்றுதான் சொல்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே,
நாங்கள் அளித்த ஆணையின்படி—தேசிய மயம் என்று ஆரம்பித்
ததிலிருந்து பேசிய அத்தனையும் விலக்கப்பட்டு விடுமோ என்ற
அச்சம் இருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் விளக்கத்தை
ஏற்றுக் கொண்டு, தேசியமயமாக்க வேண்டும் என்று எதிர்கட்சித்
தலைவர் சொன்னார். அதற்கு நான் இணங்கவில்லை. கடுமை
யாக நடந்து கொள்ள வேண்டும் என்று சொன்னார். அதற்கு
நான் இணங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னதை
மாற்றிக் கொண்டு, அதன் தொடர்பாகவுள்ள மற்றப் பகுதிகளை
எல்லாம் அப்படியே வைத்துக் கொண்டால் பொருத்தமாக
இருக்கும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் என்ன
நடந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆதலால் எந்தப்
பகுதியை நீக்க வேண்டும் என்று எனக்குத் தீர்ப்புச் சொல்ல முடி
யாது. நீங்கள் இன்ன விதமாகப் பேசினீர்கள் என்று அமைச்சர்
அவர்கள் சொல்லுகிறார்கள். நீங்கள் இல்லையென்று சொல்லு
கிறீர்கள். இதில் என்னென்ன வாக்கியங்கள் உபயோகிக்கப்
பட்டன, இது சம்பந்தமாக என்ன டிஸ்கஷன் நடந்தது என்பது
எனக்குத் தெரியாது....

[1979 பிப்ரவரி 2

திரு. மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே
விவாதத்தின்போது எதிர்கட்சித் தலைவர்
தொழிலாளர் நல அமைச்சர் மன்றத்தில் சொல்லாத ஒன்
கட்சித் தலைவர் மறுத்தார். மறுத்தது சரிதான் என்று அ
முன்னவர் ஒப்புக் கொண்டார் என்கின்ற அளவிலாவது இ
கட்டும்.

திரு. ரா. உமாநாத் : கனம் முதலமைச்சர் அவர்களி
நான் ஒரு க்ளாரிபிக்கேஷன் கேட்க விரும்புகிறேன். நான் த
ஆரம்பித்தேன், அது வேறுவிதமாக போய்விட்டது.
விஷயத்தைத்தான் கேட்க விரும்புகிறேன். இந்தப் பிரச்னை
ப்ரேம் வொர்க் கொடுத்தாகிவிட்டது. இப்போது 112-
நாளாக வேலை நிறுத்தம் நடக்கிறது, இன்னும் மானேஜ்மெ
ஒத்துக் கொள்ளவில்லை. எப்போது கேட்டாலும்,
வேண்டும், டைம் வேண்டும் என்று சொல்விக் கொண்டி
கிறார்கள். முதலமைச்சர் இப்போதும் பார்ப்போம் என்று
சொல்லுகிறார்கள். நான் சொல்ல விரும்புவது, இந்த ஸ்டேஜில்
ஃபர்ம் பொலிஸஷனாக ' இருக்க வேண்டும் என்பது தான்.
அரசாங்கம் மிகவும் ஃபர்மாக இருக்க வேண்டும். அப்ப
யிருக்குமா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதிர்கட்சி
தலைவர் சில வாக்கியங்கள் இருக்கட்டும் என்று சொல்லுகிறா
கள். ஆனால்..

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத்தலைவ
அவர்களே, கடைசியாக, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்
அளவுக்கு எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.
பேசப்பட்டது எல்லாம் அப்படியே இருக்கட்டும் என்ற மு
லமைச்சர் அவர்களின் கருத்தை இந்த அவையில் தெரிவித்
கொள்ள விரும்புகிறேன்.

திரு. ர. ஜெபமணி : துணைச் சபாநாயகர் அவர்களே
இங்கு அரை மணி நேரமாக எதிர்கட்சித் தலைவர்களும் அமை
சர்களும் பேசிக் கொண்டதைப் பற்றி ஒருவருக்கொருவ
விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு யோசனை
சொல்ல விரும்புகிறேன். தலைவர்களும் அமைச்சர்களும் இப்ப
சேர்ந்து பேசும்போது, டேப் ரிக்கார்டு வைத்துக் கொண்டு பே
னால், இப்படி ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருக்
வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அவர்களுக்குள்
வருக்கொருவர் ஏதோ பேசிவிட்டு இங்கே வந்து தங்களைப்
படுத்திக் கொள்வதற்காக வேறு விதமாகப் பேசிக் கொள்
வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. அங்கு என்ன பேச்
நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியாது. அதை எல்லோரு
தெரிந்து கொண்டால் நன்றாக இருக்கும்.

1979 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கட்சித் தலைவரைக் கேட்டிருந்தால் என்ன நடந்தது என்று உங்களுக்கும் தெரிந்திருக்கும். தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் பேசுவார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியில், அரசினர் தொழிற் கூடத்தில், நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய தென்னை நார் தொழிற்கூடங்கள், எட்டு தொழிற்சங்கங்கள், மூடப்பட்டுவிட்டன என்றும், இதைப்பற்றி கே. டி. கோசல்ராம் அவர்கள் பாராளுமன்றத்தில் எழுப்பி, இதன் மீது விண்ணப்பம் கொடுத்து அது பற்றி, தொழில்-வணிகத் துறையிடம் குறிப்பு ஒன்று கோரப்பட்டது.

(மாலை 6—00).

கன்னியாகுமரிக்கு தென்னை நார்கள் போகக் கூடாது என்ற தன்மையில் ஒரு குற்றச்சாட்டை திரு. விஜயராகவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். தென்காசி, செங்கோட்டை போன்ற இடங்களில் தென்னை நார்கள் அதிகமாக இருக்கின்றன. அந்த நார்கள் கேரளாவிற்கு எடுத்துச் செல்லப்படுவதால், அதன் விலை தமிழ்நாட்டிலே அதிகமாக உயர்ந்து கொண்டு வருகின்றது. அந்த நிலையைப் போக்க வேண்டுமென்றால், தென்னை நார்கள் அங்கிருந்து கேரளாவிற்குப் போவதை தடை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதன்படி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர், தொழில்-வணிகத் துறை துணை இயக்குநர் பரிந்துரையின் பேரில் அவரது அனுமதி பெற்றுத்தான் கேரளாவிற்குச் செல்ல வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தின் நலனை உத்தேசித்து தென்னை நார்கள் மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் அங்குள்ள தொழிலாளர்களின் நன்மையை உத்தேசித்து, அதை ஒப்புக் கொண்டார். அதைக் குறிப்பிடும் போது.....

திரு. இரா. ஆதிசுவாமி : கேரளாவிற்குப் போகவில்லை. இரண்டு மெஷின்களைக் கொண்டு, பல பேருக்கு வேலை கொடுக்க முடியும். கன்னியாகுமரி மாவட்டத்தில்தான், இந்த நாரை ஊற வைப்பதற்கான சகல வசதிகளும் இருக்கின்றன. அதனால், சில முதலாளிகள் இங்கே மிஷின்களை வைத்து நடத்துகிறார்கள். எனவே, அது கேரளாவிற்குப் போகவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் இந்த சௌரிகள் எல்லாம் நாராகப் பிரிக்கப்படுகின்றன.

தங்க
பார்க்கிறோம். அதற்குக் காரணம், பஞ்சாலைகள் உற்பத்தி
டைய உற்பத்தியை 65 சதவீத கண்டு நூலாக நிறை
செய்ய வேண்டும் என்ற பஞ்சாலை ஆணையரின் விதியை
வேற்றாதது தான் ஒரு காரணமாகக் கருதப்படுகிறது.

ஆலைகள் இவ்விதியை ஒழுங்காகக் கடைப்பிடிப்பார்களே
யாயின் கைத்தறித் துணிக்குத் தேவையான கண்டு நூல்
போதிய அளவு விநியோகத்திற்கு வந்து அதன் விலையும்
கட்டுக்கு அடங்கி நிற்கும். எனவே கைத்தறி மற்றும் துணி
நூல் இயக்குநர் மேற் சொன்ன விதியை மீறாது கண்டு நூல்
உற்பத்தியை 65 சதவீதம் தொடர்ந்து உற்பத்தி செய்ய வேண்
டும் என பஞ்சாலைகளை வலியுறுத்தும்படி பஞ்சாலை ஆணை
யரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழகத்தில் செயல்பட்டு வரும் 12 கூட்டுறவு நூற்பாலை
களும் தரமான நூலை உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு
நெசவாளர்களுக்கு வழங்கி வருகிறது. கைத்தறி மற்றும் துணி
நூல் இயக்குநரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் ஒரு
குழு தனியார்கள் விற்கும் நூலின் விலையை விட குறைவாகவே
கூட்டுறவு நூற்பு-ஆலைகளில் உற்பத்தியாகும் நூலுக்கு விலை
நிர்ணயம் செய்து நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யப்படு
கின்றது. கோ-ஆப்டெக்ஸ் தனது 18 டெப்போக்கள் மூலம்
நெசவாளர்களுக்கு நூலை விநியோகம் செய்கின்றது. வெளி
யில் நூல் வாங்கினால் மூன்று ரூபாய் குறைவாகக் கிடைக்கும்
என்று குறிப்பிட்டார்கள். நூலிற்கு விற்பனை வரி 3 சதவீதம்
எங்கு வாங்கினாலும் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நெச
வாளர்களுக்கு நியாயமான கூலி கிடைக்கும்படி செய்ய அரசு
வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அவ்வப்போது சட்ட நுணுக்க ஆலோசனையைப் பெற
முயன்று வருகிறது. அந்த ஆணையர் கருத்தை அவர்கள் சரி
வரச் செயல்படுத்த வில்லை என்ற நிலைமை ஏற்பட்டு இது
தான் முடிவு என்றால் அரசு அதைப்பற்றிச் சிந்தித்து ஒரு முடிவை
எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு அரசைத் தள்ளி விடக்
கூடாது. அவர்கள் அந்த நிலைமையை உருவாக்குவார்கள்
என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இனி
மேலாவது அவர்கள் தவறான முறையைப் பின்பற்ற மாட்டார்
கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. க. சுப்பு: துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ
மனைகளுக்கு சப்ளை செய்யப்படுகிற பாண்டேஜ் கிளாத்துக்கு
டிமாண்ட் இருக்கிறது. அதை கைத்தறியில் உற்பத்தி செய்து
ஆஸ்பத்திரிகளில் கண்டிப்பாக கைத்தறியில் உற்பத்தி செய்
ததைத்தான்— விசைத் தறியிலும் உற்பத்தி செய்யப்படுகிறது.
அது கூடாது— ஆஸ்பத்திரிகளில் பாண்டேஜ் துணிக்கு வாங்க
வேண்டுமென்று உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இ உத்தரவை முன்பே அமலுக்குக் கொண்டுவர நாங்கள் பணி திருக்கிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொ கிறேன். இந்த அரசின் கொள்கை அதுதான் என்பதையு குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசுதான் அதிகமான பொரு களை வாங்குகிறது. இந்த அரசு நுகர் பொருள் வாங்குவோர் சங்கம் என்று அமைத்துக் கொண்டாலும் கூட அதிசயிக்கத் தக்க நிலை இருக்காது என்று சொல்லுகிற வகையில் இந்த அர ஆங்காங்கே இருக்கிற அலுவலகங்கள் மூலம் பல்வேறு சாதன களை விலைக்கு வாங்குகிறது. அப்படி வாங்கும்போது கூடுமான வரை அவைகளை எல்லாம் சிறு தொழிற் துறையில் உற்பத்தி செய்கிற தொழிலாளர்கள் கஷ்டத்தைப் போக்குவதற்காக அவர் களுக்கு நல் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற விதத்தில் அவை களை வாங்குவதற்கு ஒவ்வொரு இலாகாவும் முன் வர வேண்டு மென்று இந்த அரசு விரும்புகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதை வற்புறுத்துவதில் இந்த அரசு அக்கறை காட்டும் அதையே நாங்கள் கிராமப் புறங்களில் சிறு தொழில் கள் தோன்றுவதற்கும் சிறு கைத்தொழில்கள் வளர்ச்சி பெறு வதற்கும். உதவியாக அதைப் பயன்படுத்த வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம் என்பதை இங்கே மாண்புமிகு சுப்பு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக வேலை நிறுத்தங்கள் நடைபெறும்போது வன் முறை ஏற்படுவதும் வன்முறை ஏற்படும்போது அதைத் தடுக்க காவல் துறையினர் தலையிடுவதும் உலகெங்கும் நடைபெறு கிறது என்பதை மாண்புமிகு உமாநாத் அவர்கள் கோடிட்டுக் காண்பித்திருக்கிறார்கள்.

(மாலை 6–10.)

திரு. ரா. உமாநாத் : நான் என்னமோ சொன்னேன் வேலை நிறுத்தம் என்பது உலகெங்கும் நடக்கிற நிகழ்ச்சி என்று நான் சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேறு மாதிரியாகச் சொல்கிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. ரிக்கார்ட்களைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலை நிறுத்தம் என்பது சோஷியோ-எக்கனாமிக் பிரச்சினை யின் அடிப்படையிலே உலகம் எங்கும் வேலை நிறுத்தம் இருக் கிறது என்று சொன்னதை முதலமைச்சர் அதோடு வேறு எண் ணத்தைச் சேர்த்துச் சொல்வது சரியல்ல. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, எனக்காக பேராசிரியர் பேசியதற்காக நன்றி. வேலை நிறுத்தம் ஏற்பட்டால் தவிர்க்க முடியாத நேரங் களிலே வன்முறை ஏற்படுவதும் உண்டு. வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள் என்றால் வன்முறைக்காக ஈடுபடுவதில்லை.

வேலை நிறுத்தத்திலே ஈடுபடுகிறவர்களுக்கு இனிமேல் பட்டினி கிடப்பது முடியாது, எத்தனை நாட்களுக்கு வருமானம் இல்லா மல் இருப்பது என்ற முறையிலே எண்ணம் ஏற்பட்டு வளர்ந்து வெறுப்பு மனப்பான்மையாக அது வளரும்போது வன்முறையில் ஈடுபடுகிறார்கள். அதன் விளைவாகப் பல தொல்லைகள் விளைகின்றன என்பதும் வேறு வழியின்றி காவல் துறையினர் தலையிட்டு நாம் விரும்பாத நிகழ்ச்சிகள் விபரீதங்கள் நடந்து விடுகின்றன என்பதையும் விளக்குவதற்காகத்தான் நான் குறிப் பிட்டேன். அந்த வகையில் தான் நான் சொல்ல விரும்புகிறேன் வேலை நிறுத்தம் செய்கின்ற உரிமையை தொழிலாளர்களிட மிருந்து பறித்து விடவேண்டுமென்பதில் நிச்சயமாக அரசுக்கு அக்கறையில்லை, ஆனால் வேலை நிறுத்தம் செய்துதான் ஆக வேண்டுமென்ற நிலைமை ஏற்படுகின்ற அளவுக்கு ஆலை அதிபர் களோ முதலாளிகளோ அப்படிப்பட்ட வாய்ப்பை உண்டாக்கு வது சரியல்ல என்பதைக் கூறிக் கொள்ள நான் கடமைப்பட்டு இருக்கிறேன். அரசைப் பொறுத்தவரையில் வேலை நிறுத்தம் நடை பெறாமல் பொருள் உற்பத்தி தடங்கல் ஏற்படாமல் மேலும் வளருவதற்கும் அதிகப்படுத்துவதற்கும் நல்லதொரு சூழ்நிலையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் நான் கூறுகிறேனே தவிர வேலை நிறுத்தமே தவறு என்றோ வேலை நிறுத்தத்திலே தொழிலாளர்கள் ஈடுபடக் கூடவே கூடாது என்றோ நான் கூறவில்லை. ஆனால் முன்ன தாகவே தவிர்த்து விடவேண்டும் என்பது எங்களுடைய கருத்து, மாண்புமிகு உமாநாத் அவர்களுடைய கருத்தும் அதுவாகத் தான் இருக்கும் என்று நான் நம்புகிறேன். சில நேரங்களிலே சட்டங்கள் என்று பேசிக் கொண்டு, சட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு அதன் விளைவாக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு, பிறகு ஒப்பந்தங்கள் பாதகமாக இருக்கிறது, அல்லது சாதகமாக இல்லை என்ற நிலை யில் மாறுபாடான நிலைமையை அமைத்துக் கொள்ளக் கூடிய நிலைமை, வேதனை தோன்றுகிறபோது சட்டத்திற்குப் புறம்பாக ஏதாவது ஒரு வழியைக் கடைப் பிடித்தாவது ஒரு நன்மையைப் பெறலாமா என்று முயற்சிப்பது சரியல்ல என்ற நிலைமையைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதிரி நெருக்கடி ஏற் படாமல் தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்துவதற்கு எந்த வழியைப் பின்பற்றுவது என்று இனிமேல் நாம் அனைவரும் சேர்ந்து ஒரு வழியைக் கண்டுபிடித்து முன் வந்தால் பிரச்சினை கள் எந்த அளவிற்கு மற்றவர்கள் தூண்டிவிட்டாலும்— நாம் அதற்குப் பலியாகாமல் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று கருதுகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் தங்கள் கருத்துக்களைப் பல்வேறு பிரச்சினைகளிலே சொல்லியிருக்கிறார் கள். இங்கே இப்போது அத்தனையும் சொல்வதற்கு நேரம் போதாது என்று கருதுகிறேன். நேரம் போய்க் கொண்டிருக்

கிறது. ஆனால் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சில சமயங்களில் திரு. உமாநாத் அவர்கள் எந்த அளவிற்கு சிரித்து அன்போடு பேசுகிறார்களோ பழகுகிறார்களோ அதற்கு நேர் மாறாக என்று நான் சொல்ல மாட்டேன், அதைவிட அதிகமாக அவருக்கு கோபம் வரும் என்று அன்றுதான் புரிந்து கொண்டேன். கோபம் வருவதற்கு அடிப்படை நியாயத்தை வைத்துக் கொண்டால் கொஞ்சம் உதவியாக இருக்கும் என்பது என்னுடைய வேண்டுகோள். அவரது வீட்டில் நடந்த அக்கிரமத்தை அநியாயத்தை எதனால் ஏற்பட்டது என்பதையெல்லாம் விசாரணையில் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறி அதையும் பேச முடியாத நிலை எங்களுக்கும் ஏற்பட்டு விடுகிறது என்ற மனத் தாங்கல் எங்களுக்கும் உண்டு.

ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த நேரங்களில் அதுபோன்ற சமயங்களில் கொஞ்சம் விட்டுக் கொடுத்து ஒரு சில நாட்கள் பொறுத்திருந்து உண்மை வெளியில் வரவில்லை சரியான நிலையில் தீர்ப்பு அளிக்கக் கூடிய வகையில் வழக்கு நடத்தப்படவில்லை என்று நிச்சயமான நிலை ஏற்படும் என்றால் அதைப்பற்றி அரசு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்த அல்லது அதைப்பற்றி விளக்கம் கோருவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமையிருக்கின்றது. இந்த மாமன்றத்தில் இந்த நாட்டு நிலைமையைப்பற்றி, சட்டமன்ற வாசகங்களுக்கு எந்த அளவிற்கு மரியாதை கொடுத்துப் பயன்படுத்தி உணர்ச்சிகளை வெளிக் காட்ட முடியுமோ அந்த அளவிற்கு எதையும் செய்யலாம். அந்த எண்ணத்தை வெளிப்படுத்தலாம் என்ற வகையில் அப்பொழுது அந்தச் சூழ்நிலையிலே இதையெல்லாம் எடுத்துச் சொல்லுங்கள் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இங்கே எப்படியோ விரும்பியோ விரும்பாமலோ ஒரே தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்களாக இல்லாவிட்டாலும், தொழிற்சங்கத்திலேயிருந்து பணியாற்றியவர்களிலே ஒருவராக இருந்த, எங்கள் அமைச்சரவையிலே இருக்கின்ற மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் மீது மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் ஒரு சில குறைகளைக் கூறினார்கள். நான் அதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன். எதற்கெடுத்தாலும் மாண்புமிகு அமைச்சர் இராகாவானந்தம் அவர்கள் யாரையும் மதிக்காமல் அலட்சியத்துடனோ அல்லது தன்னுடைய விருப்பத்திற்கேற்பவோ கருத்துக்களை வெளியிடுகின்றார் என்ற வகையில் சில சொற்களை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அந்தக்கருத்து ஒருவேளை மறதியினால் இருக்கலாம் என்று நான் கருதுகிறேன். குறிப்பாக குழு அமைக்கும்போது அந்தந்தக் கட்சிக்காரர்களைக் கூப்பிடவில்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். மறைந்த தொழிலாளர் தலைவர் கோபால் அவர்கள் இருந்த இடத்தில் யாரை

நியமிக்க வேண்டுமென்பதைக்கூட அந்தத் தொழிற்சங்கத்தைக் கேட்டு, அவர்கள் குறிப்பிட்டவர்களை இங்கே நியமித்திருக்கிறோம் என்பதை ஆதாரத்தோடு சொல்லி, மாண்புமிகு உமாநாத் அவர்கள் மறதியாய் இருந்திருப்பார்கள் என்று கருதுகிறேன், அவரே எழுதிக்கொடுத்த கடிதத்தில் அவரே நல்லசிவம் அவர்களின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, மறதி எல்லோருக்கும் உண்டு என்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன். எனவே, வேண்டுமென்று செய்யவில்லை. ஆனால் சில சமயங்களில் ஒருவர் மீது சந்தேகம் ஏற்பட்டு விட்டால் அவர் செய்வது எல்லாமே தவறு என்பதுபோல் தான் தோன்றும் என்பதைப்போல இந்தத் தவறு ஏற்பட்டிருக்கலாமே தவிர, வேண்டுமென்றே பழி சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களின் எண்ணம் இருக்காது என்பது எனக்குத் நிச்சயமாகத் தெரியும். ஆகவே, அதை நான் இங்கே குறிப்பிடும்போது இதுபோன்ற பல செய்திகளில் சில நேரங்களில் நம்மை அறியாமலே தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. இவைகளையெல்லாம் குற்றச்சாட்டாகவோ அல்லது குறைகளாகவோ எண்ணிக்கொண்டு நாம் அதைப்பற்றியே பரிசீலனை செய்வது என்று இருந்தோமானால் இதற்குத்தான் நேரம் இருக்குமே தவிர சந்தேகம் தீராது என்றும், முடிவே இருக்காது என்றும்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதுபோல நான் சிலவற்றைச் சொல்லும்பொழுது காலையிலே, அரசுப் பணிகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்..............

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, குறிப்பிட்ட கமிட்டியைப் பொறுத்தவரையில் அந்த லெட்டர் எழுதியதை ஒத்துக்கொள்கிறேன். கரெக்ட் செய்கிறேன். ஆனால் பல கமிட்டிகளிலே அந்தந்தச் சங்கங்களைக் கேட்காமலேயே அங்கே சர்க்காரிலே நியமிப்பது உண்டு. அதற்கு நான் பல இன்டன்ஸ்களைக் கொடுக்க முடியும். குறிப்பிட்ட இதிலேயிருந்து அரசாங்கத்தின் ஜெனரல் பாலிசி என்று கூற வேண்டாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்தை நீட்டிக்க விரும்பவில்லை. அவர் சொன்ன குற்றச்சாட்டு சம்பந்தமான விஷயத்தில் ஆதாரம் இருந்தது, காட்டினேன். அதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். தவறு இல்லை என்று சொன்னார்கள், அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த விஷயத்திலே அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் மாண்புமிகு உமாநாத் அவர்களை அலட்சியம் செய்யவில்லை என்றும், அவர்கள் கட்சியினரை அலட்சியம் செய்து ஒதுக்கிவிடவில்லை என்பதையும் ஒத்துக்கொண்டார்கள் என்பதே எனக்கு நிறைந்த மன நிறைவை ஏற்படுத்தியிருக்கிறது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 26-

இதுபோல் ஒருவரையொருவர் நாம் சரியாகப் புரிந்து கொண்டோம் என்றால் ஒவ்வொருவர் செய்யும் தவறுகளுக்கும் எவ்வளவோ கோபதாபங்கள் நிகழாமல் நல்ல காரியங்களை ஒருங்கு சேர்ந்து நம்மால் நிறைவேற்ற முடியும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[மாலை 6.20]

மாண்புமிகு திரு சாதிக்பாட்சா அவர்கள் பல பிரச்னைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை பற்றி அவர்கள் எடுத்துக் கூறியவைகளில் குற்றவியல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிகளை மாவட்ட முன்சீப் பதவிக்கு ஒருங்கிணைக்கும் செயற் குறிப்புப் பற்றி கேட்கப்பட்டிருந்த விஷயமாக என்ன செய்யப் பட்டிருக்கிறது என்றார், அவருக்கு நான் கூற விரும்புகிறேன் சட்டக் கல்லூரியிலிருந்து பயின்று வெளியேறி வருபவர்களை இப்பணிக்கு உயர் நீதி மன்றத்தில் தேர்ந்தெடுத்து தற்காலிகமாக நியமனம் செய்யப்படுகின்றார்கள் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத் : மன்னிக்கவேண்டும். அந்த லெட்டரை இப்போதுதான் பார்த்தேன்—3, மார்ச் 1978 ரி கன்ஸ்டிரக்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அப்போது நாமினேஷன் கேட்டார்கள்— நல்லசிவம் பேரை கொடுத்தோம்— அதற்குப் பிறகு மே மாதம் கடைசியாக கமிட்டி கூடியது என்றும் அதற்குப் பிறகு கூடவே இல்லை— கமிட்டி கூடாமலேயே இப்போது புதிதாக கான்ஸ்டிடியூட் பண்ணவேண்டும் என்கிறார்கள் — அதற்கு எங்களைக் கேட்காமலேயே அவர்களாகவே நியமித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உமாநாத் அவர்களின் திறமையை நான் வரவேற்கிறேன். யாராவது உறுப்பினர் இறந்திருந்தால் அல்லது யாராவது விலகிக்கொள்ள விரும்பியிருந்தால் அதன்மேல் அந்தக் குழுவை கலைத்துவிட்டு அந்தப் பிரச்னையை அதாவது புதிதாக எல்லோருமே மாற்றப்படுவது என்ற பிரச்னையை திரும்ப ஏற்கப்படும். ஆனால் ஒருவரைத்தான் மாற்றியிருக்கிறோம். அதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதையும் அதை விட்டு வேறு பிரச்னைகளுக்குப் போக வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியைப்பற்றிக் குறிப்பிடும்போது உங்கள் தொழிற் சங்கங்கள் என்று சொல்கிறார்கள் மற்றக் கட்சிகளைச் சொல்லும்போதும் அந்தந்தத் தொழிற் சங்கங்களைச் சொல்கிறார்கள். திராவிட

1979 பிப்ரவரி 26] [திரு. [திரு. க. சுப்பு]

முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் பொதுவாக தொழிற் சங்கங்களைக் கேட்டோம் என்கிறார்கள் — இந்த விஷயத்தில் மாண்புமிகு அமைச்சர் ராகவானந்தம் அவர்களுக்கு எந்த ஸ்டாண்டர்டும் இல்லை — ஆனால் ஒருநாள் கட்டாயம் அவர் ....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, விவாதம் நீண்டுக் கொண்டே போகிறது. எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் முழுமையுடைய அமைப்புகளில் தொழிற் சங்கங்கள் இருந்தால் அவர்களாகவே கேட்டிருப்பார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மாதிரி உயர் நீதி மன்றத்தில் தேர்ந்தெடுத்து அனுப்பி வர்கள் நியமனம் பெறுவதற்கு முன் 9 மாதம் பயிற்சிபெற வேண்டும். அதற்குப் பிறகு அவர்கள் தேர்வுக்கு அனுப்பப்படுவார்கள். தேர்வுக்குப்பின பணியில் அவர்கள் முறைப்படுத்தப் படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிறபாடு மாற்றங்கள் அரசாணைகள் மூலம் வழங்கப்படுகின்றன. தற் பொழுது நடைமுறையில் உள்ள விதிகளிபடி — 1957-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 27-ம் தேதி 2432-ம் எண். அரசாணை யில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அதாவது 51-ம் ஆண்டுக்கு முன்பு அரசு ஆணையில் ஜாதிவாரி முறையில் பணி களுக்கு மாற்றம் ஏற்பட்டது. அப்பால் 1972-ம் 19-வது விதி யின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. கீழ் கண்ட ஜாதி வாரியாக அப்போது பிரிவு செய்யப்பட்டது.

பிராம்மணர் அல்லாத வகுப்பினருக்கு	..	5/12
பிராமணர் வகுப்பினருக்கு	..	2/12
முகம்மதியர்கள்	..	2/12
ஆங்கிலோ இந்தியர், கிருஸ்துவ இந்தியர்கள்	..	2/12
அரிசனங்கள்	..	1/12

எந்த அடிப்படையில் மேலே குறிப்பிட்ட இனங்களை பணி களுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்று தெரியவில்லை என் றாலும் ஜனத்தொகை என்ற அடிப்படையில் மட்டுமல்ல சமூக வளர்ச்சி கல்வி வளர்ச்சி முதலியவைகளையும் கருத்திற் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். மேலே குறிப்பிட்ட விவரங்கள் 47-ம் ஆண்டு இறுதி வரை நடைமுறையில்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 26

இருந்து வந்துள்ளது. அரிசனங்களிடமிருந்து அந்த இடங்களை அளிக்க வேண்டும் என்று வந்த கோரிக்கைகளின் காரணமாக இந்த இடங்கள் 14 ஆக மாற்றப்பட்டது.

பிராம்மணர் அல்லாத இந்துக்கள்	..	6/14
பிற்பட்ட இந்துக்கள்	.. .. ..	2/14
பிராம்மணர்கள்	.. ..	2/14
அரிசனங்கள்	.. ..	2/14
ஆங்கிலோ இந்தியர்கள், இந்திய கிருஸ்தவர்கள்	.. ..	1/14
முகமதியர்கள்	.. ..	1/14

மேலே குறிப்பிட்ட விகிதங்கள் ஜனத்தொகை அடிப்படையில் மட்டும் அமையவில்லை. அந்த விகிதங்கள் ஜனத்தொகை மற்றும் ஒவ்வொரு வகுப்பில் உள்ள கல்வி வளர்ச்சியின் அடிப்படையில் அமைக்கப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. 1947 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21-ம் நாளிட்ட பொதுப்பணிகள் 3437 அரசாணையில் மேலே குறிப்பிட்ட மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்த மாநில வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணை வழங்கப்பட்ட பின்னால், நீதிமன்றத்தால் செல்லத்தக்கதல்ல என்று அறிவிக்கப்பட்டது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்த எண். 260/50 என்பதன் மூலம் அது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இந்திய அரசியல் அமைப்புச் சட்ட விதிகளின் அடிப்படையில் செய்யப்பட்ட சென்னை மாநில வகுப்பு வாரி பிரதிநிதித்துவ வினியோக முறையை மத்திய அரசு ஆராய்ந்தது. மேலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணை, இந்தியக் குடிமக்களிடையே ஜாதி, மத அடிப்படை வேற்றுமைகளுக்கு வழி வகுப்பதால் அது அரசியல் சட்டத்தின் 14 (2) விதிகளின் படி செயலற்றுப் போகலாம் என்று இந்திய அரசு கருத்து தெரிவித்தது. மேலும் சென்னை அரசின் வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணை அரசியல் சட்டத்தின் 14 (4) பிரிவிற்கு ஏற்றவாறு அமையவில்லை என்று மத்திய அரசு ஆலோசனை கூறியது. இச்சமயத்தில் சென்னை உயர்நீதி மன்றம் வகுப்பு அடிப்படையில் பாகுபாடு செய்து மாணவர்களை தேர்ந்தெடுப்பது அரசியல் சட்ட விதிகளுக்குப் புறம்பானது என்று தீர்பளித்தது. சென்னை அரசு மேற்சொன்ன தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் அப்பீல் செய்தது. ஆகவே, இந்திய அரசு தெரிவித்த கருத்தின்பேரில் நடவடிக்கையை உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு வந்த பின்னால் எடுக்கலாம் என்று தள்ளி வைத்தது. உச்சநீதி மன்றம்

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

திரு. வெங்கடராமனுக்கும், சென்னை மாநில அரசுக்கும்
இடையே இருந்த வழக்கொன்றில் வகுப்பு வாரி பிரதிநிதித்துவ
ஆணை அரசியல் சட்டத்தில் 14-வது பிரிவிற்கு மாறுபட்டது
என்று கூறி செல்லத்தக்கதல்ல என்றும், மற்றும் சட்ட விரோதம்
என்றும் தீர்ப்பளித்தது. மேற்சொன்ன தீர்ப்பின் காரணமாக
அரசியல் சட்டம் 14 (4) பிரிவின்படி மாநில அரசுகள் பிற்பட்ட
மக்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம் என்பதாலும், தற்போது நடை
முறையில் இருக்கும் சுழல் ஒதுக்கீடு முறை 1951 ஆம் ஆண்டு
செப்டம்பர் திங்கள் 27-ம் நாள், பொதுத் துறையில் எண்.
2432 அரசாணையில் கொண்டு வரப்பட்டது. வகுப்பு வாரி
பிரதிநிதித்துவம் 14 காலி இடங்களை ஒரு யூனிட்டாக வைத்துக்
கணக்கிட்டு, சுழல் ஒதுக்கீடு முறையில் 20 காலியிடங்களுக்கு
ஒரு யூனிட்டாகக் கொண்டு அதில் 3 காலி இடங்களை அரிசன
பழங்குடியினருக்கும், 5 காலி இடங்களை பிற்பட்ட மக்களுக்கும்
ஒதுக்கீடு செய்துள்ளது. எஞ்சியுள்ள 12 இடங்களுக்கு தகுதி
அடிப்படையில் நியமனம் செய்ய வேண்டும். இந்த ஒதுக்கீடு
அரிசன பழங்குடியினருக்கு 15 சதவிகிதமும், பிற்பட்ட மக்க
ளுக்கு 25 சதவிகிதமும், தகுதியின் அடிப்படையில் நியமனம்
செய்ய 60 சதவிகிதம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1954-ம் ஆண்டு
இம்மாநிலம் பிரிக்கப்பட்ட பின்னால், அரிசன பழங்குடி மக்க
ளின் சதவிகிதம் 15.9, 0.04 என்று இருந்ததால், அவர்களுக்கு
05 சதவிகிதம் என்று இருந்ததை, 16 ஆக உயர்த்துமாறு இந்திய
அரசு தெரிவித்த ஒரு கருத்தை இம்மாநில அரசு ஆராய்ந்தது.
அதன்படியே அரிசன பழங்குடி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட
15 சதவிகிதம், 16 சதவிகிதம் ஆக உயர்த்தப்பட்டது.
அதோடு 20 இடங்கள் என்று இருந்தது 25 இடங்கள் என்று
உயர்த்தப்பட்டது. அந்த 25 இடங்களில் 4 இடங்கள் அரிசன,
தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், 6 இடங்கள் பிற்பட்ட மக்களுக்கும்,
எஞ்சிய 15 இடங்கள் தகுதியின் அடிப்படையிலும் நிரப்புவ
தற்கு வழி செய்யப்பட்டது. மேலும் பிற்பட்ட மக்கள் 25
சதவிகிதம் ஒதுக்கீடு பெறுவதற்கு ஒவ்வொரு 4 சுழலிலும்,
கடைசி முறை பிற்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்
என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

[மாலை 6.30]

மேற்கூறிய 30—12—1954-ம் நாளிட்ட பொதுத்துறை 2643
என்ற அரசாணை வெளியிடப்பட்டது. 1971-ம் ஆண்டு அரிசனங்
களுக்கும் பழங்குடி மக்களுக்கும் 16 சதவீதம், 25 சதவீதம்
என்றிருந்த ஒதுக்கீட்டு முறையானது 18 சதவீதம், மற்றும் 31
சதவீதம் என்று உயர்த்தப்பட்டது, இதன் காரணமாக நியமனம்
செய்யப்படுவதற்கான யூனிட் 25-லிருந்து 100 ஆக மாற்றப்
பட்டது,

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இம்மாநிலத்தில் அரசுப் பணிகளில் நியமனம் செய்வதைப் பொறுத்த வரையில் ஒதுக்கீடு முறைகள் ஆரம்பப்பணி பதவிகள் 22-வது பொது விதியின்கீழ் கொண்டுவரப்பட்டது. தற்போது நடைமுறையில் பின்பற்றப்படும் பொதுவிதி 22-ன்படி பதவி ஒதுக்கும் அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் 18 சதவீதமாகும்; பிற்பட்டோர் வகுப்பினருக்கு 31 சதவீதமாகும், எஞ்சிய 51 சதவீதம் பொதுத் தேர்வின்மூலம் நிரப்பப்படுகிறது. அதற்கு தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அரிசனங்கள் பழங்குடி மக்கள், பிற்பட்டோர் வகுப்பினர் தகுதி அடிப்படையில் பொதுத் தேர்வில் வந்தால் அவர்கள் பதவி ஒதுக்கீட்டுக் கணக்கில் வரமாட்டார்கள். சம்பந்தப்பட்ட பணியிடங்களுக்கு அறிவிக்கப்பட்ட சிறப்பு விதியின்கீழ் எல்லாப் பதவிகளுக்கும் நியமனம் செய்யப்படுகிறது. நியமனம் செய்யப்படுகின்ற பதவி இடங்கள் 25-க்கு மேற்பட்டிருந்தால் இவ்விதி பொருந்தும். வருவாய்த் துறையில் சில பதவிகளுக்கு மட்டும் அதாவது உதவியாளர், துணைத் தாசில்தார் பதவி உயர்வு அளிக்கப்படும் சமயங்களில் இந்த விதி பின்பற்றப்படுகிறது. கீழே குறிப்பிட்டுள்ள 5 வகை பதவிகளுக்கும் பணியாற்ற நியமனம் செய்யப்படும்போது இந்த பொதுவிதி பின்பற்றப்படுகிறது. தமிழ்நாடு நிர்வாகப் பிரிவு மாவட்ட துணை ஆட்சியாளர், தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் உதவிப் பொறியாளர் தமிழ்நாடு நில அளவை, நில பதிவேடு ஆவணங்கள் தனிமை அளவை உதவி இயக்குநர் தமிழ்நாடு நீதித் துறைப் பணிகள்—மாவட்ட நீதிபதிகள் நீங்கலாக தமிழ்நாடு வணிகவரித்துறை இணை அதிகாரிகள்—போன்றவைகள்.

பொதுவிதி 22-ல் கூறப்பட்டுள்ள பதவி ஒதுக்கீடு முறைகளில் பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவதை ஒவ்வொரு நிலையிலும் பின்பற்ற வேண்டுமா என்ற கருத்து 17-10-1977-ல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. மூதல் நியமனத்தின்போது தவிர, பதவி உயர்வு பெறும் ஒவ்வொரு கட்டத்திலும் பொதுவிதி 22-ல் கூறப்பட்ட வழிமுறைகள் பின்பற்றப்பட்டால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும் என்பதால் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் தற்போது பின்பற்றப்படும் முறையே போதுமானது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மேலும், 17-10-1977-ஆம் தேதிய அமைச்சரவைக் கூட்டத்தில் அரிசனங்கள் மற்றும் பழங்குடி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட பதவி இடங்கள் அவர்களைக் கொண்டு நிரப்பப்படாமல் இருந்தால் அத்தகைய இடங்களில் எண்ணிக்கை அடுத்தாண்டு கணக்கில் கொள்ளப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. உதாரணமாக நடைமுறையில் இவ்வாண்டு அரிசனங்கள், பழங்குடியினர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 இடங்களுக்கு அவர்களைக் கொண்டு

நிரப்பப்படாமல் இருந்தால் அடுத்தாண்டு அவர்களுக்கு ஒதுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கையுடன் இந்த 5 எண்ணிக்கையும் சேர்த்துக் கொள்ளப்படும். இதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன், இந்த கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

அடுத்து..........

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதில் சொல்லுகிறபோது தகுதி அடிப்படையில் விதிகளின்படி நியமனம் தருவோம் என்று புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறார்கள், நான் கேட்பது—மிகப் பின்தங்கியோர் பட்டியலை அங்கீகரிக்க முடியுமா என்று கேட்டேன். இந்த அரசு மிகப் பின்தங்கியோர் பட்டியலை அங்கீகரிப்பதற்கும் நலிந்தோர்க்கு தகுதி, திறமை என்ற அடிப்படையிலிருந்து சிறிது விதிவிலக்குத் தந்து அவர்களுக்கு முன்னுரிமை தருவதன் மூலம் "சோஷியல் ஸ்டேடசில்" பின்தங்கியவர்கள் முன்னேறக்கூடிய நடைமுறைகளைக் கையாளுமா என்பதற்கும் இந்த அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்த முறைகளைப்பற்றி நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு என்னிடம் பேசிய இதே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சனையைப்பற்றி மைய அரசுக்கு எடுத்துக் கூறவேண்டுமென்று கூறிய போது அவர்களுடைய கருத்தில் சில மாற்றங்களைச் சொல்லி, அவர்களுடைய நியாயமான உரிமை காக்கப்பட வேண்டிய வகையிலே சில குறிப்புகளை மைய அரசில் அப்போது பொறுப்பிலே இருந்தவர்களிடம் கொடுத்தோம். ஆனால் இப்போது அவர்கள் கேட்பது முழுக்க முழுக்க ஒட்டுமொத்தமாக அதை மாற்ற வேண்டுமென்று கேட்கும்போது தமிழக அரசு பொதுத் துறையில் எந்த அளவுக்கு அவர்கள் வருகின்ற அந்த வாய்ப்பு அந்த மக்களுக்கு கிடைப்பதற்கு எந்த வழிவகைகளைக் கையாண்டால் மற்றவர்களுக்கும் பாதகம் இல்லாமல் அவர்களுக்கும் நல்ல வாய்ப்பு கொடுக்க வழிவகை செய்யலாமோ அந்த வகையில் இந்த அரசு கவனம் செலுத்தும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு மார்க்கபந்து அவர்கள் கேட்டதைப் போல பிற்பட்ட மக்களுக்குள் 31 சதவீதம் அரசு ஒதுக்கி இருக்கிறது என்பது உண்மை. பிற்பட்ட மக்களுக்குள் மிக அதிகமான எண்ணிக்கை இப்போது சேர்க்கப்பட்டுவிட்ட காரணத்தால் அவர்களுக்கு, குறிப்பாக படையாச்சி, முக்குலத்தோர் போன்றவர்களுக்கு, அப்படி சமூதாய அடிப்படையில் இருப்பவர்களுக்கு ஜன விகிதாச்சார எண்ணிக்கை அடிப்படையில் உத்தியோகம் கொடுக்கப்படவில்லை

என்று பரவலாக மக்கள் வேதனைப்படுகிறார்கள். இது குறித்
நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கூட சொல்லி இரு
கிறேன். அந்த மக்கள் ஒரு உதாரணத்தைக் கூடச் சொல்லு
றார்கள். கடந்த காலத்தில் இருந்த அரசு முக்குலத்தோரு
இன்னின்ன பதவி கொடுத்தார்கள். குப்பிரண்டு பதவி கொடு
தார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே மெஜாரிட்டியாக இரு
க்கக்கூடிய அந்த மக்களுக்கு, வேறுபாடுகள் பல இருந்தாலும் கூ
டாமினேட்டட் மைனாரிட்டி

"Dominated mino.ity is exploiting large Share from amongst
the b..ckward communities"

என்ற நிலை இருக்கிறது. ஆகவே அந்த மக்களுக்கு நீதியைத்
தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u> : தலைவரவர்களே, உயர்நீ
மன்றம் ஏற்படுத்தப்பட்டு 110 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த
நீதிமன்றத்திலே வன்னியர் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்
பளிக்கப்படவேண்டும் என்று 1973 ஆம் ஆண்டு நான் சார்ந்திருக்
கின்ற உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக போராட்
டம் நடத்தப்பட்டது. வன்னியர் குலத்தைச் சேர்ந்த ஒருவர்
நீதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்று போராட்டம் நடத்
தது, அதற்குப் பிறகும் இப்படி 110 ஆண்டு பாரம்பரியம் உள்ள
உயர் நீதிமன்றத்திலே அந்தக் குலத்தைச் சேர்ந்தவர் எவருமே
நீதிபதியாக நியமிக்கப்படவில்லை. ஆகவே அந்தக் குறையை
இந்த அரசு நிவர்த்தி செய்யுமா என்று அறிய ஆவலாக இருக்
கிறேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : தலைவரவர்களே. திரு. மார்க்க
பந்து அவர்கள் அந்த குலத்தைச் சேர்ந்தவர்தான், ஆகவே அவ
ருக்கு நீதிபதி பதவி கொடுத்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u> : தலைவரவர்களே, அந்தச் சமு
தாயத்திற்கு நீதியைத் தாருங்கள் என்று கேட்கிறேனே தவிர
எனக்கல்ல.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : தலைவரவர்
களே, இதே பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு.
மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள்.
அவர்களும் சிபாரிசு செய்தார்கள். இங்கே நான் ஒன்றைக் கூற
விரும்புகிறேன். நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது ஜாதி
அடிப்படையிலே தேர்ந்தெடுக்க வேண்டுமா என்பதிலே, நியாய
மான அந்த உணர்வைத் தெரிவிப்பதற்கு நமக்கு உரிமை இருக்
கிறது என்று கருதுகிறேன். ஜாதியே வேண்டாம் என்று சொல்
கின்ற நாம் ஜாதியின் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக்

கொண்டு அதை ஏற்படுத்த வேண்டுமா என்று கேட்கும் போது இன்னொரு கேள்வியை இங்கே கேட்கவேண்டியிருக்கிறது. வகுப்பு வாதப் பிரிதிநிதித்துவத்தை ஒப்புக்கொண்டிருக்கிற நீங்கள் அதைச் செயல்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிற நீங்கள் அதை மறுக்கின்ற வகையில் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்பதற்குப் பதிலாக இந்தப் பிரச்சினையை அங்கே மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி ஏன் வற்புறுத்தக்கூடாது என்று கேட்க உரிமை இருக்கிறது. ஆனால் நான் குறிப்பிடுவது இந்தப் பிரச்சினை எவ்வளவு முக்கியமாக தமிழகத்திலே கருதப்படுகிறது என்பதற்கு உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியைச் சார்ந்த உறுப்பினரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. மதுராந்தகம் ஆறுமுகம் அவர்களும் குறிப்பிடுவதே பொருத்தமாகும். அவர்கள் இந்தக் கேள்வியை இங்கே கேட்டிருப்பதால் இது எவ்வளவு அவசியம் என்பது தமிழகத்தில் இருக்கின்ற மக்கள் மனதிலே எவ்வளவு தெளிவான ஒரு கேள்வியாக உள்ளத்திலே பதிந்து இருக்கிறது என்பதை மத்திய அரசு அறிந்துகொள்ள இந்த அவை நடவடிக்கை பயன்படும் என்று நான் கருதுகிறேன்.

<u>திரு. சி. ஆறுமுகம்</u> : தலைவரவர்களே, எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இருந்த காலத்திலே தான் பிற்படுத்தப்பட்ட மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை உணர்ந்து அவர்களுக்குரிய அந்த ஒதுக்கீடு 25 சதவீதத்திலேயிருந்து 31 சதவீதம் ஆகியது. திரு. சட்டநாதனுடைய அறிக்கையிலும் பின்தங்கிய மக்கள் எப்படி வாழ்கிறார்கள் அவர்களுக்கு எவ்வாறு சலுகை வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. 31 சதவீதத்திலேயிருந்து மேற்கொண்டு 10, 12 ஆகின்ற நேரத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது. ஆகவே இன்றைய முதல்வர் அவர்கள் அந்த அறிக்கையின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[மாலை 6·40].

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : அந்த அறிக்கையை நாங்கள் பரிசீலனை செய்வோம் என்று மட்டுமல்லாமல் சிலவற்றை நாங்கள் செயல்படுத்த வேண்டும் என்று விரும்புகிறோம், வரைவில் அவைகளை நாங்கள் அறிவிப்போம். இங்கே நீதிபதிகள், திரு. வேணுகோபால், திரு. சாமிக்கண்ணு, திரு. ரத்தினம், திரு. செங்கோட்டுவேலன், திரு. சண்முகம் இவர்களில் யாரும் வன்னிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. ஜாதி அடிப்படையில் நீதிபதிகள் நியமிக்கப்படுவதில்லை என்று நான் சொன்னது குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு இங்கே சொல்லப்பட்ட

பதில்களும்... அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசா
அவர்களுடைய கோரிக்கையும் வேறுவிதமாக அலட்சியப்படுத்
தாக இல்லை என்பதை நாங்கள் உண்மையாக
கிறோம். ஆனால் இப்படியே ஒவ்வொருவரும் ஏற்றுக்கொ
சமூகத்தைச் சேர்ந்தவர்களும் எங்களை பின்தங்கிய சமூகத்தி
சேர்த்துக்கொள்ளுங்கள், அல்லது தாழ்த்தப்பட்டவர்கள் அல்ல
மலைவாசிகள் வகுப்பில் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று கேட்
டால் முடிவில் தாழ்த்தப்பட்டவர்கள் மட்டும்தான் இருக்கிறார்
கள் என்று வந்தால் மகிழ்ச்சிதான், 100-க்கு 100 பேர்களும்
அப்படியேதான் என்பதை ஒத்துக்கொண்டால் பிரச்சினையே
இல்லாமல் போய்விடும். அந்தளவிற்கு வரும் என்று எதிர்
பார்க்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி
அவர்கள் இன்னொரு பிரச்சினையை எடுத்துக் கூறினார்கள்.
அவர்கள் பேசிய கருத்துக்களுக்கு பலவற்றிற்கு நான் பதில்
சொல்ல நேரம் இல்லாமல் இருந்தாலும் ஒன்றைக் குறிப்பிட
விரும்புகிறேன். சட்டம் ஒழுங்கு பிரச்சினைபற்றி நிறையப்
பேசியிருக்கிறார்கள். பேசியவர்கள், அவர்களது எண்ணத்தை
வெளியிடுகிறவர்கள் பதில் பெறவேண்டும் என்றோ அல்லது பதில்
கிடைக்காவிட்டாலும் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்த
வேண்டும் என்றோ உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைக்
கூறுகிறார்கள். ஆனால், பதில் கிடைக்காமல், நான் பதில்
சொல்ல மறந்துவிட்டால், அல்லது நேரமில்லை என்று நிறுத்தி
விட்டால் சில மாமன்ற உறுப்பினர்கள் எங்கள் கேள்விகளை
இந்த அமைச்சரவை முக்கியமாக கருதவில்லையா அல்லது அவை
களை முக்கியமாக எடுத்துக்கொள்ளவில்லையா என்ற கேள்விக்கு
நாங்கள் நிச்சயமாகப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.
ஆனால், அவனவருக்கும் பதில் சொல்லக்கூடிய நிலையில், பத்து
மணி நேரம் விவாதம் நடந்து கருத்துக்களை எடுத்துச் சொன்ன
வர்களுக்கு ஒன்றரை மணி நேரத்தில் பதில் சொல்லுங்கள்
என்று சொன்னால் அது எளிதாக முடியக்கூடிய காரியம் அல்ல
என்பதை நாம் உணருகிறோம். ஆனால், இனிமேல் இதற்கு
என்ன வழி என்பது பற்றி ஒரு நியாயமான முறையைக் கண்டு
பிடித்தால்கூட உதவியாக இருக்குமென்று கருதுகிறேன். பதில்
சொல்லாமல் போனால் உறுப்பினர்கள் வருத்தப்படுகிறார்கள்.
நாங்கள் இவ்வளவு தூரம் கருத்துக்களை சொன்னோமே
அவற்றிற்கு பதில் இல்லையே என்று வருத்தப்படுகிறார்கள்.
நேரில் கேட்காவிட்டாலும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கு
இருக்கிறது, ஊரில் இருக்கிறது என்பதை உணருகிறோம். அவர்
கள் தொகுதியில் இருப்பவர்கள் கேட்பார்கள், வாக்காளப் பெரு
மக்கள் கேட்பார்கள். நீங்கள் எவ்வளவோ சொல்லியும் பதில்
இல்லையே என்று கேட்பார்கள், நீங்கள் சொன்னதற்கு என்ன
பதில் வந்தது என்று கேட்பார்கள். சில பிரச்சினைகள் பற்றி
எடுத்துக் கூறப்படுகிறது. எல்லாவற்றையும் அக்கறையோடு

கவனித்துக் கொண்டிருக்கிற திரு துரை முருகன் அவர்கள் சொன்னதுபோல், பட்ஜெட்டில் வாய்ப்பு கிடைக்குமே அப்போது சொல்லுங்கள் என்று சொல்வார்கள்.

எங்கள் பேரில் நம்பிக்கையில்லை என்பதற்கான காரணங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த காரணங்களுக்கு நாங்கள் நியாயமாக அதற்கு உடந்தையாக இருப்பவர்களா என்பதை விளக்கியாக வேண்டிய கடமை இருக்கிறது என்கின்ற காரணத்தினால், சிலவற்றை படித்துக் காட்டி பேசுகிறேனே தவிர மேலவையில் சொல்லியதுபோல் இங்கும் சொல்லியிருந்தால், அந்த அளவுக்கு திருப்தி ஏற்படாது என்றாலும், பதில் சொல்லவில்லை என்ற எண்ணம் உருவாகக்கூடாது என்கிற காரணத்தால், இந்த அளவுக்கு விவரங்களை படித்துக்காட்ட வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன்.

இங்கு நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள், இந்த அவையில் தேவர் அவர்களுடைய அதாவது முத்துராமலிங்கத் தேவர் அவர்களைப்பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில், எந்த தியாகம் செய்த தலைவர்களையும் மதிக்காமல் ஒதுக்கி வைக்கவேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல, இராமநாதபுரம் மாவட்டம் என்றாலே அது மறவர் மாவட்டம் என்று பெயர் கொடுக்கப்பட்ட மாவட்டம் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அந்த முறையில் இந்த மாவட்டத்தை இரண்டாக பிரிக்கப்படும்போது, ஒரு பகுதி இராமநாதபுரம் மாவட்டம் என்றும் இன்னொரு பகுதி முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்றும் ஏற்படுத்தலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்றால் எங்களுக்கு மனநிறைவும் ஏற்படும் என்பதை குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். (கைதட்டல்) அதைப்போலேவே இந்த மாமன்றத்தில் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் உருவப் படத்தை திறந்து வைக்கவேண்டும். என்ற எண்ணம் எல்லோருக்கும் இருந்து அதை அரசு ஏற்றுக்கொண்டு உருவப்படம் திறந்து வைப்பதற்கான பணிகளை செய்து கொண்டிருக்கின்ற நேரத்தில் எல்லோரும் ஏற்றுக்கொண்டதுபோல் காயிதே மில்லத் அவர்களுடைய உருவப்படத்தையும், முத்துராமலிங்கத் தேவர் உருவப்படததையும் திறந்து வைக்க அரசு முன்வரும். இதையும் இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]]1979 பிப்ரவரி

இங்கு இன்னொன்றையும் சொல்ல ஆரம்பிப்பதற்கு முன்பாக
மாண்புமிகு திரு. கிட்டப்பா அவர்கள் முந்திக் கொண்டார்
அந்த உணர்ச்சி அனைவருக்கும் இருக்கின்ற காரணத்தால். இ
மன்றத்தில் ஐயா அவர்களின் உருவப்படமும் திறந்து வை
கப்படும் என்பதைமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இ
சட்டப் பிரச்னை பற்றி இங்கு குறை கூறியவர்களுக்கெல்லா
தரப்பட்டிருக்கின்ற பதில்களை முழுமையாக என்னால் படி
விளக்கம் தரமுடியாமல் அல்ல, உங்களால் கேட்டுக் கொண்
வேறு வேலைகளை விட்டுவிட்டு இருக்க முடியுமா என்கின்
ஐயம் இருக்கின்றது என்ற வகையில் இப்போது ஒத்
வைப்பதை—அதாவது கூட்டத்தை அல்ல—இந்த
பிரச்னைகளை—நாங்கள் கேட்டதற்கு பதில் சொல்லவில்லை
என்ற குற்றச்சாட்டுகளை என் மேல் போடாமல் கேட்டு
கொள்வதற்கு நேரம் இல்லாமல் போய்விட்டது என்பதை வெளி
யில் பேசுகின்றவர்கள் இந்த உண்மையைச் சொல்லவேண்டும்
என்று மாமன்ற உறுப்பினர்களை பணிவோடு கேட்டுக்கொள்
கிறேன். அதே நேரத்தில் சாதிக்பாட்சா அவர்கள் குறிப்பிட்ட
ஒரே ஒரு பிரச்னைக்கு மட்டும் விளக்கம் தர வேண்டியவனாக
இருக்கிறேன். அதாவது—

திருமதி சின்னம்மாள் ஈ-3 காவல் நிலையத்தில் காவல்
துறையினரால் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டதாக கொடுத்த
புகார் மீது சென்னை காவல்துறை உதவி ஆணை
யாளர் கொடுத்த அறிக்கை படிக்க விரும்புகிறேன். 1979 ஆம்
ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் நாளன்று மனுவில் குறிப்பிட்டுள்ள
சின்னம்மாள் சென்னை தேனாம்பேட்டையில் சுமார் 40 ஆண்டு
களாக கோழி வியாபாரம் செய்து வருவதாகவும், தேனாம்
பேட்டை காவலர்களுக்கு 2, 3 ரூபாய் மலிவு விலையில் கோழி
கொடுத்துவருவதாகவும், 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்
14-ம் நாளன்று காவலர்கள் வந்த போது, அன்றைய முன்தினம்
பொங்கல் தினமாக இருந்ததால் அதை முன்னிட்டு கோழிகளை
எல்லாம் விற்றுபோய்விட்டதால் அவர்களை திருப்தி செய்யமுடிய
வில்லை என்றும், இதனால் ஆத்திரமடைந்து 1979 ஆம் ஆண்டு
ஜனவரி மாதம் 20-ம் நாளில் தேனாம்பேட்டை சப் இன்ஸ்
பெக்டரும் மற்றும் காவலர்களும் ஒரு ஜீப்பில் வந்து ஐந்து
கோழிகளை பலாத்காரமாக எடுத்துச்சென்றதாகவும்
ஓட்டுநர் மனுதாரின் துணிப் பையில் இருந்த 37 ரூபாய்
எடுத்துக் கொண்டதாகவும், மற்ற காவலர்கள் கல்லாவிலிருந்து
50 ரூபாயை எடுத்துக்கொண்டதாகவும், பாங்கு பாஸ் புத்தக
இருந்த 1,000 ரூபாயை வேறு காவலர்கள் எடுத்துக்கொண்ட
தாகவும், தன்னை காவல் நிலையத்தில் அடித்ததாகவும்
விலக்கு குற்றம் சாட்டியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

[மாலை 6—50]

மனுதாரரின் மனு காவல்துறை ஆணையாளருக்கு அனுப்பப்
பட்டது, அதன்மேல் சைதாப்பேட்டை காவல் துறை உதவி
ஆணையாளர் விசாரணை செய்தார். அவர் தனது அறிக்
கையிலே கீழ்க்கண்ட விவரங்களைத் தெரிவித்துள்ளார்கள்;
இந்தக் கடை மனுதாரரின் சகோதருக்குச் சொந்தமானது. மனு
தாரர் அவருக்கு உதவியாக இருந்து வருகிறார். மனுதாரரு
டைய கடை தேனாம்பேட்டை காவல் நிலையத்தைச் சேர்ந்தது.
ஆனால் மனுதாரர் குறைந்த விலையில் கோழிகளை
காவலர்களுக்கு பொடுப்பதா மேலதிகாரிகளுக்கு புகார் செய்ய
வில்லை. மேலும், இந்தக் கடை 1978 ஆம் ஆண்டு அக்டோபர்
மாதம் 1-ம் நாளுக்கு முன் மாம்பலம் காவல் நிலைய ஆளுகைக்
குள் இருந்து வந்ததாகவும், 1978 ஆம் ஆண்டு அக்டோபர்
மாதம் 1-ம் நாளுக்குப் பிறகு தேனாம்பேட்டை காவல் நிலைய
ஆளுகைக்கு வந்ததாகவும் சொல்லப்படுகிறது. தேனாம்
பேட்டை காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் டி.எஸ். லட்சுமி
நாதன் என்பவர் காவலர்கள் சிலருடன் மதுவிலக்குக் குற்றங்
களை கண்டுபிடிப்பதற்காக சென்றபோது, சரோஜா என்ற
ஒருவரை கைது செய்து, மனுதாரரின் கடைக்குமுன்பு ஜீப்பில்
வந்த போது, மனுதாரர் சந்தேகப்படும் வகையில் சாக்குப்
பையை தூக்கிக் கொண்டு ஓடினார். அப்படி ஓடும்போது, கீழே
விழுந்து அடிப்பட்டது என்றும், அவர் கையில் வைத்திருந்த
சாக்குப் பையை சோதனையிட்டபோது 3 பிராந்தி பாட்டில்கள்
அகப்பட்டது என்றும், இந்த விவரங்களை யெல்லாம் இரு சாட்சி
களின் முன்னால் மகஜரில் எழுதப்பட்டு, மனுதாரரின் கை
யொழுத்து வாங்கப்பட்டது. உதவி கமிஷனர் ஸ்தலத்திற்குச்
சென்று, விசாரணை செய்தபோது, அப்போதும் மனுதாரர்
எந்தவிதமான ஆட்சேபணையும் சொல்லவில்லை. மனுதாரரின்
கடையைப் பார்க்கும்போது, அவரிடம் அவ்வளவு பெரிய
தொகை இருப்பதற்கும் நியாயமில்லை. ஜீப்பில் இருந்த
சரோஜாவும், காவல் துறையினர் மனுதாரரை அடிக்கவில்லை
என்றும் மறுத்திருக்கிறார். மனுதாரரும காவல்துறையினர்
தன்னை அடிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார். 1979-ம்
ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் நாளன்று மனுதாரரை
சைதாப்பேட்டை மாஜிஸ்திரேட்டு முன்பு ஆஜர் செய்தபோதும்,
காவலர்கள் தன்னை அடிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்,
அவரைச் சோதனை செய்த மருத்துவ அதிகாரியும் அவருக்கு
இடுப்பில் காயம் இருந்தது என்றும், அதுபற்றி மனுதாரரை
கேட்டபோது, தான் தவறி விழுந்ததாகவும், அப்போது அடி
பட்டதாகவும் கூறியிருக்கிறார். இதற்குமுன்பு மனுதாரர்
குற்றம் செய்யாதவரா என்று பார்க்கும்போது, இதற்குமுன்
5 பிராந்தி பாட்டில்கள் வைத்திருந்ததற்காக சைதாப்பேட்டை
கோர்ட்டிலே நீதிபதியால் ரூ. 150 அபராதம் விதிக்கப்பட்டு,

அபராதம் செலுத்தியுள்ளார். அந்த வழக்கிலே 'மனுதாரர் தன் பெயரை சின்னக்குழந்தை என்றும், இந்த வழக்கிலே பெயரை சின்னம்மாள் என்றும் தந்திருக்கிறார். இந்த வழக்குகளிலும் எடுக்கப்பட்ட கைரேகைகள் ஒன்றாக இருக்கின்றன. அக்கம்பக்கத்திலே உள்ளவர்களுக்கு கோழி பதாக பாவனை செய்துகொண்டு, குறிப்பிட்ட நபர்களுக்கு பிராந்தி விற்பனை செய்து வந்திருக்கிறார் என்கிற குற்றச் சாட்டுக்களை அதிகாரி தன் அறிக்கையிலே தந்திருக்கிறார்கள்.

இதற்குமேலும் ஓரளவு சொல்லலாம். நீங்களே இப்படிச் சொன்னால், கட்டளை பிறப்பித்தால், என்ன நடக்கும் என்பது தெரியாதா என்று சொல்வார்களானால், அதைப் பற்றி விசாரிக்க 'வேண்டுமென்று விரும்பினால், விசாரிக்கலாம். ஆனால், இப்படி திரும்பத் திரும்ப விசாரணை செய்கிறபோது, அதிகாரிகள் மேல் சந்தேகப்படுகிறோம், அவர்கள் மேல் நம்பிக்கை இல்லை என்ற ஒரு நிலை ஏற்படும். அதன் காரணமாக அதிகாரிகள் நியாயமாக தங்கள் கடமையை, உரிமையை எப்படிச் செய்வார்கள்? அவர்கள் தங்கள் நலனை எப்படி காப்பாற்றிக் கொள்வதற்கு செயல்படுவார்கள் என்பதையெல்லாம் நாம் சிந்தித்தாக வேண்டும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, நாங்கள் கொலைகளைச் செய்வதற்குத் தூண்டுகிறோம் என்றும், கொலைகள் அதிகமாகி விட்டது என்றும், இங்கே சட்டம் ஒழுங்கு இல்லை என்றும் சொல்லப்படுகிறது. பலர் அப்படி சொல்வதுமுண்டு. மாமன்ற உறுப்பினர்கள் சிலர் வேறு விதமாகவும் கூறுவதுண்டு. உண்மையிலேயே, அவ்வப்போது பத்திரிகைகளிலே வருகின்ற பொய்யான தகவல்களை, உண்மைக்கு மாறான தகவல்களை வைத்துக்கொண்டு இப்படிச் சொல்கிறவர்களும் உண்டு. உண்மையிலேயே, எனக்குக் கிடைத்துள்ள புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, எனக்கு ஐயப்பாடு தான் ஏற்படுகிறது.

முதலில், பொதுக் கூட்டங்களுக்குச் செல்லும்போது நாம் உயிரோடு திரும்பி வருவோமா என்ற அச்சம் ஏற்படுகின்ற வகையில் இன்றையதினம் நாடு இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். இது சம்பந்தமாக, இங்கே நான் ஒரு புள்ளி விவரத்தைக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் நடந்த பொதுக்கூட்டங்களின் எண்ணிக்கை 1974-ஆம் ஆண்டு 17,896; 1975 ஆம் ஆண்டு 14,397; 1976-ஆம் ஆண்டு 2,328; 1977-ஆம் ஆண்டு 12,953; 1978-ஆம் ஆண்டு இதுவரை 18,737. ஆக, தேர்தல் நேரங்களை

விட இப்போது கூட்டங்கள் அதிகமாக நடைபெறுகின்றன என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அப்படியானால் பொதுக்கூட்டங்களுக்குத் தடைகள், பொதுக்கூட்டங்களுக்கு இடைஞ்சல்கள் அல்லது ஏதோ நடைமுறைகளில் தடங்கல்கள் ஏற்படுத்துகிறார்கள் என்று சொல்வது இந்தப் புள்ளி விவரங்களோடு எப்படி ஒத்து வருகின்றன என்பதை அனுபவம் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கூட்டங்களின் எண்ணிக்கை என்று பார்க்கும்போது அதிகமாக வரும். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் கூட்டம் நடக்கும்போது இரவு 10 அல்லது 10–30 மணிக்கு ஒலிபெருக்கியை எடுத்து விடுவார்கள். ஆளும் கட்சிக்கு இந்த மணி வரையறை கிடையாது. இரவு 12 மணி 1 மணிவரை நடக்கிறது. இரண்டும் கூட்டம் தான். இதுவும் ஒரு கூட்டம், அதுவும் ஒரு கூட்டம். எண்ணிக்கைகளை வைத்து பொதுவான வாதம் செய்கிறபோது குறைபாடுகளுக்குத் தக்க விளக்கம் கிடைக்காது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட்டம் 12 மணி வரை நடைபெறுகிறது என்றும் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட்டம் 10 அல்லது 10–30 மணிக்கு நிறுத்தப்படுகிறது என்றும் மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர், துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது— நாங்கள் உத்தரவிட்டு அது எங்காவது பின்பற்ற மறுத்து ஆட்சிக் கட்சியினருக்குச் சலுகை காட்டும் வகையில் எந்த அதிகாரிகளாவது நடந்து கொண்டால் அதைத் தயவு செய்து ஆதாரத்தோடு காண்பிப்பார்களானால் நான் நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டேன். அப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இந்தப் பதவியில் இருக்கமாட்டேன் என்பதை இங்கே உறுதிப்படுத்த விரும்புகிறேன். அந்த அளவுக்கு ஆதாரத்தோடு சொல்லப்பட்டால் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பேன் என்பதை உறுதிப் படுத்துகிறேன்.

சட்டம், ஒழுங்கு என்பது பற்றியும், கலவரம், கொலை என்பது பற்றியும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1972-ல் 2,849 கலவரங்கள். 879 கொலைகள்; 1973-ல் 3,462 கலவரங்கள், 912 கொலைகள்; 1974-ல் 2,679 கலவரங்கள், 937 கொலைகள்; 1975-ல் 1,826 கலவரங்கள், 853 கொலைகள்; 1976-ல் இங்கே கணக்கு இல்லை; 1977-ல் 2,520 கலவரங்கள், 628 கொலைகள். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்— இந்தக் குறிப்பைத் தந்திருப்பவர்கள் எங்க

களுக்குச் சாதகமாகத் தந்திருக்கிறார்கள் என்று கருத
மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இந்தப் புள்ளி விவரங்
களை எல்லாம் நான் குறிப்பிடும்போது இதற்கு யார்
காரணம்; ஆட்சியாளர்கள் செய்கிறார்கள் அல்லது ஆட்சிக்
கட்சியில் இருப்பவர்கள் செய்கிறார்கள் என்ற விவாதத்தில்
இறங்காமல் நாங்கள் வந்த பிறகு சட்டம் ஒழுங்கு குலைந்து
விட்டது, பாதுகாப்பு இல்லை என்ற நிலைமையில் இந்தப் புள்ளி
விவரங்கள் நிச்சயமாக இந்த அரசு எந்த அளவுக்குத் தங்களு
டைய கடமையைச் செய்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்
பிட்டுக் காட்டுகிறது.

அதே நேரத்தில் 1977ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி—
தமிழகத்தில் கொலைகள் 668 ; ஆந்திரத்தில் 1,143 ; கர்
நாடகத்தில் 806 ; கேரளத்தில் 351 ; பீகாரில் 1,793 ;
மத்தியப் பிரதேசத்தில் 1,864 ; மகாராஷ்டிரத்தில் 1,855 ;
உத்திரப் பிரதேசத்தில் 4,844 ; மேற்கு வங்கத்தில் 872

[இரவு—7.00]

நான் எனது மதிப்பிற்குரிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூ
னிஸ்ட் கட்சி உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்
கிறேன். இங்கே சட்டம், ஒழுங்கு இல்லை என்று சொல்கிற
நீங்கள் மேற்கு வங்கத்திலே 872 கொலைகள், தமிழகத்திலே
668 கொலைகள்—இது கணக்கிட்டுப் பார்த்து பெருமைப்
பட்டுக்கொள்ளக்கூடியதல்ல, இந்தக்கொலைகள் நடக்காமலிரு
ந்தால் தான் சரியான ஆட்சியை நாங்கள் நடத்துகிறோம் என்று
சொல்லமுடியும், கொலை எண்ணிக்கையைக் காட்டுவதால் சரி
யாக ஆட்சி நடத்துகிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்
ளவோ அல்லது தப்பித்துக் கொள்ளவோ இல்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். இந்த எண்ணிக்கையைப் பார்க்கிற
போது அரசுக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது, எப்படி பணி
யாற்றுகிறது என்பதை பொது மக்கள் புரிந்து கொள்ளமுடியும்
என்பதற்காகச் சொல்லுகிறேன். காவல் துறையில் 100 சதுர
கிலோ மீட்டருக்கு எத்தனை போலீஸார்கள் இருக்கிறார்கள்
என்பதை சில மாநிலங்களிலே உள்ள நிலைமையின் புள்ளிவிவ
ரங்களைத் தருவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாநிலம்.	100 சதுர கிலோ மீட்டருக்கு போலீஸாரின் எண்ணிக்கை.
(1)	(2)
மேற்கு வங்காளம்	76.4
உத்திரப் பிரதேசம்	46.2
பஞ்சாப்	49.2
கேரளா	50.7
தமிழ்நாடு	33.0

இதை நான் இங்கே குறிப்பிடும்பொழுது ஒன்றை வற்புறுத்
திக் கூற விரும்புகிறேன். இந்த நிலையில் எண்ணிக்கை
அதிகப்படுத்தப்பட்டதா இல்லையா, 10 ஆயிரம் பேர்களைப்
புதிதாகச் சேர்ப்போம் என்று சொன்னீர்களே என்ன ஆயிற்று என்று
கேட்கிறபொழுது நாங்கள் அறிவித்தபொழுது பத்திரிகைகளிலே
வெளியிட்டார்கள், தங்கள் ஆட்களை குண்டர்களைச் சேர்ப்
பதற்கு திட்டமிடுகிறார்கள் என்று பத்திரிகைகளிலே படித்தேன்.
நாங்கள் அதை அறிவித்தபொழுது எந்த அளவிற்கு எங்களைப்
பற்றிச் சந்தேகப்படுகிறார்கள் அல்லது குறை கூறுகிறார்கள்,
எங்களிடம் குற்றம் காணுகிறார்கள் —குற்றம் காண்கிறவர்கள்
இருந்தால் எங்களுக்கு நல்லது தான்—நாங்கள் தவறு செய்
தால் எச்சரிக்கை செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். குறை
காணுகிறவர்கள் எவ்வளவு அதிகமாக இருக்கிறார்களோ
அவ்வளவு அதிகமாக எங்களுக்கு பாதுகாப்பாக
இருக்கும் என்று எங்களுக்குத் தெரியும். ஒரு எண்ணத்
திற்கு, ஒரு காரியத்திற்கு நாங்கள் வடிவம் கொடுக்க
முயற்சிக்கிறபோது அவர்கள் அதைப்பற்றி சந்தேகக் கண்
கொண்டு பார்க்கிறார்கள், திறனாய்வு செய்கிறார்கள் என்
றால் நாங்கள் மற்றவர்களின் சந்தேகத்திற்கு ஆளாகாமல் நாட்டு
மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே
எந்த அளவிற்குச் செய்வது என்பதிலே சட்டப் பிரச்சினைகள்
எல்லாம் வருகின்றன சட்ட வல்லுநர்களை தேடவேண்டி
யிருக்கிறது என்ற நிலைமையையும் எடுத்துக் காட்ட விரும்பு
கிறேன்.

புதிதாக ஒரு திட்டத்தைக் கொண்டுவரலாமா என்று
யோசித்துக் கொண்டிருக்கிறோம், காவல் துறையை மூன்
றாகப் பிரிக்கலாமா என்று. ஒன்று மதுவிலக்குத் தொடர்
பான வழக்குகள், வன்முறைகள், கலவரம், குற்றங்கள்
போன்றவைகளைக் கட்டுப்படுத்துவதற்கு. இன்னொன்று,
நிர்வாகத்தைக் கவனித்து ஆங்காங்கே மக்களுக்குப் பாதுகாப்பு
கொடுக்கிற பணிகள், அது தொடர்பான வழக்குகளை மேற்
கொள்வது ஆகிய இந்த மூன்று பிரிவுகளாக காவல் துறையைப்
பிரிக்கமுடியுமா என்று திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறோம்.
அவர்களைக் கேட்டிருக்கிறோம், அதற்காகக் காத்து இருக்
கிறோம். அதற்கான திட்டங்கள் கையில் கிடைக்கும்பொழுது
அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தி, 4½ கோடி மக்கள்,
4 கோடியே 15 லட்சம் மக்கள் என்று சொன்னாலும் சரியான
புள்ளிவிவரம் நமக்குக் கிடைக்காவிட்டாலும் அங்கே 76.4
என்று சொல்லி அத்தனை கொலைகள் விழுகிறது என்ற நிலை
யிலே 33.0 என்ற நிலையில் 668 கொலைகள் என்று சொன்னா
லும் எண்ணிக்கையை இன்னும் குறைத்து, மக்களுக்கு பாது
காப்பு தருகிற வகையில் எப்படியெல்லாம் திறம்பட பொது
மக்களுக்குப் பயனுள்ள பணியாக அமைக்க முடியும் என்பதைப்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி

பற்றி நாங்கள் ஆர்வத்தோடும் அக்கறையோடும் செய
படுகிறோம். இந்த நேரத்திலே மாமன்ற உறுப்பினர்கள் நிச்ச
படுக சந்தேகப்பட மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அதே நேரத்தில், நான் இதிலே அதிகமாக நீட்டிக்கொண்டு
போக விரும்பவில்லை. நாட்டுடைமையாக்கும் கொள்கை
யைப் பற்றிப் பலர் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக மாண்பு
மிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் 1977-ஆம் ஆண்டு மானிய
கோரிக்கைகள் மீது பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கிறார்கள்.
"தேசியமயமாக்கப்படுவதை நான் எதிர்க்கவில்லை. போக்கு
வரத்துக் கழகங்களில் நிறைய பஸ்களும், தனியார் இடத்
திலே சில பஸ்களும் இருக்கின்றன. தனியார்கள் என்று
சொல்லப்படுகின்றபோது, சிறிய அளவில், 3, 4, 5 பஸ்கள்
வைத்திருப்பவர்களும் இருக்கிறார்கள். அன்றைய தினம் ஆளும்
கட்சியிடம் கம்யூனிஸ்டு கட்சியினர் பல்வேறு மனுக்களைக்
கொடுத்திருக்கிறார்கள். அப்படி சில பஸ் முதலாளிகளுக்கு
பாதுகாப்பு கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை.
அவர்கள் தொழில் நசிந்து போக வேண்டுமென்றும் நான் சொல்ல
வில்லை. கேரளாவிலே நேஷனலைஸ் செய்து, பின்னர் டீ-நேஷன
லைஸ் செய்திருக்கிறார்கள். செக்கோஸ்லெவக்யாவிலும் அதே
மாதிரி செய்திருக்கிறார்கள். குஜராத், மகாராஷ்டிராவிலே,
பஸ்களின் எண்ணிக்கையைக் குறைத்து, பஸ்களின் டாப்களின்
மேலே, எல்லாம்கூட ஆட்களை ஏற்றிச் செல்கிறார்கள். ஆகவே,
சிறிய அளவிலே பஸ்கள் என்ற அளவிலே, 2, 3 பஸ்கள் வைத்துக்
கொண்டு, அந்தத் தொழிலிலே அவர்கள் குடும்பத்திலே ஒருவர்
டிரைவர், மற்றொருவர் கண்டக்டர், இன்னொருவர் மானே
ஜர் என்ற முறையிலே ஒரு குடும்பமே அதை நடத்திக்கொண்டு
வருகிறது. அப்படிப்பட்டதை எடுத்துக் கொண்டால் அந்தக்
குடும்பமே தெருவிலே போகக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும்.
இவ்வாறு அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதுபோன்று பல்
வேறு மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
நாங்கள் 5 பஸ் என்று சொல்லாமல் என்ன செய்வது என்று
யோசித்து முடிவு எடுப்பதற்கு முன் எத்தனையோ பிரச்சனை
களை இங்கே சொல்லி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவ
ரவர்கள் இங்கே சில குற்றங்களைக் கூறி அவைகளைப் பற்றி
எடுத்து வைத்து, காலையிலே கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஒரு
சில கேள்விகளுக்காவது நான் கட்டாயம் பதில் தரவேண்டிய
அவசியம் இருக்கிறது என்பதையும். அவைகளை இங்கே குறிப்
பிடுவதற்கு முன்னால் நாட்டுடைமைப் பேருந்துகளைப் பற்றி
ஒரு சில கணக்குகளை இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று
கருதுகிறேன். மேற்கு வங்கம் 15·8 சதவீதம். கேரளம்
சதவீதம். தமிழகம் 53 சதவீதம். ஆகவே, நாட்டுடைமையைப்
பற்றி யார் என்னென்ன பேசுகின்றார்களோ. அந்தக் கட்சியிலே

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இருப்பவர்கள் ஆட்சி செய்கின்ற அந்த மாநிலங்களை விட தமி
ழகத்திலே சதவீதம் அதிகமாக நாட்டுடைமைப் பேருந்துகள்
ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்,

இங்கே மாண்புமிகு உறுப்பினர் எம்.ஏ. லத்தீப் அவர்கள்
1977 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்
பொழுது பேசிய குறிப்பினை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்,
"சர்க்கார் துறைக்குகொடுக்கப்படுகின்ற அத்தனை சலுகைகளும்
தனியார் துறைக்கு கொடுத்தால் தான் ஒரு துறை நன்கு செயல்
பட முடியும். இல்லாவிட்டால், இன்றைக்கு சாதாரணமாக
ஒரு பஸ் அல்லது 2, 3, 5 பஸ்கள் வைத்துக் கொண்டிருப்பவர்
கள் எங்கே இருக்கின்றார்கள் என்று சொன்னால். அவர்களுக்கு
போடப்படுகின்ற வரிகளின் காரணமாகவும் கொடுக்கப்படு
கின்ற நெருக்கடிகளின் காரணமாகவும். தொல்லைகளின் காரண
மாகவும் அவர்கள் எல்லோரும் மார்வாடிக் கடைகளிலேதான்
இருக்கிறார்கள், மார்வாடிகளிடம் கடன் வாங்காத ஒரு பஸ்
அல்லது 2, 3 பஸ் அதிபர்கள் யார் என்று சொன்னால் அவர்களை
தேடித்தான் பார்க்க வேண்டும், மார்வாடிகளிடம் அவர்கள்
இன்றைக்கு அடகு வைக்கப்பட்டிருக்கின்ற நிலையில்தான்
அவர்கள் இருக்கிறார்கள், ஆகவே. அவர்களுக்கு எந்த வகை
யிலே சலுகைகள் கொடுக்க வேண்டுமென்பதை இந்த அரசு
சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன். " என்று அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

அதுபோலவே இன்னொரு இடத்தில். ஒட்டுமொத்தமாக
தேசியமயமாக்கினாலும் கூட இந்த அரசுக்கு ஆபத்தைத்தான்
விளைவிக்கும். இதையும் அரசு கவனத்தில் வைத்துக் கொள்ள
வேண்டும். எல்லாவற்றையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் வைத்துக்
கொண்டால் ஏதாவது காரணம் கூறி தொழிலாளர் வேலை
நிறுத்தம் என்று சொல்லும் பொழுது இந்த நாடே ஸ்தம்பித்துப்
போய் விடும். ஆகவே சில இடங்களை தனியாருக்குக் கொடுங்
கள், நாட்டுக்கு நல்லது என்ற கருத்தையும் சொல்லியிருக்கி
றார்கள்.

[இரவு 7-10]

நண்பர் மாண்புமிகு திரு. புஷ்பராஜ் அவர்களும் அதேபோல்
ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்,

சிறந்த நிர்வாகத்துடன் அமைக்கப்பட்ட பேருந்துஊர்தி
களின் சேவைகளைப் பெற வேண்டுமானால் குறைந்தது 5
பஸ்களாவது கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்,
தேசியவுடைமையாக்கப்பட்ட சிறிய பஸ் உரிமையாளர்களுக்கு
பிரச்னைகள் எழும்போது அவர்கள் பாதிக்கப்படாமல்
இருக்கவும், போதுமான சேவை செய்யவும் குறைந்தபட்சம்

5 பஸ்கள் என்ற முறைப்படியாவது அவர்களுக்கு சலுகை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதாகச் சொல்லி யிருக்கிறார்கள். அதே சமயம் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த அன்பர் கோவிந்தராசன் அவர்கள், தேசிய மயமாக்கக்கூடிய கொள்கையை நாங்கள் என்றைக்கும் வரவேற்கக் கூடியவர்கள் என்பது அரசுக்குப் புரியும்; 1968 ஆம் ஆண்டில் 120மைலுக்கு அப்பாலுள்ள வழித்தடங்கள் எல்லாம் நாட்டுடைமை ஆக்கப்பட்டன, 1977-ல் 7.5மைலுக்கு அப்பாலுள்ள வழித்தடங்கள் எல்லாம் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இடைக் காலத்தில் வழித்தடங்களில் ஏற்பட்ட மாற்றத்தை தனியார் துறையில் இருக்கக்கூடியவர்கள் விரும்பவில்லை. அவைகளை முறையாக நடத்துவதற்கு அரசு சில பஸ்களை விட்டு வைக்க வேண்டும். இன்றைக்கு 16 மைலுக்கப்பால் உள்ள வழித்தடங்கள் என்று கொண்டு வந்தால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். மூன்று நான்கு பஸ்களை வைத்துக் கொண்டிருக்கும் உரிமையாளர்கள் ஒரு குறிப்பிட்ட பஸ்ஸை மட்டும் வைத்துக் கொள்ளலாம் என்றால் நாட்டுடைமை ஆக்கப்படுவது பொருத்தமாக இருக்கும், ஆகவே பஸ் உரிமையாளர்களுக்கு இந்தச் சலுகையை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், என்று சொன்னார்கள். இடைக் காலத்தில் இரண்டு மூன்று பஸ் வைத்துக் கொண்டிருப்பவர்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பிறகு அதனால் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக எகனாமிக்கலாக நிர்வாகம் செய்வதற்கும் ஒரு குறிப்பிட்ட வழித்தடத்தை அவர்களுக்கு கொடுத்து விட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். அதே போல் இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு திரு. அம்பிகாபதி அவர்கள் இதையே '77 பட்ஜெட்டில் மட்டும் இல்லை இந்த பட்ஜெட்டிலும் பேசியிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், 1970-ல் 10 பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்திருந்தது. பிறகு அதிலே மாற்றம் ஏற்பட்டது. இந்த அரசைப் பொறுத்த வரையில் எகனாமிக்கலாக பராமரிக்கக் கூடிய அளவுக்கு. கட்டுப்படியாகும் நிலையில் பஸ்களை அவர்கள் வைத்துக்கொள்ளலாம்,

திரு. அம்பிகாபதி அவர்கள் குறிப்பிட்டார்கள், 15 லட்சம் ரூபாய் முதலீட்டு நிதியிருந்தால் ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் என்று இருக்கிறது, அதனால் 15 லட்சம் ரூபாய் என்ற அளவிற்கு பஸ்ஸை வைத்துக் கொண்டால் அதையும் ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் என்ற அளவில் ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது என்று சொல்லி அதையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இவைகளையெல்லாம் இங்கே நான் குறிப்பிட்டுக் கூறுவதற்கு காரணம் யாரோ பஸ் அதிபர்களிடம் 22 லட்சம் 20 லட்சம் கையூட்டு வாங்கினார்களாம், எங்கள் மீது சந்தேகம் இருக்கிறது என்

சொல்லியிருக்கிறார்கள், இன்றைக்கு காலையில்கூட மாண்புமிகு கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அதைப் பற்றி எல்லாம் விவரமாகச் சொல்ல நேரம் இல்லை.........

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக முதல் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன், அவர் பதில் சொல்வதற்கும் வசதியாக இருக்கும். பஸ் முதலாளிகளிடத்திலே 1½ கோடி ரூபாய், தியேட்டர் முதலாளிகளிடத்திலே 17 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கப்பட்டு இருப்பதாக குற்றச்சாட்டு. இதை நீதி விசாரணை வைத்து தீர்ப்பதாயிருந்தால் நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன், ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன, முதலமைச்சர் அவர்கள் நீதி விசாரணைக் குழு வைக்கத் தயாரா என்று கேளுங்கள், எங்கள் கட்சியின் சார்பாக நிரூபிக்க தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதுபோல் பேசிப்பேசி இந்த நாட்டிலே ஒரு உண்மையை சொந்தமாக்கி நாங்கள் ஆட்சிக்கு வந்தவர்கள் என்பதை மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் மறந்து இருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் விசாரணை வேண்டும் என்று சொல்வதை விட்டுவிட்டு, அதை இங்கே சொல்லி விட்டால் நானே நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தவறு நடந்து இருக்கிறது என்பது இங்கே மறுக்கப்பட்டு இருக்கிறது. நீதி விசாரணை வைத்தால் நிரூபிக்கத் தயார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அப்படியானால் பிரச்னை இங்கே இல்லை. கவர்னர் இடத்தில் இருக்கிறது. நான் பதில் சொல்லவில்லை என்கிறீர்கள். கவர்னர் மத்திய அரசுக்கு அனுப்பி அவர்கள் என்ன செய்கிறார்களோ அது வரையில் காத்து இருக்க நான் தயார்.

திரு. அ. ரகுமான்கான் : விசாரணை கமிஷன் வைக்கப்பட்டால்தான் சம்பந்தப்பட்டவர்கள் வந்து சாட்சி சொல்ல வசதியாக இருக்கும். ஆகவேதான் விசாரணைக் கமிஷன் வைக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். முதலமைச்சர் அவர்கள் ஆரம்ப காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது குற்றச்சாட்டு சொல்கிறபோது கூட விசாரணை கமிஷன் வேண்டும், அதுவும் வேறு மாநிலத்தில் இருந்து நீதிபதி வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன். இது பிரேமா கொலை வழக்கில் சாட்சியம் இருக்கிறது என்று சொன்னதுபோல் ஆகிவிடக்கூடாது. தாங்கள் பொறுமையோடு இருக்க வேண்டும். கவர்னரிடத்தில் மனு கொடுத்து இருக்கிறீர்கள். அவர் என்ன செய்கிறார் என்பதை நாங்கள் எதிர்பார்த்து காத்து இருக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் எதைச் சொன்னாலும் அதைச் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, தயவு செய்து நான் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், உங்களுடைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறி அந்தப் பிரச்னையை நாடாளுமன்றத்தில் எடுத்துச் சொல்லச் சொல்லி, மத்திய அரசை விசாரணை கமிஷன் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று வலியுறுத்தச் சொல்லுங்கள்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, நான் அவ்வளவு தூரம் போக விரும்பவில்லை. நான் முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்கிறேன். பஸ் அதிபர்களிடத்தில் பணம் வசூல் செய்யப்பட்டு இருக்கிறது. தியேட்டர் முதலாளிகளிடத்தில் லட்சக்கணக்கில் வசூல் செய்யப்பட்டு இருக்கிறது. பெட்டிக்கடைக்காரர்களிடத்தில் பணம் வசூல் செய்யப்பட்டு இருக்கிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். திரு. ரகுமான்கான் சொன்னதையே நீங்களும் திரும்பச் சொல்ல நேரம் இல்லை.

THIRU. DURAI MURUGAN : Please allow me to h've my s'y Let the Hon. Chief Minist r corr ct me, if I am wrong.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். நேரம் இல்லை. அவர் சொன்னதையே நீங்களும் திரும்பச் சொல்லத் தேவையில்லை.

திரு. துரை முருகன் : வசூல் செய்யவில்லை என்று சொல்கிறார்களா என்று மட்டும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விசாரணைக்கும் தயார் என்று சொல்லிவிட்டார். ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு கோணத்தில் கேட்பது முறையல்ல.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, விசாரணை கமிஷனுக்குத் தயாரா என்று கேட்க விரும்புகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயார் என்று சொல்லியிருக்கிறார், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் மறுபடியும் சொல்கிறேன். மத்திய அரசு எந்த முடிவு எடுத்தாலும் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: முதலமைச்சர் அதை மறுக்கிறாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மறுப்பதாகத் தான் அர்த்தம். விசாரணை கமிஷன் வரட்டும் என்றால் விசாரணை கமிஷன் வேண்டாம் என்றா பொருள்.

(திரு. துரை முருகன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே வாக்குவாதம் வேண்டாம். ஒன்றைக் கேட்டீர்கள், அதற்கு பதில் சொல்லி விட்டார். அதை விவாதம் ஆக்கும் வகையில் நீங்கள் எழுந்து பேசுவது கூடாது, உட்காருங்கள்.

[இரவு 7-20.]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, காலையில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் பேசும்போது குற்றப்பரம்பரைச் சட்டம் எப்போதோ நீக்கப்பட்டுவிட்டது ! அவர் மக்களிடத்திலே தவறான தகவலைச் சொன்னார்கள் ; அவர்களும் நம்பினார்கள், பாவம் ; எப்படியோ அவர்களுடைய வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்து விட்டார்கள் ; உண்மைக்கு மாறான வாக்குறுதிகளை கொடுத்து ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என்று கூறினார்கள். ஏனென்றால் நாங்கள் மக்களை ஏமாற்றிவிட்டோம் என்று அவர்கள் நம்பினார்கள்.

எனக்குக் கிடைத்த தகவலை, கிடைத்த குறிப்புகளை வைத்துத் தான் நான் கூறினேன். அது அல்லாமல் நான் சட்டத்தை தெரிந்து குடித்தவன் அல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதை அவையடக்கம் என்ற முறையில் எடுத்துக் கொண்டாலும் சரி அல்லது உண்மை என்று எடுத்துக் கொண்டாலும் சரி, ஒரு விளக்கத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1924-ல் இயற்றப்பட்ட குற்றப்பரம்பரைச் சட்டம் ஏற்கனவே 1952-ல் நாடாளுமன்றத்தால் ரத்து செய்யப்பட்டுவிட்டது. எனினும் 1948-ல் மாநில சட்டசபையில் இயற்றப்பட்ட 'வாடிக்கை குற்றவாளிகள் சட்டம் 1948' அமலில் இருந்து வருகிறது. ஆகவே, நடைமுறையில் இல்லை என்றாலும் அந்தச்சட்டத்திலே சில மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சட்ட நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். சட்ட அமைச்சரவர்களும் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலேதான் நான் பேசினேனே தவிர, அதையெல்லாம் மக்களுக்குச் சொல்லி ஆட்சிக்கு வரவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சந்தேகப்பட்டதைப் போல உண்மைக்கு மாறானவற்றைச் சொல்லி நாங்கள் ஆட்சிக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே கப்பல் சம்பந்தமாக அவர்கள் கூறி, அவர்களுக்கு உரித்தான வகையில் சில குறிப்புகளை எடுத்து வைத்தார்கள். எனக்குக் கிடைத்திருக்கிற தகவலை இங்கே நான் வெளியிடலாம் என்று கருதுகிறேன்; கொடுக்கப்பட்ட தகவலைப் படிக்கிறேன்.

642, 643 என்ற இரண்டு பால்டிகா கப்பல்களை 16.55 மில்லியன் டாலருக்கு வாங்கித் தருவதாக சிங்க்ளியர் கம்பெனி 21—7—1978-ல் டெலக்ஸ் மூலம் தெரிவித்தார்கள். 7 கிரேயின்கள் 25 டன் பளு தூக்கும். பூம்புகார் கப்பல் கார்ப்பரேஷன் 5—7—1978-ல் இந்த இரண்டு கப்பல்களையும் 15.5 மில்லியன் டாலருக்கு வாங்கித்தர முடியுமா என்று கேட்டது. 17—8—78-ல் அதே சிங்க்ளியர் கம்பெனி 18.5 மில்லியன் டாலருக்குத்தான் வாங்கித்தர முடியும் என்று அறிவித்தார்கள்.

மேலும் 4—9—78 ஆம் தேதியன்று அவர்கள் கப்பலில் பொருத்தப்படும் கிரேயின்கள் முன்னால் தெரிவித்தமாதிரி 25 டன் பளு தூக்கும் 7 கிரேயின்கள் அல்ல என்றும் அவை 20 டன் பளு தூக்கும் 5 கிரேயின்கள் என்றும் சொன்னார்கள். அதோடு தவறான தகவல் தந்ததற்காக தங்களுடைய வருத்தத்தையும் தெரிவித்தார்கள். பிறகு இதே சிங்க்ளியர் கம்பெனி 17—10—78-ல் 20 டன் பளு தூக்கும் 5 கிரேய்ன்களுடன் முதல் கப்பலை 10.14 மில்லியன் டாலருக்கும், இரண்டாவது கப்பலை 10.27 மில்லியன் டாலருக்கும் ஆக இந்த இரண்டு கப்பல்களையும் 20.41 மில்லியன் டாலருக்கு ஆக்போல்டன் மூலம் வாங்கித் தருவதாகக் கூறினார்கள்.

மேலும் கிரேய்ன்கள் பொருத்துதல் முதலியவற்றுக்கு சுமார் 2 மில்லியன் டாலர் அதிகமாகும். தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு 20 டன் பளு தூக்கும் 5 கிரேய்ன்கள் உள்ள கப்பல்கள் போதாது என்ற காரணத்தால் அதிகாரிகள் நேரடி

யாக மேற்கு ஜெர்மனி சென்று ஆக்போல்டன் கம்பெனியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அந்த பேச்சுவார்த்தையின் படி முதல் கப்பல் 6 கிரேய்ன்களுடன் 11.2 மில்லியன் டாலருக்கு உள்ளிட்டும், இரண்டாவது கப்பல் 7 கிரேயின்களுடன் 11.8 மில்லியன் டாலர்களுக்கு உள்ளிட்டும் வாங்குவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள், அதாவது 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8 ஆம் நாள் அன்று மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டது. எல்.சி. குறிப்பிட்ட தேதிக்குள் திறக்கவேண்டும் என்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் ஆக்போல்டன் கம்பெனி 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் நாளன்று டெலக்ஸ் மூலம் கேட்டுக்கொண்டபடி 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் நாளன்று எல்.சி. திறக்கப்பட்டுவிட்டது. இப்படி எல்.சி. திறக்கப்பட்ட செய்தி அவர்களுக்கு அவர்கள் குறிப்பிட்ட ஜெர்மனி நேரப்படி 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் நாள் மாலையிலேயே கிடைக்கவில்லை. இந்தக் காரணத்தைக் கூறி இனி ஒப்பந்தம் செல்லாது என்று கூறிவிட்டார்கள். 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் நாளன்று மீண்டும் அதே கப்பல்களை அதே அளவுள்ள கிரேய்ன்களுடன் நமக்கு விற்பதானால் முன்பு ஒப்பந்தம் செய்த விலையை விட ஒரு கப்பலுக்கு சுமார் 0.5 மில்லியன் டாலர் அதிக விலை கேட்டார்கள். அதிக விலை தர நாம் ஒத்துக்கொள்ளவில்லை. ஒப்பந்தம் முறிந்தது. எனவே இப்போது ஆக்போல்டன் கம்பெனி இரண்டு கப்பல்களையும் கிரேய்ன்களே இல்லாமல் வெளி மார்க்கெட்டிலே 17 மில்லியன் டாலர் என்ற அளவிலே விலை பேசிக் கொண்டிருக்கிறார்கள். கிரேய்ன்களே இல்லாமல்கூட ஆகவே யாராலும், எப்போதும் 15 மில்லியன் டாலருக்கு விற்பதாகச் சொல்லப்படவில்லை. இது என்னிடம் தரப்பட்டிருக்கின்ற குறிப்புகள்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்போது 17 மில்லியன் டாலர்களுக்கு அது விலை பேசப்படுகிறது என்றால் ஏறத்தாழ 22 மில்லியன் டாலர்களுக்கு இந்த அரசு முதலிலேயே வாங்குவதற்கு ஏன் ஒத்துக்கொள்ளவேண்டும்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேட்கின்ற கேள்வியை இன்னும் கொஞ்சம் விளக்கத்தோடு கேட்டால் உதவியாக இருக்கும். வாங்கப்போகின்ற கப்பல்கள் ரஷ்யன் கப்பல்கள் அல்ல. அதை மார்க்கெட்டிலே விலை பேசிக்கொண்டிருக்கிறார்கள். விற்றுவிட்டார்கள் என்ற நிலையில் வேறு கப்பல்களை வேறு இடத்தில் இருந்து வாங்க வேண்டி இருக்கிறது. ஆகவே, அதற்காக உயர் அதிகாரிகள் செல்ல இருக்கிறார்கள். இங்கே கப்பல் கம்பெனிகளுடன் ஒப்பந்தம் செய்து தேவையான கரிகளைக் கொண்டு வருவதற்கு நாம் முயற்சி செய்யும்போது ஒரு நாளைக்கு எத்தனை ஆயிரம்

ரூபாய் வாடகை என்று கணக்கிட்டால் ஏறத்தாழ 5, 6 ஆண்டு களுக்குள் நாம் வாங்குகின்ற கப்பல்களின் விலை அள கொடுக்கவேண்டியிருக்கிறது என்று கூறப்பட்டது. என வாடகையும் கொடுக்காமல் கப்பல்களைச் சொந்தமா பின்னால் விற்பதற்கும் வசதியாக இருக்கவேண்டும் என்று வ யில் அந்த எண்ணத்தை தொழில் நுணுக்கத் திறமையாளர்க சொல்லி இருக்கிறார்கள். அதிகாரிகளும் கூறி இருக்கிறார்கள் ஆகவே அதற்காக பொறியியல் நிபுணர், டெக்னிஷியன்கள், ம றும் அதிகாரிகள் இப்படி மூவராகச் செல்ல இருக்கிறார்கள் அவர்கள் சென்று யார்டிலேயே பார்த்து அங்கேயே விலைக்கு வாங்குவதற்கு நாம் முயற்சி செய்கிறோம் என்பதை இங்கே சொல்லுகின்றபோது இடையிலே முன்னால் இருந்த பிரச்சினை களையும் நான் குறிப்பிட்டாகவேண்டும்.

அதிலே இன்னொரு பிரச்சினை வந்தது. அதிலே இடைத் தரகராக இருந்து முதலிலே பேசிய ஒருவர்— அவர் பெயர் எனக்கு நினைவு இல்லை— அதிகாரிகளால் தரப்பட்ட தகவலைச் சொல்கிறேன். அதாவது ஒரு பொருளை விற்பவர்கள்தான் கமிஷன் கொடுக்கவேண்டும், வாங்குபவர்கள் கமிஷன் கொடுப் பது வழக்கம் இல்லை. ஆனால் வாங்குபவர்கள் கமிஷன் கொடுக்கவேண்டும் என்று கேட்ட காரணத்தால் பல நாட்கள் இழுக்கப்பட்டு ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டோம் என்பதைக் கூற விரும்புகிறேன். இதுவரை வழக்கம் இல்லாத ஒன்றைச் செய்யவேண்டும் என்று சொல்லிய நிலைமையில் நாங்கள் அதை ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டோம். அதன் காரணமாக நாட்கள் நீண்டன. பிறகு 7 கிரேய்ன்கள் இல்லாத கப்பல்கள் மூலமாய் கரிகளைக் கொண்டு வருவது நமது அரசுக்கு நஷ்டம் ஏற்படும் என்கிற காரணத்தால் மேற்கொண்டு இந்த முயற்சியில் ஈடுபட வேண்டியிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

[இரவு 7—30]

இதில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றால் ஒன்றை மனதில் கொள்ளவேண்டும். ஒருமுறை பேசி அதை முடித்துவிட்டு அதற் குப் பிறகு இடையில் மாற்றம் ஏற்பட்டு அதே கப்பலை வேறு விலைக்கு விற்று அல்லது வாங்க ஏற்பாடு செய்தால் சந்தேகப் படலாம். அப்போது அதிகாரிகளிடம் கேட்கலாம், என்ன வாயிற்று என்று. காலையில் அழகுத் தமிழில் பேசிய கலைஞர் அவர்கள் சில கேள்விகளைக் கேட்கும்போது உண்மையில் அவர்கள் நம்பக்கூடிய அளவிற்கு அவர்களுக்கு செய்திகள் சொல்லப்பட் டிருப்பதுபோல் கேள்விகள் கேட்டார்கள். அந்த அளவிற்கு செய்திகள் கொடுத்தவர்கள் உண்மைக்கு மாறாகச் சொல்லி, முழு விளக்கத்தையும் சொல்லாமலிருந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இன்னும் புதிதாக தகவல் இருந்தால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்களுக்கு அதிகாரிகள் மூலம் நான் விளக்கம் அனுப்பத் தயாராயிருக்கிறேன்.

அவர்கள் இந்த மன்றத்தில் அதைப்பற்றி பேசுகிற வாய்ப்பு கிடைக்கும். இதே கேள்விகளை மீண்டும் எழுப்பலாம். ஆகவே மீண்டும் சொல்கிறேன். எவ்வளவு கோடி, எவ்வளவு லட்சம் என்பதெல்லாம் எங்களுக்கு தெருக்கோடிதான் தெரியு மே தவிர வேறு எந்தக் கோடியும் எனக்குத் தெரியாது. நான் லட்சக்கணக்கில் சம்பளம் வாங்கியவன் என்பதை மறுக்க வில்லை. ஆனால் கோடிக்கணக்கில் கையில் வைத்துப் பார்த்த தில்லை. அதை மட்டும் மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப் பினர்கள் என்னுடன் பழகியவர்கள் அத்தனை பேர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் யாராவது அதற்காக இந்தப் பதவிக்கு நான் வரவில்லை. என்றால், இங்கு அப்படிப் பயன்படுத்த விரும்பியிருந்தார்கள் தனியாகக் கூட அல்ல, ரகுமான்கான் அவர்கள் சொன்னதுபோல் சொன்னாலும்கூட வேறு யாராவது எனக்கு கடிதம் எழுதிச் இன்னொரு செய்தியைப் படிக் நிச்சயமாக கவனிக்கப்படும். கிறேன். இதிலிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் கூறும் கருத் துக்களுக்கு எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறேன் என்பதை இந்த மன்றம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒரு பொறுப்பை ஒப்படைத்துவிட்ட பிறகு அவர்கள் என்ன சொல்கிறார்கள், என்னென்ன நடக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள, விளக் கங்கள் பெறுவது என்பது பொறுப்பை தட்டிக்கழிப்பது என்று பொருள் அல்ல, அவர்களை ஆரம்பத்திலேயே சந்தேகிக்கக் கூடாது என்பதால் விவரங்கள் வரட்டும் என்று இருக்கிறேன். இன்னொரு தகவலையும் நான் அளிக்க விரும்புகிறேன். கிரேய்ன் பொருத்தப்படாத இரண்டு கப்பல்களுக்கு 17 மில்லியன் டாலர் விலை சொல்கிறார்கள். ஆனால் கிரேய்ன் பொருத்தப் பட்டால், அதே கப்பலுக்கு விலை 23·9 மில்லியன் டாலர் ஆகும். இதுபோல் எவ்வளவோ சொல்லியிருக்கிறார்கள். லஞ்ச மாமல் இருக்கிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். தியேட் டர்காரர்களிடம் எவ்வளவு வாங்கினார்களோ தெரியாது என்று சொல்கிறார்கள். தியேட்டர்காரர்களைப் பற்றி எனக்கும் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும் தெரியும். நாங்கள் அந்த வகையில் எங்கள் கடமையையாற்றி வருகிறோம். அந்தந்த வகையில், அந்தந்த துறையில் இருப்பவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று எங்கள் மனச்சாட்சிப்படி, எங்கள் அறிவுக்கு ஏற்றபடி, சட்டம் எங்களுக்கு அதிகாரம் அளிக்கிற வகையில், சட்ட விதிமுறைகள் சொல்கிற வகையில் நாங்கள் செயல்படுகிறோமே தவிர பணத்திற்காக நாங்கள் இங்கேதான் வரவேண்டும் என்பதில்லை. உண்மையில் எனது மரியாதைக்குரிய— மரியாதைக்குரிய என்று சொல்ல விரும்புகிறேன் — எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும் அது தெரியும். அவர்களுக்கு என் னைப்பற்றி நன்கு தெரியும். ஆகவே, சொல்கிறேன். இந்தப் பதவி எனக்கு தேவை இல்லை. நான் எப்போதும் இந்தப் பதவி யில் இருப்பேன் என்றில்லை, நீங்கள் நடிக்கப்போகிறீர்களா

என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கேட்டார்கள். பிரதமரை இணைத்துப் பேசினார்கள். அப்போது கே... வில்லை. வேடிக்கையாகச் சொல்கிறேன். ஒரு பெரிய ம...ரோடு என்னை ஒரே அளவில் வைத்து ஒரே தகுதியில் பா...கிறேன் என்று தப்புக் கணக்கு போட வேண்டாம். இந்திய தேசிய இராணுவப் படையில் பணியாற்றிய மூன்று தளபதிகளை தூக்கிலிட வேண்டும் என்று வழக்கு நடந்தபோது பிரதம அமைச்சராக இருந்த அமரர் நேரு அவர்கள், வல்லபாய் பட்டேல் அவர்களைப் போன்றவர்கள் எல்லாம் வழக்குமன்றத்தில் சென்று வாதாடினார்கள் என்று சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன்.

அதைப்போலவே நடிக்கப்போகின்றீர்களே எதற்கு என்று கேட்டால், நாங்கள் கொண்டிருக்கின்ற கொள்கையை விளக்குவதற்கும்—அதன் மூலம் கொள்கைகளைத் தெரிவிப்பயதற்கும் தானே தவிர, பணம் சேர்ப்பதற்காக இந்தப்பணியில் இருக்கின்றவரை அந்தப் பணிக்கு போக மாட்டேன் என்பதை உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கொள்கையை பரப்புவதற்காக, அது தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினையாக இருந்தாலும் சரி, விவசாயிகளுடைய பிரச்னையாக இருந்தாலும் சரி, கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினையாக இருந்தாலும் சரி, அல்லது தொழிலாளர்களுடைய பிரச்னையாக இருந்தாலும் சரி எங்களுக்கென்று சில கொள்கைகளை வைத்திருக்கிறோம். அவற்றை பரப்புவதற்காக எந்தவிதமான ...த்தையும் பாராமல்—அதே நேரத்தில் இதற்கான என்னுடைய கணக்குகளை நிச்சயமாக எப்போது வேண்டுமானாலும் வந்து பார்த்துக்கொள்ளலாம்— எந்த நேரத்தில் வேண்டுமானாலும் எனது வீட்டுக்குள் வந்து யார் வேண்டுமானாலும் இதைப் பார்த்துக்கொள்வதற்கு வாருங்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில் தேவைக்கு தகுந்த அளவில், சட்டப்படி எவ்வளவு பணம் இருக்கலாமோ அந்த அளவுக்குத்தான் பணம் இருக்குமே தவிர அதற்கு மேல் என்னிடம் இல்லை என்பதையும் சட்டத்திற்குட்பட்டுத்தான் வைத்திருக்கிறேனே தவிர வேறு எதுவுமில்லை, சென்ற முறை கூட வருமான வரி எப்படி கட்டப்பட்டது என்ற கேள்வி வந்தது. என்னுடைய சத்தியா ஸ்டுடியோ கட்டிடத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திடம் அடமானம் வைத்து பணம்பெற்று கட்டியிருக்கிறேன் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய சொத்துக்கள் என்னுடைய கட்சிக்கே போக வேண்டும் என்ற அளவில் இதை அடமானம் வைத்து வருமான வரி பாக்கியை கட்டியிருக்கிறேன். இதை நான் சொல்லும் போது நான் நடிப்பதற்காகப் போனாலும் கூட யார் வேண்டு மானாலும் முதலமைச்சராக இருக்கலாம். மற்றவர்கள் ஆட்சியை நல்லமுறையில் நிச்சயமாக நடத்துவார்கள் என்ற நம்பிக்கையில் எனக்கு கொஞ்சமும் சந்தேகம் இல்லை என்பதை

நான் கழிந்த ஒன்றரை மாத காலமாக வெளிநாடுகளுக்குப் போயிருந்தபோது அந்த அளவுக்கு நல்ல முறையில் ஆட்சி நடந்தது. ஆகவே நான் பணம் சேர்ப்பதற்காக நடிப்பதற்கு போகப்போவதில்லை என்பதை......

திரு. மு. கருணாநிதி : முதலமைச்சர் அவர்கள் பணத்திற்காக நடிக்கப் போவதாகச் சொல்லவில்லை என்று குறிப்பிட்டார். பத்திரிகை செய்தி இரண்டை படித்துக்காட்ட விரும்புகிறேன்;

தினத்தந்தி 1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் நாளில் வந்த செய்தி இது—''சினிமாவில் நடிக்க அனுமதிக்கும்படி பிரதமர் தேசாய்க்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கடிதம் எழுதியிருந்தார் அதற்கு தேசாய் அனுப்பிய பதிலில் நீங்கள் சினிமாவில் நடிக்க தடை எதுவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். முதலமைச்சராக பதவி வகித்துக்கொண்டே படங்களில் நடிக்கப்போவதாக சமீபத்தில் எம்.ஜி.ஆர். அறிவித்திருந்தார், இது பற்றி பிரமர் தேசாய்க்கு அவர் ஒரு கடிதம் எழுதினார், அதில் அவர் கூறியிருந்ததாவது :—''வருமானவரி பாக்கிக்காக. நான் பெரிய தொகையைச் செலுத்த வேண்டியிருக்கிறது, முதலமைச்சர் பொறுப்பு வகிப்பதற்காக எனக்கு கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு வருமான வரியைச் செலுத்துவது இயலாத காரியம், எனவே என் வருமானத்தை அதிகப்படுத்திக் கொள்ள மீண்டும் படங்களில் நடிப்பதற்கு அனுமதி கொடுங்கள்'', இவ்வாறு கடிதத்தில் எம்.ஜி.ஆர். குறிப்பிட்டிருந்தார்...... என்று 'தினத்தந்தி'யிலும்........

அடுத்து. ஏப்பரல் 5-ம் தேதி 1978—'இந்து' பத்திரிகையில் 'ஆக்டிங்' என்ற தலைப்பில் வந்த செய்தியையும் படிக்கிறேன். அதில்......

"Acting: Desai's advice to M.G.R.

New Delhi, April 4.

The Prime Minister, Mr. Morarji Desai, is understood to have advised the Tamil Nadu Chief Minister Mr. M.G. Ramachandran to decide the issue of acting in films himself on the basis of norms of propriety.

The Chief Minister had sought Mr. Dasai's advice in the matter. For personal reasons, which include liquidation of past debts, the Chief Minister wanted to act in films. He sounded the Prime Minister whether it would be appropriate for him to do so..." என்று

'இந்து' பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே கடனை அடைக்க நடிக்கப் போவதாக 'இந்து' பத்திரிகையிலும் 'தினத்தந்தி' பத்திரிகையிலும் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். தயவு செய்து இதுபோன்ற பத்திரிகைகளை நம்புவதைவிட தொலைபேசியில் என்னிடம் 'என்ன எம்.ஜி.ஆர். இப்படி நடிக்கப் போகிறீர்களா என்று கேட்டிருந்தால் போதும்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே. முதலமைச்சருடைய கருத்தின் படி இனிமேல் 'இந்து'வையும் 'தினந்தந்தி'யையும் நம்புவதாக இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : கலைஞர் அவர்களுடைய சமார்த்தியத்தை நான் மதிக்கிறேன். மனப்பான்மை நாட்டுக்கும் நல்லது. நமக்கும் நல்லது. இவற்றை நம்புவதா இல்லையா என்பதைவிட இந்த இரண்டு செய்திகளையும் ஒப்பிட்டு பாருங்கள். தமிழ் பத்திரிகையில் ஒரு கடிதம் எழுதியிருப்பதாக போட்டிருக்கிறார்கள். ஆங்கில பத்திரிகையில் 'அட்வைஸ்' செய்தார்கள் என்று இருக்கிறது. இதையெல்லாம் எப்படி வெளியிட்டார்கள் என்றாலும். செய்திகளை வெளியிடுவது அவர்களுடைய உரிமை, ஆனால் நடந்த பேச்சுக்கள் இது தான், மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களும் மதிப்பிற்குரிய மாமன்ற உறுப்பினர்களும் இதை மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும், 'நீங்கள் நடிக்கப் போகிறீர்களா' என்று கேட்டார்கள். நான் நடிக்கக் கூடாதா?

[இரவு 7-40]

சட்டம் தடுக்கிறதா? என்று கேட்டால். நடிக்க வேண்டுமா நடிக்க வேண்டாமா என்பது உங்களுடைய பிரச்னை, நீங்கள் முடிவு செய்ய வேண்டிய பிரச்னை என்று சொன்னார்கள். இதைத்தான் அவர்கள் என்னிடம் கூறினார்கள். இதுவரையிலே இதை நான் சொல்லவில்லை. இப்போது இந்தப் பிரச்னையால் சொல்ல வேண்டியிருக்கிறது. இது தனியாக நடந்த பேச்சு வார்த்தை. இந்தப் பிரச்னையில் என்னை இப்படி சொல்ல வைத்ததற்கு நன்றி, நான் என்ன நடந்தது என்பதைச் சொல்லியிருக்கிறேன். பத்திரிகையில் இதை மட்டுமா. நடந்ததை மட்டுமா போடுகிறார்கள். என்னென்னமோ. எதைஎதையெல்லாமோ போடுகிறார்கள், அவர்கள் விரும்பியதைப் போடுகிறார்கள் ; விரும்பாததை விட்டு விடுகிறார்கள். இப்போதெல்லாம் சில இடங்களில் ஆசிரியர்கள் செய்திகளை தணிக்கை செய்வதில்லை ; நிருபர்களே தணிக்கை செய்து விடுகிறார்கள், முழுப் பொறுப்பையும் அவர்களே எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் செய்திகளை ஆசிரியர்களிடம் கொடுப்பதுதான் நியாயம். ஆனால். சில நிருபர்கள் அப்படிச் செய்வதில்லை. பெய

போது. எதைப் போட்டால் வம்பை உண்டாக்கலாம் என்று. அப்படி ஏதாவது சொல்லும்போது மிகவும் வேகமாக எழுதுகிறார்கள். ஊட்டியிலேகூட என்ன நடந்தது? இராமச்சந்திரன் கலைஞரைப் பற்றி என்ன சொல்கிறான்? ஜாதியைப் பற்றியோ. சுப்புவைப் பற்றியோ அல்லது உமாநாத்தைப் பற்றியோ ஏதாவது சொல்வாரா. இந்தப் பிரச்னைகளில் ஏதாவது வம்பை இழுத்து வைக்கலாமா என்ற முறையிலேதான் பத்திரிகைகளிலேயே செய்திகள் வெளிவருகின்றன.

'நீதியின் குரல்' பற்றி இங்கே சொல்லப்பட்டது அதைப் பற்றி நான் மிகவும் வெட்கப்படுகிறேன் ; வேதனைப்படுகிறேன், எங்கள் கட்சியின் சார்பாக நடத்தப்படுகின்ற பத்திரிகை என்று சொல்வதற்கு நான் உண்மையிலேயே வேதனைப்படுகிறேன், இதற்காக நான் தலைகுனிகிறேன், என்பதை முதல் அமைச்சர் என்கிற முறையில் நான் தெரிவித்துக் கொள்கிறேன், நான் அதை ஒரு பத்திரிகையாகக் கருதவில்லை, ஏற்றுக்கொள்பவனும் அல்ல ; ஏற்றுக்கொண்டவனும் அல்ல, இதை நான் பகிரங்கமாக பல மேடைகளில் சொல்லியிருக்கிறேன், பொதுக் குழுவிலும் பேசியிருக்கிறேன் ; நண்பர்களிடம் சொல்லியிருக்கிறேன் ; நேரிலும் சொல்லியிருக்கிறேன் ; இப்போது இங்கே மன்றத்திலும் சொல்கிறேன்.

திரு. க. சுப்பு : சட்டமன்ற நூல் நிலையத்திலேயே வைப்பது தடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் : நிச்சயமாக தடுக்கப்படும். அது மட்டுமல்ல, இதுபோன்ற பத்திரிகைகள் இன்னும் சில இருக்கின்றன, அவைகளையெல்லாம் நுழைவதைத் தடுப்பதற்கு முயற்சி எடுப்பேன். இதை நான் சொல்கிபோது, நான் மனம்விட்டு பேசுகிறேன். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மூலமாக எங்களுக்கு நீங்கள் மாபெரும் துணை செய்திருக்கிறீர்கள். ஒருவகையில் தவறுகளை எடுத்துக்காட்டும் நண்பர்களாகவும் ஒருவகையிலே அறிவுரையாகவும்கூறி யிருக்கிறீர்கள். ஒரு போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தி யிருக்கிறீர்கள். அது மட்டுமா? இன்னும், எங்களுக்கு தெம்பளிக்கும் வகையிலே எங்களை ஆளாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்ற கருத்தில்தான் நான் இதை ஏற்றுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல எங்களைத் தூண்டி விடுகிறீர்கள் 'சுடர் விளக்கிற்கும் ஒரு தூண்டுகோல் வேண்டும்' என்பதற்கொப்ப நீங்கள் எங்களைத் தூண்டி விடுகிறீர்கள், அப்படித் தூண்டுவதன்மூலம் எங்களை ஒளிபெறச் செய்து பிரகாசிக்கச் செய்கிறீர்கள், அந்த வகையிலே இந்தக் கண்டனத் தீர்மானங்களையும். நம்பிக்கையும் இல்லாத் தீர்மானங்களையும் கொண்டு வந்தவர்களை உண்மையிலேயே நான் மதிக்கிறேன் ; அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வளவுக்கும் நான் பதில்சொல்ல வேண்டுமென்று விரும்
பினாலும் ஒன்றே ஒன்றைப் பற்றி மட்டும் நான் இங்கே சொல்
வதற்கு துணைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும்
இது 'கொலைகார அரசு' என்று மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் ஜனதா கட்சித் தலைவர் அவர்கள்
சொன்னார்கள், நான் அவர்களை பணிவோடு கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன், 'கொலைகார அரசு' என்று சொன்
னார்களே. கொஞ்சம் இந்தப் பிரச்னையில் நான் பதில்
சொன்னால், இதனால் யாருடைய மனம் புண்படும் என்பது
எனக்குத் தெரியாது. இதற்கு முழுப் பொறுப்பும் மாண்புமிகு
ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்களைத் தான் சேரும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமரர் அண்ணா அவர்கள் முதுகுளத்தூர் சம்பவத்தைப்
பற்றி இந்த மன்றத்திலே ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அதிலே ஜாதிப் பிரச்னையைப் பற்றி ஒரு இடத்திலே கூறுகிறார்
கள். " இந்தப் பிரச்னை நாட்டு மக்களை மிகமிக அதிகமாக
பாதிக்கக் கூடிய பிரச்னை மாத்திரமல்ல. அதைப்பற்றி நாம்
பேசுகின்றவார்த்தைகளில் எந்த அளவிற்கு பொறுப்புணர்ச்சியைக்
கடைப்பிடிக்கிறோமோ, அதைப் பொறுத்துத்தான் தமிழ்
நாட்டின் எதிர்காலமே அமைந்திருக்கிறது. இங்கே ஏதாவது
ஒரு பக்கத்தில் இன்றைய தினம் ஒன்று சேர்ந்து அதற்கான
தீர்மானங்களை திருத்தியோ, செய்திகளை வகுத்தோ, பிரித்தோ
கட்சிகளின் சார்பாக செய்து கொண்டிருக்கின்ற காரணத்தி
னாலே அங்கே இருக்கின்ற புகைச்சலை அடக்கி விட முடியாது"
என்று கூறியிருக்கிறார்கள். அதுபோல் இன்னும் பல இடங்
களிலே குறிப்பிட்டிருந்தாலும், இதை நான் சொல்லும்போது
ஜனதா கட்சித் தலைவர், அன்புக்குரிய மாண்புமிகு ஜேம்ஸ்
அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள். இது கொலைகார அரசு
என்கிறீர்கள். நான் 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு முது
களத்தூரில் நடந்த சம்பவத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன்.
அந்த ஆண்டில் எவ்வளவு பேர் கொலை செய்யப்பட்டார்கள்.
எவ்வளவு பேர் சுடப்பட்டார்கள் அதற்கு யார் காரணம் என்று
கேட்டால் நான் யாரை மதிக்கிறேனோ இன்றைய தினம்
இந்த நிலையில் யாரைப் பற்றிப் பேசக் கூடாது, என்று அனை
வரும் விரும்புகிறோமோ அவர்களைத் தலைகுனிய வைக்கிற
நிலைமை ஏற்படக்கூடாது, ஆனால் நீங்கள் ஏற்படுத்துகிறீர்கள்
என்பதை மட்டும் மன வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்
கிறேன். கொலைகார அரசு என்று சொல்லுகிற அளவுக்கு
அப்படி என்ன நடந்துவிட்டது ? புள்ளிவிவரங்களை எடுத்துக்
காட்டினேன். எவ்வளவு கொலைகள் ஒவ்வொரு ஆண்டும்
நடந்திருக்கின்றன என்ற புள்ளி விவரங்களை எடுத்துக்

காட்டினேன். அதே நேரத்தில் அந்தக் காலத்தில் என்னென்ன
நடந்தது என்பதைத் தயவு செய்து கொஞ்சம் சிந்தித்துப்
பாருங்கள். யார் ஆட்சி செய்தார்கள் அன்று ? யாரால்
சுடப்பட்டார்கள் ? எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டார்கள் ?
எவ்வளவு பேர் சிறைச் சாலைக்குச் சென்றார்கள் ? ஆயிரக்
கணக்கானவர்கள் மீது வழக்கு போடப்பட்டது. திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எத்தனை தோழர்கள் கைது
செய்யப்பட்டார்கள் ? எவ்வளவு பேருடைய பிணம் சிறைச்
சாலையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டது என்பதையெல்லாம்
எண்ணிப்பார்க்க வேண்டும்.

திரு. ர. ஜெபமணி : துணைத் தலைவர் அவர்களே,
இப்போது முதலமைச்சர் அவர்கள் நம்மைக் கடந்த காலத்திற்கு
அழைத்துச் செல்கிறார்கள். மிக்க நன்றி. அப்போது அவை
யின் முன்னால் கண்டனத் தீர்மானம் வந்து பேசும்போது
அவர்களால் போற்றப்படுகிற பேரறிஞர் அண்ணா என்று
அருமையாக அழைக்கப்படுகிற அவர்கள் ஓட்டெடுப்பில் கலந்து
கொள்ளவில்லை. நான் ஒன்று மட்டும் சொல்லுகிறேன்.
முதலமைச்சர் அவர்கள் அதைப் பற்றி விவாதிக்க வேண்டும்
என்று விரும்பினால், அப்படிப்பட்ட துர்பாக்கிய நிலை வரு
மானால் நிச்சயமாக அதற்கு ஒரு நாள் குறிப்பிட்டால் அதைச்
சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை மட்டு சொல்லிக்
கொள்கிறேன்

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்
அவர்கள் அவர்களுடைய கடமையை நிறைவேற்றுகிற வகையில்
அவர்கள் பழகிவிட்ட காரணத்தால் உள்ளத்தில் ஊறியிருக்கும்
தேசிய உணர்வாலும், கட்சி உணர்வாலும் பேசுகிறார்கள்.
நான் அதைப் பெரிதுபடுத்த விரும்பவில்லை. நான் குறிப்
பிட்டது யாரை என்பது தெரியும். அது தெரிந்ததே போதும்
என்பதுதான் என்னுடைய எண்ணம். அதற்கு மேல் கூற
விரும்பவில்லை. இதற்கு மேல்கூறினால் நாம் போற்றிப்
பேசுகிறவர்களைப் பற்றிப் பேசுவதாக முடியும். ஆனால்
எங்களைக் கொலைகார ஆட்சி என்று சொல்லுகிறபோது இந்த
நாடு எப்படி இருந்தது. இப்போது எப்படி இருக்கிறது என்ற
புள்ளிவிவரங்களைச் சொல்லும்போது அவர்கள் ஆத்திரப்படுவது
நியாயம். நாங்கள் ஆத்திரப்படவில்லை. அமைதியாகப்
பதில் சொல்லுகிறேன். இது விவாத மன்றமே தவிர, நிச்சய
மாக போராட்ட மன்றம் இல்லை. நான் முதலிலேயே சொல்லி
இருக்கிறேன். (குறுக்கீடு) இதை விவாதத்திற்குரிய பொரு
ளாக்க வேண்டாமென்று பெரியவர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன். அவர்களிடம் நான் மரியாதை வைத்திருக்
கிறேன்.

திரு. ர. ஜெபமணி : நான் முதலமைச்சர் அவர்கள் பேரில் ரொம்ப மரியாதை வைத்திருக்கிறேன். ஒரு தவறு இன்னொரு தவறுக்குச் சமாதானம் ஆகாது. ஜேம்ஸ் அவர்கள் சொன்னது தவறு என்று சொன்னால் அதைப் பற்றிப் பேசு வதில் தவறு இல்லை. அதைப் பற்றிப் பேசலாம். அதற்கு மாறாக நடந்த சம்பவங்களைப் பற்றிப் பேசுவது என்ற வகை யிலே போவார்களானால் அந்தப் பிரச்னைகளுக்கு இட்டுக் கொண்டு போவாரேயானால் நாட்டில் மீண்டும் வேறு காரியங் களை உண்டு பண்ணியவர்களாவோம் என்ற ஐயத்தின் காரணமாகத்தான் கூறுகிறேன். எனக்கு ஒன்றும் அதைப் பற்றி விவாதிப்பதில் ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆட்சே பணை இல்லை என்று சொன்னதற்கு நன்றி. அது எங்கே இழுத்துச் செல்லும் என்பதை அறிவுறுத்தியதற்காக நன்றி. மகாத்மா காந்தியடிகளைச் சுட்டுக் கொன்றது முஸ்லீம் அல்ல என்று வானொலியில் நாள் முழுவதும் திரும்பத் திரும்ப குறிப் பிட்டார்கள் என்று மேலவையில் சுட்டிக்காட்டினேன். யாரை யும் புண்படுத்த வேண்டுமென்பது அல்ல. நாங்கள் நிரபராதி என்று சொல்லும்போது கொலைகார ஆட்சி என்று சொன்னால் உண்மையில் புள்ளி விவரங்களைச் சொல்லிவிட்டு அப்படிப் பட்ட கொலைகார ஆட்சி முன்பு இருந்தது என்று சொல்லும் போது வரலாற்றைத்தான் சொல்லுகிறேனே தவிர வேறல்ல.

திரு. ர. ஜெபமணி : அதை நீங்கள் தெளிவாகச் சொல்லி விடுங்கள். நடந்து விட்ட காரியங்கள் நாட்டு மக்களுக்குத் தெரிந்துதான் ஆக வேண்டுமென்றால் அதைப் பற்றி விவாதிக்க லாம். பயமுறுத்துவது நல்லதல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பெரியவர் அவர்களுக்கு சொல்லிக் கொள்கிறேன் வாழ்த்துதலோடு அவர் கள் பல ஆண்டுகள் வாழ வேண்டும், விவாதங்களிலே கலந்து வெற்றிபெற வேண்டும் அதற்கு என்னுடைய அன்னை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய ஆசை என்று தெரிவித்துக் கொண்டு அவர்களுக்கு இந்த வயதிலும் அவர் களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது என்று தெரிய வில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். நல்ல வேளை யாக அவர்கள் சிரித்து விட்டார்கள்.

[இரவு 7-50.]

எனக்கு இருக்கிற வேதனையெல்லாம் மறைந்தவர்களைப் பற்றி இழுக்குத் தேட வேண்டிய நிலைமைக்கு நாம் யாரையும் ஆளாக்கிவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு

அதனால்தான் நான் பெயரையோ விவரங்களையோ குறிப் பிட்டுப் பேசவில்லை. அவைகளைச் சொல்வது நாகரீகம் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். எங்களைக் கொலை கார ஆட்சி என்று சொன்னால் அதற்கு விளக்கம் தரவேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். துணைத் தலைவர் அவர் களே, நேரம் அதிகமாகிவிட்டது, மாமன்ற உறுப்பினர்கள் என்னை மன்னிக்க வேண்டும். இன்னும் பல மாமன்ற உறுப் பினர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் கூறுவதற்கு எனக்கு நேரம் இல்லை என்பதை அவர்களே அறிவார்கள். இன்னும் நீடித்தால் அவர்களுக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்படும் என்பதை அவர்களே அறிவார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதும் கண்டனத் தீர்மானத்தின் மீதும் எழுப்பப் பட்ட பிரச்னைகளுக்கு எங்களுடைய ஆதாரங்களை எடுத்து வைத்திருக்கிறோம், அதற்குப் பிறகு என்ன முடிவு எடுக்கப் போகிறார்கள் என்பதை அவர்கள்தான் முடிவு எடுக்க முடியும். நாங்கள் வற்புறுத்த முடியாது. நாங்கள் சொன்னதிலே நியா யம் இருக்கிறது, அதிலே குறைகள் இருந்தால் நிச்சயமாக அதை எடுத்து நீங்கள் வைத்தால் அதை தடுத்து நிறுத்துவோம் என்ற நம்பிக்கை இருந்தால் அவர்கள் தீர்மானத்தைப்பற்றி முடிவு எடுக்கட்டும். கண்டனத் தீர்மானங்களின் மூலம் அவர்கள் எந்த நம்பிக்கையை உத்திரவாதத்தை பெற வேண்டுமென்று விரும்பினார்களோ அதைப் பெற்று விட்டார்கள் என்று கருது கிறேன். அவர்கள் தேவைப்பட்டதைப் பெறவில்லை என்று அவர்கள் கருதினால்— நான் தனிமையிலே சொன்னதை இங்கே சொல்ல விரும்புகிறேன்— எப்படியாவது தனிப்பட்ட தொழி லாளர்களை அழைத்து கையெழுத்து வாங்குவது, அடிமை களாக்குவது போன்ற முறையைத் தடுப்பதற்கு எப்படியாவது சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று விரும்புகிறோம். அதற்கு நாங்கள் முயற்சிக்கிறபோது அவர்கள் அதற்கு ஆவன செய்ய அதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். அது எங்களுக்கு ஏற்புடையது அல்ல, அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதும் இல்லை. வேறு வழியின்றி அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகிறபோது சட்டம் இருக்கே நிற்கிறது. சிம்கோ பிரச்னை பற்றி மீண்டும் அந்த அதிபரை அழைத்துப் பேச இருக்கிறேன் என்பதைக் கூறிக் கண்டனத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல என்னை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். நான் இன்று பிற்பகல் 3 மணியளவிற்குச் சரியாக வர இயலாமல் 2, 3 நிமிடங்கள் தாமதமாக வந்த நேரத்திலே அமைச்சர் இராஜா முகமது தன்னிலை விளக்கம் என்ற பெயரில் ஒரு விளக்கத்தை இங்கே அளித்திருக்கிறார். நான் காலையிலே

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 26

அவர் எழுதியதாகப் படித்த கடிதம் அல்லது அவருடைய தகப்பனார் பெயரில் தோப்பு வாங்குதவற்கு ஒரு வழக்கறிஞர் எழுதிய கடிதம் இவை எல்லாம் வழக்கு மன்றத்திலே இருக்கிற கடிதம். அதுபற்றி வழக்கு இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். வழக்கு அதுபற்றி அல்ல. அவர்கள் குறிப்பிட்டது போல் ஆற்காடு வீராசாமி அவர்கள் அமைச்சர் இராஜா முகமது அவர்கள் மருத்துவக் கல்லூரியில் அனுமதி வாங்கித் தருவதற்கு மாணவரிடமிருந்து கையூட்டுப் பெற்றார் என்று அமைச்சர் இராஜா முகமது மீது ஆற்காடு வீராசாமி வழக்குப் போட்டிருக்கிறார். அந்த வழக்கில் அவர் எப்படிப்பட்டவர் என்று எடுத்துக் காட்டுவதற்காக இந்தக் கடிதங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்தக் கடிதங்கள் பற்றி வழக்குப் போடவில்லை. இந்தக் கடிதங்கள் தன்னால் எழுதப்பட்டவை என்று வழக்கு மன்றத்திலே அவர் ஒப்புக் கொண்டிருக்கிறார். நாளையோ, நாளை மறுநாளோ பொதுமேடையிலே நான் இதைப் படிக்கத் தயாராக இருக்கிறேன். என்மீது வேண்டுமானால் அவர் வழக்குப் போடட்டும். நான் காலையிலே படித்தவை ஆதாரமற்றவையல்ல. ஆதாரமுள்ளவைதான். இங்கே அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திலே கருணாநிதியின் வரலாறு என்ன என்பதை நான் கூற விரும்பவில்லை என்று சொல்லியிருக்கிறார். * * *

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் என்மீது சில குற்றச்சாட்டுகளை இங்கே சுமத்துகிறபோது நான் சென்னை மாநகராட்சியினுடைய மன்றச் செயலாளராக இருந்தபொழுது அப்பாஸ் என்பவருக்கு ஒரு கடிதம் எழுதியதாகவும் அமைச்சரானதற்குப் பிறகு வழக்கறிஞர் சீனிவாசன் என்பவர் என் தந்தை தோப்பு வாங்குவதற்காக முன்பணம் கொடுத்திருப்பதாகவும் வழக்கறிஞர் சீனிவாசன் எழுதிய கடிதத்தைப் பற்றியும் கூறியிருந்தார்கள். அதற்கு மாலையில் நான் தன்னிலை விளக்கம் அளித்தேன். ஆற்காடு வீராசாமி அவர்கள் மீது நான் ஒரு மான நஷ்ட வழக்குத் தொடர்ந்து இருக்கிறேன். அந்த வழக்கு தொடர்பாக வழக்குமன்றத்தில் கடிதம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அப்படித் தாக்கல் செய்யப்பட்டு சாட்சியங்களாக இருக்கக் கூடிய விஷயம் அது. அதில் இன்னும் தீர்ப்பு கூறப்படவில்லை. விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு எப்படி அனுமதிக்கலாம் என்று தன்னிலை விளக்கத்தின் மூலம் கேட்டிருந்தேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 பிப்ரவரி 26] [திரு. கே. இராஜா முகமது]

அவர்கள் இரண்டு வரலாறுகளைப் பற்றிச் சொன்னார்கள். நான் அமைச்சரானபிறகு ஒரு வழக்கறிஞர் எழுதிய கடிதத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் மாநகராட்சி செயலாளராக இருந்தபோது இருந்த என்னுடைய வரலாற்றைச் சொன்னால் புரியும் என்று அவர்கள் சொன்னதற்கு * * * என்று சுட்டிக்காட்டினேனே தவிர வரலாறு ஒவ்வொருவருக்கும் சொந்தமானது.

<u>திரு. மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே கருணாநிதியின் * * * என்று சொன்னார்கள்.

மேலவையிலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தபொழுது— ஒலிபெருக்கியின் மூலம் என் அறையிலே இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது முதலமைச்சரும் மேலவையிலே இருந் உளி திருக்கிறார்கள்— ஆற்காடு விராசாமியும் மற்றவர்களும் கொடுத் வீச்சு சம்பவம் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் அருமை தார்கள். அப்பொழுது பேச எழுந்த நம்முடைய 'எதிர்க்கட்சி நண்பர் தம்பி இராஜா முகமது அவர்கள் சொன் தலைவர் கருணாநிதி' என்று அழுத்தந் திருத்தமாகச் கையமர்த்தி னார்கள். உடனடியாக முதலமைச்சர் அவரைக் எதிர்கட்சித் உட்காரவைத்துவிட்டு இவர் பேச ஆரம்பித்து இதுதான் தலைவர் கலைஞர் கருணாநிதி' என்று சொன்னார். கருணா அவருக்கும் இவருக்கும் உள்ள வித்தியாசம். நிதியின் * * * அல்ல.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : தலைவ வைக்க ரவர்களே இந்தப் பிரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளி எதிர்கட்சித் வேண்டுமென்று நான் விரும்புகிறேன். மாண்புமிகு மேடை தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இதைப்பற்றி மாண்புமிகு யிலே பேசுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். வாக்குறுதி அமைச்சர் இராஜா முகமது அவர்களுக்கு அந்த அளிக்கப்பட் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்பு நிரூபித்துக் டிருக்கிறது. சட்டமன்றத்திலும் தன்னைப்பற்றி கொள்ளலாம் கொள்வது என்றாலும் அமைச்சரவர்கள் நிரூபித்துக் மன்னிக்கட்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னை உங்களிடம் அனுமதி கேட்கிறேன்.

இந்த விவாதத்தில் * * * வரலாறு என்று சொன்ன வார்த்தைகளையெல்லாம் தயவு செய்து நீக்கிவிட வேண்டுமென்றும், அந்தப் பிரச்னையைத் தயவு செய்து நீக்கிவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். எதிர்கட்சித் தலைவரவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 26

இன்னொன்றைச் சொல்லவேண்டுமென்று விரும்பியிருந்தேன். முருகையன் அவர்களுடைய கொலையைப் பற்றி அவையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லும்பொழுது ஒன்றைச் சொன்னார்கள். ஒரே மனிதர் 34 இடங்களில் குத்த முடியுமா அல்லது தாக்க முடியுமா என்று சந்தேகத்தோடு கேட்டார்கள். அதனால் சந்தேகப்படுகிறேன் என்று சொன்னார்கள். அதோடு இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். மருத்துவர்கள் சொல்லியிருக்கின்றார்கள், வெவ்வேறு ஆயுதங்களால் நான்குக்கும் மேற்பட்ட வெவ்வேறு ஆயுதங்களால் தாக்கப்பட்டிருப்பதாக மருத்துவர்கள் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த மருத்துவருடைய குறிப்பு வந்திருக்கிறது. அதிலே அவர்கள் குறிப்பிடுகிறார்கள் நான்கு வெவ்வேறு விதமான ஆயுதங்கள் என்று குறிப்பிடவில்லை என்பதையும் 33 காயங்கள் இருந்தன என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கே அவர்கள் பார்வைக்கு வைக்கிறேன். நேரமில்லை என்பதால்தான் அதை அவர்களிடத்தில் கொடுக்கிறேன். . . . . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

[இரவு 8·00]

அத்தோடு அதை குறிப்பேட்டில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்ற வேண்டுகோளுடனேயே இந்தப் பத்திரிக்கை செய்தியைப் படிக்கிறேன். இது அவசியமானது அல்ல. தேவையானதும்—அல்ல. இது ஒரு பத்திரிக்கையில் வந்த செய்தி அவ்வளவுதான்.

<u>திரு. ரா. உமாநாத்</u>: ஒரு விஷயம். நாங்கள் முருகையன் படுகொலை சம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்த போது, கோர்ட்டில் இருக்கிறது— அதைப்பற்றி பேசுவது பாதகமாகும் என்று கூறினீர்கள். இன்று ஒரே ஆளாக குத்தியிருக்கலாம், வேறு பட்ட ஆயுதங்கள் இல்லை என்று டாக்டர் சர்ட்டிபிகேட் வந்து இருப்பதாகச் சொல்லப்பட்டது இந்த அவையின் முன்னால். இப்படி கோர்ட்டில் வழக்கு சம்பந்தமாக வந்திருக்கும் ரிப்போர்ட்டை இங்கே சொல்வது சரியாகுமா?

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u>: நாங்கள் அதை எதற்காக குறிப்பிட்டிருக்கிறோம் என்றால் அது பரவவேண்டும் என்பதற்காக அல்ல. பிரச்சினைகளை கொண்டு வந்ததற்காகத்தான் சொல்லியிருக்கிறேன். சொல்லாமல் இருந்தால் சொல்ல வேண்டும் என்று சொல்கிறீர்கள். சொன்னால் இப்படியா. . . .

<u>மாண்புமிகு திரு. மு. கருணாநிதி</u>: நான் இந்த ரிப்போர்ட்டை இங்கே படிப்பதற்கு நேரம் இல்லை. நம்பிக் கொடுத்தால் படித்து விட்டுத் தருகிறேன். இதிலே போட்டிருக்கிறது . . .

[1979 பிப்ரவரி 26

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u>: அவர் அதை வைத்துக் கொள்ளட்டும், படித்து விட்டுத் தரட்டும், அவர் அதை வைத்துக் கொள்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

பிரச்சினைகளை கொண்டு வந்ததால் எனக்கு பதில் சொல்ல வேண்டி வந்தது. அது மட்டும் இல்லை—இதை பத்திரிக்கைகளிலேயும் போட்டிருக்கிறார்கள். அதனால் இதில் இரகசியம் ஒன்றும் இல்லை என்றுதான் இந்த ரிப்போர்ட்டைப் பற்றிச் சொன்னேன்.

ஆனால் ஒருவர் மட்டும்தான் அப்படிச் செய்ய முடியுமா என்று கேட்டால் அதற்கு நான் என்ன செய்வது? ஒரு சந்தேகத்தை இங்கே கிளப்பி விட்டார்கள். அதற்கு நான் ஒரு பத்திரிக்கை செய்தியை படித்து காட்டுவதன் மூலம் உங்களுக்கு விளக்கம் தரலாம் என்று நினைக்கிறேன். ***

இது வெறும்பத்திரிக்கைச் செய்திதான். இதையே பதிலாக எண்ண வேண்டாம். இதுபோன்ற செய்திகள் எல்லாம் இப்பொழுது அதிமாக வந்துகொண்டுதான் இருக்கின்றன.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பத்திரிக்கைச் செய்தி படிக்கப்பட்டதை குறிப்பேட்டில் இருந்து நீக்கிவிட உத்தரவு இடுகிறேன்.

<u>திரு. துரை கோவிந்தராசன்</u>: அவருடைய மனைவியை விசாரிக்கச் சொல்லி சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன சொல்கிறீர்கள்?

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u>: இந்தப் பத்திரிக்கைச் செய்தியை குறிப்பிடத்தான் விரும்பினேன். ஆனால் நான் இதில் தலையிட விரும்பவில்லை. இதைபற்றி ...காகச் ...போ விரும்பவில்லை. யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், நான் அந்த அதிகாரியுடன் அதைப்பற்றி பேசியிருப்பதாக சொல்லமுடியுமா? அதைப்பற்றி நான் யாருடனாவது தொடர்பு கொண்டதாகச் சொல்ல முடியுமா? ஆகவே நான் சொல்லுகிறேன் அவர்கள் என்ன செய்கிறார்களோ அந்த அதிகாரிகள் இந்த விஷயத்தில் என்ன செய்கிறார்களோ அது பற்றிக்கூட எனக்குத் தெரியாது. அதிகாரிகள் உண்மையில் தவறு செய்திருந்தால் அதற்கேற்ற தண்டனை அவர்களுக்கும் யாராக இருந்தாலும் சரி வழங்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆனால் மக்கள் மத்தியில் இப்படி ஒரு பிரச்சாரத்தை சொல்லிக்கொண்டு போனால் அகற

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க இந்தப பகுதி அகற்றப்பட்டது.

எதையோ மறைக்கிறார்கள். அவர்கள் இப்படி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நீதியை நிலைநாட்டாமல் இருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டுகள் மக்கள் மத்தியில் பரவி விடக்கூடாது என்ற எண்ணத்தில் தான் இதை படிக்கவேண்டி வந்தது....

திரு. மு. அம்பிகாபதி: பாராளுமன்ற உறுப்பினர் கொலை நடந்த பிறகு அதில் நேரிடையாக தலையிட வேண்டிய அவசியம் இருக்கிறபோது நான் இதில் தலையிட விரும்பவில்லை என்றால் என்ன அர்த்தம்;

திரு சோ. அழகர்சாமி: திரு. அம்பிகாபதி கேட்டால்.....
(ஒரு குரல்—உட்காருடா).

திரு மு. அம்பிகாபதி: உட்கார முடியாது. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்— பாராளுமன்ற உறுப்பினர், கொலை வழக்கைப்பற்றி நாங்கள் கொதித்துக் கொண்டிருக்கிறோம்— இந்த நேரத்தில் உங்களுக்கு கிண்டலும் கேலியுமா......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகர்சாமி தயவு செய்து அமருங்கள். உணர்ச்சி வசப்படாமல் இருங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: இந்த அவையில் பேச உறுப்பினர்கள் அனைவருக்கும் உரிமையுண்டு. நாங்கள் உட்காரவில்லை, வெளி நடப்பு செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சிரித்திருக்க கூடாது. அவர்கள் சிரித்தது தவறு தான் என்று உணர்கிறேன். அதற்காக உண்மையிலேயே வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்....

திரு. எம்.ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, சிரிப்பது என்பது பாராளுமன்றத்திலோ சட்ட மன்றத்திலோ நடை பெறக்கூடாத நடக்காத ஒன்று அல்ல. ஆனால் உட்காருடா என்று மரியாதைக்குறைவாக ஆளும் கட்சித் தரப்பில் உள்ள உறுப்பினர்கள் சொல்லிக்கொண்டிருப்பது நல்லதல்ல. இது இந்த அவையின் பண்பாட்டிற்கே நல்லதா என்ற சந்தேகத்தை ஏற் படுத்துகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே அதற்காக தமது வருத்தத்தை தெரிவித்துக் கொண்டார்கள். இதை மேலும் கிளறுவது சரியல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்வது. நான் இங்கே படித்த பத்திரிக்கை செய்தி குறிப்பேட்டில் வரவேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஆகவேதான் குறிப்பேட்டில் இருந்த எடுத்து விடலாம் என்று தெரிவித்தேன். என் மீது தவறான கருத்தை வெளியிடுகிறவர்கள் நான் குறுக்கிட்டால் இன்னும் என்ன பேசுவார்களோ என்கிற சந்தேகத்திற்கு உள்ளாகும் நிலையில் நான் அதில் தலையிடாமல் தவறுகள் நேர்ந்தால் அவர்கள் தான் பொறுப்பு என்று கட்டளையிட்டு இருக்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நானே அவ்வப்போது கூப்பிட்டு அழைத்துப் பேசிக் கொண்டு இருந்தேன் என்றால் எவ்வளவு பெரிய சுமை என் மீது சுமத்தப்பட்டு இருக்கும் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருப்பார்கள் என்று நான் அறிவேன். ஆகவே நான் இங்கே எடுத்துக் காட்டியதற்குக் காரணம் அந்தக் கொலைக்கு யார் காரணமாக இருந்தாலும் அவர்களைக் கண்டு பிடித்து நட வடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே வெளியேறியவர்கள் திரும்பி வந்து இந்த மன்றத்தின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. துரை முருகன் திரு. கா. சுப்ரவேலு ஆகியோர் எழுந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருவரும் உட்காருங்கள்.

திரு. கா. சுப்ரவேலு: சார், நான் அடிக்கடி எழுந்து கேட்பது கிடையாது. ஆகவே அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாராளுமன்ற உறுப்பினர் கொலை வழக்கில் உண்மைகள் மறைக்கப்பட்டு இருக்கின்றன. அவருடைய மனைவி விசாரிக்கப்படவில்லை. அங்கேயிருந்த பஞ்சாயத்தார் ஸ்டேட்மெண்ட்டை போலீசார் எழுதிக் கொடுத்து அவர்கள் கையெழுத்துப் போட மறுத்துவிட்டார்கள். உடனடியாக அவருடைய மனைவி விசாரிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே நான் மீண்டும் சொல்கிறேன், இப்படிப்பட்ட கேள்விகளும் என்னுடைய பதிலும் அந்த வழக்குக்கு உதவி செய்யும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் நம்பமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே இப்படி கேள்வி கேட்பதை விட்டு விட்டு வேறு வகையில் கேள்விகளைக் கேட்டால் நான் பதில் சொல்ல வசதியாக இருக்கும். இங்கே குற்றங்கள், குறைகள் சாட்டுகிறபோது என்னென்ன நடைபெற்று இருக்கிறது என்று விசாரணைக்கு முன்பு சொல்லவேண்டும் என்று நிர்பந்திப்பது நியாயம்தானா என்பதை சிந்தித்துப் பார்க்க

வேண்டும். அப்படி தான் நாங்கள் வற்புறுத்துவோம் என்று சொன்னால் நான் பேசாமல் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதில் ஒரு வேளை அந்த வழக்கிற்கு பாதகமாக இருந்தால் அது குற்றவாளி தப்பிப்பதற்கு வசதியாகப் பயன்பட்டுவிட்டால் அது நீதிக்கு எவ்வளவு பெரிய இழுக்கை ஏற்படுத்தும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எதுவும் பேசாமல் இருக்கமுடியாது என்கிற நிலையில் தவிர்க்கமுடியாத அந்தச் சூழ் நிலையில் இருப்பதைச் சொல்கிறேன். முதலில் நான் பதில் சொல்ல வேண்டும் என்று எண்ணவில்லை. அப்படிப்பட்ட பிரச்சினைகளை நான் தொடக்கூடாது என்று வைத்து இருந்தேன். இருப்பினும் மாமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தி தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பியதால் இதைச் சொன்னேன்.

திரு. மு. கருணாநிதி : நான் கேள்வியாக அல்ல முதலமைச்சரின் கவனத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். ஒரு போலீஸ் புலன் விசாரணையில் கொலை வழக்கு நடைபெறுகிற நேரத்தில் கொலை செய்யப்பட்டவருடைய மனைவியைக் கூட நேற்று வரையில் விசாரிக்கவில்லை என்று கொலை செய்யப்பட்டவரின் சகோதரர் எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறார். அதைக் காலையில் படித்துக் காட்டினேன். அதை நான் முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்த விளக்கத்தை நான் மனதில் பதிய வைத்துக் கொண்டு இருக்கிறேன் என்று சொன்னால் போதுமானது. அவருக்கு அது புரியும் என்று நான் கருதுகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே நான் இந்தப் பிரச்சினையில் கேட்க விரும்பவில்லை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நேரம் இல்லை, உட்காருங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கேள்வி கேட்கலாம். நேரம் இல்லை. இன்னும் தீர்மானத்தை முன்மொழிந்தவர்களுக்கு பதில் சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டும்.

திரு. க. சுப்பு : ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்டு விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு ஒரு கேள்வி இருக்கலாம். ஒவ்வொருவரும் ஒரு கேள்வி என்றால் நேரம் இல்லை. இருக்கிற நேரத்திற்குள் நான் கட்டுப்படுத்தி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு தர வேண்டியிருக்கிறது.

[இரவு 8-10]

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல அறிவிப்புகளை இங்கே தந்தார்கள். ஆனால் தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள்- டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை தொழிலாளர்கள், பல்லவன் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள், டி. வி. எஸ். தொழிலாளர்கள் இப்படி பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளைத் திரும்பப் பெற உத்தரவிட்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இன்று கூட பல வழக்குகள் திரும்பப்பெறப்படவில்லை. அதற்குக் காரணம் போலீஸ் தரப்பைப் பொறுத்தவரை வன்முறை என்று சொன்னதால் அவர்கள் எல்லாவற்றையுமே அந்த வன்முறைக்குள் அடக்கிவிட்டார்கள். அதனால் முதலமைச்சர் அறிவித்த பிறகும் வன்முறைச் சம்பவம் என்ற காரணத்தைக் காட்டி வழக்குகளைத் திரும்பப் பெறாமல் இருக்கிறார்கள். ஆகவே பழைய கதைக்குப் போகாமல் தொழிலாளர்கள் மீது இருக்கிற வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்குவோம் என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் ஒரு கருத்தை வைத்துத்தான் அதைச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் இந்த நிலையை வெளியிட்டதற்குப் பிறகு ஒன்றை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். உடனடியாக வழக்குகள் சம்பந்தப்பட்ட 'ஃபைல்'களை எல்லாம் வரவழைத்து உண்மையாகவே சில குறிப்பிட்ட வன்முறைச் சம்பவங்களில் யார் யார் ஈடுபட்டார்கள் என்பதைப் பரிசீலனை செய்து பார்த்து, குறைந்தபட்ச தவறு செய்தவர்கள் மீதுள்ள வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்க முயற்சி செய்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே. ஒரே ஒரு கருத்தை மட்டும் கூற வாய்ப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் இல்லை. அனுமதிக்க முடியாது. தயவு செய்து உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : நான் அடிக்கடி குறுக்கிடவில்லை. நான் எழுப்பிய ஒரு ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். நான் எழுப்பிய ஒரு பிரச்சினைக்கு முதலமைச்சர் பதில் சொல்லவில்லை. எங்கள் தலைவர் மீது சுழி வீசப்பட்டது பற்றி கூறினோம். அதற்கு எந்தவிதமான பதிலும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்போது பேசியது முறையா? என்னுடைய அனுமதி இல்லாமலேயே நீங்கள் பேசியிருக்கிறீர்கள். (திரு. துரை முருகன் நின்று கொண்டிருந்தார்) மேலும் நான் அனுமதிக்க மாட்டேன். உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : என்னுடைய கருத்தைச் சொல்லி விடுங்கள். நான் சொல்லப்போவது என்ன என்பதைத் தெரியாமலே உட்காரு. உட்காரு என்றால் என்ன அர்த்தம்? (மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் உட்காரும்படி சைகை காட்டினார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வதை நீங்கள் கேட்க மாட்டீர்கள். அங்கே பாருங்கள். உங்கள் தலைவர் சொல்வதையாவது கேளுங்கள். அவர் சொல்லியும் கேட்கமாட்டேன் என்றால் உங்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆண்டவன்தான் உங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று' சொன்னீர்கள். நான் ஏற்கனவே ஆண்டவன். அதனால் காப்பாற்றுவேன். (பலத்த சிரிப்பு.)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, என் தம்பி துரை முருகனுக்கு இப்படி ஒரு ஆண்டவன் கிடைத்ததற்கு மிக்க மகிழ்ச்சி; அதற்காக என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் குறிப்பிட்டதும் வழக்குமன்றத்திலே இருக்கிறது என்ற காரணத்தால் மட்டுமல்ல; அதுபற்றி பேச ஆரம்பித்தால் இந்த அவையிலே மீண்டும் என்ன நடைபெறும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். நான் ஒன்றைச் சொல்லும்போது அவையிலே எப்படியும் வேறுபட்ட கருத்து வரத்தான் செய்யும். நான் தலையீடு இல்லை என்று விவாதித்து எப்படி தலையீடு இல்லை என்றெல்லாம் சொல்ல ஆரம்பித்தால் அதற்கு முடிவே இருக்காது. நான் வேண்டுமென்றே அந்தப் பிரச்னையை நீக்கிவிடவில்லை. நேரம் இல்லை என்பதால் தள்ளி விட்டிருக்கிறேன். உங்களுடைய கருத்துகூட அதில் இருக்கிறது. பட்ஜெட்டில் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். வயதிலே குறைந்தவராக இருந்தாலும் யோசனை மற்றவர்களுக்குப் பயன்படக் கூடிய வகையில் இருக்கிறது. உங்கள் பக்கம் நியாயம் இருந்தால் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? (சொல்ல விடமாட்டேன் என்கிறாரே தலைவர்.) தலைவர் அப்படித்தான் இருப்பார். தலைவரோடு ஒத்துப்போய் பிரச்னையை எடுத்து வைக்க முயற்சிக்க வேண்டும்.

ஆக, நீங்கள் குறிப்பிட்ட பிரச்னையைப் பற்றி நான் இங்கே எதுவும் சொல்லவில்லை என்பதால் நான் அதை அலட்சியப்படுத்துகிறேன் என்று பொருளல்ல. எதிர்க்கட்சித் தலைவர்மீது உளி வீசப்பட்டது என்பதை கேலி செய்தவர்களைக் கண்டிப்பேனே தவிர மன்னிக்க மாட்டேன் என்று மட்டும் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞரை தாக்க முயற்சி செய்வதை மட்டுமல்ல, அல்லது நண்பர் உமாநாத் வீட்டில் நடந்ததைப்போல நடப்பதையும் நான் எப்போதும் ஏற்றுக் கொண்டவன் அல்ல. இன்னொன்றையும் சொன்னார்கள். உமாநாத் அவர்கள் வீட்டில் சோடா பாட்டிலை எறிந்தவர்களை விட்டுவிட்டு யார்மீதோ கேஸ் போடுகிறார்கள் என்று சொன்னதை நான் கவனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்பேன் என்ற உறுதியை மட்டும் இப்போது தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் திரு. இராஜா முகமது அவர்களும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்ட * * * வார்த்தைகள் அவை மரபுக்கு உகந்தவையாக இல்லை என்பதால் அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, * *

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே,**,

திரு. கி. ஆறுமுகம் : தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சரவர்கள் * * அடக்கமாக இருக்க வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டையும் சேர்த்துதான் சொல்கிறேன். அந்த வரலாறு பூர்வீகம் ஆகியவைகளை..**

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்து அதை நீங்கள் கேட்டுக் கொள்ள நான் விளக்கம் கூறிய பிறகு மறுபடியும் அமைச்சரவர்கள் எழுந்து * * * என்று குறிப்பிட்டார். அவ்வாறு அவர் குறிப்பிட்டதற்கு அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவரிடமிருந்து மன்னிப்புக் கடிதம் வாங்கி இங்கே வைக்க வேண்டும். முதலமைச்சரவர்கள் அதைச் சொல்லும்வரை நாங்கள் இங்கிருந்து வெளியேற மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1979 பிப்ரவரி 26

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. அவர் சொன்ன அந்த வார்த்தைக்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாவற்றையும் சேர்த்துத் தான் நீக்கும்படி உத்தரவிடுகிறேன். * *

அடுத்து நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் தீர்மானங்களை முன்மொழிந்தவர்கள் சுருக்கமாகப் பேசினால் நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நீண்ட ஒரு சொற்பொழிவை இங்கே ஆற்றி இருக்கிறார்கள். ஆகவே நானும் பேசி இந்த அவையினுடைய கோபத்திற்கு ஆளாக விரும்பவில்லை. உறுப்பினர்கள் எல்லோரும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித்தர தயாராக இருக்கிறார்கள். அதற்கு நான் தடையாக இருக்கக்கூடாது. முதல்வர் அவர்கள் அளித்த விளக்கங்கள் திருப்திகரமாக இல்லாத காரணத்தால் இந்தத் தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசுகிறபோது மேற்கு வங்கத்தில் நடந்து இருக்கக்கூடிய கொலைகள்பற்றிய கணக்குகளை எல்லாம் சொன்னார்கள். மேற்கு வங்கத்திலே நடப்பதை ஃபேஸ் பண்ணத் தயங்கக் கூடியவர்கள் அல்ல நாங்கள். ஆனால் சொல்லாத ஒன்றைச் சொன்னதாகச் சொல்லி அந்த ஆர்க்யூமெண்டை டெமாலிஷ் பண்ணக்கூடிய அளவிலே சொல்லப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டின்போது இதுபற்றிப் பேசிக் கொள்கிறேன்.

அடுத்து இரண்டாவது விஷயம், இந்த அரசு தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கொண்டிருக்கிறது என்பது. அது குறித்து முதலமைச்சரவர்கள் பேசுகிறபோது நான் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். அப்போது தொழிலாளர் விரோதக் கொள்கையைப் பொறுத்தவரைக்கும் ரிவர்சலாக ஒரு மாறுதலைக்கூட தெரிவிப்பதற்கு அரசாங்கம் தயார் என்ற அறிகுறியே தென்படவில்லை என்று சொல்ல விரும்புறேன். நல்ல சட்டங்கள் வரும்போது நாங்கள் கட்டாயம் ஆதரிப்போம். ஆனால் உங்களுடைய தொழிலாளர் விரோதப் பாலிஸியிலே ஒரு சேஞ்ச் கொண்டுவருவதற்குரிய அறிகுறியே இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அடுத்து சிம்கோ விஷயத்தைப் பற்றிச் சொல்கிறேன். அந்த விவகாரம் ஆரம்பித்து 79ஆவது நாள் வரைக்கும் அரசு தலையிடவே இல்லை. 79-ஆவது நாள் நான் ஒரு கடிதம் எழுதிய பிறகு முதலமைச்சரவர்கள் தலையிட்டார். அப்போது என்ன சொன்னார். 12(3) செட்டில்மெண்ட் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இர்ரெஸ்பெக்ட்டிவ் ஆஃப் தட், செட்டில் பண்ணுங்கள் என்று சொல்லிவிட்டார். அது 12 ஆம் தேதி ஆரம்பித்தது. இன்று 26ஆம் தேதி ஸ்டில் கோயிங் ஆன், கோயிங் ஆன். இப்போது சமீபத்தில் நம்முடைய முதலமைச்சரவர்கள் டெல்லியிலே இருந்தபோது கூட பேச்சு வார்த்தை நடந்தது. அதற்குப் பிறகு 2, 3 நாட்களிலே முடிவு தெரியும் என்று எதிர்பார்த்தோம். பிறகு கடைசியில் முதலாளிகள் ஹைகோர்ட்டிற்குச் சென்று ஸ்டே வாங்குகின்ற அளவிற்கு முதலாளிகளுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது.

[இரவு 8–20]

ஆகவே காலையில் எழுப்பியபோதுகூட திரு. இராகவானந்தம் அவர்கள் குறிப்பிட்டார்கள். முதல் அமைச்சர் அவர்கள் வந்தபிறகுதான் முடிவைச் சொல்வார்கள் என்று சொன்னார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறும்போது 'பர்ஸ்யூ' செய்கிறேன் என்று சொல்கிறார்கள். இன்னும் 'பர்ஸ்யூ' செய்கிறேன் என்று சொல்வது ஸ்ட்ரைக்குக்கும் பிறகு இப்படி சொல்வது முதலாளிகளுக்குக் கதவைத் திறந்துவிடுவது போலாகும். ஆகவே நம்பிக்கையை இழந்து விட்டேன் என்று வேதனையோடு சொல்கிறேன். 126 பேர்கள் பட்டினி கிடக்கிறார்கள். இது ஸ்ட்ரைக்கை உடைக்கும் முயற்சியோ என்ற அச்சம். கேஸ் விஷயமாக வாபஸ் வாங்குவது பற்றி பரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். போட வேண்டிய கேஸ்கள் ஏன் போடவில்லை? டி.வி.எஸ். சிவகுமார், இன்னும் ஆறு கேஸ்கள்பற்றிச் சொல்லியிருக்கிறேன். பகிரங்கமாக வெட்டியதை டி.எஸ்.பி. பார்த்ததை சபையில் சொன்னேன். இந்தத் தீர்மானத்தின்மீதும் சொன்னேன். முதல் அமைச்சர் அவர்களிடம் நேரடியாக ப்ரூப் காட்டினேன். ஏன் கேஸ் போடவில்லை? அதற்கு பதில் சொல்லவில்லை. வன்முறைகள் நடந்தும், போலீஸ் அதிாரிகள் பார்த்திருந்தும் கேஸ் போடாமல் இருப்பது முதல் அமச்சர் அவர்களுக்குத் தெரிந்தும் பதில் சொல்லாமல் இருக்கிற ர்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தெரிந்தும் பதில் அளிக்காமல் இருப்பது என்று கூறுவது அவர்களுடைய தகுதிக்கு ஏற்ற காரியமில்லை. எனக்குத் தெரிந்திருந்தால் நிச்சயமாக நடவடிக்கைகள் எடுத்திருப்பேன் என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : நான் சொன்ன கருத்து என் தகுதிக்கு ஏற்றதல்ல என்று சொன்னார்கள். நான் ''ஃபாக்ட்ஸை'' நிச்சயப்படுத்தியபிறகுதான் பேசுவேன். சில சமயங்களில் தவறு ஏற்படலாம். சிவகுமார் விஷயத்தில் எக்ஸ்ரே போட்டோவோடு இங்கு பேசியும் பதில் கிடைக்கவில்லை என்று சொல்லும்போது, உங்கள் மாம்பலம் ஆபிஸுக்கு வந்து நேரடியாக சிவகுமார் விஷயத்தைப் பற்றியும் மற்ற ஐந்தாறு பேர்கள் தாக்கப்பட்டதுபற்றி சொல்லியும், அதற்கு நடவடிக்கைகள் எடுக்கிறேன் என்று சொல்லியும்—அதைத்தான் சொல்கிறேன். தெரிந்தும் பதில் சொல்லாமல் இருக்கிறார்கள் என்று.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்கிறார்கள் என்று தெரிந்தும் என்ற பொருள் அதில் வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்கிறார்கள் என்பதை இப்போது உணருகிறேன். நடவடிக்கை எடுக்காவிட்டால் நான் நடவடிக்கைகள் எடுப்பேன்.

திரு. ரா. உமாநாத் : கடைசியாக இந்த சென்ஷர் மோஷனை வலியுறுத்துவதின்மூலம் அரசாங்கம் மீண்டும் தன்னுடைய தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்கும் மாற்றுவதற்கும் வாய்ப்பளிக்கும் என்ற முறையில் வலியுறுத்துகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த அரசின் சட்டம் ஒழுங்குக் கொள்கையை இந்த அவை நிராகரிக்கிறது என்ற கண்டனத் தீர்மானத்தை நான் முன்மொழிந்து இங்கே பேசியிருக்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நான் எடுத்துக் கூறிய கருத்துக்கள் பற்றிய ஒரு வார்த்தைகூட கூறவில்லை என்பதை இந்த மன்றம் நன்கு உணருகிறது. இந்த மாநில மக்களும் நன்றாக அறிகிறார்கள். கடந்த மாதம் 20-ம் தேதி இந்த மாநிலத்தில் நடைபெற்ற வன்முறைகள் எல்லாம் அடுக்கடுக்காக சுட்டிக்காட்டப்பட்டன. அதற்கு ஆதாரமாக பல பத்திரிகைகளையும் படித்துக்காட்டினேன். கடைசியாக நாகர்கோவிலில் நடைபெற்ற கோர நிகழ்ச்சி, ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்த ஏழு பேர்கள் கொளுத்தி கொலை செய்யப்பட்டும், அடுத்து அந்தத் தீ விபத்தில் காயம்பட்டவர்கள் மூன்று பேர்கள் மருத்துவ மனையில் இறந்ததும் ஆக பத்து பேர்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியை இங்கு எடுத்துக் கூறினேன். ஆனால் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், இந்த நாட்டின் முதல் மனிதராக இன்று நாட்டிலிருக்கிற நாலரைக் கோடி மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய மிகப் பெரிய பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய முதல் அமைச்சர் அவர்கள்...

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்குமானால், இன்னும் பல விளக்கங்களை எல்லாம் சொல்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். எவ்வளவோ விஷ யங்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் போய்விடுகிறது என்று ஏற்கனவே நான் குறிப்பிட்டேன். ஒன்றை மட்டும் நான் மீண் டும் சொல்ல விரும்புகிறேன். எந்தவிதமான வேறுபாடும் கரு தாமல், இங்கு கூறப்பட்ட மற்ற காரியங்களுக்கெல்லாம் நான் எடுத்திருக்கிறேனோ—அந்த வகையில் இங்கு கூறப்பட்ட அத் தனைக்கும் நான் நடவடிக்கை எடுப்பேன். இந்த நிலையை உணர்ந்து மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொன்ன கருத்துக்களுக்கு நான் பதில் சொல்லவேயில்லை என்ற நிலை வரக்கூடாது. இன்னும் எனக்கு பேசுவதற்கு இந்த மாமன்றம் அனுமதிக்குமானால் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஏறத்தாழ ஐந்தேகால் மணி நேரம் பதில் சொன்ன முதலமைச்சர் அவர்கள், பத்து உயிர்களைக் கொள்ளை கொண்ட இந்த நிகழ்ச்சியைப் பற்றி எதுவும் சொல்ல வில்லை. சொன்னால் என்ன? அது மட்டுமல்ல, இந்த நிகழ்ச் சிக்கு நியாயம் கற்பித்து அதற்குப் பதிலாக முதுகளத்தூர் நிகழ்ச் சியை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இப்படி சொன்னதை நாங்கள் மட்டுமல்ல, இந்த மாநிலத்திலுள்ள நாலரைக் கோடி தமிழ் மக்களும் அறியத்தான் போகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் முதுகளத்தூர் நிகழ்ச்சிக்கு கடமைப்பட்டவன் அல்ல. நான் இந்த அரசின் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தேன் என்றால் இந்த நாட்டில் ஏராள மான வன்முறை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய வன்முறை நிகழ்ச்சிகளை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறேன். அதற்கான ஆதாரங்க ளையும் கூறியிருக்கிறேன். அதையெல்லாம் சொல்வதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. அதனால் செய்திருக்கிறேன். இன்றையதினம் ஐந்தேகால் மணி நேரம் உரை யாற்றிய முதலமைச்சர் இப்படி உயிரிழந்தவர்களைப்பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை என்றால். அதைப்பற்றி என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அங்கு இறந்தவர்கள் எல்லாம் மனிதர்கள் அல்ல, பறவைகள் என்று நினைக்கிறார்கள் என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. நான் ஏதோ கொலைகார அரசு என்று சொன்னதற்காக வருத்தப் பட்டுக் கொண்டார்கள். ஆனால் ஏன் அவ்வாறு சொன்னேன் என்பதற்கான காரணங்களை எல்லாம் ஆதாரத்தோடு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதையெல்லாம் நான் மீண்டும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இந்த நாட்டிலுள்ள நிலைமைகளைப்பற்றி

தெரிந்து இருக்கவேண்டுமே தவிர முதுகளத்தூர் நிகழ்ச்சியைப் பற்றி இப்போது சொல்லவேண்டிய தேவையில்லை. முதலமைச்சர் அவர்கள் சொல்ல வந்ததிலிருந்து இப்போது நடைபெற்ற காரியங்களை எல்லாம் ஜஸ்டிஃபை செய்வதற்கு ஒரு மாநிலத்தில் முதலமைச்சர் இப்படி சொல்வார் என்று எதிர்பார்க்கவில்லை.... Maintenance of law and order is the basic responsibility of the Government. இந்த மாநிலத்தில் இருக்கின்ற மக்களுடைய உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இல்லையா என்று கேட்டால், அதற்கு என்றோ ஒரு நாள் நடந்த சம்பவத்தை கூறி, அப்போது நடக்கவில்லையா என்று சொல்லிவிட்டால் அது நியாயமாக ஆகாது. எப்போதோ நடந்த நிகழ்ச்சியை இப்போது எடுத்துச் சொல்லி தப்பித்துக்கொள்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தலைவர் அவர்களே, நான் கூறிக் கொள்வது என்னவென்றால், நிச்சயமாக இந்த * * * * * * என்பதை இப்போதும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker he has used the word * * * " * * * * " is equally an abetment. Abetment is an offence The word " * * ", may be expunged from the proceedings.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் ஆத்திரத்தில் தான் என்ன பேசுகிறேன் என்பதில் கவனம் செலுத்தவில்லை என்று நினைக்கிறேன். ஆத்திரத்தில் இந்த நிகழ்ச்சிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் காரணம் என்று நேரடியாக சொல்லி பேசுவது சரியல்ல. ஆகவே அவர்களது பேச்சில் * * * என்று சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி உத்தரவிடுகின்றேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : நான் முதலமைச்சர் என்ற எண்ணத்தில் சொல்லவில்லை. இந்த அமைச்சரவைதான் என்ற எண்ணத்தில்தான் சொல்லுகிறேன். ஏனென்றால் அந்த அளவுக்கு இன்றைக்குச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நாட்டுக்கு ஜனநாயகத்தை வாங்கிக் கொடுத்த ஜனதாக் கட்சியின் கொடிகள் இன்றைக்கு பல இடங்களில் சுட்டு எரிக்கப்படுகின்றன. எத்தனையோ கொடி மரங்கள் வெட்டப்படுகின்றன, போலீஸ் அதிகாரிகளின் முன்னிலையில் இவைகள் எல்லாம் நடந்திருக்கின்றன என்று சொன்னால், தலைவர் அவர்களே, இத்தனை நிகழ்ச்சிகளும் ஆளும் கட்சியின் அனுகூலத்தோடுதான் நடந்திருக்கின்றன என்பதைக் கூறிக் கொள்ள

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பெற்றது.

[இரவு 8-30]

விரும்புகிறேன். அடுத்து, நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.
'' டபுள் ஸ்டாண்டர்டு '' கொள்கையை கடைபிடிப்பதாக நான்
சொன்னேன். அதற்கான விளக்கம் இங்கே கூறவில்லை. இன்
னொன்றையும் நான் கூறினேன். '' ஊழல் ஆட்சி '' என்றும்
கூறினேன். சர்க்காரியா கமிஷன் அறிக்கை என்ன ஆயிற்று?
இவற்றுக்கெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூற நேரம்
இல்லை. ஆகவே, இந்த நாட்டு மக்கள் அறிந்து கொள்வார்கள்.
அறிந்து கொள்ளட்டும். மக்கள் முடிவு செய்யட்டும் என்று
சொல்லி, என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்தி அமர்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : தலைவர்
அவர்களே, ஒரு விளக்கம். எங்கள் மீது சுமத்தப்பட்ட ''கொலை
கார ஆட்சி '' என்ற வார்த்தையை நான் மன வருத்தத்தோடு
ஏற்றுக் கொள்கிறேன். அதனால் இப்போது நாட்டிலே நடக்
கின்ற வன்முறைகளை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்றோ,
கொலைகளை நாங்கள் வரவேற்கிறோம் என்றோ சொல்லவில்லை.
ஒரு நிகழ்ச்சிகூட நடைபெறாமல் இருந்தால்தான் எங்களுக்கு
நிம்மதியாக இருக்கும் என்ற நிலைமையை நாங்கள் மிகத் தெளி
வாகச் சொன்னோம். அதைச் சொல்லாமல், இங்கே நடந்தவை
களை கற்பனையாகச் சொல்லும் வகையில், 'நீங்கள் இன்றைய
தினம் குற்றம் சாட்டுவது பொருத்தமல்ல என்பதைச் சுட்டிக்
காட்டி, தலைவர் அவர்கள் மூலம் மறுபடியும் சொல்லிக்கொள்ள
விரும்புகின்றேன். அவர்கள் விரும்பினால் அவர்கள் சலித்துப்
போகவில்லை என்று சொன்னால், என் பதிலை அவர்கள் பெற
லாம் ; தரலாம்,

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : பேரவைத தலைவர் அவர்களே,
நானும் மிகமிகச் சுருக்கமாக ஒருசில வார்த்தைகள் சொல்ல
ஆசைப்படுகிறேன். குரலும் இல்லை. மாண்புமிகு முதல் அமைச்சர்
அவர்களுடைய நீண்ட பதிலில் நான் பாராட்ட
வேண்டிய ஒரே அம்சம் இருக்கிறது. இந்த மன்றத்தில் சுதந்திரம்
பெற்று முதல் சட்டமன்றம் கூடிய பிறகு, 3 முதல் அமைச்சர்கள்
இந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஆட்சி
நடந்து கொண்டிருந்தபோது, எல்லோராலும் பாராட்டப்படக்
கூடிய எதிர்க் கட்சித் தலைவராக இந்த மன்றத்திலே பணியாற்
றிய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் திருவுருவப்
படம் இங்கே திறந்து வைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான்
அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், அவர்களுடைய திருவுருவப் படத்தை
திறந்துவைக்க வேண்டுமென்பதில் நம்மைப் போன்றவர்களுக்
குத்தான விருப்பம். ஆனால் அவருடைய விருப்பம் அல்ல

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 பிப்ரவரி 26

நம்முடைய விருப்பமாக இதை நாம் செய்கிறோம். ஆனால்,
அவருடைய விருப்பம் எதுவாக இருந்தது ? வாழ்க்கை முழுவதும்
அவர்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற நலிந்த, மெலிந்த, அடக்கப்
பட்டு, ஒடுக்கப்பட்டுள்ள சிறுபான்மை மக்களுக்கு வாழ்வு வேண்
டும், அப்படிக் கிடைக்கின்ற வாழ்வில் அமைதி வேண்டும் என்
பதற்காக அவர்கள் வாழ்ந்தார்கள். அதுதான் அவருடைய
விருப்பமாக இருந்தது. நீங்கள் அவரது திருவுருவப்
படத்தை திறந்து வைக்கிறீர்கள். அதே நேரத்தில், எந்தக்
கொள்கைக்காக, தத்துவத்திற்காக, லட்சியத்திற்காக அந்தப்
பெருமகனார் வாழ்ந்தாரோ, அந்த வாழ்க்கைக்குரிய லட்சியம்
இன்றைக்கு நாட்டிலே இல்லை. அதற்கு மாறுபட்ட சூழ்நிலை
தான் இருக்கிறது. அதைக் காப்பாற்றித் தாருங்கள் என்பதற்
காகத் தான், அதை உணர்த்துவதற்காகத்தான் இந்தக் கண்டனத்
தீர்மானத்தைக் கொடுத்தேன். நான் மீண்டும் வலியுறுத்திச்
சொல்கிறேன். அந்தப் பெருமகனார் வாழ்ந்த, லட்சியமாகக்
கொண்டு உழைத்த அந்தச் சிறுபான்மையோருக்கு வாழ்வு தாருங்
கள். இதைச் சொல்வதால், மற்றவர்களை அழித்து அல்ல !
மற்றவர்கள் வாய்ப்பைக் குறைதது அல்ல ; மற்றவர்கள் வாழ்
வுக்கு ஒரு வாய்ப்பு இருக்கும்போது, இந்தச் சிறுபான்மை மக்க
ளுக்கும் வாழ்வு தாருங்கள். அந்த வாழ்வு அமைதியான வாழ்
வாக இருக்கட்டும். அவர்கள் எதற்காக வாழ்ந்தார்களோ,
அந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதன் மூலம்தான், நாம்
அவர்களுக்கு உண்மையான அஞ்சலி செலுத்தியதாகும். அதைத்
தான் காயிதே மில்லத் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை
மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

முதல் அமைச்சர் அவர்கள் இங்கே நான் எழுப்பிய பிரச்னை
களுக்கு எதற்கும் பதில் அளித்ததாக நான் நினைக்கவில்லை.
அதைப்பற்றி எனக்கு ஆச்சரியமோ, அதிர்ச்சியோ ஒன்றுமில்லை.
நான் எதிர்பார்த்த வகையில்தான் அவர்கள் பதில் அளித்திருக்
கிறார்கள். மேலும், இந்த அவையிலே நாம் எதிர்பார்ப்பதற்கு
வேறு ஒன்றுமில்லை. மேலவையிலே இன்றைக்கு நாட்டிலே இருக்கக்
கூடிய பதட்ட சூழ்நிலையைப் பற்றியும், அதற்கான ஏற்பாடு
களைப் பற்றியும் மிக அச்சத்தோடும், அக்கறையோடும் தகவல்
தந்து பேசிய முதலமைச்சர் அவர்கள் பேச்சு, அமைதியான சூழ்
நிலையை ஏறபடுத்துவதற்கு உதவும் என்று எண்ணிக் கொண்டு
இருந்தோம்.

ஆனால், அவர்கள் மேலவையிலே சொல்ல வேண்டியவற்
றைச் சொல்லிவிட்டிருக்கிறார்கள். அது அவர்களுடைய நிலை.
அதை நான் புரிந்து கொள்ளுகிறேன். நாடு புரிந்து கொள்ளு
கிறது. அவ்வளவுதான். அவர்கள் மேலவையிலே அந்த ஊரைப்
ற்றி, அந்தப் பகுதியில் இருக்கின்ற நிலைமைகளைப்பற்றி,
தன்மைகளைப்பற்றி யாரையோ சுட்டிக் காட்டி, இரண்டு

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஏ. லத்தீப்]

அமைச்சர்களையும் சுட்டிக்காட்டி, அதிலும் முஸ்லீம் அமைச்சரே
பார்த்துவிட்டு வந்து இந்த மாதிரிச் சொல்லுகிறார் என்று சொல்
லியிருக்கிறார்கள். முஸ்லீமை அமைச்சர்களாக நியமிப்பது
முஸ்லீம்களை முதுகில் குத்தும் கத்தியாகப் பயன்படுத்தத்தான்
நியமிக்கிறீர்களா ? அங்கே அமைதி ஏற்பட வேண்டுமென்பதற்
காக நான் இங்கே அமைதியாக உட்கார்ந்திருந்தேன்—காலையி
லிருந்து. நான் முதலமைச்சர் அவர்கள் பேச்சில் குறுக்கிட விரும்ப
வில்லை. மேலும் அவர்களுடைய பேச்சை விமர்சனம் செய்யவும்
தயாராக இல்லை. நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமென்பதில்
எனக்குப் பெருத்த அக்கறை உண்டு. நான் ஒரு சமுதாயப்
பிரதிநிதி. அப்படிச் சொல்லலாமா என்று கருதுகிறார்கள்.
தோழமைக் கட்சியாக இருந்தபோதும் அப்படித்தான் தெரிவித்
தேன். திரு. சாதிக் பாட்சாவைப் பார்த்துக் கொண்டே முதல்
அமைச்சர் சொல்லுகிறார். ஏன் சாதிக் பாட்சாவைப் பார்த்துக்
கொண்டே சொல்லுகிறார் ? இது எங்கள் அடிப்படையான
கொள்கை. சாதிக் பாட்சாவைப் பார்த்துக் கொண்டு சொன்னா
லும் வேறு யாரைப் பார்த்துக் கொண்டு சொன்னாலும் அதை
ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் வேறு விஷயம்.
இதுதான் அடிப்படையான கொள்கை. ஏற்கெனவே என்னு
டைய பேச்சில் சொல்லியிருக்கிறேன்—

This is division of labour. You do something. I do something.
All people cannot do everything என்ற வகையிலேதான் in our
political life we have chosen the weaber section of the societey so that
we might devote our attention for the upliftment of that people
என்ற முறையிலேதான் வருகிறதே தவிர யாரையும் குறைத்துச்
சொல்லவில்லை. சாதிக் பாட்சாவைப் பார்த்துக் கொண்டு
சொன்னால் அவருடைய எண்ணம் புரிகிறது. அந்த எண்ணங்
களுக்கெல்லாம் நாங்கள் ஆளாகிவிடமாட்டோம். அதனால்
எங்கள் நிலையை மாற்றிக் கொள்வது என்பது முடியாது. ஈட்டி
முனையில் நிறுத்திட்ட போதிலும் கொள்கையை இழக்க
மாட்டோம். அதுதான் எங்களுடைய பண்பாடு. அதுதான்
தமிழ்ச் சமுதாயத்திற்கு இருக்கின்ற பண்பாடு. நான் ஒரு தமிழன்.
தமிழ் முஸ்லீம் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமைப்படு
கிறேன். தமிழ் முஸ்லீம் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை
யடைவது மட்டுமல்ல. அதைத் தக்க வைத்துக் கொள்ள இந்த
உயிர், உடல், ஆவி அத்தனையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கி
றேன்.

நான் எதையும் பேசலாம். சாதாரணமானவன். இந்த அவை
யில் உட்கார்ந்திருக்கும் ஒருவன். அதைப் பற்றி சர்க்கார் கட்சிக்
கொறடா அவர்கள் கூட ஒழுங்குப் பிரச்சினை மூலமாக எழுப்பி
னார்கள். நான் ஒருவன்தான். இந்த ஒருவனைப் பார்க்காதீர்கள்.
இந்த ஒருவனுக்குப் பின்னால் இருக்கும் உணர்வுகளைப் பாருங்
கள். பின்னால் இருக்கும் மக்களைப் பாருங்கள். தயவு செய்து

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 பிப்ரவரி 26

இப்படியெல்லாம் பேசாதீர்கள். முதலமைச்சர் அவர்கள் பேச்சு
அமைதிப்படுத்த வேண்டுமென்ற முறையில் இருக்க வேண்டு
மென்று விரும்புகிறேன். அவர்கள் அப்படிப் பேசியிருக்கக்கூடாது.
மேற்கொண்டு இருக்கின்ற சூழ்நிலையைக் கெடுக்கின்ற வகையில்
அவர்கள் பேசவேண்டுமா? ''உறுப்பினர்கள் சொல்லுகிறார்கள்,
இந்த மாதிரி சூழ்நிலை நாட்டில் இருப்பது நல்லது அல்ல. இந்த
அரசாங்கத்திற்குப் பொறுப்புண்டு. நிச்சயமாக சிறுபான்மை
மக்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும், சமூக நீதி ஏற்படும்,''
என்றமுறையில் இரண்டு வார்த்தைகள் சொல்லியிருக்கக்கூடாதா?

1947 லேயே நடந்தது, இப்போதுதான் புதிதாக நடக்க
வில்லை என்று பேசுவது என்றால் என்னைப் போன்ற சிறியவர்
கள் பேசிவிடலாம். தாங்கள் பொறுப்பான முதலமைச்சர்
பதவியில் இருக்கிறீர்கள். உங்கள் வார்த்தையை நாடு கவனிக்
கிறது, மக்கள் கவனிக்கிறார்கள். அந்த வார்த்தைகளை
இப்படியா சொல்ல வேண்டும்? ஒரு முஸ்லிமே பார்த்துவிட்டு
வந்து சொல்லிவிட்டார் என்று சொல்லுகிறீர்கள். உங்க
ளுடைய அமைச்சர் ஒரு முஸ்லீம், அவருடைய பேச்சை
மதிக்கிறீர்கள். நானும் அந்தப் பகுதியைச் சார்ந்தவன்.
நானும் ஒரு முஸ்லீம். எந்தக் காரியமாக இருந்தாலும்
உள்ளத்தில் எது உண்மை என்று படுகிறதோ அதைப் பேசிப்
பழக்கப்பட்டுவிட்டவன். எதையும் யாரிடத்திலும் எதிர்
பார்க்காதவன். சிறு வயதிலிருந்தே இந்தச் சமுதாயத்
தொண்டுகளில் ஈடுபட்டிருப்பவன். எந்தச் சமுதாயத்தையும்
வெறுப்பவன் அல்ல. அத்தனை சமுதாயங்களையும் நேசிக்
கும் மனப்பான்மையில் சிறு வயதில் இருந்தே பழக்கப்பட்டவன்.
நான் இங்கே ஒருவனாக இருக்க முடியும். நான் சொல்வதை
நினைத்துப் பார்க்கக்கூடாதா? என்னிடம் சில வரைபடங்கள்
இருக்கின்றன. அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்க
ளிடம் தருகிறேன்.

[இரவு 8-40]

அவர்கள் பார்ப்பார்கள், ஆனால் அங்கேயிருந்து வருகிற
ரிப்போர்ட்டைத்தான் அவர்கள் படிப்பார்கள். எங்களைப்
போன்றவர்களை அழைத்து இது என்ன என்று கூட கேட்க
மாட்டார்கள். அதைப்பற்றி நான் வருத்தப்படவில்லை.
என்னுடைய விதி அப்படித்தான். இங்கே எங்களுக்கு அமைச்
சர்கள் பாதுகாப்புத் தராமல் போகலாம், அரசுகள் எங்களுக்குப்
பாதுகாப்புத் தராமல் போகலாம், ஆனால் அரசனுக்கெல்லாம்
அரசனாக நீதி, சத்தியம், இறைவனாக இருக்கிற அவருடைய
பாதுகாப்பிலே நாம் இருக்கிறோம். அந்தப் பாதுகாப்பிலே
நிச்சயமாக அநீதி அழியும், அரசன் அன்று கொல்லும், தர்மம்
நின்று கொல்லும் என்ற முறையிலே உணர்வுகளைப் பிரதிபலிக்க

1979 பிப்ரவரி 26] [திரு. எம். ஏ. லத்தீப்]

மக்களால் அனுப்பப்பட்டிருக்கின்ற ஆட்சியாக இருந்தாலும்
தரையட்டமாகிவிடும். இது நீதி. தர்மத்தினுடைய குரல்,
காலத்தினுடைய கட்டளை. நான் முதலமைச்சர் அவர்களிடத்
திலே இந்த வரைப்படத்தைக் கொடுத்துவிட்டு, நாட்டிலே
சிறுபான்மை மக்களுக்கு ஒரு நீதியை ஒரு அமைதியை
ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முதலமைச்சர்
பதிலிலே நான் சொன்ன எந்தப் பிரச்சினைக்கும் பதில் இல்லை
என்ற காரணத்தாலே நான் எழுப்பிய பிரச்சினைகள் அத்தனை
யும் அப்படியே இருக்கின்றன, அவை குறிப்பிலேயும் இருக்கட்டும்
சட்டமன்றத்திலேயும் இருக்கட்டும், நீதி தலைதூக்கும்
பொழுது அது கண் திறந்து பார்க்கும்போது யாரை எரிக்க வேண்டு
மென்ற நிலை வருகிறதோ அவர்களை எரித்தே தீரும், இங்கே
நான் கொடுத்திருக்கிற தீர்மானம் தோல்வியடைந்தாலும்
சத்தியத்தினுடைய சந்நிதானத்திலே அது வெற்றிபெறும் என்று
கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப்
அவர்கள் மிக உணர்ச்சியோடும் நல்ல நோக்கத்தோடும் சில
கருத்துக்களை வெளியிட்டார்கள். நான் உண்மையிலேயே
அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள்
மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் சொல்கின்ற
முறையிலே எவ்வளவு உணர்ச்சியோடு கூறினார்கள், அதற்காக
நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மீண்டும்
மீண்டும் இந்த அவையிலே எடுத்துவைக்கிறேன், நான் பதில் கூறத்
தயார் அவர்களும் இருந்தால் நான் பதில் சொல்லத் தயாராக
இருக்கிறேன். திரு. ஜேம்ஸ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்,
என்னுடைய பேச்சைக்கேட்டு எல்லோரும் சலித்து இருக்கிறார்
கள் என்று. இவ்வளவு பிரச்சினைகளை இங்கே எடுத்து வைத்துச்
சொன்ன உங்களுக்கு அப்படி என்றால் அவ்வளவையும் உட்
கார்ந்து படித்து எடுத்த எனக்கு அப்படித் தோன்றாததற்குக்
காரணம் நான் முதலமைச்சர் பதவியில் இருக்கிறேன் என்ற
ஒரே காரணம் தான். திரு. லத்தீப் அவர்கள் பேசும்போது
என்னைப் பெரியவர் என்று ஒத்துக் கொண்டதற்கு நன்றி.
ஆனால் அவர் சிறியவர் என்று சொன்னதை நான் ஏற்றுக்கொள்ள
வில்லை, என்னை விட அதிகம் படித்தவர், பட்டம் பெற்றவர்,
இருந்தாலும் நான் பதில் சொல்லவில்லை என்று சொல்லியதற்
காக நான் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஊ
ஊர்களிலே இருந்த பிரச்சினைகளைப்பற்றி எடுத்துக் கூறி
யிருக்கிறேன். சில பிரச்சினைகளைப்பற்றி நாங்கள் ஆதாரத்
தோடு இல்லையென்று கூறியிருக்கிறோம். எதற்குமே முதலில்
முடிவை வைத்துக்கொண்டு பேசுவது என்பது வேறு, விவாதத்தை
கேட்ட பிறகு பேசுவது வேறு. முடிவை வைத்துக்கொண்ட

இருக்கிற நீதிபதிபோல் அவர்கள் பேசுகிறார்கள், இந்த நிலையில் அவர்கள் நாங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைத்தால் ஏமாற்றம்தான். திரு. சாதிக் பாட்சா அவர்களைப் பார்த்து ஏதோ சிரித்துக்கொண்டிருந்ததாக திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள். எங்களைப்பற்றி திரு. சாதிக் பாட்சா அவர்களுக்குத் தெரியும், அவர்களைப்பற்றியும் எனக்குத் தெரியும், நாங்கள் எப்படிப் பழகினோம் என்று அவர்களுக்குத் தெரியும். நாங்கள் அந்த வகையில் கட்சியைக் கட்டிக் காப்பாற்றக்கூடிய பரிதாப நிலையிலே இல்லை என்பதை நான் திரு. லத்தீப் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு நாங்கள் சிரித்துப் பேசி அவர்கள் கவனத்தை இழுத்து அப்படியெல்லாம் அரசியல் நடத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் திரும்பப் பெறாவிட்டால் அது அவர்களுக்குள்ள உரிமை. ஆனால் நாங்கள் வேண்டுமென்றே அலட்சியப்படுத்துகிறோம் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் பதிலுக்கு பிறகு ஒன்றுமில்லை, தயவு செய்து அமருங்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தயவுசெய்து அனுமதியுங்கள். நல்லது என்று கருதுகிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, நாங்கள் வேதனையோடு வெளிநடப்பு செய்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் வேதனை தரும் அளவிற்குப் பேசிப் பழக்கப்பட்டவன் அல்ல. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், எதிர்க்கட்சித் தலைவரவர்கள், முருகையன் கொலை சம்பந்தமாக டாக்டர் சர்ட்டிபிகேட் பற்றிச் சொல்லி, அது சம்பந்தமாக முதல்வரவர்கள் ஒரு விளக்கம் சொல்ல எழுந்து சொல்லும் பொழுது—டாக்டர் சர்ட்டிபிகேட்டைக் கொடுப்பதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை, ஆனால் அதைக் கொடுப்பதோடு நிற்காமல்—வேறொன்றைப் பத்திரிகைச் செய்தி என்ற பெயரால், ஒருவன் பல குத்துகளைக் குத்த முடியும்என்பதற்கு உதாரணமாக சொல்வதுபோல் சொல்லியது சரியாக இருக்குமா? அவர்களே சொன்னார்கள், வழக்கு இருப்பதால் நான் தலையிடவில்லை என்று சொல்லிவிட்டு, கலைஞரிடத்திலே சொல்லுகின்ற முறையில் வாதாடுகின்ற முறை இருக்கிறதே, அது நிச்சயமாக ஒரு ஆள் குத்தியிருக்க முடியும் என்பதற்கு வேறொரு விளக்கத்தைக் கொடுக்கும்பொழுது ஒருவன் தான் குத்தினான் என்ற கருத்தை ஏற்படுத்த முயல்வது நியாயமாக இருக்கிறதா என்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, எப்பொழுதுமே ஒரு பிணம் விழும்பொழுது,
ஒரு சாவு ஏற்படும்பொழுது அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கு
அதிகமாகத் துக்கம் இருக்கும், சந்தேகம் ஏற்பட்டிருக்கும்.
அதை நிவர்த்தி செய்ய வேண்டும், அதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கோருவதற்கு உரிமை உண்டு. அதே நேரத்தில்
உணர்ச்சி வசப்பட்டு தனி நபர் கருத்துக்களைப்பற்றிப் பேசி
யிருக்கும்பொழுது, நாங்கள் கருத்துக்களைக் கூற எழுந்திருக்கும்
பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் இந்தக் கொலை சம்பந்த
மாக ஏன் தலையிடவில்லை, தலையிட்டு இருக்க வேண்டும்
என்ற கருத்தைச் சொல்ல வரும்பொழுது, சத்தம் வந்தால்
அவைகளைப்பற்றி விவாதிக்கக்கூடிய நிலைமை இருக்குமா,
அதை நிவர்த்திக்க முடியுமா என்பதைத்தான் கேட்க விரும்பு
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சரவர்கள்
வருந்துகிறேன் என்று சொல்லி அதற்கு முற்றுப்புள்ளி வைத்தாகி
விட்டது, அதை மறுபடியும் எழுப்ப வேண்டாம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, எனக்குச்
சந்தேகம் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம், அதேபோல்
அழகர்சாமிக்குச் சந்தேகம் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம்.
ஆனால் எங்கள் அணிக்குச் சந்தேகம் வந்திருக்கிறது என்பதை
அவர்கள் அறிவார்கள். அதை நிவர்த்தி செய்தால் எங்களுக்கும்
நல்லது, உங்களுக்கும் நல்லது. எனவே, சி.பி.ஐ.
விசாரணைக்கு உத்தரவிடுவது இரண்டுபேருக்கும் நல்லது,
அதற்கு முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்
களே, என்னுடைய பேச்சை நீண்ட நேரம் கேட்டுப் பொறுமை
யாக இருந்தவர்கள், கடைசியிலே நான் சொல்ல வேண்டிய
அவசியத்தை உண்டாக்கிவிட்டதைப் பற்றி அவர்கள் சிந்தனை
செய்யாமல்.... இந்த அரசு உடந்தையாக இருக்கிறது என்று
மேடையிலே பேசுவது மட்டுமல்லாமல், இங்கேயும் ஒருவர்
கொல்லவில்லை, பலர் கொன்றிருக்கிறார்கள் என்று ஆதாரங்
களை எடுத்து வைக்கலாம், ஆனால் நாங்கள் எங்களுக்குத்
கிடைத்த ஆதாரங்களைக் சொல்லக்கூடாது என்பது என்ன
நியாயம்? குற்றம் சாட்டப்பட்டால் நாங்கள் பேசாமல்
இருக்க வேண்டும், எங்களுக்குக் கிடைத்த ஆதாரங்களைச்
சொல்லக்கூடாது என்றால் என்ன நீதி? ஒருவர் குத்தியிருக்க
முடியாது? பலர் குத்தியிருக்க வேண்டும் என்று வெளியிலே
மேடைகளிலே பேசிக்கொண்டு வந்தால் அது மட்டும் உண்மைக்
கும், நியாயத்திற்கும் உட்பட்ட செயல் என்று மாண்புமிகு
உறுப்பினரவர்கள் கருதுகிறார்களா? நாங்கள் பேசினால்

21. திரு. துரை கலியமூர்த்தி.
22. திரு. கு. ரமணி.
23. திரு. என். சங்கரய்யா.
24. திரு. அ. செல்லப்பா.
25. திரு. தாழை மு. கருணாநிதி.
26. திரு. ச. சுப்பையா
27. திரு. டி. கே. கபாலி.
28. திரு. க. அரங்கசாமி.
29. திரு. எஸ். கணேசன்.
30. திரு. செ. இராமலிங்கம்.
31. திரு. இரா. இராச்மாணிக்கம்.
32. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா.
33. திரு. கே. சுப்பிரவேலு.
34. திரு. கே. உச்சி.
35. திரு. க. சுப்பு.
36. திரு. மு. அரங்கநாதன்.
37. திரு. க. அன்பழகன்.
38. திரு. ப. சுந்தரம்.
39. திரு. கோ. இளங்கோவன்.
40. திரு. து. இராசரத்தினம்.
41. திரு. மு. செல்வராஜ்.
42. திரு. சி. ஆறுமுகம்.
43. திரு, என். கிட்டப்பா.
44. திரு. மு. கருணாநிதி
45. திரு. த. வேணுகோபால்.
46. திரு. கூ. ச. முருகேசன்.
47. திரு. ப. பொன்னுசாமி.
48. திரு. தி. சு. நல்லதம்பி.
49. திரு. துரை முருகன்.
50. திரு. இ. ராமலிங்கம்.
51. திரு. து. புருஷோத்தமன்.
52. திரு. எஸ். நடராசன்.
53. திரு. பெ. சு. திருவேங்கடம்.
54. திரு. புலவர் கா. கோவிந்தன்.
55. திரு. வி. இரகுராமன்.
56. திரு. எஸ். மணிமுடி.
57. திரு. சு. பாலன்.
58. திரு. அ. நடராசன்.
59. திரு. வ. துலுக்காணம்.
60. திரு. ஏ. ரகுமான்கான்.
61. திரு. மா. மணிமாறன்.
62. திரு மொ. பரமசிவம்.
63. திரு. டி. எம். தைலப்பன்.
64. திரு. கே. சொக்கலிங்கம்.

எதிர்த்தவர்கள்.

1. திரு எஸ். ஆர். இராதா.
2. திரு ப. உ. சண்முகம்.
3. திரு மு. அப்துல் ரசாக்.
4. திரு கி. அப்துல் லத்தீப்.
5. திரு இரா. அமிர்தராஜ்.
6. திரு அ. க. அரங்கநாதன்.
7. திரு பொ. காளியப்பன்.
8. திரு வி. அர்சுனன்.
9. திரு இ. அன்பழகன்.
10. திரு ஏச். ஜி. ஆறுமுகம்.
11. திரு இல. ஆறுமுகம்.
12. திரு கே. என் கே. இராமசாமி.
13. திரு எல். ஜே. இராமசாமி.
14. திரு எஸ். வி. இராமசாமி.
15. திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.
16. திரு க. உக்கிரபாண்டியன்.
17. திரு கே. ஜே. உய்யகொண்டான்.
18. திரு கி. எத்திராஜ்.
19. திரு வி. கருப்பசாமி பாண்டியன்.
20. திரு இ. கணேசன்
21. திரு ம. கண்ணன்.
22. மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்.
23. மாண்புமிகு திரு கி. மனோகரன்.
24. மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்.
25. மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்.
26. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி.
27. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.
28. திரு. துரை கோவிந்தராசன்
29. திரு. எம். வின்செண்ட்
30. திரு. ஆனூர் ஜகதீசன்
31. திரு. பி. முசிறிபுத்தன்
32. திரு. கா. வே. கந்தசாமி
33. திரு. ஆர். காளியப்பன்
34. திரு. வே. கருணாமூர்த்தி
35. திரு. பி. எம். கிருஷ்ணன்
36. திரு. செ. கிருஷ்ணன்
37. திரு. நா. கிருஷ்ணன்.
38. திரு. பி. கிருஷ்ணன்
39. திரு. கி. பெ. காத்தமுத்து
40. திரு. ப. குருசாமி
41. திரு. போ. கோபாலன்

42. திரு. மு. ரெ. கோவிந்தன்
43. திரு. கா. நா. சண்முகம்
44. திரு. ஆர். சண்முகம்
45. திரு. ஆர். சந்திரசேகரன்
46. டாக்டர் கே. சமரசம்
47. திரு. சோ. சாது செல்வராஜ்
48. திரு. தா. சாமிக்கண்ணு
49. பொ. சிகாமணி
50. திரு. மு. சிவபெருமாள்
51. திரு. வ. சின்னசாமி
52. திரு. வி. கொ. சின்னசாமி
53. திரு. க. இரா. சின்னராசு
54. திரு. மு. சுந்தரராஜன்
55. திரு. என். சுப்பராயன்
56. திரு. சு. பாக்கூர் சுப்பிரமணியன்
57. திரு. கே. ஜே. சுப்பிரமணியம்
58. திரு. மா. சுப்பிரமணியம்.
59. திரு. ஆர். சி. சுப்பிரமணியன்
60. திரு. டி. சுப்பிரமணியன்
61. திரு. வ. மு. சுப்பிரமணியம்
62. திரு. கா. செங்கோடன்
63. திரு. கு. அ. செங்கோட்டையன்
64. திரு. சீ. செல்வராஜ்
65. திரு. ஓ. ப. சோமசுந்தரம்
66. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்
67. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து
68. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்
69. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
70. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு
71. மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்
72. திரு. ஐசரிவேலன்
73. திரு. எம். ஏ. ஜயவேலு
74. திரு. ஆ. வெள்ளைச்சாமி
75. திரு. ரா. கா. சு. தண்டபாணி
76. திரு. பா. கோ. கிட்டு
77. திரு. இ. தமிழரசன்
78. திரு. இரா. அருணாசலம்
79. திரு. ந. தனசேகரன்
80. திரு. ப. தனபால்
81. திரு. கோ. தனுஷ்கோடி
82. திரு. இரா. தாமரைக்கனி
83. திரு. ப. துரைசாமி
84. திரு. சு. மா. துரைராஜ்
85. திரு. கா. நாச்சிமுத்து

86. திரு. கொ. பொ. நாச்சிமுத்து கவுண்டர்
87. திரு. எஸ். பட்டாபிராமன்
88. திரு. கே. பண்ணை சேதுராமன்
89. திரு. ஏ. எம். பரமசிவன்
90. திரு. சு. பழனிசாமி
91. திரு. பாண்டியன்
92. திரு. வி. பாலகுரு
93. திரு . கே. பாலாஜி
94. திரு. அ. பாலுசாமி
95. திரு. எம். பெரியசாமி
96. திரு. என். பெருமாள்
97. திரு. ரா. கு. பெருமாள்
98. டாக்டர் ஏ. பொன்னுசாமி
99. திரு. ஆர். மணிமாறன்
100. திரு. யா. சை. மூ. யூசுப்
101. திரு. கோ. ரகோத்தமன்
102. திரு. து. ராமசாமி
103. திரு. பி. ராமதாஸ்
104. திரு. சி. ராமநாதன்
105. திரு. செ. மெ. ராஜு
106. திரு. வி. கே. ராஜு
107. திரு. க. கந்தசாமி
108. திரு. ரா. மார்க்கபந்து
109. திரு. டி. பி. மு. பெரியசாமி
110. திரு. ப. சந்திரன்
111. திரு. கே. வடிவேலு
112. திரு. என். குப்புசாமி
113. திரு. சௌ. வே. வரதராஜன்
114. திரு. ரா. ச. தங்கவேல்
115. திரு. பி. வெங்கா கவுண்டர்
116. திரு. மு. சௌந்தரராஜன்
117. திரு. கே. சௌந்தரராஜன்
118. திரு. என். லட்சுமி நாராயணன்
119. திரு. வே. இரா. ஜெயராமன்
120. திரு. பொ. தங்கவேலு கவுண்டர்
121. திரு. டி. ஆர். இராசாராம் ரெட்டி
122. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு
123. திரு. எஸ். முனிரத்தினம்
124. திரு. பொ. முனுசாமி
125. திரு. இரா. முத்தையா
126. திரு. எஸ். முத்துசாமி
127. திரு. சி. மாணிக்கம்
128. திரு. கே. மருதாசலம்

நடுநிலை வகித்தவர்கள் : ஒருவரும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்திற்கு ஆதரவாக 64 வாக்குகள். தீர்மானத்திற்கு எதிராக 128 வாக்குகள். நடு நிலைமை வகிப்பவர்கள் ஒருவரும் இல்லை. ஆகவே தீர்மானம் தோல்வியுற்றது.

அடுத்து திரு. ரா. உமாநாத் அவர்களுடைய தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. பேரவை முன்னுள்ள கேள்வி—

''மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவையின் தொழிலாளர் பற்றிய கொள்கையை இப்பேரவை நிராகரிக்கிறது''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்ததாக திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. பேரவை முன்னுள்ள கேள்வி—

''மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையின் 'சட்டம் ஒழுங்கு' பற்றிய கொள்கையை இப்பேரவை நிராகரிக்கிறது''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. எம்.ஏ. லத்தீப் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. பேரவையின் முன்னுள்ள கேள்வி—

''மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையின் 'சிறுபான்மையினர்' பற்றிய கொள்கையை இப்பேரவை நிராகரிக்கிறது''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 3–3–79-ம் தேதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 9.09 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும். எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

47. 28–8–1969 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்களது சொத்திருப்புப் பற்றிய விவரக் கணக்குகள் பேரவை முன் வைக்கப் பெற்றன.

1. திரு. ஆ. தங்கவேலு, எம்.எல்.சி. (31–3–1976, 31–3–1977, 31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு).

2. திரு. டி. சந்தோசம், எம்.எல்.சி. (31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு).

3. திருமதி சி. தமிழரசி, எம்.எல்.சி. (31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு).

4. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் (31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு).

5. திரு. ம. சங்கரலிங்கம், எம்.எல்.சி., (31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு).

6. திரு. எஸ். ராமகிருஷ்ண தேவர், எம்.எல்.சி. (31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு).

7. திரு. கு. மா. பாலசுப்பிரமணியம், எம்.எல்.சி., (31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு).

8. திரு. எச்.எல். முருகேசன், எம்.எல்.சி. (31–3–1978 ஆம் தேதியன்று உள்ளவாறு).

1979 பிப்ரவரி 26]

9. திரு. ப. மாணிக்கம், எம்.எல்.சி., (31-3-1978 ஆம் தேதியன்று உள்ளவாறு).

10. திரு. 'டி.வி.டி.' மாண்டே, எம்.எல்.சி. (31-3-1978 ஆம் தேதியன்று உள்ளவாறு).

11. திரு. பி. ஆர். தாமஸ், எம்.எல்.சி. (31-3-1978 ஆம் தேதியன்று உள்ளவாறு).

122141